தினை விதைப்போம் வினை அல்ல!

அ. இ. அ. தி. மு. க.: விவசாயிகள் போராட்டம் வலுவடையவே தமிழக அரசு மனமின்றியே தடுப்புக்காவல் சட்டத்தைப் பிரயோகித்து நாலாயிரம் பேர்களுக்கு மேல் கைது செய்துள்ளது. இது விரும்பத்தக்க நிலை என்று யாருமே எண்ண முடியாது. ஆனால் இந்த நிர்ப்பந்தத்துக்கு அரசு உள்ளானதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

தேர்தலின்போது எதையாவது சொல்லி எப்படியாவது வோட்டுப் பெற வேண்டும் என்ற பரபரப்புடன் செயல்படுவது; கொஞ்சமும் யோசியாமல் காரிய சாத்தியமற்ற வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து அவர்கள் ஆசையை வளர்ப்பது; எங்கு சமரசத்துக்கே இடமில்லையோ அங்கு கூடப் போய் வோட்டுக்காகக் கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சிப் பார்ப்பது. அன்று விதைக்கப்பட்ட வினைகள் இவை.


தி. மு. க.: தில்லிக்குக் காவடி தூக்குகிறது தி.மு.க.! தேசிய பாதுகாப்புச் சட்டம் துஷ்பிரயோகமாகாது என்று மத்திய உள்துறை அமைச்சரும் பிரதமரும் தந்த வாக்குறுதிக்கு விரோதமாகத் தமிழக அரசு நடந்து கொள்கிறதாம். நாராயணசாமி நாயுடு கைது பற்றிப் புகார் மூட்டையுடன் போயிருக்கிறார்கள், தலைநகருக்கு. இ. காங்கிரஸ் அரசாளும் மாநிலங்களில் என்ன வாழ்கிறதாம்?

நள்ளிரவுக்கு மேல் மாநில அவைக் கூட்டத்தை நீடித்து தே. பா. சட்டத்தை நிறைவேற்றியபோது, அதனை ஆட்சேபித்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தனவே அப்போது அ. இ. அ. தி. மு. க. வெளியேறவில்லை யெனில், திமுகவும் தான் வெளியேறவில்லை! நாடாளுமன்றத்தில் தே. பா. சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்காதிருந்து விட்டு இப்போது அது அமலாக்கப்படும் போது புகார் செய்ய திமுக எங்கிருந்து அருகதை பெற்றது? இவர்கள் நடத்தை அஇஅதிமுகவின் சங்கடத்தில் குளிர் காய்வதன்றி வேறென்ன?


நாராயணசாமி நாயுடு: நியாயமான கோரிக்கைகள் மதிக்கப்படவில்லை யெனில் போராட வேண்டியது தான். ஆனால் வேண்டப்படுகிற சலுகைகளுக்கும், ''இல்லையேல்...'' என்ற அச்சுறுத்தலுக்கும் ஒரு வரம்பு உண்டு. எல்லை மீறும்போது அதற்குப் பெயர் பிளாக் மெய்ல். 'பயிரை வாட விடுங்கள்; உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்களைத் தடை செய்யுங்கள், கொட்டிக் கவிழுங்கள்' போன்ற உத்தரவுகளுக்கும் 'பெற்ற பிள்ளையைக் கொல்லுங்கள்' என்பதற்கும் விவசாயிகளைப் பொருத்தமட்டில் வித்தியாசம் கிடையாது.

விவசாயிகள்: உங்களுக்குள்ள சிரமங்களை உணர்ந்திருக்கிறோம். ஆயின் பரிகாரம் என்ன? சிந்தியுங்கள். மின் உற்பத்தி செலவு விநியோகச் செலவு ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் நீங்கள் செலுத்தும் கட்டண விகிதம் மிகக் குறைவு. நீங்கள் அதையும் சரியாகச் செலுத்தவில்லை எனில் மின்வாரியம் அடையும் நஷ்டத்தை யார் ஈடு செய்யப் போவதாக எண்ணுகிறீர்கள்? பொதுமக்கள் தான். அதில் நீங்களும் உள்ளடக்கம்தான். கட்டணம் என்ற பெயரில் அன்றி வரி அல்லது விலைவாசி உயர்வு என்ற வேறு ஏதோ ஒரு பெயரில் கொடுத்துக் கொண்டிருப்போம் அவ்வளவே. மின் கட்டணத்தைச் செலுத்தாமலிருந்து அல்லது கூட்டுறவுச் சங்கம், அரசு, வங்கி போன்றவற்றுக்குக் கடன் பாக்கியைத் தராமலிருந்து லாபம் அடையலாம் என்று எண்ணுவது மாயை; நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதன்றி வேறில்லை.

1981 ஜனவரி 4
ரௌத்திரி மார்கழி 20
மலர் 39: இதழ்: 23



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சுஜாதா

வஸந்த்! வஸந்த்!



1. ராஜராஜன் கிணறு

''சுந்தர சோழன் தனது மூத்த புதல்வனது வீரச் செயலேயும் ஆற்றலேயும் உணர்ந்து கி. பி. 966ல் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினுன். மற்ருெரு மகனுகிய அருள்மொழித்தேவன் என்பவனே பின்னர் எத்திசையும் புகழ் பரப்பி இனிது வாழ்ந்த முதல் ராஜ ராஜ சோழன் ஆவான்.''

எஸ்டேட் டியூட்டி ஆக்ட்டில் ஆழ்ந்திருந்த கணேஷ் எரிச்சலுடன் நிமிர்ந்து ''வஸந்த்! இப்ப நிறுத்தப் போறியா இல்லேயா?'' என்ருன்.

''ரொம்ப சுவாரஸ்யமா இருக்குது பாஸ். இந்த ஆதித்த கரிகாலன் 969ல க்ளோஸ். நாலு பேர் சேர்ந்து ஆளேத் தீர்த்துட்டாங்க. இதில ஒரு பெரிய சஸ்பென்ஸ் கதையே இருக்கு. உத்தம சோழன் ஏன் அந்த நாலு பேருக்கும் தண்டனே கொடுக்கலே? அதுதான் பாஸ் இருக்கு மர்மம்!''

''வஸந்த்! நிஜமாச் சொல்லு. திடீரென்று உனக்கு ஏன் சரித்திரத்தில இத்தனே ஈ.பா?''

''என்ன பண்றது பாஸ்! சரித்திரக் கதையெல்லாம் இப்பப் படக்குனு நிறுத்திட்டுருன்களே! அதான் சொந்தமாவே படிச்சுக்கலாம்னுட்டு... எல்லாக் காரியங்களேயும் சொந்தமாச் செஞ்சுக்கிறது நல்லதில்லேயா?''

''ஏய்! நிஜமாவே உனக்குச் சரித்திரத்தில இன்ட்ரஸ்ட்டா?''

''பின்னே?''

''நான் நம்பலே. எதாவது சரித்திரம் படிக்கிற பொண்ணே ஸைட் அடிக்கிறியா?''

''நடு சென்டர்ல குத்திட்டிங்களே! பாஸ், நான் சரித்திரம் படிக்கிறதுக்குக் காரணம் ஒரு பெண்ணில்லே. அவ அப்பா!''

''சரிதான்! பொம்பளே விஷயம்தான்!''

''இல்லே பாஸ் காதல்! தெய்விகக் காதல்!

மூத்தவர் சம்மதியில் – வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனுடி – இதுபார்
கன்னத்து முத்தமொன்று!''

''ஏண்டா! பாரதியைக் கோட் பண்ண துக்கு வேறெதுவும் வரி அகப்படலேயா?''

''சும்மாவா பாடியிருக்கார் மகாகவி! தலேப்பாவை விலக்கித் தலேயத் தடவிக் கொடுக்கணும் போல இருக்கு பாஸ். அவர் சொல்ற அதே நிலேதான் எனக்கும் இப்ப பாஸ்! ஐம் இன் லவ்!''

''வித் வாட்?''

''வித் என் ஏஞ்ஜல்! அவ பேரு இனியா. இ...னி...யா என்ன பேரு! நாக்கிலே ஒரு ஒட்டு ஒட்டிப் பாருங்க தித்திப்பா இல்லே? இனி... யா! அவளே நான் கல்யாணம் செஞ்சுக்கத் தீர்மானிச்சுட்டேன்!''

''இந்த வாக்கியத்தை நான் உங்கிட்ட இருந்து அடிக்கடி கேட்டுட்டேன்.''

''பாஸ், இந்த முறை எந்த நூற்ருண்டிலும் செலாவணியாகும் தெய்விகக் காதல். லேலா மஜ்னு எங்களேப் பார்த்தா 'வாத்தியாரே உஸ்தாத்; நாங்க அற்பர்கள்! வேற கல்விக்குப் போறேம்'னு ஸைட் வாங்கு

வாங்க. அப்படி ஒரு உக்கிரமான காதல்! லேலா ஹூம்... லேலாஆ....!'' தம் தம் ததம் தம்தம் என்று மானசிக டிரம் அடிக்கத் துவங்கினுன் வஸந்த்!

கணேஷ் தலையில் அடித்துக் கொண்டு ''அப்ப நிஜமாவே கல்யாணமா?'' என்ருன்.

''ஷ்யூர்! பாஸ் நீங்களும் கல்யாணம் பண்ணிக்கிங்களேன்! பயப்படாதீங்க. அண்ணியை ஸைட் அடிக்க மாட்டேன்! சீனியர் நீங்க கல்யாணம் பண்ணிக்கங்க. உங்களுக்காக ஒரு நாலு மணி நேரம் வெயிட் பண்ணட்டுமா?''

''வேண்டாம்!''

''சும்மா பண்ணிக்கங்க பாஸ்! சரிகை வேட்டியெல்லாம் கொடுப்பாங்க!''

''கூட ஒரு பொண்ணையும் குடுப்பாங்க! அதான் ட்ரபில்! நான் ஒரு கன்ஃபர்ம்ட் பாச்சலர்!''

''உங்களை ஒண்ணு கேக்கட்டுமா?''

''கேக்காதே. என்ன கேப்பேன்னு தெரியும்!''

''பதில்?''

''ம்ஹூம். இன்னும் இல்லே!''

''ஆ! இந்த ரீல் நம்ம கிட்ட விடாதீங்க! கியர்க காட் என்ன சொன்னுன் தெரியுமா?''

''அது யாரு கியர்க காட்!''

''எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட் ரைட்டர்!''

''இந்த மாதிரி கதம்பமா உதவாக்கரையா ஏதாவது படிச்சுண்டே இரு! எஸ்டேட் டியூட்டி ஆக்டை மட்டும் படிக்காதே!''

''அதையும் படிச்சிருக்கேன். செக்ஷன் 25 சொல்லட்டுமா? Conditions for exemptions in respect of settled property...''

''ஹோல்டான்! டெலிபோன் அடிக்குது!''

வஸந்த் டெலிபோனை நோக்கி ஓடினுன். ''அவதான் இருக்கும்!''

''ஹலோ!''

மறுமுனை ''மிஸ்டர் வஸந்த் ப்ளீஸ்!'' என்றது.

''இனியா! என் இனிய இனியா! இன்னி! ஓ மை ஸ்வீட்டி பை! வஸந்தகாலம் வழங்கிய நன்கொடையே!''

கணேஷ் மறுபடியும் தலையில் அடித்துக் கொண்டான்.

''இன்னி! இன்னிக்கு வரலாமா? அப்பா எப்படி இருக்கார்? கடிப்பாரா?''

''சேச்சே! நான் சொல்லி வச்சிருக்கேன் வஸந்த்! எத்தனை மணிக்கு வரீங்க?''

''ராகுகாலம் முடிஞ்ச கையோட ஆறு மணிக்கு!''

''சரித்திரம் படிச்சிருக்கீங்களா? ஏதாவது அதைப் பத்திப் பேசுவீங்களா?''

''தாராளமா! லேட்டர் சோளாஸ்ல விளையாடுவேன். மலையனூர் ரேவதாச கிரமவித்தன் யாருன்னு கேளு?''

''கேக்க மாட்டேன். ஏதாவது வந்து உளருதீங்க. அப்பா லேட்டர் சோளாஸ்ல பி. எச். டி. வாங்கியிருக்கார்!''

''கவலையே படாதே! அவரை அப்படியே ஜெயமாலினி மாதிரி கவர்ச்சி பண்ணிடறேன்! ஆமா? எத்தனை மணிக்கு எழுந்தே? எப்பப் பல் தேச்சே? எல்லாம் சொல்லு!''

கணேஷ் அவன் மேல் புஸ்தகத்தை எறிந்தான்.

''அப்புறம் என்ன படிக்கறே?''

''பால் வீதி!''

''சபாஷ்! எனக்கும் அப்துல் ரகுமான் பிடிக்கும்! மெழுகு வத்தியைப் பத்திப் பாடியிருக்கார் பாரு!

'இருட்டை மதம் மாற்றச்
சுடர் நாவால் உபதேசிக்கும்
பாதிரிகள்!'ன்னு.... ஃபன்டாஸ்டிக்!''

கணேஷைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''அப்ப வந்துறவா? அதென்ன படக் படக்குன்னு சப்தம் கேக்குது? உன் மாரா? சரி குட்பை இன்னி!''

கணேஷ் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். ''அதாவது அவ அப்பாவை இம்ப்ரஸ் பண்றதுக்குச் சரித்திரம் படிச்சுட்டு ரெண்டு மூணு சோழன் பேரை வெச்சுக்கிட்டுக் கதை பண்ணப் போறியாக்கும்?''

''அதான் பாஸ் ஸினேரியோ! உங்க ஆசீர்வாதங்கள் தேவை சீனியர்!''

''உருப்பட மாட்டே நீ!''

''எங்கப்பா கூட அப்படித்



தான் சொன்னுர். அ. ஆ.... சாந்தி அடைவதாக!''


''அந்தப் பொண்ணேட அப்பா யாரு?''

''பேராசிரியர் அப்பாதுரை மெட்ருஸ் யுனிவர்ஸிட்டியில சரித்திரத் துறை! பி.எச் டி. பேராசிரியர்.''

''அவரை ஏமாத்தப் போறியா? நிச்சயம் உன் பிளஃப் எல்லாம் தெரிஞ்சுரும் அவருக்கு.... மாட்டேன்னு சொல்லிடுவார்!''

''பாஸ்! அப்படி மாட்டேன்னு சொல்லிட்டா எங்க காதலே வெட்டிற முடியுமா?

வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே
வேலிக்கு அடியில்
நழுவும் என் வேர்களை
என்ன செய்வாய்?''



''இன்னும் ஒரு முறை என்கிட்ட அப்துல் ரகுமானை வெச்சுப் பயங்காட்டினே! உன்னை டிஸ்மிஸ் பண்ணிடுவேன்!''

''பாஸ் ஒரு ரெண்டு அவர் பர்மிஷன் கிடைக்குமா?''

''ஒழி!''

வஸந்த் சாயம்போன லீ ஜீன்ஸும் டி. ஷர்ட்டும் அணிந்துகொண்டு கண்ணுடியில் ஒரு முறை தலையைக் கலைத்துக்கொண்டு புறப்பட்டான்.

''காரை எடுத்துக்கிட்டுப் போகட்டுமா பாஸ்?''

''ஏழு மணிக்குள்ள வந்துரு.''

• • •

கடற் கரையில் அஷ்டலட்சுமி கோயிலுக்கு எதிரில் தனித் தனியான வீடுகளில் ஒன்று பேராசிரியர் அப்பாதுரை என்றது.

வஸந்த் துள்ளி இறங்கி மணி பார்த்தான். ஆறு ஐந்து. ஞாயிறு 21 என்றது எல். ஸி. டி. வாசலில் வெண் சாமரம் போன்ற பாமிரேனியன் ஒன்று ஓடிவந்து சின்னக் குரலில் குரைத்தது. ''ஹலோ, ஜூடி! அப்பா இருக்காரா'' என்று கேட்டான். நாய் தோட்டத்தில் ஓடியது.

மணி அடித்தான். காத்திருந்தான். தலையை மறுபடி கலைத்துக் கொண்டான். ''ஒன் மினிட்!'' என்று உள்ளே யிருந்து வஸந்துக்குப் புல்லாங்குழல் ஒலித்தது.

''உனக்காக ஒரு வருஷம் காத்திருப்பேன் இன்னி! காரைத் திருப்பிக் கொடுக்கணும் அவ்வளவுதான்!''

வஸந்த் உலகின் உச்சியில் இருந்தான். மனசுக்குள் பாப் சங்கீதம் ஒலித்தது. அதற்கேற்ப மெலிதாக நடனமாடினுன். கதவு திறந்தது.

''இனியா... ஓ மை ஸ்வீட்...'' வஸந்த் திடுக்கிட்டு நின்றுன். ''என்ன இனியா!''

அந்தப் பெண் கண்களில் கண்ணீருடன் நின்றுள். ''என்ன இனியா! வெங்காயம் நறுக்கினியா?''

''வஸந்த்! நல்ல வேளை வந்தீங்க! அப்பாவைக் காணேம்!''

''என்னது? காணேமா! இன்னிக்குப் பார்த்தா? மணி ஆறுதானே ஆறது.. பஸ் பிடிச்சு வர லேட்டாகும். உட்காரு.... கவலைப்படாதே!''

இனியா சட்டை பாண்ட் அணிந்து தலையை அலைய விட்டிருந்தாள். பதினெட்டு வயசிருக்கும். சின்ன மூக்கை அடிக்கடி சிந்திக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். கன்னங்கள் அழுகையாலும் அழகாலும் சிவந்திருந்தன.

''காலேல யுனிவர்சிட்டிக்குக் கிளம்பிப் போனுர்! சரியா நாலரைக்கு வந்துருவார். ஆறுச்சே இன்னும் வரலியேன்னு டிபார்ட்மெண்டுக்குப் போன் பண்ணிப் பார்த்தேன். அவர் இன்னிக்கு அங்க வரவே இல்லையாம்! உறவுக்காரங்க வீட்டுக்கெல்லாம் போன் செய்துட்டேன். எங்கேயும் போகலையாம்!''

''எங்கேயாவது லைப்ரரியில் உட்கார்ந்துக்கிட்டு ரிசர்ச் பண்ணிக்கிட்டிருப்பார்! இத பார், அழுதா எனக்கு நெஞ்சத்திலே ஆயிரம் ஈட்டிகளைத் தீட்டி வச்சுக் குத்தற மாதிரி இருக்கு. அழாதே! ப்ளீஸ்! ஒரு ஜோக் சொல்லட்டுமா? ஒரு ஊர்ல ஒரு கணவனும் மனைவியுமாம்!....''

இனியா அவன் சொன்னதைக் கவனிக்காமல் ''எங்கிட்ட சொல்லாத எங்கயும் போக மாட்டார். இன்னிக்கு லைப்ரரி கிடையாது. வஸந்த்! எனக்கு என்னவோ கவலையா இருக்கு...'' என்றுள்.

''கவலைப்படாதே இன்னி! நான் வந்துட்டேனில்லே! எப்படியாவது அவரைக் கண்டு பிடிச்சு உங்கிட்ட ஒப்படைச்சுட்டுத் தான் வீட்டுக்குப் போவேன்!''

''நிஜம்மா?''

''நிஜம்மா!''

சற்று ஆறுதல் அடைந்து ''உட்காருங்க. என்ன சாப்பிடறீங்க?'' என்று கேட்டாள்;

''கொஞ்சம் கெச்சப் தொட்டுண்டு உன்னயே சாப்பிடலாம்னு தோணுது. இதனார் இனிமே நீ அழாதே. அழக் கூடாது. அழுதா உன் அழகு ஜாஸ்தியாறது. என் இதயம் சாந்தினி சௌக் புறா மாதிரி படபடக்குது. அந்த ஜோக்கைச் சொல்லி முடிக்கட்டுமா?''

''வேண்டாம். உங்க ஜோக்கெல்லாம் ஒரு மாதிரி இருக்கும்.''

''இது ரொம்பக் க்ளீன்...ஒரு கணவனும் மனைவியும் புதுசாக் கல்யாணம் பண்ணிண்டு ஹனிமூன் போனாங்களாம்.''

''வேண்டாம்! வேண்டாம்!''

''அப்ப அவளோட பழைய காதலனும் அங்க வந்துட்டானும்.''

டெலிபோன் ஒலித்தது.

இனியா, ''அப்பாவாத்தான் இருக்கும்'' என்று ஓடினாள்.

''இனியா! நான்தான் அப்பா பேசறேன்.!''

பதற்றத்தில் ''அப்பா! அப்பா!'' எங்க இருக்கீங்க, என்ன ஆச்சு?'' என்றாள்.

''அதெல்லாம் அப்புறம் சொல்றேன் இனியா, நீ தனியே இருக்கியா?''

''வஸந்த் வந்திருக்கார்!''

''ஹலோ, ஸார்!'' என்று வஸந்த் இங்கிருந்து இரைந்தான். ''குட் ஈவினிங்!''

''இத பாரு! நீ ஒரு காரியம் பண்ணு... அவன் கிட்ட ஏதும் சொல்லாதே! என்ன? ஒண்ணும் சொல்லாம அலமாரில மேல் தட்டில அட்டைல க்ளிப் குத்தி ஒரு கட்டுரை எழுதி வைச்சிருக்கேண் ''ராஜ ராஜன் கிணறு''ன்னு ஒரு கட்டுரை; டைட்டிலே நல்லாப் பாரு! பார்த்து அப்படியே அந்தக் காகிதங்களை ஒரு கவர்ல போட்டு... எங்க வரணும்...'' என்று அவர் அருகே யாரிடமோ கேட்டது அவளுக்குக் கேட்டது.

''பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷன்கிட்ட வா! என்ன? சொன்னதைச் செய்!''

''என்னப்பா நீங்க ஏதாவது ஆபத்திலே இருக்கீங்களா?''

''அழாதே மகளே! ஒரு இக்கட்டில அகப்பட்டிண்டிருக்கேன். அவ்வளவுதான். கவலைப்படாதே! வீட்டுக்கு வந்துடுவேன்!''

''அங்க வந்து உங்களை அழைச்சுண்டு போகட்டுமா?''

''வேண்டாம். நான் வந்துடுவேன்! சீக்கிரம் கொண்டு வா!''

''அப்பா....!''

டக்கென்று வெட்டப்பட்டது.

''என்ன இன்னி!'' என்றான் வஸந்த்.

இனியா உடனே அலமாரிக்குச் சென்று தேட ஆரம்பித்தாள்,''ராஜ ராஜன் கிணறு, ராஜராஜன் கிணறு!'' என்று சொல்லிக் கொண்டே!

''ராஜ ராஜன் கிணறா?''

''வஸந்த்! கார் கொண்டு வந்திருக்கீங்களா?''

''ஆமாம். ஏன்?''

''இந்தக் கட்டுரையைப் பல்லாவரத்தில கொண்டு சேர்க்கணும்!''

''என்ன கட்டுரை, என்ன பல்லாவரம்?''


''ராஜ ராஜன் கிணறு!''

''புரியும்படியாப் பேசேன்!''



சாகா வரம் பெற்ற புழு!

ஆங்கிலத்தில் ''பிளேனேரியன்'' என்றழைக்கப் படுகிற நல்ல நீரில் வாழக் கூடிய இத் தட்டைப் புழு 10 mm நீளமும் 1 முதல் ½ mm அகலமும் உருவ அளவு கொண்டது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வித தற்காப்பு இல்லாத இப் புழுவை ஏதாவது ஒரு பிராணி தாக்க நேரிட்டு தன் உடலின் ஏதாவது ஒரு பகுதி துண்டிக்கப்பட்டு விட்டால் அதைப்பற்றி இப்புழு கவலைப்படுவதில்லை. காரணம் இழக்கப்பட்ட பாகம் திரும்பவும் 4 நாட்களில் வளர்ந்துவிடும். துண்டிக்கப்பட்டு கீழே விழுந்த பாகத்தின் மீதிப் பகுதியும் வளர்ந்துவிடும். கண்ணை மாத்திரம் ஒரு புழுவிலிருந்து தனியே எடுத்துப் போட்டால் கண்ணைச் சுற்றிலும் உடலின் மற்ற பாகங்கள் வளர்ந்து விடும். கண்ணிழந்த புழுவிற்குக் கண் திரும்ப வந்துவிடும். இப் புழுவை 8 அல்லது 10 துண்டுகளாகக் குறுக்கும் நெடுக்குமாக வெட்டி நீரில் போட்டு விட்டால் போதும் 4 முதல் 7 நாட்களுக்குள் 8 துண்டுகளும் 8 புழுக்களாக மாறி விடும். இதன் தலைப் பகுதியை 10 பிரிவுகளாகப் பிரித்து வெட்டி விட்டால் பிரிவுபட்ட பத்து தலைப் பகுதிகளும் பத்து தலைகளாக ஒவ்வொரு தலைக்கும் இரண்டு கண்களுடன் காணப்படும். உடல் ஒன்றுதான், தலைகளோ பத்து! ஆக ''ராவணன் தலைப் புழு'' என்று அழைக்கலாமே!



ஜே. அந்தோனி பேசில்

இத்தகைய விநோத புழு ஒன்றை - இதுவரை பெயரிடப்படாத புழு ஒன்றை - மதுரைக்கு 13 மைல்களுக்கப்பால் உள்ள அழகர் மலையில் உள்ள நீரோடையில் 1971ம் ஆண்டு திரு ஜெ. அந்தோனி பேசில் கண்டுபிடித்து ஜப்பானிய நாட்டு விஞ்ஞானியுடன் (டாக்டர் மாசாகரு கவா கட்ஸு) இணைந்து ஆராய்ச்சி செய்தார். இப் புழுவிற்கு உலகப் புகழ் பெற்றவரும், நேரு பரிசு பெற்றவருமான மதுரை காமராஜர் பல்கலைக் கழக விலங்கியல் ஆய்வுகூடத் தலைவர் பேராசிரியர் S. கிருஷ்ணசாமி அவர்களின் பெயரையே இட்டு டுசேசியா கிருஷ்ணசாமி என்று உலக விலங்கியல் விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

- காரை சிவம்

''உங்ககிட்ட இதெல்லாம் சொல்லக் கூடாதுன்னு அப்பா சொல்லி யிருக்கார், வஸந்த். வா, உடனே போகலாம்!''

''எங்கே?''

''ராஜ ராஜன் கிணறுக்கு, ஐ மீன் பல்லாவரத்துக்கு!''

''ஹய்யோ! என்னது! திடீர்னு பாயைப் பிராண்ட ஆரம்பிச்சுட்டே!''


''அப்பா ஆபத்துலே இருக்கார்!''

''ராஜ ராஜன் கிணத்துலயா?''

''இப்ப வரப் போறியா இல்லையா?''


வஸந்த் புரியாமல் காரை நோக்கிச் சென்றான்.

(தொடரும்)



★ சிறுகதை

தேவை நீதான்



பஸ் ஓடிக் கொண்டிருந்தது; நின்றுகொண்டிருந்தது; நின்றுவிட்டு உறுமிக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது. சுகவனத்தின் சிந்தனையும் கிட்டத்தட்ட அந்த மாதிரிதான் இருந்தது. பஸ்ஸின் பரபரப்பு எதுவும் அவன் கவனத்தில் படவில்லை. பிற்பகல் மூன்று மணிக்கே திரும்பப் போய்விட்டான்.

குப்பென்று அந்த மென் மணம் மெல்ல வந்து வருடுகிறது. அவன் நிமிர்ந்து பார்க்கிறான். பூவிதழ்கள் மணக்கிற மாதிரி சுவேதா புன்னகையோடு வருகிறாள். கையில் ஏதோ காகிதம். அதெல்லாம் அவன் கண்ணில் படவில்லை. புன்னகை விரியும் இதழ்களுக்கு இடையே மின்னும் பல் வரிசைதான் அவனுக்குப் பளிச்சிடுகிறது. பார்த்துக்-கொண்டே இருக்கிறான்; பேசவில்லை. முடியவில்லை. மயக்கம்; வாசனை மயக்கம் வாயை அடைத்து விட்டது.

அவள் இரண்டொரு வயது பெரியவள் என்று அவனுக்குத் தெரியும். இருந்தால் என்ன மோசம்? பார்வைக்கு நாலைந்து வயது குறைவாக அல்லவா இருக்கிறாள்? மேலும் கல்யாணமும் ஆகவில்லை. ஆண்களை விடப் பெண்களுக்கு வயது குறைவாக இருக்கவேண்டும் என்று என்ன கட்டாயம்?

அவள் அவன் பார்ப்பதைக் கண்டு இன்னும் கொஞ்சம் மலர்கிறாள்., இன்னும் சிறிது நெருங்கி வருகிறாள். கையை நீட்டிக் காகிதத்தைக் காட்ட வருகிறாள். வரட்டும்; வரட்டும்; இன்னும்... இன்னும் நெருங்கி வரட்டும். 'வாயேன், வாயேன்' என்று மனம் கூவுகிறது.

''ஒரு டவுட் சார்! இது யுவர்ஸா, அவர்ஸா?''

''இதுவா... இது அவர்ஸ்தான். அவர்ஸ்தான். யுவர்ஸ், மைன் — என்னது — உன்னுது என்று தனியாக என்ன வந்தது இங்கே?'' என்று கையை அவன் நீட்டுகிறான்.

காகிதத்தை நீட்டிக் காட்டிய அவள் விரலை அவன் விரல் தீண்டுகிறது. சட்டென்று இருவரும் கைகளை இழுத்துக் கொள்கிறார்கள். ஆனால் மறுபடியும் நீட்டுகிறபோது இரண்டு பேர் விரல்களும் தீண்டுகின்றன. மீண்டும் மீண்டும். காகிதத்தில் அந்த இடத்தை அவள் விரல் தொடுகிறது. அவன் விரல் அவள் விரலைத் தொட்டுக் கொண்டே இருக்கிறது.

''இது அவர்ஸ்தான். ஒரு ஸ்பேஸ் விட்டிருக்கிறதனாலேதான்—இப்படி டவுட். டவுட் கேக்கறப்பக்கூட இடைவெளி இருக்கப்-படாது, தெரிஞ்சுதா?'' சிரிக்கிறான்.

அவள் நிமிர்ந்து நேராக அவன் கண்களைப் பார்க்கிறாள். அவனும் கண்ணாலேயே பதிலளிக்கப் பார்க்கிறான். அவள் கன்னம் இன்னும் அழகாகச் சுழிக்கிறது.

''வேறே வேறேயா இருந்தாத்தான் இடைவெளி விடணும். இந்த இடத்திலே இருக்கப்படாது....''

''தாங்ஸ் சார்!'' என்று அவள் புன்ன கையை வீசிவிட்டுப் போகிறாள்.

இப்போது இரண்டு பேருக்கும் சந்தேகம் இருக்க வழியில்லை. நன்றாகப் புரிய வைத்து விட்டான் அவன். அவளும் புரிந்து கொண்டு விட்டதைப் புன்னகையால் உணர்த்தி விட்டாள்.

ஆனால் இவ்வளவு தூரம்புரிந்துகொண்டவளுக்கு அப்புறம் இரண்டு மூன்று தடவையாவது டவுட் வந்து கொண்டே இருக்க வேண்டாமோ?


டைப் செய்ததை எடுத்துக் கொண்டு கையெழுத்துக்கு வரும்போது அதுதான் சுகவனத்துக்குக் கோபம்.


—''அப்புறம் டவுட் வரும்னு நினைச்சேன்.''

''நானும் வரணும்னு பார்த்தேன். எனக்கும் ஒரு இது இல்லையா?''

''அதான் கேட்டேன். வரல்லேன்னதும் எனக்கு டவுட் வந்துடுத்து!''

சிரித்தான். அவளும் சேர்ந்து கொண்டாள். மணம் வீசுகிற மலர் ஒன்று சிரித்தால் இப்படித்தான் போதையை ஏற்றும்.





தேவை நீதான்!

அந்தப் போதை தலைக்கேறி வந்து அவனைத் திளைக்க வைக்கிறது.

அவள்தான் வந்து பக்கத்தில் உட்காருகிறாள். பார்வைகள் கலக்கின்றன. கைகள் பிணைத்துக் கொள்கின்றன.

''எங்கே போகணும்?''

''நீங்கள் போகிற இடத்துக்குத்தான்.''

''அது பிரம்மச்சாரி அறையாச்சே!''

''எத்தனை நாளைக்குத்தான் அது பாவம் அப்படியே இருக்கும்! அது மனசுக்குள்ளேயே சபித்துக் கொண்டிருக்குமே!'' சிரிக்கிறாள்.

சுகவனம் அந்தச் சிரிப்பில் திளைக்கிறான். பஸ் குலுங்கிக் கொண்டு புறப்படுகிறது.

''நாம எங்கே இறங்கணும்?''

சுகவனம் சுற்று முற்றும் அப்போதுதான் பார்க்கிறான். ''ஐயையோ! இறங்க வேண்டிய ஸ்டாப்பிங்கைத் தாண்டி மூன்று ஸ்டாப்பிங் வந்துட்டோமே!'' என்று எழுந்திருக்கிறான்.

''ஹோல்டான் கண்டக்டர்!''

''லவ்டேலுக்கு டிக்கெட் வாங்கிட்டு, இரண்டு ஸ்டேஜ் தாண்டி வந்தீங்களே! ஏன் சார் — நீங்கள்ளாம் படிச்சவங்கதானே? படிக்காதவங்கள்ளாம் தேவலாம் போல இருக்குதே!''



சுகவனம் அந்த ஸ்டேஜுக்குரிய கட்டணத்தைக் கொடுத்துவிட்டு, தலையைக் குனிந்தவாறே இறங்குகிறான். தன் அசட்டுத்தனத்தை நொந்து கொண்டு வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்குகிறான். சுவேதா மறுபடியும் கூடவே துணைக்கு வரக் கூடாதா என்று நெஞ்சு ஏங்குகிறது.

அப்புறம் அவனுக்கு அந்தச் சந்தர்ப்பம் வரவேயில்லை.

மறுநாள் சுவேதா அவன் அறைக்குள் அதே புன்னகை மணத்துடன், இன்னும்கூட கச்சிதமான அலங்காரத்தோடு உள்ளே நுழைந்தாள். மெல்லப் புன்னகைத்தாள். நேற்று நடந்ததை நினைவுபடுத்திக் காட்டிக் கேலி செய்வது போல் அவனுக்கு பிரமை.

''என்ன....ஸ்?'' அவன் வார்த்தையை முடிப்பதற்குள் அவள் அவனிடம் ஒரு பெரிய உறையை நீட்டினாள்.

''என்ன இது?''

''என்க்கு மாரியேஜ் சார்!''

''எனக்கு மாரியேஜா?''

''இல்லே சார்! எனக்கு சார்! நேத்திக்கு இருந்த பரபரப்பிலே சரியா டைப் செய்ய முடியலே. அதுக்கு ரொம்ப சாரி சார். கல்யாணத்துக்கு அவசியம் வரணும் சார்!''

சுகவனம் தலையை ஆட்டவும் இல்லை; சந்தோஷம் — நன்றி என்று சொல்லவும் இல்லை. எதுவுமே இப்போதைக்குப் பேச மாட்டான் போல இருக்கவே, சுவேதா, ''மறந்திடாம வந்திடுங்க சார்! வேறே எந்தக் கல்யாணத்துக்காவது போயிடாதீங்க சார்!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

சுகவனத்துக்கு உண்டான கோபத்தில், அந்தக் கணமே அவளைத் தன் நெஞ்சிலிருந்து தூக்கி வெளியே எறிந்து விட்டான். அவன் நினைப்புக்கு மட்டும் ஓர் உருவம் இருக்கும் என்றால் அது சுவேதா தன் இடத்துக்குப் போய்ச் சேருவதற்கு முந்தியே போய் விழுந்திருக்கும். 'கிட்டாதாயின் வெட்டென மற' என்று பின்னே எதற்காகச் சொல்லி வைத்திருக்கிறார்கள்?

அதனால் இனிமேலாவது காலம் கடத்தாமல் தேவிகா கான்டிமென்ட்ஸ் ஸ்டோரில் விற்பனையாளராக இருக்கும் சாரதாவைப் பார்க்க வேண்டியதுதான் என்று ஒரு முடிவுக்கு வந்து அன்றைக்குச் சாயங்காலமே தேவிகா ஸ்டோர்ஸ் முன்னால் வந்து நின்றான்; சாரதாவைப் பார்த்தான். அவளும் அவனை அதே மாதிரி கவனிப்பது போல அவனுக்குப் பட்டது. நடு நடுவில் அவனைப் பார்த்துச் சிரித்த மாதிரியும் இருந்தது. 'இது அல்லவா சிரிப்பு? தினமும் என்னோடு வந்து அந்த பஸ்ஸிலேயே ஏறுகிறாள். இங்கே வந்து இறங்குகிறாள். இவளை முதலிலேயே கவனிப்பதை விட்டு விட்டு,எட்டாத பழத்

ஆர்வி

துக்குக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தேனே! என்று நினைத்தபோது அவனுக்கே வெட்கமாகப் போய்விட்டது.

சாரதா எடுப்பாக, நல்ல தோரணையாக இருந்தாள். வயசும் குறைவாக இருந்தாள். கவுண்டருக்குப் பின்னால் நின்று அவள் வருகிறவர்களிடம் பேசுவதே மிகவும் அழகாக இருந்தது. சுகவனம் அப்படித்தான் வெட்கமும் பிரமிப்புமாக நின்று கொண்டிருந்தான்.

''ஐ ஆம் ஸாரி! ரொம்ப நேரமாக நிற்கிறீர்கள் போல இருக்கிறதே. என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று தேன் சொட்டச் சொட்டக் கேட்டாள்.

''எனக்கு ஃபாமிலி எதுவும் இல்லே. இருந்தாலும் என்ன வாங்கலாம் என்று பார்க்கிறேன்!''

''ஃபாமிலி இல்லாம இருக்கிறவங்களுக்காக இருந்தும் வாய்க்குப் பக்குவமாகச் செய்து போடத் தெரியாதவங்களுக்காக — புதுசாவும் ருசியாவும் இங்கே எத்தனை இருக்கு? ஸ்வீட் — ஸேவரி — ஸ்நாக்ஸ் இதெல்லாம் வேறே எங்கே வாங்கப் போறீங்க? இந்தாப்பா தண்டபாணி — ஸாருக்கு வேண்டியதை — அவருக்கு என்னெல்லாம் கிடைக்கும்னு தெரியாது — அதனாலே எடுத்துக் காட்டு! பாருங்க ஸார்! உங்களுக்குப் புடிச்சதைப் பார்த்துக் கேக்கலாம்!'' என்று எடுபிடி ஆளை ஏவிவிட்டு விட்டு அவள் மற்றவர்கள் பக்கம் திரும்பி விட்டாள்.

சுகவனத்துக்கு ஒரே வருத்தம். அதனால் ஸ்டோர்ஸுக்குள் வந்த தோஷத்துக்காக நூறு கிராம், நூறு கிராம் என்று இனிப்பிலும் காரத்திலும் இரண்டு வகையை வாங்கிக் கொண்டு அவள் பணம் வாங்கிக் கொள்வதற்காகக் காத்திருந்தான்.





''வாங்கிட்டீங்களா? பில் போடட்டுமா?'' என்று அவள் சிரித்த முகமாய்க் கேட்டாள்.

''உங்களை ராஜாநகர் பஸ் டெர்மினஸிலே பார்த்திருக்கேன். நான் போற பஸ்ஸிலேதான் வருவீங்க. ஆனா இங்கேதான் இருக்கீங்கன்னு இன்னிக்குத்தான் பார்க்கறேன்!'' என்று அவனும் ஸ்பெஷலாகச் சிரிக்கப் பார்த்தான்.

''ஓ-அப்படியா? ஐ ஸீ! வாங்க ஸார்! யூ ஆர் ஆல்வேஸ் வெல்கம். ஃபாமிலி உள்ளவங்களை விட உங்க மாதிரி இருக்கவங்கதான் ஸார் வரணும். வாய்க்கு ருசியா, மனசுக்கு ரம்மியமா எல்லாம் இருக்கு. வேண்டியதை வாங்கிக்கலாமே!'' என்று அவனை வலுக்கட்டாயமாக அனுப்பி வைக்கிற மாதிரி ஒரு கும்பிடும் போட்டு வைத்தாள். சன்னமாக நகைத்தாள்.

ஐயோ — அதைப் பார்த்ததும் சுகவனத்துக்கு உயிரே போனது மாதிரி இருந்தது.

பஸ்ஸை விட்டு இறங்கித் தன் ஜாகை இருக்கும் தெருவில் நுழையும்போதே வெகு அருகில் ஒரு பெண் வருவதாகத் தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். அந்தத் தேவிகா ஸ்டோர்ஸ் சாரதாதான்!

''நீயா!''

''ஆமாம். பின்னே யார்னு நினைச்சீங்க? ராஜாநகர் டெர்மினஸிலே நானும் உங்களைத் தினமும் பார்த்திருக்கேன். அதுக்

அதை ஸ்டோர்ஸ்லே எல்லோரும் இருக்கும்போது காட்டிக்க முடியுமா? நான் கல்யாணமாகாத பெண்ணாச்சே... யாராவது தப்பா நினைச்சுட மாட்டாங்களா? அதான் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கல்லே.''

''அதானே பார்த்தேன். எனக்குக்கூட அது என்னமோ போல இருந்தது. அப்புறம் நான் அதைச் சொன்னதே தப்பாக இருக்குமோன்னு பயந்துட்டேன்.''

''அதுக்குத்தான் நானும் அவசரம் அவசரமா நீங்க போன கையோட கிளம்பி வந்துட்டேன். எப்படியும் உங்களை மீட் பண்ணிடலாம்னு...

''ஐயையோ, அப்படியா? நான் பார்க்கலியே! நீயாவது நான் இருக்கிற இடத்துக்கு வந்திருக்கலாமே... நீ லேடீஸ் சீட்டை விட்டு எழுந்திருக்க முடியாது; இல்லையா? அதோ.. அந்த ப்ளூ பெயிண்ட் அடிச்சிருக்கிற வீடுதான். மாடியிலே என் போர்ஷன். வாடகைதான் அதிகம் ஆனா போர்ஷன் ரொம்ப வசதியான போர்ஷன். வந்து பார்த்துட்டுப் போறியா?''

அவள் சிரிக்கிறாள். அதே பழைய சிரிப்பு.

''அதுக்கென்ன — இப்ப நாமதான் நன்னா அறிமுகமாயிட்டமே. நான் எங்கே போறேன் நீங்க எங்கே போயிடப் போறீங்க? அப்புறம் வந்தாப் போச்சு. இன்னிக்கே வேண்டாம். நாளைக்கு வச்சுக்கலாம். சரிதானா? நாளைக்கு ஸ்பெஷல் கேக்ஸ் இரண்டு வரைட்டி வரப் போறது. அதோட வரேன். என்ன!''

'உன்னைக் கொண்டு வா. அது போதும். அதைவிட ஒரு ஸ்வீட் என்ன இருக்கப் போறது?'

சுகவனம் அவள் கையைப் போய் மெல்லத் தொட்டான். அவள் புன்னகைத்தபடி அதைச் செல்லமாகத் தட்டிவிட்டு வேகமாக அடுத்த தெருப் பக்கம் மறைந்து போனாள்.

சுகவனத்துக்கு அன்று இரவு தூக்கமே இல்லை. மறுநாள் பொழுது விடிந்து ஆபீசுக்குப் போய் எப்போது ஆபீஸ் முடியும், ஸ்டோர்ஸுக்குப் போகலாம் என்று புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டே இருந்தான்.

மறுநாள் ஆபீஸில் டைப் அடிக்க ஹேமலதா என்று வேறு ஒரு பெண் வந்திருந்தாள். சுவேதாதான் லீவு போட்டுவிட்டாளே! இந்த ஹேமலதாவின் இன்ஷியல் 'டி' அதை வைத்துக் கொண்டு அவளுக்கு ஆபீஸில் டார்லிங் என்று ஒரு செல்லப் பெயர் சூட்டியிருந்தார்கள். அவளும் அதற்கு முற்றிலும் பொருத்தமாக இருந்தாள். ஆனால் சுகவனம் இத்தனை நாளும் அவளை ஏறெடுத்துக்கூடப் பார்த்ததில்லை.

இன்றைக்கு அவன் ஆபீஸ் வரும்போதே அந்த ஹேமலதா 'குட் மார்னிங்' என்று முகமன் கூறினாள். அவனும் பதிலுக்கு முணு முணுத்துவிட்டுத் தன் இடத்துக்குப் போய்விட்டான். சாயங்காலம் வரையில் அவளும் உள்ளே போகவில்லை. அவனும் வெளியில் தலைகாட்டவில்லை. ஆபீஸ் முடிந்து வருகிற சமயத்தில் ஹேமலதா என்னவோ கேட்க வந்தாள்.

இனிமேல் எல்லாம் நாளைக்குத்தான். நான் அவசரமாப் போகணும்'' என்று பரபரப்பாக ஆபீஸை விட்டுப் புறப்பட்டான்.

அதிருஷ்டவசமாக தேவிகாஸ்டோர்ஸில் கூட்டம் இல்லை. தூரத்தில் வரும்போதே சாரதா தான் பளிச்சென்று கண்ணில் பட்டாள். ஆனால் அவன் படியேறி, கவுண்டருக்கு அருகே வந்தப்புறம் கூட அவள் கண்ணில் பட்டவள் மாதிரி தெரியவில்லை.

''ஹலோ! ஸார்! என்ன வேணும்?''என்று கேட்டாள் அவள்.

'சே, சே. குரலில் என்ன வேற்றுமை பாரேன்! எனக்கு என்ன வேணும் என்று இவளுக்குத் தெரியாதா? நேற்றுவதுகூட்டம். இன்று கூட்டமே இல்லையே. குரலில் கிடக்கட்டும்; பார்வையிலுமா இத்தனை அந்நியம்?' என்று அவனுக்கு மனம் ஒடிந்து போயிற்று.

''தண்டபாணி! இங்கே வா! ஸாரைக் கொஞ்சம் கவனி!'' என்று சாரதா கடை ஆளுக்கு உத்தரவிட்டாள்.

அதில் சுகவனத்துக்கு இரண்டு பொருள் தொனித்தன.

''நேத்து வந்திருந்தேனே....'' என்று அவளிடமே பேசத் தொடங்கினான்.

''எஸ்....'' என்று தலையை ஒயிலாகத் திருப்பி அவன் கையையும் பையையும் பார்த்தாள், ஏதாவது ரிடர்ன் செய்ய வந்திருப்பானோ என்கிற மாதிரி.

அவன் சிரித்தான்.

''இங்கே எதையாவது விட்டுட்டுப் போயிட்டீங்களா?''

''அதெல்லாம் இல்லே....''

''இப்ப ஏதாவது வேணுமா?''

''அதான் பார்க்கிறேன். என்ன வாங்கறதுன்னு தெரியல்லே!''

''இவ்வளவு இருக்கே, தேவையானதை வாங்கிக்கலாமே?''

'தேவை — நீதான்' என்று நெஞ்சுகூவிற்று. ஆனால் வாய், ''என் தேவை... என் தேவை'' என்று குளறிற்று. ''எனக்குத் தேவைப்படக் கூடியதா இங்கே...'' என்று அவன் முடிக்கவில்லை. அதற்குள் தண்டபாணி குறுக்கிட்டான். ''இங்கே எல்லாம் தேவைப் படக்கூடியது தான்! உங்களுக்கு வேண்டியதை நீங்க தான் பார்த்து வாங்கணும்!''

''அதான் யோசிக்கிறேன்!''

''விடிஞ்சாப்போதும் அவரைப் பார்க்க ஜனங்க கியூ வரிசையில் நிற்பாங்க...''

''பெரிய புள்ளியா?''

''ஊஹூம்... ரேஷன் கடையில் சிமெண்ணெய் ஊத்துபவர்...!'' -கிணத்துக்கடவு ரவி





1968ல் ராஜீவ் காந்தி இந்தியன் ஏர்லைன்ஸில் பைலட்டானார். மாதம் 4500 ரூபாய் சம்பளம். இந்தியாவின் மிகச் சிறந்த பைலட்டுகளில் அவரும் ஒருவர். விமானம் ஓட்டும் போது கவனிக்க வேண்டிய விதி முறைகளைப் பின்பற்றுவதில் கண்டிப்பாக இருப்பார். 'அவருக்கு கோபம் வந்தே நாங்கள் பார்த்ததில்லை' என்று அவருடன் வேலை செய்பவர்கள் கூறுகிறார்கள். அவர் பக்கம் தப்பு இருந்தால் அதை ஒத்துக் கொள்வார். அவர் அடிக்கடி சொல்லுவது: ''ஆமாம்' போடுபவர்களை எனக்குப் பிடிக்காது.''

'ஆன்லுக்கர்'

பின்னால் யாரோ வருவது தெரிந்தது.

''அவர் யோசிக்கட்டும். நீ வந்தவங்களைக் கவனி!'' என்று ஏதோ எழுதியபடி தண்டபாணியை விரட்டினாள் சாரதா.

சுகவனத்தின் மண்டையில் அடித்த மாதிரி இருந்தது இது. என்ன அலட்சியம்.

''ஸ்வீட்டா..''. என்று தொடங்கியவன் அவள் பார்த்த பார்வையில் ''இந்த நெய் சீடையில் நூறு கிராம்!'' என்றான்.

''அவங்களை நான் கவனிச்சுக்கிறேன். நீ மொதல்லே அவருக்குச் சீடையைக் கொடுத்து அனுப்பு!'' என்று தண்டபாணியிடம் சொன்னாள் அவள்.

நான் ஒரு முட்டாள். அதையும் வாங்கிக் காம வந்திருக்கணும். சீடை வாங்கவா ராத்திரி யெல்லாம் கண் முழிச்சு — ஆபீசை விட்டு அவசரம் அவசரமா வந்தேன்? ரொம்ப இது பிடிச்சவளா இருக்காளே!.... சே... பாவம். அந்த டி. ஹேமலதா மனசு எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கும்? என்னவோ பேசவந்தாள். அவளிடம் இன்று ஒரு வார்த்தை பேசியிருந்தால் அவளுக்குத் திருப்தியா யிருந்திருக்கும். லட்சணமான பெண். அருமையா பேச வந்தாள் அவளிடம் பேசாம வந்ததற்கு ... யான மரியாதை கிடைச்சுட்டுது என் வெளியே வந்து பஸ் ஸ்டாப்பை நோக் நடந்தான்.

பின்னாலேயே யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. பூ வாசனை அடித்தது திரும்பிப் பார்த்தான். ஹேமலதா தான் டி. ஹேமலதா! இங்கே எங்கே வருகிறாள்

''என்னம்மா, பஸ்ஸுக்கா?''

''இல்லே ஸார்! அதோ ஸ்கூட்டரில் வர்றார் பாருங்க, அவருக்காகத்தான்!''

''ஓ — யார் அவர்?''

''இருங்க வரட்டும். அவரையே கேளுங்களேன்!'' என்று சொல்லிவிட்டு நாணமாகச் சிரித்தாள் ஹேமலதா.

சுகவனத்துக்கு அவ்வளவு பொருளை யில்லை. அவனுக்குப் புரிந்து வி ஹேமலதாவை மணக்கப் போகிறவ லது மாலையிட்டவனாகவே இருந்தா கலாம். இதைப் போய் என்ன கேட்

''நான் வரேன்.... விஷ் யூ குட் என்று நடந்தான்.

அப்புறம் என்னவோ ஒரு வே கையிலிருந்த சீடைப் பாக்கெட்டை ஓரமாக வீசி எறிந்து விட்டுப் பாக்கெட் பிரிந்து. நெய் சீடைகள் பக்கமும் சிதறி ஓடின.

பாரதீய ஜனதா

பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் வாஜ்பாய் நமது முதல் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பெறுகிறார். கட்சியைச் சேர்ந்த அனைவராலும் தலைவராக அவர் அங்கீகரிக்கப்பட்ட கையோடு கட்சியின் முதல் தேசிய மகாநாடும் பம்பாயில் விமரிசையாக நடந்தது.

எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாகப் பல்வேறு மாநிலங்களிலிருந்து 55,000 பிரதிநிதிகளுக்கு மேல் திரண்டு நிர்வாகப் பொறுப்பு ஏற்றிருந்தவர்களைத் திணற அடித்ததானது கட்சி, மக்களிடையே அடைந்து வரும் செல்வாக்கை உணர்த்தியது என்றால் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் 40 வயதுக்கும் குறைந்த வர்கள் என்பது எதிர்கால இந்தியா இக் கட்சியின்பால் ஈர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இவ்வளவு கூட்டத்தை எதிர்பாராததால் பிரதிநிதிகளுக்கு வசதிகள் குறைவாகவே இருந்திருக்கும் எனினும் எந்த விதமான அசம்பாவிதமும் இன்றி மாநாடு நடந்து முடிந்ததானது கட்டுக் கோப்பை எடுத்துக் காட்டுகிறது.


மகாநாட்டில் ஜனநாயக மரபுக்கு ஏற்ப, விவாதங்கள் கருத்துப் பரிமாற் றங்கள் தாராளமாக இடம் பெற்றன. வாஜ்பாயையே எதிர்த்துக் காரசாரமாகப் பலர் பேசினர். ஆயின் தீர்மானங்கள் வோட்டுக்கு விடப்பட்டு முடிவு எடுத்த பின் கட்சியில் உள்ள அனைவரும் அந்த முடிவுக்குக் கட்டுப்படுவது சிறப்பு.

நடைபெறுகின்ற இந்திரா காங்கிரஸ் ஆட்சி அதிகமான விமர்சனத்துக் கும் கண்டனத்துக்கும் உள்ளானதில் வியப்பில்லை. ஆனால் அந்த விமர்சனங்களில் விவேகமும் கண்டனங்களில் கண்ணியமும் இருந்தன என்பது மனநிறைவைத் தரு கிறது. ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் ஆக்கிரமிப்பை நமது அரசு வன்மையாகக் கண்டிக்காததால் அண்டை நாடுகளிலும் உலக அரங்கிலும் நமது மதிப்பு குறைந்து போயிருப்பதை விளக்கினார் வாஜ்பாய். ''‘அயல் நாடுகளிலிருந்து நமக்கு ஆபத்து ஏற்படும்’ என்று பிரதமர் அடிக்கடி கூறி வருவதும், நாட்டில் சட்ட ஒழுங்குப் பிரச்னைகளைத் தலைவிரித்து ஆட அனுமதிப்பதும், பொருளாதார சீர் குலைவைச் சரிப்படுத்தாமல் மெத்தெனம் காட்டுவதும், ஜனாதிபதி ஆட்சி முறை பற்றி விவா தம் நடத்தக் கோருவதும் எல்லாம் சேர்ந்து எங்கே கொண்டு விடும்?'' என்று வினா எழுப்பிய வாஜ்பாய், ''சர்வாதிகாரத்துக்கு அடிகோலும் ஆபத்து உள்ளது'' என்று பதிலும் அளித்து மக்களை எச்சரித்திருக்கிறார்.

பல அம்சங்களில் இன்றைய ஆட்சியைக் குறை கூறுவதுடன் நில்லாது ஆக்கபூர்வமான யோசனைகளும் கூறப்பட்டுள்ளன, கொள்கைகள் வரையறுக்கப் பட்டுள்ளன. பொருளாதார மேம்பாட்டுக்கு காந்தீய சோஷலிஸம் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஷூமோஹர் போன்ற நவீன பொருளாதார மேதைகளும் கூட போற்றி ஆதரவு தரும் காந்தீய பொருளாதாரத்தைப் பத்தாம் பசலித் தன மானது என்று ஒதுக்கி விட்டால் நஷ்டம் நமக்குத்தான். இதனை விரிவாக விளக் கிய மாநாடு, மதச் சார்பின்மை என்பது மதங்களைப் புறக்கணிப்பதல்ல, அனைத்து மதங்களுக்கும் சம வாய்ப்பளித்து மக்களிடையே இறையுணர்வையும் பய பக்தியை யும் வளர்ப்பதுதான் என்று அத்யாவசியமான ஒரு கருத்தையும் வெளியிட்டிருக் கிறது. மேலும், சிறுபான்மை வோட்டுக்களைப் பெற்று நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை இடங்களை அடைய வழிவகுக்கும் இன்றைய தேர்தல் முறையை மாற்றி அமைக்கக் கட்சி உறுதி பூண்டிருப்பதானது வரவேற்கத்தக்கது.

இப்படி பல அரிய நல்ல கருத்துக்களை மக்கள் முன் வைத்த பாரதிய ஜனதா மாநாட்டின் வெற்றி, பிரதமர் இந்திராவை ஒரு கலக்குக் கலக்கியிருக்க வேண்டும். இல்லையெனில் ''அன்று காந்தியைக் குறை கூறியவர்கள் இன்று காந்தீய சோஷ லிஸம் பேசுகிறார்களே!'' என்று அவர் அங்கலாய்த்திருக்க மாட்டார்.

இந்திரா காந்தி கூறுவதை உண்மை என்றே கொண்டாலும், அன்றே காந்தியின் சீடர்கள் என்று கூறிக்கொண்டு இன்று காந்தீயத்தை மறப்பதைவிட, அன்று காந்தியை எதிர்த்த போதிலும் இன்று காந்தீயத்தை மதிப்பது ரொம்ப ரொம்ப மேலல்லவா?



1981 ஜனவரி 11

ரௌத்திரி மார்கழி 27

மலர் 39: இதழ்: 24

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

(சென்ற வாரம்: வஸந்த் காதலித்து ஏறக்குறையக் கல்யாணம் செய்துகொள்கிற நிலையில் இருப்பதைக் கணேஷிடம் சொல்கிறான். அவள் பெயர் இனியா. அப்பா சரித்திரப் பேராசிரியர் அப்பாதுரை. அவரை வசீகரிக்க வஸந்த் சரித்திரம் படிக்கிறான். ''உருப்படமாட்டே நீ'' —கணேஷ். இனியாவின் அப்பாவைச் சந்தித்து அவள் கழுத்தைக் கேட்கத் தலையைக் கலைத்துக்கொண்டு ஓடுகிறான் வஸந்த். அங்கே இனியா கண்ணீருடன் அப்பாவைக் காணோம் என்கிறாள். டெலிபோன் வருகிறது. அப்பாதுரை இனியாவிடம் தான் எழுதின 'ராஜ ராஜன் கிணறு' என்கிற கட்டுரையுடன் பல்லாவரம் வரும்படி கூறுகிறார். புரியவில்லையல்லவா? வஸந்துக்கும் புரியவில்லை. படியுங்கள்.)

௨

ஸ்டியரிங்கில் உட்கார்ந்து ஸ்டார்ட்ட...
கிர்ர்ர்ரக்கி காரை விரட்டிய வஸந்...
''இனியா, என் நெத்திலே கவ...
ரேகைகள் படிந்திருக்கே கவனிச்சியோ...
என்றான்.

''வஸந்த், எனக்கும் கவலையாத்தா...
இருக்குது.''

''மெட்ராஸ்ல நடு சென்டர்ல இருந்...
ஆளுக்குப் பல்லாவரத்தில் என்ன வேலை...
அங்க கல்லை உடைப்பாங்களே தவிர ச...
வெட்டு ஏதும் கிடையாதே!''

''புரியலையே!''

''அப்புறம் இது என்ன கட்டுரை? ரா...
ராஜன் கிணறு? கொஞ்சம் சாம்பிள் படி!...

இனியா சற்றுத் தடுமாற்றத்துடன் கை...
லிருந்த கட்டுரையைப் படித்தாள்.

''ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெ...
நிலச் செல்வியுந்தனக்கே யுரிமை பூண்டமை...
மனக்கொள காந்தளூர்ச் சாலையும் க...
மறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியு...
நாளம்பாடியும் தடிகைபாடியும்....''

''நாயுடு ஹால் பாடியும்... ஹோ...
டான் நிறுத்து. கார் உதறுது. கட்டுரை...
பூரா பாடியா?''

''ஆராய்ச்சிக் குறிப்புக்கள் இருக்கு...
South Indian Inscriptions Vol III. N...
44 on....''



சுஜாதா

''ஆமா, எனக்கு ஒரு சின்னச் சந்தேகம். ங்கப்பா தினப்படி இப்படித்தான் எழு க்கிட்டிருப்பாரா?''

''ஆமாம்!''

''நான் ஆடறேன்! ஐஸ்வே! இதெல்லாம் ார் படிக்கிறாங்க! அவரைத் தவிர!''

''ஏன், நிறைய ஸ்காலர்ஸ் இருக்காங்க!''

''அப்ப உன்னைக் கல்யாணம் பண்ணிட்டா னப்படி இந்த மாதிரி ஸ்வஸ்தி ஸ்ரீயா?''

''முதல்லே அப்பாவைச் சந்திக்கலாம்.''

''அதானே!'' என்று வஸந்த் காரை மிதித்தான். ஒரு அனகாபுத்தூர் பஸ்ஸைச் ாப்பிட்டுவிட்டு 'நூறு' என்றது முள்.

வஸந்த்! வஸந்த்!



''என் ஜாதகராசி! இடது பக்கம் காதலி. கார்! ஏகாந்தமா மவுண்ட் ரோடு! பேச் சென்னவோ ராஜராஜன் கிணறு! பல்லா வரத்திலே எங்கே?''

''ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே வரச் சொல்லி இருக்கார் வஸந்த்! அப்பா குரல்ல பதற்றம் இருந்தது. பக்கத்திலே யாரோ இருந்து சொல்லிக்கொடுக்கிறப்பல பேசினார். ஒருவேளை கிட்நாப் பண்ணி யிருக்காங் களோ!''

''கிட்நாப்பா! ஒரு பாட்டம் 'ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வத்தை அளந்து விட்டார்'னு கேள்வி கேட்காம பார்ட்டி வீட்டில கொண்டு அவரைச் சேர்த்துடும்!''

''வஸந்த்! ராத்திரிக்குள்ள அப்பாதிரும்பச்சேரலேன்னா?''

''ம்ஹூம். ராத்திரி நீயும் நானும் தனியா இருக்கக் கூடாது. விளக்கு அணையும் மழை பெய்யும்... அப்புறம் ஐ.வி. சசி படம் மாதிரி ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு மேலன்னு ஆய்டும்... என் கற்பு என்ன ஆறது? பேசாம உன் உறவுக் காரங்க வீட்ல கொண்டு விட்டுட் றேன்!''


''வஸந்த்! நீங்க எப்ப சீரியஸாப் பேசு வீங்க சொல்லுங்க.''

''கவலைப்படாதே கண்ணே! வாழ்க்கைல எதையுமே சீரியஸா எடுத்துக்காதே. நேத் திக்கு இருக்கறவன் இன்னைக்கு இல்லை! நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகுன்னு வள்ளுவர் சும்மாவா சொன்னார்! பல்லாவரம் வந் துருச்சு பாரு!''

வஸந்த் பல்லாவரம் ரயில் நிலையத்தின் வாசலில் நிறுத்தி ''நீ அப்பா வராரா பாரு நான் குட்டியா ஒரு தம் அடிச் சுட்டு வரேன்!'' என்று காருக்கு வெளியே வந்தான்.

மின் ரயில் ஒன்று வந்து நிற்க ஸ்டேஷன் வாசல் ஜன உயிர் பெற்றது. இருட்டி விட்டது. சைக்கிள் ஸ்டாண் டில் வண்டிகளை விடுவித்துக் கொண்டு மனைவிகளை நோக்கி டிபன் பாக்ஸுடன் பலர் சென்றார்கள். இரண்டு இந்தியப் பிரஜைகள் (வயசு 4, 6.) பிச் சைக்கு ஆயத்தமானார்கள். மண்ணெண்ணெய் விளக்கில் பலாச் சுளைகள் கூப்பிட்டன.

வஸந்த் சற்று அவசரமாக சிகரெட்டை இழுத்தான். கடையில் தொங்கிய 'காமத் தீ' என்று பின் குத்தின புத்தகத்தைச் சற்றுப் பிரித் தான். ''ஜெயஹேமா தன் மா'' வரைதான் படிக்க முடிந் தது. ''வஸந்த் வஸந்த்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினான்.



அருள் வாக்கு

எழுத்தாளர் கடமை

● அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படும் வரையில் எல்லாக் கல்வியையும் வாய் மொழியாகச் சொல்லிக் காது வழியாகக் கேட்டே வழி வழியாக வளர்ந்து வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் பனை ஓலையில் எழுதுகிற தேர்ச்சி பெற்றவர்கள் சிலரே இருந்தார்கள். மற்றபடி, பெரிய வேதாந்தம் தெரிந்தவர்கள் கூட எல்லாம் செவி வழியேதான் கேட்டறிந்தார்கள். அச்சு இயந்திரம் வந்தது. அப்புறம் நிறையப் புத்தகங்கள், நியூஸ் பேப்பர்கள் ஏற்பட்டு விட்டன. பௌராணிகர்களின் இடத்தை இவை பிடித்துக் கொண்டன.

எனவே பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும்தான் இன்றைய பௌராணிகர்கள். சுதரும் மற்ற பௌராணிகர்களும் எப்படி தர்மங்களை ரசமான கதைகள் மூலம் பொதுஜனங்களிடையே பிரசாரம் செய்தார்களோ, அவ்விதமே செய்ய வேண்டியது இன்றைய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை. ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை — உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும் — இதைச் சுவாரசியமாகச் செய்ய வேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப் புது விதங்களில் உணர்த்த வேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுவதும் மாணுக்கர்களாகவே இருந்தால்தான் தாங்களும் புதுப் புது விஷயங்களை அறிந்து, மற்றவர்களுக்குப் பிரசாரம் செய்ய முடியும்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

இனியா காருக்கு வெளியே படபடப்புடன் நின்று கொண்டு கையை உதறிக் கொண்டிருந்தாள். வஸந்த் அவள் அருகே வந்தான்.

''என்ன இன்னி?''

''புடிங்க அந்த ஆளைப் புடிங்க!''

''எந்த ஆளை?''

''அதோ ஒடறான் பாருங்க! கட்டுரையை லபக்குன்னு என்கிட்ட இருந்து புடுங்கிக்கிட்டு ஒடறான்!''

வஸந்த் அவள் காட்டிய திசையில் பார்த்தான். ஸ்டேஷனை விட்டு விலகின பாதையில் ஒருவன் ஓடுவது தெரிந்தது. வஸந்த் துரத்தினான்.

சரசரவென்று நடக்கும், நிற்கும், பேர பேசும், சைக்கிள் தள்ளும் ஜனங்களி ஊடே திறமையாக ஓடினான். அவன் திரு பிப் பார்க்காமல் ஓடுவது தெரிந்தது. அவ மேல் கண்கள் பதித்து ஓடினான். ரா ராஜன் கிணறு பல்லாவரம்... அந்த கட்டுரை யாருக்கோ முக்கியம். சே! சிகரெ குடிக்க இறங்கியிருக்கக் கூடாது...

வஸந்த் சாலையின் முனைக்கு வந்து ப்ரே போட்டாற் போல நிறுத்தினான். எதி சினிமாத் தியேட்டர். இடது பக்க முனையி உடுப்பி ஹோட்டல். கோலாகலமாக சாய கால வியாபாரக் கடைத் தெரு. வெளி சம். லாரிகள், பஸ்கள்.

ஆசாமி உடுப்பிக்குள் துடிப்பாக நுழை வதைப் பார்த்து வஸந்த் நேராக அங்கே சென்றான். வாசலில் கல்லா மேஜையி முதலாளி சில்லறையைக் கீய்ச்சிக்கொண் டிருக்க ஹால் பூரா டிபன் சாப்பிட்டு கொண்டிருந்தார்கள். காற்றில் விவி பாரதியும், ஊதுபத்தி மணமும் கல திருந்தது. மெர்க்குரி விளக்கின் மேல்தட் இனிப்புக்கள் காத்திருந்தன. வஸந் அந்த வட்டாரத்தைப் பான் செய்தான் ஓடி வந்தவன் புதிதாக நுழைந்திருக்கி வன். இன்னும் சாப்பிட ஆரம்பித்திருக் மாட்டான். (அம்மாதிரி பத்துப் ப னைந்து பேர் இருந்தார்கள்) வெள்ளைச்சட்டை அணிந்திருந்தானே (பாதிக்கு மேல் வெள்ளை சட்டை!) அதோ தண்ணீர் குடிக்கிறானே ம்ஹூம். பக்கத்தில் மனைவி.

ஒரு உடுப்பி ஹோட்டலில் மறைவது எவ்வளவு சுலபம்! போதாக் குறைக்கு மாடி மேலே மீல்ஸ் ரெடி என்று வரவேற்றது

''உக்காருங்க ஸார். என்ன வேணும்?''

''ஒண்ணுமில்லே. உள்ள ஒரு ஆள் வ திருக்கான். பாக்கறேன்.''

''அப்ப ஓரமா நில்லுங்க. பிஸி டய பாருங்க!'' வஸந்த் சற்று நேரம் புரியாம நின்றுவிட்டுத் தோல்வியுடன் திரும்பிவி டான். இனியா! அவளைத் தனியாக விட் வந்திருக்கிறேன். ஓ! என்ன அபத்தமா துரத்தல்! மடத்தனம்.

வஸந்த் விரைவில் ரயில் நிலைய வா லுக்குத் திரும்பினான். கார் அங்கேயே இரு தது. கதவு திறந்தே இருந்தது. இனியாவை காணவில்லை. திடுக்கிட்டான். எங்கே அவள் ஸ்டேஷன் வாயிலுக்கு ஓடினான். மாடிப் பட ஏறி நின்று இருப்புப் பாதையையும் பிளாட் பாரத்தையும் பார்த்தான். இறங்கி வந் கடையில் விசாரித்தான்.

''ஏம்பா இங்க ஒரு பொண்ணு நின்னு கிட்டிருந்ததே பாத்தியா?''

''பொண்ணு? என்ன வாத்தியாரே!'' கடைக்காரன் அவனைப் பார்த்த பார்வை 'காமலோலா' என்றது. சே! கேட்ட வித தப்பு. கேஸ் என்று நினைத்துக் கொள்வான் வஸந்துக்கு அன்று மாலை நிகழ்ச்சிகள் அனை தும் புரியவில்லை. ஒன்றுடன் ஒன் தொடர்பே இல்லை. கடையில் எல்ல வற்றையும் கோட்டை விட்டு நிற்கி போலீஸ் ஸ்டேஷன்? ம்ஹூம். முத கணேஷ்.



லக்ஷ்மி
எழுதும்
புதிய தொடர் கதை
கழுத்தில் விழுந்த மாலை......

ஜனவரி 25௳ இதழில் ஆரம்பம்

''பாஸ்! வஸந்த்!''

''ஏய்! எங்கேடா காரு! நீ பாட்டுக்கு என்னைத் திராட்டிலே விட்டுட்டு எடுத்துட்டுப் போயிட்டே! எங்கே இருந்து பேசறே?''

''பல்லாவரத்திலே ஒரு ஹோட்டல்லே இருந்து.''

''என்ன ஆச்சு உன் காரியம்?''

''ஊத்திக்கிச்சு!''

''பல்லாவரத்திலே என்ன செய்யறே?''

''நாலு விரல் நகத்தை இதுவரைக்கும் மொண்ணையாக் கடிச்சு முடிச்சிருக்கேன். இனியாவைக் காணோம்.''

''ஹூ தி ஹெல் இஸ் இனியா?''

''என்ன பாஸ் இப்படிக் கேக்கறிங்க? என் கர்ல் ஃபிரெண்டு சரித்திரப் பேராசிரியர் மகள்.''

''அவளா? சொல்லு.''

''ரெண்டு பேரும் ராஜ ராஜன் கிணத்தை எடுத்துக்கிட்டுப் பல்லாவரம் வந்தமா? ஒரு ஆள் கட்டுரையை அவ கிட்ட இருந்து பிடுங்கிட்டு ஓட, அவனை நான் துரத்த, அவனும் ஆப்படலே. இனியாவையும் காணோம்!''

''ஏய் வஸந்த்! என்ன ஏதாவது 'பாட்' கீட் போட்டிருக்கியா?''

''சேச்சே அதெல்லாம் நிறுத்தியாச்சே.''

''பின்ன ஏன் என்னவோ உளர்றே?''

''விவகாரம் முழுக்கவே உளறல்தான் பாஸ். பரம உளறல்.''

''அப்ப அந்தப் பொண்ணைக் காணமா? அவ்வளவுதானே! நீ அடிக்கிற ஜோக்கைத் தாங்க முடியாம புறப்பட்டுப் போயிருப்பா. பேசாமத் திரும்பி வா. பார் அஸோஸியேஷன் மீட்டிங் இருக்கு எனக்கு.''

''போலீஸ்ல புகார் கொடுக்கலாமான்னு யோசிக்கிறேன்.''

''அவசரப்படாதே. திரும்பி வா முதல்ல.''

''எனக்கு அழுகை வரும் போல இருக்கு பாஸ்!''

''வீட்டுக்கு வந்தப்புறம் அழு. ஒரு பெண்ணைத் துரத்தின இந்தக் கதிதான். வந்து தொலே. விசாரிச்சுக்கலாம்.''



வஸந்த் வெறுப்புடன் கார் ஓட்டினா வஸந்த்! டேய், உன் ஜாதகம்டா! இதே இதே சீட்லேதான் உட்கார்ந்திருந்தா. இ னும் கசங்கல் கூடக் கலையலே. பவுட வாசனை இன்னும் பாக்கி இருக்கு. இன்ன நீ எங்கே இருக்கே? ஒருவேளை போ அடிச்சுட்டேனு? தாங்கமத்தான் கிள பிட்டாளா? இல்லே வேற யாராவ பார்ட்டி அவளைப் பலவந்தமா இழுத் கிட்டுப் போயிருப்பாங்களோ! இருக்கா அப்படி ஏதாவது நடந்திருந்தா சத் போட்டிருக்க மாட்டாளோ? கடைக்கார கவனிச்சிருக்க மாட்டான்? சோம்பேறி கூட்டம் சேர்ந்திருக்காது?

''பின்ன எங்கே பாஸ் போயிருப்பா?''

''எங்கேயும் போயிருக்க மாட்டா. போயிருந்த சமயத்தில யாரையாவது சிநே தியைப் பார்த்திருப்பா. அவ கூட போயிருப்பா.''

''எங்கிட்டச் சொல்லாமயா?''

''இத பார், உன் கவலைகளை நான் ப விரும்பலே. நான் போறேன். திரும்பி வ ஒன்பதரை ஆகும். ராமகிருஷ்ண ப்ரீஃபை எழுதி வை. சும்மா ஸல்க் ப ணிட்டிருக்காதே. எங்க போயிடுவா? வந் உடனே டெலிபோன் செய்வா!''

''பாஸ்! உங்களுக்கு நடந்ததில எதுவு மர்மமாப் படலியா?''

''நடந்ததே புரியலே. மோசமா எடி பண்ண ஃபிலிம் மாதிரி இருக்கு. ஒரே ஜம் கட். ராத்திரி நிதானமா சிந்திச்சுக்கலாம் வரேன்.''

அவன் சென்றதும், ''உங்களுக்கு என் புரியும் ஒரு காதல் மனம் படற பாடு' என்று முணு முணுத்துக் கொண்டு, இனிய வுக்கு டெலிபோன் செய்தான். மறுமுனை கிர்ரிங் கிர்ரிங்கை பதிமூணு முறை எண் விட்டு வைத்தான்.

இன்னும் வீட்டுக்கு வந்து சேரலே!'

ஒரு சிந்தனை. சிகரெட் பற்ற வைத்து கொண்டு ஸி. ஆர். பி.ஸி.யைப் பிரித்தான்

Section 51(2) Provides that when even is necessary to cause a woman to he searche the search shall be made by another woma with strict regard to decency.

இனியா! உன்னை யாராவது ஸர்ச் பண் கிறார்களோ? யார்? நிச்சயம் தந்தைக்கு மகளுக்கும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது. அடு தது ஒருவேளை எனக்காக வருவார்களோ

வஸந்துக்குத் திக்கென்றது. வாயிற் கத தாளிட்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே தம்புச் செட்டி தெருவின் சந்து தெரிந்தது அதிக ஜனநடமாட்டம் இல்லே.

அந்த ராஜ ராஜன் கிணற்றில் இரு கிறது சூட்சுமம். 'வேங்கை நாடும் பாடியும் நாளம்பாடியும்...' என்ன அர் தம் இதற்கெல்லாம்?

முதலில் அப்பா அப்புறம் பெண். எ படியோ நானும் இதில் சம்பந்தப்பட்டிரு கிறேன். என்னை நோக்கியும் அவர்க வரலாம்.

அறை வாசல் கதவு லேசாகத் தட்ட படும் சப்தம் கேட்டது. (தொடரும்)

புதிய

ஃபேப்

டிட்டர்ஜெண்ட் கட்டி

வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக



விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத ஃபார்முலா.

ிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டியின் சக்திவாய்ந்த
ரைவளம் ஆழ ஊடுருவிச் சுத்தம் செய்து விடாப்பிடியான
ழுக்குகளையும் அறவே அகற்றுகிறது
தன விசேட பளிச்சிட வைக்கும் சக்தி வெள்ளைத்துணிகளை அதிக
வண்மையாக்குகிறது— வண்ணத்துணிகளை அதிகமாக
காசிக்க வைககிறது—
ங்கள் துணிகளுக்கு தூய்மை கலந்த புதுமணம் தருகிறது.

து ஈரக்கசிவற்றது —எனவே அதிக துணிகளை வெளுக்கிறது—
ங்களுக்கு சிறந்த சிக்கனம்

இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும்
தரும் சலவைக்கு-புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டி!



தமிழ்நாடு மற்றும்
பாண்டிச்சேரியில் கிடைக்கிறது.

கோல்கேட்-
பாமோலிவ்
தரமாக அளிப்பது

FDC.G.2 TM

3. பேராசிரியரின் அனுபவம்

வஸந்த் சந்தேகக் கதவு திறந்து உடனே, 'இனியா! இன்னி! நீயா! இ நீயா! நான் காண்பது கனவா இல்லே...''

''ஷ்ஷ்.... பின்னுல அப்பா!''

பைப் புகை நெடி மூக்கைத் துளைத்தது. கதவை முழுக்கத் திறந்து, பேராசிரியர் அப்பாதுரையைப் பார்த்து ''ஓ! வாங்க ஸார் வாங்க! உங்க பாத – அது என்ன? – தூளி பட்டு இந்த இடம்... '' என்று துவங்கிய வனைத் தடுத்து,

''கணேஷ் இல்லேயா?'' என்ருர்.

''வெளியே போயிருக்கிருர். வந்துரு வார்... ரெண்டு பேருமே முழுசா வந்துட் டிங்களே! நான் என்னவெல்லாம் கற்பனே பண்ணிட்டேன் தெரியுமா? சரியான சமயத் தில வயத்திலே மில்க்! உள்ளே வாங்க ஸார் ஸாரி! பாச்சலர்ஸ் ரூம்... ''

பேராசிரியர் அப்பாதுரை உள்ளே வந் தார்.

''அப்பா இதான் வஸந்த்!''

அவனேக் கவனிக்காமல் சுற்று முற்றும் பார்த்தார். ஐம்பது வயதிருக்கும். கிட்டிப் புள் மாதிரி குறுந்தாடி வைத்திருந்தார். ரிம் இல்லாத கண்ணுடி. அகலமான நெற்றியில் 'பேராசிரியர்' என்று எழுதியிருந்தது. காத ருகே போனல் போகிறது என்று ரோமங்கள், மற்றபடி வெற்று.

''ஆஷ் டிரே இருக்கா?''

''நிறைய இருக்கு... ஸாரி ஒண்ணுதான் இருக்கு. நிறைய எப்படி இருக்கும்? இங்க யார்சிகரெட் குடிக்கிரு... இனியா உக்காரு!''

''கணேஷ்ங்கறது....''

''என் சீனியர் ஸார். ஸார், உங்க ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாத்தையும்

சுஜாதா



படிச்சிருக்கேன். பிரமாதம். பொம் பார்டா எழுதியிருக்கீங்க!''

''என்ன படிச்சிருக்கே சொல்லு!'' என்றார் சுருக்கமாக.

''அது வந்து... அது என்னது இனியா... நீகூட என்கிட்டப் படிச்சுக் காட்டினியே! டாப்பா இருந்ததே?''

இனியா பேச்சை மாற்றி, ''அப்பா நாம வந்த விஷயம்!'' என்றாள்.

''ஓ எஸ்! வஸந்த்! இன்னிக்கு எனக்கு ஒரு விநோத அனுபவம் ஏற்பட்டுது. வெரி ஸ்ட்ரேஞ்ச்! கணேஷை அட்வைஸ் கேட்கலாம்னுட்டு...''

''என்னைக் கேளுங்களேன். ஃபுல்லா எதிரிலேயே இருக்கேனே!''

''அவர் வந்துறட்டுமே!''

''என்ன சாப்பிடறீங்க?''

''ஒண்ணும் வேண்டாம்ப்பா.''

''இனியா என்ன நீ சொல்லாமத் தனியா புறப்பட்டு வந்துட்டே? நான் எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா? இங்க பாரு..'' நகம் பூராக் கடிச்சு முடிச்சாச்சு!''

''அப்பா வந்து அழைச்சுக்கிட்டுப் போயிட்டார் வஸந்த். ஸாரி!''

''அவசரமா அவளை அழைச்சுட்டுப் போக வேண்டியதா யிருந்தது.''

''ஒண்ணு கேக்கலாமா ஸார்?''

''கணேஷ் வரட்டுமே!''

''மறுபடியும் கணேஷ்! ஹூம்! வரட்டும்!''

சற்று நேரம் மௌனமாக இருந்தான். ''பைப் அணைஞ்சு போயிடுச்சு. பத்த வைக்கட்டுமா?''

''வேண்டாம்'' என்றார். அதிகம் பேசுகிறவராகத் தோன்றவில்லை. வஸந்த் அவரை ஒருமுறை எதிரொலி இல்லாமல்



புன்னகை செய்தான். சட்டென்று ஒரு ஐடியா உதயமாகியது.

''ஸார், உங்ககிட்ட சரித்திரத்தில சந்தேகம் கேட்கணும். லேட்டர் சோளாஸ்ல!''

அவர் சற்றுப் பிரகாசமானார். ''உனக்கு லேட்டர் சோளாஸ்ல இண்டரஸ்ட் உண்டா?''

''இண்டரஸ்ட்டா, பைத்தியம் ஸார்.. ஒரு பக்கம் ஆரிய பவன் பாதாம் அல்வாவை வையுங்க, இன்னொரு பக்கம் லேட்டர் சோளாவை வையுங்க. நான் பின்னதை நோக்கித்தான் பாய்வேன். ஆர்யபவன்? நோ!''

''பரவாயில்லையே. ஒரு வக்கீலுக்குச் சரித்திரத்திலே ஈடுபாடா!''

''ரெண்டிலேயும் நிறையச் சரடு விடலாம் இல்லையா?''

''சரடா?''



''அப்ப... கட்டாயம் மாப்பிள்ளை இழுப்புக்கு வந்துடுவீங்கல்லே?''

''மாப்பிள்ளை அழைப்புன்னு சொல்லுங்க...''

''இல்லே! மாப்பிள்ளை இழுப்புதான். பெட்ரோல் விக்கிற விலைலே காரிலே மாப்பிள்ளையை வச்சுக் கயிறைக்கட்டி எல்லாரும் இழுக்கப் போகிறோம். நீங்களும் வந்து ஒரு கை குடுங்கோ...''

- ஜி. நடராஜன்

''சரடுன்னா ஐ மீன் நிறையப் படிக்கணும்னு சொல்ல வரேன்! இனியா உங்கிட்டச் சொன்னேனே இதை? என் ஃப்ரண்ட் சம்பத்துனு பி.ஏ. ஹிஸ்டரி படிச்சிட்டிருந்தான். க்வார்ட்டர்லி எக்ஸாம். ஹிஸ்டரி பேப்பர். மூணு மணி நேர பேப்பர். Do you consider Raja raja as the greatest of the Chola kingsனு ஒரு பெரிய கட்டுரை எழுதச் சொல்லியிருந்தாங்க. இவன் No I don'tனு எழுதிட்டு மாட்னிக்குப் போய்ட்டான் ஹ ஹ ஹா!''

அந்த வட்டாரத்திலே யாருமே சிரிக்கவில்லை. பேராசிரியர் முகம் சற்றுக் குறுகி, ''யங்மேன் சரித்திரம் என்கிறது சிரிக்கிற விஷயமில்லே'' என்றார்.

''சும்மா சின்னதா ஒரு ஜோக் அடிச்சுப் பார்த்தேன் ஸார். உங்களுக்கு மெக்ஸிகோ தேசத்து லாண்டரி ஜோக் தெரியுமா?''

இனியா அவசரமாக ''வஸந்த்! நீங்க என்னவோ அப்பாவைச் சந்தேகம் கேட்கணும்னிங்களே!'' என்றாள்.

''அதான் ஸார் இந்த உத்தம சோழனைப் பத்தி எனக்கு ஒரு பெரிய சந்தேகம்!''

''என்ன?''

''பிளாகாட் ஆதித்த கரிகாலனைக் கொன்னவங்களுக்கு ஏன் பனிஷ்மெண்ட் கொடுக்கலே? அந்தக் கொலைக்கும் இவனுக்கும் கனெக்ஷன்னுதானே அர்த்தம்?''

''அது அவ்வளவு சிம்பிள் இல்லே வஸந்த். பஞ்சவன் பிரமாதி ராஜன்னு பாண்டி நாட்டு அரசியல் அதிகாரி ஒருவன் அதிலே சம்பந்தப்பட்டிருக்கான்!''

''அப்படியா? சொல்லுங்க ஸார்! ரொம்ப இண்டரஸ்டிங்!'' என்றான்.

இனியா அப்பாவின் பின்புறத்திலிருந்து, 'உன்னை வெட்டறேன் வா!' என்று கையைக் காட்டினாள்.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டுப் பேராசிரியர் நிறுத்தினார். கணேஷ் உள்ளே வர ''பாஸ்! உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்காங்க!'' என்றான்.

கணேஷ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து ''ஸாரி, லேட்டாயிடுத்து!'' என்றான்.

''பாஸ் இவர்தான் ப்ரொபஸர் டாக்டர் அப்பாதுரை, இது டாக்டர் இனியா. நான் சொல்லலை!''

''ஓ! இவங்கதானா? என்னமோ காணாமப் போயிட்டதுன்னு சொன்னே!''

''அதெப் பத்தித்தான் உங்க கிட்டப் பேச வந்தேன் கணேஷ்!''

''அப்ப நீங்க காணாமப் போகலியா?''

''அதாவதுமுதல்லே காணாமப் போனாங்க! அப்புறம் வந்துட்டாங்க!''

''வஸந்த் நான் சொன்னேன் பாத்தியா? மிஸ் இவன் அறுவை ஜோக்குக்குப் பயந்துக்கிட்டுத்தானே ஓடிட்டீங்க!... உட்காருங்க ப்ரொபஸர்... என்ன விஷயம்?''

''கணேஷ்! இன்னிக்கு காலைல இருந்து எனக்கு ஒரு விநோத அனுபவம்...''

''என்னவோ வஸந்த் சொன்னான். தலை கால் புரியலை... உங்களை யாராவது கிட்நாப் பண்ணப் பார்த்தார்களா?''

''தெரியலை. புரியலை.''

''என்ன நடந்தது சொல்லுங்க!''

பேராசிரியர் அப்பாதுரை சுதாரித்து உட்கார்ந்து கொண்டு தன் பைப்பை நிரப்பிக்கொண்டார். பற்றவைத்துப் புகை போக்கிவிட்டுப் பேசினார்.

''காலைல யுனிவர்ஸிடிக்குப் போனேன். ஞாயிற்றுக் கிழமையாயிருந்தாலும் டிபார்ட்மெண்டிலே ஒரு ரெஃபரன்ஸ் பார்க்கப் போயிருந்தேன். நுழையறதுக்கு முன்னாடி ஒரு பெரிய கார் சக்குன்னு வந்து நிக்குது...''

''கத்தி செருகினாப்பல!'' என்றான் வஸந்த்.

''கொஞ்சம் குறுக்கே பேசாமக் கேக்கறியா வஸந்த்'' என்றான் கணேஷ்.

''கார்லே ஒரு ஆள் சுமார் நாற்பது வயசிருக்கும். பார்த்தா வசதியுள்ளவன் மாதிரி

வாசலேயா யிருந்தால். இறங்கி மரியாதை யோட 'ப்ரொபஸர் அப்பாதுரை உங்களைச் சந்திச்சதிலே எனக்கு ரொம்பப் பெரிய பாக்கியம்னு' ஆரம்பிச்சான். என்ன விஷயம்னு கேட்டேன். என் கூட ஒரு அரை மணி வரமுடியுமான்னு கேட்டான். எங்கேன்னேன்; எங்கப்பா கிட்டன்றுன். உங்கப்பா யாரு? அவரை எனக்குத் தெரியாதேன்னேன். எங்கப்பாவுக்கு உங்களைத் தெரியும். நீங்க சரித்திரத்திலே எப்பேர்ப்பட்ட அத்தாரிட்டி என்று தெரியும்னு இப்ப வஸந்த் ஐஸ் வெக்கலே? அதே மாதிரி வெச்சான். எங்கப்பா உங்களைச் சந்திக்க விரும்பறார்னுன். வீடு கிட்டத்தான் இருக்கு. போயிட்டு வந்துறலாம்னு சொன்னுன். கார்ல ஏறிக்கிட்டேன். கார் பாட்டுக்குப் போறது போறது போய் கிட்டே இருக்குது. கிண்டி தாண்டிடுச்சு... மவுண்ட் தாண்டிடுச்சு. மீனம்பாக்கம் தாண்டிடுச்சு.... 'எங்கப்பா? செங்கல்பட்டா'ன்னு கேட்டேன். 'இல்லே வந்தாச்சுன்னுன். பல்லாவரத்துக்கு முன்னுடி சட்டுனு ஒரு சின்னப் பாதையிலே கார் திரும்பிச் சுமார் ஒரு மைல் தள்ளிப் போனு ஒரு பண்ணை மாதிரி இருந்தது. அது நடுவில ஒரு வீடு. அங்க கொண்டு நிறுத்திட்டு உள்ளே வாங்க ப்ரொபஸர்னுன். கொஞ்சம் தயக்கத் தோடேயே உள்ளே போனேன். ஒரு பெரிய ஹால்ல உட்கார வெச்சுட்டு அப்பாவைக் கூட்டியாரேன்னு புறப்பட்டுப் போனுன். அரை மணி நேரமாச்சு ஒரு மணியாச்சு. அப்பா வரலே. நான் எழுந்து பாக்கறேன். வாசக் கதவு பூட்டியிருக்கு... யாருமில்லேயான்னு கூப்பிட்டுப் பாக்கறேன். பதிலே இல்லே. எனக்கு என்னடான்னு ஒரு மாதிரி ஆயிடுத்து. அந்த ஹாலேச் சுத்திச் சுத்தி வரேன். எல்லாக் கதவுகளும் மூடியிருக்கு... வெளியே வரவும் முடியாது. டெலிபோன் இல்லே... ஏறக் குறைய கைது பண்ணுப்பல ஆயிடுச்சு!''

''ஸிம்பிள் இம்ரஸன்மெண்ட்டா? சொல்லுங்க. சுவாரஸ்யமா இருக்குது.''

''எனக்கு சுவாரஸ்யமா இல்லே. மணிக்கணக்கா ஒரு இடத்திலே அடைபட்டுப் பாரு தெரியும். எனக்குக் கவலேயாயிடுச்சு. விஷயம் வேறயா இருக்குமோ? என்னை அடைச்சு வெச்சுட்டு ஏதாவது பணம் கிணம் கேக்கறதுக்கு பிளான் பண்ணுருங்களோ! அடடா மாட்டிக்கிட்டமேன்னு கவலேப் பட்டேன்.

''சாயங்காலம் நாலரை மணி சுமாருக்கு ஒருத்தன் வரான். கதவைத் திறந்து ப்ரொபஸர்! ரொம்ப ஸாரி! உங்களைக் காக்க வெச்சுட்டேன்னுன். எனக்கா ஒரே கோபம். முதல்லே நீ என்னை வீட்டில கொண்டு விடுன்னு கத்தினேன். கோவிச்சுக் காதீங்க. எனக்கு ஒரே ஒரு தகவல் மட்டும் வேணும். அதைச் சொல்லிடுங்க. விட்டுடறேன்னுன். என்னடான்னேன்.

''ராஜ ராஜன் கிணறுங்கிறது எங்க இருக்குன்னு சொல்லிடுங்க விட்டுர்ருேம்!''

''எதுக்காகத் தெரியணும்னேன். அதைப் பத்தி நீங்க கவலேப்படாதீங்க. இடத்தைச் சொல்லிடுங்க விட்டுடறேன்னுன். காஞ்சிபுரத்திலே இருந்து வந்தவாசி போற வழியில மாமண்டூருக்குத் தெற்கே எங்கயோ இருக்குன்னேன். விவரம் போதாது எக்ஸாக்ட்டா எங்க இருக்குன்னு தெரியணும்னுன். அந்த விவரம் தெரியணும்னு ராஜராஜன் கிணறு பற்றி ஒரு கட்டுரை எழுதிட்டிருக்கேன். வீட்டில இருக்கு. அதில ஒரு கல்வெட்டுக் குறிப்பை ஆராய்ச்சி பண்ணி லொக்கேஷன் குடுத்திருக்கேன்னு சொன்னேன். அப்ப உடனே உங்க வீட்டுக்கு போன் பண்ணி அந்தக் கட்டுரையை எடுத்து வரச் சொல்லுங்க. வுட்டுடறேன்னுன். எனக்கு இதெல்லாம் எதுக்குன்னே புரியலே.

''சொல்ல மாட்டேங்கருன். கட்டுரையை வரவழைங்க விட்டுர்ருேம். அவ்வளவு தான்னு சொன்னுன். இல்லேன்னு மறுபடியும் உங்களை அடைச்சுப் போட்டுட்டுப் போயிடுவோம். கட்டுரை வரவரைக்கும் சோறு தண்ணி கிடையாதுன்னுன். என்னடாது வம்பாப் போச்சுன்னு, டெலிபோன் இருக்கான்னு கேட்டேன். மாடிக்கு அழைச்சுட்டுப் போனுன். இனியாவுக்கு அங்கிருந்து போன் பண்ணினேன். யாருக்கும் தெரியாம அந்தப் பொண்ணு மட்டும் தனியா ரயில் ஸ்டேஷனுக்கு வரணும்னுன்.''

''இப்பப் புரியுது. அப்புறம் நடந்தது தான் வஸந்த் சொன்னுன்'' என்ருன் கணேஷ். ''கட்டுரையை உங்க டாட்டர் கிட்ட இருந்து பிடுங்கிக்கிட்டாங்களாக்கும்!''

''ஆமாம். பிடுங்கிக்கிட்டு என்னை அம்போன்னு தெரு முனையில விட்டுட்டு விருட்டுன்னு கார்ல ஏறிப் போய்ட்டாங்க! எனக்கு ஒண்ணுமே புரியலே. அவங்களைப் பார்த்தா சரித்திரத்திலே உற்சாகம் இருக்கிற மூஞ்சியாத் தெரியலே. வேற ஏதோ! அதுவும் ராஜ ராஜன் கிணத்துலே இவங்களுக்கு என்ன இன்ட்ரஸ்ட்?''



''இன்னிக்கு ஸ்கூட்டரிலே என் கணவர் பின்ருடி உட்கார்ந்து போகும் போது சடை சக்கரத்திலே மாட்டிக்கிடிச்சி!''

''ஐயையோ. அப்புறம்?''

''அப்புற மென்ன? ஒட்டுப் போட்டிருந்த மூணு சவுரிகளும் தனித்தனியா அவிழ்ந்து விழுந்திடிச்சு வழியிலே!'' —அ. இராமதாஸ்

''ராஜ ராஜன் கிணறுங்கிறது என்ன ஸார்?''

செங்கல்பட்டு ''ஜில்லாவில் உக்கல்ங்கிற கிராமத்துக்குப் பக்கத்திலே ஒரு பழைய கிணறு அது. ராஜராஜன் காலத்திலே ஆலூர்ல கண்ணன் ஆரூரன்னு ஒரு ஆள் ராஜா பேர்ல அதை வெட்டித் தண்ணி இறைக்கறதுக்கு விட்டிருக்கான். அது பத்தி ஒரு கோயில்ல கல்வெட்டில எழுதியிருக்கு.''

''கோயில் பேரு?''

''புவனி மாணிக்க விஷ்ணு கிரகம்!''

''சரிதான் சின்னதா இருக்கே!''

''அந்தக் கிணறு இன்னமும் இருக்கா?''

''இருக்கு அடையாளம் கண்டு பிடிக்கலாம்!''

''அந்தக் கல்வெட்டில அதைப் பத்தி வேற விஷயம் ஏதாவது இருக்கா?''

''வேற விவரம்னு?''

''புதையல் கிதையல், தங்கம் அப்படின்னு''

''சேச்சே! அதெல்லாம் இல்லை....''

''கல்வெட்டு என்ன சொல்றது?''

''இந்த மாதிரி கிணற்றை வெட்ட வெச்சவன் இவன்... அதில இருந்து தொட்டிக்குத் தண்ணி இறைக்கிறவனுக்கு எத்தனை மரக்கால், எத்தனை குறுணி நெல் கொடுக்கணும்; பந்தல்காரனுக்கு இவ்வளவு, சேதத்துக்கு இவ்வளவுன்னு நெல் கணக்கு... என்னைப் போல் சரித்திர ஆசாமிக்குத்தான் இந்தக் கிணத்திலே செய்தி இருக்கு... புதையலும் கிடையாது ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது! அதான் ரொம்ப ஆச்சரியமா இருக்கு!''

''இப்ப நாங்க என்ன செய்யணும்னு சொல்றீங்க?'' என்றான் கணேஷ்.

''அந்தக் குண்டர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும். கிணத்துல போய் விழட்டும். ஆனா அந்தக் கட்டுரை எனக்கு அவசியம் திருப்பி வேணும்! அதுக்காக நீங்க உதவி செய்து எப்படியாவது அதைக் கொண்டு வந்துறணும்!''

''வஸந்த்! கேட்டில்ல? ஸார் கவலைப் படாதீங்க. வஸந்த் கெட்டிக்காரன். அதை மீட்டுக்கிட்டு வந்துருவான்'' என்றான் கணேஷ். (தொடரும்)

அந்தரங்கம் ஊமையானது



சபல புத்தி இளைஞன் மாமா பெண்ணை விட்டு ஒரு மனைவியிடம் நாட்டம் கொள்கிறான். கணவனிடம் குழந்தை பிறக்காதென்ற நிலையில் அந்த மனைவியும் பழைய காதலன் (சரத்பாபு) சாயலை இளைஞனிடம் கண்டு அவனிடம் தன்னை இழக்கிறாள். (அ..ஆ....வ்வ்) மாமா பெண்ணும் அத்தானைப் பேசித் திருத்தி... கணவன் மனைவியை மன்னித்து....

(ஆஆஆஆவ்வ்வ்வ்வ்வ்வ்வ்வ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
த்துஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
த்துஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
கொர்ர்ர்ர் — ; . . . . . .)

'—ஆ — ஊ — ஆ — ஊ' — திடீர் திடீரென்று சுருளி ஆதிவாசி வேடத்தில் வந்து சுத்தி தூக்கத்தைக் கலைக்கிறார். நகைச்சுவையால் நம் கழுத்துக்குக் கீழே ஒரு அடி தூரத்தில் வலிக்கச் செய்கிறார். தன் முடிவை முன்பே அறிந்தது போல் பேசும் சில வசனங்கள்—டச்சிங்.
இளைஞன் ஜோஸ் — சுறுசுறுப்பில்லாத சுதாகர்
மனைவி ரூபா — ரூபா
மாமா பெண் ரஜனி சர்மா — சும்மா.
கணவன் சோமன் — 'ஷோ'மேன்.
இரவு பகலை வித்தியாசப்படுத்தாத கேமரா ஊட்டி ரயிலை மட்டும் குளிர்ச்சியாக காட்டுகிறது. நம்பிக்கையூட்டும் டைரக்டர் ப்ரேம்குமார். இசை ஜாய். • நளினி சாஸ்திரி


அரிப்பின் எதிரி
டெட்மஸால்
சோப்பு
கடுமையான அரிப்பிலிருந்து
நிவாரணம்பெற, உங்கள்
சருமத்தை நலமுடன் காத்திட
இதோ ஒரு தனி சோப்பு—
டெட்மஸால்
விரைவில் நீண்ட நிவாரணம்
அளிக்கிறது—
டெட்மஸால் சோப்பு
மருந்து கடைகளில்
கிடைக்கும்.
TETMOSOL
விரைவில் நீண்ட
நிவாரணம் அளிக்கிறது-
டெட்மஸால் சோப்பு

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

முன்கதைச் சுருக்கம்

வஸந்த் தன் காதலி இனியாவின் அப்பா பேராசிரியர் அப்பாத்துரையை வசீகரிக்க சரித்திரம் படிப்பது கணேஷுக்குப் பிடிக்கவில்லே. இனியாவைச் சந்திக்க வஸந்த் செல்கிருன். அவள் கண்ணீருடன் பேராசிரியரைக் காணேம் என்கிருள். போன் வருகிறது. பேராசிரியர் தான் எழுதிய ராஜராஜன் கிணறு என்கிற கட்டுரையுடன் பல்லாவரம் வா அவசரம் என்கிருர். போகிருர்கள். பல்லாவரம் ரயில் நிலேயத்தின் முன் ஒருவன் சரக்கென்று இனியாவிடமிருந்து கட்டுரையைப் பிடுங்கிக் கொண்டு ஓட வஸந்த் அவனேத் துரத்திப் பிடிக்க முடியாமல் திரும்ப வந்தால் இனியா எங்கே?... நொடித்துப் போய்த் திரும்பிவந்து கணேஷிடம் சொல்கிருன். கணேஷ் அதிகம் கவலேப்படாமல் உன் வேலேயைப் பாரு என்று வெளியே செல்ல, தனியாக இருக்கும் வஸந்தின் கதவு தட்டப்படுகிறது. திறந்தால் இனியாவும் அப்பாவும்! ஆறுதலடைந்து ''என்ன ஆச்சு?'' என்று விசாரிக்கலாஞன். அவர் கணேஷ் திரும்பவந்ததும்தான் நடந்ததைச் சொல்கிருர். விஞேதமான அனுபவம். பல்கலேக் கழக வாசலில் ஒரு கப்பல் கார் ஆசாமி அவரிடம் அலட்சியமாகப் பேசி பல்லாவரம் அழைத்துச் சென்றதையும் அங்கே ராஜராஜன் கிணறு எங்கிருக்கிறது என்று கேட்டதையும் பல மணி நேரம் தனியாக விட்டுவிட்டு, கடைசியில் ஏறக் குறைய பயமுறுத்தலாக அவர் எழுதிய கட்டுரையைத் தருவிக்குமாறு கேட்டதும், அவர் மகளுக்கு போன் பண்ணி வரவழைத்ததும் ரயில் நிலேயத்தில் விட்டப்பட்டதும் மகளேத் தனியாகப் பார்த்து அவசரமாக அழைத்துச் சென்று விட்டதையும் சொல்கிருர். 'கட்டுரை எனக்கு மிக முக்கியம் அதை எப்படியாவது மீட்டுத் தரவேண்டும்' என்கிருர். கணேஷ் வஸந்தை ஏவுகிருன்.

[வாசகரே! மூன்று வாரம் மாஞ்சு மாஞ்சு எழுதியதை இப்படிச் சுருக்குவது நியாயமா? சோம்பேறித்தனம் பார்க்காமல் சென்ற வாரங்களேத் தேடி ஒரு முறை படித்து விடுங்களேன். -சுஜாதா]

4

வஸந்த் கணேஷை முறைத்தான். ''என்ன பாஸ் பலி ஆடுமாதிரி என்னே அனுப்பறீங்க?''



''இதிலே உனக்குத்தானேடா சாமர்த்தியம் அதிகம்?''

''ஏன் ஸார், அந்தக் கட்டுரை ரொம்ப அவசியமோ? 'ராஜேந்திரன் கிணறு'ன்னு இன்னொண்ணு எழுதிக்குங்களேன்.''

''இல்லேப்பா, ஆறு மாசம் ஆராய்ச்சி பண்ணி அதை ஆறு பக்கத்திலே சாறுப் பிழிஞ்சு எழுதியிருக்கேன். ராஜ ராஜன் கிணறு கல்வெட்டில எத்தனை விஷயம் இருக்கு தெரியுமா? புதுக்குப்புறம்னு என்னன்னு தெரியுமா?''

''புதுசு, குப்புறப் படுத்துக்கறது?''

''இல்லே. காஸ்ட் ஃபார் ரிப்பேருக்கு செந்தமிழ்த் தொடர். அது அந்தக் கல்வெட்டில எழுதியிருக்கு!''

''ஏன் ஸார் நடு ராத்திரியில புதுக்குப்புறமெல்லாம். எனக்குக் கதை வசனம் புரிஞ்சுடுத்து. உங்களுக்கு அந்தக் கட்டுரை வேணும். அது நாளை உங்களை வந்தடையும். அதுக்கு முன்னாடிச் சில கேள்விகள். உங்களை கூட்டிக்கிட்டுப் போனாங்களே அதைச் சரியா சுத்தமா என்ன இடம்னு வர்ணிக்க முடியுமா?''

''பண்ணை மாதிரி இருந்தது'' என்றார் பேராசிரியர்.

''பண்ணை மாதிரின்னா என்ன பண்ணை? பாலா, கோழியா இல்லே பண்ணையார் பண்ணையா?''

''இல்லேப்பா. தனியா ஒரு நிலத்தின் நடுவில ஒரு வீடுன்னு வெச்சுக்கோயேன்!''

''வெச்சுக்கறேன் தாங்க! அப்புறம் வேற ஏதாவது உருப்படியா அடையாளம்? பல்லாவரத்தில் எங்கே?''

''மார்க்கெட் சந்தடியெல்லாம் தாண்டின பிற்பாடு கொஞ்ச தூரம் பெரு வழியில் போனோம்!''

''பெருவழி?''



''ட்ரங்க் ரோடு... ஆதாரம் கல்வெட்டு! அங்க வாசனை அடிச்சுது. அதுக்கப்புறம் வலதுபுறம் திரும்பினோம்.''

''வாசனை! என்ன வாசனை?''

''ஸ்னோ பவுடர் வாசனை இல்லே... அது.''

''ஓ, அங்கே ஏதாவது வாசனாதி திரவியங்கள் பாக்டரி இருக்கலாம்.''

''பாண்ட்ஸ்'' என்றான் கணேஷ். ''அங்க நாம ஒருமுறை கேஸ் சம்பந்தமாப் போயிருக்கோம் வஸந்த்!''

''ஞாபகம் இருக்கு பாஸ்! அந்தப் பேட்டையே பவுடர் போட்ட மாதிரி வாசனை தீர்த்துக் கட்டிடும்....ம்... ஸார், நீங்க சொல்லுங்க. இப்பத்தான் குண்டர்கள் ஜாக்ரஃபி புரியுது.''

''வாசனையைத் தாண்டியதும் திரும்பினோமா? அங்கிருந்து மண் பாதையில ஒரு மைல் போனதாக ஞாபகம். நடுவே ரேடியோ டிரான்ஸ்மிட்டர் மாதிரி சின்னதா ஒரு கட்டடம் வந்தது....''

''ஸிவில் விமான இலாகாவுடைய மார்க்கர் கட்டிடம்!'' என்றான் கணேஷ். ''அந்த வழியா நான் தண்டலம்னு ஒரு கிராமத்துக்குப் போயிருக்கேன்.''

''கவனிச்சீங்களா நம்ம பாஸை? ஞாபக சக்தின்னா இதானே? போன ஜன்மத்திலே யானை.''

''தனியா கட்டிடம் முள் வேலி... உள் பக்கம் பூட்டியிருந்த கேட்டு.''

''ராஜபாளையம் நாய்?''

''இல்லே. ஏன்?''

''இந்த மாதிரி பண்ணையெல்லாம் கெட்ட காரியத்துக்குன்னேவெச்சிருப்பாங்க.கையைத் தட்டினா ஃபைட்டர் ஷெட்டி வந்தானா?''

''நீ என்ன சொல்றேன்னு புரியலே.''

''நீங்க அமிதாப் பச்சன் படம் பார்க்கிறதில்லையா? ஒரு மொட்டைத் தலே வருவானே!''

''நான் கடைசியாப் பார்த்த படம்...''

''இருங்க நான் சொல்றேன். ராஜ ராஜ சோழன்!''

''கரெக்ட்! அதுக்கப்பறம்....''

''படம் பார்க்கிறதையே நிறுத்திட்டீங்க? சரியா?''

''சரி'' என்று சிரித்தார் பேராசிரியர்.

''சரி. நீங்க அடையாளம் சொல்லிட்டீங்க. நாளைக்கு வஸந்த் போய்ப் பாக்கி வேலையைக் கவனிச்சுப்பான்'' என்றான் கணேஷ்.

வஸந்த், ''சார் நான் அந்தக் கட்டுரையை மீட்டுக் கொண்டு வந்தா நீங்க என்ன தருவீங்க?'' என்றான்.

''எது வேணா கேள். தரேன்.''

வஸந்த் இனியாவைப் பார்த்தான். இனியா அப்பாவுக்குத் தெரியாமல் இப்போது வேண்டாம் என்று அபிநயித்தாள்.

''நீங்க என்னை உங்க மாணாக்கனா ஏத்துக்கிட்டு உங்க வீட்டில வந்து சரித்திர பாடம் கத்துக்க அனுமதிப்பீங்களா? ஸார்?''

''முடியாது!''

''ஏன்?''

''சரித்திரப் பாடமெல்லாம் வேணும்னா யுனிவர்ஸிட்டிக்கு வரணும்.''

Kalki Shopping Page

''போச்சுடா! உங்க வீட்டில வந்து கத்துக்கும்படியா எதுவும் சின்ன வேலை இல்லையா? தோட்டத்துக்குத் தண்ணி ஊத்தறேன். இஸ்திரி போடறேன்.''

''அதுக்கெல்லாம் வேலைக்காரன் இருக்கான்.''

''எதுக்குச் சொல்ல வரேன்னு உங்கமாதிரி சரித்திரப் பேராசிரியர் கிட்டே ஏதாவது ஒரு சேவை செய்யற பாக்கியத்தை எனக்குக் கொடுங்க ஸார்...'' என்றான்.

''பார்க்கலாம். நீ முதல்லே கட்டுரையைக் கொண்டு வா! அப்ப நான் வரட்டுமா? லேட்டாயிடுச்சு. வா பொண்ணு போகலாம்.''

''பை கணேஷ்! பை வஸந்த்! ஸ்லீப் வெல்!'' என்று இனியா ஒரு புன்னகையை பறித்துக் கொடுத்து விட்டுப் புறப்பட்டாள்.



உறுப்பினர்: சங்கக் கணக்கில் துண்டு 3.50 என்று எழுதியிருக்கிறதே, சங்கத்திற்கு எதற்கு துண்டு?

தலைவர்: சங்கத்தில் கடன் வாங்கி, கொடுக்காதவர்களின் கழுத்தில் போட்டுக் கேட்பதற்கு..

— எஸ். நாகராஜன்

''ஸ்லீப் வெல்லாவது... ஹூம்!
மயக்கத்தைத் தந்தவளே — ஒரு
மருந்து சொல்லிப் போனாலென்ன?''
என்றான் வஸந்த்.

''சரியான ஐஸ் ஃபாக்டரிடா நீ.''

''என்ன செய்யறது பாஸ். பேராசிரியர் பேரா-ஆசிரியரா இருக்காரே. ம்ஹூம்... கிட்ட வரவிட மாட்டார் போலிருக்கே! ஒரு எஸ்கிமோகிட்ட ரெஃப்ரிஜிரேட்டர் வித்துறலாம் போலிருக்கே!''

கணேஷ் மறுபடி கோர்ட் கேஸில் ஆழ்ந்து விட்டான். வஸந்த் கடிகாரத்தைத் திருகி அலாரம் வைத்தான்.'' காலைல எழுந்து ஓடணும், பல்லாவரத்துக்கு'' என்றான்.

''காரை எடுத்துக்கிட்டுப் போயிறாதே. பஸ்ல போ! இல்லை, ட்ரெயின்ல போ!''

மறுதினம் காலை வஸந்த் சுமார் ஏழரை மணிக்குப் புறப்பட்டுப் பல்லாவரம் வரை மின்சார ரயிலில் சென்று அங்கிருந்து நடந்து நடந்து இன்னும் கொஞ்சம் நடந்து ஃபாக்டரி வாசலைக் கடந்து மண் ரோட்டில் சென்றான். சொல்லி வைத்தாற்போல் அந்த டிரான்ஸ்மிட்டர் கட்டிடம் வந்தது. அங்கிருந்து சற்றுத் தூரத்திலேயே பேராசிரியர் குறிப்பிட்ட அடையாளங்களில் அந்தக் கட்டிடம் தெரிந்தது. வேலி தடுத்துப் பூட்டியிருந்தது. வெற்று நிலம். பின்னணியில் தென்னந் தோப்பு. நிழலில் ஒரு அமைதியான ஓடு வேய்ந்த வீடு. புறத் திண்ணையில் குண்டான தூண்கள், மரக் கதவு. மாடி. ஆள் நடமாட்டம் இல்லை.

வஸந்த் வேலியோரக் கதவுகளைச் சப்தித்தான். ''ஹலோ! யார் உள்ளே கதவைத் திறங்க'' என்றான்.

பதில் இல்லை. மேலே ஒரு ஏர்பஸ் அலறிக் கொண்டிருந்தது. அதன் நிழல் சடுதியில் தீற்றிவிட்டு மறைந்தது. வஸந்த் யோசித்தான். வேலிக் கம்பி மேல் கால் வைத்தான். ஒரு எவ்வு. உட்புறம் வந்து விட்டான். நடந்தான். அந்த வீட்டு வாசலை அடைந்தான். கதவை மெல்லத் தட்டினான். ம்ஹூம். சந்தடி இல்லை. தூரத்தில் ரன் வேயில் இறங்கி விட்ட விமானத்தின் இளைப்பாறல் சப்தம் மட்டும் கேட்டது. வஸந்த் கதவைத் தள்ளிப் பார்த்தான். திறந்து கொண்டது. உள்ளே பாதி இருட்டாக இருந்தது. பழைய காலத்து ஃபர்னிச்சர் களுடன் ஒரு ஸோபா கம் பெட் இருந்தது. வாரப் பத்திரிகைகள் அடுக்கி யிருந்தன. டெலிபோன் ரிங்கிக் கொண்டிருந்தது. வஸந்த் அதை எடுத்து ''ஹலோ!'' என்றான்.

''யாரு ராமலிங்கமா?''

''ம்.''

''அவங்கள்ளாம் கிளம்பிட்டாங்களா?''

''ம்.''

''வான் அனுப்பிடவா?''

''ம்.''

''கிளவனை என்ன செஞ்சீங்க?''

''ம்.''

''என்னய்யா உம்? கிளவனை என்ன செஞ்சிங்க?''

வஸந்த் படக்கென்று வைத்து விட்டான். அங்கிருந்து நடந்தான். டெலிபோன் மறுபடி அடிக்கத் துவங்கியது. கவனிக்காமல் சுற்று முற்றும் சோதிக்க ஆரம்பித்தான். வீட்டில் யாரும் இல்லை என்று அவன் புலனறிவுக்குத் தெரிந்தது. மாடிப் படி தெரிந்தது. அங்கே போக விரும்பினான். அதே சமயம் இந்தியன் பீனல் கோடின் பதினேழாம் அத்தியாயம் செக்ஷன் 449லிருந்து 452 வரை ஞாபகம் வந்தது. House trespass in order to commit an offence. இப்போது மாட்டிக் கொண்டால் நேராக காவல் நிலையம். டெலிபோன் ஓய்ந்தது. அலமாரியில் பழைய வெள்ளிக் கோப்பைகள் இருந்தன. சந்தன யானை மரக் கட்டையை நகர்த்த அருகே தந்த நங்கை, கொக்கு, பிரில் இங்க் பாட்டில் ஏகப்பட்ட மருந்துப் பாட்டில்கள் கீழ்த் தட்டில் சென்ற மாதத்து தினசரி-நாளிதழ்கள். மலையாளப் பத்திரிகைகள்.

அந்தக் குப்பையில் ராஜ ராஜன் கிணற்றை எங்கே தேடுவது? மெல்லப் புரட்டிப் பார்த்தான். எதிர் அலமாரியைத் திறந்து பார்த்....

வாயிற்புறம் கார் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது. கேட் திறக்கப்படும் சப்தம் தொடர்ந்தது. அதன் பின் செருப்புக் கால்களின் சரக் சரக்.

வஸந்த்மறையஇடம்தேடிஅகப்படாமலுடனே மாடிக்குச் சென்றான்.

மரக் கதவு எண்ணெய் எங்கே என்று திறந்தது. இருவர் பேச்சுக் குரல் கேட்டது.

மாடியில் அதிகம் புழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை.

ஓட்டுக்கு மத்தியில் பதிந்திருந்த கண்ணாடி ஓடு ஒரு வெளிச்ச அருவி அமைத்திருந்தது. அங்கு மிங்கும் சாமான்கள் சிதறியிருந்தன. மண் வெட்டிக்குப் பக்கத்தில் நடை வண்டிக்குப் பக்கத்தில் பழைய ரேடியோவுக்குப் பக்கத்தில் அண்டா. வஸந்த் கவனமாக இடை நடந்தான். வெளியே மொட்டை மாடிக்குச் செல்லும் கதவில் பூட்டுத் தொங்கியது. அதை இலேசாக ஆட்டிப் பார்த்தான். அரை மணிக்குள் திறக்க முடியாது என்று தோன்றியது. ஜன்னல்கள் மூடியிருந்தன.

பைத்தியக்காரத்தனத்தின் சிகரம். எல்லாமே தப்பு. வேலி தாண்டியது, மரக் கதவைத் திறந்தது, டெலிபோனை எடுத்துப் பதிலளித்தது, பார்த்தது, மாடி ஏறியது இப்போது வஸந்தின் ஒரே நம்பிக்கை அவர்கள் மாடிக்கு வரமாட்டாமல் போய் விடுவார்கள் என்பதே. சட்! என்ன தமிழ்! 'வரமாட்டாமல்' நெஞ்சம் பயத்தில் உளறுகிறது கீழே பேச்சுக் குரல் கேட்டது.

''கிளம்பி யிருப்பாங்க ராமலிங்கம்!'' அந்தக் குரலுக்கு நிறைய சக்தி இருந்தது. முப்பத்திச் சொச்சம் வயசு. வெற்று குண்டன். குரலை வஸந்த் அனுமானித்தான்.

''இல்லியே வான் வரலையே!''

''பெரிய வண்டியிலே போயிருப்பாங்க!''

''இல்லடா! டெலிபோன் வரும். காத்திருக்கச் சொன்னுங்க!''

டெலிபோன்! இப்போது மறுபடி டெலிபோன் வந்தால்! வஸந்துக்குச் சின்னச் சின்னதாகப் பதினைந்து ஊசிகள் வயிற்றுக்குள் விளையாடின.

டெலிபோன் ஒலித்தது.

''அல்லோ!''

''.....''

''சொல்லு.ராமலிங்கம்தான் பேசறேன்.''

''செத்த முன்னடியா? எப்ப?''

''பத்து நிமிஷமா? ம்ஹூம். நான் இல்லையே!''

''இந்த நம்பர்தான் கூப்பிட்டியா?''

''இல்லைப்பா.வீட்டில ஒருத்தரும் இல்லை.''

''பதில் சொன்னு?...வெச்சுட்டானு!..''

வஸந்த் மறைவதற்கு ஏதாவது அழுக்குக் கூடை அகப்படுமா என்று சுற்றிலும் பார்த்தான்.

''என்ன ராமலிங்கம்?''

''கொஞ்ச நேரம் முன்னடி பெரியசாமி இங்க டெலிபோன் செஞ்சானும். யாரோ போனை எடுத்துப் பேசினுங்களாம்!''

''என்னது? இங்க யார் வர முடியும்? கேட் பூட்டி இருந்ததே?''

''மரக் கதவு திறந்திருந்ததே! யாரா இருக்கும்?''

''ராங் நம்பரா?''

''இல்லைங்கருன்! நீ எதுக்கும் ஒரு காரியம் பண்ணு. வீட்டை ஒரு முறை சோதனை போட்டுரு. எவனுவது உள்ளே வந்திருக்கானுன்னு பாத்துடு!''

''இந்த அத்துவானத்துக்கு எவன் வருவான்?''

''சொல்ல முடியாது பாரு. நல்லா எல்லா ரூம்லேயும் தேடிடு!''

வஸந்த், 'டேய்! மாடி வேண்டாண்டா மாடி வேண்டாண்டா' என்று மனசில் பிரார்த்தித்தான்.

சற்று நேரம் மௌனம். டெலிபோன் டயல் சுழற்றப்படும் கிர்ரக் கிர்ரக்.

''பெரியசாமியா?ராமலிங்கம் பேசறேன். வான் அனுப்பிச்சுட்டியா? சொல்லவே இல்லியே!''

''பத்து மணிக்குள்ள புறப்பட்டு வந்தூர்றேன். சிங்காரத்தையும் கூட்டு வெச்சுக்க.''

ராமலிங்கம், பெரியசாமி, சிங்காரம்... என்ன பேசுகிறுர்கள்? எதைப் பற்றிப் பேசுகிறுர்கள்?

''டீஸல் நிறையவே போட்டுக்கிட்டு வந்துரு. ஏ.ஆர்.வி. பங்க்லே போட்டுக்க. நாப்பது அம்பது மைல் போகணும். பாரு!..' தேடிக்கிட்டிருக்கான்... தேடிக் கிட்டிருக்கான்.!''

''வந்துரு!''.

டெலிபோன் வைக்கப்பட்டு ''என்னடா?'' என்ருன். ''முழுக்கப் பார்த்துட்டேன் ராமலிங்கம் ஆள் ஒருத்தரும் இல்லை. ராங் நம்பராத்தான் இருக்கும்.''

''எதுக்கும் மாடில ஒரு முறை பாத்துடு!'' என்ருன் நாசமாப் போற ராமலி.........

(தொடரும்)



இஸ்ரேல் நாட்டு அரசியல் சட்டத்தின்படி ஜனதிபதி டாக்டர் விஸ்மனின் அதிகாரங்கள் கம்மியாகி விட்டிருந்த நேரம்.

ஒருமுறை அவர், ராணுவ அணிவகுப்பொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த போது, அவருடைய கைக்குட்டை கீழே விழுந்தது.

அதை ஒரு ராணுவ அதிகாரி எடுத்துக் கொடுத்தார். ''நன்றி, நன்றி! ரொம்ப, ரொம்ப நன்றி!'' என்று கூறினர் ஜனதிபதி. ராணுவ அதிகாரி திகைத்துப்போய் ''ஒரு சின்ன விஷயத்திற்கு இவ்வளவு நன்றி சொல்கிறீர்களே!'' என்ருர்.

''சின்ன விஷயமா? இப்போதெல்லாம் நான் மூக்கை நுழைக்கக் கூடிய ஒரே இடம் இந்தக் கைக்குட்டைதானே!'' என்ருராம் ஜனதிபதி!

—எஸ். ராஜகணேஷ்

எதற்குப் போராடுவது?

'தினை விதைப்போம் வினை அல்ல' என்ற தலையங்கத்தைப் படித்து விட்டு ஒரு விவசாயி வருந்தி எழுதியுள்ளார். ''போக்குவரத்துத் துறையினர், காவல் துறையினர், கல்லூரி ஆசிரியர்கள் போன்றோர் வேலை நிறுத்தம் செய்தால் உடனடியாகப் பாதிப்பு ஏற்படுகிறது; எனவே அவர்கள் கோரிக்கைகள் தாமதமின்றிக் கவனிக்கப் படுகின்றன; எங்களை யார் லட்சியம் செய்கிறார்கள்? ஆகவேதான் சாலை அடைப்பு, போக்குவரத்து மறிப்பு போன்ற போராட்டங்களில் இறங்க வேண்டியுள்ளது'' என்கிறார் அவர். எந்தத் துறையினரானாலும் அவர்களது நியாயமான கோரிக்கைகள் போராட்டம் தொடங்கப்படு முன்னரே கவனிக்கப் படவேண்டியதுதான். அதுதான் திறமையான அரசுக்கு அழகு.

இந்தியாவின் ஜனத்தொகையில் 80 சதவீதம் கிராமங்களில். வேலை இல்லாதோரை ஒதுக்கி ஏதேனும் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்போரை மட்டும் பார்த்தால் அவர்களில் 72 சதவீதம் விவசாயிகளே! விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரில் ஐம்பது சதவீதத்தினருக்குச் சொந்தத்தில் நிலம் இல்லை. இவர்கள் கூலி வேலை செய்பவர்களே. நாளுக்கு நாள் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறதே யொழிய குறையவில்லை. பல்வேறு நிலச் சீர்திருத்தங்கள் இவர்களுக்கு உதவவில்லை. பசுமைப் புரட்சியினால் இவர்கள் நிலை உயரவில்லை. நிலமற்றோருக்கு நிலம் என்ற கொள்கை அமலாகியும் இவர்கள் துயர் தீரவில்லை. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் இயற்றியதால் இவர்கள் கஷ்டம் விடியவில்லை. கொள்முதல் விலை நிர்ணயித்து அரசாங்கமே வாங்கிய போதிலும் கட்டுப்படியாகவில்லை. காரணம் என்ன? விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்காதது தான். வேலை இருந்தால்தானே கூலி?

சொந்தத்தில் நிலம் வைத்திருப்பவர்களிலும் மிகப் பெரும்பாலோர் உழக்குக்கூட மிஞ்சாத அளவில் மிகக் குறைவான விஸ்தீரணமுள்ள நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். எனவே இவர்கள் தங்கள் நிலத்தை உழுவதுடன் பிறர் நிலத்திலும் வேலை பார்த்துச் சம்பாதிக்க முற்படுகின்றனர். இவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயரவில்லை. குடும்பத்தில் நாலு பேர் இருந்தால் ஒருவருக்கு வேலை கிடைக்கிறது; மூவருக்கு இல்லை. இவர்கள் எல்லாம் திரும்பத் திரும்பக் கடன் வாங்கி வட்டியும் அசலும் திருப்பித் தர முடியாமல் திணறுகிறார்கள்.

இதற்கெல்லாம் பரிகாரம் காண்பதுதான் காந்திய சோஷலிஸம். ஆண்டு முழுவதும் மக்களுக்கு வேலை இருக்க வேண்டும்; கூலி கிடைக்க வேண்டும். இதற்குக் கிராமங்களை யொட்டியுள்ள சிறு நகர்களைச் சுற்றிலும் ஏராளமான தொழில்கள் தொடங்கப்பட வேண்டும். இதனால் விவசாயக் கூலிகள் படிப்படியாகத் தொழில் துறை கூலிகளாக மாறுவார்கள். வேலை தேடி அவர்கள் பட்டணப் பிரவேசம் செய்வது குறையும். பெரிய நகரங்களில் நெருக்கடி மேன்மேலும் அதிகரிக்காது.


தொழில்கள் தவிர, தரிசு நிலத்தை விவசாயத்துக்குக் கொணர்தல், நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்தல், ஒரு போகத்தை இரு போகமாக்குதல், சாலைகள் அமைத்தல், பள்ளிகள் நிறுவுதல், கானகம் வளர்த்தல் போன்ற காரியங்களிலும் கவனம் செலுத்தி, கிராமப்புற மக்களுக்கு ஆண்டுமுழுவதும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும். ராஜாஜி வலியுறுத்தியது இதைத்தான். ஷுமோஹர் போன்ற பொருளாதார மேதைகள் இதற்குத்தான் ஆதரவு தந்து இதற்கென Inter mediate technology வளர்க்க வேண்டும் என்கின்றனர். இத்திட்டத்தின் ஒட்டுமொத்த விளைவாகத் தேசப் பொருளாதாரமே சிறக்கும்.

பெரிய நகரங்களை ஒட்டியுள்ள பிரும்மாண்டமான தொழிலகங்கள் அயல் நாட்டுப் பிரமுகர்களுக்குச் சுற்றிக்காட்ட உதவலாம்; நாட்டின் வறுமையை ஒழிக்க உதவாது. விவசாயிகள் 'கிராமப்புறப் பொருளாதாரத்தை அமலாக்குங்கள்' என்று குரல் கொடுக்க வேண்டுமேயொழிய, 'கடனைத் திருப்பித் தரமாட்டோம், மின் கட்டணம் செலுத்த மாட்டோம்' என்று அற்பக் காரணங்களுக்குப் போர்க் கொடி உயர்த்துவதால் எவ்விதப் பயனும் யாருக்கும் இல்லை.

1981 பிப்ரவரி 1

ரௌத்திரி தை 19

மலர் 39 : இதழ் : 27



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

5. தீப்பெட்டி, கண்ணாடி

கெட்ட காரியன் படி ஏறி மாடிக்கு வர அங்கே மாட்டிக் கொண்டுவிட்ட வஸந்த் இரண்டு சா. கூறுகளை ஆராய்ந்தான். ஒளிந்து கொள்வது அல்லது வரப்போகிற வளை ஸோலர் ப்ளெக்ஸஸில் குத்திவிட்டுப் படிகளில் சரிந்து ஓடியே போய்விடுவது.

கண்டா முண்டா ரூமில் ஒளிவதற்கு இடமில்லை. முஷ்டியைத் தயார் படுத்திக்கொண்டு மாடிப் படி விளிம்பில் காத்திருந்தான். வஸந்துக்கு அந்த நெருக்கடி வேளையிலும் ஒரு விஷயம் உறுத்தியது. தப்பான இடத்திற்கு வந்து விட்டோமோ என்ற சந்தேகம். பேராசிரியர் அந்த வீட்டில் கீழே டெலிபோன் இல்லை. மாடிக்கு அழைத்துச் சென்று டெலிபோன் செய்ய வைத்தார்கள் என்று சொன்னதாக ஞா. ஆனால் நான் கீழே அல்லவா டெலிபோனைப் பார்த்துப் பேசி (மாட்டிக் கொண்டேன்) தப்பான அட்ரஸா! அட!

வஸந்த் தன் முஷ்டியை அமுஷ்டியாக்கிக் கொண்டு விட்டான். வேறு வழி யோசித்து விட்டான்.

படி ஏறி வந்தவன் வஸந்தைத் திடுக்கிட்டு ''அண்ணே இங்க ஒரு ஆள் இருக்கான்'' என்றான். வாட்டசாட்டன். மீசைக்குக் காலையில் பதினைந்து நிமிஷம் செலவழித்திருந்தது தெரிந்தது. கண்களில் சுத்தமாக நட்பில்லை.

வஸந்த் வீட்டுச் சொந்தக்காரன் மாதிரி ''வாங்க'' என்றான்.

''யார் நீ?''

''நல்ல கேள்வி! உபநிஷத்துகளும் வேத
தங்களும் இதையேதான் கேக்குது.''

''யார்ரு அது குமரு?''

''தத்துப் பித்துன்னு பேசறான். சின்
பையன!''

''அலேக் கூட்டியா!''

அவன் வஸந்தின் கையைப் பற்றி அழுத்தி மடக்க ''நானே சொந்தச் சக்தியிலேவர்றேனே! எதுக்கா....க கையை மடக்க றீங்க...சொன்னா வர மாட்டனா?'' என்றான்.

கீழே நான்கு பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ராமலிங்கம் இவன் தான் போலும் என்று வஸந்த் நினைத்த ஆசாமி, ''யார்ரு நீ?'' என்றான்.

சுஜாதா



''என் பேரு ரங்காச்சாரி. த. நாடு சமீ பத்திய சுற்றறிக்கைப்படி ஜாதிப் பகுதியை நீக்கிட்டா ரங்கா. விட்டில கூப்பிடற து'ங்கா'.''

''எதுக்காவ உள்ளே வந்தே?''

''கதவு திறந்திருந்தது வந்தேன். நீங்க 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' பாத்திங்களா? சுஹாஸினி இப்படித்தான் பளிச் பளிச்சுனு பதில் சொல்லி...ஆவ்! எதுக்குக் கிள்ளறீங்க?''

''திறந்த வீட்டில எல்லாம் நுளைவியோ?''

''இத பாருங்க! ஒங்க பேரு தெரியலே. ஷான்ல வர்ற ஷுக்கல் மாதிரி இருக்கீங்க.''

''எம் பேரு என்னவா இருந்தா உனக்கென்னடா?''

''எனக்கு ஒண்ணுமில்லேதான். இருந்தாலும் உங்களைக் கூப்பிடறப்போ மிஸ்டர் அனுமதேயம்னு....''

''டேய், உதைடா இவனே!''

''தேவையே இல்லே. நான் இங்க வந்தது ஒரு தப்பான விலாசத்தாலே! உலகத் தமிழ் மகாநாட்டிலமுகவரின்னு சொல்லுவாங்க!''

''தப்பு அட்ரஸ்ஸா? எப்படி?''

எனக்குத் தெரிஞ்ச ஒரு சரித்திரப் பேராசிரியர்ஒரு வீட்டை அடையாளம் சொல்லி அவர் கட்டுரை ஒண்ணை எடுத்துட்டு வரச்சொன்னர். நான் அதைத் தேடிக்கிட்டுத் தப்பான வீட்டில நுழைஞ்சுட்டேன்.''

''எந்தப் பேராசிரியர்? எந்தக் கட்டுரை?''

''அதெல்லாம் இப்ப எதுக்கு கண்ணு! நான் போயிடறேனே!''

''எங்க போறே?''

''அவர் சொன்ன வீட்டைத் தேடிட்டு!''

''அந்த வீடு இதுதான்!''

''இருக்க முடியாது. அடையாளம் ஒத்துப் போகலே. அங்க மாடில டெலிபோன் இருந்துது, கீழே கிடையாதுன்னரு. இங்க வைஸி வர்ஸா!''

''இந்த வீடுதான். மாடில எக்ஸ்டென்ஷன் தனி அறையில இருக்குது. இதைக் கொண்டு போய் அங்க மாட்டிக்கிடுவோம்!''

''அப்ப ரொம்ப சவுகரியமாப் போச்சு. அந்தக் கட்டுரையைக் கொஞ்சம் கொடுத்துடுங்க நான் போறேன்!''

''எந்தக் கட்டுரை?''

''ராஜ ராஜன் கிணறு!''

வஸந்த்





அருள்வாக்கு

பொய், பயங்கரமான சிரங்கு!

உடல், உடை இவற்றுக்கு மேலாக ஒன்று இருக்கிறது. அதுதான் உள்ளம், மனம். மனச் சுத்தம், உள்ளத் தூய்மைதான் மிக மிக முக்கியம். அது இல்லாமல் உடம்பும் உறுப்பும் எவ்வளவு தூய்மையாக இருந்தாலும் பயனில்லை. மனசிலே அழுக்குப் படியாமல் அதை அவ்வப்போது தேய்த்துக் கழுவிக் குளிப்பாட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

மனசுக்கு ஏற்படுகிற அழுக்கு என்பது என்ன? தப்பு, தவறு செய்வதுதான் உள்ளத்துக்கு அழுக்கு. நாம் செய்கிற காரியங்களில் தவறு ஏற்படக் கூடாது. அதாவது கெட்ட நோக்கங்களுக்குக் காரியம் செய்யவே கூடாது. ஆனாலும் காரியம் என்று வந்து விட்டால் நல்லதைச் செய்கிறபோது கூட அதிலே சில தப்பு, தவறுகள் நேர்ந்து விடலாம். இதனால் பெரிய குற்றம் – அதாவது தோஷம் இல்லை. ரொம்பப் பெரியவர்கள்கூட எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்கிறபோது அவர்களையும் கொஞ்சம் சறுக்கி விட்டிருக்கிறது. நாமே எல்லாம் செய்துகொள்ள முடியும் என்று கர்வப்படாமல் பகவான் துணையால்தான் எதையும் சாதிக்க முடியும் என்று நாம் உணருவதற்காகவே இப்படிச் சில தவறுகள் நேர்ந்து விடுகின்றன. இம்மாதிரிச் சமயங்களில் நீங்கள் பகவானை வேண்டிக் கொள்வதுதான் சரி.

ஆனால் சாதாரணமாக ஒரு தப்பு செய்தபோது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அது ஓர் அழுக்கு மாதிரி உங்கள் மனசையே உறுத்துகிறது. உடனே இந்த அழுக்கை யாரும் தெரிந்துவிடக் கூடாது என்று அதை மூடி மறைக்கத் தோன்றுகிறது. நியாயமாகத் தவறுதல் உண்டானவுடன் பிரார்த்தனை பண்ணினால் அந்தப் பிரார்த்தனையே சோப்பைப் போல் அந்தத் தப்பை அகற்றி விடும். அப்படிச் செய்யாமல் தப்பை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் மூட வேண்டும் என்கிறபோது பொய் சொல்ல வேண்டியதாகிறது. அழுக்கைத் தேய்த்துக் கழுவாமல் மூடி மூடி வைத்தால் அது உடனே பழுத்துச் சிரங்காகிவிடும். அது மாதிரி தப்பை மூடியவுடன் அது பொய் என்ற சிரங்காக ஆகி விடுகிறது. உள்ளத்தை ரொம்பவும் கெடுக்கிற பயங்கரமான சிரங்கு பொய்தான்!

அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''கட்டுரை வேணும் உனக்கு?'' என்று அருகே வந்தவன் வஸந்தைக் கன்னத்தில் புறங்கையால் அடித்தான்.

''இத பாருங்க தலைவரே! இது அநியாயம்தானே? திருப்பி அடிக்க எத்தனை தேசாலம் ஆகும்?''

இதற்குள் ராமலிங்கம் என்று பேசப்பட்ட நடுநாயகன் வசந்தின் தோளில் தட்டிக் கொடுத்து, ''ரங்காச்சாரியா நீ? திருப்பி அடிப்பியா? எங்கே அடி?'' என்றான்.

''அடிப்பேன். ராகுகாலமா இருக்கேன்னு பார்க்கறேன்.''

''ராஜ ராஜன் கிணறுன்னா என்ன தெரியுமா?''

''ஓ அதுவா? வந்து ராமலிங்கம் ஸார், செங்கல்பட்டு பக்கம் உக்கல்ங்கற கிராமத்துக்குப் பக்கத்திலே ஒரு கிணறு. அது மாமண்டூர்ல எக்ஸ்பிரஸ் பஸ்ல டிபன் சாப்பிடதுக்கு இறங்குவோம் பாருங்க? அங்க இருந்து தெற்கே போனீங்கன்னா.... டெலிபோன் அடிக்குது விசாரியுங்க.''

ராமலிங்கம் டெலிபோன் அருகே செல்ல வஸந்த் மற்றவர்களைப் பார்த்து ''உங்க நாலு பேர்ல என்னை அடிச்சது யாரு?'' என்றான். அவர்கள் அவனை மேலும் விரோதமாக நோக்கினார்கள்.

''விஷயம் தெரிஞ்சவன் போலத்தான் இருக்குங்க. கட்டுரைக்காக வந்தேன்கறான்....''

''சின்னப் பையன். இருபது இருபத்திரண்டு இருக்கும்.''

''இருபத்தி மூணுங்க'' என்றான் வஸந்த்.

''ம்ம்! அப்படியே செய்துறலாம்... அப்படியே செய்துறலாம்....''

டெலிபோனைக் கவனமாக வைத்துவிட்டுச் சிந்தனையுடன் ராமலிங்கம் திரும்பி வர வஸந்த் ''அப்படியே செய்துறலாம்னா புரியலையே'' என்றான்.

''உனக்கு வேளை சரியில்லை.''

''இல்லயே! முந்தாநேத்துத்தானே தேவியில் வெய்ட் பார்த்தேன். 'நீ தற்போது எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்'னு போட்டிருந்தது.''

''போட்டிருந்ததா? அதை நெத்தில ஒட்டிக்க. ஏய்! பின்பக்கம் ஷெட்டண்டை போய்க் கயிறு கொண்டா.''

''கயிறு எதுக்கு?''

''அப்படியே ஒரு கத்தியும் கொண்டா!''

''கத்தி எதுக்குன்னு சொல்லாதீங்க.''

''ஆளைப் பிடிங்கடா!''

உடனே இருவர் அவனைப் பிடித்தார்கள். சரியான தொரில்லாப் பிடி. ''விடு! விடு! யோவ் நீ உருப்படுவியாய்யா?'' என்று ஏறக்குறைய அந்தரத்தில் காலை உதறினான். அவர்கள் கைப்பிடியைத் தளர்த்தவில்லை. ராமலிங்கம் உள்ளே யிருந்து மஞ்சளாக வளையம் கொண்டு வந்தான். அதிலிருந்து பத்து சென்டி மீட்டர் நீளத்துக்குப் பட்டை பிரித்துக் கொண்டான்.

''என்னது மாஸ்க்கிங் டேப்பா? இதெல்லாம் எதுக்கு? வேண்டாம் வேண்டாம்... வே....''

வசந்த் வாயில் சீல்வைக்கப் பட்டான். கொண்டுவரப்பட்ட கயிற்றால் அவன் கைகள் பின்புறம் கட்டப்பட்டு' கால்கள் கட்டப்பட்டு இரண்டும் இணைக்கப்பட்டு, தோராயமாக ஒரு கால் பந்து அளவுக்கு வஸந்த் சுருட்டப்பட்டு, உருட்டப்பட்டு, உபரியாகத்தோளில் ஒரு முறை வெட்டப்பட்டு மண்டையில் தட்டப்பட்டு...

அவர்கள் கதவுகளைப் பூட்டும் சப்தமும் வெளியே கார் புறப்படும் சப்தமும் வஸந்துக்கு அரை மயக்க நிலையில் கேட்டது.


அறையின் மெலிதான இருட்டில் ஏதோ ஒரு சர்க்கஸ் கன்னியின் நிலையில் இருந்த வஸந்த் கூடுமான வரையில் சுற்றிலும் பார்த்தான். ஒரே ஒரு உச்சாணி ஜன்னலிலிருந்து சூரிய வெளிச்சம் சரிந்தது. அந்த வெளிச்சத்தில் அறையில் பழைய செய்தித் தாள்களும் டிரஸ்ஸிங் டேபிளில் பொருத்தப் பட்ட நிலைக்கண்ணாடியும் இருப்பது தெரிந்தது. கணேஷ் நான் வரவில்லை என்று எப்போது கவலைப்பட ஆரம்பிப்பார்? சாயங்காலம் ஐந்து அல்லது ஐந்தரைக்குத்தான். சுத்தமாக ஏழு மணி நேரம் பாக்கி இருக்கிறது. அதுவரை இந்த மயூராசனத்தில் இருந்தால் உடம்பு ஸ்திரமாகவே இப்படி ஆகிவிடும். கோர்ட்டுக்குப் போக முடியாது. காதல் செய்ய முடியாது. யோசி! எப்படித் தப்பிக்கப் போகிறாய்? முதலில் கைகள்! அவைகளை விடுவிக்க வேண்டும். அசைத்துப் பார்த்தான். குழந்தைகளின் ஆடு குதிரை போலத்தான் அசைய முடிந்தது. எங்கெங்கோ வலித்தது. உதடுகளை என்ன என்னவோ அசைத்துப் பார்த்தான். வாயில் வைத்த சீல் 'பச்சக்' என்று ஒட்டிக் கொண்டிருந்தது. வேலை சுத்தம். பொட்டலமாகக் கட்டி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஜன்னல் வழி சூரிய ஒளி சர்வ காட்டமாகவே எட்டிப் பார்த்தது. அதனருகில் உருண்டு , சென்று சற்று நேரம் அதன் 'சுள்'ளில் மூஞ்சியைக் காட்டினான். கன்னத்துப் பக்கம் ஒட்டியிருந்த டேப் சற்றே இளகினாற்போல் தெரிந்தது. அந்த இளகலைத் தோள் பக்கம் கட்டியிருந்த கயிற்றின் நரநரப்பில் தேய்த்தான். இளகல் விலகல் ஆகியது. மறுபடி சூரிய வெளிச்ச சூடுபண்ணி வாயை விதவித பாவனைகளில் அசக்கி, கயிற்றில் தேய்த்துத் தேய்த்து ஒரு வழியாக வாயை அடைத்திருந்த டேப்பை முழுவதும் விலக்கிவிட்டான்.

சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக்கொண்டு ''காப்பாத்துங்க! காப்பாத்துங்க!'' என்று கத்திப் பார்த்தான். ம்ஹூம். ஒரு இலை அசங்கவில்லை. கூச்சல் வெளியே கேட்கலை.

வஸந்த் யோசித்தான். மூன்று முறை உருண்டு குட்டிக்கரணித்தான். மூன்றும் முறை அவன் பையிலிருந்த நெருப்புப் பெட்டி வெளியே விழுந்தது. அதைக் கடித்துக் கொண்டு தலையை ஆட்டி ஆட்டி உதிர்த்தான். மருந்து தடவிய பெட்டிப் பகுதியை மூக்கால் தள்ளி ஒரு ஸ்டூலின் காலருகே நகர்த்தி அமைத்துக் கொண்டான். பல்லில் நெருப்புக் குச்சியைக் கடித்துக் கொண்டு பெட்டியின் மருந்துப் பகுதியின் மேல் தேய்த்துத் தேய்த்து உடனே குச்சியைத் துப்பினான்.

அவள்: உன் பையன் கழுதை கத்தற மாதிரி கத்தினானே அழுகையை நிறுத்த என்ன செஞ்சே?
இவள்: பேப்பர் ரோஸ்ட்வாங்கிக் கொடுத்தேன்!
- கடலூர் கன்னியப்பன்



நான்காவது குச்சி பற்றிக்கொண்டு எவ்விச் செய்தித் தாளின் மேல்விழுந்து மெல்ல நெருப்புப் படர்ந்தது. வஸந்த் இப்போது டேக்கிக்கொண்டு நிலைக் கண்ணாடி அருகே சென்றான். மண்டையால் முட்டி அதன் சாய்வைச் சற்று மாற்றி நெருப்புத் தெரியுமாறு அமைத்துக் கொண்டு கண்ணாடியில் கவனித்துப் பார்த்து...

''அப்படியே பின் கையில் கட்டியிருந்த கயத்தை முதல்ல எரிச்சுட்டேன் பாஸ். கையை விடுவிச்சுக்கிட்டேன். அப்புறம் கால் கட்டை அவுத்துக்கிட்டேன். எழுந்து நின்னேன். உடம்பெல்லாம் வலி! நெருப்பை அணைச்சேன், கொஞ்ச நேரம் உக்காந்து ரெஸ்ட் எடுத்துக்கிட்டேன். அப்புறம் கதவை ராமலிங்கம் மண்டையை நினைச்சுக்கிட்டு டமால் டமால்னு நாலு சாத்து. பிளந்துக்கிச்சு. அதுக்கப்பறம் சுலபம்.

கணேஷ் அவன் முகத்தைப் பார்த்தான். ''ஸாரி வஸந்த். கன்னத்திலே சிராய்ப்பு... கைல காயம். இந்தா பர்னல் போட்டுக்க. விஷயம் இவ்வளவு தீவிரம்னு தெரிஞ்சா நானும் கூட வந்திருப்பேன்.''

''நீங்க கூட வந்திருந்தீங்கன்னா கதையே மாறியிருக்கும். தனியாப் போய் மாட்டிக்கிட்டேன். பாஸ் வேண்டாம். விட்டுறலாம். பேராசிரியருக்குக் கட்டுரை கிடைக்கலைன்னு சொல்லிறலாம்.''

''ம்ஹூம். வஸந்த் இந்த விஷயம் எனக்கென்னவோ இன்ட்ரஸ்டிங்கா இருக்குது. உன்னை அந்த மாதிரி டிரீட் பண்ணதுக்கு அவங்களுக்கு ஏதாவது பாடம் தரவேண்டாம்? கொஞ்சம் விசாரிச்சுப் பார்க்கலாம். என்ன , தயாரா?''

வஸந்த் மலர்ந்து, ''நீங்க சொன்னா தயார் பாஸ்! அந்தத் தே... ஸாரி விலைமகள் மகன்களுக்குப் புத்தி வரவேண்டாம்? ரெண்டு ஆள் என்னைப் புடிச்சிக்கிறான் பாஸ். ஒரு வஸ்தாது தர்ம அடி அடிக்கிறான்!'' என்றான்.

''வஸந்த் இன்னிக்கு என்ன கிழமை?''

''திங்கள். நாளைக்குக் கேஸ் எதுவும் கிடையாது நமக்கு.''

கணேஷ் சிரித்து''அடுத்த கேள்வியை எதிர் பார்க்கறதிலே எக்ஸ்பர்ட் நீ. சரி. முதல்ல ராத்திரி ப்ரொபஸரைப் போய்ப் பாரு. அந்தக் கிணறு பத்தி மேல் விவரம் தெரிஞ்சுக்க. அந்தக் கட்டுரையில என்னதான் எழுதியிருந்தார், அது என்ன ஆராய்ச்சி, எல்லாத்தையும் தெரிஞ்சுக்க.'' என்றார்.

''சரி பாஸ்! டன்! அதுக்கப்பறம்?''

''நாளைக்கு நாம ராஜ ராஜன் கிணத்துக்குப் போறோம்.'' (தொடரும்)

திரைப்பட விழா:

PASCEOAL DUARTE (SPAIN)
ஒரு சர்வதேச திரைப்பட விழாவுக்கு இம்மாதிரிப் படத்தை எப்படி ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.
கதாநாயகனின் தகப்பனார் இறக்கிறார். சகோதரி விபசாரி ஆகிறாள். இவன் முதலில் தன்னுடன் இருந்த நாயைக் கொல்கிறான். அடுத்து தன் மனைவியைக் கீழே தள்ளிக் கொன்றதற்காகத் தன் குதிரை மீது கோபம் கொண்டு அதைக் கொல்கிறான். பிறகு தன் சகோதரியை வைத்துக் கொண்டிருந்தவனைக் கொல்கிறான். எல்லாவற்றுக்கும் சாட்சியாக இருந்த தன் தாயைக் கொல்கிறான். போதாக் குறைக்கு அந்த ஊரின் பெரிய மனிதரைக் கொல்கிறான். கடைசியில் அவனைக் கழுவில் ஏற்றுகிறார்கள்.
கொலை எல்லாமே கொடூரமாகப் படமாக்கப் பட்டிருக்கின்றன. பார்ப்பவர் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடிய ஆபத்தான படம்.

A DISTANT CRY FROM SPRING (JAPAN)
தெளிந்த நீரோடை போல் செல்கிறது படம்.

அமெரிக்காவின்

ஓர் இளம் விதவை தன் குழந்தையுடன் ஊருக்கு ஒதுக்குப்புறமாக வசிக்கிறாள். ஒரு நாள் இரவு அந்நிய மனிதன் ஒருவன் கதவைத் தட்ட அவனுக்கு உணவும் உறைவிடமும் கொடுத்து உபசரிக்கிறாள். அவன் அங்கேயே தங்கி அவளுக்குத் துணையாக வீட்டு வேலைகள் எல்லாம் செய்கிறான்.
பல வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் விதவையிடம் தான் ஒரு கொலை செய்தவன் என்று கூறிவிட்டுச் சிறைக்குப் போகிறான். அவன் திரும்பி வரும்வரை காத்திருப்பதாகக் கூறுகிறாள்.

APOCALYPSE NOW (U.S.A.)
அமெரிக்கா இந்த நூற்றாண்டில் செய்த மிகப் பெரிய தவறு வியட்நாம் போரில் ஈடுபட்டதுதான் என்று அமெரிக்கர்கள் பலரே கருதுகின்றனர். தார்மீக ரீதியில் அவர்கள் போரில் இறங்கியது சரியாக இருக்கலாம். ஆனால் அவர்கள் யுத்தத்தின் போது நடந்து கொண்ட விதம் கண்டனத்துக்குரியதாகப் பல அம்சங்களில் அமைந்துவிட்டது..
அமெரிக்க ராணுவ கர்னல் (மர்லான் பிராண்டோ) எல்லை தாண்டி கம்போடியாவில் தனக்கென்று ஒரு தலைமையகம் அமைத்துக் கொண்டு தமக்கு யார் இடையூறு பண்ணினாலும் சண்டை போடத் தயாராக இருக்கிறார். இந்தப் புரட்சி மனப்பான்மையை அனுமதிக்க முடியாத ராணுவத் தலைமையகம் கர்னலைக் கொன்றுவிடத் திட்டமிட்டு அதற்கு ஒரு காப்டனை அனுப்புகிறது.
20 நிமிடமே தோன்றும் பிராண்டோ பெற்ற தொகை நாலு மிலியன் டாலர்! வியட்நாம் யுத்தத்தில் எப்படி ஊதாரித்தனம் தலைவிரித்தாடியதோ அப்படி இந்தப் படப்பிடிப்பின்போதும் ஊதாரித்தனம் மலிந்திருந்தது என்று இதன் தயாரிப்பாளர் டைரக்டர் கப்போலாவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

⌘ திரைப்படவிழாவில் போராட்டம். பிரதிநிதிகள் எல்லோரும் வெளியேறுவோம் என்கிறார் முக்தா சீனிவாசன் (விவரங்கள் சென்ற இதழில்) புகைப்படங்கள்: ரவி.





⌘ கன்னிரில் மால்கோவுக்கு நம்பிக்கை உண்டு'

யுத்தத்தில் காண்பிக்கப்படும் வீர சாகஸங்களை விட முக்கியமாக அதன் கொடுமைகளையும் கொடூரங்களையும் விளக்கி விமர்சிக்கும் படம். அமெரிக்காவின் ஆன்ம பரிசோதனை!

ESCAPE FROM ALCATRALZ (U.S.A.)
'கிரேட் எஸ்கேப்' போன்று சிறையிலிருந்து தப்பிச் செல்வதை ஒரு சவாலாக ஏற்று வெற்றி பெறும் கைதியின் கதைதான் இதுவும். கிளிண்ட் ஈஸ்ட்வுட்



காஷ்மீர் பிரச்னையை கிளறிப்போம்!
கிளறித்தே தீருவோம்!
ராணுவ ஆட்சி
பாக் மக்கள்
இஸ்லாம் நாடுகளின் உச்ச மாநாட்டில் ஜியா பேச்சு!
மாநாடு – புதுடில்லி
ஆப்கனில் ரஷ்ய ஆக்கிரமிப்பு துர்நாற்றம்
கம்பூசியா துர்நாற்றம்
வர்றவங்களுக்கெல்லாம் ஞாபகமா ஆளுக்கொரு கர்சீப் கொடுங்க!
வார்த்தை ஜாலங்கள்
நரசிம்மராவ்
தகுதியைப் பார்த்து வேலை கொடுங்க!
முழுநேர கிராம அதிகாரிகள் நியமன விண்ணப்பம்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

6. ''ச்... ச்... ச்...''

''நாளை காலேல கிளம்பறதுக்குள்ள நீ ஒரு நடை பேராசிரியரைப் பார்த்துட்டு வந்துரு'' என்றான் கணேஷ்.

''இதோ இப்பவே'' — வஸந்த் பேராசிரியரைப் பார்ப்பதை விட அவர் மகள் தரிசனத்தில் ஆர்வம் உள்ளவன் போலத் தெரிந்தான். விசிலடித்துக் கொண்டே தலை வாரிக் கொண்டான். அதாவது கலைத்துக் கொண்டான்.

கணேஷ் அவனை சுவாரஸ்யமாகப் பார்த்து ''காதல்னு நடு ராத்திரில தலை வாரிப்பாங்கன்னு எனக்கு இன்னிக்குத்தான் தெரியும்'' என்றான்.

''இல்ல பாஸ். போறப்ப கொஞ்சம் பர்ஸனல்ட்டியா போலாமேன்னுட்டுத்தான்''

''போ. ஒழி. நடு ராத்திரிக்குள்ள திரும்பி வந்துரு.''

''திரும்பி வரப்ப குஷியா ஒரு 'காபரே' அருண்ல ஒரு பாப்பா துள்ளி விளையாடுதாம்.''

''ஏய், ஒழுங்கா வீடு வந்து சேரு.''

வஸந்த் பேராசிரியரின் வீட்டை அடைந்த போது பத்து மணி இருக்கும். வாயில் கதவின் பொத்தானைக் கொஞ்ச நேரம் அழுத்திய பின் உள்ளே பால் சோற்று விசுவாச பாமிரேனியன் வள் என்று ஒரு முறை சாஸ்திரத்துக்குக் குரைத்தது.

''யாரு?'' என்று ஒரு தூக்கக் குரல் கேட்டது.

''நான்தான் ஸார் வஸந்த்.''

''எந்த வஸந்த்?''

''என்னது, வட்டாரத்திலே ஏகப்பட்ட வஸந்த் இருக்காங்களா என்ன? கதவைத் திறங்க ஸார். உங்களுக்காக அடிபட்டு, கடிபட்டு வந்திருக்கேன்.''

''என்ன விஷயமா இருந்தாலும் காலேல பார்த்துக்கலாம். இப்ப கதவைத் திறக்கறதில்லே.'' இந்த முறை இனியாவின் குரல்.

''இனியா இது அநியாயம்'' என்றான்.

''காலேல பேசலாம் எல்லாம்.'' — இனியாவின் குரலில் ஏன் இந்த ஐஸ் என்று வஸந்துக்குப் புரியவில்லை.

''என்னை உள்ள கூட்டு வெச்சுக்கிட்டுத் திட்டக் கூடாதா?''

''கெட் அவுட் யு பாஸ்டர்ட்!'' என்று பேராசிரியர் வெடித்தார்.

''ஹார்ஷ் வர்ட்ஸ் ஸார். உங்களுக்காகத் திருகப்பட்ட கை இன்னும் வலிச்சுக்கிட்டிருக்கு.''

மௌனம். அப்புறம் பேச்சே இல்லை.

வஸந்துக்கு ஒரு சின்னச் சந்தேகம் ஏற்பட்டது. மெல்ல அந்த வீட்டைச் சுற்றிப் பின்புறம் குழாயடிக்கு வந்தான். துணி துவைக்கும் கல்லின் மேல் ஏறிப் பார்த்தான். உள்ளே சமையலறை தெரிந்தது. ஹால் வெளிச்சம் தெரிந்தது. வெளிச்சத்தில் மூன்று பேர் தெரிந்தார்கள். மூன்று பேர்?

மூன்றாமவன் முதுகு மட்டும் தெரிந்தது. இனியாவும், பேராசிரியரும் அந்த முதுகுக்கு உரியவனைச் சற்று அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''போய்ட்டானா பாரு'' என்று அதட்டினான்.



இனியா எதிர் ஜன்னலில் எட்டிப் பார்த்து, ''போயிட்டான்'' என்றாள்.

''நல்லா ஞாபகம் இருக்கும் இல்ல.''

''ம்ம் எல்லாம்—நல்லாத்தான் ஞாபகம் இருக்கு.''

''அப்ப நான் வரட்டுமா? குளந்தே அப்பா உடம்பைப் பார்த்துக்க. அனாவசியத்துக்கு அடிகிடி பட்டுறப் போறாரு.''

''எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க ளம்புங்க'' என்றாள் இனியா.

இப்போது அந்த மூன்றும் மனிதன் பக்க ாட்டில் தெரிந்தான்.

காலேல அந்த ராமலிங்கம் கோஷ்டியில் ார்த்த முகமாக இருந்தது.

அவன் வாயிற் கதவைத் திறந்து வெளியே சன்று சற்றுத் தூரத்தில் மரத்தடியில் றுத்தி வைத்திருந்த மோபைக்கை உதைத் புப் புறப்பட்டான். வஸந்த் மறுபடி வாயிற் தவுக்கு வந்து பெல் அழுத்தினன்.

''யாரு?''

''ஸார், மறுபடியும் வஸந்த்.''

''நீ இன்னும் போகலேயா?''

''இப்ப கதவைத் திறக்கலாமில்ல?''

சற்று நேர யோசனேக்குப் பின் கதவு திறந்தது.

''ஏம்ப்பா உங்களுக்கெல்லாம் வேற விவஸ்தையே கிடையாதா?''

''பயப்படாதீங்க. கோவிச்சுக்காதீங்க.''

''வஸந்த் சட்டுனு உள்ள வந்துறுங்க'' என்றாள் இ.

''தட்ஸ் த கர்ள். உங்களுக்கு என் உதவி தேவை. ரைட்?''

வஸந்த் உள்ளே நுழைந்து ''உக்காரச் சொல்லாட்டாப் பரவாயில்லே. உக்காந்தே தீர்றேன்'' என்றான்.

''சொல்லுங்க. அந்த ஆளு என்ன பய முறுத்திட்டுப் போனன்?''

பேராசிரியர் தலேயை அழுத்திப் பிடித்துக் கொண்டு சற்று நேர மௌனத்துக்குப் பிறகு



''சே, தெரியாத்தனமா வெட்டி வம்பில மாட்டிக்கிட்டாச்சு. ஸாரி வஸந்த். முதல்ல கொஞ்சம் ஹார்ஷா பேசிட்டேன். கட்டுரை கிடைச்சுதா? காலேல அங்க போயிருந்தியா?''

''கேக்காதீங்க. போனேன். அடி உதை வாபஸ் அவ்வளவுதான்.''

''அடடா'' என்ருள் இனியா.

''டாணு யூஸ் பண்ணுதே. வலிக்குது.''

''வஸந்த் கட்டுரை போனுப் போவுது விட்டுறு. விஷயம் ரொம்பத் தீவிரமாயிடும் போலிருக்கு. இப்ப வந்தானே அந்தாளு யார் தெரியுமா?''

''காலேல இவன்தான் ஸார் என் சுண்டு விரலே மடக்கினுன்.''

''அந்த ராஜ ராஜன் கிணத்தில என்னவோ இருக்கு. இப்ப வந்தவன் என்ன சொல்லிட்டுப் போனுன் தெரியுமா? கொஞ்ச நாளில அவங்களே கட்டுரையைத் திருப்பிக் குடுப்பாங்களாம். அதுவரைக்கும் அதைப் பத்தி யார்கிட்டயும்மூச்சு விடக்கூடாதாம்.''

''விட்டா?''

''பளபளன்னு கத்தியைக் காமிச்சான், வஸந்த். அப்பா கழுத்துக் கிட்ட லேசாக் கீறிக் காட்டினுன். எனக்கு ரொம்பப் பயமா இருக்கு வஸந்த். அவங்கள்ளாம் யாரு?'' என்ருள் இனியா. அவள் வதனத்தில் பய ரத்தம் பாய்ந்து இன்னும் சிவப்பாகி இருந்ததில் வஸந்தின் டயஸ்டாலிக் ஒரு பத்துப் பாயிண்ட் எகிறியிருந்தது. ''இனியா கொஞ்சம் அப்பால ஒத்தி நிந்துக்க. அப்பா கிட்ட சீரியஸாப் பேசணும். அய்யா உங்களாலே அந்த ரா. ரா. கிணத்தை அடையாளம் காட்ட முடியுமா?''

''ஏன் எதுக்கு?''

''பொடி நடையா அங்க போயிட்டு வந்துறலாம்னுட்டு பாஸ் யோசனை சொன்னுர்.''

''வேண்டாம்ப்பா ஏதாவது விபரீதமாய்டும்.''

''நாங்க விபரீதத்திலேயே கை அலம்பறவங்க. நீங்க பயப்படாம சொல்லுங்க.''

''உக்கல் கிராமத்துல இருக்கு.''

''உக்கல் எக்கல்?''

''வட ஆர்க்காடு மாவட்டத்தில.''

''செங்கல்பட்டு மாவட்டமில்லையா?''

''இல்லே.''

''அது எக்ஸாக்ட்டா எங்க இருக்குன்னு படம் வரைஞ்சு பாகங்களைக் குறிக்க முடியுமா உங்களால?''

''முடியும்.''

''முதல்ல அதைச் செய்யுங்க. அது வரைக்கும் உங்க டாட்டரை விசாரிக்கிறேன். என்ன இனியா கொஞ்சம் ஆடிப் பூட்டே போலிருக்கே? பயப்படாதே. இவங்கள்ளாம் சுண்டைக்காய்ப் பசங்க.''

''அப்பா, அந்தக் கிணத்துல என்னதான் இருக்கு?''

''இல்லம்மா. எனக்குத் தெரிஞ்ச வரை அது வெறும் பாழுங் கிணறு. திடீர்னு இவ்வளவு பேருக்கு அதில என்ன இன்ட்ரஸ்ட்டுனு புரியலே.''

''நீங்க அந்த இடத்தைப் பார்த்திருக்கீங்களா?''

''பாக்காம தீஸிஸ் எழுத முடியுமா? என்னய்யா கேள்வி?''

''கோவிச்சுக்காதீங்க. இப்பல்லாம் டாக்டரேட்டெல்லாம் டிராமா நோட்டீஸ் மாதிரி குடுக்கிருங்கன்னு கேள்வி. அதனுல தான் கேட்டேன்.''

''ஆறு வருஷம் ரிசர்ச் பண்ணேன்யா! ஒரு வெள்ளைக்காரன் கூட.''

''பாழுங் கிணத்து மேலேயா? இல்லாடி ஸார் நீங்க.''

''கிணறு மட்டும் இல்லே. அதுக்குப் பக்கத்தில இருக்கிற மண்டபம், மண்டபச் சுவர் விதானம், அதில இருக்கிற இன்ஸ்க்ரிப்ஷன்ஸ்....''

''அடடா....''

''வைத்தியநாத சுவாமி கோயில், மாற வர்மன் த்ரிபவீர பாண்டியன், சகலலோக சக்கரவர்த்திண்ணன்....''

''ஈஸி ஈஸி பளிங்கு மாதிரி புரியுது! எனக்கு வேண்டியது ஒரு சின்ன மாட்டர். அந்த இடத்துக்கு என்னைப் போல ஒரு பாமரன் போக வழி! அவ்வளவுதான்.''

''தரேன்.''

பேராசிரியர் ஒரு காகிதத்தில் வரைப் படம் போல் போடத் துவங்க, வஸந்த்

ஒரு சாதனையாளர்



ஐந்து மொழிகள் தெரியும். (வங்காளம், மலேயாளம், ஹிந்தி, தமிழ், ஆங்கிலம்) பதினேரு வாத்தியங்கள் வாசிக்கத் தெரிந்தவர். ரவீந்த்ர சங்கீதமும், சாஸ்திரீய ஹிந்துஸ்தானி இசையையும் முறையாகப் பயின்றவர்.

சென்னை விவேகானந்தா கல்லூரியில் சரித்திரத்தை பாடமாக எடுத்துக்கொண்டு பி. ஏ. படித்து வந்தார். 1978ம் வருடம் பல்கலைக் கழகத்திலேயே இரண்டாவது மாணவராக வந்து சரித்திரம் படைத்தார். தொடர்ந்து அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் பி. ஈடி. பட்டம் பெற்றுத் தேறினுர். இன்று ஆதர்ச வித்யாலயாவில் ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறர்.

''பலருக்கு உடற்குறையில்லேயேல் மனக்குறையேனும் இருக்கும். எனக்கு உடல் குறையிருந்தாலும் மனக்குறை இல்லே. என்பதில் மகிழ்கிறேன்'' என்கிறுர் எட்டு வயதிலே பார்வை இழந்தும் துணிவை இழக்காத எஸ். ஹரிஹரன். இவரது லட்சியம் கல்லூரி அளவில் ஒரு விரிவுரையாளராக ஆவது.

— ரலன்

கபடமில்லாத சிரிப்புடனும் பூரிக்கும் இளமையுடனும் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கும் இருவரும் வாழ்க்கையைச் சவாலாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள். இடதுபுறம் உள்ள குமாரி ஷரீன் பீட்டர்ஸ், இந்த இதழ் ஆசிரியர் குழுவில் பங்கு வகிக்கிறார். தம்தோழி குமாரி அமுதா பற்றிக் கூறுகிறார்:

அமுதாவுக்குக் காது கேட்காது. அதனால் சரியாகப் பேசவும் முடியாது. ஊமையாகவே இருந்தவள் லிட்டில் பிளவர் பள்ளியில் தீவிரப் பயிற்சி பெற்றதால் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பேசுகிறாள். நீச்சலிலும் சித்திரங்கள் வரைவதிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறாள்.

இறைவன் கொடுக்காததைப் பற்றி ஏங்குவதை விட, கொடுத்ததை மேன்மேலும் விருத்தி செய்துகொள்வதில் ஆவலாக இருக்கிறாள். கடவுள் கருணை உள்ளவர், உலகம் அழகானது, மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று நம்பிக்கையோடு இருக்கிறாள்.

வண்ணப்படம் எடுத்தவர்: ''உத்ரா''



இனியாவிடம் தன் கையைக் காட்டி ''எப்படிக் கன்னிப் போயிருக்கு பாரு. காலைல பட்ட தர்ம அடி. எல்லாம் அந்தக் கட்டுரையைத் தேடிட்டுப் போனப்ப ஏற்பட்ட விழுப்புண்கள்'' என்றான்.

''ச்....ச்....ச்...''

''உனக்கென்ன மூணு ச்! என்ன வலி வலிக்குது தெரியுமா?''

இனியா சைகையில் 'அப்புறம்' என்றாள்.

பேராசிரியர் ஏதோ குறிப்புக்காக அடுத்த அறைக்குச் செல்ல வஸந்த் உடனே உயிர் பெற்று, ''இத்தனை நேரம் உங்கப்பா கடிச்சார். காலைல உங்களுக்காக உதை பட்டேன். மூணு 'இச்'சில ஒண்ணாவது கன்னத்தில குடுத்தாகணும் நீ.'' என்றான்.

வஸந்த் அவளுக்கு மிக அருகில் வந்து விட்டான். இனியா அவனை ஒரு முறை வாசனை பார்த்துவிட்டு மூக்கால் சின்னதாக அவன் மூக்கை உரசிவிட்டு அவன் மார்பில் கை வைத்துத் தள்ளிவிட்டகற்றினாள்.

''இது போதும். ரெண்டு நாளைக்குத் தாங்கும்.''

பேராசிரியர் வந்து ''இந்தா இதில எல்லாம் குறிச்சுக் கொடுத்திருக்கேன். எனக்கென்னவோ இவங்களுக்கும் சரித்திரத்துக்கும் சம்பந்தம் இல்லேன்னு தோணுது. எதுக்காகன்னுதான் தெரியலே'' என்றார்.

''அவங்க ஏதோ ஒரு கெட்ட காரியத்துக்குக் கோஷ்டியா அங்க போயிருக்காங்க. என்ன காரியம்னு கண்டுபிடித்தல் எங்க காரியம். வரேன் ஸார், வரேன் இனியா.''

வஸந்த் தீர்மானத்துடன் திரும்பிச் செல்லும்போது ஓமர்கய்யம் என்கிற ரெஸ்டாரண்டில் வாசல் இழுத்து மூடப்பட்டு உள்ளே திடும் திடும் என்று காபரே இசை வழிந்தது. வெளியே கலாட்டாவை எதிர்பார்த்து ஒன்றிரண்டு தாட்டியான தர்வான்கள் காவல்.

வஸந்த் அந்த மர நிழலில் பைக்கை மறுபடி பார்த்தான்.

''என்ன பிரதர் ஷோ நடக்குதா?''

வஸந்த் தந்த ரூபத்தை துவார பாலகன் பற்றிக்கொண்டு கதவைத் தேவைக்கு உட்பட்ட அளவு திறந்து அனுமதித்தான்.

சங்கீதம் கலந்த புகைப்படலம் தாக்கியது. பூராவும் ஆண்கள் கூட்டம். அவர்கள் ஊடே லாவினியா என்று பெயரிடப்பட்ட ஒரு சேலம் லோக்கல், ஜிகினாக்களை ஒவ்வொன்றாக உதறிக் கொண்டிருக்க வஸந்த் மோபைக் ஆசாமியைத் தேடினான். இருட்டில் அடையாளங்கள் கரைந்திருந்தன. லாவினியா ஒரு சுற்று சுற்றி அரை ஹெக்டேர் முதுகைக் காட்டினாள்.

ஆர்க்கெஸ்ட்ரா கைவசம் இருக்கும் வாத்தியங்களை யெல்லாம் தொம்சம் பண்ணி முடித்து, கடைசி நேர 'உம்பம்ப்பா'வில் விளக்கணைவதற்கு ஒரு கணம் முன்னால் அந்தப் பெண்ணின் மார்ப... விளக்கணைந்தது.

மற்ற விளக்குகள் மறுபடி மலர்ந்தபோது மேடை காலியாகி இண்டர்வல் விட்டிருந்தார்கள். வஸந்த் சுற்றிலும் பார்த்தான். அவனைக் காணோம்.

''யாரைப் பார்க்கிறீங்க பிரதர்?''

வஸந்த் சட்டென்று திரும்ப சாட்சாத் அவன்தான்! மோபைக் தடியன்.

''அட நீங்களா? காலைல சந்திச்சோம்ல. அப்ப அதிகம் உங்க கூடப் பேச முடியாமப் போயிடுச்சு. சந்தர்ப்பம் சரியா இல்ல. என்ன சாப்பிடறேள்?''

''என்னவா? உன்ன.''

''ஜோக்கடிக்கறேளா?...

''ஏய், உனக்கு எவ்வளவு தெரியும்?''

வஸந்த் சுற்று முற்றும் பார்த்து ''அண்ணா கிட்ட ஒரு ரகசியம் சொல்லட்டுமா? கிட்ட வாங்கோ காதோட சொல்றேன்'' என்றான்.

அந்த மூர்க்கன் காதைக் காட்ட, வஸந்த் ''எல்லாம் தெரியும்'' என்றான்.

''அப்ப என்ன செய்யறதா உத்தேசம்?''

''நீங்க என்ன செய்யப் போறீங்களோ அதே.''

வஸந்துக்கு அவன் என்ன கேட்கிறான், என்ன பதில் சொல்கிறோம் இரண்டு விஷயங்களும் குண்ட்ஸாக இருந்தது.


''பிரதர் உனக்கு ஒரு சுவாரஸ்யமான பெண்ணைச் சந்திக்க விருப்பமா?''

''பிரதர் அதைவிட முக்கியமான, சந்தோஷமான காரியம் இருக்க முடியுமா?''

''அப்ப உள்ளே வரீங்களா?'' (தொடரும்)

இந்த இதழின் ஆசிரியர் குழு அறிமுகம்







ராமன்

என் நண்பன்

திரு வரதகுட்டியைப் பற்றி ஆருயிர் நண்பன் திரு ராமன் :

வரதகுட்டி பி.காம் வகுப்பில் முதலில் தேறியவன். சி. ஏ. பாஸ் செய்தவன். எதையுமே வேகமாகப் புரிந்து கொள்வான். மனிதனுய்ப் பிறந்தவன், வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்வான். தனக்குள்ள எல்லைக் கோட்டை ஆராய்ந்து திட்டமிட்டு அதை விஞ்சிக் காரியம் செய்து காட்டியவன். படிப்பு முடிந்தவுடன் தொழிலும் ஆரம்பித்தாகிவிட்டது. பல இடங்களுக்குப் போக வேண்டுமே! நல்ல உடல் நலம் வேண்டுமே! காலையிலும் மாலையிலும் கடுமையான தேகப் பயிற்சி செய்தான். மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனில் இரவு 11 மணியிலிருந்து 12 மணிவரை படிக்கட்டுகளில் நன்கு ஏறி இறங்கப் பழகினுன்.

ஒரு லயன்ஸ் கிளப் அவனுக்குக் கையினுல் ஓட்டும் மூன்று சக்கர சைக்கிளைப் பரிசளித்தது. கடும் மழை, வெய்யில், காற்று, இவைகளைப் பொருட்படுத்தாமல் தாம்பரம் முதல் கடற்கரை ஸ்டேஷன் வரை அந்தச் சைக்கிளிலேயே பல கம்பெனிகளுக்குச் சென்று வந்தான். உடல் வலி, கை வலி உண்டா? என்று நான் கேட்கும்போதெல்லாம் புன்னகை தான் பதில்.

நான் அவனைச் செல்லமாக ''மினி வேலை வாய்ப்பு அலுவலகம்'' என்று சொல்வேன். உடல் ஊனமற்ற பலருக்குத் தன்னுல் முடிந்தவரை வேலை வாங்கித் தந்திருக்கிருன். அனைவருக்கும் தன்னம்பிக்கையையும் உழைப்பின் மகிமையையும் எடுத்துக் காட்டும் வீரன். வரதகுட்டி.

கொடைக்கானலில் கால்ஃப் கிளப் அருகே செங்குத்தான சேறும் சகதியும் மிக்க பாதையில் நடந்து ஏறி மலை உச்சியிலிருந்து இயற்கை எழிலை அவன் கண்டு மகிழ்ந்ததை நான் எப்படிப் புகழ்வேன்!

வரதகுட்டிக்கு கிரிக்கெட் என்ருல் உயிர். ஒரு டெஸ்ட் மாட்ச் கூட விடமாட்டான். இந்தியர்கள் சரியாக ஆடாவிட்டால், ''பார்த்தியா, நானே போய் விளையாடிவிடலாம் என்று நினைக்கிறேன்'' என்று சொல்வதைக் கேட்டு நான் குபீரென்று சிரித்திருக்கிறேன்.

என் தந்தை


வயலின் சந்திரசேகரன் அவர்களைப் பற்றி மகள் பாரதி :


கண்ணுக்குக் கண்ணுக என் தந்தையை வளர்த்து இன்று உலகம் புகழும் பெருமையை அவருக்குக் கொடுத்தவர் அவர் தாயாரும், என்—பாட்டியுமான திருமதி சாருபாலா மோகன்தான். சின்ன வயதில் அவருக்குத் தலைவாரி பொட்டு வைத்து ரசித்துப் பார்ப்பாராம் பாட்டி.

சிறு வயதிலேயே மஞ்சள் காமாலை நோயினுல் இரண்டு கண்களை இழந்த இவருக்கு, வயலின்தான் உலகம். எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார்.

ஆனுல் சிஷ்யர்கள் வயலின் வாசிக்கும்போது, யார் தப்பாக வாசித்தாலும் இவருக்குக் கோபம் மூக்குக்கு மேல் வரும். நான் அவரிடம் கற்றுக் கொண்டபோது தவறு செய்து வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறேன். இதற்கு மறுபுறமாக அவர் வாசிப்பைப் பற்றி நான் அடிக்கும் கமெண்டைக் கேட்டு ரொம்பவும் ரசிப்பார். அவருக்கு எதையும் சரியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் குறி. உணவு நன்ருக இருந்தால் செய்தவருக்கு 100க்கு 125 மார்க் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார். யாரையும் உற்சாகப்படுத்துவார். மழுப்பலான பேச்சு என்பதையே அறியாதவர். தம் சக்திக்கு மீறி உதவிகள் செய்வார்.

பிறர் உதவி இல்லாமல் தாமே எதையும் செய்துகொள்வார். அவரால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குத் தனியாகப் பயணம் செய்ய முடியும். பார்வை இல்லையே தவிர டெலிபோன் நம்பரைச் சரியாகச் சுழற்றுவார். என்ருே சந்தித்த ஒருவர் குரலை நன்ருக ஞாபகம் வைத்துக்கொண்டு அடையாளம் கண்டு கொள்வார்.





பாரதி

கடவுளை நம்புகிறவன் முட்டாள்!

ஸ்ரீரங்கம் கிழக்குச் சித்திரைத் தெருவில் பிராமண நல்வாழ்வுச் சங்கத்தினர் ஒரு கூட்டம் நடத்தினர். இது மாபெரும் தவறல்லவா? என்ன தைரியம் இருந்தால் இப்படி செய்வார்கள்! இந்த அநியாயத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டாமா?

திராவிடர் கழகம் இருக்கலாம்; திமுக, அதிமுக எல்லாம் தோன்றலாம்; வன்னியர் சங்கம் இருக்கலாம்; முஸ்லிம் லீக் தழைக்கலாம்; நாடார் சங்கம் அமைக்கலாம்; ஜெயின் சொசைட்டி வளரலாம்; இவர்கள் எல்லாரும் கூட்டம் போடலாம், மாநாடுகள் நடத்தலாம்; ஆனால் 'பிராமணர்கள் நல்வாழ்வு சங்கம்' என்று ஒன்று எப்படி இருக்கலாம்? அவர்கள் தங்கள் உரிமைகளுக்குப் போராட எவ்வாறு அனுமதிக்க முடியும்? இவர்கள் சங்கம் அமைப்பதாவது, பொதுக் கூட்டம் நடத்துவதாவது, மாநாடு கூட்டுவதாவது? சேச்சே! மாபெரும் பாதகம் அல்லவா? தேசத் துரோகமாயிற்றே அது! திராவிடர்கள் முன்னேறலாம்; பிராமணர்கள் நல்வாழ்வு தேடலாமா?

கிளம்பியது வீரதீர பராக்கிரமப் படை! திராவிடர் கழக சூரப்புலிகள், பிராமண எதிர்ப்பு கோஷங்களைக் கூட்டம் நடந்தஇடத்தில் எழுப்பினார்கள். தட்டிக் கேட்க எழுந்த மூன்று பிராமணர்களை நையப் புடைத்தார்கள். அவர்களில் ஓர் இளைஞனது பூநூலைப் பிடித்திழுத்து அறுத்தார்கள்! 'அடடா! வீரமென்றால் இது வல்லவோ வீரம்!' என்று அனைத்து இந்தியாவும் ஆசியா கண்டமும் அகில உலகமும் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சர்யப்படுகிறது! இன்னும் ஆச்சர்யப்பட்டுக் கொண்டே இருக்கிறது! வியப்பு வடிந்தபாடில்லை!

ஆனால் சூரப்புலிகளின் வீரம் இம்மட்டுமல்ல! இதற்கு மேலும் உண்டு! கூட்டம் நடந்த இடத்திலிருந்து அவர்கள் நேரே பஸ் நிலையத்துக்குப் போனார்கள். அங்கே சோழன் போக்குவரத்து பேருந்துவின் மீது பிராமண எதிர்ப்பு கோஷங்களை எழுத முற்பட்டார்கள். ஆட்சேபணை எழுப்பிய ஓட்டுனரைத் தாக்கினார்கள்! ஆகா! இந்த மாபெரும் சாகசத்துக்காக அந்த அரை டஜன் பேர்வழிகளுக்கும் பரம வீர சக்கர விருது அல்லவா வழங்க வேண்டும் என்றெண்ணி நாடே விம்மித மடைந்திருக்கிறது!

நாடார் சமூகத்தை இழிவுபடுத்துவது போல் குமுதத்தில் சில வரிகள் இடம் பெற்று விட்டால் அந்தப் பத்திரிகையை அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கொளுத்தலாம், அந்தப் பத்திரிகைக் காரியாலயம் எதிரே ஆர்ப்பாட்டம் செய்யலாம். ஆனால் பிராமணர்களை இழிவுபடுத்துவதாக அந்தச் சமூகத்தினர் கருதும் ஒருதிரைப்படம் வந்தால் அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த பார்ப்பனருக்கு ஏது உரிமை? இதை இப்படியே விட்டால் அவர்கள் ரொம்பத் துளிர்த்துப் போய் விட மாட்டார்களா?

எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம் என்று பாடினானே பாரதி, ஒரு வரியை மறந்துவிட்டான்! ''பிராமணர்கள் நீங்கலாக'' என்று அடைப்புக் குறிக்குள் அவன் போட்டிருக்க வேண்டும். அவர்கள் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டுப் போக வேண்டியவர்கள்தானே! ஜாதி அடிப்படைச் சலுகைகள் தான் புனித பாரத தேசத்தில் செல்லுபடியாகுமே தவிர வருவாய் அடிப்படையிலான சலுகைகள் அல்லவே! பாரதி நூற்றாண்டு கொண்டாடுகையில் அவன் பாடலில் முக்கிய திருத்தம் செய்யவே திராவிட கழகத் தோழர்கள் போராடலாம்; கொடி பிடித்து ஊர்வலம் வரலாம்.

தெய்வமாவது ஒன்றாவது? எல்லாம் வெறும் ஹம்பக்! ஹிட்லர் தெரியுமல்லவா? ஹிட்லர்? இங்கேயும் ஒரு ஹிட்லர் அவதாரமெடுப்பான். யூதர்களை ஜெர்மானிய ஹிட்லர் ஒழித்துக்கட்டியது போல் இங்கேயும் பிராமணர்களை அந்த எதிர்கால அவதார புருஷன் அழித்தொழிப்பான். இனி தோன்றப்போகிற அந்த அவதார புருஷனை வேணுமானால் இறைவன் என வணங்கலாமே தவிர மற்றபடி சாமியாவது பூதமாவது? கடவுளை நம்புகிறவன் முட்டாள்! மூட நம்பிக்கைகள் ஒழிக! பிராமணன் தமிழனின் எதிரி என்ற ஒரு மூடநம்பிக்கை நீங்கலாக!



1981 பிப்ரவரி 15

ரௌத்திரி மாசி 2

மலர் : 39 இதழ் 29

கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

7. உக்கல் பிரயாணம்

காபரே இடைவேளையென்பது ஓர் அசட்டுத் தனமான நேரத் தீவு. புதுசாக வந்திருப்பவர்கள் தத்தம் மனைவிமார் ஞாபகம் வந்து வெளிச்சத்துக்கு வந்த வெள்ளெலி போல் விழிக்க வஸந்த் தன் தற்காலிக நண்பனைப் பார்த்துப் புன்னகைத்தான். அவன் முக மாறுதலின்றி ''சொல்லு எப்படித் தப்பிச்சே?'' என்றான்.

''அது ஒரு ஜீனி வேலை.''

''நீ ஒரு கவர்மெண்ட் ஆசாமியா?''

''இருக்கலாம்.''

''அவங்களுக்கும் தெரியுமா?''

''தெரியலாம் தெரியாமலிருக்கலாம். நீங்க யாரையோ சந்திக்கணும்னு சொன்னீங்களே!''

''உள்ற வா.''

'உள்ற' அந்தப் பெண் பழுப்பாக இறைச்சி போல இருந்த எதையோகடித்துக் கொண்டு ஸன்ன நீலப் போர்வைக்குள் மொத்தம் முக்கால் மீட்டர் துணியில் 'மற்றவை நேரில்' என்றாள்.

''ஹலோ உங்களை நான் பார்த்திருக்கேன்.''

நடத்த முடியும் என்று தீர்மானமாகத் தெரியவில்லை.

''எங்க இருக்குன்னு தெரிஞ்சா நான் இன்னேரம் அங்க இருக்க மாட்டனா பிரதர்?''

''லாவினியா யுர் நெக்ஸ்ட் டான்ஸ்.''

''வந்துட்டேன்'' என்று அவள் தன் தோகையைத் துறந்து விட்டு மேடைக்குச் சென்றாள். உய்யு உய் என்று சீழ்க்கைகள் வரவேற்றன.

''அப்ப நான் வரட்டுமா?''

''எங்க கிளம்பிட்டே! எனக்குப் பதில் வரலியே.''

''முதல்ல நீங்க யாரு கட்சி அதைச் சொல்லுங்க முன்னால.''

அவன் சுதந்திரமாக வஸந்தின் சட்டைப் பையைத் தொட்டு, ''பைக்குள் என்ன வச்சிருக்கே?'' என்றான்.

''சும்மா காயிதம்.''

''காட்ட மாட்டியா?''

''காட்டிட்டாப் போச்சு.'' வஸந்த் சட்டென்று உதறிக் கொண்டு எழுந்தான். ஒரே பாய்ச்சலில் கதவை நோக்கி ஓடினான். கதவை மோதித் திறந்தான். வெளியே விரைந்தான். சந்துக்குள் நுழைந்து மற்றொரு முனை திரும்பி மோட்டார் சைக்கிள் திடுதிடு

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

அவள் வஸந்தைக் கவனிக்காமல் தன் இரை மேல் கவனமாக இருந்தாள்.

''த பாரு, உன் பேர் என்ன சொன்னே?''

''ரங்காச்சாரி.''

''இவ பேரு செல்லம்.''

''அப்படின்னா லாவினியாங்கறது புனைப் பெயராக்கும்?''

''அது டான்ஸுக்காக வெச்சுக்கிட்டது.''

''ரோஸ்ட் நல்லா இருக்குதுங்க மகா'' என்றாள் செல்லம்.

''தபாரு ரங்கா இவளைப் பார்த்தில்ல. குட்டி ஷோக்காத்தானே கீரா?''

''ரா.''

''உனக்குன்னு பெஷலா இவளை சும்மா உருவி விட்ட மாதிரி ஒரு டான்ஸ் காட்டச் சொல்லவா?''

''அதுக்கு நான் என்ன காட்டணும்?''

''எங்கே இருக்கு சொல்லிடு.''

வஸந்த் அந்தப் பெண்ணைப் பார்த்தான். சம்பாஷணை தன்னைப் பற்றியே இல்லை போல் தன் நகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெரும்பாலும் கேள்வி பதில் புரியாத பாதையில் சென்று கொண்டிருப்பது அவனுக்குச் சற்றுக் கவலையாக இருந்தது. எவ்வளவு தூரம் இந்த நாடகத்தை

என்று உயிர் பெறும் ஓசை கேட்டுவிட்டுச் சற்று நேரம் கழியக் காத்திருந்து மறுபடி அந்த ரெஸ்டாரண்ட் வாசலை நண்ணினான்.

லாவினியா தன் டூட்டி முடிந்து ஸாரி அணிந்து, பொட்டலமாக வீட்டுக்குப் பாக்கி சிக்கலை...

''செல்லம் எங்கே? வீட்டுக்கா?''

''ஆமா.''

''வீடு எங்கே சிந்தாதிரிப்பேட்டையா?''

''ஏதோ ஒரு பேட்டை.''

''கொஞ்சம் வெறுப்பில இருக்கிங்க போல. எனக்குத் தெரிஞ்ச காபரே ஆர்ட்டிஸ்ட் எல்லோருடைய வாழ்க்கையிலும் பின்னணியில ஒரு சோகக் கதை இருக்கு. கடைசி கேஸ் ஒரு நொண்டித் தங்கை.''

''எனக்கு அதெல்லாம் ஒண்ணுமில்ல. காசு தர்றாங்க ஆடறேன்.''

''நல்ல பிரின்ஸிபிள்.''

செல்லத்துக்குச் சுமார் இருபது இருக்கலாம். ஒரு இடது கையால் தூக்கிவிடலாம் போல மெல்லிசாக இருந்தாள். ''அந்தாளை உனக்கு எப்படித் தெரியும்?''

''முதலாளிக்கு வேண்டியவர்.''

''எனக்குக்கூட முதலாளியைத் தெரியும்.''

''அப்படியா? நான் வரேன்.''

''வீட்டு வரைக்கும் துணைக்கு வரட்டுமா?''

''வேண்டாம். உன்னைப் பார்த்தா ஆளு புதுசு மாதிரி இருக்கு. இவங்க சகவாசம் வேண்டாம். அதான் சொல்வேன் விலகிக்க, அடி படறதுக்குள்ள விலகிக்க.'' அவள் பின் கதவைத் திறந்து இருட்டில் சைக்கிள் ரிக்ஷா ஏறிச் சென்றாள்.

''ஒரு மோட்டார் சைக்கிள் மூர்க்கன், ஒரு காபரே கன்னி விஷயம். கொஞ்சம் சுவாரஸ்யமாப் போவுது இல்ல பாஸ்?''

''திருடங்க சகவாசம் அதிகமாய்ட்டு வருது. நீ ஏன் அங்கெல்லாம் போறே. நேரே வீட்டுக்கு வரவேண்டியவன் தானே?''

கணேஷ் கலைந்த தூக்க வெறுப்பில் இருந்தான்.

''அந்தாள் என்னை கவர்மெண்டான்னு கேட்டான். அப்படின்னா இது சர்க்கார் சம்பந்தமான விஷயம். எங்க இருக்குன்னு என்னையே கேட்டான். எங்க எது இருக்கு?''

''எல்லாத்தையும் காலைல யோசிக்கலாம். தூங்கித் தொலை.''

''காலைல போறமில்ல?''

''போலாம் போலாம்.''

அதிகாலை வஸந்த் உற்சாகத்துடன் கணேஷின் தூக்கத்தைக் கலைத்தான். பால் வாங்கி வந்து காப்பி தயாரித்தான். ரேடியேட்டருக்குத்



பள்ளிகள் செய்திகள்



கே. கோபாலரத்னம்

வி. எஸ். கருணாகரன்



● சென்னை ரோடரி கிளப் (வட மேற்கு) செயலாளர் கோபால ரத்னம். ஊன முற்றோர் நலன் ஆண்டின் தொடக்கத்தில் கண்பார்வை இல்லாதவர்களுக்காக 'ப்ரெயில்' முறையில் காலண்டர் அறிமுகப் படுத்தியுள்ளனர் இந்த ரோட்டரி சங்கத்தினர். உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கக் கிளைகளுக்கு இந்தக் காலண்டரை அனுப்பியுள்ளனர்.

தண்ணீர் நிரப்பினன். காரைத்துடைத்தான். உடுப்பியிலிருந்து பொட்டலங்கள் தருவித்தான்.

''முதல்ல காஞ்சிபுரம் அங்கேயிருந்து வந்த வாசி போற பாதையைப் பிடிக்கணும். அங்கி நந்து.....''

''ஏங்க கூழமந்தல் போற பாதை இதானே?''

''கூளமந்தல்ல எங்க போகணும்?''

''உக்கல்.''

''அட நானும் அங்கத்தான் போவணும். பஸ் வருமான்னுட்டுக் காத்திதுக்கிட்டிருக்கேன்.''

''ஏறுங்க பெரியவரே.''

பெரியவர் சந்தோஷமாக ஏறிக் கொண்டு கதவைப் படீரென்று சாத்தினர்.

''சினிமாக்காரங்களா?''

''இல்லே.''

''உக்கல்ல என்ன சோலி?''

''கோயிலுக்குப் போகணும்.''

''பெருமா கோவிலா?''

''எல்லாக் கோயிலேயும் பார்க்கணும்.''

''சாமி கும்பிடவா?''

''இல்லே.''

''ஆராய்ச்சியா?''

''அது மாதிரிதான் வெச்சுக்கங்களேன்.''

''கூளமந்தல்லயே ஒரு பளய கோவில் இருக்குது. கவர்மென்ட்டு பாதுகாக்கறுங்க.''

''பெரியவரே கன்ஃப்யூஸ் பண்ணுதீங்க. முதல்ல உக்கலேப் பார்க்கலாம். அங்க ராஜ ராஜன் கிணறுன்னு ஒரு எடம் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாதுங்க. ஆனு கெணறு நிறைய இருக்குது.''

ஆற்றில் நீரில்லை. சவுக்குத் தோப்புக்கள் தெரிந்தன. நகர நாகரிகம் தீண்டிய ஒரு இரண்டுங் கெட்டான் நிலையில் தன்னை இன்னும் தீர்மானிக்காத நிலையில் இருந்தது உக்கல் கிராமம்.. புழுதி மேகத்தில் சிறுவர்கள் தொடர, தெருத் திண்ணைச் சீட்டாட்டங்களிலிருந்து கேள்வி முகங்கள் எட்டிப் பார்த்தன. பாண்ட் அணிந்த வாலிபர்கள் தென்பட்டனர்.

''இந்த ஆத்துக்குப் பேரென்ன பெரியவரே?''

''செய்யாறுங்க.''

''கோயில் எங்கே?''

''இதாங்க பெரிய தெரு. இப்படியே கிளக்கால போனீங்கன்ன பெருமாகோயில் சந்து வருங்க. இப்படியே வடக்கே போன ஈஸ்வரன் கோவில்.

''நேரப் போன?''

''கம்மாளத் தெரு, முதலியார் தெரு, அப்பறம் பாப்பாரத் தெரு.''

''ஹோல்டான். தொடர் கதையை நிறுத்திருவாங்க.''

''மேக்கபோனசெம்படவத்தெருவருங்க!''

''சரிதான் பாஸ் மனு இன் ஆக்ஷன்.''

''கோவில்ல கிணறு இருக்கா பெரியவரே'' என்றுன் கணேஷ்.

''பெரியவரே நேத்திக்கு உங்க கிராமத்துக்குப் புதுசா பட்டணத்தில இருந்து யாராவது வந்தாங்களா? பழுப்பா நீளமா ஒரு மோட்டார்ல?''

''இல்லிங்களே. எனக்குத் தெரிஞ்சவரைக்கும் தெரியலீங்களே. நான் ஊர்லதானே இருந்தேன்.''

கார் பெருமாள் கோவில் வாசலில் நிற்க, சிறுவர்கள் சூழ்ந்துகொள்ள, வஸந்தும்

● காலையில் சூட்டும் டையும் அணிந்து ஆபீஸ் சென்று பைல்களைப் புரட்டுபவர், மாலை வேளைகளில் கட்டுக் குடுமி, பஞ்ச கச்சமாய் அணிந்த வேட்டியுடன் அமர்ந்து உபன்யாசம் செய்கிறார். வி. எஸ். கருணாகரன் கிண்டி சிறு தொழில் பேட்டையில் சிறு தொழில் துறையின் உதவி இயக்குநர். தம் குடுமியை மறைக்க பகலில் 'விக்' வைத்துக் கொள்கிறார். "என் தந்தைக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறேன். அவர் விருப்பப்படி பக்தியைப் பரப்ப, நன்நெறி வளர்க்க உபந்நியாசம் செய்கிறேன். என் அலுவலக வேலைகள் பாதிக்கப் படுவதில்லை. மாறாக, என் மேலதிகாரிகளுக்கு என்னிடம் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்கிறார் இந்த இளைஞர்.

- சிக்கி



நாகி ரெட்டி

● இந்தியாவிலேயே பன்னிரண்டு மொழிகளில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுதான்: அம்புலி மாமா அதன் நிர்வாக ஆசிரியர் நாகி ரெட்டி. குழந்தைகளுக்கான இந்தப் பத்திரிகையின் ஆசிரியருக்கு வயது 66! பி. என். கே. பிரஸ் அதிபர். ஆசியாவிலேயே பெரிய விஜயா வாஹினி ஸ்டுடியோவை நிர்மாணித்த பெருமை பெற்றவர். இப்போது புதிய பெருமை சேர்த்துக் கொள்கிறார். ப்ரெயில் முறையில் அம்புலி மாமாவை வெளியிடுகிறார். இந்தியாவிலேயே பார்வையற்றவர்களுக்காக ஒரு பத்திரிகையை முதல் முதல் தொடங்கி யிருப்பவர் இவரே.

- சிவபாலன்

கணேஷும் பெரியவர் வழி காட்ட உள்ளே சென்றார்கள்.

நுழை வாயில் சிதிலமாக இருந்தது. கோபுரமற்று உயர்ந்த கல் தூண்கள் மேல் கூரை வேய்ந்திருந்தது. எதிரே நடன மேடை போன்ற அமைப்புத் தெரிந்தது. சுமார் பன்னிரண்டடி உயரத்தில் அதன் பின் தெரிந்த கருவறை திறந்திருந்தது.

"கிணறு இருக்கா?"

"அங்க பாருங்க. ஓரத்தில ஒண்ணு இருக்குதுங்க."

கோயிலின் தென் மேற்கு மூலையில் அந்தக் கிணறு இருந்தது.

சுமார் பத்து அடி விட்டத்துக்கு ஏறக்குறைய பாழுங் கிணறு. தண்ணீர் இல்லை.

"இந்தக் கிணத்தைப் பத்தி ஏதாவது கதை உண்டா பெரியவரே?"

"இதில புதையல் இருக்கிறதாச் சொல்லுவாங்க. எங்க இருக்குன்னு அந்தக் கல் சுவத்தில எளுதி வெச்சிருக்கிறதா சொல்றாங்க. அதை யாராலும் படிக்க முடியாதுங்க! நீங்க அதைத் தேடிட்டுத்தான் வந்திருக்கிங்களா?"

"இண்ட்ரஸ்டிங்" வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் அந்தக் கருவறைப் பக்கம் செல்ல வஸந்த் அவனைப் பின் தொடர்ந்தான்.

கருவறையின் கற்கட்டின் வெளிப்புறத்தில் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன.

'லப்பெருநிலச் செலவியுந்தனக்கே உரிமை'

"தலைகால் புரியலை பாஸ்."

"ஒருசில பேருக்குப் புரிஞ்சிருக்கு."

"மடவிளாகத்தில ஙக கால் ஒடிஞ்ச சிலைங்க இருக்குங்க. பாத்துங்க. முள்ளுச் செடிங்க அதிகம் இருக்கும்."

வஸந்த் நெருஞ்சி முட்களின் உபயத்தில் நொண்டினான்.

"எனக்கு என்னவோ நாம தேடற இடமே தப்புன்னு தோணுது. பேராசிரியர் இதையா ஆராய்ச்சி செய்திருக்கார்? அஞ்சு நிமிஷத்துக்கு மேலே இந்த இடத்தில எவனாலயும் நிக்க முடியாது. ஏன்யா உங்க உக்கல் கிராமம் முழுக்க இங்கதான் வந்து உக்கார்றாங்களா பத்பூ தாங்கலியே."

"நம்ம வீட்டுக்கு வர்றீங்களா மோர் குடிக்கலாம்?"

"அப்புறம் வரோம் பெரியவரே."

"இல்லே பட்டணத்துக்காரங்களுக்கு டீத் தண்ணி வேணும்னு எம்மவ நல்லா டீ வைக்கும்."

"மவளுக்கு என்ன வயசு?"

"சின்னதுங்க. பத்துப் பதினைஞ்சு."

"பாஸ் ஒரு கப் டீ அடிச்சுட்டு வந்துறலாமே."

"யு ஆர் ஸப்போஸ்ட் டு பி இன்லவ் வித் இனியா வஸந்த்."

"ஓ எஸ் மறந்தே போய்ட்டேன். நீங்க போய்க்கங்க பெரியவரே."

கணேஷ் மறுபடி கிணற்றுக்குச் சென்று எட்டிப் பார்த்தான். "ம்ஹூம். இதில் ஏதும் இருக்கிறதா எனக்குத் தெரியலை."

"அப்ப நான் வரட்டுங்களா?"

"வாங்க."

"ராத்திரி தங்குவீங்களா?"

"சான்ஸே இல்லை."

பெரியவர் சிறுவர்களை விரட்டி யடித்துக் கொண்டு விலக, வஸந்தும் கணேஷும் தனியே விடப்பட்டார்கள். கோயிலை விட்டு வெளியே வந்து சற்றுத் தூரம் நடந்தார்கள்.

''வஸந்த் ஒரு ஆள் நம்ம பின்னால வந்துக் கிட்டிருக்கான். கவனிச்சியா?''

''கவனிச்சேன் பாஸ், விசாரிக்கலாமா?''

''கண்டுக்காதே, நட.''

நேராக வெளித் தெருவில் நிறுத்தப் பட்டிருந்த காருக்கு நடந்தார்கள்.

காரைக் கிளப்பும் தருணத்தில் அவன் சற்று அவசரமாக அருகில் வந்து''ஒரு நிமிஷம் உங்களோட பேசணும்'' என்றான்.

''பேசுங்க.''

''கார் மெட்ராஸ் போறதா?''

''இப்போதைக்கு இல்லை.''

''நான் ஏறிக்கலாமா?''

''நீங்க யாரு?''

''உங்க கிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும்.''

''சொல்லுங்க,'' கணேஷ் காரின் இஞ் ஜினை இளைப்பாற்றினான்.

''தனியா உடனே வந்தா சொல்றேன்.''

''ஏன் இங்கேயே சொல்லுங்களேன்.''

''நீங்க என்ன பண்றீங்க உடனே சதா சிவம்கிறவரைப் போய்.....''

அவன் சொல்ல வந்ததை முடிக்காமல் சடக்கென்று நிறுத்தி விட்டான். அல்லது நிறுத்தப்பட்டு விட்டான். அவனிடமிருந்து அடுத்து 'அக்' என்று ஒரு விநோத சப்தம் எழுந்தது. அப்படியே கார்க் கதவுக்குள் எட்டிப் பார்ப்பவன் போல் வஸந்தின் முகத் தோடு முகம் ஒட்டிக் கொண்டான்.

''என்ன ஸார் முத்தம் கொடுக்கறீங்க?''

அவன் வாய் திறந்து காற்றுத்தான் வெளி வந்தது.

''வஸந்த் ஸம்திங் ராங், டெரிப்ளி ராங்க்.''


வஸந்த் கார்க் கதவைத் தள்ள முயற்சி செய் தான். முடியவில்லை. இதனிடையில் கணேஷ் காரின் மறுபுறம் வெளிப்பட்டு அந்தப் புதியவனைப் பின்புறத்திலிருந்து அணுக,

''மை காட்!''

அவன் முதுகில் கத்தி சொருகப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

சாட்சிகள் சரியில்லை!



நான் பாரீஸ் போய் இருந்தபோது சிகரெட் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று, தனது பிரதான விநியோகஸ்தர்கள் எல்லோரையும் ஒருநாள் விருந்தளித்து உபசரித்தது. பல பிரமுகர்கள் விழாவுக்கு வந்திருந்தனர். நானும் அதில் கலந்து கொண்டேன்.

விருந்தினருக்குத் திடீரென்று ஒரு பரீட்சை வைத்தனர். ''எங்கள் சிகரெட் பாக்கெட்டுகளை யாராவது கொண்டு வந்திருந்தால் காலிசெய்து காலிப் பெட்டிகளை மட்டும் எங்களிடம் கொடுத்து விடுங்கள்'' என்று அறிவித்தனர். அப்படியே எல்லோரும் செய்தனர்.

இதன் பிறகு ஒரு கேள்வி கேட்டனர். ''எங்கள் சிகரெட் பாக்கெட்டின் மேல் போட் டிருக்கும் படத்தில் ஒட்டகம் இருக்கிறது. அதை மனிதன் அதன் மேல் உட்கார்ந்து கொண்டு ஓட்டுகிறானா அல்லது அதன் முன்னால் கயிற்றைப் பிடித்து இழுத்துக்கொண்டு செல்கிறானா?''

சிலர் இப்படியும் சிலர் அப்படியும் பதில் கூறினார்கள். ஒருவர் கூட பதில் கூறாமல் இருக்கவில்லை.

இரு சாரார் கூறிய பதில்களும் சரியானது அல்ல என்பது அக்கம்பெனி நிர்வாகிகள் சிகரெட் பாக்கெட்டை வெளியில் எடுத்துக் காண்பித்த பின்னர்தான் எனக்குப் புரிந்தது. ஆம்! பாக் கெட்டின் மேல் ஒட்டகம் மட்டும்தான் இருந்தது. மனிதன் படமே இல்லை. இத்தனைக்கும் பதில் கூறிய அனைவரும் அப்பாக்கெட்டைத் திறந்து தினமும் ஐந்து அல்லது ஆறு தடவைக் குக் குறையாமல் சிகரெட் பிடிப்பவர்கள்.

அதுபோலதான் நமது நாட்டில் கொலை, திருடு முதலிய குற்றங்களில் சாட்சி சொல்ப வர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் குற்ற வாளிகளைக் கண்டு பிடிப்பது போலீசுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

–மேக்ஸ் முல்லர் பவனில் முன்னாள் போலீஸ் ஐ. ஜி. எப். வி. அருள் கூறியது.

கேட்டவர் : ''சங்கரி புத்திரன்''

இறைவா! இதென்ன சோதனை!

இறைவா இதென்ன சோதனை! உன்னைக் கருணைக் கடல் என்பதும் பொய்யா? ஏன் இப்படி எங்களை வதைக்கிறாய்?

பெங்களூரில் கோர கிருத்தியங்களைப் பார்த்தோம். சர்க்கஸ் கூடாரம் பற்றி எரிய, அவரவரும் உயிர் தப்பினால் போதும் என்று ஓட, அந்த அமளியில் மதலைகள் மிதிபட.... அவர்களைக் காக்க எண்ணிய தாய்மார்களும் தீயில் வெந்து மடிய... ஐயோ! நினைக்கவும் நெஞ்சம் கூசுகிறது!... ஆண்டவனே இது என்ன அநியாயம்!

அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டுவருவதற்குள் இன்னொரு பேரிடி! காது பிளக்கும் ஓசைகள்!

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று ரயில்கள் ஒரே விபத்தில் சிக்குகின்றன. ஒன்றன் மீது ஒன்று மோதிச் சிதறுகின்றன! வாணியம்பாடியருகே சொல்லொணாத் துயரக் காட்சிகள்! நெஞ்சை உருக்கும் சோகக் குரலொலிகள்! அனுதாபம் தெரிவிக்கவும் நா அசையாமல் தொண்டை அடைக்கத் தவிக்கிறோம்.

பகவானே! உன்னை ஆபத்பாந்தவன், அனாத ரட்சகன் என்றுதான் எண்ணியிருந்தோம். கல்மனம் படைத்தவன் என்பதையும் இன்று உணர்கிறோம். ஊழிக் கூத்து ஆடத் தொடங்கி விட்டாயா?

இல்லையேல், ஸ்பென்ஸர் கட்டிடத்தில் ஏன் இந்தப் பெரும் தீ ? நகருக்கே அழகு செய்த அந்தப் புராதனக் கட்டிடம் இன்று ஏன் கருகி வெறும் எலும்புக் கூடாகி நிற்கிறது?

கடவுளே! உன்னைக் குறை சொல்லிப் பயனில்லை. தாபத்திலும் கோபத்திலும் உன்னை ஏசிவிடுவது எமக்குச் சுலபம். ஆனால் சற்று அமைதியாகச் சிந்தித்தால் தவறு எங்கள் பேரில்தான் என்று உணர்வோம்.

தேசம் முழுவதுமே இன்று பொறுப்பின்மை தலைவிரித்தாடுகிறது. பெருந்தலைவர்கள் தொடங்கி நடுத்தெரு நாராயணன் வரை யாருக்கும் எதிலும் பிடிப்பில்லை. சகலத்திலும் மெத்தனம், நமக்கென்ன வந்தது என்ற போக்கு... ''வந்தான், பார்த்தான், வெற்றி கொண்டான்'' என்பார்கள் ஸீஸர் பற்றி. இங்கோ வருகிறார்கள், நாற்காலி தேய்க்கிறார்கள், வீடு திரும்புகிறார்கள்! செய்வன திருந்தச் செய் — பள்ளி வகுப்புக்குள்ளேயே செல்லுபடியாகாத சொற்றொடர்.

ஏன் நாங்கள் இப்படி ஆகிவிட்டோம்? இவ்வாறு இருப்பதால் ஏற்படும் விபரீதங்களைக் கண்முன் கண்டும் ஏன் இப்படியே இருக்கிறோம்?

சர்க்கஸ் கூடாரம் அமைய விதிமுறைகள் உண்டு. அவற்றை அலட்சியப் படுத்தினோம். ஒருபக்கம் கழிவு நீர் ஓடும் பெரும் பள்ளம். யாருமே ஆபத்து என்றால் அந்தப்பக்கம் தப்பி ஓட முடியாது என்று தெரிந்திருந்தும் ஏன் அங்கு கூடாரம் அமைய அனுமதி தந்தோம்? தீயணைப்புப் படையை அழைக்க முடியாமல் ஏன் ஃபோன் இணைப்பு பாழாகியிருந்தது? பொறுப்பின்மை, அலட்சியப்போக்கு, ஏனோதானோ மனப்பான்மை — வேறென்ன?

வாணியம்பாடியருகே விபரீதம் நிகழ்வதற்கு முன்னால் ஒன்றா, இரண்டா, வரிசையாக எத்தனை எத்தனை தவறுகள்! தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய விபத்து, மனிதர்கள் கடமை உணர்வுடன் செயல்படாததால் விசுவரூபமெடுத்தது! அசிரத்தை உயிர்களைக் குடித்தது!

இறைவா! பெங்களூரிலும் வாணியம்பாடியிலும் மட்டுமல்ல, தேசம் முழுவதுமே பரவியுள்ள நோய் இந்தப் பொறுப்பின்மை. ஆண்டவனே! இந்த நோய் நீங்கி நாங்கள் குணமடைய உதவு. ஆன்ம பரிசோதனை செய்துகொண்டு ஆரோக்கியம் பெற வழிகாட்டு. பகவானே! எங்களுக்குக் கட்டுப்பாட்டையும் கடமை உணர்வையும் செயல்திறனையும் செய்நேர்த்தியையும் மனிதாபிமானத்தையும் உழைப்பார்வத்தையும் அனைத்துக்கும் மேலாகத் தேசபக்தியையும் ஊட்டக்கூடிய ஒரு நேர்மையாளனைப் பெருந்தலைவனாகக் கொடுத்து உதவு.

அத்தகைய ஊக்கமளிக்கும் தலைமைக்காக நாங்கள் ஏங்கித் தவித்துக் காத்திருக்கிறோம்.

1981 பிப்ரவரி 22

ரௌத்திரி மாசி 11

மலர் : 39 இதழ் : 30



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

8. கத்திக்குத்து

மெல்லமெல்ல கூட்டம் சேர்ந்துகொள்ள ஆரம்பித்தது. கூட்டத்தின் நெருக்கத்தில் பிறகு எதுவும் செய்ய முடியாது; மிக விரைவில் ஏதாவது செய்தாக வேண்டும். அவசரம். கணேஷ் அந்த உடலை அப்புறப் படுத்துவதற்குத் தயங்கினான். கிராமத்தின் போலீஸ் அமைப்பில் சிக்கல்கள் இருக் கலாம். ''வஸந்த் க்விக் காரை எடு.''

''பாஸ் உயிர் இருக்கற மாதிரி தெரியுது! ஏம்பா இங்க பக்கத்தில ஆஸ்பத்திரி எங்க இருக்கு?''

''மாட்டாஸ்பத்திரிங்களா?'' ஸ்டார்ட் டரை நான்கைந்து முறை இயக்கியும் பய னில்லே.

''மன்ஷாஷ்பத்திரிப்பா! பாஸ் ஃப்ளட் ஆயிருக்கு; கார் சண்டி பண்ணுது.''

''யாருங்க இந்தாளு?''

''செத்துட்டான் அண்ணுச்சி.''

''அல்லடா மூச்சு வருது.''

கணேஷ் தீர்மானித்து அவனை நிமிர்த்தினான். ''வஸந்த்! போலீஸ் ஸ்டேஷன் எங்கன்னு முதல்ல விசாரி. அந்த மாட்டுவண்டியை நிறுத்துங்க.''

''யோவ் மாட்டு வண்டி கொஞ் சம் வரியா?''

''கத்திக்குத்து! அம்சமா குத்திருக் குதுங்க.''

''செத்த பொணமா? நான் மாட் டங்க.''

''யோவ் சாவு கிராக்கி. இன்னும் ஆளு சாகலிய்யா தூக்குடாடேய்!''

''புஸ்ஸு புஸ்ஸுன்னு மூச்சு உடறதைப்பார்த்தா பண்ணண்டு மணிக்குள்ற போடுவான்யா.''


''இல்லே, நீங்க பேசி முடிக் கிறதுக்குள்ளயே போய்டுவான். தூக்குய்யா!'' என்றான் வஸந்த். கணேஷ் அந்த முதுகின் கத்திக்குத்தைப் பார்த்தான். ரத்தம் கட்டி தட்ட ஆரம்பித்திருந்தது.

''பாஸ் வசமா கிராமத்துல மாட்டிக்கிட்டம். ஏம்பா இந்தப் பக்கம் தங்கற ஓட்டல் நல்லதா இருக்கா?''

''அதுக்கு டவுனுக்குப் போயிருங்க. என் னங்க ஆச்சு? ஏதாவது நிலத் தகராறு? குத் திப் போட்டாங்களா? இந்த ஊர்ல இது சகஜங்க.''

வண்டியின் முன் பகுதியில் வஸந்த் ஏறிக் கொள்ள கணேஷ் அந்தத் தெரு அத்தனை





பேருடனும் பின் தொடர்ந்தான் தெருக் கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் உயிர் பெற்றுப் பளிச்சென்று பெண்முகங்கள் எட்டிப் பார்த்தன.

கணேஷ் அருகே நடந்த சற்றே வயதானவரிடம் ''ஏங்க இங்க சதாசிவம்னு யாரும் இருக்காங்களா?'' என்றான்.

''இதோ! ஏ சதாசிவம்!''

குறிப்பிட்ட சதாசிவம் அருகே வந்தான். சின்னப் பையன் பத்து வயதிருக்கும்.

''இவன் இல்லிங்க. வேற சதாசிவம்.''

''யாரைச் சொல்றீங்க? ஊர்ல எட்டுநூறு சதாசிவம் இருக்காங்க.''

கணேஷின் ஞாபகத்தில் அந்த அரைகுறை வாக்கியம் வெட்டியது. ''சதாசிவம்னு ஒத்தரை.''

''இங்க அந்தப் பேர்ல ஊர்ப் பெரிய மனுசங்க யாராவது இருக்காங்களா?''

''டாக்டரையா பேரு சதானந்தம்.''

''சதாசிவங்களைச் சொல்லுங்க முதல்ல.''

''லோக்கல் பண்டு ஆஸ்பத்திரி அந்த எமர்ஜென்ஸிக்குத் தயாராக இல்லை. டாக்டர் சாப்பிடப் போயிருந்தார். உதவியாளர் லீவில் இருக்கிறாராம். நர்ஸ் இன்னும் போஸ்ட் ஆகவில்லையாம்.

''பின்ன நீங்க யாரு?''

''நான் இங்க வைத்தியம் பார்த்துக்க வந்தவங்க.''

''நாசமாப் போச்சு! பாஸ் இவன் காலி. ஏன்யா. அடுத்த ஆஸ்பத்திரி எவ்வளவு தூரம்?''

''யாருப்பாது? ஆளு புதுசா இருக்கு'' என்று ஒரு அதட்டுக் குரல் கேட்டது. கிராமத்தின் போலீஸ் தொப்பி தென்பட்டது.

''வாங்க'' என்றான் வஸந்த்.

''ஒதுங்குடா. என்ன கூட்டம் போட்டுக்கிட்டு! பட்டணத்துக் காரங்கன்னுங்களே நீங்கதானு?''

''ஆமாங்க.''

''என்னமா நீங்கப் பாடியை எடுக்கப் போரும்?''

கான்ஸ்டபிளுக்கு நாற்பது வயதிருக்கும். கிராமத்திலேயே பிறந்து வளர்ந்து மணந்து பழசாகிப் போன ஆசாமி என்று தோன்றியது. ரூல்ஸ் அவருக்கு தெரிந்திருக்க அவசியமில்லை.

''ஆளு அடி பட்டிருக்கான்! ரத்தம் கொட்டுது. உசிர் இருக்கு. அப்படியே போட்டுட்டு 'வந்திருக்கணும்'ங்கிறீங்களா?''

''அதுக்கூடச் சரித்தான்'' கான்ஸ்டபிள் குத்துப் பட்டவனை அணுகி ''யோவ் யாருய்யா நீ'' என்றார் அதிக ரத்த சேதத்தால் அவன் அரை மயக்கத்தில் இருந்தான். ''இந்தாளு யாருன்னு யாருக்காவது தெரியுமாய்யா?''

சுற்றுப்பட்டவர்கள் மௌனமாக இருந்தார்கள். ''வெளியூராளு மாதிரி தெரியுது அண்ணே.''

''என்ன பாடாவதியோ! யோவ் உன்னைக் குத்தினது யாரு சொல்லு.''

அருகே கணேஷ் செல்ல அவன் உதடுகள் லேசாக அசைந்தன. கணேஷ் உன்னிப்பாகக் கேட்டான்.

''கிணறு! கிணறு!''

''என்ன கிணறு?''

''கிணத்தில... கிணத்தில....'' — அதை முடிக்க முடியாமல் சோர்வு அவனை ஆக்ரமிக்க அவன் கண்கள் மூடிக்கொண்டன.

''கிணத்தில என்ன?''

''தெரியலையே.''

''வாங்க டாக்டரய்யா இந்தாளைப் பாருங்க.''

டாக்டர் சமீபத்தில் போஸ்டிங் ஆன இளைஞன் போலத் தெரிந்தான். ''ஓ காட் ஹி இஸ் ப்ளீடிங்! ஒதுங்குய்யா, ஒதுங்குய்யா என்ன கூட்டம்!''

''பொளைக்குமா போயிருமா?''

''சொல்ல முடியாது. நீங்கள்ளாம் வெளியில போங்க.''

கணேஷ் வஸந்துடன் வெளியே வந்தான்.

''பாஸ்! மறுபடி கிணறு துரத்துது!'' வஸந்த் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு ஈச்சமரத்தின் சிக்கனமான நிழலில் நின்றான்.

''அவனுக்கு ஏதோ தெரியக் கூடாதது தெரிஞ்சிருக்கு.''

''அபாயகரமானது.''

''குத்தினவனைப் பார்த்தியா வஸந்த்?''

''ம்ஹூம். முடியவே இல்லை. பக்கத்தில ஒரு சந்து. அதில மறைஞ்சிண்டிருந்திருக்கணும். நான் பார்த்த போது பின்னால ஒரு ஈ இல்லை. ஒருவேளை.....''

''ஒருவேளை?''


''கத்தி பின்னாலே எங்க இருந்தாவது எறியப்பட்டதோ என்னவோ.''

''இருக்கலாம்.''

''பாஸ்!'' என்று வஸந்த் தன் முதுகுப் பக்கம் கை செலுத்தித் தடவிக் கொண்டான்.

''நம்ம முதுகிலே ஏதாவது கத்தி கித்தி தொத்திக்கிட்டிருக்கா பாருங்க!''

''அதுக்கு இன்னும் கொஞ்சம்



சமயம் ஆகும்னு தோணுது. கிணறு! கிணறு! எந்தக் கிணறு வஸந்த்?''

''அதான். நம்ம ராராதான்.''

''அந்தாளு பிழைக்கணும் வஸந்த்.''

''ம்ஹூம். டாக்டரைப் பார்த்தா நம்பிக்கையாத் தெரியலை. பல்ஸ் பாக்கறப்ப இவனுக்கு பல்ஸ் எகிறுது.''

''சின்னவனா?''

''முப்பது வயசிருக்கும் பாஸ். பாடில வலு இருந்தாப் பிழைச்சுப்பான். ரத்த சேதம் நிறைய ஆயிடுச்சு. ரத்தம் குடுக்க வேண்டியிருக்கும். இந்த ஆஸ்பத்திரிலே குடுத்தாலும் எடுத்துக்க வசதி இருக்காது. ஏதாவது ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போக வேண்டியிருக்கும்.

''காஞ்சிபுரத்துக்குக் கூட்டிட்டுப் போறாங்களோ என்னவோ.''

''கூட்டிட்டு எங்கே? எடுத்துட்டுத்தான் போக முடியும்.''

''வஸந்த்! அவனை எப்படியாவது பேச வெக்கணும். அவன் என்ன சொல்ல வந்தான்னு நமக்குத் தெரிஞ்சே ஆகணும்.''

''வாங்க பாஸ். டாக்டரைக் கேட்கலாம். எனக்கென்னவோ அந்தாளு வெட்டர்னரி டாக்டரோன்னு சந்தேகம். ஊசியைப் பார்த்தாப் பெரிசா இருக்கு.''

''ஒரு ஆளு உயிருக்கு மன்றாடிக்கிட்டிருக்கிறபோது இந்த மாதிரி அறுவை ஜோக் அடிக்கிறது எனக்குக் கட்....''

''போட பிடிக்கலே. அதானே? ஸாரி. இப்ப ஸீரியஸ். இந்த விவகாரத்தை விடறதில்லை. அங்கங்க முதுகில ஒண்ணு ரெண்டு கத்தி குத்தினா என்ன? எடுத்துட்டு வேற வேலையைப் பார்க்கிறது! ஸாரி! மறுபடியும் ஜோக்கடிக்கிறேனில்லை?''

''நீ சாவறத்துக்கு முன்னாடி கூட ஜோக்கடிச்சுட்டுத்தான் செத்துப் போவே! வாடா.''

அவர்கள் மறுபடி ஆஸ்பத்திரியின் முன்னறைக்குச் சென்றபோது கத்திக் குத்தாளி மல்லாந்து படுத்திருந்தான். மூச்சு லேசாக வருவதைக் கணேஷ் கவனித்தான்.

''ஊண்டை டிரஸ் பண்ணிட்டேன். நிறைய ரத்தம் இழந்திருக்கான். இவனுக்கு இப்ப ரத்தம் கொடுத்தாகணுமே.''

''இந்த ஊர்ல டெலிபோன்னு ஏதாவது சமாசாரம் உண்டுங்களா கான்ஸ்டபிளய்யா?''

''இருக்குங்க. அதுக்கு முன்னாடி நீங்க யாரு, என்ன போக்கு வரத்து எல்லாத்தையும் துப்புரவாச் சொல்லிப் போடுங்க. கேஸு ரிய்ஸ்தர் பண்ணிக்கணும் பாருங்க.''

''அதெல்லாம் அப்புறம் பண்ணிக்கலாங்க. முதல்ல ஆளு பொழைக்கிற வழியைப் பார்க்கலாமா?''

''அதுகூடச் சரிதாங்க! இருங்க. பி.டி.ஓ. ஜீப்பு இருக்கா பார்த்துக்கிட்டு வர்றேன். இருந்தா சௌரியமாப் போயிரும்.''

''சீக்கிரம் வாங்க.''

''நீங்க எங்கேயும் போயிராதிங்க, பட்டணத்துக்காரவங்களே.''

''போகலை. துப்புரவா விசாரிக்க வேண்டாமாங்க!''

''அதானே!''

''டாக்டர்! பேஷண்ட் எப்படி இருக்கான்?''

''ப்ச்! சொல்ல முடியாது.'' என்று டாக்டர் ஒரு மாத்திரையை விழுங்கிக் கொண்டார்.

''அப்புறம் ஏதாவது பேசினானா?''

''இல்லை. கான்ஸ்டபிள்தான் ஏதேதோ கேட்டுக்கிட்டிருந்தாரு, சத்தம் போட்டு. ஒத்துய்யான்னேன்.''

கணேஷ் படுத்திருந்தவன் பக்கத்தில் சென்றான். குடு பார்த்தான்.

''தொடாதீங்க! போலீஸ் கேஸ்.''

''இவன் பேசியே ஆகணும் டாக்டர்.''

''எப்படி ஆச்சு?''

''எது?''

''கத்திக் குத்து.''

''சரியாத் தெரியலை டாக்டர். நாங்க பாட்டுக்குக் கார்ல உக்கார்ந்துக்கிட்டிருந்தோம். திடீர்னு எங்க மேலே தலை குப்புற விழுந்தான். திரும்பிப் பார்த்தா ரத்தம் - கத்தி. ரொம்பக் கோவக்காரப் பயலுவ. எதுக்கெடுத்தாலும் கத்தி.''

கணேஷ் கத்தியைப் பார்த்தான். ரத்தம் உறைந்திருந்தாலும் அதன் கூர்மை புரிந்தது. நீளம் தெரிந்தது, பளபளப்பு அச்சுறுத்தியது. சமையலறைக் கத்தி இல்லை அது. முதுகுகளையும் மார்புகளையும் குத்துவதற்கென்றே ஏற்பட்ட கெட்ட கத்தி அது. என்ன சொல்ல வந்தான்? யார் அவன்?

''லோகல் ஆளில்லைன்னு தெரியுது. பைக்குள் பஸ் டிக்கெட் வச்சிருக்கான்.''

''டாக்டர்! இவன் பையை நாங்க பார்க்கலாமா?''

''கான்ஸ்டபிள் வந்தா காச் மூச்சுன்னு கத்துவான்யா!''

''அவர் வர்றதுக்குள்ளே...''

''நீங்க யாருன்னு தெரியலையே?''



உடுப்பி கிருஷ்ணர் கையில் மத்து எப்படி வந்தது ?

யசோதை தயிர் கடைவதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தபோது அருகில் இருந்த கிருஷ்ணன் வெண்ணெய் எடுத்தவுடன் தனக்கும் கொஞ்சம் தரவேண்டும் என்கிறான். 'உனக்கு இப்பொழுது வெண்ணெய் கிடையாது. போய் விளையாடு' என்று பணிக்கிறாள் தாய். குழந்தைக்கே உரிய கோபத்துடன் அருகில் கிடந்த மத்தை எடுத்து வைத்துக்கொண்டு தனக்கு வெண்ணெய் தருவதாக ஒப்புக் கொண்டாலே மத்தைத் தர முடியும் என்கிறான் கிருஷ்ணன். அவ்வாறு எடுத்து வைத்துக்கொண்ட மத்தே அது.

- ரா. விஸ்வநாதன்

அவள்: காண்டாக்ட் லென்ஸ் போட்டப்புறம் உன் வீட்டுக்காரர் வாயோடே மாறிப் போயிட்டாருங்கறையே, உன்னைக் கவனிக்கற தில்லையா?

இவள்: முன்னே 'என் கண்ணே, என் கண்ணே'ன்னு என்னைக் கொஞ்சிக்கிட்டிருந்தவர் இப்ப என் 'காண்டாக்ட் லென்ஸே'ன்னு கொஞ்ச ஆரம்பிச்சுட்டார். - கே. ஆர். எம்.



''நாங்க ரெண்டு பேரும் லாயர்ஸ். மெட்ருஸ்காரங்க.''

''உங்களுக்கு டி. எம். எஸ். ஆபீஸ்ல யாரையாவது தெரியுமா?''

''டைரக்டரையே தெரியும்.''

டாக்டரின் சுபாவத்தில் ஒரு மின்னல் மாற்றம் ஏற்பட்டது. ''உக்காருங்க. உங்க பேர் என்ன?''

''வஸந்த்.''

''என்ன பாக்கணுமோ பாத்துக்கங்க.''

கணேஷ் படுத்திருந்தவனை அசைத்தான். காவி நிறத்தில் பூப்பூ சட்டை. நெற்றியில் குங்கும லேசு. பாண்ட் காலோரத்தில் நூல். கூந்தல் எண்ணெய் படிந்து சமீப வீழ்ச்சியின் காரணத்தால் புழுதியும் ரத்தமுமாக இருந்தது.

வஸந்த், ''உங்களுக்கு எந்த ஊருக்கு டாக்டர் மாத்தல் வேணும்?'' என்ருன்.

கணேஷ் அவன் சட்டைப் பையைக் காலி செய்தான். டி.டி.ஸி. யின் பஸ் டிக்கட், ஓர் அழுக்குக் காகிதத்தில் மொத்தம் செலவு செய்த ரூபாய் நாப்பத்து ஏழு அறுபதுக்கு முழுமையான கணக்கு. ''தஞ்சாவூர் ப்ராப்பர்லே கிடைச்சுதுன்னு நல்லதுங்க.''

போஸ்ட் கார்டு, 'அன்புள்ள அண்ணன் அவர்களுக்கு' என்றது. விலாசத்தைப் பார்த்தான். ஆதம்பாக்கம். ஆள் யாரென்று அறிந்து கொண்டு விடலாம்.

''அதான் டாக்டர் உங்களுக்குச் சௌகரியம். நாலு வருஷம் கவர்ன்மெண்ட் உத்தியோகம் பார்த்துட்டுப் பளிச்சுனு க்ளினிக் வெச்சுடலாம்.''

'சதாசிவம் முதலியார் தெரு, போஸ்ட் உக்கல் வ. ஆ. மாவட்டம்.'

''டைரக்டரையேவா தெரியும்னிங்க?''

''பின்னே?''

வெறும் விலாசம் மட்டும். கணேஷ் அந்தத் தபால் கார்டை எடுத்துக் கொண்டான். வெளியே ஜீப் அரவம் கேட்டது. கணேஷ் அவசரமாக அறையை விட்டு விலகினான்.

''காஞ்சிபுரமே எடுத்துட்டுப் போயிற லாங்க.''

''ஆளு யாருன்னே இன்னும் தெரியலியே!''

''நிச்சயம் வெளியூர்க்காரன்.''

''இதோ இவங்ககூட வெளியூருதான். நீங்கள்ளாம் எந்த ஊரு?''

''மெட்ருஸ்தாங்க'' என்ருன் வஸந்த்.

''இந்தச் சீட்டை ஆஸ்பத்திரியிலே காட்டுங்க. உடனே வைத்தியம் பார்ப்பாங்க.'

டாக்டரிடம் சீட்டைப் பெற்றுக் கொண்டு கணேஷ் - வஸந்தைத் தீர்மானமில்லாமல் பார்த்தார் கான்ஸ்டேபிள். ''நீங்க போயிட்டு வாங்க. நாங்க இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்.''

''ஏய்யா! கார்ல வந்தீங்களாமே ரெண்டு பேரும்? அதை அப்பவே சொல்லக் கூடாது? ஜீப்புக்கு அல்லாடறேன்.''

''கார் ரிப்பேர் ஏட்டய்யா. முக்கி முக்கிப் பாத்தாங்க. பொவகூட வல்ல.''

''அதனாலதான் சொல்றேன். நாங்க எங்கயும் வெளிய போயிற மாட்டோம். நீங்க காஞ்சீபுரம் போயிட்டு வாங்க.''

''அதுகூடச் சரித்தான்.'

''இல்லை வஸந்த்! நாமும் கான்ஸ்டபிள் கூடப் போயிட்டு வந்துறலாம். அவருக்கு நம்ம மேலே சந்தேகம் ஏதும் வரக் கூடாது பாரு.''

''அதுகூடச் சரித்தான்.''

கணேஷ் வஸந்தைத் தனியே அழைத்து, ''அவன் மயக்கம் நீங்கி மறுபடி பேசறபோது கூட இருக்கணும்'' என்ருன். வஸந்த் குரலைத் தாழ்த்தி. ''அதுகூடச் சரித்தான்'' என்ருன்.


''கார் ஃப்ளடிங் சரியாப் போயிருக்கும் பாஸ்! பார்த்துட்டு வந்துர்றேன். சரியாப் போயிடுச்சுன்னு அதையே எடுத்துட்டுப் போயிறலாம்.''

வஸந்த் ஆஸ்பத்திரியிலிருந்து கார் நின்று போயிருந்த இடத்துக்குச் செல்லும் வழியில் இனியாவைப் பார்த்தான். (தொடரும்)

திருவுளச் சீட்டு மூலம் திரையுலகப் பிரவேசம்!

ஒருதலை ராகம் படத்திற்கு முதல் பரிசிலனையில் கதாநாயகனுகத் தேர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை பத்து. இறுதியாக யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்னைக்குத் தயாரிப்பாளர் கண்ட விடை திருவுளச் சீட்டு முறை!

திரையுலகுக்குத் திருவுளச்சீட்டு மூலமாக அறிமுகமான முதல் நடிகர் சங்கர் தான். - அன்பு



1, 72, 210 கோடி!

ஆறாவது ஐந்தாண்டு திட்டத்துக்குதான் இவ்வளவு செலவாகப்போகிறது! எங்கிருந்து வரப்போகிறது இந்தப் பணம்? நீங்களும் நானும்தான் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் அகமும் முகமும் மலர மகிழ்ச்சியோடு தந்து இந்திராவின் கரத்தைப் பலப்படுத்தப் போகிறோம்! நாம் தந்தது போகப் பாக்கி தேவைக்கு நாஸிக் அச்சுக் கூடம் தாராளமாய் உதவும்!

ரயில்வே பட்ஜெட் வந்துவிட்டது. பொது பட்ஜெட் வந்து கொண்டிருக்கிறது. ஆறாவது திட்டத்தின் தேவைகளை மனத்தில் கொண்டு பட்ஜெட் உருவாகியிருக்கும். நாமெல்லோரும் மேலும் தியாகங்கள் புரியத் தயாராகிவிட்டோம்! புதிய சுமைகளைப் பரமானந்தத்துடன் தாங்க உறுதி பூண்டுவிட்டோம்!

திட்டம் தயார், பட்ஜெட் ரெடி, மக்களின் ஒத்துழைப்பு மறுக்கப்படவில்லை. பிறகு என்ன? ஒருவேளை ஏழைமைத் தேவதை அடித்து விரட்டப்பட்டு விடுமோ? சுபிட்ச அரக்கி அதனிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விடுவாளோ? கவலையே வேண்டாம்! அத்தகைய அநீதிகளுக்கு நம்முடைய ஸ்பெஷல் பாணி சோஷலிஸம் இடம் தந்து விடாது! அலாதியான ஆற்றலுடைய அது, உற்பத்தியைக் குறைந்தபட்சமாக்கி, பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்யும்! விலைகள் ஸ்திரப்படுத்தப்பட்டு விட்டன என்று அரசு நம் தலைமேல் அடித்து சத்தியம் பண்ணும் போதே விலைவாசிகளை உச்சாணிக்கு உயர்த்திக் காட்டும்!

இதற்கு உதவுபடியாக கண்ட்ரோல்கள் என்ற மதி அமைச்சர்கள் உள்ளனர். அவர்கள் நாட்டில் நான்கு பெரும் பசிகளைத் திருப்திப் படுத்துவதில் திறமைசாலிகள். அரசியல் வாதியின் சோஷலிஸப் பசி, அரசியல் கட்சியின் பணப் பசி, அதிகார வர்க்கத்தின் அதிகாரப் பசி, அதர்மத்துக்கு அஞ்சாத தொழில் வர்த்தக அதிபர்களின் கறுப்புப் பணப் பசி — இந்த நான்கு பகாசுரப் பசிகளுக்கும் தீனி போடுவது என்ன சாமானிய காரியமா? இதனை வெற்றிகரமாகச் செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் கண்ட்ரோல்கள் என்ற மதி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. மத்தியிலும் மாநிலங்களிலுமாக மொத்தம் 4000 கண்ட்ரோல்கள் உள்ளன என்று கணக்கிடப் பட்டுள்ளது என்றால் இது விஷயத்தில் அஞ்சய்யாவும் தாம் தோற்றதாக ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே!

உலகிலேயே மிக அதிகமான உணவு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா நான்காவது இடம் வகிக்கிறது. இதைக் கண்டு எங்கே சுபிட்சம் நிலவ ஆரம்பித்து விடுமோ என்று பயந்து விடவேண்டாம். உலகின் மிக ஏழை நாடுகள் என்று கருதப்படுகிற 15 நாடுகளில் ஒன்றாகவே கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியா இருந்து வருகிறது. இன்னும் பத்து ஆண்டுகள் ஆனாலும் இந்தப் பெருமைக்குப் பங்கம் வராமல் இந்திரா பிராண்ட் சோஷலிஸம் கவனித்துக் கொள்ளும்.

தொழில் உற்பத்தி என்று பார்த்தால் உலக அரங்கில் பத்தாவது ஸ்தானம் வகிக்கிறோம் நாம். இதை அறிந்து கலக்கமடைய வேண்டாம். உலக ஏற்றுமதி மார்க்கெட்டில் நமது பங்கு அரை சதத்துக்கு மேல் போகாமல் இந்திரா பிராண்ட் சோஷலிஸம் காத்து அபயமளிக்கும்.

விஞ்ஞானிகள், பொறி இயல் நிபுணர்கள் என்று கணக்கிட்டால் அமெரிக்கா, ருஷ்யாவுக்குப் பிறகு நாம்தான் மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறோம். இதை எண்ணியும் கவலையில் ஆழ்ந்து விடவேண்டாம். சராசரி தனி நபர் வருமானம் ஆண்டொன்றுக்கு ஒரு சதத்துக்குமேல் உயராமல் இந்திரா பிராண்ட் சோஷலிசம் தடுத்தாட்கொள்ளும்.

1,72,210 கோடி ஆறாவது திட்டத்துக்குச் செலவாகும் என்பது வாஸ்தவம் தான். இதனால் தேசத்தின் பொருளாதாரம் சிறந்து விடுமோ என்று பயப்பட வேண்டாம். 1970ல் தொழிலகங்களுக்கு 61 சதம் முதலீடு பாங்குகளிலிருந்தும் இதர பொருளாதார நிறுவனங்களிலிருந்தும் கிடைத்ததென்றால் 79ல் அது 37 சதமாகக் குறைந்து போயிற்று. இனிமேலும் இத்தகைய உதவுபடியான நிலைமையே வளரும். ஆறாவது திட்டச் செலவில் 97500 கோடி அரசுத்துறையில் முதலீடாகி நஷ்டங்களை அபிவிருத்தி செய்து மக்களின் மனம் குளிரச் செய்யும்.

வாழ்க இந்திரா பிராண்ட் சோஷலிஸம்! வெல்க கறுப்புப்பணப் பத்திரம்!





1981 மார்ச் 1

ரௌத்திரி மாசி 18

மலர் : 39 இதழ் : 31

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

9. "நீங்கதாஞ அது?"

"இனியா! ஹாய்! என்னது மெட்ராஸ் பூரா உக்கலின் பக்கம் வந்துடுத்தா?"

இனியா சற்றே திடுக்கிட்டு, திரும்பி வஸந்தைப் பார்த்ததும் உடனே மலர்ந்தாள். "ஏய் வஸந்த்! வஸந்த காலம் வழங்கிய ரேஸர் பிளேடுங்களைத்தான் தேடிக்கிட்டு வந்தோம்."

" 'தோம்'ஞ அப்பாவும் வந்திருக்காரா?"

"மாம்!"

"போச்சுடா! எதுக்கு இந்த வயசான காலத்திலே பேராசிரியரைப் போட்டு இப்படி அலைக்கழிக்கறே? தனியா வரக் கூடாதா? பகல் வேளையிலே என்ன பயம்? வயல்காட்டுப் பக்கம் சைக்கிளில் அழைச்சுக்கிட்டுப் போயிருப்பேனில்ல, ஒரு டுயட் சான்ஸ் போச்சு பாரு."

"அப்பாதான் பிடிவாதமா மறுபடி இங்க வரணும்ஞரு."

"பத்தியா, உன்னைப் பார்த்ததில வந்த காரியத்தையே மறந்து போயிட்டேன். இன்னி இனி இந்த இடத்தில நீங்க ரெண்டு பேரும் ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது."

"ஏன்?"

"விஷயம் ரொம்பத் தீவிரமாயிடுச்சு. சந்துக்குச் சந்து கத்திக் குத்து. இப்பத்தான் ஒரு கேஸ் காஞ்சீபுரம் போயிட்டிருக்கு. உங்கப்பா வெட்டின ராரா கிணத்துல இருந்து பூதம் புறப்பட்டுடுச்சு."

"என்ன சொல்றீங்க வஸந்த்?"

"ரத்தினச் சுருக்கமாச் சொன்ஞ ஆபத்து! புறப்படு மகளே!"

"அய்யய்யோ அப்பா கோயிலுக்குள்ள தனியாப் போயிருக்காரே!"

"சான்ஸே இல்லே. வா அங்க ஓடலாம். சௌகரியமா என் கையைப் புடிச்சுக்கோ."

வஸந்த் இனியாவுடன் மறுபடி அந்தச் சிதிலமான கோயிலுக்குள் நுழைந்தான்.

பேராசிரியர் அணைந்த பைப்பைக் கடித்துக்கொண்டே கோயில் மண்டபத்தின் கற்தூண்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்தார்.

"ஸாாாார்! குட் மார்னிங்!"



''குட் ஆஃப்டர்நூன்'' என்ருர் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே.

''கொஞ்சம் திரும்புங்க.''

''ஏன்?''

''இல்லே, கத்தி கித்தி குத்தி கித்தி இருக்கான்னு பார்த்துறலாமேன்னுட்டு.''

''என்னப்பா சொல்றே?''

புரியும்படி சொன்ஞன். ''ஆமா? 'அங்க போகாதே ஆபத்து'ன்னு எங்கிட்டே சொல்லிட்டு நீங்களே வந்து நிக்கறீங்களே?''

''இல்லே வஸந்த். எனக்கே 'என்னடா இந்தக் கிணத்து மேலே திடீர்னு இவ்வளவு பேருக்கு இன்ட்ரஸ்ட். நாம ஏதாவது பார்க்க மறந்துட்டோமோ இன்னொரு தடவை எதையாவது விட்டுட்டேஞன்னு பார்த்துறலாம்னு'தான் புறப்பட்டு வந்தேன்.''

''ஏதாவது ஆராய்ச்சியில விட்டுப் போயிருக்கா பார்த்தீங்களா?''

''ம்ஹூம். எனக்குத் தெரிஞ்சவரைக்கும் இங்க அவங்க எல்லாம் பறக்குறதுக்கு எதுவுமே இல்லே.''

''அதை ஏன் கேக்கறீங்க. இன்னிக்குக் காலேயில இங்க ஒரு ஸ்டாபிங் இன்ஸிடண்ட். ஒரு ஆள் எங்களே நோக்கி வந்தான். என்னமோ சொல்ல வந்தான். சொல்லி முடிக்கறதுக்குள்ள கத்திக் குத்து வாங்கிட்டுத் தொடரும்னு போட்டுட்டுப் போயிட்டான்.''

''அய்யோ! செத்துட்டாஞ?''

''இல்லே. இன்னும் உயிர் இருக்கு. விளக்கு காத்தில துடிச்சுண்டு இருக்கு. இப்ப அவனேப் பார்த்து, 'யோவ் சொல்ல வந்ததைச் சரியாச் சொல்லிட்டு அப்புறம் சாவகாசமா செத்துக்க'ன்னு விசாரிக்கத்தான் காஞ்சீபுரம் போய்க்கிட்டிருக்கோம். நீங்களும் கையோட புறப்பட்டு வந்துடுங்க. இந்த இடத்தில தனியா இருக்கறது நல்லதில்லே.''

''கொலே வரைக்கும் போருங்கன்ஞ விஷயம் பெரிய விஷயம்னு தோணுது.''

பேராசிரியரும் இனியாவும் பின் சீட்டில் வீற்றிருக்க வஸந்த் ரியர் வியு மிர்ரரை அவள் மேல் சரி செய்து கொண்டான். அவனருகே கணேஷ்.

''ஸார் இந்தக் கல்வெட்டுகளில் இந்த வட்டாரத்தில ஏதாவது புதையல் இருக்கிறதைப் பத்தித் தகவல் இருக்கா?''



''ம்ஹூம். இல்லவே இல்லை.''

''ஆர் யூ ஷ்யூர்?''

''நிச்சயம். நான் இந்த வட்டாரம் முழுக்க ஒண்ணு விடாம எல்லாத்தையும் பார்த்திருக்கேன்.''

''விலை உயர்ந்த சிலை ஏதாவது இருக்க சான்ஸ் உண்டா கோயில்களில?''

''அதுக்கு ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்டைத்தான் கேக்கணும்.''

''இன்ஸ்கிரிப்ஷன்ஸ்ல அதைப் பத்தி ஏதாவது மென்ஷன் இருக்கா?''

''இல்லை கணேஷ்! எனக்கு என்னவோ என்னைப் பல்லாவரத்துக்கு அழைச்சுட்டுப் போனவன்களையும் வீட்டுக்கு வந்தவன்களையும் பார்த்தா சரித்திரத்துக்கும் அவங்களுக்கும் ஸ்நான ப்ராப்தி கூட இல்லாதவங்க மாதிரித்தான் தோணுது.''

''ஆனா ராஜ ராஜன் கிணறுங்கற பேரு இவங்களுக்குத் தெரிஞ்சிருக்கே? உள்ளூர்காரங்களுக்கே தெரியலையே?''

''ஸார் அந்தக் கிணத்தின் அடியிலே ஒரு தங்க மாளிகைக்குச் சுரங்கப் பாதை ஏதாவது இருக்குமோ?''

''இறங்கிப் பாத்துறேன்.''

''அல்லது இப்படி இருக்குமோ'' என்றான் கணேஷ்.

''எப்படி?''

தலையை ஆட்டி ''ம்ஹூம்'' என்றான். ''இப்ப அதைப் பத்தி யோசிக்க வேண்டாம். முதலிலே அந்த ஆளைப் பார்த்து அவன் என்ன சொல்ல வந்தான்னு அறிஞ்சுக்கலாம். அதிலதான் இருக்கு க்ளூ.''

''அந்தக் கட்டுரையிலும் இருக்கு பாஸ். அதுக்குத்தானே அந்தக் கோஷ்டியே அலைஞ்சுது?''

''அந்தக் கட்டுரையைக் காப்பி வெச்சுக்கலை நான். மடத்தனம்!''

''குறிப்புகள் இருக்குமில்ல?''

''இருக்கு.''

''அதை அப்புறம் கவனிக்கலாம்.''

காஞ்சி நகரத்தின் கோபுரங்கள் தென்பட்டன. கரையோரமாகச் சென்ற பாதையில் தென்னை மரங்கள் விரைந்தன.

''ஆஸ்பத்திரி எங்க இருக்குன்னு விசாரிச்சுக்க வஸந்த்.''

நெருக்கமான தெருக்களில் இருட்டு வீடுகளுக்குள் நெசவு ஜொலித்தது. பற்பல வடிவ பஸ்களில் பற்பல வடிவப் பிரயாணிகள் வரதராஜனையும் காமாட்சியையும் நோக்கி இரைந்தார்கள். ''ஆவோ ஆவோ ஏதேக்கோ வரதராஜ் ஸ்வாமிகி மந்திர்'' என்று தொந்தி குலுங்க ஓடினவர்களின் பின் வடக்கத்தி முகங்கள் விரைந்தன.

நெட்டையான மண்டபத்தின் அருகில் காரை நிறுத்தி வஸந்த் விசாரித்தான்.

''இப்படியே நேராப் போனிங்கன்னா டாக்கிஸ் வருங்க, அங்க போய் விசாரிச்சுக்கங்க.''

''சரிதான்! எல்லாருக்கும் வழி காட்டின அண்ணா பிறந்த ஊர்ல இப்படியா வழி காட்றிங்க!''

''வஸந்த் அங்க பார் ஓர் ஆம்புலன்ஸ் போறது. அதும் பின்னாலே போ.''

ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு உரித்தான அத்தனை குணாதிசயங்களும் இருந்தன. காரிடாரில் நூறு பேர் உட்கார்ந்திருந்தார்கள் அல்லது படுத்திருந்தார்கள். டாக்டர்களைக் காணோம். ஸ்பெஷல் வார்டில் சிலர் குடும்பமே நடத்திக் கொண்டிருந்தார்கள். நர்ஸுகள் ட்யூட்டி மாறிக்கொண்டிருந்தார்கள்.

''காஷுவாலிடியா எமர்ஜென்ஸியா பாஸ்?''

''காஷுவாலிடியே போ! இன்னும் பாரம் எழுதியே முடிச்சிருக்க மாட்டாங்க.''

கணேஷ் அந்த போலீஸ் கான்ஸ்டபிளை அடையாளம் கண்டு கொண்டான். ''இதோ இருக்காரே நம்ம 'அதுகூட சரிதான்.'''

''ஷ்...''

''வணக்கங்க. நம்மாளு அட்மிட் ஆயிட்டாரா?''

''இல்லை.''

''ஏதாவது பேசினாரா?''

''இல்லை. போயிட்டாரு.''

''என்னது!''

''ஷ்''

''வார்டு பாய் யாரையாவது கூப்பிடுங்க. பாடியை பி.எம்.முக்கு எடுத்துட்டுப் போகணும்.''

கணேஷ் அந்த மூடியிருந்த உடலைப் பார்த்தான். ரத்தக் கறை தெரிந்தது.

'அன்னியனே!, நீ என்ன சொல்ல வந்தாய்?'


''நீங்க ரெண்டு பேரும் இன்ஸ்பெக்டரைப் பார்த்துட்டுப் போயிறுங்க. குத்தின ஆளு முகம் ஞாபகம் இருக்கா?''

''ஆளையே பார்க்கலைன்னுதானே சொன்னோம்.''

''அங்க பார்த்ததாச் சொன்னீங்களே?''

''இல்லிங்க. சரியா ஞாபகப்படுத்திப் பாருங்க.''

''என்னைப் போட்டுக் குளப்பறியா நீ! இன்ஸ்பெக்டர் கிட்ட நீங்க ஆளைப் பார்த்ததாச் சொல்லிப் போட்டிருக்கேன்.''



மானேஜர்: இனிமேல் காரணத்தை முன்னாடி சொல்லி விட்டுத்தான் லீவு போட வேண்டும்.

கிளார்க்: எனக்கு நாளையிலேருந்து 15 நாட்கள் வயிற்று வலியாக இருக்கும்! லீவு தாருங்கள்.

- பிரியா பாலு -



ஒரிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள பல்வேறு மாநிலங்களின் கலாச்சார அமைப்புகளும் கேரள சமாஜம், கன்னட அசோசியேஷன் என்றே உள்ளன. ஆனால் தமிழ் நாட்டவர்களின் அமைப்பு மட்டும் 'ஸவுத் இந்தியன் அசோசியேஷன்' என்று பரந்த அமைப்பில் இயங்குகிறது. ஆந்திர வெள்ள நிவாரணப் பணிக்கு இவர்கள் வழங்கிய நன்கொடை ரூ 2000 கூட தென்னாட்டு மக்கள் அனைவரின் நன்கொடை என்கிற பிரமையையே ஏற்படுத்தியது.

- ஏ. விஸ்வம்

''அதுக்கு நாங்க என்ன பண்ணமுடியும்?''

''அடப் போய்யா! அவர் கிட்டவே பதில் சொல்லிக்க.''

அந்தச் சமயம் மற்றொருவன் உள்ளே நுழைந்தான். நடுத்தர வயதினனாக இருந்தான். சற்றுப் பதற்றத்துடன் காணப்பட்டான். ''நாங்க கூட உக்கல் கிராமந்தாங்க. கேள்விப்பட்டதும் அடுத்த பஸ்ஸைப் புடிச்சு ஓடியாந்துட்டேன். எங்க அந்த ஆளு?''

''எவனைக் கேக்கிறிக?''

''அதான் கத்திக் குத்துப் பட்டானே?''

''அது போயிடுச்சுங்க. அங்க பாருங்க பாடி.''

''போய்ட்டானா?'' புதியவன் சற்றுத் தயங்கி மூடியிருந்த அந்த உடலை அணுகினான்.

''பார்க்கலாங்களா?''

''தாராளமா.''

''அட!'' முகத்தை மூடியிருந்த வெள்ளைத் துணி விலக்கப்பட்ட சற்று நேரம் அந்தக் கருக்கத் தொடங்கிவிட்ட முகத்தைப் பச்சாதாபத்துடன் பார்த்துவிட்டு ''மூடிடுங்க'' என்றான். துண்டால் வாயைப் பொத்தியபடியே விலகினான்.

''காலைலதான் உயிரோட முழுசாப் பாத்தேங்க.''

''இந்தாளை உங்களுக்குத் தெரியுங்களா?'' என்றான் வஸந்த்.

''தெரியாதுங்க. ரெண்டு மூணு நாளாத்தான் பழக்கம். வீட்ல வந்து யாரோ வந்தாங்களா வந்தாங்களான்னு விசாரிச்சுக்கிட்டே இருந்தாங்க.''

''அவங்க வரத்துக்குள்ள இவன் போய்ட்டான்! ஆமா உங்க பேர் என்ன?''

''சதாசிவம்.''

''அட நீங்கதானா அது?''

''நீங்கதானென்னா?''

''உங்களைத்தான் வந்து பார்க்கும்படியா சொல்லிக்கிட்டிருந்தாரு இந்த ஆளு, அதுக்குள்ள குத்திட்டாங்க.''

''குத்தினது யாருன்னு தெரிஞ்சுதா?''

''எங்க? அவனை யாரு பார்த்தா?''

''நீங்கள்ளாம் யாரு?''

''பட்டணத்துக்காரங்க.''

''என்னை வந்து பாக்கும்படியாச் சொன்னானா? எதுக்கு?''

''அதை உங்க கிட்ட கேக்கலாம்னு இருந்தோம்.''

''சரிதான். எனக்கு ஒண்ணும் தெரியாது! நிலவரமே புரியலே. என்னமோ ஏதோ பேசி வெச்சுக்கிட்டு வெளியூர்க்காரப் பயலுவள்ளாம் ஊருக்குள்ளாற வந்திருக்கானுவன்னு நினைக்கிறேன். என்னமோ நடக்கப் போவுது! இவன் வெளியூர்க்காரன் மாதிரிதான் தெரியுது.''

''உங்களுக்கு வேற ஒண்ணுமே தெரியாதுங்களா?''

''ம்ஹூம்.''

கான்ஸ்டபிள் அவர்களிடம் வந்து ''ஆளு யாருன்னு தெரிஞ்சு போச்சுன்னா பாதிக் கேஸ் முடிஞ்சுறும்! ஏதாவது விரோதமா இருக்கும்'' என்றான்.

''நீங்க விசாரிங்க.''

''பைக்குள்ற கடுதாசி கிடைச்சுது. அதில அட்ரஸ் இருக்கு. நீங்க எங்கயும் போயிருதீங்க. இன்ஸ்பெக்டர் வர்ற நேரம்.''

''இருக்கங்க.''

''அப்ப நான் வரட்டுங்களா'' என்று சதாசிவம் கிளம்பினார்.

''இவரு யாரு சொல்லலிங்களே'' என்றார் போலீஸ்காரர்.

''அய்யா, நான் உக்கலுங்க. பெருமாள் கோயில் தெரு சதாசிவம்.''

''ஓ, பார்த்திருக்கேன்.''

''பயலைப் பாத்த முவமா இருந்தது, யாருன்னு கிட்டப் பாத்தேன். உள்ளூர்க்காரனில்லிங்க.''

''தெரியும்.''

''வரேன். ஏதாவது தகவல் வேணுமின்னா சொல்லி அனுப்புங்க.'' சதாசிவம் புறப்பட கணேஷ் உடனே வஸந்தைத் தனியா அழைத்து, ''வஸந்த்! நான் கான்ஸ்டபிளைச் சமாளிச்சுக்கறேன். நீ அந்தாளைப் பின் தொடர்ந்து எங்க போறான், என்னன்ன பண்றான் எல்லாத்தியும் நோட் பண்ணிண்டு வந்து சொல்லு க்விக்'' என்றான்.

வஸந்த், ''ஏட்டய்யா ஒரு நிமிஷம் சின்ன விஷயத்துக்காகப் போயிட்டு வந்துர்றேன்'' என்றான்.

''நான் இங்கதான் இருக்கேன்'' என்றான் கணேஷ்.

''அதுகூடச் சரிதான். போயிட்டு வாங்க!''

''இனியா, கொஞ்சம் இரு வந்துர்றேன்'' என்று சொல்லிவிட்டு வஸந்த் வெளியே வந்த போது அவன் மூலை திரும்பிக் கொண்டிருந்தான். சதாசிவத்தின் நடையில் ஒரு தீர்மானமும், குறிக்கோளும் தெரிந்தன. சந்நிதித் தெருவில் தொடர்ந்தான். நாமம் பிரதானமாக வாசலை அலங்கரித்த ஒரு வீட்டை அடைந்து கதவுச் சங்கிலியை ஓசைப்படுத்தித் திறந்ததும் சதாசிவம் உள்ளே சென்றான், (தொடரும்)

PENNY WISE AND POUND FOOLISH

பட்ஜெட்டுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படும் பொருளாதார அறிக்கை பிரமாதமான அங்கதபாணி நகைச்சுவைக் கட்டுரை!

பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்ததற்கான நிச்சயமான அறிகுறிகள் தெரிகின்றன என்று அடித்துச் சொல்கிறது; கூடவே பணவீக்கம் மிகுந்துள்ளதாகவும் பேசுகிறது! விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளதாக ஆணித்தரமாகக் கூறுகிறது; கூடவே விலைவாசிகள் மேலும் உயரலாம் என்கிறது! தொழில்துறை உற்பத்தி பெருகியுள்ளதாக மகிழ்ச்சியடைகிறது; கூடவே ஏற்றுமதியில் சுணக்கம் என்று துக்கம் கொண்டாடுகிறது!

இப்படியே தொடரும் பொருளாதார அறிக்கையைப் படிக்கும்போது நமக்கு ஒரு விஷயம் வெட்ட வெளிச்சமாகிறது: எது எப்படியோ நமக்கு இன்னும் விடிவு காலம் பிறக்கவில்லை!

எப்படிப் பிறக்கும்? நோட்டு அச்சடிக்கும் வசதி இருப்பதால் அரசுச் செலவினங்களை அதிகரித்துக் கொண்டே போகும்போது அது பணவீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் பொருளாதாரச் சீர்குலைவையும்தானே உருவாக்கும்?

நமது பிரதமரும்தான் பாவம், சிக்கனத்தை உபதேசிக்கிறார். சமீபத்தில் கூடத் 'திருமணங்களில் ஆடம்பரச் செலவுகள் வேண்டாம்' என்ற அவரது கருத்து விளம்பரமாகப் பத்திரிகைகளில் வந்தது. இந்தப் பொன்மொழிகள் மக்களுக்கு மட்டும்தானே யொழிய அரசுக்கு இல்லை போலும்!

புது தில்லியில் நடந்த இந்திரா காங்கிரஸ் கட்சியின் விவசாயப் பேரணிக்கு மக்களின் வரிப்பணம் எவ்வளவு செலவாயிற்று என்பதற்குப் பல கோடிகள் வரை பல்வேறு மதிப்பீடுகள். எதிர்க் கட்சியினர் வேண்டிய அளவுக்குத் தாக்கிப் பேசிவிட்டனர்.

கூடவே நடந்த கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் விரயமான பணம் எவ்வளவு, கண்ட பலன் எவ்வளவு என்று பார்த்தால் தலை சுற்றும்! பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனில் இதோ ஒரு உதாரணம்:

மாநாட்டுக்கு மொழிபெயர்ப்பாளர் படை தேவைப்பட்டது. இதனை இந்தியாவிலேயே யாரேனும் பொறுப்பேற்றுச் செய்ய மாட்டார்களா என்பது கவனிக்கப் படவேயில்லை. மிஸஸ் பென்னி என்ற பிரிட்டிஷ் பெண்மணியிடம் பணியை ஒப்படைத்தனர். அவருக்கு இதற்கென தரப்பட்ட தொகை எண்பத்திரண்டு லட்சம் ரூபாய்க்கும் அதிகம்! இது அந்நியச் செலாவணியில் கொடுக்கப்பட்டது. பல மொழிபெயர்ப்பாளர்களை உதவிக்கு அமர்த்திக்கொண்ட அவர் அவர்களுக்குத் தலா நாளொன்றுக்கு முந்நூறு டாலர் தரப் போவதாக நமது அரசுக்குக் கணக்குச் சொன்னார். பயணச் செலவு, தங்குமிடச் செலவு தனி என்றார்! ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் அவர் தம்முடன் அழைத்து வந்தவர்கள் பாதிப் பேர்தான். மீதமுள்ளவர்களை இந்தியாவிலேயே தேடிப் பிடித்தார். அவர்களுக்குத் தலா நாளொன்றுக்கு முப்பது டாலர்தான் தந்தார்!

அவர் தமது குழுவினருடன் இங்கு வந்து சேர்ந்த விமானமாவது ஏர்—இந்தியாவாக இருந்திருந்தால் அந்நியச் செலாவணியில் ஒரு பகுதி நமது நாட்டுக்கே திரும்பி வந்திருக்கும். ஆனால் ஒப்பந்த ஷரத்தில் இந்த நிபந்தனை இல்லை! மேல் நாட்டு விமான கம்பெனியே பயனடைந்தது. முழு டிக்கெட்டுக்கும் ஏழை இந்தியன் பணம் தர, மிஸஸ் பென்னி ஒரு கூட்டத்துடன் வந்ததால் அடையக்கூடிய சலுகையைப் பெற்றார்!

ஒன்று நிச்சயம்; மிஸஸ் பென்னிக்கு உள்ள சாமர்த்தியத்தில் பாதி அளவு நமது அரசுக்கு இருக்குமானால் போதும், நமது தேசம் ரொம்ப ரொம்பப் பணக்கார நாடாகி விடும்! ஆனால் மிஸஸ் பென்னி Penny wise ஆக இருக்க நமது அரசு Pound foolish ஆக அல்லவோ செயலாற்றுகிறது!

1981 மார்ச் 8
ரௌத்திரி மாசி 25
மலர்: 39 இதழ்: 32



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

10. அது என்னவோ?

சரிந்த கூரையின் மேல் சமீபத்திய செல்வாக்கைக் கலந்து கட்டப்பட்ட வீடு அது. அதனுள் அந்த சதாசிவம் நுழைந்து உள்ளே சென்றதைப் பார்த்தான் வஸந்த். சற்று நேரம் திகைத்தான். உள்ளே சென்று பார்க்கலாமா? வேண்டாம், மற்றொரு ட்ரெஸ்பாஸ் வேண்டாம். காத்திருக்கலாம். உள்ளே போன ஆள் வெளியே வந்துதானே ஆக வேண்டும்.

வரவில்லை. முப்பது நிமிஷமாச்சு, நாற்பதாச்சு, ஒரு மணியாச்சு. ஆள் அட்ரஸே இல்லை. உள்ளே கரைந்து போய் விட்டானா? எத்தனை நேரம் கிராமத்து வீதியில் இப்படி உலாத்துவது? எத்தனை நேரம் இப்படி ஸிகரெட் குடிப்பவன் போல் அலட்சியமாக நிற்பது? அவ்வப்போது ஆர்வ முகங்கள் யாரு வேணுங்க, யாரைப் பார்க்கறீங்க? என்று விசாரிக்கத் துவங்க வஸந்த் தீர்மானித்தான்.

கதவைத் தட்டினான். ''யாரு?'' என்று உள்ளே இருந்து சற்று வயதான குரல் கேட்டது. ''மரகதம்! யாரு, பாரு!''

ஈரக் கையைத் துடைத்துக்கொண்டு வந்த மரகதத்துக்கு முப்பது வயதிருக்கலாம். தேவைக்கு அதிகமான அளவு பொட்டு, உதட்டில் வெற்றிலை ரத்தம். உன்னிப்பாக



வஸந்தைப் பார்த்து, புருவத்தால் ''என்ன வேணும்?'' என்றாள்.

''சதாசிவம் இங்கே வந்தாருங்களே அவரைக் கொஞ்சம் பார்க்கணும்.''

''சதாசிவமா? அப்படி யாருமில்லே.'' அவள் ரேடியோ டிராமாவில் போல் அனாவசியத் துக்குச் சிரித்தாள்.

''கொஞ்ச நேரம் முன்னாடி இந்த வீட் டுக்குள்ள நுழைஞ்சாரே?'' மறுபடி ரேடியோ டிராமா. ''ம்ஹூம். யாரும் வரலிங்க.'' இப்போது சிரிப்பு அடக்க முடியாமல் வெடித் தது. வஸந்த் சற்று நேரம் தன்னை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தீர்மான மில்லாமல் திருதிரு என்று விழித்தான். ''நீங்க தானே மரகதம்?''

''ஆம்மா.''

''கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக் குமா?''

''கொண்டாரேன்.''

''அப்படியே எனக்குக் கை கால் முகம் கழுவிக்கணும்.''

அந்த ஆள் நிச்சயம் புறக்கடைப் பக்கம் தான் போயிருக்க வேண்டும்.

''அப்ப வாங்க பின்கட்டுப் பக்கம்.''



கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந் மரகதத்திடம், ''உள்ளுக்குள்ள குரல் கே டுதே அது யாரு உங்கப்பாவா?'' என்றான்

இப்போ பள்ளிக்கூட மணி அடித்ததுபோ அவள் சிரித்தாள். ''அப்பாவா? இல்லே ஊட்டுக்காரரு.''

''அப்படியா ஸாரி. குரலைக் கேட்டா வ சான மாதிரி இருந்தது.''

''வயசானவர்தான்.'' அவள் சிரிப்புக் விவஸ்தையே கிடையாதா? இதற்கு கூடவா சிரிப்பார்கள்? வஸந்த் முகம் கழுவி கொள்கிறவன் போல் சுற்று முற்றும் பார் தான். தென்னே, வானம் பார்த்த கழிவறை சொறி பிடித்த திட்டிக் கதவு, ''இந்த கதவு எங்க போறதுங்க?''

''ஒட்டஞ் சந்துக்கு'' — சிரிப்பு.

''சரி, தாங்க்ஸ் வரேங்க.''


''கொஞ்சம் இருங்க.''

''மரகதம், லொக்கு-லொக்கு. யாரது?''

''யாரோ குடிக்கத் தண்ணி கேக்க வந் வங்க மாமோவ்.''

இப்போது அவள் குரலைத் தாழ்த்தி ''சதா சிவம் வந்தாரு. சந்து வளியாப்போய்ட்டாரு'' என்றாள். அவள் சிரிப்பதை நிறுத்திவிட்டாள் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் துருதுரு என்று கண்கள் அலைந்தன. ''அப்பவே போயிட்டாரு. எல்லாம் திருடங்க.''

''என்ன சொல்றாரு அவரு?'' என்றது முன் வீடு.



''ஒண்ணுமில்லே மாமோவ். நீங்க கிளம்புங்க. கிழம் மெள்ள எழுந்து வந் துரும்.'' அவள் கண்களில் லேசான வருத்தப் தென்பட்டது.

''தாங்க்ஸ் மரகதம். நான் மறுபடியுப் வரேன்.''

''வாங்க எல்லாம் சொல்றேன். இந்தாங்க கண்ணாடி!'' அவள் வெய்யில் கண்ணாடியைத் திருப்பிக் கொடுக்கும்போது கை பட்டது.



பால்காரியின் மகன் : ''எங்க அம்மா, வெளுத்ததெல்லாம், பால்னு, நினைப்பாங்க...!''

நடிகையின் மகன் : ''இதென்ன...! எங்க அம்மா, கறுத்ததெல்லாம், பணம்னு, நினைப்பாங்களே...!''

- ஏ. என். ஜெயராமன்

''சரியான அராபியன் நைட்ஸ் அனுபவம் பாஸ்! கதவு திறக்கிறது அடிமைப் பெண் ஜரீனு வரா.''

''சதாசிவம் என்ன ஆனுன் அதைச் சொல்லு முதல்லே.''

''பின் வழியா ஜகா வாங்கிட்டாருஅவரு''

''அப்ப அவரு அவ்வளவு இன்னொஸண்ட் இல்லேன்னு தெரியுது. அவர் விலாசம் உக்கல் முதலியார் தெருவில் இருக்கு.''

''ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடலாமே?''

''இல்லே. முதல்லே பேராசிரியரையும் மகளையும் பத்திரமா ஊருக்கு அனுப்பலாம். போலீஸ் கேஸ்லே அவங்களைப் போட்டுக் குழப்ப வேண்டாம். அப்புறம் எப்படியும் நாம மறுபடி உக்கல் திரும்ப வேண்டியிருக்கும். விசாரணை இன்னிக்கு முடியாது.''

''மாட்டிக்கிட்டோம் பாஸ்.''

''இல்லே. கேஸ் சுவாரஸ்யமா இருக்கு வஸந்த்! இவங்கள்ளாம் எதுக்காக இப்படி வெட்டுப் பழி குத்துப் பழியா அலையருங்க அதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?''

''ஹாய் வஸந்த்! எங்க ஆளு காணுமப் போயிட்டீங்க?'' இனியா வந்தாள்.

''எல்லாம் பேராசிரியர் கிளப்பிவிட்ட வம்புலதான். ஸார், நீங்க என்ன பண்றிங்க சமத்தா மெட்ராஸ் போயி அந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களை சந்தேகத்துக்குச் சாம்பாரா இன்னொரு தடவை பார்த்துட்டு ஏதாவது புதையல் கிதையல் விட்டுப் போயிருக்கான்னு எங்களுக்குச் சொல்லுங்க. அதுக்குள்ள நானும் கணேஷும் இனியாவும்...''

''இனியா எதுக்கு?''

''சும்மா ஒரு பேச்சுத் துணைக்கு.''

கணேஷ், ''ஸார், அதெல்லாம்வேண்டாம். நீங்க உங்க டாட்டரை அழைச்சுண்டு போங்க.'' நாங்க மறுபடியும் மெட்ராஸ்ல வந்து சந்திக்கிறோம்'' என்றான்.

''அப்ப பை! வஸந்த் உடம்பைப் பாத்துக்குங்க. ராத்திரி வேளையில தனியா எங்கேயும் போகாதீங்க.''

''போகலே இன்னி.''

''ஸ்வெட்டர் போட்டுக்குங்க.''

''போட்டுக்கிறேன் இன்னி.''

''யோவ்! இன்னி என்னய்யா இன்னி!''

''ஓ! நீங்க இருக்கீங்களா மறந்துட்டேன் ஸார்!''

''இனியா! வஸந்த்கிட்டச் சொல்லியாச்சா!''

''இல்லேப்பா'' என்று சற்று ஹீனஸ்வரம் பேசினாள்.

''என்ன?''

''இனியாவைப் பாக்க வராங்க.''

''யாரு?''

''பையன் அமெரிக்காவில ரிஸர்ச்பண்றான். லீவ்லே வரான். நாளைக்கு வந்து பார்க்கப் போறான்.''

''அப்படியா? சந்தோஷம்'' என்றான் வஸந்த் சந்தோஷம் இல்லாமல்.

''சும்மா பார்க்கத்தான்வராங்க வஸந்த்.''

''நீ என்ன சுற்றுலா பொருட் காட்சியா?''

''பார்த்துட்டுப் பிடிச்சிருந்தா மேரேஜ் ஸெட்டில் ஆயிடும்.''

''அவ்வளவு தூரத்துக்குப் போயிடுமா?''

''ஏன்?''

''ஸார், உள்ளூர்ல மாப்பிள்ளை கிடைக்கலியா?''

''தங்கமான பையனும்பா.''

''ஏன் லோகல் தங்கம் உதவாதோ?''

''வஸந்த், அப்புறம் பார்க்கலாம்'' என்றாள் இனியா.

''எப்ப? ரிஸப்ஷன்போதா?''

''வா, இனியா.''

அவர்கள் சென்றதும் வஸந்த் ஒரு ஒதெல்லோ பெருமூச்சு விட்டு ''அமெரிக்காவில இருக்கிற ஆசாமி பேசாம அமெரிக்காவிலேயே ஒரு வெள்ளைக்காரியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே? எதுக்காக பெஸண்ட் நகர் வரணும்? அநியாயம்'' என்றான்.

''கவலைப்படாதே வஸந்த். இனியா கடைசியா உன்னைப் பார்த்த பார்வையில நம்பிக்கை இருந்தது.''

''சான்ஸே இல்லே பாஸ். ஹூம் நம்ம கேஸைப் பார்க்கலாம் வாங்க.''

''இறந்து போன அந்தாளு யாருன்னு கண்டு பிடிச்சுட்டோம் மிஸ்டர் கணேஷ்.'' என்று இன்ஸ்பெக்டர் அவர்கள் அருகே வந்தார். ''சர்க்கார் உத்தியோகஸ்தர்.''

''அப்படியா!''

''கூழமந்தல்ல ஒரு கோயில் இருக்குது. அதில ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் காவல்காரன். பேரு செல்வ மாணிக்கம்.''

''அவன் கொலை செய்யப்பட்டதுக்குக் காரணம் என்னன்னு நீங்க நினைக்கிறீங்க?''

''சொல்ல முடியலீங்க. ஏதாவது நிலத் தகராறு இருக்கலாம்.''

''இன்ஸ்பெக்டர்! சமீபத்தில் உக்கல் கிராமத்தில் வெளியூர் ஆசாமிங்க நடமாட்டம் அதிகமா யிருந்ததா?''

''இல்லீங்களே.''

''பழுப்பு நிறத்திலே ஒரு வான், மெட்ராஸ் வண்டி, வந்ததா ஞாபகம் இருக்குங்களா?''

''இல்லியே! ஏன்?''

''எனக்கென்னவோ இது நிலத் தகராறுத் தெரியலே.''

''வேறென்ன?''

''அதான் தெரியலே. எதுக்கும் நாங்க நடந்ததை ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்துடறோம். நீங்க எஃப். ஐ. ஆர். தயாரிங்க, உங்களுக்கு முழு ஒத்துழைப்பும் தரோம். நீங்க எப்ப திரும்பிப் போகலாம்னு சொல் நீங்களோ அப்பப் போறோம், சரிதானே?''

''சரிதாங்க. எஸ்பி. வருவாரு. அவரைப் பார்த்துப் பேசிட்டுப் போய்டலாம். நீங்க திரும்பியும்கிராமத்துக்குத்தானேபோறிங்க?''

''ஆமாங்க. கார்ல போறோம். நீங்களும் எங்க கூட வரிங்களா?''

''இல்லிங்க! நீங்க போங்க. எனக்கு ஏகப்பட்ட சோலி கிடக்குது.''

''என்ன வஸந்த் பேச்சே இல்லே!''

''ப்ச்! லவ் இஸ் எ மித்னு சும்மாவா சொன்னேன்? அமெரிக்காவில இருந்து வர ப்ளேன் புறப்படறப்பவே டயர் பர்ஸ்ட்டாகி வெடிச்சு 'என்னடாது கிளம்புறப்பவே அபசகுனமா இருக்கே'ன்னு அந்த ஆசாமி என்ன மண்ணுங்கட்டி ரிசர்ச் பண்றானோ அவன் பேசாமத் திரும்பிப் போயிட்டான்னா...''

கணேஷ் சிரித்து, ''பர்வாயில்லே. ப்ளேனைக் கவுக்காம டயர் பர்ஸ்ட்டோட நிறுத்தினியே! வஸந்த்! கவலேப்படாதே! இனியா இந்தப் பையனைப் பிடிக்கலேன்னு சொல்லிடுவா பாரேன்'' என்றான்.

''நீங்க அப்படி நினைக்கிறீங்களா பாஸ்?''

''மேலும் இந்த ராஜ ராஜன் கிணறு மர்மத்தைக் கண்டு பிடிச்சா பேராசிரியர் உம்மேல படு இம்ப்ரெஸ் ஆகி கொண்டுவா கையைன்னு பொண்ணைக் குடுத்துடுவார்.''

''ஐஸ் ஃபாக்டரியையே வெக்கறிங்க.''

''அப்படியே இந்த இனியா இல்லேன்னாலும் மெட்ராஸ்ல வேற பெண்களே இல்லேயா?''

''இல்லே பாஸ். தப்பித் தவறிப் போய் ஒருத்தி என்னை லவ் பண்ண ஆரம்பிச்சா. அது என்னடான்னா டீரெய்ல் ஆய்டும்போல இருக்கு. 'இனியா! இனியா! பாஸ்! படக்குனு மெட்ராஸ் போயி சின்னதா ஒரு காந்தர்வ விவாகம் பண்ணிண்டு வந்துறவா?''

''பொறு மகனே. இந்த விவகாரத்தை முடிச்சுட்டு அப்புறம் உன் காதலேக் கவனிக்கலாம்.''

''சொல்லிட்டிங்க. அது போதும்.''

''இப்ப உக்கலுக்குப் போய் முதல்லே அந்த சதாசிவத்தை விசாரிக்கலாம்.''

''கலாம்! வாங்க.''

சதாசிவத்தின் வீடு சற்றுப் பிரதானமாக இருந்தது. வாசலில் சதுரமாகக் கொஞ்சம் தெருவில் ஆக்கிரமித்து சிமெண்ட் போடப்பட்டிருந்தது. ஈட்டி ஈட்டியாகக் கம்பிக்குத்துகளுக்குப் பின் திண்ணை, மரக் கதவு, பிறையில் கார்த்திகைக் கருப்பு.

''வாங்க உங்களே ஒரு விதத்தில எதிர்பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன்.''

''அப்படியா? எந்த விதத்திலே?''

''அ, சும்மா பாசாங்கு பண்ணாதீங்க. ஆஸ்பத்திரி சந்தடியிலே உங்ககூட அதிகம் பேச முடியலே. போலீஸ் வேற இருந்தாங்க. அதனால கண்டுக்காம வந்துட்டேன். கொஞ்சம் உள்ளே வரிங்களா?''

உள்ளே குளுமையாக இருந்தது. சகல வசதிகளும் இருந்தன.

''டெலிவிஷன் இங்கே தெரியுதுங்களா?''

''ஏன் கேக்கறிங்க! சவுண்டு வந்தா படம் வரதில்லே; படம் வந்தா சவுண்டு இல்லே. எப்பனச்சியும் ரெண்டும் தெரிஞ்சா விவசாயம் காட்டறாங்க'' என்று செயற்கையாகச் சிரித்து ''என்ன சாப்பிடறீங்க?'' என்றான்.

''ஒண்ணும் வேண்டாங்க.''

''அப்ப வந்த காரியத்தைப் பளிச்சுன்னு சொல்லிப்போடுங்க.''

''நீங்கதான் சொல்லணும்.''

''எத்தினி தருவிங்க?''

''பொருளேப் பார்க்காம எப்படி?''

''கைவசம் ஒண்ணுதான் வந்திருக்கு.''

''முதல்ல அதைப் பத்திப் பேசலாம்'' என்றான் கணேஷ்.

''கொஞ்சம் இருங்க, வாசக் கதவைத் தாப்பாப் போட்டுட்டு வந்துர்றேன்.''

அவன் சொல்லக் கணேஷும் வஸந்தும் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன பாஸ் சொல்றான்'' என்று வஸந்த் சைகையில் கேட்க ''வெயிட்! பார்க்கலாம்'' என்று கணேஷ் கையமர்த்திக் காட்டினான்.

திரும்பி வந்த சதாசிவம் மரத்தூண்களைச் சுற்றிச் சென்று ஓரத்தில் இருந்த மரக் கதவைத் திறந்து அதன் இருட்டுக்குள் மறைந்தான்.

சற்று நேரத்தில் பழுப்புக் காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு என்னவோவுடன் திரும்பினான்.

சுமார் மூன்றடி இருந்தது. கச்சாவாக சணல் கயிற்றில் கட்டியிருந்தது. அதை மேசை மேல் வைத்து மெல்லக் கயிற்றைப் பிரித்தான். ''இது எங்கிட்ட இருக்கிறது யாருக்கும் தெரியாது. ரெண்டு நாளிலே கைமாறிடும். டெம்பரரியாத்தான் நம்ம கைல வந்திருக்கு.''

''புரியுது'' என்றான் கணேஷ் புரியாமல்.

சணல் கயிற்றை அகற்றி அகற்றி அவன் அந்தப் பழுப்புக் காகிதத்தைப் பிரிக்கும் நிலேயில் வாசலில் கதவு தடதடக்கப்படும் சப்தம் கேட்டது.

உடன் ''சதாசிவம்! சதாசிவம்! கதவைத் திற, சீக்கிரம் கதவைத் திற'' என்று அதட்டல் கேட்டது.


''பாவி வந்துட்டானே! இப்ப என்ன செய்வேன்!'' என்று சதாசிவம் அந்தப் பொருளே ஒரே அள்ளாக அள்ளி அணைத்துக் கொண்டு ''நீங்க என்ன செய்யறீங்க, அந்த ரூம்ல கொஞ்ச நேரம் போய் இருங்க. நான் அவனே அனுப்பிச்சுட்டு வந்துர்றேன்'' என்று அவர்கள் பதிலுக்குக் காத்திராமல் இருவரையும் அந்தச் சிறிய அறைக்குள் தள்ளிக் கதவைத் தாளிட்டான். (தொடரும்)

''வீட்டுக்குத் தெரியாம 'மார்னிங் ஷோ'வுக்கா போனே.. பத்து தோப்புக் கரணம் போடடா ராஸ்கல்!''


''இருபது போட்டுடுறேன் அப்பா!''

''ஏண்டா?''


''ஈவினிங் ஷோவுக்கும் டிக்கட் வாங்கி வச்சிருக்கேம்பா!''



- கிரிஜா மணாளன்


உன் உடம்பு தான் தடையா இருக்கு!
ரேகன்.
ரஷ்யா
உங்களோட நடிக்கணும்னு ஆசையா இருக்கு!
SUMMIT PRODUCTIO
ஆப்கனில் ஆக்கிரமிப்பு


மத்திய அரசு
15% லெவி
பத்திரிகைகள்


இதோபார்! உன் பாரத்தைக் குறைச்சுட்டேன்! இனிமே உன் பாடு ஜாலி தான்!
ரயில்வே பட்ஜெட்
சலுகைகள்

11. மற்றொரு சிக்கல்!

அவசரத்துக்கு அனுப்பப்பட்ட அறை இருட்டாக இருந்தது. மேலேயிருந்து ஒரே ஒரு கண்ணாடி ஓடு தயவு செய்ததில் கிடைத்த வெளிச்சத்தில் வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் சுற்றிலும் பார்த்தான். பிற்பகலில் பாதி ராத்திரி. இருந்தும் சில பொருட்களின் வடிவங்கள் தெரிந்தன. பழங்காலத்து மர பீரோ, அதனருகில் ரிட்டையரான கட்டில், கட்டிலின் மேல் கட்டிலுக்குச் சம்பந்தமில்லாத சாமான்கள். உதாரணமாகப் புத்தகங்கள், சோப்பு டப்பா, காய்ந்த மாலை, மோட்டாரின் உதிரி பாகங்கள்; இப்படி.

கட்டிலுக்கு அருகே இருட்டு விளிம்பில் ஒரு மகத்தான இரும்புப் பெட்டி தெரிந்தது.

''என்ன பாஸ்?''

''வெளியே அந்தாளு பேசறது கேக்கறதா பாரு.''

வஸந்த் காதைத் தீட்டிக்கொண்டு கதவின் மேல் வைத்துக் கேட்டான்.

''ராத்திரிக்குள்ள வந்து வாங்கிட்டுப் போறதாச் சொன்னாங்க. அவங்களுக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கேன்.''

''பத்திரமா வெச்சிருக்கல்ல?''

ரொம்பப் பத்திரமா.''

''பிரிச்சும் பாத்தியா?''

''நான் ஏங்க பிரிக்கிறேன்? நான் ஒரு போஸ்ட் ஆபீஸ் மாதிரிதானே! ஹி! ஹி!''

''சிரிக்காதே. நல்லால்லே.''

''என்னடா பேசறாங்க?''

''அந்தப் பார்சலைப் பத்தித்தான் பாஸ். சதாசிவம் பிஸியா பொய் சொல்லிக்கிட்டிருக்காரு.''

''என்னவாம்?''

''பிரிக்கவே இல்லையாம்.''

''அது என்ன பாத்தியா வஸந்த்?''

''புதுக் கவிதை மாதிரி ஒரு வடிவமற்ற சமாசாரம் பாஸ்.''

''அவன் அதைத் தூக்கறபோது கொஞ்சம் கஷ்டப்பட்டான்.''

''கவனிச்சேன் பாஸ்! என்ன கொஞ்ச நாழியா சந்தடியே இல்லை? ஆசாமி நம்மை வெச்சுப் பூட்டிட்டுக் காப்பி சாப்பிடப் போய்ட்டானா?''

''திறந்து பாரு!''

வஸந்த் கதவை முயன்று பார்த்தான், ''வெளியே தாப்பாப் போட்டிருக்கு பாஸ்.''

''வெளியே சந்தடி ஏதாவது?''

''இல்லை.''

''அப்ப உலுக்கிப் பாரு,''

வஸந்துக்குக் கதவை உலுக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் திறக்கப் பட்டது.

''என்னங்க அடைச்சு வச்சுட்டுக் காணும போய்ட்டீங்க.''

''மன்னிச்சுக்குங்க. கொஞ்சம் நெருக்கடியாய்டுச்சு. அந்த ஆசாமிக்கு நீங்க இங்க வந்தது தெரியக் கூடாது.''

''அந்தாளு யாரு?''

''தெரியாது போலக் கேக்கறீங்க! அவனும் உங்களை மாதிரி விசாரிக்க வந்த ஆளு தான்.''

''அப்படியா? இப்ப நீங்க பொருளைக் காட்டறிங்களா?''

''நீங்க விலையைச் சொல்லுங்க, அப்புறம் பார்க்கலாம்.''

கணேஷ் வஸந்தைப் பார்த்தான். ''எவ்வளவு கேக்கலாம் வஸந்த்?''

''பத்து கேக்கலாம்! அதுவரைக்கும்தான் பாஸ் நமக்கு அனுமதி இருக்கு!''

சதாசிவம் சிரித்து, ''பத்துக்கு விரல் கூட வராதுங்க!'' என்றான்.

''நீங்க எவ்வளவுதான் சொல்றீங்க?'' என்றான் கணேஷ்.

''மினிமம் நாப்பத்தஞ்சுக்குக் குறையாதுங்க.''

''அடேயப்பா! கட்டுப்படியாகாதுங்க! பாஸ் வாங்க போகலாம்.''

''இரு வஸந்த். ஏங்க நீங்க நாப்பத்தஞ்சு கேக்கறது இதுக்கு மட்டுமா இல்லை....''

''இதுக்குமட்டும்தான். மத்தது கிடைச்சா நான் ஏன் இங்கே சிங்கியடிச்சிக்கிட்டிருக்கேன்!''

''வாஸ்தவம்தான். ஆனா, பொருளைப் பாக்காத்ததுக்கு முன்னாடி எங்களாலே நீர்மானிக்க முடியாதுங்க. கொஞ்சம் காட்டறீங்களா?''

அவன் சற்று யோசித்ததாகப் பட்டது. ''கொஞ்சம்இருங்க பளயபடி எடுத்தாறேன்'' என்று அந்த வீட்டின் பின்புறத்துக்குச் சென்றான்.

கிடைத்த தனிமையில் வஸந்த், ''பாஸ்! அத்தரதையா கதை வசனம், நடிப்பு எதுவுமே புரியலை. ஸாம்யுவெல் பெக்கட் டிராமா போல இருக்கு'' என்றான்.

''எனக்கும் புரியலைதான் வஸந்த்! அவன் எதையோ விக்க விரும்பறான். எதை? தெரி

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா



யலே. ஆனா, ஒரு விதமா பேரம் பேசி யாரு ஜாஸ்தி ஆஃப்பர்பண்ணுறுங்களோ அவங்களுக்குத் தரதா அவசரமா பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டிருக்கான்னு தெரியுது. இவனைப் பாத்தா ஏதோ மிடில்மேன்னு தெரியுது.''

''எல்லாம் சரிதான். விக்கிற மால்என்ன?''

''ஆஸ்க் மி அனதர்.''

''வரான்.''

வந்தவன் கையில் அந்தப் பார்ஸல் இல்லே. ''காட்டறதுக்கு முன்னடி ஒரு சின்ன விஷயங்க.''

''என்ன விஷயங்க?''

''நாப்பத்தஞ்சுக்கு நீங்க சம்மதிக்கிறீங்களா?''

''அப்படித்தான் வெச்சுக்கங்களேன்.''

''அதுக்கு முன் பணமா கொஞ்சம் வெக்கறீங்களா?''

''எவ்வளவு வேணும்?''

''ஒரு பத்து பதினஞ்சு.''

''சரிதான்'' என்று வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ்: ''அவ்வளவு பணத் துக்கு நாங்க இன்னும் தயாரா வல்லிங்க.''

சதாசிவத்தின் முகம் சுருங்கியது. ''அப்ப நாப்பத்தஞ்சு எப்படிப் புரட்டப்போறிங்க?''

''உங்களுக்கு எப்பத்துக்குள்ளப் பணம் வேணும்?''

''சாயங்காலம் நாலு மணிக்குள்ள வேணும். அதுக்கப்புறம் பொருள் கை மாறிடுது.''

''சாயங்காலத்துக்குள்ள ஏற்பாடு பண்ணிடறேம். பொருளைக் கொஞ்சம் காட்டிடுங்களேன்.''

''இல்லிங்க. முன் பண உத்திரவாதம் இல்லாமக் காட்டறதில்லிங்க.''

''அப்ப எங்க மேலே நம்பிக்கை இல்லிங்களா?''



அன்பார்ந்த வாசகர்களுக்கு,

பத்திரிகை அச்சாவதற்கு இறக்குமதி செய்யப்படும் நியூஸ்பிரிண்ட் காகிதத்தின் விலை கடந்த பதினைந்து மாதங்களில் 12 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்து விட்டது. பத்திரிகைத் தொழிலுக்கு அத்தியாவசியமான இதர மூலப் பொருள்களின் விலையும் கடந்த பல மாதங்களில் அபரிமிதமாக உயர்ந்து விட்டது. தொழிலாளர்களுக்கான ஊதியமும் சமீபத்திய பாலேகர் சிபாரிசுப்படி கணிசமாக உயர்ந்துவிட்டது. இவ்வளவும் போதாது என்று இறக்குமதி செய்யப்படும் நியூஸ்பிரிண்ட் காகிதத்தின் மீது 15 சதவிகிதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் விளைவாக ஏற்படும் அதிகப்படி செலவையோ, நஷ்டத்தையோ தாங்கிக் கொள்ளும் சக்தி நமது ஸ்தாபனத்துக்கு இல்லை. எனவே மிகுந்த மன வருத்தத்துடன் வருகிற 22-3-1981 இதழிலிருந்து கல்கி பத்திரிகையின் விலையை ரூ. 1-20 ஆக உயர்த்தியுள்ளோம். தயவு செய்து இந்த விலை உயர்வைப் பொருட்படுத்தாமல் உங்கள் அபிமான கல்கி பத்திரிகைக்கும், அதன் விற்பனை வளர்ச்சிக்கும் உங்கள் நல்லாதரவைத் தொடர்ந்து அளித்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர், கல்கி

''இல்லிங்க. பச்சை நோட்டைப் பார்த்தாத்தான் நம்பிக்கை வரும். ஏற்கனவே ஒரு கொலை விளுந்து போச்சு! நீங்க போங்க. முளுப் பணமும் கொண்டு வாங்க. அப்புறம் நல்லாப் பாத்துக்கங்க.''

''அப்ப காட்ட மாட்டிங்க.''

''ம்ஹூம்.''

''சரி, வா வஸந்த் போகலாம்.''

இருவரும் வெளியே வந்தபோது தெருவில் சூரியச் சரிவின் நிழல்கள் நீளத் துவங்கியிருந்தன. கணேஷ் அவனிடம் விடைபெறும்போது ''இன்னும் ஒரு மணி நேரத்தில் வரோங்க. வீட்டில இருப்பீங்க இல்ல?'' என்றான்.

''தாராளமா! நான் எங்கேயும் போறதில்லே.''

காரில் வஸந்த், ''ஏம் பாஸ் நேரா போலீஸுக்குப் போய், 'இந்த வீட்டில நிழலா ஏதோ வியாபாரம் நடக்குது'ன்னு சொல்லி ரெய்டு பண்ணச் சொல்லிட்டா என்ன?'' என்று கேட்டான்.

''இல்லே வஸந்த்! ஆளு உஷாராயிடுவான். அவங்க என்ன விக்கிறாங்கன்னு முதல்லே தெரிஞ்சுக்கணும்.''

''எப்படி?''

''நாம மறுபடி அங்க போகணும்.''

''நாப்பத்தாஞ்சாயிரம் ரூபாயோடயா? என்ன விளையாடறீங்களா?''

''இல்லே, பணம் இல்லாம!''

''புரியலே.''

''வஸந்த்! இந்த மாதிரி பழைய வீடுகள் எல்லாம் பின் பக்கம் சுவர் அதிக உயரமா இருக்காது இல்ல?''

''இப்பப் புரியுது. பின்பக்கமா சந்து வழியாப் போயி சுவரேறிக் குதிச்சு உள்ளே போய்... அப்புறம் என்ன?''

''அங்க ஏதாவது மாட்டுக் கொட்டகையில் மறைஞ்சிருந்து...''

''பட்டப் பகல்லயா? யாராவது பார்த்தா முட்டியைப் பேத்துடுவாங்க.''

''பாக்காம உன்னால இதைச் செய்ய முடியும்.''

''வெய்ட் எ மினிட்! உன்னாலன்னு? நீங்க கழண்டுக்கறிங்களா?''

''ஆமாம், நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஸ்டேட்மெண்ட் கொடுக்கறேன். இன்ஸ்பெக்டர் காத்துக்கிட்டிருப்பாரு. நீ என்ன பண்றே...''

''முடியாது பாஸ்! மாட்டுத் தொட்டியெல்லாம் சுவரேறிக் குதிக்க முடியாது. இந்தக் கள்ள பார்ட் வேலையெல்லாம் நம் கைல ஆவறதில்ல.''

''நான் சொல்றதை முழுக்கக் கேளு. நீ ஒண்ணும் பெரிசா ஏதும் செய்ய வேண்டாம். பின் பக்கமாப் போய்ப் பாரு. சந்து வழியா மேலேயும் கீழேயும் நட. யாரும் பார்க்காம ஏதாவது சான்ஸ் கிடைச்சுதுன்னு ட்ரை பண்ணிப் பாரு. இல்லே என்னால முடியலேன்னு திரும்பி வந்துடு. உன் பலம் உனக்குத் தெரியாதுடா!''

''அய்யோ உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. பேசாம மெட்ரூஸ்ல இந்நேரம் ஒரு பீர் சாப்ட்டுண்டு இருப்பேன். அதுக்குப்பதிலா இங்கவந்து, சாணி மாட்டையெல்லாம்.....''

''ஜஸ்ட் ட்ரை மேன்! ஏதாவது ஆபத்துன்னு ஓடி வந்துடு.''

வஸந்த் முனகிக் கொண்டே தெரு முனையில் இறங்கிக் கொண்டான்.

பெட்டிக் கடையில் ஒரு வில்ஸ் ஃபில்டர் பற்ற வைத்துக் கொண்டான். கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த ஒரு பாவாடை தாவணியை அதன் பின்னல் ஆடுவதை முக்கு திரும்பும்வரை கவனித்தான். சிகரெட்டை மிதித்துவிட்டு நடந்தான். ஏரோப்ளேன் பாண்டியைக் கடந்தான். ''அம்மா பால்'' லைக் கடந்தான். குறுக்கே ஓடின சிறுர்களைத் தவிர்த்துத் தெரு முனைக்கு வந்தான். பலமாக யோசித்தான்.

கணேஷுக்கு வேண்டியது என்ன? அந்தக் காகிதப் பார்சலில் என்ன வைத்திருக்கிறான்? அந்தச் சதாசிவம் என்ன விற்கிறான்? அந்தத் தகவல்தானே? அதைக் கண்டுபிடிக்க எதற்குச் சுவரேறிக் குதிக்க வேண்டும்? வேறு வழி இல்லையா? யோசி வஸந்த்!

ஆ! இப்படிச் செய்தால் என்ன?

டேய் வஸந்த்! என்ன மூளைடா உனக்கு! இந்த சிம்பிள் ஐடியா அப்பவே தெரியாமப் போச்சே! ப்ரில்லியண்ட்! சின்ன வயசில சாப்பிட்ட காட் லிவர் ஆயில் எல்லாம் இப்பத்தான் வேலை செய்யுது!

வஸந்த் தீர்மானித்து நேராக அந்த சதாசிவத்தின் வீட்டை நோக்கி நடந்தான். முன்


கல்கி ஏப்ரல் 5'
கோடை சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்
ஸ்ரீவேணுகோபாலன் எழுதும்
சரித்திரத் தொடர்கதை—
சுவர்ண முகி
செம்பியன் அளிக்கும் முழு நீள நாவல் *

புறமாகத்தான்! மறுபடி அங்கே சென்று கதவைத் தட்டினன். பதில் இல்லை.

சற்று அழுத்தமாகத் தட்டி, ''சதாசிவம்! சதாசிவம்!'' என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை. ஆசாமி கொல்லைப் பக்கம் போயிருக்கானு என்ன! ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். உள்ளே நிசப்தமாக இருந்தது. ஏதோ நகர்த்தப்படும் சப்தம் கேட்டது.

''சதாசிவம்!''

ம்ஹூம்.

என்னடாது! கொல்லைப் பக்கம்தான் போயிருப்பான். கதவைச் சற்றுப் பலமாகத் தட்டலாம்.

தட்டினன். அந்த மரக் கதவு முனகலுடன் திறந்து கொண்டது. உள்ளே அடியெடுத்து வைத்தான். வஸந்தின் நடு முதுகில் குறுகுறு வென்று பூரான் ஓடியது போல் உணர்ந்தான்.

''ஹலோ! சதாசிவம்! எங்க இருக்கீங்க? வாசக் கதவைத் திறந்து வெச்சிட்டு எங்க போயிட்டீங்க?''

வஸந்த் தயக்கத்துடன் உள்ளே நடந்தான். பின்கட்டில் ஏதோ சப்தம் கேட்டது. சரிதான் அங்கேதான் இருக்கான் போலிருக்கிறது. என்ன செய்யலாம்? காத்திருக்கலாம். வந்துவிடுவான். வரட்டும், வரட்டும். வந்தவுடன் என்ன சொல்லலாம்? ''என்னங்க பணம் கொண்டு வந்தீங்களான்னு கேட்பான். ''ஓ! கொண்டு வந்திருக்கேனே'' ''எடுங்க'' ''நீங்க பொருளைக் கொண்டு வந்து மேசை மேலே வைங்க, நான் பணத்தைக் காட்டறேன். நீங்க பொருளைக் காட்டுங்க'' அவன் அதைக் கொண்டு வந்து மேசை மேலே வைப்பான். பைக்குள்ளிருந்து பணத்தை எடுப்பதுபோல் பாவித்து, சரேல் என்று சற்றும் எதிர்பாராத விதமாக 'சுடான் சுக்கி' கராத்தே வெட்டு. சதாசிவம் தன் தாயாரைக் கூப்பிட்டுவிட்டு அப்படியே குப்பையாக 'கரபூம்' என்று விழுந்து விடுவான். உடனே பார்சலைப் பிரித்து அதற்குள் என்ன இருக்கிறது என்று... என்னது! பிரம்ம கவசமாக இருக்கிறதே! ஆளையே காணுமே. வஸந்த் சுற்றிலும் பார்த்தான். இரண்டு கை நீட்டின சாய்வு நாற்காலி, மீன் எம்ப்ராய்டரிபோட்டு மூடப்பட்டரேடியோ, அனுவசிய டெலிவிஷன் ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரின் காலாவதியான காலண்டர், கண்ணாடி பீரோ, தரையில் ஒரு செருப்பு, ஒரே ஒரு செருப்பு! வஸந்த் இப்போது கீழே தண்ணீர் கசிவதைப் பார்த்தான். ஓரத்தில் பானை உருண்டு கிடந்ததையும், அதிலிருந்து இன்னும் சொட் சொட்டையும் பார்த்தான். கண்ணாடி தம்ளர் உடைந்து சிதறி இருந்ததைப் பார்த்தான்.

''சதாசிவம்'' என்று மறுபடியும் கூப்பிட்டுப் பார்த்தான். பதில் கிடைக்காமல் மெல்ல வீட்டின் பிற்பகுதிக்குச் சென்றான். ''யாரும் இல்லையா?'' ''யாரும் இல்லையா''

ணங் என்று நெற்றியில் இடித்தது நிலைப்படி. தேய்த்துக் கொண்டு குனிந்து கொண்டு நடந்தான். கிணறு தெரிந்தது. பின்கட்டின் வெட்டவெளி தெரிந்தது. மரத் தொட்டி. சந்துக்குச் செல்லும் கதவு திறந்திருந்தது. அதன் வாசலில் பாதியாகக் கால் தெரிந்தது. வஸந்த் திடுக்கிட்டான். சதாசிவத்தின் வேட்டி தனியாகக் கிடக்க, பட்டை பட்டை டிராயரில் படுத்திருந்த மாதிரி, பாதி உள்ளே — பாதி வெளியே அவன் கிடந்தான்.

வஸந்த் ஓடிப்போய் அவனருகில் சென்று குனிந்து ''ஓ மை காட்!'' என்றான்.

சதாசிவத்தின் கடைவாயின் ஓரத்தில் புதிய ரத்தம் இன்னும் சிந்திக்கொண்டிருந்தது. வாய் திறந்திருந்தது. ''அட பாவி! ஆள் அவுட்டா?'' வஸந்த் அவன் கையைத் தூக்கி பல்ஸ் பிடித்துப் பார்த்தான். இருப்பதாகத் தெரியவில்லை. மார்பில் காது வைத்துப் பார்த்தான். ஒரு மைல் தூரத்தில் இதயம் கேட்டது. ''அய்யய்யோ! இப்ப என்ன செய்வேன்'' சதாசிவத்தின் முகம் முழுதும் வீங்கியிருந்தது. அங்கங்கே கன்னிப் போயிருந்தது. பல்லோ ஏதோ எகிறிப்போயிருக்க வேண்டும். ரத்தத்தின் வெற்றிலை பாக்குப் போட்டாற் போல இன்னும் சிந்திக் கொண்டிருந்தான். ''சதாசிவம் யோவ்! சதாசிவம் என்னய்யா ஆச்சு உனக்கு? போய்ட்டியா?'' பதில் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. தூக்கலாமா! என்ன எழவுடா இது, சரியான சமயம் பார்த்து பாஸ் கழண்டுட்டார். நம்ம கைல பாடியை ஒப்படைச்சுட்டு என்ன இது! இந்தக் கேஸை ஆரம்பிச்சதிலிருந்தே மூலைக்கு மூலை.... இது என்ன? கீழே ஏதோ கறுப்பாக இருந்தது. எடுத்துப் பார்த்தான். இன்ச் அகலத்துக்குப் பாசி பிடித்தாற் போல் கரும் பச்சையாக... என்ன என்று பார்க்க நேரமில்லை. பைக்குள் போட்டுக் கொண்டான்.

வெளியே ஓடிவந்தான். கிரஸின் கைவண்டிக்குப் பின் சிலர் துரத்திக் கொண்டிருந்தார்கள். ''யோவ்! வாங்கய்யா! வாங்கய்யா ஆளு அடிபட்டிருக்காரு.''

''எங்க எங்க?''

அவர்களில் சிலரைச் சேகரித்துக் கொண்டு உள்ளே ஓடினன் வஸந்த். (தொடரும்)

ஜோசியர்: பொருத்தம் பாருங்கோன்னு கொடுத்தீங்களே! ரெண்டுமே பொம்பிளைங்க ஜாதகமா இருக்கே!

வந்தவர்: கரெக்ட்! ஒண்ணு என் பெண்ணோடது இன்னொண்ணு அவ வருங்கால மாமியாரோடது. சண்டை, சச்சரவு இல்லாம இருக்குமா பாருங்க...!

வெ. சிதாராமன்



மதுராந்தகத்தில் ஒரு மரணம்

கொலையா? தற்கொலையா? — சத்தியம் பண்ண நாம் தயாராயில்லை.

குற்றவாளிகள் யாரோ? சுட்டிக்காட்ட நாம் விரும்பவில்லை.

ஆனால் ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது: மதுராந்தகத்தில் பரிதாபத்துக்குரிய முறையில் மடிந்தது, ஹரிஜனப் பெண் ஞானசுந்தரி மட்டுமல்ல. அவளுடைய துயர முடிவுடன் சேர்ந்து வேறுபல மரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

தமிழ்த் திருநாட்டில் மனிதாபிமானம் மடிந்துவிட்டது. பெண்களைத் தாயாகவும் தெய்வமாகவும் போற்றும் பண்பு கொலையுண்டுவிட்டது.

நல்லொழுக்கம் தற்கொலை செய்துகொண்டு விட்டது.

சத்தியம் செத்தொழிந்து விட்டது.

ஹரிஜன் என்று காந்தியடிகள் எந்த நோக்கில் பெயர் வைத்தாரோ அந்த உன்னதமான அர்த்தத்தை அழித்து ஒழித்தாகிவிட்டது.

இடுகாட்டில் ஞானசுந்தரியின் உடல் எரியூட்டப்பட்ட போது மேற்சொன்னவற்றுக்கும் அந்திமக் கிரியைகள் செய்தாகி விட்டது.

தமிழன்னை வெட்கித் தலைகுனிந்திருக்கிறாள். அவளுக்கு ஏற்பட்டுள்ள துயர் ஆண்டுகள் பலவானாலும் துடைக்கப்பட முடியாது.

தமிழக அரசியலுக்குப் பெரிய களங்கம் உண்டாகிவிட்டது. என்னதான் பூசி மழுப்பினாலும் வெள்ளையடித்துப் பார்த்தாலும் கறை நீங்காது.

இறையுணர்வும் தார்மீக உணர்வும் இல்லாத அரசியல், அச்சத்தை விரட்டி ஆணவத்தை வளர்க்கும். அரக்கத் தன்மைக்கு அடிகோலும். அதற்கு ஒரு நிரூபணமே ஞானசுந்தரியின் மரணம்.

ஜாதிச் சண்டைகள், கோஷ்டிப் பூசல்கள், அரசியல் கட்சி மோதல்கள் போன்ற அநாகரிகங்களையெல்லாம் நாம் வெறுத்தாலும் கூட, ஆய்ந்து பார்க்கும் போது நம்மால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது.

ஆயின் ஓர் அபலைப் பெண் ஒரு மக்கள் பிரதிநிதியின் — எம். எல். ஏ யின்— காரியாலயத்தில் தூக்கிலே தொங்குவதை எப்படி சகிப்பது?

அதையொட்டி நடக்கும் அரசியல் வாதப் பிரதிவாதங்களை, பரஸ்பர குற்றச்சாட்டுக்களை, ஒத்திகை பார்த்து, திட்டமிட்டு நடத்தும் நாடகங்களை எப்படி ஜீரணிப்பது?

சேச்சே! தமிழகமே உன் தலையெழுத்து இப்படியா ஆக வேண்டும்?

''என்னை இப்போதாவது நம்புங்கள்'' என்று சுவரில் எழுதியது ஞானசுந்தரிதானா? அல்லது வேறு யாரோவா? — நமக்குத் தெரியாது. எதை நம்ப வேண்டும் என்று அந்தச் சுவர் வாசகம் கோருகிறது? — நாம் அனுமானிக்கத் தயாராயில்லை.

ஆனால் வேறு சிலவற்றை நிச்சயமாய் நம்புகிறோம்.

ஞானசுந்தரி அரிஜனப் பெண் — நம்புகிறோம்.

வயது பதினாறு, இளவயது மங்கை — நம்புகிறோம்.

அவள் ஏழுமாத கர்ப்பமாக இருந்தாள் — நம்புகிறோம்.

வேலை தேடி அலைந்தாள் — நம்புகிறோம்.

அதற்காக அ.தி.மு.க. எம். எல். ஏ. யின் உதவியாளரை அணுகினாள் — நம்புகிறோம்.

இப்போது ஓர் அபலையின் மரணத்தில் அரசியல் ஆதாயம் தேடப் படுகிறது — நம்புகிறோம்.

எத்தனை மரணங்களை மேலே நாம் பட்டியல் போட்டுத் தந்திருந்த போதிலும் சட்டமும் நீதியும் தமிழகத்தில் இன்னும் செத்து விடவில்லை - நம்புகிறோம்.

உண்மைகள் வெளிப்படும் என்றும் குற்றவாளிகள் யாரானாலும் தப்ப மாட்டார்கள் என்றும் தண்டனை பெறுவார்கள் என்றும் நம்புகிறோம்.

முதலமைச்சர் எதையும் மூடி மழுப்ப அனுமதிக்கமாட்டார் என்று நம்புகிறோம்.

நம்பிக் காத்திருக்கிறோம். நாம் மட்டுமல்ல. ஞானசுந்தரியைப் பெற்றெடுத்து இன்று துயரக்கடலில் மூழ்கியுள்ள அவள் தாயாரும்தான்.

1981 மார்ச் 22

ரௌத்திரி பங்குனி 9

மலர் : 39 இதழ் : 34



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

12. அடித்தவர்யாரோ?

"என்னங்க? மறுபடி கொண்டு வந்துட்டிங்களா? ஆளு பொளேச்சுட்டானு!"

"இல்லே டாக்டர்! இது வேறே கேஸு!"

"அட! என்ன ஆயிட்டிருக்கு இந்த ஊர்ல? ஒரு நாள்ள ரெண்டு கொலேயா?"

"டாக்டர் இந்த ஆள் பொழைக்க சான்ஸ் இருக்குன்னு நினேக்கிறேன் தயவு செஞ்சு சீக்கிரம் ஏதாவது சிகிச்சை பண்ணிங்கன்னு!"

"நான் என்னுல முடிஞ்சதைச் செய்யறேன் மிஸ்டர்! எனக்கு இருக்கிற வசதிகளே வெச்சுக்கிட்டு இதபாருங்க ஸாவ்லான் இன்டெண்ட் பண்ணி மூணு மாசம் ஆச்சு!"

"ஆமாங்க. இந்த மாதிரி வசதி குறைஞ்ச இடங்களில் வேலே செய்யறது ரொம்பக் கஷ்டந்தான் டாக்டர். உங்க மாதிரி ஆளுங்கதான் நிஜமாவே சமூக சேவை செய்யறீங்க."

பேசிக் கொண்டே சதாசிவத்தின் காயங்களேக் கவனித்து டாக்டர் ஒவ்வொன்ருகத் துடைத்துக் கொண்டே வந்தார்.

"மண்டைல பலமா நெத்தியிருக்காங்க. அதான் மயக்கத்தில இருக்கார். கொஞ்ச நேரத்தில மயக்கம் தெளிஞ்சுடுவார். ச்ச்ச் அடாடாடா என்னமா அடிச்சுப் போட்டிருக்காங்க. யார்யா இப்படி அடிச்சுது?"

இன்ஸ்பெக்டர் "அது தெரிஞ்சாத்தான் பரவாயில்லேயே" என்று வஸந்தைப் பார்த்தார்.

"என்ன என்னேப் பாக்கறீங்க. நான்தான் நடந்தது பூரா சொல்லிட்டேனே."

"அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இருக்கும்னு நினேக்கிறீங்களா?"

கணேஷ் யோசனேயில் இருந்தான்.

"பாஸ் உங்களேத்தான் கேக்கருர் ஸார்."

"என்ன?"

"காலேல கத்திக்குத்து, சாயங்காலம் கையடி. இந்தக் கிராமத்தில ஒரு வருசத்துக்கு உண்டான குத்தங்கள் ஒரு நாள்ள நடந்து போச்சு. இதான் கடைசியா? இன்னும் பாக்கியிருக்கா?"

"தெரியலிங்க. அந்தாள் பிழைச்சுடுவாரு, அவருக்கு மயக்கம் தெளிஞ்சதும் கேட்டுப் பாக்கலாம்" வஸந்த் ஒரு சிந்தனே சிகரெட் பற்ற வைத்துக் கொள்ள கணேஷுடன் வெளியே வந்தான்.

"என்ன பாஸ்? பேசவே இல்லே!"

"நீதான் பேசணும், நீதானே பாத்தே எல்லாத்தையும்!"

"நான் பாத்தது அடிதடி முடிஞ்சதுக்கப் புறம் பாஸ்."

"நான் சொன்ன மாதிரி புறக்கடைப் பக்கமா போய் எட்டிப் பாத்திருந்தா அடிச்ச பார்ட்டி யாருன்னு தெரிஞ்சிருக்கும், இந்நேரத்துக்கு. நீயா ப்ளானே மாத்தி..."

"போறது விடுங்கோ!"

"அந்தபார்ஸல்என்னஆச்சு?"

"எனக்கென்னவோ அது இப்ப சதாசிவத்தின் வீட்டில் இருக்காதுன்னு தோணுது. ஊனங்ள் அந்த பார்ஸலுக்குத்தான் இந்த அலே அலேயுதுன்னு நினேக்கிறேன்."



''எதுக்கும் இன்ஸ்பெக்டரை வெச்சுக் கிட்டு அந்த வீட்டை ஒரு தடவை துப்புரவா தேடிடலாம், இந்த ஆள் மயக்கம் தெளிஞ்சு வந்தா கொஞ்சம் பேசுவான்?''

''அதுக்குள்ள போன கேஸ் மாதிரி பிராணனே விட்டுறப் போறுன்?''

''இல்லே வஸந்த்! இது போகாது. காயங்கள்ளாம் பாத்த இல்ல? எல்லாம் ஸூப்பர் ஃபிஷியல். கொஞ்சம் முகம் வீங்கியிருக்கு. இந்த சதாசிவத்தை அவங்க கொல்ல உத்தேசிக்கலே. அவன் செஞ்ச ஏதோ ஒரு காரியத்துக்குத்தண்டனே கொடுக்க நாலுதட்டு தட்டி இருக்காங்க.''

''தண்டனே நம்மோட வியாபாரம் பேசினதுக்காக இருக்குமோ?''

''இருக்கலாம். அவன்கிட்ட கொஞ்ச நேரத்துக்குத் தற்காலிகமா ஒப்படைக்கப்பட்ட பொருளே அவன் விக்க முயற்சி பண்ணியிருக்கலாம். அது அவங்களுக்குத் தெரிஞ்சு போய்...''

''அவங்கங்கறது யாரு?''

''அவங்க! அவ்வளவுதான்! ஒட்டு மொத்தமாத்தான் சொல்ல முடியுமே தவிர எத்தனே பேர் இருக்கா, எத்தனே கோஷ்டி அதில ஒண்ணும் சொல்ல முடியாது.''

''பொருள் என்னன்னும் சொல்ல முடியாது.''

''ம்ஹூம்!''

''பாஸ் இதைப் பாருங்க'' வஸந்த் தன் பையிலிருந்து சதாசிவத்தின் வீட்டில் பொறுக்கிய அந்தப் பொருளேக் காட்டினுன்.

''என்ன இது!''

''சதாசிவம் கிடந்தாரில்லே? அவர் கிட்ட இந்தத் துண்டு கிடந்தது. இதில இருந்து ஏதாவது தெரியறதான்னு பாக்கலாம்னு பொறுக்கிட்டு வந்தேன்.''

கணேஷ் அதை உரசி, தேய்த்துப் பார்த்தான். மூக்கில் வைத்துப் பார்த்தான்.

''நார்த்தங்கா வாசனே அடிக்குது. கூடவே ஒரு கெமிக்கல் ஸ்மெல்! வரப்ப நானும் மூந்து பாத்துட்டேன்''என்று வஸந்த் சொன்னதைக் கவனிக்காமல்கணேஷ் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

''என்னன்னு கண்டு பிடிக்க முடியலே. பார்க்கலாம் அது எதில இருந்து வந்த துண்டுன்னு நினேக்கிறே?''

''அந்த பார்ஸலிலிருந்துதான் வந்திருக்கணும்னு நினேக்கிறேன்.''

''எப்படி?''

''ஏதோ பட்சி சொல்லுது, இட்சிணி!''

''அந்த பார்ஸல்! அந்தப் பார்ஸல்! அதுல தான் வஸந்த் இருக்கு சூட்சுமம்.''

''வீடு காலியாத்தான் இருக்கும். ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடவா?''

''வேண்டாம். போலீஸ் ஏற்கனவே நம்மைச் சந்தேகப்படறுங்க. அந்த இன்ஸ்பெக்டர் நம்மைப் பாக்கற பார்வையே சரியா இல்லே.''

''நம்மை எதுக்காகச் சந்தேகப்படணும்?''

''நாம ரெண்டு பேரும் ஊருக்குள்ள வந்தப்புறம்தானே எல்லா திடுக்கிடும் சம்பவங்களும் நடந்திருக்கு. இந்தத் துண்டை மெட்ருஸில ஃப்ரெண்ட்ஸ் கிட்டக் குடுத்துப் பரிசோதனே பண்ணிப் பார்த்துடலாம்.



ஏதோ மெட்டாலிக்காத்தான் எனக்குத் தெரியுது.''

''ஒரு சிலையோட பகுதியோ? பாஸ் இப்படி இருக்கலாமில்லையா? அவங்க தேட றது ஒரு விலை உயர்ந்த சிலையை! அது இது நாள்வரை ராஜ ராஜன் கிணத்துலநாத்தத் தோட நாத்தமா உள்ளே கிடந்திருக்கு. இந்த விவரம் சரித்திரக் குறிப்புக்கள் மூலமா அவங்களுக்குத் தெரிய வந்து இங்க வந்து அதைத் தோண்டி எடுத்துட்டாங்க. சதா சிவத்துங்கிட்ட டெம்பரரியா கொடுத்து வெச்சிருக்காங்க. அந்த ஆள் என்னடான்னு சந்தடி சாக்கில அதை நம்ம கிட்ட விக்கப் பாத்திருக்கான். அது தெரிஞ்சு அவனே அடிச்சுப் போட்டுச் சிலையைப் பிடுங்கிண்டு போய்...''

''வர வர சுஜாதா கதை நிறையப் படிக்க ஆரம்பிச்சுட்டியா?''

''ஏன் பாஸ், இந்தத் தியரிக்கு என்ன?''

''கத்திக் குத்துப் பட்டவன் என்ன ஆச்சு?''

''அவன் இந்தச் சிலை கண்டு பிடிச்ச விவ ரத்தை நம்ம கிட்டச் சொல்ல வந்திருக் கலாம். அல்லது... பிரில்லியண்ட்! டேய் வஸந்த் உன் மூளையே மூளைடா!''

''என்னடா கண்டு பிடிச்சே சொல்லித் தொலை!''

''கத்திக் குத்துப் பட்டுச் செத்தானே அவன் யாரு?''

''ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் காவல் காரன். கூழமந்தல்.''

''அவன்தான் சிலையை எடுத்திருக்கிறதைப் பாத்திருக்கான்.''

''அப்படியே வெச்சுக்க.''

''அவனும் சதாசிவமும் பார்ட்னர்ஸ்! அதான் நம்ம கிட்ட சதாசிவத்தைப் போய்ப் பார்க்கச் சொல்லி யிருக்கான். அவன் எப்படியோ அந்தச் சிலையை அபேஸ் பண் ணிக்கிட்டு சதாசிவத்துக்கிட்டக் கொடுத்து வெச்சிருக்கான். ரெண்டு பேரும் வியா பாரத்தைப் பிளான் பண்ணியிருக்காங்க.''

''வஸந்த்! வஸந்த்! போட்டுக் குழப்பா தேடா.''

இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார்.

''என்ன ஸார் ஆளு கண் முழிச்சானு?''

''மூச்சு விட்டுக்கிட்டுத்தான் இருக்கான்.... ஸ்....அப்பாடா.''

''மிஸ்டர் வஸந்த்! கொஞ்சம் வாங்க.''

''இங்கதான் ஸார் இருக்கேன். என்ன வேணும்?''

''நீங்க அந்த ஆளைப் பாக்கப் போனீங் களா?''

''ஆமா.''

''எதுக்கு?''

''எதுக்கு? நல்ல கேள்வி. அது வந்து எப்படின்னு....'' வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் தயங்காமல் ''அவர் கிட்ட ஒரு விவரம் கேக்கப் போயிருந்தோம்'' என்றான்.

''என்ன விவரம்?''

''முன்னாலே கத்திக் குத்தில இறந்து போனாரே ஒரு ஆள், அதான் அந்தக் கூழ மந்தல் ஆசாமி, அவர் எங்கிட்ட காலைல வந்தபோது சதாசிவம்னு ஒராளைப் பார்க்கச் சொன்னான்.''

''அப்படியா? அதை ஏன் என்கிட்டச் சொல்லலை?''

''சொல்றதுக்குச் சந்தர்ப்பம் வரலை. நீங்க கொஞ்சம் பிஸியா இருந்திங்க. சந்தர்ப்பம் கிடைக்கிறபோது சொல்ல லாம்னு நெனைச்சுக்கிட்டிருந்தோம்.''

''இப்பத்தான் சந்தர்ப்பம் வந்ததாக்கும்'' என்றார் கொஞ்சம் அதட்டலாக.

''ஆமாம்.''

''அதாவது, நீங்களா, சொந்த முயற்சியா துப்புத் துலக்கப் பார்த்திருக்கீங்க.''

''அப்படி இல்லீங்க. அந்தாளு என்னவோ சொல்ல வந்தான். அதை...''

''இதெல்லாம் நல்லால்ல. போலீஸ் எதுக்கு இருக்கோம்? நீங்க ரெண்டு பேரும் லாயரா?''

''ஆமாங்க.''

நடமாடும் திராவிடம்!



மேலட்டையில்...

குமாரி கலாரஞ்சனி. 'கலகல' ரஞ்சனி என்றழைக்கப்பட வேண்டியவர். காரணம் தீந்தமிழும், சுந்தரத் தெலுங்கும், தெவிட் டாத ஆங்கிலமும், களிமிகு கன்னடமும், கவின் மிகு மலையாளமும் இவர் நாவில் நடம் புரிகின்றன. சுருங்கக் கூறினல் இவர் நட மாடும் திராவிடம். சில திரைப் படங்களில் குழந்தை நட்சத்திரமாகத் தோன்றியிருக்கும் இவர் இப்போது நடிப்பை விடுத்து, படிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். பள்ளி இறுதி வகுப்பை இன்னும் சில திங்களில் முடிக்க விருக்கும் இவரிடம், ''கலை ஆர்வம் மிக்க நீங்கள் கல்வி ஆர்வம் கொண்டது எப்படி?'' என்று வினவியபோது ''நடிப்பு என்பது அழகை மட்டுமின்றி அறிவையும் சார்ந்தே அமையும்'' என இவர் தெலுங்கில் கூறியதன் பொருள் உடனே புரியவில்லை. எனினும், இவருக்காகக் காத்திருக்கும் எதிர்காலம் நமக்குப் புரிந்தது.

பேட்டி : யெம்ജி

வண்ணப்படம் : மேகலா


ஸ்ரீவேணுகோபாலன்
எழுதும்
சுவர்ணமுகி
சரித்திரத் தொடர்கதை
கல்கி
ஏப்ரல் 5
அதிக பக்கங்கள்

''சட்டம் படிச்சவங்களே இப்படிச் செய்ய லாமா?''

''என்ன செஞ்சோம்?'' என்ருன் வஸந்த்.

''இந்த மாதிரி ஒரு ஆளு அடிபட்டிருக் கான், அவனைப் போய் நீங்க பாத்திங்கன்னு சொல்றீங்க. யாருக்குத் தெரியும் அந்த ஆளை நீங்களே அடிச்சுப் போட்டுருக்கீங் களோ என்னவோ?''

''நல்லா ஜோக் அடிக்கறிங்க.''

''அடப் போய்யா! உங்ககூட ஜோக் அடிக்கறதுக்குத்தான் எனக்கு வேலை குடுத்து, சம்பளம் குடுத்து வெச்சிருக்காங்க.''

''இல்லை இன்ஸ்பெக்டர், எவனுவது புத்தி ஸ்வாதீனம் இருக்கிறவன் ஒரு ஆளை அடிச் சுப் போட்டு உடனே அவனை வண்டி வெச்சு குண்டுக் கட்டா தூக்கிண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வருவானு?''

''இல்லிங்க. போலீஸ் கண்ணில மண் ணைத் தூவுறதுக்குச் சிலபேர் அப்படிச் செய்தாலும் செய்வாங்க.''

''பாஸ் தமாஷா இல்லை?''

''இல்லை'' என்ருன் கணேஷ். ''இன்ஸ் பெக்டர் எங்களோட போனஃபைட்ஸ் பற்றி உங்களுக்குச் சந்தேகம் இருக்கிற மாதிரித் தெரியுது. இதைத் தீக்கறதுக்குச் சுலபமா ஒரு வழி இருக்கு.''

''என்ன?''

''அந்தாளு முழிச்சுக்கிட்டப்புறம் நீங்களே அவனைக் கேட்டுக்குங்களேன்.''

''கேக்கத்தான் போறேன், மிஸ்டர் கணேஷ் கேக்கத்தான் போறேன்.''

''ரெண்டு தடவையா?''

''அவன்தான் இப்ப முக்கியமான சாட்சி. அவன் கிட்ட இருந்து அந்த ஸ்டாபிங் பத்தியும் முக்கியமான தகவலை எதிர் பார்த்துக்கிட்டு இருக்கேன். பார்க்கலாம்.''

டாக்டர் கை கழுவிக் கொண்டு வெளியே வந்தார்.

''எப்படி இருக்காரு?''

''அப்பப்பா! செம்மையா அடிச்சு மூஞ்சி வீங்கியிருக்கு. தோள் பட்டை வேறே வீங்கி இருக்கு. எனக்கென்னவோ காலர் போன்ல க்ராக் இருக்கலாம்னு தோணுது.''

''பொழைச்சுருவாரில்ல?''

''பொழைச்சுருவார். இன்னும் அரை மணியில மயக்கம் தெளிஞ்சுடும்.''

''அப்ப என்னைத் தவருமக் கூப்பிடுங்க. வேத்து ஆளுங்களை அனுமதிக்க வேண்டாம்'' என்று வஸந்தைப் பார்த்துக் கொண்டே சொன்னர். ''என்ன மிஸ்டர் வஸந்த்! உங்ககிட்ட அந்தாளு ஒண்ணுமே பேச லியா?''

''இல்லிங்க. நான் போனபோதே மயக்கத் திலதான் இருந்தாரு.''

''அந்த அடி அடிச்சிருக்கீங்க... ஐ மீன் அடிச்சிருக்காங்க.''

வஸந்த், ''பாஸ்! திஸ் இஸ் தி லிமிட்! அவரு நம்மை அனுவசியமாச் சந்தேகிக் கிருர்.'' தொடர்ந்து, ''இன்ஸ்பெக்டர் செக்ஷன் 197(1) ஸி. ஆர். பி. ஸி. படி உங்களுக்குநிறையப் புரொட்டெக்ஷன்இருக்க லாம். ஆனு செக்ஷன்...''என்று இழுத்தான்.

''வாயை மூடுடா. என்கிட்ட சட்டம் பேசறியா!''

''மூடு ? டாவா? என்னது கொஞ்சம் சட்டம் எல்லை மீறுது. இன்ஸ்பெக்டர் இவர் யார் தெரியுமா? கணேஷ்! இவர் கிராஸ் எக்ஸாமின் பண்ணி பஞ்சாப் போன போலீஸ் ஆபீஸர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? நானூத்தி நாப்பத்து நாலு.''

''வஸந்த்! ஷட் அப்! இன்ஸ்பெக்டர் இவன் கொஞ்சம் தத்துப் பித்துன்னு உளறு வான். மைண்ட் பண்ணுதீங்க.''

''அரெஸ்ட் பண்ணி உள்ளே தள்ளினு சரியாப் போயிடும்.''

''நீங்க கோவிச்சுக்காதீங்க. எதுக்கு விவ காரம்? இப்ப அந்த ஆளு கண் முழிச்ச பிற்பாடு எல்லாம் துல்லியமாத் தெரிஞ்சுடப் போடறது. எங்களோட இன்னொஸென்ஸ் நிரூபணம் ஆனப்புறம் நாங்க போருேம்.''

''எங்க போயிடுவீங்க? எங்கயும் போய் விட முடியாது.''

''நாங்க போறதுன்னு தீர்மானிச்சா உங்க தாத்தா வந்தாக்கூடத் தடுக்க முடி யாது. இட்ஸ் எ ஃப்ரீ கண்ட்ரி.''

''பத்தியா என்ன ராங்கியாப் பேசருன்!''

''வஸந்த்! இந்த இடத்தை விட்டு விலகிப் போறியா இல்லையா? என்னடா அனுவசி யத்துக்குக் கேஸை காம்ப்ளிகேட் பண்ணுதே. ஏற்கனவே நம்ம மேலே சந்தேகப்படருர்.''

''படட்டும். மடியில புள்ளை யிருந்தாத் தானே வழியில கணவனைப் பார்த்தாப் பயம்?''

''போ. ஒழி. தனியாப் போய் நில்லு.''

வஸந்த், ''அப்புறம் பார்க்கலாம் ஸார்'' என்று இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்று, ஓரத்தில் போய் சிகரெட் பற்ற வைத்தான்.

டாக்டர் வெளியே வந்து ''இன்ஸ்பெக்டர் வாங்க. அந்தாளு முழிச்சுக்கிட்டான். பேச ஆரம்பிச்சுட்டான்'' என்ருர்.

இன்ஸ்பெக்டர் குச்சி சுழற்றிக் கொண்டு உள்ளே செல்ல, கணேஷ் சற்றே கவலைப் பட்டான். மெல்ல அந்த டிஸ்பென்ஸரிக் கட்டிடத்தை அணுகினுன். வஸந்த் விரோத பாவத்துடன் மரத்தடியிலேயே நின்று கொண்டிருக்க அறைக்குள் பேசுவது தெளி வில்லாமல் கேட்டது. இன்னும் கொஞ்சம் அருகே செல்ல, மெலிதாக இருந்தாலும் ஸ்பஷ்டமாகக் குரல்கள் கேட்கத் துவங்க:

''சதாசிவம், சதாசிவம்!''

''ம்! அம்மா! வலி!''

''மருந்து போட்டிருக்கு! பயப்படாதே, உனக்கு உயிருக்கு ஆபத்தில்லை.''

''ஆபத்தில்லையே, ஆபத்தில்லையே?''

''எனக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லிடு. பாக்கியை உடம்பு சரியானப் புறம் கேட்டுக்கறேன்.''

''என்ன?'' — ஈனஸ்வரம்.

''உன்னை இப்படி அடிச்சுப் போட்டது யாரு?''

சற்று நேர மௌனம். அதன் பின் மெல்லிய குரலில், தீர்மானமாக:

''அதான் அந்த கணேஷும் வஸந்தும்!''

(தொடரும்)

திருமதி இந்திரா காந்தி, குண்டு துளைக்க முடியாத உடைஅணிந்து அந்த [illegible] போட்டுக் கொண்டார்.

ஈவ்ஸ்லிக்லி-ஜீனு

களை அனுபவிக்கின்றனர். வறுமையில் உழல் பவர்கள் தொடர்ந்து நலிகின்றனர். மனக் கசப்பு வளர்கிறது.

கொள்கை அளவில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அவசியம் என்று ஒப்புக் கொள்வோமாயினும் நடைமுறைச் சட்டங் களில் பல மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானங்களில் பயணம் செய்பவர்கள் இனி வானில் பறக்கும் போதே சூதாடலாம். சூதாட்ட காஸினோ விமானத்துக்குள்ளேயே அமைந்துள்ளது! மேன்மேலும் பயணிகளை ஈர்க்க இந்தத் திட்டம். நியூஸ் வீக் தரும் செய்தி இது.

இதற்குப் போட்டியாக ஜப்பான் ஏர் லைன்ஸ் குளியலுக்கு வென்னீர் தொட்டிகளை விமானத்துக்குள் அமைக்கலாம். கீஷா பெண்மணிகள் குளிப்பாட்டிவிடக் காத் திருப்பார்கள்!


ஏர் பிரான்ஸ் பின்தங்குமா? நைட் கிளப் நடத்தி ஸ்டிரிப் டீஸ் காட்சிகளை அரங் கேற்றும்!

ஏர் இந்தியா மகாராஜா தாம் என்ன செய்வது என்று மூளையைக் குடைந்து கொண் டிருக்க வேண்டாம். ஆர். வி. யிடம் கேட்டு கறுப்புப் பணப் பத்திரங்களை வாங்கி வைத் துக்கொண்டு விநியோகித்தால் போதும்!

கறுப்புப் பணப் பத்திரங்களை அயல் நாட்டுச் செலாவணியில் வாங்கலாம். அதா வது, டாலர், ஸ்டெர்லிங், ஃபிராங்க் போன் றவை தந்து பெறலாம். இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதே பல அமைச்சர்கள் தங்களிடம் உள்ள கறுப்புப் பணத்தை வெளுப்பாக்க உதவத்தான் என்று கருதப் படுகிறது. அதுவும் அயல் நாட்டு பேரங் களில் கமிஷனாகப் பெறப்பட்டு, ஸ்விஸ் பாங்கில் ஊறுகாய் போட்டு வைத்துள்ள கோடிக் கணக்கான டாலர் அல்லது ஸ்டெர் லிங்குகளை இந்தியாவுக்குக் கொண்டு வர பல முன்னாள், இந்நாள் அமைச்சர்களுக்கு இத்திட்டம் வரப்பிரசாதம். ''யாருடைய பணம்? எப்படி வந்தது? என்ன கணக்கு?'' என்று எதுவுமே கேட்கப்பட மாட்டாது அல்லவா?

''கறுப்புப் பண முதலைகள் மன்னிக்கப் படலாம் என்றால் அதைவிட அற்பமான குற்றங்கள் பலவற்றுக்காக நமது சிறைச் சாலைகளில் வாடும் கைதிகளையும் விடுவித்து விடலாமே'' என்கிறார் எம். வி. காமத். நீதி மன்றங்களுக்கு வேலை குறையும்; அர சுக்கும் சிறைச்சாலைகளை நிர்வகிக்கும் செலவு குறையும்! போலீசுக்கும் நிம்மதி. ஜெய் ஹிந்த்!

ஜனதா ஆட்சியின்போது நடந்த தங்க ஏலம் பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட பூரி கமிட்டி 'மின்னுவதெல்லாம் பொன் னல்ல' என்று நிரூபிக்கப் படாத பாடு பட் டிருக்கிறது. ஏலத்தால் நமது தேசத்துக்கு



✖ விமானத்துக்குள் சூதாட்டம்

ரொம்ப நஷ்டம் ஏற்பட்டது என்றும் தவறான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன என் றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

''மொரார்ஜி, எச். எம். பட்டேல் ஆகி யோர் மீது அரசியல் நோக்கில் சேற்றை வாரிப் பூசுவதே அறிக்கையின் நோக்கம்'' என்கிறார் சுப்பிரமணிய சுவாமி.

தேசாயையோ, பட்டேலையோ அழைத்து விசாரிக்காமலேயே கமிட்டி ஆய்வு நடத்தி அறிக்கையும் சமர்ப்பித்தது குறித்து சுப்பிர மணிய சுவாமி ஆச்சரியம் தெரிவித்துள் ளார்.

''நாடாளு மன்றம் விவாதிக்கட்டும்; அல் லது அரசு,தேசாய் மீது வழக்குத் தொடரட் டும்'' என்கிறார். ''ரிஸர்வ் பாங்கின் தங்கக் கையிருப்பு ஜனதா பதவிக்கு வந்தபோது 220 டன்; ஜனதா ஆட்சி முடிவுறும்போது 260 டன்'' என்று புள்ளி விவரமும் தந் திருக்கிறார்.

தங்க ஏலக் கொள்கை நாட்டுக்கு நல்லது என்று நம்பியதில் ஒருவேளை மொரார்ஜியும் பட்டேலும் தவறு இழைத்திருக்கலாம். ஆனால் சுயநல துர்நோக்கில் அவர்கள் செயல்பட்டதாக எண்ண ஆதாரம் ஏதும் இல்லை – இதுவரை.

மின்னுவதெல்லாம்...

✖ தேசாய்



✖ எச். எம். பட்டேல்



வஸந்த்! வஸந்த்!

13. பத்தா; நாப்பதா...

கலவரப்பட்ட கணேஷ் மரத்தடி வஸந்தை அவசரமாக சைகையில் கூப்பிட்டான்.

''என்ன பாஸ்?''

''ஷ்!.... குரலைத் தாழ்த்திக் கொண்டு ''வஸந்த் நீ அவனை அடிச்சியா?''

''சேச்சே தொடலே! நான் பார்த்தபோது புறக்கடையில் சாஷ்டாங்கமாகக் கிடந்தான். ஏன் மயக்கம் தெளிஞ்சுட்டானா?''

''தெளிஞ்சு அழகா தெளிவா பொய் சொல்ல ஆரம்பிச்சிருக்கான். அவனை அடிச்சது நீயும் நானுமாம்.''

''அடப்பாவி! இப்ப என்ன ஆகும்?''

இன்ஸ்பெக்டர் வெளியேவருவார். ''மிஸ்டர் வஸந்த் கொஞ்சம் இங்க வரீங்களா'' என்பார்.

''இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார். ''மிஸ்டர் வஸந்த் கொஞ்சம் இங்க வரீங்களா'' என்றார்.

''என்ன ஸார்?''

''அந்த ஆள் முழிச்சுக்கிட்டான். அவன் சொல்றது உங்க ரெண்டு பேரையும் இன்க்ரிமினேட் பண்ணுது. நான் அப்பச் சொன்னதுக்கு கெக்கேன்னு சிரிச்சீங்க. ஒரு போலீஸ் ஆபீசருக்கும் கொஞ்சம் இன்ஸ்ட்டிங்ட்டிவ்வா சொல்ல முடியுங்கறதை மறந்துட்டீங்க...''

கணேஷ், ''ஸார்! கேஸ் ரிஜிஸ்டர் ஆகியிருக்கா?'' என்றான்.

''இல்லே! ரிஜிஸ்டர் பண்ணப் போறேன். அந்த ஆளு கம்ப்ளெய்ண்டே கொடுக்கப் போறாரு. ரிக்கார்ட் பண்ணிக்கிட்டு அப்புறம் இன்வெஸ்டிகேட் பண்ணப் போறேன். அதுவரைக்கும் நீங்க எங்கேயும் போயிறாதீங்க என்ன?''

''நீங்க ஸ்டேட்மெண்ட் எடுத்துக்கறதுக்கு முன்னாலநாங்க அந்தஆளைப் பார்த்துப் பேச அனுமதிப்பீங்களா?''

''மாட்டேன்! உங்க வக்கீல் வேலையெல்லாம் என்கிட்டக் காட்டாதீங்க. வஸந்த்! எங்க தங்கியிருக்கீங்க?''

''ஏன் ஸார்?''

''ராத்திரி ஸ்டேஷன் லாக் அப்பிலே தங்கவேண்டி வரும்'' என்று சிரித்துவிட்டு உள்ளே போனார்.

வஸந்த், ''என்ன பாஸ் மாட்டிக்கிட்டோமா?'' என்று கணேஷைக் கலவரத்துடன் பார்த்தான்.

''மா என்ன? அவன் உன்னைத்தான் அரஸ்ட் பண்ணப் போறதாத் தெரியுது. இருந்துட்டு வா, காலைல விடிஞ்சதும் பெயில் ஏற்பாடு பண்றேன். கவலைப்படாதே.''

''என்ன பாஸ் விளையாடறீங்களா? நான் முன்னப் பின்னே ஜெயிலுக்குப் போயிருக்கேனா? என் மானம் என்ன ஆறது? மரியாதை என்ன ஆறது? எப்படிப் பட்ட வம்சம்!''



''பின்னே ஏன் அந்த ஆளே அடிச்சே? என்னவோ உன் கராத்தே வேலேயை எல்லாம் அவன்கிட்டக் காட்டியிருக்கே!''

''என்ன பாஸ்! நீங்களே என்னேச் சந்தேகிக்கப் போகுமா?''

''நான் உனக்குச் சொன்னது ஒண்ணு, நீ செய்தது ஒண்ணு.''

''நிச்சயம் அடிக்கலே பாஸ்.''

''அடிக்காட்டிக்கூட ட்ரெஸ்பாஸ், ஹவுஸ் பிரேக்கிங், எதுல வேணு உன்னே இப்ப அரஸ்ட் பண்ணலாம். அந்தாளே வேறே பகைச்சுக்கிட்டிருக்கே...''

''இப்ப என்ன செய்யறது? பேசாமலா பாயிண்டைப் போட்டுக் குழப்பி விட்டுறலாமா?''

''பார்க்கலாம். நீ எதுக்கும் தயாரா இரு. ராத்திரி ரெண்டு பேரையுமே கைது செஞ்சாக்கூடப் பரவாயில்லே. ஹோட்டல் பிரச்னே விட்டுது.''

இன்ஸ்பெக்டர் வெளியே வந்து ''ரெண்டு பேரும் என்கூட வரீங்களா? ஸ்டேஷன்ல போய் இன்வெஸ்டிகேஷனே வெச்சுக்கலாம்.''

''சரி, நீங்க போங்க. கார்ல வரோம்.''

போலீஸ் நிலேயத்தின் கட்டிடம் தற்காலிகம் என்று தெரிந்தது.

வாசலில் போர்டு இரண்டு சவுக்குக் குச்சிகளில் தொங்கிக் கொண்டு நிற்க அதன் தலேயில் பல்பு அபாயகரமாகத் தொங்கிக்கொண்டிருந்தது.

வஸந்த் காரை நிறுத்திவிட்டு ''ஜன்னல்லாம் பூட்டிடலாமா பாஸ் ராத்திரி தங்கல் இருக்கலாம்.''

''வேண்டாம் வா. தங்கினு நீதான் தங்கப் போறே.''

''என்ன பாஸ்! கைகழுவி விட்டுடுவீங்க போலிருக்கே?''

''ரெண்டு லாயர் இருக்கோம். ஒரு லாயர் அரெஸ்ட் ஆறதுக்கு, இன்னொருத்தன் அவனே வெளியே கொண்டு வரத்துக்கு! பயப்படாதே!''

வஸந்த், உள்ளே நுழையும்போதே சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே ''பரவாயில்லே. நல்ல காத்தோட்டமா இருக்கு'' என்ற கணேஷை முறைத்தான். லாக் அப் அறை தெரிந்தது. பின் பக்கத்தில் யார்டு தெரிந்தது. அதில் குச்சியின் உச்சியில் ஒற்றை பல்ப். நாலடி சதுர நோட்டீஸ் போர்டில் அரசாங்க பழுப்பில் கத்தையாக அறிக்கைகள் சேகரிக்கப்பட்டுத் தொங்கின.



ட்யூட்டி போர்ட் பள்ளிக்கூடக் கரும் பல கையிலிருந்து அந்த நிலையத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் அவருக்கு சப் — ஆர்டினேட் ஒருத்தர் ஒரு ஹெட் கான்ஸ்டபிள், நான்கு பி.ஸி. ஒரு ஸ்டேஷன் ரைட்டர் இருப்ப தாகத் தெரிந்தது. இதில் சப் — ஆர்டினேட் பதவி காலியாக இருப்பதும் தெரிந்தது. உள்ளே நுழைந்த வஸந்த், ''எங்கே கிரைம் போர்டைக் காணேம்? என்ன இன்ஸ்பெக்டர் இது! கிரைம் போர்ட் இல்லே, ஏரியா மேப் இல்லே, விஸிட்டிங் ஆபீஸர் லிஸ்ட் இல்லே, என்ன பே..லீஸ் ஸ்டேஷன் நடத்த..ங்க!'' என்ருன்.

''அதை நீங்க விஸிட்டிங் போலீஸ் ஆபீஸரா வர்றபோது கேட்டுக்குங்க!''

''என்ன பாஸ்! நம்ம டி. ஐ. ஜி. ராஜேந் திரன் சொல்லுவாரில்லே. பாதி போலீஸ் நிலையங்களில என்னென்ன ரிக்கார்ட்ஸ் வெச் சுக்கணும்னு கூடத் தெரியாதுன்னு.''

''இத பாருங்க, டி.ஐ. ஜி. பேரை எல் லாம் உள்ள விட்டு எனக்குப் பயம் காட்ட வேண்டாம்.''

''சேச்சே! உங்களைப் போல ஆசாமிங்களே பயங்காட்டறதாவது. டி.ஐ.ஜி. ராஜேந் திரன் நம்ம பாஸ் கணேஷுடைய கிளாஸ் மேட். அவர் ஒருமுறை எங்க கிட்டக் குறிப் பிட்டார், எந்த ஊர்ல எந்த போலீஸ் ஸ்டே ஷனுக்குப் போனலும் உடனே அதைப் பத்தி சின்னதா ஒரு வர்ணனைக் குறிப்பு எடுத்து அனுப்பச் சொன்னர் அதுக்குத்தான்...''

தலைப்புக் கொடுங்கள்!

பரிசு ரூ 500/-


இந்த இதழில் இடம் பெற்றுள்ள சிறுகதைகளுக்குப் பொருத்தமான தலைப்பு கொடுங்கள்.

நான்கு தலைப்புகளையும் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து சரியாக எழுதுவோருக்கு பரிசு ரூ 500/—

ஒருவருக்கு மேல் சரியான விடைகள் எழுதினல் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப் படும்.

தபால் கார்டில் மட்டுமே எழுதவும். கதைக்குத் 'தலைப்பு' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி ஏப்ரல் 15



இப்போது இன்ஸ்பெக்டரின் முக பாவத் தில் கொஞ்சம் மாற்றம் தெரிந்தது.

''உக்காருங்க.''

''பரவாயில்லே! அந்த ஆள் என்ன ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கான்?''

''அடிச்சது நீங்கதான்னு கிளியரராக் கொடுத்திருக்கான்.''

''அப்படியா? எதுக்கு அடிச்சமாம்?''

''நான் படிக்கிறேன் பாருங்களேன்.''

அவர் காகிதத்தைப் பிரித்தார். முதலில் சில வரிகளைச் சத்தமின்றிப் படித்துவிட்டு —''இன்றுபிற்பகல் சொல்லப்பட்ட இருவரும் வந்தார்கள். தம் பெயர் கணேஷ் என்றும் வசந்த் என்றும் சொன்னர்கள். என்னிடம் வியாபாரம் பேசினர்கள். அவர்கள் எதைக் குறித்து வியாபாரம்பேசுகிருர்கள்என்று எனக் குச் சரியாக விளங்கவில்லை. நான் அவர்கள் உரம் பற்றியோ விதைநெல் பற்றியோ பேசிக் கொண்டிருக்கக் கூடும் என்று நினைத்த தால்தான் தொடர்ந்து அவர்களுடன் பேசி னேன். இருவரும் பணம் கொண்டு வருவ தாகச் சொல்லிக் கொண்டு வெளியே போனர்கள். சற்று நேரத்தில் இருவரும் திரும்பி வந்தார்கள்.

''என்னய்யா பணம் கொண்டு வந்திருக் கிறீர்களா?'' என்று கேட்டதற்குச் சில பாசாங்குப் பதில்கள் தந்தார்கள். திடீ ரென்று ஒருவர் என்னைப் பிடித்துக்கொள்ள மற்றவன் என்னைத் தாக்கி, மோசமாய் அடித்துப் போட்டார்கள். நான் நினைவிழந் தேன்.''

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து ''என்ன சொல் றீங்க?'' என்ருர்.

''நல்லா கதை சொல்லியிருக்காரு அந்த ஆள்.''

''நீங்க அங்க போகவே இல்லியா?''

''போனேம். போகாம இல்லே. முதல் பாகம் ஏறக் குறைய அந்த ஆள் ஸ்டேட் மெண்ட்படிதான் நடந்தது. போனேம் வியாபாரம் பேசினேம் எல்லாம் சரிதான். அதுக்கப்புறம்தான் ரீலு செமை ரீலு.''

''அப்புறம் நீங்க போகவே இல்லையா?''

''என்ன ஸார், எங்களைப் பொய்யிலே மடக்கலாம்னு பார்க்கறீங்களா? நான்தான் சொன்னேனில்ல எதுக்காக எப்ப போனேன், என்ன பார்த்தேன்; நான் போனபோது இந்த ஆள் மயக்கமா சந்துகிட்டக் கிடந் தார். நான் போய் இந்த ஆளைக் காப் பாத்தி வண்டிலே போட்டுக்கிட்டு கொண்டு வந்திருக்கேன். ஸ்டேட்மெண்டைப் பாருங்க! கலி முத்திப் போச்சு!''

''நீங்க எதுக்கு ரெண்டாந் தடவை போனீங்க? அதான் எனக்கு இன்னும் சரியா விளங்கலே.''

வஸந்த் கணேஷைப் பார்த்தான். ''என்ன பாஸ்?''

கணேஷ், ''இன்ஸ்பெக்டர்! இந்த ஆள் உதைபட்டதுக்கும் முற்பகல்ல நடந்த கத்திக் குத்துக்கும் சம்பந்தம் இருக்கு. இந்த வட்டா ரத்தில ஏதோ பெரிசா ஒரு குற்றம் நடந்தி ருக்கு... நடக்கப்போறது. அல்லது நடந்துக் கிட்டிருக்கு. எல்லாத்தையும் ஒட்டு மொத்த

மாப் பார்க்கணும். ''ராஜ ராஜன் கிணறு தெரியுமா உங்களுக்கு?''

''என்னது அது?''

''இந்தக் கிராமத்தில உள்ள பழங்காலத்துக் கோயில், அதில உள்ள கிணறு.''

''கிணத்துல ஆளை அடிச்சுப் போட்டிருக்காங்களா?''

''இல்லை! அது ஏதோ சரித்திர சம்பந்தப்பட்டகுற்றம் சிலை அல்லது புதையல்னு நினைக்கிறோம். அதில இந்த ஆள் சதாசிவமும் சம்பந்தப்பட்டிருக்கான். மத்தியானம் செத்தானே, அவனும் சம்பந்தப்பட்டிருக்கான்.''

''சிலையா?''

''ம்... சாயங்காலம் அந்த ஆளைச் சந்தித்தபோது அவன் கைல ஒரு பொட்டலத்தைப் பார்த்தோம். அது என்னன்னு தெரிஞ்சுக்கறதுக்குத்தான் வியாபாரம் பண்ற மாதிரி பேசினோம். ஏதோ பத்து நாப்பத்தஞ்சுன்னு பேசினான். என்னன்னு புரியலை. பொட்டலத்தைப் பிரிக்க மாட்டேன்னுட்டான். அதுக்குத்தான் பொட்டலத்தில என்ன இருக்குன்னுட்டு நைஸா தெரிஞ்சுட்டு வான்னு வஸந்தை அனுப்பினேன். அவன் அந்த வீட்டில போய்ப் பார்த்ததில சதாசிவம் அடிபட்டுக் கிடந்தான். இது தான் நடந்த விஷயம்.''

இன்ஸ்பெக்டர் சிந்தனை வசமாகி ''ஹூம்' என்றார்.

''உங்க எஃப். ஐ. ஆர். புக், கேஸ் டயரி, ஸ்டேஷன் ஹவுஸ் டைரி எல்லாத்தையும் பார்த்து எனக்கு ஒரு தகவல் சொல்ல முடியுமா?'' என்றான் கணேஷ்.

''என்ன வேணும்?'' இருவரையும் பற்றிய அவர் மனநிலை இப்போது நிச்சயம் மாறி இருந்தது.

''சமீபத்தில் கொஞ்சம் வித்தியாசமான கேஸ் ஏதாவது ரிப்போர்ட் ஆகியிருக்கா?''

''வித்தியாசமான்னா?''

''சாதாரணமா நிலச் சண்டை, தெருச் சண்டை இப்படியெல்லாம் இல்லாம வெளியூர்க்காரங்க இந்த ஊருக்கு வந்து ஏதாவது காணமப் போயிட்டதாகவோ, தொலைச்சுட்டதாகவோ அல்லது ஏமாறிட்டதாகவோ ரிப்போர்ட் இருக்கா?''

''கொஞ்சம் இருங்க பார்த்துச் சொல்றேன்.'' என்றார்.

அவர் ரிஜிஸ்தரை எடுத்து மேஜை மேல் வைத்துப் புரட்ட கணேஷை ''நீங்களும் பாருங்களேன்'' என்றார். வஸந்த் கணேஷின் நேர்முகமான அணுகல் முறையை வியந்தான். இன்ஸ்பெக்டருக்கு அவர்கள் மேல் இருந்த சந்தேகம் நிச்சயம் விலகியிருக்க வேண்டும்.

''லெட்மீ சீ... இது என்ன ஸார் கேஸூ?''

''அது ஒண்ணும் இல்லீங்க. வழிப்பறி. இந்த ஆள் பஸ் ஸ்டாண்டில நின்னுக்கிட்டு இருந்திருக்கான். திடீர்னு ஒரு ஆள் வந்து கையில் இருந்த பெட்டியைப் புடுங்கிக்கிட்டு போய்ட்டான். பெட்டியில தானே தயாரிச்ச தைலம் சாம்பிள்களும் கொஞ்சம் பணமும் வெச்சிருக்கான். நல்ல வேளை

மொத்தப் பணத்தையும் அதில வெக்கலே. தனியா வச்சிக்கிட்டிருந்திருக்கான்...''

''இந்த ஆளோட ஒரிஜினல் புகார் கடிதம் இருக்கா?''

''இருக்கு. பாக்கறீங்களா?''

ரிஜிஸ்டருடன் பின் குத்தி வைக்கப்பட்டிருந்த காகிதத்தை எடுத்துக் காட்டினர்.

''கொலைக் கேஸைக் கண்டு பிடிக்க வாய்ப்பு இருக்குங்கறீங்க?''

''இருக்குங்க... நீங்க விசாரித்ததில ஒண்ணும் தெரியலையா?''

''இல்லைங்க!''

கணேஷ் அந்தக் கடிதத்தைப் பார்த்தான். ''நான் ஒரு விற்பனையாளன், தயாரிப்பாளன். என் தைல சாம்பிள்களை எடுத்துக் கொண்டு ஊர் ஊராக சென்று விற்பவன். என் பெயர் காளிதாஸ். என் விலாசம்—தஞ்சாவூர் விலாசம் கொடுத்திருந்தான் — நேற்று அதாவது 17–12–80 அன்று நான் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது ஒரு இளைஞன் என்னை அணுகி மணி கேட்டான். சொன்னேன். தஞ்சாவூர்க் காரரா என்று கேட்டான். ஆம் என்றேன். ஸாம்பிள் கொண்டு வந்திருக்கிறயா என்ருன். நான் என் தைல ஸாம்பிள்கள் என்று எண்ணிக் கொண்டு ஆம் என்றேன். அவன் அதற்கு மேல் கேட்டது எனக்குத் தெளிவாக விளங்குவதில்லை... பத்துக்கு நாற்பது என்று சொன்னதாக நினைவு.இதனிடையில்பேருந்து வந்துவிடவே நான் அதில் ஏறிக்கொள்ளப் போகும் சமயத்தில் 'என்ன சொல்லாமப் போறீங்களே'என்று உடன்வந்து தொந்தரவு செய்ய, நான் பே ப்பா என்றேன்.அப்போது திடீரென்று என் கைப் பெட்டியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். அதற்குள் பேருந்து புறப்பட்டுவிட, நான் அதை நிறுத்தி இறங்கிக் கொள்வதற்குள் அவன் கூட்டத்தில் மறைந்துவிட்டான். பெட்டியில் என் தைல சாம்பிள்களும் ரூபாய் நூறு பணமும் இருக்கிறது. அவன் கரிய நிறத்தில் கால் சராயும் நீல நிறத்தில் சட்டையும் அணிந்திருந்தான். இளம் வயதினன். அவனுக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம். ஒப்பம்.....''

''அப்புறம் இந்தக் கேஸ் என்ன ஆச்சு?''

''கண்டு பிடிச்சுட்டேன்.''

''யாரை? திருடனையா?''

''இல்லே. அந்தப் பெட்டியை. தெருவில் கிடந்ததுன்னு ஒரு ஆள் ஸ்டேஷன்ல கொண்டாந்து கொடுத்தான். திருட்டுப் போன சாயங்காலமே கிடைச்சுடுச்சு.''

''அப்படியா?அதில்இருந்த பொருள்கள்?''

''ஒண்ணு குறையலே. தைல பாட்டில், பணம் எல்லாம் அப்படியே இருந்தது.''

''அந்தப் பெட்டியைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தானே அந்த ஆள் விலாசம் இருக்குமா?''

''இருங்க பார்க்கறேன்.''

''தைல வியாபாரி என்ன ஆனுன்?''

''சந்தோஷமா பெட்டியை வாங்கிட்டு சாயங்கால பஸ்ஸிலே போயிட்டான். உங்களுக்குத் திருப்பிக் கொண்டாந்து கொடுத்தவன் விலாசம்தானே வேணும்?''

''ஆமா.''

''இருக்கு! தரேன். நம்ம ரிக்கார்ட்ஸ் எல்லாம் அப்பழுக்கில்லாதது, ராஜேந்திரன் கேட்டா சொல்லுங்க.''

''அதுக்கென்ன தாரளமா! என்ன பாஸ் இந்த அட்ரஸ் நமக்கு வேணுமா?''

''குறிச்சு வெச்சுக்க வஸந்த்.''

வஸந்த் குறிப்பெடுத்துக்கொள்ள, ''அப்ப நீங்க போகலாம். ஏதாவது தகவல் வேணுமின்னு சொல்லி அனுப்பறேன். உங்களுக்கும் ஏதாவது நம்ம டிபார்ட்மெண்ட் கிட்ட இருந்து உதவி வேணும்னு....''

''வேணுங்க.''

''என்ன சொல்லுங்க.''


''நாளைக்கு அந்த சதாசிவம் வீட்டை ஸர்ச் பண்ண என்னை அனுமதிக்கணும். அப்புறம்....''

''அப்புறம்?''

''வஸந்தை நீங்க அரஸ்ட் பண்ணணும்!''

(தொடரும்)

வம்பன் வெங்கு



செய்தி : நேதாஜி மனைவிக்கு உதவிஇல்லை..

வெங்கு: மாதாஜியின் கருணை நேதாஜி மனைவி மீது இல்லையோ?

நெடுஞ்செழியன் : நாயுடு கூறுவதை விவசாமிகள் கேட்டால் நாடு சிரிக்கலாம்.

வெங்கு: நெடுஞ்செழியன் கூறுவதை விவசாயிகள் கேட்டால் நாயுடு சீர்குலைவார்.

செய்தி : 'மிக்' விமானம் இந்தியாவில் தயாரிக்க முயற்சி.

வெங்கு: முயற்சி வெறும் 'காமிக்'காக முடியாமல் இருந்தால் சரி.

செய்தி : ராஜ்ய சபை ஒரு மணி நேரம் ஸ்தம்பித்தது.

வெங்கு: இது என்ன பிரமாதம். நாட்டு முன்னேற்றம் பல வருடங்களாக ஸ்தம்பித்து நிற்கிறதே....

செய்தி : ரூ 1 லட்சம் சாராய ஊறல் சிக்கியது.

வெங்கு: இதில் ஏதாவது ஊழல் சிக்குமா என எதிர்க் கட்சிகள் ஆராயலாம்.

செய்தி : தமிழக வறட்சியைக் காண டெல்லியிலிருந்து ஒரு குழு வருகிறது.

வெங்கு: குழுவினருக்கு அனைத்து வசதிகளும் அளிப்பதில் வறட்சி இராது!

ஜனதிபதி : ரூ 1000க்கு மேல் சம்பளம் பெறுவோர் ஸ்டிரைக் செய்யக் கூடாது.

வெங்கு: ரொம்ப தேங்க்ஸ். மற்றவர்கள் 'ஸ்டிரைக்' செய்யலாம் என அனுமதி கொடுத்த ஜனாதிபதிக்கு டபுள் தாங்க்ஸ்....

செய்தி : எம். எல். ஏக்கள் சிலர் திரைப் படத்தில் நடிப்பர்.

வெங்கு: படத்தில் நடிப்பதற்கு முன் அனுபவம் நிறையக் கிடைத்திருக்குமே!

ஸ்வீட் ஸெவன்டீன்!

பட்டப் படிப்பின் முதல் ஆண்டு, முதல் நாள், முதல் வகுப்பு. கல்லூரி ஆசிரியர் மூன்று age களை இணைத்துக் கூறியது :

"In this young age you should engage yourself in acquiring more knowledge''


- ஸ்ரீராம்






சிரஞ்சீவி கடிதம்

என்றும் பதினாறு
மார்க்கண்டேயன்
கல்கிக்கு இப்படி
கடிதம் எழுதினான்:
''ஸ்வீட் 16ஐ உட்டுட்டு
ஸ்வீட் 17 இன்னா வேண்டிகீது?
நான் ஒண்ணும்
எய்தக் கூடாதுன்னு
கெட்ட எண்ணம்
தானே நைனா?''



எனக்கு வயது 17. வயது மட்டுமல்ல; பிறந்த தேதி கூட 17தான். ஒருவேளை ஒரு வருடத்துக்கு 17 மாதங்கள் இருக்குமே யானால், நான் 17வது மாதத்தில் பிறந் திருப்பேனோ என்னவோ? நாளை 17ந் தேதி, காலை ஹிஸ்டரி ரிவிசன் எக்ஸாம். பிர யாசைப்பட்டுப் படிக்கிறேன். எண்ணமெல் லாம் கிரிக்கெட் காமெண்ட்ரி மீது. என் ஆர்வமும் அங்கே திசை திரும்ப அய்யோ... கவாஸ்கர் 17 ரன்னில் அவுட். எவன் எப்படியானால் நமக்கென்ன? மறு படியும் புத்தகத்தைப் புரட்டுகிறேன். 1776ல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், 1789ல் பிரெஞ்சுப் புரட்சி, 1917ல் ரஷ்யப் புரட்சி அத்தனை புரட்சிகளும் இண்டியன் நியூஸ் ரீல் மாதிரி வரிசையாக வருகிறது. அட நம்ம புரட்சித் தலைவரின் அமைச்சரவை யில் கூட 17 பேர்தான். 17ந் தேதி காலை எக்ஸாம் ஹாலில் நுழைகிறேன். 17வது கேள்வியைப் பார்க்கிறேன். கஜனி முகம் மது இந்தியாவின் மீது எத்தனை தடவை படையெடுத்தான்? எனக்கோ ரஜனி ஞாபகம்தான் வந்தது. பதில் தெரி யாமல் கேள்வி எண்ணை 17யே பதிலாக எழுதுகிறேன். எக்ஸாம் எழுதிவிட்டு வந்து வீட்டில் புத்தகத்தைப் பார்த்தால், 17தான் சரியான விடை என அறிந்ததும் மகிழ்ச்சி யால் 17 தடவை துள்ளிக் குதிக்கிறேன். மறுநாள் வகுப்பறையில் நுழைகிறேன். ஹிஸ்டரி மாஸ்டரிடமிருந்து தேர்வுப் பேப் பர் என்னிடம் கைமாறுகிறது. மார்க்கைப் பார்த்ததும் ஒரே இன்ப அதிர்ச்சி. ஆம். ஸ்வீட் செவன்டீன்தான்!

-எஸ். வேலுச்சாமி



நடிப்புப் பதினேழு

நமக்கெல்லாம்
17 போய் 18 வரும்
ஆனால்
நடிகைகளுக்கோ
17 போய் 16 வரும்.

-எஸ். ப்ருந்தா

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

முன்கதைச் சுருக்கம்

சரித்திரத்தில் ஆரம்பித்து விசித்திரமாகப் போய் விட்டது அந்த ராஜராஜன் கிணறு விவகாரம். வஸந்த் சரித்திரப் பேராசிரியரின் மகள் இனியாவை இம்ப்ரெஸ் பண்ணப்போய் இதில் மாட்டிக் கொண்டான். பேராசிரியர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை சரித்திரத்தோடு சம்பந்தம் ஏதும் இல்லாத சில வெற்றுக் குண்டர்கள் லாவிக் கொண்டு போகிறார்கள். வஸந்த் அதை மீட்கப்போய் பல்லாவரத்தில் ஒரு சிறிய விட்டில் ஏறக்குறைய உதை படுகிறான். கட்டுரை உக்கல் கிராமத்தில் இருக்கும் ஒரு புராதனமான ராஜ ராஜன் கிணற்றைப் பற்றியது. கணேஷின் கூர்மையான மூளைக்கு இதில் ஏதோ நிழலாக சமாச்சாரம் இருக்கிறது. ''வா அந்த கிராமத்துக்கே போய்ப் பார்க்கலாம்'' என்கிறான். அங்கே போனால் கோவில் வாசலில் ஒருவன் அவர்களை அணுகி ஏதோ சொல்ல, 'சதாசிவம்'என்று ஆரம்பிப்பதற்குள் முதுகில் கத்திக் குத்துப்பட்டு விழுகிறான். காஞ்சிபுரம் ஆஸ்பத்திரியில் உயிரை விடுகிறான். இனியாவும் பேராசிரியரும் சரித்திர ஆதாயங்களை மறு பரிசீலிக்க அங்கு வருகிறார்கள். அவர்களிடம் இப்போது வேலை சரியில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டு அந்த சதாசிவத்தைத் தொடர்ந்து மறுபடி உக்கல் வருகிறார்கள். சதாசிவம் அவர்களிடம் ஏதோ புரியாத வியாபாரம் பேசி. ஒரு பார்ஸலைக் காட்டுகிறான். நாற்பது கேட்கிறான் அது என்ன என்று தெரிந்துகொள்ள வஸந்த் சதாசிவத்தின் வீட்டுக்கு மறுபடி சென்றபோது சதாசிவம் வீட்டுக் கொல்லைப்புறத்தில் அடிபட்டு மயக்கமாகக் கிடப்பதைப் பார்க்கிறான். போலீஸிடம் சொல்ல இன்ஸ்பெக்டர் அவர்களைச் சந்தேகிப்பது தெரிகிறது. போதாக்குறைக்கு சதாசிவம் மயக்கம் தெளிந்ததும் என்னை அடித்துப் போட்டது கணேஷும் வஸந்தும் தான் என்கிறான். கணேஷ் இன்ஸ்பெக்டரிடம் திறமையாகப் பேசி, தாங்கள் வந்த காரணத்தைச் சொல்லி, போலீஸுடன் இந்த வினோதமான கேஸில் ஒத்துழைக்கத் தன் விருப்பத்தைக் கூறி இன்ஸ்பெக்ட



...டம் சமீபத்தில் அந்த ஊரில் வெளியூர் ஆட்களுடன் சம்பந்தப்பட்ட கேஸ்களை எல்லாம் காட்டச்சொல்கிறான். உடனே வஸந்தைக் கைது செய்யச் சொல்கிறான் இனி படியுங்கள்.

"14. நல்லகாலம் தப்பிச்சீங்க!"

வஸந்த் அசந்து போய், "என்ன பாஸ்! ஸேம் ஸைட் கோல் போடறிங்களே? என்னை எதுக்கு அரெஸ்ட் பண்ணணும்?" என்றான்.

"இந்தக் கிராமத்திலேயோ அல்லது சுத்து வட்டாரத்திலேயோ ஏதோ ஒரு கோஷ்டி ஏதோ ஒரு கெட்ட காரியம் செய்யறாங்க. நடக்கறது அல்லது நடக்கப் போறது என்னன்னு ஒருத்தருக்கும் தெரியாது. ஆனா நம்ம மேலே பழி போடற உத்தேசம் தெரியுது. சதாசிவத்துக்கு விஷயம் தெரியும். ஆனா நம்ம கிட்ட சொல்லப் பயப்படறான். அவனை நல்லாத் தட்டி வெச்சிருக்காங்க. அவன் இனிமேலக் காட்டிக் கொடுக்கிற வகையில் ஏதாவது தகவல் வெளியே சொன்னா அவனைத் தீர்த்துக் கட்டிடுவாங்க. அதுக்குப் பயந்துண்டு நம்ம மேலே பழி போட்டிருக்கான். அவன் சொன்னதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களை நம்ப வைக்கணும். அதுக்காக உன்னை அரெஸ்ட் பண்ண மாதிரி காட்டி ஆகணும். என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?"

"நான் என்ன காரணத்தைக் காட்டி அரெஸ்ட் பண்ணணும்கறீங்க?"



''சும்மா ஒரு ஸஸ்பிஷன் பேர்ல வாரண்ட் இல்லாத அரெஸ்ட் பண்றதுக்கு உங்களுக்கு எத்தனையோ செக்ஷன் இருக்குதே. ஸி.ஆர்.பி. ஸியிலே 54, 55, 57, 66, 151,401.''

''பரவாயில்லையே? ஞாபகம் வெச்சுருக்கீங்களே நல்லா.''

''அதானே தொழில்?''

''அதுவும் வஸந்தை அரெஸ்ட் பண்ணனும்னு எல்லா செக்ஷனும் ஞாபகம் வரும் நம்ப பாஸுக்கு!''

''வஸந்த்! நான் சொல்றதைக் கேளு. ராத்திரி நீ ஸ்டேஷன்லே இருந்தா ஸேஃப்புன்னு தோணுது. இன்ஸ்பெக்டர் உங்களுக்கு இஷ்டமில்லேன்னாக்கூட நியூஸன்ஸ் கேஸ்லயாவது இவனைப் பிடிச்சு உள்ள தள்ளுங்க. காலைல ரிலீஸ் பண்ணிடுங்க!''

இன்ஸ்பெக்டர், ''சரியான ஆளுய்யா நீ! என்ன வஸந்த் வரீங்களா?'' என்றார்.

''பாஸ் சொன்னா வரவேண்டியதுதான்.''

''அவன் லாக் அப்பில் இருக்க வேண்டாம். ஸ்டேஷன்லே படுத்தாப் போதும்!''

''சார்! சோறு கிடைக்கும் இல்லே?''

''கவலைப்படாதீங்க. நீங்க நம்ம கெஸ்ட்! கொஞ்சம் இருங்க. சதாசிவத்தைப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''தவறாம வஸந்த் கைது பண்ணப்பட்ட விவரத்தை அவன் கிட்டச் சொல்லுங்க, அப்புறம் ஆளை விட்டுடுங்க. அவன் வீட்டுக்குப் போயிரட்டும்!''

''நீங்க ஏதோ பிளான் வச்சிக்கிட்டுத்தான் செயல் படறீங்கன்னு தோணுது.''

''ஆனா என்னன்னு சொல்ல மாட்டார்! இருக்கிறவங்களை யெல்லாம் ஜெயிலுக்குப் போ, உடம்புக்கு நல்லதுன்னு சொல்லுவாரு! கேள்வி கேட்காமப் போகணும்!''

''வஸந்த்! காலைல விவரமாச் சொல்றேன். நான் சொல்றபடி கேளு என்ன?''

''ஜெயிலுக்குப் போறது போறேன். சின்னதா ஒருடிராமா ஆடிட்டுப் போறேனே?''

வஸந்த் கண்களில் எச்சில் தொட்டுக் கொண்டான். ''அய்யா என்ன இப்படி அபாண்டமா என் மேலே பழி போட்டுட்டீங்களே! ஏங்க நானா அந்தாளை அடிச்சேன்? நேரே என் கண்ணைப் பார்த்துச் சொல்லுங்க'' என்றான்.

சதாசிவத்தைச் சுட்டிக் காட்டி, ''எல்லாம் நீதான் அடிச்சதுன்னு அவர் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்காரே!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அய்யய்யோ அப்படிப் பொய் சொல்லாதீங்க. என்னை அரெஸ்ட் பண்ணாதீங்க! எனக்கு வேற கதி கிடையாதுங்க. நான் நல்ல குடும்பத்தில பிறந்தவன்! இதுவரைக்கும் என் வம்சத்திலே யாரும் ஜெயிலுக்குப் போனதில்லே ஸார். வேண்டாம் ஸார்... நான் இல்லே, நான் இல்லே.''

வாசலில் சின்னக் கூட்டம் கூடிவிட 'என்னங்க தகராறு, என்னங்க ஆச்சு' என்று கேள்விகள் எழ ''ஒண்ணுமில்லே. ஏதோ அடிதடி. பட்டணத்துக்காரர்களைக் கைது பண்ணிக்கிட்டுப் போறாங்க. அதுல கொஞ்சம் கலாட்டா.'' என்றனர்.

''காலைல கத்திக் குத்தைப் பத்தி ஏதும் கண்டு பிடிச்சாங்களா?''

''அப்படித்தான் தெரியுது. இவங்கதான் போல இருக்கு. அதான் அரஷ்ட்டுப் பண்ணிட்டாங்க!''

கணேஷுக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டான். காரில் ஏறிக் கொண்டு ''குட்பை வஸந்த்! ஸ்வீட் ட்ரீம்ஸ்!'' என்றான்.

வஸந்த் அப்படியா சேதி என்று முறைத்தான்.

கணேஷ் காரில் சற்று நேரம் யோசித்தான். ராத்திரிச் சாப்பாடு எங்கே? தங்கல் எங்கே? அங்கிருந்த ஒரு பெட்டிக் கடையில் நிறுத்தி விசாரித்தான். ''பட்டணங்களைப் போல தங்கற ஓட்டல் எல்லாம் கிடையாதுங்க. ஆனா மடவிளாகத்துக்குப் பக்கத்திலே ஒரு வீட்டில ராத்தங்கறத்துக்கு சௌகரியம் பண்ணிக் கொடுப்பாங்க. வீட்டுச் சொந்தக்காரங்க வடக்க இருக்காங்க. எதித்த வீட்டுக்காரங்கதான் சாவி வச்சிருக்காங்க. அவங்க கிட்ட கேட்டீங்கன்னா ஒதவிபண்ணுவாங்க.''

''சரி, ரொம்ப தாங்க்ஸ். சாப்பிட ரொட்டி ஏதாவது இருக்குங்களா?''

''ரொட்டி கொஞ்சம் பளசா இருக்குங்க. பன்னு தரட்டுமா இனிப்பா இருக்கும்.''

கணேஷ் அகப்பட்டதை வாங்கிக் கொண்டு அந்த மடவிளாகம் முகவரியை நோக்கிப் போனான்.

''வீட்டுச் சாவிதான் எங்கிட்ட இருக்கு. ஓனர் கிட்டச் சொல்லாத வரைக்கும் நீங்க ராத்திரி படுத்துக்கலாம். திண்ணைல படுங்க. கொஞ்சம் கொசுப் புடுங்கும். பன்னண்டு மணியளவிலே காத்து வரும்.''

கணேஷ் காரைக் கோயில் ஓரத்தில் நிறுத்தி பூட்டிவிட்டுத் திரும்ப அந்த வீட்டுக்கு வந்து சற்று நேரம் வாசலில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு பன் சாப்பிட்டான். ''இந்தாங்க பாலு'' என்று கோர்டேக்கரின் மகள் கொண்டு வந்து கொடுத்தாள். அந்தப் பெண் சந்திர ஒளியில் கொஞ்சம் தேவதைத்தனத்துடன் இருப்பதை மனதோரத்தில் கவனித்த கணேஷுக்கு வஸந்தின் ஞாபகம் வந்தது. இந்நேரம் அவள் குலம் கோத்திரம், ஏன் மார்பளவைக்கூட விசாரித்திருப்பான். பாவம், வஸந்தை ஸ்டேஷனில் மாட்டி விட்டு வந்துவிட்டேன். இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தச் செயல் ஏனோ அவனுக்கு அவசிய

'காலையில் வந்து ரவாதோசை ஆர்டர் செய்தேன். இப்போது மத்தியானம் ஆகி விட்டது. இன்னும் தோசை வரவில்லை. என்ன செயயப் போகிறீர்கள்?''

'அரை நாள் லாட்ஜிங் சார்ஜ் போடுகிறேனே!'' -பிரியாபாலு



மாகப் பட்டது. ''வேற ஏதாவது வேணுங்களா?'' என்று அந்த மகள் கேட்டாள்.

''ஒரு தலையணையும் பெட்ஷீட்டும்'' என்ருன். திண்ணையில் படுத்திருந்தவன் திடீரென் று எழுந்தான். ஏதோ யோசித்தான். பின் இரவில் நிலவொளி பால் கொட்டிக் கொண்டிருந்தது. வீதியே அமைதியாக இருக்க கணேஷ் எழுந்தான். தலையணையைத் திண்ணைக்குக் குறுக்கே அமைத்து விட்டு அதை பெட்ஷீட்டால் மூடினன். சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தால் ஆள் படுத்துக் கொண்டிருப்பது போலத் தோன்ற வைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு நழுவிப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்ருன்.

நிலையத்தில் ஒரு பல்ப் சோம்பேறித்தனமாகக் காற்றில் ஆடிக் கொண்டிருக்க இன்ஸ்பெக்டரைக் காணவில்லை. கான்ஸ்டபிள் மட்டும் பெஞ்சில் உட்கார்ந்த நிலையில் கண்ணயர்ந்து கொண்டிருந்தார். வஸந்தைக் கைது செய்யவில்லை என்று தெரிந்தது. அவன் இன்ஸ்பெக்டர் அறையில் ஃபேனைப் போட்டுக்கொண்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனருகில் சென்று கணேஷ் அவனை எழுப்பினன்.

''என்ன பாஸ் இந்நேரத்தில?''

''ஷ்! நானும் இங்கதான் படுத்துக்கப் போறேன்..''

''ஏன்? ஓட்டல்ல இடம் கிடைக்கலையா?''

''ஓட்டலா? இந்த ஊர்ல ஓட்டல் ஏது? ஒரு வீட்டுத் திண்ணையில எடம் கொடுத்தாங்க. படுத்தேன். ஆனு அங்க இருப்புக் கொள்ளலே. உன்னை இங்க அனவசியமா சேர்த்துவிட்டு வந்திருக்கோமே என்ன கஷ்டப்படறியோன்னு வந்துட்டேன்.''

''எனக்காகப் பச்சாதாபப்பட்டு வந்திருக்கீங்கன்னு சொன்னு அது பரம ரீல்! நான் நம்பலே.''

''வஸந்த்! அந்த காளிதாஸ்ங்கற ஆளைப் பாக்கணும்.''

''எந்த காளிதாஸ்?''

''அதான். பஸ் ஸ்டாண்டிலே பெட்டியைப் பறி கொடுத்துத் திரும்பப் பெற்றதைல ஸாம்பிள்!''

''ஓ! அவரா? அவரு தஞ்சாவூர் அட்ரஸ்ல கொடுத்திருக்கார்?''

''பொடி நடையாப் போய்ப் பார்த்துட்டு வந்துரேன்.''

''சரிதான். ஒண்ணு ஜெயிலுக்குப் போங்கறீங்க இல்லே தஞ்சாவூருக்கு... காஞ்சி ஜில்லாவிலிருந்து ஆபரேஷன் தஞ்சாவூருக்கு ஷிப்ட் ஆறதா? ஆமா எதுக்கு திடீர்னு காளிதாஸ் மேலே ஈடுபாடு?''

''அந்த ஆசாமி கிட்டயும் வியாபாரம் பேசியிருக்காங்க. அதே பத்துக்கு நாப்பது ஞாபகம் இருக்கா? சதாசிவம் நம்ம கிட்ட பேசினபோதும் பத்து, நாப்பது இந்த ரேஞ்சிலதான் பேசினன். வியாபாரம் ஒண்ணுதான்.''

''எனக்கென்னவோ காளிதாஸ்ங்கறவன் இதில தன்னை அறியாமக் கலந்து போய்ட்ட ஆசாமிதான்னு படுது.''

''அது சரிதான். எனக்கு அவங்கிட்ட இருந்து முக்கியமாத் தெரிய வேண்டிய தக



அவன்: ''மடையன்! அயோக்கியன் சுகாதார ஊழியர்களை நம்பாத சந்தேகப் பேர்வழி!''

இவன்: ''யாரைடா திட்டறே.?''

அவன்: ''டெஸ்பாட்ச் ராமசாமியைத்தான்! தினசரி பூட்டுப் போட்டுப் பூட்டிய டிபன்பாக்ஸில் ஆபீஸுக்கு டிபன் எடுத்துட்டு வர்ருனே..?!'' —உ. ராஜாஜி

வல்... ம்ஹூம். அது காளிதாஸ் கிட்ட இருந்து கிடைக்காது. இங்க உக்கல்ல தான் கிடைக்கும்.''

''நீங்க பேசறது பூரா ஜென்னு இருக்கு.''

''இருக்கலாம். கிணறு, பார்ஸல், கூழமந்தல் ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் காவல்காரன், பேராசிரியர், இனியா, சதாசிவம், அவன் சொன்ன பொய், ம்ஹூம் த்ரெட்டே இல்லையே. சீட்டுக்குச் சீட்டு சம்பந்தமே இல்லையே!''

''ஸ்கூட் பண்ண வேண்டிய கை பாஸ்! நான் சொல்ற கதை வசனம்தான் சரிப்பட்டு வரது. எல்லாரும் சேர்ந்துண்டு வெலை உயர்ந்த செலையை விக்கருங்க. அதுக்குக் குறுக்கேதான் நாம வந்துட்டோம். அல்லது கடத்திக்கிட்டுப் போருங்க.''

''விலை உயர்ந்த சிலைன்னு அதுக்கு சரித்திர பூர்வமான ஆதாரம் இருக்கும், இந்த வட்டாரத்தில் அந்த மாதிரி சிலை இருந்தா நிச்சயம் பேராசிரியருக்குத் தெரிஞ்சிருக்கணும்''

''பேராசிரியரையும் சதாசிவத்தை மாதிரி பயம் காட்டி வெச்சிருக்காங்களோ என்னவோ.''

''இருக்கலாம்.''

''இருக்கலாம என்ன? வேற ஒரு பாஸிபிளிட்டியும் எனக்குத் தென்படலே.''

''எனக்கு வேற சில சாத்தியங்கள் தோணறது.''

''உதாரணமா?''

''எல்லாத்தையும் இப்பச் சொல்லக்கூடிய நிலையில்லை. படுத்துத் தூங்கு.''

காலை இருவரும் இன்ஸ்பெக்டரால் எழுப்பப்பட்டனர்.

''என்ன கணேஷ்! இங்க இருக்கீங்க! நான் தேடிக்கிட்டிருக்கேன்''

''எதுக்கு?''

''நல்ல காலம் தப்பிச்சீங்க கணேஷ்!''

''என்ன விஷயம்?''

''நீங்க படுத்திருந்த திண்ணை மேலிருந்த தலையணையை ஆளுன்னு நினைச்சுட்டுகத்தியால் குத்திட்டுப் போயிருக்கான் ஒருத்தன். நல்லவேளை தப்பிச்சீங்க. இல்லே, இந்நேரம் நீங்க காலி.''

(தொடரும்)



பாக்கியராஜ், 92c, தேனாம்பேட்டை!

ஒவ்வொரு கலைஞரும் தாம் நடந்து வந்த பாதையை நினைவில் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் சொல்வார்கள். நாது நட்சத்திரங்களை அப்படி நினைக்க வைக்க விரும்பினோம். அதற்காக அவர்கள் சென்னைக்கு வந்த புதிதில் அல்லது படத் துறைக்கு வந்த புதிதில் வசித்த வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று பழைய நினைவுகளைக் கிளறினோம். இதோ! கிடைத்தன பல புதிய விஷயங்கள்:

தேனாம்பேட்டையில் 92-சி என்றாலே பலருக்குத் தெரியும். அவ்வளவு புகழ் பெற்றது! இங்கு மிகச் சிறிய அறைகள் பல உள்ளன. நடிகராவதற்கு முன் இங்குதான் வசித்து வந்தார் பாக்கியராஜ். காரை விட்டு அவர் இறங்கிய உடனேயே உற்சாகமான வரவேற்பு. ''ஏன் சார் வரதேயில்லை?'' என்ற அங்கலாய்ப்பு. ''நம்ம ரூம் பூட்டியிருக்கா, திறந்திருக்கா?'' எனக் கேட்டவாறே குனிந்து வளைந்து வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றார் பாக்கியராஜ். ''பெரிய அயர்ன் சேப்பா என்ன? திறந்து விட்டால் போச்சு!'' இப்படிக் கூறிக் கொண்டே ஒருவர் முன்னாலில் பாக்கியராஜ் இருந்த அறையைத் திறந்தார்.

உள்ளே நுழைவத்ற்கு முன் கதவிலிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தார் பாக்கியராஜ். ''கோலப்பன் – சினிமா டைரக்டர்'' என்றிருந்தது. அவர் அதைப் படித்தவுடன் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

✠ காற்றோட்டமுள்ள இடம்தான், இல்லையா?

சிரிப்பு மறையு முன்னே பாக்கியராஜ் அறையினுள்ளே சென்று அங்கிருந்த ஒரு பாயைத் தாமே எடுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார். ''ஒண்ணும் மாறவேயில்லை. அப்படியேதான் இருக்கு. இந்தப் பாயும், இந்தப் பெட்டியும் கூட என்னுடையதைப் போலவே இருக்கு!'' என்று கூறிவிட்டு என்னைப் பார்த்து,

''இந்த அறையின் சொந்தக்காரர் இதோ இவர்தான். பெயர் சாமி. இவரிடம் அனுமதி கேட்டு இங்கு வாடகைக்கு இருப்பவர்தான் கோபாலகிருஷ்ணன். எனக்கு வேலையில்லாத அந்தக் காலத்தில் இந்த அறையைத்தான் நான் பங்கு போட்டுக் கொண்டேன். இங்கு உட்கார்ந்துதான் சிவப்பு ரோஜாக்கள், பதினாறு வயதினிலே, கிழக்கே போகும் ரயில், ஏன், சமீபத்திய கன்னிப் பருவத்திலே ஆகிய எல்லா வசனங்களையும் எழுதினேன்.

''இந்த அறை ரொம்ப ராசியான அறை. இந்த அறையில் தங்க ஒரு போட்டியே நடக்கும்! நான்தான் சார் இந்த சாமி படங்கள் எல்லாம் கையில காசு கிடைக்கும் போது ஒவ்வொண்ணா வாங்கி வச்சேன். இரவு நிம்மதியாகத் தூங்க முடியாது. காரணம் மூட்டைப் பூச்சிகள். ஓரளவாவது தொந்தரவில்லாமல் படுக்க வேண்டுமென்றால் மத்தியானத்திலிருந்தே மெழுகுவர்த்தியைக் கையில் பிடித்துக் கொண்டு சுவரிலிருக்கும் ஒவ்வொரு ஓட்டையினுள்ளும் அனலைச் செலுத்தி மூட்டைப் பூச்சிகளை அழிக்க வேண்டும். இப்பவும் அப்படித் தானே?'' என்று கேட்கச் சுற்றியிருந்த நண்பர்கள் தலையாட்டுகிறார்கள்.

15. "வஸந்த்! வஸந்த்!"

வஸந்த், கணேஷை தாஸானு தாசத் தனத்துடன் பார்த்தான். ''பாஸ்! நீங்க என்னைக் காப்பாத்தினீங்க.நேத்துராத்திரி என்னை அரெஸ்ட் பண்றதுக்கு எதுக்காக ஆலாப் பறந்தீங்கன்னு இப்பத்தான் புரியுது.''

''இல்லே வஸந்த். இந்த மாதிரியான தாக்குதலுக்குச் சாத்தியம் இருக்கலாம்னு எனக்கு பின்னிரவில்தான் தோணிச்சு. நான் உன்னைக் கைது செய்யறதுக்கு இன்ஸிஸ்ட் பண்ணதுக்கு நான் முதல்ல சொன்னதுதான் காரணம். நம்ம மேலே பழி போட்டதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களுக்குப் பாவலாக் காட்டணும்.''

''ரொம்ப சுத்தி வளைக்கிறீங்களே கணேஷ்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இந்தக் கேஸ்ல இதுவரைக்கும் எனக்குச் சரியான பிக்சர் கிடைக்கலே. உங்களுக்கு?''

''ம்ஹூம்! கிரைம் என்னன்னு கூடத் தெளிவா இல்லே கணேஷ். நீங்க அந்தச் சதாசிவத்தின் வீட்டுக்குப் போய்ச் சோதனை போடணும்னீங்களே?''

''அதை நீங்க செய்யுங்க இன்ஸ்பெக்டர். நாங்க இன்னிக்கு முழுக்கப் பெரும்பாலும் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருக்கறதுதான் பத்திரம்னு தோணுது. நீங்க ஸர்ச் பண்ணுங்க. முக்கியமா அந்தப் பார்ஸலே பீரோ அல்லது அலமாரி அல்லது வேற எங்கேயாவது ஒளிச்சு வெச்சிருக்காங்களான்னு பார்த்துருங்க. அது முக்கியம்.''

''துப்புரவாப் பார்த்துர்றேன்.''

''இன்னொரு வேலே செய்யணும் நீங்க.''

''சொல்லுங்க.''

''பஸ் ஸ்டாண்டிலே பெட்டி பறிகொடுத்த கேஸ் உங்க ரிக்கார்ட்ஸ்லே இருக்கே, தஞ்சாவூர்க்கார தைலப் பாட்டில் காளிதாஸ்; அன்னிக்குச் சாயங்காலம் அவன் பெட்டியைத் திருப்பிக் கொண்டு கொடுத்தானே அவன் விலாசம் கொடுத்தீங்க இல்ல?....''

''ஆமா. அங்க கூடப் போகணுமா?''


''வேண்டாம் ஸார், அவனே இங்கே ஸ்டேஷனுக்கு வரவழைக்க முடியுமா?''

''தாராளமா. வேணும்னு வாரண்டோட கூட....''

''அதெல்லாம் வேண்டாம். சும்மா ருட்டீன் விசாரணைக்குன்னு அதிக தடபுடல் இல்லாமக் கூட்டி வரச் சொல்லுங்க.''

''செய்துட்டாப் போறது.''

''அப்ப நீங்க போய்ப் பார்த்துட்டு வந்துர்றிங்களா. நானும் வஸந்தும் இங்கதான் இருக்கப் போறோம். வெளியில எங்களுக்குப் பத்திரமில்லே.''




இன்ஸ்பெக்டர் புறப்பட வஸந்த் ''டீ பையா இங்க பக்கத்தில டீக்கடை இருக்கா'' என்று கேட்டான்.

''எதுக்கப்பா? இருக்கது. பையனை வரச் சொல்றேன்.''

''அப்படியே சாப்பாடு வாங்கிக் கொண்டு வரச் சொல்லுங்க. காலைல இருந்து பல் விளக்கக்கூட இல்லை.''

வஸந்த் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டான். உக்கல் கொசு கொஞ்சம் ஜாஸ்தியா லாக்கப் செல்ல இருக்கு. பாஸ் நேத்திக்கு ரெண்டு மூணு சேர்ந்து என்னைத் தூக்கிட்டு வீட்டுக்கு எடுத்துப் போயிடலாம்னு பேசிக்கிச்சு.''



கணேஷ், ''வஸந்த்! நாம ரெண்டு பேரும் இந்தக் கிராமத்தில் இனி இருந்தா ராத்திருக்குள்ளத் தீர்த்துக் கட்டிடுவாங்க. திங்ஸ் ஆர் கெட்டிங் ஹாட்'' என்றான்.

''அந்தக் காளிதாஸ் பொட்டியைத் திருப்பிக் கொடுத்தவன் எதுக்கு? சில சமயம் உங்க மூளை வேலை செய்யற பாதை பனாரஸ் சந்துகள் மாதிரி சிக்கலா இருக்கு.''

''ரொம்ப சிம்பிள் லாஜிக்! சதாசிவம் நம்மகிட்டப் பத்துக்கு நாப்பதுன்னு ஏதோ பேரம் பேசினான். என்னன்னு இனிமேச் சொல்லமாட்டான். உஷாராயிட்டான். ஆனா அந்த இன்ஃபர்மேஷனை நாம வேற விதத்தில பிடிக்கப் பார்க்கலாம். காளிதாஸ் கேஸைப் பாரு. யாரோ ஒருத்தன் வந்து தஞ்சாவூர்க்காரரான்னு கேக்கறான். ஆமாங்கறான். 'ஸாம்பிள் கொண்டு வந்திருக்கியா'ன்னு கேக்கறான். கவனி. ஸாம்பிள்!''

''இவன் தன் நாத்த தைல சாம்பிள் தான்னு நினைச்சுக்கிட்டுஆமான்னிருக்கான்.''

''அப்பறம் வியாபாரம். பத்துக்கு நாப்பது! பத்துக்கு நாப்பது என்ன?''

''தெரியாது.''

''ஆனா ஏறக்குறைய சதாசிவம் பேசின 'பத்துக்கு நாப்பது' ''

''அதெல்லாம் சரி பாஸ்! வாட் ஆர் யு எய்மிங் அட்?''

''பஸ் ஸ்டாண்டிலே காளிதாஸ் கிட்ட வந்து பேசினவன் அந்தக் கோஷ்டியில் ஒரு ஆசாமி. இரண்டாவது இந்த பிஸினஸ் ரெண்டு மாசமா நடந்துக்கிட்டிருக்கு...''

''அதாவது ராஜ ராஜன் கிணத்துக்கு முன்னாடியே?''

''ஆமா. என்ன பிஸினஸ், யார் நடத்தறாங்க? தெரியாது.''

''சிலைத் திருட்டுத்தான் பாஸ். அதில சந்தேகமில்லை.''

''என்னால இவ்வளவு ஷ்யூராச் சொல்ல முடியாது. அதைப்பத்தி கவலையும் இல்லை.''

''பொட்டியைக் கொண்டு கொடுத்த ஆள் கிட்ட இருந்து என்ன கண்டு பிடிக்கமுடியும்? ஏதோ ரோட்டில பெட்டியைப் பார்த்திருக்கான். ஒரு உண்மையுள்ள பிரஜை, கடமை உணர்ச்சியோட டாண்ணு போலீஸ் ஸ்டேஷன்ல கொண்டு வந்து கொடுத்துட்டான்.''

''வஸந்த்! மர மண்டை! அவன் அந்தப்பெட்டியை எந்த இடத்தில கண்டுபிடிச்சான் அந்தச் சங்கதி முக்கியமில்லையா?''

''எப்படி?''

''அந்தப் பெட்டியை வாங்கிட்டுப் பிடுங்கிட்டுப் போனவங்க அதைத் தங்களுடைய ஆபீஸுக்கோ டென்னுக்கோ எங்கயோ கொண்டு போய்ப் பிரிச்சுப் பார்த்திருக்கணும். அது உபயோகமில்லை ஆள் மாறாட்டம் ஆயிடுச்சுன்னு தெரிஞ்சதும் விசிறிக்கடாசி இருப்பாங்க. அதனால....''

''புரியுது! பெட்டி கண்டு பிடிக்கப் பட்ட இடத்திலிருந்து சமீபத்தில அந்தக் கோஷ்டியோட இடம் இருக்கு.''

''அதான்!''

''என்ன ஸார் வந்துட்டீங்க?''

''இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து மேஜை அருகில் உட்கார்ந்து,ஸ்...அப்பாடா! காலைல எட்டு மணிக்கு என்ன வெய்யில் பாத்தீங்களா'' என்றார்.

''போன காரியம் என்ன ஆச்சு?''

''சதாசிவத்து வீட்டைத் துப்புரவாப் பாத்துட்டோம். அங்க ஒண்ணும் கிடையாது. ரெண்டு மூணு மாக்கா நெல்லு ஒட்டைப் பாத்திரங்கள் பழைய ஈஸி சேரு....''

''சதாசிவம் எங்க இப்போ?''

''வீட்டுக்குப் போயிட்டான். அங்கதான் படுத்திருக்கான். ஸர்ச் வாரண்ட் வேற இல்லை. இருந்தாலும் அவனை மிரட்டியே எல்லாத்தையும் துப்புரவாப்பார்த்துட்டேன். அவனே சந்தோஷமா எல்லாத்தையும் திறந்து திறந்து காட்டினான். அவன் நேத்து என்ன வெச்சிருந்தாலும் இப்ப இல்லை அது.''

''எங்களைப் பத்தி ஏதாவது கேட்டானா?''

''விசாரிச்சான். நான் சொல்லிட்டேன் அவங்களை அரெஸ்ட் பண்ணி ஸ்டேஷன்லே வெச்சிருக்கேன்னு.''

''தாங்க்யூ.''

''இப்ப என்ன? அந்தப் பொட்டியைக் கொண்டு கொடுத்த ஆளைக் கூட்டியாரணும்.''

''அவ்வளவுதான்.''

''இன்ஸ்பெக்டர்! நீங்க இந்தக் கேஸை ஸால்வ் பண்ணிங்கன்னா உங்க கியாதி பல மடங்கு அதிகமாகிப் பிரமோஷன் கிடைக்கும்....''

''சும்மா ஐஸ் வைக்காதீங்க. இந்த ஸ்டேஷன் இதுவரைக்கும் கொயட்டா இருந்தது. இப்ப என்னவோ எசகேடா ஊர்ல நடந்துக்கிட்டிருக்கு. அதை ஸால்வ் பண்ணறதுக்கு உங்க ஹெல்ப்பையும் எடுத்துக்கிறதில எனக்கு ஒண்ணும் தப்பு இருக்கறதா தெரியலை.''

''கரெக்ட்.''

இன்ஸ்பெக்டர் மறுபடி கேஸ் டயரியைப் பார்த்து விலாசம் குறித்துக் கொண்டு இந்தாளைக் கையோட கூட்டிக்கிட்டு வாங்க'' என்று கான்ஸ்டபிளைப் பணித்தார்.

''அதிகம்காபராப்படுத்தி விட்டுராதீங்க.''

''சரிதாங்க.''

''என்ன சாப்பிடறீங்க? நாஷ்தா எதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம்.''

''என்ன பாஸ் வேண்டாம்! பசி குலையைப் பிடுங்குது. ஒரு டஜன் இட்லி வாங்கிட்டு வரச்சொல்லுங்க.''

''அப்புறம் ஒரு பக்கெட் சாம்பாரா?'' என்றான் கணேஷ்.

''சும்மாருங்க பாஸ். ஸார் தரேங்கறார். அவர் சொன்ன பூமாதிரி இட்லி கொண்டுட்டு வருவாங்க.''

இன்ஸ்பெக்டர் பர்ஸிலிருந்து பணம் எடுத்துத் தந்தது கொஞ்ச ஆச்சரியமாக இருந்தது.

''கணேஷ்! உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லலியே?''

''எனக்கு காஞ்சிபுரத்திலே டிபன் சாப்பிட்டது வயறு சரியில்லே. பட்னி போடலாம்னு பார்க்கிறேன். ஒரு சோடா போதும்.''

''வெறும் வயத்தில சோடாவா? சரிதான்.''

''இன்ஸ்பெக்டர் நீங்க?''

''எனக்கு வீட்ல இருந்து தோசை வரும். கொஞ்சம் ஷேர் பண்ணிக்கலாம்.''

''பார்க்கலாம்'' என்றான் கணேஷ்.

வஸந்த் இட்லியை ரசித்துத் தின்றான். கடைசியில் தண்ணீர் அருந்திவிட்டு ஏவ்... என்று ஏப்பம்.

கணேஷ் இன்ஸ்பெக்டருக்கு வீட்டிலிருந்து வந்திருந்த தோசையில் கொஞ்சம் விள்ளல் மட்டும் சாப்பிட்டுவிட்டுசோடாவை நிராகரித்துவிட்டு அவர் தந்த மோர் கொஞ்சம் அருந்தினான்.

பெட்டி கொண்டு வந்தவனைத் தேடப் போன கான்ஸ்டபிள் ''அந்த ஆள் வீட்டில இல்லிங்க'' என்று திரும்பி வந்து விட்டான். ''தகவல் சொல்லி வச்சிருக்கேன். வந்த உடனே ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி.''

''என்னன்னு சொன்னிங்க? பயங் காட்டலியே?''

''சேச்சே. அதெல்லாம் இல்லிங்க. முன்னே ஒருக்கா பொட்டியை போலீஸ் ஸ்டேஷன்ல திரும்பக் கொடுத்ததுக்கு ரிவார்டு கொடுக்கிறதைப் பத்தி பேச வரச் சொன்னாருன்னு சொல்லி வந்திருக்கிறேன்.''

''சபாஷ்! சரியான கான்ஸ்டபிள் வெ... சிருக்கீங்க.''

''எல்லாம் நம்ம டிரெயினிங் இல்லே?''

''பாஸ்! காஞ்சீபுரத்தில சாப்பிட்ட டிபன் எனக்கும் இப்பத்தான் கொஞ்சம் லேட்டா வேலே செய்ய ஆரம்பிச்சிருக்கு.''

''ஏண்டா?''

''கொஞ்சம் வயத்தை என்னவோ செய்யுது. எக்ஸ்கியூஸ் மி'' என்று ஸ்டேஷன் பின்புறத்துக்குச் சென்றான்.

ஒரு துணுக்..?

⌘ மேஜர்தாசன், ஈரோடு-10

கே. மனிதன் பிறக்கும்போதே இறக்கும்நாளைத் தெரிவித்து விட்டால் எப்படி இருக்கும்?

ப: வாழ்க்கையே மோசமாக இருக்கும். பிறந்த தினத்திலிருந்தே அவன் இறக்க ஆரம்பித்து விடுவான்!

⌘ என். ராமகிருஷ்ணன், திம்மராஜபுரம்

கே. கேள்வி கேட்பவர்களுக்குச் சொல்லும் ஓர் ஆலோசனை?

ப: நம் பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்ற ஒரே எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு நூற்றுக் கணக்கான கேள்விகள் கேட்காதீர்கள். ''என் கேள்விக்கு ஏன் பதில் வரவில்லை?' என்பது மாதிரிக் கேட்காதீர்கள். சினிமா நடிகர், நடிகைகளைப் பேட்டி காணும்போது கேட்கிறார்களே அந்த மாதிரிக் கேட்காதீர்கள். இது கடுகு பதில்களுக்கு மட்டுமல்ல; எல்லா கேள்வி — பதில் பகுதிக்கும் பொருந்தும்.

⌘ ஜிங்கில் கண்ணன், திருச்சி

கே. ஒரு துணுக்?

ப: அண்ணாவின் பெயரையும் அன்பழகன் பெயரையும் சேர்த்து வைத்திருக்கும் அண்ணா அன்பழகன் என்ற வாசகர் வசிக்கும் ஊர்: அந்தணப்பேட்டை!

⌘ கே. எம். இளங்கோ, குப்புச்சிபாளையம்

கே. வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க எல்லா கல்லூரிகளையும் பள்ளிகளையும் சில ஆண்டுகள் மூடி விடலாம் என்கிறேன்?

ப: நல்லவேளை நீங்கள் அமைச்சராக இல்லை. நாடு பிழைத்தது. முன்பு பெட்ரோல் பற்றுக்குறையைப் போக்க ஒரு அதிகாரி யோசனை கூறினார்: பெட்ரோல் விலையை எக்கச்சக்கமாக ஏற்றிவிடலாம் என்றார். வாங்கவே ஆள் இருக்காது; தட்டுப்பாடும் இருக்காது. அந்த அதிகாரி குப்புச்சிப்பாளையக்காரரோ!

⌘ ராஜலட்சுமி மணி, அண்ணாநகர்

கே. மீண்டும் கோகிலா எப்படி?

ப: மீண்டும் கமல்! (அல்லது கமல் மீண்டார்!)

⌘ அன்புமணி, ஈரோடு-9

கே. அன்புமணி, ஈரோடு-9 என்று என் பெயர் கல்கியில் ஒரு தரம் வர வழி பண்ணுவீர்களா?

ப: முடியாது! (இதோ வந்து விட்டதே என்று சொல்லாதீர்கள். நீங்கள் ஒரு தரம் என்றுதான் சொன்னீர்கள். ஆனால் இங்கு இரண்டு தரம் வந்திருக்கிறது!

⌘ கீதா ஜெயராமன், பொகாரோ ஸ்டீல் சிடி

கே. ஏழையின் பலம் எது? பணக்காரனின் பலவீனம் எது?

ப: ஏழையின் பலம் பணமின்மை. அவனது வறுமையே அவனுக்குப் பலம் தருகிறது. 'நம்ப சொத்தை எவன் எடுத்துக்கப் போகிறான்!' என்கிற எண்ணம் அவனுக்குத் துணிச்சல், கவலை இன்மை, தைரியம் எல்லாவற்றையும் அளிக்கிறது. பணக்

கணேஷ் கேஸ் டயரியில் இன்னும் சில எண்ட்ரிகளைப் பார்த்தான்.

''வேற ஏதாவது கேஸ்கள் வெளியூர்க் காரங்க சம்பந்தப்படுத்தி இருக்குமான்னு பார்க்க விரும்பறேன்.... ஸாரி இன்ஸ் பெக்டர். உங்க ஸ்டேஷன் விவகாரத்தில நாங்க அநாவசியமாக் குறுக்கிடறதா நீங்க நினைக்கக் கூடாது.''

''சேச்சே! உங்களை முகத்தைப் பார்த்த துமே தெரிஞ்சுக்கிட்டேன். இதுல எனக் கென்ன? நான் ஒண்டி ஆளா இதைச் சமா ளிக்க முடியாது. ஒத்தாசைக்கு நீங்க வந் தீங்கன்னு அதை நான் ஏன் மறுக்கணும்... ஆஃப்டர் ஆல் நீங்களும் சட்டம் படிச்ச வங்கதானே?''

கணேஷ் மறுபடி ரிஜிஸ்தரில் ஆழ்ந்தான். ''இது என்னங்க கேஸு?''

''ரொம்ப சின்ன விஷயங்க. கேஸு கூட இல்லே. ஒரு ஆளு பஸ் ஸ்டாண்டில நூறு ரூபா நோட்டு கீழ கிடக்கறதைப் பார்த்து அதைக் கொண்டு வந்து எங்க கிட்ட ஒப்படைச்சிருக்கான். ஓனர் வர வரைக்கும் மூணு மாசமாவது காத்திருந்து விட்டு அப்புறம் டிரஷரியில் கட்டணும். இந்த மாதிரி சின்ன கேஸுகள்தான் டயரி யில நிறையக் கிடைக்கும்.''

''நான் தேடறது கொஞ்சம் வித்தியாச மான சம்பவங்களை. இந்தக் காளிதாஸ் மாதிரி வழக்கத்துக்கு மாறு....''

''அப்படி ஒண்ணும் இல்லேன்னுதான் தெரியுது. என்ன பார்க்கறீங்க?''

''வஸந்த் எங்க? போன ஆளை இன்னும் காணமே?''

''என்ன? அங்கேயே உட்கார்ந்துட்டாரா?''

''போய்ப் பத்து நிமிஷம் இருக்காது?''

''இருங்க. கான்ஸ்டபிளைப் போய்ப் பார்த் துட்டு வரச் சொல்றேன்.''

கணேஷுக்கு திடீர் என்று மின் அதிர்ச்சி போல் ஒரு பயம் அடித்தது.

''ஸார்! ஸம்திங் ராங்! இருங்க நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்.''

''நானும் வரேன்.''

இருவரும் போலீஸ் நிலயத்தின் பின் கட்டுக்கு விரைந்தார்கள். சதுர வடிவமாகச் சுமாராக பரேடு பழகக் கூடியதாக சின்ன இடம். அதன் வட கோடியில் ஜி. ஐ. தகடு களால் அமைக்கப்பட்ட கழிவறை இருந் தது. அதன் கதவு ஒன்றும் அவ்வளவு வலு வானதாகத் தெரியவில்லை. மூடியிருந்தது. கணேஷ் அருகில் சென்று ''வஸந்த்! வஸந்த்!'' என்று கூப்பிட்டான். பதில் இல்லை.

''இதுக்குள்ளதான போனாரு?''

கணேஷ் கதவைத் தட்டினான்.

உள்ளே தாளிடப்படாமல் தட்டின சுருக் கில் ஆடியது.

கணேஷ் உள்ளே எட்டிப் பார்த்தான்.

வஸந்த் கன்னா பின்னா என்று வாந்தி எடுத்திருந்தான். அந்தக் குறுகலான இடத் தில் கீழே விழுந்து கிடந்தான். (தொடரும்)

காரனின் பலவீனம் பணம்தான். பணம் இருப்பதால் சுலபமாக இச்சைகளுக்கு அடிமையாகிறான். தவறுகள் செய்யப் பணம் தூண்டி விடுகிறது. பணத்தால், தான் செய்யும் தவறுகளை மூடி மறைக்க முடியும் என்பதால் அவன் மனத்தளவில் பலவீனமடைகிறான்.

✠ ஆர். பி. திருஞானம், கொரட்டி

கே. வேதனை தீர, சோதனை குறுக்கிடாமல் சாதனை புரிவது எப்படி?

ப: உங்கள் கேள்விதனை எத்தனை எத்தனை முறை படித்தாலும் சிந்தனையில் போதனை எதனையும் உருவாக்கிட முடியவில்லை. வேதனை, ரோதனை, சோதனை என்பதனைத் தையும் மறந்து ஊக்கமதனையும் விடா முயற்சிதனையும் கைப்பிடித்தால் பனைத் துணை இல்லாவிட்டாலும் தினைத்துணை சாதனையாவது புரிய முடியும். (பதிலைப் படித்துவிட்டு வந்தனை செய்யாவிட்டா லும் நிந்தனை செய்யாதீர்கள்!)

✠ அன்பு. ரத்தினகுமார், பட்டுக்கோட்டை.

கே. ஜெய்சங்கர் தொடர்ந்து வில்லனாக நடிப்பதைப் பற்றி...,?

ப: எனக்குக் கடுகளவு ஆட்சேபணைகூட இல்லை. எந்தரோல் ஆனால் என்ன? ஆற்றல் இருந்தால் சோபிப்பார்.

✠ டி. எல் ரெட்டி, வேலிடுபட்டி

கே. தாங்கள் கற்றது எவ்வளவு?

ப: கற்றது உலகளவு (கல்லாதது ஈரேழு பதினாலு லோகம் அளவு!)

✠ நீ. ஜனார்த்தனம், திருவனந்தபுரம்


கே. சில கேள்வி - பதில் பகுதிகளில் கேள்விகளையும் தாங்களே எழுதிவிடுகிறார்களாமே.

ப: இருக்கலாம். கடுகு பதில்களைப் பற்றி அப்படிச் சொல்ல முடியாது. கேள்விகள் யாவும் கெட்டிக்காரத் தனமாக இருப் பதே அதற்குச் சான்று.


பரிசு பெறுபவர் :

திருமதி கீதா ஜெயராமன்
2237 வீதி 6, செக்டார் IV-D,
பொகாரோ ஸ்டீல் சிடி-827004.





கனகதாரா
மோதிரம்•டாலர்
வறுமையை விரட்டி லக்ஷ்மி கடாக்ஷத்தை ஏற்படுத்த. ஆதிசங்கரர் இயற்றிய கனகதாரா ஸ்தோத்திரத்தில் குறிப்பிடும் மகாலக்ஷ்மி உருவத்தை மோதிரங்களாகவும், டாலர்களாகவும் பஞ்சலோகத்தில் சாஸ்திரப் பிரமாணத்துடன் தயாரித்து தருகிறோம். இதை அணிவதால் பொருளாதார அபிவிருத்தியும், குடும்பத்தில் சர்வ சௌபாக்கியமும் ஏற்படும் என்பது முன்னோர்கள் கண்ட உண்மை. ஒரு மோதிரம் விலை ரூ. 25 ஒரு டாலர் விலை ரூ. 20 தபால் செலவு தனி. மோதிரம் வேண்டுவோர் விரல் அளவை நூலில் எடுத்து அனுப்பவும். உங்களுக்குத் தேவை மோதிரமா டாலரா என்பதை குறிப்பிட்டு ரூ. 5 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித்தொகைக்கு, பிரசாதத்துடன் கனகதாரா ஸ்தோத்திரமும், பொன்மாரி எனும் தமிழ் பாடலும் மஹாலக்ஷ்மி மூலமந்திரத்தையும் V.P.P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.
சக்தி.ஜி.சம்பந்தன்
"சக்தி நிலையம்" 52, பள்ளிக்கூடம் தெரு
சக்கிரம் பிளாட், பட்டாபிராம்
சென்னை-600072.
சென்னையில் உள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் பெற்றுக் கொள்ள
"போட்டோ வீனஸ்" 47/1 C N K ரோடு.





● கோடைச் சிறப்பிதழுக்குக் கோடை வாசஸ்தலங்களில் ஏதாவதொரு எழிலான காட்சியை அட்டைப் படத்தில் போட்டிருப்பீர்கள் என எதிர்பார்த்தேன். அந்தக்குளுமையான காட்சியை விட இந்த இதமான காட்சி அழகு என்று போட்டுவிட்டீர்களா?

பெங்களூர் ப. மூர்த்தி

● கோடைச் சிறப்பிதழில் இடம்பெற்ற அத்துணைக் கார்ட்டூன்களும் பிரமாதம். குறிப்பாக ''மதுவிலக்குப் பிரசார விழா'' பற்றிய கார்ட்டூன் ரொம்பப் பிரமாதம்.

மதுரை-1 ப. சந்தானம்

● தமிழக அரசு சட்டப் புத்தகத்தில் 'மது விலக்கை' வைத்துக் கொண்டே எல்லோரும் குடிக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்தது போன்ற துக்ளக்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. இதை உங்கள் தலையங்கம் எதிர்க் கட்சித் தலைவர்களின் கூற்றுக்களைக் கொண்டே 'சடையராக' இடித்துக் கூறியிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

மேலப்பாலையூர் சுமாலி

● ஆனைப்பட்ட திராவிட நாட்டுக் கோரிக்கையையே ''தேருத கேஸ்'' என்று அறிந்த நிலையில் கைகழுவிவிட்ட ராஜரீகம் அண்ணு அவர்களுடையது. மதுவிலக்கு வெற்றி-பெருது என்று தெரிந்த பின்னரும் அதைத் தொடர்ந்து அமல்படுத்தாமல் கைவிடுவது அண்ணுவின் தம்பிமார்களுக்கு உகந்த செயலே!

திருச்சி டி. ஆர். அலமேலு

● ஸ்ரீவேணுகோபாலன் அவர்கள் படைத்திருக்கும் 'சுவர்ணமுகி' கதைத் தொடர் ஆரம்பமே விறுவிறுப்புடன் வித்தியாசமான படைப்பாய்ச் செல்கிறது. முதல் அத்தியாயம் முடியும் தருவாயில் இதேபோல் இறுதிவரை விறுவிறுப்புக் காணலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகிருர். 'கோபுலு'வின் ஓவியம் கதைக்கு மேலும் மெருகூட்டியிருக்கிறது.

தஞ்சாவூர் ரத்தன்

● 'கம்ப்யூட்டர்கள் உலகை ஆண்டபோது' முழு நாவல் படித்தேன். — வழிதவறித் திடுமென்று ஏதோ ஒரு விஞ்ஞான உலகுக்குள் நுழைந்து, தட்டுத் தடுமாறி, மலைத்து, பிரமித்து, வியந்து, திகைத்து — கதை முடிந்ததும் அந்த உலகுக்குள் இருந்து தடால் என்று தூக்கி எறியப்பட்டது போல் விழித்தேன்.

சென்னை-11 மணிமகன்

● மற்றைய காதல் கதைகளைப் போல் இல்லாமல், வித்தியாசமாகவும், மிகவும் புதுமையாகவும் இருந்தது பாராட்டுக்குரியது. நாவலுக்கு ஜெயராஜின் கைவண்ணம் அருமை. சித்திரைச் சிறப்பிதழில் அழுத்தமான தன் முத்திரையைப் பதித்து விட்டார் செம்பியன்.

வேலூர் வேணுகோபால்

● மிஸ்டர் செம்பியன்! நான் அதிகம் எதிர்பார்த்தேன் உங்களிடம்! அது என் தவறு!

கொச்சின் எஸ். இராமமூர்த்தி

● ''பங்களா தேசத்தின் புதிய இளம் தலைவி' பேட்டிக் கட்டுரை மிக அருமை. அந் நாட்டின் எதிர்காலம் இந்தப் பெண்மணியின் மூலம் நல்லமுறையில் மலர்ந்தால் அது பங்களா தேச மக்களுக்கு மட்டுமல்ல, உலக மக்களுக்கே சந்தோஷம் தரும்.

நங்கநல்லூர் கா. மு. பாரூக்

● நண்பர்களை ஏப்ரல் முட்டாளாக்கவேண்டுமா? 88ம் பக்கம் பார்க்கவும்... என்பதைப் படித்தவுடன் அப்பக்கத்தில் ஒன்றும் இருக்காது என்று புத்திசாலித்தனமாகத் திருப்பினேன். பிறகுதான் 88ம் பக்கமே இல்லை எனத் தெரிந்தது!

சென்னை-49 வி. வெங்கடாசலம்

● நீங்கள் ஏப்ரல் பூல் பண்ணினீர்கள் அல்லவா? எனக்கு வந்த கோபத்தில் கல்கி வாங்குவதை நிறுத்திவிடலாம் என்று தோன்றிற்று. சிறிது நேரம் கழித்து நானே நினைத்துக்கொண்டேன். ''இவ்வளவு அருமையான விஷயங்களைத் தரும் கல்கியையா என்னல் நிறுத்த முடியும்'' என்று!

சேலம் சுப. சாத்தப்பன்.

● கராத்தே பயிற்சி இவ்வளவு சீக்கிரம் முடிந்து விட்டதில் வருத்தமே. எளிதில் புரிய உதவிய படங்களுடன் என்னைக் கவர்ந்தது. 'டோஜோ'வில் சேர்ந்து பயிலத் துவங்கிய எனக்குப் பெரிதும் உதவியாக அமைந்திருந்தது.


திருச்சி-4 க. விஜயராகவன்

● சல்லிப் பயல் என்பதற்குவிளக்கம் தவறு. சல்லி என்பது நாணயத்தின் மிகக் குறைந்த மதிப்பைக் குறிக்கும். தரக் குறைவாக, முட்டாள்தனமாகப் பேசுபவர்களைச் சல்லியுடன் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். சல்லியனுடைய பேச்சைக் கர்ணன் யுத்த களத்தில் கேட்டிருப்பானேயானல் அர்ஜுனன் கதை முடிந்திருக்கும் என பாரதம் கூறுகிறது. சல்லியன் யுத்த யுக்திகள் தெரிந்த மகா திறமைசாலி.

தஞ்சை உஷாதேவி

வட்டமேஜை

வஸந்த்! வஸந்த்!



16. சின்னதாய் ஒரு வஸ்து

"மை காட்! ஃபுட் பாய்ஸனிங்! ஏன் ஸார், ரெண்டு நாளைக்குள்ளேயே நான் கத்துண்டதெல்லாம் பிராக்டீஸ் பண்ணணுமா? என்ன ஸார் நடக்குது இந்த டவுன்ல?''

''டாக்டர்! ஆசாமி பொளைப்பானுன்னு பாருங்க மொதல்ல!''

''சாப்டதெல்லாம் வெளியே வரணும். அப்புறம்தான் சொல்ல முடியும். என்னத்தைத் தின்னுரு?''

''டாக்டர் ப்ளீஸ்! டூ சம்திங் க்விக்'' என்றான் கணேஷ்.

''பாய்ஸன் என்னன்னு தெரிஞ்சா அதுக்கேத்தாப்ல ட்ரீட் பண்ணலாம். பட்டை அடிச்சாரரா? இப்ப ஸ்டமக் வாஷ் பண்றேன். பொட்டாசியம் பர்மாங்கனேட் யூஸ் பண்ணு அது எதாவது ஒப்பியமா இருந்தா நியூட்ரலைஸ் ஆயிடும். பாருங்கோ அப்புறம் என்னைக் கோர்ட்டுல போட்டு வாட்டிடுவாங்க!''

''ஸார் இது சிம்பிள் ஃபுட் பாய்ஸனிங். இட்லி சாம்பார்ல எதோ கலந்து கொடுத்திருக்காங்க!''

''கிரிமினல் கேஸ் இருக்கா? லாபுக்கு வாமிட் சாம்பிள் அனுப்பணும். டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசருக்கு ரிப்போர்ட் பண்ணணும். பையா! சட்னு போய் ஒரு பொட்டலம் பொடி உப்பு வாங்கிட்டு வா! ஓடு!''

கணேஷ் தவித்தான். நேரமாக நேரமாக வஸந்த் சோர்ந்து போய்க் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. ''ஏய் வஸந்த்!'' என்று அடிக்கடி அவன் கன்னத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான். அவன் மத்தியானப் பூனை போல மறுபடி மறுபடி கண்ணயர்ந்து கொண்டிருந்தான்.

''உயிருக்கு ஒண்ணும் பயமில்லை. ஏற்கனவே நிறைய வாந்தி எடுத்திருக்கார். பூரத்தைக் கீரத்தை கரைச்சுக் குடுத்திட்டாங்களோ எப்படி ஸார்?''

இன்ஸ்பெக்டர் கணேஷிடம் வந்தார். ''நீங்க வேணு ஒண்ணு செய்யுங்க. இந்த டிஸ்பென்சரியிலே அவ்வளவு தீர்மானமாச் சொல்ல முடியாது. இவருக்கு அனுபவம் இருக்கிறதாகவும் தெரியலை. வாந்திக்குத்தான் மருந்து கொடுப்பாரு போல இருக்கு. எனக்கு என்னவோ உயிருக்கு ஆபத்து இல்லேன்னு தோணுது. பளிச்சுனு டவுனுக்கோ மெட்ராஸுக்கோ கூட்டிக்கிட்டுப் போய் வைத்தியம் பார்த்துருங்க. அப்புறம் இங்க வாங்க. நீங்க ரெண்டு பேரும் இங்க இருக்கிறதாலேயே கொஞ்சம் சிக்கல்கள் இருக்காப்பலத் தெரியுது. நான் அந்தக் கடைக்காரப் பயலைப் பல்லைத் தட்டி விசாரிக்கிறேன். முயற்சி உங்க ரெண்டு பேரையும் கொல்லறதுக்குத்தான்னு க்ளீனாத் தெரியுது. நான் உடனே சூப்ரண்டுக்கு மெஸேஜ் சொல்லிடறேன். என்னாலே ஒண்டியா இதைச் சமாளிக்க முடியாது.''

''உவேக்!'' என்றான் வஸந்த். கணேஷ் உள்ளே செல்ல அவனைப் பரிதாபமாகப் பார்த்தான். என்னவோ சொல்ல நினைத்துப் பேச முடியாமல் கஷ்டப்பட்டான்.

''கவலைப்படாதே வஸந்த். இன்ஸ்பெக்



சுஜாதா

டர் கிளியரன்ஸ் கொடுத் திட்டார். உனக்குக் கொஞ் சம் பெட்டரான உடனே நாம ஊருக்குப்புறப்பட்டுப் போயிட லாம்.''

வஸந்த் புன்சிரிப்பில் கண் மயங்கினான். நெற்றியைச் சுருக் கிக் கொண்டுமறுபடி'உவேக்!'.

''பத்திங்களா மஷ்டு எல் லாம் வெளியே வருது. எதோ பாக்டிரியல்பாய்ஸனிங் மாதிரி த்தான் தெரியுது. எதுக்கும் கெமிக்கல்எக்ஸாமினேஷனுக்கு நாலு அவுன்ஸ் வாமிட்எடுத் துத் தனியா பாட்டில்ல வெச் சிருக்கேன். அவங்க கண்டு பிடிச்சுருவாங்க. என்ன வஸந்த் எப்படி இருக்கீங்க?''

இன்ஸ்பெக்டர், ''நீங்க அழைச்சுக்கிட்டுப் போயிட்டுக் குணமானதும் சீக்கிரம் திரும்பி வந்திருங்க. கேஸு பாதில நிக்குது. உங்க ஸ்டேட்மெண்ட் எல்லாம் பதிவு பண்ணிக்கணும் என்றார்.''

''நிச்சயம் வருவோம் ஸார். எங்க மேலே ரெண்டு முறை முயற்சி நடந்திருக்கு. யாரு அந்தப் பார்ட்டின்னு கண்டு பிடிக்க எனக்கு ரொம்ப ஆவலா இருக்குதுங்க!''

''அந்த காளிதாஸ் பொட்டியைத் திருப் பிக் கொடுத்த ஆள் வந்திருவான் இப்ப.''

''அவங்கிட்ட இது மட்டும் கேட்டு வெச் சுக்குங்க. அந்தப் பெட்டியை எக்ஸாக்ட்டா எந்த இடத்தில, எந்த ஸ்பாட்ல கண்டு எடுத்தான்னு கேட்டு விசாரிச்சுக்குங்க. இப் போதைக்கு அது போதும்.''

''நீங்க வரதுக்குள்ள உங்களுக்கு விஷம் கொடுக்க முயற்சி பண்ணவன் யாருன்னு கண்டு பிடிச்சு வச்சுக்கறேன். கவலைப் படாதீங்க.''

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ வந் துர்றோம். இந்தாங்க என் கார்ட். அப்படி ஏதாவது அர்ஜண்டா வேணும்னு காண்



சதா இப்படி சண்டை போட்டுக் கிட்டே இருந்தா எப்படி? ஒரு மாறுதலுக்காக வாவது . . .

62ம் பக்கம் பார்க்க

டாக்ட் பண்ணுங்க. டெலிபோன் நம்பர் கூட இருக்கு.''

மறுபடி அவர்கள் சென்னைக்குக் கிளம்பும் போது மணி மூன்றாகி விட்டது. கணேஷ் காரை ஓட்டிக் கொண்டு செல்ல வஸந்த் பின்னால் விஸ்தாரமாகப் படுத்திருந்தான்.

''அதிர்ஷ்டசாலிடா நீ.''

''இட்லி தின்னதுக்கா?''

''இல்லே. செத்துக் கித்துப் போகாம பொழைச்சதுக்கு. ராத்திரியே நம்ம மேல கரு கட்டிண்டு கத்திக் குத்துக்கு வந்து தலையணையைக் குத்திட்டுப் போயிருக்காங்க. காலைல...''

''காலைல நம்மை ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்திருக்காங்க பாஸ். அந்தப் பையனை விசாரிச்சீங்களா ஏதாவது?''

''எந்தப் பையனை?''

''அதான். அழகான இட்லி சாம்பார் வாங்கிட்டு வந்தானே சோக்ரா.''

''எல்லா விசாரிப்பும் திரும்பி வந்ததுக்கு அப்புறம்தான்; இன்ஸ்பெக்டர் பார்த்தார். அவருக்கு உள்ளூர் டாக்டர் மேலே நம்பிக்கை இல்லே. போய்க் குணமானதும் வந்தாப் போதும்னு அனுப்பிச்சுட்டார்.''

''மெட்ராஸ் போயிட்டுத் திரும்பி வர்றமா பாஸ்?''

''ஆமா. வந்தாகணும்.''

''எக்கேடு கெட்டுப் போகுதுன்னு விட்டுட்டா என்ன?''

''அவங்க என்ன நடத்தறாங்கன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா? தோல்வியை ஒப்புக் கொண்டுடறதா?''

''லோகத்தில எத்தனையோ கெட்ட காரியங்கள் நடக்கறது. எல்லாத்தையுமா நாம கவனிக்க முடியும்?''

''இந்தக் காரியம் நம்ம பாதையில குறுக்கிட்டதால அதுல நமக்கு ஒரு இன்வால்வ்மெண்ட் வந்துடுத்தே.''

''பார்க்கலாம். முதல்ல பாடி ஒழுங்கில வரட்டும். இப்பத்தான் பாஸ் புரியுது எனக்கு.''

''என்ன?''

''ஒரு சப்பிப்போட்ட மாங்கொட்டை எப்படி ஃபீல் பண்ணும்கிறது.''

''வாந்தியெல்லாம் நின்னு போச்சோல்லியோ?''

''சொல்லாதீங்க. 'வா'ன்னு ஆரம்பிச்சாலே வயத்தைச் சங்கடம் பண்றது.''

''கரப்பாம்பூச்சி மாதிரிடா நீ! உன்னை லேசிலே கொல்ல முடியாதுடா.''

''ஏதோ முதல் தடவையாவது நீங்க காப்பாத்தினீங்க.''

''இரண்டாவது முறையும் சுலபமா சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனா இவ்வளவு கிட்ட வந்து போலீஸ் ஸ்டேஷன்லேயே முயற்சி ஒண்ணு நடக்கும்னு எதிர்பார்க்கலே.''

''பாஸ்! ஒரு சமயத்தில நான் அந்தக் கக்கூஸ்ல இருக்கறப்போ ஏறக்குறைய செத்தே போயிட்டேனா? எமனை கூடப் பார்த்தேன். எருமை மாட்டில ஒண்ணும் கன்னங் கருக்க வரலே. நல்லா டை கட்டிண்டு 'என்னங்க கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டிங்களே. ரிஸர்வேஷன் இல்லியே உங்களுக்கு'ன்னு கேட்டாங்க. பாஸ்! போன உடனே இனியாவுக்குப் போன் பண்ணிக் கொஞ்சம் சிசுருஷை பண்ண வரச் சொல்லிடுங்க, என்ன?''

''இன்னிக்குத்தான் அவளைப் பொண் பார்க்க வந்திருப்பாங்கன்னு சொன்னதா ஞாபகம்.''

''ஓ! அது வேறே சிக்கல் இருக்கு இல்லே? பாஸ்! நீங்கதான் எனக்குக் காதல் பாதையில இருக்கிற கரடு முறடை நீக்கி ஒத்தாசை பண்ணணும். ஏற்கனவே இட்லியைச் சாப்பிட்டு நொந்து போயிருக்கேன்.''

''முதல்ல உடம்பு குணமாயிடட்டும். அப்புறம் உன் காதலைப் பார்க்கலாம்.''

''அதுகூடச் சரிதான். சுவத்தை வெச்சுண்டுதானே ஒண்ணுக்கடிக்க முடியும்?''

''ஆரம்பிச்சுட்டியா உன் பழமொழிகளை? அப்பன்னா உனக்குச் சரியாய்க்கிட்டு வரதுன்னு அர்த்தம்.''

''இனியாவை, நெருங்க நெருங்கவே எனக்கு இம்ப்ரூவ் ஆய்க்கிட்டே வருதுபாஸ்.''

வஸந்தைப் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்துவிட்டு அங்கிருந்து கணேஷ் பேராசிரியர் வீட்டுக்குப் போன் செய்தான்.

''என்ன கணேஷ்?''

''ஸார், உங்க ராஜ ராஜன் கிணறு விவகாரம் ரொம்ப ஆழமாப் போய்டுத்து.''

''என்ன ஆச்சு? வேற ஏதாவது சம்பவங்கள் நடந்ததா?''

''நிறைய ஸார்! அதுக்கப்புறம் ஒரு ஆள் அடிபட்டு, நாங்க ரெண்டு பேரும் கத்திக் குத்துப்பட இருந்து, இன்னிக்கு காலைல ரெண்டு பேரும் பாய்ஸன் ஆக இருந்து, வஸந்த் விஷத்தைச் சாப்பிட்டதில தப்பிச்சு, என்ன ஸார் இதெல்லாம்?''

''ஐ ஆம் ஸோ ஸாரி. ஹௌ இஸ் ஹி நவ்?''

''பெட்டர். என்ன ஸார் அந்தக் கிணத்தில மாயம்? 'ஒரு பாசி படிஞ்ச கிணத்துக்காக இத்தனை ரகளை நடக்குமா'ன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு. இல்லை நாம் முக்கியமா ஒரு விஷயத்தைத் தப்ப விட்டிருக்கோமா?''

''நானும்தான் எல்லா ரிக்கார்ட்ஸையும் பார்த்துட்டேன் கணேஷ். கிணத்தில ஏதும் டிரஷர் இருக்கிறதாப் பேச்சே இல்லை.''

''ராஜன் ராஜன் கிணறுன்னு அது ஒண்ணுதானே?''

''அது ஒண்ணுதான், எனக்குத் தெரிஞ்ச வரைக்கும். ஏன்?''

''வேற ஜில்லால வேற ஏதாவது கிணறு?''

''எனக்கென்னவோ அது சரித்திர சம்பந்தமான விவகாரம் இல்லைன்னு தோணுது.''

''யு ஆர் ரைட்! எதுக்கும் பார்க்கலாம். இனியா இல்லையா? வஸந்த் மெஸேஜ் கொடுக்கச் சொன்னான்.''

''இருக்கா. கூப்பிடட்டுமா?''

''மாப்பிள்ளைப் பையன் வரலையா?''

''இல்லை. பிளேனை மிஸ் பண்ணிட்டானாம். இனியாவோட பேசுங்க.''

''ஹாய் கணேஷ்! எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா?''



அருள் வாக்கு

குருடன் கையில் விளக்கு!

குருடன் ஒருவன் கையில் லாந்தருடன் போய்க் கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன், ''உனக்குத்தான் கண் தெரியவில்லையே, லாந்தர் ஏன் எடுத்து வருகிறாய்?'' என்று கேட்டான். அதற்குக் குருடன், ''எனக்குக் கண் இல்லாவிட்டாலும் உனக்குக் கண் இருக்கிறதல்லவா? அதற்காகத்தான் இதை எடுத்து வருகிறேன். இல்லாவிட்டால் இந்த இருட்டில் நீயே என்மேல் தடுக்கி விழுந்திருப்பாயே!'' என்றானாம். அது போல, பழைய சாஸ்திரங்கள் நமக்குப் புரியாவிட்டாலும், எதிர்காலத்தில் யாருக் காவது புரியலாம், பயனாகலாம் என்பதனாலாவது அவற்றை நாம் ரட்சித்தாக வேண்டும் ''வசதியே இல்லாத காலங்களில் யுகாந்தரமாக ரட்சிக்கப்பட்ட சாஸ்திரங்களை நமக்கு முதல் தலைமுறையினர் எல்லா வசதி இருந்தும் காப்பாற்றாமல் அழித்து நம்மை வஞ்சித்து விட்டார்கள்'' என்று வருங் காலத் தலைமுறையினர் நம்மைக் குற்றம் சொல்ல இடம் வைக்கலாமா?

பழைய காலங்களில் சாஸ்திர ரட்சணம் அரசர்களின் பொறுப்பில் இருந்தது. இப்பொழுது ராஜாக்கள் இல்லை; ராஜ்ய மத்ய சர்க்கார்கள்தாம் உள்ளன. அவற்றுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பக்கம் பாஷைசண்டை, ஒருபக்கம் எல்லைச் சண்டை. ஏகப்பட்ட பாலிடிக்ஸ், ஊழல் இப்படிப் பல கஷ்டங்கள். அந்தக் காலத்தில் ஒரு ராஜாவுக்கும் இன்னொரு ராஜாவுக்கும் சண்டை நடந்தது என்றால், இப்பொழுது ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யத்துக்கும் சண்டை, ஒரு வர்க்கத்துக்கும் இன்னொரு வர்க்கத்துக்கும் சண்டை, ஒரு கட்சிக்கும் இன்னொன்றுக்கும் மண்டை உடைகிறது. எனவே அரசாங்கத்தை சாஸ்திர ரட்சணத்துக்கு எதிர்பார்த்துப் பிரயோசனமில்லை. 'சுற்றுப்புறத்தில் எல்லாம் ஒரே பூசல்; குடும்பத்திலும் தொல்லை' என்று நாம் தட்டிக் கழிக்கக் கூடாது. வனவிலங்குகளைப் பாருங்கள். சிங்கம் புலியை அடிக்கிறது; புலி மானை அடிக்கிறது. இருந்தாலும் காட்டிலே சிங்கக் குட்டியும், புலிக் குட்டியும், மான் குட்டியும் வளர்ந்துகொண்டும் விளையாடிக் கொண்டும் தான் இருக்கின்றன. அப்படி இருக்க நாம் பழக வேண்டும். எத்தனை இடையூறுகள் இருப்பினும் நமக்கு எதிர்காலத்தினரிடம் உள்ள கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து, பழைய சாஸ்திரங்களை ரட்சித்துத் தரவேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

''நல்லாத்தாம்மா இருக்கேன்.''

''வஸந்த் நல்லா இருக்காரா?''

''அவர் நல்லா இல்லை. ஆஸ்பத்திரியில படுத்திருக்கார்.''

''அப்படியா? என்ன ஆச்சு?''

கணேஷின் தோளருகே இருந்த வஸந்த் ''சொல்லுங்க பாஸ்! குத்துயிரும் குலை உயிருமாப் படுத்திண்டிருக்கான். டாக்டர் இது ஒரு விஷ ஜுரம், ராத்திரி பன்னண்டு மணிக்கப்புறம்தான் பிழைக்குமா இல்லையான்னு சொல்ல முடியும்னு...''

கணேஷ், ''ஃபுட் பாய்ஸனிங் ஆய்டுச்சு. ஹி கேவ் மி ஸம் அன்க்ஸைட்டி. முடிஞ்சா வந்து பாரேன்'' என்றான்.

''வரேன் கணேஷ்! நிச்சயம் வரேன்னு சொல்லுங்க. அதுவரைக்கும் அவரைப் பாத்துக்குங்க.''

டெலிபோனை வைத்தான். ''என்ன பாஸ் ஸ்ட்ராங்காவே சொல்லை நீங்க.''

''பொய் சொல்லி வரவழைக்கிறது நல்லதல்ல வஸந்த். எனக்கு ராஜேந்திரனைக் கொஞ்சம் பார்க்கணும்.''

''உடனே வரேன்னாளா?''

''வருவா வருவா. ஏன் அவசரப் படறே?''

இனியா வரும்போது வஸந்த் கண் மூடிப் படுத்திருந்தான். ''வஸந்த்! வஸந்த்!''

பதில் இல்லை. கிட்ட வந்து தொட்டுப் பார்த்தாள். ''சிஸ்டர்! சிஸ்டர்!'' என்று கூப்பிட்டாள். மூக்கருகில் கைவைத்துப் பார்த்தாள். என்ன இது மூச்சு இல்லையா... ''சிஸ்டர்!''

''என்னம்மா?''

''இந்த பேஷண்டைப் பாருங்க.''

''இந்த பேஷண்டு அப்பவே இறந்து போயிட்டாருங்களே.''

''அய்யய்யோ!'' என்று திரும்ப, வஸந்த் எழுந்து உட்கார்ந்து ''ஹாய்!'' என்றான்.

''போங்க வஸந்த்! என்னைப் பயமுறுத்திட்டிங்க.''

''நிஜமாவா இன்னி பயந்தியா?''

''ஆமாம்.''

''படக்கு படக்குன்னு உன் மார் அடிச்சுண்டுதா?''

''பின்னே?''

''எங்க, நான் பார்க்கலாமா? எப்படி புரு மாதிரியா? தொட்டுப் பார்க்கலாமா?''

''என்ன ஆச்சு வஸந்த்?''

''ஏன் கேக்கறே?உக்கல் பூரா ஒரே வெட்டுப் பழி குத்துப் பழி. போதாக் குறைச்சுப் பாய்ஸன்கள். ஏதோ பாதாள பைரவில வரமாதிரி எந்த மூலையை எடுத்தாலும் டேஞ்சர். ஆமா மெட்ராஸ் டேஞ்சர் என்ன ஆச்சு?''

''ப்ச்! அந்த ஆள் வரலையாம். பிளேனை மிஸ் பண்ணிட்டாங்களாம்.''

''ஹைஜாக் பண்ணலையா? அப்ப இன்னும் பொண் பாக்க வரலை?''

''இல்லை.''

''எனக்கு இன்னும் சான்ஸ் இருக்கு?''

''உனக்குத்தான் சான்ஸ் வஸந்த்!''

வஸந்த் வாயில் இரு விரல்களைப் பின் பக்கமாகச் சொருகிக் கொண்டு ''உய்யு

உய்'' என்று அழுத்தமாக விசில் அடித்தான். வார்டே திரும்பிப் பார்த்தது.

''அய்யோ என்ன இது டெண்ட்டுக் கொட்டாய் மாதிரி?''

''இனியா, உக்காந்துக்கோ! ஆஸ்பத்திரியில படுத்துண்டிருக்கேன். என்ன நீ ஒரு இளனி வாங்கிண்டு வராம வந்திருக்கே. அட ஒரு சாத்துக்குடி?''

''அவசரத்தில அலறி அடிச்சுண்டு ஓடி வந்தேன் வஸந்த்.''

''அப்ப நான் செத்துப் போனு நிச்சயம் அழுவியா நீ?''

''அய்யோ! நிறைய.''

''உண்மைக் காதல்னுஇதுதானேஇன்னி!''

''ஆமா வஸந்த்.''

''எனக்கு மருந்து வாங்கறதுக்குக் காசில்லேன்னு மோதிரம் ஏன் தாலி எல்லாத்தியும் வித்து எனக்கு பிஸ்மத் மிக்சர் வாங்கிண்டு வருவியா இன்னி?''

''எனக்கு உடம்பு சரியில்லேன்னு நீ எதை விப்பே?''

''நானு? என் வலது கையை! ஹ!'' என்றுன் வஸந்த். ''இனியா, ராத்திரி எப்படி சவுகரியம்? இங்கயே தங்கருப்பலதானே? பிரைவேட் நர்ஸிங் ஹோம். அலவ் பண்ணுவா. வேற ஒண்ணும் இல்லே. ஆசாமி பார்க்கறதுக்கு சியர்ஃபுல்லா இருந்தாலும் ஸிம்ப்டம்ஸ் எல்லாம் இன்னும் இருக்கு. ராத்திரி பன்னண்டு மணி போனப்புறம்தான் சரியா நிச்சயமாச் சொல்ல முடியும்னு சொல்லிட்டுப் போயிருக்கார் டாக்டர். இந்த நிலேயில என்னைத்தனியா விட்டுட்டுப்போறது எவ்வளவு துரம் ஸேஃப்புன்னு யோசிச்சுப் பாரு.''

''கணேஷ் இல்லேயா?''

''அவர் எங்கயோ வெளில போயிருக்காரு. வரதுக்கு ராத்திரி ஒரு மணியாகும்னு சொன்ஞர்.''

''ஹாய் இனியா!'' என்று கணேஷ் வந்தான். ''ஏன் பேஸ்த் அடிச்ச மாதிரி இருக்கே வஸந்த்?''

''கணேஷ்! வஸந்துக்கு நிஜமாகவே சீரியஸா இருக்கா? ராத்திரி பன்னண்டு மணி கெடு வெச்சிருக்காரா டாக்டர்?''

''இல்லியே?''

''பாஸ் நீங்க இல்லே அப்ப!''

''ஒண்ணுமில்லே. குத்துக் கல்லாட்டமா இருக்கான்!'' வஸந்த் தன்னை முறைப்பதைக் கவனிக்காமல் ''வஸந்த்! ஒரு முக்கியமான விஷயம் கண்டு பிடிச்சேன். நீ அந்த சதாசிவத்தின் வீட்டுப் பின்கட்டில கிடந்ததுன்னு சின்னதாய் ஒரு வஸ்துவைப் பொறுக்கிக்கொண்டு வந்த பாரு? அதை கெமிக்கல் அஞலிஸிஸ் பண்ணி அது என்னதுன்னு கண்டுபிடிக்க வெச்சுட்டேன். ஸம்திங் வெரி இண்ட்ரஸ்டிங்'' என்றுன். (தொடரும்)



கண்ணீர்ப் பூக்கள்

◘ மு.மேத்தாவின் அழகான தலேப்பை 'இதயம்' காரர்களுக்குப் பின் இவர்களும் உபயோகித்துள்ளார்கள். சிவசங்கரியின் 'ஆயுள் தண்டனே' என்ற நாவல் கண்ணீர்ப் பூக்களாகியிருக்கிறது. இதுபோன்று நாவல்களே நிறையப் படமாக்கினுல் செத்துக் கொண்டிருக்கும் தமிழ்ப் படம் மெல்லத் தலேதூக்கும்.

மனேவியை இழந்த கணவன் குழந்தைக்காக இரண்டாம் திருமணம் புரிகிருன். அவளோ சந்தர்ப்பத்தால் சிவப்பு விளக்கைத் தற்காலிகமாக எரிய விட்டவள். என்னதான் பெரிய மனத்துடன் இருந்தும் நிஜங்களே எதிர்கொள்ள முடியாத கணவன் வார்த்தைகளே விரயம் செய்ய அவள் குழந்தையுடன் ஓடிவிடுகிருள். குழந்தையையும் தவருன வழியில் வளர்த்துக் காட்டுவதாக மிரட்டுகிருள். எல்லாம் பேச்சுக்காகத்தான். ஆனுல் கணவன் படும் அவஸ்தை அவனுக்கு ஆயுள் தண்டனே.

விஜயனும் ஸ்ரீப்ரியாவும் பொருத்தம். உணர்ந்த நடிப்பு. விஜயனின் தீர்க்கமான சந்தேகங்கள், பார்க்கும் குழந்தைகளேத் தன் குழந்தையாக நினேப்பது உருக்கம். பரிதாபத்தைச் சம்பாதிக்கும் ஸ்ரீப்ரியா. ரூபா கௌரவ வேடத்தில் தலேகாட்டுவதால் தப்பிக்கிருேம்.

மனேரமா அனுமந்துவின் ஒரு நாள் அக்கவுண்டண்ட் கூத்து தொடர்ந்திருக்கலாம். பல வருடங்களே விழுங்கும் பாடல் சோதிக்கிறது

நிறைய இடங்களில் குறிப்பாகக் குழந்தை பேசும் இடங்களில் ஒட்டாத ஒலிப்பதிவு.

ரங்காவின் சிறப்பான கேமரா உழைப்பு.

எ ஃபிலிம் பை ராஜசேகர். படம் நமக்கு ஆயுள் தண்டனேயாக இல்லே. பாராட்டு என்னமோ சிவசங்கரிக்குத்தான்.

—நளினி சாஸ்திரி

இவன் எதற்காக

ராஜேஷ்குமார்

வாழையும், தென்னம்பாளையும், கமுகும் வழியும் கல்யாண மண்டப வாசல்!

வரவேற்புக்காக – கையில் பன்னீர் செம்போடு நின்றிருந்த அந்த நடுத்தர வயது மனிதர் தேவு வருவதைப் பார்த்ததும் அவன் மேல் பன்னீர் தெளிப்பதா வேண்டாமா என்று ஒரு விநாடி தயங்கிய பிறகு, சட்டென்று முடிவுக்கு வந்தவராய், பன்னீர் செம்பைக் கீழே தாழ்த்திக் கொண்டார். சந்தனப் பேலாவை கையில் வைத்தபடி நின்றிருந்த அந்தப் பெண்ணும் தேவுவைப் பார்த்துவிட்டு முகம் சுளித்துப் பேலாவை நீட்டாமல் விட்டாள்.

தேவு தனக்குள் சிரித்தபடியே அவர்களைக் கடந்து மண்டபத்துக்குள் நுழைய ஆரம்பித்தான்.

பன்னீர் செம்பு கிசுகிசுத்தது. ''அவன் வந்த ஜோரைப் பார்த்தீங்களா ராமசாமி?''

''உம்...உம்... பார்த்தேன், பார்த்தேன். வெக்கம், மானம், சூடு, சொரணை ஒண்ணுமே இல்லாத ஜென்மம் அது. எல்லாத்தையும் விட்டு விட்டு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு வர்றான்! கல்யாணத்துக்கு வரச் சொல்லி இவனை யாரு வெத்திலே பாக்கு வேச்சு அழைச்சா?''

''அப்படியே அழைச்சிருந்தாலும் இவன் வந்துடறதா? கல்யாணப் பெண்ணுக்கு இவன் தாய் மாமன் என்கிற உறவுல ஏதோ ஒப்புக்கு ஒத்தை வெத்திலையையும், சொத்தைப் பாக்கையும் வெச்சு வாய் வலிக்காம அழைச்சிருப்பாங்க... நம்மளையும் மதிச்சு அழைச்சிருக்காங்கங்கற மமதையிலே இவனும் வந்துட்டான்...''

தேவுவின் காதுகளில் ஒரு அட்சரம் பிசகாமல் வார்த்தைகள் துல்லியமாய் விழுந்தன. விடுவிடுவென்று உள்ளே போனான்.

கல்யாண மண்டபத்தின் சரி பாதியை ஆண்கள் அடைத்துக் கொண்டு அமர்ந்திருக்க – மீதிப் பகுதியைப் பெண்கள் ஆக்கிரமித்திருக்க – நடுவில் மணவறை பூக்குவியலாய்த் தெரிந்தது.

அவன் உள்ளே நுழைந்து உட்கார இடம் தேடினான்.

தேவுவைப் பார்த்ததும் பெண்கள் பகுதி கிசுகிசுப்பான குரல்களில் சளசளக்க ஆரம்பித்தன. அத்தனை ஜோடி விழிகளும் அவன் மீதே மொய்த்தன.

தேவு அந்தச் சலசலப்பைப் பொருட்படுத்தாதவனாய் – ஆண்கள் பகுதியில் காலியாய் இருந்த இடத்தில் உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்த அடுத்த விநாடியே–

அவனுக்கு அருகில் உட்கார்ந்திருந்த ஒருவன் அவசர அவசரமாய் எழுந்து வெளியே போய் நின்று கொண்டான். அவனைத் தொடர்ந்த தேவுக்கு முன்புறமும், பின்புறமும், பக்கவாட்டிலும் அமர்ந்திருந்தவர்கள் திடீரென்று காணாமல் போனார்கள்.

கூட்டம் நெரியும் அவ்வளவு பெரிய கல்யாண மண்டபத்தில் அவன் உட்கார்ந்திருந்த இடம் மட்டும் ஒரு தீவு மாதிரி தெரிந்தது.

''இப்படி யெல்லாம் சபையிலே வந்து உட்கார ஒரு தில்லு வேணும்...''

''பாரேன்...மனசிலே கொஞ்சம் கூட உறுத்தலே இல்லாமே 'ஜம்'ன்னு உட்கார்ந்திருக்கான்...'' தேவுவின் காதுகளில் எல்லா வார்த்தைகளும் பட்டு, மனசுக்குள் போகாமல் வெளியே நின்றன.

''பெண்ணையும் மாப்பிள்ளையையும் மணையில உட்காரச் சொல்லுங்க... உம்... நாழியாறது...'' – மணவறையில் இருந்த அய்யர் சத்தம் போட்டார்.

பெண்ணை அழைத்து வருவதற்காக எழுந்த தேவுவின் அக்கா – மகாலட்சுமி – தேவுவைப் பார்த்ததும் சட்டென்று ஒரு விநாடி முகம் மாறினாள். பெண்ணை அழைத்து வருவதற்காகத் தன் நாத்தனாரை அனுப்பிவிட்டு அவனை நெருங்கினாள். அவனுக்கருகே குனிந்து கிசுகிசுத்தாள்.

''ஏண்டா தேவு? முகூர்த்தம் முடிஞ்ச பின்னாடி வந்திருக்கலாமே? இந்தக் கூட்டத்தில நீ அவசியம் வந்திருக்கணுமா?''

அக்கா மகாலட்சுமியின் வார்த்தைகள் மனசுக்குள் சாட்டை அடியாய்ச் சுரீரென்று பட்டாலும் தேவு அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான். ''அக்கா! எனக்கு நீ வெத்திலை பாக்கு வெச்சுக் கல்யாணத்துக்கு 'வா'ன்னு அழைச்சப்ப இந்த வார்த்தையை நீ சொல்லலியே...? சொல்லியிருந்தா முகூர்த்தம் கழிஞ்சு மண்டபம் காலியா இருக்கிற நேரத்தில வந்திருப்பேன்.



வந்தான்?

ம்... பரவாயில்லே. வந்தது வந்துட்டேன். ஒரு மூணும் மனுஷஞ இருந்து — ருக்மிணி யோட கழுத்தில தாலி ஏர்றதைப் பார்த் துட்டு உடனே புறப்பட்டுப் போயிடறேன்.''

மகாலட்சுமி மனக் கசப்போடு எழுந்து மணவறைப் பக்கம் போனுள்.

கல்யாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் மணவறையில் வந்து அமர்ந்தாயிற்று.

மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்த அய்யர் அப்போதுதான் அதைக் கவனித் தார். புஷ்பமும் பழமும் இருந்த தட்டில் இன்னமும் திருமாங்கல்யம் வைக்கப்பட வில்லையே?

மஞ்சள் நீரில் நனைக்கப்பட்ட 'மொட மொட'வென்ற வேஷ்டியிலும் மேல் துண்டி லும் மணவறைப் பக்கமாக நின்றிருந்த மகா லட்சுமியின் கணவர் நாகரத்தினத்தை அழைத்தார். சொன்னுர்.

''மாங்கல்ய சூத்திரத்தைக் கொண்டு வாங்கோ.''

நாகரத்தினம் மகாலட்சுமியைப் பார்த் தார். அவள் புரிந்து கொண்டு மண்டப அறையில் இருந்த காட்ரேஜ் பீரோவை நோக்கி பட்டுச் சேலை சரசரக்க வேகமாக நடந்தாள். நேற்றைக்குச் சாயந்திரமே சம் பந்தி அம்மாள் வெற்றிலை பாக்கு புஷ்பத் தோடு மாங்கல்ய சூத்திரத்தை மகாலட்சுமி யிடம் கொடுத்துப் பீரோவில் பத்திரமாய் வைக்கச் சொல்லி யிருந்தாள்.

அரக்கப் பரக்க அறைக்குள் ஓடி பீரோவை நெருங்கிய மகாலட்சுமிக்கு அப்போதுதான் உறைத்தது. சாவி அவள் கணவரிடம் அல்லவா இருக்கிறது?

திரும்பவும் கணவரிடம் வந்தாள். ''என்னங்க... பீரோ சாவி குடுங்க...''

நாகரத்தினம் திரும்பினுர். புருவங்கள் உயரக் கேட்டார்.

''பீரோ சாவியா? எங்கிட்ட ஏது? ருக் மணிக்கு நகை எடுக்கணும்னு சொல்லிக் கொஞ்ச நேரத்துக்கு முன்னுடிதானே நீ சாவியை எங்கிட்ட யிருந்து வாங்கிண்டே!''

மகாலட்சுமிக்குத் திக்கென்றது.

'ஆமாம்... அவர் சொல்றது வாஸ்தவம் தான். நான்தான் அப்பவே சாவியை வாங் கிட்டேனே!' — படபடப்பாய் வந்தது அவ ளுக்கு. சாவியைச் செருகி வைத்த இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். அது வெறிச்சென் றிருந்தது. இந்தக் கூட்டத்தில் அங்குமிங் கும் அல்லாடியதில் அந்தச் சாவி எங்கே விழுந்ததோ?

''என்னடி முழிக்கிறே?'' — நாகரத்தினத் துக்குக் கோபம் வந்தால் கண்மண் தெரி யாமல் வார்த்தைகள் வரும்.

''சாவியைக் காணுேங்க...'' — வியர்த்த முகத்தோடு குழறினுள் மகாலட்சுமி.

''என்னடிஉளர்றே?சாவியைக் காணுேமா? இடுப்பிலே செருகி வச்சிருந்த சாவிக்கு றெக்கை முளைச்சுப் பறந்து போயிடுச்சா?''— அவளை நெருங்கினுர் நாகரத்தினம்.

அய்யர் கோபமாய்க் குறுக்கே புகுந்தார். ''என்ன 'குசுகுசு'ன்னு பேசிட்டு நேரத்தைக் கடத்தறேள்? மாங்கல்ய சூத்திரத்தைக் கொண்டாரச் சொல்லி எத்தனை நாழி ஆயி



டுத்து? சட்டுப் புட்டுனு போய்க் கொண்டு வராமே என்னத்தைப் பேசிட்டு நிக்கறேள்? இன்னிக்கு திங்கட் கிழமையாக்கும். ராகு காலம் ஏழரை மணிக்கு வந்துடுமே! அப் பவா தாலியைக் கட்டுவேள்?''

நாகரத்தினம் அய்யரிடம் குனிந்தார். ''இதோ சாமி! ரெண்டு நிமிஷத்தில கொண் டாந்துடறேன்...'' — என்றவர் மனைவியின் பக்கமாய்த் திரும்பி ''ரூமுக்குப் போ. நான் வர்றேன்'' என்ருர்.

மகாலட்சுமிக்கு அடிவயிற்றைப் பிசைய ஆரம்பித்தது.'அம்மா! தாயே!சாமுண்டேஸ் வரி! முகூர்த்த நேரத்திலே இதென்னம்மா சோதனை!' மனசுக்குள் புலம்பினுள்.

அறைக்குள் நுழைந்த நாகரத்தினம் மகா லட்சுமியைப் பார்த்து உறுமினுர். ''நல்லாத் தேடிப் பாருடி!... சேலையை அவுத்து உதறிப் பாரு!''

''பார்த்துட்டேங்க... கூட்டத்திலே எங் கியோ விழுந்துடிச்சு...''

நாகரத்தினம் பற்களைக் கடித்தார். ''உன்னை யெல்லாம்....'' — கோபத்தில் வார்த்தைகள் வராமல் தவித்தார். ''சே! மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்குத்தெரிஞ்சா எவ்வளவு கேவலம்? சாஸ்திர சம்பிரதாயங் களை அதிகமாப் பார்க்கிற அவங்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா இதையே ஒரு

அபசகுனமா நினைப்பாங்க! பின்னாடி ஏதாச்சும் ஒண்ணு விரும்பக் கூடாத வகையில நடந்தா அதுக்கு இந்தச் சம்பவத்தை எடுத்துக்காட்டிப் பேசுவாங்க...'' — அவர் பேசப் பேச...

மகாலட்சுமிக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

''இப்ப என்னங்க செய்யலாம்? அதே மாதிரியான சாவி வேற யார் கிட்டயாவது இருந்தாக் கேட்டுப் பார்க்கலாமா?''

''மண்டபம் பூரா விஷயம் பரவிடும்''— அவர் பயந்தார்.

கைகளைப் பிசைந்தார் நாகரத்தினம். ஸ்டீல் பீரோவின் கைப்பிடியை மேலும் கீழும் முறுக்கிப் பார்த்தார். ஹூம்.. அது அசைய மறுத்தது.

''அக்கா!''

குரல் கேட்டுத் திரும்பினார்கள் இருவரும். தேவு நின்றிருந்தான்.

மெல்லப் புன்னகைத்தபடியே பீரோவை நெருங்கினான். ''மச்சான்... நீங்க இப்படி வாங்க!''

நாகரத்தினம் நகர்ந்தார்.

தேவு பீரோவை நெருங்கி அதன் கைப்பிடியைப் பற்றிக் கொண்டு வலது கையை உயர்த்திக் குறுக்காக வைத்தபடி 'பட்' டென்று ஒரு வெட்டு. கைப்பிடியைத் திருகி இழுத்தான்.

பீரோ 'ஆ'வென்று பிளந்துகொண்டது.

பீரோவின் கீழ்த் தட்டில் மாங்கல்யம் மின்ன — நாகரத்தினம் முகமெல்லாம் மலர பாய்ந்து எடுத்துக் கொண்டார். தேவுவை ஒரு நன்றிப் பார்வையால் குளிப்பாட்டிக் கொண்டே அய்யரிடம் ஓடினார்.

''தேவு...! தேவு...!'' — மகாலட்சுமிக்குத் தொண்டையை அடைத்தது. பேச முடியாமல் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள். தேவு கைகளை உருவிக்கொண்டே சொன்னான். ''அக்கா! நீ நம்பினா நம்பு... நம்பாட்டிப் போ... இந்த ரெண்டு வருஷத்தில இன்னிக்குத்தான் ஒரு பீரோவோட லாக்கரை உடைச்சிருக்கேன். சின்ன வயசுல சேரக் கூடாதவங்க கூடச் சேர்ந்து பூட்டை உடைச்சுத் திருடற திருட்டுத் தொழிலைக் கத்துக்கிட்டேன். ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஜெயில்லேயிருந்து வந்ததுமே அம்மன் கோயில்ல கற்பூரத்தை ஏத்தி இனிமே இந்தத் திருட்டுத் தொழிலைச் செய்ய மாட்டேன்னு சத்தியம் செஞ்சேன். செஞ்ச சத்தியம் பிரகாரம் இன்னிக்கு வரைக்கும் நடந்துக்கிட்டு வர்றேன். அந்தத் தெய்வம் கூட என்னை மன்னிச்சிடுச்சு.. ஆனா இந்த ஜனங்க என்னிக்கும் என்னை மன்னிக்க மாட்டாங்க போலிருக்கு! எனக்குப் பன்னீர் தெளிக்க ஒரு தயக்கம்... சந்தனம் கொடுக்க ஒரு தயக்கம்... அவங்களை விடு! உன்னை எடுத்துக்க... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ என்னக்கா சொன்னே? முகூர்த்தம் கழிஞ்சு வந்திருக்கக் கூடாதுன்னு கேட்டே!... ஆனா இப்ப இந்த நிமிஷம் இங்கே... நான் இல்லாம இருநதிருந்தா முகூர்த்தமே நடந்திருக்காதே...!''

குரல் உடையப் பேசிக் கொண்டே போன தேவு சட்டென்று பீரிட்ட கண்ணீரையும் ஏக்கத்தையும் அடக்க முடியாமல் சுவரில் முகம் புதைத்து விசும்ப ஆரம்பித்தான்.

அவனைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் திகைத்தாள் மகாலட்சுமி.

கருணையே உன் விலை என்ன?

கல்கத்தா. 3—4—81. இந்திரா காங்கிரஸ் நடத்திய பங்களா பந்த். அன்று வெளியே கிளம்பிவிட்டேன். அதுவும் தனியாக அல்ல. ஏழுவயதான என் அண்ணன் குழந்தையுடன். போகும் போது ஒன்றும் இல்லை. நகரம் அமைதியாகவே இருந்தது. வெளியே சென்று வேலையை முடித்துக் கொண்டு திரும்பும் நேரத்துக்குள் திடீரென்று கிளர்ச்சி மூண்டு கொஞ்சம் கொஞ்சமாக வலுக்க ஆரம்பித்து விட்டது. மிரண்டு போன நான் சட்டென்று ஒரு ரிக்ஷாவை நிறுத்தி ஏறி அமர்ந்து என் இருப்பிடத்தைக் கூறி அவன் கேட்ட கூலிக்கு வாய் பேசாது ஒப்புக்கொண்டேன். வழியெல்லாம் ஒரே கலவரம். கல்லடி அடிதடி ரகளை பெருகி விட்டது. குழந்தை பயத்தில் என்னை இறுக அணைத்து, என்னுடன் ஒட்டிக்கொண்டு விட்டான். இந்நிலையில், திடீரென்று எங்கிருந்தோ விர்ரென ஒரு கல் பறந்து வந்தது. நானும் குழந்தையும் தப்பித்துக் கொண்டோம். ஆனால் பரிதாபம். ரிக்ஷாக்காரரின் நெற்றியை அந்தக் கல் நன்கு பதம் பார்த்து விட்டது. நெற்றியிலிருந்து ரத்தம் பெருகிவழிய ஆரம்பித்தது. பதறிப்போன நான் வண்டியை நிறுத்தும்படி எவ்வளவோ சொல்லியும் அவன் நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு போனான். வீடு வந்து சேரும்வரை அவன் வண்டியைநிறுத்தவேயில்லை. காயத்திலிருந்து பெருகிய உதிரத்தால் அவன் போட்டிருந்த மேல் துண்டெல்லாம் நனைந்துவிட்டிருந்தது. பச்சாதாபத்தாலும் நன்றி உணர்வினாலும் என் நெஞ்சமெல்லாம் கரைய, பேசிய கூலிக்கு மேல் ஓர் ஐந்து ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டியபோது ''வேண்டாம் சார். உழைப்புக் கூலி தந்தால் போதும். மனிதாபிமானத்துக்குக் கூலி வேண்டாம். என் கடமையை நான் செய்தேன். உங்களையும் இந்தக் குழந்தையையும் பத்திரமாக வீடு சேர்த்த மகிழ்ச்சி ஒன்றே எனக்குப் போதும்.'' எனக்கூறி மெல்ல ரிக்ஷாவை ஓட்டியவாறு சென்றுவிட்டான்.



ஒரு பக்கம் கலகக்காரர்களும், வெறியர்களும் நிறைந்திருந்தாலும் அவர்களுக்கிடையில் இப்படியும் சில நல்லவர்கள் கல்கத்தாவில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

—கல்கத்தா 'மிக்கி'



வட்ட மேஜை

● ''பிராமணர்களின் வீழ்ச்சி'' என்ற தலையங்கத்தைப் படித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தலையங்கத்தில் தாங்கள் கூறிய கருத்துக்களை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஏனைய பிராமணர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

திருமங்கலம் வெ. ராமராவ்

● தலையங்கம் கண்டேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால் தலைப்பு 'பிராமணர்களின் வீழ்ச்சி' என்று போட்டிருந்தது மனத்தை மிகவும் புண்படுத்துகிறது. 'பிராமணர்களின் எழுச்சி' என்றே போட்டிருக்கலாம்.

நெய்வேலி ஆர்.வி. உமாநடராசன்

● பிராமணர்கள் இன்று பின்தங்கிய நிலைக்கு வரக் காரணம் சமுதாயத்திலிருந்து அவர்கள் தனிப்பட்டவர்கள் என நினைத்துத் தாமே ஒதுங்கிக் கொண்டதுதான். கண் முன்னே நடக்கும் அக்கிரமங்களை நமக்கென்ன என நினைத்துத் தட்டிக் கேட்காமல் ஒதுங்கி இருந்ததன் விளைவுதான். இதனை மனத்தில் கொண்டு இன்றைய இளைஞர்களாவது சமுதாய விழிப்புணர்ச்சியுடன் சாதி மத பேதங்களைக் கடந்து எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும். சமுதாயத்தில் நடக்கும் அக்கிரமங்களைத் தைரியமாகக் கண்டிக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் அவர்களும் ஒரு பங்கு என்பதனை எல்லோரும் உணர்வார்கள்.

திண்டுக்கல் ம. நாராயணன்

● தெருவுக்கு இரண்டு பேர் என உட்கார்ந்து கொண்டு திண்ணைப் பேச்சு, ஊர் வம்பு பேசும் நம்மவர்கள் தலையங்கத்தை அவசியம் படிக்க வேண்டும்.

நாகப்பட்டினம் வி. அனந்தராமய்யர்

● எஸ். சிவராமகிருஷ்ணன் என்ன சொன்னார்? பிராமணர்கள் ஆசார ரீதியில் தவறி விட்டார்கள் என்று. அது உண்மைதானே? டாக்டர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் வருவதற்கும், மூக்குப் பிடிப்பதற்கும் என்ன சம்பந்தம்? பின்னது முன்னதற்கு எப்படித் தடையாகும்? ஜட்ஜ்முத்துசாமி ஐயர் தமிழ்த் தாத்தா இவர்கள் எல்லாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு பெரிய பதவி வகிக்கவில்லையா?

பொள்ளாச்சி பி.எஸ்.ஏ. சர்மா

● அட்டையைத் தொடர்ந்து சில அறுவை களில் கடைசி அறுவையில் பையன் தலையில் எழுதப்பட்டுள்ளது தவறு. காப்பி அடிக்கக் கூட விடையைத் தவறாக எழுதிக்கொண்டு போனால் பையனுடைய தலையெழுத்து எப்படி இருக்கும்?

மதுரை ''மதுரை மணியன்''

● திரு கண்ணதாசன் உடல் நலமின்றி மருத்துவ மனையில் இருக்கிறார் என்பதை அறிந்து என்னைப் போன்ற லட்சக் கணக்கான இளம் உள்ளங்கள் வேதனை அடைகின்றன. அவர் விரைவிலேயே உடல் நலம் தேறப் பிரார்த்திக்கிறேன்.

மதுரை என். பாலசுப்பிரமணியன்

● 29–3–81 இதழில் 'பார்த்தோம் சொல்கிறோம்' என்ற தலைப்பில் தென் காசிக்கு அருகில் மீனாட்சிபுரம் பற்றிய செய்தி தொடர்பாக:

மீனாட்சிபுரம் ஊரில் 400 அரிசனக் குடும்பங்களே இருந்து வருகின்றன. அவர்களில் சுமார் 250 குடும்பங்கள் முஸ்லீம்களாக மாற்றப்பட்டனர். அவர்களில் பலர் மீண்டும் தாய் மதமான இந்து மதத்துக்குத் திரும்ப விஸ்வ ஹிந்து பரிஷத் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஊரின் பெயரும் மீனாட்சிபுரமாகவே இருந்து வருகிறது.

பண்மொழி கே. சிவசங்கரன்

● ஸ்ரீதேவி உடம்பில் எங்கே மச்சம் இருந்தால் எங்களுக்கு என்ன சார்? வர வர நீங்கள் சினிமாவுக்கும், சினிமா நடிக, நடிகைகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள்.

ஆதம்பாக்கம் எஸ். உதயகுமார்

● பிரியா பாலு ஏ.டி. 2000க்கு பிப்ரவரி மாதத்தில் 30 நாட்கள் என்று கொடுத்த தகவலுக்கு (கல்கி 5-4-81) ஆதாரம் இல்லை. 1700, 1800, 1900 வருஷங்கள் ''லீப்'' வருஷங்கள் அல்ல. ஆனால் 2000 என்ற நூற்றாண்டுக்கு பிப்ரவரி மாதம் 29 நாட்கள் உண்டு. அதாவது நூற்றாண்டு ''லீப்'' வருஷமாக கணக்கெடுப்பதற்கு அது 400ஆல் வகுபட வேண்டும். உதாரணமாகமொரார்ஜி தேசாய் 1896 பிப்ரவரி 29 பிறந்தார். அவருடைய முதல் பிறந்தநாள் 1904 பிப்ரவரி 29. ஏனென்றால் 1900 என்பது ''லீப்'' வருஷமில்லை.

தூத்துக்குடி பி. எஸ். சுப்ப்ராமன்



வஸந்த்!

சுஜாதா

17 மர்மக் கடிதம்

கணேஷ் தன் பையிலிருந்து அந்த ரிப்போர்ட்டை எடுத்துக் கொடுக்க, வஸந்த் அதை ஆர்வத்துடன் பார்த்தான். சிக்கலான சங்கேத பாஷையில் ஏகப்பட்ட ரசாயன பதங்கள் சேர்த்து எழுதப்பட்டிருந்தது அந்த ரிப்போர்ட். ''கொடுக்கப்பட்ட சாம்பிளை இன்ன தேதியில் அலசிப் பார்த்தபோது அதிலிருந்து கண்ட விவரங்கள் வருமாறு:

'கொடுக்கப்பட்ட துண்டு சுமார் அரை அங்குல நீளமும் கால் அங்குல பருமனும் சற்றே வெண் பழுப்பு நிறத்தில் இருந்தது. அதை அடையாளம் கண்டுகொள்ள ரசாயனப்பரிசிலனை செய்தபோதுஅந்தத்துண்டு ஆர்கானிக் வகையைச் சேர்ந்தது என்பதும் அது ஒரு வகை ஃபைப்ரஸ் மரத்தின் துண்டாக இருக்கலாம் என்பதும் தெரிகிறது. மரத் துண்டின் மேல் சில இன்-ஆர்கானிக் வகை ரசாயனப் பொருட்களும் தென்பட்டன. குறிப்பாக ஸோடியம் ஹைட்ராக்ஸைட், ஸோடியம் சல்ஃபேட், ஸோடியம் மானோ சல்ஃபைட், மிகத் துளி டைட்டேனியம் ஆக்ஸைடையும் பார்த்தேன். ஆர்கானிக், இன்-ஆர்கானிக் பொருட்கள் கலவை ஒரு செயற்கைக் கலவை என்று தான் படுகிறது...''

வஸந்த் அந்தக் காகிதத்தைத் திருப்பிக் கணேஷிடம் கொடுத்துவிட்டு,''தத்! ஒரு அட்சரம் புரியலே பாஸ்!எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு ரசாயனம் பாட்டரி காச்சறதும் சல்பேட்டாவும்தான். பாஸ் உங்களுக்கு ஏதாவது புரியுதா?'' என்றான்.

''இல்லே.''

''பின் சம்திங் இண்டரஸ்டிங்குன்னு சொன்னீங்க? தொடரும்னு போடறதுக்கா''

''இல்லே வஸந்த். இதிலே ஒரு க்ளு கிடைச்சிருக்கு. அதான்இண்ட்ரஸ்டிங்குனு சொன்னேன்.''

''என்ன?''

''உக்கல் கிராமத்தில் சோடியம்சல்பேட்டுக்கும் ஹைட்ராக்ஸைடுக்கும் டைட்டேனியத்துக்கும் என்ன வேலே?''

''என்ன வேலே? அதானே!''

''அதுக்குப் பதில் கண்டு பிடிச்சா கண்ணைக் கட்டிக் காட்டில விட்டாப் பல இருக்கே அது கொஞ்சம் குறையும்னு தோணுது. எப்படி இருக்கு உடம்பு? இனியா வந்தப்புறம் சரியாப் போயிருக்கணுமே?''

இனியா: ''என்கிட்ட என்னமோ ராத்திரியே செத்துப் போகப் போற மாதிரி பேசினர்.''

''ராத்திரி என்ன, இப்பவே கூட செத்துப் போனதாய் நடித்திருப்பானே!''

'என்ன பாஸ்! எத்தனை வாந்தி எடுத்துக் ...த்துயிரும் குலையுயிருமாகக் கிடந்தேன்! ...கதானே பாத்தீங்க.''

''ஆமா இனியா, அதென்னவோ வாஸ் வந்தான்.''

''எல்லாம் யாருக்காக? சொல்லுங்க ...ஸ்.''

இனியாவஸந்தைப் பரிவுடன் பார்த்து, ...வஸந்த்! எல்லாம் என்னாலதான் வந்தது ...ப்புத்துக்கிறேன். அதுக்காக என் மனசு ...டந்து அல்லாடுது. பத்தியா நம்மால ...ஸந்துக்கு கஷ்டம், எதுக்காக அவரை ...ர் ஊரா அனுப்பிச்சு அவஸ்தைப்பட ...வெச்சு... உங்களுக்கும்தான் சொல்றேன். ...பாதும் இந்தக் கேஸ். யார் என்ன செய்ய ...ங்கன்னு தெரியலே. கட்டுரை கிடைக்காட் ...ப் பரவாயில்லே. அப்பா கிட்ட அடிச்சுச் ...சொல்லிட்டேன். வேணும்னு இன்னொரு ...ட்டுரை எழுதிக்கிங்க. பாவம், அவங்களை ...னுப்பிச்சு கிணறு வெட்டப் பூதம் கிளம் ...னாப்பல ஆயிடுச்சு பாருங்கன்னு கோப ...வே பேசிட்டேன். கணேஷ் போதும் ...டுத் தள்ளுங்க!''

''அந்த நிலைமையிலே நாங்க இல்லே ...னியா. சாட்சி சொல்லவாவது அங்க ...ாங்க திரும்பிப் போகணும். வஸந்துக்குக் ...ுணமானதும் ஒரு நடை போயிட்டு ...வருந்துருவோம். அதுக்குள்ள இந்த ...விநோதமான நிகழ்ச்சியைப் பற்றி நினைச் ...சுக்கிட்டே அசை போட்டுக் கிட்டே ...இருந்தா...''

''திடீர்னு பாஸுக்கு இன்ஸ்பிரேஷன் வந்துரும். அட! அதாண்டான்னு கண்டு ...டிச்சுடுவார். இனியா லேட்டஸ்ட் கேட் ...டியோ? ஒரு அப்பா பையன்கிட்ட அம்பது ...ருபாய் கொடுத்துடவுனுக்குப்போய் என்ன ...வேணு பண்ணிட்டு வாடான்னாராம். ...பையன் காலேஜ் பையன்.....

அங்கு வந்த நர்ஸ் ''அய்யோ அந்தக் கதையைக் கேக்காதீங்க. ரொம்ப ...மோசம். என்ன வஸந்த் இது!'' என்றாள்.

''ஏய்! ஜோக்கெல்லாம் வேண்டாம். ...பேசாமப் படு.''

''குட் நைட் வஸந்த்! ஸ்லீப் வெல்!''

''இரு இரு, ஒரு புதுக் கவிதையாவது ...ட்டுட்டுப்போ!''

''அதும் நல்லாத்ல'' என்றாள் நர்ஸ்.

''போச்சுடா. சிஸ்டர்! தர்மா மீட்டரை ஒளிச்சு வச்சுருவேன்'' என்றான் வஸந்த்.

''அப்ப காலேல பார்க்கலாம்.''

''இனியா போறயா? பாஸ் டிராப் பண்ணிடுவார். பின் சீட்ல உட்கார்ந்துண்டு போ.''

அவர்கள் சென்றதும் வஸந்த் தலையணைக்கு அடியிலிருந்து சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

தன் கட்டிலில் தலைமாட்டில் இருந்த ஆஸ்பத்திரிக் காகிதத்தில் ஒரு வெள்ளைத்



வஸந்த்!

தாளைக்கிழித்துக் கொண்டு நர்ஸிடம் பேனாவை வாங்கி எழுத ஆரம்பித்தான்.

''பத்துக்கு நாற்பது! என்ன அர்த்தம்? நீ பத்து ரூபாய் கொடு நான் நாற்பது ரூபாய் கொடுக்கிறேன் என்று? இந்த வியாபாரம் யார் செய்வார்கள்? மட்கா? இல்லை அபத்தம். ஏதோ ஒரு பொருளுக்கு நாற்பதாயிரம்? நாலாயிரம் ரூபாய் விலை மதிக்கக் கூடிய பொருள் என்ன? இப்படி இருக்கலாம். பத்து கிராம் விலை நாற்பது ரூபாயா? அல்லது நாற்பதாயிரம் ரூபாயா? அது என்ன ஒப்பியம்? சே! துப்பறியும் கதைகள் நிறையப் படிப்பதால் வரும் யோசனை இது. பாஸ் ஏன் அந்த பஸ் ஸ்டாண்டு சம்பவத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் தருகிறார்? மரத் துண்டு, சோடியம் ஹைட்ராக்ஸைடு, ராஜ ராஜன் கிணறு, என்ன சம்பந்தம்? ஏதாவது சின்ன விஷயத்தை ஆனால் முக்கியமான விஷயத்தை விட்டு விட்டேனா? மரத்துண்டு! மரத் துண்டை வைத்துக் கொண்டு என்ன என்ன செய்யலாம்? எரிக்கலாம், ஆயுர்வேத மருந்து செய்யலாம். இல்லை இல்லை. மரத் துண்டு, அந்த ரசாயனப் பொருட்களின் பட்டியல், பத்துக்கு நாற்பது, இவை எல்லாவற்றுக்கும் பொதுவானது எது?

ஒரு மண்ணும் புரியலே...''

வஸந்த் தூங்கிப் போனான்.

அதே சமயம் கணேஷ் தன் அறையை அடைந்து படித்துக் கொண்டிருந்தான். புத்தக வார்த்தைகளில் அவன் கவனம் நிலைத்திருக்கவில்லை. பிளாஸ்கிலிருந்து பா ஊற்றிச் சாப்பிட்டான். பேனாவைக் கடித்து கொண்டு யோசித்தான். சதாசிவத்து விடை இருக்கலாம். ஆனால் அவன் சொல் மாட்டான். உயிருக்கு ஆபத்து என்று தெ யும்போது எப்படிச் சொல்வான்?

கணேஷுக்கு நடந்த எல்லா சம்பவங்களுக்கும் மறைமுகமாக ஒரு சங்கிலித் தொடர் இருக்க வேண்டும் என்று பட்டது. இப்போது அந்தச் சங்கிலி அறுந்து சிதறியிருந்தது. எடுத்துக் கோக்க வேண்டும். எப்படி என்பது தெரியவில்லை.

ஸாம்பிள்! 'ஸாம்பிள் கொண்டு வந்திருக்கிறாயா?'

அவர்கள் என்ன சாம்பிளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்?

பஸ் நிலையத்தில் இரண்டு சம்பவங்கள். முதல் சம்பவம் தஞ்சாவூர்க்காரனிடமிருந்து பெட்டி பறிக்கப்படுகிறது. பெட்டி திருப்பிக் கொடுக்கப்படுகிறது. இல்லை தெருவில் எறியப் படுகிறது. பணம் பாதிக்கப்படவில்லை. பத்துக்கு நாற்பது. பணம் இல்லை. ஸாம்பி போதைப் பொருளாக இருக்கலாம். இது ஒரு முக்கியமான சாத்தியம். மரத் துண்டு சோடியம் வகை ரசாயனப் பொருட்கள்.

ம்ஹூம். கணேஷுக்கும் புரியவில்லை. சோடியம் பற்றிப் படி!

காலை எழுந்ததும் நர்ஸிங் ஹோமுக்குப் போன் செய்து வஸந்தை விசாரித்தான்.

கடுகு பதில்கள்!

⌘ சத்தியேந்திரன், தாராபுரம்

கே. ஓசை கேட்டால் இறந்து விடும் அசுணம் என்னும் பறவை என்கிறார்கள். ஓசை இல்லாத உலகம் ஏது? ஆகவே அசுணம் என்கிற பறவையே இருந்திருக்க முடியாது. சரிதானே?

ப: பலத்த ஓசை கேட்டால்தான் இந்தப் பறவை இறந்து விடுமாம். மலைச் சாரலிலே நிலவொளி வீசும் வேளையில் புல்லாங்குழல் போன்றவற்றால் இனிய இசையை எழுப்புவார்களாம் குறிஞ்சி நில மக்கள். இந்த மெல்லிய இசையினால் கவரப்பட்டு அசுணங்கள் அங்கு கூடிவிடுமாம். இச்சமயம் திடீரென்று பலமான பறை ஓசையை எழுப்புவார்களாம். இந்த ஓசையினால் அவை உயிரிழக்குமாம். இதுஒரு தமிழாசிரியர் தந்த விளக்கம். எனவே, அசுணம் என்ற பறவை இருக்கிறதோ இல்லையோ; அது இல்லை என்பதற்கு நீங்கள் கூறும் காரணம் சரியில்லை.

⌘ மைதிலி கண்ணன், அரக்கோணம்

கே. உங்களுக்கு கியாஸ் ட்ரபிள் உண்டா?

ப: கியாஸ் ட்ரபிள் பற்றிய நீளமான விளம்பரங்களைப் படித்து முடிப்பதற்குள் இந்த ட்ரபிள் வந்து விட்டது!


⌘ பொ. பாண்டியன், கும்மிடிப்பூண்டி

கே. கொடைக்குப் பெயர் போனவன் கர்ணன். அப்படியிருக்க, 'கர்ண கடூரம்' என்று சொல்லப் படுகிறதே, கர்ணனை அவமதிப்பதாகாதா?

ப: அடாடா, கர்ணனைக் குறிக்காது அந்தச் சொல். 'கர்ண' என்றால் காது என்று பொருள். (சம்ஸ்கிருதச் சொல் அது) காதுக்குக் கடூரமாக இருப்பதைக் கர்ண கடூரம் என்கிறார்கள். கர்ண பரம்பரைக் கதை, கர்ணாம்ருதகானம், கஜகர்ணம், கோகர்ணம் போன்றவைகளைக் கேட்டிருப்பீர்களே. இதெல்லாம் காது சம்பந்தப் பட்ட விஷயங்கள்.

⌘ வி. நாகபூஷணம், உச்சிப்புளி

கே. மேலதிகாரிகளைத் திருப்தி படுத்தவே முடியவில்லையே?



மேலதிகாரிகளைத் திருப்திப் படுத்துவது எப்படி?

ப: கஷ்டமான காரியம்தான். இருந்தாலும் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த டிஸ்ரேலி ஒரு சமயம் தம் நண்பரிடம் சொன்னதை நீங்களும் படித்துப் பாருங்களேன். ''இங்கிலாந்து அரசியிடம் நான் பிரதமர் என்ற முறையில் பேசச் செல்லும்போது ஒருசில சின்ன விஷயங்களைக் கடைப்பிடிக்கிறேன். எதையும் மறுப்பதில்லை. எதையும் எதிர்ப்பதில்லை. சில சமயம் மறந்து விடுவேன்.

✠ ஆர். திருநாவுக்கரசு, திருமருகல்
கே. பெண்கள் வாடையே எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
ப: உலக மகா பொய்யர் என்று. ஏன் என்றால் உங்களுடைய அடுத்த கேள்வி: ப்ளூ பிலிம் பார்ப்பதுண்டா?உங்கள் பெயரைத் திருநாவுக்கரசு என்பதிலிருந்து இரு நாவுக்கு அரசு என்று மாற்றிவிடலாம்!

✠ வி. வெங்கடராமன், மின்பாறை
கே. கடுகு பதில்கள் சேர்த்து வருகிறேன் 'ஏன் இந்தக் குப்பை எல்லாம் சேர்க்கிறீர்கள்' என்று என் சக தர்மிணி கேட்கிறாள். இதற்கு ஒரு தீர்வு சொல்லக் கூடாதா?
ப: விவாகரத்து!

✠ இ. வஸந்தகுமார், ஆறுமுகனேரி
கே. கோவிலில் சென்று பிரார்த்திப்பதற்கும் வீட்டிலிருந்தே பிரார்த்திப்பதற்கும் வித்தியாசம் உண்டா? (கடவுள்தான் எங்கும் நிறைந்திருக்கிறாரே)
ப: இலை போட்டு மூக்கைப் பிடிக்கச் சாப்பாடு சாப்பிடுகிறீர்கள். அந்தச் சாப்பாட்டில் உள்ள வைடமின் முதலியவைகளை யெல்லாம் ஒரு சின்ன காப்ஸ்யூலாகப் பண்ணிச் சாப்பிட்டால் வயிறு நிறைந்த மாதிரி இருக்குமா? இரண்டு வித சாப்பாட்டிலும் ஒரேஅளவு போஷாக்குச் சக்தி இருந்தும் இலைச் சாப்பாட்டைத்தானே நாம் விரும்புகிறோம். வீட்டுப் பிரார்த்தனை காப்ஸ்யூல் மாதிரிதான்.

✠ ஆர். அரிகோபி, குடியாத்தம்
கே. வாரி வழங்கும் வள்ளல் குணம் நல்லதா?
ப: நல்லதா கெட்டதா என்று எனக்குத் தெரியாது. என் குணம் அப்படி!

பரிசு பெறுபவர் :
வஸந்த குமார்,
35 எஸ். எஸ். அம்மன் கோயில் தெரு,
ஆறுமுகனேரி-628 202

தூங்குகிறான் என்று தெரிந்தது. மனம் சற்றுத் தெளிந்திருந்தது. இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டும். கொஞ்ச நாள் கிணற்றை மறந்து விட்டுக் கோர்ட்டைக் கவனிக்க வேண்டும். வஸந்த் பூர்ண குணமாவதற்கு இன்னும் இரண்டு தினங்கள் ஆகலாம். இரண்டு தினங்களுக்கு இந்த விவகாரத்தை மூட்டை கட்டி வைத்துவிடலாம். அதன்பின் யோசிக்கலாம்.

கணேஷ் தன் ப்ரீஃப்கேஸைப் பார்வையிடத் துவங்கினான்.

பத்து மணிக்குக் கோர்ட்டுக்குக் கிளம்புவதற்கு முன் டெலிபோன் அடித்தது.

''கணேஷ்! நா அப்பாதுரை பேசறேன்!''

''ஓ! புரொபஸர்! எப்படி இருக்கீங்க?''

''பரவாயில்லை. வஸந்துக்கு உடல் நலமில்லைன்னு இனியா சொல்லிச்சு.''

''பரவால்லிங்க.''

''உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?''

''இல்லைங்க. இதை விசாரிக்கத்தான் போன் பண்ணிங்களா?''

''உங்க குரல்லே ஆயாசமும் கோபமும் தெரியுது. உங்களுக்கு நிகழ்ந்து போனது எல்லாம் கேள்விப்பட்டேன். அதற்காக ரொம்ப வருத்தப்படறேன். ஏதோ விளையாட்டா ஒரு கட்டுரையைத் தேடறதில ஆரம்பிச்சது இவ்வளவு தூரத்துக்குப் போகும்னு கனவிலேயும் நான் நினைக்கலை. நான் எதுக்கு போன் பண்ண வந்தேன்னா அந்த ராஜ ராஜன் கிணற்றைப் பற்றி இன்னும் சில சரித்திரத் தகவல்கள் கிடைச்சிருக்கு. அதைப் பத்தி உங்ககிட்டச் சொல்லலாம்னு உத்தேசித்து.''

''ப்ரொபஸர்!எனக்குஇப்ப கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசரம் இருக்கு. இப்ப நீங்க சொன்னீங்கன்னா எதுவும் புரியாது. சாயங்காலம் வரட்டுமா? ஃபிரீயா இருப்பீங்களா?''

''வாங்க! அதுக்கு முன்னாடி நான் கண்டு பிடிச்ச புதிய தகவலோட சாரத்தை மட்டும் சொல்ல விரும்பறேன். இல்லைன்னா எனக்கு மண்டை வெடிச்சுப் போகும்.''

''சொல்லுங்க'' என்று கணேஷ் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

''அந்தக் கிணற்றில ஒரு பெரிய செல்வத்தை மறைச்சு வச்சதா சரித்திர பூர்வமா இப்பத் தகவல் கிடைச்சிருக்கு.''

''செல்வம்னா?''

''நிறையத் தங்கங்கள், நாணயங்கள் குடம் குடமா!''

''இஸ் இட்! இண்ட்ரஸ்டிங்! சாயங்காலம் விவரமாச் சொல்லுங்க. தாங்க்ஸ். வெச்சுரட்டுமா?''

கணேஷுக்கு பியட்டின் ஸ்டியரிங்கில் மனம் பதியவில்லை.

குடம் குடமா தங்கக் காசுகள்! இப்போது புரிகிறது. பத்துக் காசுகளுக்கு நாற்பதாயிரம். அதுதான் வியாபாரம் போலும். ராஜராஜன் கிணற்றைத் தோண்டி எடுத்துப் பார்க்க

லாம்...' தாவாதே! முதலில் பேராசிரியரின் புதிய தகவலைப் பார்க்கலாம்.....

கணேஷ் கோர்ட்டில் நுழைந்தபோது தாமதம் ஆகிவிட்டது. அவசர அவசரமாக கருப்புகவுன் பறக்க காரிடாரில் விரைந்தான். "மிஸ்டர் கணேஷ்! ஐ வாஸ் எபவுட் டு அட்ஜார்ன் தி கேஸ்."

"ஸாரி! ஸாரி! யுவர் ஆனர்... ஒரு ஸிவில் கோர்ட்டுக்கு பேனுமி டைட்டில்களில் ஜுரிஸ்டிக்ஷன் உண்டா என்று மதிப்புக்குரிய நண்பர் கேட்டது எனக்கு வியப்பாக இருக்கிறது. செக்ஷன் 66(1)ஐ மறுபடி பரிசீலிக்க அவரை அழைக்கிறேன். சதத்மான் கான் புல்கர் வழக்கில்....."

கோர்ட்டின் பின்னல் பாதைகளில் மாக்னு கார்ட்டா காலத்திலிருந்து வாரிசாக வந்திருக்கும் சட்டப் புத்தகங்களின் சிக்கலான வாக்கியங்களில் கணேஷ் பரிபூர்ணமாகத் தன்னை ஆழ்த்திக் கொண்டு முன் தினம் நடந்த எல்லா சம்பவங்களையும் மறந்து போனான் கொஞ்ச நேரத்துக்காவது!

வஸந்துக்கு மத்தியானம் பதினொரு மணிக்குள் சரியாகிப் போய்விட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் செய்தான். "பாஸ்! எப்படி இருக்கீங்க?"

"நீ சொல்லுடா."

"பேனுமி கேஸ் எடுத்துட்டாங்களா இல்லை அட்ஜார்ன்மெண்டா?"

"எடுத்துக்கிட்டாங்க. ஜூரிஸ்டிக்ஷனே கிடையாதுன்னு வாதாடுறாரு! ஏண்டா வஸந்த்! ஸிக்ஸ்ட்டி ஸிக்ஸ்ல அப்படி ஏதாவது இருக்கா?"

"66(22-இ) யைப் பாருங்க. மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு அமென்ட்மெண்ட் இருக்கு."

"பத்தியா? அதை மிஸ் பண்ணிட்டேன். எப்படி இருக்கே? வர முடியுமா? இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக்க. பேராசிரியர் போன் செய்தார். அந்தக் கிணத்துலே ட்ரெஷர் இருக்கிறதா இன்னொரு சரித்திரக் குறிப்பு கிடைச்சிருக்காம். சாயங்காலம் வரதாச் சொல்லியிருக்கேன்."

"பாஸ் தனியாப் போகாதிங்க. ஏதாவது ஆபத்துக்கள் நிகழலாம்!"

"மெட்ராஸ்லேயா?"

"சொல்ல முடியாது. வெத்துக் குண்டங்க எல்லா ஊர்லயும் இருக்காங்க. அப்ப பாஸ்! ஒரு வழியாப் படம் பளிச்சுன்னு தெரியுது"

"உனக்குத் தெரியுதா?"

"பின்ன? எல்லாரும் கிணத்துல போட்டிருக்கிற தங்கச் சொத்துக்கு அலையறாங்க!"

"அப்படின்னா பத்துக்கு நாப்பதுன்னு என்ன வியாபாரம் அது?

"அது ஏதாவது சங்கேத பாஷையா இருக்கலாம்."

"பார்க்கலாம். லெட்டஸ் நாட் ரஷ்!"

"எனக்கு ஏதாவது வேலை? நான் ஆஸ்பத்திரியை விட்டு இன்னும் அரை மணில கிளம்பிடுவேன். நர்ஸை மாத்திட்டாங்க. சுத்தளவு ஜாஸ்தியா ஒரு பெரியம்மாவைப் போட்டிருக்காங்க. பார்த்தா எங்க..."

"சரி சரி வஸந்த்! எனக்கு ஒரு காரியம் பண்ணு. லைப்ரரிக்குப் போய் சோடியம் அதன்உபயோகங்கள் பற்றி அதன் இண்டஸ்ட்ரியல் யூஸஸ் கெமிக்கல் யூஸஸ் எல்லாத்தையும் பத்தி ஒரு சின்னக் குறிப்பு தேவை. சுமார் நாலு அஞ்சு பக்கம் போதும். வளவளன்னு எழுதாதே!"

"டன்! அப்புறம்?"

"ராரா கிணத்தைப் பத்தி வேறே யாராவது ஆராய்ச்சி செஞ்சு வச்சிருக்காங்களா? இருந்தா என்ன அது? என்ன கண்டு பிடிச்சிருக்காங்க?"

"டன். கிணத்தையே தலை கிழா கவுத்துர்றேன். அப்புறம்?"

"ஒரு விநோதமான கேள்வி. பேராசிரியர் நிஜமாவே சரித்திரப் பேராசிரியரா, இல்லை ரீலா?"

"பாஸ்! என்ன அடி மடியிலயே கையை வைக்கிறீங்க?"

"எதுக்கும் யூனிவர்ஸிட்டிக்குப் போய் ஒரு நடை விசாரிச்சுட்டு வந்துரேன்."

"அவரைச் சந்தேகப்படறீங்களா?"

"அவரையும் சந்தேகப்படறேன்."


"நான் உண்டா உங்க பட்டியல்ல?"

"இல்லை. உன்னை எனக்குத் தெரியும். இன்னிக்கு இந்த மூணு விஷயங்களையும் பாத்துரு போதும். நான் கோர்ட்டு முடிஞ்சதும் பேராசிரியரைப் பார்த்துட்டு ராஜேந்திரனைப் போய்ப் பார்க்கலாம்னு இருக்கேன். வஸந்த் இந்தக் கேஸ் எனக்குப் பெரிய சவாலா இருக்கு. பைத்தியமா அடிக்குது. ஒண்ணுக்கொண்ணு சம்பந்தமில்லாத எத்தனையோ விஷயங்கள் இருக்கு. யார் செய்யறா? என்ன செய்யறாங்க? எதுவுமே இல்லாம ஒரே ஒரு பாழுங் கிணறு மட்டும்தான் கான்கிரீட்டா இருக்கு. அதைச் சுத்தி என்னவோ பித்தலாட்டம் நடக்குது. கண்டு பிடிக்கலேன்னா தூக்கம் வராது போல இருக்கு."

"கண்டுபிடிக்காம விட்டர்றதாவது, தா... பாத்ரலாம்!"

கணேஷ் மாலை அறைக்குத் திரும்பியபோது அவனுக்கு வந்த கடிதங்களில் மேல் விலாசம் எழுதப்படாத கடிதம் ஒன்று கலந்திருந்தது. பிரித்தால்...

"மேல் விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமா? அருணாவுக்கு வா." (தொடரும்)



"ஏண்டா ராமு... நம்ம பாலு அடிபட்டு எந்த வார்டில் அட்மிட் ஆகியிருக்கான்?..."

"நேரா போனீன்னா மாநிறத்தில் நல்ல களையா ஒரு நர்ஸ் நெற்றியில் சின்ன குங்குமப் பொட்டு வச்சுகிட்டு, காதில் வளையம் மாட்டிக்கிட்டு இடது கையில் ஸ்டீல் கேஸ் வாட்ச் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருப்பாள்... அவள் முதுகுக்குப் பின்னால் இடது கோடி பெட்டில் படுத்திருக்கான்டா.."

- என். எஸ். வி. குருமூர்த்தி

கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்

கல்கி

கிண்டி, சென்னை - 600 032

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 60	ரூ. 30
இலங்கை	ரூ. 70	ரூ. 35
இதர வெளிநாடுகள்	ரூ. 110	ரூ. 55

18 தங்கக் காசு

கணேஷ் டைரக்டரியில் அருணாவைத் தேடினான். அருணா இண்டஸ்ட்ரீஸ் அருணா அட்வர்டைஸர்ஸ், ஹோட்டல், ஆட்டோ மொபைல்ஸ், இவைகளில் எங்கே செல்வது? எழுதியவன் தெளிவாக இன்ன இடத்தில் இன்ன விலாசத்தில் என்று எழுதித் தொலைக்க மாட்டானோ? என்ன இது? புதுக் குழப்பம். வஸந்துக்குத் தெரிந்திருக்கலாம். மொட்டையாக அருணாவுக்கு வா என்றால் எங்கே போய்ச் சேர வேண்டும் என்கிற நிழலான விஷயங்கள் எல்லாம் அவனுக்குத்தான் சரியாகத் தெரிந்திருக்கும். அவனைக் கேட்பதற்கு முன் பேராசிரியர் புதுசாகத் தங்கக் காசு என்று புரளி பண்ணுகிறாரே அது என்ன என்று பார்க்கலாம்.

பேராசிரியரின் வீட்டுக்குச் சென்ற போது அவர் ஒரு நோபல் கண்டுபிடிப்பு செய்துவிட்ட பரபரப்புடன் இருந்தார். "வாங்க கணேஷ். வருவீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்துக் கிட்டே இருந்தேன். இப்பத்தான் உங்களுக்கு போன் பண்ணேன். அடிச்சுக்கிட்டே இருந்தது."

"என்ன ஸார் விஷயம்? புளிப் எக்ஸலேடா!"

"கணேஷ் இதை உங்க கிட்டச் சொல்லாட்டா என் தலையே வெடிச்சுப்போயிடும் போல இருக்கு. அவங்கள்ளாம் எதுக்காக



வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

அந்தப் பாழுங் கிணத்துக்கு அலையறுங்கன்னு இப்பத் தெளிவாத் தெரிஞ்சு போச்சு. அதுக்காகப் பத்துக் கொலை கூட அங்க விழும்!''

''அதான் சொன்னீங்களே தங்கக் காசுன்னு!''

''காசு மட்டும் இல்லை. இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கு. இனியா! இனியா!''

''என்னப்பா!'' என்று உள்ளே இருந்து வந்த இனியாவைப் பார்த்து கணேஷ் நல்ல வேளை வஸந்த் வரவில்லை என்று நினைத்துக் கொண்டான். வந்திருந்தால் வாயில் விரல் வைத்து 'ஷ்ய்' என்று விசில் அடித்திருப்பான். இனியா அப்படி ஒரு அசாத்திய உடை அணிந்திருந்தாள்.

''அலமாரில புஸ்தகமும் குறிப்புகளும் வெச்சிருக்கேன். எடுத்துட்டு வாம்மா.''

''மறுபடியும் ராஜ ராஜன் கிணறு ஆராய்ச்சியாப்பா? ஏம்பா நடந்த குழப்பங்கள் போதாதா? வஸந்த் அடிபட்டு ஆஸ்பத்திரில இப்பவோ அப்பவோன்னு கிடக்கிறார்ப்பா.''

''சும்மாரும்மா. வீட்டுக்குள்ள ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கிறதுல ஒருவித ஆபத்தும் கிடையாது.''


இனியா அலுத்துக்கொண்டு அலமாரிக்குப் போக, ''கணேஷ்! உங்ககிட்டே இதை எல்லாம் காட்டறதுக்கு முன்னாடி ஒரு கண்டிஷன்'' என்றார்.

''சொல்லுங்க.''

''அந்தக் காசுகள்ள ஒரு காசு எனக்கு வேணும். ஒரே ஒரு காசு போதும் ஸாம்பிளுக்கு.''

''முதல்ல அது என்ன காசு சொல்லுங்க.''

இனியா நோட்டுப் புத்தகத்தையும் புத்தகத்தையும் எடுத்து வர அதைப் பேராசிரியர்



ஆவலுடன் பிடுங்கிக் கொண்டு பரபரவென்று பிரித்து,

''இதபார் மெய்கீர்த்தி தொடக்கம், ராஜன் ராஜன் காலத்தது. 'காந்தளூர்ச் சாலை களமறுத்தருளிய'ன்னு ஆரம்பிக்கிறது பாரு'' என்றார்.

''ப்ரொபஸர்! ரொம்ப டெக்னிக்கலா வேண்டாம். நீங்க ஆராய்ச்சி பண்ணியிருந்தீங்கன்னா அதில ஆதார பூர்வமா விஷயங்கள் இருக்கும். அதைப் பத்திச் சந்தேகமே எனக்கில்லை.''

அவன் சொன்னதைப் பேராசிரியர் சிறிதும் கவனிக்காமல் ''பூமருவிய பொழிலேழும் பூமருவிய திருமாதும்னா இரண்டாம் ராஜ ராஜனைக் குறிக்கிறது. அண்டர்ஸ்டாண்ட்?'' என்றார்.

'அடடா வஸந்த் இல்லையே. தனியாக மாட்டிக்கொண்டு விட்டோமே' என்று எண்ணினான்.

''கணேஷ் கவனமாகக் கேளுங்க. சோழர்களுடைய கல்வெட்டுக்கள் ஒரு ஊரைக் குறிப்பிடறபோது எந்த மண்டலத்தை எந்த

கூற்றத்தைச் சார்ந்ததுன்னு தெளிவா சொல்லும். ராஜ ராஜன் ஆட்சிக்கு வந்தப்புறம் நாட்டைக் கிளீனு அளந்து வகை செஞ்சான். அதனால இடத்தைக் கண்டு பிடிக்கிறது ரொம்பவும் சுலபம். கூழமந்தல் உக்கல் பிரதேசத்தில இருக்கிற எல்லாக் கல்வெட்டுக்களையும் நான் பூரா பிரதியெடுத்து ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எல்லாத்தையும் ஒண்ணு விடாமத்தான் எடுத்தேன். தீஸிஸ் எழுதறபோது ஒரே ஒரு இன்ஸ்கிரிப்ஷன் விட்டுப் போயிருக்கு. மறுபடி என் குறிப்புக்களைச் சமீபத்திய சம்பவங்களுக்கு அப்புறம் சரி பார்த்ததிலதான் விட்டுப் போயிருக்கிறது தெரிய வந்தது. அந்தக் கல்வெட்டு வாசகங்கள். என்ன. தெரியுமா கணேஷ்? நீங்க அதிர்ந்து போயிருவீங்க. படிக்கிறேன் கேளுங்க:

'உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்வரம் உடையார்க்குச் செய்த வீரபட்டம் ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் முந்நூற்று நாற்பத்து முக்கழஞ்.... தடவிக் கட்டின பளிங்கு... கழஞ்சே மஞ்சாடியும் பொத்தி முன்றினால் நிறை மஞ்சாடியும் பளிங்கு வயிரம் பத்தினால்... திருப்பட்டிகை முதலியனவும்....'

''அப்புறம் கேளுங்க:

'கண்டநாண் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினேஞ்சும் மரகதம் பதினாறும் வயிரம் இருபத்தெட்டும் தைய்த்த முத்து ஒப்பு முத்தும் குறுமுத்தும் பாட்டமும் ஆக முத்து நாற்பதும் உட்பட நிறை நூற்று எழுபத்தின் கழஞ்சேய் எழுமஞ்சாடிக்கு விலை ராஜராஜன் மாடை ஐஞ்ஞூறு உக்கல் ராஜராஜன் கிணற்றிலிடப்பட்டது.''

பேராசிரியர் பிரகாசமாகப் ''பாத்தீங்களா'' என்றார்.

''ஒரு அட்சரம் புரியலை ஸார்! முதல்ல கழஞ்சுன்னா என்ன?''

''தங்கத்தை நிறுத்த ஒரு அளவு அது. பலம், வராகன், எடை, கழஞ்சு, குன்றி!''

''ஈஸி! ஈஸி! கன்ஃப்யூஸ் பண்றீங்க! எப்படி இதில காசைப் பத்தி ஒண்ணையும் காணமே?''

''காணமா? கடைசி வரியைப் பாருங்க! 'ராஜ ராஜன் மாடை ஐநூறு உக்கல் ராஜ ராஜன் கிணற்றிலிடப்பட்டது' — என்ன அர்த்தம்?''

''என்ன அர்த்தம்?''

''மை டியர் கணேஷ் மாடைன்னா பொற்காசுன்னு பொருள். ராஜராஜன் காலத்துப் பொன் காசு தமிழ் நாட்டில் கிடைச்சிருக்கு. ஒரு பக்கத்தில் புலி போட்டிருக்கும் அப்புறம் ரெண்டு மீன் வில் அதுக்குக் கீழே ராஜ ராஜராஜ சோழன்னு நாகரி எழுத்தில இருக்கும். பின் பக்கத்திலேயும் அதேபோல இருக்கும். ரொம்ப அரிதான காசு மாடை!''

கணேஷ் சிந்தனையில் இருந்தான்.

''இப்ப புரியுதா? அந்தக் காசுக்கு எத்தனை பேர் அலைஞ்சாங்கன்னு. ஏன்?''

''ப்ரொபஸர் திஸ் இஸ் வெரி இன்டரஸ்டிங்! இப்ப அந்தக் காசு கிடைச்சா?''

''அரசாங்கத்துக்குப் போகணும்.''

''மதிப்பு எவ்வளவு இருக்கும்?''

''பொன்னாலான காசு! அதுக்கு மதிப்பை விடுங்க. அந்தக் காலத்துச் செப்புக் காசு கிடைச்சாலே இப்ப அதுக்கு மதிப்பு எவ்வளவுங்கிறீங்க கணேஷ்! இது ரொம்பப் பெரிய விஷயம். எல்லாரும் கிணத்துல காசைத் தேடிட்டு அலைஞ்சிருக்காங்க. புரியுது. இதில வெளி நாட்டுக் கோஷ்டி கூடக் கலந்திருக்கலாம்.''

''கிணத்துக்குள் காசைப்போட்டாங்களா? ஆச்சரியமா இருக்கே?''

''அதைப் பத்தி ஒரு கல்வெட்டு இருக்கு! அது பழங்காலத்து வழக்கம். நம்ம கலீக் ராமச்சந்திரா அதில பி எச்டி பண்ணியிருக்கார் காட்டட்டுமா?''

''இல்லை ஸார். இன்னிக்கு ஜீரணிக்கிறதுக்கு இது போதும்னு தோணுது. ஆனா ஒரு வழியா ஸினேரியோ புரியுது. கிணறு கிணறுன்னு ஏன் அலைஞ்சாங்கன்னு அர்த்தம் விளங்குது....''

''அந்தக் காசுகளை மட்டும் நாம கண்டெடுத்துட்டம்னா....''

''இன்னம் கண்டெடுத்திருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறீங்களா?''

''கண்டெடுத்திருக்கக் கூடாதுன்னு தெய்வத்தை வேண்டிக்கிறேன் கணேஷ்! நாம போலீஸ் உதவியோட உடனே அந்தக் கிணற்றை ஸீல் பண்ணிடறதுதான் நல்லதுன்னு தோணுது.''

''ஏன் ஸார் இதுக்கு முந்தி இந்தக் கல்வெட்டை யாரும் பார்த்துப் பணத்தை அபேஸ் பண்ணி யிருக்க மாட்டாங்களா?''

''இந்தக் கல்வெட்டு ரகசியமா அடிச்சுப் புதைச்சு வெச்சிருந்த கல்வெட்டு! இந்த மாதிரி காசு பற்றின ரகசியம் அதில இருக்கிறதினால இந்த மாதிரி கல்வெட்டுக்களை மறைவான இடத்திலதான் வெட்டுவாங்க. கள்ளர் பயத்தினால. டட்டாங்கமன்னுடைய சமாதியைப் பத்திக் கேள்விப் பட்டிருப்பீங்களே. அதுக்குள்ள திருடர்கள் யாரும்



ரங்கு: உ. ராஜாஜி சிறுகதை எழுதினால் எப்படி இருக்கும்?
வெங்கு: 'ஜோக்'கா இருக்கும்.
—வேங்கடராமன்

போக முடியாதபடி வழிகளை யெல்லாம் மறைச்சு வெச்சிருப்பாங்களாம். அதுபோல இது மறைச்சு வெக்கப்பட்ட கல்வெட்டு. நான்தான் இந்த சீரிஸையே கண்டுபிடிச்சு டிரான்ஸ்க்ரைப் பண்ணி அந்த ஸ்லாபைக் கூட ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டிலே ஒப்படைச்சிருக்கேன்.''

''ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட்! ஸார் குத்துப்பட்டுச் செத்தானே கூழமந்தல் ஆசாமி? அவங்கூட ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் ஆசாமிதான்.''

''பத்தீங்களா? பிளாட் உருவாகறது கணேஷ்! எனக்கு இந்தத் துப்பறியற வேலைகளில எல்லாம் இஷ்டம் இல்லே. எனக்கு வேண்டியது அந்தக் காசுகளிலே ஒண்ணே ஒண்ணு! ஸ்பெஸிமனுக்கு. ராஜராஜன் காலத்தில பொறிச்ச காசை என் கையால தொட்டுப் பார்த்தாக்கூடப்போதும்! அதுவே எனக்கு திரில்லிங்கா இருக்கும்.''

''பார்க்கலாம் ஸார். ஏற்கனவே லேட்டுன்னு நினைக்கிறேன். இப்பப் போய் டிஐஜி ராஜேந்திரனைப் பார்க்கப் போறேன். அவர் கிட்ட விவரம் எல்லாம் சொல்றேன். நீங்க சொல்ற மாதிரி உடனே அந்த உக்கலுக்குத் தகவல் சொல்லிக் கிணத்தை சீல் பண்ணிடச் சொல்லிடலாம். நாங்க போற வரைக்கும் யாரையும் கிட்ட விட வேண்டாம்னு ஆணை கொடுத்துறலாம். அதான் முந்திச் செய்ய வேண்டியது. எனக்கென்னவோ ஹோப் இல்லே. பார்க்கலாம். வரட்டுமா? இனியா! நான் வரட்டுமா?''

கணேஷ் உடனே அறைக்குச் சென்று ராஜேந்திரனுக்கு போன் செய்தான். அவர் இல்லை என்று தெரிந்தது. எங்கே போயிருக்கிறார் என்று சொல்லத் தயங்கினார்கள். வந்தால் கணேஷ் போன் பண்ணியதாகத் தகவல் தெரிவிக்கும்படி மெஸேஜ் கொடுத்துவிட்டு வஸந்தை அடித்தான்.

''என்ன பாஸ்?''

''பொருள் என்னன்னு தெரிஞ்சுருச்சு.''

''சிலைதானே?''

''இல்லை. காசு! தங்கக் காசு!''

''சில்லறையா? அட! எவ்வளவு பெறும்?''

''வஸந்த் கழஞ்சுன்னா என்னன்னு தெரியுமா உனக்கு?''

''கழஞ்சா?''

''ஆமா கழஞ்சு!''

''கழண்டு இல்லியா? அல்லது 'குழஞ்சு'ன்னு ஒரு பிரயோகமும் உண்டு. ஆமா என்ன இது திடீர்னு பழந் தமிழ்ல விளையாடறீங்க?''

''கிணத்துல ஐந்நூறுகாசைப் போட்டிருக்காங்க. அத்தனையும் பொன்னு! அதுக்குத்தான் ஜனங்க இந்த அலை அலையுது.''

வஸந்த் விசிலடித்தான். ''இப்பப் புரியுது பாஸ்.''

''உடம்பு எப்படி இருக்கு?''

''அதை ஏன் கேக்கறீங்க? லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் மிக உயர்ந்த ரகம் ஒரு செட் தொண்ணூறு ரூபாய்க்கு அடிக்கலாம் போல உடம்பு பூரா ஒரு இயலாமை,

ரத்தக்குறைவு, உஷ்ணம், சோம்பல், தளர்ச்சி ஆயாசம், மனத் தடுமாற்றம்!''

''திமிரு! வேற ஒண்ணும் இல்லே உனக்கு!''

''இல்ல பாஸ்! மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி....''

''போது போகாம விளம்பரங்களை எல்லாம் படிச்சுக்கிட்டிருக்கேன்னு தெரியுது. காலேல ஆபீசுக்கு வந்துரு.''

''நம்ம கேஸ் விஷயமா...''

''அட்ஜர்ன்மெண்ட் வாங்கிட்டேனே.''

''அதில்ல பாஸ். பேராசிரியர் கிட்ட நம்மப் பத்தி சுக வாக்கியங்கள் ஏதாவது பேசினீங்களா? இந்த வாரம் வார பலன்ல 'சரசங்கள், பொழுதுபோக்கு, கேளிக்கைகள் என்று பொழுது உல்லாசமாகச் செல்லும்; ஒரு முக்கியமான முதியவரின் உறவு கிட்டும்'னு போட்டிருக்கே என்ன அர்த்தம்?''

''மண்ணுங்கட்டி! உனக்கு உடம்பு சரியாப் போச்சு. சும்மா கதை பண்ணிட்டு இருக்காதே. ஏகப்பட்ட வேலே இருக்கு.''

''மறுபடி கிணத்தைத் தோண்டப் போறமா? இங்க இருந்தே டிபன் கட்டிண்டு பிளாஸ்கில தண்ணி எடுத்துண்டு போயிறலாம் பாஸ்.''

''மறுபடி நிச்சயம் அங்கே போக வேண்டியிருக்கும். விஷயம் ரொம்பப் பெரிசு!''

''தங்கக் காசு.''

''பேராசிரியருக்கு அதில ஒரு காசு கொடுத்திட்டா உனக்கு அடுத்த முகூர்த்தத்திலயே இனியாவைக் கட்டிக் கொடுத்துட்டு உன் மூஞ்சிக்கு வரதட்சிணே வேற கொடுப்பார்.''

''அப்ப இப்பவே வரட்டுமா?''

''காலேல வந்தாப் போதும். இனியா இன்னிக்குப் பிரமாதமா டிரஸ் போட்டிண்டிருந்தா.''

''வெறுப்பேத்தறீங்களா?''

''பார்த்த உடனே எனக்கே ஒரு மாதிரியா இருந்தது.''

''என்ன டிரஸ்? வெய்ட்! சொல்லாதீங்க. ராத்திரி பூரா ஒத்தெல்லோ மாதிரி பெருமூச்சு விட்டுக்கிட்டு இருப்பேன்.''

''வளவளன்னு பேசாதே. ஒரு காலே எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்.''

''நான் வேணு பொடி நடையாப் போய் அவளைப் பார்த்து விசாரிச்சுட்டு வந்து படுத்துறவா?''

''டிரஸ்ஸைக் கழட்டிருப்பா!''

போனைச் சிரித்துக் கொண்டே வைத்ததும் ராஜேந்திரனிடமிருந்து கால் வந்தது.

''என்ன கணேஷ், என்ன விஷயம்? ஸி எம் மீட்டிங் போயிருந்தேன்.''

''ஸார், உக்கல்ங்கிற கிராமத்தைப் பத்தித் தெரியுமா உங்களுக்கு?''

''உக்கல்! கேள்விப்பட்டாப்பல இருக்கே... இருங்க. வடார்க்காடு மாவட்டத்தில...''

''ரைட் யூ ஆர்! அங்க நான் நேற்றைக்குப் போயிருந்தேன். சில விநோத சம்பவங்கள் எல்லாம் நடந்தது.''

''அப்படி நடக்கலேன்னு நீங்க ஏன் அந்தக் கிராமத்துக்குப் போறீங்க? அதென்ன அந்தக் கொலையுதிர் காலத்தை அப்படி முடிச்சுட்டீங்க?''

''அது சமாசாரம் வேறங்க! அப்புறம் சொல்றேன். இப்ப ராஜ ராஜன் கிணத்தைப் பார்க்கலாமா?''

''என்ன கிணறு?''

''ராஜ ராஜன்.''

''ஏதாவது எண்ணெய்க் கிணறு?''

''தெரியலே. ஆனு நாட்டிலே இருக்கிற பாதிக் கேடிங்க அதைச் சுத்திக்கிட்டு இருக்காங்க.''

''அப்படியா? இண்ட்ரஸ்டிங்! நடந்ததைச் சொல்லுங்க.''

சொன்னுன். பேராசிரியரின் சரித்திர ஆராய்ச்சிக் கட்டுரையில் ஆரம்பித்து வஸந்தின் பல்லாவரப் பயணம், உக்கல் கத்திக் குத்து, சதாசிவம் விவகாரம், உணவில் விஷம், அந்த விநோத வியாபாரங்கள், திரும்பி வந்தது, பேராசிரியரின் சமீபத்திய கண்டுபிடிப்பு....

ராஜேந்திரன் அவன் முடித்துக் கொஞ்ச நேரம் கழித்து ''விஷயம் ரொம்பச் சிக்கலா இருக்கு. பார்ட்டி பெரிசுன்னு தோணுது. காசு அதுவும் தங்கக் காசு, பழங்காலத்து தங்கக் காசுன்னு ரொம்பப் பேர் அலையறதில ஆச்சரியமில்லே. நான் உடனே அந்தக் கிணத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யறேன். கம்ப்ளீட்டா ப்ரொட்டெக்ட் செய்துறலாம். கவலேப்படாதீங்க. ஆனு நீங்க சொல்ற மாதிரி பொருள் பறந்து போயிருக்க வாய்ப்புக்கள் அதிகமா இருக்கு. இத்தனே நேரம் சும்மா விட்டிருக்க மாட்டாங்க. அண்டை மாநிலங்களிலயும் சொல்லி வைக்கணும். காலேல பார்க்கலாம்.''

அவருடன் பேசி முடித்ததும் மறுபடி டெலிபோன் ஒலித்தது. எடுத்தால்...

''தூரத்தில் இருந்து உன்னைப் பார்த்துக் கிட்டுத்தான் இருக்கேன் பிரதர்! வரன்!''

(தொடரும்)



"எப்படிடா, குடிப்பழக்கத்தை அடியோட விட்டுட்டே? ஆச்சரியமா இருக்கே!"

"ஒரு மாசத்துக்கு முந்தி என் மாமியார் ஊட்டுக்கு வந்தா. எனக்கு ரெண்டாத் தெரிஞ்சுது. அன்னையிலேருந்து உட்டுட்டேண்டா!"

வட்டமேஜை

● 'ஸ்ரீராமஜெயம்' போட்டியை அறிவித்த தன் மூலம் 'ஸ்ரீதேவி' போட்டிக்குப் 'பரிகாரம்' தேடிக் கொண்டீர்!
சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

● அதிகபட்சம் 'ஸ்ரீராமஜெயம்' எழுதுபவருக்கு ரூ. 500- பரிசு அளிக்கப் போகும் நீர், வேறொரு பக்கத்தில் குடையை மறக்காமலிருக்க 'பூஜை நேரத்தில் ஸ்ரீராமஜெயத்துக்குப் பதில் குடை, குடை என்று 108 தரம் ஜபிக்கவும்' என்று பிரசுரித்துள்ளீர்களே! ஸ்ரீராமர் தான் உம்மை மன்னிக்க வேண்டும்!
பாலக்காடு எஸ்.வி.சுப்பிரமணியம்

● குடையைப் பாதுகாக்க எனக்குத் தெரிந்த ஒரே வழி அதனை எதிர்வீட்டு ஏகாம்பரத்திடம் கொடுப்பதுதான்! நான்கு வருடங்களுக்கு முன் ஒரு மழைக்கால முன்னிரவில் என்னிடம் இரவல் வாங்கிய குடையை இன்னும்கூட பத்திரமாக அவர் வைத்துக் கொண்டிருக்கிறார்!
சென்னை-35 சி. பூபால் சிங்

● நாராயணசாமி இல்லாத எதிரொலிக்கு என்னைப் போன்ற பல நேயர்கள் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கும்இந்த நேரத்தில் அதைப் பற்றிச் சில நேயர்களிடம் கேட்டு எழுதியது எங்களுக்கு ஆறுதலாக இருந்தது.
சென்னை கலாமூர்த்தி

● எதிரொலியில் ஒருமுறை நிகழ்ச்சி பிடிக்காவிட்டால் உங்கள் செட்டை மூடுவதுதானே!' என்று ஆணவமாகப் பேசி பிறகு மன்னிப்பு கேட்டவர். நேயர்களின் கடிதங்களுக்குக் குறைந்த நேரம் தந்து விட்டு தான் ''லெக்சர்' அடிக்க அதிக நேரத்தை எடுத்துக் கொண்டவர்.
ஓட்டேரி சண்முக சுந்தரம்

● ஒரு பெரிய அரசு நிறுவனத்தில் ஒரே நபரைக்குறிப்பிட்ட ஒரேபதவியில் நெடுநாள் நீடிப்பதென்பது வழக்கமல்ல; விதிமுறைகளும் இடம் தரவில்லை. தன்னை விட்டால் வேறு கதி இல்லை என்ற உயர்வுமனப்பான்மை யாருக்கும் ஏற்படக் கூடாது என்பதோடு நியாயமில்லாமல் கூட அத்தகைய நபர் மீது வீண் புகார் வரவும் கூடும்.

ஆகையினால் பல ஆண்டுகள் ஒரு பதவியில் இருந்தவருக்கு மாற்றல் தருவது (நீக்கம் அல்ல!) எப்படித் தவறாகும்? அது ஒரு நிர்வாக ஏற்பாடு; அவ்வளவுதான்!
சென்னை புத்தனேரி சுப்பிரமணியம்

● 'நாராயண துதி' கண்டேன். அவர் திறமைசாலிதான். ஆயினும் அந்நிகழ்ச்சியைப் பல பேர் நடத்த அனுமதித்ததால் தானே அவரை விடத் திறமையுள்ளவர்கள் வெளிப்பட வாய்ப்பு ஏற்பட முடியும்.
சென்னை-40 மணவை முஸ்தபா

● 'நடுநிலை', 'அரசியல் சார்பற்ற' பத்திரிகை என்று ''வாய்ப் பந்தல்''(!) போட்டவாறே டாட்டா-பிர்லா பட்டாளத்தின் ஒரு பட்டாலியனும் கிர்லோஸ்கரின் 14 அம்சத் திட்டத்தைப் பத்திரிகையில் கொள்கை முழக்கம் செய்து சுரண்டல் கும்பலின் அரசியலை வெளிப்படையாகப் பிரசாரம் செய்யக் கிளம்பி விட்டீர்களே, சபாஷ்!
மதுரை-12 நவீனன்

● கிர்லோஸ்கரின் திட்டங்களை அரசு துணிந்து செயல்படுத்தினால் இன்னும் 50 ஆண்டுகளில் இந்தியா ஒரு முன்னேறிய நாடாகத் திகழும் என்பது உறுதி. ஆனால் நடக்கின்ற சோஷலிஸ ஆட்சி இத்திட்டங்களை ஏற்காது. 33 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி இந்தியனைத்திட்டமிட்டுப்பிச்சைக்காரனுக்கியதுதான் வரலாற்று உண்மை.
சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● ''கல்கி இளைஞர்களைக் கவரத்தான் செய்கிறது, கெடுக்கவில்லை'' என்ற அனிதாவின் நியூஸ் ஜூஸ் வரிகள் அட்சர லட்சம் பெறும்.
திருநெல்வேலி ஜி. சதாசிவம்



● இத்துடன் 'டிட் பிட்ஸில்' வெளியான படத்தையும், 'நக்கீரன்' என்று கூறிக்கொள்பவரின் படத்தையும் இணைத்தனுப்பியுள்ளேன். இன்னொருவர் உருவத்தையே 'தன்னுடைய' உருவமாக ஏற்றுக் கொண்டிருப்பவர் பிறரைப் பற்றிக் குறை கூறுவது எந்த வகையில் நியாயம்?
பெங்களூர்-5 அ. குமார்

● ராஜேந்திர குமாரின் ''பிரியமான தோழிக்கு'' சிறுகதை அருமை. முடிவு எப்படி இருக்குமோ எனப் பயப்பட வைத்து எதிர்பாராத முடிவால் வாசகரை வியப்பில் ஆழ்த்தும் அவருடைய தனிப் பாணிக்கு இக்கதை ஓர் எடுத்துக்காட்டு.
அரகண்டநல்லூர் கே. பிரதாப் சிங்

● ''கலாசாமியின் கலாட்டா'' அட்டகாசமாக இருந்தது. மனம் விட்டுச் சிரித்தேன்.
கோவை கிணத்துக்கடவு ரவி

● 'அன்புள்ள அத்தான்' படம் விமரிசனத்தில் விசுவநாதன் இசையைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே! நளினி சாஸ்திரி என்ன ஷோபா மறைந்த ஏக்கத்தினால் அருமையான இரு பாடல்களைப் பற்றி எழுத மறந்து விட்டாரா?
பழவந்தாங்கல் ஆனைக்கூத்தன்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

19. "ஏழே கால்!"

கணேஷ் உடனே உஷாராகி டெலிபோனைத் தட்டிப் பார்த்தான். அந்த முனைக்காரன் கிட்டத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றியது. சற்று நேரம் கேட்ட 'டயல் டோன்' வெட்டுப்பட்டு டெலிபோன் மவுனமாகியது. வெறும் காற்றுத்தான் கேட்டது. வெளியே யாரோ இணைப்புக்களைத் துண்டித்து விட்டார்கள். கணேஷ் வாயிற் கதவைப் பார்த்தான். உள்ளே தாளிட்டிருந்தது. என்ன செய்யலாம்? இரு சாத்தியக் கூறுகள்... கதவைத் திறந்து கொண்டு பத்திரத்தை நோக்கி ஓடிவிடலாம். இல்லை காத்திருந்து யார் வருகிறார்கள் என்று பார்க்கலாம். முதல் சாத்தியத்தில் பத்திரம். இரண்டாவது சாத்தியத்தில் துடிப்பு.

வேண்டாம். தனியாக இருக்கும்போது அசட்டுத் தைரியம் வேண்டாம். வஸந்த் இருந்தால் கதை வேறு. இப்போது மணி ஒன்பது. இந்தச் சீக்கிர ராத்திரியில் தைரியமாக உள்ளே நுழைந்து விடுவார்களா என்ன? மெல்ல வாயில் கதவை அணுகி அதன் தாளைத் திறக்க முற்படும்போது வெளியே தீர்மானமான, தெளிவான காலடிகள் கேட்டன.

வருகிறான். கதவு தட்டப்பட்டது. சலனமில்லாமல் நின்றான். ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கலாம். வந்திருப்பது எத்தனை பேர்?

ஸன்னமாகத் திரைச் சீலையை விலக்கி எட்டிப்....

கொத்தாக அவன் காலரை இறுக்க ஒரு ஜன்னல் கரம் பிடித்து மூர்க்கத்தனமாக இழுத்து ஜன்னலுடன் ஒட்ட வைத்தது. "ஜன்னலுக்கு வருவே! எட்டிப் பாப்பே! தெரியும்! திறக்கிறியா மாப்பிள?"

கணேஷுக்கு நாக்கு உலர்ந்தது. பேச முடியாமல் மென்னியை இறுக்கியது. மூக்கு கம்பி மேல் பதிந்து சப்பையாகி யிருந்தது. "ம்! ம்! திற'றேன்" என்றான் சிரமத்துடன்.

"ரொம்ப டைம் வேஸ்ட் பண்ணாதே ராஜா! உங்கிட்ட காரியம் இருக்கு. சீக்கிரம். இல்லாட்டி கதவை ஒடப்போம்."

"திற'றேன் திற'றேன்."

கை அவனை விடுவித்து அவசியமில்லாமல் ஒரு தள்ளு தள்ளியது.

கணேஷ் தன் இழுப்பறையைத் திறந்து பார்த்தான் ஆயுதம்! ஆயுதம்! கத்தி, ஸ்க்ரூ டிரைவர், ஏதாவது, ஏதாவது! எப்போது கடைசியாகச் சண்டை போட்டோம் டில்லியில்! வஸந்த் வந்த பின் சண்டைக்குச் சந்தர்ப்பமே இல்லை.

"என்ன டா லேட்டாவுது?"

"வரேன், வரேன்."

வாயிற் பக்கம் சென்று லேசாகத் திறந்து பார்த்தான். இரண்டு ஜோடிக் கால்கள் தெரிந்தன. கதவு வேகமாகத் தள்ளப்பட்டு இருவரும் தம்மைத் திணித்துக்கொண்டு மூடினார்கள். இருவரும் சுத்தமாக கணேஷை விட இருபது இருபத்தைந்து பவுண்டு கனமான ஆசாமிகள். ஒருவன் சூயிங் கம்மோ எதுவோ மென்று கொண்டு, கணேஷை உடனே ஏர்ப்போர்ட்டில் போல் ஆராய்ந்தான். மற்றவன் தான் பேசினான். "ஏதாவது விஷமம் செஞ்சே தீத்துருவோம்!" வரி வரியாகப் பனியன் போட்டிருந்தான்.

"விஷமம் பண்ண எனக்கு என்ன பைத்தியமா, சொல்லுங்க. விஷயம் என்ன சொல்லுங்க. என்னால ஏதாவது உங்களுக்கு ஆக வேண்டியது இருக்கா?"

"அதை நீந்தான் சொல்லணும்."

"என்ன சொல்லணும்?"

"உனக்கு என்ன தெரியும்? அதைச் சொல்லு."

"எதைப் பத்தி?"

"இத பாரு, பாசாங்கு பண்ணிக்கிட்டு விளையாடிக்கிட்டிருக்க நேரமில்லை. பளிச்சுன்னு சொல்லு. என்ன தெரியும்?"

"எதைப் பத்தின்னுதானே கேக்கறேன்."

தலைவன் கணேஷின் அருகில் வந்து பளீர் என்று கன்னத்தில் அறைந்தான். விண் என்று மண்டைக்குள் அது ஒலித்தது ஒலித்தது ஒலித்தது.

"எதுக்காக அடிக்கிறீங்க சொல்லிட்டு அடிங்க."

"சொல்லு."

"என்ன கேக்கறீங்கன்னே தெரியலியே. சொல்லு சொல்லுன்னா என்னத்தைச் சொல்றது?"

"உனக்குத் தெரிஞ்சத எல்லாம் கக்கு."

"எனக்கு ஒண்ணுமே தெரியாது."

சூயிங்கம் மறுபடி ஓங்க, "இரு பெரிய சாமி. மயிலே மயிலே இறகு போடுன்னா போடாது."

கணேஷ் சற்றுக் கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, அவன் தன் உள் பெல்ட்டிலிருந்து எதையோ எடுத்து 'கிட்டக்' என்றான். ஒரு கத்திமுனை பிறந்தது." பாத்தியா ஷெஃபீல்டு கத்தி. கிட்டக்க பார்க்கிறியா?" மற்றவன் கணேஷைப் பிடித்துக் கொள்ள அவன் அந்தக் கத்தியின் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் பளபளப்பை நிதானமாக கணேஷின் புருவத்தின் மேல் ஒட்டிக் காட்டினான்.

"கண்ணைக் குத்திரலாமா பெரியசாமி?"

"வேண்டாம்" என்றான் கணேஷ் தீர்மானமாக.

"அப்ப பதில் வருமா பெரியசாமி?"

"எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன். நீங்க ராஜ ராஜன் கிணற்றைப் பத்தித்தான் கேக்கறீங்கன்னு அனுமானிக்கிறேன். அதைப் பத்தி எனக்குத் தெரிஞ்சதெல்லாம் இவ்வளவுதான். கிணத்துக்குள்ளே பழங்

காலத்துப் பொற்காசுகள் நிறையப் போட்டிருக்காங்க. அதன் தற்போதைய மதிப்பு மிக மிக அதிகமாக இருக்கும். உக்கல் கிராமத்தில நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இதனோட சம்பந்தப்பட்டதுதான். இதை யாரு செய்யறாங்க, யார் நடத்திக் காட்டறாங்க இந்த விவரமெல்லாம் எனக்கோ போலீசுக்கோ கூட இதுவரை தெரியாது.''

''கிணத்துல என்ன இருக்கு?''

''புதையல்! தங்கக் காசுகள்!''

''அப்படி யாரு சொன்னாங்க?''

''அது பற்றிச் சரித்திரக் குறிப்புக்கள் இருக்கு. நானே பார்த்தேன். ராஜராஜ சோழன் காலக் காசு.''

''வேற ஏதும் கிடையாதா?''

''வேற நிறையப்பாசித்தண்ணி இருக்கு!''

அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். ''பாத்திங்களா தெரியுது இவனுக்கு! டேய்! முழு விவரத்தையும் சொல்லிடு. இல்லே கிழிச்சுப் போட்டுருவேன்.''

''அவ்வுளவுதான் எனக்குத் தெரியும்.''

''பார்த்துறலாம் பெரியசாமி புடி!''

முதல் மூர்க்கன் அவனைக் காட்டுத்தனமாக நாற்காலியுடன் அழுத்திப் பிடிக்க மற்றவன் விருட்டென்ற கீறலில் கணேஷின் கன்னத்தைத் தொட்டு விட்டான். முதலில் வலிக்கவில்லை. ஆனால் சட்டையில் சொட்டுச் சொட்டாக ரத்தம் கசிவது உடனே தெரிந்தது. கணேஷ் திடுக்கிட்டான். என்னடா இது வம்பில் மாட்டிக்கொண்டு விட்டோம். இவர்கள் மனத்தில் என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பதில் அவர்கள் நினைத்திருக்கும் வடிவில் வரும்வரை என்னை விடப்போவதில்லை. தர்ம சங்கடம்!

''அடுத்த வெட்டு இன்னும் ஆழமா போட்டுறலாமா வக்கீலய்யா!''

''வேண்டாம் வேண்டாம்.''

அவன் ஓங்கிக் கத்தியை மறு வீச்சுக்குத் தயார் செய்யும்போது கணேஷ் ஒரு பிரம்மப் பிரயத்தனமாக எழுந்திருக்க முற்பட்டு உடனே அடிக்கப்பட்டு பிடிக்கப்படாமல் தப்பித்து உருண்டு உடனே எழுந்து ஓடினான். இருவரும் கவனமாக அவனையே பார்த்துக் கொண்டு வந்தார்கள். ''தப்பிச்சு ஓடிடுவிங்களா ராஜா?''

கணேஷ் வாயில் கதவைப் பார்த்தான். அந்தப் பக்கம் சான்ஸே இல்லை. கத்திப் பார்க்கலாம் என்றால் ஒன்று கிடக்க ஒன்று செய்து விடுவார்கள். கன்னத்தில் இன்னும் ரத்தம் வடியப் பின்பக்கத்துக் கதவு திறந்திருக்குமா என்று யோசித்தான். இல்லை. பூட்டி சாவி பாத் ரூம் ஆணியில் மாட்டியிருக்கும். அதற்குள் வந்து விடுவார்கள். கணேஷ் சரேலென்று பாய்ந்து விளக்கை அணைத்தான். ''பெரியசாமி! டிரிக் பண்றான். வாசக் கதவை விடாதே! அங்கேயே இரு. அந்த இடத்தை விட்டு நகராதே.''

கணேஷ் தெரு விளக்குகளைச் சபித்தான். அவர்கள் இருவரும் உலவும் அவுட் லைன் தெரிந்தது. அதேபோல் நானும் அவர்களுக்குத் தெரிவேன். அவன் தொடர்ந்து தேர்த்தியாக நெருப்புக் குச்சிகளைப் பற்ற வைக்கப் பற்றவைக்க மற்றவன் சிகரெட் லைட்டரை இயக்க கணேஷ் தெரிந்த மூக்கில் சொட்டேல் என்று குத்தி விட்டு இடம் மாற்றிக் கொண்டான். மூக்கு உடைந்திருக்க வேண்டும். ''பெரியசாமி! அடிச்சுட்டான்'' என்றான். ''அங்கேயே இரு. இவனை இன்னிக்குச் சமாதி பண்ணிட்டுப் போயிடலாம். இப்போது அவன் தடவித் தடவிச் சுவரிலிருந்த சுவிட்சைக் கண்டு பிடித்



துப்போட்டுவிட அறையில் மறுபடி வெளிச்சம் பரவியது. கணேஷ் கையில் பெரிய மேஜை விளக்கைக் குறி பார்த்து ஓங்கிக்கொண்டிருந்தவன் அப்படியே நின்றான். ''போடுறு போடு. மூக்கில குத்தின இல்ல இப்ப. குடலைக் கிழிக்கிறேன் பாரு.''

''வேண்டாம் வேண்டாம். எல்லாமே சொல்லிடறேன்'' என்றான் கணேஷ்.

''அப்படி வா வழிக்கு'' என்று மூக்கில் கர்ச்சீப்பை வைத்துக் கொண்டே.

''பெரியசாமி! லைட்டாண்டையே இரு. ஆசாமி சாலாக்கு. பாத்துக்கிட்டே இரு. நகந்தான்னா சொல்லிடு கிழிச்சுர்றேன். டேய்! கிழிக்கத்தான் போறேன். மூக்கில அடிச்சில்ல?''

''தெரியாமப் பட்டுடுத்து.''

''படும். இரு உன்னை... முதல்ல பேசு! விசயத்தைச் சொல்லு.''

கணேஷ் உட்கார்ந்தான் — தப்பிக்க ஐடியா உதயமாகும்வரை காலம் தாழ்த்த வேண்டும். என்ன செய்யலாம்? ரீல்விட்டுப் பார்க்கலாம்.

''கிணத்தில மட்டும் இல்லை ரகசியம்.''

''பின்ன எதில?''

''சதாசிவம் இல்லை?''

''அவன் ஏதாவது சொன்னானா?''

''சதாசிவம் இல்லாமயே தெரிஞ்சுக்கிட்டோம்.... பத்துக்கு நாப்பது குடுத்து வாங்கத்தான் நாங்க வந்தோம். செரியான பார்ட்டி கிடச்சுச்சு. பத்துக்கு அம்பது கேட்டாங்க...''

''சே! அதுக்கு யார் வருவாங்க?''

''அதான!''

''நீ என்ன கேட்டே?''

''முப்பது.''

அது சரி. முப்பதுன்னா ஆள் வருதா?''

கணேஷ் உற்சாகத்துடன் ''அதுக்குத்தான் அருணாவுக்கு வரலாம்னா அதுக்குள்ள நீங்களே வந்துட்டிங்க'' என்றான்.

''முதலாளிதான் பயலுக்கு எவ்வளவு தெரியும்னு தெரிஞ்சுட்டு வரச் சொன்னாரு,''

''எனக்குத் தெரிஞ்சதெல்லாம் வியாபாரம் மட்டும்தான். என்ன ஏது எல்லாம் தெரியவே. தெரியாதுன்னு சொல்லிடுங்க.''

''முக்கியமா அந்த விஷயம் தெரியுமா?''

''எந்த விஷயம்?''

''அதை நீல்ல சொல்லணும்.''

பெரியசாமி முதல் முறையாகப் பேசினான். ''அண்ணே இதுவரைக்கும் விசயத்தை விடாமப் பேசியிருக்கான் பாத்திங்களா. முதலாளிக்கு என்ன பதில் சொல்விங்க?''

''பழுது பாக்காம பெரிய விசயத்துக்கு வரமாட்டான் போலத் தெரியுது. என்ன செய்யலாம்?''

''முதலாளி சொன்ன ரெண்டாவது விசயம்தான்.''

''என்னது!'' என்றான் கணேஷ்.

''பெரியசாமி வா! சுருக்கமா முடிச்சுட்டு வீட்டுக்குப் போயிரலாம். வக்கீலு! உக்கல் கிராமத்துல கோயில் வாசல்ல அந்த ஆளுக்கு என்ன ஆச்சு தெரியும்மா?'' அவர்கள் இருவரும் அவனை நெருங்க கணேஷ் இப்போது இருவர் கையிலும் கத்தி இருப்பதைப் பார்த்தான்.

''அய்யோ! நான் இன்றைக்குக் காலி!''

அவர்கள் சேதம் பண்ணும் உத்தேசத்துடன் விரோதத்துடன் நெருங்க கணேஷ் மறுபடி உரக்கக் கத்திவிடலாமா என்று யோசித்தான். பிரயோசனமில்லை. கழுத்தைக் கிழிக்க ஒரு பத்து பதினைந்து செகண்டுக்கு மேல் ஆகாது. வேறு என்ன செய்வது? குலதெய்வத்துக்கு வேண்டிக் கொள்ளலாம் என்றால் குலதெய்வம் என்ன என்று சட்டென்று ஞாபகம் வரவில்லை. இருங்க இருங்க என்று அவர்களைத் தடுக்க முயற்சி செய்து செய்யக் கூடியது எதுவும் தோன்றாத நிலையில் அந்தக் கத்தி முனை விசுவரூபம் எடுத்து அவன் பார்வை முழுதும் வியாபிக்க...

வாசல் கதவு தட்டப்பட்டது.

சட்டென்று நின்றார்கள். ''பெரியசாமி யாரு பாரு''என்றான் பெரியசாமி அல்லாதவன்.

''பாஸ்! பாஸ்!'' என்று வஸந்தின் குரல் கேட்டது. கதவு பொறுமை இல்லாமல் தட்தட்தட்டப்பட்டது.

''பேசாதே!'' என்றான் கத்திக்காரன்.

''என்னது? டெலிபோனை அவுட் ஆஃப் ஆர்டர்னுங்க. ஆள் உள்ளே இருக்காப்பல இருக்கு. விளக்கு எரியுது, நிழலாடுது...

''பாஸ்! ஏதாவது கெட்ட காரியம் பண்ணிக்கிட்டு இருக்கீங்களா? யாராவது சில்லறை உருப்படி... சேச்சே அப்படிப்பட்ட ஆசாமி இல்லையே நீங்க. ரிஷ்ய சிருங்கராச்சே, திறங்க பாஸ்!''

''ஷ்!பேசப்படாது. பேசினா நாக்கைக் கிழிச்சிடுவேன்'' கத்தி மிக மிக அருகில் பளபளத்தது.



டாக்டர்: ஒன்பதாவது வார்டு நோயாளி எப்படி இருக்கிறார்?

நர்ஸ்: அவருக்கு மேலும் கீழுமாக மூச்சு இரைக்கிறது!

டாக்டர்: என்ன ஆயிற்று அவருக்கு?

நர்ஸ்: அவர் என்னுடன் அறையினுள் ஓடிப்பிடித்து விளையாடினார்!

''இப்பத் திறக்கப் போறிங்களா கதவை உடைக்கட்டுமா?''

கணேஷ் அவனைப் பார்த்தான். அவன் சற்றுக் குழப்பத்தில் இருப்பது தெரிந்தது. இப்போது அவர்கள் விபரீதமாக ஏதும் செய்ய மாட்டார்கள். வெளியே போக ஒரே வழிதான் இருக்கிறது. அதை வஸந்த் அடைத்துக் கொண்டிருக்கிறான். 'சீக்கிரம் ஜன்னல் வழியே எட்டிப் பாரேன் முட்டாளே!'

பெரியசாமி கதவருகே சென்று ''யாரு'' என்றான் அதட்டலாக.

''அது யாரு அசரீரி?''

''சொல்லு! சொல்லுடா. போச்சொல்லு. நான் பிஸியா இருக்கேன். அப்பறம் வான்னு சொல்லு,'' என்றான் கத்தி சின்னக் குரலில்.

''வஸந்த்! பிஸியா இருக்கேன் அப்பறம் வா!''

''கட்சிக்காரங்களோட பேசிக்கிட்டிருக் கேன்னு சொல்லு.''

''கட்சிக்காரங்களோட பேசிக்கிட்டிருக் கேன். காலைல ஏழே காலுக்கு வந்தா போதும்.''

''சரி பாஸ்'' என்றான் வஸந்த். ஏழே கால் என்றால் எஸ். ஓ. எஸ். என்று அவர்கள் சங்கேத பாஷையில் அர்த்தம்.

பெரியசாமி திரும்பி கணேஷை நோக்கி வருகையில் படீர் என்று கதவு வெடித்துத் திறந்தது.

வஸந்த் உள்ளே மடை திறந்தாற்போல் பாய்ந்தான். பெரியசாமியின் காலை ஒரே வீச்சில் வாரி வீழ்த்தி விட்டு அதனால் கீழே விழுந்த கத்தியை எடுத்துக் கொண்டு மற்ற வனை நோக்கி ''யோவ்! வரியா கத்திச் சண்டை? அந்தாள் கிட்ட ஆயுதமில்லை. எங்கிட்டத் தைரியமிருந்தா வா. தொப்பைல கீறி சைனீஸ் ரெஸ்டாரண்ட்லே நூடில் போடுவாங்க பாரு அந்த மாதிரி குடல் பூரா துப்புரவா வெளில கொண்டு வர்றேன். வாடா புள் சோமாறி!'' என்றான்.

கத்திக்காரன் வஸந்தின் மேல் பாய கணேஷ் விலகி சின்னதாக ஒரு ஸ்டூலை எடுத்துப்பெரியசாமி எழுந்திருக்காமல் அவன் மண்டை மேல் போட்டான்.

''பாஸ்! அந்தக் கூஜா! அதை உப யோகியுங்க.''

வஸந்த் கத்திக்காரனைப் பார்த்து: ''எதுக் கய்யா இந்த வயசுல இப்படி ஓடிவர! இப்ப நான் ஒதுங்கிட்டேன். என்ன ஆச்சு பாரு! நேரப் போய் சுவத்தில மோதிக் கிறே இல்லே? மூக்கில பட்டுதா? ரத்தம் வரதா இல்லையா? இல்லையா... வா...வா... மறுபடி ஓடிவா! உனக்குப் போருத வேளை. வஸந்தோட ஓடிப் புடிச்சு விளையாட ணும்னு ஜாதகத்தில எழுதி வச்சிருக்கு... வா....''


மறுபடி வஸந்தை நோக்கி ஓடி வந்த வனை அட்டாக் கொடுத்து வீழ்த்தினான். 'பாஸ் என்ன செய்யலாம்? தொப்புள்ள கத்தியை வெச்சுத் திருகலாமா இல்லை இங்கேயே ஐபேட் பண்ணிடவா?''

''இல்லை வஸந்த்! இவங்ககிட்ட கேள் விகள் கேட்கணும்.'' (தொடரும்)

அவன்: ''என் ஜோக்குகளுக்கு என் மனைவி சிரிப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கலே!''

இவன்: ''ஜோக் எழுதறதே சிரிக்கிறதுக்குத்தானே...?''

அவன்: ''நீ ஒண்ணு! தினசரி தபாலில் என் ஜோக்குகள் திரும்பி வருவதைப் பார்த்துத் தான் சிரிப்பா சிரிக்கிறா அவ!''





டைரக்டர்: ''என்ன இது! நான் ஸ்டார்ட் சொல்றதுக்கு முன்னடியே சிவன் வேடத்தி லிருக்கும் ஹீரோ ருத்ர தாண் டவம் ஆட ஆரம்பிச்சுட் டாரு!''

உதவி டைரக்டர்: ''நீங்க ஒண்ணு! அவர் ஆடறது படாதிபதி ஒப்பந்தப்படி பணம் தராததற்காக!''

-உ. ராஜாஜி

''அம்மா பார்க்கிறு...த்சு, அம்மா பார்க்கிறு லலிதா...''

மாதவன், மனைவியின் கிட்டத்தில் வந்து காதைக் கடித்தான். ஒரு நிமிஷம் ஒன்றும் புரியாமல் பரக்கப் பரக்க விழித்த லலிதா தன் பிசகை உணரக் கொஞ்ச நேரம் பிடித்தது.

இடது கையால் குழம்பைக் கரண்டியில் எடுத்துக் கணவனின் இலையில் ஊற்றியவள் 'தொபுக்'கென்று கரண்டியைப் பாத்திரத்தில் போடுகிறாள். ஓரக் கண்ணால் மாமியாரைப் பார்த்தவளின் முகம் சிறுத்தது.

பார்வதி இங்கேயே பார்த்துக்கொண்டிருந்தாள். மருமகள் கரண்டியைப் போட்டதும் எழுந்திருக்க மாட்டாமல் எழுந்து வந்தாள்.

''புருஷன்காரனுக்கும், நம்மை விட வயசுல பெரியவங்களுக்கும் இடது கையால எதையும் பரிமாறக் கூடாது லலிதா.. அதுக்காகத்தான் அவங்களை முதல் பந்தியில உட்கார்த்தி வச்சுப் பரிமாறிட்டு, அப்புறமா நாம சாப்பிடணும்னு பழக்கம் வச்சிருக்காங்க... நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுங்க. வேண்டாங்கலை ஏதாவது வேணும்னு ஒரு குரல் கொடுத்தா நான் எழுந்து வந்து போடறேன்...''

பார்வதி சாதாரணமாகத்தான் சொ... னாள். ஆனால் லலிதாவுக்குச் சுருக்கென்றது.

'புருஷனும் பெண்டாட்டியும் சாப்பிட றப்ப விறைச்சு விறைச்சு என்ன பார்வை... சே, துளிக்கூட நாகரிகமே தெரியாதவ...'

மனசுக்குள் கடுகடுத்துக் கொண்டாள்.

மாதவனுக்குக் கல்யாணமாகிப் பதினைந்து வருஷங்களாகின்றன. இத்தனை நாட்களில் சேர்ந்தாற்போல் ஒருமாசம் கூட அவன் மனைவி குழந்தைகளுடன் இந்தக் கிராமத்தில் வந்து தங்கியதில்லை.

கல்யாணமானவுடன் பம்பாயில் இரண்டு வருடக் குடித்தனம். பிறகு அவனது ஆபீ



ஸிலேயே அவனை ஐந்து வருடத் தொழிற்பயிற்சிக்காக ஜப்பானுக்கு அனுப்பினுர்கள். அதற்குப் பிறகு மீண்டும் பம்பாய், மீண்டும் அமெரிக்கா, திரும்பவும் போபால், ஹைதராபாத். இப்பொழுது கடைசியாகக் கொஞ்ச நாட்களாகச் சென்னை.

மாதவனின் பெற்ருேருக்கு இந்தக் கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு மகனின் கடிதத்தை எதிர்பார்ப்பதும், அவனுக்காகக் கவலைப்படுவதும் தவிர வேறு வேலையில்லை.

நடுவில் – இந்தியாவில் இருக்கும் காலங்களில் மாதவன் லலிதாவுடனும் குழந்தைகள் சுமா, ரவியுடனும் கிராமத்துக்கு வருவான். ஒரு மாச லீவில் வருவான். சென்னையில் லலிதாவின் பெற்ருேர் வீட்டிலேயே பதினைந்து நாட்கள் போய்விடும். மீதி நாட்களில் திருப்பதி, பழனி, மதுரை இப்படிக் கோவில்களில் வேண்டுதல்களை நிறைவேற்று வதில் ஓடிவிடும். கடைசியாக இவர்கள் கிராமத்துக்கு வரும்போது காலில் கஞ்சியைக் கொட்டிக் கொண்டாற் போல் பரக்கப் பரக்க வருவார்கள்.

ராமன் இருக்குமிடம்

15.3.81



''இன்னும் ரெண்டு நாள் தங்கருப்பல வரக்கூடாதா மாதவா... இப்படி முகத்தைக்காமிச்சுட்டு ஓடிப் போயிடறயே. குழந்தைகளுக்கு வாய்க்குப் பிடிச்சதைச் செஞ்சு போடக் கூட நேரமில்லாம....''

பார்வதி, உடைந்த குரலில் மகனிடம் கெஞ்சுவாள். மாதவனின் தந்தைராமேசனுக்குமகனின் நிலைமை புரிந்திருப்பதால் வற்புறுத்த மாட்டார்.

மாதவனைப்பொறுத்தவரையில் அப்பா, அம்மாவிடம் இன்னமும் மரியாதையும், பயபக்தியும் துளிக் கூடக் குறையவில்லை. தன்னுடன் அவர்களை அழைத்துச் சென்று வசதியாக வைத்துக்கொள்ள வேண்டும்என்றுதுடியாய்நின்ருன்.

''எங்களுக்கு இது தான் சௌகரியம்.. இத்தனை நாளாப் பழகின கோயில் குளத்தையும், நிலம் நீச்சையும், மாடு கன்றையும் விட்டு விட்டுப் பட்டணம் வர முடியாது.''

எழுதியது யார்? பரிசு ரூ500/=

இந்த வாரம் இடம் பெற்றுள்ள நான்கு சிறு கதைகளிலும் ஒரு விசேஷம். எழுதியவர் பெயர் இராது. அதற்குப் பதில் ஒரு தேதி இருக்கும். உதாரணமாய், ''ருக்குவின் கல்யாணம் குறையின்றி நடக்கும்'' என்ற கதையில் இடம் பெற்றுள்ள தேதி 12-4-81. எனவே 12-4-81 தேதி தாங்கிய கல்கி இதழை எடுத்துப் பாருங்கள். அதில் நாலு எழுத்தாளர்களின் நான்கு சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. அந்த நாலு எழுத்தாளர்களில் ஒருவர்தான் ''ருக்குவின் கல்யாணம் குறையின்றி நடக்கும்'' என்ற இந்தச் சிறுகதையை எழுதியவர். அவர் யார்? இதே போல, இந்த இதழில் இடம் பெற்றுள்ள நான்கு சிறுகதைகளையும் எழுதிய நான்கு எழுத்தாளர்களைக் கண்டு பிடியுங்கள். ஒரு தபால்கார்டில் கதையின் தலைப்பையும் எதிரே கதாசிரியரின் பெயரையும் எழுதி அனுப்புங்கள். நான்கு எழுத்தாளர்களையும் சரியாகக் குறிப்பிடுகிறவருக்குப் பரிசு ரூ. 500- ஒருவருக்கு மேல் நான்கு விடைகளையும் சரியாக எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். முடிவுதேதி மே 27. ''எழுதியது யார்? என்று தலைப்பு தரவும்.''

தீர்மானமாகச் சொல்லிவிட்டார் ராமேசன்.

இப்பொழுது – இந்த ராமேசனுக்கு உடல் நிலை மோசமாகியுள்ளது. கிட்டத்தட்ட ஒரு மாசமாகப் படுத்த படுக்கை. மாதவனுக்குத் தகவல் கிடைத்ததும் இருப்புக் கொள்ளாமல் பறந்து வந்து விட்டான். கூடவே லலிதா, மகள் சுமா. ரவிக்கு இன்னும் பரீட்சை முடியாததால் லலிதாவின் பெற்றோர் வீட்டில் அவனை மாத்திரம் விட்டு வைக்கும்படியாகி விட்டது.

இன்றுவரை மாதவன், மனைவியைப் பிரிந்து ஒரு நாள் கூட இருந்ததில்லை. அவன் முதன் முதலாக அமெரிக்காவுக்குக் கிளம்பியபோது சுமா கைக்குழந்தை. லலிதா பிள்ளை பெற்ற பச்சை உடம்புக்காரி...

''லலிதா, அஞ்சு வருஷம் ஓட்டமாஓடிடும். நான் மட்டும் போயிட்டு வந்துடறேன். குழந்தைக்கு அந்த சீதோஷ்ணம் ஒத்துக்குமோ ஒத்துக்காதோ. சின்னக் குழந்தையை வச்சுக்கிட்டுத் தேசம் விட்டுத் தேசம் வந்து நீ சிரமப்பட வேண்டாம். பேசாம, இங்கேயே உங்க அம்மா அப்பாவோட இரு...''

''வேண்டாம், ப்ளீஸ், எத்தனை கஷ்டமானாலும் நான் அட்ஜஸ்ட் பண்ணிப்பேன். என்னையும் குழந்தையையும் அழைச்சிக்கிட்டுப் போயிடுங்க. ராமன் இருக்கிற இடம்தான் சீதைக்கு அயோத்தி... எனக்கு நீங்க இருக்கிற இடம்தான் சொர்க்கம்...''

பெருமையாக இருந்தது மாதவனுக்கு.

ஐந்து வருஷங்கள் ஓடியது தெரியவில்லை, இன்று சுமாவுக்குப் பதினாலு வயதாகிறது. ரவிக்குப் பத்து வயது. இதுவரையிலும் குழந்தைகள் படிப்புக்காகக்கூட அவள் தன் கணவனைப் பிரிய ஒத்துக்கொண்டதில்லை.

''இங்கேயெல்லாம் தமிழ் ஒரு சப்ஜெக்டாவே இல்லே லலிதா. பேசாம நீ குழந்தைகளை மெட்ராஸ்லே கொண்டு வச்சுட்டுப் படிக்க வைக்கலாம். நானும் அந்தச் சாக்குல 'சௌத்' பக்கம் வர முடியும்.''

அவனும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டான். லலிதா பிடிவாதமாக மறுத்து விட்டாள். குழந்தைகளுக்கு வீட்டிலேயே தமிழ் டியூஷன் வைத்தாள். சுமாவுக்குத் தேவாரமும், திருவாசகமும் சொல்லிக் கொடுத்தாள். பாரதியார்பாட்டுக்களை ராகத்தோடு பாடக் கற்றுக் கொடுத்தாள்.

இப்பொழுது சென்னை வந்ததும்தான் மாதவன் சற்று ஓய்ந்திருக்கிறான். குழந்தைகளின் படிப்பும், அவனது அலைச்சலும் ஒரு நிலைக்கு வந்திருக்கின்றன.

மாமியாரின் தொண தொணப்பும் அடிக்கடி மண்டையில் இடித்து, 'பெண்ணாய் லட்சணமாய்த் தலை குனிஞ்சு நட' என அறிவுரை வழங்கும் வீட்டு நிலைப்படியும் மாமனாரின் பக்க வாதமும்...

அலுத்து விட்டது அவளுக்கு.

எல்லாவற்றையும் விடச் சகிக்க முடியாதது தனது ஒவ்வொரு செயலிலும் மாமியாரின் தலையீடுதான்.

''ஏன் லலிதா, சுமாவோ நீயோ இங்க வந்ததுக்குப் பிறகு வீட்டுக்கு விலக்கா உட்காரவே இல்லையே, கலந்துக்கறயா...''

''நான் எப்பவோ ஒரு தடவை ஆகறேன். சுமா சிறுசு. அவளுக்கு அந்த மாதிரி பழைய சம்பிரதாயமெல்லாம் தெரியாது. குழந்தை தானே....''

''அப்படிச் சொல்லாதேம்மா, நீங்க எனக்குத் தெரியாம எப்படியோ இருந்துட்டுப் போங்க. இங்கே வேண்டாம். எனக்கு இதெல்லாம் பிடிக்காது.''

இதுமட்டுமில்லே. உடை விஷயங்களிலும் பார்வதியின் தொந்தரவு தாங்க முடியவில்லை.

''லலிதா சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதே. இத்தனை இறக்கமா கழுத்து வச்சு ரவிக்கை போட்டுக்காதேயேன். நேத்திக்குப் பக்கத்து வீட்டு மீனாட்சி உன் ரவிக்கையைப் பத்திக் கோவில்லே பிரசங்கம் பண்ணிட்டிருக்கா. சுமாவுக்கும் அழகா பாவாடை தாவணி போட்டு விடேன்... பார்க்க நல்லா யிருக்கும். நாமதான் இட „

னுக்குத் தக்கபடி நடந்துக்கணும். பட்டணத்துக்குப் போயி இதெல்லாம் மாட்டிக்கிடட்டுமே....''

லலிதாவுக்கு எப்போது இந்த இடத்தை விட்டுக் கிளம்புவோம் என்ருகிவிட்டது.

அன்று இரவு தனிமை கிடைத்தபோது அவள் மாதவனைக் கேட்கிருள்:

''ஏங்க, மாமாவை மெட்ராசுக்கு அழைச்சுட்டுப் போய் ட்ரீட்மெண்ட் கொடுக்கலாமே... இந்த மாதிரி டாக்டர் வசதியில்லாத ஊர்ல வச்சுக்கிட்டுத் திண்டாட வேண்டாமே....''

''சொன்ஞக் கேட்கமாட்டேங்கருரேலலிதா அவர் கடைசி மட்டும் இங்கேயேதான் இருப்பேன்னு பிடிவாதம் பிடிக்கிருர்.''

''சுமாவுக்கு அடுத்த வாரம் ஸ்கூல் திறக்கப் போருங்க.. என்ன செய்யப் போறீங்க... உங்களுக்கும் லீவு தீர்ந்து போச்சு....''

''நான் நேத்துத்தான் இன்னும் ஒரு மாசம் லீவுக்கு அப்ளை பண்ணி லெட்டர் போட்டிருக்கேன். சுமாவை யாராவது நல்ல துணையோடு மெட்ராசுக்கு உங்க அம்மா வீட்டுக்கு அனுப்பி வைப்போம். நாம ரெண்டு பேரும் இருந்துட்டுப் போகலாம்....''

ரொம்ப சகஜமாய் மல்லாந்து படுத்தபடி அவன் கூறுவதைக் கேட்டவுடன் எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது அவளுக்கு.

''இதோ பாருங்க... இன்னும் எத்தனை நாள் இங்கே இருக்கணுமோ இருந்துட்டு வாங்க. நான் சுமாவோட போறேன்.... அப்பப்பா... வீடா இது? ஒரே நரகம். ஒரு ஃபேன் இல்லே, லைட் இல்லே, குழா இல்லே... காராக்கிரகம் மாதிரி...''

''லலிதா என்ன விவரம் புரியாமல் பேசறே....''

''எல்லாம் புரிஞ்சுதான் பேசறேன். எங்க ரெண்டு பேராலேயும் இங்கே இருக்க முடியலே. உங்களுக்குத்தான் தீராது. இருக்கணும். எனக்கென்ன?''

மாதவன் அயர்ந்து போய்விட்டான்.

லலிதாவா இப்படி...

அவனுடன் இணை பிரியாமல் வரும் லலிதாவா?....

ராமன் இருக்கும் இடம்தான் அயோத்தி என்று வாய்க்கு வாய் சொல்லும் லலிதாவா?

மாதவன் பிறந்து, வளர்ந்து ஆளான இந்த அயோத்தியையே நரகம் என்று சொல்கிருள்....

'...இந்தக் காலத்து சீதைகளுக்கு நிஜ அயோத்தி பிடிக்காதோ... வசதி மிகுந்த நகர வாழ்க்கையும், ஆடம்பரமும் இருக்கிற இடங்களைத்தான் அவர்கள் அயோத்தி பட்டணமாக மதிப்பார்களா....'

சட்டென்று கண் முன் தோலுரித்து நின்ற மனைவியின் இதயத்தை அதன் வெற்றுப் பாசத்தைக் கண்கூடாய்த் தரிசித்தவனுக்கு— கண்கள் கலங்குகிறது.

● காதல் நிறைவேருமல் முறை மாமனுக்கு மனைவியாகித் தற்கொலை செய்து கொள்ளும் பெண், காதலன் கல்யாணத்தைத் தடுக்க ஒரு முயற்சியும் எடுக்காதது துரதிருஷ்டம். சும்மா (பொம்மை) பிடில் வாசிப்பதோடு காதலன் கடமை முடிந்து விடாது.

அழகு, நடிப்பு அனைத்தும் பெற்ற அம்பிகா. தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வரும் வனிதா; விஜய் பாபுவின் தங்கையாக வந்து தன்னைக் கெடுத்த பன்னீரைக் கடைசியில் கொன்று முடிக்கிருர். பன்னீராக ராதாரவி, ஸன் ஆஃப் எம்.ஆர்.ராதா, நம்மிடம்நிறைய எதிர் பார்ப்புக்களை ஏற்படுத்துகிருர். முதலிரவு முறுக்கு இறுக்கம். அடுத்த படத்தில் திறமையைப் பார்ப்போம். நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதை நிரூபிக்கும் விஜய்பாபு நடிப்பு. சாய்ந்த கழுத்தும், குதித்த நடையும் இதோடு முற்றுப்புள்ளி கேட்கின்றன.

படம் பூரா ஒரு கலகலப்பை உண்டாக்கும் குடைசாமி, (எஸ். எஸ். சந்திரன்) கவர்கிருர். இவர் தர்ம அடி வாங்கி முணு முணுக்கும் இடம் உச்சம். ஆரம்பத்தில் ஜெயிலில் இருந்து வந்து பட்டாமணியத்திடம் காளி வீரம் பேசும் போதே 'சரி, இவர் படத்தின் கடைசியில் படத்தை முடித்து வைக்க உதவுவார்' என்று நினைக்கிரும். அதே. நாள் பூரா சைக்கிளுக்கு காத்தடித்துக் கொண்டிருக்கும் இவருக்குக் கடைசியில்தான் ரோஷம் வருவது 'தமிழ் சினிமா.'

மல்லி தயாளனின் காமராவும் சந்திர போஸ் இசையும் இம்முறையும் பாராட்டுப் பெறுகின்றன.

தரையில் வாழ முடியாத மீன்கள் கடைசியில் கடலுக்குள் செல்கின்றன. அல்பாயுளில் உயிரை விடாத மீன்கள்.


—நளினி சாஸ்திரி

தரையில் வாழும் மீன்கள்





ஆடு நனைகிறதே
என்று ஓநாய் அழுததாம்!



தில்லு முல்லு

என்ன மிஸ்டர் பாலசந்தர், நானும் தெரியாமல்தான் கேட்கிறேன். இது என்னய்யா தில்லு முல்லு? அவனவன் விலைவாசி உயர்வால் அவதிப்படுகிறான்; சட்ட மன்றத்தில் செருப்புப் பறக்கிறதே என்று வேதனைப்படுகிறான், அரசியல் கொலைகளும் லஞ்ச லாவண்யங்களும் அதிகரித்துக் கொண்டே போகிறதே என்று கவலைப்படுகிறான். இந்தச் சமயத்தில் நீர்பாட்டுக்கு எல்லாரையும் வயிற்றைப் பிடிச்சுக்கிட்டு சிரிக்க வைச்சுக் கிட்டிருந்தால் என்ன அர்த்தம்? படத்தைப் பார்த்துவிட்டு வந்து நாலு நாள் ஆவுது. இன்னமும் உமது தில்லு முல்லுவை நினைத்து நினைத்து உள்ளத்தில் உற்சாகம் தளும்புகிறதேயன்றி யதார்த்த உலகுக்கே மனசு திரும்ப மாட்டேங்குது. இதைவிடப் பெரிய உலக மகா மோசடி என்ன ஓய் இருக்க முடியும்?

போதாக் குறைக்கு உமக்குத் திரைக் கதை வசனம் எழுத ஒரு விசு அகப்பட்டார் பாரும்! விநாயகரையும் முருகனையுமே தமது தில்லு முல்லுவில் சம்பந்தப்படுத்துகிற ஃபிராட் நெம்பர் ஒன்! பின்ன என்னய்யா, நல்ல சுத்தமான நகைச்சுவை எழுதியே மக்களைக் கவர முடியும்னு நிரூபிச்சுக்கிட்டிருந்தால் இரட்டை அர்த்தத்தையே நம்பி வாழ்ந்துக்கிட்டிருக்கிற வசனகர்த்தாக்கள் கதி என்ன ஆவது?

அதுதான் போகட்டும் என்றால் ரஜனி வேறு உங்க ஜகஜ்ஜாலப் புரட்டுக்களுக்குத் துணை நிற்கிறார். ரஜனி ஸ்டைல்னு ஒரு இமேஜை உருவாக்கிட்டு அதும்படி நடிச்சாத்தான் எடுபடும்னு நினைச்சு முரட்டுக் காளையை அணுகும்போதுகூட கராட்டே மூவ்மெண்ட் காட்டியவர் இப்பத் திடீர்னு வித்தியாசமா நடிக்க முடியும், இயல்பா, சிறப்பா செய்து காட்ட முடியும்னு ஆரம்பிச்சா எப்படி? ''அவர் நடிப்பு = மீசை''ன்னு வைச்சுக்கிட்டால் எது இயல்பான மீசை எது ஒட்டவைச்ச மீசைன்னே புரிய மாட்டேங்குது, போங்க!

சௌகார், தேங்காய், பூர்ணம் எல்லாருமே வெறும் ஹம்பக்தான்! ஏன்னு கேளுங்க. துணை கேரக்டர்கள் துணை கேரக்டர்களா இருக்கணும். அவங்க மெயின் கேரக்டர்களையே முழுங்கிடற மாதிரி நடிச்சா தமிழ் திரையுலகு ஒப்புக்க முடியுமா? அப்புறம் ஸ்டார் வேல்யூங்கிற மாயைக்கு ஜன்னி கண்டுவிடாதா? அப்ப பூர்ணமா வருவார் வைத்தியம் பண்ண?

கண்ணதாசன், எம். எஸ். வி., வாணி, எஸ். பி. பி., மலேசியா, அப்புறம் அந்தச் சோட்டா (கட்டபொம்மன்) சந்திரசேகர், காமிரா லோக்நாத் எல்லோரும் சேர்ந்து ஒரேயடியா டபாய்க்கிறாங்க, ஒரு 'தம்' அடிக்கக் கூட அஞ்சு நிமிஷம் எழுந்து போக விடாம ரசிகர்களை ஸீட்டில் கட்டிப்போட்டு வைச்சு....சே, ரொம்ப மோசம்!

பாப்பா முதல் கிழவன் வரை எல்லாரையும் ஒரு படம் சுண்டி இழுக்குதுன்னா அது என்ன ஜாலக்குன்றேன்?

மொத்தத்திலே தில்லு முல்லு இல்லாத ஒரே விஷயம் மூலக் கதை கோல் மால்னு ஒத்துக்கிட்டிருக்கீங்களே அது ஒண்ணுதான்!

- குட்டி கிருஷ்ணன்



20. இனியாவுடைய கல்யாணம்!

"உட்காருங்க உஸ்தாத்" என்றான் வஸந்த்.

சரியான அடிபட்டிருந்த அவ்விருவரும் மாரத்தான் ஓடிவந்தவர்கள் போல இரைத்தார்கள். "சொல்லுங்க. எதுக்கு வந்தீங்க?"

"சத்தியமா எங்களுக்குத் தெரியாது!"

"கேள்வி கேட்க மட்டும் தெரியுமா? பதில் சொல்லத் தெரியாதா?.... இதபார் என்ன எழவுடா உம்பேரு? அடிக்க வந்தியா?... அவ்வளவு சுலபமா அடிச்சுட்டுப் போக முடியுமா? இவரு யாரு தெரியும் இல்லே?... உங்க மாதிரி நூறு கேடிகளைச் சமாளிச்சுட்டு இருபத்தி அஞ்சு வாரமா ஹவுஸ் ஃபுல்லா ஓடிக்கிட்டிருக்கோம் தெரியுமா? இந்தா வாங்கிக்க ஒண்ணு பாக்கி இருந்தது" என்று தாடையில் அடித்தான்.

"வஸந்த்! போதும்!" என்றான் கணேஷ். "இத பாருப்பா! உன்னை அனுப்பிச்ச ஆள் யாருன்னு சொல்லிடு... பொழுதோட விட்டுர்றோம். இல்லே முரண்டு பண்றேன்னு தீர்மானிச்சாலும் போலீஸ் கிட்ட ஒப்படைக்கறோம்."

"அவுங்க பதினைஞ்சு நிமிஷத்தில நீ சாப்பிட்ட பாயா குஸ்காவோட உண்மையையும் கக்க வெச்சுடுவாங்க! நகம் நல்லா வளத்திருக்கே இல்லே? ஊசி ஏத்தினாத் தாங்குமா?"

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"எங்களை விட்டுடுங்க. நாங்க கூலிக்காரங்க!"

"சரி சரி! கூலி கொடுக்கறது யாருன்னு சொல்லு."

"அவரு பேரு சரியாத் தெரியாதுங்க! நிசம்மா!"

"அவரு பேரு சரியாத் தெரிய உன்னை எந்த இடத்தில பிசியணும் சொல்லு. அங்க பிசியறோம்.... இல்லே உபரியா ஏதாவது எலும்பை உடைச்சுக்கலாமா?"

"வேண்டாம் வேண்டாம். அவரு பேரு அருண் பிரகாஷ்...."

"அட்ரஸ்ஸு?"

"பீட்டர்ஸ் ரோடில அவருக்கு ஆபீஸு. அருணா எண்டர்ப்ரைஸ்!"


"என்ன பிஸினஸ்?"

"ஏற்றுமதி இறக்குமதி."

"என்ன ஏத்தறாங்க, என்ன இறக்கறாங்க?"

"சரியாத் தெரியாது. அப்புறம் ஓட்டல் வெச்சிருக்காரு. அப்புறம் அச்சாபீஸு... அப்

வஸந்த்! வஸந்த்!



புறம் நிறைய பிஸினஸ் நடத்தருங்க! அவர் தான் எங்க ரெண்டு பேத்தையும் அனுப்பிச்சு அந்தாளுக்கு என்ன தெரியும்னு கேட்டுட்டு வரச் சொன்ஞரு!''

''சில்லறை எவ்வளவு?''

''நூறு ரூவாங்க!''

''இப்ப நீ பொய் சொல்றியா பார்த்துறலாமா?...'' கணேஷ் டெலிபோன் டைரக்டரியை எடுத்து ஆராய்ந்தான்.

''இப்ப ஆபீஸ் திறந்திருக்காதுங்க!''

''வீட்ல இருப்பாரா?''

''வீடு எங்கே தெரியாதுங்க! அய்யா! என்னே விட்டுடுங்க! நிசமாகவே நான் கூலிக் காரன்.... அவங்க பின்ஞடிப் போவோம். அவருக்குப் பாதுகாப்புத் தருவோம். ரெண்டு வேளை சோறு போட்டு பேட்டா கொடுத்து அங்கங்கே அனுப்புவாங்க!''

''எவஞவது குடுமி ஆப்ட்டான்ஞ தர்ம அடி அடிச்சுட்டு வந்திடுவீங்க! அப்படித்தானே?''

''அடி உதை கொஞ்சம் தாங்க,



பயப்படுத்துவோம். சினிமாவில இருந்தங்க. எம். ஜி. ஆர். ஆக்டிங்கை நிறுத்தினதுக்கு அப்புறம் வாய்ப்புக் கம்மி ஆய்டுச்சுங்க! சம்சாரம், ரெண்டு பொட்டைப் புள்ளேங்க. ஒண்ணு ஜெனரல் ஆஸ்பத்திரிலே நர்ஸா இருக்குதுங்க. மத்தது பத்தாங் கிளாஸ் படிக்குது....''

''பேர் என்ன?''

''ஏய் பேரும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்! வஸந்த், அருணு எண்டர் ப்ரைஸஸ் பீட்டர்ஸ் ரோடில இருக்குது. அதுவரைக்கும் பொய் சொல்லலே இவன்... அனுப்பி வைச்ச ஆள்தான் இவங்க.''

''விட்டுறலாமா பாஸ்!''

''கூடாது! வீட்டில நுழைஞ்சு கலாட்டா பண்ணதுக்கு போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுத்துடு; அரெஸ்ட் பண்ணிட்டுப் போகட்டும்!''

''வேண்டாங்கய்யா. நான் போலீஸ் ஸ்டேஷன் வாசலே மிதிச்சதில்லே.''

தவறிய வாய்ப்பு!

அப்பொழுது ஆசார்யாள் நாகப் பட்டினத்தில் முகாமிட்டிருந்தார். ஒரு நாள் கோயில் மதில் சுவரில் சிறுவன் ஒருவன் 'சங்கராசாரியார் ஒழிக' என்று கரித்துண்டால் எழுதினன். ஆஸ்திகர் ஒருத்தர் அந்தச் சிறுவனைச் சிண்டுபிடியாகப் பிடித்தார். ஆத்திரம் தீர அடித்தார். நேரே ஆசார்யாளிடம் வந்து, நடந்ததை விவரித்தார்.

பெரியவாள் பொறுமையாகக் கேட்டு விட்டு, அந்த ஆஸ்திகரைக் கடிந்தார். ''தெரியாத சிறு பிள்ளை அவனை நீ அடிப்பானேன்?'' என்று கேட்டார். அதோடு நில்லாமல், ''நீ என்ன செய்திருக்கணும், தெரியுமா? அவனை என்னிடம் அழைத்து வந்திருக்கணும். அவன் எனக்கு முன்னல் அந்த வசை மொழியைச் சொல்லணும். அதைக் கேட்டுவிட்டு, இந்த மனம் சாந்தமாக இருக்கிறதா, சலனப் படுகிறதா என்று நான் பார்க்கணும்! ஒரு நல்ல சோதனை தவறிப் போச்சு'' என்று கூறினர். -மயிலன்



''மிதிச்சுப் பாரு. எல்லாத்துக்கும் ஆரம்பம் வேண்டாமா?''

''அய்யா தயவு செய்து விட்டுருங்க....''

''ஏய், நீ சமீபத்தில் உக்கல் கிராமத்துக்குப் போனியா?''

''போனேங்க!''

''பல்லாவரத்தில உங்கஎஜமானருக்கு வீடு இருக்குதா?''

பல இடத்தில இருக்குதுங்க!''

''இரு வஸந்த்! உக்கல் கிராமத்துல என்ன செஞ்சே? கரெக்டா சொல்லு. விட்டுர்றேம்!''

''ஒண்ணும் செய்யலிங்க. வான் ஒட்டிக்கிட்டுப் போனேன். பொட்டில லோடு ஏத்திணுங்க. எடுத்து வந்து கொடவுன்ல விட்டேன்.''

''எத்தனை பொட்டி?''

''ஒரே ஒரு பொட்டி!''

''எவ்வளவு பெரிசு இருக்கும்?''

''இத இவ்வளவு!'' என்று அவன் கையில் சுமார் ஒன்னரை அடி அகலம் காட்டினுன்.

''உயரம்?''

''அதும் அதேதாங்க. சீல் வெச்ச பொட்டி!''

''அதுக்குள்ள என்ன?''

''தெரியாதுங்க. சத்தியமாத் தெரியாது. நான் கேட்கிறதில்லே. கேக்கக் கூடாது... சொல்றதில்லே.''

''சரி, இப்ப வந்தியே. உனக்கு என்ன குறிப்பாச் சொல்லி அனுப்பிச்சாங்க?''

''கிணத்துல என்ன இருக்குன்னு திருப்பித் திருப்பிக் கேளுன்னுங்க. தங்கம்னு சொல்ருணு, நகைன்னு சொல்ருணு வெறும் பாசித் தண்ணின்னு சொல்ருணு... எல்லாத்தையும் கேட்டு வந்து சொல்லுன்னு சொன்னுங்க. அவ்வளவுதாங்க!''

''உக்கல் கிணத்துல என்ன செய்திங்க?''

''நான் கிணத்துப் பக்கம் போனதில்லிங்க. அந்தக் கிணறு எங்க இருக்குன்னு தெரியாதுங்க!''

''கிணத்துல என்ன இருக்கு தெரியுமா?''

''அதுவும் தெரியாதுங்க. நான் கூலிக் காரன்!''

''டெலிபோனை எங்க வெட்டினே?''

''அவங்கதான் வெட்டச் சொன்னுங்க!''

''சரி, எங்க வெட்டினே?''

''உள்ள போற கேபிளைப் புடுங்கிப் போட்டேங்க!''

''வா! வந்து காட்டு.... வஸந்த்! அந்தக் கேபிளை டெம்பரியா மறுபடி கனெக்ஷன் கொடு.''

''அப்ப நான் போவலாங்களா?''

''இல்லே பிரதர் இன்னும் உன்னுேட பேச வேண்டியது நிறைய இருக்கு!''

இந்நேரம் உட்கார்ந்திருந்ததில் அவர்கள் இருவருக்கும் புதிய தெம்பு பிறந்திருக்க வேண்டும். சற்றும் எதிர்பாராத சமயத்தில் திடீர் என்று புறப்பட்டு வாயிற் கதவை நோக்கி ஒருவன் ஓட, மற்றவன் அவனைத் தொடர.... வஸந்த் அவர்களைத் துரத்த முயல, கணேஷ் அவனிடம் ''வஸந்த்! லீவ் தெம்!'' என்ருன்.

''ஏம் பாஸ்?''

''போகட்டும்! இவங்க வெறும் கையா ளுங்க! நாம பிடிக்க வேண்டியது எஜமானனே, என்ன பேர் சொன்னுன்?''

''அருண் பிரகாஷ்.''

''காலேல முதல் காரியமா அங்க போய்ப் பார்க்கலாம். மேல் விவரம் தெரியணும்னு அருணுவுக்கு வரவும்னு அவங்கதான் நமக்கு இன்விடேஷன் அனுப்பிச்சிட்டிருக் காங்க! கொஞ்சம் கொஞ்சமாப் புரியுது வஸந்த். அந்த ஆள் நம்மை ஆழம் பார்க் கருன். அருணுன்னு மொட்டையா பேர் கொடுத்துட்டா நமக்குப் பேர் தெரிஞ்சா வருவோம்னுஎதிர்பார்த்திருக்கான். வரலே. அப்புறம் அடியாளுங்களை அனுப்பிச்சிருக் கான். இதிலேருந்து என்ன தெரியுது....''

''ஒரு மண்ணும் தெரியலே. க. க. காட்டில விட்டாப்பல இருக்குது.''

''வஸந்த்! முதல்ல இருந்து பாரு...ராஜ ராஜன் கிணறு எங்க இருக்குதுன்னு அந்த விவரம் அவங்களுக்குத் தேவையா இருந் திருக்கு. ப்ரொபஸருக்கு அந்த விவரம் தெரிஞ்சிருக்கு. அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரையைச் சரக்குன்னு பிடுங்கிட்டுப் போனுங்க. நீ பல்லாவரத்திலே போய்க் குட் டையைக் குழப்பிட்டு வந்தே... ஆனு அவங்க ஒரு வான்ல உக்கல் கிராமத்துக்குப் போற துக்குத் தயார் பண்ணிக்கிட்டிருக்கிறதைப் பார்த்திருக்கே.... இப்ப ஸீன் ஆஃப் ஆக் ஷன் உக்கல். அங்க என்ன நடக்கிறது கோயில் வாசல்ல ஒரு கத்திக் குத்து. சதா சிவத்தோட விநோத வியாபாரம். குறுக்கே வந்த நம்மைக் கொல்ல முயற்சி. அந்தக் கோஷ்டி கொலேக்கு அஞ்சாதவங்க! தே ஆர் டெஸ்பரேட்! அவங்க என்ன செய்யறுங்க அல்லது செய்தாங்கங்கறது வெளிய தெரி யாம இருக்கறதுக்கு எதுவும் செய்வாங்க போல! இல்லேயா? இதுவரைக்கும் கிளி யராத்தானே இருக்கு?''

''ம்ஹூம்!'' என்று தலேயாட்டினுன் வஸந்த்.

''ஏதோ ஒரு பெரிய குற்றம் செய்ய ருங்க!''

''அது தெரியுது. நான் சொல்றேன் பாஸ்! கிணத்துக்குள்ள இருக்கிற ட்ரெ ஷரை எப்படியோ பாதாளக்கரண்டி போட்டு எடுத்திருக்காங்க.... தங்கக் காசுகள்...நகை ஏதேதோ.... அதை அப்படியே மெட்ரா ஸுக்கு எடுத்து வந்து விக்க ஏற்பாடு செய் திருக்காங்க... தட்ஸ் இட்! ஐ காட் இட் ஏற்றுமதி.... இறக்குமதி! அருணு எண்டர் ப்ரைஸஸ்! வெளி நாட்டில பெரிய விலேக்குத் தங்கக் காசுகளை வித்திருக்காங்க!... என்ன சொல்றீங்க?''

கணேஷ், ''ம்!.... இருக்கலாம். அது ஒரு சாத்தியம்!'' என்ருன்.

''வேற என்ன எழவு சாத்தியம் இருக்கு?''

''லூஸ் எண்ட்ஸ்!''

''என்ன? ஒண்ணெண்ணுச் சொல்லுங்க... முடிச்சுப் போடறேன்.''

''பத்துக்கு நாப்பது வியாபாரம்!''

''ஸிம்பிள்! பத்துத் தங்கக் காசுக்கு நாப்பதாயிரம் ரூபா! அந்தச் சதாசிவம் நம்மை வியாபாரம் பேச—வந்தவங்கன்னு தப்பா நினேச்சுக்கிட்டார்....''



முக தரிசனம்!

ஸ்ரீ பெரியவர்கள் காஞ்சிபுரத் தில் வியாஸ சாந்தாலீஸ்வரர் ஆல யத்தில் தங்கி இருந்தார்கள். அப் போது எங்கள் கல்வி இலாகா இணே இயக்குநராக இருந்த ஒரு வர் தமது குடும்பத்தாருடன் ஸ்ரீ பெரியவர்களேத் தரிசிக்க வந்திருந் தார். பெரியவாள் துவஜஸ்தம்பத் தினிடம் அமர்ந்து அவரது குடும்ப க்ஷேமங்களேப்பற்றி விசாரித்தார். கடைசியில் விடை பெறும்போது இயக்குநரின் தாயார் ''சாமீ! தாங்கள் மைலாப்பூரில் இருந்த போது தங்களே அருகில் வந்து தரி சனம் செய்ய முயன்றேன். மடத் தில் உள்ளவர்கள் என்னேப்பின்னுல் தள்ளி விட்டார்கள். எனக்கு இப் போது வயதாகி விட்டது. கண் சரியாகத் தெரியவில்லே. ஆகவே, சாமியை அருகில் இருந்து தரிசனம் செய்ய ஆவலாய் உள்ளது'' என்று விக்ஞாபித்தார். உடன் பெரிய வர்கள் என்னே அழைத்துக் கொட்டகையிலிருந்து பாட்டரி லேட்டைக் கொண்டு வரச்சொல்லி அதை ஏற்றித் தம் முகத்தில் படும்படி வைத்துக் கொண்டு ''இதோ பார், நீ திருப்தி அடைந்து போதும் என்று சொல் கிறவரை நான் இங்கு அமர்ந்திருக் கிறேன். நீ உன் ஆசை தீரத் தரி சனம் செய்து கொள்'' என்று கூறி ஞர். அந்த அம்மையார் ஸ்ரீ பெரிய வர்கள் முக விலாசத்தை ஆசை தீரத் தரிசித்து விடைபெற்ருர்.

- வி. மீனுட்சி சுந்தரம்


''இல்லே வஸந்த்! இந்த வியாபாரம் தலேகீழ் வியாபாரமா இருக்கு! பத்துக்கு முப்பது அல்லது பத்துக்கு இருபதுங்கறது பத்துக்கு நாப்பதை விட பெட்டரா, நல்லதா இருக்கே!''

''அப்படியா?''

''ஆமாம். அதுக்கப்புறம் பாரு. பஸ் ஸ்டாண்டிலே ஸாம்பிள் கொண்டு வந்தி

கிணற்றில் என்ன இருக்கிறது?

பரிசு ரூ500/=



ராஜராஜன் கிணற்றில் என்ன இருக்கிறது என்ற ரகசியத்தைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ரூ. 500 பரிசு அறிவிக்கிறுன் வஸந்த்! ஒரு தபால் கார்டில் ஓரிரு வரிகளில் ஒரே ஒரு அம்சத்தைக் குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள். உங்கள் ஊகம் சுஜாதாவின் முடிவுடன் ஒத்துப் போக வேண்டும். ஒரு வருக்குமேல் சரியான விடை எழுதிஞல் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். ''கிணற்றுக்குள் என்ன இருக்கிறது?'' என்று தலைப் புத் தரவும். முடிவு தேதி ஜூன் 1.

யான்னு யாரோ ஒருத்தனைக் கேக்கறுன்...''

''தஞ்சாவூர்க்காரனே.''

''அங்கேயும் அதே வியாபாரம்!''

''எனக்கு என்னவோ அது ஒரு கோயின்ஸிடன்ஸ்னு தோணுது.''

''எனக்கு அப்படித் தோணலே. ம்! ஸோடியத்தைப் பத்தி ஏதாவது தகவல் சேகரிச்சியா?''

''இருங்க. இப்பத்தானே ஆஸ்பத்திரிலே இருந்து கழண்டுண்டு வந்திருக்கேன். ஒரு நாள் டயம் கொடுங்க! ஸோடியத்தைப்பத்தி ஸோடியத்தோட பெண்டாட்டிக்குக் கூடத் தெரியாத தகவல்கள் சேகரிச்சுட்டு வர்றேன்!''

''முதல்ல டெலிபோனை எங்க வெட்டித் தொலைச்சிருக்கான்னு பாரு! காலைல கோர்ட் வேற இருக்கு. பெனுமி கேஸ் இழுத்து அடிக்கிறது. அப்புறம் தமிழ் நாடு டைரக்டர் அஃப் ஆர்க்கியாலஜி ஆபீஸ்ல ஒரு சின்ன வேலை இருக்குது.''

''அந்தப் பொண்ணு ஏதாவது கார்பரேஷன் ஸ்கூல்ல படிக்கிற பொண்ணா இருக்கும்!''

''யாரு?''

''அந்த ஆளோட ரெண்டாவது பொண்ணு!''

''விவஸ்தையே கிடையாதா உனக்கு. இனியா கிட்டச் சொல்லப் போறேன்.''

''ஒரு கேஸை எடுத்துக்கிட்டா எல்லா விவரமும் தெரிஞ்சுக்க வேண்டாமா?''

• • •

காலை எட்டு மணிக்கு வஸந்த் இனியாவைச் சந்திக்கச் சென்றுன். வாசலிலேயே நாற்காலி போட்டுப் பேராசிரியர் வீற்றிருந்தார். எதிரே குள்ளமான மேசையில் டீ போலும். அதில் ஒரு கப் எடுத்துக்கொண்டு சுந்தரமாக இனியா சீப்பிக் கொண்டிருந்தாள். அந்த இடமே அவளால் கொஞ்சம் பிரத்தியேகமாக வெளிச்சம் பெற்றிருந்ததாக வஸந்துக்குத்தோன்றியது.

''ஹலோ, வஸந்த்!''

''ஹலோ இன்னி... ஐ மீன் இனியா... ஹலோ ஸார்! காலைல என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க. பேப்பர் படிக்கிறீங்களா? உடம்பு சுகமா?''

''சுகம்தாம்ப்பா. நீ எப்படி இருக்கே! சரியாப் போச்சா?''

''எல்லாம் ஸார் ஆசீர்வாதத்தாலே... வெய்யிலா இருக்கே. உள்ளே போய் உட்காரலாமே நீங்க?''

''பரவாயில்லே.'' என்றுர், பைப்பை இழுத்துவிட்டு, தொடர்ந்து,

''வஸந்த் உன்கிட்ட ஸீரியஸா ஒண்ணு பேசணும்'' என்றுர்.

''பேசுங்க ஸார்.... நான் எல்லாம் காது. ஐம் ஆல் இயர்ஸ்!''

இனியா, ''அப்பா நான் உள்ளே போறேன்!'' என்றுள்.

''இரு இனியா!. பேச்சு உன்னைப் பத்தித் தான்!''

''இரு இனியா! நீ இப்ப உள்ள போனு வெளிச்சம் குறைஞ்சு போயிடும். அப்புறம் ஸார் பேப்பர் படிக்க முடியாது...''

''வஸந்த்! இனியாவுடைய கல்யாணத்துக்கு அவசரமா ஏற்பாடு செய்யணும்!''

வஸந்த் திடீரென்று மலர்ந்து ''அதுக்கென்ன ஸார்! மாப்பிள்ளைங்கிற ரீதில அதுகூடச் செய்ய மாட்டேனு?'' என்றுன்.

''மாப்பிள்ளையா? நீயா? யார் சொன்னது?.... அமெரிக்கா மாப்பிள்ளை! போட்டோவைப் பார்த்து ஒத்துக்கிட்டான்..... அடுத்த வாரம் வரான்....'' அவர் மேலே சொல்வது கேட்காமல் வஸந்தின் மனத்துக்குள் ஆயிரம் மின்னல்கள் ஓவர் டைம் செய்துக்கொண்டிருந்தன. (தொடரும்)

காமாட்சி சுப்ரபாதம்

எனது தாத்தா லக்ஷ்மிகாந்த சர்மா பெரியவாளின் அனுமதி யில்லாமல் எதுவும் செய்ய மாட்டார். பதினைந்து வருடங்களுக்கு முன் பெரியவாளைப் பார்க்கப் போன பொழுது ''உள்ளே சென்று அங்கேயிருக்கும் அம்பாளைப் பத்து நிமிடம் பார்த்து வா'' என்று அவர் என் தாத்தாவிடம் சொன்னுராம். பார்த்து வந்த பின், ''நீ பார்த்த அன்னை காமாட்சிக்கு சுப்ரபாதம் பாடு'' என்று கூறினுராம். ''என்னுல் அவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய முடியுமா?'' என்று தாத்தா கேட்டதற்கு, ''உன்னுல் தான் முடியும், முயற்சி செய்'' என்று பெரியவாள் ஆசி கூறினர். இதன் பலனுகவே என் தாத்தா லக்ஷ்மிகாந்த சர்மா காமாட்சி சுப்ரபாதம் எழுதினர். அதுவே திருமதி எம். எஸ். அவர்களால் பாடப்பட்டு அந்த இசைத்தட்டு உலகம் முழுவதும் பரவியது. இச் செய்தியை அறிந்து மகிழ என் தாத்தா இல்லை. அவர் காமாட்சியின் திருவடியை அடைந்து விட்டார்.

–ஆர். காமாக்ஷி

அத்தனை பேரும் சொல்லிப் பார்த்துவிட்டார்கள். சபாபதி எதற்கும் அசையவில்லை. ''உன் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு தானே நாங்க சொல்றோம். யோசிக்காம சரின்னு சொல்லு சபாபதி'' என்று பெரியப்பா ஒரு தடவைக்குப் பத்துத் தடவை ஓதிவிட்டார். அவர் மட்டுமல்ல, மாமா... அத்தை... சித்தி... பெரியம்மா... இன்னும் உறவுமுறை என்று சபாபதிக்கு உருப்படியாய் இருப்பவர்கள் அத்தனை பேரும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்து விட்டார்கள். ஊஹூம். சபாபதி தன் முடிவில் பிடிவாதமாகவே இருந்தான். ''இத பாருங்க பெரியப்பா! நீங்க உண்மையிலேயே என் பேரில அக்கறை காட்டறதா இருந்தா இந்த அட்ரஸிலே இருக்கிற பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க முயற்சி பண்ணுங்க. இல்லே... பேசாம விட்டுடுங்க... பிராப்தம் இருக்கறப்ப எனக்குக் கல்யாணம் ஆயிட்டுப் போகுது!'' சபாபதி முகத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்லிவிடவே பெரியப்பா பேசாமல் அவன் கொடுத்த விலாசத்தை வாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. சபாபதியைப் பெற்றவர்கள் உயிருடன் இல்லை. இரண்டு வருடங்களுக்கு முன் சாகும் தறுவாயில் இருந்தபோதுதான் சபாபதியின் தந்தை தன் அண்ணன் பரமசிவத்தை அழைத்து, சபாபதிக்குக் கல்யாணம் செய்து வைக்கும் பொறுப்பை அவரிடம் கொடுத்துவிட்டு நிம்மதியாகக் கண்ணை மூடினார். பெற்றோருக்கு ஒரே பிள்ளையான சபாபதி ஓரளவு படித்துப் பஞ்சாலை ஒன்றில் குமாஸ்தாவாகக் கைநிறையச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு மணம் பேசி முடிப்பது அப்படியொன்றும் பெரிய காரியமில்லை என்று வெகு அலட்சியமாக மணமகள் வேட்டையில் இறங்கிய பரமசிவம், ஓரிரு மாதங்களிலேயே மனம் சலித்துப் போனார். சபாபதி எந்தப் பெண்ணைப் பார்த்தும் 'பச்சைக் கொடி' காட்டவில்லை.

''சபாபதி! உனக்கு நெஜமாகவே கல்யாணம் பண்ணிக்கணும்கிற நெனப்பு இருக்கா? இல்லே, சும்மா பொண்ணைப் பார்த்தே காலத்தை ஓட்டிடப் போறியா? நீமுதல்லே பார்த்துட்டு ஒதுக்கின பொண்ணுக்குக் கல்யாணமாகி இப்ப ஒரு குழந்தை கூட இருக்கு! நீ என்னதான் நெனைச்சுக்கிட்டு இருக்கே?''

பெரியப்பாவின் கேள்வி சபாபதியைச் சங்கடப்படுத்தி விட்டது. நெளிந்தபடியே மெதுவாகத் தன் எண்ணத்தை வெளியிட்டான். ''கோவிச்சுக்காதீங்க பெரியப்பா. எனக்குச் சொத்து, சுகம், சீர், செனத்தி எதுவுமே தேவையில்லே. பொண்ணு ஏழையா இருந்தாலும், ரொம்ப லட்சணமா இருக்கணும். சிவப்பா,. சுண்டினா ரத்தம் வர்ராப்பல,.., உடம்பு செதுக்கி வச்ச செலை மாதிரி கச்சிதமா...''

அதுக்கு மேல் சொல்லாமல் வெட்கத்தோடு பாதியில் நிறுத்திக் கொண்டான் சபாபதி.

ஒரு நீண்ட பெருமூச்சைப் பதிலாக்கி
பரமசிவம் அதற்குப் பின் சபாபதி குறி
பிட்ட அம்சங்களுடன் ஏதாவது பெண் இரு
கிறதா என்று பேயாய்த் தேடி அசந்
போய் விட்டார். கடைசியில் தூரத்து
சொந்தத்திலேயே ஒரு பெண்ணைப் பிடித்
விட்டார். சபாபதிக்குத் தேவைப்படு
அம்சங்களை ஓரளவுக்கே பூர்த்தி செய்ய
கூடியவளாக இருந்தாலும், வசதியான
நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்த
ஞல் அந்தப் பெண்ணையே முடித்து விடலா
என்ற முழு நம்பிக்கையோடு இருந்தா
பரமசிவம்.

சபாபதியிடம் தம் கருத்தைச் சொன்
ஞர். அரை மனத்தோடு தலையாட்டி
வைத்த சபாபதி இரண்டு நாட்கள் கழித்
வந்து, ''அந்தப் பெண் பிடிக்கவில்லை—




அவசரக் கால அமணமகள்

வேறு இடம் பார்க்கலாம்'' என்றதும் ஒரேயடியாய் ஆடிப் போய்விட்டார்.

அதற்குப் பின் உறவுக்காரர்கள் ஒவ்வொருவராக உபதேசம் செய்தும் சபாபதிக்கு உரைக்கவில்லை. ''சரி, காரியத்தில் இறங்கி விட்டோம். பாதியில் அதை நிறுத்துவதை விடப் பையனின் விருப்பப்படிதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் பார்க்கலாமே'' என்று தீர்மானித்துக் கொண்ட பரமசிவம், சபாபதி கொடுத்த விலாசத்துக்குப் பெண் பார்க்கப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். பெண்ணின் வீடு உள்ளூரிலேயே சற்றுத் தள்ளி டவுனுக்கு ஒதுக்குப்புறமாக இருந்தது. சபாபதியின் நண்பன் ஒருவன் அந்த விலாசத்தைக் கொடுத்ததோடு நில்லாமல் பெண்ணின் அழகை ஏகத் தடபுடலாக வருணித்து விட்டதால் சபாபதி அப்போதே இனிய கனவுகளில் ஆழ்ந்து போய் விட்டான். பெண்ணின் வீட்டைப் பார்த்ததுமே பரமசிவத்துக்குப் 'பொக்'கென்று போய்விட்டது. கிட்டத்தட்ட ஒரு குடிசை போல் இருந்த வாடகை வீட்டில் அவர்கள் குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தது.

பெண்ணின் தந்தை உயிரோடு இல்லை. வயதான தாயாரோடும், வயதுக்கு வந்த சில தங்கைகளோடும், வயதுக்கு வராத ஒரு தம்பியோடும் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள். டவுனில் ஏதோ ஒரு ஜவுளிக் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள்! அவளும் அவள் தங்கைகளும் ஆங்காங்கே கிடைக்கும் வேலைகளுக்குப் போய்க் கொண்டிருப்பதால் வரும் சம்பாத்தியத்தில்தான் அந்த வீட்டின் காலட்சேபமே நடந்து கொண்டிருப்பது பார்த்தவுடனேயே பளிச்சென்று தெரிந்தது. ஆனால் பெண் வெகு லட்சணமாக இருந்தாள். உலகத்தின் அழகையெல்லாம் ஒட்டுமொத்தமாக அவளிடமே வைத்து விட்டானோ இறைவன் என்று ஆச்சரியப் பட்டுப்போகும் வண்ணம், திருஷ்டிப் பட்டு விடுமளவுக்குப் பேரழகியாய் இருந்தாள். சபாபதி எதிர்பார்த்தது போல் சுண்டினால் ரத்தம் தெறித்து விடுமளவுக்குச் சிவப்பு... அவளைப் பார்த்ததுமே சபாபதி கிறங்கிப் போய்விட்டான். பெரியப்பாவைப் பேச விடாமல் அவனே எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். ''சரசா'' என்ற அந்தப் பெண்ணின் பெயரைப் பல தடவை மனதுக்குள் காதோடு சொல்லிப் பார்த்துக் கொண்டான். அவனுடைய உற்சாகத்தைப் பார்த்ததும் எங்கே இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லிவிடுவானோ என்று பயந்துபோன பரமசிவம், ''வீட்டுக்குப் போய்ப் பேசிவிட்டுச் சொல்லி அனுப்புகிறோம்'' என்ற பதிலைப் பெண்ணின் தாயாரிடம் சொல்ல வாய் எடுக்கு முன்பே ''நல்ல நாள் பார்த்து நிச்சயதார்த்தத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டுச் சொல்லி அனுப்பறோம் — என்ன பெரியப்பா?'' என்று சபாபதி பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

பரமசிவத்தின் முகம் காற்றுப் போன பலூனைச் சுருங்கிப் போனதைக் கூடக் கவனிக்காமல், சபாபதி ''எல்லாச் செலவுகளுக்கும் நானாயிற்று'' என்பது போல் ஜம்பம் அடித்துக் கொண்டும், அவ்வப்போது மணப் பெண்ணைக் கண்களால் மேய்ந்து கொண்டுமிருந்தான். அதற்குப் பின்... ஆர்வம் குன்றிப்போய்.. வேடிக்கை பார்க்கும் மூன்றாம் மனிதனைப் போல...எந்திரமாக அமர்ந்திருந்தார் பரமசிவம்! சபாபதிக்கு ஏகக்குஷியாக இருந்தது. காத்திருந்து கடைசியில் தன் கருத்துப் படியே கண்ணுக்குக் குளிர்ச்சியான பெண்ணைப் பிடித்து விட்ட தன் சாமர்த்தியத்துக்கு ஸ்பெஷல் சபாஷ் போட்டுக் கொண்டான். நண்பர்கள் மத்தியில் அழகுத்தேவதையான தன்



மனைவியோடு ''கர்வ நடை'' போடுவதற்கான பயிற்சியை மனத்துக்குள்ளாகவே மறு பரிசிலனை செய்து பார்த்துக்கொண்டான். அவளுக்காக முன்பே ஒரு புடவைப் பரிசே வாங்கி விட்டான்!

''சரசு... டவுன்லேயிருந்து யாரோ வந்து உன்னைப் பார்த்துட்டுப் போனுங்களாமே'' என்று யாரோ ஒரு பெண் கிசுகிசுப்பது காதில் விழவும் சபாபதியின் பார்வை பத்திரிகையிலிருந்து எதிர்ச் சீட்டுக்குத் தாவியது. அடுத்த கணம் அவன் ஆகாயத்தில் பறப்பதாக உணர்ந்தான். அவனுக்கு நேர் எதிரே அவள்... சரசு.... இவனுக்கு முதுகைக் காட்டியபடி உட்கார்ந்திருந்தாள்...., அவளைக் கேள்வி கேட்ட பெண்ணுக்கு என்ன பதில் சொல்லப் போகிருள் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் சபாபதி மீண்டும் தன் தலையைப் பத்திரிகையில் புதைத்துக் கொண்டான்! சரசுவின் பதில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தவனைக் கீழே பாதாளத்துக்கு உருட்டித் தள்ளியது.

''ஆமா....வந்தாங்க...'' — ஆர்வமில்லாமல், இயல்பான நாணமில்லாமல், யாரோ சென்ஸஸ் கணக்கெடுக்க வந்தவர்களைப் பற்றிச் சொல்வது போல் லேசான வெறுப்பு இழையோடும் விரக்தியான பதில் வந்தது சரசுவிடமிருந்து.

''ஏண்டி சரசு... உனக்கு மாப்பிள்ளை பிடிக்கலியா?''

''நம்ம இஷ்டத்தைப் பற்றி யாருடி கவலைப்படறுங்க? குடும்பக் கஷ்டத்தைப் பத்தி தானே கணக்குப் போடறுங்க! பெண்ணைக் கட்டிக் குடுத்தாப் போதுங்கற கையாலாகாத்தனம் இருக்கிறவரைக்கும் அவங்க கைநீட்டற ஆம்பிளைக்குக் கழுத்தை நீட்டித் தானே ஆகணும்.''

''ஏண்டி அப்படிச் சொல்றே? நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா இன்னும் சந்தோஷமா... வசதியா இருக்கப் போறே. இப்படி மாடா உழைச்சு ஓடாத் தேய வேண்டியதில்லையே....''

''அதென்னமோ வாஸ்தவம்தான். ஆனா கண்ணுக்கு லட்சணமான கணவனோட கம்பீரமா வாழ்ந்தோம்கிற ஆத்மத் திருப்தி இருக்குமா? ஏதோ கஷ்டம் தீர்ந்ததுங்கற நினைப்போடு கடனுக்கு வாழ்ந்துக்கிட்டு... ம்.... இந்தக் காலத்துலே பொண்ணு அழகா இருக்கணும்னு ஏதோ கடைப் பொருளை செலக்ட் பண்ற மாதிரி தன் மனைவியை 'செலக்ட்' பண்ற ஆண்கள்தான் இருக்காங்க. தன் மனைவி மட்டும் அழகுத் தேவதையா இருக்கணும்னு தேடி அலைஞ்சு, பெண் வீட்டாருடைய பலவீனத்தைப் பயன்படுத்தித் தனக்குக் கொஞ்சம் கூட பொருத்தமில்லாத பெண்களை எத்தனை பேர் விலை கொடுத்து வாங்கி யிருக்காங்க தெரியுமா? அவங்க எல்லாம் நிச்சயமா ஒரு உண்மையான மனைவியையோ, அவ மனசையோ அடைஞ்சிருக்க முடியாது. அவளுடைய அழகான உடம்பை மட்டும்...'' சரசு சட்டென்று நிறுத்திவிட்டு வெளியே கடை வீதியின்பரபரப்பில் பார்வையைச்செலுத்தி

தன் மனத்தின் பாரத்தைப் பஞ்சாக்கிக் கொண்டாள்.

''அப்போ, உன்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளை உனக்குப் பொருத்தமில்லாதவன்னு நினைக்கிறயா?''

சரசு அவளுடைய தோழியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தாள். ''தனக்கு வரப்போற கணவன் அழகானவனா, கம்பீரமானவனா தன்னுடைய பர்சனாலிடிக்கு ஏத்தவனா இருக்கணும்னு பெண்களும்தான் எதிர்பார்ப்பாங்கங்கறதை இந்த ஆண்கள் ஏனோ புரிஞ்சுக்கிறதே இல்லே... அவங்க இஷ்டப்படிதான் எல்லாம் நடக்குது.. பெண்ணுரிமை எல்லாம் வெறும் பேச்சில்தாண்டி.''

''உனக்குக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லேன்னு சொல்லிவிட வேண்டியது தானே!''

''ஐயையோ! நான் உங்கிட்டே பேசினதைத் தயவு செய்து எங்கம்மா கிட்டே சொல்லிடாதே தாயே! அவ என்னுடான்னு கஷ்டம் தீர்ந்து போச்சுன்னு கடவுளுக்குக் கற்பூரம் கொளுத்திக்கிட்டு இருக்கா! இந்த நேரத்திலே எனக்கு இஷ்டமில்லேன்னு சொன்னா அவ இடிஞ்சு போயிடுவா. அம்மாக்களுக்கெல்லாம் இந்த அவஸ்தை புரியாதுடி! அழகுன்னா பேயா அலையறுங்களே அவங்களுக்குப் புரியணும்....''

''அப்ப உன் முடிவு?''

''மனசைக்கல்லாக்கிக்கிட்டு வந்தவனுக்குக் கழுத்தை நீட்ட வேண்டியதுதான். நீ சரியான மண்டுடி. அறிவு பூர்வமா யோசிக்காத ஆண்கள் இருக்கிற வரைக்கும் என்னதான் அறிவும், அழகும் இருந்தாலும் சில சந்தர்ப்பங்களிலே நாமெல்லாம் அடிமைகள் தாண்டி! அதுவும் வயசுக்கு வந்த பெண்களை வரிசையா வச்சுக்கிட்டு, வசதியில்லாமத் தவிக்கிற குடும்பத்திலே அழகான ரம்பையே பொறந்தாலும் அவளும் வர்றவனுக்குக் கழுத்தை நீட்ட வேண்டிய அவசரகால அடிமைதான்!''

அவர்கள் இருவரும் மிகவும் மெதுவாகத் தான் பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்களின் வார்த்தைகள் இடியோசையாய்ச் சபாபதியின் செவிகளுக்குள் இறங்கியது. லேசாக அவனுடை உடல் நடுங்கி,வியர்வையில் குளித்து, தொண்டையை வறட்சிப் பகுதியாக அறிவித்தது. அடுத்த ஸ்டாப்பிங்கில் தன்னை அவளுக்கு இனம் காட்டிக் கொள்ளாமல் அவசரம் அவசரமாக இறங்கி, அங்கிருந்து வீட்டுக்கு நடந்தான் சபாபதி... வறுமையின் வட்டத்துக்குள் சுருண்டு கிடக்கும் சரசுவே தன் எதிர்காலக் கணவன் எப்படி யெல்லாம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும்போது இன்னும் வசதியாக வாழும் பெண்கள் எல்லாம்....! வீட்டுக்கு வந்த சபாபதி கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டான். ஒடிசலான உருவமும்... உள்ளடங்கிய மூக்கும் வரிசையிலடங்காத பற்களும் அம்மைத் தழும்பேறிய முகமும் அர்த்தராத்திரி போன்ற நிறமும்..... ஓ! அவன் அதிகமாகத்தான் ஆசை வைத்து விட்டான்! சரசுவின் அழகுக்கு இவன் எந்த விதத்தில் பொருத்தமானவன்? எதையாவது சமாதானமாகச் சொல்லிக் கொண்டாலும் இளமைக் காலத்தின் நினைவுகளும், எதிர்பார்ப்புக்களும், எல்லோருக்கும் இருந்து தொலைக்கின்றதே! அது பெண்களின் இதயங்களிலும் இருக்கும் என்பது எப்படி மறந்து போனது? சபாபதி வேதனையோடு உணர்ந்து, வேகம் குறைந்து, உட்கார்ந்து விட்டான்.

''கடைசியா நாம பார்த்துட்டு வந்த பொண்ணும் எனக்குப் புடிக்கலே! இனிமே நான் பொண்ணு பார்க்க வரதாவும் இல்லே! எனக்குப் பொருத்தமானவளா நீங்க எந்தப் பொண்ணைப் பார்த்துக் கட்டி வெச்சாலும் எனக்குச் சம்மதம்தான். அழகு முக்கியமில்லே — நல்ல குணம் இருந்தாப் போதும்— நீங்க முடிவு செய்யற பெண்ணுக்கு முதல் பரிசா இந்தப் புடவையைக் கொடுத்துடுங்க'' மூச்சு விடாமல் பேசிவிட்டுப் பார்சலை நீட்டும் சபாபதியை ஆச்சரியத்தோடு வாயைப் பிளந்தபடி அளவெடுத்தார் பரமசிவம். அதை லட்சியம் செய்யாமல் வீட்டுக்குள்ளே போய்க் கொண்டிருந்தான் சபாபதி. பரமசிவம், ''வெளியே மழை பெய்கிறதா'' என்று பார்த்துவிட்டு, ''இது நிஜம்தான்'' என்பதை உறுதி செய்துகொள்வதற்காகத் தம்மைத் தாமே கிள்ளிப் பார்த்துக்கொண்டார். அவருக்கு வலித்தது... ஆனால் ஆனந்தமாக!



வேப்பிலைக்கட்டி ராமாயணம்!

தூப்புல் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹஸ்வாமி உபன்யாசத்தில் கூறியது:

''ராமாயாணத்தில் வேப்பிலைக்கட்டி ராமாயாணம்னு ஒரு ராமாயணம் உண்டு தெரியுமா?

வீடுகளில் வேப்பிலைக் கட்டின்னு ஒன்று தயார் செய்வா — தொட்டுக் கொள்ள.

வேப்பலைக் கட்டின்னு பேரே ஒழிய வேப்பிலையால் தயாரிக்கப் பட்டதில்லை அது — முழுக்க முழுக்க நார்த்தை இலையை இடிச்சுச் செய்வார்கள்.

அதுபோல சிலர் செய்யும் ராமாயண பிரவசனத்தில் ராமாயண சம்பந்தமாய் ஏதுமே இருக்காது.

எப்பவோ ராமர், சீதை, லக்ஷ்மணர், ராவணன் என்று பெயர் வரும் அவ்வளவுதான்.

இதற்குத்தான் வேப்பிலைக் கட்டி ராமாயணம் என்பார்கள்.''

—அபரஞ்சி

மலிவாக ஒரு வட்டா

மாரி-அறவாழி

"எதை எடுத்தாலும் எட்டு ரூபாய்... வாங்க சார் வாங்க... கடையிலே வாங்கின(ல்) பதினாறு. இங்கே பாதிக்குப் பாதி...''

பேருந்துக்கு விரைவாகச் சென்றுகொண்டிருந்த வையாபுரி சட்டென்று நின்றார்.


ஆண்களும் பெண்களுமாகச் சிறு கூட்டம். அவர்களுக்கு மத்தியில் பளபளக்கும் எவர்சில்வர் பாத்திரங்களின் குவியல்.

ஒவ்வொன்றாகத் தூக்கி நியான் விளக்கு வெளிச்சத்தில் பளிச்சிடக் காட்டிக் கூவிக் கொண்டிருந்தான் நடைபாதை வியாபாரி.

அருகில் சென்றார் வையாபுரி. சின்னதாக அழகாக, கைக்கு அடக்கமாக இருந்த ஒரு வட்டாவை (டிபன் கொண்டு செல்லும் பாத்திரம்) எடுத்துப் பார்த்தார்.

அது போன்ற ஒன்று வாங்கிக் கொடுக்கும்படி நீண்ட நாட்களாகத் தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கும் மகளின் நினைவு வந்தது அவருக்கு. இப்போது அதே வட்டா, மிகவும் மலிவான விலைக்குக் கிடைப்பதைப் பார்த்ததும் ஒன்று வாங்கிக்கொடுத்துவிட்டால்தான் என்ன என்று தோன்றியது.

''யோசனை பண்ணாதீங்க சார். எடுங்க... எட்டே ரூபாய்தான். லாட்டு விற்பனை. கடையிலே வாங்கினால் பதினாறு. லேசாக ஒடுக்கல் விழுந்திருக்கிறதாலே பாதிக்குப் பாதி...''



அவன் சொன்னது போல் பாத்திரங்களில் சில இடங்களில் லேசான ஒடுக்கல் விழுந்திருந்தது.

'விலையுயர்ந்த எவர்சில்வர் சாமான்களை இவ்வளவு மலிவு விலையில் விற்கிறானே என்ன காரணம்?' என்று அவர் மனத்தில் தோன்றிய சந்தேகம் அவன் கூறிய உண்மையால் அடிபட்டுப்போனது.

இருந்தவற்றுள் நல்லதாகப் பார்த்து ஒன்றை எடுத்துக் கொண்ட வையாபுரி, பர்ஸைத் திறந்தார். பதினைந்தே ரூபாய்தான் இருந்தது. மாதக் கடைசி வரை அதுதான் அவருடைய கைச் செலவுக்கு.

கொஞ்ச நேரம் யோசித்துக் குழம்பிப் பிறகு என்ன ஆனாலும் ஆகட்டும் என்று துணிந்தார்.

வட்டாவை 'பேக்'செய்து தரும்படி வியாபாரியிடம் சொன்னார்.

"ரொம்ப நாட்களாகத் துளைத்து
கொண்டிருக்கிறாயே என்று வாங்கி வ
தேன்... இது போதுமா பார்....''

என்று சொல்லிக் கொண்டே வீட்டி
நுழைந்த வையாபுரி வட்டாவை மகளிட
கொடுத்தார் பெருமிதத்துடன்.

மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்த மகள் சமை
யல்கட்டுக்கு ஓடினாள்.

'ஆ'வென்று வாயைப் பிளந்த மனைவி
''மலிவானால் ஒரு சாப்பிடும் தட்டும்
பால் காய்ச்சும் பாத்திரமும் வாங்கி வ
திருக்கக் கூடாது?'' என்று குறைப்பட்டு
கொண்டாள்.

அடுத்த நாள் பள்ளிக்குப் புறப்பட்ட
மகள் கையில் புதிதாக வாங்கிய அழகிய
வட்டா பளபளத்தது.

மாலையில் அலுவலகம் முடிந்து வெளியே
வந்த வையாபுரிக்கு டாக்டர் சுந்தரத்தின்
ஞாபகம் வந்தது.

அவருடைய பழைய 'மெடிகல் பில்'
ஒன்று டாக்டரிடம் நீண்ட நாட்களாகத்

தூங்கிக் கொண்டிருக்கிறது. அதை வாங்கி வந்து சாங்ஷனுக்கு அனுப்பி வைத்தால் மாதக் கடைசியில் செலவுக்குப் பிரயோசனமாக இருக்கும்.

மறுநிமிடம் அவர் கால்கள் சுந்தரத்தின் டிஸ்பென்ஸரிக்கு நடந்தன.

டாக்டரிடம் கூட்டம் அதிகம் இல்லை. இரண்டொருவரே உட்கார்ந்திருந்தனர். வையாபுரியும் கடைசியாகப் போய் அமர்ந்தார்.

ஒவ்வொருவராக உள்ளே போய் வந்தனர். அடுத்தது வையாபுரியின் முறை.

அப்போது ஒரு பெண் கண்ணீரும் கம்பலையுமாக ஒரு பையனைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள்.

வையாபுரியை ஒதுக்கித் தள்ளி விட்டு டாக்டர் முன் கிடத்தினாள்.

பையன் அவளுடைய மகன். எட்டு ஒன்பது வயதிருக்கும். வாடிய மாலை போல் துவண்டிருந்தான். உடலில் அசைவு இல்லை. பேச்சு மூச்சு இல்லை.

அவளிடம் அவசரம் அவசரமாக விசாரித்துவிட்டு, பையனைப் பரிசோதித்தார் டாக்டர்.

முன்பே ஏன் கொண்டு வரவில்லை என்று கடிந்து கொண்ட பின், உதவியாளரைக் கூப்பிட்டுப் பையனுக்கு எனிமா கொடுத்து வயிற்றைச் சுத்தம் செய்யும்படி கட்டளையிட்டார்.

பையனைத் தூக்கிக் கொண்டு பின் பகுதிக்குப் போனார் உதவியாளர். தாயும் கூடவே ஓடினாள்.

டாக்டர் முன் போய் உட்கார்ந்த வையாபுரி மெடிகல் பில் பற்றிப் பேச்சு எடுத்த போதுதான் ''அடடே! வேலைத் தொல்லையில் அதைப் போட்டு வைக்க மறந்து விட்டேன். நாளைக்கு வருகிறீர்களா?'' என்று கையை உதறினார்.

''அதனால் என்ன டாக்டர்... அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாகப் போட்டு வையுங்க. நாளைக்கு வருகிறேன்...''

என்று சொல்லிவிட்டு எழுந்த வையாபுரி பேச்சோடு பேச்சாக விசாரித்தார்:

''என்ன கேஸ் அது டாக்டர்?''

''பையனைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்? பாய்ஸன் கேஸ்!''

''அடப் பாவமே! சின்னப் பையனாக இருக்கிறானே, எதற்காகச் சாப்பிட்டிருப்பான்?''

டாக்டர் சிரித்தார்.

''குப்பத்திலும் சேரியிலும் இருக்கிற குழந்தைகளை யார் சார் கவனிக்கிறாங்க? பெற்றுவிட்டதோடு அப்பா அம்மா கடமை முடிந்து விடுகிறது. அதன் பிறகு அது எப்படியோ அலைந்து திரிந்து குட்டிச்சுவராக வேண்டியதுதான்....''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது உதவியாள், பரபரப்புடன் ஓடிவந்து டாக்டரை அழைத்தார்.

வையாபுரிக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு எழுந்து சென்றார் டாக்டர்.



"**பு**து வட்டா மிகவும் சிறியதாக இருந்ததே... கொண்டுபோன சாப்பாடு வயிற்றுக்குப் போதுமானதாக இருந்ததா?''

என்று மகளிடம் விசாரித்தார் வையாபுரி— வீடு திரும்பியவர்.

''மத்தியானம் நான் சாப்பிடவே இல்லேப்பா. ஆமாம்பா சோறெல்லாம் ஒரே பச்சை நிறமாக மாறிவிட்டது....''

''அடக் கடவுளே! எப்படி ஆயிற்று?''

இந்தச் சமயத்தில் மனைவி ஓடிவந்து குறுக்கிட்டாள். ''மகா மட்டமான இரும்புத் தகடு! அதற்கு வெள்ளை முலாம் பூசி, எவர்சில்வர் என்று சொல்லி உங்கள் தலையில் கட்டியிருக்கிறான் அந்த நாசமாய்ப் போன வியாபாரி....''

இவ்வாறு கூறிய மனைவி அந்த வட்டாவை எடுத்து வந்து காட்டினாள்.

வெளியே பளபளப்பாக இருந்தது. ஆனால் உள்ளே களிம்பு ஏறிக் கன்னங் கரேலென்று இருந்தது.

விரலால் அழுத்தித் தேய்த்துப் பார்த்தார் அவர். சந்தேகமே இல்லை. இரும்பினாலான பாத்திரம்தான் அது!

உள்ளம் கொதித்தது அவருக்கு.

ச்சே! எவ்வளவு கேவலமான வியாபாரிகள்! மக்களை எப்படி யெல்லாம் ஏமாற்றுகிறார்கள்!

அடுத்த நாள் அந்த நடைபாதை வியாபாரியைத் தேடிப் பிடித்து நாலு வார்த்தை நறுக்கென்று கேட்பதோடு பணத்தையும் திருப்பி வாங்கிக் கொண்டு வந்து விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

மறுபடியும் மகளிடம் கேட்டார்.

''சரி, அந்தச் சாப்பாட்டை என்னம்மா செய்தாய்?''

''வேறு என்ன செய்வது? ப்யூனிடம் கொடுத்து வெளியே கொட்டிவிட்டு வடை வாங்கிச் சாப்பிட்டேன்.''

''நல்ல வேலை செய்தாய்! தப்பித் தவறிச் சாப்பிட்டிருந்தால் பெரிய ஆபத்தாகப் போயிருக்கும்.''

மறுநாள் அலுவலகம்முடிந்தவுடன் நடைபாதை வியாபாரியைத் தேடிக் கடைத் தெரு முழுவதும் அலைந்தார் வையாபுரி.

ஆனால் அவன் எப்படிக் கிடைப்பான்? ஊரை ஏமாற்றுபவன் ஓர் இடத்தில் இருப்பதில்லையே.

வீடு திரும்பும் வழியில் டாக்டர் சுந்தரத்தின் டிஸ்பென்ஸரிக்குப் போனார்.

''வாங்க...வாங்க உங்க பில் ரெடி''என்று எடுத்து நீட்டினார் டாக்டர்.

''ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்'' என்று சொல்லி வாங்கிக் கொண்ட வையாபுரி, மறவாமல் கேட்டார்: ''நேற்றைய பாய்ஸன் கேஸ் என்ன ஆயிற்று?''

''ஓ! அதுவா?... பையன் பிழைத்துக் கொண்டான். கொஞ்சம் தாமதித்துக் கொண்டு வந்திருந்தாலும் என்னாலும் ஒன்றும் செய்திருக்க முடியாது சார்...''

''பையனுக்கு விஷம் எப்படிக் கிடைத்ததாம்?''

''விஷமெல்லாம் சாப்பிடவில்லை ஸார். அவன் வழக்கம்போல் ஊரைச் சுற்றிக் கொண்டு வந்திருக்கிறான். பெண்கள் கல்லூரி கேண்டீன் புறக்கடையில் கெட்டுப் போன சோற்றை யாரோ . இலையோடு வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். பையனுக்கு நல்ல பசி. எடுத்துச் சாப்பிட்டு விட்டான். கெட்டுப்போன சோறு உள்ளே போய் விஷமாக மாறி வேலை செய்துவிட்டது அவ்வளவுதான்...''

ஊசியால் சுருக்கென்று குத்தியது போல் இருந்தது வையாபுரிக்கு.

தான் கொண்டுபோன சோறு கெட்டு விட்டதாக மகள் சொல்லியிருந்தது சட்டென்று ஞாபகம் வந்தது.

அந்தச் சோற்றைத்தான் இந்தப் பையன் பார்த்திருப்பானோ? சாப்பிட்டிருப்பானோ?

தம் சந்தேகத்தை ரகசியமாக டாக்டரிடம் வெளியிட்டார்.

''அப்படியா?'' என்று கேட்டுக்கொண்டே அவர் சிறிது நேரம் யோசித்துவிட்டு உறுதிப்படுத்தினார்.

''சந்தேகமே வேண்டாம் சார். பையன் சாப்பிட்டதுஅதே சோற்றைத்தான். எனிமா கொடுத்து வயிற்றைக் கழுவியபோது கூட பச்சை நிறமான சோற்றுப் பருக்கைகள்தான் வெளி வந்தன! ஆமாம், தெரியாமல்தான் கேட்கிறேன். கெட்டுப்போன சாப்பாட்டை எப்படி எடுத்துச் சென்றாள் உங்கள் மகள்?''

''கொண்டுபோகும்போது நன்றாகத் தான் இருந்தது டாக்டர். பிறகுதான் கெட்டுப் போயிருக்கிறது!'' என்று துவங்கி, மலிவு விலையில் எவர்சில்வர் வட்டா வாங்கி ஏமாந்த கதையை விவரித்தார் அவர்.

அப்போது அறைக்கு வெளியே யாரோ வந்து நிற்க,

''என்ன வாசுதேவன்! பையன் எப்படி இருக்கிறான்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்று விசாரித்தார் டாக்டர்.

''நல்லா இருக்கிறானுங்க. சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்....''

வக்கில்: மனம் உடைந்து விடாதீர்கள். சுப்ரீம் கோர்ட்டில் நமக்குத்தான் வெற்றி!

கட்சிக்காரர்: சுப்ரீம் கோர்ட்டா? ஹைக்கோர்ட் வரை போனதிலேயே என்னுடைய சொத்து பூராவும் காலி. இப்ப கையிலே பைசா கிடையாது!

வக்கில்: எல்லாம் போய் விட்டதா? இனிமே வெளியே வந்துதான் என்ன பிரயோசனம்? 'ஜம்' என்று உள்ளேயே இருந்துவிட்டு வாரும்!

—எஸ்.பாலு



என்று பதிலளித்த வண்ணம் உள்ளே வந்து டாக்டர் முன் நின்றான் அந்த நடுத்தர வயதுடைய ஆள்.

அவனை ஏறிட்டுப் பார்த்த வையாபுரி அதிர்ந்து போனார். பரபரப்புடன் கேட்டார்.

''டாக்டர்!....இவர்....''

''பாய்ஸன் கேஸ் பையனுடைய அப்பா!''

''அப்படிச் சொல்லாதீர்கள் டாக்டர். மனச்சாட்சி என்பதே இல்லாத மோசடிக் காரன் என்று சொல்லுங்கள்...''

வையாபுரியின் ஆத்திரம் டாக்டரைத் திடுக்கிட வைத்தது.

''என்ன சொல்கிறீர்கள் வையாபுரி?''

''எவர்சில்வர் என்று சொல்லி, முலாம் பூசிய இரும்பு வட்டாவை ஒருவன் என் தலையில் கட்டினான் என்று சொன்னேன் பாருங்கள். அந்த அயோக்கியன் இவன் தான்.....''

''உண்மையாகவா?''

''நீங்களேகேட்டுப்பாருங்களேன்இவனை?''

அவனைக் கோபத்துடன் பார்த்துக் கேட்டார் டாக்டர். ''என்ன வாசுதேவன்! இவர் சொல்வது உண்மைதானா?''

அவன் சட்டென்று தலையைக் குனிந்தான். தழுதழுத்த குரலில் சொன்னான்.

''உண்மைதான் டாக்டரய்யா...''

''ச்சே! என்ன மனிதனப்பா நீ! இப் படியா ஏமாற்றிப் பிழைப்பது மற்றவர்களை''

ஒன்றும் பேசாமல் நெடு மரமாய் நின்றான் அவன். தொடர்ந்து டாக்டர் பேசினார்.

''யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளுமாம். அது போல் நீ மோசடி செய்தது இவரிடம்தான் என்றாலும் அதன் விளைவு இவரைப் பாதிக்க வில்லை. உன் மகனுடைய உயிருக்குத்தான் ஆபத்து விளைவித்தது. தெரிந்து கொள்...''

அவன் அலறினான்.

''என்ன சொல்றீங்க டாக்டரய்யா?''

நடந்தவற்றை யெல்லாம் விவரமாக எடுத்துக் கூறினார் டாக்டர்.

''ஐயோ அப்படியா?'' என்று கதறிய அவன் தடாலென வையாபுரியின் காலில் விழுந்தான்.

''என்னை மன்னிச்சுக்கொள்ளுங்க ஸார்! நான் மோசடிக்காரன்தான் ஆனால் நீங்க நினைப்பது போல் நான் விற்றது அனைத் துமே முலாம் பூசிய பாத்திரங்கள் அல்ல. எவர்சில்வர் பாத்திரங்களோடு முலாம் பூசிய தையும் கலந்திருந்தேன். இந்த வியாபாரத் தில் இது சகஜம். ஆனால் உங்க அதிர்ஷ்டம் சுத்தமான எவர்சில்வர் பாத்திரங்களை யெல் லாம் தள்ளிவிட்டு முலாம் பூசிய வட்டாவை எடுத்துக் கொண்டு போயிருக்கிறீர்கள். அதுக் காக என்னை மன்னித்துவிடவேண்டும் நீங்கள். இந்த நிமிஷத்திலேருந்து இது போன்ற வியா பாரத்தில் ஈடுபடவே மாட்டேன். சத்தியம்! நம்புங்கள்.''

அழாக் குறையாகக் கெஞ்சினான் வாசு தேவன்.

''எழுந்திருப்பா. செய்தது தவறு என் பதை உணர்ந்து இனிமேலாவது திருந்திக் கொண்டால் அதுவே போதும் எனக்கு...''

அவனை எழுப்புவித்தார் வையாபுரி.



ஸ்ரீதேவி பாஸ்போர்ட்

போட்டி முடிவு

சலன் குறித்து வைத்திருந்த சரியான விடைகள்:

உயரம்: 5 அடி 7 அங்குலம்.

கண்கள் நிறம்: கறுப்பு.

உடலில் மச்சம் இருப்பது: வலது குதி காலின் உள்பக்கம்.

பிறந்த தேதி: ஆகஸ்டு 13, 1963.

சென்ற நாடுகள்: ஸ்ரீலங்கா.

சரியான விடைகளை 52 வாசகர்கள் எழுதி ரூ. 500 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

1. கே. எஸ். வந்தனம், சென்னை-14. 2. டி. கல்யாணி, பெங்களூர். 3. டி.ரமணன், சென்னை-33. 4. டி. பிரமீளா, சேலம். 5. மிஸ். ஏ.—சாந்தா, ஆலப்புழை. 6. கே. ராஜ குமாரி, வத்தலகுண்டு. 7. எம். நாகவேணி, கோயமுத்தூர். 8. மிஸ் என். ராஜி, கும்ப கோணம். 9. எஸ். பி. மகேந்திரன், சேலம் 10. கே. ராஜேந்திரன், சென்னை-17. 11. பசுமதி கண்ணன், மதுரை. 12. எம். பிரியா, சென்னை-4. 13. கே. சுந்தர், சின்ன சேலம் 14. ஆர். நாராயணசுவாமி, கோவை. 15. பி. சுபா, கோவை. 16. எஸ். மாதங்கி, சென்னை-86. 17. டி. மாதேசுவரி, சேலம். 18. டி. ஷீலா, கடலூர்-1. 19. ஆர். எஸ். கணேசன், கோவை. 20. ஜே. எம். திரு வள்ளுவினன், திருச்செங்கோடு. 21. எஸ். ராஜன், திருச்சி-2. 22. என். லட்சுமி, சென்னை-17. 23. ஏ. டி. நரசிம்மன், சென்னை-5. 24. ஆர். மீனாட்சி, கோய முத்தூர். 25. வி. பஞ்சாபகேசன், திருச்சி. 26. பி. எஸ். சோபனா, வேலூர். 27. எம்.ஏ. காதர், விருத்தாசலம். 28. கே. பி. மனோ ரமா, வேலூர். 29. ஏ. ராஜேந்திரன், பெங் களூர். 30. ஆர். உஷா, சென்னை-88. 31. சுலோசனா ராஜகோபால், ஹிஸ்ஸார். 32. மாசிலாமணி முதலியார், சென்னை-14. 33. சௌந்தரா வேங்கடாசலம், சென்னை-18. 34. முருகேசன், சென்னை-1. 35. மிஸ் உஷா, சென்னை-82. 36. வி. பாலாஜி, பொள் ளாச்சி. 37. ஆர். பூமா, பொள்ளாச்சி. 38. ராஜிவேங்கடராமன், பொள்ளாச்சி, 39. கோதை சுந்தரம், போரூர். 40. ஆர். உமா, ராஜபாளையம். 41. அருட்செல்வன், பள்ளத்தூர். 42. எஸ். ராமகிருஷ்ணன், ராஜபாளையம். 43.பிரகாஷ் பாபு, பாண்டிச் சேரி. 44. வி. ராஜி, பழனி. 45. காதர் கரை, கோவை-4. 46. நிமல்ராஜ், சத்ய விஜயநகரம். 47. ஸி. கே. கண்ணன், சென்னை-34. 48. ஏ. சுப்புலட்சுமி, சென்னை-30 49. வி. இந்திரா, வண்ணார் பேட்டை. 50. பத்மாவதி ரத்தினம், மதுரை-9. 51. பி. கேசவராவ், சென்னை-82 52. ஆர். நித்யகல்யாணி, கோலார்.

நூல் நிலையத்தில் அந்தப் பெண் கண்ணாடியை எடுத்துவிட்டால் அழகாக இருப்பாள் என்று நினைத்தான். அவளருகே சென்று மெல்லிய குரலில் ''குட் மார்னிங்...'' என்றான்.

''குட்மார்னிங்.''

''சோடியம்....''

''பார்டன்?'' என்று நிமிர்ந்தாள்,

''சோடியம் பற்றி எனக்குத் தெரிந்து கொள்ளணும்...''

''நேரே போங்க. எட்டாவது அலமாரி. கெமிஸ்ட்ரி.''

''தாங்க்ஸ்! உங்க பேரு ஸ்ரீலேகாதானே?''

''இல்லே.''

''பேரை மாத்திட்டிங்களா?''

''மிஸ்டர்! உங்களுக்கு ஸோடியம் வேணுமா இல்லே, என் பேர் வேணுமா?''

''ரெண்டுமே.''

''என் பேரு மிஸஸ் ராகவன். மிஸ்டர் ராகவன் அதோ கண்ணாடி அறைக்குள்ளே உட்கார்ந்திருக்கார்!''

வஸந்த் புன்னகைத்து, ''அப்படியா? அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாம். மேலும் என்கிட்டப் பயந்துண்டு கண்ணாடிக் குள்ள—இருக்கற ஃபெர்னாண்டஸை பேர் மாத்தவும் வேண்டாம். ஸீயூ!'' என்று விலகினான்.

அவள் பார்வை முதுகில் சுட கெமிஸ்ட்ரி அலமாரியை அணுகினான். சின்னச் சின்ன மேஜைகளின் முன் புத்தகங்கள் இறைந்திருக்க இங்கே ஒரு சோடா பாட்டில் கண்ணாடியும், அங்கே ஒரு ஜோல்னாப் பையுமாகத் தீவிரவாதிகள் படித்துக் கொண்டிருந்தார்கள். சரித்திரப் பகுதியில் அலுமினிய ஏணியில் மூன்றாம் படியில் இனியா நின்று கொண்டு சதாசிவப் பண்டாரத்தாரின் லேட்டர் சோளாவை எவ்வ முயன்று கொண்டிருந்தாள்.

''இனியா! சர்ப்ரைஸ்!... உன்னை இங்க பாப்பேனு எதிர்பார்க்கலே. பார்த்த உடனே வயத்துக்குள்ளே சின்னதா வண்ணாத்திப் பூச்சி பறக்கறது... இனியா...''

''ஷ்!'' என்றார் பேராசிரியர் அப்பாதுரை.

''ஓ! ஸார் நீங்களும் வந்திருக்கீங்களா?''

நூல் நிலையமே ''ஷ்ஷ்ஷ்....'' என்றது.

இனியா வஸந்தை ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும்சதாசிவப் பண்டாரத்தாருக்குத் திரும்பினாள்.

வஸந்த் சற்று நேரம் நின்று பார்த்தான். பேராசிரியர் அவர் அளவுக்கு இருந்த புத்த

அமர காவியம்



பெயரைக் கேட்டதும், இதுதான் கதை என்று சொல்லும் வகையில் காதல், பாசம், தியாகம் என்ற சமாச்சாரங்கள் கலந்தபடம்.

ரவுடி சின்னத்துரை நாட்டியக்காரி ஸ்ரீப்ரியாவின் மீது மோகம் கொள்ள, ஸ்ரீப்ரியா சிவாஜி மீது ப்ரியம் வைக்க, சிவாஜி தன்னை வெறுக்கும் பால்ய கால சகி மாதவியின் அன்புக்கு ஆசைப்பட, மாதவி லாயர் ஜெய் கணேஷைத் தன் பங்கிற்குக் காதலிக்கிறார் என்று போகும் சிக்கலான கதை என்றாலும் சுவாரஸ்யமான திருப்பங்கள் இல்லாமல் போரடிக்கிறது.

உடன் பிறவாத் தங்கை மீது உயிரையே வைக்கின்ற; நாட்டியக்காரியையும் அபிமானிக்கின்ற; எங்கிருந்தோ வந்த ஜெ. கணேஷைத் தம்பியாக்கிக் கொள்கிற கருணை மிகுந்த பல போஸ்களில் சிவாஜி. நீட்டி நீட்டி எதுகை மோனையில் தத்துவ – பாச வசனங்களை சிவாஜிக்கென்றே எழுதுவதில் ஏ. எல். நாராயணன் சமர்த்தர் — இதிலும்.

வைரம் சாப்பிட்டு ஸ்ரீப்ரியா சிவாஜிக்காக சாக ரவுடியிடம் குத்துப்பட்டு, சிவாஜி மாதவிக்காகச் சாக — முடிவில் அமர காவியம்.

நாகேஷின் காமெடி ஆறுதல். ரவுடி சின்னத்துரை (வஜ்ரமுனி — கன்னடம்) நல்ல செலக்ஷன் — சிவாஜியின் காஸ்ட்யூம்கள் இதன் எதிர் வகை,

சுயநலமில்லாதவர் விஸ்வநாதன்—இல்லாவிட்டால் தன் சொந்தப் படத்துக்கு இப்படி சிரத்தை இல்லாமல் செய்திருப்பாரா?

சில 'த்ரில் கனவுகள்' நீங்கலாக ப்ளாஷ் பேக், அது, இது என்று அலட்டிக்கொள்ளாமல் 'ஒரே ஒரு ஊரில்' என்று ஆரம்பித்து கதை சொல்கிறார் டைரக்டர் அமிர்தம். இந்திப் படத்தை அமிதாப்பின் கம்பீரம் காப்பாற்றியது. தமிழில்?

—''சிந்து ஜீவா''

கத்தில் ஆழ்ந்திருந்தார். வஸந்த் விரோதத்துடன் நடந்து மூலே திரும்பி மற்றொரு ஏணி எடுத்துக் கொண்டு எதிர்ப் பக்கத்தில் அதை நகர்த்தி வின்ஸ்லோவின் டிக்ஷனரியை விலக்கி இனியாவை மறுபடி பார்த்தான். அவள் திடுக்கிட்டு ம்ஹூம் என்று தலையாட்டினுள்.

வஸந்த் புருவத்தை உயர்த்தி, கைக்குட்டையால் கண்களை ஒத்திக்கொண்டான். இனியா தலையை உயர்த்தி, புருவத்தால் என்ன என்றுள். வஸந்த் விரல்களைச் சேர்த்துக்கொண்டு சாப்பிடுவது போல் பாவனை செய்து மேலே விரல் காட்டினுன். அவள் வருகிறேன் என்று தலையாட்டினுள். வஸந்த் வாயில் பின் விரல் வைத்துச் சப்தமின்றி விசிலடித்தான்.

முதல் மாடியில் இருந்த காண்டீனில் வஸந்த் காத்திருக்க, இனியா அவசர அவசரமாக வந்தாள்.

''அப்பாவுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வந்திருக்கேன். அஞ்சு நிமிஷம்தான் பேச முடியும்.... என்ன விஷயம் சொல்லித் தொலே.''

''இனியா! அஞ்சு நிமிஷத்திலே என் மனசின் அல்லல்களை எப்படிச் சொல்ல முடியும்? ஆறு நிமிஷம் வேணும்... இன்னி! என்மனம் கவர்ந்த கன்னி... இன்னும் கன்னிதானே நீ......!''

''வெத்துப் பேச்சுன்னு நான் ஆட்டத்துக்கு வரலே. போறேன்!''

''அய்யோ போகாதே! ஜன்னலைத் திறந்து குதிச்சுட்டு நாளை பேப்பர்லே வந்துடுவேன். இன்னி நீ செய்யறது நியாயமா? லோக்கல் தோத்தோ நாய் மாதிரி உன் கூடவே சுத்திக்கிட்டிருக்கேன், அமெரிக்காங்கறியே!''

''அப்பாதானே கொல்றுர். அப்பா பேச்சை என்னுலை மீற முடியாது வஸந்த்!''

''ஐயகோ! வள்ளுவரே சொல்லி யிருக்காரே, ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் அப்பனின் சொல் லென்றுல் மீறு''ன்னு....

''வஸந்த்! நீ என்னை நினேச்சுப்பியா?''

''என்ன கேள்வி இனியா? எனக்கு பிளட் பிரஷர் எடுத்துப் பாரு ஸிஸ்டாலிக் டயஸ்டாலிக் ரெண்டுமே இனியாங்கும்!''

- ''என் கல்யாணத்துக்குத் தனியா மெள்ள நடந்து வந்து 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு ஒரு பூச்செண்டைக் கொடுத்திட்டு விழியோரக் கண்ணீரைத் துடைச்சுண்டு ஃபேட் அவுட் ஆவியா?''

''என்னது! அதுக்கு வேற ஆளைப் பாரு! 'நிறுத்து இந்தக் கல்யாணத்தை'ன்னு புயல் கணக்கா குதிரைலவந்து ஒரு லாவு லாவிண்டு போவேன்! குதிரை நுழையற மண்டபமாப் பார்த்து வை.''

''கல்யாண மண்டபம் புக் பண்ணியாச்சே வஸந்த்!''

''இனியா, இத பாரு! என் கையைப் புடிச்சுண்டு வாழ்க்கையின் ஓரத்துக்கு ஸ்லோ மோஷன்ல ஓடத் தயாரா நீ?''

''தயார் வஸந்த்!''

''கவலேப்படாதே. கல்யாணத்தை நிறுத்திடறேன். வாத்தியார் அட்ரஸ் கொடு. பால்ல பர்கோலாக்ஸ் கலந்துடறேன். நாயனத்தை சீவாளியைப் பிடுங்கிடறேன். ஊர்கோலக் காரைப் பஞ்சர் பண்ணிடறேன். நீ என்ன பண்றே, மாப்பிள்ளை வரான் பாரு அவன் கிட்ட எனக்கு ரகசியமா ஒரு இடத்திலே தழும்புன்னு சொல்லிடு...''

''உனக்குத் தழும்பா இருந்தா அவருக்கு என்ன?''

''எனக்கு இல்லே, உனக்கு! இனியாவுக்கு'' என்று அவளைத் தொட்டான்.

''தொடாதே வஸந்த்!''

''ஏன் இனியா புல்லரிக்குதா?''

''இல்லே. அப்பா என்னைத் தேடிக்கிட்டு மேஜை மேஜையா வந்துக்கிட்டிருக்கார்.''

வஸந்த் உடனே அவளை விட்டு விட்டான்.

''வாங்கஸார்...காப்பிசாப்பிடறீங்களா?''

''இனியா இங்கேயா இருக்கே?''

''கொஞ்சம் போர் அடிச்சுதுப்பா!''...

''உட்காருங்க ஸார்!''

பேராசிரியர் உட்காராமல் ''இல்லேப்பா. நான் யூனிவர்ஸிட்டி போகணும். அப்புறம் கல்யாண ஏற்பாடு எல்லாம் பாக்கி இருக்கு. இனியா, வஸ்ந்த் கிட்டச் சொல்லிட்ட இல்லே, ஒத்தாசைக்கு வரும்படி?''

''அதைப் பத்தித்தான் பேசிட்டிருந்தோம் ஸார்... எல்லாம் சுபமா முடிஞ்சுரும் கவலேப்படாதீங்க....''

''வா, இனியா!''

''போ, இனியா, பயப்படாமப் போ. நான் பாத்துக்கறேன்!''

அவர்கள் சென்றதும் வஸந்த் சற்று நேரம் மிச்சமிருந்த காப்பியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பில் கொண்டு வந்த சர்வரிடம், ''வாழ்க்கையே மாயமய்யா!'' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் லைப்ரரிக்குள் நுழைந்தான்.

''சோடியம்! இதோ வர்றேன்!''

முதலில் கெமிஸ்ட்ரி இன்ஆர்கானிக் பகுதியில் பார்த்தான். அப்புறம் இண்டஸ்ட்ரியல் யூஸஸ் ஆஃப் ஸோடியம் பார்த்தான். அதன் பின் நேஷனல் கெமிக்கல் லாபரேட்டரியின் ஆராய்ச்சிக் குறிப்புக்களை வருஷாந்திர அனுபந்தங்களைப் பார்த்தான்.


''அட!''

சட்டென்று நிமிர்ந்தான்.

''இதில எப்படி ராஜ ராஜன் கிணறு வருது?'' (தொடரும்)

''ஏன் சார், உங்களுக்குத்தான் மாளிகைப் பாக்கி ஒண்ணுமில்லே! பின்னே ஏன் வீட்டுகருக் கடன் கேட்டு வந்து சத்தம் போடச் சொல்றீங்க?''

''விருந்தாளிகளைக் கிளப்புறதுக்கு இது ஒரு வழிதான் பாக்கி இருக்கு!''





மதி போன்ற வதனம், வண்டு போன்ற கண்கள், சங்கு போன்ற கழுத்து, .. வாழைத் தண்டு தோள்கள் ... துடி இடை
நிறுத்தப்பா ... துடி இடை என்பதை 'கட்' பண்ணிடு வசனம் எழுதறப்போ தீபா நடிக்கப் போறாங்கன்னு எனக்குத் தெரியாது
காமினிக்கு மடிசார் கட்டி விடப் போகிறேன். நீங்க அந்தண்டை போங்க
DIRECTOR
டைரக்டர் சார் புடவை கட்டி விடறதை ஃபிலிம் பண்ணிவிடவா
சேச்சே.. எப்படியப்பா பண்றது...ஸ்ரீதேவிக்கே வேறு யாரோதானே மடிசார் கட்டி விட்டிருக்காங்க!
இந்த டத்திலிருந்து பாதியிலே ரேகா ஏன் விலகிக் கிட்டாங்களாம்?
என்னை விட அவங்களுக்குக் குறைவாகத்தான் தருவாங்க என்பதாலே.. பணம் இல்லே ... இடுப்பிலே கிள்ளு!

22. மாறு வேஷத்தில்!

வஸந்த் அந்தப் பெண்ணை மறுபடி அணுகி, ''எக்ஸ்க்யூஸ் மி மிஸஸ் ராகவன். கன் ஐ யூஸ் யுவர் டெலிஃபோன்?'' என்றான். கண்ணாடிக்காரி நிமிர்ந்து ''யூ எகய்ன்!'' என்றாள்.

''ரொம்ப அவசரம் காசுக்கு உண்டான காலைக் கொடுத்துடறேன். ஸாரி காலுக்கு உண்டான காசை... எப்படிக் குழம்புது பாத்திங்களா? தலை போற விஷயம். உதவி பண்ணிங்கன்னு என் உயில்ல உங்களுக்கு ஒரு எவர்சில்வர் லோட்டா எழுதி வெக்கறேன்.''

அந்தப் பெண்ணைச் சிரிக்க வைத்துவிட்டான். ''ஆல் ரைட் அந்தக் கண்ணாடி அறைக்குள்ள இருக்கிற போனை உபயோகப் படுத்துங்க.''

''பாஸ் கை கொடுங்க.''

''டெலிபோன்லயா? என்னடா?''

''சோடியம் கிணறு.''

''விஷயம் என்ன புரியற மாதிரி சொல்லு''

''நீங்க சோடியத்தைப் பத்தி தகவல் சேர்க்கச் சொன்னீங்கல்ல. இருக்கிற எல்லா புத்தகத்தையும் பார்த்தேன். நேஷனல் கெமிக்கல் லாபரேட்டரியில் பல புத்திசாலிகள், விஞ்ஞானிகள், பேப்பர் பேப்பரா எழுதியிருக்காங்க. எல்லாம்ஆராய்ச்சிக் கட்டுரைகள். அதில ஒரே ஒரு கட்டுரை யோட தலைப்பு என்ன தெரியுமா?''

''என்ன?''

''சொல்லிடட்டுமா?''

''சொல்லுடா.''

''சொல்லியே டட்டுமா?''

''வஸந்த்!''

''கேளுங்க. நல்லாக் காது கொடுத்துக் கேளுங்க. 'இன்ட்ரஸ்டிங் கெமிகல் காம் பொஸிஷன் ஆஃப் ஸ்லைம் இன் என் ஏன்ஷி யண்ட் வெல் – ராஜராஜன் கிணறு'' டை டாக்டர் எச். அகர்வால் ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் தி ஐ. ஸி. ஏ.. தமிழ்ல சொன்னா புராதன ரா ரா கிணற்றின் கலக்கலின் வசீகர ரசாயன அமைப்பு.''

''வஸந்த்! அந்தப் புத்தகத்தை உடனே எடுத்து வா.''

''முடியாது. ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்கு. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்க்கறேன். பரக்குன்னு நாலஞ்சு பக்கத்



தையும் கிழிச்சுட்டுப் பனியனுக்குள்ள வெச்சுண்டு வந்துரவா?''

''சேசே அப்ப்படிச் செய்யாதே. லைப்ரரியில ஃபோட்டோஸ்டாட் சர்விஸ் இருக்குமே. பணம் கொடுத்துர்றேன்னு சொல்லு. காப்பி எடுத்துக் தருவாங்க. அப்படி இல்லேன்னு ஆர்ட்டிக்கிளை அப்படியே காப்பி அடிச்சுப் பேப்பர்ல எழுதிக்கிட்டு வா.''

''தலைகால் புரியாத ஆர்ட்டிக்கிள்.''

''பரவாயில்லே. காப்பி அடிச்சுண்டு வா, கிழிக்காதே, என்ன?''

வஸந்த் அறையை விட்டு வெளி வந்து மறுபடி அந்தப் பெண்ணிடம் சென்று, ''பொய் சொன்னீங்க'' என்றான்.

''பார்டன்?''

''உங்க பேர் நளினி மிஸ் ஆர் நளினி.''

''எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''எனக்குக் கொஞ்சம் அஸ்ட்ரல் பவர்ஸ் உண்டு. ஒரு பெண்ணுடைய மூக்கு நாஸ்ட்ரில்ஸ் மூச்சு விடறப்போ எப்படி விரியறதுங்கறதை வெச்சுட்டு அவங்க பேரை கெஸ் பண்ணலாம்.''

''அப்படியா?''

''மேலும் அந்த அறைக்குள்ளே இருந்த ரிஜிஸ்டர்ல ஸ்டாஃப் லிஸ்ட்டில உங்கபேரைப் பார்த்தேன். உங்க லைப்ரரியில ஃபோட்டோ



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு	**ரூ. 500**

(இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032

ஸ்டாட் சர்வில் இருக்குமா ஒரு ஆர்ட்டிக்கிளைப் பிரதி எடுக்கணும்.''

அவள் இப்பொழுது வஸந்தை 'இவன் என்ன மாதிரி மனுஷன்' என்கிற மாதிரி ஆர்வத்துடன் பார்த்தாள்.

''அப்படிப் பார்க்காதீங்க. ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் பி. பி. டிரபிள்.''

''இந்த மாதிரி நீங்க எத்தனை பெண்களை அப்ரோச் பண்ணியிருக்கீங்க.''

வஸந்த் அடிபட்டவன் போல்: ''பெக்யுவர் பார்டன். நான் ரொம்ப ஸீரியஸான இளைஞன். எனக்கு வாழ்க்கையில சோடியம் ஒண்ணுதான் இன்டரஸ்ட்.''

அவள் சிரித்து ''ஆர்ட்டிக்கிள் என்னன்னு சொல்லுங்க'' என்றாள்.

''ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்குது. வாங்க காட்டறேன்.''

வஸந்த் மறுபடி அந்த அலமாரிக்குச் சென்று அந்தப் புத்தகத்தை எடுத்து, அடையாளம் வைத்திருந்த பக்கத்தில் பிரித்துத் திடுக்கிட்டான்.

''என்னடாது! ஜீனி வேலையா இருக்கு.'' சுற்று முற்றும் பார்த்தான். எல்லோரும் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். மௌனம். டெலிபோன் செய்துவிட்டு வருவதற்குள் அந்தப் பக்கங்களை யாரோ கிழித்து எடுத்து விட்டார்கள்.

''என்ன கிடைச்சுதா?'' என்று அந்த நளினி அருகே வர வஸந்த் சட்டென்று பக்கத்தைப் புரட்டி வேறு கட்டுரையைத் தேர்ந்தெடுத்து, ''இதான்'' என்றான்.

அவள் அதில் விரல் வைத்துக் கொண்டு எடுத்துச் சென்றாள். ''அரை மணி கழிச்சு வாங்க. காப்பி ரெடியா இருக்கும்.''

''அதுக்குள்ள ஒரு காப்பி அடிச்சுட்டு வந்துர்றேன்.''

''உங்க பேர் சொல்லலியே.''

''கோவிந்தா'' என்று புறப்பட்டான்.

''அடுத்த முறை இந்த லைப்ரரிக்கு மாறு வேஷத்திலதான் பாஸ் போக முடியும். ஏதோ சொல்லிட்டுத் தப்பிச்சு வந்துட்டேன்.''

''கிழிஞ்சு இருந்தது?''

''பக்கங்கள் நீக்கப்பட்டு விட்டன. இதில இருந்து என்ன தெரியுது? என்னை யாரோ தொடர்ந்து லைப்ரரிக்கு வந்திருக்கான்னு.''

''அந்த ஆர்ட்டிக்கிளை நாம பார்க்க விடாமப் பண்ற அமெச்சூர் முயற்சி அது. அதில என்னதான் எழுதியிருந்தது?''

''எனக்கென்ன பாஸ் புரியும்? சாவகாசமாப் படிச்சுக்கலாம்னுட்டு உங்களுக்கு போன் செய்ய வந்தேன். அதுக்குள்ள சிட்டாப் பறந்துடுச்சே.''

''ஜர்னல் பேர் என்ன?'' என்றான் கணேஷ்.

''ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் தி ஐ. ஸி. ஏ.''

''சரி தேடிப் பார்த்துறலாம். ரகசியம் அதிலதான் இருக்குன்னு இப்ப நிரூபணமாயிடுத்து. சபாஷ்! நீ எப்படியாவது ராத்திரிக்குள்ள அந்த ஆர்ட்டிக்கிளை மறுபிரதி எடுத்துப் பார்த்துட்டு நகல் எடுத்துட்டு வந்துடு என்ன? எங்கே போவே?''

''சரித்திரப் பேராசிரியராச்சு. இப்ப ரசாயனப் பேராசிரியர் ஒருத்தரைப் பிடிச்சுக்க வேண்டியதுதான்.''

''என்ன பண்ணுவியோ எனக்கு ராத்திரிக்குள்ள ஆர்ட்டிக்கிள் வந்தாகணும்.''

''வந்துடுத்து. கவலைப்படாதீங்க... பாஸ்! சின்னதா ஒரு போன் அடிச்சுக்கலாமா?''

''இனியாவா?''

''ஆமா. கல்யாண மண்டபம் விசாரிச்சு வெச்சுக்கணும். குதிரை நுழையுமான்னு பார்க்கணும். அல்லோ கொஞ்சம் இனியா போடுங்க..''

''குதிரையா? வடக்கத்தி கல்யாணமா?''

''இல்லை பாஸ். வடக்கத்திக் கடத்தல். ஓ! ஹலோ இன்னி! இந்திரன் தோட்டத்து முந்திரியே... மன்மத நாட்டுக்கு மந்திரியே.. ராஜ பார்வை பாத்தியா?''

''ஓ! பக்கத்தில அப்பா இருக்காங்களா? கொஞ்சம் கல்யாண மண்டபத்தின் பேரு ஊரு ஜாதகம் எல்லாம் சொல்லிட்டன்னு சௌகரியமா இருக்கும்.''

கணேஷ் யோசனையில் இருந்தான். ரசாயன கட்டுரைக்கும் ராஜ ராஜன் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்? விந்தையாக இருக்கிறதே! ரசாயனம் இந்த விவகாரத்தில் அடிக்கடி வருகிறது. சோடியம் ஹைட்ராக்ஸைடு, டைட்டேனியம், கணேஷ் சற்று நேரம் எல்லாவற்றையும் கழற்றிவிட்டு ஏகாக்கிரக சிந்தையாக யோசித்துப் பார்த்தான். இருக்க வேண்டும்! ஏதாவது ஒரு ஒட்டு இருக்க வேண்டும். முதலில் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல விசாரித்தார்களா என்று ராஜேந்திரனைக் கேட்க வேண்டும்.

''வஸந்த் கொஞ்சம் சுருக்கமாப் பேச்சை முடிச்சுக்கிறியா? டெலிபோன் வேணும்.''

''பை இன்னி! கனா காண்றபோது அமெரிக்கா பார்ட்டி வந்தான்னு வெரட்டிவிட்டுரு.... என்ன பாஸ்! யாருக்கு போன்?''

''கொஞ்சம் ராஜேந்திரனைக் கூப்பிடு.''

வஸந்த் மறுபடி நம்பர்களைச் சுழற்றும்போது ''பாஸ் ஏதாவது கிணத்துக்குள்ள தென்பட்டுதா?'' என்றான்.

''கொஞ்சம் கொஞ்சம் தெரியுது.''

''தங்கக் காசுதானே?''

''இருக்கலாம்.''

''தங்கக் காசு இல்லைதானே?''

''அப்படியும் இருக்கலாம். வஸந்த் அந்தக் கிணத்துல தங்கக் காசுகளைப் போட்டுட்டதாக் கல் வெட்டுக் குறிப்பு இருக்கிறது என்னவோ நிஜம். ஆனா இவங்க தேடறது தங்கக் காசுகளான்னு ஊர்ஜிதமா நமக்கு இன்னும் தெரியலை.''

''ஹலோ கொஞ்சம் டி.ஐ.ஜி. கூடப் பேசிலாங்களா? என் பேர் வஸந்த். லாயர் கணேஷ் அஸிஸ்டண்ட். தாங்க்ஸ்! பாஸ் ராஜேந்திரன் ராஜன் ராஜன் கிணறு; ராஜேந்திரன் — டி.ஐ.ஜி. சரித்திரம்! எப்படி மாறிப் போச்சு பாருங்க. அப்பா புள்ளையா இருந்தவங்க கிணறும் போலீஸ் ஆபீஸருமா மாறிப் போயிட்டாங்க. என்னே! ஸார் வணக்கம். நான்தான் வஸந்த்!''

கணேஷ் டெலிபோனைப் பிடுங்கிக்கொண்டு ''ராஜேந்திரன் தொல்பொருள் இலாக்காவில விசாரிச்சீங்களா? சொல்லியிருந்தேனே'' என்று கேட்டான்.



சைக்கிள்-மோட்டார்சைக்கிள் போட்டி — முடிவு

19–4–81 கல்கியில் வெளியான போட்டி சரியான விடை:

மோட்டார் சைக்கிள் நடித்த படம்: அல்லி தர்பார்

ஓட்டிச் செல்பவர்: மஞ்சுளா

சரியான விடைகளை 45 வாசகர்கள் எழுதி ரூ. 500 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்:

1. த. சாமுவேல், புதியம்புத்தூர். 2. ஏ. சரவணன், த. பட்டிணம். 3. கே. அம்பிகா, ஆரணி. 4. நரசிம்மன், மேட்டூர் அணை. 5. பி. சக்திவேல், சேலம். 6. சொர்ணகுமார், கோவில்பட்டி. 7. ஆர். லைலா, தூத்துக்குடி-2. 8. எஸ். ராஜாமணி, திருவனந்தபுரம். 9. ஜி. மாணிக்கம், திருவனந்தபுரம்-23. 10. ஆல்பின் சகாயராஜ், புதியன்புத்தூர். 11. கா. வெங்கடேசன், கும்பகோணம். 12. ஏ. ஜோதி, குடியாத்தம். 13. எம். அமர், கரூர். 14. எஸ். சீனிவாசன், சென்னை-17. 15. ஏ. சுமதி, மேட்டூர் அணை. 16. மு. ராமராஜ், ராஜபாளையம். 17. எம். சுகுமார், சென்னை-71. 18. எஸ். விசுவநாதன், கோயமுத்தூர். 19. ஆர். மனோகர், மேலூர். 20. ஆர். மூர்த்தி, மேலமலையனூர். 21. எஸ்.எஸ். வாசன், சென்னை 22. கே. ஆர். நாகப்பன், காரைக்குடி-1 23. சா. குணசேகரன், சென்னை-17. 24. ஆர். ரவிச்சந்திரன், பு. புளியம்பட்டி. 25. ஆர். ராஜா, வாணியம்பாடி. 26. அ. காளியப்பன், குண்ரெட்டியூர். 27. ஆர். மோகன் திண்டுக்கல். 28. எம். துரை பாண்டியன், திண்டுக்கல். 29. எஸ். வேல்முருகன், திண்டுக்கல். 30. கே. ரஞ்சனி, சென்னை-2. 31. கே. ரவி, தர்மபுரி. 32. எஸ். ரேவதி, திருவெண்காடு. 33. ஜி. கருணாகரன், சென்னை. 34. எம். அனந்தராமன், சென்னை-33. 35. பி. விஜயகுமார், சென்னை-1. 36. எஸ். கண்ணன், புதியம்புத்தூர். 37. ஏ. ரே ரவிச்சந்திரன், போளூர். 38. ஸாம் பால், விலாசமில்லை. 39. கே. ஜெயகிருஷ்ணன், பெங்களூர்-5. 40. பி. விசுவநாதன், வனவாசி. 41. பி. தேவேந்திரன், சென்னை-54. 42. ஜி. பாபு, பெங்களூர். 43. எம். செல்வமணி, திண்டிவனம். 44. ஜே. ராஜன், சென்னை-13. 45. டி. கவிதா, கிணத்துக்கடவு.

''விசாரிச்சேன் கணேஷ். அவங்க ரிப்போர்ட் கொடுத்திருக்காங்க.''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது?''

''யூஷுவல் கவர்ன்மெண்ட் வழவழா! ராஜ ராஜன் கிணற்றில் தங்கக் காசுகள் போடப்பட்டிருப்பதைப் பற்றிக் கல்வெட்டு செய்திகள் இருப்பது இந்த டிப்பார்ட்மெண்டுக்குத் தெரிந்த விஷயம். அந்தக் காசுகள் மறுபடி பதினுலாம் நூற்றுண்டில் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு விட்டன என்றும் நாகபட்டன் என்கிற ஒருத்தன் அவைகளைக் கவர்ந்து சென்று விட்டதாகவும் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போது அந்தக் காசுகள் எங்கிருக்கின்றன யாரிடம் இருக்கின்றன என்பது பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. போலீஸ் டிப்பார்ட்மெண்ட் இது பற்றி மேற்கொண்டு—தகவல் தந்தால்நன்றியுடையவர்களாக இருப்போம்.''

''சரிதான்.''

''அவுங்க என்ன சொல்ருங்க புரியுதா கணேஷ்?''

''தங்கக் காசு இருந்தது கிணத்துல. ஆனு இப்ப இல்லேங்கருங்க.''

''இருந்தாலும் இருக்கலாம்கருங்க. நடுவில யாரோ அடிச்சுட்டுப் போயிட்டாங்கன்னு ஒரு பட்டனைச் சொல்ருங்க.''

''இது பற்றிப் பேராசிரியரைக் கேட்டுப் பாக்கறேன். அப்பத்தான் ஊர்ஜிதமாகும். அவர் இந்த வெட்டில எல்லாம் அத்தாரிட்டி.''

''அப்புறம் கணேஷ்! அந்தக் கூழமந்தல் ஆசாமி குத்தப்பட்டுச் செத்தர்ன்னு சொன்னிங்க பாருங்க. அதைக் கொஞ்சம் விசாரிச்சேன். சிலதெல்லாம் சுவாரஸ்யமா இருக்கு. ஆசாமி குத்துப்பட்டதுக்கு முதநாள் உக்கல் வந்திருக்கான், ஒரு நண்பரைப் பார்க்கறதுக்கு. அந்த நண்பனைப் பிடிச்சு தீர விசாரிச்சதில தெரிஞ்ச விஷயம் கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்கு. அந்த ஆள் நண்பன் கிட்டச் சொன்னனும், உக்கல்ல அந்தக் கிணத்தைச் சுத்தி எதோ விநோதமா நடக்குதுப்பா. எனக்கு அந்த ராஜ ராஜன் கிணத்தையும் பாக்கறது டூட்டி. 'அதைப் பார்த்து விட்டு வர நேத்து ராத்திரி போனேன்னு. அங்க கோஷ்டியா நாலேஞ்சு ஆசாமிங்க வான்ல வந்து இறங்கி பக்கெட் பக்கெட்டா அந்தக் கிணத்துல ராத்திரியில தண்ணி இறைச்சாங்களாம். இவன் போய் 'இத பாருப்பா எதுக்காகப் பாழும் கிணத்தில ராத்திரில தண்ணி இறைக்கிறே? இது சர்க்கார் கிணறு. நான் தான் காவல்காரன்'னு சொல்ல அவனைப் போடான்னு விரட்டி விட்டாங்களாம். மறுநாள் அதைப் பத்தி பட்டணத்துக்காரங்க பார்வையாளர்கள் யாராவது வந்தா ரிப்போர்ட் பண்ணப் போறேன் என்று சொன்னும். அதைச் சொல்றதுக்குத்தான் உங்க கிட்ட வந்திருக்கான் மறுநாள். அதுக்குள்ள குத்தப்பட்டிருக்கான். சுருங்கச் சொன்ன சம்பவ தினத்துக்கு முதல் நாள் வான்ல வந்து தண்ணி இறைச்சிருக்காங்க,

''தண்ணி இறைச்சிருக்காங்களா இல்லே, சேகரிச்சிருக்காங்களா?''

''அதென்னவோ சரியாத்தெரியலே. கிணத்துத் தண்ணியை யாராவது சேகரிப்பாங்களா?''

''அதானே! அப்புறம் ராஜேந்திரன்! அந்த அருண் என்டர்ப்ரைஸ் பற்றி விசாரிச்சீங்களா?''

''விசாரிச்சுட்டேன் கணேஷ். பிஸினஸ் எல்லாம் பார்த்தா நிழலா ஏதும் இல்லே. எக்ஸ்போர்ட் இம்போர்ட் பண்ருங்க. பெல்ஜியம்ல ஒரு கம்பெனி மிஷினரி ஏஜன்ஸி எடுத்திருக்காங்க. அப்புறம் மேற்கு ஜெர்மனி ஹீடல்பர்க் மாதிரி ஒரு கம்பெனி பிரிண்டிங் மிஷினரி ஏஜென்ஸி. ஆக்சுவல் யூஸர்ஸ் லைசென்ஸில் இறக்குமதி பண்ணி கமிஷன் வாங்கிக்கிருங்க.''

''எக்ஸ்போர்ட்டிங்?''

''விக்ஸ்.''

''தலைமயிர்?''

''ஆமாம். அது ஒண்டிதான் இந்தியாவில சல்லிசாக் கிடைக்கிற சமாசாரம். ஸ்ட்ரைக் ஏதும் இல்லாமத் தானே வளர்ந்துக்கிட்டு இருக்குது.''

கணேஷ் சிரித்து:''தலைமயிர்க்குள்ள ஏதும் பொதிந்து இல்லேயே? ஓப்பியம் வைரம்?''

''அப்படி யெல்லாம் ஏதும் இருக்கிறதாத் தெரியலே. இருந்தும் இந்தக் கம்பெனியை இன்டெலிஜன்ஸ் லிஸ்ட்டிலே போட்டிருக்கேன். வாட்ச் பண்ணிப் பார்க்கறோம். கணேஷ் சந்தேகப்பட்டா அதில ஏதாவது விஷயம் இருந்துதான் ஆகணும். அருண் பிரசாதோ என்னவோ ஓனர் பேரு. நான் எல்லாத்தையும் தீர விசாரிக்கச் சொல்லியிருக்கேன். கணேஷ், நீங்க என்ன சொல்றீங்க? அந்தக் கிணத்தில தங்கம் இல்லேங்கறீங்களா?''

''நான் இதுவரைக்கும் எதும் முடிவுக்கு வரலே ராஜேந்திரன். தனித் தனித் துண்டுகளா இருக்கு. இப்பத்தான் ஒட்ட வைக்கலாமான்னு பாக்கறேன். அந்தக் கிணத்தைப் பாதுகாக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டீங்கல்ல?''

''செய்தாச்சு.''


கணேஷ் டெலிபோனை வைத்துவிட்டு: ''வஸந்த்! நீ மறுபடியும் உக்கல் போறியா?''

''சரி பாஸ்.''

''மாறு வேஷத்தில'' என்ருன் கணேஷ்.

(தொடரும்)

Health Clubகளில் பதின்மூன்று டன் அரைத்த காப்பிப் பொடியில் புதைந்து கிடந்து புத்துணர்ச்சி பெறுகின்றனர் இன்றைய ஜப்பானிய மேட்டுக் குடியினர்! —மிஞஸ்கி



அட்மிஷன்



பள்ளி ஆசிரியர் : பதினாறும் பெற்றுப் பெரு'
வாழ்வு வாழ்க!

தம்பதி : பதினாறுக்கும் நீங்க அட்மிஷன் தரதா இருந்தா நான் பதினாறும் பெற்றுக் கொள்ளத் தயார்!

''நம்ம வீட்டுக் குழந்தைங்க, பேரக் குழந்தைங்க,... உங்க அண்ணு, தம்பி, அக்கா, தங்கச்சி வீட்டுக் குழந்தைங்க, பேரக் குழந்தைங்க மொத்தம் நூறுக்கு மேலே இருக்கும்! அட்மிஷன், நன்கொடைன்னு அவதிப்படாம.. பேசாம நமக்குன்னு ஒரு ஸ்கூல் கட்டி வையுங்க!''





''அட்மிஷனுக்குச் செங்கல் சிமெண்ட் தவிர சேர், டேபிள் கூட தரலாம்!''

''அட்மிஷன்தானே!...கவலைப்படாதிங்க.
இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் ஆரம்பிச்சிருக்
டொனேஷன் தவணை முறையில்! நான்
வசூல் பண்ணிக்கறேன்!''



''எத்தனை மேஜை, நாற்காலி வேணும்?''
''உங்க பர்னிச்சர் கடையையே மேஜை நாற்



23. தன்மானப் பிரச்னை

“என்னது? நான் மாறு வேஷத்தில போகணுமா? எதுக்கு?'' என்றான் வஸந்த் சற்று அதிர்ந்து.

''அந்த வியாபாரம் என்னன்னு கண்டு பிடிக்கறதுக்கு. நீதான் நல்லா வேஷம் போடுவியே. கேள்விப்பட்டிருக்கிறேனே.''

''எப்ப பாஸ்? நான் சின்ன வயசில ஒரே ஒரு தடவை பள்ளிக்கூடத்தில பாரதியாரா வேஷம் போட்டுக்கிட்டு ஸ்டேஜ் பூரா தலைப்பாவை இழுத்துக்கிட்டு கப்பலோட்டிய தமிழனைக்கவுத்துட்டேன். அதுக்கப்புறம் ஜன்மத்துக்கும் வேஷம் போடறதில்லைன்னு எங்கம்மா கிட்ட எச்ச உமிஞ்சு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன். என்ன வேஷம் போடணும்? ரெப்ரிஜிரேட்டராவா? அப்படி ஏதாவது இம்பாஸிபிளா சொல்லுவீங்களே!''



''நீ என்ன வேஷம் போட்டுக்கிறியோ கொஞ்சம் நம்பும்படியாப் போடு... அங்க போய்க் கொஞ்ச நேரம் அல்லது கொஞ்ச நாள் பஸ் ஸ்டாண்டில அலைஞ்சு அந்தப் பத்துக்கு நாப்பது பார்ட்டியை எப்படியாவது காண்ட்டாக்ட் பண்ணணும். என்ன?''

''என்ன வியாபாரம்னு தெரியாம பேந்தப் பேந்த விழிக்கிறதா?''

''கண்டு பிடிக்கிறேன் வஸந்த்.''

''கண்டு பிடிக்காம தொடரும் போடறதில்லேன்னு வெச்சிருக்கிங்களா பாஸ்?''

''அந்தக் கட்டுரையை மறுபடி எப்படியாவது கொண்டு வந்துட்டாத் தெரிஞ்சு போயிரும். நீதான் ஏதோ கெமிஸ்ட்ரி பேராசிரியரைத் தெரியும்னு சொன்னியே.''

''பேராசிரியை.''

''இங்க கூட பெண்பாலா?''

''அவங்களுக்கு ஒரு முறை கிரிக்கெட் மாட்சில தர்மாஸ்பிளாஸ்க் நிறைய பால் வாங்கிட்டு வந்தேன். அப்பலேந்து பழக்கம். வயசு முப்பதுதான் ஆறது. எங்கிட்ட

ரொம்ப ஒரு இது. அக்கா தம்பி மாதிரி ஒரு அட்டாச்மெண்ட்....''

''விவரங்கள் வேண்டாம். சாயங்காலத் துக்குள்ள அந்தக் கட்டுரை எனக்கு...''

''வந்தாச்சு கவலேயை விடுங்க. பாஸ், நான் கோவிந்தா சொம்பு ஒண்ணு எடுத் துக்கிட்டுத் திருப்பதில வேண்டுதலேன்னு மொட்டை அடிச்சுக்கிட்டுப் போகட்டுமா?''

''இல்லே வஸந்த். ஏதாவது நம்பும்படி யாப் போ. எனக்கென்னமோ ஒரு சின்ன மீசை, கன்னத்தில கறுப்பு மச்சம் கொஞ்சம் விந்தி விந்தி நடை. இது போதும்னு தோணுது. அதுக்கு முன்னுடி கட்டுரையைப் பார்.''

வஸந்த் செல்ல கணேஷ் தன் கேஸ் கட்டு களைப் பார்க்க விழைந்து அவைகளைப் பிரித்தான். காவேரி பேப்பர் மில்ஸுக் கும் சென்ன கேஸவனுக்கும் ஒரு சிக்கலான வழக்கு பேப்பர்மில்லின் சார்பாக அவன் வழக்காட வேண்டும். பகாஸ் சப்ளே செய்து அதிலிருந்து நியூஸ் பிரிண்ட் உற் பத்திக்கும் புதிய முறைக்கு அந்த மில்லே விரிவுபடுத்தும் திட்டத்தில் கரும்பு பயிரிடுபவர்களின் கோ-ஆபரேட்டிவ் நிறுவனத்தின் சார்பில் சென்ன கேசவன் ஆலேச் சக்கையான பகாஸைத்தருவதாக வாக்களித்துவிட்டு இப்போது கையை விரித்து விட்டதால் காவேரிக்கு ஏகப்பட்டநஷ்டம்.... கணேஷ் கொட்டாவி விட்டான்.

காவேரியின் இன்ஜினியர் பின்னணிச் செய்தி யாக அவனிடம் காகிதம் செய்யும் பல முறைகளைப் பற்றிய ஒரு குண்டுப் புத் தகத்தை வேறு கொடுத்துப் போயிருந்தார். அதை அசுவாரஸ்யமாகப் புரட்டினுன். மனம் உக்கல் கிராமத்திலேயே இருந்தது. ஒரு சங்கிலி, ஒரு தொடர், ஒரு கண்ணி கிடைத்து விட்டால் போதும். பத்துக்கு முப்பது எப்போது? பத்துக்கு நாப்பதை விட சிலாக்கிய மானது?

The soda process uses caustic soda (sodium Hydroxide) The kraft or sulphate process results in a stronger fibre. Sodium monasulphate is one of the newer working methods

கணேஷ் விழித்துக் கொண்டு... சோடியம் ஹைட்ராக்ஸைட்! சோடியம் மனே சல் ஃபைட்! எங்கே பார்த்திருக்கிறேம்? ஆம். அந்தத் துண்டை வஸந்த் பொறுக்கிக் கொண்டு வந்த துண்டை ஆராய்ச்சி- சாலேக்கு அனுப்பிக் கிடைத்த ரிப்போர்ட் டில். கணேஷ் தொடர்ந்து படித்தான்.

The logs are sliced and the slices broken up into chips from ¼ to 1 inch size and pressure cooled in a steam heated digester

chip - சபாஷ் மரத்துண்டு!

To make paper dimensionally stable and for good finish china clay Titanium oxide

டைட்டானியம் ஆக்ஸைடு! இதையும் பார்த்த ஞாபகம். கணேஷுக்குச் சற்றுப் புரிய ஆரம்பித்தது. பேப்பர் தயாரிக்கிருர்கள். நல்ல தரமுள்ள பேப் பர்! அந்த



அருணா எண்டர்ப்ரைஸஸ்ஸின் பலதரப் பட்ட பிஸினஸ்களில் ஒன்ருக இருக்கலாம் அல்லது.... பேப்பர்! உக்கலின் பக்கலில் பேப்பர்! எதற்குத் தயாரிக்க வேண்டும்? ஏதாவது ரகசியப் பத்திரிகையா? சதி இலக்கியமா? கணேஷ் யோசித்தான். Sizing agents of which resin is the most Common render the paper resistant to penetration by water.

அட! இப்படி இருக்குமோ?

கணேஷுக்குள் மின் புயல் அடித்தாற் போல் எண்ணங்கள் பறந்தன. இப்படித் தான் இருக்க வேண்டும். அல்லது இப்படியா? எங்கே போய்த் தொலைந்தான் இந்த வஸந்த்? இந்தச் சமயத்தில் என் சந்தேகங்களைப் பகிர்ந்து கொள்ள இல்லாமல் போய் விட்டானே!... டெலிபோனை எடுத்தான். சுழற்றினுன். மறு முனைக் கிர்ர்ர்ரிங் கிக்க, கணேஷ் ஒரு காகிதத்தில் ''காகிதத் தொழில்கள் என்ன என்ன?''.என்று எழுதிப் பார்த்தான்.


''ராஜேந்திரன், கணேஷ்! அந்தக் கேஸ்ல ஒரு ப்ரேக்!''

''என்ன கணேஷ்?''

''அவங்க காகிதம் சம்பந்தப்பட்ட ஏதோ செய்யருங்க!''

''காகிதமா?''

பாலைவனச்சோலை



வகைக்கொன்ருய் பிரச்னையுடைய ஐந்து வித்தியாசமான இளைஞர்கள். சோகங்களை உள்ளடக்கித் தெருச் சங்கமத்தில் சந்தோஷமும், 'டீ'யில் தாக சாந்தியும் அடைபவர்கள். இவர்களின் வெறுமையைப் போக்கும் தென்றலாய் உள் நுழையும் இனிய சிநேகிதி கீதா. அதைத் தொடரும் புதுமையான சம்பவங்கள்.

கதையை வித்தியாசமாய்த் தேர்ந்தெடுத்தவர்கள் திரைக் கதை என்பது மாபெரும் விஷயம் என்பதை உணரத் தவறியதன் மோசமான விளைவு, கோவையில்லாமல் மெல்ல ஊர்ந்து நகரும் படம். யாருக்காயினும் கஷ்டம் என்று வந்த மாத்திரத்தில் அதைத் தீர்க்கவோ, அல்லது ஆறுதல் சொல்லவோ உடன் பிரசன்னமாகும் மாமருந்து கீதா. இதில் வரும் சம்பவங்களில் நடைமுறைசாத்தியத்தை நாம் தேடாவிடில்,நலம்.

கீதாவுக்கும் மற்றவர்களுக்கும் இடையேயான நட்போ அல்லது உறவோ எத்தகையது என்பது சரிவரச் சொல்லப்படவில்லை. திடீரென்று சேகர் கீதாவைக் காதலிப்பதாய்ச் சொல்வது குழப்பமான காட்சியமைப்புக்களில் உச்சம்.



வைர முத்துவின் கவிதை வாணி ஜெயராமின் குரலில் நல்ல பாடலாகியிருக்கிறது. தேவையில்லாத இடங்களில் பின்னணி இசை சேர்த்து, காட்சியின் சீரியஸ்னஸைக் கெடுத்து எரிச்சல் ஊட்டும் சங்கர்கணேஷ்.

பிரசன்னகுமாரின் தத்துவ மழை வசனங்கள். இரண்டு பேர் சேர்ந்து செய்திருக்கும் அளவுக்குப் பிரமாதம் இல்லாத ஒளிப் பதிவு.

பெரும்பாலான இடங்களில் இதில் வரும் ஆண் பிள்ளைகளின் சரிவர வெளிப்படுத்தாத பாவங்களும், பெட்டைப் புலம்பலும் நமக்குக் கோபமூட்டுகின்றன.

தன்னைக் காதலித்த சேகரை, நண்பனின் தங்கையை மணக்குமாறு பணித்துவிட்டு நாம் நினைத்தவாறே சினிமா மரபின்படி கீதா இறக்கிருள் (இதய நோயாம்!)

சுஹாசினியின் நடிப்பு சுஹானுபவம். கைலாஷும்,சினிமாப் பித்து தியாகுவும் சந்திரசேகரும் சொல்லும்படி செய்திருக்கிருர்கள்.

டைட்டிலும், டைரக்டர்கள் பெயரும் நம்மை நிறைய எதிர்பார்க்க வைத்தது மட்டும் உண்மை. — ''சிந்து ஜீவா''

''ஆமா. காகிதம் தயாரிக்கிறாங்க. அல்லது காகிதத் தயாரிப்போட சம்பந்தப்பட்ட ஏதோ செய்யறாங்க. பல்ப்பு செய்யறது. பீட்டிங் ஏதாவது....''

''கொஞ்சம் இருங்க. பறக்காதீங்க. எட்டடி இந்த முடிவுக்கு வந்தீங்க?''

''அங்க இருந்த ஒரு ஆளோட வியாபாரம் பேசிட்டு இருக்கறப்போ அவன் கையில ஒரு பார்ஸல் மாதிரி ஏதோ ஒண்ணு வெச்சிருந்தான்னு சொன்னேனில்ல....''

''ஆமா.''

''அடுத்த தடவை வஸந்த் அவனைச் சந்திக்கப் போனபோது அந்தப் பார்ஸலிலிருந்தோ அல்லது அதோட சம்பந்தப்பட்ட ஏதோ ஒன்றிலிருந்தோ விழுந்த பொருள் ஒன்றைப் பொறுக்கிட்டு வந்து அதைக்கூட நான் உங்க கிட்ட போலீஸ் லாபில அனலைஸ் பண்ணி ரிப்போர்ட் தரும்படி கேட்டுக்கிட்டேனே ஞாபகம் இருக்கில்ல?''

''இருக்கு.''

''அந்த ரிப்போர்ட்டில கண்ட பொருட்கள் எல்லாம் பேப்பர் தயாரிக்கிறதில உபயோகப்படற ரசாயனப் பொருட்கள்!''

''அந்தத் துண்டு என்னதான்னு சொல்றீங்க?''

சரியாத் தெரியலே. ஒருவேளை மரத் துண்டா இருக்கலாம். பேப்பர் தயாரிக்க ரா மெட்டிரியல். சின்னச் சின்னத் துண்டுகளா மரத்தை வெட்டித்தான் பேப்பர் தயாரிப்பாங்க. அந்தத் துண்டுகளில் ஒண்ணு பேப்பர் தயாரிப்பதற்கு முன்னடி கெமிக்கலா ட்ரீட் பண்ண துண்டா இருக்கலாம். அதுதான் தப்பித் தவறி அந்தப் பார்ஸலோட ஒட்டிக்கிட்டு வந்திருக்கணும்...''

''பேப்பர், பேப்பர்! இருங்க கணேஷ்! இந்தக் கேஸ் நான் நினைக்கிறதா இருந்தா பெரிய விஷயம். உடனே வரீங்களா? முதல்ல அந்த அருண் எண்ட்ரப்ரைஸ்ஸைப் பார்க்கலாம்.''

''அதுக்கு முன்னடி வஸந்த் கிட்ட ஒரு கட்டுரை எடுத்துக்கிட்டு வரும்படி சொல்லியிருக்கேன். அது வந்ததும் இன்னும் கொஞ்சம் தெளிவாகும்னு நம்பறேன்....''

''சரி. ஏதாவது தெரிஞ்சாச் சொல்லுங்க. நாங்களும் இப்பவே தீவிரமா விசாரிக்கப் போறோம்!''

''ராஜேந்திரன்! ஏதாவது இன்டிகேஷன் தெரியுதா உங்களுக்கு?''

''ஆமாம் கணேஷ்! ஆமாம்! நீங்க இப்ப சொன்னதில இருந்து புடிச்சுக்கிட்டேன்.''



அவள் : ''முரட்டுக்காளை படத்துக்குப் போவோமானு கேட்டதுக்குப் பளார்னு கன்னத்தில் அறைஞ்சுட்டாராமே உன் புருஷன்...ஆள் ரொம்ப மோசமோ?''

இவள்: ''அப்படி ஒண்ணுமில்லே... பொதுவாக அவர் மனசு தங்கம்... எப்பவாவது சில சமயம்மட்டும் பித்தனே!''

-உ. ராஜாஜி

''என்ன?''

''இவ்வளவு தூரம் கண்டு பிடிச்சிருக்கீங்களே, இதையும் கண்டு பிடிங்களேன்! போலீசுக்குக் கொஞ்சமாவது விட்டு வைங்க'' என்று சிரித்துக் கொண்டே டெலிபோனை வைத்து விட்டார்.

கணேஷ் சற்று நேரம் ரிசீவரைப் பார்த்து விட்டு வைத்தான். வஸந்துக்காகக் காத்திருந்தான். இப்போதைக்கு வருவான் போலத் தெரியவில்லை. கேஸ் கட்டை மறுபடி பார்த்தான். எண்ணம் அதில் செல்லவில்லை. கிணற்றையே சுற்றியது. காகிதம்! காகிதம்—கிணறு! காகித உற்பத்திக்கும் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்?

கோர்ட்டுக்குச் சென்று ஆஜராகி அந்தச் சிக்கலான வழக்கின் மந்தமான போக்கில் அவன் மேம்போக்காகத்தான் ஈடுபட்டான். உள்ளே கிணறு உறுத்திக் கொண்டே இருந்தது. சாயங்காலம் நாலரை மணி வரைக்கும் வஸந்த் வரவில்லை. கணேஷுக்குப் பதற்றம் தான் அதிகரித்தது. கோர்ட்டை விட்டு மீண்டும் அலுவலக அறைக்கு வந்த மாத்திரத்தில் பேராசிரியர் அப்பாதுரையும், அவர் மகள் இனியாவும் வந்து சேர்ந்தார்கள்.

''கணேஷ்! ஒரு முக்கியமான விஷயம்!''

''என்ன ஸார்?''

பேராசிரியரின் முகம் சற்றுச் சுருங்கிக் கவலையுடன் இருந்தது தெரிந்தது.

''எனக்கு ஆதாரமா ஒரு சந்தேகம் கிளம்பியிருக்கு.''

''என்ன சந்தேகம் ஸார்?''

என்ன சந்தேகம் என்று சொல்லாமல் பேராசிரியர் சிந்தனை வயப்பட்டு இருந்தார். ''சே! எப்படிச் சாத்தியம் இது!'' என்றார்.

கணேஷ் இனியாவைக் கேள்விக் குறியுடன் பார்த்தான்.

''மறுபடி உக்கல் போகணும்கிறார்.''

''வேண்டாம். நானும் வஸந்தும் போகப் போறதா இருக்கோம். என்ன வேணும் சொல்லுங்க.''

''நீங்க போகப் போறீங்களா? அப்ப நாங்களும் வரோம்!''

''இனியாவுமா?''

''ஆமா!''

''இந்தச் சமயத்தில அங்கே வர்றது சரியில்லை இனியா. அந்த இடத்தில விநோதமான காரியங்கள் எல்லாம் நடக்குது.''

''இல்லை கணேஷ்! நான் அங்க போயே ஆகணும். இல்லேன்னா எனக்குத்தலை வெடிச்சுப் போயிரும். அவ்வளவு முக்கியமான ஜோலி எனக்கு'' என்றார் பேராசிரியர்.

''உக்கல்ல் எங்க?''


''ராஜ ராஜன் கிணற்றில.''

''சரிதான். நீங்களும் கிணத்தை இன்னும் விடலியா?'' என்று வஸந்த் உள்ளே நுழைந்தான்.

''ஹலோ இனியா! ரகசிய ராத்திரிப் புத்தகமே! எப்படி இருக்கிறே? எல்லாரும் நலமா? அமெரிக்கா மாப்பிள்ளை நலமா?''

''ஏய், போன காரியம் என்ன ஆச்சு?''

''பாஸ் கிடைச்சிருச்சு! அந்த ஆர்ட்டிக்கிள் பேரறிஞர் அண்ணா டெக்னலாஜிக்கல் பல்கலைக் கழகத்தில்....''



குழந்தைக்கு 3 மாதமாகும்போது, பால் மட்டும் போதாது

உங்கள் குழந்தைக்குத் தேவை ஃபாரெக்ஸ்

குழந்தையின் உன்னத திட உணவு

3-ஆம் மாதம்—திட உணவு துவங்கும் காலம்.

3 மாதம் ஆனபின், குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் மட்டும் போதாது. குழந்தை சுறுசுறுப்பாயும் விரைந்தும் வளரும் சமயம்—பாலில் கிடைப்பதை விட அதிக கலோரிகள் தேவை. குழந்தைக்கு திரவ உணவைக் குறைக்கும் வகையிலும் அதிக கலோரிகளை வழங்கவும் மென்றுத் தின்னப் பழகவும் திட உணவு தேவை.

3-ஆம் மாதம் அதிக இரும்புச் சத்து தேவை

பிறந்த 2-4 மாதங்கள்தான் குழந்தைக்குத் திட உணவு துவங்க சிறந்த சமயம். பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றாக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவுத்தேவைப் படுகிறது.

—Dr. Subhash C. Arya
"Infant & Childcare for the Indian mother"

ஏன் டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபார்சு செய்கிறார்கள்?

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ், மற்றும் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் அதிகமுள்ளது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவாகிறது—ஃபாரெக்ஸ்.

இலவசம்! குழந்தையின் முதலாண்டு புத்தகத்திற்கு, தபால் தலையுடன் 50 பைசா எழுதுங்கள்.

த.பெ. எண் 19119,
பம்பாய்-400025.





டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்

குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-10-203 TAM

கார்ட்டூனிஸ்டுகள் கண்ணோட்டம்

சென்ற வருடம் எம். ஜி. ஆர். மீண்டும் ஆட்சிக்கு வந்தார். இந்நிலையில் அவரது ஆட்சியைத் திறனாய்வு செய்ய ஆறு பிரபல கார்ட்டூனிஸ்டுகளைக் கேட்டுக்கொண்டோம். அவர்கள் வரைந்துள்ள கார்ட்டூனுக்கு நான் விளக்கம் கேட்டபோது:

திரு செல்லப்பன் (முரசொலி)

எம். ஜி. ஆர். ஆட்சியில் அவரது மது விலக்குக் கொள்கைதான் என்னைக் கவர்ந்தது. சிரிப்புத்தான் போங்கள். முதலில் மது விலக்கைக் கொண்டு வருவதாகச் சொல்லிப் பின்பு அவர் பல்டி அடித்ததைத்தான் சொல்கிறேன். எனது இந்த எண்ணத்தின் விளைவே இந்தக் கார்ட்டூன்.

திரு. முரளி (துக்ளக்)

இந்த ஒரு வருடத்தில், எம். ஜி. ஆர். ஆட்சி கவிழ்ந்து விடும் என்று இந்திரா காங்கிரசும் தி. மு. க.வும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்த எண்ணம் தான் என் கார்ட்டூனுக்குக் காரணம்.

திரு. பீட்டர் (தினமணி கதிர்)

எம். ஜி. ஆரின் தலைநகர் மாற்றும் எண்ணம்தான் எனக்கு விசித்திரமாக இருக்கிறது. இது நாட்டு நலன் விரும்பும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

திரு. நடனம் (பல பத்திரிகைகள்)

எனது கண்ணோட்டத்தில் எம். ஜி. ஆர். பல புதிய அரிய திட்டங்களாலும், சேவை மனப்பான்மையாலும் மக்களைக் கவர்ந்தவர். இவரை நான் 'சூப்பர்மேன் என்று அழைக்கிறேன்!

திரு. ராகி (மக்கள் குரல்)

எந்த ஒரு கொள்கையிலும் நிலையாக நிற்க முடியாமல் தடுமாறுகிறார் எம். ஜி. ஆர். மதுவிலக்கு சமாசாரம் ஒன்று போதாதா?

திரு. உமாபதி (பல பத்திரிகைகள்)

எந்தக் கட்சி ஆட்சி புரிந்தாலும் தவறு செய்யாதிருந்ததில்லை. ஆனால் மக்களிடம் தமக்கு மங்காத செல்வாக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் அ.தி.மு.க. அரசு, உள்ளாட்சித் தேர்தலையே வரை முறையற்று மீண்டும் மீண்டும் ஏன் ஒத்திப் போடவேண்டும்? வெட்கப்படாமல் கண்துடைப்பு சமாதனங்களை ஏன் கூறி வரவேண்டும்? ஜனநாயக ஆட்சி முறையையே நோய்வாய்ப் படுத்தும் செயல் அல்லவா இது?

- கட்சித்தாவல் தடுப்புச்சட்டம் —
  பேச்சுடன் நிற்கிறது!
- வனஸ்பதி சூர்ணம் கொடுப்பது -
  பேச்சுடன் நிற்கிறது!
- இந்த உள்ளாட்சித் தேர்தலும்...
  பேச்சுடன் நின்று விடுமோ?

பேட்டி: சிக்கி

"வஸந்த்! தி ஆர்ட்டிக்கிள் ப்ளீஸ்! அந்த யூனிவர்சிட்டி பெய்ரைச் சொல்லி முடிக்கிறதுக்குள்ளப் பொழுது விடிஞ்சுடும்!''

''நானும் வந்தே ஆகணும்'' என்றார் பேராசிரியர்.

''அழைச்சுண்டு போறோம் ஸார்! கவலைப் படாதிங்க.''

''ஆமா, நீங்க எதுக்கு உக்கலுக்கு வரணும்?''

''எனக்கு அந்தக் கல்வெட்டைப் பார்த்தாகணும்!''

''எதுக்கு ஸார் இந்த வயசான காலத்தில? உங்க டாட்டரை மட்டும் அனுப்பிவைங்க. நல்லா காமிச்சு அனுப்பறேன்!''

''அவளுக்குத் தெரியாது. நான் வந்தே ஆகணும். இது என் தன்மானப் பிரச்னை!''

''நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியறது சிரமமாயிருக்கு. ஆனா அதுக்கு இப்ப அவகாசம் இல்லை. என்ன பாஸ்?''

கணேஷ் அந்த ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்க அவன் முகம் திடீரென்று பிரகாசமடைவது தெரிந்தது.

''என்ன பாஸ்! பளிச்சுனு பல்பு போட்டீங்க!''

''வஸந்த்!''

''என்ன பாஸ்?''

''வஸந்த்!!!''

''என்ன பாஸ் பக்கத்திலயே இருக்கேன்! என்னது உங்க முகத்தைப் பார்த்தா கியூ இல்லாம கிருஷ்ணாயில் கிடைச்சவன் மூஞ்சி மாதிரி டாலடிக்குது. என்ன கண்டுபிடிச்சிங்க?''

''வஸந்த் எல்லாம் இப்ப சக்குனு பொருந்துது. எல்லாம் — எல்லாம்!''

''நான் போய்ப் பார்த்தே ஆகணும்.''

''ஸார்! கொஞ்சம் சும்மா இருக்கீங்களா. ஒரு தடவை சொல்லியாச்சுல்ல உங்களையும் அழைச்சுக்கிட்டுப் போறோம்னுட்டு. திருப்பித் திருப்பி அதையே ஹிந்துஸ்தானி சங்கீதம் மாதிரி பாடிக்கிட்டு இருக்கீங்களே பாஸ் என்ன சொல்றீங்க? சரியாச் சொல்லுங்க!''

''அவங்கள்லாம் சேர்ந்துண்டு என்ன செய்யறாங்கன்னு தெரிஞ்சு போச்சு வஸந்த்! சந்தேகமே இல்லாமத் தெளிவாத் தெரிஞ்சு போச்சு. முதல்ல இருந்து எல்லாம் பொருந்துது! முதல் கத்திக் குத்து, அந்தப் பார்ஸல்! பத்துக்கு நாப்பது வியாபாரம்! சதாசிவம்! போலீஸ் ஸ்டேஷன் வழக்குகள், பஸ்ஸ்டாண்டில ஸாம்பிள் கேட்கப்பட்டுப் பொட்டியை இழந்த தஞ்சாவூர்க்காரர்... ஏன் அந்த நூறு ரூபா நோட்டை ரோட்டில கண்டெடுத்த கேஸ், எல்லாமே பொருந்தறது. வஸந்த் உனக்குத் தெரியலே? ரொம்ப சிம்பிள்.''

''என்ன பாஸ் கிண்டலா பண்றீங்க! ஒரு எழவும் தெரியலே! சொல்லுங்க.''

''கணேஷ்! நான் உக்கலுக்குப் போயே ஆகணும்.''

''போலாம்... போலாம்... எல்லாரும் போலாம் ஸார்! இந்த விநோத விவகாரத்தின் கடைசிக் காட்சி உக்கல்ல அந்தக் கிணத்துக்குப் பக்கத்திலேநடக்கப் போறது!'' என்றான் கணேஷ். (தொடரும்)

பாஸ்கரனை



இந்திய அணியின் தலைவராக எத்தனையோ போட்டிகளில் கலந்து கொண்டவர் பாஸ்கரன். மாஸ்கோ ஒலிம்பிக்ஸில் தங்க மெடல் வாங்கிக் கொடுத்தவர் பாஸ்கரன். இந்தியாவிலேயே விளையாட்டு வீரர்களுக்கு அதிகபட்சமான விருதாக அளிக்கப்படும் 'அர்ஜுனு' பரிசைப் பெற்றவர் பாஸ்கரன். பாஸ்கரன்தான் தென்னிந்திய காப்டனாக இருப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்தது நியாயம்தானே? ஆனால், பரிதாபமான விஷயம் என்னவென்றால் காப்டனாக வருவார் என்று எதிர்பார்க்கப் பட்டவர் 16 பேர் கொண்ட அணியில் ஒருவராகக்கூடத் தேர்ந்தெடுக்கப்படாததுதான். இந்த 16 பேர் அணியை அறிவித்தவர் இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் உபதலைவர் வி. பி. பாஸ்கரன் என்பவர். இவரும் தென்னிந்திய அணியைத் தேர்வு செய்யும் பொறுப்பில் உள்ள ராஜகோபாலும், தேர்ந்தெடுக்கப் பட்ட அணியினருக்கும் மற்ற வீரர்களுக்கும் அளிக்கப்பட்ட விருந்தில் கலந்துகொள்ள வில்லை. அதுவே அவர்களது குற்றஉணர்வைக் காட்டுகிறது என்கிறார்கள் ஹாக்கி ரஸிகர்கள். பாஸ்கரனின் பொஸிஷனில் விளையாட யுவராஜ் என்பவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இந்த யுவராஜ் நாலு வருடங்கள் கர்நாடகா அணிக்கே விளையாடாதவர்.

பாஸ்கரனைத் தென்னிந்திய அணியில் தேர்ந்தெடுக்காதது குறித்து ஹாக்கி ரஸிகர்களிடம் பெருத்த ஆட்சேபம் உண்டாகியது. பிரதமருக்குத் தந்திகள் பறந்தன. கர்நாடகா எம். பி.யான எப். எம். கான் கண்டித்து அறிக்கை வெளியிட்டார். இவ்வளவுக்குப் பிறகும் சம்மேளனத்தின் தலைவர் மகஜன் பாஸ்கரனைத் தேர்ந்தெடுக்காததற்குக் காரணங்களைச் சொல்கிறார்: ''பாஸ்கரனின் ஆட்டம் கடைசி 15 நிமிடத்தில் மிகவும் மந்தமாக இருக்கிறது, மேலும் அவருக்கு வயதாகி விட்டது. கடுமையான பயிற்சிகளை அவரால் மேற்கொள்ள முடியாது.''

வயதாகி விட்டதாம்! என்ன பேச்சு இது? பாஸ்கரனை விட வயதான ஓம்கார் சிங்கும் சுர்ஜித் சிங்கும் இருக்கும்போது பாஸ்கரன் அணியில் இருக்கக் கூடாதா? இந்தக் காரணங்கள் எல்லாம் அவரை அணியிலிருந்து தூக்கியடித்த பின் தோன்றிய காரணங்களே தவிர உண்மையான காரணங்கள் இல்லை.

தென்னிந்திய அணியில் பாஸ்கரன் இடம் பெறுவாரேயானால், அவர்தான் தலைவராக இருப்பார். அப்படி தென்னிந்திய அணியின் தலைவராக அவர் இருக்கும் பட்சத்தில், அடுத்து வரும் உலகக் கோப்பைக்கான பந்தயங்களிலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இந்திய அணிக்கு அவரே தலைவராக இருந்திருப்பார். இந்த நிலை ஏற்படுவதைச் சகிக்காத சிலர்தான் தென்னிந்திய அணியிலேயே அவர் இடம் பெறுவதைத் தடுத்து விட்டிருக்கின்றனர். சுர்ஜித் சிங் இந்திய அணியின் தலைவராவதை மத்திய அமைச்சர் ஒருவர் விரும்புகிறாராம். இந்த சுர்ஜித் சிங், இரண்டு முறை கோச்சிங் கேம்பிலிருந்து ஓடிப்போனவர்.

மகஜனுக்கு முன் ஹாக்கி சம்மேளனத்தின் தலைவராக இருந்தவர் திரு எம். ஏ. எம். ராமசாமி. ஆறு மாதத்துக்கு முன்பிருந்தே திரு ராமசாமி, பாஸ்கரனிடம், ''உன்னை அணியிலிருந்து விலக்கி விடுவார்கள்'' என்று சொன்னாராம். அவர் சொன்னது போலவே நடந்திருக்கிறது.

இப்போது ஐந்து மண்டலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 80 வீரர்களில் 44 வீரர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து 16 பேர் கொண்ட தேசிய அணி தேர்ந்தெடுக்கப்படும். மிகவும் வேதனையான விஷயம் என்னவென்றால், இந்த 44 பேரில் தமிழ் நாட்டிலிருந்து ஒருவர்கூட இல்லை! மேலும் மாஸ்கோ ஒலிம்பிக்கில் ஆடின மூன்று பேர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

மிகவும் கேவலமான இன்னொரு விஷயம் என்னவென்றால், பாஸ்கரனைத் தேர்ந்தெடுக்காதது குறித்து தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் சந்தோஷமாக இருப்பதுதான். ''பாஸ்கரன் தமிழக அணிக்கு விளையாடுவதில்லை; தென்னிந்திய ரயில்வே அணிக்குத்தானே விளையாடுகிறார்; அப்படி இருக்க அவருக்கு நாங்கள் ஏன் பரிந்து பேச வேண்டும்'' என்கிறார்களாம்!

இதுபற்றி பாஸ்கரனிடத்தில் கேட்டதில் ''நான்எங்கு தவறு செய்திருக்கிறேன் என்பது தெரியவில்லை. என்னைத் தேர்ந்தெடுக்க முடியாத நிலை ஏற்படுவதை முன்பே தெரிவித்திருந்தார்களேயானால், நானே கண்ணியமாக விலகிக் கொண்டிருப்பேன். இப்போது வேண்டுமென்றே என்னை அவமரியாதை செய்திருக்கிறார்கள். இதனால் நான் துளிக்கூட வருத்தப்படவில்லை. எனக்கு எங்கள் ரயில்வே அணி இருக்கிறது. அதில் ஆடியே என் திறமையை நிரூபிப்பேன்'' என்கிறார்.

• ப்ரியன்

ஒதுக்கியது ஏன்?

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

24. 'ரிஸ்க் எடுக்காதே!'

வஸந்த் தலையைச் சொறிந்து கொண்டான்; கலைத்துக் கொண்டான். கன்னத்தில் மச்சம் ஒட்டிக் கொண்டு, பொய் மீசை பொருத்திக் கொண்டு கண்ணாடி பார்த்து ''பயமா இருக்கு'' என்றான். விலகினான். இனியா ''பர்ஃபெக்ட்! சார்மினார் விளம்பரத்தில வர ஆசாமி மாதிரி இருக்கே!'' என்றாள்.

''பாஸ், எதுக்கு இந்த வேஷம்னு சொல்லித் தொலைச்சிங்கன்னா உபகாரமா இருக்கும்''

''உதர நிமித்தம் பஹுக்ருத வேஷம்.''

''சம்ஸ்க்ருதத்தில விளையாடறீங்க! என்னது பகவத் கீதையா?''

''பஜகோவிந்தம்.''

''உக்கலுக்குப்போய் ஏதாவது பஜனை பண்ணணுமா?''

''கணேஷ்! நாம எப்ப உக்கல் போகப் போறோம்?''

''காலைல சார்'' என்றான் கணேஷ். பேராசிரியர் இன்னும் சிந்தனை வசப்பட்டுத்தான் இருந்தார்.

''அதுக்காக இப்பவே வேஷம் போட்டுக்கணுமா பாஸ்?''

''இல்லை வஸந்த். நீ இன்னிக்கே போயிடறே.''

''சரி. இதெல்லாம் எதுக்கு பாஸ்? அவங்க என்ன செய்யறாங்க?''

''எங்க போயிருக்கும் அந்த மாடைக் காசெல்லாம்?''

''அடாடாடா! ஸார்! கொஞ்ச நேரம் இந்த மாடையை உள்ள விடாமப் பார்த்துக்கறேளா? ஏற்கனவே சிண்டைப் பிடிச்சிண்டு தலை மொட்டையா இருக்கு. இனியா! அப்பாவைக் கூட்டிண்டு போய் ஒரு தமிழர் ஐஸ் மோர் வாங்கித் தா.''

''அப்ப நான் வரட்டுமா கணேஷ். நாளைக்குக் காலைல கட்டாயம்?''

''கட்டாயம்! நீங்க இல்லாம நான் கிளம்ப மாட்டேன் ஸார்!''

''நாளைக்கு ஒண்ணில்ல ஒண்ணு தீர்த்துடணும். நான்தான் தப்பு பண்ணிட்டேனா, கிணறு வேறயா?''



''எல்லாம் நாளைக்குப் பார்த்துறலாம் ஸார்.''

''இனியா வரியா?''

''பை வஸந்த்!''

''பை இனியா! உயிரோட இருந்தா நாளைக்குப் பார்க்கலாம்.''

இனியா கிளம்பும் சமயத்தில் அந்தப் பெண் ''எக்ஸ்க்யூஸ் மீ''யுடன் உள்ளே நுழைந்தாள்.

இனியாவும் அந்தக் கண்ணாடிப் பெண்ணும் சந்தித்துக் கொண்ட பார்வையில் மின் பொறிகள் சிற்சில பறந்தன. லைப்ரரிப் பெண் தான். இப்போது வேறு மாதிரி இருந்தாள். பனியன் 'டோன்ட் லுக்' என்றது.

''எஸ்? யார் வேணும்?'' என்றாள் இனியா விரோதக் குரலுடன்.

''மிஸ்டர் வஸந்த் இருக்காரா?''

''இதோ சாட்சாத்!''

''நீங்களா!'' அவள் நிமிர்ந்து பார்த்த போது அவள் மார்பு விம்மியது.

''ஓ எக்ஸ்க்யூஸ் மி! ஒரு நிமிஷம்!'' வஸந்த் மீசையை நீக்கிவிட்டு ''இப்ப பாருங்க'' என்றான்.

லைப்ரரி கைகொட்டிக் குதித்து சிரித்து, ''ஓ! வஸ்ஸ்ஸந்த்! யு ஆர் நாட்டி'' என்றாள்.

''உங்களை லைப்ரரியில பார்த்திருக்கிறதா ஞா'' என்றான்.

''அதுக்குள்ள மறந்துட்டிங்களா? நீங்க தான் கோவிந்தான்னு பெயர் கொடுத்து ஏமாத்திட்டு வந்துட்டா கண்டு பிடிக்க முடியாதுன்னு நினைச்சீங்களா?''

''எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

''கெஸ் பண்ணுங்க பார்க்கலாம்.''

''என்னது?''

''கெஸ். ஜி யு இ எஸ் எஸ்! கிஸ் இல்லே.''

''அதானே பார்த்தேன். காதில வேற மாதிரி விழுந்தது.''

''உங்க ரிஸ்ட் பாகை விட்டுட்டுப் போயிட்டீங்க. அதில உங்க கார்டு இருந்தது. அட்ரஸ் இருந்தது. இந்தாங்க உங்க கைப் பை. இந்தாங்க உங்க போட்டோ ஸ்டட் காப்பி.'' இடுப்போடு ரொம்ப ஒட்டினாற்போல் பாண்ட் அணிந்திருந்த அவள் வஸந்துக்குத் தேவைக்கு அதிகமாக அருகில் வாசனையாக வந்து பையைக் கொடுத்துவிட்டு, ''கன்னத்தில் என்ன கருப்பா?'' என்று வஸந்தின் மச்சத்தை அழித்தாள்.

வஸந்த் ஒரு கணம் இனியாவைப் பார்த்தான். அவள் கண்களில் பளபளவென்று கத்திகள் தெரிந்தன. ''பைதவே திஸ் இஸ் இனியா! திஸ் இஸ்.... உங்க பேர் என்ன சொன்னீங்க? மிஸஸ் ராகவன்னு ரீல் விட்டிங்க....''

இனியா காத்திராமல், ''அப்பா வாங்க போகலாம்'' என்றாள்.

வெளியே காரில் கோபக் கதவு சாத்தப் பட்டதைக் கவனிக்காமல் வஸந்த், ''அப்ப என்னத்தேடிக் கண்டு பிடிச்சுட்டீங்க?'' என்றான்.

''நான் வரட்டுமா? சீ யூ ஸம் டைம்'' என்று அவள் குதித்துக் கொண்டு கிளம்ப வஸந்த் ''கொஞ்சம் இருங்க. வாசல் வரைக்கும் கொண்டு விடறேன்''. அவளுடன் சென்று அவளுடைய வெஸ்பாவை உதைத்துக் கிளப்பிக் கொடுத்து ஸீட்டைத் தட்டிக்கொடுத்து வழியனுப்புவதை, புறப்பட்டுக் கொண்டிருந்த இனியா



பார்த்தாள். உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

திரும்ப அறைக்குள் வந்ததும், ''யாருது இது புது சிநேகிதம்?'' என்றான் கணேஷ்.

''லைப்ரரிலே பார்த்தேன் பாஸ். அப்ப ஸாரி கட்டியிருந்ததாலே சரியாத் தெரியலே. என்ன மாதிரி சாஸி பார்த்தீங்களா?''

''அடப் போடா! இனியா உன்னைப் பார்த்த பார்வையைக் கவனிச்சியா?''

''சேச்சே! இன்னி தப்பா எடுத்துக்காது! அது வேற பாஸ்! அது காவியம், கவிதை!''

''பின்ன இது?''

''இது சும்மா பொம்மை பார்க்கறது.''

''உருப்படவே மாட்டே..''

''கேஸுக்கு வாங்க பாஸ். என்ன கண்டு பிடிச்சீங்க? அதைச் சொல்லவே இல்லியே.''

''வஸந்த் நீ கொண்டுவந்த ரசாயன ஆராய்ச்சிக் கட்டுரை ராஜராஜன் கிணத்தில இருக்கிற தண்ணியை அலசி எழுதியிருக்கிற கட்டுரை. அதில இருக்கு சூட்சுமம்.''

''என்ன அது? நானும்தான் படிச்சேன். ஒரு அட்சரம் புரியலையே!''

கணேஷ் அந்தப் புத்தகத்தைப் பிரித்து, குறிப்பிட்டிருந்த பக்கத்திலிருந்து படித்தான்:

The Chemical properties of the water in this well render it admirably suited for process pulp treatment. Moreover in Block Printing Process with this water treatment halftone blocks and Litho graphic stones and other surface deposition systems can be made to look like those printed from engraved intaglio plates.

''இப்ப மட்டும் புரிஞ்சுதா?''

''வஸந்த்! இரண்டாயிரத்து ஐநூறு வருஷத்துக்கு முந்தி ஸன் ட்ஸூன்னு ஒரு சீனாக்காரர் என்ன சொன்னார் தெரியுமா? 'உன் எதிரியை அறிந்து கொண்டு உன்னையும் அறிந்து கொண்டாயானால் நீ நூறு யுத்தங்களுக்கும் பயப்பட வேண்டியதில்லை'ன்னு''

''ஸன் ட்ஸூ!இப்ப இதில எங்கே வர்றார்?''

''எதிரியைத் தெரிஞ்சுண்டுட்டேன். இனிப் பயமில்லே.''

''என்ன தெரிஞ்சுண்டிங்க?''

''வஸந்த் இன்ட்டாக்லியோ பிளேட்டுங்கறது எதுக்கு யூஸ் பண்ணுவாங்க தெரியுமா?''

''எதுக்கு?''

கணேஷ் பையிலிருந்து எடுத்துக் காட்டி, ''இதுக்கு'' என்றான்.

வஸந்த் சற்று நேரத் தயக்கத்துக்குப் பின் திடீரென்று பிரகாசமாகி ''மை காட்! இப்ப புரியுது பாஸ்!'' என்றான்.

''பத்துக்கு முப்பது, பத்துக்கு நாப்பதை விடச் சிறப்பா இருக்கிறது புரியுதா?''

''புரியுது! பளிங்கு மாதிரி! பஸ் ஸ்டாண்டில நடந்தது, சரித்திர சம்பந்தமில்லாத வங்க ரா.ரா.வுக்கு நாயா அலைஞ்சது, கத்திக் குத்து, அடிதடி எல்லாம் கத்தி சொருகிறப்பல அப்படியே வந்து விழுது.''

''இப்ப எதுக்காக முதல்ல உன்னை அங்க அனுப்பறேன்னு தெரியுதா? கோஷ்டியாப் போனா சந்தேகப்படுவாங்கல்ல?''

''தெரியுது பாஸ்! நீங்க கில்லாடி! கவலையே படாதீங்க. இடத்தைக் கண்டு பிடிச்சுட்டுத்தான் ம. கா. அதான வேணும் உங்களுக்கு?''

''அதான்! இப்ப எல்லாச் சம்பவங்களுக்கும் இருக்கிற இணைப்பு புரியுதா?''

''அய்யோ! சொல்லாதீங்க. அவ்வளவு மரமண்டை இல்லே நான்.''

''வஸந்த்! எதுக்கும் ஜாக்கிரதையாவே இருந்துக்க. அநாவசியமா ரிஸ்க் எதும் எடுக்காதே. சந்தேகமா இருந்தா நான் வர்ற வரைக்கும் காத்துக்கிட்டு இரு. சரிதானே?''

''நோ ப்ராப்ளம்!''

''நான் ராஜேந்திரனுக்கு போன் பண்ணி ரீ-இன்போர்ஸ்மெண்டோட நாளைக்கு வந்து சேர்றேன்.''

''அப்ப நான் உக்கலின் பக்கல் சென்று வரவா?''

''வா! பெஸ்ட் ஆஃப் லக்.''

வஸந்த் மறுபடி உக்கலுக்கு வந்தபோது மாலை ஐந்து மணி. பஸ் நிலையத்தில் கொஞ்ச நேரம் திரிந்தான். அந்தப் பெட்டிக் கடைக்காரன் மார்பு சட்டைப் பித்தான் திறந்து அதில் ஒரு புலி நகம் தொங்க, காட்டுத்தனமாக கிராப் வைத்துக் கொண்டு பக்கவாட்டமாகப் பார்த்தான். வஸந்த் அங்கே சென்று சிகரெட் பற்றவைத்துக் கொண்டான். மச்ச

யாருக்குத் தெரியும்?

எனது ஆசைகளை
எழுதலாம் என்றால்
எனது பாஷைகள்
ஏளனம் செய்கின்றன.
எனது திறமையை
எழுதலாம் என்றால்,
எனது வறுமை
இளக்காரம் செய்கிறது.
எனது சரித்திரத்தை
எழுதலாம் என்றால்,
எனது தரித்திரம்
எகத்தாளம் செய்கிறது.
எனது பொறுமையை
எழுதலாம்; ஆனால்,
எனது அருமை
எவருக்குத் தெரியும்?

-அனுராதா கட்டபொம்மன்



முடும் மீசையும் கையில் சிறிய அளவு வி.ஐ.பி. பெட்டியுமாக நின்றான். கடையில் தொங்கிக் கொண்டிருந்த பத்திரிகைகளில் ஏராளத்தில் முன் பக்கம் பின் குத்தியிருந்த வகைகளைப் பிரித்துத் தலையைச் சாய்த்துக் கொண்டு படித்தான்.

சோப்பைத் தேடு....
பிறகு அவள் எனக்கும்....
மாதிரி செய்தாள்....
கொருவர் வாய் மூலம்....
ரம்பித்தோம் நான்கைந்து....
நேரடியான உடலுற....

''என்னங்க? உங்க டேஸ்ட்டுக்கு புஸ்தகம் வேணுமா?'' என்று கடைக்குள்ளிருந்து ''பக்கத்து வீட்டுப் பருவச் சிட்டு'' ''இன்ப மயக்கம்'', ''மலபார் தேங்காய்'', ''இரவும் உறவும்'' இவைகளை எடுத்துப் போட்டான்.

'' 'வாழு வாழவிடு' இருக்கா?''

''யாரு சின்மயானந்தாவுங்களா?''

''இல்லேப்பா. சரோஜா தேவி!''

''இல்லேங்க.''

''அது படிச்சுப் பாரு. டாப்பா இருக்கும்''

''ஐயா வெளியூருங்களா?''

''ஆமாங்க. வியாபார விஷயமா வந்தேன்.''

''என்ன வியாபாரம்?''

''ஸாம்பிள்!''

கடைக்காரன் இங்கே அங்கே பார்த்துவிட்டு, ''வாங்கறீங்களா?'' என்றான்.

''ஆமாம்.''

''பணம் கொண்டு வந்திருக்கிங்களா?''

''இருக்கு. மாலைப் பாக்கணும். போன தடவை ஏமாந்துட்டேன். எல்லாம் வேஸ்ட் ஆயிடுச்சு. எரிச்சுட்டேன்.''

''இந்த முறை சிறப்பாவே போட்டிருக்காங்க.''

''கேள்விப்பட்டேன்.''

''என்ன ரேட்டு?''

''முப்பதுதான் மாமூலே.''

''முப்பதுக்கு வரமாட்டாங்க.''

''மாலைப் பார்த்துட்டா மேலே போலாம்னு எங்க முதலாளி சொன்னாரு.''

''எந்த ஊருங்க?''

''கோயமுத்தூர்தான்.''

''பாக்கறீங்களா?''

''இப்ப வேண்டாங்க. இருட்டட்டும். போலீஸ் கயவாணிப் பயங்க பிடிச்சுட்டா பேர் கெட்டுப் போயிரும்.''

''அப்ப எத்தினி மணிக்கு வரிங்க?''

''ஏழு மணிக்கு கூட்டிப் போறீங்களா?''

''ஆகா, அதுக்கென்ன?''

''வரட்டுமா?''

'' 'மலபார் தேங்காய்' வேணுமா படிக்கிறீங்களா?''

''படிச்சு என்னய்யா பிரயோசனம்?''

''பாக்கணும்னுக்கூட சௌகரியம் பண்ணிக் கொடுக்கலாம்.''

''வந்த வேலையை முதல்ல கவனிச்சுரலாமா?''

''உங்க பேரு?''

''ஏங்க! நம்ம வியாபாரத்தில பேர் சொல்வாங்களா? நான் உன் பேர் கேட்டேனா?''

''ஏழு மணிக்கு வாங்க.''



அவன்: ''பர்ஸில் என் அட்ரஸைச் செருகி வச்சிருந்தது தப்பாப் போச்சு!''
இவன்: ''ஏண்டா?''
அவன்: ''காலையில் எனக்கு வந்த மணியார்டரின் அடியில் 'தரித்திரம் பிடிச்ச பன்றைடைப் புயலே.. சென்ற வாரம் 23-சி பஸ்ஸில் நான் பிக்பாக்கெட் செய்த உன் பர்ஸிலிருந்த பதினைந்து பைசாவை இத்துடன் அனுப்பியுள்ளேன், பெற்றுக்கொள்'னு எழுதியிருக்கு!''
- உ. ராஜாஜி

வஸந்த் அந்த இடத்தை விட்டு விலகி மெல்ல நடந்தான். போலீஸ் பக்கமே போகக் கூடாது. பார்த்துக் கொண்டு இருப்பார்கள். சந்தேகத்துக்கு இடமே கூடாது. அவர்கள் பணத்தைக் கேட்டால்? காட்டச் சொன்னால்?....

அதை அப்போது சந்திக்கலாம். முதலில் அந்த இடத்துக்குப் போயாக வேண்டும். டீ சாப்பிட்டான். பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு மற்றொரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு அதை நிதானமாக ஊதினான்.

ஒரு பையன் வந்து ''கடைக்காரர் கிட்டப் பேசிக்கிட்டு இருந்தது நீங்கதானே?'' என்று கேட்க,

''ஆமா. நாந்தான். ஏன்?''

''கூட்டி வரச் சொன்னாங்க'' என்று அவன் விருவிருவென்று நடக்க, வஸந்த் அவன் பின் சென்றான்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து பிரிந்து சற்றுத் தூரம் நடந்த பின் பையன் நெல் வயல்கள் மேல் பாய்ந்து வரப்பில் விரைந்தான். வஸந்த் ஓட்டமும் நடையுமாகத் தொடர ஒரு மாந்தோப்பில் நுழைந்து பண்ணை முற்றம்போல் இருந்த, சாணி மெழுகப்பட்ட இடத்தைக் கடந்து, ஒரு மண்டபத்தை வளைந்து, சின்னதாக ஷெட்டு போல் இருந்த மறைவான இடத்துக்கு வந்து அதன் வாசலில் பையன் நிற்க, ''உள்ளே போங்க. நான் இனிமேக்க வரக்கூடாது'' என்றான்.

வஸந்த் அந்த மரக் கதவைத் திறக்க அது கிறீச்சிட்டது. உள்ளே வைக்கோல் பரவி மாட்டு மூத்திர நாற்றமடித்தது. ஷெட்டுப் போலத்தான் இருந்தது. ஒற்றை மாட்டு வண்டிக் கூடு சாய்ந்திருந்தது. எதிர் சுவரில் ஒரு கதவு தெரிந்தது. வஸந்த் அதை நோக்கிச் சென்றான். 'ஜாக்கிரதை ரிஸ்க் எடுக்காதே!' கணேஷ் எச்சரிக்கை காதில் ஒலித்தது. என்ன, ரிஸ்க் பார்த்துடலாம் என்று ஆவல் மேலிட அந்தக் கதவைத் தட்டினான்.

சற்று நேரத்தில் அது திறக்க உள்ளே இருட்டாக இருந்தது.

''வாங்க வஸந்த்'' என்றது ஒரு குரல்.

சட்டென்று அத்தனை விளக்குகளும் உயிர் பெற்றன. (தொடரும்)

ஐ.ஓ.பியின் ரொக்கப் பத்திரம் பெருகிவரும் பொறுப்புக்களின் மறு தோற்றம்.



வாழ்நாள் முழுவதும் நீங்கள் நேசிக்கும் பெற்றோர்கள், மனைவி, குழந்தைகள், பேரக் குழந்தைகள் இவர்களுக்காக நீங்கள் செய்யவேண்டிய கடமைகளும் எடுத்துக் கொள்ளும் பொறுப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகும்.


ஐ.ஓ.பியின் ரொக்கப் பத்திரம் உறவினர்கள் மீது தொடர்ந்து காட்டும் உங்கள் அக்கறையை எடுத்துக காட்ட சிறந்ததொரு திட்டமாகும். சிறிய தொகைக்கு இன்று நீங்கள் வாங்கும் ரொக்கப் பத்திரம் பெருகி வரும் நாளைய செலவுகளைச் சமாளிக்க உதவுகிறது. உங்கள் பத்திரத்தின் மதிப்பு நாளடைவில் மும்மடங்காகப் பெருகிவிடுகிறது. சரியான தருணத்தில் இதைப் பணமாக்கி எதிர்பார்த்த செலவுகளைச் சமாளிக்கலாம்.

ரூ. 372க்கு இன்று நீங்கள் வாங்கும் ஐ.ஓ.பி. ரொக்கப் பத்திரத்தின் மதிப்பு 10 ஆண்டுகளில் ரூ. 1000மாக உயர்ந்துவிடுகிறது. மாதந்தோறும் செலுத்த வேண்டியது எதுவும் கிடையாது. ரொக்கப் பத்திரததின் விலை குறைந்த பட்சம் ரூ. 37.20ம் அதிகபட்சம் ரூ. 92,800ம் ஆகும். இப்பத்திரத்தை, முறையே பத்தாண்டுகள் கழித்தும் ஓராண்டு கழித்தும் பணமாககலாம.

உங்கள் அருகாமையிலுள்ள ஐ.ஓ.பியின் கிளையை அணுகுங்கள். ஐ.ஓ.பி ரொக்கப் பத்திரத்தை ஐந்தே நிமிடங்களில் பெற்றுச் செல்லுங்கள்.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உததம நணபன்



IOB 5A 81 Tam

ருத்தத்தோடு சொல்லுவார். பாராமுகத் திஞல் எத்தனையோ அற்புதமான தமிழ்க் ர்த்தனைகளும், பதங்களும், வழக்கத்தி பிருந்து மறைந்து, தமிழில் ஏது சங்கீதம் ன்றே கேட்கத் தொடங்கினுர்கள் அல்லவா? ஒரு கடிதத்தில் டி.கே.சி. எழுதுகிருர்:

''அஞ்ஞானம் என்பது அஞதியான சர்வ வியாபகமான தத்துவம்! ஒரு அஞ்ஞானத் துக்கும் இதர அஞ்ஞானம் எல்லாவற்றுக்கும் அபூர்வமான ''ஸஹிருதயத்வம்'' உண்டாய் விடுகிறது. இயல்புதான். தமிழில் பாட்டே இல்லை என்று ஒரு பிரகஸ்பதி சொல்ல வேண் டியது. அவ்வளவுதான். இதர பிரகஸ்பதிகள் எல்லாம் பல்லவி வைத்துவிடும்! யோசனையை அந்தப் பிரகஸ்பதிகளின் தலைக்குள் வைக்க மறந்துவிட்டான் பிரமன்! அவ்வளவுதான்! என்னிடம் கேட்டால் தமிழ் ஒன்றுதான் சங்கீதத்துக்கு வாய்ப்பான பாஷை, உண் மையான பாடலும் தமிழிலேதான் இருக் கிறது என்று சொல்லுவேன். சொல்லி என்ன செய்ய! தமிழ் நாடு ஒரே செவிட்டு நாடாக அல்லவா இருக்கிறது!''

இன்ஞெரு நண்பருக்கு எழுதிய கடிதத் தில் இன்ஞெரு பகுதியைப் பாருங்கள்:

''உலகம் எங்குமே சங்கீதம் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. அந்தச் சங்கீதத்தில் பாவமுள்ள சங்கீதம் என்றும் பாவமற்ற சங்கீதம் என்றும் இருக்கின்றன.

தமிழ் நாட்டுக்கு வருவோமாஞல் இங்கே யும் சங்கீதத்தை இரண்டு விதமாகப் பிரிக்க வேண்டும். பாவமான சங்கீதம், பாவமற்ற சங்கீதம் என்பதாக! தெலுங்கு சங்கீதத் திலும் அப்படியேதான். தெலுங்கு சாகித் தியத்தை உணர்ச்சியோடும் பக்தியோடும் பாடும்போது அது பாவ சங்கீதம். வெறும் விளையாட்டாக, உணர்ச்சி யில்லாமல் பாடும் போது சாமான்யம் என்று சொல்லிவிட வேண்டியதுதான்! ஏதோ காதின் ஜவ் வுக்குச் சுகமாய் இருக்கலாம். அவ்வளவு தான். Tympanic என்றுபெயர் இட்டு அழைக் கலாம்!

தெலுங்குக்குச் சொன்னது தமிழுக்கும் அப்படியே பொருந்தும்!

ராகம் பாடும்போது தமிழருக்கும் தெலுங் கருக்கும் பொதுத்தான். இருவரும் அனுப விக்கலாம். அதில் பாஷை கலப்பில்லாத தால் இருவருக்கும் பொது என்கிருேம்.

ராகம் பாடுவது என்பது கெண்டியை வைத்துக் கொண்டு சுண்ணும்புக் கோலம் போடுவது போன்றது. கைலாகவத்தைக் கண்டு அனுபவிக்கிருேம். வளைவும், நெளி வும் அந்த லாகவத்தைக் காட்டுகின்றன. அதுபோல சாரீரத்தின் லாகவத்தைக் கண்டு ராகத்தின் நயத்தை அனுபவிக்கிருேம்.

ஆஞல் சாகித்தியத்துக்கு வரும்போது, பாவத்தை எதிர்பார்க்கிருேம். உள்ளிருக்கும் உணர்ச்சி வேகம் சங்கீதத்துக்கு ரூபம் கொடுக்கிறது. கவியைப் பற்றிச் சொல்லும் போது Metre forging argument (argument =emotional reality) என்று மில்டன் சொன் னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சங்கீதத்தில் பாவ ரூபம் என்று ஒன்று இருக் கிறதென்றும், அதுவே சங்கீதத்துக்கு லட்சி யம் என்றும் தெரியவரும்.



நான் சொல்வதெல்லாம் சங்கீதம் பாவ சங்கீதமாகவே இருக்க வேண்டும். (அப்படி யாஞல்தான் மக்களிடம் போய்ச் சேரும்) தெலுங்கர்கள் பாவத்தை உணர வேண்டும் என்ருல், தெலுங்கு பாஷையில்தான் சாகித் தியமும் இருக்க வேண்டும். தமிழில் இருந்தால் விஷயம் புரியாது. உணர்ச்சியை உணர முடி யாது. பாவத்தைக் காண முடியாது!

கேட்பவர்களுக்காகவே சங்கீதம்! கேட் பவர்களுக்காகவே இலக்கியம். அனுபவிக் கிறவர்களுக்காகவே கலைகள் எல்லாம்!

டி.கே.சி. கவியும் சங்கீதமும் ஒன்று என்று எண்ணிக் கொண்டிருக்கிருர் என்று (பத்திரி கைகளில்) எழுதுவார்கள்! எனக்கோ சர்க் கரைக்கும் கடலை மாவுக்கும் வித்தியாசம் தெரியும்! கடலை மாவை மாத்திரம் சாப்பிட் டுக் கொண்டிருக்க முடியாது! சர்க்கரை யைத் தனியாகச் சாப்பிடவும் முடியாது! ஆஞல் லட்டு செய்து கொடுத்தால்ச் சாப்பிட முடியும்.

மானச உலகத்திலுள்ள ஆனந்தத்தை (மக் களுக்காக) ஜட உலகத்துக்குக் கொண்டு வரு வதுதான் கலை. கல்வி, கலை விஷயங்களில் தாகூர் தெளிவான உண்மை ஒன்றை வெளி யிட்டிருக்கிருர். அதாவது, பள்ளிக்கூடங் களிலும், யூனிவர்ஸிடிகளிலும் மூளையை வளர்க்கிற காரியந்தான் நடக்கிறது. அதற் குப் பதிலாக இதயத்தை வளர்த்தால் அளவில்லாதபடி கல்வி, கலை எல்லாம் வள ரும் என்பதாக! இதில் சந்தேகமே இல்லை!''

சின்ன மத்தளம் கொட்டும் ஓசை கேட்டுப் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த பாலி, விழுந்தடித்துக் கொண்டு ஓடி, ஜன்னலை எட்டிப் பார்த்தாள்.

அதோ இருக்கிறான் அந்த வித்தைக்காரன்! நேற்றும் முந்தாநாளும் தனது தீரச் செயல்களால் பிரமிக்கச் செய்து, அவள் மனத்தில் இடம்பெற்றுவிட்ட சாகஸக்காரன்.

பாலி இதற்கு முன்பும் பல சர்க்கஸ் காரர்களைப் பார்த்ததுண்டு. இருந்தாலும் இவன் கிங்கரன்ம்மா! வளர்ந்த வாட்ட சாட்டமான உடம்போடு, நீளமான கையில் கூர்மையான பட்டாக் கத்தியைப் பிடித்துக் கொண்டு நின்றான். அவனுக்கு முன்னால் துணி விரித்து, இரண்டு வயதுக் குழந்தையைப் படுக்கப் போட்டார்கள். அதன் வயிற்றின் மேல் ஒரு வாழைப் பழத்தை வைத்தார்கள்.



பாலி இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பட்டாக் கத்தியைச் சுழற்றிக் கொண்டே பாய்ந்தான். அது என்ன வேகமோ... மாயமோ... மந்திரமோ குறியோ கலையோ! குனிந்து ஸ்...ஸ்... சதக்! ஒரு சின்ன 'ஷ்ஷ்க்' சப்தம் கூட இல்லை. பழம் இரண்டு துண்டுகளாகத் தெறித்து விழுந்தது. குழந்தை சிரித்துக் கொண்டிருந்தது.

அவன் பழத் துண்டுகளை எடுத்து ஒன்றைக் குழந்தைக்கு ஊட்டி விட்டு, மற்றொன்றைத் தன் வாயில் போட்டுக் கொண்டான்.

'ஹெய்.!' என்று தெருவில் ஆரவாரம் கிளம்பிற்று. சின்னப் பையன்கள் சொல்லாமலே ஜோராய்க் கை தட்டினார்கள்.

இது முதல் நாள் நிகழ்ச்சி.

இரண்டாவது நாள்:

திடீரென்று சின்ன மத்தளம் அதிர்ந்தது. பாலி கண்களைத் திறந்தாள். பெருத்த மகிழ்ச்சி ஆரவாரம், கைதட்டல்களுக்கிடையில், அந்தக் கம்பத்தின் உச்சியில் நின்று கொண்டு யாவருக்கும் சலாம் பண்ணிக் கொண்டிருந்தான். நிம்மதியுடன் அவனைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிந்தியபோது, அவளுடைய பாராட்டுதலை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் பாவனையில், பாலிக்கு மாத்திரம் ஒரு பிரத்தியேக சலாம்!

மறுநாள் விடிந்ததிலிருந்தே அம்மாவின் ரோதனைகள் வேதனையூட்டின.

''பாலி.... பாலி... அடி பாலி! எங்கேடி போனுய்?''

''இதோ வந்தேம்மா!''

''பாலி! கோழியைக் கூடையில் அடை. அதன் தலையைக் கிள்ளிக் குழம்பு வைக்க! நேற்று அடுத்த வீட்டுத் தோட்டத்தில் முட்டை இட்டிருக்கிறது!''

அறிவில்லாத கோழி! தோழி போல, உன்னை மடியில் வைத்து தவிடு போட்டு, வெங்காயம் போட்டு, பூனையை விரட்டி, பருந்தை விரட்டித் தூங்க வைத்தால்.... முட்டையை மட்டும் நீ எங்கள் வீட்டில் போடாதே? உன் கழுத்தைத் திருகிக் கறி வைக்க!

கோழியைத் தேடி பாலி கொல்லைப் பக்கம் போனுள். அது அங்கில்லை. வாசலுக்கு வந்தாள். வீட்டுக் கூரையில் பார்த்தாள். அது தெருக் கடைசியிலிருந்த மைதானத்தில் நான்கைந்து சேவல்கள் புடைசூழக் குப்பை மேட்டைப் பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தது. கம்பளத்தின் மேல் நடந்து செல்கிற மாதிரி பாலி சத்தம் செய்யாமல் அதன் பின்னுல் போய் வால்புறத்தைப் பிடித்தாள் கபக்கென்று.

சிக்கிவிடுமா அத்தனை சீக்கிரம்?

பாலி அதைத் துரத்திக் கொண்டே சென்றபோது... அவனேடு மோதிக்கொண்டாள். 'ஆ...' என்று நெற்றியைப் பிடித்துக் கொண்டு, ''ஏ, கோழித் திருடி! பார்த்தால் சின்னப் பெண்ணுகத் தெரிகிருய்! மோதினுல் முரட்டுத்தனமாக மோதுகிருயே!'' என்ருன்.

''அது எங்கள் வீட்டுக் கோழி. முட்டை போடும்.''

''நீ முட்டை போடுவாயோ?''

''....க்கும்!''

''குட்டி போடுவாய். முட்டை தின்று குட்டி போடுவாய்!''

மல் வேட்டி கட்டி, வெள்ளை சில்க் ஜிப்பா போட்டு, மீசையை நறுக்கி, தலை வாரி அவன் அழகாக இருந்தான். ''உன் பெயரென்ன?''

''பாலி.''

''பாலி! வேறெந்த ஜோலி உண்டா? இன்று முழுக்க எனக்கு ஓய்வு. வந்தால் என்னேடு பேசிக் கொண்டிருக்கலாம்.''


''சரி.''

''நீ சரியென்றுதானே சொன்னுய்?''

''சரிதான்.''

''நான் சரியாகக் கேட்கவில்லையோ வென நினைத்தேன்.''

''செவிடா?''



''...க்கும்! நான் சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுத்திருக்கிறேன். புலி முதுகில் சவாரி செய்திருக்கிறேன். யானைகளைப் பழக்கியிருக்கிறேன்: ஆனுல் பெண்களென்ருல் பயம். வலியப் போய் நம் விருப்பத்தை வெளியிட்டால் அவமானப்படுத்தி விடுவார்கள். வெறுப்பைக் கக்கத் தயங்க மாட்டார்கள்.''

''பாலி அப்படியல்ல.''

''தெரிகிறதே, அனுபவத்தில்.''

பாலி அவனை ஒட்டி நின்று, அவனேடு இணைந்து நடந்தாள். அவன் முகத்தில் நிலவிய களிப்பும், அவள் முகத்தில் தோன்றிய சிரிப்பும், வழியில் போகிற -- வருகிறவர்களையெல்லாம் அவர்கள் பக்கம் திருப்பி, ''இதோ காதல் ஜோடி!'' என்று பேச வைத்தது.

''உனக்கு எது வேண்டுமோ கேள் லுடுக்கா வாங்கித் தரச் சித்தமாக இருக்கிருன்!''

''லுடுக்கா?''

''அது என் பெயர்.''

பாலி, ''லுடுக்கா... லுடுக்கா!'' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டாள். ''இது வரை நான் கேள்விப்படாத விநோதமான பெயர்!''

''உன்னைப் போல், நானும் ஒரு சின்ன, சிங்காரச் சித்திரப் பெண்ணைச் சந்தித்ததில்லை.''

ஆயினும்... லுடுக்கா! அந்தப் பெயரைச் சொல்லும்போதே அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவனே, பெயரில் என்ன இருக்கிறது? என்ருன்.

மஞ்சளாய் அரளிப் பூக்கள் மலர்ந்து உதிர்ந்து கிடந்த பாதையில் நடந்தார்கள். செடியிலிருந்த ஒரு பூவைப் பறித்து, அவள் தலையில் சூட்டப் போனுன்.

''லுடுக்கா! பெண்கள் இதைச் சூடுவதில்லை.''

உடனே லுடுக்கா அதைத் தன் காதில் செருகிக் கொண்டான்.

ஒரு தோட்டத்தில் சிவப்பும் மஞ்சளும், பச்சையும் கலந்த நிறங்களில் மாதுளம் பழங்கள் பழுத்திருந்தன. நின்றவாறே இரண்டு பழங்களைப் பறித்தான்.

''தோட்டக்காரன் பார்த்தால்...?''

''லுடுக்கா ஆண் சிங்கம். பிற எந்த ஆணுக்கும் அஞ்ச மாட்டான். இங்கேயே உட்கார்ந்து சாப்பிடுவோம். வரட்டும், பார்க்கட்டும், தைரியமிருந்தால்கேட்கட்டும், துணிவிருந்தால் மோதட்டும் அந்தத் தோட்டக்காரன்....இன்று பகல் சினிமா உண்டு. போகலாமா பாலி?''

''போகலாம்.''

தன் கைவிரல்களை அவள் கைவிரல்களோடு கோத்துக் கொண்டான். சாக்கடை நீர் ஓடிக் கொண்டிருந்த ஓடை குறுக்கிட்டது. அதைக் கடந்து செல்ல ஒரு மரப் பாலம். பாலி பாலத்தில் ஏறினுள். அவன் நின்ருன்.

''என்ன தயக்கம்?''

''அந்த வழி பெண்களுக்கு! பெண்கள் மாதிரி சேலை கட்டிய ஆண்களுக்கு. ஒரே தாவல். நான் அந்தப் பக்கம் போய்விடுவேன்'' என்ருன் லுடுக்கா வீராப்போடு.

''லுடுக்கா! சாக்கடை. தவறி விழுந்தால்....''

''இந்த ஆறடிப் பாலத்தைத் தாண்ட முடியாவிட்டால் வெட்கம்! லுடுக்கா இரு பதடி தாண்டுவான். அறுபதடி உயரத்தில் கயிற்றில் நடப்பான். பதினறடி வேங்கையை அடக்குவான்.''

''வேண்டாம் லுடுக்கா.''

''ச்சூ...!'' என்று அலட்சியமாக அவளைத் தள்ளினன். அதே அலட்சியத்தோடு எகிறித் தாவினன்.

தொபுக்கென்று சப்தம். பிறகு அவனைக் காணவில்லை. சாக்கடை நீர் அமுக்கி விட்டது. அவன் விழுந்த இடத்தில் வட்ட வட்ட நீர்க் குமிழிகள் தோன்றி வெடித்து மறைந்தன.

''லுடுக்கா... ஓ, லுடுக்கா!''

சிறிது நேரத்துக்குப் பின் அவன் தலை மட்டும் தெரிந்தது. சாக்கடையில் முங்கிக் குளித்தவன் போல் எழுந்தான். வேட்டி, ஜிப்பா, தலை, முகம், உடம்பு எல்லாம் சாக்கடை. சற்று முன் வெள்ளை வெளேறென்று காட்சியளித்தவன், வேஷம் போட்டவன் மாதிரி, கறுப்பாக, அவலட்சணமாக இருந்தான்.

பாலியினல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அவன் கை-கால்களை, வேட்டி-ஜிப்பாவை உதறிக்கொண்டு அவள் எதிரே வந்தான்.

''லுடுக்கா! கருங்குரங்கு போல் இருக்கிருய்!'' என்று சிரித்தாள்.

''சிரிப்பை நிறுத்தடி, சின்னக் குட்டி!''

''லுடுக்கா! நான் சொன்னதைக் கேட்டிருந்தால்....'' சிரிப்பு இன்னும் நிற்கவில்லை. ''லுடுக்கா இப்போது எப்படி இருக்கிருய் தெரியுமா? சர்க்கஸ் கோமாளி மாதிரி! குழந்தைகள் பார்த்தார்களோ தொலைந்தது.''

''அத்தனை இகழ்ச்சியா உனக்கு? என் முகத்திலே விழிக்காதே! போ... போ... சீ! நான் போகிறேன், உன்னைத் தலைமுழுகி விட்டு!''

''நான் சிரித்தது தவறென்றல் மன்னித்து விடு.''

''விலகிப்போ, பெண் சைத்தானே!''

பாலி அறியாச் சிறுபெண். லுடுக்காவின் பாதங்களில் விழுந்து மன்னிப்புவேண்டினள்.

''உனக்கும் எனக்கும் இனி உறவென்ன? உன் ஆயுளில் என்னைப் பார்க்க மாட்டாய்!'' அவன் வேறு திசையில் நடந்தான்.

''லுடுக்கா!'' — அவள் அழுதாள்.

அவன் நின்று திரும்பினன். அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே காலில் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி வீசினள். ஓரிடத்தில் — போக முடியாதபடி —கருவேல முட்களையும் உடைந்த கண்ணாடித் துண்டுகளையும் நெடுகப் பரப்பி யிருந்தனர். அந்த வழியாக ஓடினள். அவள் மெல்லிய இரு பாதங்களிலும் முட்கள் ஆழமாகக் குத்தின. ரத்தம் கொட்டியது. அழுது கொண்டே ஓடினள். ரத்தம் பீறிட்டு வழியும் பாதங்களுடன். கண்ணாடித் துண்டுகள் பாய்ந்தன. ஒரு காலைத் தூக்கிக்கொண்டே நொண்டி நொண்டி ஓடினள். ஓட ஓட முட்கள் மேலும் தைத்தன. அந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டாள்.

''லுடுக்கா! உன்னைப் பார்த்துச் சிரித்தேன். அதற்குத் தண்டனை அனுபவிக்கிறேன். என் ரத்தம் வடியும் பாதங்களைப் பார்! கண்ணீர் சிந்துவாய்! ஓ... லுடுக்கா!'' அவள் கதறினள்.

அன்றைய சம்பவத்தின் பின், எத்தனையோ ஆண்டுகள் கடந்து போயின. பாலி தினம் எத்தனை எத்தனையோ பெயர்களைக் கேள்விப்படுகிருள்:

ராமன், கிருஷ்ணன், கோவிந்தன்...

முகமது, அப்துல்லா, இப்ராஹிம்...

பெயரில் என்ன இருக்கிறது?

அப்படியா சொன்னய்?

லுடுக்கா!

அவன் பாலியைத் தேடி வரவேயில்லை; வரவே மாட்டான்! அவன் முகம், தோற்றம் எல்லாம் மறந்து விடும். அவன் பெயர் மட்டும் மறக்கவே மறக்காது.

லுடுக்கா! அந்தப் பெயர் பாலியைச் சிரிக்க வைக்கும்! அழவைக்கும்! ஆத்திரப்பட வைக்கும்! அனுதாபப்பட வைக்கும்! மகிழ்ச்சி என்பது மாபெரும் மலையென்றல், அதன் சிகரத்தில் ஏற்றி வைத்து, மகுடம் சூட்டும்! துன்பமென்பது மீள முடியாப் பாதாளமென்றல், அங்கே ஆழமாய்ப் புதைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும்.

என்ன செய்தாலும் — அவள் நூறுண்டு வாழப்போவதில்லை! வாழ்ந்தாலும் — பாலி அந்தப் பெயரை மறக்கப் போவதேயில்லை!

சினிமா சிரிமா!





'பாலைவனச் சோலை' படத்தின் நூறுவது நாள் விழாவை யொட்டி அன்று திரைப்படம் பார்க்க வரும் ரசிகர்களுக்கு என்ன கிடைக்கும் தெரியுமா?''

''இது தெரியாதாக்கும்; பேரீச்சம்பழம்.''

—ஹெச். என். ஹெச்.
மதுரை—11



''என்னங்க ஆச்சரியமா இருக்குது! நம்ம ராமசாமி எந்த விஷயத்தையும் குழப்பிப் புரியாம பேசுவார்... இப்ப என்னடான்னு திடீர்னு தெளிவாப் பேச ஆரம்பிச்சிருக்கிறுரே!''

'' 'நெல்லிக்கனி' படம் பார்த்திருப்பாரோ என்னவோ!''

கே.எஸ். நாகராஜன்



அவன்: ''எல்லாத் தியேட்டரிலும் மணி அடித்துத்தான் படம் போடுவாங்க. இந்தத் தியேட்டரிலே மட்டும் ஏன் பச்சைக் கொடியும் காட்டிப் படம் போடுறுங்க?''

இவன்: ''ஓடுறது 'ரயில் பயணங்களில்' படமாச்சே!'' பி. ஜே. ரத்தன்

''நீ பார்த்த 'ரயில் பயணங்களில்' உனக்குப் பிடிச்சது பாட்டா, கதையா?''

''அங்க வித்த முறுக்கும் கடலையும்தான்!''

கோவி. இராசன்



''சார், கதாநாயகன் நாயகியைத் தேடிப் போவதற்குள் இரயில் போய்விடுகிறதே... அப்போ என்ன நினைச்சீங்க?''

''உம்...படத்திலாவது ரயில் ஒழுங்கா வந்து குறிப்பிட்ட நேரத்துக்குள் போய் விடுகிறதேன்னு நினைச்சேன்.''

எஸ். ராஜு



கதாசிரியர்: ஒரு ஊரில் ஒரு கல்லூரி. அதில் ஒரு மாணவனும் ஒரு மாணவியும்...

தயாரிப்பாளர்: சார் பிடிங்க அட்வான்ஸ் எங்க படத்துக்கு நீங்கதான் கதாசிரியர்.

எஸ். ராஜு.




'' 'ரயில் பயணங்களில்' டைரக்டர் யார்னு பிரச்னை வந்தா நல்லது.''

''ஏண்டா?''

''அப்பத்தானே படம் பேமஸா ஓடும்!''

எஸ். வேலுசாமி



''என் மனைவி 'பெண்ணின் வாழ்க்கை' போக வேண்டும் என்றுள். நான் 'கடல் மீன்கள்' போகலாம்னேன். அதற்குள்...''

''அதற்குள் என்ன?''

''அவள்தான் 'அவசரக்காரி' ஆயிற்றே, கோபித்துக் கொண்டு, 'ரயில் பயணங்களில்' ஊருக்குப் போய்விட்டாள்!''

எஸ். வேலுசாமி

ஒரு அவஸ்தையின் ஆரம்பம்

சுபா

பஸ்ஸை விட்டு அவள் இறங்கினாள். லேசாய்த் தலையை மட்டும் சுழற்றி அவனைத் தேடினாள். ரமணிக்கு மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. இனம் தெரியாத துடிப்பில் நெஞ்சு மலர்ந்து போயிற்று.

சாய்ந்து கொண்டிருந்த தூணிலிருந்து விலகினான். அவள் இன்னமும் மற்றத் திசைகளில் துழாவிக் கொண்டிருக்கையில் மெல்ல அவளை நெருங்கினான்.

''ஹலோ வைஜயந்தி....''

''ப்ஹா...'' என்று திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்துக் கண்களை விரித்தாள்.

''ச்சே... நீங்கதானா... பயந்துட்டேன்.''

''பயமா... என்னத்துக்கு?''

''பின்ன... சட்னு காது கிட்ட வந்து வைஜயந்தின்னு கூப்பிட்டா?''

''என்ன புத்திசாலி நீங்க... இந்தச் சின்ன விஷயத்துக்கா பயம்?''

''பயம் வேறே... புத்திசாலித்தனம்வேறே இல்லையா?''

''வாஸ்தவம்தான்.''

''பஸ்ஸிலேர்ந்து இறங்கினப்போ நீங்க கண்லயே படலையா... ஒரே கோவமா வந்தது. நீங்க மட்டும் வராம இருந்தா நாளைக்கு ஃபோன்லே கூப்பிட்டுக் கண்டபடி டோஸ் விடலாம்னு இருந்தேன்.''

''அது எப்படி? நான் தானே உங்களை வரச் சொன்னதே... அதுவுமில்லாம மொதல்தடவையா ஒரு பொண் மனசுலே குழப்பமில்லாம நான் கூப்ட்ட ஒடனே வரேன்னு சொல்லியிருக்கறப்ப...''

''சரி... உள்ளே போகலாமா?'' என்று அவள் கேட்டாள்.

''ஷ்யூர்.''

டிரைவ் இன் ஹோட்டலின் மரங்கள் மாலை வெளிச்சம் உச்சியில் மட்டும் மஞ்சளாய்ப் படிந்திருக்கச் சிலிர்த்துக் கொண்டிருந்தன. தடதடவென்று மோட்டார் சைக்கிளில் பசை போட்டு ஒட்டின இரண்டு பேர் கடந்தார்கள். பார்க்கிங் பகுதியில் கார்க் கதவுகளில் பொருத்தப்பட்ட ட்ரேக்களில் பண்டங்கள் ஆவி பறந்தன.

''ஸெல்ஃப் ஸர்வீஸ் போவமா... இல்லேன்னா கார்டனுக்குப் போயிடுவமா?''

''எங்க வேணா'' என்றாள் அவள். ''ஆனால் வெறும் காப்பி மட்டும்தான். வேறே ஒண்ணும் வேண்டாம்.''

''சேச்சே... அது நல்லாயிருக்காது.... ஸ்வீட் சாப்பிடணும்!?''

மில்க் பார்ஃபி வந்தது. ஸ்பூனால் ஓரமாய்க் கிள்ளி எடுத்தான். அவள் விண்டு உண்ணும் அழகை ரசித்தான். உடனே ரசனையின் திக்கு மாறிற்று.

பக்கவாட்டில் ஒரு மார்பும், நிறைய வயிறும் தெரிய அவள் கட்டியிருந்த புடவையில் கவனம் போயிற்று.



யம்மா! என்ன இடுப்பு இது! குயவன் அழுத்திப் பிடித்த மாதிரி சட்டென்று குறுகி உடனே சரிந்து திரிகிற அகலம் கண்ணே உறுத்திற்று. மிக மெலிதான ஸெண்ட் நாசியை வருடிக் கொடுத்தது.

''என்னே எதுக்காக ஃபோன் பண்ணி வரச் சொன்னீங்க?''

''உட்லண்ட்ஸ்ல டிபன் சாப்பிடத்தான்.''

''வெளேயாட நீங்களா?''

''நீங்க ஒரு விஷயத்தை யோசிச்சுப் பார்த்தீங்களோ?''

''எதை?''

''நானும் ஒங்க ஆஃபீசுக்கு அடிக்கடி வரேன். என் வேலேயை முடிச்சுக்கறேன், திரும்பிப் போறேன். எத்தனே பெண்கள் வேலே செய்யறாங்க உங்க ஆஃபீஸ்ல. மத்த வங்க எல்லோரையும் விட்டு விட்டு உங்களே ஏன் கூப்பிட்டேன்னு நினேச்சுப் பார்த்தீங் களா?''

''நானே கேக்கணும்னு இருந்தேன்.... ஆமாம்... ஏன்?''

''எனக்கு என்னவோ பார்த்த முதல் நாளே உங்களேப் பிடிச்சுப் போச்சு. அத்தனே பெண்கள் கிட்டயும் இல்லாத ஒரு தனி அட்ராக்ஷன் உங்க கிட்ட இருக்கு... பிரா பப்ளி ஒங்க வெளிப்படையான குணம்.''

''நானும் யார் கூட வேணுலும் உட் லண்ட்ஸ் வருவேன்னு நெனேச்சீங்களா?''

''பின்ன நான் கூப்பிட்ட உடனே ஏன் சரின்னீங்க?''

''உங்க பேர்ல எனக்கு ஏற்பட்ட நம் பிக்கைதான்...''

''என்ன நம்பிக்கை?''

''நீங்க ஜெண்டில்மேன்னு.... எனக்கு ஒரு ஆளோட கண்ணேப் பார்த்தாலே அவரோட குணதிசயம்லாம் புரிஞ்சு போயிடும்.''

''என் கண்ல என்ன தெரிஞ்சுது?''

''ஒரு மென்மை...சத்தம் போடாம நீங்க பேசற தோரணே... அளவோட பேச்சை நிறுத்திக்கிற சாமர்த்தியம்... நீங்க தப்பு வழிக்கெல்லாம் போக மாட்டீங்கன்னு ஒரு யூகம்....''

''அப்புறம் என்ன ஸார்....?''

''ரெண்டு ஸெட் போண்டா கொண்டு வாங்க...'' என்று ஸர்வரை நகர்த்தினன் ரமணி.

''அப்படி என்ன வித்தியாசமாக் கேட்கப் போறீங்க? பொம்பிளேங்களேப் பத்தி ஏதோ கேக்கணும்னு ஃபோன் பண்ணீங் களே....'' என்ருள் வைஜயந்தி.

''அதாவது வைஜயந்தி... சின்ன வயசு லேர்ந்தே எனக்கு ஒரு ஆசை.... நாங்க ஆம்பிளேப் பசங்க நாலேஞ்சு பேரா சுத்த ரும்.... ஸைட் அடிக்கிருேம்... ஸிகரெட் பிடிக்கிருேம். ஸெக்ஸ் பத்திப் பச்சை பச்சையாப் பேசருேம்... லேடீஸ்லாம் எப் படி இருப்பாங்க... அவங்களுக்குள்ள என்ன பேசிப்பாங்க... எப்படிப் பழகுவாங்க... அவங்களுக்கு மாத்திரம் சிகரெட் பிடிக் கணும்னே, சர்சர்ன்னு மோட்டார் சைக் கிள்ல காத்தைக் கிழிச்சுக்கிட்டு ஃபாஸ்ட்டா போவணும்னே, ஓடற பஸ்ல ஃபுட்போர் டில தொத்திட்டுப் போவணும்னே ஆசையே வராதா? மொத்தத்தில லேடீஸோட பழக்க வழக்கம்... ஆட்டிட்யூட் இதெல்லாம் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கணும்னு ஒரு ஆசை. கேட்டா செருப்பால அடி விழு மோன்னு ஒரு பயம்....''



''எதுக்கு இதெல்லாம்... ஏதானும் கதை எழுதப் போறீங்களா?''

''கணக்கு எழுதவே இன்னும் சரியாத் தெரியலே... கதைக்கு நான்ஏன் போறேன்!''

''பின்ன ஏதானும் பொண்ணை லவ் பண்ண ஆரம்பிச்சிருக்கீங்களா?''

''ஓ நோ... ஜஸ்ட் எ க்யூரியாஸிட்டி.''

''நீங்க ஒவ்வொண்ணுக் கேளுங்க. சொல்லிட்டேவரேன்...பட் இதெல்லாம் என்னோட பர்ஸனல் வ்யூஸா இருக்குமே தவிர மொத்தமாப் பொம்பளேங்களைப் பத்தி இல்லாமப் போகலாம்.''

''இட்ஸ் ஓ.கே.... ஆனு இங்கயேவா பேசி முடிக்கணும்... பீச்சுக்குப் போலாமா?''

''எட்டு மணிக்கு வீட்டிலே இருக்கணுமே....''

''ஏழரை மணிக்கெல்லாம் உங்களை ரிலீவ் பண்ணிடறேன்.... அப்ப ஆட்டோவில போயிடலாமா?''

''போகலாம்'' என்றாள்.

ஆட்டோவில் ஏறுகையில் மனம் துள்ளிற்று. அவள் முகத்தில் சலனமில்லை என்பதைக் காண்கையில் என்ன துணிச்சல் இவளுக்கு என்று மனசு வியந்தது.

''என்ன ஒண்ணும் பேசாம நிறுத்திட்டீங்க?'' என்றாள் வைஜயந்தி.

''ம்....''

''என்ன உம்?''

''இல்லே, நமக்குள்ள எதுக்கு இந்த நீங்க, வாங்க, போங்கல்லாம்னு நெனைச்சிட்டிருந்தேன்.... நீ வா, போன்னு பேசறதுல இருக்கிற இண்டிமஸி இதுல வரதில்ல பார்த்தீங்களா...''

''ப்ளீஸ்... இப்பத்தான் பழக ஆரம்பிச்சிருக்கோம்.. கொஞ்ச நாள் போகட்டும்! இப்படித்நான் நீங்கள்லேர்ந்து நீன்னு ஆகும். அப்புறம் அடுத்த நாள் சினிமா வரியான்னு கூப்பிடத் தோணும்... அப்படி இப்படின்னு தப்பு நடந்துடும்...''

கொஞ்ச நேரத்துக்கு ரமணிக்கு வாய் அடைத்துப் போயிற்று.

ஆட்டோவுக்குப் பணம் கொடுத்துவிட்டு, இருவரும். மணலில் நடந்து வெளிச்சமாய்ப் பார்த்து உட்கார்ந்தார்கள்.

''காதலைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க வைஜயந்தி?''

''எனக்கு அதிலே நம்பிக்கையே இல்லே ரமணி. சும்மா ஒரு அட்ராக்ஷன் மாதிரி தான்... லவ் பண்றதா நெனைச்சுக்கிட்டு ஒருத்தன் மேலே அளவுக்கு மேலே பிரியம் வச்சுட்டு, பிரிஞ்சு போறச்சே அத நெனைச்சு பிழியப் பிழிய அழறவங்களைக் கண்டா எனக்கு எரிச்சல்தான் பத்திக்கிட்டு வரும். அப்படியே கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் கொஞ்ச நாள்ல சாயம்லாம் வெளுத்துப் போய், நீ பெரிசா நான் பெரிசான்னு தினம் சண்டை போட்டுக்கிட்டு... சே... வாழ்க்கையே நரகமாயிடும் ரமணி....''

''அரேன்ஜ்ட் மாரேஜ்ல மட்டும் சண்டை வராதா என்ன?''

''வரும். யார் இல்லேன்னு... ஆனு லவ் மாரேஜ்ல எதிர்பார்ப்புகள் ஜாஸ்தி இல்லையா...அதனுலை டிஸப்பாயிண்ட்மெண்டைத் தாங்கற சக்தி குறைஞ்சு போயிடும்.''

''அதேதான் என்னோட ஐடியாவும்... க்ரேட் பீப்பிள் திங்க் அலைக்...''

சிரித்தாள்.

''என்ன அவ்வளவுதான் கொஸ்சின்ஸா?''

''இல்ல... இன்னும் ஆயிரம் இருக்கு. எல்லாத்தையும் இன்னிக்கே கேட்டுட்டா திரும்ப மீட் பண்றதுக்கு சான்ஸ் இல்லாம போயிடுமேன்னு பார்க்கறேன்.''

சிரித்துவிட்டு எழுந்தாள்.

''ஓகே... போன் பண்ணுங்க... எப்ப, எங்க பார்க்கலாம்னு சொல்றேன்.''

ஃபோன் கிணுகிணுத்தது.

வைஜயந்தி?

இருக்கும். புல்லுக்கு அலையும் குதிரையாய் மனசு பாய, ஓடிச் சென்று ஃபோனை எடுத்தான்.

''மே ஐ ஸ்பீக் டு மிஸ்டர் ரமணி ப்ளீஸ்''

ஆண் குரல் கட்டையாய் வினவிற்று.

''ஹலோ யாரு பேசறது''

''உன்னோட யமன்... கடைசி வார்னிங்... என் லவர் கூட வெளில டிரைவ் இன், பீச்சு அது இதுன்னு இன்னொரு தடவை நீ அலையறதை நான் பார்த்தேனே அவ்வளவு தான்!'' என்று எச்சரித்தது.

மறுநாளும் போன் வந்தது.

''ராஸ்கல்... சொன்னுக் கேட்க மாட்டே? உதை தின்னுட்டுத்தான் சாகப் போறே... வைஜயந்திக்காக நான் என்ன வேணு செய் வேன்....''

போன் மறுபடியும் ஒய்ந்து போயிற்று.

மனைவி: இன்னைக்குப் பகல் பூரா உங்க ஸ்டெனேவை டேபிள் மேலேயே உட்கார வெச்சிட்டிருந்தீங்களாமே? இங்க வந்து பியூன் சொன்னுன்.

கணவன்: என்ன செய்யறது? டேபிள் வெயிட்டைக் காணும்!

கே. ஆர். எம்.



மிரட்டல் இன்று அதிகம். ரமணிக்கு வேலையில் கவனம் ஓடவில்லை. செய்த ஒன்றிரண்டிலும் தாராளமாய்த் தவறுகள்.

யார் இந்த ஜாட்டான்? முகம் காண்பிக்காமல் மாயாவி மாதிரி வேலை செய்து கொண்டு? நேற்று வைஜயந்தியிடம் இது பற்றிப் பிரஸ்தாபிக்காமல் விட்டது தப்பா?

பீச் மணலைக் களமாக்கி, அஸ்தமனத்துக்குப் பின் நான்கைந்து முறை வைஜயந்தியைத் தரிசித்தாயிற்று. மெல்லப் பேச்சுக் கொடுத்து, பெண்களின் இயல்புகளை அலசி, பின் வைஜயந்தியின் சொந்த எண்ணங்களிலும் திளைத்தாயிற்று.

''ஹலோ... உன்னை மூணு தடவை வார்ன் பண்ணியும் நேத்து வைஜயந்தியோட ஹோட்டல்ல உன்னைப் பார்த்தேனே. அடுத்த வாரம் கண்டிப்பா ஹாஸ்பிடலுக்குத் தான் போகப் போறே...''

''ஏண்டா நாயே... என் லவரோட சுத்தாதேன்னு சொன்னேனில்ல... காந்தி சிலை பக்கத்திலேயே உனக்குச் சமாதி கட்டணுமா?''

''பூவா வாங்கிக் கொடுக்கறே பொறுக்கி? வைஜயந்திக்கு என்னைத் தவிர பூ வாங்கிக் கொடுக்க யாருக்கும் யோக்யதை கிடையாது. தெரிஞ்சுக்கோ. அடுத்த தடவை உன் குடலை உருவி அவ தலைல வைக்கறேன் இரு....''

ரமணிக்குச் சலித்துப் போயிற்று. வெறும் மிரட்டல்கள்தான். குரைக்கும் நாய்தான். ஆனாலும் பூரணமாய் வைஜயந்தி பற்றி சந்தோஷப்பட விடாமல், இந்த முள் ஏன்?

ஆனால் வைஜயந்தியிடம் இது பற்றி மூச்சுக்கூட விடவில்லை அவன்.

போன் அலறிக் கொண்டிருந்தது.

ரமணி அசையாமல் இருந்தான். மானேஜரே ஓடிப்போய் எடுத்தார்.

''யாரோ லேடி வாய்ஸ்ப்பா...''

துள்ளி எழுந்தான் ''இருங்க சார்... இருங்க சார்... வச்சுடாதீங்க....''

ரிஸீவரைப் பிடுங்கினான்.

''ஹலோ, ரமணி ஹியர்.''

''வைஜயந்தி....''

''சொல்லுங்க....''

''ஆறு மணிக்கு வரேன்னு சொன்னேனே கொஞ்சம் லேட்டாகும் போலத் தெரியுது. வீ வில் மீட் அட் செவன்...''

''உழைப்பாளர் சிலை கிட்டத்தானே?''

''எக்ஸாக்ட்லி....''

''**பே**சாம இருந்தா என்ன அர்த்தம் வைஜயந்தி?''

''நிறையப் பேசணும்னு தோணுது. ஆனா என்ன பேசறதுன்னு புரியலை..... இன்னும் மிரட்டல் போன் வருதா ரமணி?''

குபுக்கென்று ரத்தம் உச்சி மண்டைக்கு ஏறிற்று.

''மிரட்டல் ஃபோன் பத்தி உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான்தான் பண்ணதே....''

''என்னது?'' அதிர்ச்சி ஒளிவின்றிக் குரலில் பிசிறடித்தது.



பட்டி பேர் என்றொரு குத்துச்சண்டை பயில்வான் ''கோவாடிஸ்'' என்ற ஆங்கிலத் திரைப் படத்தில் வெறுங் கைகளால் ஒரு காளை மாட்டுடன் சண்டை போட்டுக் கொன்றார்.

மறுநாள் தயாரிப்பாளர்களிடமிருந்து ருசியாகச் சமைக்கப்பட்ட மாட்டிறைச்சி உணவு அவருக்கு வந்து சேர்ந்தது. அத்துடனிருந்த ஒரு கடிதத்தில் ''இது நேற்று நீங்கள் கொன்ற மாட்டின் இறைச்சி'' என்று எழுதப்பட்டிருந்தது.

பட்டி பேர் இறைச்சியைத் திருப்பி அனுப்பி விட்டார். அதற்கு அவர் கூறிய காரணம்:

''சக நடிகர்களைச் சாப்பிடும் வழக்கம் எனக்குக் கிடையாது!'' - கைலாஸ்

''ஆமா... என்னோட ஃபிரெண்டு ஒருத்தன் ரெட்டின்னு ஆஃபீஸ்ல இருக்கான். முதல்ல விளையாட்டா உங்களுக்கு ஃபோன் பண்ணி மிரட்டச் சொன்னேன்... அப்புறம் ஒவ்வொரு தடவையும் அதே பழக்கமாப் போச்சு.... ஆனா அந்த மிரட்டலுக்கெல்லாம் கொஞ்சம் கூட அசைஞ்சு கொடுக்காம நீங்க ரெகுலரா என்னைப் பார்க்க வந்தப்போ எனக்கு என்னவோ போல ஆயிட்டது.... ஏதோ சாதாரணமாப் பழக ஆரம்பிச்சேனே தவிர இப்போ....''

''இப்போ....?'' ரமணிக்குக் குரல் தழுதழுத்தது.

''என்னை நானே ரொம்ப ஏமாத்திக்கிட்டேன் ரமணி.... காதல்ல நம்பிக்கை இல்லேன்னு சொன்னது மடத்தனமான வீம்புதானேன்னு தோண ஆரம்பிச்சுடுச்சு... என்னை அறியாமயே எப்பப்பார்த்தாலும் உங்க நெனைப்பாவே மனசு அலையுது...''

''வைஜயந்தி....''

''இவளுக்கு ப்ரின்ஸிபிள் இல்லேன்னு தோணுது இல்ல...? வெளில பேசினது ஒண்ணு, உள்ள வேற ஒண்ணுன்னு தெரியறச்சே ச்சீன்னு ஆயிட்டதில்ல...?''

''நோ நோ நோ...'' என்று பரபரத்தான் ரமணி.

''நாம கண்ணாமூச்சி ஆடியிருக்கோம் வைஜயந்தி... துணியால இறுக்கிக் கட்டிக்கிட்டுத் தெரியற கொஞ்சம் ஓட்டைல உன்னைப் பிடிக்கலாம்னு நான் பார்த்திட்டிருக்கறப்போ நீ என்னைப் பின்னால வந்து பிடிச்சுட்டே...?'' மணலில் புதைந்திருந்த அவளது கையை மெல்ல எடுத்துத் தன் கையில் கோத்துக் கொண்டு சொன்னான்:

''எனக்குக் காதல்லே நம்பிக்கையே இல்லை வைஜயந்தி....!''

25. கடைசி சான்ஸ்!

அந்த இடத்தில் களேபரமாக இருக்கும் என்று எதிர்பார்த்தான். இல்லை. ஏதோ ஓர் அலுவலகத்தின் முன் அறை போல இருந்தது. ஒரு மேசை போட்டு அதன் மேல் வெளி நாட்டுக் காலண்டர் நட்டு வைத்திருந்தது. எதிரே திரைச்சீலையில் பச்சை பச்சையாக டிராகன் வேலைப்பாடுகள், ஒரு பெரியவரின் போட்டோ மாலை போட்டுப் பொட்டிட்டுத் தொங்கிக் கொண்டிருக்க வஸந்த் முதன் முதலாக அவனை ''வாங்க'' என்றவரைப் பார்த்தான். முப்பத்து ஐந்திருக்கலாம். தலை கலைந்திருந்தது. கண்களில் புன்னகை இருந்தது. கையில் ஒரு பற்றவைக்காத சிகரெட்டுடன் வஸந்தை நோக்கி லேசாகப் புன்னகைத்துக்கொண்டே வந்தான். ''என்ன வஸந்த் வியாபாரம் பேச வந்தீங்களா?''

''உண்மையைச் சொல்லப் போனா ஆமாம்!''

''என்ன வியாபாரம் தெரியுமா?''

''ஏறக் • குறையத் தெரியும்.''

''போலீஸைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்களா?''

''போலீஸா?''

''மிஸ்டர் வஸந்த்! எங்களுக்கும் கொஞ்சம் புத்திசாலித்தனத்தை மிச்சம் வெச்சிருங்க. எங்களைப் பிடிக்கலாம்னு பிளான் பண்ணிக்கிட்டுத்தானே வந்திருக்கீங்க?''

''சேச்சே! எங்கம்மா மேலே ஆணையா அப்படியெல்லாம் இல்லே ஸார். உங்க பேர் தெரியலியே?''

''அருண்குமார்.''

''நீங்கதானே?''

''ஆமா. நாங்களேதான். ரொம்பக் கிட்டக்க வந்துட்டீங்க இல்லையா?''

''சேச்சே! அப்படியெல்லாம் இல்லையே. அருண்! இத பாருங்க. நான் வந்த விஷயம் ப்யூர் அண்ட் ஸிம்பிள் பிஸினஸ். பேரம் பேசறதுக்குத்தான் வந்தேன்.''

''அப்ப எதுக்கு இந்த அமெச்சூர்தனமான மாறுவேஷம்?''

''அது போலீஸுக்குப் பாச்சா காட்டறதுக்குத்தான்.'' அவன் முகத்தில் சலனம் நம்பிக்கை ஏதாவது தெரிகிறதா பார்த்தான்.

''மேலே சொல்லுங்க.''

''நோட்டுக்களை வாங்கறதுக்குத்தான் வந்தேன் அருண். என்கூட யாராவது வந்திருக்காங்களா நீங்களே செக் பண்ணிப் பாத்துருங்க. தனியாத்தானே வந்திருக்கேன். பார்த்துக்கங்க.''

''பார்த்தேன்! போலீஸ் பின்னால வரப் போவுது. அதும் தெரியும். ஆனா இந்த இடத்தை அவங்களாலே ஜென்மத்துக்கும் கண்டு பிடிக்க முடியாது. நிமிஷமா மாத்திப்புடுவோம். கொஞ்சம் உள்ளே வரிங்களா உங்களோட பேசணும்.''

வஸந்த் தயங்க, ''உங்களை மட்டும் நாங்க நம்பணும். நீங்க என்னை நம்ப மாட்டீங்க?'' என்றான்.

''சேச்சே! வரேன்.''

திரையைத் தள்ளிக்கொண்டு நுழைந்ததும் பிரமித்தான். ''இங்கதான் நடக்குதோ!''

''ஆமா! ஓரத்தில் சின்னதா ஒரு ஹீடல் பர்க் இயந்திரம் இருந்தது. காம்ப்பாக்ட்டான மிஷின். பத்து நிமிஷத்திலே டெம்போவிலே லோடு பண்ணிவிடலாம். லோடு பண்ணத்தான் போறோம். இன்னிக்கு எல்லாத்தையும் காலி பண்ணிடலாம்னு உத்தேசம். திங்க்ஸ் ஆர் கெட்டிங் ஹாட்!''

''நீங்க என்னைப் பொறுத்தவரை கவலையே பட வேண்டாம். எனக்காகக் காலி பண்ண வேண்டியதில்லை.''

''உங்களைப் பொறுத்தவரை கவலை இல்லை வஸந்த்! உங்களைத்தான் தீர்த்துக் கட்டிடலாம்னு இருக்கமே!''

''என்னது!''

''ஆமா! இங்க இருந்து எங்க பார்ட்டியோட சம்பந்தமில்லாதவங்க எங்க ரகசி



யத்தைத் தெரிஞ்சுக்கிட்டவங்க திரும்பிப் போறதில்லே, போகக் கூடாது. விடற தில்லே.''

''அப்படியா?'' என்றான் வஸந்த். அவன் முகத்தில் சலனம் ஏதும் இல்லை.

''உட்காருங்க. ஸாம்பிள் பார்க்கணும் னிங்களே பாக்கறீங்களா?''

அவன் சிகரெட்டை இப்போது பற்ற வைத்து, இழுத்து விட்டு, நிதானமாக அலமாரியைத் திறந்து, ஒரு பழுப்புக் கவரைப் பிரித்து, ஒரு நோட்டை உருவிக் காட்டினான்.

''இப்பத்தான் ஃபிரெஷ்ஷா போட்டிருக் கோம். இன்னும் கொஞ்சம் உலர்ந்தா செரியாயிடும்.''

வஸந்த் அந்த நூறு ரூபாய் நோட்டை வாங்கிப் பார்த்து ''ரிமார்க்கபிள். நிஜ மாவே நீங்க தேர்ந்த கலைஞர் ஸார்! இது குற்றமோ சட்டப்படி நியாயமோ அநியா யமோ எப்படி வேணா இருந்துட்டுப் போகட்டும் .வேலை சுத்தம்!'' என்றான்.

''இதுவரைக்கும் ஒரு நோட்டு கண்டு பிடிச்சதில்லே மிஸ்டர் வஸந்த். பம்பாய், கல்கத்தா, டில்லி, ஆமதாபாத் எல்லா இடத் துக்கும் நம்ம சரக்குப் போயிருக்கு. வாட்டர் மார்க்கைப் பாருங்க!''

''ப்யூட்டிஃபுல்!''

''பேப்பரைக் கையால நிரடிப் பாருங்க.''

''அதே நிஜ நோட்டு உணர்ச்சி! எல்லாம் தண்ணியோட மகிமை!''

''தண்ணியா?''

''ஆமா. ராஜ ராஜன் கிணத்து ஸ்பெஷல் கெமிக்கல்களினாலே உங்க இன்டாக்லியோ பிளாக்குகளை அலம்பறதினாலதானே இந்த எஃபக்ட் வர்றது உங்களுக்கு!''

''அட! அதுகூடத் தெரியும் உங்களுக்கு!''

''அதுக்குத்தானே உக்கல் பக்கத்திலேயே வேலையை ஆரம்பிச்சிருக்கீங்க!''

''இது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது?''

''அந்த ரசாயன ஆராய்ச்சிக் கட்டுரையை நாங்களும் படிச்சோம்.''

''அதைத்தான் கிளிச்சிட்டதா லைப்ரரி யில உங்களைத் தொடர்ந்த ஆசாமி சொன்னானே!''

''உலகத்திலே ஒரு காப்பிதானா அது? விசாரிச்சுட்டு வேறே காப்பி பார்த்துட் டோம்.''

''பரவாயில்லே! நல்லா சொந்தமா கண்டு பிடிச்சு இங்க வரைக்கும் வந்துட்டீங்க. ஆனா ஒரு தப்புப் பண்ணிட்டீங்க வஸந்த். தனியா வந்திருக்கக் கூடாது.''

''போலீஸோட வந்திருந்தா உங்களைச் சந்திக்கிற சந்தர்ப்பமே கிடைச்சிருக்காதே.''

''என்னதான் சோப்பு வெச்சாலும் உங்களை நான் விடப்போறதில்லே வஸந்த்!''

''என்ன செய்யறதா உத்தேசம்?'' என் றான் வஸந்த் கவலையுடன்.

''பயப்படாதீங்க. இந்தி சினிமாவிலே வர்ற மாதிரி சித்ரவதை எல்லாம் பண்ண மாட்டேன்.''

அவன் பேசிக் கொண்டே மேசையின் இழுப்பறையிலிருந்து ஒரு பிஸ்டலை எடுத்துக் காட்டினான்.

''கைக்கடக்கமா கச்சிதமா திருக்குறள் மலிவுப் பதிப்பு மாதிரி இருக்கே'' என்றான் வஸந்த். ''ஸார் என் கையெல்லாம் நடுங் கறதைப் பாத்தீங்களா!''

''ஸெல்ஃப் லோடிங்! ரீகாயில் எதும் கிடையாது. டபிள் ஆக்ஷன். நூறு அடி வரைக்கும்கூட எஃபக்டிவ்வா இருக்கு!''

''சைலன்ஸர் இருக்கா?''

''தேவையில்லே. இங்க சத்தம் போட்டா யாருக்கும் கேக்காது.''

''வலிக்குமா ஸார்?''

''எது?''

''பிஸ்டல் ஷாட்!''

வஸந்த்! வஸந்த்!





உத்தரப் பிரதேச டென்னிஸ் ஆட்டக்காரர் தீபக் பார்க்கவா, ஆசிய ஜூனியர் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்ற முதல் இந்தியன் என்ற புகழைப் பெற்றிருக்கிறார்.

தீபக் பார்க்கவா அலகாபாத் சர்வகலாசாலையில் பட்டப் படிப்புப் படிக்கிறார். இவரது தந்தை நரேஷ் பார்க்கவா உத்தரப் பிரதேசத்தில் பெரும் பணக்காரர். இவருக்குச் சொந்தமாக சினிமாத் தியேட்டர் உண்டு. தீபக்கின் சகோதரர் அமித் பார்க்கவாவும் டென்னிஸ் ஆட்டக்காரர்தான்!

ஆசிய ஜூனியர் சாம்பியன் தீபக் பார்க்கவா ஒன்பது வயதில் டென்னிஸ் ஆடத் தொடங்கியவர். இந்தியாவில் பலரிடம் பயிற்சி பெற்ற பிறகு அமெரிக்காவில் உள்ள ஃபளாரிடாவில் ஹாரி ஹாப்மனிடம் சென்று ஆறு வாரங்கள் டென்னிஸ் பயிற்சி பெற்றிருக்கிறார். டென்னிஸில் சப் ஜூனியர் சாம்பியன் பட்டத்தை 1975—76ல் பெற்றார். பின்னர் படிப்படியாகப் பல வெற்றிகளைப் பெற்று அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல் அண்மையில் ஹைதராபாத்தில் ஆசிய டென்னிஸ் ஜூனியர் சாம்பியன் பட்டத்தைப் பெற்று மகத்தான சாதனை புரிந்தார். இந்த ஆசியப் போட்டி இந்தியன் டுபாக்கோ ஸ்தாபனத்தின் கூட்டுறவோடு நடைபெற்றது. தொடர்ந்து பல சர்வதேச ஜூனியர் பந்தயங்களில் கலந்துகொண்டு 'உலக ராங்க்' அடையும் துடிப்புடன் இருக்கிறார் தீபக் பார்க்கவா.

சர்வதேச டென்னிஸ் அரங்கிலும் முன்னணிநட்சத்திரமாகத் தீபக் பார்க்கவா சுடர் விடுவார் என்று எதிர்பார்ப்போம்!

— குண்டுமணி

''அதிகம் வலிக்காதுன்னுதான் சொல்றுங்க.''

''நீங்க எப்படிக் கொல்றதா உத்தேசம்?''

''க்ளோஸ் ரேஞ்சில மார்பில!''

''ஷ்யூரா செத்திருவேனில்ல!''

''ஆமா.''

''ஏன்னு பாதி உயிரா விட்டுட்டு என்னை வெஜிடபிள் ஆக்கிடாதீங்க. செய்யற வேலையைச் சுத்தமாச் செய்துருங்க.''

''கவலைப்படாதீங்க வஸந்த்! நான் அச்சடிச்ச நூறு ரூபாய்களைப் பார்த்தீங்க இல்ல? அதுபோல சுத்தமாச் செய்துருவேன். யாராலயும் கண்டு பிடிக்க முடியாம.''

''ஸார்! உங்ககிட்ட ஒரு ரிக்வெஸ்ட்.''

''என்ன?''

''என்னைத் தீர்க்கறதுக்கு முந்தி ஒரு கடைசி மரண ஆசை.''

''என்ன சொல்லுங்க.''

''உங்க ஒர்க்ஸ் பூராவும் பார்க்கணும். இந்த பிரஸ் மாத்திரம்தானு...''

''இல்லை. பேப்பர் ட்ரீட்மெண்ட்டும் இருக்கு பின் பக்கத்தில. அதுக்கும் கிணத்துத் தண்ணி உபயோகப்படுது.''

''நீங்க கெமிகல் இன்ஜினியரா?''

''இல்லை. பத்து வருஷம் இந்த ஃபீல்டில அனுபவம்.''

''நோட்டு அடிக்கிறதிலயா?''

''இல்லை. அச்சுத் தொழில்ல!''

''ஓ! பொதுவா கள்ள நோட்டுக்களை அல்ட்ரா வயலெட்ல பார்த்தா கண்டு பிடிச்சுறலாம்னு சொல்லுவாங்க.''

''நம்ம நோட்டு அதுகூட முடியாது. அதே இங்க்தான். கெமிக்கல் அனலிஸிஸ் பண்ணி.... இதுக்காக நாப்பதாயிரம் ரூபா செலவழிச்சேன் வஸந்த்.''

''அடடா! போட்ட காசை எடுக்க வேண்டாமோ? இந்த பிரஸ் என்ன விலை?''

''இது ஆறு லட்சம்.''

''ஓ.ஜி.எல்ல வாங்கினீங்களா? எப்படி இம்ப்போர்ட் லைசென்ஸ் கிடைச்சுது!''

''அதுக்குத்தான் அருண என்டர்ப்ரைஸஸ் கம்பெனி வச்சு ஏஜன்ஸி பிஸினஸ் செய்யறோமே!''

''ஓ! அப்படியா? உத்தமம். ஆனு இதில வர்ற காசு மாதிரி ஆகுமா! ஒரு நூறு ரூபா நோட்டு அடிக்க உங்களுக்கு அடக்க விலை எவ்வளவு ஆகும்?''

''ஒண்ணு இருவது.''

''ஒரு ரூபா இருபது பைசா?''

''ஆமா.''

''அப்ப எட்டாயிரம் பர்ஸண்ட் லாபம் இந்தத் தொழில்ல?''

''எட்டாயிரம் வராது. பத்துக்கு இருபதுன்னு கொடுக்கறப்ப நாலாயிரம் பர்ஸன்ட் தான் விழும். ஆனு ரிஸ்க்கு?''

''வாஸ்தவம்தான். சும்மா சொல்லக் கூடாது'' என்றான். தொடர்ந்து: ''ரிஸ்க்கே இல்லை உங்க நோட்ல. யாராலயும் கண்டு பிடிக்கவே முடியாது. இதுவரை நோட்டில இருந்து கம்ப்ளெய்ண்ட் ஏதும் வந்ததே இல்லைன்னுதான் தெரியுதே!''

''இத பாருங்க வஸந்த்! பேசிக்கிட்டே இருந்தா உங்களோட டேஞ்சர்! நாங்க இன்

னும் மூணு மணி நேரத்தில இடம் மாறியாகணும். எல்லாத்தையும் காலி பண்ணிக்கிட்டுப் பாக்கி இருக்கிறதை பெட்ரோல் போட்டு எரிச்சுட்டுப் போகப் போறோம். உங்களோட அதிக நேரம் பேசிக்கிட்டிருக்க விருப்பமில்லே.''

அவன் துப்பாக்கியை எடுத்துத் தன் மேல் குறிபார்ப்பதை வஸந்த் கலவரத்துடன் கவனித்தான்.

''கொஞ்சம் இருங்க. ஒரு ரிக்வெஸ்ட். என்னே ஒரு ரூம்ல தள்ளிட்டு துப்பாக்கியை கைல கொடுத்துடுங்களேன். நான்பாட்டுக்கு அக்கடான்னு உங்களுக்குச் சிரமம் எதும் வைக்காமத் தற்கொலை பண்ணிக்கிடறேன்.''

''வஸந்த்! அப்படி ஏமாந்தவங்க இல்லே நாங்க.''

''நான் யார் கிட்டயும் சொல்லலே .என்னே விட்டுட்டா உங்க கோஷ்டிலே சேர்ந்துட்டு அங்கங்க மொபஸல்ல நோட்டு தள்ளறேன்! வக்கீலுக்குப் படிச்சிருக்கேன். அப்பப்ப கேஸ் வந்தா அதையும் பார்த்துக்கறேன். அப்புறம் நல்லா கார் ஓட்டுவேன்...''

அவன் சிரித்துக் கொண்டே துப்பாக்கியை வஸந்தின் மார்புக்கு நேர் குறி பார்த்தான்.

''ஸார்! அருண் ஸார்! கடைசியா ஒரு சான்ஸ் கொடுக்க மாட்டீங்களா?''

''ஸாரி வஸந்த்! நீங்க ரொம்ப பார்த்துட்டீங்க!''

''இருங்க இருங்க. ஒண்ணுக்கு வருது.''

''அதெல்லாம் செத்ததுக்கப்புறம் போய்க்கங்க.''


''என்ன ஸார் நிஜமாவே சுடப் போறீங்களா? அய்யோ! ஜாக்கிரதை ஸார் வெடிச்சுறப் போறது ஸார்! எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே. ஒரு பொண்ணேக் காதலிக்கிறேன். என் வாழ்க்கைல இன்னும் எத்தனேயோ செய்ய வேண்டியது இருக்கு. உருப்படியா ஒரு செடிகூட நட்டு வைக்கலே. காண்டீன்ல நாப்பது ரூபா பாக்கி இருக்கு. ஊண்டட் ஸிவிலேஸேஷன்னு வி. எஸ். நய்பால் புத்தகம் முப்பது பக்கம்தான் படிச்சு இருக்கேன். மூகாம்பிகை கோயிலுக்கு ஒரு நடை போயிட்டு வரணும்.ஸார்ஸார் ஸார்!''

வஸந்த் சொல்லி முடிப்பதற்குள் அந்தத் துப்பாக்கி ஒரு முறை டுய்க் என்று ஒலித்தது. அந்தக் குண்டு வஸந்தின் மார்பில் வலதுபுறத்தில் சுரீர் என்று குத்திப் பாய்ந்து உள்ளே பொதிந்து கொள்ள வஸந்த் முன்புறமாகக் கவிழ்ந்து விழுந்தான். மார்பைப் பிடித்துக் கொண்டதில் அவன் விரல்களின் ஊடே சற்றுத் தயக்கத்துக்குப் பின் ரத்தம் வழிந்தது. வஸந்த் வாய் திறந்து காற்றுக்குத் திணறினன். பேச முடியவில்லே. அவன் கண்களின் முன் எல்லாம் சுழற்சியாக இருந்தது. பல்பு வட்டமடித்தது. அந்த அருண் பிரசாதோ குமாரோ எவனே சிரிப்புடன் அவனேயே பார்த்துக் கொண்டிருப்பது லேசாகத் தெரிந்தது. வஸந்த் அவன் காலடியில் விழ,

''பெரியசாமி! பெரியசாமி!'' என்று அவன் கூப்பிட்டான்.

உள்ளே வந்த பெரியசாமி கீழே விழுந்து கிடந்த வஸந்தைப் பார்த்து ''கொன்னுட்டீங்களா?'' என்ருன்.

திருத்தலம் கண்டேன்!



நீங்கள் ஒரு திருத்தலத்தில்வசிக்கிறீர்களா? அல்லது அண்மையில் ஒரு புனிதத் தலத்துக்குச் சென்று வந்தீர்களா? அப்படியானல் அது பற்றி பக்தி மணமும், இலக்கிய ரசமும் வரலாற்றுச் சிறப்பும், நகைச்சுவையும் மிளிர கல்கியில் இரு பக்கங்களுக்கு மேற்படாத அளவில் எழுதுங்கள்.

எந்த மதத்தவரும் எழுதலாம். புகைப் படங்கள் அனுப்பலாம். பிரசுரமாகும் கட்டுரைகள், புகைப்படங்களுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. தவிர, ஆறு மாதங்கள் சென்ற பின் பிரசுரமான 26 கட்டுரைகளில், முதல் இரண்டாவது மூன்ருவது பரிசுக்குரியவை நடுவரால் தேர்ந்தெடுக்கப்படும். முதல் பரிசு ரூ. 250; இரண்டாம் பரிசு ரூ. 150; மூன்ரும் பரிசு ரூ. 100.

முதல் கட்டுரை ஆகஸ்டு முதல் வாரம் கல்கி ஆண்டுமலரில் பிரசுரமாகும்.

பிரசுரமாகாதவற்றைத் திருப்பிப் பெறப் போதிய தபால் தலே ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கட்டுரையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. உறையின்மேல் ''திருத்தலம் கண்டேன்'' என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் கல்கி, சென்னே-600032

''ஆச்சு! பெரியசாமி வான் வந்தாச்சா?''

''பத்து நிமிஷத்தில வந்துரும். இவனே... இதை என்ன பண்றது?''

''பின்பக்கமா வெட்டிப் புதைச்சுறலாம்.''

''நேரம் இருக்குதா?''

''ஏன்?''

''இவன் பின்னுடி போலீஸ் வர்றதுக்கு எத்தனே நேரமாகும்?''

''அப்ப போட்டுட்டுப் போயிரலாமா?''

''பிளேன் டிக்கட் ரெடியா இருக்கு. உடனே புறப்பட்டுடறதுதான் நல்லது.''

''பெட்ரோல் எவ்வளவு இருக்கு?''

''ஒரு டின்தான் இருக்கு. பத்தவெச்சுட்டு போயிறலாம்... இதோ வான் வந்துரும்.''

பெரியசாமி வஸந்தின் உடலே ஓரத்தில் தர்தரவென்று இழுத்துப் போட்டான்.

''முதல்ல பிரெஷ் சாமான்களே லோட் பண்ணிடு.''

''நீங்க கிளம்புங்க. நான் பார்த்துக்கறேன்.''

''இவனே என்ன பண்ணுவே?''

''குப்பையோட குப்பையா பெட்ரோல் ஊத்திப் பத்த வச்சுர்றேன்...''

அப்போது ஜன்னலுக்கு வெளியே ஜீப் வருவது தெரிந்தது. (தொடரும்)


என்னப்பா, குடிச்சுட்டு நடுரோட்லே கலாட்டா?...
இது நீரோடு செல்கின்ற ஓடம் இதில் நியாயங்கள் யார் சொல்லக்கூடும்
ஒருவர் மீது ஒருவர் சாய்ந்
ஓடம் போல ஆடலாம்!
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்... இப்பயிரை 'தண்ணியால் காப்போம்!
குடிக்க ஒரு மனமிருந்தால் அவளை மறந்து விடலாம்.. அவளை மறக்க ஒரு மனமிருந்தால் குடித்து விடலாம் ஆனால் இருப்பதோ ஒரு பாட்டில்! நான் என்ன செய்வேன்? ஹா.
நம்பிக்கு ஒரு பாட்டில்!.. அன்புத் தங்கைக்கு அரை பாட்டில்!



14–6–81 கல்கி இதழ் அட்டையில், ஓவியர் உமாபதியின் கார்ட்டூனால் ஏற்பட்ட சிரிப்பும், வண்ணப் படத்தின் அழகால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் உள்ளே இருந்த இரு கட்டுரைகளைப் படித்ததும் பறந்துவிட்டது.
செங்கவல்லி கி. முருகவேள்

நாளைய செல்வங்களான 651 பிஞ்சு நெஞ்சங்களின் படிப்போடு விளையாடும் செய்தியைப் படித்ததும் இதயம் வேதனையில் விம்மியது. நானும் அவர்களுக்காக இயேசுவிடம் வேண்டிக் கொண்டேன்!
கண்ணம்பாளையம் ஷீபா

மந்தைவெளி, செயின்ட் ஜான் மிடில் ஸ்கூல் மாணவியின் பேட்டி பார்த்தேன். கல்வி வியாபாரமாக மாறுவதை என்றுமே கல்வித் துறை அனுமதிக்காது. இரகசிய விசாரணைகள் இருப்பதால் மேற்கொண்டு நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. அந்தப் பள்ளியில் பணியாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் அருகில் உள்ள மற்ற தனியார் பள்ளிகளில் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.
அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளி நிர்வாகத்தினரால் டி. ஸி. கொடுக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு அருகில் உள்ள மற்ற பள்ளிகளில் (மொத்தம் 477 மாணவ மாணவியர்தான்) இடம் வாங்கிக் கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் சில மாணவருக்கு இடம் கிடைக்கவில்லைஎன்றால் மயிலாப்பூர் சரகப் பள்ளித் துணை ஆய்வாளர் இளங்கோ (தேனாம்பேட்டை காவல் நிலையத்துக்கு எதிரே வி. எஸ். கோவில் தெருவில் உள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகத்தில்) அவர்களையோ என்னையோ சந்தித்தால் உதவக் காத்திருக்கிறோம்.
சென்னை-8 வி. ரமணி
(மாவட்ட கல்வி அலுவலர், தென் சென்னை)

இரட்டை வேடத்தில் நடிப்பதில் தமிழ் திரை உலகில் எம். ஜி. ஆரை வெல்ல இது வரை யாரும் வரவில்லை. அரசியல் இரட்டை வேடத்திலும் அவருக்கு நிகர் அவரே. கார்டூனில் அவரது நடிப்பு ஏ-ஒன்!
தூத்துக்குடி இரணியல் 'கலை'

பங்களா தேசத்தில் இன்றுள்ள அரசியல் அவல நிலைமை என்ன என்பதைக் கார்ட்டூன் வெளிப்படுத்தியிருக்கும் விதம் பிரமாதம்!
இடலாக்குடி இடலை எம்.ஏ. அன்வர்

'ஜெய் பங்களா' சாதாரணத் தலையங்கமாக இல்லாமல் ஜனநாயகத்தை விரும்புபவர்களின் குரலாக, அராஜகத்தை எதிர்ப்பவர்களின் சக்தி மிக்க குரலாக ஒரு பொறுப்புள்ள இந்திய தேசத்துக் குடிமகனின் குரலாக ஒலிக்கச் செய்திருக்கிறீர்கள்.
நங்கநல்லூர் கே. எம். பாரூக்

'குட்டிகிருஷ்ணன்' மொழிபெயர்ப்பில் வெளியான டி.ஏ. பை அவர்களின் 'நாம் ஏன் ஏழைகளாக இருக்கிறோம்?' என்ற கட்டுரை படிக்கும்போது சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்திருக்கும் பலருக்கு. உண்மை கசக்கத்தானே செய்யும்?
ஈரோடு-10 அமிர்தா சௌந்தரராஜன்

பாலைவனச் சோலையில் இடம் பெறும் இரு நல்ல பாடல்களுக்கு வானொலியில் விதிக்கப்பட்ட தடையைக் கண்டு நான் ஆத்திரமடைகிறேன். சொற்ப சன்மானத்துக்காக ஏன் படத் தயாரிப்பாளர்கள் வெட்கம் கெட்டு வானொலியிடம் பாடல்களை ஒலி பரப்பும் உரிமையைத் தரவேண்டும்?
வேலூர்-2 கே. அழகன்

அகில இந்திய ரேடியோ ஏற்கெனவே ஒலிபரப்பி வருகின்ற பச்சையான ஆபாசப் பாடல்களையும் கம்யூனிஸ சித்தாந்த பாடல்களையும் பட்டியல் போட்டுத் தருகிறேன். அவை அனைத்தையும் வானொலி நிலையத்தார் தடை செய்யத் தயாரா?
கிழக்குத் தாம்பரம் பி. ஜி. அசோக்குமார்

தேசிய விருதுக்கான திரைப் படத்தைத் தேர்ந்தெடுப்பதில் எப்போதும் உள்ள வடக்கு தெற்கு பாகுபாடு, விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் (பாஸ்கரன் கட்டுரை) இப்போது நுழைந்துவிட்டதைக் காணும் போது மனம் வேதனையில் குமுறுகிறது.
ஆத்துப்பாலம் ஹாலீத் நஸீர்

''தினத் தந்தியை உயர் வகுப்பினர் படிக்காமலென்ன. ஹிந்து பேப்பருக்கு இடையில் வைத்துக் கொண்டு படிப்பார்கள்'' என மூதறிஞர் ராஜாஜி அவர்கள்குறிப்பிட்டிருந்த கருத்தை 'நியூஸ் ஜூஸ்' பகுதியில் படிக்க நேர்ந்தபோது நம்மிடையே நிலவி வரும் ஹிப்பாகிரசித் தன்மையை அவர் எவ்வளவு தெளிவாக எடை போட்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.
போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

கல்கத்தா லேக் ரோடு பற்றிய செய்தித் துணுக்கு (7–6–81 இதழில்) கண்டோம். லேக் ரோடு ''கவி பாரதி சரணி'' என மாற்றப்பட்டுள்ளது. பெயர் மாற்றத்துக்கு உரிய பெருமை கல்கத்தா தமிழர்கள் அனைவருக்கும் சேர வேண்டியது. ஒருசிலருக்கு மட்டும் அதனை அர்ப்பணிப்பது சரிதானா?
கல்கத்தா டி. கிருஷ்ணன்
துணை செயலாளர் பாரதி தமிழ்ச் சங்கம்

கவி பாரதி சராணி (சரணி அல்ல) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கும் ''லேக் ரோடு'' சுமார் 1 கி.மீ. நீளமுள்ள சாலையே. 6 கி.மீ. நீளமுள்ளதல்ல.
கல்கத்தா-16 க. கோபாலகிருஷ்ணன்

வஸந்த்! வஸந்த்!

26. "பாஸ்! ஐம் இன் லவ்!"

சென்ற அத்தியாயத்தின் இறுதி நிகழ்ச்சிகளிலிருந்து சற்றுப் பின்நோக்கிப் போகிறோம். அன்று பிற்பகல் வஸந்தை அனுப்பிவிட்டு கணேஷ் ஆபீஸ் அறையில் வீற்றிருந்தபோது வாசலில் ஜீப்பின் சீறல் கேட்டதும் உடனே ராஜேந்திரன் அவசரமாக அறைக்குள் நுழைவதைப் பார்த்தான்.

''என்ன ராஜேந்திரன்! நீங்க என்னைத் தேடிண்டா?''

''கணேஷ்! உடனே நாம அந்த உக்கல் கிராமத்துக்குப் போகணும்.''

''நாளைக்குப் போறதா இருக்கேன்.''

''இல்லை. இப்பவே கிளம்புங்க. எங்கே வஸந்த்?''

''வஸந்தை முன்னாலே அனுப்பியிருக்கேன்.''

''தனியாகவா?''

''ஆமாம். ஏன்?''

''ஆபத்து கணேஷ்! அவங்க பார்ட்டி என்ன செய்யறாங்க தெரியுமில்லே?''

''தெரியுமே. நூறு ரூபாய் நோட்டு அடிக்கிறாங்க.''

''அட! நீங்களும் கண்டு பிடிச்சிங்களா? ரொம்பக் காலமா பாச்சா காட்டிக்கிட்டிருக்கிற பார்ட்டி அது. வஸந்தைத் தனியா அனுப்பிச்சு என்ன சாதிக்கிறதா உத்தேசித்திருந்தீங்க?''

''அவங்களைக் காண்டாக்ட் பண்ணி வியாபாரம் பேசறாப்பல பேசி அவங்க ஆபரேஷன்களெல்லாம் எங்கே நடக்கிறதுன்னு கண்டு பிடிக்க.''

''ஒண்டியா அனுப்பிச்சீங்களா, தப்புப் பண்ணிட்டிங்க கணேஷ்! அவங்க கொலைக்கும் அஞ்ச மாட்டாங்க. ஆப்டுட்டார்னா தீர்த்துக் கட்டிடுவாங்க. அதிகம் பேச வேண்டாம். வாங்க போகலாம்.''

''இருங்க. ப்ரொபஸரும் மகளோட கூட வரேன்னாரு. போன் பண்ணிட்டு...''

''போற வழியில ப்ரொபஸரைக் கூட்டிக்கிட்டுப் போகலாம். நீங்க புறப்படுங்கங்கறேன்.''

வஸந்த் சென்று இரண்டு மணி நேரத்துக்குள் கணேஷ் ராஜேந்திரன் பேராசிரியர் இனியா யாவரும் உக்கலை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கையில் ராஜேந்திரன் அந்த நோட்டு விவகாரத்தைப் பற்றித் தகவல்கள் தந்தார். ''கள்ள நோட்டுக்களைச் சாதாரணமா, சுலபமா கண்டு பிடிச்சுறலாம். கள்ள நோட்டு அவசரம் உள்ள இடங்களில் அதிகம் சந்தேகப் படாத இடங்களில்தான் செலாவணியாகும். பிஸியா இருக்கிற ஓட்டல், சினிமாக் கொட்டகை இந்த மாதிரி இடங்களில ஒத்தை ஒத்தையா மாத்தணும். அனுபவஸ்தங்க சுலபமாக் கள்ள நோட்டுக்களைக் கண்டுபிடிச்சுருவாங்க. உதாரணமா



ங்கில வேலை செய்யறவங்க நோட்டுக் ந்தையை நிரடிப் பார்த்துக்கூடத் தெரிஞ் க்கிடுவாங்க. சில பேர் தொட்டாக்கூடப் ாதும்...''

''இவங்க நோட்டு?''

''இவங்க நோட்டு ரொம்ப ஒஸ்தியான ாதி. இந்த மாதிரி முறைகளில கண்டு டிக்கவே முடியலே. கள்ள நோட்டுக்கும் ல்ல நோட்டுக்கும் பேப்பர் திக்னஸ், ஃபீல் ங்க் கலர் இதுல எல்லாம் லேசா வித்தி ாசம் இருக்கும். ஆனா இவங்க நோட்டுல ந்தக் குறைகள் எதுவுமே இல்லை. ரொம்ப ளோஸ். சந்தேகாஸ்பதமான நோட்டுக்கள் லது ஆறு மாசத்துக்கு முன்னால எங்க ார்வைக்கு வந்தது. லாப்ல கொடுத்து . வில பார்த்ததில லேசா வித்தியாசம் தன்பட்டது. ஆனா உத்திரவாதமா ள்ள நோட்டுன்னும் சொல்ல முடி லை. ரொம்ப நல்ல எக்விப் மண்ட் வெச்சுக்கிட்டு நல்ல முறையில அச்சடிக்கிறாங் ன்னு தோணிச்சு. எந்த ரியாவிலேருந்து ஆபரேட் ண்றாங்கன்னு தெரியலே. ந்த அருண் எண்டர் ப்ரைசஸை க்ளோஸா வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருந்தோம். சந்தேகப்படும்படும்படியா எதும் இல்லை.''

''பின்ன எப்படி இப்ப உறுதியாச் சொல்றீங்க?''

''நீங்க எப்படி உறுதியாச் சொல்றீங்க கணேஷ்?''

''ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையில இருந்து அந்தக் கிணத்துத் தண்ணி...''

''அதே கட்டுரையைப் போலீஸ் பாக்க மாட்டாங்களா? எங்களுக்கும் கொஞ்சம் திறமையைக் கொடுங்க.''

''சேச்சே! உங்களுக்கில்லாத திறமையா? ராஜேந்திரன்! இப்ப வஸந்தை அனுப்பிச்சது முட்டாள்தனம்னு தெளிவாத் தெரியுது. விஷயம் தீவிரமானதுதான்.''

''வஸந்துக்கு என்ன ஆகும்?'' என்றாள் இனியா.

''அடி உதை பட்டுருவானோன்னு பயம்!''

''நல்லா அடிபடட்டும்'' என்றாள் இனியா. அவள் முகத்தில் கோபம் அங்கங்கே சிவப்பாகத் தெரிந்தது.

''ஏன் இனியா?''

''அந்தப் பொண்ணுகூட அவர் கொஞ்சின கொஞ்சலைப் பார்த்தீங்க இல்லே?''

''சேச்சே. அது அவன் விளையாட்டுத்தனமான சுபாவம் இனியா. நான்கூட அதைப் பத்திக் கேட்டேன். என்ன சொன்னான் தெரியுமா? இனியா?''



கணேஷ், ப்ரொபஸர் அரைத் தூக்கத்தில் இருப்பதைக் கவனித்துவிட்டு, ''உன்னுடை உறவுங்கறது காவியம், கவிதை. இது வெறும் பொம்மை பார்க்கறதுதான்னுன்.''

''அப்படியா சொன்னுர்?''

பேராசிரியர் எழுந்து, ''உக்கல் வந் தாச்சா?'' என்றுர்.

''இல்லே ஸார். இன்னும் இல்லே. தூங் குங்க.''

விழித்துக் கொண்டவர் கணேஷ், ராஜேந் திரன் சம்பாஷணையில் ஏதும் ஆர்வம் காட்டுபவராகத் தெரியவில்லே.

''அழகர் மலேல ஒரு பகுதியில கிடாரிப் பட்டில இருந்து மூணு கல் தொலேவில குகைப் படுகையிலயும் சுனேக்குப் பக்கத்து பாறையிலும் ஒரு பெரிய கல்வெட்டைக் கண்டு பிடிச்சு நான்தான் ட்ரான்ஸ்க்ரைப் பண்ணேன். கணேஷ் அதில ஒரு இடத்தில் 'ஊபு வணிகன் வியகன் கணதிகள்...'''

''ஸார் நாங்க கள்ள நோட்டைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கோம். நீங்க கல்வெட்டு..''

''அதில காசு இருந்துதான் ஆகணும் கணேஷ்.''

''எதில?''

''ராஜராஜன் கிணத்துல.''

ராஜேந்திரன், ''ஸார்! அதைத் திர விசா ரிச்சுப் பார்த்துட்டோம். ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட்ல. அவங்க ஒரு தட வைக்குப் பத்துத் தடவையா அடிச்சுச் சொல்லிட்டாங்க. அங்க காசு இல்லே. வேற ஏதோ கல்வெட்டில அதெல்லாத்தையும் கிணத்தில இருந்து தூர்த்து எடுத்திட்டாங் கன்னு எழுதியிருக்காம்'' என்றுர்.

''அப்படின்னு எந்த மடையன் சொன் ஞன்?''

''உங்களேப் போல இன்னெரு பேராசிரி யர்தான் ஸார்.''

''இத பாருங்க. இப்ப ரெண்டாயிரம் ரூபா பெட்டு கட்டறேன். அந்தக் கிணத் தில... ஒருவேளே கொடுங்காளூர் பக்கத்தில இன்னெரு கிணறு இருக்கு. அதில போட் டிருப்பாங்களோ?''

''அவங்க என்னமோ பண்ணிட்டுப் போகட்டும் ஸார். நமக்கு இப்ப முக்கியம் தங்கக் காசில்ல. வஸந்த்தான்.''

உக்கலுக்கு வந்த கையுடன் பேரா சிரியர் தம் மகளுடன் ஒரு டார்ச் விளக்கு, பூதக் கண்ணுடி சகிதம் ரா. ரா. கிணத்தை நோக்கிப் போய்விட்டார்.

''சரியான கம்பளிய்யா அந்த ஆளு! எங்க புடிச்சிங்க?''

''ஆராய்ச்சிக்காரங்களுக்கு அதுக்குமேலே எதிலும் ஆர்வம் கிடையாது.''

ஊரைச் சுற்றி வலம் வந்து விட்டார்கள். வஸந்தின் சுவடுகள் தெரியவில்லே.

''குறிப்பா எங்காவது போகச் சொன் னீங்களா?''

''பஸ் ஸ்டாண்டுப் பக்கத்தில போய் முதல்ல விசாரிக்கச் சொன்னேன்.''

''சரி. அங்கதான் போகலாம் வாங்க.''

பஸ் நிலேயத்தில் கொஞ்ச நேரம் திரிந் தார்கள். அந்தப் பெட்டிக் கடைக்காரன் மார்பில் சட்டைப் பித்தான் திறந்து அதில் ஒரு புலி நகம் தொங்கக் காட்டுத்தனமாக கிராப் வைத்துக்கொண்டு அவர்களேப் பக்க வாட்டமாகப் பார்த்தான்.

''இங்க சாயங்காலம் ஒரு ஆள் மீசை வெச்சுக்கிட்டு கன்னத்தில மச்சம் கைல பொட்டியோட வந்தாருங்களா?''

''அப்படி யாரும் இல்லிங்களே.''

சர்பத் பையன் ''அண்ணே அப்படி ஒருத்தர் வந்தாருங்களே. சிகரெட்டு வாங் கிக்கிட்டு உங்ககிட்ட ஏதோ பேசிக்கிட்டிருந் தாருங்களே!'' என்று இழுத்தான்.

''அடப்போடா. அது வேற யாரையோ கேக்கறுங்க அவங்க. அந்த ஆளு இல்லே. அவரு ஏதோ பத்திரிகை வாங்க வந்தா ருங்க.''

''என்ன பத்திரிகை?''

''அது வந்து.. அவன் சற்றுத் தயங்கினுன்.

''கல்கியாப்பா?''

''இல்லேங்க. இந்த மாதிரிப் பத்திரிகை.'' 'இன்ப மயக்க'த்தைக் காட்டினுன்.

''அப்ப வஸந்த்தாங்க -- அது! அந்தாளு எந்தப் பக்கம் போனுன்?''

''நான் கவனிக்கலேங்க.''

''இங்கதான் வந்திருக்கான் ராஜேந் திரன். இருவரும் நடந்தார்கள். ''எங்க போவான் இங்க இருந்து?'' சற்றுத் தூரத் தில் இருந்த டீக்கடைக்குச் சென்றுர்கள். ''டீக்கடையைப் பார்த்தா நிச்சயம் ஒரு டீ அடிப்பான். இங்க விசாரிச்சுப் பாக்க லாம்.''

''ஆமாங்க. பார்த்தா வெளியூர்க்காரர் மாதிரி இருந்ததுங்க. உக்காந்துக்கிட்டு டீ சாப்பிட்டாருங்க. யாருக்கோ காத்துக்கிட்டு இருக்கிற மாதிரி தோணிச்சு. அப்புறம் ஒரு பையன் வந்து கூட்டிக்கிட்டுப் போனுங்க.''

''எந்தப் பக்கம்?''

''மேககாலேங்க. தெருக் கோடிக்கு...''

டீக்கடைப் பெஞ்சில் ஒரு காகிதம் கிடந் தது. அச்சடித்த புத்தகத்திலிருந்து கிழிக் கப்பட்ட ஒரு பக்கம் அது. அதில்:

சதன் எழுதிய மலபார் தேங்காய்

ஆரம்ப நாட்களில் எனது முதலாளி ராஜா வின் அந்தரங்க வாழ்க்கை எனக்குப் பிடி படவேயில்லே. போகப் போகத்தான் அவரது சரச சல்லாப லீலேகள் புரிய ஆரம் பித்தன.

கணேஷ் புன்னகையோடு ''அடையாளம் வெச்சுட்டுப் போயிருக்கான் வஸந்த். வாங்க போகலாம்.'' என்றுன்.

அந்தத் தெருக் கோடியில் அந்தப் புத்த கத்தின் ஒன்பதாம் பக்கம் கிடந்தது:

அவளது இரண்டுமே பித்தளேப் பானே போல ஜொலித்துக் கொண்டிருந்தது.

இருட்டிக் கொண்டிருக்க, ''சீக்கிரம் சீக்கிரம்'' என்று கணேஷின் உள்ளம் பதறியது. நெல் வயல்களின் ஆரம்பத்தில் பதின் மூன்றும் பக்கம் கிடந்தது.

அவள் பெங்களூர் பாணியில் தாவணி போடாமல் பாவாடை ஜாக்கெட் சகித மாக இருந்தாள்.

மனைவி: ''உங்க ஆபீஸில்தான் ஏகப்பட்ட சீலிங் பேன் இருக்கே... பின் எதுக்கு கை விசிறி எடுத்துக்கிட்டுப் போறீங்க....?''
கணவன்: ''சீலிங் பேனால முதுகு சொறிஞ்சுக்க முடியுமா என்ன?'' - உ. ராஜாஜி

ஊருக்குச் செல்லும் தன் கணவனிடம் மனைவி சொன்னது: ''ஏங்க இன்லண்டு லெட்டர், கவர் விலையெல்லாம் ஜாஸ்தி. எனக்கு ஏதாவது எழுதுவதாக இருந்தால் மணியார்டர் கூப்பன்லே மட்டும் எழுதுங்க.''

- பிரியா பாலு

ஒரு மாந்தோப்பின் பண்ணை முற்றம் பால இருந்த இடத்தில்:

முழு ஆப்பிள் ஒன்றை அப்படியே விழுங்க முயற்சிப்பவன் போல இருந்தது அவன் செய்கை.

சின்னதாக ஷெட்டு போல இருந்த மறைான இடத்திற்கு ராஜேந்திரனும் கணேும் வந்து சேர, 'அவளோ தன் இருண்களையும் அப்படியே மூடிக்கொண்டாள்'.

அப்போதுதான் ஓரத்தில் வான் நின்றுகாண்டிருந்ததையும் அதில் சிலர் எதையோற்றுவதையும் பார்த்தார்கள். ராஜேந்ரன் தம் ரிவால்வரை ஹோல்டரிலிருந்துடுவித்துக் கொண்டார். உள்ளே 'டுய்க்' ன்று சப்தம் கேட்க, ''கணேஷ்! க்விக்! துங்கிக்கிங்க. ஸம்திங் ராங்!'' என்றார்.

கணேஷ் பதற்றப்பட்டு ராஜேந்திரன் ின்னால் சென்று பதுங்கி எட்டிப்பார்த்.ான்.

உள்ளே மூவர் கீழே கிடந்தவனைச் சுற்றிும் பெட்ரோல் கொட்டிக் கொண்டிருக்க அய்யோ! வஸந்த்!''என்று கத்திவிட்டான். ள்ளே உடைத்துக் கொண்டுஓட உள்ளே ிருப்பவன் உஷாராகித் தன் கைத்துப்பாக்ியை எடுத்து கணேஷை அவசரமாகக் குறி ார்த்துத் துப்பாக்கியின் குதிரையைத் ட்டிவிட டுமீல் என்று வெடித்தது ராஜேந் ிரனின் ரிவால்வர் . கையில் ரத்தம் பொங்க அவன் துப்பாக்கி சிதறி விழுந்தது. கணேஷ் அதைப் பற்றிக் கொண்டு ''ஆல்ரைட்! ல்லாரும் அப்படியே நில்லுங்க. வெளியே ாலீஸ் காத்திருக்குது'' என்றான்.

• • •

கே. ஜே. ஆஸ்பத்திரியில் மூன்றுவது மாடிக் கட்டிட அறையில் ஜன்னலில் ஏராள மலர்கள் வைத்திருந்தன. கணேஷ் கவலை தோய்ந்த முகத்துடன் அறைக்குள் நுழைந்தான்.

திரை மூடியிருந்தது. ''சரியா பத்து நிமிஷந்தான்'' என்று நர்ஸின் குரல் கேட்டது.

''வஸந்த்! வஸந்த்!''

வஸந்த் மெல்லக் கண் விழித்தான். ''பாஸ் நீங்களா?''

''ஆமாம் வஸந்த்!''

''இது மெட்ராஸ்தானே''

''மெட்ராஸ்தான் வஸந்த்.''

''எம படாள் எல்லாம் பார்த்தேனே.''

''கனவா இருக்கும். எப்படி இருக்கே வஸந்த்?''

''பொழைச்சுட்டேனா? நான்தானே பேசறேன்?''

''நீதான் வஸந்த்! நீதான் வஸந்த்!''

''சரியான சமயத்தில வந்துட்டீங்களே. இல்லைன்னா ஆபீஸ்ல இத்தனை நேரத்துக்குப் படமாத் தொங்கியிருப்பேன் இல்லே?''

''அதிகம் பேசாதே வஸந்த்!''

''எனக்குச் சரியாப் போச்சு பாஸ். டாக்டர் கில்லாடி. குண்டை வெளில எடுத்துட்டார். எனக்கு சின்னதா ஒரு பாட்டில்ல போட்டுப் பரிசாக் கொடுத்திருக்கார். தழும்பைப் பாக்கறீங்களா?'' வஸந்த் தன் சட்டைப் பித்தானைக் கழற்றி மார்பில் ஆறிக்கொண்டிருந்த தையலைக் காட்டினான். ''பத்து சென்டி மீட்டர்!''

''வஸந்த்! ஐம் ஸாரி.''

''எதுக்கு ஸாரி? மலபார் தேங்காயைப் பிடிச்சிட்டு வந்தீங்களே! பெரிய ஆள் பாஸ் நீங்க! டிஸ்சார்ஜ் ஆனப்புறம் ஒருமுறை கால்ல விழணும்!''

''இனியா வந்தாளா?''

வஸந்த் கண்களில் சோகம் ஜரிகையிட்டது.

''வரலையா?''

''வந்தா! அதான் வம்பாப் போச்சு.''

''என்ன ஆச்சு?''

''இப்ப உங்களுக்குத் தழும்பு காட்டலே? அதே மாதிரி அந்த லைப்ரரி பொண்ணு வந்திருந்தபோது அவளுக்குக் காட்டினேன்.''

''அந்தச் சமயத்தில வந்துட்டாளா?''

''அப்ப வந்திருந்தாப் பரவாயில்லையே! இதே மாதிரி தழும்பு தனக்கும் இருக்கிறதா அந்தப் பொண்ணு சொல்லிச்சு. 'எங்கே காட்டு! பார்த்தா எனக்குக் கொஞ்சம் சீக்கிரம் குணமாகும்'னு சொன்னேன். அவ காட்டினா. அந்தச் சமயம் பார்த்தா இனியா வந்து தொலைக்கணும்! கொஞ்சம் அசந்தர்ப்பமாப் போயிடுத்து....''

கணேஷ் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''சிரிக்காதீங்க பாஸ். இனியா 'எல்லாம் கான்ஸல்'னுட்டா. என் முகத்திலே முழிக்க மாட்டேன்னுட்டா. பெண்களே மோசம் பாஸ். கேவலம் தழும்பைப் பார்த்தா தப்பா? வள்ளுவர் சொன்ன மாதிரி...''

''வஸந்த் இப்ப வள்ளுவர் வேண்டாம். ரெஸ்ட் எடுத்துக்க!''

''பேராசிரியர் என்ன சொல்றார்?''

''போன் பண்ணார். இன்னும் ஏதோ புதுசா கல்வெட்டு ஆராய்ச்சி பண்ணின தில தஞ்சாவூர் ஜில்லாவில பொதுப்படைங்கிற கிராமத்தில இன்னொரு கிணறு இருக்காம்....''

''சரிதான். என்ன சொன்னீங்க?''

''ராங் நம்பர்னு வெச்சுட்டேன். ஒரு கிணறு ஏற்படுத்திய குழப்பம் போதாதா?''

''நோட்டு அடிக்கிறவங்களை யெல்லாம் புடிச்சாச்சா?''

''எல்லாரையும் புடிச்சாச்சு. ராஜேந்திரன் உனக்கு அவார்டு கொடுக்கக் காத்திருக்கிறார்.''

''அவார்டு உங்களுக்குத்தான்.''

வஸந்த் திடீர் என்று பிரகாசமானான்.

''பாஸ்! கீழே ஒரு ரிஸப்ஷனிஸ்ட் இருக்கா. போறப்போ கவனிங்க. இன்கம் டீடெய்ல்ஸ் குறிச்சுக்கிறதுக்காக வந்திருந்தா. அந்த க்ஷணமே எனக்கு டெம்பரேச்சர் ஏறிப் போயி... பாஸ் ஐம் இன் லவ்!''

''சரிதான்! இனி எனக்குக் கவலையில்லே. உனக்கு உடம்பு சரியாப் போச்சுன்னு அர்த்தம்! நான் வரேன்.''

கணேஷ் தன் தலையை இடம் வலமாக அசைத்துக்கொண்டே ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான். (முற்றும்)





"கமல் வந்திருக்கிறார்!"

ஞாயிற்றுக் கிழமை காலை பதினொரு மணி. தியாகராயநகர் ஹிந்திப் பிரசார சபா தெரு. களத்தூர் கண்ணம்மா காலத்தில் கமலஹாஸன் வசித்த ஒரு பெரிய வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றேன். கமல் உள்ளே நுழையவும் அதே வயதுடைய ஓர் இளைஞர் வெளியே வரவும் சரியாக இருந்தது. கமலைப் பார்த்த அந்த இளைஞர் ஒரு கணம் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றுவிட்டுப் பிறகு பரபரப்புடன் வரவேற்றார்.

''உங்களை எங்கோ பார்த்தமாதிரி முதலில் தோன்றியது. பின்னர்தான் கமலஹாசன் என் அறிவில் உதயமாயிற்று'' என்று கூறியபடியே உள்ளே நுழைந்தவர், ''கமலஹாசன் வந்திருக்கிறார்'' என்று பலமுறை சத்தம் போட்டுச் சொல்லியும் யாருமே லட்சியம் பண்ணவில்லை. முதலில் அசட்டையாக இருந்தவர்களுக்குப் பிறகு மெய்யாலுமே கமலைப் பார்த்ததும் ஒரே வியப்பு.

அன்று பதினொரு மணி டீ.வி. படம் கோகிலா. கமலஹாசன் நடித்தது. ''கமலஹாசன் வந்திருக்கிறார்'' எனக் கூப்பிட்ட போது, 'டீ.வி.யில் கமல் தோன்றுகிறார்; படம் ஆரம்பமாகிவிட்டது' என்பதைத் தான் சொல்கிறானுக்கும் என்று இருந்து விட்டார்களாம்!

அந்த வீட்டின் ஒரு போர்ஷனில்தான் அன்று கமல் தன் பெற்றோருடன் வசித்து வந்தார். ஆனால் இப்போது அந்த வீட்டில் கமலுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல்தான் இருந்தது. யோசனையாக இருந்தார். ''என்ன பலமான சிந்தனை?'' என்று கேட்டபோது, ''மனத் திரையில் ஸ்லோ மோஷனில் அந்தக் காலப் படம் ஓடுகிறது'' என மெல்லக் கூறினார்.

அவருக்குப் பல சம்பவங்களை நினைவுக்குக் கொண்டுவர உதவியவர் உடன் வந்த மன்னி. (சாருஹாசனின் மனைவி). ''கமல் இங்கே வா! இந்த அறை வாசல் கதவு முன்பு இங்கே இருக்கலையே. நாம குளிக்கிறதுக்கு வெளி வழியாகத்தானே போகணும்? ஞாபகம் இருக்கா? இப்ப இங்கேயே கதவு வந்துடுத்து....'' என்றிப்படி மாறுதல்களைக் கூற, கமலும் மன்னி சொல்வதைப்பார்த்து, கேட்டு, தலை அசைவால் ஆமோதித்துக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டு மாமி கமல் சிறுவனாயிருந்த போது அடித்த லூட்டிகளை அடுக்க ஆரம்பித்தார். ''ஓர் இடத்தில் உட்காரமாட்டாரே! ஒரே துள்ளலும் குதியும்தான். எதிர் போர்ஷன்லே, ஒரு பெரியவர் தினமும் பூஜை செய்வார். 'நானும் பூஜை பண்றேன்'னு கமலும் ஆரம்பித்துவிடுவான். அவர் எப்படி பூஜை செய்கிறாரோ அதே போல இவன் நடித்து மந்திரங்கள் தெரியாததால் ஏதேதோ உளறிக் குளறுவான்! எங்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பாயிருக்கும்!'' இதைக் கேட்டு கமல் இப்போது சிரித்தார்.

- மனத்திரையில் ஸ்லோமோஷனில் பழைய நினைவுகள்
- தரையில் உட்காரச் செய்து சாதம் பிசைந்து கையில் வைத்துச் சாப்பிடச் சொல்வார் அம்மா.
- ஓடிப்பிடித்து விளையாடிய பால்ய நண்பர்கள்



பளிச் செய்திகள்



ஒருதலை ராகம் ரூபா

எம்மதமும் சம்மதம் என்று கூறுவதோடு செயலிலும் காண்பிப்பவர் ரூபாவாகத்தான் இருக்கவேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர் பல்லாவரத்தின் அருகில் உள்ள திருசூலம் திரிபுர சுந்தரி அம்மன் கோயிலுக்குச் செல்கிறார். அதோடு ரூபா நிற்கவில்லை! ஒவ்வொரு வியாழக் கிழமையும் சென்னை அண்ணா சாலையில் உள்ள மசூதிக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் மாதா கோயிலுக்கும் செல்கிறார்.

சோ

துக்ளக் பத்திரிகை ஆசிரியர் திரு சோ, மனித உரிமைகளுக்கான மக்கள் கழகத்தின் தேசியக் கமிட்டியில் பங்கேற்க இருக்கிறார். (People'sunion for civil liberties, P. U. C. L.) இதற்கான அழைப்பு அவருக்கு வந்திருக்கிறது.

நீதிபதி திரு தார்குண்டே அவர்களைத் தலைவராகவும், திரு அருண் சோரி (ஆசிரியர், இந்தியன் எக்ஸ்பிரஸ்) அவர்களை செயலாளராகவும் கொண்ட அமைப்பு இது. இதன் நோக்கங்கள் தங்கள் உரிமைகள் பற்றிய விழிப்பு உணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துவது; பொதுமக்களுக்கு இலவச சட்ட உதவி அளிப்பது; அவ்வப்போது ஏற்படும் சட்ட திருத்தங்களினால் விளையும் நன்மை தீமைகளை மக்களுக்கு விளக்குவது.

—''சிக்கி''





டாக்டர் ரஷீத்

பெட்ரோல் விலை உயர்வு காரணமாய் லிட்டருக்கு எவ்வளவு கிலோ மீட்டர் ஓடும் என்பது இப்போது ரொம்ப முக்கியமாகி விட்டது. அமெரிக்க மோட்டார்கார் தயாரிப்பாளர்கள் எடை குறைவான காரைத் தயாரிக்க விரும்புகிறார்கள். —அதிக ''மைலேஜ்'' கிடைக்கும் என்பதால். ஆனால் எடை குறைந்தால் எஃகின் உறுதியும் அதன் வளைந்து கொடுக்கும் தன்மையும் பாதிக்கப்படுகிறது. விபத்து என்றால் கார் பப்படம்.

புதிய டுவல் பேஸ் எஃகு இலேசாக இருப்பினும் உறுதியானது. எந்த உருவிலும் வளைக்க லகுவானது. நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின் இதைக் கண்டுபிடித்தவர் ஜெனரல் மோட்டார் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் ரஷீத். இவர் வேலூரில் பிறந்து கிண்டி பொறி இயல் கல்லூரியில் பயின்று பிறகு அமெரிக்கா சென்றவர்.


—நன்றி: ஸ்மித்ஸோனியன்

டாக்டர் பழனியப்பன்

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் தாய் சேய் நல மருத்துவர் டாக்டர் பழனியப்பன், பெரிய தீமையைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

ஒருத்தி கருவுற்றிருக்கிறாளா இல்லையா என்று கண்டு பிடிக்கச் சிறுநீரைச் சோதிப்பதுண்டு. இதில் தீங்கில்லை. ஆனால் வேறு ஒரு சோதனை முறையில் பெண்ணுக்குத் தரப்படும் ஆர்மோன் தயாரிப்பு மருந்துகள் வயிற்றில் வளரும் குழந்தைக்குப் பெருந்தீங்கு விளைவிக்கின்றன.

Oestrogen Progesteron போன்ற இதே ஆர்மோன் தயாரிப்புகள் கருச் சிதைவை உண்டாக்கவும்



பயன்படுத்தப் படுகின்றன. பல சமயங்களில் நோக்கம் நிறைவேறாமல் போகிறது. அபார்ஷன் முயற்சி தோல்வியுற்றுக் கரு வளர்கிறது. ஆனால் மருந்து கருவைப் பாதிக்கிறது. குழந்தை குறைபாடுள்ளதாகப் பிறக்கிறது. பிளவுபட்ட தாடை, உதடு, போன்ற குறைபாடுகள் குழந்தைக்குப் பிறக்கும் போதே இருக்கிறது.

பத்து மருத்துவர்களின் உதவியுடன் 160 பெண்களைச் சோதனை செய்து பார்த்த பிறகு சிகப்புக் கொடி காட்டியிருக்கிறார் பழனியப்பன். லட்சக்கணக்கான பெண்கள் கருவுற்றிருக்கிறோமா என்று அறியவும் கருச் சிதைவுக்கும் இந்த மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இம்மருந்துகள் இடையில் தடை செய்யப்பட்ட போதிலும் தயாரிப்பாளர்கள் இவற்றை வேறு பெயரில் விநியோகிக்கிறார்கள் என்று எச்சரிக்கிறார் பழனியப்பன்.

—ஜே. பாரத்செல்வன்



லஞ்சம் வாழ வேண்டும்

ஆர்.எஸ்.மணி

காலிங் பெல் ஓசை கேட்டது. கதவைத் திறந்தேன். கையில் அழுக்கேறியிருந்த கனமான கணக்குப் புத்தகத்துடன் கட்டை குட்டையாக ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

''நான் பில் கலெக்டர். ரெகவரி ஆபீசிலிருந்து அர்பன் லாண்டு டாக்ஸ் விஷயமாக வந்திருக்கிறேன். — டிமாண்டு நோட்டீஸை வாங்கமாட்டேன் என்று சொன்னீர்களாமே'' என்றான் கோபமான குரலில்.

''நான் வரி கொடுக்க வேண்டி யிருந்தால் தானே நோட்டீஸை வாங்க வேண்டும்?''

பில் கலெக்டர் தம் கையிலிருந்த கணக்குப் புத்தகத்தைப் பிரித்தார். மள மளவென்று சில ஏடுகளைப் புரட்டினார்.

''உங்கள் பெயர் கே.டி.ராஜன்தானே?''

''ஆமாம்.''

''இது என். எம். தெருதானே?''

''ஆமாம்.''

''இந்த வீட்டு நம்பர் ஒன்பதுதானே?''

''ஆமாம்.''

''பின்னே என்ன சார்? இதோ பாருங்க ரிகார்டை — ஐயாயிரத்து எண்ணூத்து முப்பது ரூபாய் கட்ட வேண்டும் — அஞ்சு பசலி வருஷத்துப் பாக்கி.''

''இந்த இடம் எனக்குச் சொந்தமில்லை. நான் வாடகைக்கு இருக்கிறேன். உங்கள் ரிகார்டில் ஏதோ தப்பு இருக்கிறது.''

''இதையெல்லாம் என்னிடம் சொல்லிப் பிரயோசனமில்லை. வரியைக் கட்டிவிட்டு கோர்ட்டுக்குப் போங்கள்.''

''நீங்கள் தப்புச் செய்ய வேண்டியது! நாங்கள் கோர்ட்டு கேஸ்னு அலைய வேண்டியது — நன்றாக இருக்கிறதே உங்கள் நியாயம்!''

''மூணு மாசத்துக்கு முந்தி இப்படித்தான் ஒருத்தருக்குத் தப்பா ஆர்டர்போட்டு விட்டார்கள். என் கிட்டே வந்து அழுதார். 'நம்மைக் கவனியுங்கள். நான் வழி செய்கிறேன்' என்றேன். கவனித்தார். ஆர்டர் கான்சல் ஆகி விட்டது.''

''கவனிப்பதா? லஞ்சமா? அதற்குத்தான் இப்படி அலைகிறீர்களா?''

''சார், ரூடாப் பேசாதீங்க. விடுங்கள் — இந்தாங்க ரெண்டாம் நம்பர் நோட்டீஸ். தாசில்தார் கொடுக்கச் சொன்னார்.''

ஜப்தி நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு கொடுக்க வேண்டிய கடைசி நோட்டீஸை என்னிடம் கொடுத்து விட்டுப் போய்விட்டார் அவர்.

என் ஆபீசிலிருந்து நகர்ப்புற வரி ஆபீசுக்குப் போன் செய்தேன்.

''எனக்குச் சொத்தே இல்லை. வரி கேட்டிருக்கிறீர்களே. நான் ஒரு குடித்தனக்காரன். நீங்கள் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் நான் குடியிருக்கிறேன்.''

''நீங்கள் வரிப் பணத்தைக் கட்டிவிட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளுங்கள்.''

''எனக்கு என்ன தலையெழுத்தா?''

''அதுதான் சட்டம்.''

''நீங்கள் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு அந்த இடத்தில் அவ்வளவு பெரிய மனை இல்லை. ரிக்கார்டுகளைப் பார்த்து ஒழுங்காக வேலை செய்யுங்கள்.''

''அது எங்களுக்குத் தெரியும்.'' — பட்டென்று ரிசீவரை வைத்து விட்டார் பேசிக் கொண்டிருந்தவர்.

ஒரு மாதம் கழித்துப் பணத்தை உடனடியாகக் கட்டச் சொல்லி ரிமைண்டர் வந்தது, அதை வக்கீலிடம் எடுத்துப் போனேன்.

வக்கீல் நகர்ப்புற நிலவரி சம்பந்தமான சட்டப் புத்தகங்களை எடுத்துப் புரட்டினார்.

''சட்டம் உங்களுக்குச் சாதகமாக இல்லையே'' என்றார் மிகுந்த கவலையுடன்.

''எனக்குச் சொத்தே இல்லையே சார்.''

''இருக்கலாம். அஸெஸ்மெண்ட் ஆர்டர் வந்த ஒரு மாதத்துக்குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். டைம் பார் ஆகி விட்டது. ஆரம்பத்திலேயே நேரில் பார்த்துக் கவனிக்க வேண்டியவர்களைக் கவனித்திருந்தால் அது அப்போதே கான்சலாகி இருக்கும். பேசாமல் பணத்தைக் கட்டி விட்டு அப்பீல் செய்யுங்கள் சார்!''

''சுமார் ஆறாயிரம் ரூபாய் கட்ட வேண்டுமே. அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே சார் போவேன்? வேறு வழியே இல்லையா?''

''ஒரே வழிதான் இருக்கிறது. கமிஷனர் ஒருவரால்தான் உங்களுக்கு உதவி செய்ய முடியும். அவருக்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. அவரைப்பார்த்து ஸ்டே ஆர்டர் கொடுக்குமாறு மனுச் செய்யுங்கள். உங்களுடையது மிகவும் நியாயமான கேஸ்'' என்றார் வக்கீல்.

கமிஷனர் ஆபீஸில் அவர் மூன்றாவது மாடியில் இருப்பதாகத் தெரிய வந்தது. என் குறையைச் சுருக்கமாகச் சொல்லி மனுவை அவரிடம் கொடுத்தேன்.

''நோட்டீஸ் வந்த உடனேயே இந்த விஷயத்தை வரி விதிக்கும் ஆபீசுக்குத் தெரிவித்து இருக்கலாமே?''

''அவர்களாகவே தப்பைத் திருத்திக் கொள்வார்கள் என்று எண்ணி இருந்தேன்.''

''உங்கள் பெயர், விலாசம் எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது?''

''ஆமாம் சார். ஆனால் நான் இருப்பது வாடகை வீடு. சொத்துக்குச் சொந்தக்காரரின் பெயரும் வேறு — அதோடு நான் இருக்கும் இடத்தின் விஸ்தீரணம் இரண்டு மனைக்கும் குறைவு. வரி விதிக்க வேண்டிய அவசியமே இல்லை — ஜப்தி என்ற பயமுறுத்தல் வந்திருக்கிறது.''

கமிஷனர் என் மனுவின் கீழே ஏதோ எழுதினார்.

''சொத்து சம்பந்தமாக மறு விசாரணை செய்து முடிக்கும் வரை ஸ்டே ஆர்டர் கொடுத்திருக்கிறேன். கீழே போய்ப் பாருங்கள்'' என்று கூறியவாறு அதை ஒரு பைலினுள் வைத்து மறு பக்கம் இருந்த டிரேயில் தூக்கிப் போட்டார்.

எனக்கு விடுதலை கிடைத்தது போல் இருந்தது. பெரிய நெருக்கடியிலிருந்து தப்பி விட்டது போன்ற உணர்வுஏற்பட்டது. ஓட்டமும் நடையுமாகப் படிக்கட்டுக்களில் கீழே இறங்கினேன்.

''கமிஷனர் ஸ்டே கொடுத்து விட்டார். சீக்கிரம் ஆர்டரைக் கொடுங்கள் சார். ரொம்ப அவசரம்'' என்றேன் சம்பந்தப்பட்ட குமாஸ்தாவிடம்.

''இது என்ன மளிகைக் கடையா? அல்லது ஜவுளிக் கடையா? கேட்டவுடன் எடுத்துக் கொடுப்பதற்கு?மேலதிகாரியைப்பாருங்கள்'' என்றார் அவர். அவரிடம் ஓடினேன்.

''பைல் என்னிடம் வரவில்லை. எது வந்தாலும் என்னிடம் ஐந்து நிமிடத்துக்கு மேல் இருக்காது. செக்ரட்டரி ரூமில் இருக்கும்'' என்றார் அவர்.

இப்படிப் பல அதிகாரிகளின் கைவிரிப்பு!

என்ன செய்வதென்று புரியாமல் தவித்தவாறு வராந்தாவின் பக்கம் வந்து நின்றேன். அப்பொழுது நாகலிங்கம் என்னைத் தேடிக் கொண்டு ஓடி வந்தான். என் வீட்டில் தோட்ட வேலை செய்பவன் அவன். அவனைப் பார்த்தவுடன் எனக்குப் பகீரென்றது.

''நம்ப வீட்டு வாசலிலே ஜீப் வந்து நின்னுக்கிட்டிருக்குது. பில் கலெக்டர், தாசில்தார், இன்னும் ரெண்டு மூணு பேர் வந்திருக்காங்க. வீட்டிலே இருக்கிற சாமான்களை ஜப்தி செய்யப் போறாங்களாம். அம்மா உங்களை உடனே ஆர்டரோட வரச் சொன்னாங்க. பாவம் அழுதுக்கிட்டிருக்காங்க'' என்றான்.

என் உள்ளத் துடிப்பு உயர்ந்து உத்வேகம் பிறந்தது. கமிஷனரைச் சந்தித்து விஷயத்தைச் சொல்லி முறையிடுவது என்று மூன்றாவது மாடிக்கு ஓடினேன். நாகலிங்கமும் பரபரப்புடன் என் பின்னாலேயே ஓடி வந்தான். நாங்கள் கமிஷனரின் அறையின் அருகில் போவதற்கும் உள்ளே யிருந்து பியூன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

''தங்கராஜு! நீ இங்கேதான் வேலை செய்யறயா? நான் ஐயா வீட்டிலே தோட்ட வேலை பார்க்கறேன். இவருக்குச்



பயிற்சியாளர் : டோனி பொன்னையா
படம் : உத்ரா தயாரிப்பு : குண்டுமணி

சித்திரம்:





கராத்தேயில் பெண்கள்

கராத்தே கலையைப் பெண்களும் மிக ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முன் வந்துள்ளார்கள். இக் காலத்தில் இவ்வித தற்காப்புப் பயிற்சி தங்களுக்கும் அவசியம் தேவை என்பதை உணர்ந்தே அவர்கள் கராத்தே கற்க முன் வருகிறார்கள். திருமணம் ஆனவர்களும் சிறுமிகளும் போட்டி போட்டுக்கொண்டு இந்தத் தற்காப்புக் கலையைப் பயில்கிறார்கள்.

பெண்களைவிடப் பலம் வாய்ந்த ஆண்களையும் கராத்தே பயிற்சி மூலம் தாக்கி வீழ்த்த முடியும் என்பதைக் கராத்தே வீராங்கனைகள் நிரூபித்து வருகிறார்கள்.

விஜயவாடாவில் எங்கள் பள்ளியில் கராத்தே புதிதாகக் கற்றுக்கொண்ட ஒரு பெண்மணி ஒரு முரடனைத் தாக்கி வீழ்த்திய சம்பவம் ஆந்திர மாநிலத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

படத்தில் ஒரு பெண்மணி எதிரியைத் தாக்கிக் கீழே தள்ளுவதைப் பார்க்கலாம்.

சொத்தே இல்லே. வரி போட்டிருக்காங்க. சாமான்களை ஜப்தி செய்யப் போறேன்னு வீட்டு வாசல்லே வந்து நின்னுக்கிட்டிருக்காங்க. ஏதாவது வழிபண்ணுப்பா'' என்றான் நாகலிங்கம்.

''நீ நம்ப ஊர்க்காரனுச்சே! உதவி செய்யாம விட்டுடுவேனா? — வேறே யாராவது இருந்தா இத்தனை நேரம் ஆர்டரை வாங்கிட்டுப் போயிருப்பாங்க. ஐயா புதுசு போல இருக்கு. அதான் தவிக்கிறாரு — அங்கங்கே அப்படி அப்படிக் கவனிச்சிருந்தா வேலை எப்பவோ முடிஞ்சு போயிருக்கும்.''

''லஞ்சமா! அதுதான் நடக்காது. ஒரு நயா பைசா கொடுக்க மாட்டேன்'' என்று கத்தினேன்.

''ஐயா விஷயம் கழுத்துக்கு வந்திடுச்சு. இதிலே இருந்து தப்ப வழி பாருங்க. அம்மா பணம் கொடுத்து அனுப்பியிருக்காங்க. தங்கராசு இதை வச்சிக்கிட்டுச் சீக்கிரம் காரியத்தை முடிப்பா!'' மாலினி கொடுத்து அனுப்பி யிருந்த கவரை எடுத்தான். அதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை உருவித் தங்கராசுவின் சட்டைப் பையில் ''சருக்'' கென்று திணித்தான்.

''நாகலிங்கம், உனக்காகச் செய்யறேன். ஐயாவை அழைச்சிக்கிட்டுக் கீழே போய் இரு நான் பின்னாலேயே வரேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான் அவன்.

நாகலிங்கம் பரபரவென்று என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு கீழே வந்தான். கால் மணி நேரம் கழித்துத் தங்கராஜு வெள்ளை உடுப்பு அணிந்த ஒருவனை அழைத்து வந்தான்.

''நீங்க ரொம்ப பேஜாரிலே இருக்கீங்கன்னு தங்கராஜு சொன்னான். இல்லேன்னா நான் வெளியே வரவே மாட்டேன். அந்த மாடிப் படிக்கட்டுக்குப் பின்னாலே போய் நின்னுக்கிட்டிருங்க. பைலை அனுப்பிவிட்டு நான்வந்து சொல்றேன்'' என்றான் மாரிசாமி!

என் நேர்மைக் கொள்கைக்கு மற்றொரு அடி. இனிமேல் அது பிழைக்கவா போகிறது?

லஞ்சம் கொடுக்க ஆரம்பித்தவுடன் எவ்வளவு வேகமாகப் பைல் நகர ஆரம்பிக்கின்றது! இந்த சூட்சுமத்தை ஏற்கனவே கையாளாமல் போய்விட்டோமே! நேர்மை, ஒழுக்கம் என்பதெல்லாம் எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

மூன்று நிமிஷம் கூட முழுமையாக முடியவில்லை. மேலதிகாரி வேகமாக என் அருகில் வந்தார்.

''மாரிசாமி ரொம்ப தூரம் சொன்னான். நானே பொறுப்பு எடுத்துக்கிட்டு ஆர்டரை ரெடி செய்தேன். கஷ்டப்படறவங்களுக்கு உதவி செய்யணும். அதுதான் சார் மனிதத்தன்மை! இந்தாங்க ஆர்டர்!'' ஒரு பழுப்பு நிறக் காகிதத்தை என்னிடம் கொடுத்து விட்டுச் சற்றுத் தயக்கத்துடன் நின்றார்.

கொடுத்த பணம் போதவில்லை. இது தானே அதற்கு அர்த்தம்?

மாலினி கொடுத்து அனுப்பியிருந்த மீதி பணத்தை அப்படியே அவருடைய

சட்டைப் பையில் திணித்தேன். ''நீங்கள் ரொம்ப உதவி செய்திருக்கிறீர்கள். உங்களைப் போன்றவர்கள் இல்லா விட்டால் எங்களைப் போன்றவர்களுக்கு விமோசனமே கிடையாது. நீங்களெல்லாம் நீண்ட காலம் நீடுழி வாழ்ந்திருக்க வேண்டும்'' என்று ஆசீர்வதித்தேன்.

ஜப்தி நடவடிக்கையை நிறுத்திவிடலாம் என்கிற நம்பிக்கையுடன் சிட்டாய்ப் பறந்து வந்தேன் வீடு நோக்கி. ஆனல் என் வீட்டிலோ? மயான அமைதி. என் மனைவியின் விசும்பல் சப்தத்தைத் தவிர! — உள்ளே கண்ணோட்டம் விட்டேன். தையல் மிஷின், டேப் ரிகார்டர், டைப்ரைட்டர்— டெலிவிஷன் வைத்திருந்த இடங்கள் எல்லாம் காலியாக இருந்தன.

மறு நாள் நான் ரிகவரி ஆபீசை அடைந்து பில் கலெக்டரைப் பார்த்து, ''ஜப்தி பண்ணின சாமான்களை உடனே நான் திரும்ப எடுத்துக் கொண்டு போக வேண்டும். இது என் மானப் பிரச்னை. நீதான் ஏதாவது செய்ய வேண்டும்.'' பச்சை நோட்டு ஒன்றை அவன் கையில் ''பளிச்''சென்று அழுத்தினேன். அவனுடைய அலட்சியப் போக்குத் திடீரென்று அனுதாபமாக மாறியது.

''நமக்கு ரொம்ப வேண்டியவராச்சே! உங்களுக்குச் செய்யாமல் விட்டுடுவேனு வாங்க சார் என்னோட.'' என்னைத் தாசில்தாரிடம் அழைத்துப் போனன். ஸ்டே ஆர்டரை அவரிடம் காண்பித்தான்.

''நேத்திக்கு ஜப்தி பண்ணோமே — இவர் வீடுதான் சார். இவரை ரொம்ப நாளா தெரியும் சார். அப்போ யாருன்னு தெரியாமப் போச்சு.. கொஞ்சம் டயம் கொடுத்திருக்கலாம். இவருக்குச் சொத்தே இல்லை சார். பாவம் வரி போட்டுத் தவிக்க வச்சுட்டாங்க'' என்றான்.

''ஏ. ஸி. ஆபீசில் சரியாக ரிக்கார்டைப் பார்ப்பதே இல்லை. சொத்து இல்லாமல் உங்களுக்கு வரி போட்டிருக்கிருர்கள். இவருக்கு நிறைய சொத்து இருக்கிறது. இன்னும் என்குயரி நோட்டீஸ் கூட வரவில்லையாம். நோட்டீஸ் வராத வரையில் நிம்மதி. இல்லையா மிஸ்டர் ராஜன்!'' என்று கூறியவாறு தம் எதிரில் அமர்ந்திருந்தவரைப் பார்த்துச் சிரித்தார் தாசில்தார்.

'ராஜன்!' இந்தப் பெயரைக் கேட்டவுடன் திக்கென்றது எனக்கு.

''சார் உங்க பெயர்?''

''கே. டி. ராஜன் — அதாவது கே. தில்லை ராஜன்.''

''என் பெயர் தியாகராஜன்? அது சரி, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

''எம். என். தெரு — அதுதான் நாகமணி தெரு.''

''நான் இருப்பது நாராயண மூர்த்தி தெரு — சரி, உங்க டோர் நம்பர்?''


''ஒன்பது — இருபது கிரௌண்டில் பங்களா கட்டி யிருக்கிறேன்.''

அடப் பாவிகளா! இவருக்கு அனுப்ப வேண்டிய நோட்டீசை எனக்கு அனுப்பிப் படாத பாடு படுத்தி விட்டார்களே! பெயரையும் விலாசத்தையும் சுருக்கி எழுதி என்னை உலுக்கி எடுத்து விட்டார்களே!

நான் தில்லை ராஜனிடம் நடந்த விஷயத்தைச் சொன்னேன். ''நீங்கள் வரியைக் கட்டி விடுங்கள்'' என்றேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னர்:

''எனக்கு என்ன பைத்தியமா வரி கட்டுவதற்கு? பார்க்கவேண்டியவர்களைப் பார்த்து, கவனிக்க வேண்டியவர்களைக் கவனித்து வரியிலிருந்து தப்பிக்க எல்லா வழிகளையும் செய்து விட்டேன். நான் செய்தது தப்பு என்று எனக்குத் தெரியும். என்ன செய்வது? நேர்மைக்கு இது காலமில்லையே! இந்த ஜனநாயக நாட்டில் இம்மாதிரியான தொல்லைகளிலிருந்து விடுபட்டு நாம் நிம்மதியா வாழ வேண்டும் என்ருல் லஞ்சம் வாழ வேண்டும்!'' என்று கூறிக் கொண்டே இடத்தை விட்டு எழுந்தார்.

லஞ்சத்தின் மகிமையை அப்பொழுது தான் நான் பரிபூரணமாக உணர்ந்தேன். நானும் அவருடன் சேர்ந்து ''லஞ்சம் வாழ்க!'' என்று கோஷமிட்டேன்.



கண்ணீர் விட்டு அழுங்கள்!


''ஒருவனுக்கு அழ வேண்டிய நிலை ஏற்பட்டால் அழுது விடவேண்டும். அழுகையை நிறுத்தவோ, அடக்கவோ கூடாது. அப்படி செய்தால் உடல் நலம் பாதிக்கப்படும். கண்ணீர் சிந்தி அழுது தீர்த்தால்தான் உடல் ஆரோக்கியம் ஏற்படும். ஜீவன சக்தி அதிகமாகும். உடலின் புண்களோ காயங்களோ இருந்தால் ஆறும். வியாதிகள் குணமாகும். வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஏற்படும்.'' இப்படி கூறி இருப்பவர் 'பென்சிலின்' மருந்தைக் கண்டுபிடித்தவரான அலெக்சாண்டர் பிளமிங்தான். - தீபப்ரியா

'ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?'

'நான் நினைத்தேன் அது நடந்துவிட்டது.'

'நினைத்தது நடந்துவிட்டால் சந்தோஷமாக இருக்க வேண்டியது தானே?'

'ரேஸில் நான் பணம் கட்டிய குதிரை முதலில் வரும் என்று நினைத்தேன் அது 'நடந்து' விட்டது!' - பிரியா பாலு





கழுத்தில் விழுந்த மாலை

1

அவர்களுடையபஸ் திருத்தணியை அடைவதற்குள் பொழுது சாயத் தொடங்கிவிட்டது.

மாப்பிள்ளை வீட்டவர்கள்எடுத்து நடத்தும் கல்யாணம். எனவே அவர்கள் எல்லாவற்றையும் கவனிக்க முன்னதாகவே வந்துவிட்டிருந்தனர். எல்லோருக்கும் வசதியாகத் தங்குவதற்கு தேவஸ்தான தங்கும் அறைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டுத் தயாராக இருந்தன. பெண் வீட்டவர்கள் ஒரு பகுதியிலும் மாப்பிள்ளை வீட்டவர்கள் எதிர்ப் பகுதியிலும் தங்குவது என்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து பெட்டி படுக்கைகளை ஆட்கள் இறக்கி எடுத்து வர அவர்களுக்குப் பின்னால் மாதங்கி நடந்து வந்து கொண்டிருந்தாள். ''எல்லாரும் பார்க்கறதுக்கு முன்னாடி உள்ளே போயிடு. சொன்னதைக் கேட்டாத்தானே? இன்னிக்குக் கூட பெல் பாட்டமும்டாப்பும் போட்டுக்கனுமா? மாதங்கியைப் போல ஒரு நூல் புடவையை யாவது சுத்திக்கிட்டு வந்திருக்கக் கூடாது?'' கடுகடுத்துக் கொண்டு பெண்ணைப் பெற்ற சுமதி, பெல்பாட்டம் தரித்த மகளுக்குப் பின்னால் வேகமாகநடந்து கொண்டிருந்தாள்.

''இந்த அறை எங்களுக்கு, இரண்டு படுக்கைகள் இருக்கு. அதனாலே எங்களுக்குச் சௌகரியமாக இருக்கும்'' என்று உறவினர்களும் நண்பர்களும் அறைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவசரப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பெட்டி, படுக்கை, கூஜா, டம்ளர், கூடைகளெல்லாம் ஒழுங்காக வந்து சேர்ந்தனவா என்று மேற்பார்வை யிடும் வேலை மாதங்கிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.


தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள்ளே சாமான்களை வைத்துவிட்டு ஆட்கள் போனதும் அவைகளை ஒரு முறை எண்ணிப் பார்த்தாள். ஜயந்தியின் [illegible] பொருட்கள் கொண்ட வி.ஐ.பி. பெட்டி உள்பட எல்லாம் சரியாக வந்து சேர்ந்துவிட்டிருந்தன. பெரியம்மா சுமதிக்குப் பஸ் பயணம் என்றாலே கால்கள் வீங்கிக் கொண்டுவிடும் என்பது அவளுக்குத் தெரியும்.

பரபரப்புடன் ஒரு பெட்டியைத் திறந்து சுத்தமானதொரு விரிப்பை எடுத்து அறைக்குள் கிடந்த படுக்கையின் மீது விரித்துத் தயாராக்கினாள்.

'அப்பாடா! ஒரு பத்து நிமிஷமாவது படுத்துக்கிறேன். ராத்திரி சாப்பாட்டுக்கப் பறந்தான் பரிசமும், நலங்கும் வைச்சுக்கப் போறாங்க. என்னாலே மண்டபத்துக்கும் இந்த அறைக்கும் பல தடவை நடக்க முடியாது. நீ ஒரு டிபன் செட்டிலே சாப்பாட்டை எடுத்து வந்து எனக்குப் பரிமாறிட்டு, பிறகு போய் நீ மத்தவங்களோட சாப்பிட்டுட்டு வரலாம். 'அப்படியே பெரியப்பா எந்த அறையிலே தங்கி யிருக்கார்னு கண்டுக்கிட்டு வந்துடு. எங்களுக்கு அடுத்தபடியா இருக்கிற அறையை எடுத்துக்கோங்கன்னு கரடியாக் கத்தியிருக்கேன். ஒரு அவசரம் போதுக்கு இவரைத் தேடணும்னா...'' பெருமூச்செறிந்தபடி கட்டிலின் மீது சாய்ந்து கொண்டாள் சுமதி.

''நான்கூட அங்கே போகப் போறதில்லை. உங்களோடேயே இங்கேயே சாப்பிட்டுக்கிறேன். இப்போப் பிடிச்சு எல்லோரும் என்னை முறைக்க வேணாம்.'' ஜயந்தி பிடிவாதம் செய்தாள்.

பெரியம்மாவின் உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அவள் பொரிந்து கொட்டிவிடுவாள். மாதங்கி அவசரமாக முகத்தைக் கழுவித்



லக்ஷ்மி

துடைத்துக் கொண்டு, பொட்டு வைத்துக் கூந்தலை வாரி முடித்துக் கொண்டாள். பஸ் பயணத்தில் அலங்கி விட்டிருந்த புடவையை விட்டுத் தன் சிறு பெட்டியில் கொண்டு வந்திருந்த வாயில் சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

அது சமயம் மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஓர் இளம் பெண் உள்ளே வந்தாள்.

''எல்லாரையும் முதல்லே சாப்பிட வரச் சொன்னுங்க அத்தை. பெண்களுக்குத் தலைக்கு வச்சுக்கப் பூக் கொடுத்து அனுப்பி யிருக்காங்க...'' புன்னகைத்தபடி கையில் சுமந்து வந்த மல்லிகைப் பூ பந்தொன்றை மேஜையின் மீது வைத்தாள்.

''கல்யாணப் பெண்ணைப் பார்க்கணும்... நீங்கதானே சம்பந்தியம்மா?'' கேட்டுக் கொண்டு நின்று விட்டாள் அவள்.

சுமதி திரும்பிப் பார்த்தாள். அருகில் உட்கார்ந்திருந்த மகளைக் காணவில்லை. குளியலறைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே குழாயில் தண்ணீர் ஓடும் சப்தம் கேட்டது.

''குளிக்கிறு. பஸ்ஸிலே வந்த களைப்பு வேறே... சித்த பொறுத்துப் பரிசம் இருக்கே அப்போ பார்க்கலாம்!'' எரிச்சலை அடக்கிக் கொண்டு மெலிதாய்ச் சிரித்தாள். வந்த வளின் முகம் சுருங்கிப் போனது.

''சரி வரேன்.... சாப்பிட மண்டபத்துக்கு வந்துடுங்கோ.'' அவள் விரைந்துவிட்டாள்.

சுமதி மேஜையிலிருந்த பூப்பந்தை அசட்டையாகப் பார்த்தாள். அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ''சம்பந்தியம்மா பலே கருமியா இருக் காங்களே. ஒரு பூப் பந்திலே பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்துட்டு நாம எல் லாரும் வச்சுக்கணும்னு அனுப்பியிருக் காங்க. மாதங்கி! நீ ஒரு காரியம் செய்! போய் அவங்களைப் பார்த்து, பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்யக் கொஞ்சம் தனிப் படப் பூ வாங்கிட்டு வரச் சொன்னேன்னு சொல்லு...'' என்று உத்தரவிட்டாள்.

மாப்பிள்ளை வீட்டவர்கள் தங்கியிருந்த பகுதிக்கு வந்ததும் மாதங்கிக்கு ஒரே தயக்கம்.

சம்பந்தி அம்மாள் எந்த அறையில் தங்கி யிருக்காங்க என்று கேட்டுக் கொள்ளவில்லை.

முதல் இரண்டு அறைகளின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. உள்ளே ஆண்களின் பேச்சுக்குரல் கேட்டது. மூன்றுவது அறைக் கதவு ஒருக்களித்த நிலையில் திறந்து வைக் கப்பட்டிருந்தது. அதன் முன்னல் சிறிது அச்சத்துடன் நின்ருள். உள்ளே யிருந்து விசிறி சுழலும் சப்தம் மட்டுமேதான் வந்தது.




மெல்ல விரல்களால் கதவை லேசாகத் தட்டினாள்.

''யார் அது?'' அதட்டலாக எழுந்த ஆண்குரலைக் கேட்டதும் அதிர்ந்து போய் விட்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவனைக் கண்டதும் முகம் சிவந்து — நெஞ்சு பதறப் பேசத் தோன்றாது மௌனியாகி விட்டாள். நீல ஷர்ட்டும் பட்டுக் கரை வேஷ்டியுமாக மண்டபத்துக்குக் கிளம்பத் தயாராகி விட்டிருந்த ஹர்ஷன் பெண் பார்க்க வந்த அன்று இருந்ததை விடத் திடீரென்று ஒரு பிடி உயரமாகி விட்டது போன்ற மலைப்பு அவளுக்கு.

''சம்பந்தி அம்மாளைப் பார்க்கணும்...'' மென்று விழுங்கினாள்.

காலோடு தலைவரை அவளை உற்றுப் பார்த்த ஹர்ஷன் சிரித்து விட்டான்.

''ரொம்ப அவசரமோ? அந்தக் கடைசி அறையிலே இருக்காங்க... போய்ப் பார்''



''ஏற்கெனவே பிறந்த உன் குழந்தைகளுக்கு, அல்லி, தாமரை, மல்லி, முல்லை, கனகாம்பரம், சரோஜா என்று பெயர் வச்சியே! இதுக்கு?''
''டிசம்பர் பூ!''

கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்று விட்டான். இன்னும் கொஞ்ச நேரம் அவன் சிரித்துக் கொண்டு பேச மாட்டானா? இன்னும் ஒரு சிலவினாடிகள் அவன் அவள் எதிரே நின்று கொண்டிருக்கக் கூடாதா?... ஒரு வினோதமான ஏக்கம் உள்ளத்தில் எழுவதை உணர்ந்தாள்.

சே! இதென்ன ஆசை... இன்னும் கொஞ்ச நேரத்திலே பரிசம். விடிந்தால் கல்யாணம். நாளை இந்த நேரத்தில் ஜயந்தியோட தேன் நிலவுக்குப் புறப்பட்டுவிடுவான்.... ஜயந்திக்குக் கணவனாகப் போகிறவனைப் பார்த்து இப்படி வக்கிரமாக ஒரு ஆசையா?....

உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே குலுக்கிய இனங்காணாத உணர்வை உதறி விட்டுக் கொண்டு அவள் அந்தக் கடைசி அறைப் பக்கம் வந்தாள். அறையின் கதவு மூடியிருந்தது. சிறிது தயங்கிவிட்டு மெல்லத் தட்டினாள். கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்ட சம்பந்தி அம்மாள் கஸ்தூரி அவளை வியப்போடு பார்த்தாள்.

சரிகைக் கரை போட்ட காஞ்சிபுரப் பட்டுச் சேலையில் கழுத்தும் காதும் மின்னச் சம்பந்தி அம்மாள் பந்தலுக்கு வேண்டிய அலங்காரத்தில் பாந்தமாகவே இருந்தாள்.

''உன்னை நான் இதுக்கு முன்னாடி பார்த்திருக்கிறேனே? ஆமாம்! இப்ப ஞாபகம் வருகிறது. நீ மிஸ்டர் தயானந்தின் தம்பி மகள்தானே... அப்படித்தான் அன்னிக்கு அறிமுகம் செய்து வைச்ச நினைவு... உள்ளே வாம்மா!'' பரிவுடன் அழைத்தாள்.

கம்மென்று அறைக்குள்ளே சந்தனம்—மல்லிகையின் கலவை வாசனை. கல்யாண மண்டபத்துக்குள் புகுந்து விட்டதுபோன்ற நினைவில் ஏக்கம் நெஞ்சை இறுக்க உள்ளே சென்றாள்.

''பெண்ணுக்குத் தலை அலங்காரத்துக்கு பூ வாங்கிட்டு வரச் சொன்னாங்க'' — மூலையிலிருந்த பூக்கூடையைப் பார்த்தபடி சொன்னாள்.

''அனுப்பி வைக்கத்தான் நினைச்சேன். அதுக்குள்ளே ஆயிரம் வேலைகள். வேண்டிய பூவை எடுத்துட்டுப் போ'' சொல்லிக் கொண்டே பந்து பந்தாக மல்லிகை, கனகாம்பர மலர்களை ஒரு தட்டில் நிறைத்து அவளிடம் கொடுத்தாள். ''நீயும் நிறைய வச்சுக்கொண்டு வாம்மா'' — புன்முறுவலித்தாள் கஸ்தூரி.

பூத்தட்டைக் கொண்டு வந்து அறைக்குள் வைத்துவிட்டு நிமிர்வதற்குள் பெரியம்மா படுக்கையிலிருந்து முனகினாள். ''சட்டுனு போய்ச் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வந்துடு. பிறகு மத்த விஷயங்களைக் கவனிக்கலாம்..'' நிற்க விடாது அவளை அடுத்த பணிக்கு ஏவினாள்.

கல்யாண மண்டபத்துக்கு டிபன் செட்டைத் தூக்கிக் கொண்டு நடந்த மாதங்கியின் மனம் கனத்தது.

அவளுக்கு மட்டும் பெற்றோர்கள் உயிருடன் இருந்திருந்தால் இப்படி ஒரு எடுபிடி ஆளாகப் பெரியம்மாவுக்கு நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருப்பாளா?

பெண் பார்க்க வந்த அன்றே அவளுக்குச் சம்பந்தி அம்மாள் கஸ்தூரியைப் பிடித்து விட்டிருந்தது. தாயைப் பார்ப்பது போல ஒரு தனி அன்பு மனத்தில் சுரந்ததை உணர்ந்தாள்.

''பிள்ளையின் தாயார் படிச்சவங்க. வேலை பார்த்துக் கொண்டிருக்காங்க...'' பெருமையாகப் பேசினாள் சுமதி.

''வேலைக்குப் போகும் மாமியாரா? எனக்கு வேண்டாம். வீட்டு வேலை முழுவதையும் என் தலையில் தள்ளிவிட்டுப் போயிடுவாங்க'' எடுத்த எடுப்பிலேயே ஜயந்தி முட்டுக்கட்டை போட்டாள்.

''மாமியாரோட இருக்கப் பிடிக்கலேன்னு நீ உன் புருஷனோட தனிக் குடித்தனம் செய்யப் புறப்பட்டு விடறது. கல்யாணத்துக்குப் பிறகு சிந்திக்க வேண்டிய சங்கதி. மாப்பிள்ளையைப் பார்த்துட்டுப் பேசலாம்.'' அம்மா அதட்டி மகளை அடக்கிவிட்டிருந்தாள்.

அடுத்த படியாக அவர்கள் வீட்டுக்குப் பையனைப் பார்க்கப் போயிருந்தவர்கள்

ஒரே
டலக்ஸ்
டிவி TS62

ரான உன்னத ஹை-ஃபை
ஒலிக்கு 10 வாட் ஒலிபெருக்கி
யும், 20 செ.மீ. டியூயல் கோன்
லபீக்கரும் கொண்ட ஒரே
லக்ஸ் டிவி சாலிடெர் TS62.
இத்துடன் உங்கள் ரெக்கார்டு
பிளேயர், டேப் ரெக்கார்டர்,
எஃப்எம்/ஏஎம் (FM/AM) டியூனர்
முதலியவற்றை இணைத்து,
டிவியில் நிகழ்ச்சி இல்லாத
நேரங்களிலும் சாலிடெர் டிவியை
உபயோகிக்கலாம்.

செய்தி வாசிப்பவரின் கண்
இமைகள் கூட தெளிவாகத்
தெரியும் படத்தோற்றம். இதில்
சாலிடெருக்கு நிகர் சாலிடெர்
ஒன்றே. வார 7 நாட்களிலும்
சர்வீஸ் வசதி உண்டு. சிறந்த
பராமரிப்புக்கு காஞ்சீபுரத்திலும்
ஒரு சர்வீஸ் சென்டர்.

ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ்
பி. லிட்.,
சென்னை-600 020.
சர்வீஸ் போன்: 412642



HE/189

சாலிடெர்

திரும்பியபோது வாயூறிப் போனுர்கள். பெரியப்பா மிகவும் சந்தோஷமாகத் தலை ஆட்டினுர்.

"ஹர்ஷன்னு பேர். அதுக்கு ஏத்தாப்பல ராஜாவாட்டமா பையன் நல்லாவே இருக்கான். நல்ல படிப்பு. கைநிறையச் சம்பளம். தாயாருக்கு ஒரே பிள்ளை. கார்—வீடுன்னு வசதியான குடும்பம். வரதட்சிணை வாங்கற பழக்கம் இல்லையாம். அவங்களுக்குப் பெண்ணைப் பிடிச்சுட்டா நமக்கு இது பெரிய அதிர்ஷ்டம்னு சொல்வேன்" -ஆர்ப்பரித்தார்.

"'பையனுடைய போட்டோ—இருந்தாக் கொடுங்க. கிராமத்திலிருக்கிற என் மாமாவுக்கு அனுப்பி வைக்கணும். வீட்டுக்குப் பெரியவர். அவர் ஆசி ரொம்ப முக்கியம்'னு சொல்லி வாங்கிட்டு வந்திருக்கேன். ஜயந்தி முதலில் போட்டோவைப் பார்த்துக்கிட்டப் பிறகு பேசிக்கலாம்." சவால் விடும் தோரணையில் சட்டைப் பையிலிருந்து ஒரு புகைப் படத்தை முன்னறை மேஜை மீது வைத்தார்.

நாற்காலியில் சாய்ந்தபடி கதைப் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்து விட்டிருந்த ஜயந்தி சட்டென்று எழுந்து வந்து ஆவலுடன் அதைப் பார்க்க முற்படவில்லை.

ஆனுல் மாதங்கியின் ஆவலைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

அசட்டையாகப் படத்தைப் பார்த்துவிட்டு ஜயந்தி எழுந்து உள்ளே போய்விட்டாள். யாரும் இல்லாத சமயம் மெல்ல அதை எடுத்து மாதங்கி பார்த்தாள்.... பார்த்துக் கொண்டே நின்று விட்டாள்.

"விளக்கை அணைக்காம முன்னறையிலே என்ன செய்யறே?" — பெரியம்மா கூவிய போதுதான் விழிப்பு ஏற்பட்டது. புகைப் படத்தைப் பார்த்தபோதே அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டிருந்தது.

பெண் பார்க்க அவனும் தாயாரும் மற்றவர்களுடன் வந்தபோது உள்ளே நுழைந்தவனைக் கண்டு அப்படியே மெய் மறந்து மயங்கிப் போனுள் மாதங்கி.

ஆனுல் அவனுக்கு ஜயந்தியை ரொம்பப் பிடித்துப் போயிற்று. உடனடியாகத் திருமண நாள் வைத்தாகி விட்டது. விரைவில் திருத்தணியில் கல்யாணம் என்றும் ஏற்பாடாகி விட்டது. அந்தச் சில தினங்களில் அவன் இருமுறை அவர்கள் வீட்டுக்கு வந்து போனுன்.

எத்தனையோ தடவைகள் தொலை பேசியில் ஜயந்தியை அழைத்துப் பேச முற்பட்டான்.

ஆனுல் ஜயந்தி... வேடிக்கையான பெண். பட்டும் படாமலும் மிகவும் அசட்டையாக வல்லவோ இருக்கிறுள்? ஏன்?

சாப்பாடு முடிந்ததும் அடுத்தபடியான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.

"பரிசம் போடக் காத்திருக்காங்க. பெண்ணை அழைச்சிக்கிட்டு எல்லோரும் மண்டபத்துக்கு வாங்க" — அதே இளம் பெண் ஓடிவந்து அறிவித்தாள்.

இரவு நிகழ்ச்சிகளுக்கென்று தயாராக வைத்திருந்த புடவையைப் பெட்டிக்குள்ளிருந்து மாதங்கி எடுப்பதைப் பார்த்த பெரியம்மா எரிந்து விழுந்தாள்.

"உன் அலங்காரம் பிறகு இருக்கட்டும். ஜயந்தி தன் தோழி தலையலங்காரம் செய்துவிடுவான்னு சொல்லிட்டுத் தலை சாமான்—பூ எல்லாத்தோடும் போனவள் இன்னும் வரலை. நாழியாச்சுன்னு சொல்லிச் சீக்கிரம் அலங்காரத்தை முடிச்சுட்டு வரச் சொல்லு.... முதல்லே நாங்கள்ளாம் மண்டபத்துக்குப் போயிடறோம். நீ உடுத்திக்கிட்டுப் பத்திரமாக் கதவைப் பூட்டிக்கிட்டு வந்து சேர். புரிஞ்சுதா?" அதட்டினுள்.

ஏழாவது எண் அறையைத் தொட்டதும் திறந்து கொண்டது. ஆனுல் அங்கே யாரும் இல்லை. பதற்றமாக வரிசையாக இருந்த ஒவ்வொரு அறையிலும் தேடினுள். ஜயந்தியை எங்குமே காணவில்லை.

எங்கே போயிருப்பாள் இந்தச் சமயம்? மாதங்கிக்குப் பயத்தில் வாய் உலர்ந்து போயிற்று. மார்பு படபடத்தது.

"என்னம்மா... என்ன இங்கே நின்னுக்கிட்டு?...." விசாரித்தபடி அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு வெளிப்பட்ட பெரியப்பா கதவைப் பூட்டினுர்.

"ஜயந்தி அக்காவைத் தேடிக்கிட்டிருக்கேன்....."

"என்னம்மா சொல்றே?"

"தலைக்கு ஜோடனை செய்துகிட்டு வரத் தன் சிநேகிதியின் அறைக்குப் போவதாகச் சொல்லிட்டுப் போன ஜயந்தி அக்காவை அங்கே காணலை. எங்கேயுமே காணலை... தேடித் தேடி ஓஞ்சு போனேன்." மாதங்கிக்கு அச்சத்தில் வார்த்தைகள் தடுமாறின.

"நிசமாகவா சொல்றே?..." திகிலில் உறைந்து போய் நின்று விட்டார், பெண்ணைப் பெற்ற தந்தை தயானந்தன்.

(தொடரும்)



கமலா: "பண விஷயத்துல எங்க வீட்டுக்காரர் பொறுப்புதான். நான் தலையிடவே மாட்டேன்."

விமலா: "அப்படியா!"

கமலா: "ஆமா.. என் இஷ்டத்திற்கு எனக்கு வேண்டியதை வாங்கிடுவேன். பணம் கொடுக்க வேண்டியது அவர் பொறுப்புத் தான்."

-ஆர். ஸ்ரீனிவாசன்



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி, தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ, இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்' ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்
❋ கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை

A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1-ம் நெம்பர்	நேரில் பெறலாம்
ரூ. 350-00	250-00	175-00	115-00	90-00	75-00	V.P.P.யிலும் பெறலாம்

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள்

சென்னை-600 001. 3-ந் தேதி ஹோட்டல் ரோலக்ஸ். போன்: 24238. 90, NSC போஸ் ரோடு, பூக்கடை எதிரில். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

சென்னை-600 002, 4 முதல் 8 ந் தேதி வரை. ராமச்சந்திரா லாட்ஜ், போன்: 846526 6, அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். காலை 7 முதல் இரவு 7 மணி வரை.

சென்னை-600 004. 1 ந் தேதி முதல் 2 ந் தேதி வரை நியூ உட்லண்ட்ஸ். போன்: 83111. எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர். காலை 8 முதல் பகல் 1 மணிவரை. மாலை 3 முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, போன்: 25783. காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி: 14ந் தேதி. மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து, காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர்: 14ந் தேதி. ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

ஈரோடு: 15ந் தேதி. ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை: 21, 22, 25, 26 தேதி: மணீஸ் கேப் (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி: 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி.சி. ரோடு, காலை 9 முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23, 24, தேதி. நெல்லை லாட்ஜ் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள்:

விழுப்புரம்: 3ந் தேதி. வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு, காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி. ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம்: 4ந் தேதி. ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம்: 5ந் தேதி. தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்; 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர்: 6ந் தேதி. அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தேனி: 21ந் தேதி. பாண்டியன் லாட்ஜ். காலை 8 மணி முதல் பகல் 1 மணி வரை.

பெரியகுளம்: 21ந் தேதி. உடுப்பி ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

திண்டுக்கல்: 22ந் தேதி. ஆரிய பவான் லாட்ஜ் பழனி ரோடு. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

விருதுநகர்: 23ந் தேதி. ஹோட்டல் ஆஞ்சநேயா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம்: 23ந் தேதி. அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில்: 24ந் தேதி. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு, காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி: 25ந் தேதி. பார்வதி லாட்ஜ் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

தலைமை அலுவலகம்:


சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007

கழுத்தில் விழுந்த மாலை



லக்ஷ்மி

2

கல்யாண மண்டபத்தில் சாப்பாட்டுப் பகுதியைக் கஸ்தூரியின் அண்ணன் வேதாசலம் கவனித்துக் கொண்டிருந்தார். இருந்தாலும் பெண் வீட்டவர்களைச் சீராகக் கவனித்து உபசரிக்க மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள் கஸ்தூரி. கல்யாணத்துக்குச் சில நாட்கள் முன்னலேயே அவளுள் ஒரு கலவர உணர்வு உருவாகி விட்டிருந்தது. மகனிடமோ, அவளுக்கு உதவ வேண்டி மதுரையிலிருந்த தமது குடும்பத்துடன் வந்திருந்த அண்ணனிடமோ பேசித் தெளிவு காண அச்சமாக இருந்தது.

ஹர்ஷன் அந்தக் கார் விபத்துக்குப் பின்னர் பிழைத்து எழுந்திருந்தால் போதுமென்று அவள் வேண்டாத தெய்வம் பாக்கியிருக்கவில்லை. காயங்கள் குணமாகி நன்ருக நடமாடத் தொடங்கி விட்டிருந்த சமயம் மறுபடியும் அவனுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. இது அதிர்ச்சி தரும் பேரிடி.

அவனது அலுவலகத்திலே வேலை பார்த்த ஊர்மிளாவுக்கும் அவனுக்கும் இரண்டாண்டு காலமாக ஏற்பட்டிருந்த நட்பு காதலாகவே மலர்ந்திருந்தது.

கணவனுக்குப் பின்னர் மகனைக் கண்ணின் கருமணியாகக் காத்து வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கியிருந்தாள் கஸ்தூரி.

பெண் உரிமைப் போராட்டங்களில் முதல் கொடி பிடித்துக் கொண்டு நடக்கும் ஆவேசக்காரி. அவர்கள் வசித்த பகுதியில் இயங்கிய மாதர் சங்கத் தலைவி. வரதட்சிணைக் கொடுமை ஒழிய வேண்டும் என்று வாய் அலுக்காது பேசுகிறவள். மகனுடைய காதல் திருமணத்துக்கு ஒப்புதல் கொடுக்காது முட்டுக்கட்டை போட இயலுமா?

ஊர்மிளா — ஹர்ஷன் திருமணத்துக்கு ஒத்துக் கொண்டு விட்டிருந்தாள். ஆனால் மனப்பூர்வமாக இசைந்தாள் என்று சொல்லி விட முடியாது.

ஊர்மிளா அழகி. படித்தவள். வேலை பார்ப்பவள். வசதியான வீட்டுப் பெண் என்ற பல தகுதிகள் இருந்தன.

தங்களை விட உயர்ந்த இடத்திலிருந்து வரும் ஊர்மிளா தனக்கு உகந்த மருமகளாக இருப்பாளா என்றதொரு சந்தேகம் அவளுக்கு இருந்தது. ஊர்மிளா அவர்களது வீட்டுக்கு வந்து போன இரண்டு தடவைகளிலும் நடந்த சிறு சம்பவம் அதனை உறுதிப்படுத்தி விட்டது.

தன் வருங்கால மருமகளிடம் கஸ்தூரி பொறுப்புணர்ச்சியைத்தான் முக்கியமாக எதிர்பார்த்தாள்.

பெண்களுக்கு அது மிகவும் அவசியம் என்ற அழுத்தமான கொள்கை அவளுக்கு இருந்தது.

பொறுப்பே இல்லாது எதற்கும் சிரித்து மழுப்பும் இளம் பெண்ணை அவளுக்குக் கட்டோடு பிடிக்காது.

ஊர்மிளா முதல் தடவையாகத் தன்னைச் சந்திக்க வீட்டுக்கு வந்தபோது அவள் கவனித்து விட்டிருந்தாள். பொறுப்புணர்வுக்கும் அந்தப் பெண்ணுக்கும் காத தூரம் என்று கண்டுவிட்டாள். சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு, காப்பி டிபன் சாப்பிட்டதும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட ஊர்மிளா தன் கைப் பையை மேஜையின் மீது வைத்துவிட்டு மறந்து போய்விட்டாள்.

சிறிது பொழுதில் தொலைபேசியில் கஸ்தூரியைக் கூப்பிட்டாள். ''சாப்பாட்டு மேஜை மீது பையை வச்சுட்டு வந்துட்டேன் அம்மா. நகைக் கடையில் பழுது பார்க்கக் கொடுத்தனுப்பின பவள நெக்லசும், ஆபீஸ் அலமாரிச் சாவியும், காலையில் பாங்கிலிருந்து எடுத்த பணமும் அதில் இருக்கு... இப்படி மறந்து... ஹி...ஹி...'' வேடிக்கையாக மறுபுறத்திலிருந்து சிரித்தாள் ஊர்மிளா.

கஸ்தூரிக்குச் சிரிப்பு வரவில்லை. கோபந்தான் வந்தது. ஃபையை எடுத்துக்கொண்டு ஊர்மிளாவிடம் ஒப்படைக்க உடனடியாக ஓடின மகனின் அவசரத்தை எண்ணி எரிச்சல் பட்டாள்.

இன்னெரு முறை வந்திருந்தபோது முகங் கழுவக் குளியலறைக்குச் சென்றவள், கைக்கடிகாரத்தை வாஷ்பேசின் அருகே கழற்றி வைத்து விட்டுப் போய்விட்டிருந்தாள். அதை அவளிடம் ஒப்படைக்க மறுபடியும் ஹர்ஷன் ஓடவேண்டியிருந்தது.

இந்தப் பெண் ஊர்மிளா தன் குடும்பத்துக்கு ஏற்ற மருமகளா? என்று உள்ளூற அவள் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில் தான் அந்த அதிர்ச்சிச் செய்தி கிடைத்தது.

நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் காலை ஊர்மிளாவின் தந்தை — தமது அந்தஸ்தைக் கைவிட மனமின்றித் தம் வீட்டிலிருந்து கொண்டே ஹர்ஷனைத் தொலைபேசியில் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி விட்டார். வேண்டாத ஒரு சாமானைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிவது போல அசட்டை [illegible] பேசிவிட்டார்.

'ஊர்மிளாவுக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லையாம். அதனால் நிச்சயதார்த்தத்தை நிறுத்திவிட்டேன்.'

இந்த இடியை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மிகவும் நெருங்கிப் பழகிவிட்டு, காதல் என்று கதை அளந்துவிட்டுப் பலர் முன்னிலையில் அவனை அவமானப்படுத்திவிட்ட ஊர்மிளாவின் துரோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

காய்ச்சல் அடித்தவன் போல – பித்தம் பிடித்தவன் போல – எதிலும் நாட்டமின்றி வேலையினின்று லீவு எடுத்துக் கொண்டு ஊர் ஊராக அவன் சுற்றிக் கொண்டிருந்தான்.

ஊர்மிளாவுக்கு வேறு இடத்தில் கல்யாணம் ஏற்பாடாகி விட்டது என்று தெரிந்ததும் அவன் யாரிடமும் பேசாது பல நாட்கள் மௌனமாக இருந்தான். அப்படிப் பட்டதோர் அதிர்ச்சி அந்தச் சம்பவம்.

ஊர்மிளா கல்யாணமாகிப் புக்ககம் போய் ஒரு குழந்தைக்குத் தாயான பின்பு கூட அவன் அந்தத் துயர அனுபவத்தினின்று பூரணமாக மீளவில்லை.

அதற்குப் பின்னர் அவன் கல்யாணம் என்ற பேச்சையே கேட்க வெறுத்தான். கஸ்தூரிக்கு வாயைத் திறக்கவும் பயமாகவே இருந்தது. வருடங்கள் இரண்டு முழுதாகக் கழிந்த பின்னர்தான் அந்தப் பழைய களையைச் சிறிது அவன் முகத்தில் காண முடிந்தது.





துணுக்கு வேட்டை

இந்த இதழ் கல்கியில் இடம் பெற்றுள்ள
துணுக்குகளைத் தேர்ந்தெடுத்துள்ளவர்
திரு கோ. கலிவரதன் பி.ஏ. பி.எல்.
உதவி திருமதி சிவகாமி கலிவரதன்.
''உங்கள் தமிழ்ப்பேச்சைக்
கேட்டுப் பொறுமையும் பெருமையும் அடைகிறேன்''
என்று மாணவர் கலிவரதனைக் கட்டித்தழுவிக்
கொண்டு சொன்னவர், அண்ணாமலைப் பல்கலைக்
கழகத்தின் துணைவேந்தராயிருந்த ஸர். சி. பி.
திருச்சி மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில்
பிறந்த திரு கலிவரதன், 'மிசா' வில் ஐந்து
மாதக்காலம் சென்னை சிறையில் இருந்தபோது
அந்த அனுபவங்களை வைத்து எழுதிய சிறு நூல்
''ஒன்பதாம் நெம்பர் பிளாக்''.
கல்லூரி நாட்களில், 1954 முதலே கவிதை,
கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் தொடர்ந்து முதல்
பரிசுகளே பெற்றவர். தமிழரசு கட்சியின் மாநில
செயலாளராக இருந்து கொண்டு சட்டக் கல்லூரியில்
படித்த போது நடத்திய வார இதழ்
'தமிழ்ச் சுடர்'. அதன் பின் ஜனதா கட்சியின்
நாளிதழான 'மக்கள் அரசு'க்கு நிர்வாக
ஆசிரியராகவும் இருந்தார்.
இந்த வழக்கறிஞர் இப்போது தமிழக பாரதீய
ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர். இரவு
இரண்டு மணி வரை பயனுள்ளவற்றைப்
படிக்க வேண்டு மென்கிற தாகமுடையவர்.

-யெஸ்பால்
போட்டோ:- பாபு

குடும்பத்து நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த வரன் அது. தயானந்தின் குடும்பத்தைக் கஸ்தூரிக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது. மகனுக்குப் பிடிக்க வேண்டுமே என்று தன் குலதெய்வத்தை வேண்டிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

வேண்டாவெறுப்பாகத் தாயாரின் வற்புறுத்தலைத் தாங்க முடியாதுதான் ஹர்ஷன் பெண்ணைப் பார்க்க வந்தான்.

நல்ல வேளை அவனுக்கும் பெண்ணைப் பிடித்துவிட்டிருந்தது. கல்யாணத்துக்குச் சம்மதமும் தெரிவித்து விட்டான். அவ்வளவு தான். கஸ்தூரிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. மதுரையிலிருந்து அண்ணனை வரவழைத்துச் சூட்டோடு சூடாக விரைவில் திருமணத்தை முடிக்க அவசரப்பட்டாள். பெரிய விபத்தினின்று மகன் உயிர் பிழைத்ததற்கும், ஊர்மிளாவின் துரோகத்தை மறந்து அம்மா பார்த்துக் கொடுத்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்ததற்கும் ஒட்டு மொத்தமாக நன்றி செலுத்தத்தான் திருத்தணியில் கல்யாணம் நடத்துவதாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

கல்யாணத்துக்குச் சில தினங்களுக்கு முன்னால் கடைத் தெருவில் வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு கடற்கரை ஓரமாகத் தானே காரை ஓட்டிக் கொண்டு வந்தவள் திடுக்கிட்டுப் போனாள். காந்தி சிலையருகே பெல்பாட்டம், குர்தாவில் அவளது வருங்கால மருமகள் ஜயந்தி கழுத்தில் முடி வழிந்து கொண்டிருந்த ஒடிசலான ஒரு வாலிபனுடன் நெருக்கமாக நின்று பேசிக் கொண்டிருந்தாள்.

வேறு யாராவது சொல்லி யிருந்தால் நம்பியிருக்க மாட்டாள். தன் கண்களாலேயே பார்த்துவிட்ட காட்சி.

ஊர்மிளாவின் கதைதான் அப்படி முடிந்தது என்றால் இந்தப் பெண் ஜயந்தி?

சிந்திக்க முடியாது குழம்பிப் போய் விட்டாள்.

கல்யாணத்தை மிக அருகில் வைத்துக் கொண்டு இந்தக் கலவரமான செய்தியை அவள் யாரிடம் சொல்ல முடியும்? என்ன செய்வது? ஏற்கனவே ஒரு முறை ஏற்பட்ட அவமானத்தில் அடிபட்டு உணர்வுகள் சிதைந்து மனம்உடைந்துவிட்டவன் ஹர்ஷன். அவனிடம் இதைப் பற்றிப் பேசுவது சாத்தியப்படாத சங்கதி. அண்ணன் பழங்காலத்து மனிதர். பெண்கள் சிரித்தாலே போச்சு என்று அலறிவிடும் ஆசாமி. அவரிடம் போய் சொல்வதும்சரிப்படாதகாரியம். யாரிடமும் பேசிப் பயன் இல்லை. இப்போது நேரமும் இல்லை. முருகன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அவள் மேற்கொண்டு காரியங்களைத் துரிதமாகக் கவனித்தாக வேண்டும். அதுதான் முக்கியம்.

சாப்பிட உட்கார்ந்திருந்த சம்பந்தி வீட்டவர்களின் கூட்டத்திலே கல்யாணப் பெண்ணைக் கண்களால் துழாவினாள். காணவில்லை.

சம்பந்தியம்மாள் சுமதியையும் பந்தியில் காணவில்லை.

சாப்பாடு நிறைந்த டிபன்செட்டைத் தூக்கிக் கொண்டு சமையற்கட்டிலிருந்து வெளிப்பட்ட மாதங்கி கஸ்தூரியைக் கண்டு நாணிப் புன்முறுவலித்தாள்.

''பெரியம்மாவுக்கு வர முடியலே — முட்டி நோவு. அதனால் சாப்பாட்டை அறைக்கே எடுத்துட்டுப் போறேன்.''

''அதுக்கென்ன பேஷாய்ச் செய். ஒண்ணையும் மறக்காம கேட்டு எடுத்துக்கிட்டுப் போ. ஆமாம், கல்யாணப் பெண் இன்னும் சாப்பிட வரலையே. உடனே பரிசத்துக்கு உட்காரணுமே. தெரியுமில்லையா?'' யாருக்கும் கேட்காத குரலில் வினவினாள் கஸ்தூரி.

''தலையலங்காரம் செய்ய நேரம் பிடிக்கும். அதனாலே அக்காவும் அங்கேயே சாப்பிட்டுக்கிறதாச் சொல்லித்து.''

நெற்றியில் கொப்பளித்த வியர்வைத் துளிகளை மெல்லக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள் கஸ்தூரி. மாதங்கிக்குத் தலையசைத்து விடை கொடுத்துவிட்டு மண்டபத்துக்குள் புகுந்தாள். அடிவயிற்றைப் பிசைந்த அந்தத் திகில் உணர்வு சிறிது அடங்கிப் போனது. அப்பாடா என்று பெருமூச்சு வந்தது. அண்ணன் கொடுத்த குரலுக்கு உதவ அறைக்குள்ளே விரைந்தாள்.

கல்யாணக் கூடத்திலே ஜமுக்காளத்தையும் பாய்களையும் பரபரப்பாக ஆட்கள் விரித்தனர். தேங்காய் — பழங்கள் — மிட்டாய் என்று தட்டுக்களைச் சுமந்து கொண்டு சுமங்கலிப் பெண்கள் பாயின் மீது வரிசை வைத்தார்கள்.

''பெண்ணைக் கூட்டிவர ஆளை அனுப்பு. மசமசன்னு நின்னுக்கிட்டிருந்தால்?...'' அடிக் குரலில் அண்ணன் தங்கையை அதட்டினார்.

''ஆள் அனுப்பியாச்சு. அவங்கள்ளாம் வரவேண்டியதுதான் பாக்கி. எந்த நிமிஷமும் வரலாம்....'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் கஸ்தூரி.

அங்கவஸ்திரத்தைக் கையில் பிடித்துக் கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் சம்பந்தி தயானந்த் ஓடிவருவதைக் கவனித்தாள்.

பகீர் என்ற உணர்வு நெஞ்சைக் கவ்வியது. 'இப்போ என்ன ஆச்சு? ஏன் இவர் இப்படி ஓடி வருகிறார்?'

''உங்களைத்தானே...இப்படி வாரீங்களா?'' மிக மெல்லிய குரலில் ரகசியமாக அழைத்த தயானந்தின் பின்னால் சாமான்கள் வைத்திருந்த அறைக்குள்ளே சென்றாள். உடம்பு முழுவதிலும் வியர்வை ஆறாக வழிவதை உணர்ந்தாள், நெஞ்சு படபடக்க மூச்சு திணற ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்தாள்,

''இந்தக் கடிதாசியை எழுதி வச்சுட்டு என் பெண் சென்னைக்குப் போய்விட்டாள்! நான் என்னம்மா செய்வேன்... நடக்கக் கூடாதது நடந்துடுச்சு....'' அவரது குரல் நடுங்கியது, சட்டைப் பையிலிருந்து ஒரு



மஹாராஷ்டிர மாநில சுற்றுலா இலாகா அங்குள்ள மலை வாசஸ்தலங்களுக்கு ஹனிமூன் வரும் புது ஜோடிகளுக்காக மரங்களின் மேல் குடிசைகள் கட்டிக் கொடுக்கத் திட்டம் போடுகிறது!
• டைம்ஸ் ஆப் இந்தியா
- அர்ஜுனன்

கடிதத் துண்டை எடுத்து அவளிடம் நீட்டினார் தயானந்த்.

அன்புள்ள அப்பா!

எனக்கு இந்தக் கல்யாணத்தில் சிறிதும் விருப்பமில்லை. உங்களுக்கு ஜாடையாகப் பல தடவைகள் சொல்லியும் புரிந்துகொள்ளாது என்னை வற்புறுத்தினீர்கள். காரியம் மிஞ்சுவதற்கு முன் தப்பிக்கொள்வதுதான் சிறந்தது என்ற முடிவில் நான் விரும்பியவரின் உதவியுடன் சென்னைக்குத் திரும்பிவிட்டேன். என்னை அங்கே ஓடிவந்து தேடுவதில் பயனில்லை. பம்பாய்க்கு நாங்கள் பயணப்பட்டுக் கொண்டிருப்போம். மன்னிக்கவும். —ஜயந்தி.

கஸ்தூரி கீழே விழுந்துவிடா வண்ணம் சுவரை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டாள், உயிரெல்லாம் போய் உடல் தக்கையாகிவிட்ட பிரமிப்பு.

இனி என்ன செய்யப் போகிறோம்? நண்பர்கள், உறவினர்கள் முன்னால் அவளுக்கு இப்படி ஓர் அவமானமா?

இந்த இரண்டாவது இடியை ஹர்ஷன் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறான்?... முருகா.! இப்படி ஒரு சோதனை எனக்கேன்? மௌனமாக அவள் மனம் அலறி அழுதது.

(தொடரும்)



வசந்த காலம்

1) கணவனைக் கையில் போட்டுக் கொண்டு மாமனார் மாமியாரைக் கஷ்டப்படுத்தினால் நம்ப பையனும் நம்மை அதேபோல் கஷ்டப்படுத்துவான்.

2) பெற்ற அப்பா அம்மா மனம் நோகும்படி ஒருவன் செய்தால் அவன் சந்தோஷமாக வாழ முடியாது.

இந்த அரிய நீதிகளைத் தவிர படத்தில் ஒன்றும் இல்லை. இடைவேளை வரை மருமகள் கொடுமை. இடைவேளைக்குப் பின் மருமகள் மாமியாராக மாறி அவளுக்கே கொடுமை. பழிக்குப் பழி வாங்குவதை ரசிப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தியேட்டரில் உட்கார்ந்திருப்பதே பெரிய கொடுமை.

சுருளிக்குக் கொஞ்சம் பெரிய ரோல். சுமித்ரா ஜோடி. கஷ்டப்படாத விஜயன். வனிதாவும், அருண் குமாரும் பரஸ்பரம் ஊமைகள் என்று நினைத்துப் பரிதாபப்பட்டுக் கொள்ளும் இடம் சுமார்.

டைரக்டர் காஜாவிடம் ஆக்கப் பூர்வமாய் எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை சிறிது சிறிதாய்ச் செத்து வருகிறது.

—நளினி சாஸ்திரி





daCunha-S-22 TM

மனசு ஊனமாகக் கூடாது

உடல் ஊனமுள்ளவர்களுக்கு மனத்தில் ஏதேனும் கோளாறு வர வாய்ப்பு உண்டா? அந்தக் கோளாறுகளுக்கான மாற்று என்ன? டாக்டர் விஜயகுமார்—சைக்கியாட்ரிஸ்டை—மனேதத்துவ நிபுணரைச் சந்திக்கிரேம். சன்னமான குரலில் பேசுகிருர்:

முதலில் கை கால் முடமானவனை எடுத்துக்கொள்வோம்? அவனுல் மற்றவர் மாதிரி விளையாட்டில் இயல்பாகக் கலந்துகொள்ள முடியாது. பிறர் போல் சர்வ சாதாரணமாக வளைய வர முடியவில்லையே என்ற ஏக்கம் கவ்விப் பிடிக்கும். காற்ருட நடந்து இயற்கை அளித்த செல்வங்களை ரசிக்க அவனுல் இயலாது. இதனுல் என்ன ஆகிறது? அவனுடைய மொத்தப் பொழுது போக்கும் வீட்டிலேயே அடைபட்டுப் போகிறது. செஸ், பிரிட்ஜ் போன்ற மனத்துக்கு வேலை கொடுக்கும் ஆட்டங்களிலேயே கவனம் திரும்புகிறது. போகப் போக, ஒரு தாழ்வு மனப்பான்மை அவனைப் பற்றுகிறது.

இது தவிர்க்க முடியாத ஒன்றல்ல. தவறு அவனிடம் மட்டுமல்ல. நம்மிடமும் உள்ளது. இயன்றவரை அவனுடைய உடற் குறைகளைப் பொருட்படுத்தாமல், மற்ற நிறைகளைப் போற்றிப் பழக வேண்டும். குறைகளைச் சுட்டிக் காட்டவே கூடாது. பள்ளிகள் கல்லூரிகளிலும் சரி; பொது இடங்களிலும் சரி, இவர்களையும் சமமாக மதிக்கும் மனப்பான்மை வளர வேண்டும். பொதுவாக, தாழ்வு மனப் பான்மையுடன் உலவி வருபவர்கள் ஒரு விதம் என்ருல், ஒரு சவாலாக ஏற்று வெற்றி காணுகிறவர்கள் வேறு விதம். They over react. ஒரு கை இல்லையா? அதனுல் என்ன? மற்ற கையை வைத்துக் கொண்டு என்ன செய்கிறேன் பார் என்று ஒரு வீம்புடன் காரியத்தைச் சாதிக்கிருர்கள். இதற்கெல்லாம் வீட்டில் பெற்ருேர்கள் அளிக்கும் ஊக்கமும், அங்கு நிலவும் நல்ல சூழ்நிலையும்தான் முக்கிய காரணம்.

போலியோவால் பாதிக்கப்பட்ட பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் சந்திரசேகர், இந்திய கிரிக்கெட் வரலாற்றிலேயே சரித்திரம் படைக்கவில்லையா? பெங்களூரில் கை, கால் முற்றும் பாதிக்கப்பட்ட ஒருத்தி, 'இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயன்ஸி'ல் படித்து, அமெரிக்காவில் பி.எச்.டி. செய்கிருர். இதற்கு அவர் தாயார் கொடுத்த ஆதரவே முக்கிய காரணம்.

இன்னெரு விஷயம். இது போல் குறை உள்ளவர்களுக்கு அதை ஈடுகட்டுவது போல் மற்ற உறுப்புகள் நிச்சயம் நன்ருகச் செயல்படும்.

கண் பார்வை மிகக் குறைவாக உள்ள சிறுவன். ஆனுல் அவனது ஞாபக சக்தியும், செவிக் கூர்மையும் மிக அபாரம். ஒரு தரம் தாயார் சொல்லிக் கொடுத்து விட்டால், அப்படியே தவருது எழுதி விடுவான். பரீட்சையில் ஓர் எழுத்துக்கூடப் பிசகாமல் எழுதினவுடன் ஆசிரியருக்கு அவன் மீது சந்தேகம் ஏற்பட்டு, 'காப்பி அடித்தான்' என்றெண்ணி வீட்டுக்கு அனுப்பிவிட்டார். தாயார் இதைக் கேள்விப்பட்டவுடன் பள்ளிக்கூடத்துக்கு வந்து ஆசிரியரிடம் வேறு பாடத்தில் கேள்வி கேட்கும்படி கூறினுள். அவன் மறுபடியும் தவறில்லாமல் எழுதினுன். ஆசிரியருக்கு நம்பிக்கை பிறந்தது.

இன்று அந்த மாணவன் ஒரு டாக்டர். ஒரு மனேதத்துவ நிபுணராக அமெரிக்காவில் பணிபுரிகிருன். சர்ஜனைப் போல அல்லது மற்ற பிரிவினரைப் போல இந்தப் படாது. ... காது கொடுத்துக் கேட்கும் அவகாசமும்தான் நிறையத் தேவை என்பதால் இதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

பிறவியிலேயே குழந்தை செவிடாயிருந்தால் துவக்க காலத்திலேயே டாக்டரை நாடிக் குறையை நீக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் குழந்தை ஊமையாகவும் வளரும். பேச்சு வருவதே கேட்பதை வைத்துத்தான்.

சமூகம் ஊனமுள்ளவர்களை ஓர் அங்கமாகப் பாவித்து மற்றவர்களைப் போல இயல்பாக நடத்தி, ஊக்கம் தரவேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயம் அவர்கள் தாழ்வு மனப்பான்மை இன்றி எல்லோரையும்போல வாழ்வார்கள்.

பேட்டி : தமயந்தி
படம் : சுபா போட்டோ

✖ டாக்டர் விஜயகுமார்



கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி

முன்கதை

திருத்தணியில் ஜயந்திக்கும் ஹர்ஷனுக்கும் மாப்பிள்ளை விட்டவர்களை எடுத்து நடத்தும் திருமணம். கல்யாணமண்டபத்தில் பெரியப்பா சுமதிக்கு எடுபிடி ஆளாக அல்லாடிக் கொண்டிருக்கிறாள் மாதங்கி. பெற்றோர்கள் உயிருடன் இல்லாததால் பெரியப்பா தயானந்தன் ஆதரவில் வளர்ந்து வருபவள் மாதங்கி. மாப்பிள்ளை விட்டார்கள் தங்கியிருந்த இடத்துக்குப் பெண்ணுக்குப் பூ வாங்கி வர வந்த மாதங்கி, மாப்பிள்ளைப் பையன் ஹர்ஷனைச் சந்திக்க நேரிடுகிறது! அவனோடு வெகுநேரம் பேசிக்கொண்டு இருக்கக் கூடாதா என்ற ஏக்கம் மாதங்கிக்கு. பிறகு அது எட்டாக்கனி என்ற நினைவும் எழுகிறது அவளுக்கு.

பரிசம் போடப்பெண்ணை அழைக்க நினைக்கும் போது ஜயந்தியைக் காணவில்லை!

சம்பந்தியம்மாள் கஸ்தூரி ஏற்கெனவே ஹர்ஷனுக்கும் ஊர்மிளாவுக்கும் நடக்கவிருந்த நிச்சயதார்த்தம் நின்று போய்த் தவித்து உருகியவள். பொறுப்பே இல்லாத ஊர்மிளாவைக் கஸ்தூரிக்குப் பிடிக்கவில்லையானாலும் ஹர்ஷனின் காதலுக்கு இடையூறாக நிற்க அவள் விரும்பவில்லை. ஆனால் ஊர்மிளாவின்தந்தையோ நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடக்கும் தருணத்தில் அந்தப் பேரிடியைத் தூக்கிப் போட்டுவிடுகிறார். ஹர்ஷனுக்கு ஒரே துயரமயம்! கல்யாணம் என்றாலே அவனுக்கு வெறுப்பு ஏற்படுகிறது! தாயாரின் வற்புறுத்தலுக்காகப் பிறகு ஹர்ஷன் ஜயந்தியை மணக்க முன் வருகிறான். பெரிய கார்விபத்திலிருந்து தப்பிய ஹர்ஷனுக்கு, ஊர்மிளாவின் துரோகத்திலிருந்து மீள்வதற்கு உதவிய முருகப் பெருமானின் திருத்தணித் தலத்தில் திருமணம் நடத்த முன்வருகிறாள் கஸ்தூரி.

திருத்தணி முருகன் திருத்தலத்தில் ஜயந்தியும் மற்றொரு பேரிடியை ஹர்ஷனுக்குத் தருகிறாள்! 'நான் என் காதலருடன் பம்பாய்க்குப் பயணப்படுகிறேன். இந்தக் கல்யாணத்தில் சிறிதும் விருப்பமில்லை!' என்று அறிவிக்கிறது அவள் கடிதம்.

பெண்ணின் தந்தை தயானந்தன் சம்பந்தியம்மாள் கஸ்தூரியிடம் இந்தத் துயரச் செய்தியைத் தெரிவிக்கிறார். சம்பந்தியம்மாள் கஸ்தூரி இந்த இரண்டாவது இடியை ஹர்ஷன் எப்படித் தாங்கிக் கொள்ளப்போகிறான் என்று தவிக்கிறாள்.

மேலே கதையைப் படியுங்கள்.

3

சம்பந்தி தயானந்த் தமது சட்டையைப் பற்றி மெல்ல இழுத்து 'இப்படி வாங்கோ' என்று மெல்லிய குரலில் காதருகே பேசியதைக் கேட்டு வேதாசலம் வியப்புடன் திரும்பினார்.

எப்பொழுதுமே இரைந்து பேசிப் பழக்க பட்டவர். ''இதென்ன கிசுகிசு? பரிச போடும் சமயத்தில் தயானந்த்தகராறு செய் நினைக்கிறானா? அவருக்கு ஆத்திரமும் கோ மும் தோன்றின.

'நகை போதாது – அது இதுன்னு ஏதே ஆரம்பிக்கப் போறான். அப்பவே சொல் னும்னுதான் இருந்தேன். இந்தக் காலத்தி கைநிறைய வரதட்சிணை, கார், பங்களான்னு கொடுத்து, பெண்ணையும் கொடுக்கப் பெற் வன் வரிசையில் நிற்கும்போது நாம் ஏ இப்படித் தாழ்ந்து வலியப் போகணும்னு கஸ்தூரி கிட்டக் கேட்கணும்னுதான் துடி சுக்கிட்டிருந்தேன். நேரமில்லை. எல்லா ஒரு அவசரம். என்னவோ கொள்கை னுட்டுப் பிடிவாதமா எல்லாத்தையும் த தலையில் போட்டுக்கிட்டா... இப்போ ச பந்தி ஒரு கொம்பிலே ஏறி உட்கார்ந் கொண்டு எல்லாரையும் விரட்டறானா?...'

கணப் பொழுதில் பலவும் எண்ணி வேதாசலம் வெகுண்டு முகத்தைச் சுளி தார்.

''என்ன விஷயம்? இங்கேயே சொல்லுங் பரவாயில்லை'' என்று அதட்டினார்.

''நாலு பேர் நடுவே பேச முடியாத சங்கதி உங்க தங்கச்சி கூப்பிடறாங்க''–மறுபடியு தயானந்த் காதுக்குள் மெல்லச் சொன்னார்.

அடிவயிற்றிலே சில்லென்ற உணர்வி அதிர்ந்து போனார் வேதாசலம்.

இடுப்பிலே இருக்கமாக சட்டை மீது கட் டிக்கொண்டிருந்த மேல் துண்டை அவிழ்த்துத் தோளில் உதறிப் போட்டுக் கொண்டார். மூச்சு நின்றுவிடும்போன்றதொரு படபடப் புடன் சாமான் வைத்திருந்த அறைக்குள் விரைந்தார்.

பழக்கூடை அருகே கிடந்த அரிசி மூட்டை மீது கஸ்தூரி உட்கார்ந்திருந்தாள். பக்கத் திலே அவளது புத்தம் புது காஞ்சிபுரப் பட்டுச் சேலை மீது தொட்டுக் கொண்டு ஒரு கரி பிடித்த 'அண்டா வைக்கப்பட்டிருந்தது.

''பத்திரம் – புடவைத் தலைப்பை இழுத் துக்கோ... கரி பட்டுடப் போறது'' – எச் சரித்தபடி அருகில் ஓடிவந்து நின்றார் அண் ணன்.

''மூஞ்சியிலே கரி பூசிட்டா அண்ணா! புடவையையாவது தோய்ச்சுச் சரிப்படுத் திக்கலாம். ஆனால்...'' அதற்கு மேல் பேச முடியாமல் கஸ்தூரிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

வெளிறடைந்துவிட்ட அவளது முகம்— நீர் ததும்பிய கண்களும் அவள் பேச்சும் ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பதை அறி வுறுத்தவே வேதாசலம் சாமான் அறைக் கதவைத் தாளிட்டுவிட்டுச் சகோதரி அருகே தரையில் வந்து உட்கார்ந்தார். சற்றுத் தள்ளியபடி சுவர் ஓரமாகத் தயானந்த் தவித் துக்கொண்டு நின்றார்.

தன்னிடமிருந்த அந்தக் கடிதத் துண்டை அண்ணனிடம் கொடுத்து அடக்க மாட்டாது விம்மி விட்டாள் கஸ்தூரி.

வேதாசலம் வேகமாக அதைப் படித்து விட்டுக் கோபத்துடன் தயானந்தை வெறித் துப் பார்த்தார்.

து நிஜமா? இப்படி எங்களை அவ
ப்படுத்தறதுக்கு அந்தப் பொண்
எத்தனை துணிச்சல்! பிடிக்காத
திலே கட்டிக் கொடுக்க உங்க பெண்ணை
ஏன் வற்புறுத்தணும்? இந்தச் சமா
தை நாங்க சும்மா விட மாட்டோம்.''
—வென்று கொஞ்சம் உரத்த குரலில்
ரமாகக் கத்திவிட்டார்.

அண்ணு! இப்போ இது சண்டை போடற
ம் இல்லே. மானம் போற சங்கதி.''
லில் குலுங்கினுள் தங்கை.

கஸ்தூரி... என்னத்துக்கு அழுகிறே...
ானம் நமக்கு மட்டுமில்லே. சொல்லப்
பெண்ணைப் பெத்தவர்தான் நம்மை
இரண்டு பங்கு வெட்கப்பட்டுக் கொண்டு
ும். போகட்டும். இந்தப் பொண்ணு
ாட்டி இன்னொரு பொண்ணு நம்ம
னுக்குக் கிடைக்காமலா போயிடும்...''
குரலில் அதட்டினுர்.

கல்யாணப் பொண்ணு... கத்தரிக்காயா
ண்டைக்காயா? சட்டுன்னு கடையிலே
ப் வாங்கிட்டு வந்துட? பரிசம் போட
நப் பார்க்க எல்லாரும் வரப்போற சம
லே... எல்லார் முன்னுலும் இப்படி
அவமானமா... அதை நினைச்சு...''
லே பேச முடியாது திணறினுள்.

ஊர்ல உலகத்திலே நடக்காத அதிசயம்
ல் தடவை நம்ப வீட்டுக் கல்யாணத்
நடந்து விட்டதாக நினைக்காதே கஸ்
! உனக்கு ஞாபகம் இருக்கா — நம்ப
மத்திலே மேலத் தெரு சுப்பையா மகன்
கல்யாணத்தின்போது கல்யாணப் பெண்
திடீர்னு காணுமப் போயிட்டா... அவர்
பயந்துக்கிட்டுக் கல்யாணத்தை நிறுத்தி
விடலேயே? தன் அக்கா மகளை மணையில்
உட்கார வைச்சு ஜாம் ஜாம்னு நடத்தி
முடிச்சுட்டாரே...!

''என்ன சொல்றீங்க அண்ணு!'' — தழு
தழுத்தாள் கஸ்தூரி.

''தைரியமா இரு. மலைபோல ஓர் அண்
ணன் நான் இருக்கச்சே நீ ஏன் கலங்கணும்?''
என்று ஆறுதல் கூறிய வேதாசலம் கோப
மாகத் தயானந்தின் பக்கம் திரும்பினுர்.

''மரமாட்டம் அப்படி நின்னு என்ன
அர்த்தம்? இப்படி வாங்கோ. இந்த விஷ
யத்தை நம்மோட ரகசியமா வச்சுக்குவோம்.
ஒரேமுட்டா அமுக்கிட முடியாது. பின்னுல
மெள்ள எல்லாருக்கும் தெரிஞ்சாக் குத்த
மில்லே. இப்போ எனக்கு ஒரு யோசனை
தோணுது. உங்களுக்கு இதுக்கு அடுத்த
படியா கல்யாணத்துக்குப் பெண் இருக்கா?''

தயானந்த் தலையைச் சொறிந்து கொண்
டார். ''எனக்கு ஜயந்திதான் கடைக்குட்டி.
எங்க வீட்டிலே எங்களோட இப்ப இருக்கிறது
என் தம்பி மக ஒருத்திதான்.''

''அந்தப் பொண்ணுக்கு வேறே இடத்
திலே கல்யாணம் பேசி முடிச்சிருக்கீங்களா?''

''இல்லே...'' — மென்று விழுங்கினுர் தயா
னந்த். தம் மகளுக்குப் பார்த்து நிச்சயம்
செய்த மாப்பிள்ளையை மாதங்கிக்கு விட்டுக்
கொடுப்பதா? — அவர் மனத்திலே லேசாக
எரிச்சல் மூண்டது.





மீண்டும்

90% நடக்கக் கூடிய
மான படம். மனைவி கோ
லாவிடம் உயிராய் இருக்
வக்கீல் கணவன். நடி
காமினியின் நட்புக் கிடை
ததும் சபலப்பட்டுக் கடை
யில் மீண்டும் கோகி
விடம் வரும் சின்
கதையை எல்லோருமா
சேர்ந்து சுவாரஸ்யமாக
விட்டார்கள்.

தீர்ந்த பேஸ்டை
குடைந்து எடுக்கும் இ
பான கமலிடம் நம்பை
பார்க்கிறோம். ஆபீஸில்
ஒட்டி, தன் 'கோகி'யிட
எதிரும் புதிருமாய் ஊ
லில் ஆடி, அர்ச்சகர்தொட
சொன்னதும் குறும்போ
அவரைத் தொட்
காமினியிடம் அறுவையா
அளந்து, மனைவி வயிற்
அடிக்கடி ஆசையாய்க் கிள்
பரவலாக 'வசந்த்' ஸ்
லில் செக்ஸ் பேசி, முழுக்
முழுக்க கமல் கொடி க

''இவருக்குத் தம்பி மகள் ஒரு பெண் இருக்கு. இவர் ஆதரவிலேதான் வளருகிறாள். பெண் பார்க்கப் போனபோது சம்பந்தியம்மா சொன்னாங்க. சித்த முன்னே கூட அந்தப் பெண்ணைப் பார்த்தேன். மூக்கும் முழியுமா நல்லாவே இருக்கா அந்தப் பொண்ணு. ஆனா ஹர்ஷன் இதுக்கு ஒத்துக்கணுமே?''

''நீ சும்மா இரு கஸ்தூரி. அவனைச் சமாளிக்கிறது என் பொறுப்பு.''

''என் மனைவி என்ன சொல்வாளோ?''

''என்னய்யா விளையாடு றீங்க... இத்தனை பெரிய அவமானத்திலே எங்களை மாட்டி வைச்சுட்டு, பரிகாரம் சொன்னா பசப்புறீங்க. உங்க மனைவிக்கிட்டச் சொல்லி அந்தப் பொண்ணைப் புதுசு கட்டிக்கிட்டு மண்டபத்துக்கு வரச் சொல்லுங்க...''

''மாதங்கி சம்மதிக்காட்டி....''

''சம்மதிக்க வைக்கிறதும் உங்க பொறுப்பு. இந்தக் கதை யெல்லாம் வேண்டாம். எங்களுக்கு இந்தக் கல்யாணம் நடந்தாகணும்.''

''கஸ்தூரி கண்களைத் துடைச்சுக்கோ... எழுந்திரு. சீக்கிரமா எல்லாத்தையும் கவனி. நான் போய் ஹர்ஷனைக் கண்டு பேசி அழைச்சிட்டு வரேன்.'' துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினார்.

கணவன் கூறியதைக் கேட்ட சுமதிக்குப் பேயறைந்துவிட்ட அதிர்ச்சி. ''இந்தப் பெண் ஜயந்தி இப்படி ஒரு கல்லைத் தூக்கித் தலையில் போடுவாளா? ஒரு கோடி காட்டியிருந்தாக்கூடக் கல்யாணம் வரை வந்து

இப்படி ஒரு அவமானத்திலே சிக்கி யிருக்
வேண்டாமே....'' மனம் புழுங்கிப்போனாள்
மாதங்கிக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டம
என்று பொறாமையால் கொதித்துப்போனாள்
''உன் அக்கா செஞ்ச வேலையால உனக்
இப்ப யோகம் – அந்தப் பெண்ணுக்கு
பதிலா உன்னை வெச்சுக் கல்யாணம் நடத்
ணும்னு சம்பந்தி வீட்டிலே ஒரே பிடிய
இருக்காங்க. நீயும் சமயத்துக்குக் கழுத்
அறுத்திடாதே. இஷ்டம் இல்லாட்டி இ
பவே சொல்லிடு – பிடிச்சா அந்தப் பட்டு
புடவையை எடுத்துச் சுத்திக்கிட்டு கிளம்பு..
மெல்லிய குரலில் சீறினாள் கோபத்துடன்

கல்யாண மண்டபத்துக்குள் தயங்கி
கொண்டு வந்த மாதங்கியை முன்வந்
பிள்ளை வீட்டைச் சேர்ந்த அந்தப் பெண்
கையைப் பற்றிக்கொண்டு உள்ளே அழை
துச் சென்றாள்.
''நீதான் கல்யாணப் பொண்ணுன்னு..
பூ கொடுக்க வந்தப்பவே கண்டு பிடி
சுட்டேன்.!'' மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தான்
வேதாசலமும் தயானந்தும் ஜமக்காளத்தி
எதிர் எதிராக அமர்ந்து கொண்டனர். எ
லாரும் சுற்றிலும் சூழ்ந்து உட்கார்ந்தது
மாப்பிள்ளை வீட்டுப் பெண்களில் சில
புடவை நகைபெட்டிகளைக் கொண்ட தட்டு
களை வரிசையாகச் சுமந்து வந்து அருகில்வை
தனர். குத்து விளக்கைத் தூண்டி நன்று
எரிய விட்டாள் பெண்.
நாதஸ்வரம் ஒய்ந்து மண்டபத்திலே ஆவல்
நிறைந்த அமைதி நிலவியது. இரண்டு ச



கோகிலா

டிப் பறக்கிருர். வெல்டன் கமல்.

அடுத்தது இந்த ஸ்ரீதேவி வரவரத் தன்னையே மிஞ்சு கிருர். மடிசாரில் கணவ னுடன் சண்டை போட்டு, காமினி பிரவேசத்தால் சந் தேகப்பட்டு, சபலக் கண வனை வேவு பார்த்து, குழந் தைக்குக் காய்ச்சல் வந்ததும் இயல்பாக அழுது, காமினி யைத் திட்டி ஆர்ப்பாட்டம் பண்ணி — கமலுக்கு இணை யான ஜோடி.

'தீபாவுக்குப் பதில் ரேகாவே இருந்திருந்தால்' என்ற நினைவே இனிமையாக உள்ளது. நகைச் சுவை யுடன் கொண்டு போகும் டைரக்டர் ஜி. என். ரங்க ராஜனும், வசன கர்த்தா அனந்தும், சிறப்பான ஒளிப் பதிவாளர் என். கே. விஸ்வ நாத்தும் வெற்றியைப் பகிர்ந்து கொள்பவர்கள்.

—நளினி சாஸ்திரி



ந்திகளும் ஒருவருக்கொருவர் சந்தனம் சி பொட்டு வைத்து பூமாலை அணிவித்து ரியாதை செய்து முடித்தனர்.

''கிட்ட வாங்க சம்பந்தி... வெற்றிலைப் க்கு மாத்திக்குவோம். சபை கேட்கிருப் ல சம்மதம்னு மூணுவாட்டி சொல். ங்கோ.'' இரைந்து பேசினுர் வேதாசலம். என்ன கூச்சப்படறீங்க, கிட்ட வாங்கோ'' ரத்துச் சிரித்தார். சபையிலும் வேடிக்கை ான பேச்சும் சிரிப்பும் பரவியது.

பாக்கு வெற்றிலை மாற்றி முடிந்ததும் கை புடவை இருந்த தட்டைக் கையில் க்கிக் கொண்டார் வேதாசலம். சுற்றிலும் பருமையாகப் பார்வையை ஓட விட்டார்.

''எல்லாரும் கேட்டுக்கோங்க — பெண் ட்டவங்க நல்லாக் கேட்டுக்கட்டும். பெண் னுக்குப் போடறதாகச் சொன்ன நகைகள் ல்லாம் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கு. ழுத்துக்கு ரெண்டு கொத்துச் சங்கிலி — கைகளுக்கு நாலு ஜோடி வளையல்கள்—வைரக் ம்மல், கெம்பு அட்டிகை, பச்சைக் கல் நெக்லஸ் செட்டு — முத்து மாலை, தங்க மாதிரம்... சம்பந்தி நல்லாப் பார்த்துக் லாம். சரித்தானே... எங்கே பெண்ணைக் கூப்பிடுங்கோ... இதுகளை உங்க ஆசிகளோட கொடுக்கணும்.'' அதட்டலாகப் பேசினுர்.

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த அதே பெண் மாதங்கியைக் கைப்பிடித்துஅழைத்துக் கொண்டு வந்தபோது கூடியிருந்தவர்க ரிடையே ஒரு சலசலப்பு.... இதுதான் கல் யாணப் பெண்ணு? வியப்பு நிறைந்த பல பேச்சுக் குரல்கள் எழுந்தன. மாதங்கி கூடி யிருந்தவர்களைப் பார்க்க அஞ்சி, மகிழ்ச்சியும் அச்சமும் கலந்த உணர்விலே நெஞ்சு படபடக்க மெல்ல வந்து கைநீட்டிப் பரிசத் தட்டைப் பெற்றுக் கொண்டு வணங்கினுள்.

கண்களில் வழிந்த கண்ணீரைச் சட் டென்று துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

சற்றுத் தொலைவில் ஆண்கள் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த மகனைப் பார்க்க அவளுக்கு மிகவும் பயமாகத்தான் இருந்தது.

பரிசம்முடிந்ததும் நலங்கு ஆரம்பமாகியது. ஊதா வண்ணப் பனுரிஸ் புடவையை உடுத் திக்கொண்டு நகைகள் அணிந்து கழுத்தில் கனமான ரோஜா மாலையுடன் மெல்ல அசைந்து வந்து மாதங்கி உட்கார்ந்தாள்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஒரு வயசான சுமங்கலி அம்மாள் எழுந்து சடங்கை ஆரம் பித்து வைத்தாள்.

சந்தனத்தை மாதங்கியின் கழுத்து, கன் னம் மீது பூசி, பொட்டு வைத்துப் பூச் சூட்டி, ஆரத்தி எடுத்துத் திருஷ்டி கழித் தாள். பின் பல பெண்கள் தொடர்ந்தனர்.

முருகா! இப்படி ஒரு அதிசயமா? எனக் குப் பிடித்தவரையே எனக்குக் கொடுத்து... இன்பச் சிலிர்ப்புடன் மெல்ல நிமிர்ந்து ஹர்ஷன் பக்கம் பார்த்தாள் மாதங்கி.

நெருப்பாக ஏன் அவளை அவன் வெறிக் கிருன்? அப்படியென்ருல் அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லையா?

சட்டெனத் தலையைக் கவிழ்த்துக் கொண் டாள் மாதங்கி. கண் இமைகளினின்று இரண்டு சொட்டுக் கண்ணீர் கைகள் மீது உதிர்ந்தன.

(தொடரும்)

உடற் குறையுடன் பிறப்பதைத் தடுக்க...

டாக்டர் டி. என். ராமமூர்த்தியுடன் பேட்டி

● நூறு குழந்தைகளில் ஆறேழு பேர் பிறப்பிலேயும், இன்னொரு ஆறு அல்லது ஏழு சதவீதம் பிறந்த சில மாதங்களிலேயும் உடல் ஊனம் அடைவதாகச் சொல்லப்படுகிறதே, இதற்கு ஏதேனும் தடுப்பு முறை ஆலோசனைகள் கூற முடியுமா, டாக்டர்?

கருவுற்ற பெண் முதல் மூன்று மாதங்கள் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜெர்மன் மீஸல்ஸ் முதலிய நோய்கள் இந்தச் சமயத்தில் வராது காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த முதல் மூன்று மாதத்தில்தான் குழந்தையின் முக்கிய உறுப்புக்கள் உருவாகின்றன. சில ஹார்மோன் மருந்துகளைக் கருவுற்ற பெண் சாப்பிடுவதும் உடல் குறைகளுடன் குழந்தைகள் பிறக்கக் காரணமாகும். தாய்க்கு இரத்த வகை Rh நெகடிவ் ஆகவும், தகப்பனாரின் இரத்த வகை Rh பாஸிடிவ் ஆகவும் இருந்தால், பிறக்கும் குழந்தைகளுக்குச் சில நாட்களிலேயே மஞ்சள் காமாலை வந்து மூளையைப் பாதித்து, மன வளர்ச்சி குன்றிய குழந்தையாகி விடும். உடனடியாக இதைக் கண்டு பிடித்துக் கவனமாகச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

● திருமணத்துக்கு முன் ஏதேனும் ஆலோசனை பெற வேண்டுமா?

முதலாவதாக, கணவன் — மனைவியாகப் போகிறவர் இருவருமே தங்களின் நெருங்கிய உறவினர் எவருக்கேனும் பரம்பரையாகவே உடற் குறை இருந்தால் மருத்துவரை அணுகி, திருமணத்துக்கு முன்போ, கருவுறுவதற்கு முன்போ தகுந்த ஆலோசனை பெறுவது நல்லது. இரண்டாவதாக, ஒரு பெண்ணுக்குத் தாயாக ஏற்ற வயது 20 முதல் 35 வயதுக்குள்தான். 18 வயதுக்கு முன்பும் 40க்குப் பிறகும் பிள்ளை பெறுவது நல்லதல்ல. அது போலவே ஆண் 45 வயதுக்குள் தகப்பனாவது நல்லது. ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையே இரண்டு வருட இடை வெளியாவது இருத்தல் அவசியம். மூன்றாவது குழந்தைக்குப் பிறகு, உடற் குறையுடனோ, இறந்து போன சிசுவாகவோ பிரசவமாக ஏதுவுண்டு. தொற்று நோய் ஏதும் வராமல் கருவுற்றிருக்கும் வேளையில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கருவுற்றிருக்கும் பெண் தனக்கு மருத்துவ ஆலோசனை வழங்கும் டாக்டர் குறிப்பிடும் அத்தியாவசியமான மருந்துகள் தவிர வேறு எந்த மருந்தும் உட்கொள்ளக் கூடாது. புரதமும் வைட்டமின்களும் நிறைந்த சத்தான உணவைச் சாப்பிட வேண்டும். கருவுற்ற ஒவ்வொரு பெண்ணும் தன் இரத்த குரூப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். Rh நெகடிவ் ஆனால் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் இனி பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கும் Rh நோய்கள் வராது பாதுகாக்கத் தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

✖ டாக்டர். டி. என். ராமமூர்த்தி, எம்.டி.



● கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று அறிந்து கொள்ள இப்போது வசதி இருப்பது போல, பிறக்கும் குழந்தைக்கு ஊனம் ஏதேனும் இருக்குமா என்று தெரிந்து கொள்ள முடியுமா, டாக்டர்?

நிச்சயம் தெரிந்து கொள்ளலாம். புது தில்லி ஏ.ஐ.ஐ.எம்.எஸ்.ஸில் செய்வதுபோல் இங்கேயும் அந்தப் பரிசோதனைகளைத் தாராளமாகச் செய்யலாம். கருவுற்ற பெண்ணின் வயிற்றின் வழியாக (லோகல் அனஸ்தீஸியா கொடுத்துவிட்டு) யூடரஸில் ஓர் ஊசியைச் செலுத்தி நீரை எடுத்து லேபரடரியில் பரிசோதனை செய்து கண்டுபிடிக்கலாம். கருவுற்ற 13 அல்லது 14ஆவது வாரத்தில் இதைச் செய்யலாம். இதில், பிறக்கப்போகும் குழந்தை ஊனமுள்ளதாகத் தெரிந்துவிட்டால், பெற்றோர் விரும்பினால், கருவைக் கலைத்துவிடலாம். அது நல்லதல்லவா?

● பிறவியில் ஊனமான குழந்தைக்கு வைத்தியம் எப்படி?

அது ஊனத்தையும் அதன் தீவிரமான பாதிப்பையும் பொறுத்தது. சிறிய குறையானால் சாதாரண அறுவைச் சிகிச்சையில் சரியாக்கி விடலாம். கைகால் ஊனமோ, மூளை பழுதுபட்டோ போயிருந்தால் குழந்தை மருத்துவர், நரம்பியல் மருத்துவர்,

கருகு பதில்கள்!





✠ டாக்டர் எஸ். ராமநாதன், திருநெல்வேலி
கே. 'சாவி' என்ன செய்வார் என்ற கேள்விக்கு சிரிப்'பூட்டு' வார் என்று பதில் வந்தது எப்படி?

ப: பரிசு ஒரு 'லாக்' ரூபாய் கூடக் கொடுக்கலாம் 'கல்Key' ஆசிரியர் ஒத்துக் கொள்ள மாட்டாரே!

✠ பி. தங்கவேலு, மைசூர்-4
கே. மனைவியைக் கணவன் வாங்க, போங்க என்று அழைக்க வேண்டும் என்ற சர்ச்சையைப் பற்றி நீர் மூச்சு விடவில்லையே?

ப: இந்த வாங்க, போங்க என்று மனைவியும் கணவனைக் கூப்பிட வேண்டிய தில்லை. (கணவனும் மனைவியைக் கூப்பிட வேண்டிய தில்லை) என்று நான் நினைக்கிறேன். மரியாதையாகப் பேசுவது தம்பதிகளின் அந்யோந்யத்தைக் குறைக்கிறது என்பது என் கருத்து. 'ஏ மச்சான் சோறு தின்ன வாயேன்' என்ற வாசகத்தில் பளிச்சிடும் நெருக்கம், உரிமை, 'நீங்க, வாங்க' வில் வருமா?

✠ ஐ. ஜி. மோகன், காட்பாடி
கே. சந்தாதாரர் அனுப்பும் ஜோக், துணுக்குகள் கூட பிரசுரிக்கப் படுவதில்லையே, ஏன்?

ப: அப்புறம் சபா மெம்பர்களுக்கு டான்ஸ் ஆடவும் பாட்டுப் பாடவும் சான்ஸ் தருவதில்லையே என்பீர்கள். சந்தாதார் என்ற காரணத்துக்காக உங்கள் ஜோக், துணுக்கைப் போட முடியுமா? சுவையாக இருக்க வேண்டாமா?

✠ டி. ரவிசந்திரன், பட்டுக் கோட்டை
கே. வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய விரும்புவது கப்பலிலா? விமானத்திலா?

ப: இரண்டிலும் இல்லை. நான் பயணம் செய்ய விரும்புவது ஓசியில்!

✠ ஏ. ஜே. சீதா கல்யாணி, கல்கத்தா-26
கே. சமீப காலமாகத் தமிழ் பத்திரிகைகளில் கதை, கட்டுரைகளில் ஆங்கிலச் சொற்களை மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள். தலைப்பு முழுதும் ஆங்கிலத்தில் தரப்படுகிறதே ஏன்? தமிழ் மொழியின் கதி என்னவாகும்?

ப: இட் ஹாஸ் பிகம் எ ஃபாஷன். தட் ஈஸ் ஆல். நத்திங் வில் பி ஹாப்பண்டு டமில், ஆண்டி!

✠ மாலினிராஜா, சென்னை-17
கே. உங்கள் பதில்களில் யாரையும் தாக்கி எழுதுவதில்லையே ஏன் பயமா?

ப:பயம் அல்ல. நாகரிகம். எனக்குத் தனிப்பட்டமுறையில் பலபேர் மேல் வருத்தம், கோபம், மனத்தாங்கல் இருக்கலாம். அது சரியான தாக இல்லாமலும் இருக்கலாம். அதையெல்லாம் பதில்களில் வெளிப்படுத்துவது சரியில்லை. நல்லது என்று பட்டதை — அது தவறான அடிப்படையில் இருந்தாலும் — சொல்வதால் யாருக்காவது, எங்காவது உற்சாகம், மகிழ்ச்சி ஆர்வம் ஏற்படலாம்.

✠ செம்பா ஜனார்த்தனன், திருவனந்தபுரம்
கே. சமீபத்தில் மெய்சிலிர்த்த அனுபவம் எது?

ப: இரண்டு நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். ராஜாஜி நினைவு கூட்டத்தில் பிலு மோடி பேசினார். அவர் சொன்னார்: என்னுடைய தந்தை இறந்த போது நான் மிகவும் கலங்கிப் போனேன். ராஜாஜி அப்போது என்னிடம், 'பிலு ஏன் வருத்தப் படுகிறாய்? நான்தான் உன் தந்தை இருக்கிறேனே' என்றார். இதை பிலு மோடி நெகழ்ச்சியுடன் கூறியபோது மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது.

மற்றொன்று ஒரு கிழக்கு ஜெர்மானியத் திரைப்படத்தைப் பற்றியது. புரட்சிக்காரப் பெண்ணுக்குப் பத்தாண்டு சிறைவாசம்கிடைக்கிறது. அதில் ஓராண்டு தனிமைச் சிறை. ஓராண்டு முடிந்ததும் அவள் அறையிலிருந்து வெளியே வர அனுமதிக்கப்படுகிறாள். வெளியே வந்ததும் சிமெண்ட் தரை பாதையை ஒட்டியுள்ள ஒரு சிறிய புல் திட்டிற்குச் சென்று தன் பூட்ஸைக் கழற்றி வெறும் பாதத்தால் புல்லை ஸ்பரிசிக்கிறாள். ஒரு வருட காலம் சிமெண்ட் தரையிலேயே இருந்த அவருக்குப் புல் தரையில் நடப்பது புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்த உணர்ச்சியை அற்புதமாகத் தன் முக பாவத்தில் காட்டினார். இந்தக் காட்சியைப் பார்த்த போது மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது. இப்படிச் சின்ன சின்ன விஷயங்களில் டைரக்டரின் திறமை அந்தப் படத்தில் பளிச்சிட்டது என்பதையும்—சம்பந்த மில்லா விட்டாலும் குறிப்பிட விரும்புகிறேன்.

✠ மேஜர் தாசன், ஈரோடு-10
கே. தங்களிடம் உள்ள கெட்ட பழக்கம் என்ன?

ப: எத்தனையோ. உதாரணமாக, உதவி என்று முன் பின் தெரியாதவர்கள் கேட்டால் கூடச் சட்டென்று யோசிக்காமல் லட்ச ரூபாயை எடுத்துக்கொடுத்து விடுவேன்!

பரிசு பெறுபவர் :

ஏ. ஜே. சீதா கல்யாணி
5/2 கபீர் ரோடு
கல்கத்தா—700 026

கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி

4

விடியற்காலை முகூர்த்தம். எவ்விதமான கலவரம் இன்றி இனிதே நடந்தேறியது. கஸ்தூரிக்கிருந்த கவலையில் அவள் இரவு ஏதும் சாப்பிடவில்லை. அண்ணனின் வற்புறுத்தலை ஒதுக்க முடியாது ஒரு டம்ளர் மோரைக் குடித்துவிட்டுத் தனது அறையில் தன்னந் தனியே படுத்துக் கொண்டு விடியும்வரை விழித்துக் கொண்டே இருந்தாள்.

'இந்தப் பிள்ளை ஹர்ஷன் திடீரென்று காலை மண்டபத்துக்கு வர மறுத்துவிட்டால்?.... முருகா! தாலி கட்டிய கையோட உனக்கு அபிஷேகம் செய்து வைக்க உன் சந்நிதிக்கு ஓடி வருகிறேம். கைவிட்டுடாதே அப்பா' கண்களில் நீர் ஒழுக மனமுருகப் பன்முறை பிரார்த்தித்துக் கொண்டாள்.

மனையிலிருந்தபடியே தாயை வெட்டி விடுவது போல் ஹர்ஷன் பல முறை பார்த்தான். ஆனல் அவள் எதிர்பார்த்த பைத்தியக்காரச் செயல் ஏதும் நடைபெறவில்லை.

பச்சைத் தண்ணீரைக் கூட வாயில் விடாது கடும் பட்டினியாக இருந்த கஸ்தூரி தாலி கட்டி முடித்து மற்ற சடங்குகள் முடிவு பெற்ற உடனேயே வேதாசலத்தைக் கூப்பிட்டுச் சொன்னாள்: "அண்ணு! கல்யாணப் பெண் மாப்பிள்ளையோடு நீங்க காரில் கோவிலுக்கு வந்துடுங்க. நானும் விரைவில் அங்கே வந்து சேர்ந்துக்கிறேன்."

கருணை காட்டிய முருகனுக்குக் காணிக்கை அளிப்பவள் போல மூச்சிரைக்க முருகா... முருகா... என்று முணு முணுத்த வண்ணம் அவள் படிகளில் ஏறி மேலே கோவிலுக்கு வந்து சேர்ந்தாள்.

அபிஷேகத்துக்கு முன்பே ஏற்பாடாகி விட்டிருந்ததனல் அதுவும் மிகவும் இனிதே நடந்தேறியது.

மாலையும் கழுத்துமாகத் தன் எதிரே நின்ற மணமக்களை மெல்லப் பார்த்தாள் கஸ்தூரி.

ஆனந்தத்தின் அழுத்தத்தினல் அவள் கண்கள் பனித்தன.

உறவினர்கள், நண்பர்கள் எதிரே அவமானப் படாது எப்படியோ சமாளித்தாகி விட்டது.

"இனி அவர்கள் பாடு" என்று எண்ணிக் கொண்டாள்.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு அவர்கள் கீழே வருவதற்குள் பகல் சாப்பாடு தயாராகி விட்டிருந்தது. ஊருக்கு உடனே திரும்ப நினைத்தவர்கள் முதல் பந்தியிலேயே உட்கார்ந்து விட்டனர்.

கல்யாணத்துக்குத் தலையலங்காரம் செய்ய எடுத்து வந்த கவரிங் நகைகளைப் பற்றித் தான் பெரியம்மா சுமதிக்குக் கவலையாக இருந்தது. அவைகளைச் சேகரித்துக்கொண்டு கிளம்ப அவசரப்பட்டாள். சுமையாக அழுத்திய கவரிங் காசு மாலை மாதங்கியின் ரவிக் கையையும் கழுத்தையும் பிய்த்துக் கொண்டிருந்தது. அது போதாது போல் சுமதி வேகமாகப் பெண்கள் மண்டபத்திலே தங்கியிருந்த அறைக்குள் வந்தாள்.

"எங்களுக்கு இனி என்ன வேலை இருக்கு? சாப்பாட்டுக்குப் பிறகு கிளம்பணும். தலைச் சாமான், காசு மாலை எல்லாத்தையும் கழற்றிக் கொடு — வாடகைக்கு எடுத்துட்டு வந்தேன். எந்த வேளையில் எடுத்தேனே இப்படியாச்சு!" கோபத்துடன் படபடத்தாள்.

கழுத்தில் கனத்த காசு மாலையை எடுக்க முதலில் பூமாலையைக் கழற்ற மாதங்கி முயன்றபோது அது — காசு மாலையுடன் சிக்கிக் கொண்டு விட்டது.

"என்ன சிங்கிநாதம் பண்றே? கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியலேன்னு அந்தக் காலத்திலே ஒரு நாடகப் பாட்டுக் கேட்டிருக்கேன். அதுபோல ஆடறியா?..." கோபத்துடன் கூறிவிட்டு அவள் கழுத்திலிருந்த மாலையை வேகமாக அப்புறப்படுத்த முயன்றாள்.

ரோஜாப் பூ இதழ்கள் பொல பொல வென்று தரையில் உதிர்ந்தன.

உள்ளே வந்த கஸ்தூரி பதறிப்போனாள்.

"இருங்க... அப்படி அவசரப்பட்டா... கல்யாணமாலைகளை அவிழ்த்து நான் வீட்டிலே எங்க அறையிலே மாட்டி வைக்கணும்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன். இங்கேயே உதறிக் கொட்டுகிறீர்களே? நியாயமா... இந்தத் தலை ஜோடிப்பை நாளைக்கு நானே கொண்டு வந்து உங்க வீட்டிலே கொடுத்துவிட மாட்டேனா? இதென்ன வைரச் செட்டா பயப்பட..." எரிச்சலுடன் கூறிவிட்டு மாதங்கியை மெல்லத் தன் அருகே அழைத்துக்கொண்டாள்.

மாலையில் ஏற்பட்ட சிக்கலை லாகவமாகத் தளர்த்திப் பூமாலையைக் கழற்றி ஒரு கூடைக்குள் பத்திரமாக வைத்துக்கொண்டாள்.

"ரோஜாப்பூ மாலை சித்த நேரத்திலே கொட்டிப் போகும். ஊர் போறதுக்குள்ளே காஞ்சு போயிடும்...." என்று முணு முணுத்தாள் சுமதி.


"மாலை காஞ்சு போனுள் என்ன? கல்யாணத்தின் நினைவு பசுமையா எப்பவும் மனசிலே நிக்குமே!" சுடச் சுடப் பதிலளித்த கஸ்தூர் காசு மாலை, தலை சாமான் அனைத்தையும் மெல்ல உருவி எடுத்துச் சுமதியிடம் கொடுத்தாள்.

"இவ்வளவுதானே? இன்னும் ஏதாவது பெண் கழுத்திலே நீங்க போட்டிருக்கீங்களான்னு பார்த்துக்குங்கோ. பிறகு பேச்சு ஏதும் வேண்டாம்." கண்டிப்பாக அவள் பேசியதைக் கேட்ட சுமதிக்கு முகம் சுருங்கிப் போயிற்று. தொடர்ந்து அங்கே நிற்க அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் மகளுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பாக்கியத்தை ஒரு நொடியில் தட்டிக் கொண்டு போய்விட்ட மாதங்கியைப் பார்க்க நெஞ்சு நெருப்பாக எரிந்தது.

''சாப்பிட்டுக்குப் பிறகு நாங்க கிளம் ணும். எங்களுக்கு ஊரில் கவனிக்க எத் னேயோ இருக்கு.'' இரு பொருள் படக் றிவிட்டுச் சுமதி அப்பால் சென்றுவிட் டாள்.

மாதங்கிக்குத் துக்கம் நெஞ்சை அடைத் து. கல்யாண மண்டபத்தில் கூடியிருந்த லர்... யார் யாரோ... அவளுக்கு நினைப்பு கூட இல்லே. தாலி கட்டியதும் அவளை நெருங்கி வந்து மலர் தூவிப் பாராட்டுதல் களேயும் வாழ்த்துக்களையும் வழங்கிச் சென் றனர். அத்தனை ஆண்டுகள் அவர்களே கதி என்று அவள் பெரியப்பா குடும்பத் துடன் ஒட்டிக் கொண்டு வாழ்ந்தவள். அடி மையாக அவர்களுக்குப் பணிவிடைகள் செய்தவள். அந்தத் தகுதிகளுக்காவது ஒரு வார்த்தை — ஒப்புக்காகிலும் பெரியப் பாவோ — பெரியம்மாவோ அவளை வாழ்த்த வில்லை. பாராட்டவில்லை. அதற்குப் பதில் பெரியம்மா சிடுசிடுவென்று என்னென்னவோ பேசிவிட்டாளே? தன்னைத் திரும்பிப் பாராது வெடுக்கென்று வெளியேறிவிட்ட பெரியம்மா வின் அசட்டையை நினைத்து மாதங்கி கண் கலங்கிப் போனாள்.

''என்ன இது... நல்ல நாளும் அதுவுமா?'' கஸ்தூரி விரைந்து வந்து மருமகளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். கன் னங்களில் கோடிட்ட கண்ணீரை மெல்லத் தன் கரத்தால் துடைத்து விட்டாள். ''காப்பிகூடச் சாப்பிடலே — பசியா இருக்கே. அதனாலே மனமும் பலவீனமாகிவிட்டது போல் பிரமிப்பு. கொஞ்சம் பால் கொண்டு வரச் சொல்றேன். சாப்பிடு. பிறகு நாம எல்லாரும் ஒரு பந்தியா உட்கார்ந்து விருந்து சாப்பிடுவோம். முகத்தைக் கழுவிப் பொட்டு வச்சுக்கிட்டுத் தலே வாரிக்கோ... என் பெட்டி மேலே உனக்கு மாத்துப் புடவை எடுத்து வைச்சிருக்கேன். காஷ்மீர் சில்க். இந்தப் புட வை வயைப் போலக் கனமா இருக்காது. அதைக் கட்டிக் கொண்டதும் உன் மனமும் லேசாகிப் போயிடும்....'' அன்போடு அவளது கன்னங்களை வருடினாள்.



மாதங்கிக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. சாப்பாட்டுக்குப் பின்னர் கல்யாணத்துக்கு வந்தவர்கள் விடை பெற்றுக் கொண்டு விட்டதால் மண்டபம் காலியாகத்தெரிந்தது.

கல்யாணத்துக்கு முன் ஏற்பட்ட கலவரத்தைச் சமாளிக்க அண்ணன் வேதாசலம் மாதங்கியை மணையில் வைக்கத் துணிந்து விட்டபோது ஹர்ஷன் உடனேயே சம்மதித்து விடவில்லை. பலவிதமாகப் பேசி வாதாடித் தான் அவர் வெற்றி பெற்றிருந்தார். ஆனாலும் அவர் மனத்தை ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டுதானிருந்தது. வற்புறுத்தியதால் நடந்த கல்யாணம் — வேண்டாம் இந்தப் பெண் என்று பயல் பின்னால் மாதங்கியை உதறிவிட்டால்?

யாரோ பெற்ற பெண் குழந்தை! அவளைக் கண்கலங்க விடுவது மகா பாவமாயிற்றே. ஹர்ஷனுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. பரபரவென்று இரவே திட்டம் போட்டு விட்டிருந்தார் வேதாசலம்.

கல்யாண விருந்து முடிந்ததும் மணமக்களையும் கூட இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பி விட்டார்.

''மாமா! இதெல்லாம் என்ன?''. கோபமாகக் கேட்ட ஹர்ஷனை அவர் பேசவிடவில்லை.

''நாளைக்கு நீ வெளி நாடு போகத் தீர்மானிச்சா பதிவுத் திருமணம் செய்து கொண்ட சான்றிதழ் தேவைப்படுமே. அதனாலேதான் உடனுக்குடன் பதிவுத் திருமணத்தை முடிச்சுட ஏற்பாடு செய்தேன். சாட்சிகளையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கேன். உம், வா உள்ளே.'' பதிவுத் திருமண அலுவலகத்துக்குள் அவனைத் தள்ளிக் கொண்டு சென்றார்.

''கஸ்தூரி! இனி கவலையை விடு. சாமிக்கு முன்னாலும் — சட்டத்துக்கு முன்னாலும் இந்தக் கல்யாணத்தை நடத்தி முடிச்சாச்சு. இதை இனி யாரும் அசைக்க முடியாது, புரிஞ்சுக்கோ...'' உற்சாகத்துடன் தங்கையிடம் வந்து ஆர்ப்பரித்தார்.

அவர்கள் அன்று மாலை ஊர் வந்து சேர்வதற்குள் இருட்டி விட்டது. முன்னதாகவே கிளம்பி வந்திருந்த உறவினர்கள் மணமக்களை வரவேற்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தனர். காரினின்று இறங்கிய மணமக்களை ஆரத்தி சுற்றி வரவேற்றாள் ஒரு சுமங்கலி.

வலது காலை எடுத்து வைத்துத்தான் மாதங்கி மருமகளாக அந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.

இரவு சாப்பாடு முடிந்தது. வந்தவர்களை அனைவரும் கிளம்பி விட்டனர். சற்று முன் சிரிப்பும் பேச்சுமாகக் கலகலத்த வீட்டில் இப்போது வேதாசலமும் அவர் மனைவியும், கஸ்தூரியும் மணமக்களும் மட்டுமே தான் இருந்தனர்.

அடுத்தபடியாக மணமக்கள் தேனிலவுக்கு பெங்களூருக்குக் கிளம்புவது என்று திட்டம். முன்னதாகவே அண்ணன் வேதாசலம் எடுத்த முடிவு — மெயில் வண்டிக்கு டிக்கட்டுகளை எடுத்துக் கொடுத்திருந்தார்.

மாடி அறையினின்று அவன் மட்டுமே கையில் பெட்டியுடன் இறங்கி வருவதைக் கண்ட கஸ்தூரி திகைத்துப் போனாள்.

''மாதங்கி இன்னும் தயாராகலையா?... வண்டிக்கு நேரமாகுதே?'' கவலையுடன் கேட்டாள் கஸ்தூரி.

''அவள் வரப்போவதாக யார் சொன்னது? என் கம்பெனி காரியமாக நான் மட்டும் பெங்களூருக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.''

மகன் சீறியதைக் கேட்டு வாயடைத்துப் போனாள் தாயார்.

''நீயும் உன் மனைவியும் பங்களூர், மைசூர் எல்லாம் சுத்திப் பார்க்கணும்னு ஏற்பாடு செய்துட்டு... இதென்ன விளையாட்டு...'' மாமா வேதாசலம் குறுக்கிட்டபோது ஹர்ஷன் வெகுண்டு போனான்.

''மாமா பெரியவங்களுக்கு நாலு பேர் முன்னாலே அவமானம் வரக் கூடாதுன்னு நான் உங்க முடிவுக்கு எதிர் பேசாது ஒப்புக் கொண்டேன். இனியும் நீங்க என் விஷயத்தில் குறுக்கிட்டால் நான் பொறுக்க மாட்டேன். சொல்லிட்டேன். உங்க இஷ்டத்துக்குக் கல்யாணத்தை நடத்தி வச்சுட்டீங்க, இஷ்டத்துக்கு நிம்மதியைத் தேடிக் கொண்டு நான் தனியே போகிறதைத் தடுக்கிறது தவறு... தடுக்கவும் விடமாட்டேன்.''

''என்னப்பா சொல்றே?''

''பெங்களூருக்கு நான் தனியாக் கிளம்பறேன். அவ்வளவுதான்.''

வேலையாளை விட்டுக் கொண்டு வரச் சொன்ன டாக்சியில் ஏறிக் கொண்டு ஹர்ஷன் போய்விட்டான்.

திகைப்பினின்று விழித்துக் கொண்ட கஸ்தூரி மெல்ல மாடிப் படிகளைக் கடந்து மேலே வந்தாள்.

மணமக்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அறையின் கதவு ஒருக்களித்துக் கிடந்தது.

ஓசைப்படாது திறந்து கொண்டு உள்ளே வந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஜன்னல் ஓரமாகச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு மாதங்கி விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்.

ஹர்ஷன் அவளிடம் கடுமையாகப் பேசியிருக்க வேண்டும். இதென்ன கொடுமை... ஒரு புது மணப் பெண்ணுக்குப் புக்ககத்தில் முதல் முதலாக இப்படி ஒரு வரவேற்பா?

கஸ்தூரி அதிர்ந்து போனாள்.


(தொடரும்)

''கல்யாணம் முடிந்த மறுநாள் என் மனைவி, 'உப்புமா கிண்டி அனுபவமுண்டா, கேசரி கிண்டி அனுபவமுண்டா, அல்வா கிண்டி அனுபவமுண்டா?' எனக் கேட்டாள்.''

''நீ என்ன சொன்னாய்?''

'''கிண்டி' அனுபவம் நிறைய உண்டு என்றேன்.''

- ஆரார்





விழா நிர்வாகிகளும்
பங்கேற்ற மாணவியரும்

பெண்ணுக்கும் சமமானது. இருவரும் சம பங்கு போட்டுக்கொண்டு நடத்தியாக வேண்டிய கடமை இல்லறம்' எனும் நோக்கு பெரும்பாலான ஆண்களிடம் இன்னமும் தோன்றவில்லை. அடுத்தபடியாக நம் நாட்டு அரசியல் அரங்குக்கு வருவோம்!

இன்றைய அரசியல் துறையில் முன்னேறித் தலைவராக ஆக வேண்டுமென்றால் அதற்குத் தேவையான ஒரே தகுதி பணம் தான். எவன் கொழுத்த பணக்காரனோ, எவன் பணத்தைக் கணக்குப் பாராமல் தண்ணீராகச் செலவழிக்கத் தயாராக உள்ளானோ அவனே இன்றைய பாரத அரசியலில் தலையெடுக்க முடியும் எனகிற இழி நிலைக்கு பாரதம் வந்து விட்டது. பாரத அரசியலில் பெண்கள் போதிய அளவு முன்னேற முடியாததற்கு இதுவும் முக்கிய காரணமாகும்.

அரசியல் என்று வந்து விட்டால் பரிபூரண கருத்துச் சுதந்திரமும், எண்ணங்களைத் துளியும் பயமின்றி வெளிப்படுத்தக் கூடிய சுதந்திரச் சூழ்நிலையும்அவசியம். ஆனால்—

அரசியலில் ஈடுபடும் பெண்கள் மட்டுமின்றி எந்தப் பெண்ணுமே தங்களது எண்ணங்களை எவ்வித அச்சமுமின்றி நமது சமுதாயத்தில் வெளியிட முடிகிறதா?

புரட்சிகரமான கருத்தை ஒரு பெண் தைரியமாக வெளியிட்டால் அவளையே சந்தேகக் கண்ணோடு நோக்கும் இழிநிலையில் இருக்கிறது நமது சமுதாயம்.

'தாங்கள் சராசரி மனிதர்கள்... தங்களது சிறு தவறுகள் மன்னிக்கப்பட வேண்டியவை' என்று வாதிடும் ஆண்களே, அதே தவறை ஒரு பெண் செய்து விட்டால் அதனை பூதக் கண்ணாடியில் பெரிதுபடுத்தி அப்பெண் பழி வாங்கப்பட வேண்டியவள் என்பதை நிலை நாட்டுவதில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்!

சமீபத்தில் சிறந்த நாவலாசிரியைகளாகிய இந்துமதியும், சிவசங்கரியும் ஒரு வார இதழில் எழுதிய தொடர் கதையில் ஒரு பெண்ணின் பலவீனங்களை வெளிச்சம் போட்டு யதார்த்தமாய் எழுதியிருந்தனர். இக்கதை பற்றிக் கடுமையாக விமர்சித்த ஆண்கள், 'இரண்டு இழிந்த குலப் பெண்கள் சேர்ந்து எழுதின இழிவான கதை' என்று கதாசிரியைகளையே அநீதியான விதத்தில் பழித்து எழுதினர்.

இது ஒன்றே போதும் ஆண்கள் பெண்களை எப்படிமதிப்பிடுகின்றனர்என்பதற்குச்சான்று.

அரசியலில் ஈடுபடவும், உழைக்கவும், சிறப்பாக முன்னேறவும் வேண்டிய எல்லாத் திறமைகளும், தகுதிகளும் பாரதப் பெண்களிடம் தேவைக்கு அதிகமாகவே உள்ளன.

அரசியலில் ஈடுபட வேண்டும் என்கிற ஆர்வமும் துடிப்பும் அவர்களிடம் இல்லாமல் போகவில்லை!

ஆண் சமுதாயத்தின் நோக்கும் போக்கும் தான் பெண்களைப் பெருத்த அளவில் அரசியலில் ஈடுபட முடியாதபடி தடுக்கிறது.

இதே நேரத்தில்,

வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தினரில் பெரும்பாலோரின் நோக்கு சற்று விரிவடைந்து வருகிறது என்பதையும் நாம் காண்கிறோம். மாறிவரும் இம்மனோபாவத்தை நோக்கும்போது பாரதப் பெண்களின் அரசியல் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்றே தோன்றுகிறது.சிறப்பாயிருக்க வேண்டும் என்று உள்ளம் விரும்பவும் செய்கிறது!

தொகுப்பு: நாயகன்
புகைப்படங்கள்: மன்னை மூர்த்தி

குமாரி எம். ஜெயலக்ஷ்மி பரிசு பெறுகிறார்



லக்ஷ்மி

கழுத்தில் விழுந்த மாலை

5

அருகில் வந்து கஸ்தூரி தன் தோளைத் தொட்டதும் அவள் மார்பின் மீது தன் முகத்தைப் பதித்துக் கொண்டு மாதங்கி தாங்க முடியாத துயரத்தில் குலுங்கிவிட்டாள்.

''அத்தை! நான் என்ன தப்புச் செய்தேன் என்னை ஏன் கோவிக்கணும்?'' விம்மல்களுக்கிடையே திணறினுள்.

கஸ்தூரி நடந்த விவகாரத்தை உடனடியாக விவரமாகத் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

இந்த அசம்பாவிதமான நிலைமையை மேற்கொண்டு எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதுதான் அவளது அடுத்த கவலை.

''அழாதே மாதங்கி! முகத்தைக் கழுவிக்கோ...இதோ வந்துட்டேன்.'' சொல்லிக் கொண்டே அவள் கீழே இறங்கிச் சென்றுள்.

அண்ணு வேதாசலம் தமது மனைவியுடன் இரவு பஸ்ஸுக்கு ஊருக்குத் திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அவர் போன பின்பு வீட்டில் அவளும் மாதங்கியும் மட்டுமே இருப்பார்கள்.

நுங்கம்பாக்கத்தில் அவளது மாமனுர் ஒரு பெரிய வக்கீலாக வாழ்ந்த காலத்தில் காலேஜ் அவென்யூவில் வாங்கிப் போட்டுவிட்டுப் போயிருந்த வீடு அது. உயரமான சுற்றுச் சுவர்களுக்குள் வேப்ப மரங்கள் சூழ உள்ளே எங்கேயோ ஒளிந்து கொண்டுவிட்டது போன்றதொரு பழைய காலத்து வீடு. அடுத்தடுத்து உருவாகியிருந்த புதிய மாடல் பங்களாவாசிகள், உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்கள் — அவர்களால் அவளுக்குத் தொல்லைகள் கிடையாது. — தப்பித் தவறிக்கூட அடுத்த பங்களாவின் பையன் வீசிய பந்து அவர்கள் தோட்டத்துக்குள் விழுந்ததில்லை. அப்படிப்பட்டதொரு தனித் தன்மை வாய்ந்த அண்டை அயலார் வசித்த பகுதி அது.

கம்பெனி காரியமாக ஹர்ஷன் அடிக்கடி வெளியில் போக நேர்ந்தது. அந்தச் சமயங்களில் வீட்டு நாய் தோட்டத்தில் காவல் காக்க வேலைக்காரியுடன் அவள் மாடி அறையில் உறங்கும்போது அவளுக்கு மிகவும் பயமாக இருக்கும்.

அடித்துப் போட்டாலும் கேட்பாரில்லாது இதென்ன தனிமை? என்று சலித்துக்கொள்வதுண்டு.

பழுதாகிவிட்ட பாகங்களைச் சீர்திருத்தியும் சோபா, கட்டில், புத்தக அலமாரி என்று பல பொருள்களை வாங்கிப் போட்டும் வீட்டை மகன் அலங்கரித்ததை அவள் விரும்பவில்லை. அந்த வீட்டை விற்றுவிட்டு, ஜனப் புழக்கம் அதிகமானதொரு பகுதியில் ஒரு சிறிய ஃப்ளாட்டில் குடியேறி வாழ அவள் பெரிதும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள். வேதாசலம், மனைவி, இருவரும் புறப்பட்டுப் போன பின்னர் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். இருட்டத் தொடங்கிவிட்ட பின்னர், ஆள் அரவம் அடங்கிப்போகும் அந்தப் பகுதி இப்பொழுது ஓர் ஆழ்ந்த அமைதியில் மூழ்கிக் கிடந்தது. கல்யாணத்துக்கு வந்திருந்த உறவினர் கூட்டத்தால் கலகலத்த வீடு 'ஹோ' என்ற நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்தது. தோட்டத்துக்குள்ளே ரோவர் மூச்சிரைக்க இங்குமங்கும் ஓடும் சப்தம் துல்லியமாகக் கேட்டது.

அந்தத் தனிமையையும் அமைதியையும் இப்பொழுது கஸ்தூரி மிகவும் வரவேற்றுள்.

மனைவியைத் தனியே விட்டு விட்டு அவள் மகன் ஊருக்குப் போனதின் மர்மம் என்ன?

அக்கம் பக்கத்தவர்களில் யாரும் அதைப் பற்றி அக்கறை காட்ட மாட்டார்கள் நிச்சயம்.

வேலைக்காரிக்குக் கொஞ்சம் சந்தேகம் ஏற்படக் கூடும். ''அவசரமாகக் கம்பெனி அனுப்பி வைச்சுட்டது. என்ன செய்கிறது, வயிற்றுப் பிழைப்பு'' என்று சமாளித்துவிட முடியும்.

ஆனல் அவள் தலைவியாக விளங்கும் அந்த மாதர் சங்கத்து உறுப்பினர் ,அவளை லேசில் விடமாட்டார்களே? தனக்குத் தலைவி பதவி கிடைக்கவில்லை என்று காரமாக இருக்கும் காமாட்சி ஒருத்தியே போதும்.

அடுத்த நாளே அவள் கல்யாணத்துக்கு வரமுடியாது நின்றுவிட்ட அங்கத்தினர்களுடன் வீட்டுக்கே விசாரிக்க வந்துவிடுவாள். கூண்டில் நிறுத்தி வைத்துக் குறுக்கு விசாரணை செய்வது போல் கேள்வி மேல் கேள்விகளாக எழுப்பித் துளைத்து விடுவாள்.

'தேன் நிலவுக்கு மனைவியைக் கூட்டிச் செல்லாமல் கம்பெனி காரியமாகவா ஹர்ஷன் போயிருக்கான்? நம்ப முடியாத சங்கதி... இதில் என்னவோ இருக்கு.'

'ஆமாம்! கல்யாணப் பத்திரிகையில் பெண்ணின் பெயர் வேறு என்னவோ போட்டிருந்தது. மாதங்கி என்று பார்த்தது நினைவில்லையே?'

உண்மையைக் கக்கும்வரை அவள் குத்திக் குதறிவிடுவாள். கல்யாணத்துக்கு வந்திருந்த சில உறுப்பினர்கள் விஷயத்தை இதற்குள் பல திசைகளிலும் பரிமாறி விட்டிருப்பார்கள்.

'செய்தி தெரியுமா?... ஹர்ஷனே வேண்டாம்னு உதறிட்டு அந்தப் பெண் கல்யாணத்துக்கு முதல் நாளே மண்டபத்திலிருந்து மறைஞ்சுட்டா. யாருக்கும் தெரியாம விஷயத்தை அமுக்கிச் சட்டுன்னு வேறே ஒரு பெண்ணை வைச்சுக் கல்யாணத்தை முடிச்சுட்டாள் கஸ்தூரி... அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இந்த ஆள் மாருட்ட விவகாரத்திலே மனஸ்தாபமாம்.'

'ஆனாலும் கஸ்தூரி தன் மகனை இப்படி வற்புறுத்தி யிருக்கக் கூடாது. மேடையிலே பேசறது ஒண்ணு தன் வீட்டுக்குன்னு வந்தால் நடந்துக்கிறது வேறே....'

பலவாறு சங்கத்து அங்கத்தினர்கள் அவளது வீட்டு விவகாரத்தைக் கிசுகிசுப்பார்கள்.

அடிவயிற்றில் சில்லென்ற உணர்வு வேதனையாகச் சுருட்டிக் கொண்டது.

சமையலறைக்குச் சென்று கொஞ்சம் பாலைச் சூடாக்கி டம்ளரில் நிறைத்து எடுத்துக் கொண்டாள். விளக்குகளை அணைத்து விட்டு மேல் மாடிப் பக்கம் வந்தாள்.

மாதங்கி ஒரு வழியாக அழுது முடித்து விட்டு, முகத்தைக்கழுவிப் பொட்டிட்டுக் கலைந்த முடியைத் வாரிச் சரி செய்து கொண்டு விட்டிருந்தாள்.

வெகு நேரம் அழுத தன் விளைவு முகம் உப்பிக் கண்கள் சிவந்து இடுங்கி விட்டிருந்தன.

கஸ்தூரிக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''இந்தப் பாலைச் சாப்பிடு. முதல் முதலாக இந்த வீட்டுக்குள் வந்திருக்கே. பட்டினியாகப் படுக்கக் கூடாது.'' — உபசரித்தாள்.

அடிவாங்கி அழுது சோர்ந்துவிட்ட குழந்தையைப் போல ஒடுங்கி நின்ற மாதங்கி மாமியார் கட்டளையை மறுக்கவில்லை.

அறையின் கதவைத் தாளிட்டுவிட்டுப் படுக்கையின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள் கஸ்தூரி.

விடி விளக்கின் ஒளியில் மருமகளை உற்றுப் பார்த்தாள்.

''ஹர்ஷன் என்ன சொல்லிவிட்டுப் போனன்?'' துணிவுடன் மெள்ளக் கேட்டாள்.

''அம்மாவுக்கு அவமானம் ஏற்படக் கூடாதே என்ற ஆதங்கத்தில் ஒப்புக்கொண்டேன். அதனலே இந்தக் கல்யாணத்தினலே நீ என் மனைவியாகி விட்டதாக மனப்பால் குடிக்காதேன்னர்...'' தழுதழுத்தாள் மாதங்கி.

''அப்படியா சொன்னன் அந்த முட்டாள்? அவன் கிடக்கிறன்.''

''அவர் வருவதற்குள் நான் பெரியப்பா வீட்டுக்குப் போய்விடணுமாம். இல்லாட்டா ரொம்பக் கஷ்டப்படுவேனும்...அவமானப் படுவேனும்.''

''பயமுறுத்துகிறன? அதையும் பார்த்து விடலாமே?'' கோபத்துடன் உதட்டைச் கடித்துக் கொண்டாள் கஸ்தூரி.

''பெரியப்பா வீட்டில் இனி எனக்கு வரவேற்புக் கிடைக்காது. பெத்தவங்களும் பிறந்தவங்களும் இல்லாத அனதை நான். இப்போ எங்கே போவேன்? எனக்குப் பயமா இருக்கு.'' திணறினள் மாதங்கி.

''இனி இது உன் வீடு. உன்னை இங்கிருந்து போகச் சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. உன் பெரியப்பா வீட்டுக்கு நீ அனுவசியமாகப் போகத் தேவையில்லை.... மாதங்கி, அழுகையை நிறுத்தி விட்டு நான்



500 மலர்களைக் கொய்யுங்கள்!

21	54	46	51	83	71	65	85	52	81
31	24	43	28	72	23	92	35	44	2
62	11	73	34	51	2	21	63	45	32
61	51	4	22	1	33	71	27	21	55
31	65	74	46	36	82	26	53	23	4
5	81	31	43	54	64	3	72	25	2
91	83	1	24	46	71	33	21	84	63
21	47	32	23	42	35	93	2	45	41
61	45	51	4	65	27	33	73	4	92
71	2	46	24	44	66	31	52	91	23

மேலே காணப்படும் 100 கட்டங்களையும் 100 பூந்தொட்டிகளாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு பூந்தொட்டியிலும் அதில் குறிப்பிட்டுள்ள எண்ணின் அளவிற்கு மலர்கள் உள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்: 10 பூந்தொட்டிகளில் மட்டுமே கை வைத்து அவற்றிலுள்ள அனைத்து மலர்களையும் கொய்ய வேண்டும். மலர்களின் எண்ணிக்கை மிகச் சரியாக 500 என வரவேண்டும். ம்... முயன்று பாருங்கள்!

— எஸ். பாலகிருஷ்ணன்.

விடை: 5, 11, 28, 36, 47, 55, 66, 74, 85, 93

சொல்லப் போவதைக் கவனமாகக் கேள். இந்த மனஸ்தாபத்தைப் பத்தி வெளியிலே யாருக்கும் தெரிய வேண்டாம். ஹர்ஷன் கொஞ்சம் முன்கோபி. அவ்வளவுதான். சீக்கிரம் மனம் மாறிப் போய்விடுவான். கவலைப்படாதே. அதுவரை உன் மனத்தைத் தளர விடாம வச்சுக்கோ. உன் கவனத்தை வேறு விஷயங்களில் திருப்பிக்கோ. இந்த வீட்டில் நீ கவனிச்சுக்கொள்ள வேலை நிறைய இருக்கு. நாளைக் காலையிலிருந்து நான் வேலைக்குப் போகணும். உன்னோட கூடத் துணையா வீட்டு வேலைக்காரி நான்வரும்வரை இருப்பாள். ரோவர் கிட்டப் பழகிட்டா உன் பின்னாலேயே நிழலாகச் சுத்திக்கொண்டு காவல் காத்துக் கொண்டிருக்கும். இந்த வீட்டு நிர்வாகம் முழுவதும் இனி உன்னுடையது. இந்தா பிடி வீட்டுச் சாவியை. பத்திரமா வச்சுக்கோ.''

தன் இடுப்பில் வெள்ளி வளையத்தில் குலுங்கிக் கொண்டிருந்த சாவிக் கொத்தை உருவி மருமகள் கையில் வைத்தாள் கஸ்தூரி.

''சரி, நீ ரொம்பக் களைச்சுப் போயிருப்பே. படுத்துக்கோ.'' உபசரித்துவிட்டுப் படுக்கையின் மீது—தானும் ஒரு பக்கம் சாய்ந்து கொண்டாள்.

சில நாட்களாக எல்லாவற்றையும் தானே ஓடியாடிக் கவனித்ததன் அயர்ச்சி. அவளையுமறியாமல் உறங்கிப் போனாள் கஸ்தூரி.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டபோது பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது. அருகில் மாதங்கியைப் படுக்கையில் காணவில்லை. கீழே சமையலறையில் பாத்திரங்களின் ஓசை மெலிதாகக் கேட்டது. பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு வேகமாகக் கீழே வந்தாள் கஸ்தூரி.

மாதங்கி காப்பியைக் கலந்து கொண்டு வந்து மேசை மீது அவள் முன்னால் வைத்தாள்.

கணவனை இழந்த பின் வேலைக்குப் போய்க் குடும்பத்தைக் கவனித்து, பிள்ளையை வளர்த்து ஆளாக்கப் பாடுபட்ட கஸ்தூரிக்குச் சரியாக உட்கார்ந்து ஒரு பிடி சாப்பிடக் கூடப் பொழுது இருந்ததில்லை. அடுப்பருகிலேயே தட்டைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றபடியே உணவைப் பரிமாறிக் கொண்டு இரண்டே வாயாகச் சாப்பிட்டு முடித்து வேலைக்கு ஓடவேண்டிய அவசர வாழ்க்கை. முதல் முதலாக அவள் உட்கார வைத்து உபசரிக்கப்படுகிறாள். வீட்டை நிர்வகிக்கவும் கடைசிக் காலத்தில் தன்னைக் கவனித்துக் கொள்ளவும் அவள் அப்படிப்பட்டதொரு மருமகளைத்தானே அடைய விரும்பினாள்?

மகிழ்ச்சி, திருப்தி, துன்பம் என்ற கலவை உணர்வு நெஞ்சை அடைக்க அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

ஸ்நானம் செய்துவிட்டு ஈரக் கூந்தலைத் தளர முடிந்து கொண்டு குங்குமம் துலங்கப் பளிச்சென்று காணப்பட்ட மாதங்கிக்கு அழகுக்குக் குறைச்சலா?

மருமகளை மீண்டும் ஒரு முறை காலோடு தலை பார்த்தாள். ஹர்ஷன் மீது அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

வாழ்க்கையில் அவன் மனைவி என்பவளிடம் என்னதான் எதிர்பார்க்கிறான்?

அழகையா? அறிவையா? அடக்கத்தையா? அன்பையா?

''அத்தை குளிக்க எல்லாம் தயாராக எடுத்து வச்சிருக்கேன்.'' — சங்கோஜத்துடன் புன்னகைத்தாள் மாதங்கி.

'இத்தனை குணங்களையும் ஒட்டு மொத்தமாகக் கொண்டிருக்கிற இந்தப் பெண்ணிடம் என்ன குறையைக் கண்டுவிட்டான்? வாழத் தெரியாத மடையன்...' எண்ணியபடி கஸ்தூரி தனியலறையை நோக்கி நடந்தாள்.

(தொடரும்)

நிர்மல் ஓவியங்கள்

அந்திரப் பிரதேசத்தில் அடிலாபாத் என்ற இடத்தில் உள்ள கிராமம் நிர்மல். இந்த இடம் ஆரம்பம் முதல் ஓவிய வேலைகளுக்குப் புகழ் பெற்றதாகும். இவர்கள் அந்தக் காலத்தில் தாவர வண்ணங்கள் தயாரித்து என்றுமே அழியாத நிறம் மாருத ஓவியங்கள் செய்து வந்தனராம். காலப் போக்கில் அந்த வண்ணங்கள் தயாரிக்கும் முறை தெரியாமல் போயிற்று.

ஆனல் அந்தப் பாணி ஓவியங்கள் இன்றும் தீட்டப்படுகின்றன. இவையே நிர்மல் பெயிண்டிங் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஹைதராபாத்தில் சிறிது காலம் வசித்த லலிதாவுக்கு இதனை அறிய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதனைச் செய்யும் ஓர் ஓவியரிடம் இதனைப் பயின்ருர் லலிதா. பிறகு அதில் தாமே சில மெருகுகளை ஏற்றி இருக்கிருர்.

முதலில் கனமான காட்போர்ட் எடுத்து நான்கு பக்கங்களிலும் சட்டம் அடித்து உறுதியாகச் செய்துகொள்ள வேண்டும். பிறகு காருக்கு பெயிண்ட் ஸ்ப்ரே பண்ணுபவரிடம் தந்து நன்ருக அதில் ஸ்ப்ரே பண்ணச் சொல்ல வேண்டும். பொதுவாக எல்லாப் பின்னணிகளும் கறுப்பில் இருந்தால் எடுபடுவதால் கறுப்பு வண்ணமே ஸ்ப்ரே பண்ணுவது நல்லது. இரண்டு நாட்கள் வைத்தால் அது நன்ருக உலர்ந்துவிடுகிறது. பிறகு அதில் வரைய வேண்டிய ஓவியங்களைத் தீட்டுகிருர்கள்.

டியூக்கோ பெயிண்ட் எடுத்து அந்த ஓவியத்தின் வண்ணங்களைத் தீட்டுகிருர்கள். டியூக்கோ பெயிண்ட் சிறிது கெட்டியானது, சீக்கிரம் உலரக் கூடியது. இதனல் சற்று வேகமாகவும் வேலை செய்வது முக்கியம். ஓவியத்துக்கு வண்ணங்களைத் தீட்டிய பிறகு டியூக்கோ வார்னிஷ் ஒரு முறை அதன்மேல் தீட்டுவதால் ஓவியம் பளபளவென்று இருக்கிறது. 9''X6'' ஓவியங்கள், தயாரிக்க கூலி 30 – 35 ரூபாய் ஆகிறது என்கிருர் திருமதி லலிதா.

– குயிலி ராஜேஸ்வரி



கழுத்தில் விழுந்த மாலை

6

பெரியப்பா வீட்டில் நாள முழுவதும் சலிக்காது உழைத்துப் பழக்கப்பட்ட மாதங்கிக்கு வீட்டு வேலைகளைக் கவனிக்கச் சிரமமே இருக்கவில்லை. மேலும் வீடு தன்னுடையது என்ற உற்சாகம். தன்னை மதித்துச் சாவிக் கொத்தையே மாமியார் தந்து விட்டாளே என்ற மகிழ்ச்சி. ஒருசில நாட்களில் ஆண்டாண்டு பழகினவள் போல வீட்டைப் பொறுப்புடன் கவனித்து எல்லா வேலைகளையும் செவ்வனே செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.

வம்புகள் சேகரிக்கும் நிமித்தம் கல்யாணம் விசாரிக்க வந்த சங்கத்து அங்கத்தினர்கள் காமாட்சிக்கும் அவள் தோழிகளுக்கும் பெரிய தோல்வி. வந்தவர்களை உட்காரச் சொல்லிக் கஸ்தூரி உபசரித்து முடிப்பதற்குள் கெட்டிலில் காப்பியும் தட்டுக்களில் கல்யாணப் பலகாரங்களுமாக எடுத்து வந்து இன் முகத்துடன் வந்தவர்களுக்குக் கொடுத்து மாதங்கி மிகவும் கவனித்துக் கொண்டாள்.



'ஹர்ஷன் கட்டாயமாகக் கம்பெனி காரியமாகத்தான் வெளியூர் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பெண் முகத்தில் இத்தனை சிரிப்பைக் காண முடியுமா?'

விமரிசனம் திசை திரும்பிப் போய்விட்டது.

மகனின் அசட்டைக்கு ஈடு செய்வதுபோல் கஸ்தூரி தன் மருமகளிடம் மிகவும் அன்பு பாராட்டினாள்.

'கல்யாணம் விசாரிக்க வருகிறவங்க இந்த மாசம் பூராவும் வந்து போய்க் கொண்டே இருப்பாங்க. அதனால் நீ வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டதும் நல்ல புடவையாகப் பார்த்து உடுத்திக் கொண்டு நகைகள் போட்டுக்கொண்டு கல்யாணப் பெண்ணாக லட்சணமாக இரு'... மருமகளிடம் ஏற்கனவே சொல்லி விட்டிருந்தாள்.

அந்த வீட்டில் அம்மாவும் பிள்ளையும் வேலைக்குப் போகிறவர்கள். காலையில் காப்பி பலகாரம். கையோடு டிபன். இரவுதான் சம்பிரதாயமான சாப்பாடு என்ற வழக்கம். ஓய்வு நாட்களில்தான் பகலில் விமரிசையான சமையல். மாமியார் வீட்டின் நடப்புக்களை வந்த சில நாட்களிலேயே புரிந்துகொண்டு விட்டாள் மாதங்கி.

வாரம் முழுவதும் கஸ்தூரி வேலைக்கு ஓடிக் கொண்டிருந்தாள். ஓய்வு நாளில் களைப்பாறக் கொஞ்சம் பகலில் தூங்கி எழத்தான் சரியாக இருந்தது. அத்தனை பெரிய வீட்டைத் துப்புரவாகச் சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ளப் பொழுது இல்லாது சாமான்களெல்லாம் போட்டது போட்ட இடத்தில் கிடந்தன. தோட்டத்தைக் கவனிக்க நேரம் இருக்கவில்லை. அண்டை அயலார் பங்களாக்களின் தோட்டங்களில் பசிய புல் தரைகளும் பூச்செடிகளும் கண்களுக்கு ஒரு விருந்தாக இருந்தன. அவை நடுவே அவர்களது தோட்டம் திருஷ்டி பரிகாரமாகப் புதர்கள் மண்டிக் கிடந்தது.

இன்பமான எதிர்பார்ப்பில் ஏற்பட்ட பயங்கர ஏமாற்றத்தையும் துயரத்தையும் மறக்க மாதங்கி நாள் முழுதும் அயராது வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஒருசில தினங்களில் அந்த வீடு புது முகம் பெற்றுப்பொலிவோடு காணப்பட்டது. தரை சுத்தமாகப் பளிச்சென்று இருந்தது.

சாமான்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒழுங்காக அடுக்கப்பட்டு விட்டிருந்தன. புத்தக அலமாரி துப்புரவாகத் துடைக்கப் பட்டு, வரிசையாகப் புத்தகங்கள் நின்றன. மேஜை மேல் கிடந்த பத்திரிகைக் குவியல் களும் குளியலறை மூலையில் குவிந்து கிடந்த அழுக்குத் துணிகளும் மாயமாயின. வேலைக் காரியின் கணவனை உதவிக்கு அழைத்து, தோட்டத்தைச் சீராக்கி, புதிய பூச்செடிகளை நட்டு வைத்திருந்தாள் மாதங்கி.

மாமியார் எழுந்து குளித்து முடித்துவிட்டு, காலைப் பலகாரம் சாப்பிடு முன் அவளது அலுவலகக் கடிதங்களைக் கொண்ட பிரீஃப் கேஸ், பகல் உணவு டிபன் டப்பா இத்யாதி களுடன் காரேஜ் அருகே தயாராக நின்று கொள்வாள் அவள்.

''அத்தை டிபனை மறக்காதீங்க...பத்திரம் சாலையைப் பார்த்து நிதானமா காரை ஓட் டுங்க... நான் எல்லாம் கவனிச்சுக்கிறேன்... போயிட்டு வாங்க...'' பரிவோடு நித்தம் வேலைக்கு அனுப்பி வைத்தாள்.

பத்து மாதம் சுமந்து பெற்ற பெண்ணாக இருந்தால் கூட இத்தனை கருத்துடன் கவனிக்க மாட்டாளே! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு அதிசயமான பெண் உண்டா?

உயிர் போனாலும் சரி எந்த விதமான கஷ்டமும் இவளை அணுக அனுமதிக்க மாட்டேன். — மாமியார் மனத்தில் மருமகள் மீது ஒரு அழுத்தமான பிடிப்பு ஏற்பட்டு விட்டிருந்தது.

அன்று மாலை அவர்களது உபயோகத் துக்குக் கொடுக்கப்பட்டிருந்த பெரிய படுக்கை அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த போதுதான் கவனித்தாள் — மூடியிருந்த அல மாரியின் மேல் தட்டில் ஒரு பக்கம் இரண்டு அழுக்குச் சட்டைகள் துவைக்கப்படாது சுருட்டி வைக்கப் பட்டிருந்தன.

அவைகள் ஹர்ஷனுடையவை. கையில் அவைகளை எடுத்ததுமே கணவனைத் திரும்பக் கண்டுவிட்டது போன்றதொரு பரிவில் மனம் குழைந்து போனாள். வேலைக்காரியிடம் கூடக் கொடுத்துத் தோய்க்க மனமின்றி தானே துவைத்துக் கொடியில் உலரப் போட்டாள். மடிப்புகளை இழுத்து உதறிவிட்டபடி அவை களை மெல்ல விரலால் தடவிப் பார்த்தாள். மெத்தென்று கைக்கு இதமாக இருந்தது. மென்மையான உடைகளை உடுக்கத் தெரிந்த ஹர்ஷனுக்கு ஏன் கடுமையானதொரு சுபா வம்? நினைக்கவும் அவளுக்குத் துக்கமாகத் தான் இருந்தது.

அன்று மாலை வீட்டுக்குத் திரும்பியதும் மருமகளைத் தன்னுடன் கோவிலுக்கு அழைத் துப் போக விரும்புவதாகக் கஸ்தூரி சொல்லி விட்டுப் போயிருந்தாள். வீணான சிந்தனை களில் நேரத்தை ஓட்டிக் கொண்டு தயங்கி நிற்க அவளுக்குப் பொழுது இருக்கவில்லை.

இரவு சமையலை வேகமாக முடித்து வைத் தாள். அலுப்புடன் அலுவலகத்திலிருந்து மாமியார் வந்ததும் சாப்பிடக் கொடுக்க, காப்பிக்கு எல்லாம் தயாராக வைத்திருந் தாள்.

பொழுது சாயும் நேரம். வாயிலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

பின்புறத் தோட்டத்தில் சங்கிலியால் தூணோடு பிணைக்கப்பட்டிருந்த ரோவர் உற் சாகமாகக் குரைக்கத் தொடங்கியது.

பரபரப்புடன் அவள் வாயிலுக்கு விரைந் தாள். அதற்குள் தன்னிடமிருந்த மாற்றுச் சாவியால் வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஹர்ஷனைக் கண்டு அவள் ஒரு கணம் அதிர்ந்து போய் விட் டாள்.

* லக்ஷ்மி



அவனும் ஆச்சரியத்துடன் அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தான். பச்சைப் பட்டுச் சேலையில் பச்சைக் கல் நகைகளில் கண்களுக்குக் குளுமையாக — கல்யாணத்தின் போது பார்த்ததைவிட புது மெருகுடன் எதிரே தயக்கமாக நின்றவளை மீண்டும் ஒரு முறை வியப்போடு பார்த்தான்.

இல்லை... இல்லை... இந்த அம்மாவின் இஷ்டத்துக்கு வணங்கிப் போவதா?... அவனது உள்ளம் புரட்சி செய்யவே தொண்டையைச் செருமிக் கொண்டு முகத்தில் கடுமை பொங்கச் சுற்று முற்றும் கவனித்தான்.

''அத்தை வரும் நேரம்தான். கோவிலுக்குப் போகலாம்னு சொன்னாங்க. நீங்க வந்தது நல்லதாப் போச்சு....'' சொல்லிக் கொண்டே அவன் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே திரும்பி விரைந்தாள்.

மேஜை மீது கொண்டு வந்து வைத்த காப்பி டம்ளரை வெறித்துப் பார்த்தான்.

அவளிடம் அவனை மெல்ல இணைத்து வைக்க அம்மா செய்திருக்கும் போதனை— பயிற்சி! அவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

''தேவையில்லை — உள்ளே எடுத்துக் கொண்டு போ.'' அதட்டிவிட்டுக் கையில் சுமந்து கொண்டிருந்த பெட்டியைத் தரையில் ஒரு பக்கமாக வைத்தான். மடமடவென்று உள்ளே சென்றான். பிரிட்ஜைத் திறந்து அம்மா தயாரித்து வைத்திருந்த கிரேப் ஜூஸ் கொண்ட பாட்டிலைக் கையில் எடுத்து ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றி நீரை அளவோடு கலந்து கொண்டான்.

எரித்து விடுகிறவன் போல மாதங்கியை உறுத்துப் பார்த்தபடி மேஜை மேல் தான் வைத்த பழரச டம்ளரை எடுக்கக் கையை நீட்டியவன் தவறித் தட்டி விடவே டமால் என்ற சப்தத்துடன் டம்ளர் கீழே விழுந்து நொறுங்கியது. திராட்சை ரசம் அவனது சட்டை பாண்டு முகம், கை எங்கும் தெறித்துக் கரையாக்கியது.

குப்பென்று முகம் சிவக்கத் தரையில் சிதறிக்கிடந்த கண்ணாடித் துண்டங்களைத் திகைப்பும் எரிச்சலுமாகப் பார்த்தான்.

''பரவாயில்லை. அதை நான் கவனிச்சுக்கிறேன். நீங்க முகம் கைகளைக் கழுவிக் கொண்டு உடை மாத்திக்கோங்க'' சொல்லிவிட்டு மின்னலாக மறைந்தாள்.

மாற்று வேட்டி சட்டை — துடைத்துக் கொள்ள துவாலை எல்லாவற்றையும் எடுத்து வந்து குளியலறைக் கம்பிமீது தொங்க விட்டாள்.

மொஸைக் தரையில் கரையிட்டுக்கொண்டு ஓடிய பழ ரசத்தை மெல்ல ஒரு பழந் துணியால் ஒத்தி எடுத்து, கண்ணாடி துண்டங்களைக் கவனமாகப் பொருக்கி அப்புறப்படுத்... அவன் உடை மாற்றிக் கொண்டு வெளியே... வருவதற்குள் அந்த இடத்தைச் சுத்த... படுத்தி விட்டிருந்தாள்.

''சூடா வேறே கொஞ்சம் காப்பி கொண்டு வரட்டுமா?'' — அவள் கேட்டபோது அவ... னுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

ஒரு டம்ளர் பழ ரசத்தை எடுத்துத் தானே குடிக்கக் கூடத் தெரியாத மடையன்போல அவள் முன் டம்ளரை உடைத்து அசடு வழி... ததை எண்ணி அவனுள் ஆத்திரம்.

''நான் வருவதற்குள் மூட்டையைக் கட்டிக் கொண்டு இங்கிருந்து கிளம்பிட... ணும்னு சொல்லி யிருந்தேனே இன்னமும் இங்கே காம்ப் போட்டுக் கொண்டு...இந்த... வீண் உபசாரமெல்லாம் யாருக்கு வேணும்?''

அழைப்பு மணி ஒலிக்கவே அவனுக்கும் பதில் அளிக்காது மாதங்கி வாசலுக்கு ஓடி... கதவைத் திறந்தாள்.

''எட்டு வீடு கேட்கிறாப் போல ஏன் கத்தறே? இந்த உபசாரம் எனக்கு வேணும்... அவள் இங்கிருந்து எதுக்குப் போகணு... கோபத்துடன் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த கஸ்தூரி மகனை முறைத்தாள்.

''அப்போ நான் இங்கேயிருந்து போக... ணும்னு சொல்றீங்களா?... இந்த வீடு என் தந்தை வழி வந்த சொத்து தெரியுமில்... லையா?'' மகன் கேட்டான்.

''தெரியும். இந்த வீடு என் கணவ... ருடையது. அதனால் இங்கே தங்கியிருக்க எனக்கு உரிமை உண்டு. அதே போல இந்த வீடு மாதங்கியினுடைய புருஷனுடையதும் கூட. அதனாலே தொடர்ந்து அவள் இங்கே தங்கியிருக்க உரிமை உண்டு.''

''அவளுக்கு நீங்க சரியான வக்கீல்.''

கண்களில் துளித்த கண்ணீரை விழுங்கிக் கொண்டாள் மாதங்கி. மாமியாரை நன்றி உணர்வோடு நிமிர்ந்து பார்த்தாள்.

''அத்தை உங்களுக்குக் காப்பி தயாரா இருக்கு. கொண்டு வரவா?'' என்றாள்.


''தாகம் உசிரு போறது.கொண்டுவாம்மா சீக்கிரம். நானும் விரைவா கோயிலுக்குக் கிளம்பத் தயாராயிடறேன். இருட்டறதுக்குள்ளே போய்விடலாம்.... ஹர்ஷன்! நீயும் கோயிலுக்கு எங்க கூட வாயேன்!'' மக... பக்கம் திரும்பி மெல்லக் கேட்டாள் தாயா...

''மாமியாரும் மருமகளும் மிகவும் ஒற்றுமையா வாழறாங்கன்னு உங்க சிநேகிதிகள் தெரிஞ்சுக்கட்டும். நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க.நான் இடையிலே எதுக்கு?'' சீறிய ஹர்ஷன் மாடிப் பக்கம் நகர்ந்தான்.

கவலையும் துயரமுமாக ஒடுங்கி நின்ற மருமகளைக் கனிவுடன் பார்த்தாள் கஸ்தூரி.

''கோயிலுக்கு எடுத்துப் போக வேண்டியதை யெல்லாம் தயாராக எடுத்துக்கோ... அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்... இந்தப் பச்சை நெக்லஸ் உனக்கு ரொம்ப அழகா இருக்கு.'' லேசாக மருமகள் கன்னத்தைத் தட்டிவிட்டுப் பின்பக்கம் சென்றாள்.

அதே சமயம் ஓங்கி மகன் கன்னத்தில் ஒரு அறை வைக்கமுடியாது வயது குறுக்கிட்டு விட்டதே என்று இயலாமையை எண்ணி அவளது தாயுள்ளம் குமுறியது. (தொடரும்)



தொடர்ந்து வரும் விக்கலை ஒரே நொடியில் நிறுத்த வேண்டுமானால் இரண்டு ஸ்பூன் சர்க்கரையை வாயில் போட்டுக் கொள்ளுங்கள். விக்கல் உடனே நின்று விடும்.ஏன் இந்தக் காலத்தில் சர்க்கரை விலையை கேட்டாலே நின்று விடும் என்கிறீர்களா? அதுவும் சரிதான்.

-வி.பிரபாகர்





ன தீர்ப்பு வழங்கிடுவார்.




ஒரு வேளை எம். ஜி. ஆர். அமைச்சில் ஊழல் இல்லைன்னு நிருபணமாயிட்டா?

10. ஆ! ஐடியா!





11. கைலாசம் உங்க கையாள்!





12. அவர் நியாயமான தீர்
வழங்கமாட்டார்!



13. எதிர்ப்பைத் தெரிவிக்க ஊர் வலமாய்க் கிளம்புவோம்!

14. கைலாசம் வீட்டெதிரே ஆர்ப் பாட்டம்!





15. ஐயோ! தொண்டர்களை
லாம் கைது பண்ணுறாங்

வசனம் : குட்டிகிருஷ்ணன்
நடிப்பு : ரால்ஃப் குவென்தர்
படங்கள் நன்றி : ஸ்காலா

7 கழுத்தில் விழுந்த மாலை



நாட்கள் வேகமாக நகர்ந்தன. சாதாரணமாக, தனது அலுவலகக் காரில், அம்மாவையும் ஏற்றிக் கொண்டு ஹர்ஷன் கிளம்புவான். வழியில் கஸ்தூரியை அவளது வேலை செய்யும் அலுவலகத்தில் இறக்கிவிட்டு விட்டுப் போவது வழக்கம். மாலையில் வீடு திரும்பும் சமயம், அம்மாவுக்காகக் காத்திருந்து அழைத்து வருவான்.

இப்போது.....? அவர்கள் தனித்தனியாக வேலைக்குப் புறப்பட்டனர். கஸ்தூரி, தங்கள் வீட்டின் காரைத் தனியே ஓட்டிக் கொண்டு சென்றாள். அலுவலகத்துக் காரில் அவன் மட்டும் கிளம்பிச் சென்றான்.

இரை தேடிய பின்னர் மாலை கூட்டிற்குள் வந்து அடைந்து கொள்ளும் பறவைகளைப் போல, இருவரும் ஒரே வீட்டிற்குள்தான் அடைய வேண்டியிருந்தது.

முதலில் சில நாட்கள் — அவன் தாயாருடன் கூட பேசாது முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். பின்னர் அந்த நிலைமை மாறி, சிறிது சிறிதாகத் தளர்ந்து கொண்டு வந்தது. அம்மாவிடம் மட்டும் பேசத் துவங்கினான்.

''பத்து மாசம் சுமந்தவள் என் தாய் — அவளை ஒரேயடியாக ஒதுக்கிவிட என்னால் முடியாது. பத்து நாளைக்கு முன், வெறும் திடீர் பந்தத்தால் நீ இந்த வீட்டில் நுழைந்து விட்டாய்! உன்னை ஒதுக்க முடியும்.'' சொல்லாமல் சொல்லின அவனது செயல்கள்.. மாதங்கி, அதைப் புரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

தான் சமைத்த உணவை மாமியாருக்கும், அவனுக்கும், ஒரே, சமயத்தில், ஒரே பரிவுடன்தான் பரிமாறினாள் அவள்.

மனத்தளவில் கோபம் பொங்கினாலும், வயிறு பசிக்கும் போது, என்ன செய்வது? அவனும் மறுப்புத் தெரிவிக்காமல் ருசித்துச் சாப்பிட்டான். ஏன், வியப்புடனேயே சாப்பிட்டான்!

அவனுக்கு மெத்தப் பிடித்த உணவு வகைகள். மாமியாரைக் கேட்டுக் கொண்டு, ருசியுடன், அவன் விரும்பிச் சாப்பிடும்படி, பக்குவம் செய்து படைக்கிறாள்! கெட்டிக்காரிதான்! ஒரு மனிதனின் மனத்தை அடைய அவனது வயிற்றுப் பாட்டை முதலில் கவனிக்க வேண்டும் என்று யாரோ சொல்லியிருந்த பழமொழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாளோ? சமையலில் குற்றம் காண முடியவில்லை. சரி! உடைகளைக் கவனிக்கும் விஷயத்தில் ....? ஊஹூம்! பேச முடியாது.

காலையில் அலுவலகம் புறப்படும் கணவன் மாடியினின்றும் இறங்கி வருமுன் வெந்நீர், மாற்று உடை யாவும், தயாராகக் குளியலறையில் காத்திருக்கும்.

முன்போல் அவன், ''அந்தக் கோடுபோட்ட 'ஷர்ட்' எங்கே? இந்த வெள்ளை ஸ்லாக் பட்டன் உடைஞ்சு போச்சே?'' என்று அம்மாவிடம் கூச்சலிடத் தேவையே இருக்கவில்லை.

அவன் கேட்ட உடைகளை, நிமிஷங்களில் அவள் எடுத்து வந்து மேஜையின் மேல்

வைத்து விடுவாள். வேலையில் அப்படி ஒரு சுறுசுறுப்பு, கவனம்.....!

ஆரம்பத்தில் அப்படி அவள் கொண்டு வந்துவைக்கும் உடைகளைக் கையில் வாங்கிக் கக்கூட அவனுக்கு வெறுப்பு....ஒரு தயக்கம். அவள் கீழ் அறையில் இருந்தால் மாடிப் பக்கம் ஓடுவான். அவள் மாடி பக்கம் வந் தால் .... திறந்த வெளியில் காற்று வாங்கு பவன் போல், நழுவி விடுவான்.

தீண்டத் தகாதவள் போல், அவளைக் கண்டாலே காத தூரம் விலகி ஓடியவனிடம் ஒரு சிறு அபிவிருத்தி தோன்றத்தான் செய் தது.

கையில் கொடுத்த பொருளைக் கை நீட்டி வாங்கிக் கொண்டான்.

'காப்பியில் சர்க்கரை குறைச்சலா இருக்கு' என்று சுவைப்பார்த்துச் சொல்லிக்கொண்டு மேலும் ஒரு ஸ்பூன் சர்க்கரையை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

அன்று காலை அவன் உடுத்திச் செல்ல எடுத்து வந்த உடைகளை அவள் மேஜை மீது வைக்கவில்லை. அவன் வருகைக்காக அறை யின் வெளியே வராந்தாவில் காத்திருந்தாள்.

''இன்னைக்கு வெய்யில் ரொம்ப அதிக மாகவே இருக்கும் போல இருக்குது. அதனாலே ஆபீசிற்குப் போட்டுக்கிட்டுப் போக இந்த 'காட்டன் ஷர்ட்' எடுத்து வச்சிருக்கேன். 'பாலிஸ்டர்' புழுங்கித் தொலைக்கும். 'காலர்' கழுத்தை உறுத்தும்.'' சட்டையை அவள் அவனிடம் நீட்டினாள்.

அவனையும்றியாமல் சட்டென்று அதை வாங்கக் கையை நீட்டிய போது அவளது விரல்களைத் தீண்டியவன் ஏதோ, மின்விசைக் காளானவன் போல அதிர்ச்சியுடன் உறுத்துப் பார்த்தான்.



முகமும், மூக்கும் சிவக்க, இலேசாகப் புன்னகைத்தபடி அவள் அவனைப் பார்த்ததும், எரிச்சலாக வந்தது அவனுக்கு.

''நாளுக்கு நாள் இவள் முகத்திலே ஏன் இப்படி ஒரு மெருகு ஏறி வருகிறது! எப்படி, இவளால், அமைதியாக, அழகாகப் புன்னகை பூக்க முடிகிறது?'' காதோரத்தில் அரும்பிய வியர்வை, கழுத்தை நனைத்தது. குற்ற உணர்வால் மார்பு படபடத்தது.. ''பாவம்!'' என ஒரே ஒரு கணம் மனம் உறுத்தியது. மீண்டும் பழைய எரிச்சல் அவனைச் சாடியதும் நிமிர்ந்தான்.

''இப்ப என்ன நடந்து விட்டது? மனம் ஏன் சஞ்சலமடைய வேணும்?'' பழைய வைராக்கியமும், பிடிவாதமும் தலைதூக்க வேகமாக மாடிப்பக்கம் விரைந்தான்.

அவனது கைப்பட்ட விரல்களை, வியப்பும் வேடிக்கையுமாகப் பார்த்தபடி நின்றிருந்த மாதங்கி சட்டென்று விழித்துக் கொண்டாள். மாமியார் கூப்பிடுவது கேட்டது. அவரது தேவைகளைக் கவனிக்க ஓடோடியும் சென்று விட்டாள்.

அன்று மாலை, வழக்கம் போல் வீட்டு வேலைகளை முடித்து விட்டிருந்தாள் மாதங்கி. மாமியாரின் உத்தரவின்படி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மிதமான ஒப்பனை முகத்திற்கு. தலையை வாரிக்கொண்டையிட்டு, பூச்சூடினாள். கஞ்சியில் நிமிர்ந்துநின்ற மலமல் சேலையும், ரவிக்கையுமாக, கச்சிதமாகக் காட்சியளித்தாள். ஒரு சில நிமிட வித்தியாசத்தில் மாமியாரும், மகனும் ஒருவர் பின் ஒருவராக வீடு திரும்பி விடுவார்கள்.

முதலிலேயே, கேட்டைத் திறந்து தயாராக வைத்து விட்டாள். ரோவரின் உற்சாகமான குரைப்புச் சத்தம் கேட்டது. வாயிற்பக்கம் தோட்டத்தினுள் விரையும் காரின் ஒலியைக் கேட்டு எட்டிப் பார்த்தாள் மாதங்கி.

போர்ட்டிகோவில் நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கிய அந்த அழகான, உயரமான, கறுப்புக் கண்ணாடியணிந்த பெண் யார்? கழுத்தில் புரண்ட கூந்தலை அசைத்தபடி, தோள் பட்டையினின்றும் நழுவிய பிரஞ்சு ஷிபானைச் சரி செய்தபடி, உள்ளே வந்தாள் அவள்.

கறுப்புக் கண்ணாடியை இடது கையால் அலட்சியமாக எடுத்தவள், அவளை ஊன்றிப் பார்த்தாள்.

''ஹர்ஷா ஆபீசிலிருந்து வரலே?'' வண்ணப்பூச்சு அதரங்கள் புன்னகைக்க, மிக்க உரிமையுடன் வினவினாள்.

அவர்: ''உன் தாத்தாவுக்குனு நீ இரவல் வாங்கிட்டுப் போற நியூஸ் பேப்பரை ரெண்டே நிமிஷத்தில் திரும்பக் கொண்டாந்துடறியே... எப்படி...?''

பையன்: ''மேட்ரிமோனியல் பார்க்க அவருக்கு ரெண்டு நிமிஷம் போகாதா?'' -உ. ராஜாஜி



'ஹர்ஷா வரலே?' என அதட்டலும் உரிமையுமாகக் கேட்கும் இவள் யார்? இவளை இதுவரை பார்த்ததே இல்லையே!' சுள்ளென்று ஒரு எரிச்சல். அதை அடக்கியபடி ''வாங்க உட்காருங்க. அவர் வர நேரம் தான்'' என்று உபசரித்தாள்.

முன்னறை சோபாவில் உட்கார்ந்தவள், சுற்றுமுற்றும் பார்வையை ஓட விட்டாள்.

''ரொம்ப சிரமப்பட்டு இருக்கீங்கன்னு தெரியுது, முன்னாலை நான் பார்த்த போது வீடு ஒரே களேபரமாக இருக்கும். தோட்டத்தைக் கூட சீராக்கி வச்சிருக்கீங்க. நீங்க தான் புது மருமகள்னு நினைக்கிறேன்!'' மெல்லச் சிரித்தாள் அவள்.

''நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?'' மாதங்கி கேட்க நினைத்தாள். 'மாமியாருக்குத் தெரிஞ்சவளாக இருந்து, கல்யாணம் விசாரிக்க வந்திருக்கலாமே. இல்லாவிட்டால் இத்தனை உரிமையாகப்பேசுவாளா?' தானே முடிவிற்கு வந்தவளாக, ''இருங்க. கொஞ்சம் சாப்பிட ஏதாச்சும் கொண்டு வரேன்'' என உள்ளே விரைந்தாள்.

ஒரு சில விநாடிகளில், ஓமப்பொடி, பர்பி சகிதம், டீயும் சாப்பிட்டபடி, ''நீங்க செய்ததா, சமையலிலும் கெட்டிக்காரியா இருக்கீங்களே!'' என்று புகழ்ந்தாள் வந்தவள்.

காரை கராஜில் நிறுத்திய ஹர்ஷன், முன்னறையில் பேச்சுக் குரலைக் கேட்டுவிட்டுச் சற்றுத் தயங்கியபடி உள்ளே நுழைந்தான்.

''ஹாய்! நீ....நீ... இங்கே ... எப்படி?'' தாள முடியாத வியப்பும், குதூகலமுமாக அந்தப் பெண்ணின் அருகே இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான். கணவனைக் கண்டதும், மாதங்கி சமையலறைக்குள் ஓடினாள்.

''வந்தவள் யார்? இத்தனை நெருக்கமாகப் பேசும் அளவிற்கு ... என்ன உறவு?'' அவளது தொண்டைக்குள் என்னவோ அடைத்துக் கொண்டது.

மாமியார் கஸ்தூரி; முகமெல்லாம் சிவக்கக் கோபமாக அருகில் வந்து நிற்பதை அப்போதுதான் உணர்ந்தாள் மாதங்கி.

''அவ வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா?''

''அவர் வரதுக்கு சித்த முன்ன வந்தாங்க. பேரைக்கூட நான் கேக்கலே. உங்களுக்குத் தெரிஞ்சவங்கன்னு டீ குடுத்து....''

''அது! ஒண்ணுதான் பாக்கி. வெக்கம் கெட்டவ! என்ன தைரியம் இருந்தா.... எந்த முகத்தை வச்சிக்கிட்டு இந்த வீட்ல நுழைஞ்சிருக்கா?'' என்று சீறினாள் மாமியார் அடிக்குரலில்.

''எனக்கு யாருன்னு தெரியலே அத்தே!'' தடுமாறினாள் மாதங்கி.

''தவறு என்னுடையது. ஆரம்பத்திலேயே எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லி இருக்கணும். ஆனா ஏற்கனவே ஒரே குழப்பமா நடந்த கல்யாணம். இதை வேறே சொல்லிக் குழப்ப வேணாம்னு நினைச்சேன். கேட்டுக் கொள்ளு. இவ பேரு ஊர்மிளா. ஹர்ஷன் ஆசைப்பட்டுக் கட்டிக் கொள்ள முடிவு செஞ்ச போது, திடீர்னு இவனை உதறிட்டு வேற ஒருத்தனைக் கட்டிக்கிட்டா. இவன் ஜாதகமே அப்படி. என்ன காரணமோ, கடைசி நிமிஷத்திலே, இரண்டு பெண்களுமே, உத



அருள்வாக்கு

ஸயாமில் ஓர் உற்சவம்!

● ஸயாம் தேசத்துச் சரித்திர ஆராய்ச்சி நூல்களைத் தமிழ் நாட்டுப் புலவர்கள் ஆராய்ந்து, தமிழ் நாட்டுக்கு அழியாப் புகழ் தரக் கூடிய சில அதிசயமான தகவல்களைத் தெரிவிக்கிறார்கள்.

ஸயாம் தேசத்து உத்ஸவ விரதங்களைப் பற்றி விவாதிக்கும் நூல்களில் வெகு காலம் தொட்டு அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வரும் ஓர் உற்சவத்துக்கு 'த்ரியம்பாவை திரிபாவை' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து சுமார் 1500 மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு தேசத்தில் திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர் ஓர் உற்சவத்துக்குக் கொடுக்கப்பட்டிருப்பது ஆச்சரியமானது.

அந்த நாட்டு மக்களுக்கு இப்பொழுது இப்பெயருக்கு அர்த்தமும் தெரியாது; அது தமிழ் மொழி என்பது கூடத் தெரியாமல் இருக்கலாம்.

அத்தகைய தேசத்தில் இப்பெயர் ஓங்கி வருவதில் மூன்று முக்கிய விஷயங்கள் வெளியாகின்றன. திருவெம்பாவை திருப்பாவை எனும் பெயரால் ஓர் உற்சவம் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒரே உற்சவமாக நடத்தப்படுகிறது. இது நமது நாட்டின் ஆர்த்ரா தரிசன உத்சவ சமயத்திலேயே அங்கு நடக்கிறது. அவ்வுற்சவத்தில் இங்கு நடக்கும் ஊஞ்சல் உற்சவம் அங்கேயும் நடக்கிறது. திருவெம்பாவை பாராயணமாக நடக்கும் நம் நாட்டில் இந்த ஆர்த்ரா தரிசன உத்சவத்துக்குத் திருவெம்பாவை திருப்பாவை என்ற பெயர் இல்லை. தமிழின் பெயரே தெரியாதநாட்டில்தொன்றுதொட்டு நடந்து வரும் உற்சவத்துக்கு இப்பெயர் இருக்கிறது. இதுவும் கவனிக்கத் தக்கது. இந்து மத தெய்வ நூல்கள் ஸயாம்—இந்தோ சீனா முழுவதும் பரவியிருந்தன என்பதற்கு அங்கு நம் தேசத்தில் காணப் படுவதை விட தூய ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஏராளமான கல்வெட்டுக்கள் அத்தாட்சியாக இருக்கின்றன. ஸயாமிலும் இந்தோ-சீனாவிலும் தெய்விகத் தமிழ் நூல்களும் வழக்கத்தில் இருந்தன என்பதற்கு ஓர் உற்சவத்துக்கு இட்டிருக்கும் திருவெம் பாவை திருப்பாவை என்னும் பெயரே அத்தாட்சியாக நிற்கிறது.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

றிட்டுப் போயிட்டாங்க. அது போகட்டும். விரும்பி வாழ வந்தவளை வைச்சுக்கிட்டு வாழத் தெரியாம இருக்கான். இந்தச் சமயம் எதுக்காக இவ வந்திருக்காளாம்?'' என்று வெடித்தாள்.

அது சமயம், ஹர்ஷன் உள்ளே எட்டிப் பார்த்தான். ''தாகம் உயிர் போவுது. இன்னுமா காப்பி தயாராகலே!'' மொட்டையாகக் கேட்டு விட்டு, அம்மாவைப் பார்த்தான்.

கோபத்தில் கனன்று கொண்டிருந்த கஸ்தூரி, ''அவ எதுக்காக வந்திருக்கா?'' என்றாள் கடுமையாக.

''அவள் கணவன், அவளை ரொம்பக் கொடுமைப்படுத்தறானாம். இம்சை பொறுக்காம, கொஞ்ச நாள் பிறந்த வீட்ல இருக்கலாம்னு வந்தாளாம்.''

''அப்படி, உங்கிட்ட சொல்லிக்க, அவளுக்கே வெக்கமா இல்லே? மனைவியை இம்சைப்படுத்தற உனக்கும் அதைக் கேட்க, அதைவிட வெட்கம் இல்லே?'' படபடவெனப் பொரிந்தாள் தாயார்.

மாதங்கி அடுப்பையே பார்த்தாள். ஹர்ஷனுக்கு ரோஷம் பிய்த்துக் கொண்டது. வெடுக்கென அந்தஇடத்தை விட்டு அகன்றான்.

மாதங்கி நடுங்கிப் போனாள். ''நீ பயப்படாதே! சிலசமயம் சூடாகச் சொன்னாத் தான் உரைக்கும். இவனை உதறிட்டுப் போனவ கிட்டே என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது? தன் கணவனைப் பத்தி இவன் கிட்ட பேசறது தவறுன்னு அவளுக்காவது புரியணும். படிச்சிட்டா போதுமா? பெரிய வேலைக்குப் போனா போதுமா? விவேகம் வேணும்.'' பல்லைக் கடித்தாள் கஸ்தூரி.

சமையலறை பக்கம் நிழலாடியது. ஊர்மிளா! ''நான் போயிட்டு வரேம்மா. ஹர்ஷன் கொண்டு வீட்ல விடறதா சொன்னதாலே புறப்படறேன். உங்க கிட்ட பேச முடியலே. ஒருசமயம், அடிக்கடி வந்து கிட்டே இருப்பேன். அப்ப பேசலாம்.'' அலட்சியமாகச் சிரித்தபடி நின்றாள்.

வாயிலில் 'ஹாரன்' பொறுமையின்றி ஒலித்தது. ''அப்பப்பா! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாது ஹர்ஷனுக்கு. வரேன்!'' சிணுங்கியபடி, ஒரே துள்ளலில் வெளியேறினாள் ஊர்மிளா.

மாதங்கி ஜன்னல் வழியே பார்த்தாள். காரின் முன் ஆசனத்தில் கதவைத் திறந்து, ஒய்யாரமாக அவன் மீது உரசியபடி உட்கார்ந்தவளைக் கவனித்ததும் கண்களில் நீர் முட்டியது. மனம் பதைபதைத்தது.

''கவலைப்படாதே மாதங்கி! ஒரு குழந்தை எழுந்து நடக்குமுன்னே, பல தடவை விழுந்து எழுந்து தத்தித் தத்தித்தான் நடக்கக் கத்துக்கணும். திருமண வாழ்க்கையும் அப்படித் தான். இதுபோல் சின்னச் சின்ன விபத்துக்களைப் பார்த்துக் கண் கலங்கிறியா? அசட்டுப் பெண்ணே! தைரியமா இரு. ம்! நானும் தயாரா வரேன். வீட்டைப் பூட்டிக்கிட்டு ரெண்டு பேரும் கொஞ்சம் கடற்கரை வரை போய் வரலாம். கிளம்பு!'' மருமகளை ஆறுதலாக, நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் கஸ்தூரி. (தொடரும்)

படம் பார்ப்பதற்கு முன் எதிர்பார்ப்புகள்:

தேவர் படம். யானைப் படம். கமல் படம். மூன்றும் நினைத்தாலே சேரமாட்டேன் என்கிறது. கமல் 'குரு' பாணியில் ஏதாவது ஓவராகச் செய்து – பயமாக இருக்கிறது.

படம் பார்த்தபின் எண்ணங்கள்:

கமல் இயல்பென்றெண்ணி காமெடியாகப் பண்ணுவது சோபிக்கவில்லை.
ரவீந்தர் ரொம்ப அலட்டல். ஆரம்பத்தில் வந்து அப்புறம் காணுமல் போகும் ஸ்ரீப்ரியா.
இளையராஜா இசை தூக்கல். ஹிட்டாகும் பாடல்கள். கதையில் ஒரு 'இது' இல்லாமல் படத்திலும் ஒரு 'இது' இல்லாமல் போய்விட்டது. கமலும் ரவீந்தரும் அடித்துக் கொள்வதும், போலீஸ் கண்டு ஓடுவதும், விலங்கு டிரெயினில் கட்டாவதும் சுவை.
நம் பாஷையில் பேசுவதை யெல்லாம் புரிந்து கொண்டு பதில் சொல்லி, புட்பால் விளையாடி, கார் நெம்பர் சொல்லி ஸ்கூல் பெல்லடிக்கும் சினிமா யானை.
ஒரே சமயத்தில் கராட்டே, கம்பு, பாக்ஸிங், கத்திச் சண்டை என்று ஜமாய்த்துக் காதலி மனம் கவரும் சினிமா நாயகன்.
கற்பனையில் பாட்டுப் பாடி, இடையிலே ஊடலாடிக் காதலனைக் கரம் பிடிக்கும் சினிமா நாயகி.
எல்லாம் நடக்கும்வரை சாவகாசமாக இருந்துவிட்டுக் கடைசிக் காட்சியில் வந்து கைது பண்ணும் சினிமாப் போலீஸ்!
எது எப்படியானாலும் கடைசி பட்டாஸ் சண்டையில் கை தட்டி, ஜெயமாலினியில் கதகதப்பாகி, கிளைமாக்ஸில் உணர்ச்சிவசப்படும் சினிமா ரசிகர்கள்!

—நளினி சாஸ்திரி

ராம் லக்ஷ்மண்



ஹர்ஷனுக்குத் தாய்மீது ஆழமான அன்பு உண்டு. ஆனாலும் தான்என்ற அகம்பாவமும் அதிகம் உண்டு. கஸ்தூரிக்கு மகனிடம் அளவுக்கு மீறிய பாசம் இருந்தது. ஆனாலும் தாயாகவும், தந்தையாகவும் இருந்து தானே வளர்த்த பிள்ளை, தன் பேச்சு மீறி நடப்பதா என்று உள்ளூற ஓர் ஆத்திரமும் கூடவே ஏற்பட்டிருந்தது. இதன் விளைவு இருவருக்குள்ளும் மனப் போராட்டமாக வளர்ந்து விட்டிருந்தது. தர்க்கங்கள் சிறு பூசல்கள் தலையெடுத்தன.

சில நாட்களுக்குப் பின்னர் ஊர்மிளா மறுபடியும் ஹர்ஷனைத் தேடிக் கொண்டுவந்தாள். பிறகு தொடர்ந்து வர ஆரம்பித்தாள்.

''ஹர்ஷன்!'' என்று உரிமையுடன் அவனை அழைப்பாள். பற்கள் தெரியச் சிரித்து, சாப்பாட்டறை மேஜை எதிரில் வந்துஉட்கார்ந்து கொண்டு காப்பியையும், டிபனையும் சுவைத்தாள். கஸ்தூரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. மரியாதையை உத்தேசித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வீடு தேடி வந்திருக்கிறாளே!

அதே சமயம், 'இப்படியே விஷயம் போய்க் கொண்டிருந்தால்....' கவலையும், உள்ளூற அரிக்கத் தொடங்கியிருந்தது.

அன்றிரவு சாப்பாட்டறையில் ஹர்ஷன் மெல்ல ஆரம்பித்தான். உணவு வேளையில் அமைதியை விரும்புகிறவள் கஸ்தூரி. சாப்பாட்டின் இடையில், அலுவலகத்துப் பிரச்னைகள், வீட்டு விஷயங்கள், ஊர் வம்பு இவைகளைப் பேச அவளுக்குப் பிடிக்காது. ஹர்ஷன் அதற்கு நேர் எதிரி. அப்போதுதான் எல்லாவிதமான பிரச்னைகளும், தட்டுச் சோற்றின் மீது ஏறிக் கொண்டுவிடும்!

அப்படித்தான் அன்றிரவு சாப்பாட்டின் போது அவன் ஆரம்பித்தான். ''ஞாயிற்றுக் கிழமைதானே. அதனால் பகல் சாப்பாட்டுக்கு ஊர்மிளாவை அழைக்கலாம்னு இருக்கேன். ஏதானும் கொஞ்சம் ஸ்பெஷலா செஞ்சா நல்லா இருக்கும்.''

விருக்கெனத் தலை நிமிர்ந்தாள் கஸ்தூரி.

''யார் கிட்டே சொல்றே? இப்பல்லாம் வீட்டு வேலையை நான் செய்யறதில்லே. தெரியுமில்லியா?''கோபத்துடன் கேட்டாள்.

''வீட்டு வேலை செய்யறவங்க கிட்டத்தான் சொன்னேன்னு வச்சுக்கிறது'' — சீறினான் மகன்.

''மாதங்கி என் மருமகள். கண்டவங்களுக்குப் பொங்கிப் போட அவள் வேலைக்காரியில்லே. புரிஞ்சுச்சோ. அந்தப் பெண் ஊர்மிளா இங்கே வரதை நான் விரும்பலே.''

''அம்மா!'' கத்தினான் மகன்.

''அவளுக்கு நம்ம கிட்ட எந்தவிதமான உறவும் கிடையாது. அவள் இங்கே வந்ததே தப்பு. தப்புக்களை நான் தொடர்ந்து அனுமதிக்கப்போறதில்லே....''

''ஆனாலும் உங்களுக்கு ரொம்பக் குறுகிய புத்தியம்மா!''

''உனக்கு விசாலமான புத்தி இருக்குதே! அது உன்னை எங்கே கொண்டு போய் விடும்னு எனக்குத் தெரியும். ஏன் வீண் வாதம் செய்யறே... அவள் இங்கே வரக் கூடாது. நான் வரவிட மாட்டேன்.'' கோபத்தை தாளாமல் பற்களைக் கடித்தாள் கஸ்தூரி.

பாதிச் சாப்பாட்டில் கையை உதறிவிட்டு எழுந்தான் மகன். அவள் அதைப் பாராதது போல அசட்டையாக இருந்தாள்.

''ரசம்கூடப் போட்டுக்கலையே. அதுக்குள்ளே...'' மாதங்கி முணு முணுத்தபோது கட்டுக்கடங்காத சினத்துடன் அவளை முறைத்தான் ஹர்ஷன்.

''உன் உபசாரம் தேவையில்லே. உன் மாமியாரை நல்லாக் கவனிக்கிறீல்ல. அது போதும்.'' ஏளனமாகக் கூறிவிட்டு வாஷ் பேசினில் பரபரப்பாகக் கையைக் கழுவிக் கொண்டு, வேகமாக மாடியறைக்குப் போய்விட்டான்.

கஸ்தூரிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. மேலே சாப்பாட்டைத் தொடரப் பிடிக்காமல், அவளும் பாதியிலேயே எழுந்துவிட்டாள். மாதங்கியின் மனம் மிக்க வேதனைப்பட்டது.

சமையலறை வேலைகளைத் துரிதமாக முடித்துக் கொண்டு, உட்கார்ந்து சாப்பிட மனமின்றி அவள்கொஞ்சம்மோரைக் குடித்துவிட்டு கஸ்தூரியின் படுக்கை அறைப் பக்கம் வந்தாள்.

ஹார்லிக்ஸ் கலந்த டம்ளரை மேஜை மீது வைத்துவிட்டுப் படுக்கையில் சுருண்டு கிடந்த மாமியாரின் அருகில் குனிந்தாள் மாதங்கி.

''அத்தை!''

கஸ்தூரி அசையாமல் கிடந்தாள்.

''சாப்பிடாம வந்திட்டீங்க. கொஞ்சம் ஹார்லிக்ஸாவது குடிங்க'' என்று சொன்னபடி மெல்ல அவளது கன்னத்தைத் தொட்டவள் துணுக்குற்றாள்.

'சில்'லென்ற கண்ணீர்த் துளிகள் கை விரலை நனைத்தன. மிகவும் துணிவாக, அழுத்த



மாகப் பேசத் தெரிந்த கஸ்தூரி அவளுக்குப் பலவிதமாகத் தைரியம் சொன்ன மாமியார் கஸ்தூரி.... இப்போது அழுதுகொண்டிருக்கிறுள்!

''அத்தே என்ன இது? நீங்ககூட....'' செல்லமாகக் கடிந்தபடி அவளது முகத்தை நிமிர்த்தினுள் மாதங்கி.

''என்னே மட்டும் கல்லால கட்டி, சாந்தால பூசிவைச்சிருக்கா? நானும் ஒரு மனிதப் பிறவிதானே. நல்லா யோசிச்சேன். என் கௌரவத்தைக் காப்பாத்திக்கணும்னு நினேச்சுக்கிட்டே, மடத்தனமான ஒரு பெரிய தவறையே செய்துட்டோமேன்னு நினேச்சேன். துக்கமா வந்திட்டுது. அவ்வளவுதான்.'' தழுதழுத்தாள் கஸ்தூரி. கண்களைத் துடைத்தபடி எழுந்து மருமகளேயே பரிதாபமாகப் பார்த்தாள்.

''இப்ப என்ன நடந்துட்டுதுன்னு நீங்க இப்படி மனசை அலட்டிக்கிறீங்க. வருத்தப்படாதீங்க அத்தை!'' மாதங்கி சமாதானம் செய்தாள்.

''கள்ளங் கபடமில்லாத உன்னே ஒரு முரட்டுப் பயலுக்குக் கட்டி வைச்சு... உன் வாழ்க்கையைப் பாழடிச்சிருக்கேனே.. அதை நினேச்சுச் சந்தோஷமா பட முடியும்?'' கண்கள் கலங்கிப் போனுள்.

மாதங்கி மௌனமானுள்.

''ஆமை புகுந்த வீடு உருப்படாதுன்னு சொல்லுவாங்க. அது போல இந்த ஊர்மிளா கால் அடி எடுத்து வச்சாலே இந்த வீடு உருப்படாதுன்னு கவலேயா யிருக்குதே!'' அரற்றினுள் மீண்டும்.

''பொறுமையா இருன்னு என்னேச் சொல்வீங்களே! இப்போ நீங்க....'' மெல்ல கூறியபடி ஹார்லிக்ஸ் டம்ளரை அவளிடம் நீட்டினுள்.

அவளது அன்பான செயலே மறுக்க முடியாதவளாய் ஹார்லிக்ஸைப் பருகிய கஸ்தூரி, மீண்டும் படுக்கையில் சுருட்டிக் கொண்டாள்.

''இந்த ஊர்மிளா எதற்காக இப்போ வந்து இங்கே குழப்பம் விளேவிக்கிறுள்!'' எண்ணி எண்ணிக் கவலேப்பட்ட அவளால் உறங்கவே முடியவில்லே.


மறுநாள் காலே குளித்து முடித்த பின், ஹர்ஷன் வழக்கம் போல் முன் அறையில் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அவனது கோபமும் இன்னும் அடங்கின பாடில்லே. பக்கத்திலே மாதங்கி கொணர்ந்து வைத்த காப்பி டம்ளரைக் கவனியாதவன் போல விருக்கென எழுந்து வெளியே சென்று விட்டான். சிறிது பொழுதில் கார் தோட்டத்தினின்றும் வெளியே செல்லும் ஒலி கேட்டது.

அன்று முழுவதும் அவன் வீடு திரும்பவில்லே. கஸ்தூரிக்குத் தாங்க முடியாத தலே நோவு வந்து விட்டது. அதனுல், அவளும் படுக்கை அறையை விட்டு வரவே இல்லே.

இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்பிய ஹர்ஷன் நேராகப் படுக்கைக்குச்





சென்றுவிட்டான். மறுநாள் காலேயிலும் சாப்பிடவில்லை. மாதங்கி கட்டி வைத்த டிபனேக்கூடத் தொடாது வேலேக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மாலே சற்று முன்னதாக வீட்டுக்குத் திரும்பியபோதுதான் ஹர்ஷன் கவனித்தான், காரஜிலிருந்து கார் எடுக்கப்படவில்லே என்பதை ''அப்படியானல்...?'' அவனேயும் அறியாமல் திடீரென ஒரு பரபரப்பும் கவலேயும் அவனுக்குள் எழுந்தன.

வாரத்தின் முதல் நாள். அலுவலகத்தில் அவனுக்கு மூச்சு விடக் கூட நேரமின்றி வேலேகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. பகல் வேளேக்கு உணவைத் தேடிக்கொண்டு ஓட்டலுக்குப் போக நேரம் இருக்கவில்லே. மாலே நடந்த போர்ட் மீட்டிங்கில் சாப்பிட்ட காப்பி அடிவயிற்றில் மறைந்து போகவே அகோரப் பசி...

பசி வந்துவிட்டால் அவன் குழந்தை சுபாவம் படைத்தவனுகி விடுவான். வீட்டுக்குள் வந்தவன் ப்ரீஃப் கேஸை சோபாவின் மீது வைத்துவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான். மாதங்கி அம்மாவின் அறையிலிருந்து வெளியே வருவது தெரிந்தது.

விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டாக வேண்டுமே! வீண் ஜம்பம் அடித்துக் கொள்ள முடியாதே. தொண்டையைச் செருமிக் கொண்டு அவளே நிமிர்ந்து பார்த்தான்.

''ஒரு நொடியில காப்பி டிபனே எடுத்து வைக்கிறேன்'' சொல்லிக்கொண்டே மாதங்கி சமையலறைக்குள் மறைந்து விட்டாள்.

பசியின் குடைச்சல் தாங்க முடியாமல் அவனுகவே சமையலறைக்குள் சென்றுன்! அவள் தட்டில் உப்புமாவை அள்ளி வைத்ததை எடுத்து ஸ்பூனல் விழுங்கினன். அடுத்து வைத்திருந்த காப்பி டம்ளரை எடுத்து ஒரே மடக்கில் 'லபக்'கென்று குடித்து முடித்தான்.


மாதங்கி சிரிப்பை அடக்க முயன்றுள். அலமாரியில் பாத்திரங்களே அடுக்குவது போல் அபிநயித்தாள். மீண்டும் இலேசாக இருமினன் அவன். என்ன என்பது போல் திரும்பினள் அவள்.

''அம்மா, சீக்கிரமாவே வேலேயிலிருந்து திரும்பிட்டாங்களா?'' வலியப் போய் அவளிடம் பேச அவனுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனுலும் விஷயம் தெரிந்தாக வேண்டுமே!

''அத்தை வேலேக்குப் போகலே.''

''உடம்புக்கு என்ன?'' திடுக்கிட்டு வினவினன்.

செஸ் விளேயாட்டை ஐரோப்பியர்கள் உருவாக்கி, ரஷ்யர்களால், அது ஆசியாவில் புகுத்தப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக ஈரானியத் தலேவர் அயத்துல்லா கோமினி செஸ் விளேயாட்டைக் கண்டால் பிடிப்பது கிடையாது. அவ் விளேயாட்டில் கூறப்படும் 'Check mate' என்பதை ஈரானியர்கள் 'Shah mate' என்று தான் அழைக்கின்றனர். - பி. நாராயணன்



''ரத்த அழுத்தம் அதிகமாகியிருக்கு. ஓய்வாக இருக்கணும்னு டாக்டர் சொன்னுர்.''

''டாக்டர் வந்து பார்த்தாரா?''

''தலேவலி தாங்க முடியாம அத்தை ரொம்பக் கஷ்டப்பட்டபோது குடும்ப வைத்தியர் சிகாமணியைக் கூப்பிட்டேன். அவர் தான் வந்து மருந்து கொடுத்திருக்கார்!''

''எனக்கு எதுவுமே தெரியாதே. ஆபீஸுக்குப் போன் பண்ணியிருக்கலாமே!'' கடுகடுத்தான்.

''நீங்க கோபமா இருக்கும்போது என்ன செய்யறதுன்னு ஒண்ணும் புரியலே.''

அவன், அவளேத் தாண்டிக் கொண்டு மௌனமாகத் தாயின் படுக்கை அறைக்குள் நுழைந்தான். மருந்து மயக்கத்தில் கஸ்தூரி ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். ஓசைப்படாது மெல்ல வெளியே வந்தான்.

''டாக்டர் என்ன சொன்னுர்?'' என்று மாதங்கியிடம் அடிக் குரலில் கேட்டான்.

''பயப்பட ஒண்ணுமில்லே. நல்ல ஓய்வு தேவைன்னுர். கவனிச்சுக்கிறேன்னு சொல்லிட்டேன்.'' முணு முணுத்தாள் அவள்.

''தாங்க்யூ'' அதற்கு மேல் அவனுக்கே சங்கோஜமாக இருந்தது. வேகமாக முன்னறைப் பக்கம் நகர்ந்தான்.

அழைப்பு மணி ஒலித்தது. மாதங்கி ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வாசலில் ஊர்மிளா நின்று கொண்டிருந்தாள்.

''ஹர்ஷன்! இங்கே உட்கார நேரமில்லே. எங்காவது வெளியே போய் நிம்மதியா ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசித் தீர்மானிக்க வேண்டிய சங்கதி. உம். ஜல்தி.'' அவசரப்பட்டாள். அவனேயும் புறப்படும்படி அவசரப்படுத்தினுள்.

மாதங்கியின் மனம் ஆத்திரத்தில் குமுறியது. இவளுக்கு என்ன இத்தனே உரிமை? உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளே திரும்பினுள்.

''வேண்டாம். தாகத்துக்கு எதுவும் வேண்டாம். அவசரமாப் போகணும்'' என்றுள் ஊர்மிளா.


ஹர்ஷன் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் கார் சாவியைக் கையிலெடுத்தான்.

''அம்மாவுக்கு உடம்புக்கு முடியலே. ரத்த அழுத்தம். படுத்திருக்காங்க.'' அவன் முடிக்குமுன் 'பக்'கெனச்சிரித்தாள் ஊர்மிளா.

''ரத்த அழுத்தம்தானே! நான் கூடப் பெரிசா என்னவோன்னு நினேச்சுட்டேன். இந்த வயசுக்கு வரவேண்டிய கோளாறு. ஊர் உலகத்திலே வராத நோயைப் போல நினேச்சுக்கிட்டுப் பயந்து போய் உட்கார்ந்திட்டீங்களே? ம்! கிளம்புங்க...''

மிரட்டினுள் அவள். கழுத்தில் பூட்டிய சங்கிலியைப் பிடித்திழுத்துத் தரதரவென இழுத்துக் கொண்டு போகப்படும் நாய்க்குட்டி போல் அவனும் அவளேப் பின்தொடர்ந்தான்.

'''டிரைவ்-இன்'னுக்கே நேரே போவோம்!'' ஊர்மிளா அசட்டையாகப் பேசியபடி அவனுடன் வெளியே சென்றது மாதங்கியின் மனத்தை உறுத்திப் புண்ணுக்கியது. மனேவி மேல் கொண்ட கசப்பு மறைந்து பேசும் அளவுக்கு மாறிவிட்டிருந்த கணவனே, இவள் எதற்காக இப்போது இடையில்.... அட கடவுளே! மாதங்கியின் மனம் புலம்பியது. (தொடரும்)



...ாத்து !

...திபதி: நீ இதுக்கு முன் ஜெயிலுக்குப் போயிருக்கிறாயா?
...கதி: இல்லை
...திபதி: இந்தத் தடவை போகலாம்! கவலைப்படாதே.

- பிரியா பாலு

ஒருவர் ''எல்லாப் பத்திரிகைகளும் கேள்வி பதில் பகுதி போடுதே ஏன்?''

பத்திரிகை ஆசிரியர்:''அப்புறம், கேள்வி கேட்பாரே இல்லாம பத்திரிகை நடத்தறான்னு சொல்லுவாங்களே...!''

-கிணத்துக்கடவு ரவி

பத்திரிகை ஆசிரியர் புது எழுத்தாளர்க்கு எழுதிய கடிதம்: ''உங்கள் கதையைப் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்........''

பி.கு: ''மூர்மார்க்கெட் பின்புறமுள்ள 14/278 என்ற எண்ணுள்ள பழைய பேப்பர் கடையில் போடவும். கடை என் தம்பியுடையது. நான அனுப்பியது என்று தெரிந்தால் நல்ல விலை கொடுப்பான்.''

-கிணத்துக்கடவு ரவி


ஒரு முதலாளி தம்முடைய காரியதரிசியைக் கூப்பிட்டு ரகசியம் என்று சொல்லி எச்சரித்து விட்டுச் சில கடிதங்களுக்குப் பதில் கொடுத்தார்.

காரியதரிசியும் பதில் கடிதங்களை டைப் செய்து கொண்டுவந்தார். அதைப் படித்துப் பார்த்த முதலாளி 'என்ன இது ஒரே தப்பு தப்பாக இருக்கிறதே கடிதத்தை டைப் செய்தவுடன் ஒரு முறை படித்துப் பார்த்து விடக் கூடாதா' என்றார்.

'ரகசியம் என்று சொன்னீர்களே நான் படிக்கலாமோ கூடாதோ என்று சும்மா இருந்து விட்டேன்' என்றார் காரியதரிசி.

- பிரியா பாலு

...அசடா, அப்பாவியா...



...) மானேஜரிடம் புகார் செய்கிறீர்கள்.
...) கடிதத்தை எல்லாரிடமும் 'ரகசியமாக'க் காட்டுகிறீர்கள்.

...வீட்டில் நீங்களாகவே தயார் பண்ணின உப்புமாவை ஆபீசுக்குக் கொண்டுவரும்போது, அதைப் பிறர் பாராட்ட—

(அ) நீங்களே எடுத்துக் 'கொள்ளுங்களேன்' என்று விநியோகம் செய்கிறீர்களா?

(ஆ) என் மனைவி தயார் பண்ணினது தான் என்று கூசாமல் பொய் சொல்கிறீர்களா?

(இ) நான்தான் பண்ணினது என்று பெருமை அடித்துக்கொள்வீர்களா?

5. மாசக் கடைசி. பியூன் நீங்கள் ஆபீசுக்கு வரும்போது 'குட்மார்னிங்' (வழக்கத்துக்கு மாறாக!) போட்டால்—
(அ) பேசாமல் போய்விடுவீர்களா?
(ஆ) பதிலுக்கு குட்மார்னிங் போடுவீர்களா?
(இ) 'என்னப்பா விஷயம்?' என்று அவனுக்கு'உதவ'முற்படுவீர்களா?

மார்க்குகள்:
ஒவ்வொரு (அ)வுக்கும் பூஜ்யம்!
ஒவ்வொரு (ஆ)வுக்கும் 5 மார்க்குகள்!
ஒவ்வொரு (இ)க்கும் 10 மார்க்குகள்!
பூஜ்யம் எடுத்தவர்கள் புத்திசாலிகள்
அதற்கு மேல் எடுத்தவர்கள் அசடுகள்.
அதற்கு மேல்?... என்னத்தைச் சொல்ல?

-விஜய்

பலி ஆடுகள்

கிருஷ்ணகுரு

''ம்... என்ன விசேஷம் இன்னிக்கு?'' என்று வேணு இயல்பாகப் பேச்சை ஆரம்பித்தபோது திக்கென்றது வேதாவுக்கு... அவன் இரண்டு வாய்கூட அள்ளி வாயில் போட்டிருக்கவில்லை. விசேஷத்தைச் சொன்னால் புருஷனுக்கு ஏகாதசிகூட இல்லை...முழுப் பட்டினிதான் என்று மனத்தில் படப் பேசாமல் எழுந்து உள்ளே போனாள்.

கொஞ்சம் மோர் சாதம் தட்டில் இருந்தபோது வேதா பயத்துடன் மெள்ள ஆரம்பித்தாள்.

''போஸ்ட்மேன் வந்திருந்தார்....''

திகைப்புடன் தலையை உயர்த்தினான் வேணு.

''பணம் திரும்பிவந்து விட்டதா என்ன?''

''ஆமாம்...விஜயா வாங்கலைபோலிருக்கு!''

மேற்கொண்டு சாப்பிட வேணுவுக்குப் பிடிக்கவில்லை. சாப்பிட்டாலும் கூட எதிர்த்து வருகிற மாதிரி உணர்ந்தான். கையை அலம்பிக் கொண்டு எழுந்தான்.

''என்ன சமாசாரமாம்...''

''என்ன இழவோ... யாருக்குத் தெரியும்? தீபாவளிக்கு அனுப்பிய பணத்தைத் திருப்பி அனுப்பறது தர்மமே இல்லை.... அவங்களுக்கு யாருசொல்றது.... உங்கதங்கை திருப்பி அனுப்பியிருக்க மாட்டா... அழகான மாப்பிள்ளை... அவரை எதிர்த்துப் பேச முடியுமா அவளாலே....''

வேணு பேசாமல் பாயைப் போட்டுப் படுத்தான். கண்கள் மூடியிருந்தாலும் எரிச்சல் கனன்றது. இது நெஞ்சில் ஏற்பட்டதா... கண்ணில் ஏற்பட்டதாதெரியவில்லை!

தங்கையைப் பார்த்து ஆறு வருஷமாகியிருந்தது. வருஷா வருஷம் தீபாவளிக்குக் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்குப் பணம் அனுப்புவது குடும்ப வழக்கம். கூடப் பிறந்தவர்கள் அதை அனுப்பாமல் விடுவது கேவலம். அப்படி அனுப்பிய பணம் எந்த வருஷமுமில்லாமல் இந்த வருஷம் திரும்பி வந்திருக்கிறது. அதுஅனுப்பிய பாடே பெரிசு! அதைப் புரிந்துகொள்ள யாருக்கு நேரம் இருந்தது....

எட்டு வருஷங்களாகியும் மாப்பிள்ளைக்கு முறுக்கு உடையவில்லை;

வேணு விஜயாவைச் சோமுவுக்குக்கொடுத்தபோது சாதாரணமாகத்தான் இருந்தான். விஜயாவும் அழகி என்று சொல்லிவிட முடியாது. குடும்பப் பாங்காக இருப்பாள். வேணு தன்னால் முடிந்தவரை போட்டுச் சுமாராகத்தான் செய்து கொடுத்தான். அவர்களுடைய தகுதிக்கு அன்று அது அதிகம் தான். கல்யாணம் ஆகி இரண்டு வருஷங்களுக்குள் சோமுவின் நிலை உயர உயர அவனும் மாற ஆரம்பித்தான். அங்கே வேணுவின் மதிப்பு சர்ரென்று இறங்கி ஒன்றுமில்லாதவனாகிப் போனான். தகுதிக்குச் சரியாகச் செய்யவில்லை என்ற வாதம், தங்கையின் மாமியாரிடம் ஆரம்பித்த மரியாதைக் குறைவான கேவலமான வார்த்தைகள் இதெல்லாம் தொடரத் தங்கையின் வீட்டுக்குப் போவதைக் குறைத்து ஒரேயடியாகத் தங்கையைப் பார்ப்பது நின்றே போய்விட்டது. ஆறு வருஷங்களாக இருந்த ஒரே தொடர்பு இந்தப் பண்டிகைப் பணம் அனுப்புவதுதான். அதுவும் திரும்பி வந்து விட்டது.

தூக்கம் பிடிக்காமல் எழுந்தான்.

''என்ன தூக்கம் வரல்லியா...'' என்று வேதா அனுதாபத்துடன் கேட்டபோது ஸ்வரம் எழாமல் முனகினான்....

''உங்க சின்னத் தம்பி வந்திருந்தார். அவர் அக்காவைப் பார்க்கப் போயிருந்தாராம்.... சொல்லவே சங்கடமாக இருக்கு. இப்போ விஜயா புருஷன் நிறைய குடிக்கிறாராம். தினமும் விஜயாவைப் போட்டுஅடிக்கிறாராம். தினம் தப்பினாலும் அடி தப்பறதில்லையாம். போன ஞாயிற்றுக் கிழமை ராத்திரி அடி அடின்னு அடிச்சுப் புழக்கடையிலே மழை இருட்டிலே நிறுத்திட்டாராம்.... போன மாசம் கொதிக்கிற பாலை உதைச்சு அது விஜயா முகத்திலே, முதுகிலே பட்டு ஒரே கொப்புளமாம்.

''மாமியார் கொடுமை, வாழாவெட்டியா இருக்கிற நாத்தி கொடுமை வேறேயாம். கேட்க முடியாத பேச்சாம்.... சமயத்திலே இழுத்துப் போட்டு அடிச்சிடறாங்களாம். ...இப்ப விஜயா முழுகாம வேறே இருக்காளாம்....''

அந்த வேதனையிலும் வேணுவுக்குச் சிரிப்பு வந்தது. ''பெண்டாட்டிபிடிக்கவில்லை'' என்று ஊர் முழுக்கத் தம்பட்டம் அடிக்கிற மைத்துனன் வருஷம் தவறாமல் பிள்ளை பெற்றால் சிரிப்பு வராதா என்ன...

''யாரோ ஒருத்தியை வச்சிருக்காராமே?''

''ம்....'' என்று அசுவாரஸ்யமாக முனகினான்வேணு. அதைப் பற்றிக் கவலைப்பட அவன் தயாரில்லை. தங்கையைப் பற்றிக் கவலைப்படலாம். அவள் அடிபட்டுச் சாகிறாளே என்று நோக



லாம்... மைத்துனன் அடிக்கிற கூத்தைப் பற்றிக் கவலைப்பட அவன் யார்...?

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கடைக்குப் போக நடந்தான். மனசு கனமாக இருந்தது. ஒரு பெண்ணை இப்படிக் கூடக் கொடுமைப் படுத்துவார்களா . . . மாதமாக இருக்கிற பெண்ணை ராத்திரியில் மழையில் நிறுத்துவது என்ன விதத்தில் நியாயம்.... ரௌத்திரகாரமான கோபம் மனத்தில் எழுந்தது. ஆனால் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று பட்டதும் தன் இயலாமையை நினைத்து வெட்கம் வந்தது. யார் யார் மேலேயோ கோபம் வந்தது.

மைத்துனன் சோமு கொஞ்சம் முரடன். பழகுகிறவர்கள் எல்லாம் முரடர்கள். குடி, போலீஸ் இதெல்லாம் அவர்களுக்குச் சகஜம். மானம் மரியாதை விட்டுத் தெருச் சண்டைக்கு நிற்க அவர்களால் முடியும். போலீஸ் கோர்ட்டு என்று செலவு செய்ய அவர்களுக்கு வசதி உண்டு. இங்கே வயிற்றுச் சோறே பிரச்னை. இதில் வேறு விஷயங்கள் எல்லாம் வேணுவுக்குச் சாதனைகள்.

கடைக்கு வந்தபோது தம்பி வந்து காத்திருந்தான்.... அவனைப் பார்த்தபோதே 'திக்' கென்றது. என்ன கொண்டு வந்திருக்கிறானோ... என்ன நடந்ததோ...?

''என்னடா சமாசாரம்?'' என்று பதற்றத்தை மறைத்துக் கொண்டு கேட்டான். கொஞ்சம் தயங்கிய பின் அவன் ''ஒண்ணுமில்லே.... அக்காவுக்கு அபார்ஷன் ஆயிடுச்சாம். கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குக்





அருள்வாக்கு

ஸத் ஸங்கம்

துர்யோதனனும் தர்ம புத்திரரும் சுற்றிக் கொண்டு வந்தார்கள். துர்யோதனனுக்கு எல்லோரும் கெட்டவர்களாகத் தென்பட்டனர். ஆனால் தர்மருக்கு எல்லோரும் நல்லவர்களாகவே தெரிந்தார்கள். தர்மருக்கே ஓர் இடத்தில் மனம் கொஞ்சம் சஞ்சலப்பட்டது. ஒருவன் பிராணிகளைக் கொன்று மாமிசம் தயார் செய்து கொண்டு இருந்தான். ''ஏன் இவ்விதம் கொலை செய்கிறான்? இவன் கெட்டவனாகத் தென்படுகிறானே'' என்று எண்ணினார். பிறகு அந்தக் கசாப்புக் கடைக்காரனிடமும் அவருக்கு ஒரு நல்ல அம்சம் தென்பட்டது. வியாபாரம் துவங்குவதற்கு முன்னால் தான் தயாரித்த மாமிசத் துண்டுகளைக் கூரைமீது காகங்கள் சாப்பிட எறிந்தான். சிலவற்றை நாய்க்குப் போட்டான். அவனும் பிராணிகளிடம் அன்பு காட்டினான். இதைக் கண்டு தர்மர் அவனையும் நல்லவனாகவே கொண்டார். நல்லவர்கள் பிறரிடம் கெடுதல்களைக் காணமாட்டார்கள். கெட்டவர்கள் மற்றவரிடம் கெட்டதையே காண்பர். தர்ம சீலரான தர்ம புத்திரரே க்ஷணக் காலம் ஒருவனைக் கெட்டவனாக எண்ணலாமா? சிந்திக்க வேண்டும். இதற்குக் காரணம் அவருடன் ஒருவன் வந்து கொண்டிருந்தானே, அந்தச் சிறிது நேரச் சேர்க்கையே தர்மசீலரின் புத்தியை மாற்றிவிட்டது. இது துர்ச் சங்கத்தின் விளைவு. இதற்கு நேர் மாறானது ஸத் ஸங்கம். கண் இரண்டானாலும் பார்வை ஒன்றுதான். எதிலும் நல்லதைக் காண வேண்டும். நான் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும்போது 'உலகம் கெட்டுப் போகிறதே' என்று வருத்தப்படுவதுண்டு. ஆனால் உலகத்தில் நல்ல காரியங்களும் நடக்கின்றன. பல கும்பாபிஷேகங்களும், பல தார்மீகப் பிரசங்கங்களும் நடந்து கொண்டு இருப்பதைக் காணும்போது நாம் நினைத்தபடி தர்மம் கெட்டுப் போகவில்லை என்று தெரிகிறது. தர்ம சிந்தனையும் பக்தியும் காணப்படுவதில் மகிழ்ச்சி. இருப்பினும் அது வறண்ட பக்தியாக இல்லாமல் மனத் தூய்மையுடனும் ஒழுக்கத்துடனும் கலந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் முதற்படி ஸத்ஸங்கம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியசுவாமிகள்

கொண்டு போயிருக்காங்களாம். அதான் வந்தேன்'' என்றான்.

''எப்படி ஆச்சாம்?''

''நேத்துக் குடிச்சிட்டு வந்து அவன் உதைச்சிருக்கான்...''

''தெய்வமே...'' என்று மனசுக்குள் அரற்றிக் கொண்டான்.

''நான் போய்ப் பார்க்கிறேன்'' என்றான் வேணு.

''வாண்ணா...'' என்று ஈன ஸ்வரத்தில் வரவேற்றாள் விஜயா. ''ரொம்ப இளைச்சுப் போயிட்டே....''

''என்னை விடு... இப்படி ஆயிட்டியேம்மா. கஷ்டம் நம்ம கிட்ட ஆயிரம் இருந்திருக்கும். கல்யாணமாகிறபோது கிழங்கு மாதிரி இருந்தே... நீ யார்னே புரியாமல் வீணாப் போயிட்டியேம்மா....''

''நீ பாத்ததுக்குப் பின்னாடி மூணு குழந்தைகளுக்குத் தாயாயிட்டேன்... நாலு அபார்ஷனுக்கு ஆளாயிட்டேன்... இது போதாதுன்னு....'' என்று நிறுத்தினாள்.

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று வேணுவுக்குப் புரிந்தது. ''இது போதாதுன்னு அடி வதை, மனசு கஷ்டம்தொல்லை!''

''ஏம்மா ஏதாவது சாப்பிடறயா...கொஞ்சம் காப்பி...''

சந்தோஷத்துடன் தலையை ஆட்டினாள். முகத்தில் களைப்பின் ரேகைகள் இருந்தன. எப்போது சாப்பிட்டதோ... யாரும் கவனித்த சுவடையே காணோம்...

''அட பாவிகளே... உங்களுக்காக என் தங்கை எவ்வளவு உழைத்திருப்பாள்... ஒரு காப்பி வாங்க, ரெண்டு ஆரஞ்சுப் பழத்துக்கு யாரும் இல்லையே.... இப்படி அப்படி அசைய முடியாத அவளுக்கு ஒரு வாய் தண்ணீர் கொடுக்க ஆளில்லையா... என்று மனசில் கனம் ஏறியது. கண்ணில் அரும்பிய நீரை மறைத்துக்கொண்டு ஓடி நாலு சாத்துக்குடிகளையும் கடைக்காரரிடம் கெஞ்சி டபராவில் நெஸ் காப்பி ஒன்றையும் வாங்கிக் கொண்டு வந்தான். கொண்டு வந்து ஆற்றிக் கொடுத்தபோது அவள் உயிரையே வாங்கிக் குடித்துப் பிழைத்துப் போகிற மாதிரி ஆவலுடன் குடித்தாள். கை நடுங்கியது. முகம் வியர்த்து, குடித்த களைப்பு தெரிந்தது.

''வேறே என்னம்மா வேணும்...'' என்று அன்பு குழையக் கேட்டான் வேணு.

''வேறே ஒண்ணும் வேண்டாம்.... ஒரு தடவை உன்னைப் பார்க்கணும் போல இருந்தது. நீ வந்துட்டே.... ரொம்பத் திருப்தியண்ணா....''

''அப்படியெல்லாம் சொல்லாதேம்மா. நீ சௌக்கியமாயிடுவே...இதெல்லாம் பெண்களுக்கு சகஜம்... ஏம்மா எதுக்கு இப்படி பிள்ளை பெத்துக்கிட்டுக் கஷ்டப்படறே... ஒரு ஆபரேஷன் செய்துக்கறது....''

''ஆமா... புள்ளை பெத்துக்க ஆசைப்பட்டு நான் பெத்துக்கறது மாதிரியில்லே நீ பேசறே? போன தடவையே டாக்டரம்மா சொல்லிட்டாங்க...அடுத்த குழந்தை பொறந்தா உன் உசிருக்கே ஆபத்துன்னு... இப்போ அபார்ஷன் ஆயிடுச்சி.... அடுத்தது ரெண்டு மாசத்

திலே உடனே உண்டாகப் போகுது... உடம்பிலே ரத்தமே இல்லேங்கருங்க... இப்படி இருந்தா உடம்பு தாங்குமா என்ன... அது அவங்களுக்குத் தெரியாதா... தெரியும் அண்ணு... தெரிஞ்சே செய்யருங்க. என்ன அர்த்தம்... நான் தொலேஞ்சி போறதுக்கு இது ஒரு தொல்லே இல்லாத வழி... சட்டம் அவங்களே ஏதும் செய்ய முடியாது...''

''கடவுளே....'' என்று அதிர்ந்து போய்க் கட்டிலில் உட்கார்ந்தான் வேணு.

''தெய்வங்களே... இந்தக் கொடுமையை நீங்கள்ளாம் பார்க்கவும் சகிக்கிறதோ...'' என்று மனசுக்குள் புலம்பினன்.

''ஏம்மா...இது கொலே இல்லே... கிராதகம் இல்லே...''

''கிராதகமா இருக்கலாம்... கொலேயில்லே... ஏன்னு கொலேகாரனுக்குத் தண்டனே உணடு... இவங்களுக்குத் தண்டனே எங்கே இருக்கு... தண்டனே யில்லாத ஒன்று எப்படிக் குற்றமாகும்...''

திடீரென்று ஆவேசம் வந்தவன் மாதிரி பேசினன். ''இதோ பாரும்மா.. இனிமே நான் உன்னே அங்கே விட மாட்டேன். நான் குடிக்கிற கஞ்சியை நீயும் குடி... குழந்தைகளேக் கூட்டி வந்துடு...''

''அவங்க விட் மாட்டாங்களே...''

''விவாக ரத்து வாங்கு.''

''ஆத்திரப்படாம யோசி, அண்ணு...உன் குடும்பத்தைத் தாங்கவே உன்னுலே முடியல்லே.... என்னேயும் குழந்தைகளேயும் வச்சி நீ என்ன செய்ய முடியும்...''

''நான் இதைப் போலீசுக்கும் கலெக்டருக்கும் எழுதறேன்.''

''அந்த மாதிரி தப்பு ஏதும் செஞ்சி அசிங்கப்படுத்திடாதே... நான் போனுலும் பெத்துட்ட தோஷத்துக்குக் கஞ்சியோ கூழோ ஊத்திக் குழந்தைகளேக் காப்பாத்து வாங்கன்னு எனக்கு நிச்சயமான நம்பிக்கை இருக்கு... நீ ஏதாவது செய்து குழந்தைகளேயும் அவங்களே விட்டுப் பிரிச்சிடாதே... அதுகளே அநாதைகள் ஆக்கிடாதே. உன்னேக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன்...''

''நான் என்னதாம்மா செய்யறது...''

''நீ ரொம்ப நல்லவன் அண்ணு... சந்தோஷமா இரு. நான் உனக்கு நிறையக் கடன் பட்டிருக்கேன்... அடுத்த ஜன்மத்திலே தாயாய்ப் பொறந்து தீர்த்துடறேன்... விஜயா செத்துட்டான்னு நெனேச்சுக்கோ... அந்த முடிவோட இங்கே இருந்து போ.... யாரோடேயும் வம்பு பண்ணிக்காதே... அரக்கர் கொடுமையைத் தேவர்கள்ளாலேயே தாங்க முடியாம ஈஸ்வரனே அண்டி ஓடு வாங்களாம்... நீயும் ஈஸ்வரனேத் தியானிச்சுக்கோ.... அவன் அவர்களுக்குப் புத்தி கொடுத்து நான் பொழச்சா உன் அதிர்ஷ்டம்... நீ இவங்களே எதிர்க்க முடியாது'' என்று அவள் சொன்னபோது கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதுவிட்டு வேணு புறப்பட்டான். விஜயாவால் அழக்கூட முடியவில்லே. நீர் வற்றிப் போய்விட்டதோ என்னவோ. அவள் மனசில் சீழ்ப்பிடித்த கொப்புளங்கள்தான் இருக்கும் என்பது நிச்சயம். தன் வரவு கொஞ்சம் அவளுக்கு இதமளித்திருக்கலாம்.

படம் பார்ப்பதற்குமுன் எதிர்பார்ப்புகள்:

வழக்கத்துக்கு மாருக, கடவுள்களின் திருவிளேயாடல்களேக் காட்டாமல் அவர்களின் திருமண வைபவத்தைக் 'காட்டப் போகிருர்களாம். மூன்று டைரக்டர்களாம். மூன்று இசையமைப்பாளர்களாம். ஆறு ஒளிப் பதிவாளர்களாம். ஹூம். 'டுமெனி குக்ஸ் ஸ்பாயில் த பிராத்' கதையாகாமல் இருந்தால் சரி.

படம் பார்த்தபின் எண்ணங்கள்:

மீனுட்சி கல்யாணம்: டைரக்டர் ப. நீலகண்டன். ஏராளமான செட். ஏராளமான மேக்கப். குண்டோதரன் காட்சிகள் விட்டலாச்சார்யா பாணி. மீனுட்சி லதா — அதிக அறிவுரை. கே. வி. மகாதேவன் இசையில் பக்தி உள்ளது. சாதாரணக் கல்யாணம். மாங்கல்யம் வேண்டுவோர் மதுரை செல்க!

வள்ளி திருமணம்: காமேஸ்வர ராவ் டைரக்ஷன். இளமை துள்ளும் கல்யாணம். மாடர்ன் வாசனே வீசும் கல்யாணம். காரணம் 1. வெங்கடேஷ் இசை. 2. வெளிப்புறப் படப்பிடிப்பு. வள்ளி ஸ்ரீதேவி. முருகன் ராஜ்குமார். கண்ணதாசனின் கிளுகிளுப்பான வசனங்கள். குளுமையான ஸ்ரீதேவி நடனங்கள். நன்ருய்ச் சிண்டு முடியும் நாரதர் வெ. ஆ. மூர்த்தி.

ஆரோக்கியம் வேண்டுவோர் தணிகை செல்க!

ஸ்ரீனிவாச கல்யாணம்: கே. சங்கர் டைரக்ஷன் — ஏதோ இருக்கிறது. எம். எஸ். வி. இசை இனிமையாக உள்ளது. ரொம்ப நாளேக்கப்புறம் விஜய குமாரி. பத்மாவதியாய் ஸ்ரீப்ரியா. விரகதாபத்தை முகத்தில் காட்டும் முதிர்ந்த நடிப்பு. ஸ்ரீனிவாசன். ரவிகுமார். ஏராள பொருட் செலவு உடையிலும் 'செட்'டிலும் பிரதிபலிக்கிறது. பிரமாதமாய் ஒன்றுமில்லே.

செல்வம் வேண்டுவோர் திருமலே செல்க!

-நளினி சாஸ்திரி

தெய்வத் திருமணங்கள்



ஒரு வாரகாலமாகக் கஸ்தூரி வேலைக்குப் போகவில்லை. டாக்டர் உத்தரவின்படியே லீவு எடுத்துக் கொண்டு வீட்டிலேயே ஓய்வாக இருந்தாள். மருந்துகளின் மயக்கத்தில் நாளின் பெரும் பகுதியைத் தூங்கியே கழித்தாள். நிற்க நேரமின்றித் தன்னைப் பற்றிய நினைப்பும் இன்றிப் பல காலம் உழைத்து விட்டிருந்தவள் – மகனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால் மனம் நொந்து போனவள் அவனுக்கு நேர்ந்த கார் விபத்தின்போது அவள் பட்ட கவலைகள். இவை அனைத்துக்கும் சேர்த்து இப்போது அவளுக்குப் படுக்கையில் இருக்க வேண்டிய அளவு ஓய்வு தேவைப்பட்டது.

ஹர்ஷன் காலையில் வெளியே கிளம்பும் போது அம்மாவின் அறை வாயிலில் நின்று எட்டிப் பார்த்தான். அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். மாலை வீட்டுக்குத் திரும்பும் போதும் அவள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். வெளியிலிருந்து வெகு நேரம் சென்ற பின்னர் இரவு வீடு திரும்பியபோதும் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

ஒரு வார காலமாகத் தாயிடம் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாது போனதை எண்ணி அவனுக்கு வேதனையாக இருந்தது. கொஞ்சம் வெட்கமாகக் கூட இருந்தது. ஆனால், அவனுடைய அன்றாட வாழ்க்கை நியதியில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. மாதங்கி அவனை நன்றாகவே கவனித்துக் கொண்டாள்.

குளித்துவிட்டு வருவதற்குள் காலையில், அவனது காப்பி பலகாரம் மேஜைமீது தயாராக வைக்கப்பட்டிருக்கும். கையோடு எடுத்துப்போக, டிபன் டப்பா கூடத் தயாராக இருக்கும். மாலை வந்ததும், முகத்தைக் கழுவிக் கொண்டு வேறு உடுத்தி வருவதற்குள் டிபன் அவனுக்காகக் காத்திருக்கும். இரவு, அவன் எத்தனை நேரம் கழித்து வீடு திரும்பினாலும், சாப்பாடு பரிமாறிக் கவனித்துக் கொள்ள மாதங்கி விழிப்புடனிருந்தாள்.



முன்பெல்லாம்,—தாயாருக்கு உடம்பு சுகமில்லாது ஒரு நாள் வீட்டில் தங்க நேரிட்டாலும் போதும். அவனுக்கு அலுவலகத்தில் வேலையே ஓடாது. தவித்துக் கொண்டிருப்பான்.

''வேலைக்காரி வீட்டுக்குப் போய்விட்டிருப்பாளோ? அம்மாவுக்குக் காய்ச்சல். ஒரு வாய் தண்ணீர் எடுத்துக் கொடுக்கக் கூட யாரும் இல்லையே'' என்று கவலைப்படுவது வழக்கம்.

இந்த ஒரு வார காலமாக அப்படிப்பட்ட கவலையெல்லாம் அவனுக்கு ஏற்படவில்லை. மாதங்கி கவனித்துக் கொள்கிறாள் என்ற நிம்மதி! ஆனாலும் அம்மாவிடம் நேரிடையாக ஒரு வார்த்தை கூடப் பேசமுடியவில்லையே என்ற குற்ற உணர்வு மனத்தைக் குடைந்து கொண்டே இருந்தது.

அன்று மாலை வெளியே சென்றவன், இருட்டிய பின் சிறிது நேரத்துக்குள்ளேயே வீடு திரும்பிவிட்டிருந்தான். காரைக் காரேஜில் நிறுத்திப் பூட்டிவிட்டு உள்ளே நுழைந்தவன் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

அவர்களது குடும்ப நண்பர் நாராயணசாமியை எதிர்பாராத விதமாகக் கடற்கரையில் சந்தித்து விட்டான் அவன். ஊர்மிளாவும் அவனும் ஒரு வார காலமாகத் தினசரி கடற்கரைக்குச் சென்று, மணலில் அமர்ந்தபடி தனியே, வார்த்தையாடுவது வழக்கமாயிருந்தது.

அவன் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்பாக இன்னமும் அவள் மீது ஆசை லேசாக மூண்டுகொண்டு இருந்தது உண்மை. எவ்வளவோ முயன்றும் அவனால் அதை அடக்க முடியாத நிலை. போதை மருந்தைத் தின்றுவிட்டவன் போல அவளது பேச்சிலும் சிரிப்பிலும் இன்னமும் மயங்கிய நிலையில் தன்வசமிழந்து கொண்டிருந்தான்,



நாராயணசாமி அவர்கள் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கம் உள்ளவர். அவனது தந்தையுடன் படித்தவர். பழகியவர். அவ்வப்போது குடும்ப நலனை விசாரித்து வரும் நல்லதொரு மனிதர். சங்கடமான சந்தர்ப்பங்களின்போதெல்லாம், கஸ்தூரிஅவரது ஆலோசனையைக் கேட்கத் தவறியதில்லை. அவர் சொந்த வியாபார வேலைகள் இருந்தும் கூட, அவனது கல்யாணத்தில் கலந்து கொள்ள விடியுமுன் தமது காரில் புறப்பட்டுத் திருத்தணிக்கு ஓடோடி வந்திருந்தவர்.

அன்று மாலை, அந்த நாராயணசாமியும், கடற்கரையில் சற்று நேரம் காற்று வாங்க வந்தவர் கண்டுவிட்டார்!

காரிலிருந்து இறங்கி, நடை பாதையில் சற்று நடந்து அலுத்த பின், மணலில் இறங்கியவர் முன், ஹர்ஷன்! கூடவே மகிழ்ச்சி குலுங்க அவன் அருகே... யார் அந்தப் பெண்?

மிக அருகாக நெருங்கியபோது தூக்கி வாரிப் போட்டது. சில நாட்களுக்கு முன், திருத்தணியில், கல்யாண மண்டபத்தில் அவன் அருகே உட்கார்ந்திருந்த அந்த அமைதியான பெண்... அவள் இல்லை....

மூக்கின் மீது நழுவிய கண்ணாடியைச் சரி செய்து கொண்டார். பளிச்சென்று வீசிக் கொண்டிருந்த மாலை வெய்யில் மறையத் துவங்கிய நேரம். மீண்டும் நன்கு உற்றுப் பார்த்தார்.

இரண்டு வருஷங்களுக்கு முன் ஹர்ஷனை வேண்டாம் என்று கல்யாண சமயம் வரும் போது தட்டிக் கழித்துவிட்டு வேறு ஒருத்தனை மணந்துகொண்டு மறைந்துபோன ஊர்மிளா அல்லவா? இவளுடன், இங்கே....? என்ன சம்பந்தம்... அதுவும் தனியாக உட்கார்ந்து கொண்டு....?

தொண்டையைக் கனைத்துக் கொண்டார் நாராயணசாமி.

திரும்பிப் பார்த்த ஹர்ஷன் தூக்கிவாரிப் போட எழுந்தான். குற்ற உணர்வில் குன்றிப் போய்விட்டான் ஒரு கணம். பிறகு அவர்அருகே வந்தவன்,சமாளித்தபடி, ''வீட்டுப் பக்கம் வந்து ரொம்ப நாளாச்சுதே'' என்று விசாரித்தான்.

தலையைக் குனிந்து கொண்டு மணல் மீது கோலம் போட்டுக் கொண்டிருந்த ஊர்மிளாவை வெறுப்புடன் உற்றுப் பார்த்தார் அவர். அதற்குமேல் சினம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

''ஏனப்பா ஹர்ஷா! இன்னொருத்தன் மனைவியோட கடற் கரையில் உலாத்தறது எந்த நாகரிகத்தில் சேர்த்தி? உங்கப்பா உசிரோட இருந்து இதைப் பார்த்தால் அப்படியே குன்னிப் போயிருப்பான். ரொம்ப கண்யமான மனுஷன். குழிப்பிள்ளையைத் தோண்டி எழவு கொண்டாடற கதையா... விட்டுப் போன விவகாரத்தை இப்போ எதுக்காகத் தொடரணும்? நீ என்ன சமாதானம் சொன்னாலும் என் மனசு ஏற்காது. உன்னைவிட வயசிலும் அனுபவத்திலும் நான் பெரியவன். நெருப்போட விளையாடினா என்ன நேரும்னு தெரியுமா?'' படபடவெனப் பொழிந்து விட்டு அவனது பதிலுக்குக்கூடக் காத்திராமல் அப்பால் சென்று விட்டார்.

ஹர்ஷன் முகம் சிவந்து போயிற்று.

''அந்த வழுக்கை மண்டை மனிதன் என்ன உளறினான்?''ஏளனமும், கோபமுமாக ஊர்மிளா கேட்டாள்.

''அவர் எங்கள் குடும்ப நண்பர்.''

''தெரியுமே! இந்தக் கட்டுப்பெட்டியின் பேச்சுக்கு உங்கம்மா மதிப்புக் கொடுப்பாங்க. ஏன்னா அவங்களும் ஒரு பத்தாம் பசலி... ஹர்ஷன்! இப்ப நான் ஒரு உண்மையைச் சொல்லப் போறேன். நம்ம கல்யாணம் ஏன் நின்னு போச்சு தெரியுமா?''

ஹர்ஷன் நிமிர்ந்து பார்த்தான்.

''உங்கம்மா படிச்சு வேலைக்குப் போனால் மட்டும் போதுமா? கொள்கையளவில் ஒரு பழங்காலத்துக் கிராமாந்தரம்! அவங்களுக்கு அடிமையா இருக்கிற மருமகள் வேணும்னு எதிர்பார்த்தாங்க. அதனால என்னைப் பிடிக்கலை!'' அசட்டையாகக் கூறினாள்.

ஹர்ஷன் நெஞ்சு துடிக்கக் கோபமாக நின்றான்.

''உங்கம்மாவுக்கு உடம்புக்கு முடியலைன்னு படுத்திருப்பது எல்லாம் வெறும் வேஷம். மகனைத் தன் முந்தானையிலேயே முடிஞ்சு வச்சுக்கணும். மருமகளை விரட்டி வேலை வாங்கணும். அப்படி ஒரு நாடகம்.''

அவனுக்கு வார்த்தைகள் வறண்டன.

''ஹர்ஷன்! உங்க நிறுவனத்தில உங்க கீழே எத்தனை பேரை வேலை வாங்கறீங்க. திறமையா நிர்வாகம் நடத்தறீங்க. ஆனால் வீட்ல... அம்மா கிட்ட நடுக்கம்! அதுதான் எனக்கு அதிசயமா இருக்கு. உங்க அம்மாவோட அதிகாரத்தைத் தாண்டிக்கிட்டு வந்தாத்தான் நமக்கு ஒரு நல்ல காலம்இருக்கும்''

''என்ன சொல்றே ஊர்மிளா?''


''ஒரு வாரமாச் சொல்லிக்கிட்டு வரதைத் தான் சொல்றேன். எனக்கு என் மண வாழ்க்கை கசந்து விட்டது. உங்களுக்கும் மனம்போல வாழ்க்கை அமையவில்லை. நாம் ஒருவர்க்கொருவர் நேசிச்சவங்க....''

அதற்கு மேல் ஹர்ஷனுக்குப் பிடிக்கவில்லை. நாராயணசாமியின் வார்த்தைகளை, கடற்காற்று அலை அலையாக, சாட்டையடி போலக் காதுகளில் மோதி மனம் வேதனைப்பட்டது.

''ஊர்மிளா! அவசரப்பட்டு முடிவு செய்கிற விஷயம் இல்லே இது! இருட்டத் தொடங்கி விட்டது. கிளம்பலாம்.''

வேட்டி மீது ஒட்டிக் கொண்டிருந்த மணலை உதறினான். அத்துடன் அந்த அற்பமான ஆசையையும் உதறி எறிந்த உணர்வு. வேகமாகக் காரை நோக்கி நடந்தான்.


ஊர்மிளாவை அவள் வீட்டில் இறக்கி விட்டுவிட்டுக் கிளம்பியபோது மனத்தில்



ஒருவர்: நீங்க தயாரித்த படத்துக்கு ''வெள்ளி விழா'' கொண்டாடப் போறீங்களா? படமே நேற்றுத்தானே ரிலீசாச்சு?

புது தயாரிப்பாளர்: படம் நேற்று வியாழக்கிழமை ரிலீசாயி இன்று வெள்ளியைத் தாண்டி ஓடிடுச்சுங்களே!

- பட்டுக்கோட்டை இரவி



ரகசியத்தைக் காப்பாற்றுங்கள்-அது உங்கள் அடிமை. அதை வெளி



யிடுங்கள் - அது உங்கள் எஜமானன்.

-வில்ஹெஹன்றி

-எஸ். ராஜகணேஷ்

உறுதி பிறந்தது. ''இந்த விவகாரத்துக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இல்லையானால், நாராயணசாமி சொன்னது போல நெருப்புடன் விளையாடிய கதைதான். மனம் எச்சரித்தது.

வீடு திரும்பியதும் அவன் கேட்ட முதல் கேள்வி ''அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு?'' — மாதங்கியிடம்தான். ஆனால் பார்வை சுவரை நோக்கி இருந்தது.

''ரத்த அழுத்தம் சீராகி விட்டதுன்னு டாக்டர் சொன்னார். ஆனால் ஓய்வு தேவைன்னு சொல்லிட்டார்.''

''என்னைப் பத்திக் கேட்டிருப்பாரே. எப்ப வந்தாலும் ஹர்ஷனைக் காணலையேன்னு விசாரிச்சிருப்பாரே!''

''உம்! கேட்டார். கம்பெனி வேலையா வெளியே போயிருக்கறதாச் சொன்னேன்.''

''ஏன் அப்படிச் சொல்லணும்?''

''குடும்ப டாக்டர். நம்பளைப் பத்தி உயர்வா நெனைச்சிண்டிருப்பவர். அம்மாவுக்கும் பிள்ளைக்குமிடையே மனத்தாங்கல்னு அவர் தவறா நினைக்கக் கூடாதேன்னுதான்.''

''இந்தக் குடும்பத்து மேலே அவ்வளவு அக்கறை உனக்கு'' — ஏளனமாகக் கூறினான் அவன்.

மாதங்கி உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக நின்றாள். மனத்துக்குள் துயரம் குமுறிக் கொந்தளித்தது.

''இந்த வீட்டு மருமகள் நான். உங்கள் மனைவி. கணவனைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் ஒரு பெண்ணுக்கு அக்கறை இருப்பது இயற்கைதானே...'' சொல்லத் துடித்தது உள்ளம். ஹர்ஷன் குத்தலாகப் பேசி விட்டால்....?

''சின்ன வயசிலேயே நான் பெத்தவங்களை இழந்துட்டேன். தாயாரை விட அன்பு காட்டி என்னை ஆதரிக்கிற உங்கம்மாவையும் எனக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிற இந்த வீட்டையும் நான் ரொம்ப மதிக்கிறேன். மத்தவங்களும் மதிக்கணும்னு எனக்கு இயல்பாகவே அக்கறை உண்டாகியிருக்கு'' என்றாள் மெதுவாக.

''சரி! என்னைப் பத்தி எதுவுமே சொல்லலையே!'' வேண்டுமென்றே கேட்டுவிட்டு, விஷமமாகப் பார்த்தான் அவன்.

''இந்த வீட்டுக்கு வந்த முதல் நாளே என்னை வெளியேறச் சொன்னீங்க. உங்கம்மா எனக்காகப் பரிந்து பேசி இங்கே இருக்க அனுமதிச்சாங்க. பிறகு... நான் தொடர்ந்து இங்கே இருக்கிறதை நீங்க மறுக்கலை... அதுக்கு என் நன்றி...''

பட்டும் படாமலும் பேசிய அவளது திறமையை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

பார்வைக்கு வெகுளிபோலத் தென்பட்டாலும் உள்ளே இவள் அழுத்தமான பேர்வழிதான்! அளந்தல்லவா பேசுகிறாள்? கெட்டிக்காரி!

''என்ன படிச்சிருக்கே? பி.ஏ.வா, பி.எஸ்.ஸியா?'' கிண்டலாகக் கேட்டான்.

இதெல்லாம் கேட்கக்கூட விரும்பாத ஆசாமிக்கு.... அவள் மறுக்காமல் பதில் சொன்னாள்.

''என் படிப்புக்கும் வளர்ச்சிக்கும் எங்கப்பா அம்மா பணம் எதுவுமே வைக்கலை. பெரியப்பா தயவிலே வளர்ந்தேன். பி.யூ.சி. வரை படிப்புக் கொடுத்தார்.''

''சங்கீதம்?''

''சமையல் அறையில்தான் அதிகம் உண்டு. பூஜை அறையில் தெய்வங்கள் கோவிச்சுக்கொண்டு போகாத அளவு பாடத் தெரியும்!'' குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது அவளுக்கு.

பளிச்சென முகம் முழுதும் ஒளி விட்டதைக் கண்டு அவனே பிரமித்துப் போனான். அவன் மன உணர்வுகள் குழைவதை உணர்ந்தான். ''அட சே! இப்போது என்ன ஆகிவிட்டது தனக்கு... ஏன் இப்படி ஒரு தடுமாற்றம்? கனமான கல்லைக் கீழே இறக்கிப் போட்டதும் தட்டுத் தடுமாறி நிமிர்வது போல... ஊர்மிளா மீது கசப்பு தோன்றியதும் மாதங்கி மேல் அன்பாக மலர ஆரம்பித்து விட்டதோ!

வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது. இருட்டிய பின்பு... அந்த வேளையில் யாராக இருக்கும்!

சட்டென விளக்கைப் போட்டுவிட்டு மாதங்கி வாசற் பக்கம் விரைந்தாள்.

கதவைத் திறந்தபோது வராந்தாவிலே பெரியப்பா தயானந்தும், பெரியம்மா சுமதியும் நின்றிருந்தனர்.

''சம்பந்தி அம்மாவுக்கு உடம்பு முடியலேன்னு கேள்விப்பட்டோம். அப்படியே உன்னையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம். ஆமாம், உன் புருஷன் எங்கே? கல்யாணமாகி வந்தாலும் வந்தே, பெரியம்மா, பெரியப்பா எல்லாரையும் மறந்தே போயிட்டே. ஒரு போன் பண்ணிக்கூட விசாரிக்கப்படாதா? ஆனா உங்க பெரியப்பா சதா உன்னைப் பத்தித்தான் கவலைப்பட்டுக்கிட்டே இருக்காரு. ஜயந்திக்குப் பதில் மணையிலே உட்கார்த்தி வச்சுத் தாலி கட்டினமே, மாப்பிள்ளைக்குப் பிடிக்காமப் போயி அந்தப் பெண் அங்கே என்னெல்லாம் கஷ்டப்படுகிறதோன்னு சதா புலம்பல்.''

சுமதி கணீரென்று பேசியது ஹர்ஷனின் காதுகளில் ஓங்கி அறைவது போல் விழுந்தது. அவன் கடும் கோபத்துடன் வேகமாய் மாடிப் பக்கம் சென்று விட்டான்! (தொடரும்)

காரின் குழலோசை எங்கள் வீட்டு வாசலில் கேட்டது.

நாங்கள் லட்சியம் செய்யவில்லை. மாடியில் —பின் கட்டில் — குடித்தனம் இருப்பவர்கள் வீட்டைத் தேடிக் கொண்டுதான் யாராவது வந்திருப்பார்கள். என்னைப் பொறுத்தவரை— காரைப் போட்டுக் கொண்டு — என்னைத் தேடிக்கொண்டு வரக் கூடியவர்கள் யாரும் என் கவனத்துக்கு வரவில்லை.

என் பிள்ளை பாபு வாசலிலிருந்து ஓடிவந்தான். ''உன்னைத்தான் அப்பா தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்றான்.



வெறும் கைலியை மட்டும் கட்டிக்கொண்டு சுவரில் 'ல'ஹ வடிவத்தில் சாய்ந்தபடி இருந்த நான் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் பாய்ந்து எழுந்தேன். பிளாஸ்டிக் கொடியில் கொத்துக் கொத்தாகக் கிடந்த துணிகளிலிருந்து ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு....

''என்ன ராகவா! ஞாயிற்றுக் கிழமை, ஹாய்யா ரெஸ்டா?... எங்கே சீதா?'' என்று அதட்டியபடியே உள்ளே நுழைந்தார் அத்தான் தேவராஜன்.

''வாங்கோ... வாங்கோ'' என்று அடுக்களையிலிருந்து ஓடோடி வந்து உபசரித்தாள் சீதா. அடுத்தபடியாக என்னைப் பார்த்து ஒரு முறை முறைத்தாள். வருபவர்கள் உட்கார நான் 'டீஸெண்டாக' ஒரு சோபா செட் ஏன் வாங்கிப் போடவில்லை என்று அந்தப் பார்வை என்னைக் குற்றம் சாட்டியது.

''நல்ல சமாசாரம்தான்.... என் பிள்ளை பாலாஜிக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறேன். இந்த மாதம் இருபதாம் தேதி குற்றாலத்தில் கல்யாணம். நீயும் சீதாவும் குழந்தைகளுடன் வந்திருந்து....''

அவர் கொடுத்த அழைப்பிதழை நான் கையில் வாங்கிக் கொண்டேன்.

''நம்ம பாலாஜிக்குக் கல்யாணம்... வராமல் இருப்போமா?...என்று சீதா தன் பெருந்தன்மையை உடனே வெளிப்படுத்தினாள்.

''பத்தொன்பதாம் தேதி காலையில் எங்கள் வீட்டிலிருந்து ஸ்பெஷல் பஸ் ஏற்பாடு செய்திருக்கிறோம். சரியாக எட்டு மணிக்கெல்லாம் வந்து சேர்ந்து விடுங்கள்!'' என்று சொல்லி விட்டு அவர் புறப்பட்டார்.

''ஆகட்டும் அத்தான்!'' என்றேன்.

வாசல் வரை சென்று அவரை வழியனுப்பி விட்டு வந்தால் எதிரே ஒரு நீண்ட வாக்கு வாதத்துக்கு ஆயத்தமாக நின்று கொண்டிருந்தாள் சீதா.

''கல்யாணம் எத்தனும் தேதி?''

''இந்த மாதம் இருபது.''

''குற்றாலத்தில்தானே?''

''ஆமாம்.''

''அவ்விடத்தில் எப்படி உத்தேசம்?.... போவதாகவா?... இல்லை.... இருபத்தைந்து பைசா இன்லண்ட் லெட்டர் வாங்கி ஆபீஸ் டைப்ரைட்டரில் நான்கு வரி வழக்கமான வாழ்த்தை அடித்துப் போடுவதாகவா?''

''அவர் மரியாதைக்காகக் கூப்பிட்டார். நானும் வருவதாகச் சொன்னேன்... எல்லாம் சம்பிரதாயம்... அதற்காக உடனே மூட்டையைக் கட்டிக் கொண்டு போய் நிற்க வேண்டும் என்கிறாயா?..''

சீதாவைச் சமாளிக்க ஒரே வழி: அவள் பேசுவதற்கு முன்பு நாம் படபடவென்று பேசி முடிக்க வேண்டும்.

அந்த உபாயம் இப்போது பலிக்கவில்லை.

''இப்போது குற்றாலத்தில் சீஸன். அவரவர்கள் சொந்தத்தில் செலவு செய்து கொண்டு போய் அனுபவிக்கிறார்கள். ஸ்பெஷல் பஸ்ஸில் கூட்டிக் கொண்டு போகிறேன் என்று ஒருவர் வீட்டு வாசலில் வந்து அழைக்கிறார்.... அப்புறம் என்ன?''

''எனக்கு என்னமோ நாம் எல்லோருமா போய் நிக்கறது சரியில்லை எனப் படுகிறது. நீயும் பெரியவனும் மட்டும்...''

''இதோ பாருங்கள்.:. போக வேண்டாம் என்றால் நேரடியாகச் சொல்லி விடுங்கள். நான் இந்த வீட்டு வியர்வையில் புழுங்கிச் சாகிறேன். போன வருஷம் என் அண்ணா மச்சினன் திருவனந்தபுரத்திலே.... ஸ்பெஷல் கடிதாசு போட்டுக் கூப்பிட்டிருந்தார்கள். போனோமா?...''

''வேண்டாம்.... நாம் எல்லோரும் கல்யாணத்துக்குப் போகிறோம். ஆளை விடு!'' என்று எழுந்தேன்.

அதற்குப் பிறகு தினமும் குற்றாலம் பேச்சு தான்.

''என் கஸினுக்குக் குற்றாலத்தில் கல்யாணம்.... நாங்கள் ஸ்பெஷல் பஸ்ஸில் போகிறோம்'' என்று எழுதித்தான் மூன்று நாள் லீவு போட்டேன்.

சீதா எங்கள் காலனியிலும் அடுத்த தெருவிலும் பிள்ளையார் கோவிலிலும் தம்பட்டம் அடித்துச் சொல்லாத குறையாக எங்கள் குற்றால விஜயத்தைப் பரப்பினாள்.

அவளும் என் பெண்ணுமாகப் பீரோவில் உள்ள புடவைகளைக் கீழே பரத்திப் போட்டனர். ஜானவாசத்துக்கு — முகூர்த்தத்துக்கு — ரிஸப்ஷனுக்கு — கிருகப் பிரவேசத்துக்கு — பிரயாணத்துக்கு — அருவியில் குளிப்பதற்கு என இரண்டு ஸெட் எடுத்து வைப்பதற்குள் எத்தனை தர்க்கங்கள், எத்தனை ஆட்சேபங்கள்?



அஸ்ஸாம் பிரச்னையெல்லாம் இதற்கு முன் கொசு மாதிரி. ஒரு முடிவுக்கும் வராமல் எல்லாப் புடவைகளையும் பீரோவுக்குள் வாரிப் போடுவார்கள்.

புடவைக்கு ஏற்ற மாதிரி ரவிக்கை இல்லை என்று சீதா கடைக்குப் போய் வந்தாள். போனதுதான் போனோமே என்று வாங்கி வந்த இதர சாமான்களின் விலை — நாங்கள் எல்லோரும் குற்றாலம் போய்த் திரும்பும் பஸ் கட்டணத்தைவிட எவ்வளவோ அதிகம்!

பார்ப்பதற்கு நன்றாக இருக்க வேண்டும் என்று நான் எழுபது ரூபாய்க்கு ஒரு ஸூட்கேஸ் வாங்கினேன். பழைய சாக்லேட் பெட்டியில் குங்குமம், பவுடர் எல்லாம்

கொண்டு போனால் நன்றாக இருக்காது என்று நாற்பது ரூபாய்க்கு ஒரு டாய்லெட் பெட்டி வாங்கிக் கொண்டாள் சீதா.

நாங்கள் இருந்தது திருநகர். அத்தான் இருந்தது ஜவாஹர் நகர். இரண்டுக்கும் இடையே பதினாறு கிலோ மீட்டர் தூரம். இரண்டுபஸ்கள் மாறித்தான் போகவேண்டும்!

பதினெட்டாம் தேதி இரவு எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டிகளில் அடுக்கி நாங்கள் தூங்கப் போகும்போது மணி பன்னிரண்டு. ஒரு மணிக்கு சீதா என்னை எழுப்பினாள்.

''ஜானவாசத்துக்கு என்று எடுத்து வைத்த புடவைக்கு மாட்சிங் ஜாக்கெட் உள்ளே வைக்கவில்லை.கொஞ்சம் பெட்டியைத்திறந்து பாருங்கள்!''

''காலையில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது தூக்கம் என்னை அசத்துகிறது!'' என்று கெஞ்சினேன்.

''அந்த அவசரத்தில் மறந்துவிடும்.... இப்போது....'' என்று முனகினாள்.

மேலும் விவாதத்தைத் தவிர்க்கத் தட்டிக் கழிப்பதை விட செய்து முடிப்பது சுலபம் என்ற காரணத்தால் பெட்டியைத் திறந்து பார்த்தேன். தேடியது ஒன்றுக்கு இரண்டாகவே இருந்தது. அலுத்துக் கொண்டபடி பெட்டியை மூடி ''ஸ்பிரிங் பூட்டை'' அழுத்தி மூடினேன். அப்புறம்தான் ஞாபகம் வந்தது — சாவிக்கொத்தைப் பெட்டிக்குள் மேலாகப் போட்ட சங்கதி.

லைட்டைப் போட்டுக் கொண்டு எழுந்தேன். ஸ்குரு டிரைவர், தோசை திருப்பி, ஆணி, கோணி ஊசி, (கடப்பாறை நீங்கலாக) எல்லா ஆயுதங்களையும் பரப்பினேன். எப்படியோ பூட்டைத் திறந்து சாவியை எடுக்கும்போது மணி மூன்று. பூட்டு காயலாங் கடைக்குக் கூடப் போகலாயக்கில்லாமல் அக்கு வேறு ஆணி வேறாகக் கிடந்தது. புதிதாக வாங்கிய பெட்டியும் யுத்தத்தில் அடிபட்ட வீரனைப் போல் காட்சியளித்தது.

ஆறு மணிக்குப் புறப்படுவதாக ஏற்பாடு. ஒவ்வொருவராகக் கிளம்பி உபசாரம்செய்து வீட்டுக்கு வெளியே வந்து சேரும்போது மணி ஆறே முக்கால். இரண்டு சிடி பஸ்கள் எங்கள் கோலத்தையும் எங்கள் மூட்டை முடிச்சுகளையும் பார்த்துவிட்டு நிற்காமல் போய் விட்டன. எப்படியோ நாங்கள் ஜவாஹர் நகர் போய்ச் சேரும்போது மணி ஏழே முக்கால்.

அத்தான் வீட்டின் முன்பு பஸ் காத்து நின்றது. ''சொன்னால் சொன்னபடி... நீங்களும் இருக்கிறீர்களே மசமசவென்று!'' என்னைச் சாடியபடி அவர்கள் வீட்டுக்குள் எங்களை அழைத்துச் சென்றாள் சீதா.

நாங்களும் பஸ்ஸில் ஏறினோம். ஆனால் உட்கார இடம் இல்லை. எல்லா இருக்கைகளும் கர்சீப், துண்டு, ஹாண்ட் பேக் ஆகியவற்றால் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தன. எங்கே போனாலும் விரட்டினார்கள். போதாக் குறைக்குக் கண்டக்டர் வேறு ''உட்கார்ந்தால் உட்காருங்கள் இல்லாவிட்டால் இறங்குங்கள்!'' என்று கையைப் பிடித்துக் கீழே இறக்காத குறையாக விரட்டினார்.

''அத்தானிடம் போய்ச் சொல்லுங்கள்! இப்படியே மசமசவென்று நின்று கொண்டிருந்தால் எப்படி?'' என்று உத்தரவு பிறக்கவே — அதை உடனடியாக நிறைவேற்றினேன்.

''அப்படியா?... நீ கொஞ்சம் முன்னாடி வந்திருந்தால் நீயும் இடம் பிடித்துக் கொண்டிருக்கலாம்... பரவாயில்லை... நேரே பஸ் ஸ்டாண்டுக்குப் போனாயானால் ஒரு மணிக்கு ஒரு பஸ்... இப்போ கூட எட்டே காலுக்கு ஒன்று இருக்கிறது'' என்று எனக்கு வழி சொன்னார்.

நாங்கள் இறங்கி ஒரு ஓரமாக நின்றோம். சீதா குற்றாலம் வரை ''ஸ்டாண்டிங்''கில் போகக்கூட ரெடி. டிரைவர்தான் ஐம்பத்து நாலு பேருக்கு மேல் ஒரு பொடியனைக் கூட ஏற்ற அனுமதிக்கவில்லை.

பஸ் ஆரவாரத்துடன் புறப்பட்டது. அத்தான் தலையை வெளியே நீட்டி ''கட்டாயம் வந்துவிடு!'' என உரத்த குரலில் உபசரித்து விட்டுப் போனார்.

''சரி, வாருங்கள்... வீட்டுக்குப் போகலாம்!'' என்று அவர்களை அழைத்தேன்.

''வீட்டுக்கா? நான் மாட்டேன்!'' என்று சீதா வேகமாகத் தலையையும் கைகளையும் ஆட்டினாள்.

ஆடுகள் நனைகின்றன!



டி. வி.யில் வந்த நாடகம். தலைப்புடன் கச்சிதமாய்ப் பொருந்தும் படம். ஒரு சேல்ஸ் கேர்லின் வாழ்க்கை நிகழ்ச்சிகள். சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் சுயநலத்துடன் ஓநாய் புத்தியைக் காட்டிவிடுகிறார்கள். ரூபா நாயகி. அதற்குள் சலித்துவிட்ட முகம். சுறு சுறுப்பான அறிமுக நாயகன் பிரசாத். முதல் படமென்ற பயமின்றி ஆடி, ஓடி நடித்திருக்கிறார்.

சாமிக்கண்ணு 'பட்டை', 'தண்ணி' என்றதும் பழைய நினைவுக்குத் தடுமாறுவதும், சுருளியின் சின்ன வீடு மகாத்மியமும் கிச்சு கிச்சு மூட்டுகின்றன. இருந்தாலும் சுருளி கொஞ்சம்... வேண்டாம்,... மறைந்தவரைப் பற்றி இப்ப எதற்கு விமர்சனம்.

சந்திர போஸின் இசை சுவைக்கிறது. பி. என். சுந்தரத்தின் கேமரா உழைக்கிறது. அழகான வெளிப்புறங்களும், அடிக்க வரும் ரோஸ் கலர் செட் இன்டோர் காட்சிகளும் ஒட்டாமல் வதைக்கின்றன.

மாதவன் இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்.

—ரஜினி சாஸ்திரி

கராத்தே பயிற்சி 28

பயிற்சியாளர்: டோனி பொன்னையா சித்திரம்: ராஜு.. படம்: உத்ரா
தயாரிப்பு: குண்டுமணி





THROWS

கராத்தே கலையில் உதைத்தல், குத்துதல், வெட்டுதல் இவைகளோடு தூக்கி வீசும் முறையும் ஓரளவு கற்றுக் கொண்டால் தற்காப்புக்கு மிகவும் உதவும். படத்தில் பின்புறம் தாக்க வருபவரை எப்படித் தூக்கி வீச வேண்டும் என்பதைக் காணலாம்.

ஒருவரைத் தூக்கிப் போடும்போது நாம் நன்கு Horse Riding Stance நிலையில் அமர்ந்து தூக்கிப்போடுவது சாலச் சிறந்தது!

''நாங்களும்தான்!'' என்று கோரஸ் பாடினர் குழந்தைகள்.

போஸ்டர் ஒட்டாத குறையாக எல்லோரிடமும் குற்றாலம் போவதாகவும் திரும்ப மூன்று நாள் ஆகும் என்றும் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்களாம். இப்போது வீட்டுக்குப் போனால் அவமானமாம். வெளியே தலை காட்ட முடியாதாம்.

''குற்றாலம் போகா விட்டாலும் பரவாயில்லை.... எங்காவது இருந்து விட்டு மூன்று நாட்கள் கழித்த பிறகுதான் வீடு போக வேண்டும்!'' என்றாள் சீதா.

''சரி... பத்து மணிக்கு மேல் குற்றாலம் போகலாம்!'' என்றேன்.

''அது என்ன முகூர்த்தம்?.... பத்து மணிக்கு மேலேன்னு...''

''ஆமாம்.... பாங்க் முகூர்த்தம்...பத்து மணிக்கு மேலே இரண்டு மணிக்குள்... கையிலே ரூபாய் வேண்டாமா?'' — அவள் புரிந்து கொண்டாள்.

ஒரு ஹோட்டலில் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டோம். அவர்களைப் பஸ் நிலையத்தில் நிற்க வைத்து நான் மட்டும் திரும்பி வந்து பாஸ் புத்தகத்தை வீட்டிலே தேடி எடுத்துக் கொண்டு, பணம் வாங்கி வந்தேன். கடைசியாகப் பத்தே முக்கால் பஸ்ஸில் எங்களுக்கு இடம் கிடைத்து ஏறி உட்கார்ந்தோம்.

எல்லோரும் போய்ச் சாப்பிட்டுத் தூங்கிய பிறகு — நாங்கள் பெருத்த அசதியுடன்— கசங்கிய உடையுடன், கலைந்த தலையுடன்— போய் நிற்கப் போகிறோம். தங்கவாவது இடம் கிடைக்கிறதோ இல்லையோ... எத்தனையோ பிரச்னைகள்.

எங்கள் ஒருவர் முகத்திலாவது உற்சாகம் இல்லை. தெம்பு இல்லை.

''மாமா!'' என்று குரல் கேட்டது.

நிமிர்ந்து பார்த்தேன்.


பாலாஜி — மாப்பிள்ளை.

''நீ எங்கே இங்கே?'' என்றேன் வியப்புடன்.

''அப்பா போற இடத்துலே எல்லோரையும் கூப்பிட்டிருக்கா. அம்மாவும் அதே மாதிரி... இப்போது குற்றாலம் சீஸன் இல்லையா? அத்தனை பேரும் குடும்பத்துடன் வந்து விட்டார்கள். இரண்டு பஸ் வைத்தால் கூடப் போதாது. என் முக்கியமான சிநேகிதர்களுக்குக்கூட இடம் இல்லை. அவர்களை எப்படித் தனியாக வரச் சொல்வது? நானும் அவர்கள் பின்னால் தங்கி விட்டேன்!'' என்றான்.

நாங்கள் நிமிர்ந்து உட்கார்ந்தோம். ஏமாற்றம் அயர்ச்சி எல்லாம் மாயமாய் மறைந்தன. இப்பொழுது நாங்கள் கௌரவமான — வரவேற்கத் தக்க விருந்தினர்கள். மாப்பிள்ளையுடன் போய் இறங்கப் போகும் வி.ஐ.பி.!

சீதாவின் முகமெல்லாம் பல்லாயிற்று!


கனகதாரா
மோதிரம்-டாலர்
வறுமையை விரட்டி லக்ஷ்மி கடாக்ஷத்தை ஏற்படுத்த, ஆதிசங்கரர் இயற்றிய கனகதாரா தோத்திரத்தில குறிப்பிடும் மகாலக்ஷ்மி உருவத்தை மோதிரங்களாகவும், டாலர்களாகவும் பஞ்சலோகத்தில் சாஸ்திரப் பிரமாணத்துடன் தயாரித்து தருகிறோம். இதை அணிவதால பொருளாதார அபிவிருத்தியும், குடும்பத்தில சர்வ சௌபாக்கியமும் ஏற்படும் என்பது முன்னோர்கள் கண்ட உண்மை. ஒரு மோதிர விலை ரூ. 20 தபால் செலவு தனி. மோதிரம் வேண்டுவோர் விரல் அளவை நூலில் எடுத்து அனுப்பவும். உங்களுக்குத் தேவை மோதிரமா டாலரா என்பதை குறிப்பிட்டு ரூ. 5 அட்வான்சுடன் அனுப்பினால் கனகதாரா ஸ்தோத்திரமும், பொன்மாரி எனும் தமிழ் பாடலும் மஹாலக்ஷ்மி மூலமந்திரத்தையும் மதித்தொகைக்கு, பிரசாதத்துடன் VPP மூலம் அனுப்பிவைக்கிறோம்.
சக்தி.ஜி.சம்பந்தன்
"சக்தி நிலையம்" 52, பள்ளிக்கூடம் தெரு சக்கிரம் பிளாட், பட்டாபிராம் சென்னை - 600072.


திருமண பட்டு ஜவுளிகள்
வாங்க "கைராசி"யான ஸ்தாபனம்
ஜவுளி மாளிகை
ராஜ வீதி • கோயமுத்தூர்-1
போன்: கடை: 22881 • வீடு: 22624.


டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும்
எ.:.ப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளை
டிவியிவிலும் கேட்டு மகிழ
ஒரு அற்புத படைப்பு
ரூ.325/- மட்டுமே
சாலிடெர்
/எ.:.ப்எம் ட்யூனர்
சாலிடெர் டிவி எஃப்எம் ட்யூ
உங்களது ரேடியோவுட
இணைத்து, டிவி இல்லாமலே
டிவி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகி
லாம். டிவியில் இடம்பெறும் தி
படம், நாடகம், இசை போன்ற ப
நிகழ்ச்சிகளைக் கேட்க இது
அற்புத படைப்பு.
இது தவிர உங்களது டிவியி
'பிக்-அப்' வசதி இருக்குமேயானு
சாலிடெர் டிவி எஃப்எம் ட்யூன
இணைத்து எஃப்எம் ரேடி
நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.
சாலிடெர் டிவி எஃப்எம் ட்யூன
எந்தவொரு ஆம்ப்ளிஃபையரு
னும் இணைத்து டிவி நிகழ்ச்
களையோ, எஃப்எம ரேடி
நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்

கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி

பெரியம்மாவின் கண்கள் பரபரப்பாக ஆராய்ந்து கொண்டிருந்தன. தங்கள் பெண்ணுக்கு ஹர்ஷனை முடிவு செய்தபொழுது ஒரு தடவைதான் இந்த வீட்டுக்கு அவள் வந்திருந்தாள்.

'கடல் போல் எத்தனை பெரிய வீடு... சமாளிக்க ஜயந்தி கஷ்டப்படுவாள், இந்தக் காலத்து விலைக்கு ரொம்பப் பெரிய தொகை கிடைக்கும். ஒரு சின்ன பங்களா வாங்கி விட்டு மீதியை பாங்கில் கட்டி வைத்துவிடலாம்...' கற்பனையில் அந்த வீட்டை விலை பேசி முடித்து விட்டிருந்தாள்.

அந்தக் கடல் போன்ற வீட்டின் யஜமானியாக இருக்க வேண்டிய பாக்கியத்தை வேலைக்காரி நிலையிலிருந்த மாதங்கி தட்டிக் கொண்டு போய்விட்டதை சுமதியால் இன்னமும் ஏற்கவே முடியவில்லை.

வரவேற்பறையில் காலுக்கடியில் மெத்தென்று மிதிபட்ட பாரசீகக் கம்பளத்தைப் பொருமையுடன் பார்த்தாள்.

சாப்பாட்டறையைப் பிரித்துத் தடுத்துக் கொண்டு நின்ற டிவைடரில் வசதியான உயரத்தில் திணிக்கப்பட்டிருந்த டி. வி. ரேடியோ கிராம், டேப் ரிகார்டர் எல்லாவற்றையும் உற்றுப் பார்த்தாள்.

சந்தன மரத்தால் ஆன கணேசர் மேல் படியில் கொலு வீற்றிருந்தார். அடுத்த படியாக தந்தத்தினால் ஆன கீதோபதேசக் கண்ணன். அவருக்கடுத்த பீடத்தில் சலவைக் கல்லில் பளபளத்த புத்தபிரான். உச்சியில் யானைத் தந்தங்களில் தொங்கிய ஊஞ்சலில் குழலூதிய வெள்ளிக் கிருஷ்ணன். அவனது இரு பக்கத்திலும் தங்கமாக மின்னிய திருச்சூர் குத்து விளக்குகள்.... கண்ணாடி அலமாரியில் பொன் எழுத்துக்களைத் தாங்கியபடி வரிசையாகத் தடிமனான பல புத்தகங்கள்... காப்பி மேஜை மீது கிரிஸ்டல் கிளாஸ் பூந்தொட்டியில் தோட்டத்து ரோஜாப் பூக்கள்... எதிர்ப்புற சுவரில் பத்திக் வேலைப்பாட்டில் நடராசர்... என்று ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்த்தவள் மனம் கபகபவென்று பற்றி எரிந்தது.

'இந்தப் பெண் ஜயந்தி...இப்படி ஒரு காரியத்தைச் செய்வாளா...' தனக்குள்ளே குமுறியபடி மெல்ல உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

''முதல்லே காப்பி டிபன் சாப்பிடுங்கோ... அத்தை எழுந்திருக்கிற நேரம்தான் ...'' சொல்லிக் கொண்டே முகம் தெரிந்த சன்மைக்கா இழைத்த சாப்பாட்டு மேஜை மீது தட்டுகளையும் காப்பி கெட்டிலையும் கொண்டு வந்து மாதங்கி வைத்தாள்.

தட்டிலிருந்த பாதாம் கேக்கையும் காராப் பூந்தியையும் பார்த்த தயானந்த் சட்டென்று கையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.


காப்பி டிபன் என்றால் போதும். அவர் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் மறுக்க மாட்டார்.

கணவனை எரிச்சலுடன் பார்த்து விட்டு மெள்ள எழுந்து குளியலறைக்குள் புகுந்து கையைக் கழுவிக் கொண்டு வந்தாள் சுமதி.

''நானே தயார் செய்தவை. அத்தை பாதாம் கேக் செய்யும் பக்குவத்தைச் சொல்லிக் கொடுத்தாங்க...'' முறுவலித்துக் கொண்டே அருகில் வந்து நின்ற மாதங்கியைப் பார்த்து அவள் மனம் பற்றி எரிந்தது.

கல்யாணத்துக்கு முன் எப்படி இருந்த பெண்?....

ஜயந்தி கழற்றிப் போட்ட கிழிந்த புடவைகளைச் சீராக்கி உடுத்திக் கொண்டு கூப்பிட்ட குரலுக்கு நாயாக ஓடி உழைத்துக்கொண்டிருந்தவளுக்கு இப்படி ஒரு யோகமா? கைகளிலும் கழுத்திலும் தங்கம் மின்ன காதில் வைரம் டாலடிக்க, இடையில் பட்டுச் சேலையும், முகத்தில் பணக்காரக் களையுமாக.... ஆளே மாறிப் போய் விட்டிருக்கிறாளே?



வீட்டுக்குள் வரும் போதே சுமதி கவனித்து விட்டிருந்தாள். தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த ஆள் ஹோஸ் பைப்பை வைத்துவிட்டு பாதி திறந்த நிலையிலிருந்த கராஜின் இழுப்புக் கதவை கீழே தள்ளி மூடிப் பூட்டினான்.

கராஜில் இரண்டு கார்கள் நிற்பதை... சட்டென்று அந்த அவசரத்திலும் பார்த்து விட்டாள்.

பத்துக் கிலோ அரிசியையும் மற்ற வீட்டுச் சாமான்களையும் அட்டைப் பெட்டிக்குள் வைத்து அதை இடுப்பில் தூக்கிக்கொண்டு ரிக்ஷாவுக்குக் கொடுக்கக் கையில் காசில்லா

மல் மூச்சிறைக்க வெய்யிலில் மளிகைக் கடையிலிருந்து வீட்டுக்கு நடந்து வருவாளே அந்த மாதங்கிக்கு இப்போ உல்லாசமாகப் போய் வர இரண்டு கார்கள்!...

இந்தப் பாவிப் பெண் ஜயந்தி தனக்கு வரவிருந்த அதிர்ஷ்டத்தை புரிந்துகொள்ளாமல், காதல் கத்தரிக்காய் என்று.... மேலே சிந்திக்க முடியாது... அவளுக்குப் புரை ஏறிக் கொண்டு விட்டது.

''காராப்பூந்தியில் ரொம்பக் காரம் போட்டிருக்கே...'' இருமிக் காண்டு தலையைப் பலமாகத் தட்டிக் கொண்டாள் சுமதி.

அவர்கள் வசித்தது நெருக்கமாக வீடுகள் நிறைந்ததொரு குடியிருப்புப் பகுதி. எத்தனை முயன்றும் அதற்குள் எப்படியோ விஷயம் காட்டுத் தீயாகப் பரவி விட்டிருந்தது. ஒருசில தினங்கள் தலையை வெளியே நீட்ட அஞ்சி சுமதி வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

பல நாட்களுக்குப் பின்னர் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. மகள் ஜயந்திதான் எழுதியிருந்தாள்.

தனது நெடுநாளைய நண்பன் ரமேஷை அவள் கல்யாணம் செய்து கொண்டு மாம



''கொஞ்சம் தண்ணி சாப்பிடுங்கோ—சரியாயிடும்... அக்கா ஜயந்தி உங்களை நினைக்கிறுப் போலிருக்கு...'' மாதங்கி வேடிக்கையாகப் பேசிய வண்ணம் தண்ணீர் டம்ளரை அருகில் நகர்த்தி வைத்தாள்.

மகளின் நினைப்பு சுமதியின் நெஞ்சில் நெருப்பைத்தான் கொட்டியது.

சென்னைக்கு ஓடோடி வந்த தயானந்த் தமது மகளை வலை போட்டுத் தேடத் தொடங்கினர்.

ஞர் மாமியாருடன் அருகில் கோடம்பாக்கத்தில்தான் வசிப்பதாகவும் எல்லாவற்றையும் மறந்து அவர்கள் இருவரும் அவசியம் அவள் புக்ககத்துக்கு ஒரு நடை வந்து போக வேண்டும் என்றும் எழுதியிருந்தாள் — முகவரியையும் கொடுத்திருந்தாள்.

தயானந்தும் சுமதியும் ஆத்திரத்தில் ஆடிப் போய்விட்டனர். ஆனாலும் பெற்ற மனம் பித்தாகி மகளைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கத் தொடங்கவே... வெட்கத்தை உதறி விட்டு மகளைக் காணப் புறப்பட்டனர்.

கோடம்பாக்கத்திலே இருந்த அந்தக் குறுகிய சந்துக்குள் நுழைந்தபோதுதான் சுமதி திடுக்கிட்டுப் போனாள்.

பங்களாவும் காருமாக வசதியான வாழ்க்கையைத் தேடிக் கொடுக்க அவர்கள் முயன்றதை உதறிவிட்டு...ஜயந்தி...ஐந்து குடித்தனக் காரர்களிடையே ஒண்டுக் குடித்தனவாசியாக... வீட்டின் ஒரு சிறு பகுதியில் வசித்துக் கொண்டிருந்ததைக் காண அம்மாவுக்கு ஓவென்று அழவேண்டும் போன்று ஆத்திரமாகத்தான் இருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த மாமியார் ஆஸ்துமா நோயாளி. படுக்கையில் கிடந்தாள். சர்க்கரை வியாதிக்கார மாமனார் கொல் கொல்லென்று இருமியபடி வாசல் பக்கத்தில் உட்கார்ந்துஇருந்தார்.

ஜயந்தியின் கணவன் நகரத்து அலுவலகம் ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். குறைந்த சம்பளம். கஷ்ட ஜீவனம்.

அவள் போனபோது துடைப்பமும் கையுமாக வீட்டைப் பெருக்கிக் கொண்டு நின்ற மகளைப் பார்த்தபோது அவளுக்கு அழுகையே வந்து விட்டது.

தளதளவென்று தங்க விக்கிரகமாக நின்ற அவளது செல்வ மகள் அந்தச் சில நாட்களில் ஒட்டி உலர்ந்து, கருத்து இளைத்து எப்படி மாறிவிட்டிருந்தாள்?

'அடிப் பாவிப் பெண்ணே... உன் காதல் நாசமாப் போக....' — மனதுக்குள்ளே சபித்தபடி பெற்றவள் மகளைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். இனிமேல் என்ன செய்ய முடியும்?' ''வீட்டுக்கு வந்து கொண்டு இரு...'' சுருக்கமாகச் சொல்லி விட்டு விரைவில் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டாள்.

அதற்குப் பின் பல நாட்கள் சுமதி உறங்கவே இல்லை. மகளை நினைத்து நினைத்து அழுதழுது சோர்ந்து போனாள். பின்னர் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

மகள் இறந்துபோயிருந்தால் கூடவா செத்துவிட்டிருப்பாள்? கல்யாணம் பண்ணிக்கொண்டு தொலைந்து விட்டாள். ஒழியட்டும் என்று மனக் கவலைகளை அழித்துவிட்டு நிமிரத் தொடங்கியிருந்தாள்.

அது சமயந்தான் சம்பந்தி கஸ்தூரியின் உடல் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டாள்.

''பத்து நாளா இந்த இருமலுக்கு உங்ககிட்டே வைத்தியத்துக்கு வந்து கிட்டிருக்கேனே டாக்டர். இன்னும் எத்தனை நாள் வரவேண்டியிருக்கும்!''

''அடுத்த பேஷண்ட் வர்ற வரைக்கும்!''

• அ. இராமதாஸ்



அனுதாபம் காட்டி உதவி செய்ய வந்துவிடவில்லை.

காதல் என்று சொல்லி மகள் ஜயந்தி தன் வாழ்வைத் தானே அழித்துக்கொண்டு விட்டாள்.

காதல் இல்லாது கட்டாயப்படுத்திச் செய்து வைத்த மாதங்கியின் கல்யாணம் எந்த நிலையில் இருக்கிறது என்று வம்பு விசாரிக்கத்தான் புறப்பட்டு வந்திருந்தாள் பெரியம்மா சுமதி.

முன்னைவிடச் சதைப்பிடிப்புடன், செல்வச் செழிப்புடன், வீட்டின் யஜமானியாக உயர்ந்த நிலையிலிருந்த மாதங்கியைக் காண அவளுக்குப் பொறுமையாகத்தான் இருந்தது.

''ஜயந்தி அக்கா சுகமா பெரியம்மா?'' கேட்டதும் நினைவினின்றும் விழித்துக் கொண்டாள் சுமதி.

''மனம் போல மாங்கல்யம் அவளுக்கு அமைஞ்சுடுத்து. சுகமாகத்தான் இருக்கா... மாமியார் ரொம்பத் தங்கமானவங்க. அவளை ஒரு வேலைகூடச் செய்ய விடறதில்லை. அவளுக்கு ஒரு குறையுமில்லை. ஜம்முன்னு இருக்கா... ஆமாம்... இங்கே வந்தும் நீ இன்னமும் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறதைப் பார்க்க மனதுக்குக் கஷ்டமாக இருக்கு. எங்க கிட்ட இருக்கும் போது உனக்கு வீட்டு வேலைகள் தெரிஞ்சிருக்கட்டும்னு அதிகப்படியா பயிற்சி கொடுத்தேன். உன் மாமியார் கிட்டக் கூட முதல் முறை நம் வீட்டுக்கு வந்திருந்தபோது உன்னைப் பத்திச் சொன்னேன். அதுக்காக இப்படியா வேலை வாங்கறது? பணம் காசிலே உன் மாமியார் கை அத்தனை தாராளமில்லைன்னு கேள்வி... அப்படித்தானே?''

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே பெரியம்மா. என்னை ரொம்ப நல்லாக் கவனிச்சுக்கிறாங்க.. வீட்டு வேலைக்குக் கூட மாட ஒத்தாசைக்கு ஆள் வைச்சிருக்காங்க. அத்தைக்கு உடம்பு முடியாம இருக்கிறதாலே நானே எல்லாத்தையும் கவனிக்கப் பிரியப்படறேன். அவ்வளவுதான்.'' சட்டென்று மாதங்கி பதிலளித்தாள்.

''ரத்த அழுத்தம் ரொம்பப் பொல்லாத வியாதியாச்சே.. நல்லா அவங்களைக் கவனிச்சுக்கோ... நீ வந்த வேளை அம்மா மண்டையைப் போட்டுட்டாங்கன்னு ஹர்ஷன் உன்னைப் பத்தித் தப்பா எண்ணும்படி எதுவும் நடந்துடக் கூடாது...''

''ரத்த அழுத்தம் இறங்கிச் சரியாயிட்டது. இனிக் கவலை இல்லைன்னு டாக்டர் சொல்லியிருக்கார் பெரியம்மா.'' பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு மெல்லப் பேசினாள் மாதங்கி.

''அப்படித்தான் எதிர் வீட்டுத் தாரணிக்குச் சொன்னார் டாக்டர். இப்ப என்ன நடந்தது? போன வாரம் தண்ணி குடிக்க எழுந்தவ அப்படியே மயங்கிக் கீழே விழுந்தா... அப்படியே போயிட்டா...''

'இந்தப் பெரியம்மா வாயிலே நல்லதே வராதா?' உள்ளூர வெகுண்டாள் மாதங்கி. என்ன இருந்தாலும் ஆதரவற்ற நிலையிலிருந்தபோது சோறு போட்டு வளர்த்தவங்க... சூடாக ஏதும் பேசக் கூடாது.

சிரமப்பட்டுத் தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

எழுந்து கையைக் கழுவ வாஷ் பேசின் அருகே சென்ற சுமதி ஜாடை செய்து மாதங்கியைத் தன் அருகே அழைத்தாள். குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டாள்.

''மாப்பிள்ளை உன்கிட்டப் பிரியமா நடந்துக்கிறாரா?'' — ரகசியமாகக் கேட்டாள்.

கீழ் உதட்டைச் சட்டென்று கடித்துக் கொண்டாள் மாதங்கி. குப்பென்று அவள் முகம் சிவந்து போயிற்று. நெஞ்சு படபட வென்று துடித்துக் கொண்டது.

''நல்லாத்தான் நடந்துக்கிறார். ஏன் கேட்கிறீங்க பெரியம்மா?...'' கலவரத்துடன் தரையைப் பார்த்தாள்.

''உன் பெரியப்பா சிநேகிதர் தங்கவேலுவைத் தெரியுமில்லையா? அவர் முந்தாநாள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் பெரியப்பா கிட்டச் சொன்னாராம். உங்க மக ஜயந்தி ஒரு விதத்திலே ரொம்ப அதிர்ஷ்டக்காரின்னு நினைச்சுச் சந்தோஷப்பட்டுக்குங்க. அந்தப் பையன் ஹர்ஷன் கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு பெரிய கார் விபத்தில் சிக்கி ஆச்சு போச்சுன்னு ஆஸ்பத்திரியில் கிடந்தான். அப்போ ஏற்பட்ட ஊனத்தை அந்தம்மா கஸ்தூரி மறைச்சு வச்சு மகனுக்குக் கல்யாணம் முடிக்க ஏற்பாடு செய்தாங்க...''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் மாதங்கி. இதயம் இரண்டாகிவிடும் போலத் தீவிரமாகத் துடித்தது.

இந்தப் பெரியம்மா என்ன சொல்றாங்க? குழப்பமாக விழித்தாள்.

''அந்த விபத்துக்குப் பிறகு ஹர்ஷன் கல்யாணத்துக்கே லாயக்கில்லாத மனிதனாக ரொம்ப ஊனமாகி விட்டானாம்.''

உள்ளமும் உடலும் ஒருங்கே அவமான உணர்வில் அனலாக எரிவதை உணர்ந்தாள் மாதங்கி.


''கோவிச்சுக்காதே மாதங்கி... கேள்விப் பட்டதைச் சொன்னேன். உண்மை வேறாக இருந்தால் என்னைவிட யார் அதிகம் சந்தோஷப்படப் போறாங்க?

'''என் மருமகளுக்கு வளைக்காப்பு வச்சிருக்கோம்'னு உன் மாமியார் எங்க வீட்டைத் தேடி வந்து சொன்னா.. நான் உன் வாய்க்கு வேண்டியதைச் செய்துக்கிட்டுஆசையோடு ஓடிவர மாட்டேனா? அதைக் கேட்டு நான் தவிச்ச தவிப்பை விவரிக்கவே முடியாது. பணம் காசு மட்டும் ஒரு பெண்ணுக்கு போதுமா... திருமண வாழ்வு முற்றிலும் நிறைஞ்சு இருக்கணும் இல்லியா... ஆமாம் மாதங்கி... வந்து...'' மேலே பேச வந்தவள் சட்டென்று வாயை மூடிக் கொண்டாள்.

கையில் துவாலையும் — சோப்புப் பெட்டியுமாக கஸ்தூரி அவர்கள் அருகே வந்து நின்றாள்.

அவள் பேசியதை சம்பந்தி கேட்டு விட்டாளோ?... சுமதிக்கு நடுக்கமாக இருந்தது.

(தொடரும்)



— — யா ஏ — — — — ழ — — ?

அரவிந்தன்

''சந்தேகமே இல்லை... நம்ப நித்யாவே தான்!''

ஆச்சரியத்திலும் அவசரத்திலும் வாய் விட்டே கூவினார் ராஜசேகர்!

''உஷ்...!'' அவர் உதட்டின் மீது ஆள் காட்டி விரலை வைத்து அவரை அடக்கினாள் மரகதம். காரின் கதவை ஓசைப்படாமல் சாத்திவிட்டு வெளியே பார்த்தாள்.

வெளியே...

பாதையின் மறுபக்கம்--

வரிசையாக இருந்த கடைகளின் முன்னால் பிளாட்பாரத்தில் — அவர்கள் பெண் நித்தியா, யாரோ ஒரு வாலிபனுடன் பேசிக் கொண்டு நடப்பது அவள் பார்வைக்கு நன்றாகவே தெரிந்தது.

அன்று வெள்ளிக் கிழமை.

மயிலை கபாலீஸ்வரர் கோவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியும் ஜன நெரிசலில் பரபரப்பாக இருக்கும் மாலை நேரம்.

சூழ்நிலையின் புனிதத்திலோ, இரைச்சலிலோ, பரபரப்பிலோ எதிலும் பங்கேற்க முடியாமல் மரகதத்தின் தாயுள்ளம் விபரீதமான பயத்திலும் கவலையிலும் உறைந்து போய் இருந்தது!

மீண்டும் வெளியே பார்த்தாள்.

நித்யா மெதுவாக நடந்து கொண்டு இருந்தாள்.

களைப்பில் முகம் லேசாக வாடி இருக்கிறாற் போலிருந்தது. இயல்பாகவே சிவந்த முகம் மேலும் கன்றிச் சிவந்து இருக்கிற மாதிரியும் தோன்றியது. அக்கம் பக்கம் கூடத் திரும்பாமல் அவள் நடந்து கொண்டிருந்தாள்.

மிகவும் 'சீரியஸாக' எதையோ விவாதித்தபடி நடந்து கொண்டு இருந்தாள்! அவர்கள் தங்களைக் கவனிக்கவில்லை என்பது மரகதத்துக்கும் தெரிந்தது.

அவள் பார்வை சட்டென்று அந்த இளைஞன் பக்கம் தாவியது. நல்ல உயரம். நல்ல சிவப்பு. விளையாட்டு வீரனைப் போலக் கட்டுமஸ்தாகத்தான் இருந்தான். நீல நிறம் பட்டை பட்டையாக வந்த முழுக்கைச் சட்டையை 'இன்' பண்ணி இருந்தான். இடுப்பில் பட்டையான பெல்ட். அகலமான பெல் பாட்டம் பேண்ட். செமி ஹீல் ஷூ. அவனும் பிடறிவரை தலை முடியும் சைட் பர்ன்ஸும் விட்டிருந்தான். மற்றவர்களை விட அவனுக்கு அவைகள் அழகாகப் பொருந்தி இருக்கிற மாதிரி தோன்றியது மரகதத்துக்கு.

செருப்புகளை விடுகிற இடத்தில் நின்று மிகவும் நிதானமாக ஷூவை அவிழ்த்து வைத்துவிட்டு, நித்யாவின் செருப்புக்களையும் நகர்த்தி வைத்து; டோக்கன் வாங்கிக் கொண்டு தெப்பக்குளத்தின் படிகளில் நிதானமாக இறங்கித் தண்ணீரில் காலை நனைத்துக் கொண்டு மெதுவாக மேலேறி வந்து இரண்டாவது படிக்கட்டில் அவன் உட்கார்ந்து கொண்டான்.

நித்யா அவன் எதிரில் கையைக் கட்டிய படி நின்று கொண்டிருந்தாள்.

கீழே இறங்கிப் போய் அவர்களை வேவு பார்ப்பது ராஜசேகரின் கோபத்தைக் கிளப்பி விட்டுவிடும் என்று மரகதத்துக்கு நன்றாகவே தெரியும். மௌனமாக அவரைப்பார்த்தாள்.

''போகலாமா?'' — கைக் கடிகாரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு காரின் கியரை மாற்றியபடி கேட்டார் ராஜசேகரன்.

''ம்'' — என்ற மரகதத்தின் குரலில் அவ்வளவாக உற்சாகமில்லாததை அவரும் கவனித்தார்.

''என்ன யோசனை....?''

''ஒண்ணுமில்லே!''

''ஒண்ணுமில்லாமலே ஒரு யோசனையா?''—

''நம்ப நித்யாவைப் பத்தி நினைச்சேன். ரொம்பக் கவலையா யிருக்குது; விவரம் தெரிஞ்ச வயசுன்னும் விட முடியாது. விவரம் தெரியாதுன்னும் நினைக்க முடியாது. நமக்கு இருக்கிறதோ அவள் ஒருத்திதான். இவ்வளவு நாளும் எவ்வளவோ செல்லமா வளர்த்துட்டோம். இப்போ அவள் ஏமாந்து போயிடுவாளோன்னு கவலையா இருக்குது.''

''ஃபூலிஷ்!''—

''ஃபூலிஷ்தான்! என்னால அப்படித்தான் நினைக்க முடிகிறது. நான் உங்களைப் போலப் படிச்சவள் இல்லை. உங்களைப் போல வெளிநாட்டுக்கெல்லாம் போய்விட்டு வந்தவள் இல்லை. உங்களைப் போல உயர்ந்த உத்தியோகத்திலும் இல்லை. இது எல்லாத்தையும்

விட நான் உங்களைப் போல ஆண்பிள்ளை இல்லை. நான் பெண். அதைவிட ஒரு அம்மா! நாளைக்கு அந்தப் பெண்ணைப் பத்தின எல்லா நல்லதுக்கும் கெட்டதுக்கும் என்னைத் தான் சொல்வாங்களே தவிர உங்களை யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். அதனுலே நான் கவலைப்படறேன்.''

''நித்யா என்ன சின்னக் குழந்தையா? அவள் கல்லூரி மாணவி. உலகம் தெரிந்தவள். விவரம் தெரிந்தவள். அவளைப் பற்றி வீணுக் கவலைப்பட்டு உன் மனத்தை அனுவசியமாகக் கெடுத்துக் கொள்ளாதே.'' ராஜசேகரின் குரல் இதமாக ஒலித்தது.

மரகதம் அப்போதும் அவரைப் பார்க்காமல் வெளியிலேயே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன பைத்தியக்காரத்தனமான பயமெல்லாம் உனக்கு வருகிறது! நித்யா, யாரோ ஒரு பையன் கிட்டப் பேசிக்கிட்டுத்தானே இருக்கிருள்? உடனே அவளைப் பத்திக் கவலைப்படவும், அவள் கெட்டுப் போய்விடுவாளோன்னு பயப்படவும் ஆரம்பித்து விடணுமா என்ன? அவள் என் மகளாக்கும்! எவ்வளவு வெளி நாட்டுக்குப் போயிருப்பேன்? எத்தனை பெண்களைப் பார்த்திருப்பேன்? ஒருத்தியையாவது ஆசையாகத் தொட்டுப் பார்த்திருப்பேனு? என் மகளும் அப்படித்தான் இருப்பாள். அவளைப் பற்றி உனக்குச் சந்தேகம் வந்ததே அவமானம்.''

நீங்க என்ன வேணுமானுலும் சொல்லுவீங்க. உங்களுக்கு என்ன? நாளைக்கு ஏதாவது ஒண்ணு விபரீதமா ஆயிட்டதுன்னு நாலு பேர் சிரிப்புக்கும் கேலிக்கும் நானல்லவா பலியாக வேண்டும்?''

''அப்படி யெல்லாம் எதுவும் நடக்காது. அனுவசியமாக உன் கற்பனைகளை எல்லாம் ஓட்டிக் கொண்டு இருக்காதே!''

ராஜசேகர் ஆறுதலாக அவள் தோளில் தட்டிவிட்டு, கியரை மாற்றி மீண்டும் காரைக் கிளப்பி மெதுவாக ஓட்டினுர்.

மரகதத்தின் நியாயமான பயமும், கவலைகளும் அவர் மனத்திலும் லேசாக உரைத்தன. உண்மையில் அப்படியெல்லாம் நடக்காவிட்டாலும், எதற்கும் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லதுதான் என்று அவரும் நினைத்தார்.

'சட்'டென்று பாதையின் குறுக்கே வந்த சைக்கிள்காரனுக்காக காரை ப்ரேக் போட்டு விட்டு, மீண்டும் கியரை மாற்றி வேகமாகக் கிளப்பிய ராஜசேகர் கேட்டார்.

''அப்படியே நம்ப நித்யா அந்தப் பையனையே ஆசைப்படறதா வைச்சுக்கோ... என்ன பண்ணுவே....?''

மரகதம் ஒரு பதிலும் சொல்லாமல் அவரை நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் பளபளக்க மூக்கு நுனி சிவந்து போய் அவள் மீண்டும் ஒரு முறை அழுவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பது புரிந்தது.

''அமெரிக்காவிலே பெண்கள் தங்கள் பாய் பிரண்டோடு சுற்றுவது சகஜம்.''

''நாம் இருக்கிறது இந்தியா! இந்த மண்ணுக்கும் இந்த நாட்டுக்கும் ஒரு முறையான வாழ்க்கையும் நாகரிகமும் இருக்குது.''

''சபாஷ்!''



ராஜசேகர் சந்தோஷத்துடன் மரகதத்தின் தோளில் தட்டிக் கொடுத்தார்.

''பரவாயில்லையே நீ கூட இவ்வளவு அருமையாகப் பேசறயே மரகதம். ஒரு லெக்சர் ஏற்பாடு பண்ணலாமா?''

மரகதம் தலைகுனிந்து அந்தப்பாராட்டை வெட்கத்துடன் ஏற்றுக் கொண்டாள். கார் அடையாற்றில் உள்ள அவர்களின் பங்களா கேட்டுக்கு உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

அரை வட்டமான சுற்றுப் பாதையில் சுற்றிவிட்டு லேசான குலுக்கலுடன் போர்ட்டிகோவில் நின்று இளைப்பாறுவவது போல இரண்டு மூன்று முறை உறுமிவிட்டு அமைதியாயிற்று.

வீட்டுக்குள் நுழைந்ததும்நுழையாததுமாக சமையற்கார அம்மாளின் கவலை தோய்ந்த முகமும் —''பாப்பா இன்னும் காலேஜியிருந்து வரலையம்மா!'' என்ற குரலும் அவர்களை வரவேற்றன!

மரகதம் — ராஜசேகரை கூர்மையாகப் பார்த்தாள்.

நாலு பேர் ஏச்சும் பேச்சும் என்றேனே, அந்த நாலு பேரும் — சமுதாயமும் எல்லாமே இங்கே இருந்துதான் துவங்குகிறது. இந்தச் சமையற்காரியும், வேலைக்காரியும் — தோட்டக்காரனும், கூர்க்காவும் — பக்கத்து பங்களாவில் உள்ள இவர்களின் தோழர்களும் — பிறகு அக்கம் பக்கமும — மெல்ல மெல்லப் பரவும் நெருப்பு இது! என்று சொல்லாமல் சொல்கிற பார்வை அது!

ராஜசேகருக்குப் புரிந்தது!

'சட்'டென்று அவளைத் தள்ளி விட்டு, ''பாப்பாவுக்கு காலேஜிலே ஏதோ ஸ்பெஷல் க்ளாஸ் இருக்கிறதா என் ஆபீஸுக்கு போன் பண்ணிச்சு. லேட்டா வரும் மரகதம். நான் சொல்லவே மறந்து போனேன்'' என்று கூறியபடியே மாடிப்படியேறிப் போய் விட்டார்!

காரில் வரும் போது தன் கணவன் சொன்ன சமாதானங்களை எல்லாம் அவள் தாயுள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. அடம் பிடித்துக் கொண்டிருந்தது.

அவள் சின்னப் பெண்!

தான் செய்யும் காரியத்தின் பின்விளைவுகளைப் பற்றி விபரம் தெரியாதவள். அதன் தீவிரம் புரியாதவள். அதன் மூலம் தனக்கு ஏற்படக்கூடும் பழியின் ஆழம் புரியாதவள்— அவளை இந்த நிலையிலேயே கண்டித்து திருத்துவது சுலபம். இதை வளர விட்டுவிட்டுப் பிறகு வே[illegible] கொடுமையான அனுபவம்! அவளைக் கண்டிக்க வேண்டும்....

நினைத்துக் கொண்டே வந்த மரகதத்தின் மனம் 'சட்'டென்று நின்றது.

அவளைக் கண்டிக்க வேண்டும்!

''எப்படி?.... என்ன சொல்லி?... எடுத்த எடுப்பிலேயே இதைச் சொல்லலாமா? கேட்பாளா? பிடிவாதம் பிடிப்பாளா? ஒன்றுமே இல்லாத விஷயத்துக்கு தடை சொல்லப் போக தடுக்கபட்டுள்ளது என்ற உணர்வின் உறுத்தலுக்குத் தீனி போடவே தடையை மீறும் தைரியமும் ஆசையும் வந்து விடுமோ? — ஒரே பெண் என்று அளவுக்கு மீறி செல்லமும், சலுகையும் கொடுத்து வளர்த்தது எல்லாமே அடிப்படையில் தவறுகளோ? எல்லாப் பெற்றோரையும் போல பிள்ளைகளை அடிமைகளாகவும், தங்களைக் கண்டாலே அரண்டு மிரண்டு போகிறவர்களாகவும் தான் வளர்க்க வேண்டுமோ?...

மரகதத்துக்கு லேசாகத் தலையை சுற்றுகிறாற் போல இருந்தது.

''நித்யாவைக் கண்டிக்க வேண்டும். ஆனால் உடனடியாக அல்ல. அவள் மனம் புண்பட்டு விடாமல் மிகவும் கண்ணியமாக.. இதமாகச் செய்ய வேண்டும்!— சற்று நிதானமாக அதைச் செய்ய வேண்டும்....!'' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

''என்ன டார்லிங் ரொம்ப 'டல்'லா இருக்கிறே?'' ராஜசேகரின் இதமான குரல் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''......'' அவள் மௌனமாகவே இருந்தாள்.

''நித்தியைப் பத்தியா கவலைப்பட்டுகிட்டு இருக்கே?''

''ஆமாம்!''

''ரெடிகுலஸ்.... அவளைப் பத்தி கவலைப் படறது உன் பலவீனம். நீ இன்னும் நினைச்சுகிட்டு இருக்கிற மாதிரி அவள் ஒண்ணும் பால் குடிக்கிற பாப்பா அல்ல. — படிச்சவள். உலகம் தெரிஞ்சவள் எது நல்லது? எது கெட்டது என்பது அவளுக்குத் தெரியும் எதுக்காக கவலைப்படணும்?''


''நீங்க எவ்வளவு சொன்னாலும் என்னால அப்படியிருக்க முடியலைங்க.... எவ்வளவு சமாதானம் செய்துகிட்டாலும் மனம் திரும்பத் திரும்ப அந்தக் கவலையும் வேதனையும் பட்டுக்கிட்டே இருக்கு. தயவு செஞ்சு நீங்களே நம்ப நித்யா கிட்டே பேசுங்களேன்... சமாதானமாவே பேசி, மெதுவா அவளுக்குக் கொஞ்சம் புத்தி சொல்லுங்களேன்...'

''நிச்சயம் கேட்கறேன்டார்லிங்.போதுமா? எனக்கு அவ பேரிலே நிறைய நம்பிக்கை இருக்கு. இருந்தாலும் உனக்காக கேட்கறேன்... அதுவும் இன்னிக்கு மாலையே கேட்கறேன் போதுமா?...''

'பளிச்'சென்று விளக்குப் போட்டாற்போல மரகதத்தின் அகமும் முகமும் மலர்ந்தது.

சொன்னபடியே அன்று மாலை வழக்கத்தைவிட சீக்கிரமாகவே வீடு திரும்பி விட்டார் ராஜசேகர்.

வெளியே வட்டமான புல்வெளியில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு ஓய்வாக உட்கார்ந்திருந்தார். நித்யா வீடு திரும்பு



கடவுள் மனிதனை அளவெடுக்கும்போது தலையின் சுற்றளவைப் பார்ப்பதில்லை. இதயத்தின் சுற்றளவைத்தான் பார்க்கிறான்.

- பால்கோல்டு
- எஸ். ராஜகணேஷ்

வதை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந் தாள் மரகதம்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது!

நித்யாவும் — அவளுடன் முதல் நாள் கோவில் வாசலில் பார்த்த அந்த இளைஞனும் வந்து கொண்டிருந்தனர்!

மரகதத்துக்கு மனதை என்னவோ செய்தது.

''அசோக். மீட் மை டாடி... மை மம்மி... டாடி திஸ் ஈஸ் அசோக்.. என் காலேஜ் மேட். ''அசோக் மில்லி''ன் வருங்கால உரிமையாளர். படிப்பு முடிந்து பிஸினஸ் மேனேஜ்மெண்ட், டெக்னிகல் டெவலப்மெண்ட் தெரிஞ்சுக்க ஸ்டேட்ஸ் போகிறார்!''

''ஹலோ''... ராஜசேகர் அவனிடம் கையை நீட்டினார்!

மனதுக்குள் அவன், தங்கள் பெண் நித்யாவுக்கு நல்ல ஜோடிதானா என்று அவர் பார்வை அளவெடுத்தது!

''பையன் வசதியானவன்தான். நல்ல ஜோடி... பெண்ணும் விரும்பினால் இவனையே அவளுக்கு மாப்பிள்ளையாக முடித்து விட்டால் என்ன?....'' என்று நினைத்தபடியே அவனுடன் கைகுலுக்கினார்!

மரகதத்தின் மனதிலும் ஏறக்குறைய இதே வகையான எண்ணங்களே ஓடிக் கொண்டிருந்தன.

''பையன் வாட்டசாட்டமாகவும் அழகாகவும் இருக்கிறான். நித்திக்கும் நல்ல ஜோடி. அவளும் விரும்பினால் இவனையே முடித்து விட்டால் என்ன? நமக்கு இருப்பதோ ஒரே பெண். இவள் மனசுப்படியே நடக்கட்டுமே!' என்றெல்லாம் யோசித்தபடியே நின்றுகொண்டிருந்தாள் மரகதம்!

''அசோக் வீட்டிலே கல்யாணம் பண்ணிக்கிட்டுத்தான் வெளிநாடுபோகணும்ங்கிறுங்க. அசோக்கிற்கு இப்போ கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதம். ரெண்டு பேருமே பிடிவாதம் பிடிக்கறுங்க. இடையிலே சாரோட முறைப்பெண் வேற ஒரு பக்கம் அவரைப் பார்த்து முறைக்கிறாள்! என்ன செய்யறது என்று ஒரே குழப்பம். அதுதான் உங்ககிட்டே யோசனை கேட்கிறதுக்காகக் கூட்டிக்கிட்டு வந்து இருக்கிறேன்.... டாடி!

''வா அசோக்... உட்கார். ஒரு நிமிஷத்திலே வருகிறேன்! அப்பாவுடன் பேசிக் கொண்டிரு. ப்ளீஸ்....!''

நித்யா உள்ளே ஓடினாள்!

''நான் அப்பவே சொன்னேனே கேட்டியா? என் பெண்ணைப் பத்தி என்ன நினைச்சே?'' என்கிற மாதிரி ராஜசேகர் பெருமிதத்துடன் மரகதத்தைப் பார்த்தார்.

மரகதத்தின் மனதில் ஒருவகையான ஏக்கம் பரவி இருந்தது! தன் பெண்ணுக்கு ஒரு நல்ல சம்பந்தம் கைநழுவிப் போய் விட்டது போல அவள் உணர்ந்தாள். நேற்று வரை கவலைப் பட்டுக் கொண்டு இருந்து தன்னை வதைத்த அதே மனம் இப்போது இப்படி ஏங்குவதைப் பற்றி அவளுக்குத் தன் மீதே கோபம் கோபமாக வந்தது!



நெருப்பிலே பூத்த மலர்

பரலோகத்திலிருக்கும் பரமபிதாவே!
நாங்கள் ஒரு கயிறு திரிக்க
எண்ணினோம். முப்பிரிக் கயிறு.
ஆரம்பத்தில் அவனும் (தி சேம் ஓல்ட் சிவகுமார்), அவளும் (அட தனக்கு சிரிக்க மட்டுமன்றி அழுது நடிக்கவும் தெரியும் எனும் பூர்ணிமா)
காதலிப்பதாக கொஞ்ச நேரம்
ஊர்வது முதல் பிரி. அப்புறம் கொலை,
காதல், தியாகம், என்று தடுமாறுவது கயிறின் இரண்டாம் பிரி.
கடைசியில் பேய் பிசாசு
என்று திகிலூட்டிப் பயமுறுத்துவது
மூன்றாவது பிரி. இந்த முப்பிரிக்
கயிற்றில் எதிர்பாராமல் எங்கள்
படமே தற்கொலையாகத் தொங்கி
விடுமென்று எதிர்பார்க்கவில்லை.
எதையோ சொல்ல நினைத்து, எதையோ
சொல்ல முயன்று, எதையும்
சொல்ல முடியாமல் போன எங்களை
மன்னித்துவிடுங்கள். எங்களுக்குப்
பாவ மன்னிப்புக் கொடுங்கள்!

தேவனே! தங்கள் தவறை உணர்ந்து
விட்டார்கள்; எதிர்காலத்தில்
இப்படித் துன்புறுத்தமாட்டார்கள்
என்ற உத்தரவாதத்தின் பேரில்
ஆசீர்வதிப்போமாக.
(—அட, என்ன இது ஆயிரக்கணக்கான
பேர் வருகிறீர்கள்?
—பாதர், எங்களுக்கும் பாவமன்னிப்பு
வேண்டும்.
—நீங்கள் யார்?
—மேற்கண்ட படத்தைப்
பார்த்தவர்கள்!)
ஆமென். —நளினி சாஸ்திரி



அமெரிக்கனுக்கு நூறு வயது! *****

இடைவிடாது சீறி ஓடிக்கொண்டிருக்கும் ஊர்திகள்; வழிந்து கொண்டிருக்கும் ஜனத் திரள்; புழுதி மண்டலம்; ஓசை அலைகள்— இப்படிப்பட்டதோர் சூழ்நிலையை வெகு அருகிலேயே கொண்டிருந்தாலும் இவற்றின் பாதிப்பை துளிக்கூட ஏற்காமல் நாற்பது ஏக்கர் பரப்புக்கிடையே, பசுமை மரப் போர்வைக்குள்ளே தனக்கென ஓர் ஏகாந்த இடத்தைப் பெற்று புராதன ஓவியமாய் காட்சி தரும் மதுரை அமெரிக்கன் கல்லூரி தனது நூறாவது வயதில் அடியெடுத்து வைத்துள்ளது.

ஜாஃப்னாவிலிருந்து 1834-ம் ஆண்டு மதுரைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷினரியின் முயற்சியால் தோன்றின ஓர் பள்ளியை 1881 ஆம் ஆண்டு, ஆறு மாணவர்கள் கொண்ட கல்லூரியாக்கி அமெரிக்கக் கல்லூரியின் சரித்திரத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவர் இக் கல்லூரியின் முதல் பிரின்ஸிபலான ரெவரண்ட் ஜார்ஜ் தாமஸ் வாஷ்பர்ன். ஆரம்பத்தில் பசுமலை கல்லூரி எனப்பட்டது.

தேச விடுதலையில் முழு மூச்சாய் இறங்கி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை மகாத்மா காந்தி தொடங்கிய போது அப்போதைய கல்லூரி முதல்வராக இருந்த ரெவரெண்ட் ஏ. ஜே. எம். ஃப்ளின்ட், மகாத்மாவின் இவ்வியக்கத்தில் பங்கு கொள்ள தமது மாணவர்களை ஊக்குவித்ததை இக் கல்விக் கூடத்தின் வரலாறு பேசுகிறது.

கல்லூரி முதல்வர் பதவி வகித்த முதல் இந்தியர் என்ற பெருமையோடு முழுக்க முழுக்க கதர் உடை அணிந்து வந்து மாணவரிடையே தேசீய உணர்ச்சியை உண்டு பண்ண உதவியவர் என்ற பெருமை ஏ. ரஞ்சிதம் அவர்களைச் சேருகிறது. இது நிகழ்ந்தது சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னை.

✻ கல்லூரிக்குச் சொந்தமான கனமான கட்டிடங்களுள் ஒன்று

அதே காலகட்டத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பல அரசியல் கட்சித் தலைவர்களையும் தங்கள் கல்லூரிக்கு வரவழைத்து அவர்களது கருத்துக்களை பெற்ற பெருமையும் இக் கல்லூரி மாணவர்களுக்கு உண்டு.

எல்லா மதத்தினரையும் சமமாக பாவித்து அவரவர் மத உணர்வுகளுக்கு சம மதிப்புக் கொடுக்கும் விசாலமான நோக்கையும் இக் கல்லூரி பெற்றுள்ளது.

அரசின் தூண்டுதலால் சமீப காலமாக தேசிய சமூக நலத்தொண்டு என்றஅமைப்பின் கீழ் மாணவ மாணவியர் சமூகத் தொண்டாற்றுவதை நாம் காண்கிறோம். ஆனால் 1912-ம் ஆண்டே அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் 'பஞ்சமர் பள்ளி' என்று தொடங்கி முதியோர்களுக்கு இரவு நேரத்தில் கல்வி புகட்டினர். வேறு பல சமூக சேவைகளையும் 1935-ம் ஆண்டே இக்கல்லூரி மாணவர்கள் செய்யத் தொடங்கி விட்டனர்.

''எங்கள் கல்லூரி 1978-ம்ஆண்டு சுயாட்சி பெற்றது. தற்போது இங்கு சுமார் 1150 மாணவர்களும் மாணவியரும் பயில்கின்றனர். போஸ்ட் கிராஜுவேட் நிலையில் மட்டுமே பெண்கள் பயில்கின்றனர்.

''சுமார் 110 ஆசிரியர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். இவர்களில் 17 பேர் பி.எச்டி. பட்டமும் 16 பேர் எம்.ஃபில்—எம்.லிட். பட்டமும் பெற்றவர்கள். இன்னும் இரண்டே ஆண்டுகளுக்குள் மொத்த ஆசிரியர்களில் சுமார் 60 சதவீதத்தினர் பி.எச்டி., எம்.ஃபில், எம்.லிட். பெற்ற நிலைக்கு உயர்ந்து விடுவர்.

முன்கதைச் சுருக்கம்

திருத்தணியில் ஐயந்திக்கும் ஹர்ஷனுக்கும் திருமண ஏற்பாடு தடபுடல் பட்டது. பரிசம் போடவிருந்த சமயத்தில் மணப்பெண் ஐயந்தியைக் காணவில்லை! இது சம்பந்தியம்மாள் கஸ்தூரிக்குப் பெரிய அதிர்ச்சி! ஏற்கெனவே ஹர்ஷனுக்கும் ஊர்மிளாவுக்கும் நடக்கவிருந்த நிச்சயதார்த்தம் நின்று போய்ச் சம்பந்தியம்மாள் கஸ்தூரி தவித்து உருகியவள். தாயாரின் வற்புறுத்தலுக்கு இணங்கியே ஹர்ஷன் திருத்தணிக்கு வந்திருந்தான். மற்றொரு பேரிடி அவனுக்கு! கடிதம் எழுதி வைத்துவிட்டு ஐயந்தி தன் காதலனுடன் பம்பாய் பறந்து விடுகிறாள். இந்த அதிர்ச்சியான செய்தியைத் தந்தை தயானந்தன் சம்பந்தியம்மாளிடம் தெரிவிக்கிறார். என்ன செய்வதென்று அனைவரும் தவித்து, முடிவில், பெற்றோர் உயிருடன் இல்லாது பெரியப்பா தயானந்தன் வீட்டில் வளரும் மாதங்கிக்கு ஹர்ஷன் வேண்டா வெறுப்பாகத் தாலி கட்டுகிறான். மாதங்கி தன் மகளின் நல்வாழ்வைப் பறித்துவிட்டாளே என்ற ஆத்திரமும் கோபமும் பெரியம்மா சுமதிக்கு!

ஊர் வந்து சேர்ந்த சூட்டோடு ஹர்ஷன் தனியாகப் பெங்களூருக்குப் புறப்படுகிறான், மாதங்கியைக் கண் கலங்க வைத்துவிட்டு. கஸ்தூரி இதைக்கண்டு அதிர்ந்து போகிறாள்!

''அம்மாவுக்கு அவமானம் ஏற்படக் கூடாதே என்ற ஆதங்கத்தில் ஒப்புக் கொண்டேன். நீ என் மனைவியாகி விட்டதாக மனப்பால் குடிக்காதே! மூட்டை கட்டிக்கொண்டு இங்கிருந்து போய்விடு'' என்று ஹர்ஷன் கூறியதை மாமியாரிடம் சொல்கிறாள் மாதங்கி.

பெங்களூரிலிருந்து ஹர்ஷன் திரும்பியதும் கஸ்தூரி மகனைக் கண்டித்து,'மாதங்கி இங்கு தங்கியிருக்க உரிமையுண்டு' என்று உறுதியுடன் சொல்கிறாள்.

இதற்கு நடுவில் ஹர்ஷனைச் சந்திக்க ஊர்மிளா அவர்கள் வீட்டுக்கு வந்து நிம்மதியைக் குலைக்கிறாள்! மாதங்கியின் மனம் உடைகிறது. கஸ்தூரி கவலையால் தவிக்கிறாள். ரத்த அழுத்தம் அவளைப் படுக்கையில் கிடத்துகிறது.

ஊர்மிளா தன் கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டவள். கடற்கரையில் ஊர்மிளாவும் ஹர்ஷனும் அமர்ந்திருக்கும் காட்சியைக் குடும்ப நண்பர் நாராயணசாமி பார்த்து விடுகிறார். எச்சரித்து விட்டுச் செல்கிறார்.

நாராயணசாமியின் எச்சரிக்கை ஹர்ஷனை மனம் மாறச் செய்கிறது! ஊர்மிளாவின் மீது ஏற்பட்ட கசப்பு மாதங்கியின் மேல் அன்பாக மலரத் தொடங்கப் பல சம்பவங்கள் காரணமாகின்றன.

இந்தச் சமயம் பார்த்து, பெரியம்மா சுமதி வந்து சேருகிறாள். ஐயந்தி கழற்றிப்போட்ட கிழிந்த புடவைகளைத் தைத்து அணியும் மாதங்கிக்கு இத்தனை போகமா? சுமதியின் வயிறு பொறாமைத் தீயால் எரிந்தது! அது மட்டுமல்ல, அவளது அருமை மகள் ஐயந்தி கோடம்பாக்கத்தில் ஓர் ஒண்டுக் குடித்தன வாசியாகக் குடும்பம் நடத்துவதை வேறு அவள் பார்க்க நேர்கிறது. இந்த வயிற்றெரிச்சலும் சேர சுமதி ஹர்ஷனைப்பற்றி ஒரு விபத்தில் ஆண்மை இழந்தவன் என்று கூறி மாதங்கியைத் துடிதுடிக்க வைக்கிறாள்.

இந்தச் சமயத்தில் அவர்களிருந்த இடத்துக்கு வருகிறாள் கஸ்தூரி! தான் மாதங்கியிடம் கூறியதைக் கஸ்தூரி கேட்டு விட்டாளோ என்று சுமதிக்கு ஒரே நடுக்கம்!

சில நிமிடங்களில் பளிச்சென்று உடை மாற்றிக் கொண்டு தங்கள் எதிரே முன்னறையில் வந்து உட்கார்ந்த கஸ்தூரியை வியப்புடன் பார்த்தாள் சுமதி.

இவளா ரத்த அழுத்தம் வந்து படுத்துக் கிடந்தாள்? பிடுங்கி எடுத்த முள்ளங்கிப் பத்தையைப் போல நிறமும் செழுமையுமாக, மருமகள் எடுத்துவிட்டவள் என்று சொல்ல முடியாதவாறு மினுமினுவென்று வச்சு வாக்கப் படுத்தும் இளமையில் இன்னமும் ஜம்மென்று இருக்கிறாளே?... படிப்புக்கும் பவிஷுக்கும் ஒரு தனி களையா? பொறாமை, தீயாக அடிவயிற்றைப் பற்றி... புன்முறுவலித்தாள் சுமதி. தனது வரவால் அமைதியாக அழகாகக் காணப்படும் அந்தக் குடும்பத்தில் ஒரு சிறு சலசலப்பை ஏற்படுத்தாவிடில் மண்டை வெடித்து விடும் போன்றதொரு ஆத்திரம் அவளுக்கு.


''காப்பி - டிபன் சாப்பிட்டீங்களா?... நீங்க வந்தது தெரிந்தது. அதுனாலே சட்டுனு எழுந்து வந்துட்டேன். இல்லாட்டா ராத்திரி மாதங்கி கஞ்சி எடுத்துக் கொண்டு வந்து எழுப்பற வரை தூங்கி விட்டிருப்பேன்.''

''அடடா, உங்க ஓய்வை நாங்க கெடுத்துட்டமா?'' சூள் கொட்டினார் அனுதாபத்துடன் தயானந்த்.

''அப்படி ஒண்ணுமில்லை... நாளையிலிருந்து நான் வேலைக்குப் போகணும். தேவையில்லாத ஓய்வுகூட ஒரு வகை வியாதியைப் போல உடம்பைக் கெடுத்திடும்.'' கஸ்தூரி மெல்லியதாகச் சிரித்தாள்.

''மாப்பிள்ளை மாடியில் இருக்காப் போலிருக்கு.....'' முனகியபடி தயானந்த் மெல்ல எழுந்தார்.

''மாதங்கி! போய் ஹர்ஷனை நான் கூப்பிட்டதாக வரச்சொல்.'' மருமகளுக்கு உத்தரவிட்டாள் கஸ்தூரி.



என்னதான் சம்பந்தி என்ற போதிலும் மாடி அறைக்குத் தடதடவென்று தயானந்த்



விழுந்த மாலை

தானே உரிமையுடன் செல்ல முயன்றதை அவள் வெறுத்தாள்.

சில விஷயங்களில் கஸ்தூரி மிகவும் கண்டிப்பானவள். உயிர்த் தோழி என்றாலும் தன் பின்னாலேயே சமையலறைக்குள் கழுத்தில் மூச்சு விட்டபடி நெருக்கமாக யாராவது உறவு கொள்வதை அவள் விரும்பாதவள்.

தயானந்த் புரிந்து கொண்டார். முகத்தில் அசடு வழிய அவர் அங்கிருந்து வராந்தாப் பக்கம் நழுவித் தோட்டத்தைப் பார்த்தபடி விழித்துக் கொண்டு நின்றார்.

அறைக் .கதவை லேசாகத் தட்டிவிட்டுத் திறந்து கொண்டு மாதங்கி உள்ளே வந்த போது படுக்கை மீது சாய்ந்தபடி வீக்லியைப் புரட்டிக் கொண்டிருந்தான் ஹர்ஷன்.

''கீழே வரச் சொல்லி அம்மாவின் உத்தரவோ? உன் பெரியப்பா நடந்துகொண்ட அழகுக்கு அவரோட நான் வந்து பேசணுமா?''

''அத்தை உடனே உங்களைக் கீழே வரச் சொன்னாங்க....''

பட்டென்று பத்திரிகையை மூடித் தரையில் போட்டுவிட்டுக் கோபத்துடன் எழுந்தான். நாற்காலி மீது கிடந்தி துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு இடது கரத்தால் கலைந்த முடியைச் சீராக்கியபடி வெளிவரத் திரும்பினான்.

மாதங்கி அவனுக்கு வழிவிட வெளியே வந்தாள்.

''இந்தா நில்லு!... ஒரு வார்த்தை கேட்கணும்...'' அதட்டினான் ஹர்ஷன்.

அறையை விட்டு வெளியே வந்துவிட்ட மாதங்கி வாயிற்படி அருகில் தயக்கமாக நின்றாள்.

''பல நாட்களாக நான் கேட்க நினைச்ச கேள்வி. வாய்ப்பில்லாமல் வாயை மூடிக்கிட்டிருந்தேன். சம்பந்தி மனுஷனைக் கண்டதும் இப்போ கேட்கணும்னு மனம் துடிக்குது... ஆமாம்! உன் அக்கா வீட்டிலே நீ கூடவே தங்கி நெருங்கி வாழ்ந்தவளாச்சே... உனக்குக் கூட உன் அக்கா விவகாரம் ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லப் போறே? உன் பெரியப்பா-பெரியம்மா யாருக்கும் உன் அக்காவின் காதல் விவகாரம் கொஞ்சம் கூடத் தெரியாமலா இருந்திருக்கும்?... தன் மகள் திடீரென்று இடக்குச் செய்தால் தம்பி மகளை என் தலையில் கட்டலாம்னு தானே உன் பெரியப்பா திட்டத்தோட திருத்தணிக்குப் புறப்பட்டு வந்திருந்தார்?..''

மாதங்கி திடுக்கிட்டுப் போனாள். சற்று முன் பெரியம்மா சொன்ன செய்தியால் ஏற்பட்ட கலவரத்தினின்று ஏற்கனவே குழம்பி விட்டிருந்தாள். இப்போது பெரியப்பா திட்டமிட்டு அவளைப் பலவந்தமாக அவனுக்கு மனைவியாக்கி விட்டதாகக் குற்றச்சாட்டு.

''எனக்கு எதுவுமே தெரியாது.'' சொல்லி விட்டு வேகமாகத் திரும்பினாள்.

''இந்தா!'' — மறுபடியும் ஹர்ஷன் அதட்டினான்.

''கீழே போய் அம்மா கிட்ட நான் கேட்டதைப் பத்தி ஏதாவது வாய் திறந்தியோ நான் பொல்லாதவனா இருப்பேன்...'' உறுமி விட்டு அவளைத் தாண்டிக் கொண்டு படிகளைத் தாவிக் கடந்து கீழே மறைந்தான்.

'இப்போது மட்டுமென்ன? நீங்க ரொம்ப சாதுவென்ற நினைப்பா?..' தனக்குள்ளே சொல்லிக் கொண்ட மாதங்கி குபீரென்று சிரித்து விட்டாள். சிரிப்பைச் சட்டென்று அடக்க முடியாது... சிரித்துக் கொண்டே அவன் பின்னால் கீழே இறங்கி வந்தாள்.


''சாப்பிட்டு விட்டுப் போகலாமே?'' — கஸ்தூரி உபசரித்ததுதான் சாக்கென்று சுமதி உட்கார்ந்து விட்டாள்.

அதிக நேரம் அங்கே தங்க நேரிட்டால் இன்னும் சில வம்புகளைச் சேகரிக்க இயலுமே என்ற ஆவல்தான் காரணம்.

மாதங்கி இரவு உணவுக்காகத் தயாரித்திருந்த நெய் மணத்த பரோட்டாவும் கூட்டுக் கரியும் சாப்பிட மிகவும் ருசியாகத்தான் இருந்தன. தேவைக்கு மீறி ஒன்றை அதிகமாகவே சாப்பிட்டு விட்டாள் சுமதி. கை கழுவிவிட்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தவளுக்கு மூச்சு முட்டியது.

''எங்க மாமா சரியான கஞ்சன். கஞ்சன் என்று கூட சொல்லமாட்டார். கருமி என்றுதான் சொல்லுவார்!

-பிரியாபாலு



சுவையாகச்சமைத்துப் போட்டுக் கூப்பிட்ட குரலுக்கு அடிமையாக ஓடோடி வந்து பணி செய்த இந்தப் பெண்ணை இவர்கள் வீட்டுக்கு அனுப்பி விட்டோமே?

''என்னால் நம்பவே முடியலை... படு சோம்பேறியாக எங்க வீட்டில் மசமசவென்று நின்றுகிட்டு இருந்த இந்தப் பொண்ணு இங்கே வந்து ரொம்ப நல்லா வேலை செய்கிறது... எல்லாம் உங்க டிரெயினிங்.'' — புகழ்ச்சியாக ஆரம்பித்தாள்.

''அப்படி ஒண்ணும் தெரியலையே. இங்கே வந்த நாளிலிருந்து நாள் முழுதும் நான் சொல்றதுக்கு முந்தி தானாகவே எல்லாம் செய்துடறாளே? இவ மட்டும் இல்லாதிருந்தா.. சில நாளா நான் உடம்புக்கு முடியாம இருந்ததுக்கு.. உதவிக்கு யாருமில்லாமக் கஷ்டப்பட்டிருப்பேன்.''

மாமியார் மெச்சிய மருமகளாக மாதங்கி மாறிவிட்டதை அறிந்த சுமதிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''எங்க வீட்டுக்காரருக்கு நேர் எதிர் குணம் அவர் தம்பிக்கு. நல்ல வேலையில்தான் இருந்தார். ஆனால் குடியும் குதிரைப் பந்தயமும் அவரை ஒழிச்சுக் கட்டிடுச்சு. மாதங்கிக்கு ஆறு வயசிருக்கும். அப்பா பொசுக்குன்னு போயிட்டார். அவ பிறக்கும்போதே தாயை இழந்தவள். தம்பி மகள் அநாதையாகி விடக் கூடாதுன்னு இவர்தான் போய்க் குழந்தையை அவங்க தாய் வழிப் பாட்டன் வீட்டிலிருந்து எடுத்து வந்தார். தலையில் பேனும் உடம்பில் சிரங்குமாக... கயிறுபோல வந்து நின்ன குழந்தையை வளர்க்கப்பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும்.''

''அப்படியா?''

''படிப்பு நல்லா ஏறியிருந்தா இன்னும் மேலே படிக்க வச்சிருப்போம்.''

''அதனால் என்ன... எங்க வீட்டுக்கு இந்தப் படிப்புப் போதும். மேலே நாங்களே படிக்க வச்சுக்க முடியும். கோடை விடுமுறைக்குப் பிறகு மாதங்கியை நான் செகரட்டேரியட் கோர்ஸில் சேர்க்க ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கேன். அப்படியே கார் ஓட்டக் கத்துக்கவும் ஏற்பாடு செய்ய உத்தேசிச்சிருக்கேன்... தட்டெழுத்து, சுருக்கெழுத்து இதெல்லாம் கத்துக் கொண்டு தேர்ந்து விட்டால் பிற்காலத்திலே அவனுக்கு உதவியாக இருக்கும். வீட்டிலே ஒண்ணுக்கு ரெண்டு கார் நிக்குது. வெளி வாசலில் அவளே ஒரு காரை எடுத்துட்டுத் தாராளமாகப் போய் வரலாமே... என்னைப் பொறுத்த வரை அவள் எனக்கு மகள் போலத்தான்...'' கஸ்தூரி மென்மையாகச் சிரித்தாள்.

சுமதியின் தாடை இறுகியது. என்ன சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ள மாட்டேங்கிறாளே? மாமியாரை மாதங்கி அப்படிக் கையில் சுருட்டி வச்சுக் கொண்டிருக்கிறாள். கெட்டிக்காரி....

சுற்று முற்றும் பார்த்தாள். குரலை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள்.

''பி. யூ.சி.க்கு மேலே மாதங்கியை நாங்க படிக்க வைக்காம நிறுத்தினதுக்கு வேறே ஒரு காரணம் இருக்கு.

''மாதங்கி அசலாம்பிகை கல்லூரியில் படிக்க ஆரம்பிச்சவுடனேயே கொஞ்சம்

தன் சுபாவத்தைக் காட்டிட்டா. வீட்டிலேயே நான் அவளை எப்பவும் அடக்கி வைக்கிறதுண்டு. பால்காரனோட பல்லை இளிச்சுண்டு பேசுவாள். தையல்காரர் வந்துட்டா போதும்... ஓடிவந்து தானே பேசத் தொடங்குவா... இந்தப் பொண்ணை வச்சுண்டு எப்படித்தான் மீதிக் காலத்தை ஓட்டப் போறோமோன்னு எனக்குச் சதா திகில்தான் போங்க. நம்ப பெண்ணைப் படிக்க வச்சுட்டுத் தம்பி மகளுக்குப் படிப்புக் கொடுக்காட்டா நல்லாயிருக்காதுன்னு இவர் தான் ஒரே பிடியா காலேஜுலே கொண்டு சேர்த்தார். எனக்கு அப்பவே தெரியும். இவ ஒழுங்காப் படிக்க மாட்டான்னு. பஸ் ஸ்டாண்டிலே பார்த்த ஒருபையனோட சிநேகமாம். எனக்குப் பிறகுதான் தெரியும். அவன், அவளைத் தேடிக் கொண்டு காலேஜுக்குப் போய் விட்டான். ஆபீசிலே போய் விசாரிச்சானும்.இது கல்லூரித் தலைவி காதிலே பட்டு அவுங்கவந்து அவனைக் கூப்பிட்டுக் கடுமையாகச் சாடி வெளியே துரத்திவிட்டு இவருக்கு டெலிபோன் செய்தாங்க. இந்தப் பெண் நடத்தையாலே கல்லூரி பேர் கெட்டுடும், இந்த வருஷத்தோட வேறே காலேஜ் பார்த்துக்கோங்கன்னு காரமாப் பேசிட்டாங்க... பி.யூ.சி. படிப்போட நாங்க அவளை வீட்டோட வச்சிக்கிட்டோம். இந்த மாதிரித் தகராறுகள் மேலே நடக்காதபடி நான் கண்டிப்பும் கருருமாகத்தான் வச்சிருந்தேன்.''

கஸ்தூரி முகம் சுருங்கிப் போனாள்.

'மாதங்கியைப் பற்றி அவள் சொல்வதெல்லாம்உண்மையா?.. தன் பெண்ணுக்குக் கிடைக்காத இடம் தன் கொழுந்தன் மகளுக்குக் கிடைத்து விட்டதே என்ற ஆத்திரதித்ல் ஏற்பட்ட கற்பனையா?'ஆனாலும் அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை.

''நீங்கள் இந்த விஷயத்தைத் திருத்தணியிலேயே... பெண்ணை மணையில் வைக்கு முன்பே என்னிடம் சொல்லி யிருக்கணும்... இப்போ வந்து சொல்றதின் அர்த்தம் என்ன?'' என்று ஏளனமாகக் கேட்டாள்.

''ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கணும்னு சொல்வாங்களே... எங்கேயாவது நம்ப வீட்டுக் குழந்தை சுகமா இருக்கட்டும்னு நல்ல எண்ணத்தோடதான் பேசாம இருந்துட்டேன். இப்போ வேறே யாராவது வந்து சொல்லிடப் போறாங்கங்களேங்கிற கவலையிலே உண்மையை விளக்கிட்டேன்.''

''அங்கேயே சொல்லியிருந்தா இந்தத் தயானந்த் வீட்டுச் சங்கதியே வேண்டாம்... அக்காவைப்போலவே தங்கையும் இருக்கா... இது குழந்தைகள் தப்பில்லை... அவங்களை வளர்த்தவங்க தப்புன்னு எங்கண்ணா பட்டுன்னு சொல்லி உதறிட்டு எங்க உறவுப் பெண் யாரையாவது வச்சு எப்படியோ கல்யாணத்தை முடிச்சிருப்போம். எங்க உறவிலேயே என் மகனுக்குப் பெண் கொடுக்க எத்தனையோ பேர் தயாரா இருந்தாங்க... அதனாலே உங்க வீட்டுப்பெண்இல்லாதிருந்தா காரியம் ஒண்ணும் கெட்டுப்போயிருக்காது.'' அதட்டலாகவே சம்பந்தி என்ற மெதப்பிலேயே கஸ்தூரி பேசினாள்.



''அவ்வளவு அருகில் அவளைப் பார்த்ததும் அந்த அழகில் என்னை மறந்து மூக்கின் மேல் விரல் வைத்தேன்.''

''அதற்காகவா அவள் இப்படிச் சத்தம் போட்டாள்?''

''நான் விரலை வைத்தது அவள் மூக்கில்!''

- பன்னீர்செல்வன்

சுமதிக்கு மேலே என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏன் வீணாக வாய் கொடுத்தோம் என்று உள்ளூறப் பயந்துவிட்டாள்.

''இந்தச் சங்கதியை இத்தோட விட்டுடுங்க. என் மகன் காதில் பட்டால் வீண் பொல்லாப்பு. மாதங்கி எங்க வீட்டு மருமகளாகி விட்டாள். இனி அவளை அந்தத் தகுதிக்கு ஏத்தவளாக வச்சு நடத்திக் கொள்றது எங்க பொறுப்பு. நீங்க கவலைப்பட வேண்டாம். நடந்து போனதைப் பத்தி நான் கவலைப்பட்டப் போறதில்லை. இனி நடக்கப் போவதைப் பத்தித்தான் கவலைப்படுவேன். நீங்களும் மனத்தைக் குழப்பிக்க வேண்டாம். நாளைக்கு நான் ஆபீசுக்குப் போகலாம்னு தீர்மானிச்சிருக்கேன். அதனாலே...'' சுவரில் தெரிந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

'நேரமாகி விட்டது.... நீங்கள் கிளம்பலாம்' என்று பேசாமல் பேசிய அவளது கண்களைச் சந்திக்க சுமதிக்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

''நாழியாச்சு... நீங்களும் அந்தப் பக்கம் வந்துண்டு இருங்கோ... மாதங்கியை முடிஞ்சபோதெல்லாம் அனுப்பி வையுங்கோ...'' முணு முணுத்து விட்டு எழுந்தாள்.

வராந்தாவில் உட்கார்ந்து ஒப்புக்குப் பேசி ஹர்ஷனை அறுத்துக்கொண்டிருந்த தயானந்த் தாமாகவே உள்ளே வந்தார்.

''புறப்படலாமா?'' என்று அவர் கேட்டதுமே வெற்றிலை, பாக்கு, குங்குமத்தைப் பெற்றுக் கொண்டு சுமதி கிளம்பிவிட்டாள்.

படுக்கை விரிப்பை உதறிப் போட்டுச் சரி செய்துவிட்டு கண்ணாடி கூஜாவில் நீரும் டம்ளரும் கொண்டு வந்து தலைமாட்டிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டு... கட்டிலின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்ட மாதங்கியை ஓரக் கண்ணால் பார்த்தாள் கஸ்தூரி.

விடி விளக்கு ஒளியில் மென்மையான அந்த முகத்தில் ஒளி விட்ட கண்களில் கபடத்தின் சாயையே சிறிதும் தெரியாததை வியப்புடன் பார்த்துக் கொண்டாள்.

'சே! மாதங்கி அப்படிப்பட்ட பெண்ணாக இருக்க முடியாது...இது கட்டாயம் ஒரு கட்டுக் கதையாகத்தான் இருக்கும். முயன்றால் அவளால் இதைப்பற்றி ஆராயவாமுடியாது?'

எத்தனை கட்டுப்படுத்தியும் அமைதியானதொரு நீர்ப் பரப்பின் மேல் விழுந்த சிறு கல்லால் வட்ட வட்டமாக எழுந்த சிற்றலைகள் போல அவள் மனத்தினுள் ஒரு குறுகுறுப்பு... சஞ்சலப் படுத்திக் கொண்டிருந்ததால் அவளுக்கு நிம்மதியாக உறங்க முடியவில்லை.

(தொடரும்)

மருதமலை கோவில் அடிவாரம்.

சோம்பல் முறிக்கும் மத்தியான நேரம்.

நின்றிருந்த இரண்டொரு டூரிஸ்ட் பஸ்களும் போய்விட்ட பிறகு பாண்டிக்குச் சப்பென்றாகி விட்டது.

கூண்டிலிருந்த கிளி கீச் 'கீச்'சென்று பசியால் கத்த ''ச்சூ.. சொம்மா கெட... காலையிலிருந்து இந்நேரம் வரைக்கும் ஒரு பத்துச் சீட்டுக் கூட நீ எடுத்துத் தரலை... நெல்லு மாத்திரம் திங்க வேணுமா?'' என்று பாண்டி வாய் விட்டுத் திட்டினான் அதை.

அது, அவன் திட்டலைப் பொருட்படுத்தாமல், வெட்டி விட்ட அரை குறை இறகுகளோடு கூண்டில் பரபரத்தது. மூக்கைக் கம்பிகளுக்கு வெளியேவிட்டு, பாண்டியை நேசப்படுத்தும் எண்ணத்தோடு தன் சிகப்பு நிறக் கண்களைச் சாய்த்துப் பார்த்தது.

''ஏம்பா... கிளி ஜோஸ்யம் பார்க்க எத்தினி காசு வாங்கறே?'' நெற்றி முழுக்கத் திருநீற்றை அப்பிக் கொண்ட கிராமத்துக் கிழவி ஒருத்தி புகையிலைக் காம்பை மென்றபடியே பாண்டியை நெருங்கினாள். மடியில் செருகியிருந்த சுருக்குப் பையில் சில்லறை கணிசமாகக் குலுங்கியது.

''பதினைஞ்சு காசு ஆத்தா! வா... இப்படி சாவகாசமா உக்காரு. சீட்டு எடுத்துப் பார்த்துடலாம்...'' — பாண்டி ஆசை வலையை விரித்தான்.

''அம்மாடியோவ்! பதினைஞ்சு காசா? எங்கூரு அமாசை ஜோசியன் அஞ்சு பைசாவுக்கு எலி ஜோசியம் பாக்கறானே! நீ என்னான்னா மனசிலே பயமில்லாமே பதினைஞ்சு பைசா கேக்கறே? அஞ்சு பைசாவுக்குச் சீட்டெடுப்பியா?''

கிராமத்துக் கிழவி கறாராய்க் கேட்டாள்.

பாண்டிக்குச் சுர்ரென்று வந்தது கோபம்.

''அடப்போ! நீயும் வயசுலேபெரியவளாட்டம் கோயிலுக்கு வந்துட்டே....! கோயமுத்தூரிலிருந்து மருதமலைக்கு வர்றதுக்கு அஞ்சு வருஷம் முன்னாடி என்ன பஸ் சார்ஜ்? இப்ப என்ன பஸ் சார்ஜ்?... அஞ்சு பைசாவுக்குச் சீட்டெடுக்கணுமாமில்லே....சீட்டு? முகரையைப் பார்க்கல்லே...!''

கிழவி ஏதோ பேச வாயெடுத்த அதே நேரம்....

மலைப் பாதையினின்றும் சர்ரென்று கீழே இறங்கி அடிவாரத்தைத் தொட்ட அந்தப் படகுக்





கார் பாண்டி உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்ததும் சட்டென்று அதிர்ந்தாற் போல் நின்றது.

கிராமத்துக் கிழவி அரண்டு போய் ஒதுங்கினாள்.

பாண்டி வியப்போடு காரில் இருந்தவர்களைப் பார்த்தான். காரின் பின் சீட்டில் இரண்டு ஆண்களுக்கு நடுவில் அந்த அழகான பெண் அமர்ந்திருந்தாள். முகத்தில் அதிகப் படியான பவுடர் பூச்சு. உதட்டில் லிப்ஸ்டிக். கண்களில் வண்டியாய் மை.

''என்ன டிரைவர்? என்னாச்சு?'' — காரில் இருந்தவர்களில் வழுக்கைத் தலையோடு இருந்தவன் கொஞ்சம் கனமான குரலில் கேட்டான்.

''பின் பக்க டயர் ஒண்ணு போயிடுச்சு சார்... நீங்களும் அம்மாவும் ஒரு பத்து நிமிஷம் கீழே இறங்கி நில்லுங்க. ஸ்டெப்னி போட்டுடறேன்...''

''ம்... கீழே இறங்கு பானு! தைரியமா இறங்கு. எந்த ரசிகர் பட்டாளமும் வராது. ஒரு பத்து நிமிஷத்திலே மாணிக்கம் ஸ்டெப்னியை மாத்திடுவான்.''

வழுக்கைத் தலை, பானுவுக்குக் கதவைத் திறந்து விட்டான்.

மார்புகளின் மேல் பரவியிருந்த முந்தானை வெகுவாய்ச் சரிந்து பூமியைத் தொட—லோகட் - ஜாக்கெட்டின் பள்ளத்தாக்கில் பானுவின் கவர்ச்சி அயிட்டங்கள் இலவசக் காட்சி நடத்த — காரைவிட்டு சாவதானமாய் இறங்கி நின்றாள்.



''மருதமலைக் கோயில் ரொம்பவும் பிரசித்தமானது என்று சொல்றாங்க. கூட்டத்தையே காணோமே?'' — டம்பப் பையில் இருந்த கூலிங் கிளாஸை எடுத்துக் கண்களில் பொருத்திக் கொண்டே கேட்டாள் பானுஸ்ரீ.

''விசேஷ நாள்லேதான் கூட்டம் ஜாஸ்தி வரும்...இந்த வெட்டி நாள்லே வெய்யிலிலே யார் வருவாங்க?''

கிளி ஜோஸ்யக்காரப் பாண்டியன் திறந்த வாய் மூடாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்; குறிப்பாக அந்தப் பெண்ணை.

எதற்கோ திரும்பிய பானுஸ்ரீ பாண்டி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததும் புன்னகைத்தாள். சட்டென்று அவனை நோக்கி நடந்தாள்.

''என்ன கிளி ஜோஸ்யமா?''—கேட்டாள்.

''ஆமாம்மா...'' பாண்டியன் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான்.

''எத்தினி காசு?''

''பதினைந்து காசு''

''ம்... ஒரு சீட்டு எடுக்கச் சொல்லு பார்ப்போம்.''

''உங்க பேரைச் சொல்லுங்கம்மா.''

பானுஸ்ரீ உடனே தயங்கினாள். எந்தப் பெயரைச் சொல்லுகிறது என்கிற பாவனையில் திரும்பி — வழுக்கையையும் கிருதாவையும் பார்த்தாள். அவர்கள் சிரித்தார்கள்.

''லட்ச லட்சமாச் சம்பாதிக்கிற நீ, உன்னோட அதிர்ஷ்டத்தைப் பார்க்கிறதுக்காக இந்தக் கிளி ஜோஸ்யம்தானா கிடைச்சது? பார்த்தா யாராச்சும் சிரிப்பாங்க...''

''பார்க்க யாரும் இல்லேங்கிற தைரியத்திலேதான் கிளி ஜோஸ்யம் பார்க்கிறேன். இதே கிளி ஜோஸ்யம் மவுண்ட் ரோடிலே பார்க்க முடியுமா என்ன?''

பானுஸ்ரீ சிரித்துக் கொண்டே சொல்ல—

கிருதா சொன்னான்... ''ம்... ம்...பாரு பாரு.. சீக்கிரமாப் பாரு.. உன்னோட நிஜப் பேரையே சொல்லு...''

வழுக்கை பாண்டியைப் பார்த்துக் கத்தினான். ''அம்மா யாருன்னு தெரியுதாய்யா உனக்கு?''

''தெரியல்லீங்களே!''

பாண்டிக்குத் தன்னைத் தெரியாது என்றதும் பானுவுக்கு அவமானத்தில் முகம் சிவந்தது. மனப் பொருமலை அடக்கிக் கொண்டாள். சொன்னாள்: ''ரங்கமணி பேருக்குச் சீட்டெடு பார்க்கலாம்.''

பாண்டி உற்சாகமாய்க் கிளிக் கூண்டின் கதவைத் தூக்கி விட்டான். ''சாட்சாத் மகாலட்சுமி தேவியாட்டம் வந்து நிக்கிற ரங்கமணி என்ற பேர் நாமம் கொண்ட இந்தப் பெண்ணுக்கு — மருதமலை மருதாசல மூர்த்தியை நினைச்சுட்டு ஒரு சீட்டு எடுத்துத் தாடி என் சிந்தாமணி....''

கிளி வெளியே வந்தது. சிவந்த அலகால் அடுக்கிவைத்திருந்த சீட்டுக்களை ஒன்றன் பின் ஒன்ருய் இழுத்துப் போட்டது. ''நிதானமா அவசரப்படாமே யோசிச்சுச் சீட்டை எடு.'' பாண்டி சொல்லச் சொல்ல ஒரு சீட்டை வாயில் கவ்விப் பாண்டியன் கையில் போட்டது கிளி.

நெல்லைக் கொடுத்துக் கிளியைக் கூண்டுக்குள் அனுப்பிவிட்டுச் சீட்டைப் பிரிக்க ஆரம்பித்தான். கணீரென்ற குரலில் சொன்ஞன்: ''நேரம் சரியில்லே தாயீ... ஆவேசமான கோலத்திலே காளிமாதேவி வந்திருக்கா பொருள் நஷ்டம்... அபகீர்த்தி... தொழில் தேக்கம்... சத்ரு பங்க... எல்லாமே வர சந்தர்ப்பம் இருக்கு... இதுக்கொரு பரிகாரம்....'' பாண்டி சொல்லி முடிக்கவில்லை.

கிருதாவும், வழுக்கையும், பானுஸ்ரீயும் கெக்கலியிட்டுச் சிரித்தனர்.

''ஏய்யா... சோத்துக்குச்செத்த உன்னுடைய சொத்தைக் கிளி எடுத்துக் கொடுத்த சீட்டை வெச்சுக்கிட்டு இப்படி ஒரு யானைப் புளுகு புளுகறியே... இது நியாயமா? எண்பத்தஞ்சாம் வருஷம் வரை கால்ஷீட் ஃபுல். லாக் கர்ஃபுல். எல்லாம் நிறஞ்சு வழியு தய்யா...!''

பாண்டி வெலவெலத்துப் போனுன்.

''ஸார்! ஸ்டெப்னியை மாட்டிட்டேன். புறப்படலாம்'' — டிரைவர்.

''உம்... புறப்படலாம்...'' — காருக்குள் ஏறப்போன கிருதாவைப் பார்த்துப் பானுஸ்ரீ சொன்னுள்... ''அந்த கிளி ஜோஸ்யக்காரனுக்கு ஒரு எட்டணு குடுத்துட்டு வாங்க.''

''என்கிட்டச் சில்லறையே இல்லையே'' வழுக்கை.

''என் கிட்டேயும் இல்லே.'' — கிருதா.

பானுஸ்ரீ கேட்டாள்: ''ஏம்ப்பா பத்து ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?''

''ம்...தர்றேன்....'' — கிளிக் கூண்டின் மேல் அறையைத் திறந்தான் பாண்டி. பல நாள் சேமிப்பில் சில ஒற்றை ரூபாய் நோட்டுக்கள். அதை எடுத்து எண்ணிஞன்.

''ஒன்பது ரூபாய்தான் இருக்கும்மா.''

''சரி குடு.''

ஒன்பது ஒற்றை ரூபாய்த் நாள்களை வாங்கி டம்பப் பையில் திணித்து, அந்தப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தாள் பானுஸ்ரீ.

அந்த நீண்ட சாலையில் கார் ஒரு புள்ளியாய் மறையும் வரையில் — அதையே பார்த்துக் கொண்டிருந்தான் பாண்டி.

கார் கோவை நகருக்குள் பிரவேசித்தது.

பாலதண்டபாணி கோயிலைக் கடக்கையில் எதற்கோ டம்பப் பையைப் பிரித்த பானுஸ்ரீ திடுக்கிட்டாள். ''அடேடே.....!''—கையைச் சொடுக்கிஞள். முகம் வெளுத்தது.

''என்ன பானு?'' — வழுக்கையும் கிருதாவும் தவிப்போடு கேட்க... வாய் உலர்ந்து போகச் சொன்னுள் பானுஸ்ரீ: ''அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் குடுத்துட்டேன்....'' வழுக்கை திடுக்கிட்டுக் கேட்டது: ''எந்தப் பத்து ரூபாய்...?''

''அதான்... பாலக்காட்டிலே இருந்த ராமன் நாயர் கொண்டு வந்து குடுத்த மாடல் பத்து ரூபாய் நோட்டு. நாம பிரிண்ட் பண்ணினதில் தப்பாப் போன நோட்டு....''

கிருதா அலறிஞன்: ''அடிப் பாவி! கெடுத்தியே காரியத்தை...! மாணிக்கம் காரைத் திருப்பு...! மருதமலைக்கே ஓட்டு. அந்தக் கிளி ஜோஸ்யக்காரன் இன்னமும் அங்கேதான் இருப்பான்....''

கார் திரும்பியது. மருத மலையை நோக்கித் திரும்பவும் சீறியது.

பதினைந்தே நிமிடம்!

கார் மலையடிவாரத்தை நெருங்கியது. மூவரும் காரை விட்டு இறங்கி ஆவலாய்ப் பார்க்க — பாண்டி உட்கார்ந்திருந்த இடம் காலியாய் இருந்தது.

அன்று மாலை....

பாண்டி, பையில் பணம் கணிசமாய் இருந்த தெம்பில் பஸ் பிடித்து, காந்திபுரம் இறங்கி, தென்பட்ட அந்த சொகுசு ஓட்டலில் காப்பி குடிக்க ஆசைப்பட்டு — உள்ளே நுழைந்து ஒரு வடையும் காப்பியும் சாப்பிட்டு சர்வர் கொடுத்த பில்லையும், அந்தப் பத்து ரூபாய் நோட்டையும், கேஷ் கவுண்டரில் இருந்தவரிடம் கொடுக்க — அசல் ரூபாய் நோட்டுக்களைப் பார்த்துப் பார்த்து, ஸ்பரிசித்து ஸ்பரிசித்துப் பழக்கப்பட்டுப் போன கேஷியர் கொஞ்சம் வித்தியாசமாய், மரமரப்பாய் இருந்த அந்தப் பத்து ரூபாய் நோட்டைப் பார்த்ததும் சந்தேகப்பட்டு போலீசுக்குப் போன்செய்ய பத்து நிமிஷத்தில் ஜீப்பில் வந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் பாண்டியின் கன்னத்தில் செமத்தியாய் ஒரு அறை கொடுத்து அந்தப் பத்து ரூபாய் நோட்டைப் பற்றி விசாரிக்க....

பாண்டி நடுங்கும் குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்: ''[illegible] நடிகையம்மாதான் இந்த நோட்டை...''

அவன் கையிலிருந்த கூண்டில் சிறகுகளை அடித்துக் கொண்டு — அந்தக் கிளி 'கீச்கீச்' சென்று கத்த ஆரம்பித்தது.

அது அதனுடைய வெற்றி கீச் கீச்!



லாவோஸ் மக்கள் இன்றளவும் மன்னர்கள் பரம்பரையைக் கடவுளின் தூதர்கள் என்று நம்புகின்றனர்!

மன்னர் ஆட்சி நடந்த காலத்தில் மன்னர் தெரு வழியே பவனி சென்ருல் அவரை ஏறெடுத்துப் பார்ப்பது கடவுள் நம்பிக்கைக்கு எதிரான செயல் என்று கருதி மன்னர் தங்களைக் கடந்து செல்லும் வரை மக்கள் குனிந்து தங்கள் கைவிரல்களால் பூமியைத் தொட்ட வண்ணம் கண்களை மூடிக் கொண்டிருப்பார்கள்.

- பி. நாராயணன்

-அட்டையைத் தொடர்ந்து அறுவைக



சில நாட்கள் வீட்டிலேயே தங்கிவிட்ட தனுல் அலுவலகத்தில் கஸ்தூரிக்கு வேலை குவிந்து விட்டிருந்தது. கணக்கு வழக்குப் பகுதியில் உதவி அக்கௌண்டன்ட்டாகப் பணி புரிந்து கொண்டிருந்தாள். சில மாதங்களில் தலைமைப் பதவி கிட்டக் கூடும் என்ற தொரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது. அலுவலகத்திலே அவளுக்கு நல்ல பெயர். வேலையில் கறுரான ஆசாமி என்றதொரு புகழ்.

மேஜை மேல் குவிந்து கிடந்த ஃபைல்களை ஒரு வழியாகக் கவனித்து விட்டு அவள் நிமிர்வதற்குள் பகல் உணவு நேரம் நெருங்கி விட்டிருந்தது. எழுந்து சென்று வாஷ் பேசினில் முகத்தைக் கழுவி முடியைச் சீர் திருத்திக் கொண்டு தன் அறைக்குள் வந்து உட்கார்ந்தாள். சாதாரணமாக அவள் தினமும் தன் கையோடு கொண்டு வரும் டிபனைத் தன் அறைக்குள் அமர்ந்தபடியே சாப்பிட்டு முடிப்பது வழக்கம். அவசரத்தில் டிபனை மறந்துவிடும்போதுதான் அலுவலகப் பையனை அனுப்பி ஹோட்டலிலிருந்து சிற்றுண்டி ஏதேனும் தருவித்துக் கொள்வாள். சில நாட்கள் வெறும் காப்பியுடன் பகல் உணவை முடித்துக் கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு வேலை பார்ப்பதும் உண்டு. கடும் பசியுடன் வீட்டுக்குத் திரும்பும்போது சமைக்கணுமே என்று அடுப்பைக் கண்டு அரண்டு போய் நிற்பதும் உண்டு. அலுவலகத்து வேலைக்குப் பின் அவள் அப்படிக் களைத்துப் போவது வழக்கம். ஆனல் இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடக் குழந்தை சாப்பாட்டு டப்பாவை வேகமாகத் திறந்து அம்மா என்ன டிபன் அனுப்பி யிருக்கிருள் என்று ஆவலுடன் பார்ப்பதுபோன்று — சாப்பாட்டு வேளையின்போது அலுவலகத்துக்குக் கையோடு கொண்டு வரும் அந்த அழகான சிறு சதுர மூங்கில் கூடையைச் சட்டென்று திறந்து பார்ப்பதில் ஓர் உற்சாகம் இருந்தது. அலுப்பு ஏற்படாது மாமியாருக்கு. மருமகள் நாளைக்கொரு விதமான டிபனைக் கட்டிக் கொடுத்து அனுப்பி வந்தாள். மாமியாருக்கும் வயதை மறந்து பள்ளிக்கூடப் பாப்பாவைப் போல ஆவலுடன் திறந்து பார்ப்பதில் எத்தனை ஆசை? அறையின் ஓரமாக ஆபீஸ் பையன் கொண்டு வைத்திருந்தபிரம்புகூடையை எடுத்து மேஜையின் மேல் வைத்துக் கொண்டாள்.

மாதங்கி வீட்டுக் காரியங்களைக்கூட ரசனை உணர்வோடுதான் செய்து வந்தாள்.

கச்சிதமாகக் கூடைக்குள் வெள்ளைத் துணி மடிப்பைப் போட்டு அதற்குள் சூடு தணியாத ஸ்டீல் கண்டெய்னரில் இட்லியும் வெங்காயச் சட்னியும் வைத்து அனுப்பியிருந்தாள். பிளாஸ்கில் காப்பி — தாகத்துக்குக் குடிக்கக் காய்ச்சி ஆறவைத்த தண்ணீர் ஒரு சிறு பாட்டிலில். கடைசியாகச் சாப்பிட ஒரு சிறு ஆரஞ்சுப் பழம்.


இட்லி பூப்போல் சாப்பிடச் சுகமாகவே இருந்தது.

அதுவும் சில நாட்களாகக் கஞ்சியும் மோருமாகச் சாப்பிட்டு அலுத்துவிட்ட நாக்குக்கு வெங்காயத் துவையல் வெகு ருசியாகத்தான் இருந்தது.

டிபன் அடுக்கின் மூன்ருவது காலி தட்டுக்குள் ஒரு துண்டுக் கடிதத்தை வைத்திருந்தாள் மருமகள்.

'கூடை ஓரத்தில் சின்ன பிளாஸ்டிக் டப்பாவுக்குள் நீங்கள் பகல் வேளைக்குச் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை வைத்திருக்கிறேன். இன்னும் தொடர்ந்து சில நாட்கள் மட்டும் சாப்பிட்டால்போதும் என்று டாக்டர் சொல்லியிருக்கிருர். மறக்காதீர்கள் — மாதங்கி'.

காப்பியுடன் மருந்தையும் சேர்த்து விழுங்கி விட்டுக் கூடையை மூடி அப்பால் வைத்தாள். கையைக் கழுவிக் கொண்டு மறுபடி உள்ளே வந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.





வயிறு நிறைந்து விட்டிருந்தது. ஆனாலும் கண்களில் பட்ட தூசி போல் சந்தேகத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு கேள்வி வேதனையாக மனத்தைச் சதா உறுத்திக் கொண்டிருந்தது. வேலையின்போது மறந்துவிட்டிருந்தாள். பகல் மறுபடியும் அலுவலகம் துவங்கக் கொஞ்ச நேரம் இருந்தது. அந்த ஓய்வு நேரத்தில் மனத்துக்குள்ளே மீண்டும், மீண்டும் அந்த உறுத்தல்.

இந்தப் பெண் மாதங்கி நீண்ட நாள் அனுபவம் உள்ள குடும்பத் தலைவி போல் வீட்டைச் சாமர்த்தியமாகத்தான் நிர்வகிக்கிறாள்.

அடக்கமாக — பொறுமையாக — அன்பாகவே நடந்து கொள்கிறாள்.

இப்படிப்பட்டவள் பெரியம்மா சுமதி சொன்னதைப் போன்றதொரு காரியத்தைச் செய்திருப்பாளா?

தனது பழைய காதல் விவகாரம் மாமியாருக்குத் தெரியக்கூடாது என்பதற்காகப் பொறுமையாக இருப்பவள் போல நடிக்கிறாளா?

தனக்குள்ளே பலவாறு எண்ணி முடிவுகாண முடியாது சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.



அன்று காலை புறப்படு முன் மருமகள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த போது கூட மனத்தில் அதே கேள்வி தான்.

கபடமே இல்லாது வெளிப்படையாகப் பேசும் இவள் அந்தக் காரியத்தைச் செய் திருப்பாளா?...

காதலிப்பது என்பது பெரும் குற்றமா என்ன? இளம் வயது. தாய் தந்தை இல்லாத தாலே எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு நல்ல தோழி கிடையாது. உணர்ச்சி வசத்திலே... இளமை மயக்கத்திலே ஏதாவது ஒரு தவறு செய்திருக்கலாம். அதற்காக இப்போது அவளைத் திரும்பப் பெரியப்பா வீட்டுக்கு விரட்டப் போகிறாளா?

அவள் மகன் ஹர்ஷன் மட்டும் பண்பின் சிகரமா? ஒழுக்கத்தின் இலக்கணமா? ஊர் மிளாவுடன் காதல் என்று ஊரைச் சுற்றி வரவில்லையா? மகனுக்கு ஒரு நியாயம் இன்னொருத்தி மகளுக்கு ஒரு நியாயமா?...

பெண்களின் உரிமையைப் பற்றி அழுத்தமாகக் கூட்டங்களில் பேசும் மாதர் சங்கத்துத் தலைவி அவள்.

அவள் வீட்டு விஷயம் என்றதுமே அடிப்படைக் கொள்கைகள் கலகலத்து விட்டனவோ?

மனச்சாட்சி முள்ளாகத் தைத்தது.

திடீரென்று மேஜையின்மேலிருந்த தொலைபேசியில் எண்களைச் சுழற்றினாள்.

''ஹலோ!'' — மறு பக்கத்தில் மாதங்கியின் இனிய குரல் காதைத் தழுவியது.

''அத்தையா?.... என்ன இந்த நேரத்தில்... உடம்புக்கு ஏதாச்சும்....'' கவலையுடன் கேட்டாள் மருமகள்.

அந்தக் குரலில் தொனித்த ஆதங்கமும் அன்பும் கஸ்தூரியைப் புல்லரிக்கச் செய்தன.

'என்ன மட்டமான புத்தி எனக்கு? மருமகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று துப்புத் துலக்கக் கூப்பிட்டேனே! சே!...'என்று தன்னைத் தானே சாடிக்கொண்டாள்.

''பத்து நாளா வீட்டோட உன்னோடு கூடவே இருந்துட்டு இப்ப ஆபீசுக்கு வந்துட்டேன் இல்லையா... உன் குரலைக் கேட்கணும் போல இருந்தது. கூப்பிட்டேன்... ஏதாவது சாப்பிடு;பட்டினியா வேலைசெய்துக்கிட்டு இருக்காதே....''

''அத்தை! நீங்க ஒரு பச்சைக் குழந்தை!'' கலகலவென்று மாதங்கி சிரித்தாள்.

தொலைபேசியை வைத்துவிட்டு முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

அவள் செய்த காரியம் அவளுக்கே அவமானமாகத்தான் இருந்தது.

மாலையில் காரை ஓட்டிக் கொண்டு வீட்டை நோக்கி வந்த சமயம் பாதி வழியில் அந்த நினைப்பு வந்தது.

அசலாம்பிகைக் கல்லூரியின் தலைவி ராதிகாவை அவளுக்கு நன்றாகவே தெரியும். இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்,



நெருங்கிப் பழகினவர்கள். ஹர்ஷன் கல்யாணத்தின்போது வெளியூரிலிருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தாள்.

கல்லூரி விடுமுறை முடிவடையும் தறுவாயில்தான் அவள் வெளியூரிலிருந்து கட்டாயம் திரும்பியிருப்பாள். அவள் வீடு, போகும் வழியில்தான் இருக்கிறது. எதேச்சையாக அந்தப் பக்கம் போனவள் அவளைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன் என்று சொல்லிக்கொண்டு ராதிகாவை அணுகினால்?

நெடுஞ் சாலையினுள் குறுக்கே ஓடிய தெருவிலிருந்த சிறிய வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டுக் கஸ்தூரி இறங்கினாள்.

கம்பிக் கதவிடப்பட்டிருந்த வராந்தாவில் ராதிகா சாய்வு நாற்காலியில் மாலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''வா...வா! பார்த்து ரொம்ப நாளாச்சு!'' மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

''கல்லூரியில் யாருக்கோ இடம் வேண்டிச் சிபாரிசு செய்ய வந்து விட்டதாகப் பயப்படாதே. இந்த வழியாகப் போனேன். அப்படியே உன்னைப்பார்த்து நாலுவார்த்தை பேசிவிட்டுப் போகலாம்னுதான் வந்திருக்கேன்..'' சிரித்தபடி மோடாவில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் சம்பந்தமில்லாத பல கதைகளைப் பேசிவிட்டு மெல்ல ஆரம்பித்தாள். கேட்டுத் தெரிந்து கொள்ள அவமானமாகத்தான் இருந்தது. கேட்காதிருக்கவும் மனம் ஒப்பவில்லை.

''ஹர்ஷன் கல்யாணத்தின்போது உன் வாழ்த்துச் செய்தி கிடைத்தது. நீ நேரில் வர முடியலையேன்னு கொஞ்சம் வருத்தமாத்தானிருந்தது. நான்கூட உன் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவிச்சு எழுதியிருந்தேன். கடிதம் கிடைச்சிருக்கும். உனக்கு கல்யாணத்தின்போது நடந்த விபரீதம் தெரிய நியாயமில்லை.... கல்யாணத்துக்கு முதல் நாள்....''

ராதிகா சட்டென்று கஸ்தூரியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

''நீ விவரிக்க வேண்டாம். ஐயங்கிக்குப் பதில் அந்தப் பெண் மாதங்கியை வச்சுக் கல்யாணத்தை நீ சமாளிச்சுட்டேன்னு கேள்விப்பட்டேன். உண்மையில் அதைக் கேட்டதும் ரொம்பச் சந்தோஷப்பட்டேன்.''

''என்ன சொல்றே...?''

''நாம படிச்ச காலம் வேறே — இப்பப் படிக்கிற மாணவிகளின் மனநிலைக்கும் நமது மனநிலைக்கும் இடைவெளி ரொம்பவே அதிகம். அதனாலே ஒரு கல்லூரியைத் திறமையா நிர்வகிக்கணும்னா தலைவிக்கும் ஆசிரியர்களுக்கும் அதில் படிக்கும் மாணவிகளைப் பற்றி ஓரளவு நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். அதுவும் கொஞ்சம் மாறுபட்ட நடத்தை உடைய பெண்களை நாங்கள் தீவிரமாகவே கண்காணிக்கிறது வழக்கம்.''

கஸ்தூரியின் நெஞ்சு படபடத்தது.

''இரு...நாம சாப்பிடத் தேநீர் எடுத்து வர சமையல்கார அம்மா கிட்டச் சொல்லி விட்டு வரேன்....'' ராதிகா எழுந்து உள்ளே சென்று விட்டாள். அவள் திரும்புவதற்குள் நேரம் யுகமாகக் கஸ்தூரிக்குக் கனத்தது.

''கல்யாணப் பத்திரிகையைப் பார்த்த போது என் மனம் கொஞ்சம் சங்கடப்பட்டது. திருமணம் சுவர்க்கத்தில்நிச்சயிக்கப் படுகிறது என்கிறார்களே... எத்தனை பெரிய உண்மைன்னு நான் வியந்து போனேன். கடைசி நிமிஷத்தில் வந்து குழப்புவது நல்லதல்லவே அதனால் மௌனமாக இருந்து விட்டேன். உன் சம்பந்தி வீட்டைப் பற்றிப் பேசுகிறேன் என்று கோபிச்சுப்பியோ?''



சமையல்கார அம்மாள் கொண்டு வந்து வைத்த தேநீர்க் கோப்பையை எடுத்துத் தோழியிடம் நீட்டினுள் ராதிகா.

''உண்மையைச் சொன்னுல் ஏன் கோவிச்சுக்கணும்...'' கஸ்தூரி மெல்லச் சிரித்துக் கொண்டே தேநீரை ஒரே மூச்சில் பருகி முடித்தாள். விவரிக்க முடியாத ஒரு அச்சத்தில் அவள் உடம்பில் ஒரு நடுக்கம் பரவிக் கொண்டது.

ராதிகா என்ன சொல்லப் போகிறுள்?... ரொம்பச் சுற்றி வளேக்கிறுளே...

''பிறகு நடந்ததைக் கேள்விப்பட்டபோது நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரின்னு நினேச்சு மகிழ்ச்சி அடைந்தேன்.

''உன் மருமகள் மாதங்கி வகுப்பிலே ரொம்பக் கெட்டிக்காரி. எல்லாத்திலும் முதல் இடம் பெறுகிறவள். அடக்கமான பெண். ரொம்பப் பணிவான குணம். எனக்கு அவளே ரொம்பப் பிடிக்கும்.

''ஆனுல் தயானந்தனின் சொந்த மகள் ஜயந்தி படு பொல்லாத குட்டி. ரொம்ப வாய்த்துடுக்கு. பெரிய சண்டைக்காரி. மொத்தத்தில் ரெட்டை வால். அவளேச் சமாளிக்க ஆசிரியைகள் ரொம்பவே பாடு பட்டார்கள். போதாததற்குச் சின்னவயதிலேயே ஒருபையனுடன் சிநேகம். பஸ் நிலேயத்தில்.... கடைத் தெருவில்... என்று சந்திப்புக்கள். அது போதாது போல அவன் அவளேத் தேடிக் கொண்டு கல்லூரிக்கே வரத் தொடங்கினுன்.

''கல்லூரி மாணவிகள் காதலிக்கட்டும். ஏராளமாகக் காதலித்துத் தொலேக்கட்டும். நாம் தடுத்து நிறுத்திவிடக் கூடிய காரியமல்ல காதல் விஷயம்.

''அதை எங்கள் கல்லூரிக்கு ஒரு விளம்பரமாக அமைப்பதைத்தான் நாங்கள் விரும்புவதில்லே.

''கல்லூரி வாயிலுக்கு அப்பாலே மாணவிகள் என்ன வேண்டுமானுலும் செய்து கொள்ளட்டும். — அது எங்கள் பொறுப்பல்ல என்பது என் கொள்கை. அதனுல் அவளது அப்பாவைத் தொலேபேசியில் அழைத்து மகளின் நடத்தையைப் பற்றி ரொம்பக் கடுமையாக நான் பேசிவிட்டேன். ஆனுல் என்ன காரணத்தினுலோ அவர் தம் மகளே அடக்குவதை விட்டு நன்ருகப் படித்துக்கொண்டிருந்த மாதங்கியைபி.யு.சி. படிப்புடன் நிறுத்திக் கொண்டு விட்டார்.

''ஜயந்தி படிப்பை முடித்துக் கொண்டு எங்கள் கல்லூரியை விட்டுப் போகும்வரை எங்களுக்கு அவள் ஒரு தலேவலியாகவே இருந்தாள். அதனுல்தான் முதலில் கல்யாணப் பத்திரிகையில் அவள் பெயரைப் பார்த்த போது மன வேதனேப்பட்டேன்..

'' 'நம் சிநேகிதி கஸ்தூரிக்கு இவளா மருமகளாக அமையணும், அட கடவுளே!' என்று சங்கடப்பட்டேன். பிறகு நடந்தது வேறு என்று தெரிந்தபோது நான் பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.'' — புன்முறுவலித்தாள் ராதிகா.

''அப்படியா...?''— கஸ்தூரிக்கு இதுவரை தொண்டையை அடைத்துக் கொண்ட கனம் எங்கேயோ மறைந்து விட்டது போன்றதொரு லேசான உணர்வு ஏற்பட்டது.



நர்ஸ்: ''மயக்க மருந்து ஸ்டாக் இல்லேயே.... எப்படி டாக்டர் பேஷண்டை மயக்கமடையச் செய்தீங்க....?''

டாக்டர்: ''ஆபரேஷன் செய்ய ஃபீஸ் எவ்வளவுன்னு பேஷண்டிடம் சொன்னேன் .... அவ்வளவு தான்!''

—உ.ராஜாஜி

''மாதங்கி ரொம்பவும் நல்ல பெண். எனக்கு அவளே ரொம்பவும் பிடிச்சிருக்கு. ஒரு மாமியார் மருமகளுக்குக் கொடுக்கும் சான்றிதழ் இது... ஞாபகமிருக்கட்டும்!'' சிரித்துவிட்டு எழுந்தாள்.

கேட்டை அகலமாகத் திறந்து வைத்து விட்டு ஆவலுடன் கார் அருகே ஓடிவந்த மருமகளின் முகத்தை உற்றுப் பார்த்த கஸ்தூரி மனம் கரைந்து போனுள்.

மாதங்கி எத்தனே அருமையானதொரு மருமகள்?

''என்ன அத்தை ஒரு மாதிரி இருக்கீங்க?'' கையிலிருந்த பிரீஃப் கேஸை வாங்கிக் கொண்டபடி கேட்டாள் மாதங்கி.

''ஒன்றுமில்லே. நாமெல்லோரும் சாப்பிட்டதும் ஒரு சினிமாவுக்குப் போய் வரலாம்னு பார்க்கிறேன்.''

''அவரும் கூட வருவாரா அத்தை?'' ஆவலுடன் மாதங்கி கேட்டாள்.

''ஹர்ஷனுக்கு நகைச் சுவை நிறைந்த படம்னு ரொம்பப் பிடிக்கும். வயிறே வலிச்சுடுமாம். அப்படிச் சிரிக்கிற காட்சிகளாம் அந்தப் படத்திலே. எனக்குக் கூட வாய் விட்டு நல்லாச் சிரிக்கணும் போல ஆசையா இருக்கு. அதனுலே மூணு டிக்கட்டு வழியிலேயே ஏற்பாடு பண்ணிட்டு வந்திருக்கேன். சரியா?''

முகம் மலர்ந்து போன மாதங்கியின் முதுகில் அன்போடு தட்டினுள்.

ராதிகா சொன்னது போல் மாதங்கியை மருமகளாக அடைந்தது பெரிய அதிர்ஷ்டம்தான். — எண்ணியபடியே மன நிறைவுடன் உள்ளே சென்றுள். (தொடரும்)

மாலா

ஷைலஜா

ரயிலை விட்டு இறங்கிய சில நொடிகளில் பரிச்சயமில்லாத குரல் ஒன்று, ''ஹலோ! மிஸ்டர் சங்கர்!'' என்று கூவியதும் உடனே தலையைத் திருப்பி நான் வியப்புடன் குரலுக்குரியவரை ஏறிட்டேன். என்னைப் போல் முப்பது வயது இளைஞராகத்தான் இருந்தார். 'பளிச்' என்ற முகம். அகல நெற்றியே 'அறிவாளி' என்று பறைசாற்றியது.

கண்களில் சிநேக பாவத்துடன், சிரித்த முகமாய் அந்த இளைஞர் என்னை நெருங்கினார்.

பெங்களூருக்கு ஆபீஸ் விஷயமாக நான் வருவது முன் பின் அறிமுகமில்லாத இவருக்குத் தெரிந்தது எப்படி சாத்தியம் என்று நினைத்து நான் வியப்பதற்குள் அவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்

''ஐ ஆம் சுதாகர். மாலாவின் கணவர். மாலாவுக்கு அவள் அம்மா எழுதிய கடிதத்தில் நீங்கள் ஆபீஸ் விஷயமாக ஒரு வாரம் பெங்களூர் வரப் போகிற விஷயத்தையும், வருகிற தேதியையும் எழுதி இருந்தார். மாலா அடிக்கடி உங்கள் போட்டோவைக் காட்டி இருக்கிறாள். அதனால் உங்களைக் கண்டு பிடிப்பது சுலபமாகி விட்டது.''

களங்கமின்றிச் சுதாகர் சிரித்தபோது என் மனம் சட்டென்று கலங்கிப் போனது.

இவரா மாலாவின் கணவர்?

''க்ளாட் டு மீட் யூ!'' என்று வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு கை நீட்டினேன்.

டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு ஸ்டேஷனை விட்டு வெளியேறியதும் சுதாகர் கேட்டார்.

''மிஸ்டர் சங்கர்! ஒரு வாரமும் நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கலாம். ஒன்றும் அசௌகரியமிருக்காது. இதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''

''ஸாரி மிஸ்டர் சுதாகர். ஆஃபீஸ் மூலம் ஏற்கனவே 'புக்' செய்துவிட்ட லாட்ஜில்தான் நான் தங்க வேண்டும். ஆனால் இப்போது உங்களுடன் வீடு வர ஆட்சேபணை இல்லை.''

''ஓ.கே. ஒரு நிமிஷம் நீங்க இங்கேயே இருங்க. நான் ஆட்டோவுக்கு டிரை பண்ணுகிறேன்'' — சிரித்தபடி சுதாகர் ஆட்டோ பிடிக்க நகர்ந்தான். உடனேயே என் மனத்தை மாலா பிடித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

மாலா!

அவளும் நானும் மதுரையில் பக்கத்துப் பக்கத்து வீட்டில் சிறு வயதிலிருந்தே ஒன்றாய்ப் பழகியவர்கள். பருவம் வந்ததும் எங்கள் நட்பு காதலாகியது. எங்கள் நட்புக்குத சொல்லாத

வீட்டுப் பெரியவர்கள் காதல் கல்யாணம் என்ற பேச்சு வந்தபோது ஜாதகங்கள் பொருந்தவில்லை என்ற காரணம் கூறி எங்களைப் பிரித்தனர். எனக்கும் மாலாவுக்கும் பேரதிர்ச்சியாகி விட்டது. என்னை மாலா திருமணம் செய்து கொண்டால் ஆறு மாதத்தில் அவள் விதவையாகி விடலாம் என்று வேறு ஜோஸியம் கேட்டுத் தெரிந்து கொண்டதும் கல்யாணப் பேச்சு ஆரம்பத்திலேயே அடியோடு முறிந்து போய் விட்டது.

மாலா என்னிடம் வந்து கதறி அழுதாள். அவள் காதலின் வேகம் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது.

''சங்கர்! உன்னை விட்டு நான் வேறு ஒருத்தனை எப்படிக் கல்யாணம் செய்து கொள்வேன்?'' என்று குமுறினாள்.

''மாலா... என்னை நீ கல்யாணம் செய்து கொள்வது நல்லதில்லை. இதற்காக நீ என்னைக் கோழை என்றாலும் சரி. என் முடிவு இதுதான். ப்ளீஸ்...மன்னித்துவிடு...''

அன்று அவளிடம் அப்படிச் சொல்லிவிட்டு உடனேயே திருச்சியில் ஒப்புக்கொள்ள வேண்டிய கம்பெனி வேலைக்கு ஓடி வந்து விட்டேன். மாலாவை மறக்க எண்ணித் தோல்வி அடைந்தேன். ஆனால் மூன்று மாதத்தில் மாலாவுக்குத் திருமணம் நடந்து விட்டதால் விஷயம் தெரிந்ததும் மனம் கொஞ்சம் லேசாகியது.

மாலா, எங்கிருந்தாலும் நன்றாக வாழ வேண்டும்.

திருச்சியில் வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதத்துக்குப் பிறகுதான் மதுரைக்கு நான் போனேன்.



மதுரையில் நான் போன நேரம் என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாமல் போக ஒரு வாரம் அதனுல் நான் தங்க நேர்ந்தது. மாலாவின் தாயார் நீண்ட நாளாய் என் அம்மாவின் சிநேகிதி ஆதலால் சிசுருஷை செய்து கொண்டிருந்தார். பேச்சு வாக்கில் என் தாயிடம் பெங்களூருக்கு ஆபீஸ் விஷய மாய் ஒரு வாரம் போகும் விஷயத்தைச் சொல்லி இருந்தேன். அப்போது அங்கிருந்த மாலாவின் தாய், சாதாரணமாய் எழுதுவது போல் பெண்ணுக்கு என் வரவைப் பற்றித் தெரியப்படுத்தி விட்டாள்.

'சர்' என்ற பிரேக் சத்தம் என் சிந்தனையைக் கலைத்தது. ஆட்டோ!

''ஏறிக்கொள்ளுங்கள், மிஸ்டர் சங்கர்!'' என்ற சுதாகர் ஆட்டோவின் உள்ளிருந்த படியே என் சிறு சூட்கேஸை வாங்கிக் கொண்டார்.

காலை நேரத்துப் பெங்களூர் குளிர் ஜிலென்று முகத்தில் குளிர்ச்சியாய் அடித்தாலும் மனம் என்னவோ கொதித்துக் கொண்டு தான் இருந்தது.

சுதாகர்! அழகான பெயர்! ஆளும் அழகாய்த்தான் இருக்கிறுன். மாலாவுக்கு ஏற்ற ஜோடி. அவளை மாதிரியே நல்ல சிவப்பாய், சுருள் தலை முடி, நல்ல பர்ஸனுலிடி.

என்னவோ திடீரென ஒரு பொறுமைத் தீ என்னைப் பாதாதி கேசம் சுட்டுப் பொசுக்கியது. என் இடத்தில் சுதாகர் வந்துவிட்டது விதியின் வலிமையால் தானே? அதனுல்-தானே என்னவோ என் கலகலப்பான சுபாவம் சுதாகரைக் கண்ட நாழி முதல் எங்கோ பதுங்கிக் கொண்டு விட்டது.

பொறுமிப் பெருமூச்சு ஒன்றை நான் விட்டபோது, ''மிஸ்டர் சங்கர்! வீட்டுக்குப் போவதற்கு முன் உங்களிடம் சில வார்த்தைகள் பேச நினைக்கிறேன்'' என்ருர் சுதாகர் நிதானமாய்.

எனக்குள் ஏதோ உதைத்தது.

''மிஸ்டர் சங்கர்! மாலா உங்களை மறக்கவேயில்லை.. கல்யாணத்தன்றே மாலா என்னிடம் உங்களைக் காதலித்ததை, கல்யாணம் செய்து கொள்ள முடியாமல் போனதை யெல்லாம் மறைக்காமல் சொல்லி விட்டாள். ஆனுல் அவள் மனம் எல்லாம் சங்கர் வியாபித்திருப்பதாய்க் கூறியபோது எனக்கு அதிர்ச்சி ஒருபுறம்; அவள் பேரில் அனுதாபம் ஒருபுறம். எனக்கு வேண்டியது என் மனைவியின் அழகு உடம்பில்லை. அன்பான மனசு. அதைத் தொட்ட பிறகுதான் அவள் உடம்பில் சுண்டுவிரல் பட அனுமதிக்கப் போகிறேன். ஆனுல் இத்தனை நாளாய் அவள் மனத்தைத்தொட நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீண்தான். அவளால் உங்களை மறக்க இயலவில்லை. மிஸ்டர் சங்கர். அதனுல்தான் உங்களிடம் இப்போ கெஞ்சுகிறேன். என் மணவாழ்க்கை மணம் வீச உதவுங்கள்... ப்ளீஸ்!''

சுதாகர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியபோது அந்தக் கணம் நான் குன்றிப் போனேன்.

பிறகு இருவரும் வீடு போகும்வரை எங்களுடன் மௌனம்தான் பேசிக் கொண்டு வந்தது.

''வா சங்கர்!''

வாசலிலேயே நின்று வரவேற்ருள் மாலா. முகமெல்லாம் பூரிப்பு.

''மிஸ்டர் சங்கர்! நீங்களும் மாலாவும் பேசிக்கிட்டு இருங்கள். நான் கடைக்குப்



போய்ப் பத்திரிகை ஏதாவது வாங்கி வரேன்.

சுதாகர் வீட்டில் நுழைந்ததும் உடனே வெளியேறிவிட்டார்.

தனிமை, அதுவும் மாலாவுடன்....!

மாலா அருகில் வந்து விசாரித்தாள்.

''சங்கர்!. ஏன் இப்படி இளைச்சிட்டாய்? சரியாச் சாப்பிடறதில்லையா?''

''சாப்பிடறேனே!''

''சும்மா சொல்கிறாய். ஆமாம், உனக்கு நான் பெங்களூரில் இருக்கிற விஷயம் தெரியாது? அப்புறம் ஏன் நீ எனக்கு இங்குவருவது பற்றி எழுதக் கூடாது? அம்மா லெட்டர் வந்ததும் அப்படியே ஆகாசத்தில் பறந்தேன். இவரிடம் உன் போட்டோவைப் பல முறை காட்டியிருக்கிறேன். 'ஜாக்கிரதையாய் சங்கரை அழைச்சிண்டு வாங்க'ன்னு சொல்லி அனுப்பினேன். இன்ஃபாக்ட், ராத்திரியெல்லாம் நீ வரப் போவதை நினைத்தபடியே தூங்காமல் முழிச்சிருந்தேன்...''

மாலாவின் நீண்ட பேச்சுக்கு நான் சிறு புன்னகையைப் பதிலாக்கினேன்.

''சரி, வெந்நீர் ரெடி. குளிச்சிட்டு வா... டிபன் சாப்பிடலாம்.''

பக்கெட், பக்கெட்டாய்த் தண்ணீரை விட்டுக் குளித்து பாத்ரூமை விட்டு வெளியே வந்தும் உடம்பைப் போல் மனம் சுத்தமாக வில்லை.

சுதாகர் அப்போது திரும்பியிருந்தார். டிபன் சாப்பிடும்போது பொதுவான பேச்சில் சுதாகர் என் கவனத்தைத் திருப்பி விட்டார்.

நான் ஆபீஸுக்குக் கிளம்பத் தயாரான போது, மாலா எதிரில் வந்தாள்.

''சங்கர் ராத்திரி சாப்பாட்டுக்கு இங்கே தான் வரணும். மறந்துடாதே...'' என்றாள் ஆர்வத்துடன்.

''ஆமாம் மிஸ்டர் சங்கர். ராத்திரி டின்னருக்கு வந்துடுங்க, ப்ளீஸ்...'' என்றார் சுதாகரும்.

தலையாட்டினேன்.

ஆனால் இரவுச் சாப்பாட்டுக்கு அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது ஒரு முடிவுடன், தீர்க்கமாய் இருந்தேன்.

மாலா விதம் விதமாய்ச் சமைத்திருந்தாள். பெண்களின் 'மூட்' சமையலில் வெளிப்பட்டு விடுமே!

''சங்கர்... உனக்குப் பிடித்த வெங்காய சாம்பார். எப்படி இருக்கு?'' என்றாள் மாலா பிரியத்துடன்.

மிகக் கஷ்டத்துடன் ஒரு பொய் சொல்லத் தயாரானேன்.

''எனக்கு இப்பொழுதெல்லாம் வெங்காய சாம்பார் பிடிப்பதில்லை.''

''ஏன் சங்கர்?'' மாலாவின் குரல் தழைந்து விட்டது.

''என் வருங்கால மனைவி — இப்போது என் ஆபீஸில் என் கீழ் வேலை பார்க்கும்



டைப்பிஸ்ட் — ராதிகாவுக்கு வெங்காயமே பிடிக்காதாம்!''

மாலா முகம் சுருங்கிப் போனது.

''எப்போ கல்யாணம்?'' என்றுர் சுதாகர்.

''நான் கிடந்து தவிக்கிறேன். அவள் வீட்டில் தையில் வைத்துக் கொள்ளலாம் என்கிறுர்கள். ஜாதகப் பொருத்தம் எல்லாம் ஓ.கே. ஃபார்மாலிடிக்குப் பெண் பார்க்கும் படலமும் ஓவர்! இன்ஃபாக்ட் தினம் ராதிகா வீட்டில்தான் நான் சாப்பிடுகிறேன். தங்குவது கூட அவள் வீட்டு மாடி அறையில் தான். ராதிகா ரொம்ப இன்டலிஜென்ட் கேர்ல். நன்ருய்ச் சமைப்பாள், பாடுவாள், பார்க்கவும் பேரழகியாய் இருப்பாள். நான் ரொம்ப அதிருஷ்டசாலி!''

நான் முடித்தபோது மாலா அங்கு இல்லை. ஆனுலும் மீண்டும் நான் தொடர்ந்தேன்.

''மிஸ்டர் சுதாகர்! ஒரு வாரம் நான் எப்படித்தான் ராதிகாவைப் பிரிந்து இருக்கப் போகிறேனே, எனக்கே என் பேரில் நம்பிக்கை இல்லை. அவளுக்கும் என்னைப் பார்க்காமல் நிமிஷ நேரம் கூட இருக்க முடியாது.''

மாலா முகத்தைத் திருப்பிக் கொண்டு போனவள்தான். பிறகு நான் வீட்டை விட்டுப் புறப்படும்வரை கண்ணில் தென் படவேயில்லை.

திரும்பவும் திருச்சி புறப்படும் தினம். பெங்களூர் சிடி ஸ்டேஷனில் ஐலண்ட் எக்ஸ்பிரஸ் முதல் வகுப்பில் ஏறுகிறேன்.

சட்டென்று ஜன்னல் வழியே திரும்பிப் பார்க்க அங்கே சுதாகர்.

என் கைகளை ஜன்னல் கம்பிகளினூடே இறுகப் பற்றிக் கொண்டு சுதாகர் கண்கள் பனிக்கச் சொன்னுர்:

''தாங்க்யூ மிஸ்டர் சங்கர். உங்கள் வருகையில் மாலா முற்றிலும் மாறிவிட்டாள். இத்தனை நாள் என்னை உதாசீனப்படுத்தியதற்கு மன்னிப்பும் கேட்டு விட்டாள்.''

நான் சிரமப்பட்டுச் சிரித்தேன்.


ரயில் கூவியது.

''குட் பை சங்கர்! மேரேஜ் இன்விடேஷன் அனுப்ப மறந்துடாதீங்க....''

சுதாகர் தலை மறையும்வரை ஜன்னல் வழியே கை அசைத்துவிட்டு யாருமில்லாத அந்தத் தனிக் 'கூபே'யில் விசித்து அழத் தொடங்குகிறேன்.

மாலாவிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுவிட்டு நாளை திருச்சியில் ஆபீஸ் போனதும் என் கீழ் வேலை பார்க்கும் அந்த டைப்பிஸ்ட் ராதிகாவிடம் இப்படிச் சொல்லி விட ஒரு முடிவும் எடுக்கிறேன்.

''ராதிகா... அன்று நீ என்னைக் காதலிப்பதாகச் சொன்னபோது நான் பதில் சொல்லாமல் நழுவினேன். இன்றைக்கு நான் உடனடியாய் உன்னிடம் வேண்டுவதெல்லாம் விரைவில் நம் கல்யாணத்தை முடிக்க இருவரும் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்பதுதான்.''



மவுனயுத்தம்

ஒரு கர்ச்சீப் வாங்கக்கூட நண்பன்
சங்கரை யோசனை கேட்கும்
(ஆருயிர், நக-சதை, பூவும் மணமும்)
ரவீந்தர், குடி போதையில்
நினைவின்றி நண்பனின் மனைவியைக்
கெடுத்துவிட்டு அதை அவனிடம்
சொல்லாமல் இருப்பாஞ?
சொல்லாததால் கதை
இடைவேளைக்குப் பின் சூடுபிடிக்கிறது
மானம் பெரிதென மனைவி (ரூபா)
உயிர்விட, சங்கர், ரவீந்திரனின்
புதுமண வாழ்வில் புகுந்து மவுனமாய்
ஒரு கல்க்குக் கலக்க, தன்
புது மனைவியைச் சந்தேகப்பட்டு
ரவீந்தர் புழுங்க... கதை வளர்கிறது.

தன் உயிர் நண்பனின் மனைவி
சாவுக்குத் தானே காரணமாய்
இருந்துவிட்டு உடனே எப்படித்
திருமணம் செய்து கொள்ள முடியும்
ரவீந்தரால்? வெலவெலக்கும் கதை.

சங்கர் ரூபா காதல்: ஆபீஸிலேயே
போனில் பேசிக் கொள்வதும்,
புத்தகம் மாற்றிக் கொள்வதும்
என்று அழகாய் ஆரம்பிக்கிறது.
சங்கர் பெண் கேட்கப் போய்
பயந்து வீட்டுக்கு அட்வான்ஸ்
கொடுத்து வருவது சுவையான இடம்.

ஆபீஸில் ஆண்டுவிழா என்று கூறி
அரைகுறையாய் சீமா குரூப்
டான்ஸ். பட்டும் படாத விரசமாய்
நகைச்சுவைக் காட்சிகள்.
ரவீந்தர் கிடைக்காமல் சமாளிக்கப்
பட்ட சாமர்த்திய சண்டைக்
காட்சி.

சங்கர் கொஞ்சம் வேகமாய்ப்
பேசலாம் வேகமாய் இயங்கலாம்.
ரூபா — மதிப்பு இறங்கு முகம்.
ரவீந்தர் முன்னேற்றம். சத்யகலா—
இதைவிடச்—செய்ய முடியாது.
துல்லியமான மல்லி தயாளன்.
மற்றபடி மவுனமாய் இருப்பதே
உத்தமம்!

—நளினி சாஸ்திரி



பாரதி குவிஸ்

பாரதி நூற்றாண்டு விழா நெருங்குவதை யொட்டி மாணவர்களுக்கு ஒரு க்விஸ் போட்டி நடத்தியது கல்கி. இதற்கு ஒத்துழைப்புத் தந்தது பாரதி கலைக் கழகம். இதன் தலைவர் நாளெல்லாம் பாரதி நினைவிலேயே மூழ்கிக் கிடக்கும் திரு இரா. சுராஜ்.

சென்னைக் கல்லூரிகளில் ஆறு, சீட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு கல்லூரி சார்பிலும் ஒவ்வொருவர் வீதம் ஆறு மாணவமாணவியர் 'பாரதி க்விஸ்' நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திரு இரா. சுராஜ் வினா—விடை நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்தார். சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில் இந்நிகழ்ச்சி 12-3-81 மாலை நடைபெற்றது.

பல எழுத்தாளர்கள் பாரதி அன்பர்கள் குழுமி நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

பங்கேற்ற மாணவ மாணவியர்:

1. திரு ஆ. பாலகிருட்டிணன், பச்சையப்பன் கல்லூரி, சேத்துப்பட்டு
2. குமாரி கல்பனா வைஷ்ணவா பெண்கள் கல்லூரி, சென்னை-44
3. குமாரி மாலா விக்கி கண்ணன் எத்திராஜ் கல்லூரி, எழும்பூர்.
4. திரு ஜி. ரவிசங்கர் ஏ.எம். ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம்.
5. திரு பரமேஸ்வரன் விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்.
6. திரு எஸ்.—ராமச்சந்திரன் வைஷ்ணவா ஆண்கள் கல்லூரி, அரும்பாக்கம்


கேள்விகள் :

1. பாரதியார் பிறந்த தேதி, மாதம், வருடம் என்ன?
   (சரியான பதிலை மாலா அளித்தார்.)
2. பாரதியாரின் 'ஞான குரு' யார்?
   (கல்பனா சரியான விடையளித்தார்.)
3. பாரதியாரின் அரசியல் குரு யார்?
   (இதற்கான பதிலைக் கூறியவர் ரவி சங்கர்.)
4. பாரதியாரின் கண்ணன் பாட்டை முதலில் வெளியிட்டது யார்?
   (பரமேஸ்வரன் சரியான விடையளித்தார்.)
5. நமது நாட்டின் தந்தையை மகாகவி எப்படிப் போற்றினார்?

✕ எட்டயபுரம் பாரதி மணிமண்டபம்
✕ திருவல்லிக்கேணியில் பாரதி வசித்த வீடு
படம்: ரா. அ. பத்மநாபன்



'இலக்கிய புனருத்தாரணம்' என்று ஒரு புதுப் பத்திரிகையைத் துவங்குவதற்காகப் பிரபல எழுத்தாளர் ஏகாம்பரம், பாங்க் ஒன்றை அணுகிப் பணம் கடன் கேட்டார்; கிடைக்கவில்லை. அந்தக் கோபத்தில் சரசர வென்று பாங்குகளைத் தாக்கிக் கட்டுரை எழுதினார். அதை இங்கு தருகிறோம். எழுத்தாளர் ஏகாம்பரத்தின் கருத்துக்கள் ஆசிரியரின் கருத்துகள் அல்ல. பார்க்கப் போனால் அவை ஏகாம்பரத்தின் கருத்துக்களும் அல்ல!



ஹும், இந்த பாங்குகள்!

உலகில் எத்தனையோ கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் முக்கியமான ஒன்றான 'பாங்க் இனப் பெருக்கக் கட்டுப்பாடு' இதுவரை வராதது ஆச்சரியத்தையும் பயத்தையும் ஏற்படுத்துகிறது.

இன்று மூலைக்கு மூலை பாங்குகள் வந்துவிட்டன. சினிமாக் கம்பெனிகளைவிடப் பாங்குகள் பெரிதாக விளம்பரம் செய்கின்றன. உங்களை வருந்தி வருந்தி அழைக்கின்றன. எதற்கு? பண உதவி அளிக்க. ஆனால் ஒரு ரூபாய் கடன் வாங்க ஒன்பது ரூபாய்க்குக் 'கியாரண்டி' தரவேண்டும்.

குறைந்தவட்டிவிகிதம் என்று சின்னதாகப் பொடி எழுத்தில் போட்டு விட்டால் வட்டி குறைவாகி விடுமா?

ஒரு காலி மனை இருந்தால் அங்கு கட்டிடம் கட்டக் கடன் கொடுக்கிறது பாங்க். ஆனால் அதில் தெருவைப் பார்த்தபடி வசதியான முறையில் உள்ள போர்ஷனை பாங்கிற்கு வாடகைக்குக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி விடுகிறார்கள். 'இன்றைய காலி மனை; நாளைய பாங்க்' என்ற புதுமொழி விரைவில் வந்துவிடும்.

இப்படி பாங்குகள் ஒருவித ஃபாமிலி பிளானிங் இல்லாமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. இது நல்ல அறிகுறியா என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

''நாங்கள் வெற்றிலை பாக்குக்கடைகூடக் கடன் கொடுக்கிறோம்'' என்று ஒரு பாங்க் அதிகாரி பெருமையாகச் சொன்னார். நல்லது. ஆனால் வெற்றிலை பாக்குக் கடைகள் வைக்க இடம் எங்கு இருக்கிறது. அங்கெல்லாம் பாங்குகள் வந்து விட்டனவே! இதற்கு என்ன பதில்?

போகட்டும், நம்முடைய பணத்துக்கு இத்தனை சதவிகிதம் வட்டி கொடுக்கிறோம் என்று 'பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை' டைப்பில் போடுகிறார்களே, அவர்கள் கொடுக்கும் கடனுக்கு எவ்வளவு வட்டி கேட்கிறார்கள் என்றும் போடக் கூடாதா?

பாங்குகளின் மனப்பாங்கு மாற வேண்டும். (சிலேடை நயத்தைக் குறைந்தபட்சம் கி.வா.ஜ. வாவது கவனிப்பார் என்று நினைக்கிறேன்.)


வங்கிகளில் கடனை வாங்கி விட்டால், வங்கிகள் நம்மைப் பொறுத்தவரை உயிரை வாங்கிகள் ஆகிவிடுகின்றன. ரத்தத்தை உறிஞ்ச ஸ்ட்ராவைத் தேட ஆரம்பித்து விடுகின்றன. சில சமயம் நமக்கு ஷூரிட்டி போட்டவர் ரத்தத்தையும் சேர்த்து உறிஞ்சுகின்றன. (நமக்கு: ஸ்ட்ரா; அவருக்கு எக்ஸ்ட்ரா!) இதன் காரணமாக மக்கள் பிளட் பாங்க் பக்கமே போகப் பயப்படுகிறார்கள். பாங்க் என்ற சொல்லே பீதியைக் கிளப்புகிறது. (உடனடியாக ப்ளட் பாங்கின் பெயரை மாற்றினால் மக்கள் பயம் நீங்கி ரத்த தானம் செய்ய வருவார்கள்!)

பாங்குகளில் பாஸ் புஸ்தகம் கொடுக்கிறார்களே, அதற்கு ஏன் பாஸ் புக் என்று பெயர்? பொதுவாகப் பலரது புத்தகத்தில் 10, 20 என்றுதான் இருக்கும். 35 இருந்தாலாவது அதைப் பாஸ் புக் என்று சொல்லலாம். மற்றபடி எல்லாம் 'ஃபெயில் புக்'குகள்தான்! (சில சமயம் 'பாங்கு' புத்தகங்கள் 'ப்ளாங்க்' புத்தகங்கள் என்று சொல்லும்படி உள்ளன.)

ஆகவே, அருமை பாங்காளர்களே, உடனடியாக உங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொண்டு இலக்கியப் பத்திரிகைகள் தோன்ற பண உதவி செய்யுங்கள். இல்லாவிடில் இதை விடக் காரமான கட்டுரைகள் எழுதி ஒரு லட்சம் காப்பி அச்சடித்து நாடெங்கும் விநியோகம் செய்து விடுவேன். குறைந்தபட்சம் இதற்கு ஆகும் செலவுக்காவது கடன் கொடுப்பீர்களா?

இதற்குக் கடன் கொடுப்பதை விட 'இலக்கியப் புனருத்தாரண'த்துக்குப் பண உதவி தந்தால் பாங்குகளும் பிழைக்கும், இலக்கியமும் தழைக்கும்!

—பி. எஸ். ஆர்.



சுவிட்சர்லாந்துநாட்டின்மந்திரி சபையில் ஒரு அங்கத்தினருக்கு என்ன மதிப்பு உண்டோ அதே மதிப்புத்தான் அனைவருக்கும். பிரதம மந்திரி என்ற பதவி யாருக்கும் இல்லாது அனைவரும் பொறுப்பு வகிக்கும் இம் முறை அம் மக்களின் சரித்திரத்தில் ஊறிய ஒரு சிறப்பு அம்சமாகும்.

- பி. நாராயணன்

கஸ்தூரிக்கு ஏற்பட்ட குற்ற உணர்வு சடுதியில் அடங்கிவிடவில்லை. எல்லா விஷயத்திலும் நல்ல விதமாக நடந்து கொள்ளும் ஒரு பெண்ணைத் தானே நன்கு கவனித்து மனத்துக்குள்ளே கணிப்புச் செய்து கொண்ட பின்னரும் — கேட்பார் பேச்சைக் கேட்டுச் சந்தேகித்துக் கலவரப்பட்டது எத்தனை ஒரு பெரிய குற்றமாகும்?

பெண் உரிமைக்காகப் போர்க் கொடி ஏந்துகிறவள் — போயும் போயும் ஒரு பொறாமைக்காரியின் பேச்சைக் கேட்டுத் தன் மருமகளைப் பற்றித் தப்பாக எண்ணிக் கொண்டு விட்டாளே..., அவள் செய்தது ரொம்பத் தவறு.

மனச்சாட்சியின் உறுத்தலைத் தாளமுடியாது, அந்தத் தவறுக்கு என்ன ஈடு செய்தாலும் போதாது என்ற நினைவுடன் அவள் தினமும் ஏதாவது ஒரு சிறு பரிசை வரும் வழியில் தன் மருமகளுக்காக வாங்கி வந்தாள்.

"திராட்சைப் பழம் உனக்குப் பிடிக்கும்னு தெரியும். வண்டிக்காரன் பச்சைத் திராட்சையை மலைபோல் குவிச்சுண்டு போறதைப் பார்த்தேன். உடனே காரை நிறுத்தி ஒரு கிலோ வாங்கிண்டு வந்தேன்.''

''அத்தை! என்னத்துக்கு உங்களுக்கு இந்தத் தொந்தரவெல்லாம்?''—செல்லமாகச் சிணுங்கியபடி பொட்டலத்தை மாதங்கி தன் மாமியாரிடமிருந்து ஆசையுடன்தான் வாங்கிக் கொண்டாள். அவளுக்கு ரொம்பப் பெருமையாகத்தான் இருந்தது. மாமியாருக்கு அவள் மீது இத்தனை அன்பா?

இன்னொரு நாள்...'அகர்வாலில் உனக்குப் பிடிக்குமேன்னு ஜிலேபி கொஞ்சம் வாங்கிக்கிட்டு வந்தேன். ஒண்ணைப் பிட்டு வாயில் போட்டுப் பார்... கரைஞ்சு தேனுக வாயெல்லாம் தித்திக்கும்... உனக்கு இனிப்புப் பண்டம்னு உசிரு என்று கல்யாணத்தும் போதே நான் கண்டு பிடிச்சுட்டேனே!' மிட்டாய்ப் பெட்டியை மருமகள் கையில் கொடுத்துவிட்டுச் சிவந்து போன அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளி விளையாடினுள்.

மாதங்கிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அவள் ஒரு வழியில் மிகவும் கொடுத்து வைத்தவள்.

சொந்த மகளைவிட ஒரு படி மேலான அன்புடன் கஸ்தூரி அவளைக் கவனித்துக் கொள்கிறுளே?

'ஜயந்தி அக்காவுக்குப் புத்தி ஏன் இப்படித் தடுமாறிப் போகணும்? கண் நிறைந்த கணவன் —ஹர்ஷன் - வசதியான வாழ்க்கை— உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் மாமியார் இப்படி ஒரு நல்ல இடம் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாச்சே?'

தன் அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி அடிக்கடி வியந்து கொண்டாள். ஆனலும் நெஞ்சத்தின் ஒரு மூலையில் தாங்க முடியாத வருத்தம் அழுத்திக் கொண்டுதான் இருந்தது.

தன்மேல் பாசமும் நேசமுமாக இருக்கும் மாமியாரின் மனத்தை நோகச் செய்யக் கூடாது என்று பொறுமையாகத்தான் இருக்க முயன்ருள்.

சிலசமயம் அவளையும் மீறித் துயரம் அவள் மனத்தைக் குலுக்கியது. கல்யாணத்தின் போது ஏற்பட்ட ஒரு கலவரத்தை நிவர்த்திக்கப் பெரியவர்கள் செய்த ஒரு திடீர் மாற்றத்துக்காக ஹர்ஷன் அவளை ஏன் இவ்வாறு தண்டிக்க வேண்டும்?

ஜயந்தியை மணந்து கொண்டிருந்தால் மட்டும் அவன் வாழ்க்கை மிகவும் ஆனந்தமாகவோ அமைதியாகவோ இருந்திருக்குமென்பது என்ன நிச்சயம்?

ஜயந்தி அக்கா நினைத்தபோது கோபத்திலே வெடிக்கும் குணம் கொண்டவளாச்சே? யாரையும் துச்சமாகத் தூக்கி எறிந்துவிடுவாளே? வீட்டிலே எதையும் செய்ய விரும்பாத படு சோம்பேறியாச்சே?

இவையெல்லாம் ஹர்ஷனுக்குத்தெரியுமா?

பெண் பார்க்க வந்தபோது ஒப்பனையில் அழகாகத் தெரிந்த ஜயந்தி அக்காவைப் பார்த்து மயங்கிப் போனுன்.

பெரியவர்கள் ஏற்பாடு செய்தபடி முன்னறையில் உட்கார்ந்து ஒருசில வார்த்தைகள் இருவரும் பேசினுர்கள்.

அவன் போன பின்பு உள்ளே வந்த ஜயந்தி அக்கா அவளிடம் வந்து சொன்னது என்ன என்பது அவளுக்கல்லவா தெரியும்?



அன்று என்ன சொன்னுள்?

''ஸ்டுபிட் ஃபெல்லோ! நான் வேலைக்கு இண்டர்வியூவுக்கு வந்து நிக்கறது போல் கேள்வி மேலே கேள்விகளாகப் போட்டுத் தொலைச்சுட்டான்.

''பாடத் தெரியுமா? பரதம் வருமா? சமைக்கத் தெரியுமான்னு ஒரே தொண-தொணப்பு.

''எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. நானும் பதிலுக்குச் சில கேள்வி களைப் படபடன்னு கேட்டு வைச்சேன்.

''டென்னிஸ் ஆடத் தெரியுமா? ஏதாவது பந்தயத்திலே ஜெயிச்சுக் கோப்பைகள் வாங்கின மகிழ்ச்சியான அனுபவங்கள் உண்டா? கல்லூரி நாட்களில் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?

''உற்சாகமாக அவன் எல்லாத்துக்கும் தலையாட்டினபோது எனக்கு ஆத்திரம் பொங்கிண்டு வந்தது.

''நீஞ்சத் தெரியுமா? ஏதாவது போட்டியிலே கலந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படின்னு ஒரு கேள்வியை எழுப்பினேன். மனிதன் ஆடிப்போயிட்டான்!

'''பந்தயத்தில் கலந்துக்கிற அளவுக்குப் பயிற்சி இல்லே. ஓரளவுக்கு நீச்சல் வரும்' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

'''ஓரளவு என்கிற வார்த்தைக்கு இதில் அர்த்தமே இல்லே. ஆற்றில் இறங்கிட்டு ஓரளவு நீஞ்சத் தெரியும்னு தண்ணி கிட்டச் சொன்னு என்ன நடக்கும்? மூழ்கிப்போய் விடுவீங்க. நீஞ்சத் தெரியும் தெரியாது என்கிற இரண்டில் ஒரு பதில்தான் இதுக்குச் சொல்லனும். கிணற்றை ஓரளவு தாண்டுவேன்னு சொல்லிட்டுப் பாதிக் கிணத்தைத் தாண்டினுல்....?'

''நான் குபீர்னு சிரிச்சுட்டேன். மாப்பிள்ளைப் பையன் முகம் போன போக்கை நீ பார்த்திருந்தால் விழுந்து விழுந்து கூடவே சிரிச்சிருப்பே. பிள்ளையாண்டான் ஒரு பெரிய 'அம்மாக்கோண்டு'ன்னு கேள்வி. அதான் அப்படி ஒரு அசட்டுப் பார்வை...'' என்றுள் ஜயந்தி அக்கா.

மாதங்கிக்கு ஏனே அவள் மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

உரிமை ஒன்றும் இல்லாதபோது ஹர்ஷனை இப்படிப்பரிகசித்து வேடிக்கை பண்ணுகிறவள் நாளைக்கு மனைவி என்கிற அந்தஸ்து வந்ததும் அவனை எப்படி ஆட்டிப் படைத்து அட்டஹாஸம் பண்ணப் போகிறுளோ! ஐயோ பாவம்... இவளது பொல்லாத்தனத்தை யார் அவனிடம் எடுத்துச் சொல்ல முடியும்?...

தனக்குள்ளே ஹர்ஷனுக்காகப் பரிதாபப் பட்டாள்.


அவனுக்கும் அவளுக்கும் இடையே உறவொன்றும் ஏற்படாததற்கு முன்னர்... அந்தப் பெண் யார் என்று ஹர்ஷன் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூட முயலாத அந்தச் சமயம்... மாதங்கி அவனுக்காக எப்படி உருகித் தவித்துப் போனுள்?

ஜயந்தி செய்த அசட்டையைக் கண்டு கோபமடைந்தாள். வருந்தினுள். தனக் கேற்பட்ட அவமானம் போலத் துடித்தாள். ஆனுல் அவன்?

மனைவி என்ற உறவுடன் அவன்வீட்டுக்குள் வந்து விட்டவளுக்கு ஹர்ஷன் தந்த வரவேற்புத்தான் என்ன? தொடர்ந்து அவன் காட்டும் அசட்டைதான் எத்தனை?

எந்தப் பெண்தான் இவைகளை நீடித்துப் பொறுத்துக்கொள்ள இயலும்?

யாரும் வீட்டில் இல்லாதபோது உணர்வுகள் தொய்ந்துவிடும்போது அவள் தனக்குக் கிடைத்திருக்கும் அந்தப் போலியான மண வாழ்க்கையை எண்ணிச் சிலசமயம் கண்ணீர் வடித்தாள். குமுறி அழுதாள். தன்



ளைத் தானே சமாதானம் செய்து கொள்ள வும் முயன்றாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து கஸ்தூரி திரும்பியபோது கையில் ஒரு பார்சலுடன் காரிலிருந்து இறங்கினாள்.

''என்ன அத்தை இது?'' — உரிமையுடன் கடிந்துகொண்ட மாதங்கி ஓடிச் சென்று பிரீஃப் கேஸையும் பார்சலையும் சட்டென்று வாங்கிக் கொண்டாள்.

''ஆபீசிலே வேலை நடுவே — நாளைக்கு உனக்குப் பிறந்த நாளுங்கிற ஞாபகம் திடீர்னு வந்தது. ரொம்பப் பிரமாதமா வாங்கிடலை. ஒரு சின்னப் பரிசு. ஒரு பிரிண்டெட் சாண்டேரி புடவை வாங்கினேன். அவ்வளவுதான். பார்சலைப் பிரிச்சுப் பாரேன்'' உத்தரவிட்டாள் மாமியார்.

ஆழ்ந்த நீல உடலில் ஜரிகைக் கட்டங்கள்; தலைப்பிலும் கரையிலும் பொடிப் பொடியாக அச்சிட்ட பூக்கள்.... உடலோடு ஒட்டிக்கொண்டு விடும்போன்று லேசாக...

''உன் நிறத்துக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னுதான் வாங்கினேன். ரவிக்கைத் துண்டும் பெட்டிக்குள்ளே அடியிலே வச்சிருக்கான் பார்... நாளைச் சாயங்காலத்துக்குள்ளே கொஞ்ச அவசரப்படுத்தினா மூலைக்கடைத் தையற்காரர் தெச்சுக் கொடுத்துடுவார். இப்பவே வேலைக்காரி கிட்டக் கொடுத்தனுப்பு...'' என்றாள் கஸ்தூரி புன்னகையுடன்.

பெரியம்மாவிடம் வந்து அண்டிக் கொண்ட பிறகு எத்தனையோ பிறந்த நாட்கள் வந்து போயின. யாரும் அவைகளைப் பற்றி நினைத்ததில்லை. மருமகள் என்று வீட்டுக்குள் வந்து மாதம் இரண்டு கூட முடிவு பெறவில்லை. எத்தனை அக்கறையுடன் கஸ்தூரி மருமகளின் பிறந்த நாளைப் பற்றிக் கூட விசாரித்து நினைவும் வைத்துக்கொண்டு இருக்கிறாள் — மறக்காது ஒரு பரிசு வேறு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாளே!...

''ரொம்ப நன்றி அத்தை!... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.'' உணர்ச்சி வசப்பட்டுப் போன மாதங்கி தடுமாறினாள்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். நாளைக்குச் சாயங்காலம் நீ இதை உடுத்திக்கொண்டு நாங்கள்ளாம் ஆபீஸிலிருந்து வந்ததும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வா... அதுபோதும். பிறகு நாம எல்லாரும்சேர்ந்து உட்கார்ந்து விருந்து சாப்பிடலாம். இப்பவே சொல்லிட்டேன். நாளைச் சாயங்காலம் வந்ததும் சமையலை எங்கிட்ட நீ ஒப்படைச்சுடணும்...'' மாமியார் வேடிக்கையாகப் பேசினாள்.

மாதங்கி பூரித்துப் போய் விட்டாள். உண்மையில் அவள் அதிர்ஷ்டக்காரி என்பதில் சந்தேகமே இல்லை.

கஸ்தூரி ஒரு மாமியார் என்ற அந்தஸ்துடன் நடந்து கொள்வதேயில்லை.

சொந்தத் தாயார் போல — நெருங்கிப் பழகின ஒரு சிநேகிதியைப் போல் பரிவுடன் நேசத்துடன் — அன்புடன்...

அவளை எப்படித் தாங்குகிறாள்!

இந்த அன்பான மாமியாருக்காக அவள் எத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவள்.

''அப்படியே செய்கிறேன் அத்தை...'' என்று சிரித்துக்கொண்டு பார்சலுடன் உள்ளே ஓடினாள்.

மறுநாள் மாலை அலுவலகத்திலிருந்து வந்து உள்ளே நுழைந்த கஸ்தூரிக்குச் சட்டென்று அந்த எண்ணம் தோன்றியது.

ஹர்ஷனை அவன் போகிற போக்கில் விட்டு வைப்பது சரியல்ல. தாய் என்று அவள் தன் அதிகாரத்தை ஒரு துளியாவது காட்டாது இருப்பது முறையும் ஆகாது என்று நினைத்தவளாக ஒரு முடிவுடன் முன்னறைக்கு வந்தாள்.

அலுவலக உடைகளைக் களைந்து விட்டு முகத்தைக் கழுவித் தன்னைச் சீராக்கிக் கொண்டு வேஷ்டியும் சட்டையுமாக மாடியினின்று கீழே இறங்கி அங்கு வந்தான்.

''ஒரு சின்ன உபகாரம் பண்ணுவியாப்பா! காப்பியைக் குடிச்சுட்டு மாதங்கியை நீ நம்ப பிள்ளையார் கோவில் வரை காரில் அழைச்சிக்கிட்டுப் போயிட்டு வா.. எனக்கு


1607ல் ஷா அப்பாஸ் இந்தியாவின் மீது படையெடுத்தபோது ஷா - அப்பாஸை வென்றவன் ஜஹாங்கீர். தோல்வி கண்ட ஷா-அப்பாஸ் தனது தோல்வியை மறைக்கத் தந்திரம் ஒன்றைக் கையாண்டான். தான் ஜஹாங்கீருடன் நட்புப் பாராட்டியே வருவதாகவும் தனக்குத் தெரியாமல் படையெடுப்பு நடந்து விட்டதாகவும் - தன் வீரர்களில் பெரும்பாலோர் தற்போது கூட ஜஹாங்கீருடன் நட்புப் பாராட்டி வருவதாகவும் தனக்குத் தெரியாமல் ஒரு சில வீரர்கள் ஜஹாங்கீருடன் போரிட்டதைத் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் முஸ்லீமாகிய நான் மற்றொரு முஸ்லீமான ஜஹாங்கீருடன் ஒற்றுமையாக இருக்க விரும்புவதாகவும் ஜஹாங்கீருக்கு ஓலை அனுப்பினான்.

ஜஹாங்கீர், ஷா-அப்பாஸின் புத்தி கூர்மையை மெச்சினான்-தோல்வி தன்னைத் தழுவி இழிவு உண்டாக்கக் கூடாது என்பதற்காக ஷா-அப்பாஸ் கையாண்ட சாணக்கியத்தைப் பாராட்டினான்!

அதுமுதல் மெச்சத்தக்க செயல்களை யார் செய்தாலும் ஜஹாங்கீர் ''ஷா-அப்பாஸ்'' ''ஷா-அப்பாஸ்'' என்று பாராட்டத் தொடங்கினான்!

அதுதான் காலப்போக்கில் ''சபாஷ்'' என்று மாறி இப்போது நடைமுறையில் இருக்கிறது!

- ப. மூர்த்தி



நெல்லை சங்கீத சபாவில் நாடகப் பிரியாவின் 'மகாபாரதத்தில் மங்காத்தா' நாடகம். மாத்திரைகளை விழுங்கி மகாபாரதக் காலத்திற்கு வந்து விட்டார்கள். நாடக நிகழ்ச்சிகளை ஒருவர் அடிக்கடி 'பிளாஷ்' அடித்து போட்டோ பிடித்துக் கொண்டிருந்தார். தர்மராஜனாக நடித்த எஸ். வி. சேகருக்கு ஒரே எரிச்சல். ''ஏனய்யா, மகாபாரத காலத்திற்கே வந்தாலும் நீர் விடமாட்டீர் போலிருக்கிறதே. நீரும் ஏதாவது மாத்திரை கீத்திரை சாப்பிட்டுத் தொலைத்தீரா?'' என்று அவர் கத்த அரங்கில் ஒரே கலகலப்பு.



—பாரத்வாஜன்

வீட்டிலே ஒரு முக்கிய காரியம் இருக்கிறதாலே நான் அவளைக் கூட்டிக்கிட்டுப் போக முடியலை'' என்றாள் கஸ்தூரி.

''நான் அவசியம் போகணுமாம்மா...'' ஹர்ஷன் கேட்டபோது தாய் அவனை உற்றுப் பார்த்தாள்.

''இன்னிக்குக் கோவிலில் விசேஷம். கூட்டம் வழிஞ்சுண்டிருக்கும். அவள் இங்கேயிருந்து நடந்து போய்க் காத்திருந்து அர்ச்சனையை முடிச்சுண்டு திரும்பறதுக்குள்ளே நல்லா இருட்டிவிடும். இப்பொவெல்லாம் இந்தப் பக்கம் இருட்டு வேளையிலே பெண் தனியா நடக்கிறது அத்தனை நல்லதில்லேங்கறாங்க. பிறகு உன் இஷ்டம்'' என்றாள் அழுத்தமாக.

பிடரியைப் பிடித்து யாரோ வேகமாகத் தள்ளிவிட்டது போன்று ஹர்ஷனுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

என்னவானாலும் மாதங்கி அவன் மனைவி.

இருட்டில் தனி வழி நடந்து — அவளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால்?

நெருப்பாக மனத்தை ஒரு நூதன உணர்வு சுடுவதை உணர்ந்தான்.

அவசரமாகக் காப்பியைப் பருகிவிட்டுக் கார் சாவியுடன் வெளியேறினான்.

அவர்கள் இருவரும் தனியே வெளியே செல்வது அதுதான் முதல் தடவை. அந்த அனுபவம் அவளுக்கு மிகவும் இனித்தது.

கையில் தேங்காய்ப் பழத் தட்டுடன் புதுப் புடவை சரசரக்க நடந்து வந்து காரில் அவனருகே ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

கோவிலைச் சமீபிக்கும்வரை அவன் பேசவில்லை. ஆனாலும் அவன் மனத்திலே ஏற்பட்ட அந்தப் புதுமையான உணர்வின் இனிமையை அவனால் ஒதுக்கிடவும் முடியவில்லை.

''ஆமாம்! இன்னிக்கு என்ன விசேஷம்?'' மெல்லக் கேட்டுவிட்டு அவளை லேசாகத் திரும்பிப் பார்த்தான்.

காற்றுவாக்கில் அவளது கூந்தலிலிருந்து முகத்தில் மோதிய மல்லிகையின் மணம் சுகமாகத்தான் இருந்தது. வழக்கமான முரட்டுத்தனமில்லாது மென்மையானதொரு புன்னகை. அவன் முகத்திலே படர்ந்து ஒளி விட்டதைக் கண்டு மாதங்கிக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

அவளைப்பற்றி ஒருசிறிதளவு உணர்விலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவள் பார்த்தது உண்மையா?

''இன்னிக்கு என் பிறந்த நாள். அத்தை அதுக்காக எனக்கு இந்தப் புடவை ரவிக்கை இதுகளைப் பரிசாக வாங்கித் தந்திருக்காங்க. விநாயகருக்கு அர்ச்சனை செயதுட்டு வரச் சொன்னாங்க... கேட்க மாட்டேன்னு பிடிவாதமாச் சமையலை அவங்க இன்னிக்குப் பிடிச்சிக்கிட்டாங்க...''

''இந்தப் புடவை உனக்கு ரொம்ப அழகா இருக்கு....'' — காரிலிருந்து இறங்கிக் கோவிலுக்கு முன் நின்றவளிடம் மெல்லிய குரலில் சொன்னான்.

முகம் சிவந்து போன மாதங்கி நெஞ்சு மகிழ்ச்சியில் படபடவென்று துடித்துக்கொண்டது.

இது உண்மையா? அவளது புருஷன் ஹர்ஷன் அவளிடம் அப்படி அன்பாகப் பேசுகிறானா?

''தாங்க்யூ!...'' மெலிதாச் சிரித்துக் கொண்டு அவனுடன் கோவிலுக்குள் மகிழ்ச்சியுடன் சென்றாள்.

அர்ச்சனையை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும்வரை அவன் மீண்டும் மௌனமாக இருந்தான்.

ஆனாலும் அவள் மனம் இன்ப வசத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

காரேஜில் காரை வைத்துவிட்டு இறங்கியவன் பிரசாதத் தட்டை எடுத்துக் கொண்டான்.

''உன் பிறந்த நாளுக்கு என் வாழ்த்துகள்! அம்மா அழகான ஒரு புடவை எடுத்துக் கொடுத்திருக்காங்க... நான் ஒண்ணும் உனக்குத் தரலையே?...'' அவன் உல்லாசமாகப் பார்த்து உரத்த குரலில் சிரித்தான்.

'இந்தச் சிரிப்பு ஒண்ணே எனக்கு இந்த உலகத்தையே நீங்க பரிசாக் கொடுத்த மாதிரி ரொம்ப மகிழ்ச்சியா யிருக்கு...' சொல்ல வேண்டும் போன்று நா துடித்தது அவளுக்கு.

''அத்தை வேறு... நீங்க வேறு... யார் கொடுத்தாலும் ஒண்ணுதானே?...'' சாமர்த்தியமாகக் கேட்டுவிட்டு, ''தட்டை இப்படிக் கொடுங்க... அத்தைக்கு முதல்லே பிரசாதத்தைக் கொடுத்து வணங்கிட்டு வரேன்'' சிரித்துக்கொண்டே அவனுடன் ஜோடியாக உள்ளே சென்றாள்.

தனக்கு ஒரு வருங்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவளது நெஞ்சு கட்டுக்கடங்காது மகிழ்ச்சியுடன் தீவிரமாகத் துடித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)



● நடிகை: 17வது பிறந்த நாளுக்குக் கட்டாயம் வந்துடுங்க.

நிருபர்: அடேடே! உங்களுக்கு அதற்குள் வயது 17 ஆகிவிட்டதா?

நடிகை: அட எனக்கில்லையா. எங்க அம்மாவுக்கு!

— தி. சீ. லட்சுமி

● மார்ச் 17ந் தேதி அயர்லாந்து தேசிய தினம். மே 17ந் தேதி நார்வே தேசத்தின் தேசிய தினம்; ஜூலை 17ந் தேதி ஆப்கானிஸ்தான் குடியரசு தினம்; ஆகஸ்ட் 17ந் தேதி இந்தோனேஷியா சுதந்திர தினம்; டிசம்பர் 17ந் தேதி பூட்டான் தேசிய தினம்.

தங்க. ராதாகிருஷ்ணன்



சூடாத புது மலராய்
  சுற்றிவரும் வயது பதினேழு
ஆடிக் கொண்டிருக்கும் நாகமதை
  அடிமிதிக்கும் வயது பதினேழு
வாடாத ஆசைகளை வளர்ந்து
  வரும் வயது பதினேழு
கூடாத சோம்பலை யெல்லாம்
  கூட்டி உதறும் வயதுபதினேழு.

வெற்றியை என்றும் நாடும்
  வீழாத வயது பதினேழு
சுற்றித் திரியும் எண்ணமதை
  சுத்தமாய் விடும் வயதுபதினேழு
வற்றிய பாசம் தன்னை
  வளர்த்துவிடும் வயது பதினேழு
பற்றிய ஆசை பலவற்றை
  பாங்காய் நிறுத்தும் வயதுபதினேழு.

விண்ணுடாய் உலகை ஆக்க
  விரும்புகின்ற வயது பதினேழு
உணவை விரும்பி உண்ணுமலே
  உறுதி வாய்ந்த வயதுபதினேழு
சுண்ணம் பூசினற்போல்
  சுத்தமேனியாய்த்திகழும் பதினேழு
வண்ணமாய் விளங்கும் வயது பதினேழு
  வாழிய வாழிய வாழியவே.

—பி. வத்சலா தேவி

● கார் வியாபாரி தன் பதினேழு அம்பாசிடர் கார்களைத் தன் மூன்று மகன்களுக்கும பங்கிட்டுக் கொள்ள உயில் எழுதி வைத்து விட்டு இறந்து விட்டான். உயிலின்படி மூத்த மகனுக்குக் கார்களில் பாதி எண்ணிக்கையும், இரண்டாவது மகனுக்கு மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையுள்ள கார்களும், மூன்றுவது மகனுக்கு ஒன்பதில் ஒரு பங்கு எண்ணிக்கையுள்ள கார்களும் கிடைக்கும்.

மூவரும் உயிலின்படி கார்களை எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்று புரியாமல் அவ்வூர்த் தலைவனிடம் சென்று கேட்டார்கள்.

அவர் பதினேழு கார்களையும் தம் வீட்டின் முன் கொண்டு வந்து நிறுத்தச் சொன்னார். பிறகு தம் காரையும் அதனுடன் நிறுத்தி 18 ஆக்கினர். பின்பு உயிலின்படி 18 கார்களில் பாதி எண்ணிக்கையான ஒன்பது கார்களை மூத்த மகனுக்கும், மூன்றில் ஒரு பங்காகிய ஆறு கார்களை இரண்டாவது மகனுக்கும், ஒன்பதில் ஒரு பங்காகிய இரண்டு கார்களை மூன்றுவது மகனுக்கும் கொடுத்தார். மூவருக்கும் பதினேழு கார்களைக் கொடுத்த பிறகு மீதிமுள்ள தன்னுடைய காரைத் தானே எடுத்துக் கொண்டார்!



● கேள்வி: 17க்கும் ரேஷன் கடைக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?

பதில்: ஆங்கில எழுத்து வரிசையில் 17ம் எழுத்து.

— கி. சாரங்கன்



14



ஹர்ஷன் அப்போதுதான் கவனித்தான். முன் அறை மேஜை மேல் எப்போதும் வைக்குமிடத்தில் அவன் பெயருக்கு வந்த கடிதங்களை மாதங்கி ஒழுங்காக அடுக்கி, பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்திருந்தாள். சாதாரணமாக அவனுக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் கம்பெனி முகவரிக்கே வந்துவிடும்.

நெருங்கிய நண்பர்கள் யாராவதுதான் அவனது வீட்டு முகவரிக்கு எழுதுவது வழக்கம்.

அநேகமாக அவனுக்கு வீட்டைத் தேடி வருபவை எல்லாம் அவனுக்குப் பழக்கமான 'டிரை கிளீனிங்' கடை 'பில்'தான்.

சில நண்பர்களின் கடிதங்கள், திருமண அழைப்பிதழ்கள், நிதி திரட்டும் சங்கங்கள் விடுக்கும் வேண்டுகோள் கடிதங்கள் ஆகியவற்றைப் பிரித்துப் படித்துவிட்டு அப்பால் வைத்த பின், அந்தப் பழுப்பு வண்ண உறையைக் கையில் எடுத்தான். அவனுக்கு வியப்பு மேலிட்டது.

பழக்கமில்லாத கையெழுத்து — அவசரமாகப் பென்சிலால் கிறுக்கிவிட்டது போன்ற முகவரி.

யாராக இருக்கலாம்?

உறையைப் பரபரப்புடன் பிரித்துக் கடிதத்தை எடுத்தான். அவனது ஊகம் ஓரளவுக்குச் சரியாகவே இருந்தது.

கையெழுத்தில்லாத ஒரு மொட்டைக் கடிதம்.

''அன்புள்ள நண்பரே!

உங்கள் நன்மையைக் கருதி உங்களுக்கு ஓர் உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களை மணந்து கொண்டிருக்கும் மாதங்கி என்ற பெண், எனது நண்பனுல் காதலித்துக் கைவிடப்பட்டவள். கல்லூரி நாட்களிலேயே இருவருக்குள்ளும் நெருங்கிய தொடர்பிருந்தது. என் நண்பன் அவள் மீது மட்டற்ற அன்பு வைத்திருந்தது உண்மை. ஆனுல் அவள் தனக்குத் துரோகம் செய்வதை உணர்ந்து, மனம் வெகுண்டுபோய், ஒரேயடியாக உதறிவிட்டான்.

பலருடன் பழகிவிட்ட போதிலும் ஒன்றுமறியாத சாதுபோல் நடிப்பதில் அவள் கைதேர்ந்தவள். நீங்கள் நல்ல பெண் என்று நம்பி ஏமாந்து போகிறீர்களே என்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. உங்களை எச்சரிக்கவே இந்தச் சில வரிகள்.

உங்களது நலம் கோரும்நல்லதொரு
நண்பன்.''

உடல் முழுவதும் 'ஜிவ்'வென்று ஆத்திரம் அனலாகப் பரவியதை உணர்ந்தான் ஹர்ஷன்.

மொட்டைக் கடிதத்தை நம்புவதா? ஏன் நம்பக் கூடாது? முப்பத்தைந்து பைசா செலவழித்துக் கடும் சிரத்தையாக ஒருத்தன் காரணம் இல்லாமல் எழுதுவானு?

தயானந்தருடைய குடும்பத்தில் எவருமே ஒழுங்கானவர்கள் இல்லையா?

மூத்தவள் காதலனுடன் கல்யாண சமயத்தில் ஓடிப்போனுள். அதை ஈடுகட்டத் தான், இந்த மனிதன் தன் தம்பி மகளை என் தலையில் கட்டிவிட்டிருக்கிருரோ? அயோக்கியப் பதர்....

இந்த அம்மாவும் ஒரு படு முட்டாள். சிரித்துக் குழந்தை போல் பேசி, ஓடியாடி உழைக்கிருளே மருமகள் என்று, அவள் போடும் வேஷத்தை நம்பி ஏமாந்து கொண்டிருக்கிருளே!

கோவிலருகில் ஒரு நிமிஷம் என்னையே மயக்கப் பார்த்தாளே... சாகசக்காரி!

நல்ல சமயம் பார்த்துத்தான் இந்தக் கடிதம் வந்து சேர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் நானும் ஏமாந்து போயிருப்பேனே

பற்களைக் கடித்துக் கொண்டான். கடிதத்தை மடித்துச்சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.



விழுந்த மாலை.. லக்ஷ்மி...

"சாப்பாடு தயார். மேஜை மேல் எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன். சாப்பிட வாப்பா" — அம்மா அழைத்தபோதுஉள்ளே எட்டிப் பார்த்தான்.

சாப்பாட்டறை மேஜை மீது புத்தம் புதிய தொரு வெண் விரிப்பின் மேல் ஒரு புறம் பளபளத்த ஸ்டீல் பாத்திரங்களில் விதம், விதமான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. ஓரத்தில் மூன்று பேருக்குச் சாப்பிடத் தட்டுகள் தயாராக இருந்தன.

வண்ணக் கண்ணாடி கூஜாவில் நீர், மூன்று வண்ணக் கண்ணாடித் தம்ளர்கள் — நடுவே பீங்கான் ஜாடிக்குள் ஒரு பெரிய கொத்து ரோஜா மலர்கள்.

பூஜை அறைக் கதவைத் திறந்து வைத்திருந்தாள் கஸ்தூரி. அதனின்றும் கமழ்ந்த ஊதுவத்தியின் நறுமணத்துடன் கலந்து மல்லிகைப்பூ வாசம் வீட்டையே தூக்கிக் கொண்டிருந்தது.

"இப்படி விமரிசையாகப் பிறந்த நாள் ஒரு கேடா இந்தக் கெட்டழிந்து போன மாதங்கிக்கு?" ஆத்திரத்துடன் அவன் கொதித்தான்.

"அங்கேயே ஏன் நிக்கறே? உள்ளே வந்து கை கழுவிட்டு உட்காரு. சாப்பாடு சூடா இருக்கு. ஆறிப் போறதுக்கு முந்திச் சாப்பிடலாம். உனக்குப் பிடிச்ச பால் பாயசம் வச்சிருக்கேன்" — அம்மா புன்முறுவலுடன் மகனைப் பார்த்தாள்.

"பாயசத்தை உன் மருமகள் தலையில் கொட்டி அபிஷேகம் செய். எனக்கொண்ணும் தேவையில்லை. நான் வெளியில் சாப்பிட்டுக்கொள்ளப் போறேன்" எரிச்சலுடன் கத்திவிட்டு, வேகமாக வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டான்.

சில நொடிகளில் காரும் சீறிக்கொண்டு சென்றுவிட்டது. பிரமிப்புடன் நின்று விட்டாள் கஸ்தூரி.

மனைவியோடு ஜோடியாகப் பேசிய வண்ணம் வந்தவனுக்கு இப்போது திடீரென என்ன நேர்ந்து விட்டது? அவளுக்குள் ஒரே கலவரம்.

மாமியாருக்குக் கூட உதவ அருகில் வந்து நின்ற மாதங்கியும், அவனது வார்த்தைகளைக் கேட்டுவிட்டாள்.

சற்று முன் தென்றல் போல் அன்பை அவள் பக்கம் அள்ளி வீசிய ஹர்ஷன் இப்படித் 'திடும்' என எரிமலையாக வெடிக்க என்ன காரணம் இருக்கக் கூடும்?

தாங்க முடியாது அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். பிறந்த நாளுக்கு அழுகையும் கண்ணீரும்தான் அவளுக்குப் பரிசாகத் தர விரும்பினானா?

அவளை இப்படிச் சித்திரவதை செய்ய அவள் செய்த தவறுதான் என்ன? கஸ்தூரி

ஒரே எட்டில் மருமகளை அடைந்து, தன் மார்போடு அவளை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினாள்.

''ஹர்ஷனுக்கு இப்படித் திடீர்னு கோபம் வர என்னவோ நடந்திருக்கணும். அது என்னன்னு முதல்லே நான் கண்டு பிடிக்க முயற்சி செய்யறேன். மாதங்கி! இதபாரு எனக்காக அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரும்மா'' — அவள் சொல்லி முடிக்க வில்லை.

மாதங்கி அவளது அன்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அருகிலிருந்த அவளது அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

கஸ்தூரி குழப்பமும், துயரமுமாகச் சிறிது நேரம் சாப்பாட்டறையிலேயே ஒரு நாற்காலி மீது உட்கார்ந்திருந்தாள். வேகமாக இருட்டிக் கொண்டு வருவதை உணர்ந்து எழுந்து சென்று வாயிற் கதவை அடைத்து விட்டு வந்தாள்.

சாப்பாட்டறை விளக்கைப் போட்டாள். அவள் தன் உடல் அயர்ச்சியைப் பாராது வெகு கவனமாகத் தயாரித்திருந்த உணவு வகைகள் அப்படியே கைபடாது மேஜை மேல் இருந்தன.

படுக்கையறையிலிருந்து மாதங்கி விசும்பி அழும் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

முன்னும் பின்னும் சிறிது நேரம் யோசனையுடன் கஸ்தூரி உலவினாள். அவளது பிள்ளையின் குணத்தைத் தெரிந்து கொண்டிருந்து, தாய்ப் பாசம் கண்ணை மறைக்க, அவள் செய்துவிட்ட தவறு... இப்போது ஒரு பெண்ணின் கண்ணீருக்குக் காரணமாகி விட்டதே? இது நிவர்த்திக்க முடியாத ஒரு சிக்கலாக ஆகிவிட்டதா?

பெற்று வளர்த்து ஆளாக்கி விட்டபோதிலும் அவளுக்குத் தன் மகனது உண்மை ஸ்வரூபம் இன்னும் பிடிபடவே யில்லை. உண்மையில் ஹர்ஷன் அவனது வாழ்க்கையில் மனைவி ஸ்தானத்தில் இருப்பவளிடம் எதை எதிர்பார்க்கிறான்? அவள் மனம் குழம்பித் தவித்தாள்.

சாப்பிடப் பிடிக்காதவளாய், கொஞ்சம் பாயசத்தைத் தம்ளரில் ஊற்றிஎடுத்துக் கொண்டாள். நேராக மருமகளைத் தேடிச் சென்றாள்.

மாதங்கி அருகில் உட்கார்ந்தாள். ''எழுந்திரும்மா. பிறந்த நாளும் அதுவுமா.. இப்படி அழக் கூடாது. இதையாவது

அருள்வாக்கு

அன்னை காட்டும் பரிவு

புத்தாண்டு பிறக்கப் போவதற்கு அறிகுறியாக இயற்கையன்னை தனது மர வர்க்கங்களின் அரச குழந்தைகளான அரசையும் வேம்பையும் முதலில் அடியோடு இலையுதிரச் செய்கிறாள். பிறகு பச்சைத் துளிர்களைத் தழைக்க வைக்கிறாள்.

அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம்செய்து அதனடியே விநாயகரையும் நாகராஜனையும் பிரதிஷ்டை செய்வது தொன்று தொட்ட வழக்கு. பனிக் காலத்துக்குப் பின் இலை உதிரும்போது இந்த மரங்களைப் பார்த்தால் இலையே இருக்காது. பிள்ளையாரும் நாகராஜனும் மரத்தின் நிழற்குடை இல்லாமல் சூரிய வெளிச்சம் தங்கள் மேல் படுகிற மாதிரி இருப்பார்கள். இது இம்மாதிரி ஆகாசம் பார்க்க, சுக உஷ்ணமான சூரிய வெளிச்சத்தை ஆனந்தமாக அனுபவிக்கிற பருவ காலமாகவே இருக்கிறது. மழையிலே குடை வேண்டும். கொளுத்துகிற வெய்யிலில் குடை வேண்டும். கடும் பனிக் காலத்திலும் இரா



வேளையில் சூரியன் இல்லாதபோது ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்க முடியாது. ஆனால் அத்தனை பனியில்லாத இந்த இலையுதிர் காலத்தில் — சிவராத்திரியோடு குளிர் 'சிவசிவா' என்று போய்விடும் என்பார்கள். அப்படிப் பட்ட காலத்தில் — ஸுக உஷ்ணமாக சூரியன் இருக்கிற காலத்தில், பகல், இராப் பொழுது இரண்டிலும் ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்கலாம்.இதை உணர்த்துகிறது போலவே இயற்கை அன்னை இந்தப் பருவத்தில் விக்னேசுவரருக்கும் நாகராஜனுக்கும் சூரியபூஜை செய்கிற மாதிரி மேலே இருக்கிற அரசு, வேம்பு மரங்களின் இலைகளை உதிர்த்து விடுகிறாள். நாகராஜனை சுப்பிரமணிய ஸ்வாமி என்றே சொல்லலாம். தெலுங்கர்கள் சுப்ரமணியர், பாம்பு இரண்டையும் 'சுப்பராயுடு' என்றே சொல்கிறார்கள். ஷஷ்டியில் நாகராஜ பூஜை செய்கிற பழக்க நம் தமிழ் தேசத்திலும் பிராசீனமாக இருந்து வந்திருக்கிறது. ஆதி தம்பதிகளின் முதல் குழந்தைகளான பிள்ளையார், குமாரஸ்வாமி இரண்டு பேருக்கும் இயற்கை அன்னை காட்டுகிற பரிவு, பார்வதி பரமேசுவரர்களின் குழந்தைகளான நம் அத்தனை பேரிடம் காட்டுகிற அன்புக்கு அடையாளமாக இருக்கிறது.


அது நிறைந்த பரிவாக இருக்கிறது. இப்போது சுகோஷ்ணமாக, மித வெப்பமாக இருப்பதால் இவர்களை இப்படிச் சூரிய ஒளியில் உட்கார்த்தி வைத்திருந்தாலும் வஸந்த காலம் வந்தவுடன் சூரியன் கொஞ்சம் உக்ரமானவுடன் அது அவர்களை உபத்திரவப் படுத்தக்கூடாது என்கிற கரிசனம் இயற்கை அன்னைக்கு வந்து விடுகிறது. சூரியன் கடுமையாகும் காலத்தில் துளிர்கள் தழைத்துப் பசுங் குடை பிடிக்கிறாள்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

13 துரதிர்ஷ்டமான எண் என்று வழங்கப்படுகிறது; ஆனால் சிலருக்கு 13 அதிர்ஷ்டமானதாகவும் அமைந்துள்ளது: அந்த அதிர்ஷ்ட சாலிகளில் சிலர்:-

ராஜ்கபூரின் 13 வது தயாரிப்பான 'பாபி' மாபெரும் வெற்றியைக் கொடுத்தது; கிரிக்கெட் உலகில் பிரபல காப்டனான வொரல், மேற்கு இந்திய தீவுகளின் கிரிகெட் குழுவின் 13 வது காப்டனாக விளையாடியவர்; கவிக்குயில் சரோஜினி நாயுடு தனது 13 வது வயதில் 1300 வரிகள் கொண்ட கவிதை ஒன்றை எழுதிப் புகழ் பெற்றார்; பிரபல பாட்ஸ்மெனான கன்ஹாய் டெஸ்டுகளில் அதிக ரன்கள் எடுத்தது தன்னுடைய 13வது டெஸ்டில் தான்; அதுதான் அவருடைய முதல் மூன்று இலக்க டெஸ்ட் ஸ்கோர் ஆகும், பிரபல ஹாக்கி விளையாட்டு வீரரான பல்பீர்சிங் 13 எண் கொண்ட பனியனை அணிந்துகொண்டு அதிக கோல்களை ஒலிம்பிக் விளையாட்டுகளில் போட்டார்.

தொகுப்பு: -ஸ்ரீராஜ்



சாப்பிடும்மா'' வற்புறுத்தி உபசரித்தாள்.

மாமியாருக்கு மரியாதை கொடுக்கும் உத்தேசத்துடன் மாதங்கி, பாயசத்துடன் கண்ணீரையும் கலந்து விழுங்கினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள், எதையோ பேசத் துடிப்பதைப்போல உதடுகள் தவிப்பதைக் கண்ட கஸ்தூரி மனம் உருகிப் போனாள்.

''மாதங்கி நீ மனசிலே நினைக்கிறதை வெளிப்படையாகவே சொல்லிடும்மா. பயப்படாதே'' அவளது கன்னத்தை மெல்ல வருடினாள்.

''அத்தே! என்னைத் திருப்பிப் பெரியம்மா வீட்டுக்கே அனுப்பிடுங்க... அப்புறம்....'' மேலே பேச முடியாது அவள் விம்மினாள்.

கஸ்தூரி வேதனையுடன் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

''பிறகு உங்க பிள்ளைக்குப் பிடிச்ச பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துக்கட்டும் எனக்கு விவாக ரத்து வாங்கித் தந்திடுங்கன்னு சொல்ல நினைச்சே இல்லையா? பிறந்த நாள் அன்னிக்கு இப்படி விநோதமான ஒரு பரிசை மாமியார்கிட்டயே கேட்கிறியேன்னு எனக்கு ரொம்பச் சங்கடமா இருக்கு... உன் நிலையை நினைச்சு நானும் ரொம்ப வருத்தப் படறேன்.''

மாதங்கி தலையைக் குனிந்து கொண்டாள்.

''எங்கேயாவது போய் உனக்குத் தனியே எங்களை விட்டு இருக்கணும்னு ஆசையா இருந்தா ஏற்பாடு செய்யறேன் மாதங்கி, ஆனால், மறுபடியும் உன் பெரியம்மா வீட்டுக்குத் திருப்பி அனுப்ப எனக்கு மனசு இல்லேம்மா. அங்கே போனால், நீ இன்னும் பல கஷ்டங்கள் அனுபவிக்க நேரும்னு தெரியும். எங்கிட்ட இருந்து உனக்கு அலுத்துப் போயிட்டிருக்கலாம். ஆனால், உன் பெரியம்மா கிட்ட 'நீ சிறுமைப்படறதை என் கற்பனையாலே கூட நினைச்சுப் பார்க்க முடியலேம்மா.''

''அத்தை! நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சு கொள்ளக் கூடாது. உங்கள் மேலே நான் பெத்த தாய் போலப் பாசமும் நேசமும் வச்சிருக்கேன். ஆனா நான் இங்கேஇருக்கறது ஒரு முள் போல உங்கள் பிள்ளைக்கு இடைஞ்சலா இருக்கு. மருமகள்னு நான் இந்த வீட்ல கால் வைச்சதுமே தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே என் வரவு பெரிய பிளவை உண்டாக்கிட்டதேன்னு ரொம்ப மன வருத்தப்படறேன். இத்தனையும் மனசில அடக்கி வச்சிக்கிட்டுப் பொறுமையா இருக்கத்தான் முயற்சி செய்தேன். முடியலே. மன்னிச்சுக்குங்கோ. உண்மையைக் கேட்டீங்க சொல்லிட்டேன்.'' கட்டுக்கொள்ளாது 'ஓ'வென்று அழுதாள்.

''கவலைப்படாதேம்மா. உன் பிரியப்படி நீ வேறு எங்கேயாவது நிம்மதியாவாழும்படி ஒரு ஏற்பாடு செய்யறேன். இப்ப எழுந்துவந்து ஒரு வாய் சாப்பாடு, என்னோடு சாப்பிடும்மா. சமைச்ச மீதியை எடுத்து 'பிரிஜ்'ஜில் வச்சுட்டுச் சமையல் அறையை ஒழுங்கு படுத்திட்டுப் படுக்கப் போகலாம். ஹர்ஷன் வீட்டுக்கு எப்ப வேணுமானாலும் வரட்டும். எனக்கு அக்கறை இல்லே. உன்னை அவன் இப்படி இம்சை செய்த பிறகு எனக்குப் பிள்ளை பிறக்கலேனு ஒதுக்கிடணும்னு மனசு விட்டுப் போச்சும்மா.''

''அத்தை!''

''வேண்டாம். அவனுக்காக நீ எதுவுமே பேசாதே. என் பிள்ளை மிகவும் அகம்பாவம் பிடிச்சவன்னு எனக்குத் தெரியும். எத்தனையோ பட்டும் இன்னமும் அவனுக்குப் புத்தி வரலே. எனக்கு உன் மேலே துளிக்கூட கோபமில்லே. ஒரு மாமியார் என்று என் அதிகாரத்தை உபயோகித்து உன்னை நான் இங்கே வற்புறுத்தித் தங்க வைக்க மாட்டேன். ஆனால் கொஞ்ச நாள்தான் என்றாலும், இந்த வீடு நீ வந்ததும் கலகலப்பா இருந்தது. சுத்தமா, அழகா மாறிப் போனது. நீ போன பிறகு மறுபடியும் வீடு இருக்கப் போற நிலையை நினைச்சுப் பார்த்துக் கலங்கிப் போறேன். நான் கொடுத்து வச்சது அவ்வளவுதான்.'' துயரத்துடன் பெருமூச்செறிந்தாள் — அவளது கண்கள் கலங்கிப் போயின.

வெகு நேரம் தூங்காது படுத்திருந்தாள் மாதங்கி. நடு இரவைச் சமீபிக்கும் நேரம் வாயிற் கதவைத் தன் சாவி கொண்டு திறந்த ஹர்ஷன் உள்ளே வருவது தெரிந்தது.

பின்னர் மாடிப் படிகளின் மீது மெல்ல ஏறித் தன் அறையை அடைந்து கதவை மூடியதும் மிகத் தெளிவாகக் கேட்டது.

காலடி ஓசையைக் கேட்டு அவன் தன் கணவன் என்ற அளவுக்கு அவள் அவனைப் புரிந்து வைத்திருந்தாள். ஆனால் அவன்... அவளை ஏனோ புரிந்து கொள்ள மறுக்கிறான். மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டு படுக்கையில் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அவளுக்கு வருங்காலம் என்று ஒன்று இருக்கிறதா? வேதனையினால் அவள் நெஞ்சு கனத்தது.

(தொடரும்)

அன்று இரவு கஸ்தூரியும் வெகு நேரம் உறங்கவில்லை. 'மேற்கொண்டு என்ன செய்வது?' தனக்குள்ளேயே எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென்று பங்களூர்த் தோழி நர்மதாவின் நினைவு வந்தது. பின்னர்தான் மனத்தில் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. விடியற்காலை வேளை உறக்கத்தின் மயக்கத்திலே ஆழ்ந்து போய்விட்டாள்.

பூதற்றமாக விழித்துக் கொண்டு எழுந்த போது பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டதை உணர்ந்து பரபரப்பாக வெளியே வந்தாள். சமையல் அறையில் வழக்கம் போல் மருமகள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.


முன்னறையின் நடுவில் கிடந்த வட்ட மேஜை மேல் ஒரு கடிதத் துண்டு. கண்ணாடி பேப்பர் வெயிட்டின் கீழ்... காற்றில் சலசலத்தது. அவசரமாகப் பிரித்தாள்.

''கம்பெனி விஷயமாக ஹைதராபாத்துக்கு இரண்டு வாரம் போக வேண்டி யிருக்கிறது. ஆபீஸிலிருந்தே இரவு விமானத்தில் போய் விடுவதாக உத்தேசம். என் மனம் இருக்கும் நிலையில் நான் தனிமையாக இருப்பதுதான் உத்தமம் என்று நினைக்கிறேன். திரும்பி வரும்பொழுது வீட்டில் அந்த நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கிளம்புகிறேன். —ஹர்ஷன்.''

தாய்க்கு மகன் அவசரத்தில் கிறுக்கி வைத்து விட்டுப் போன கடிதத் துண்டு அது.

கோபத்துடன் அதைச் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு, அலுவலகத்துக்குக் கிளம்ப ஆயத்தமானாள் கஸ்தூரி.

மேஜை மீது தட்டில் இட்லியும், சாம்பாரும் பரிமாறிவிட்டு, காப்பி டம்ளரை வைத்த அந்தப் பிஞ்சு விரல்களைப்பார்த்தபோது அவள் இதயத்தை யாரோ கசக்குவது போன்றதொரு துன்பம் ஏற்பட்டது. கண் இமைகளைச் சுட்ட நீரைச் சமாளித்



துக் கொண்டாள். அன்பும், அடக்கமுமான மாதங்கிக்குக் கணவனாக வாழ ஹர்ஷனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒதுங்கிப் போகிறானே! ஒழியட்டும்! சிறு வயதிலேயே அனாதையாகிப் பல துன்பங்களை அனுபவித்துவிட்ட அந்தப் பெண் குழந்தைக்குக் கஸ்தூரி தங்க இடம் அளித்து, தாய்ப் பாசம் காட்டி அரவணைப்பதைக்கூட, இந்தப் பாவிப் பயல் தடுக்கிறானே? அவள் மனம் தவியாகத் தவித்தது.

புருஷன் வீட்டுக்குப் போகப் போகிற மகளைப் பிரியவிருக்கும் பெற்ற தாயைப் போலக் கண் கலங்கினாள். மாதங்கியை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் துயரவசப்பட்டுப் போனாள்.

ஸ்நானம் செய்த கூந்தலைக் கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு, பளிச்சென்ற குங்குமப் பொட்டுடன் வீட்டில் வளைய வரும் அவளை... இனி பார்க்க முடியுமா என்ற நினைவே அவளது அடிவயிற்றைப் பிசைந்தது.

''மாதங்கி!.... ரெண்டு மூணு நாள் பொறுத்துக்கொள்ளும்மா... உனக்கு ஒரு நல்ல ஏற்பாடு செய்யறேன். எதுக்கும் நீ உன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கி வைச்சுக்க....'' என்றாள் ஆதரவாக.

அள்ளித் தெளித்த அவசரக் கோலம் போல நடந்த கல்யாணம் அவளுடையது. திருமணமானவுடனேயே மாமியாருடன் புறப்பட்டு வந்துவிட்டவள் — பெரியம்மா சம்பிரதாயத்துக்காகக் கூட புக்ககத்தில் ஏற்றி வைக்க ஒரு காமாட்சி விளக்கோ— பித்தளைத் தட்டோ — ஒரு செம்போ கூட சீராகக் கொடுத்து உதவவில்லை. கல்யாண மண்டபத்துக்கு எடுத்து வந்த பெட்டியில் கொண்டு வந்திருந்தாளே ஒரு பட்டுச் சேலை, இரண்டு நூல் சேலைகள், கொஞ்சம் உள் ஆடை, சோப்பு, சீப்பு, கண்ணாடி... இவை தாம் அவள் கொணர்ந்த சொத்து. மற்றபடி மூக்கு காது யாவற்றிலும் கவரிங் உருப்படிகள்.

இவைகளைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்ள எத்தனை நேரமாகும்?

''அத்தே! பத்தே நிமிஷத்தில் என் மூட்டையைக் கட்டித் தயாராக்கிடுவேன்!'' சோகத்துடன் மெல்லியதாகச் சிரித்தாள்.

விழுந்த மாலை

அவள் சொல்ல நினைத்ததைக் கஸ்தூரி புரிந்து கொண்டு விட்டாள்.

''நீ இங்கே வரும்போது ஒரு பெட்டியும் கொஞ்சம் துணி மணிகளுடன் வந்தவளாயிருக்கலாம். ஆனால் இங்கிருந்து நீ போகும் போது அப்படி உன்னை அனுப்பறதாக எனக்கு எண்ணம் இல்லை. கூரைச் சேலையிலிருந்து நான் நேத்துவரை உனக்கு வாங்கித் தந்த அத்தனையையும் எடுத்துப் பெட்டியில வச்சுக்க. நான் போட்ட நகைகள் எல்லாம் உன்னைச் சேர்ந்தவைதான். ஆனால் அதையெல்லாத்தையும் இங்கே உன் பெயரில் வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில் வச்சுட்டு, சாவியை நீயே கவனமா எடுத்து வச்சுக்கோ. நான் வேலைக்குப் புறப்படு முன், உங்கிட்ட கொஞ்சம் பேசணும். அதனால இப்படி உட்காரு'' என்றாள் கஸ்தூரி.

மாமியாரின் தாராளமான மனத்தைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தாள் அவள். கஸ்தூரியின் எதிரே கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டு ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தாள்.

''பங்களூரிலே என் தோழி ஒருத்தி இருக்கா. விதவையானவள். குழந்தைகள் எதுவுமில்லாத தனி மனுஷி. அவளைப் போல நானும் ஒண்டிக் கட்டையா இருந்திருக்கலாகாதா... என்று இப்ப நினைச்சுக் கொள்றேன். எத்தனையோ பிரச்னைகளைச் சந்திச்சிருக்க வேண்டாமேன்னு அங்கலாய்க்கிறேன். ஹூம்! அதப் பத்தி இப்பப்பேசி என்னபயன்?'' அலுப்புடன் கஸ்தூரி தொடர்ந்தாள்.



லக்ஷ்மி

''மேலே நடக்க வேண்டியதைக் கவனிக்கிறதுதான் புத்திசாலித்தனம். உன்னை, உன் பெரியப்பா வீட்டுக்கு நான் எக்காரணம் கொண்டும் அனுப்பப் போறதில்லே. நீயும் அங்கே போகக் கூடாது. அப்படி எனக்கு ஒரு வாக்குக் குடுப்பாயா மாதங்கி!''

''அத்தே! நீங்க என்னை எங்கே அனுப்பினலும் போகத் தயார். சரித்தானே'' மெல்லிய குரலில் மேஜையைப் பார்த்தபடி சொன்னுள் மாதங்கி. அவளுக்கு அழுகை பொங்கி வந்தது. அவளது திருமணம், இப்படி ஒரு சிக்கலாக மாறும் என்று அவள் சிறிதும் எதிர் பார்க்கவில்லே. திருத்தணியில் அன்று காலே கொட்டு மேள கோஷத்திடையே ஹர்ஷன் அவள் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தபோது அந்த நினைப்பே இல்லே. சுவர்க்க போகத்தை அனுபவிக்கப் போகிருேம் என்ற கனவில் அல்லவா மிதந்தாள்!

''என் தோழி நர்மதா தனி வீடு, சமையலுக்கு ஆள், கார் என்று வசதியா வாழ்கிறவள். தன்னந் தனியாக இருக்கிருேமே என்று குறை. அவள் தனிமையைப் போக்கத் துணையாக இருக்க உன்னை அவளிடம் அனுப்பப் போகிறேன். ஆனல் உன்னல் ஆகப் போகும் சாப்பாடு, மற்ற செலவுக்கு அவளுக்கு மாதா மாதம் பணம் அனுப்பி விடுவேன். என்னதான் சிநேகிதயானாலும் நான் இதுபோல விஷயங்களில் மிகவும் கண்டிப்பும் கருருமாக இருப்பேன். கஸ்தூரி சற்று நிறுத்தினுள். மாதங்கி பதில் கூறவில்லே.

''ஒரு ஹாஸ்டல்லே தங்கி இருக்கிறது போல் கெளரவமான ஒரு பெண்மணியோட பாதுகாப்பில் நீ இருப்பாய் — அதே சமயம் நீ நாட்களை வீணே கழித்துக் கொண்டிருக்கப் போவதில்லே! எனக்குக் கணவர் சாப்பாட்டுக்குப் போதுமானது வச்சிட்டுத் தான் போயிருக்கார். இருந்தும் நான் ஏன் இன்னமும் வேலே செய்யறேன் தெரியுமா? தனிமையின் துயரை மறக்கவும் — சுதந்திரமான ஓர் உணர்வில் தன்னம்பிக்கையோட வாழவும்தான். ஒவ்வொரு பெண்ணுக்கும் தன்னம்பிக்கையும், சுதந்திர உணர்வும் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் கல்வி அறிவும் தேவைன்னு மேடைகளில் கூக்குரல் இடுகிறவள் நான். என் மருமகளுக்கு அவைகளை வழங்க நான் மறுத்தால் நியாயமாகுமா.... நர்மதா கிட்ட டெலி



அருள்வாக்கு

உபாசனை என்பது என்ன?


இதோ எனக்கு முன்னல் வாழைச் சீப்பு வைத்திருக்கிறது. ''இதைப் பார், இது மஞ்சளாக இருக்கிறது'' என்று நான் சொன்னல் இது மஞ்சளாகத்தான் இருக்கிறது என்று காண்கிறீர்கள். அதற்கு மேல் மனசில் அதைப் பற்றி எந்தப் பிரதி சிந்தனையும் (Reaction) எழுவதில்லே. மாருக இதே வாழைப் பழத்தைக் காட்டி, ''இதோ பார், இது சிவப்பாக இருக்கிறது'' என்று நான் சொல்லி யிருந்தால் உடனே உங்கள் மனசில் ஓர் ஆட்சேப உணர்ச்சி எழுந்திருக்கும். இது மஞ்சள் என்ருே, சிவப்பு என்ருே நான் சொல்லாமல் ''இந்த வாழைப்பழம் சிவப்பாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னல் அப்போது உங்கள் மனசில் ஒரு விதமான பிரதி உணர்ச்சி உண்டாகிறது. மஞ்சள் பழத்தையே சிவப்பாக இருப்பது போல் உங்கள் மனசினல் கற்பனை செய்து பார்க்கிறீர்கள். மனசை ஒருமுகப் படுத்தினல் அப்படிப் பாவிக்கவும் முடிகிறது.

உபாசனை என்பது இப்படிப்பட்டதுதான். பரம்பொருள் இப்படி இப்படி இருப்பதாகப் பாவியுங்கள் என்று பலவிதமான குணங்களைக் கொண்ட பல மூர்த்திகளைக் காட்டிக் கொடுக்கிறது உபாசன மார்க்கம். வாழைப் பழம் உண்மையில் மஞ்சள் நிறம் என்பது போல் பரமாத்மாவின் உண்மைக் குணம் என்ன? அது குணம் கடந்தது என்பதே. பரமாத்மா எல்லாக் குணமும் கடந்த வஸ்து என்று சொல்லி விட்டால் அப்புறம் ஜனங்களின் மனசு அதில் மேற்கொண்டு நிற்பதற்கு இடமே இல்லே. இது நமக்குப் புரிபடாத வஸ்து என்று விட்டு விடுவார்கள். வாழைப் பழத்தைச் சிவப்பு என்று சொன்னதை மனம் ஆட்சேபித்தது போல் ஒரு சிலேயைக் காட்டி இதுதான் பரமாத்மா என்ருல் அது எவராலும் ஏற்க முடியாது. 'இது ஒரு கல் பொம்மை அல்லவா? இது எப்படி உலகத்தை நடத்துகிற பரமாத்மா சக்தி ஆகும்?' என்று தோன்றும். ஆனல் ஒரு சிலேயைக் காட்டி, ''இதைப் பரமாத்மா என்று பாவியுங்கள்'' என்ருல் அப்படிப் பாவிக்க முடிவதாகத் தோன்றும் — வாழைப் பழத்தைச் சிவப்பாகக் கற்பனை செய்வது போல். ஆனல் சிவப்பு என்ருல் என்ன வென்று மனசுக்குத் தெரிவது போல், பரமாத்ம லட்சணம் தெரியாதே. அதனல் விக்கிரகத்தை 'ஏதோ பெரிய வஸ்து' என்று சிறிது எண்ணிப் பார்க்கலாமே தவிர அதிலேயே ஆழ ஊன்றி நிற்க முடியாது. தெரிந்த விஷயங்களில் மனசு பிடிமானத்தோடு நிற்கும். எனவே ஒரே காருண்யமும், சௌந்தரியமும் வழிகிற மாதிரி ஸ்திரீ ரூபத்தில் விக்ரகம் செய்து, ''இதில் பரமாத்மா தாயாராக வந்திருக்கிருர் என்று பாவனை பண்ணு என்ருல் மனசு அதை நன்ருகக் கிரகித்துக் கொண்டு அப்படியே ஆழ்ந்து ஈடுபட முடிகிறது.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

கண்களை டெஸ்ட் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான்; யார் இல்லை என்கிறார்கள்? அதற்காக, பார்த்தாலே பயமுறுத்துகிற மாதிரி இத்தனை கருவிகளா? அடேயப்பா!

நாடு: மேற்கு ஜெர்மனி
நன்றி: ஸ்காலா.



போனில் பேசி எல்லா ஏற்பாடும் செய்யப் போறேன் மாதங்கி!''

அவள் மாமியாரின் பேச்சுக்குத் தலையை அசைத்தபடி பொம்மையாக அமர்ந்திருந்தாள்.

''நர்மதாவும் என்னைப் போல் கொள்கை உடையவள். அவள் உதவியுடன் நீ சந்தோஷமாக இரு. அருகில் இருக்கும் வேலை வாய்ப்புப் பயிற்சி தரும் நிறுவனத்தில் சேர்ந்துகொள். டைப்பிங், செக்ரட்டேரியட் கோர்ஸ் என்று உபயோகமானதாகப் படித்து பாஸ் செய்திடு. அதுக்காகத்தான் உன்னை அங்கே அனுப்பறேன். உனக்கும் ஹர்ஷனுக்கும் கடவுள் கிருபையால், இடையில ஏற்பட்டிருக்கிற வீண் மனத்தாங்கல் இந்தப் பிரிவினால் மறைஞ்சு, மன நெருக்கம் ஏற்பட்டால் நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன். இல்லை... ஒரேயடியா, அதிகரிச்சு, பிரிஞ்சு போக நேர்ந்தால் உன்னைக் காப்பாத்திக்கொள்ள உன் கையில் ஒரு நல்ல தொழில் இருக்கு. பிழைச்சுக் கொள்வாய்ன்னு நிம்மதியடைவேன்.'' படபடவெனப் பேசிய கஸ்தூரி, மேலே பேச முடியாமல் சட்டென எழுந்தாள். வாஷ்பேசினருகில் சென்று கையைக் கழுவினாள். மருமகள் பாராத சமயம் பார்த்துக் கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

மீண்டும் திரும்பி வந்தவள், ''இந்த வீட்டுப் பொறுப்பு இன்னும் சில நாட்களுக்குத்தான். பிறகு நீ ஒரு சுதந்திரப் பறவை... வரட்டுமா?'' துயருடன் சிரிக்க முயன்றபடி தன் பிரீஃப் கேஸைத் தானே தூக்கிக்கொண்டு வெளியேறினாள்.

அதற்குப் பின்னர் கஸ்தூரி வேகமாகச் செயல் பட்டாள். ஒரு நாள் காலை, அலுவலகத்துக்குக் கிளம்பும்போது மருமகளையும் கூடவே காரில் அழைத்துச் சென்றாள்.

அருகிலிருந்த அவர்களது வங்கியில் மாதங்கியின் பெயரில் ஒரு கணக்கை ஆரம்பித்து, அதில் கணிசமான ஒரு தொகையைக் கட்டினாள்.

பாதுகாப்புப் பெட்டகச் சாவி, 'பாஸ் புத்தகம் இரண்டையும் மருமகள் கையில் கொடுத்து வீட்டில் கொணர்ந்து விட்டு விட்டு வேலைக்குத் திரும்பினாள்.

அன்று காலை பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் மாதங்கி பெங்களூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தவளிடம் கஸ்தூரி தாழ்ந்த குரலில் சொன்னாள்:

''உன் அவசரச் செலவுக்குன்னு கொஞ்சம் பணம் உன் பேர்ல பாங்கில கட்டி வச்சிருக்கு. மாசம் தவறாமல் நான் பணம் அனுப்பி வைக்கிறேன். கவலைப்படாதே. அடிக்கடி கடிதம் போடு. நீ அங்கே போய்ச் சேர்ந்ததும் நர்மதா அம்மா உன்னிடம் ஒரு தடிமனான கடித உறையைத் தருவாள். அதைப் பிரிச்சுப் பார்த்துட்டுப் பத்திரமா வச்சுக்கோ.''

''அத்தே!'' கலவரத்துடன் விழித்தாள்.

''அது என் உயில்... அசல் நமது குடும்பத்து வக்கீல் கிட்ட இருக்கு. நர்மதா கொடுக்கப் போறது நகல். உன் பார்வைக்கு வைச்சுக்கொள்ள வேண்டியது. என் உயில் பிரகாரம் நம் வீட்டில் பாதி உன்னது. எனக்குப் பின் பாங்கியில் என் பேரில் இருக்கிற பணம், என் நகை எல்லாமே உன்னைச் சேரணும்னு எழுதி வச்சிருக்கேன்.''

''அத்தே! எதுக்காக இப்படியெல்லாம்'' மாதங்கியின் குரல் தழுதழுத்தது. கையை நீட்டி மாமியாரின் கரத்தை ஆதரவுடன் தொட்டாள்.

''என் மகன் எனக்குத் தந்திருக்கிற அதிர்ச்சியின் துயரமே என்னை விழுங்கிடும்னு ஒரு திகில் ஏற்பட்டுடுச்சு. ஒரு சமயம் உன்னைத் திரும்பிப் பார்க்க முடியாமல் உடம்புக்கு வந்து நான் போயிட்டா அநியாயமா ஒரு பெண்ணை நிர்க்கதியாக்கிட்ட பாவம் எனக்கு வரக் கூடாதும்மா மாதங்கி! குழந்தே! என்னை மன்னிச்சுடும்மா...'' கஸ்தூரி கண் கலங்க, மருமகளின் கரத்தை அழுத்திப் பிடித்தபொழுது ''அத்தே!'' என விம்மினாள் மாதங்கி. அதற்குள் வண்டி நகரத் துவங்கவே பிணைத்துக் கொண்ட கரங்கள் பிரிய வேண்டிவந்தது. (தொடரும்)


ஆரோக்கியம், ஆனந்தம்,
ஒன்றுக்கொன்று ஆதாரம்
SPECIAL REFILL PACK
Save Re.1/-
Cadbury's
Bournvita
The tastier food drink
500 g net
Cadbury's
Bournvita
The tastier food drink
500 g net
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன.
இப்போது! பெரும் சேமிப்பு ஒரு முழு ரூபாய் ரீ:.பில் பேக்குடன்
காட்பரிஸ்
போர்ன்விடா
அளிப்பது அத்தனையும் நலம்
OBM 6617 TM



ழைய முகங்கள்- திய நிழல்கள்!

29.3.81

அக் கல்யாணம் நல்லபடியாக நடக்கத் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டியது இருக்க, தானே முன்னால் நின்று இதை நிறுத்த வேண்டி வந்துவிட்ட தன்னுடைய நிலைமையை எண்ணி, மிகவும் வேதனைப்பட்டாள் வித்யா!—

இவ்வளவு நாளும் எங்கேயும் போகாமல், யாரோடும் ஒட்டாமல் ஒதுங்கியே இருந்து விட்டதைப் போலவே அப்போதும் கூட இருந்திருக்கக் கூடாதா? என்று மிகுந்த வருத்தத்தோடு நினைத்துக் கொண்டாள்.

''இந்துவைப் பெண் பார்க்க வருகிறார்கள். உன் மன்னி மிகவும் பயப்படுகிறாள். நீயும் வந்தால் அவளுக்கு ரொம்ப ஆறுதலாக இருக்கும். நீ அவசியம் வரணும் வித்யா!'' என்று அவளை மிகவும் வற்புறுத்திய அவள் அண்ணன் ராகவன் பேச்சைத் தட்ட முடியாமல் இங்கே வந்து 'இப்படியொரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டோமே' என்று நினைத்தாள்!—

பெண் பார்க்க வந்தவர்கள் நேரிடையாகவே தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்கள்!

மாப்பிள்ளைப் பையனும் பார்க்க லட்சணமாய் இருக்கிறான். இந்துவுக்கு ஏற்ற ஜோடி. நல்ல சிவப்பு. ஆள் நல்ல வாட்ட சாட்டமாய் இருந்தான். தனியார் கம்பெனி ஒன்றில் நாலு இலக்க சம்பளத்தில் நல்ல வேலையிலிருந்தான். கூட வந்திருந்த மனிதர்களும் சுபாவத்தில் நல்லவர்களாகவே தோன்றினார்கள். போதாதா என்ன?

ராகவனும் கல்யாணியும் இவ்வளவு நாட்கள் தேடியதற்கு ஒரு நல்ல சம்பந்தம் கிடைத்ததே என்று மகிழ்ந்து போய் இருந்தார்கள்.

அந்த மகிழ்ச்சியில்—

எட்டாயிரம் ரூபாய் வரதட்சிணையும், இரண்டாயிரம் ரூபாய் மாப்பிள்ளை டிரஸ்ஸும், இருபது பவுன் நகையும் மற்ற சீர் வரிசைகளும் எதுவுமே பெரிதாகத் தோன்றவில்லை அவர்களுக்கு!

எல்லாவற்றுக்குமே சம்மதித்தாயிற்று!

இந்து ஏறக்குறைய இந்தக் கல்யாணமே முடிந்து விட்டாற் போல சந்தோஷமாக இருந்தாள்.

இந்த நிலையில்—

எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று வித்யாவின் மனம் மட்டும் ஓயாமல் புலம்பிக்கொண்டே இருந்தது.

இந்துவைப் பெண் பார்க்க வந்திருந்த 'அவனை'ப் பார்த்ததுமே வித்யாவுக்குப் 'பளிச்'சென்று நினைவுக்கு வந்து விட்டது.

அந்த ஒரு கணத்தில் அவள் உடல் எங்கும் 'குப்'பென்று வியர்வை பொங்க—உடம்பும் மனமும் 'படபட'வென்று துடிக்க அவள் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மீண்டும் அணிந்து கொண்டு அவனை நன்றாகப் பார்த்தாள்!

அவன்தான்!—

அவனேதான்!—

வித்யாவுக்குச் சந்தேகமே இல்லை!—

அவள் நினைவுகள் 'சட்'டென்று அவளிடம் இருந்து பிரிந்து ஓடின!—

சென்ற மாதத்தில் ஒரு நாள் அவள் கம்பெனியின் 'புரொடக்டிவிடி கவுன்ஸிலின்' கூட்டம் நகரின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடாகி யிருந்தது.

கம்பெனியின் முக்கியஸ்தர்களும் எக்ஸிகியூட்டிவ்களும் மற்றும் உயர் மட்ட அதிகாரிகள் பலரும் இதில் அவசியம் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

வித்யாவும் அந்த மீட்டிங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்தாள்.

குறிப்பிட்ட நேரத்துக்குச் சற்று முன்னதாகவே வந்து விட்டதால் அவள் வரும் போது மீட்டிங் ஹால் காலியாக இருந்தது.

மாடியில் இருந்த அந்த அறைக்கு வெளியே நீண்ட வராந்தாவின் கைப்பிடிச் சுவர் ஓரம் நின்று கீழே நிற்கிற கார்களையும் நடமாடுகிறவர்களையும் பார்த்தபோது அந்தக் கோணத்தில் பார்ப்பது ஒரு விநோதமான அனுபவமாக இருக்கவே அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

அப்போதுதான் இது நடந்தது!—

நாகரிகமாக உடை அணிந்த ஒரு வாலிபனும் அவனுக்குப் பின்னால் அவன் இடுப்பை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு ஏறக்குறைய அவன் மேல் சாய்ந்த வண்ணம் ஒரு இளம் பெண்ணும் ஸ்கூட்டரில் வந்து இறங்கினார்கள்.

அவன்—

நல்ல சிவப்பாயிருந்தான். அழகாகவும் இருந்தான். நன்றாக உடுத்தி யிருந்தான். அவன் ஸ்கூட்டரை ஓட்டிவந்ததும் அதை நிதானமாக நிறுத்தி அலட்சியமாக இறங்கியதும் — எல்லாமே அவனை ஓரளவுக்கு வசதியானவன் என்றே எண்ண வைத்தன!

தன்னோடு வந்த இளம் பெண்ணின் இடையில் கை போட்டு வளைத்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டு அவன் நடந்தான்.

அந்தப் பெண்ணை நன்றாகப் பார்த்தாள்.

'சட்'டென்று நினைவுப் பொறியொன்று அவள் மூளையில் தட்டியது!

ராதையல்லவா!

அவளேதான்!

தன் கம்பெனியில் ஸ்டெனோவாக இருக்கும் அந்தப் பெண்ணை அவள் ஓரிரு முறை பார்த்திருக்கிறாள்.

ராதைக்குக் காதலா?

அவன் பேர் என்னவாக இருக்கும்?—

கண்ணனோ?.... குரோட்டன்ஸ் மறைவில் அவர்களது காதல் லீலைகள்....!

ராதை நல்ல பெண்.

தனக்கு ஏற்ற மாதிரி ஒரு நல்ல பையனைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள். பையன் வசதியானவனாகவும் தெரிகிறான். அதிர்ஷ்டசாலிதான் ராதை!

என்று அவள் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்த வேளையில் ஒவ்வொன்றாக அவள் கம்பெனிக் கார்கள் உள்ளே நுழைந்து, அரை வட்டமடித்து போர்டிகோவுக்குள் நுழைந்து மீள்வது தெரியத் தொடங்கிற்று.

அடுத்த அரை மணியில் மீட்டிங் துவங்கி விட்டது.

அதன் பிறகு வித்யாவுக்கு வெளியே பார்த்த காட்சியும் அந்த நினைவுகளும் மறந்து போயின!

அன்றைக்கு — அங்கே — ராதையுடன் பார்த்த அதே வாலிபனை இன்றைக்கு, இந்துவைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளையாகப் பார்த்த போது அவள் மனத்தில் இனம் புரியாத ஆத்திரமும் கோபமுமே பரவியது.

எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிடவேண்டும்! நன்றாகத் தெரிந்தே இந்துவைப் பள்ளத்தில் தள்ளிவிடக் கூடாது!

வித்யாவின் மனத்துக்குள் இந்த எண்ணமே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

''என்ன வித்யா? நான் கூப்பிடறது கூடக் காதிலே விழாம அப்படி என்ன ஆழமான யோசனை? — பையனைப் பார்த்தாயல்லவா? உன் அபிப்பிராயம் என்ன? பையன் இந்துவுக்கு நல்ல ஜோடிதானே?'' என்ற ராகவனின் குரல் அவள் நினைவைக் கலைத்து விட்டது.

சட்டென்று தலையை உலுக்கிக் கொண்டு நினைவில் இருந்து மீண்ட வித்யா தன் எதிரில் சந்தோஷத்தில் அகமும் முகமும் மலர நின்று கொண்டு இருக்கும் தன் அண்ணனைப் பார்த்தாள்.

எல்லாம் நல்லபடியாக முடிந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் நின்றிருந்த மன்னியின் முகமும் கல்யாணப் பெண்களுக்கே உரிய வெட்கமும் மகிழ்ச்சியுமாக நிற்கும் இந்துவின் முகமும் வித்யாவின் பார்வையில் பட்டன.



வித்யா ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

அவள் தனக்குத் தெரிந்தவைகளையும், பார்த்தவைகளையும், அந்த மாப்பிள்ளைப் பையனுக்கும் ராதைக்கும் உள்ள காதலையும் —எல்லாவற்றையுமே விவரமாகச் சொல்லி நிறுத்தியபோது—

கல்யாணி, ராகவன், இந்து — மூவரின் முகமுமே வெளிறிப் போயிருந்தது.

இந்து அழவே துவங்கி விட்டாள்.

வித்யாவுக்கு அவளைப் பார்க்கவே பரிதாப மாக இருந்தது. ஆறுதலாக அவள் தோள் களில் தட்டிக் கொடுத்து அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

“நான் வரட்டுமா அண்ணா! நான் இங்கே இவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்து, உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க முடியவில்லையே என்று வருத்தமாக இருக் கிறது. நம்ப இந்துவுக்கு இதைவிட நல்ல இடத்துச் சம்பந்தம் வரும் அண்ணா... வரட் டுமா?''

வித்யா கிளம்பி விட்டாள்.

ராகவனும் கல்யாணியும் ஒரு வார்த்தை கூடப் பேசாமலே இருந்தது வித்யாவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

''என் மீது கோபமா அண்ணா?'' என்றாள்.

''சேச்சே... அதெல்லாம் ஒன்றுமில்லை யம்மா. நீ சொன்னதை யெல்லாம் கேட்கக் கேட்க மனசு என்னவோ போல ஆயிடுதது. நீ சொன்ன மாதிரி இது இப்பவே தெரிஞ்ச தும் நல்லதுதான். இதையெல்லாம் ஒண் ணும் மனசுலே வெச்சுக்காதே. அடிக்கடி வந்து போய்க் கொண்டு இரு. இந்துவுக்கு வேறொரு நல்ல இடம் இருந்தாலும் பார்த் துச் சொல்லு....!''

தன் ஏமாற்றங்களை மறைத்துக் கொண்டு ராகவன் பேசினார். அவர் பேச்சை ஆமோ திக்கிறாற்போல கல்யாணியும் இந்துவும் தலையை அசைத்தார்கள்.

வித்யாவுக்குத் தன் மனத்தில் இருந்த பெரிய பாரம் ஒன்று இறங்கிவிட்டதைப் போலிருந்தது.

அவள் வீட்டுக்குத் திரும்பி வெகு நேரம் வரையிலும் கூட இதே நினைவுகள் அவள் மனத்தில் வலம் வந்து கொண்டிருந்தன.

> கர்நாடகா மாநிலத்திலுள்ள காட்டு இலாகா யானைகள் ஒரு நாளைக்கு நான்கு மணி நேரமே வேலை செய்கின்றன. ஒரு வருடத் தில் மூன்று மாத காலத்திற்கு அவைகளுக்கு ஓய்வு அளிக்க சட்டத்தில் உத்திரவாதம் அளிக் கப் பட்டுள்ளது.
>
> தகவல்: சக்தி மணாளன்



இந்துவின் திருமணம் தடைப்பட்டு விட் டதே என்ற வருத்தத்தை விட ராதையைப் போன்ற ஒரு நல்ல பெண்ணின் காதல் இது போன்ற ஓர் ஏமாற்றுப் பேர்வழியிடம் சிக்கிக் கொண்டதே என்ற வருத்தம்தான் அவளுக்கு நிறைய இருந்தது.

அவளும் காதல் தோல்வியை அனுபவித்த வள்தான்.

ஆனால் அந்தக் காதலும் மிக மிக மென்மை யானது. கிண்ணத்தில் இருக்கும் எண்ணெய் கண்ணுக்குத் தெரியாமல் திரிவழியே போய்ச் சுடராக மாறுகிற மாதிரி மிக மிக மென்மை யான காதல் அது!

அதைப் போலவே அந்தத் தோல்வியும் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ரகசிய மாகவே முடிந்து விட்டது.

இரண்டாம் பேருக்குக்கூடத் தெரியாமல் தனக்குள்ளாகவே வெகு நாட்கள் அழுது கொண்டிருந்தாள் வித்யா.

காதல்தான் இப்படி ஆயிற்று என்பது இல்லை.

அவள் மண வாழ்க்கையும் கூட ஒரு மின் னல் கீற்றுப் போலக் கண்ணைப் பறிக்கிற வெளிச்சத்துடன் ஆரம்பித்து அதே வேகத் திலேயே மறைந்தும் போயிற்று!

இறுதியாக நின்றது எல்லாம்—

நாலு வருஷத்துக்கும் குறைவான தாம் பத்தியமும் இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்கிற பட்டமும்தான்!

இன்றைக்கு அவள் பிரபலமான அந்தக் கம்பெனியின் ''எக்ஸிக்யூட்டிவ்'' — காரும் பங்களாவுமான செல்வச் செழிப்பான வாழ்க்கை. குழந்தைகள் இருவரும் நன் றாகப் படித்தார்கள்.

இழந்துபோன வாழ்க்கையின் பல சந் தோஷங்களை இதுபோன்ற விஷயங்களில் தான் ஈடு செய்து கொண்டு சமாதானப் பட முடிந்தது. எவ்வளவோ விஷயங்களை அவள் மறந்து விட்டாள்.

ஆனால்—

அன்றைக்குத் தனக்கு ஏற்பட்ட காதல் தோல்வியின் வலியும் வேதனையும் மட்டும் அவளுக்கு மிக நன்றாகவே நினைவு இருந்தது.

தனக்கு ஏற்பட்ட இந்த நிலைமை வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது என்பதில் மட்டும் அவள் மிகவும் தீவிரமாக இருந்தாள்.

மறுநாள் அவள் கம்பெனிக்குப் போன தும் முதல் வேலையாக ராதைக்குப் போன் செய்து அவளைத் தன் அறைக்கு வரச் சொன்னாள்.

அறைக்குள் நுழைந்ததும் ராதையிடம் எப்படி விஷயத்தைச் சொல்வது என்று அவ ளுக்கு மிகவும் தயக்கமாக இருந்தது.

கொஞ்ச நேரம் வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்துவிட்டு நிதானமாக விஷயத் தைச் சொன்னாள்.

அவள் பேசப் பேச ராதையின் முகம் சிவந்துபோய்க் குப்பென்று வியர்வை வழிந் தது.

வித்யா எல்லாவற்றையும் சொல்லிமுடித்து விட்டுச் சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

ஹரியானு மாநில முதலமைச்சர் பஜன்லால், ஒரு ஆண்டு பெட்ரோலுக்குச் செலவழித்த பணம் ரூ 1,96,236. இதே முதல்வர், ஒரு ஆண்டில் டெலிபோன் கட்டணமாகச் செலுத்திய தொகை ரூ 66,950 ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல்: வெள்ளகால் இரா. கந்தையா



ராதை மௌனமாகத் தலை குனிந்து அமர்ந்து கொண்டிருந்தாள். அவள் தலை நிமிர்ந்தபோது அவள் கண்களில் இரண்டு துளி கண்ணீர் முத்துக்கள் கோத்துக் கொண்டு நின்றிருந்தன!

சேச்சே...அசடு.... இதுக்கெல்லாம்போய் அழலாமா? தைரியமாக இரு. நாங்களெல்லாம் எதற்கு இருக்கிறேம்? உன் வீட்டில் பெரியவர்கள் யாரையாவது என்னை வந்து பார்க்கச் சொல். அவனுக்கும் உனக்கும் கல்யாணம் நடக்க என்னுல் முடிந்ததை எல்லாம் செய்கிறேன்'' என்றாள் வித்யா.

ராதை ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள். ஹால் கடிகாரத்தின் பெண்டுலத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது அவள் பார்வை. அவள் கொஞ்ச நேரம் யோசிக்கட்டும் என்று நினைத்து வித்யாவும் எழுந்து ஜன்னலருகே நின்று கொண்டாள். சற்றுநேரம் சென்று ராதை பேசினுள்:

''நான் நன்ருக யோசித்துப் பார்த்து விட்டேன் மேடம். இனிமேல் அவரை நம்பி என்னை அவரிடம் ஒப்படைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்று தோன்றுகிறது. நீங்கள் சொன்னதைக் கேட்டதும் முதலில் எனக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஆனுல் நான் உங்களை நம்புகிறேன். மேடம். எப்போது அவர் என்னை விட்டு விட்டு வேறெரு பெண்ணைப் பெண் பார்க்க வந்தாரோ அப்போதே என் காதல் இறந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது! இனிமேல் உங்களைப் போன்றவர்கள் முயற்சி செய்து நாங்கள் இருவரும் இணைந்தாலும் அங்கே இந்தக் காதலின் மென்மை கொஞ்சமும் இருக்காது. இந்தப் பிரிவுக்குக் காரணம் வெறும் மன வேற்றுமையாக இருந்தால் சரி செய்து கொள்ளலாம். இது மன வேறுபாடு அல்ல — பண வேறுபாடு மேடம்! — எங்களால் அவ்வளவு தூரம் செய்ய முடியாது என்று அவருக்கு நன்ருகவே தெரியும். அதனுல்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். 'எனிவே' உங்கள் அன்புக்குநான்நன்றியுள்ளவள்-தாங்க்யூமேடம்.''

அவள் எழுந்து விட்டாள்.

வித்யா அவளை ஊன்றிப் பார்த்தாள்.

காதல் தோல்வியின் வலி கொஞ்சமேனும் அவள் முகத்தில் தெரிகிறதா என்று தேடினுள்.

ராதை கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய இயல்பான நிலைமைக்கு மாறிக் கொண்டு இருப்பதும் அவளுக்குப் புரிந்தது.

அன்றைக்குத் தனக்கு ஏற்பட்ட காதல் தோல்வியும் அதனுல் நாள் கணக்கில் ரகசியமாக அழுததும், தன் கல்யாணத்துக்குப் பிறகும் வெகு நாட்கள் வரை அதை நினைத்து வருந்தியதும் நினைவுக்கு வந்தது!

'காதல் தோல்வி-இத்தனை சுலபமானதா?' என்கிற மாதிரி அவள் ராதையை மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

''இந்தப் பெண்ணுல், இதை, எப்படி, இவ்வளவு சுலபமாக எடுத்துக் கொள்ள முடிகிறது?என்றுதானே நினைக்கிறீர்கள் மேடம்!''

''எஸ்!''

''காதல் புனிதமானது. மென்மையானது. தெய்வீகமானது — இன்னும் என்னவெல்லாம் வேண்டுமோ அவ்வளவும் சொல்லிக்கொள்ளலாம்!காதல் தோல்வியும்வலிமையானது, வேதனை அளிப்பது — இன்னும் எவ்வளவு வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளலாம். ஆனுல்— ஒரு ஏமாற்றுப் பேர்வழியை நம்பி வாழ்க்கையையே நாசமாக்கிக் கொள்வதை விட காதல் தோல்வியைத் தாங்கிக் கொள்வது சுலபம் என்று நான் நினைக்கிறேன் மேடம்!

''பரஸ்பரம் நம்பிக்கைகளை இழந்துவிட்டுப் போலியாக வாழ்வதை விட — அவநம்பிக்கை தோன்றிய கணத்திலேயே பிரிந்துவிடுவது மிகவும் நல்லது என்று நான் நினைக்கிறேன் மேடம். இதை நான் ஒரு பெரிய வீழ்ச்சியாகவோ, வேதனையாகவோ நினைக்கவில்லை. காரணம், என் காதலை விட என் நம்பிக்கைகள் எனக்குப் பெரியவை! முக்கியமானவை. அவசியமானவையும் கூட! இவற்றை எல்லாம் விட்டு விட்டு அப்படி ஒரு வாழ்க்கை அமைவதை விட என் காதல் தோற்றுப் போயிற்று என்று ஒப்புக்கொள்வதும், ஏற்றுக் கொள்வதும் எனக்கு மிகவும் சுலபம். நான் வருகிறேன் மேடம்!''

ராதை கிளம்பி விட்டாள்.

வித்யா சற்று நேரம் விக்கித்துப் போய் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

தகர்க்க முடியாத மன உறுதியுடன் ராதை பேசிவிட்டுப் போனவை யெல்லாம் அவள் மனத்தில் திரும்பத் திரும்ப ஒலித்தன.

அவள் மன உறுதியையும், நம்பிக்கைகளையும் தன் மனத்துக்குள் பாராட்டியபடி ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

ராதை போய்க் கொண்டிருந்தாள்.

கூடவே அவள் நிழலும் ஊர்ந்து சென்றது.

'முகங்கள் பழையதானுலும் இந்த நிழல்கள் புதியவை!' — என்று வித்யா தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

பெரியம்மா சுமதியைத் தவிர யாருக்கும் மாதங்கியைச் சட்டென்று பிடித்து விடும். வீட்டு மனிதர்களுடன் நட்புக் கொண்டு கபடமற்று உறவாடும் ஒரு சுபாவம் அவளுக்கு இயற்கையாகவே அமைந்து விட்டிருந்தது. வந்த சில நாட்களிலேயே நர்மதாவுக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது.

அல்சூர் சாலையில் சண்பக மரங்கள் சூழ்ந்த தோட்டத்துக்குள்ளே அடங்கியிருந்த சின்னஞ் சிறு வீட்டில் அவள் இரண்டு வேலை ஆட்களுடன் தனியே வசித்துக் கொண்டிருந்தாள். உயரமும் பருமனுமான தோற்றம். சிவந்த மேனி. அறுபது வயதை எட்டிவிட்டது தெரியாத மிடுக்கு நடை. அதட்டலான பேச்சு. நரை தெரியாத கருப்புப் பூச்சில் கழுத்து வரை வெட்டி விடப்பட்டிருக்கும் அடர்ந்த முடி. கை விரல்களில் நகப் பூச்சு. உதட்டில் அழுத்தமான சாயம். முகத்தில் மிதமான பவுடர் பூச்சு. தோற்றத்திலும் பேசும் தோரணையிலும் மாமியார் கஸ்தூரிக்கு முற்றிலும் மாறுபட்டவள். ஆனால் நெருங்கிப் பழகிய போது கஸ்தூரியிடம் காணப்பட்ட அதே அன்பும் — பண்பும் — பாசமும் தெரிந்தன. அதனால்தான் தோற்றத்திலே முற்றிலும் மாறுபட்ட இருவர் — மனத்தால் ஒன்றுபட்டிருப்பதால் நெருங்கிய தோழிகளாக இருக்கின்றனர் போலும். மாதங்கி தனக்குள்ளே நர்மதாவைப் பற்றிக் கணிப்பு செய்து கொண்டாள்.

தன் பாதுகாப்பில் வந்து மாதங்கி தங்கத் தொடங்கிய சில நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள் காலை அவள் அந்தப் பெண்ணைத் தன் காரில் கூட அழைத்துச் சென்றாள். கங்கா காவேரி இன்ஸ்டிடியூட் என்னும் வேலை வாய்ப்புப் பயிற்சி தரும் ஸ்தாபனத்தில் அவளை ஒரு மாணவியாகச் சேர்த்து விட்டாள். அந்த ஸ்தாபனத்தின் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் சட்டென்று வேலை கிடைத்து விடும் என்றதொரு பெருமை அதற்கிருந்தது. அங்கே இடம் கிடைப்பதே சிரமமான காரியம். ஆனாலும் நர்மதா தனது செல்வாக்கைத் தெரிந்தவர்கள் மூலம் உபயோகித்து மாதங்கிக்கு அதில் இடம் பிடித்துக் கொடுத்து விட்டிருந்தாள். செகரட்டேரியல் கோர்ஸ் எனும் பகுதியில் மாதங்கி சேர்ந்து பயிலத் தொடங்கி விட்டிருந்தாள்.

நர்மதா மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறவள். முதல் நாள் கங்கா காவேரி இன்ஸ்டிடியூட்டுக்கு மாதங்கி கிளம்பியதும் தானே அழைத்துச் செல்ல முன்வந்தாள். காரில் முன் ஆசனத்தில் தன் அருகே உட்கார வைத்துக்கொண்டு தோட்டத்திலிருந்தபடியே தான் சொல்ல விரும்பியதைப் படபடவென்று பேசத்தொடங்கினாள்.

''மாதங்கி, முதலில் நீ ஒண்ணு தெரிஞ்சுக்கணும். நான் உன்னை எவ்விதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்த மாட்டேன். நீ சுதந்திரமாக எங்கே வேணுமானாலும் போகலாம். வரலாம். யாருடனும் பழகலாம். பேசலாம். உனக்குப் பூரண உரிமை உண்டு. ஆனால் நான் சொல்லப் போறதைக் கொஞ்சம் கவனிச்சு வச்சுக்கோ. இந்த ஊர்க்காரங்க உங்க ஊர்க்காரங்களை விடக் கொஞ்சம் முற்போக்கானவங்க — பத்தாம் பசலித்தனத்தை இந்த வட்டாரத்தில் நீ அதிகம் பார்க்க மாட்டே. ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிற இடம் நீ சேர்ந்திருக்கும் அந்த ஸ்தாபனம். உள்ளத்து உணர்வுகளைப் பூட்டி வைக்காமல் சகஜமாக சரளமாக எல்லாரும் எல்லோரிடமும் பேசுவாங்க — பழகுவாங்க. நீயும் அப்படிப் பழகத் தெரிஞ்சுக்கணும். தொட்டாச் சுருங்கி போலப் பயந்தவளாட்டம் நடந்துக்கக் கூடாது. வெளி உலகில் பலபேரோடு பழகச் சந்தர்ப்பம் இருந்தும் தனது வரம்புக்குள்ளே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பழகத் தெரிஞ்சுக்கிற போதுதான் ஒரு பெண்ணை உண்மையான ஒழுக்கம் உடையவள்னு சொல்ல முடியும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இல்லாததால் ஒழுக்கமாக ஒரு பெண் இருப்பது உசத்தியல்ல.



கழுத்தில் விழுந்த ●●●

அப்புறம் இன்னொரு முக்கிய விஷயம். நீ நாளடைவில் கன்னடம் படிக்க, எழுத, பேசக் கத்துக்கணும். நான் தமிழ் நாட்டிலே வாழ்ந்த காலத்தில் உன் மாமியாரை விட தமிழ் அதிகமாகவே படிக்க — பேசக் கத்துக் கொண்டிருந்தேன். அந்தந்த ஊர்க் காரங்க மொழியிலே பேசத் தெரியும்போது தான் நமக்கும் மற்றவங்களுக்கும் இடையே நேச பாவம் நெருக்கமடைகிறது. புரிஞ்சுதா?''

நர்மதா ஒரே மூச்சாகப் பேசிவிட்டு உரத்த குரலில் சிரித்தாள்.

நர்மதாவின் ஆலோசனைப்படியே மாதங்கி மற்ற மாணவ மாணவிகளுடன் நட்புரிமை பாராட்டிப் பழகத் தெரிந்து கொண்டாள். வீட்டு வேலைகளை மட்டுமே கவனித்துக் கொண்டு பெரியம்மாவுக்கு ஓர் எடுபிடி ஆளாகப் பணிபுரிந்து கொண்டிருந்த நிலையிலிருந்து பழையபடி மாணவியாகி, கவலையற்றுச் சுதந்திரமாக வாழ நேர்ந்த அந்தப் புதிய அனுபவத்தை அவள் மிகவும் ரசித்தாள்.

16

மிக விரைவில் பெங்களூரில் அவர்கள் வசித்த பகுதியிலிருந்த பல தெருக்களை அவள் தெரிந்து கொண்டு விட்டிருந்தாள். நர்மதா வீட்டிலிருந்து பயிற்சி ஸ்தாபனத்துக்கு விரைவாகச் செல்ல எந்தத் தெருவுக்குள் நுழைந்தால் சீக்கிரம் போக முடியும் என்றெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு விட்டாள்.



கோடை வெய்யிலே தெரியாது குளுமையாக வீசிய காற்றில் சாலை ஓரத்தில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள் அணி செய்யும் அழகைக் கண்டு களித்தபடி மெல்ல நடந்து போய்விடுவது அவளுக்கு மிகவும் சுவையானதொரு அனுபவமாக இருந்தது.

கல்வி நிறுவனத்தில் விரைவில் அவளுக்குப் பல தோழிகள் சேர்ந்து விட்டனர். சில மாணவர்களிடம் கூட அவள் நெருங்கி சகஜமாகப் பேசத் தெரிந்து கொண்டு விட்டிருந்தாள். நத்தையைப் போல உள்ளே இழுத்து நாணிக் கோணிக் கொள்ளாது நிமிர்ந்த முகத்துடன் கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களை அவர்களுடன் சரிக்குச் சரியாக விவாதித்துப் பேசும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு விட்டாள்.

நெருங்கிப் பழகின மாணவிகளில் ஒருத்தி ஒரு நாள் அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாள்.

''உன் பெயருக்கு முன் ஸ்ரீமதின்னு இருக்கிறதைக் கவனிச்சேன். பிறகு கழுத்தைப் பார்த்தேன். தாலிச் சரடு தெரிந்தது. உன் கணவனை விட்டு இங்கே ஏன் படிக்க வந்தே? உங்க சென்னையிலும் இது மாதிரி பல கல்வி நிறுவனங்கள் செயல்படுவதாகக் கேள்வி...''

ஓங்கித் தலையில் யாரோ குட்டிவிட்டதைப் போன்ற வேதனை, மாதங்கிக்கு. நெருங்கிப் பழகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தான் நர்மதா உபதேசித்திருந்தாள். எல்லாரிடமும் அவள் வாழ்க்கையின் விவகாரத்தை அப்பட்டமாக அவிழ்த்து விட வேண்டும் என்று சொல்லவில்லையே?

''இந்த நிறுவனத்தில் படிக்கணும்னு என் மாமியார் உத்தரவு.''

''உன் கணவனைப் பிரிஞ்சு இருக்கியே மனத்துக்குக் கஷ்டமாக இல்லையா?''


நெஞ்சை அடைத்த வேதனையை விழுங்கிக் கொண்டாள் மாதங்கி.

''அவர் வெளி நாடு போயிருக்கிறார். அதை மறக்கத்தான் இந்த ஏற்பாடு.'' சட்டென்று அந்தத் தோழியின் அருகிலிருந்து அப்பால் நழுவினாள்.

ஹர்ஷனின் நினைவு மனத்திலே தோன்ற இடமின்றி வேலை பயிலும் முயற்சியில் நாட்கள் வேகமாகத் தான் நகர்ந்து கொண்டிருந்தன. காலை எட்டு மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரைதான் அவளது பயிற்சி. பற்பல எண்ணி மீதிப் பொழுதை அவள் மனக் குழப்பத்திலே கழிக்க நர்மதா அனுமதிப்பதில்லை.

காலை வேளையில் தன்னுடன் அமர்ந்து காப்பி டிபன் சாப்பிட்டு விட்டுத்தான் அவள் கங்கா காவேரிக்குப் புறப்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தாள். பகல் அவள் வீடு திரும்பும்வரை அவளுக்காகக் கூடச் சாப்பிடக் காத்திருந்தாள். பகல் உணவுக்குப் பின்னர் தன்னுடன் அவளை இந்திரா நகரில் தான்

மாலை • • லக்ஷ்மி



✖ ரேவதிசிவராமன், தூத்துக்குடி 5

கே: ஸ்ரீராமர் பட்டாபிஷேக படத்தை, வீட்டில் மாட்டுவது இடையூறு அளிக்கும் என சிலர் கூறுகின்றனரே? மாட்டலாமா, கூடாதா?

ப: வாரியார் சுவாமிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்வி. உங்கள் சார்பாக நான் கேட்டேன். ''ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படம்வீட்டில் இருப்பது பரம மங்களம். ஒரு தீங்கும் வராது'' என்று தெரிவித்தார்.

✖ எஸ். ஏ. விஸ்வநாதன், தாம்பரம்

கே. பால்கிவாலாவின் பேச்சைப்பற்றி உம்முடைய கருத்தென்ன?

ப: பால்கிவாலா கோர்ட்டில் பேசுவதற்கு மணிக்கு ஐந்தாயிரமோ பத்தாயிரமோ வாங்குகிறார் என்று சேதி. பொதுக் கூட்டங்களில் அவர் இலவசமாகத்தான் உரை நிகழ்த்துவார். ஆனால் அந்தச் சுவையான பேச்சுக்குப் பத்தாயிரம் கூடக் கொடுக்கலாம் என்று தோன்றும்!

✖ இரா. பார்த்திபன், வயலூர் 2


கே: வயலூர் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது எது?

ப: எம். என். நம்பியார்! எப்படி என்று கேட்கிறீர்களா? வயலூர் என்றதும் பார்த்திபன் பெயரும், அதிலிருந்து பார்த்திபன் கனவு — அமரர் கல்கி — குதிரை மேல் சவாரி செய்யும் அவதாரம் — குதிரை—கிண்டிப் பந்தயம் — சூதாட்டம் — சகுனி — வில்லன் — எம். என். நம்பியார் இப்படிச் சங்கிலியாகப் பல விஷயங்கள் நினைவுக்கு வந்து நம்பியாரில் நிற்கிறது!

✖ சந்திரபோஸ், துறையூர்

கே: பாரதிராஜா உங்களைக் கதாநாயகனாக நடிக்க புக் செய்ய வந்தபோது மறுத்து விட்டீராமே, ஏன்?

ப: ரேட்!



கடுகு பதில்கள்!

வைத்து நடத்திக் கொண்டிருந்த 'நர்மதா பொட்டீக்' என்னும் பெண்கள் ரெடிமேட் ஆடைக் கடைக்கு உதவி செய்யக் கூடவே அழைத்துச் செல்வது வழக்கம். சனி, ஞாயிறுகளில் கார் ஓட்டும் பள்ளியிலே கார் ஓட்டக் கற்றுக் கொள்ளும் பயிற்சியில் ஈடுபடுத்தினாள். இரவு உணவுக்குப் பின் முன் அறையில் உட்கார்ந்து ஊர்க் கதைகளைப் பேசிப் பொழுதைக் கழித்து விட்டுத்தான் உறங்கப் போவது வழக்கம்.

நாள் முழுவதையும் வேகமாகப் புதிய அனுபவங்களிலே கழித்த போதிலும் இரவில் தனிமையில் அவளுக்குத் திடீரென்று புக்ககத்தின் நினைவு ஏற்படத்தான் செய்தது.

மாமியாரின் கருணையினால்தானே அவளுக்கு இப்படிப்பட்ட கல்வி அனுபவமும் சுதந்திரமான சுகமானதொரு வாழ்க்கையும் அமைந்திருக்கிறது கஸ்தூரியின் தாராள மனத்தை எண்ணி மனம் கசிந்தாள். ஹர்ஷனின்நினைவைஎன்ன முயன்றும் மனத்திலிருந்து ஒதுக்க முடியாது அவதிப்பட்டாள்.

பிறந்த நாள் அன்று கோவிலுக்குக் கூட வந்தபோது அன்பாகப் பேசத் தெரிந்த அவனுக்குத் திடீரென்று என்ன வந்துவிட்டது? அவளை அந்த வீட்டில் மறுபடியும் பார்க்க விரும்பாத அளவுக்குத் துவேஷம் வரக் காரணம்?...

புரியாத அந்தப் புதிர் முள்ளாக மனத்தை நெருட....அதன் வேதனையைத் தாளாது இரவின் தனிமையில் தன் அறையில் தலையணை மீது முகத்தைப் பதித்தவாறு ஓசைப்படாது கண்ணீரை உகுத்தாள்.


அடிக்கடி அவள் கஸ்தூரிக்குக் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள். மாமியாரிடமிருந்து தவறாமல் பதில்கள் வந்துகொண்டிருந்தன. அவளது படிப்பைப் பற்றியும் உடம்பு சுகம் பற்றியும்தான் மாமியார் அக்கறையாக விசாரித்துக் கேட்டிருந்தாள். தப்பித் தவறிக்கூடத் தன் மகனைப் பற்றி ஒரு வரிகூட அவள் எழுதினதில்லை. கணவனைப் பற்றி அறிய ஆவல் இருந்தபோதிலும் கேட்டெழுத மாதங்கிக்குத் துணிவு இருக்கவில்லை.

இந்த நிலையில் ஆறு மாத காலம் ஓடிச் சென்றுவிட்டது.

மாதங்கி வேகமாக டைப் அடிக்கவும், தொலைபேசித் தொகுதிகளை இயக்கவும் தெரிந்து கொண்டு விட்டாள். அலுவலகத்தில் காரியதரிசியாகப் பணிபுரிய வேண்டிய தகுதிகளை வேகமாகப் பயின்று கொண்டு விட்டாள். நர்மதா அம்மாளைக் காரில் இங்குமங்கும் அழைத்துச் செல்லுமளவுக்குக் கார் ஓட்டும் திறமையும் பெற்றுவிட்டாள். இன்னும் இரண்டு மாத காலப் பயிற்சிக்குப் பின்னர் தேர்வு. அதில் வெற்றி பெற்றுவிட்ட பின்னர் அவள் என்ன செய்யப் போகிறாள்? உள்ளூற ஒரு கவலை அவளை மெல்ல அரிக்கத் தொடங்கியது.

அச்சமயம் ஒரு ஞாயிற்றுக் கிழமை சாப்பாட்டறையில் அவர்கள் இருவரும் காப்பி டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் நர்மதா திடீரென்று ஆரம்பித்தாள்:

வாரியாரிடம் கேட்க வேண்டிய கேள்வி!



✖ மு. நடராஜ கரையாளர், செங்கோட்டை
கே: இட ஒதுக்கீடு பிரச்னை எதில் போய் முடியும்?
ப: மேலும் பலவிதமான பிரச்னைகள் பெருகுவதற்கு இடமளிப்பதில்!

✖ எஸ், முல்லை மணாளன், சென்னை 24
கே: நன்றி சொல்லும் பழக்கம் நல்லதா?
ப: நல்லதுதான். அதைவிட நல்லது, அப்படி இருப்பது.

✖ டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி
கே: தோல்விக்கும் கடுகுவிற்கும் உள்ள தூரம் எவ்வளவு?
ப: பல சமயம் அது என்னைத்தழுவியிருக்கிறது. சில சமயம் நான் நழுவிப் போயிருக்கிறேன். தோல்விகளைச் சந்திப்பதில் ஆபத்தில்லை. அதன் விளைவாகத் தோல்வி மனப்பான்மை ஏற்படாமல் இருந்தால் வெற்றி.

✖ கா. மு. பாரூக், நங்கநல்லூர்
கே: வாழ்கையில் உயரவேண்டும் என்று நினைப்பவன் தான் உயர்ந்த பின் என்ன நினைப்பான்?
ப: மற்றவன் உயரக் கூடாது என்று (இது பெரும்பாலானவர்களின் நினைப்பு). தாங்கள் சந்தித்த தொல்லைகளையும் தடங்கல்களையும் எப்படிச் சமாளித்தோம் என்று சொல்ல மாட்டார்கள் பலர். அவனும் விழுந்து, எழுந்து வரட்டுமே என்றுதான் நினைப்பார்கள். அல்லது வரக் கூடாது என்று நினைப்பார்கள். உதாரணமாக ஒருவர் ரேஷன் கார்டை வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு எந்த பாரத்தில் மனு செய்யவேண்டும், யார்யார்கையெழுத்தை எங்கு வாங்கி, எந்த ஆபீசில் எந்த மாடியில், எந்தக் கவுண்டரில் கொடுத்து எத்தனை நாள் கழித்து வாங்கிக்கொள்ள வேண்டும் என்பவைகளை ஏகப்பட்ட அலைச்சலுக்குப் பிறகு அவர் தெரிந்து கொள்கிறார். யாராவது ஒருத்தர், ''ஏன் ஸார், ரேஷன் கார்டை மாற்ற வேண்டும். என்ன 'ப்ரொஸீஜர்?' ''என்று கேட்டால்,'' ''ரேஷன் ஆபீசில் போய்க் கேட்டுப் பாருங்கள்'' என்றுதான் சொல்வார்!'

✖ எம். விஜய சேகர். துபாய்
கே: உங்கள் புகைப்படத்தை ஏன் இந்தப் பகுதியில் போடுவதில்லை?
ப: இது 'அடல்ட்ஸ் ஒன்லி' பத்திரிகை அல்ல என்பதால். சிறுவர் சிறுமிகளும் படிக்கிறார்கள். அவர்கள் பயந்துவிடக்கூடாதே என்றுதான் போடவில்லை.

பரிசு பெறுவர்:
ரேவதி சிவராமன்
ஜி. 27 ஸ்பிக் நகர், தூத்துக்குடி - 628005

''உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். மனம் விட்டு உண்மையை நீ சொல்லணும்.''

கையில் பிடித்திருந்த காப்பிக் கோப்பையைத் திகைப்புடன் மேஜை மேல் வைத்துவிட்டு மாதங்கி குழப்பத்துடன் விழித்தாள்.

''நீ உன் வாழ்க்கையைப் பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வரணும் இல்லையா? சின்ன வயசுப் பெண். வெறும் பெயரளவில் நடந்த பொம்மைக் கல்யாணத்தை வெச்சுக்கிட்டு உன்னையே நீ பாழாக்கிக் கொள்ள முடியாதல்லவா...பத்தாம் பசலித்தனத்தை உதறிவிட்டு இந்தக் காலத்துப் பெண்ணாக நீ நினைக்கவும் செயல்படவும் தெரிஞ்சுக்கணும்னு ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கேன் இல்லையா?''

''என்ன சொல்றீங்க... ஒண்ணுமே புரியலையே...'' மாதங்கி மெல்லிய குரலில் வியப்புடன் கேட்டாள்.

''அந்தக் காலத்தில் நான் பார்த்த நாடகத்தின் ஒரு காட்சி ஞாபகத்துக்கு வரது. கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்ற முடியலையேன்னு கோவலன் கலங்கிக் கொண்டு பாடுவான். அதுபோல உன் கழுத்தில் விழுந்த மாலைக்குத் தனியானதொரு மகிமை ஏதாவது ஏற்பட்டு விட்டதா என்ன?... வற்புறுத்தலுக்கு இணங்கி உன் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டுக் கோழை போல் ஒதுங்கிக் கொண்டு விட்ட ஹர்ஷனையே நீ நினைச்சுக் கொண்டு ஏன் கலங்கணும்?

''கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்றித் தூர வைக்க முடியும்னு நீ ஏன் நினைச்சு வாழ்க்கையை மாத்தி அமைச்சுக்கக் கூடாது?''

''அம்மா!..'' மாதங்கி வியப்பும் துயரமுமாக அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஒரு வருஷ காலம் நீயும் ஹர்ஷனும் பிரிஞ்சு இருந்துட்டு இருவரும் மனம் ஒப்பினால் எவ்விதச் சிக்கலுமின்றி விவாகரத்து செய்து கொள்ள முடியும். உன் அழகுக்கும் உன் படிப்புக்கும் உன் குணத்துக்கும் வேறே நல்லவனாக ஒரு கணவன் கிடைப்பான். வற்புறுத்தலில் இணைந்த கல்யாணத்திலே ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி, நீடித்து அந்தத் துன்பத்தில் உழல வேண்டிய அவசியமில்லை. விடுதலை பெற்றுக் கொள்ள உரிமை இருக்கு....புரிஞ்சுதா?....''

விவாகரத்து பற்றி நர்மதா ஏன் திடீரென்று பேசுகிறாள்? மாமியார் கஸ்தூரி எடுத்துவிட்டிருக்கும் முடிவா?

நேரிடையாகத் தான்கடிதத்தில் அவளுக்கு எழுத அஞ்சிக் கொண்டு தோழி மூலம் இப்படித் தெரிவிக்க விரும்புகிறாளா?...

தொண்டைக்குள் என்னவோ அடைத்த உணர்வில் கரை ஒரத்து இமைகளில் கனத்த நீரைச் சமாளித்துக் கொண்டாள் மாதங்கி.

''என் கணவர் விடுதலையை விரும்பினால் அவருக்கு ஒரு தொல்லையாக இருந்து அவரை இம்சிப்பதை நான் விரும்பவில்லை. அதில் அர்த்தமும் இல்லை. இதைப் பற்றி யோசித்து முடிவுக்கு வர எனக்கு அவகாசம் தேவை...'' மெல்லிய குரலில்.. கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் மாதங்கி பதிலளித்தாள். (தொடரும்)

இரண்டு கிஜாட்டர்கள்

19.4.81

கற்பனை வில் இதோ,
பேனா அம்பு இதோ.
வில்லிலிருந்து அம்பு புறப்படுகிறது இதோ.
கால வானத்தில் பயணம்.
1981.....1986.....
அம்பு போய்க் கொண்டிருக்கிறது.
1991....1996....
அம்பு போய்க் கொண்டிருக்கிறது.
அம்பு அந்தக் காலண்டரில் பாய்கிறது. நிற்கிறது.
3–5–2,001.

அந்தக் கிராமத்தில் மரங்கள் மண்டையாட்டின. புற்கள் புன்சிரித்தன. புறாக்கள் படபடத்தன. சாலைகள் காலை நீட்டிப் படுத்திருந்தன. ஆகாயத்தில்.... அந்தரத்தில் அந்தப் பூச்சி வந்து கொண்டிருந்தது.

அருகில் தெரிய... அது பூச்சியல்ல. எந்திரம். பறக்கும் எந்திரம். சின்ன சைஸ் ராக்கெட். இரண்டு எட்டுக்கால் பூச்சிகள் தப்பு செய்து கொண்டிருப்பது போல் பதினாறு கால்கள் தெரிந்தன. உடலெங்கும் பளீரிடும் விஞ்ஞான வஸ்துக்கள்.

அது அறுந்துபோன பட்டம் போல் மெதுவாய் ஆடி, ஆடி, ஆவணி, ஆவணி, புரட்டாசி....ச்சை! ஒரு நல்ல நெல் வயலின் நடுவான நடுவில் உட்கார்ந்து கொண்டது.

ராக்கெட்டுக்கு உள்ளே...

''இந்த அற்புதமான நிமிடத்துக்காக நாம் எத்தனை பாடுபட்டோம்'' என்றான் மட்கர் சாபூரியல்.

மட்கர் என்பது பெயர்.

சாபூரி என்பது மொழி. (பேல்பூரியின் தம்பியல்ல.)

'என்றான் மட்கர்' என்றதும் மட்கருக்கு வயது முப்பதுக்குள் என்று நீங்களாக நினைத்துக்கொண்டது தப்பு. இந்தாருங்கள் அழிரப்பர். அழித்துவிடுங்கள்.

மட்கருக்கு வயது அதிகம். பதினேழு வயதில் 'தஸ்டில்' உபயோகிக்கும் பேத்தி இருக்கிறாள். (தஸ்டில் என்றால்... இங்கே 'கேர்-ஃப்ரீ' போல கிஜாட்டில் உபயோகத்திலிருக்கும் 'டவல்')

கிஜாட் என்றால்....?

நகரம்? — இல்லை.

நாடு? — இல்லை.

பின்? — உலகம். பூமியைப் போன்ற ஒரு உலகம்.

மேலே உளறுமுன் கொஞ்சம் விவரங்கள்.

யுனிவர்ஸில் ஆயிரக்கணக்கான மில்கி வேக்கள் இருப்பதாக நம்பப் படுகிறது. படுகிறதா, அந்த மில்கி வேக்களில் பலப்பல ஸோலார் சிஸ்டங்கள் இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. படுகிறதா, அந்த சிஸ்டங்களில் பூமியைப் போலவே மனித உயிர்களைக் கொண்ட பல உலகங்கள் இருக்கலாம் எனவும் நம்பப் படுகிறது.

இப்போது 'கிஜாட்'டை உங்களால் ஜீரணிக்க முடியும். மேற்கண்ட இஞ்சி மொரப்பாவை மறுபடி படித்தால் கொஞ்ச நஞ்ச சந்தேகங்களும் சடுதியில் அகலும்.



மட்கரின் வயதில் தொடங்கினேம். மட்கருக்கு மண்டை முழுக்கமயிர். போன வாரம் தலையில் காணுமல் போன சின்ன பென்சில் இன்னமும் தேடப்பட்டுக் கொண்டிருக்கிறது. மூக்கின் மேலிருந்து கீழ் பட்டாணி சைஸில் குழந்தைகள் இருந்தால் சறுக்கலாம். பற்கள் பழுதடைந்திருந்தன. உடைந்துவிடும் ஒரு பொருளில் உடைகள் செய்யப்பட்டிருந்தன. கோழி மூடும் கூடை போல, தலையை முழுவதுமாய் ஒரு கண்ணுடிக் கூடை மூடி யிருந்தது.

மட்கருக்கு எதிரே ஒரு கட்கர். அவன் இந்தச் சிறு கதையில் மட்கர் பேசிய முதல் வசனத்துக்கு இத்தனை பாரர்க்கள் தள்ளி இப்போதுதான்...

''ஆமாம்'' என்ருன்.

''மூன்று வருடங்கள்! இந்த மனித கிரகத்தில் இறங்க நமக்கு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. என்னுடைய மனைவி தன் தற்காலிகக் கணவனுடன் சேர்ந்து மூன்றரைக் குழந்தைகள் பெற்றிருப்பாள்!''

''மட்! மனைவி பற்றிப் பேச இதுவா நேரம்?''

''பின்னே? நமக்கு அடுத்த வேலை இந்த மனித கிரகத்தில் கால் வைப்பது. அது இப்போதல்ல. இன்னும் அறுபத்தி ஆறு நிமிடங்கள் கழித்து. நான் கொஞ்சம் தூங்கப் போகிறேன். நீ டெலிவிஷன் தொடர்பை நிறுத்திவிடு. மட்கர் தூங்கும்போது அசிங்கமாக இருப்பான். கிஜாட்டின் கோடி கோடி மக்கள் அதைக் காண வேண்டாம்.''

''மட்! நமக்கு அப்படி உத்தரவில்லை.''


''முட்டாளே! எச்சில் விழுங்கக் கூட உத்தரவை எதிர்பார்க்கிருய். நாம் இப்போதைக்கு கிஜாட்டின் தலைவர்கள். சரித்திரம் படைக்க இருப்பவர்கள். அவர்கள் நமக்காகக் காத்திருக்கிருர்கள்.''

கட்கர் கப்சிப்பினன்.

சரியாக ஐம்பது நிமிடங்கள் உறங்கிவிட்டு எழுந்தான் மட்கர்.

''மட்! இறங்க ஆயத்தமாவோமா?''

''ஏன் மட், இந்தக் கிரகத்தின் மனிதர்களுடன் எப்படிப் பேசுவாய்? மொழி இடிக்குமே?''



''கட்கர் நீ எனக்கு உதவியாளனய் இருக்க லாயக்கு இல்லை. நாம் இந்தக் கிரகத்துக்கு வருவதற்கு முன்னுல் ஆராய்ச்சி ராக்கெட்டுகள் இரண்டு அனுப்பி யிருக்கிறேம். அவை மோப்பம் பிடித்துக் காற்றில் கலந்

திருந்த ஒலி அலை வரிசைகளை அப்படியே பதிவு செய்து கொண்டு வந்தன. நமது கிஜாட்டில் கிந்தியா என்னும் நாட்டில் கிமிழ்நாடு என்னும் மாநிலத்தில் பேசப்படும் கிமிழ் மொழி இங்கேயும் பேசப்படுகிறது என்பதை நமது கம்ப்யூட்டர்கள் கண்டு பிடித்தன. விளைவாக நான் கிமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்டு ஆறு மாதம் கிமிழ் மொழி கற்று வந்தேன். எனவே....''

''கிமிழ் மொழி பேசும் ஒருவனை நாம் சந்தித்தாக வேண்டும்.''

''ஆமாம்'' என்றான் மட்கர்.

''மட்கர்! கட்கர்! நீங்கள் கிரகத்தில் இறங்கலாம்'' என்று கிஜாட்டின் கண்ட்ரோல் முனையிலிருந்து உத்தரவு வர...

ராக்கெட்டின் கதவைத்திறந்தான் மட்கர்.

''மட்! உன் வாழ்வின் மறக்க முடியாத முக்கிய சம்பவம் இதோ உனக்கு முன்னால் ஒரு அடி தூரத்தில் இருக்கிறது. இன்னொரு மனிதர் வாழும் கிரகத்தில் கால் வைத்த முதல் கிஜாட்டன் என்கிற பெயர் உனக்கு. சில வருடங்கள் கழித்துப் பள்ளிக் குழந்தைகள் உன்பெயரைமனப்பாடம் செய்வர்.''

மட்கருக்குச் சிலிர்த்தது.

அடுத்து கட்கர் இறங்கினான். காற்று. ஓடி வந்து அணைத்தது. சூரியன் சுள்ளினான்.

சரியாகஒரு மணிநேரத்துக்கு முன்னால்..

நேபாள எல்லையில் இருக்கும் நமது இந்தியாவின் ரேடார் நிலையத்தில்... திரையில் கண்களைப் புதைத்து வைத்திருந்த ஆஃபீஸர் திடுக்கிட்டான்.

வலது மூலையில் அந்தப் புள்ளி தோன்றி வேகமாக, அதி அதி வேகமாக நகர... இதென்ன அனுமதி பெறாத வகையில் ஆகாய டிராஃபிக். கண்ட்ரோல் டவரின் மூலம் ''யார்? யார் இந்த விமானத்தில் உத்தரவு இல்லாமல் இந்த லைனில் குறுக்கிடுவது? மட விமானியே! உன்னை முதலில் அறிமுகப் படுத்து'' என்று ஆங்கிலத்தில் அலறினான்.

''காப்டன், அது விமானம் அல்ல. சிறிய பூச்சி ராக்கெட்போலத்தெரிகிறது.தொடர்பு கொண்டோம். பதில் இல்லை. அதில் மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தானாக இயங்கிப் பறக்கிறது என்று நம்புகிறோம். தென்னிந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது'' என்று சர்வே விமானத்திலிருந்து பதில் வர...

ஆஃபீஸர் உடனே செயல்பட்டார்.

ஏர் டிஃபென்ஸ் கமாண்டருக்குச் செய்தி அனுப்பினார். மற்ற ரேடார் நிலையங்களுக்கு உயர் அதிகாரிகளுக்கு மடமடவென்று செய்தியை அறிவித்தார்.

சென்னை மீனம்பாக்கம் கண்டு பிடித்தது— அந்தப் பூச்சி ராக்கெட் சென்னைக்கு மிக அருகில் இறங்கிக் கொண்டிருப்பதை.

இரண்டு வேன்களில் என்ஜினீயர்கள், ஸ்பேஸ் ரிசர்ச் விஞ்ஞானிகள் புறப்பட்டார்கள்.

மண் சாலையில் மட்கர் நடக்க, நடக்க..

மனிதர்களின் நடமாட்டத்தைக் கண்டான். மகிழ்ந்தான்.

—தூரத்தில் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக அந்தப் பூச்சி ராக்கெட்டை அடைந்து அதிசயமாகப் பார்க்கத் தொடங்கினார்கள்.

மாடுகளை ஓட்டி வந்தஒருவனை நிறுத்தினான் மட்கர். கிமிழில் ஒரு மரியாதைச் சொல் கற்றுத் தந்தார்களே, என்ன அது? ம்...ஆ... அது... ''வணக்கம்'' என்றான்.

விவசாயி விழித்தான். ஹிஹிஎன்றான்.

''உங்களுக்குக் கிமிழ் மொழி தெரியுமா?''

''தெரியாதுங்களே....''

''அட! இப்போது நீ சொன்ன பதில் கிமிழ் மொழிதான்.''

விவசாயி சிரித்தான். ''தமிழுங்க.''

''கட்கர், நம் உலகத்தின் கிமிழ் மொழிக்கு இங்கே 'தமிழுங்க' மொழி என்று பெயர் போலும். என் பெயர் மட்கர்'' என்று கையை நீட்டினான்.

''இருக்கட்டுங்க'' என்று நெளிந்தான்.

''நாங்கள் கிஜாட்டிலிருந்து வருகிறோம்.''

''பட்டணத்திலேர்ந்தாங்க?''

இந்த வார்த்தை மட்கருக்குப் புரியவில்லை. சும்மா தலையசைத்தான்.

''உங்கள் உலகத்துக்குப் பெயர் என்ன?''

''புரியலேங்க. நேராப் பண்ணையார் வீட்டு வாசல்ல ஒரு படிச்ச—தம்பி இருக்கும். அத்த கேளுங்க. வெவரமா சொல்லும்..''

அப்போது ஒரு பஸ் வந்து புகை பரப்பி நிற்க....போர்டில் 'சென்னை' என்று படித்து, ''வா, வா அதில் ஏறிச் செல்லலாம். சென்னை என்பது நகரமாக இருக்கும். இது கிராமம். நாம் சென்னையிலே விசாரித்து அரசாங்கத் தலைவரைச் சந்திக்க வேண்டும்'' என்றான் மட்கர்.

இருவரும் ஓடிச் சென்று ஏறிக் கொள்ள பஸ் சென்றது.

இரண்டு வேன்களும் வந்து மண்சாலையில் நிற்க, தபதபவென்று எல்லோரும் குதித்தார்கள்.

பூச்சி ராக்கெட்டைச் சுற்றிச் சட்டை போடாத பெரியவர்கள், சின்னப் பையன்கள் இருபது, முப்பது பேர் சூழ்ந்திருக்க...

''பயந்து பயந்து சரியாகவே பரீட்சை எழுதவில்லை நான்!''

''ஏன்?''

''பரீட்சை ஹாலின் மத்தியில் அமர்ந்திருந்த சூபர்வைசருக்கு மாறுகண். எங்கே பார்க்கிறார் என்றே தெரியவில்லை!'' -கே. வி. கோபால்



அவர்களை விலக்கினார்கள்.
என்ஜினியர்கள் சோதித்தார்கள்.
விஞ்ஞானிகள் யோசித்தார்கள்.

எந்த நாட்டின் பெயரும் இல்லை. கொடியும் இல்லை. இப்படிஒரு ராக்கெட் இந்த விதத்தில் எந்த நாடும் தயாரிக்கவேயில்லை.

மெல்லக் கதவைத் திறந்து உள்ளே இரண்டு ஸ்பேஸ் ரிசர்ச் மனிதர்கள் சென்றார்கள். கசமுசாவென்று கம்ப்யூட்டர் பேனல்கள் ட்யூப்கள், வயர்கள், விளக்குகள், சிஸ்டங்கள், சாபூரி மொழியில் ஏதோ வாக்கியங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்க...

''ப்ரொஃபஸர்! இது என்னவென்று ஓரளவு என்னால் யூகிக்க முடிகிறது'' என்றார் இளம் விஞ்ஞானி.

''சொல்லுங்கள்.''

''கடந்த இருபது வருடங்களாக உலகம் முழுவதும் ஒரு விசித்திர இயக்கம் தீவிர மடைந்து வருகிறது. உலக வாழ்க்கை வெறுத்து, தற்கொலை செய்து கொள்வது போல... உலகில் போர்களும், நவீன விஞ்ஞானத்தின் ஆதிக்கங்களும் மனிதனின் அமைதியான, நிம்மதியான வாழ்க்கையைக் கெடுப்பதாகக் கொதிக்கும் ஒரு படையினர் உலகையே அழிக்கத் திட்டம் போட்டு வருகின்றனர் இல்லையா?''

''போன மாதத்தில் ஐரோப்பா கண்டத்தில் திடுதிப்பென்று ஒரு நாட்டையே சக்தி வாய்ந்த அணுக்கதிர் இயக்கக் குண்டுகளால் அழித்தனர். படித்தேன். அதுபோல...?''

''இந்த உலக அழிவுப் படையினரால் ஏவி விடப்பட்டிருக்கும் ராக்கெட்டாக இது இருக்கலாம்.''

''அப்படியென்றால் இது மாபெரும் விஷயம். பெரிய ஆபத்து. உடனடியாக இதை அழிக்க வேண்டும்.''

''ப்ரொஃபஸர், இதை நாம் அழிப்பதை விடக் கடலில் மூழ்கடித்து விடுவதுதான் சிறந்தது.''

''வாருங்கள் செய்தியைச் சொல்லித் தலைமை இடத்திலிருந்து உத்தரவு பெறுவோம்'' என்றார்.

இரண்டு பேரும் ராக்கெட்டிலிருந்து வெளியேறினார்கள்.

கண்டக்டர் அவர்களிடம் வந்தபோது...

''எங்கே போகணும்?'' என்றான்.

''சென்னைக்கு. எங்களிடம் உங்கள் இந்தியா பணமும், ஏன் உலகப் பணம் எதுவும் இல்லை. சொன்னால் ஆச்சரியப்படுவாய். நாங்கள் உங்கள் உலகத்திற்கு விருந்தாளிகள். எங்கள் உலகம் கிஜாட். உங்கள் இந்தியா நாட்டின் தலைவரைச் சந்திக்க வேண்டும். இனி கிஜாட்டிற்கும், உங்கள் கிரகத்திற்கும் போக்குவரத்து ஆரம்பித்துவிடும்.''

''சர்த்தான். மறை கழண்ட கேசா? காசை எடுய்யா.''

மட்கர் விழித்தான்.

''நீங்கள் பேசுவது சரியாகப் புரியாவிட்டாலும், எங்களை அவமதிப்பது போல் தெரிகிறது. நாங்கள் சாதாரண ஆட்கள் இல்லை. கிஜாட்டின் தலைசிறந்த விண்வெளி வீரர்கள். உங்கள் உலகத்திற்கு வருகை புரிந்திருக்கும் கௌரவ விருந்தினர்களை மரியாதையாக நடத்துங்கள்.''

''அண்ணே, வண்டியை நிறுத்து. இது சரிப்பட்டு வராது. மரியாதை வேணுமாம். கொடுப்போம்'' என்றார் கண்டக்டர்.

வண்டி நின்றது. எல்லாப் பயணிகளும் மட்கர், கட்கரைப் பார்த்துத் திட்டினார்கள், அவர்களுக்குச் சரியாகப் புரியவில்லை.

''பைத்தியம் மாதிரி வேஷம் போடறானுங்க. திமிர்! புலவர் மாதிரி தூய தமிழில் பேசறதைப் பாருங்க. யோவ், இப்போ காசைக் கொடு. இல்லே கீழே இறங்கு.''

மட்கருக்குக் கொஞ்சம் புரிந்தது. தன்னை அவர்கள் நம்பவில்லை.

''இந்தக் காமிராவை வைத்துக் கொள். என்னிடம் பணம் இல்லை'' என்றான் மட்கர்.

வண்டியிலிருந்த ஒரு இளைஞன் பரிதாபப் பட்டு, ''ஏதோ ஃபாரினர்ஸ். எக்ஸ்சேஞ்ச் தீர்ந்து போச்சு போலிருக்கு. நான் அந்தக் காமிராவை வாங்கிக்கறேன். வண்டியை எடு'' என்று பிரச்னையைத் தீர்த்துவைத்தான்.

சென்னையில் இறங்கினார்கள் இருவரும்.

விசாரித்தார்கள்.

முதலில் மாநிலத்தின் முதல்வரைச் சந்தித்து விளக்கி, நாட்டின் தலைவரைச் சந்திக்க முடிவெடுத்து, மாநில முதல்வரின் வீட்டின் வாசலில் கூர்க்காவிடம்...

''நாங்கள் கிஜாட் உலக மனிதர்கள். அனுமதி உள்ளே. உங்கள் முதல்வரிடம் பேசிக் கொள்கிறோம்.''

''அதெல்லாம் முடியாது'' என்றான் கூர்க்கா.

மட்கருக்கு கூரிய மூக்கின் மேல் பாகத்தில் வந்தது கோபம். ''பார்த்தே ஆக வேண்டும்'' என்று கூர்க்காவை அறைய... அவன் விசில் ஊத... இரண்டு போலீஸ்காரர்கள் வந்து மட்கரைப் பிடித்தார்கள். சில மணிக்குப் பிறகு ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரிடம்...

''ஐயா! நாங்கள் கிஜாட் உலகத்தைச் சார்ந்தவர்கள்.''

''முதல்ல உள்ளே லாக்—அப்ல வை. அப்புறமா கீழ்பாக்கம் அனுப்பலாம்'' என்றார்.

மிகப் பெரிய கிரேன் ஒன்று அந்தப்பூச்சி ராக்கெட்டைக் கடலுக்குள் போட்டதும் விஞ்ஞானிகள் பெருமூச்சு விட்டனர்.

கிஜாட்டின் விஞ்ஞானிகள் கவலைப்படத் துவங்கினார்கள்!



வீட்டுக்காரர் : (நண்பரிடம்) மெல்ல வருவேன் என்று சொல்லியனுப்பி யிருந்தீர்கள் அல்லவா? அதனால் அவல் வாங்கி வைத்திருக்கிறேன்!

சிரிப்புக் கொத்து

மனைவி: "என்னங்க இது? காலைலே "பேண்ட்" சட்டையோடு ஆபீஸ் போனீங்க! இப்போ ஜட்டி பனியனோடு வரீங்க?"

கணவன்: "பத்திரிகைகளில் வருகிற ஜோக்கை நம்பி ஹோட்டலில் காசில்லாமல் டிபன்சாப்பிட்டேன்! அந்த முதலாளி என்னடான்னு மாவரைக்கச் சொல்லாமல் "பேண்ட்" சட்டையைப் பிடுங்கிட்டார்."

-எஸ். ரெங்கசாமி



நண்பர்: என்ன டாக்டர்! ஏன் டல்லா இருக்கீங்க?

டாக்டர்: ஒண்ணுமில்லே! ஒருதரம் உடம்பை செக்கப் பண்ணிக்கணும்! நல்ல டாக்டரா யோசிச்சிட்டிருக்கேன்.

நண்பர்: நீங்களே டாக்டர்தானே?

டாக்டர்: தெரியும்! ஆனால் என்பீஸ் அதிகமாயிற்றே! —ஸ்ரீ நிவாஸன்



"நீங்க பெண்வீட்டார் பக்கமா? இல்லே பிள்ளை வீட்டார் பக்கமா?"

"ஆளை விடுப்பா! இப்ப நான் டைனிங் ஹால் பக்கம்!" வெ. சீதாராமன்

இந்தப் பைத்தியம் எப்படி?

ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் புதிய டாக்டர் நோயாளிகளைப் பார்வையிட வந்தார்.

முதல் அறையில் இருந்தவன் "ஹாய் டார்லிங்" என்று சொல்லிக் கொண்டு டாக்டரின் மேல் பாய்ந்தான்.

இவன் ஒரு பெண்ணைக் காதலித்து அவள் வேறு ஒருவனை மணம் செய்து கொண்டதால் இவனுக்குப் பைத்தியம் பிடித்துள்ளது என்று விளக்கினார் கூட வந்த அஸிஸ்டெண்ட்.

வேறு அறையில் நுழைந்ததும் மற்றொருவன் 'ஹோ, ஹோ ஹு' என்று கத்திக் கொண்டிருந்தான். "இவனுக்கு என்ன?" என்றார் டாக்டர். "முதல் அறையில் உள்ள பைத்தியத்தின் காதலியைக் கல்யாணம் செய்து கொண்டவன் இவன்" என்று விளக்கினார் அந்த அஸிஸ்டெண்ட்..

—எஸ். சந்திரசேகர்

கேள்வி: "நிருபர்களில் முட்டாள் யார்?"

பதில்: "முத்தக்காட்சியில் நடிக்கத் தயாரா என்று பத்மினி கோலாப் பூரியிடம் கேள்வி கேட்பவர்!"

-உ. ராஜாஜி

அவர்: "நான் யார் வீட்டுக்காவது போனால் அவங்க 'வாங்கோ'ன்னு சொல்லிக் கூப்பிடறதைவிட 'வணக்கம் சொல்லி வரவேற்கிறதைத்தான் விரும்பறேன்!"

இவர்: "ஏன் அப்படி?"

அவர்: "'வாங்கோ' வில் 'Go' இருக்கு! 'வணக்கம்ல 'Come' தானே இருக்கு!"

-சி. பூபரல் சிங்



கிழவர் 1: "கைத்தடி இல்லாதபோது எதையோ இழந்தது மாதிரி இருக்கு!"

கிழவர் 2: "வேறு எதை... அந்தக்கைத் தடியைத் தானே இருக்கும்!" —உ. ராஜாஜி

நாணயமுள்ள திருடன்!

சிறைச்சாலையிலிருந்து கைதியை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும் வழியில், காவலர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு துலீப் தவே தப்பியோடி விட்டான். ஆத்திரம் அடைந்த மாஜிஸ்திரேட், அஜாக்கிரதையை வன்மையாகக் கண்டித்து விட்டு அடுத்த குற்றவாளியை ஆஜர் செய்யும்படி உத்தரவிட்டார். அப்பொழுது தலைதெறிக்க ஓடோடியும் வந்து மாஜிஸ்திரேட்டின் எதிரில் பணிவோடு கைகட்டி நின்றான், துலீப் தவே. குழுமியிருந்தோர் பிரமித்தனர்.

தவே கூறினான்: "ஒரு சைக்கிளைத் திருடிய குற்றம் என் மீது சுமத்தப் பெற்றுள்ளது. குற்றத்தைகோர்ட்டாரிடம் ஒப்புக்கொண்டு தண்டனையை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்துடன்தான் வந்தேன். ஆனால் வரும் வழியில் தெருமுனையில் நின்று கொண்டிருந்த என் தகப்பனார் மகனைக் காவலர் கைவிலங்கு பூட்டி அழைத்துச் செல்லும் அவலக் காட்சியைக் கண்ணுற்றதும் நினைவிழந்து விழுந்து விட்டார். அவருக்கு உதவ யாரும் இல்லாததால், நான்போலீசாரிடமிருந்து தந்திரமாகத் தப்பித்து, அவரை ஒரு ரிக்ஷாவில் ஏற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு இதோ ஓடோடி வந்திருக்கிறேன்."

சொன்னவர்: திலீப் தாஸ்
எழுதியவர்: 'கல்கத்தாமிக்கி'

நான்கு தவறுகள்: போட்டி முடிவு

படங்களில் ஓவியர் ஜெயராஜ் தேர்ந்தெடுத்த நான்கு தவறுகள்

1. பதிலில் ஒரு புதுயுகம் — ஓவியர்: கல்பனு. தவறு: இடதுபுறம் பந்து பிடிக்க முயல்பவனின் இடது கை அமைப்பு.

2. நந்தியாவட்டையும் பவழ மல்லிகையும் ஓவியர்: கங்கன் — தவறு: சிறுவனின் ஒரு கால் தண்ணீரில் மூழ்கியும் ஒருகால் தண்ணீருக்கு மேலும் இருப்பது.

3. சிவம் — தவம்—சுந்தரம்—ஓவியர்: வர்ணம் தவறு: பெண்ணின் பாதத்தில் நான்கு விரல்களே வரையப்பட்டுள்ளன.

4. ஒரு நடிகை ஜோசியம் பார்க்கிறுள் — ஓவியர்: மாருதி. தவறு: கிளி ஜோசியக் காரரின் உள்ளங்கால் விரல்கள் அமைப்பு.

மேற்படி நான்கு தவறுகளையும் கண்டு பிடித்து எழுதி ரூ.500 பரிசைப் பகிர்ந்து கொள்ளும் 96 வாசகர்களின் விவரம் பின் வருமாறு:

1. ஆர். செல்வகனி, அரியநாயகிபுரம்; 2. என். மோகன்தாஸ், புதுக்கோட்டை; 3. கே. கெளரி, காரைக்கோவில் பத்து; 4. மிஸஸ். ஓமனு, ஆலப் புழை; 5. புருஷோத்தமன், சேலம்; 6. சரோஜா கோபால் மைசூர்; 7. லலிதா கிருஷ்ணன், கொச்சி; 8. லலிதா ராமசாமி, ஆவடி; 9. எம். சிவகுமார், விருத்தாசலம்; 10. கோதைநாச்சியார், சிவகாசி; 11. ஸ்ரீமதி மீனு, சென்னை-4; 12. ஸி. கே. துரைசாமி, கோவை—1; 13. ஸி. நடராஜன், திருப்பூர்; 14. பி. செல்வராணி, அகமதாபாத்-13; 15. கே. எஸ். சந்திரா, ஸ்ரீரங்கம்; 16. ஆர். அரிகோபி, குடியாத்தம்; 17. எஸ். பங்கஜம், திருநின்றவூர்; 18 என். வீரய்யன், திருவாரூர்; 19. வி. நீலமேகம், கடலூர்-1; 20. சுப்புலக்ஷ்மி சுவாமிநாதன், பம்பாய்-70; 21. எம். எஸ்.ரேணுகா, ஜாம்ஷெட்பூர்; 22. ஜி. ராஜி, திண்டிவனம்; 23. ராமேசுவர் பாபு, கரியபட்டி; 24.ஆர். ரேவதி, எரம்பட்டி; 25. பா. மணி, திருவண்ணுமலை; 26. எஸ். வி. பரமேசுவரன், சென்னை-4; 27. எஸ். கிருஷ்ணம்மாள், ராமேசுவரம்; 28. எம். நவாப்ஜான், பழனி; 29. என். ஜயந்தி, காஞ்சீபுரம்; 30. டி. கோவிந்தசாமி, கடலூர்,; 31. இரா. பாக்கியவதி, திருக்காட்டுப்பள்ளி; 32. எம். டேவிட், ரங்கபாரா வடக்கு; 33. ஓ. எம். பிரகாஷ்பாபு, பாண்டிச்சேரி; 34. ஜி. முத்துசுப்பிரமணியன், சேலம்-5. ; 35 கே. எஸ். ஸ்ரீகாந்தம், ஸ்ரீரங்கம்; 36. ஆர். மங்கலட்சுமி, சென்னை-14; 37. ம. பாரதி, கோவை-38; 38. ரா. ஸ்ரீதர், சென்னை-40; 39. வி. சுகன்யா, திருச்சி-14; 40. எம். எஸ். வித்யாலக்ஷ்மி, செங்கோட்டை; 41. தீப சிவகுமார் உடுமலைப்பேட்டை; 42. எம். சம்பத், வேலாயுதம்பாளையம்; 43. டி. கதிர்வேலு, வடலூர்; 44. எஸ். கணேசமூர்த்தி, பாண்டிச்சேரி-1; 45. தமிழரசி சுப்பிரமணியம், மோகனுர்; 46. ஹரீஷ்பாபு, மதுரை-10; 47. ஆர், ஆண்டியப்பன், கரூர் 48. எஸ். வைத்தியநாதன், சென்னை-44; 49. மு. ராம்ராஜ், கிருஷ்ணகிரி; 50. எஸ். செல்வராஜு, மோகனூர்; 51. என். பெருமாள், கரூர்; 52. எஸ். குமார், சென்னை-61; 53.ஹேமலதா,விழுப்புரம்; 54. ஜயலக்ஷ்மி, திருச்சி; 55. ஏ. தேவகுமார், நெடுங்குன்னம் 56. மாலதி வைத்தியநாதன், ஆரணி, 57. பி. நாச்சிமுத்து, சேலம்-3; 58. எஸ். ஆர். எஸ். மணி, அம்பாசமுத்திரம்; 59. எம். சுரேஷ்,சென்னை-102; 60.ஸ்ரீமதி சந்திரிகா சேகர், உடுமலைப்பேட்டை; 61. ஸ்ரீமதி சந்திரா, ஹௌரா -1 62. ரா. ராமமூர்த்தி, திருநெல்வேலி டவுன், 63. ஆர். சந்திரசேகர், இராசிபுரம்;64. எஸ். சுஜாதா திருநெல்வேலி; 65. எம். கே. சம்பந்தன், சென்னை-12; 66. சுபத்ரா, சென்னை-90; 67. என். விஜயலக்ஷ்மி, திருச்சி; 68. எஸ். பழனிசாமி, போடிநாயக்கனூர்; 69. ஏ. ஜோசப், சென்னை-81; 70. ஏ. அம்புஜம், வத்தலக்குண்டு;71. என். சிவராமன், பாலக்காடு-14; 72. எஸ். வீரராகவன், பாலக்காடு;73. ஜே. வசந்தி, அரக்கோணம்; 74. ஏ. சதீஷ், வேலூர்-3; 75. கே. எஸ். பன்னீரன், அறந்தாங்கி; 76. ஜி. ரமேஷ், காரைக்கால்; 77. ஏ. ரஞ்சினிதேவி அரக்கோணம் 78. ஈ. அண்ணுமலை, அரக்கோணம், 79. ஜே. மனேகர் பாபு,வேலூர்; 80. கே. சரவணன், மாயூரம்; 81. கே. ராதிகா, ஸ்ரீவில்லிப்புத்தூர்; 82. எஸ். முத்துலக்ஷ்மி, கோவில்பட்டி; 83. விஜயா பொன்னுத்துரை, தேவாஸ், மத்தியப்பிரதேசம்; 84. ஈ. பாபு, சேலம்-9; 85. எஸ் அருள், கோவை-18; 86. எஸ். லாவண்யா., செங்கல்பட்டு; 87. ரேவதி பிரசாத்,பம்பாய் 88. என். பாஸ்கரன், சேலம்-6; 89. எஸ். ராஜன், சென்னை-34; 90. ஜே. அன்புக்கரசி, சென்னை-19; 91. பி. துரைசாமி, சேலம்; 92. எஸ். என் லதா, சென்னை-30; 93. சரவணதேவி நடராஜன், கடலூர்-4; 94. மிஸ். ஹேமா, கோவை; 95. எம். தர்மலிங்கம், மடுவன்கரை; 96. பெயர்,விலாசம் இல்லை.



ஒரே வீட்டில்தான் வசித்தனர். தாயும் மகனும் அன்னியர்களைப் போலப் பேச்சு வார்த்தையின்றி வாழ்ந்து கொண்டிருந்தனர். ஹர்ஷன் தன் வெளியூர்ப் பயணத்துக்குப் பின்னர் ஊரிலிருந்து திரும்பிய போது வாயில் வராந்தாவில் வேலைக்காரி வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். முன்னைவிட மெலிதாகி விட்டது போல் தெரிந்த ரோவர் அவனைக் கண்டு ஓடிவந்து மேலே விழுந்து கொஞ்சியது. என்னென்னவோ சொல்ல நொய் நொய் என்று புலம்பியது.

''அம்மா மீட்டிங் போயிருக்காங்க. அறைச் சாவிகளை நீங்க வந்தாக் கொடுக்கச் சொன்னாங்க.'' வேலைக்காரி தன் பொறுப்பைக் கழித்துவிட்டு வேகமாகக் கிளம்பி விட்டாள்.

இருட்டிக் கொண்டு வந்ததை உணர்ந்து முன்னறை விளக்கைப் போட்டுவிட்டு ரோவரைத் தோட்டத்தில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றான்.

'ஹோ' வென்று பயங்கரமான நேர் அமைதியில் வீடு மூழ்கிக் கிடந்தது. வீடு பழைய நிலைமைக்கு மாறிவிட்டதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை. முன்னறையில் பத்திரிகைகள் தாறுமாறாக மடிக்கப்பட்டுப் போட்ட நிலையில் கிடந்தன.

சமையலறையில் வேலைக்காரி அவசரமாகக் கழுவி வைத்துவிட்டுப் போன பாத்திரங்கள் மேடை மீது அவியலாகக் கிடந்தன. மாடியில் அவனது அறையில் அவன் கிளம்பிய அன்று உபயோகித்த படுக்கை விரிப்பு மாற்றப்படவில்லை. கழற்றிப் போட்ட பைஜாமா சட்டை தோய்க்கப்படாத நாற்காலி மீது அப்படியே கிடந்தது. நாடை



கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி

இறுகக் கோபத்துடன் தன் அறையை வெறித்துப் பார்த்துவிட்டுப் பயணக் களைப்பு தீரக்குளித்து வேறு உடுத்திக் கொண்டான். படுக்கை மீது கிடந்த அழுக்கு விரிப்பை இழுத்துச் சுருட்டி அறையின் மூலையில் விட்டெறிந்தான். அலமாரியைத் திறந்து சுத்தமானதொரு விரிப்பை எடுத்துப் படுக்கையின் மீது போட்டான். கட்டிலைச் சுற்றிச் சுற்றி விரிப்பை இழுத்து மடித்து மெத்தை மீது ஒழுங்கு செய்வதற்குள் அவனுக்குத் தோள் பட்டைகள் வலித்தன. களைப்பும் பசியும் எரிச்சலை ஊட்டவே மாடிப் படிகளை வேகமாகக் கடந்து சாப்பாட்டறைக்கு வந்தான்.

''ஹாட்கண்டெய்னரில்சாப்பாடு இருக்கு. எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடலாம். எனக்காகக் காத்திருக்கத் தேவையில்லை....'' அம்மா மொட்டையாக எழுதியிருந்த கடிதத் துண்டுடன் ஒரு ஸ்டீல் பாத்திரத்தில் சாப்பாடு தயாராக வைக்கப் பட்டிருந்தது.

''பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த என்னைவிட நேற்று வந்த எவளோ ஒருத்தி அம்மாவுக்கு உசத்தியாகி விட்டாள். ரோவருக்குச் சாப்பாடு போடுவது போல் அல்லவா இந்த அம்மா....'' பற்களைக் கடித்துக் கொண்டான். பசி வயிற்றைச் சுருட்டவே தட்டை எடுத்து வைத்துக் கொண்டு பிரிஜ்ஜிலிருந்து குளிர் நீர் கொண்ட பாட்டிலைத் தூக்கி வைத்துக் கொண்டு கொட்டு கொட்டென்று தன்னந் தனியே மௌனமாகச் சாப்பிடத் தொடங்கினான். அவனுக்கு ஆத்திரமாக வந்தது. இதுநாள் வரை தாய்க்கும் மகனுக்கும் இடையே எத்தனையோ சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அம்மா கஸ்தூரி சமைத்த உணவைத் தன் கையாலே அவனுக்குப் பரிமாறத் தவறியதில்லை. எத்தனை நேரம் கழித்து வீட்டுக்கு வந்தாலும் தூக்கத்தை உதறிவிட்டு அவனுக்குச் சாப்பாடு எடுத்துப் போட வருவது வழக்கம். அத்தனை கருத்துடன் கவனித்த தாய் இப்போது ஒரேயடியாக இப்படி விலகிக் கொண்டு விட்டாளே?....

மனத்தை வேதனை நெருடியது. சாப்பிட்டு விட்டுத் தட்டை அப்படியே மேஜை மேல் போட்டுவிட்டுக் கையைக் கழுவிக் கொண்டு மாடி அறைக்குப் போய் விட்டான்.

தோட்டத்துக்குள் கார் வரும் சத்தம் கேட்டது. ஷெட் திறக்கப்பட்டுக் கதவு மூடும் ஓசையும் கேட்டது. ரோவர் உற்சாகத்துடன் குரைத்தது காதில் விழுந்தது.

ஆனாலும் அவன் எழுந்து கீழே வந்து தாயைப் பார்த்துப் பேச விரும்பவில்லை.

கஸ்தூரிக்கு அவன் வந்து விட்டது புரிந்தது. ஆனால் அவளும் கண்டுகொள்ளவில்லை.

அம்மா பேசட்டும் என்று பிடிவாதமாக மௌனமாக அவன் இருந்தான்.

அவளும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. விளைவு, இருவரும் விரோதிகள் போல் ஒரே வீட்டில் பேச்சு வார்த்தை இன்றி வசித்துக் கொண்டிருந்தனர்.

மாதங்கியை வீட்டை விட்டு அனுப்ப அவன் நிர்ப்பந்தித்ததின் காரணம் என்ன என்று தாயார் அவனிடம் கேட்க முயலவேயில்லை.

'பெரியப்பா வீட்டுக்குத்தானே அனுப்பினீங்க?' — அவனும் கேட்க முன்வரவில்லை.

ஆரம்பத்தில் தான் சமைத்ததை ஃபுட் கன்டெய்னரில் போட்டு மேஜை மீது அவனுக்காக வைத்துவிட்டு விரைவாகத் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, ரோவருக்கு உணவு தந்துவிட்டுத் தன் அறைக்குள் சென்று முடங்கிக் கொண்டாள் கஸ்தூரி.

பின்னர் அந்த வழக்கத்திலும் சில மாறுதல்களைச் செய்யத் தொடங்கினாள்.

''இன்னிக்குச் சிநேகிதிவீட்டிலேசாப்பிடப் போறேன். சமைக்கப் போவதில்லை.''

''இட்லிக்கு அரைத்த மாவு ப்ரிட்ஜிலே இருக்கு. காஸ் அடுப்பு இருக்கு. வேண்டுமானால் ஒரு ஈடு வச்சுச் சாப்பிட்டுக்கலாம்.''

இந்த மாதிரித் துண்டுக் கடிதங்களைக் கண்டு ஹர்ஷன் கோபத்தில் கொதித்துப் போனான்.

தானும் தினமும் வெளியிலேயே சாப்பிட்டு விட்டு வீடு திரும்பத் தொடங்கினான். அதுவும் சில நாட்களில் அலுத்துப் போனது.

காரக் குழம்பு, மெத்தென்ற தோசை... இவைகளை நினைத்து நாக்கு தவித்தது.

இரவு உணவுக்குப் பின் தூக்க மயக்கத்திலே சோர்ந்து போய்த் தன் அறைக்குள் வரும்போது படுக்கையைத் தட்டிக்கொட்டிச் சுத்தமான விரிப்புப் போட்டு, கண்ணாடி கிளாஸில் தண்ணீரும் டம்ளரும், பிளாஸ்கில் சூடான பாலும் யாராவது தயாராக வைத்திருக்க மாட்டார்களா என்றுதான் ஏக்கமாக இருந்தது.

ஒருசில தினங்களுக்குப் பின் அம்மா மேஜை மேல் வைத்துப் போயிருந்த துண்டுக் கடிதத்தை எடுத்துப் படித்து விட்டு அவன் ஆத்திரத்தில் ஆடிப் போய் விட்டான்.



ஒரு கேள்வி — ஒரு பதில்!

"மக்கள் மன்றமே பெரிது!"

— அன்பழகன்

கேள்வி: மக்கள் பிரச்னைகளை அரசுக்குத் தெரிவிக்க சட்டசபைதான் சரியான இடம்; அப்படியிருக்க, பிரச்னைகளின் பின்னணி எதுவாக இருப்பினும் சட்ட சபைக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பது தேர்ந்தெடுத்த மக்களுக்குத் துரோகம் செய்வது போல் ஆகாதா?

அன்பழகன் பதில்: நாங்கள் ஏன் இந்த முடிவுக்கு வந்தோம் என்பதை நடைபெற்ற சம்பவங்களைப் பின்னணியாக வைத்துக் கொண்டுதான் பார்க்க வேண்டும். ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்றால் அவர்களுக்கு ஒரு நியாயமும், எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு நியாயமும் இந்த ஆட்சியில் இருக்கிறது. 1979ல் சட்டமன்றத்தில் எங்கள் கட்சி உறுப்பினர்கள் செருப்பைக் காட்டினார்கள் என்று குற்றம் கூறினார்கள். அப்போது அவையிலிருந்த நான் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். ஆனாலும், அந்தப் பிரச்னையை விடாமல், மறுநாள் உரிமைக் கமிட்டிக்கு அனுப்பி எங்கள் கட்சி உறுப்பினர்கள் மூவரை அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் வராமல் தடை செய்தார்கள். ஆனால் இப்பொழுதோ, எல்லோர் எதிரிலேயும் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் செருப்பை எங்களை நோக்கி வீசியிருக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு வருத்தம் கூடத் தெரிவிக்காமல் பிரச்னையை அலுவல் ஆய்வுக் குழுவுக்கு விட்டிருக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க மீண்டும் சட்டமன்றம் சென்று செருப்படி படுவதை நாங்கள் விரும்பவில்லை. சட்ட மன்றத்தை விட மக்கள் மன்றத்தைப் பெரிதாக மதிக்கிறோம். ஆளும் கட்சியின் இந்த அநியாயப் போக்கை மேடைக்கு மேடை நாங்கள் பேசத்தான் போகிறோம். எங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய பெருமை ஆளும் கட்சியையே சாரும். நாங்கள் சட்ட மன்றத்தைப் பகிஷ்கரிப்பதை, பொது மக்கள் துரோகமாக நினைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

பேட்டி : ப்ரியன்

'நான் இப்போது உடல் நலனைக் கருதிப் பத்தியமாகச்சாப்பிடத்தொடங்கியிருக்கேன். எனக்குக் கஞ்சி மட்டும் போதும்... சம்பிரதாயமான சாப்பாட்டை விரும்புகிறவங்க தானே சமைத்துக் கொள்வது நலம்.''

''இந்தம்மா ரொம்பத்தான் விளையாடறுங்க... இருக்கட்டும் நானும் யார் என்று காட்டுகிறேன். ஒரு பெண்ணுக்குத்தான் குடும்பத்தை நிர்வகித்து வீட்டைக் கவனிக்கத் தெரியுமா? ஒரு ஆண் பிள்ளைக்குச் சமையலறையில் புகுந்து ஒரு கப் காப்பி கூடக் கலந்து சாப்பிடத் தெரியாதா? நளனும் பீமனும் ஆண்பிள்ளைகள்தான்.... அம்மா மறக்க வேண்டாம்.'' என்று தனக்குள்ளே வெகுண்டபடி சமையலறையில் புகுந்து சுயம்பாகத்தில் ஈடுபட்டான்.

எத்தனையோ முறை கைகளைச் சுட்டுக் கொண்டு விட்டான். பால் பாத்திரத்தைக் கீழே தவற விட்டான். டிகாக்ஷனைத் தரையில் ஓடவிட்டான். அவசரமாகக் குக்கரைத் திறந்துவிட்டு அது ஆக்ரோஷமாக உணவக் கூரை முகட்டில் வாரித் தெளிப்பதைக்கண்டு அரண்டு வெளியே ஓடினன்.

இத்தனையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு மௌனமாக விலகிப் போய்க் கொண்டிருந்த தாய் மீது அவனுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.

சில மாதங்களில் வீட்டைப் போலவே தோட்டமும் சீர்குலைந்து போய்விட்டிருந்தது. முழங்கால் உயரத்துக்குப் புல் வளர்ந்து புதர்கள் மண்டித் தோட்டம் காடாகிப் போனதைக் கண்டு கவலைப்பட்டான். ஓர் ஓய்வு நாளன்று தோட்டத்தைச் சீராக்கத் தோட்டவேலையாள்ஒருத்தனை அமர்த்தினன்.

மாதங்கி எப்படித்தான் அந்தத் தோட்டக்காரனிடம் வேலை வாங்கிச் சமாளித்தாளோ, தெரியாது.

காலையில் மண் வெட்டியைக் கையில் எடுக்கு முன் ''ஐயா பசிக்குது... காப்பி பலகாரம் ஏதாச்சும் 'இருந்தா கொடுங்க'' என்று வற்புறுத்தினன்.

ஹர்ஷனுக்கே சாப்பாடு திண்டாட்டமாக இருந்த நிலையில் பகல் உணவு வேறு கொடுக்கச் சொல்லித் தோட்டக்காரன் அடம் பிடித்தான்.

அரை குறையாக வேலையைச் செய்துவிட்டு இருபது ரூபாய்களை வாங்கிக்கொண்டு முணு முணுத்தபடி முண்டாசை இறுக்கிக் கட்டிக் கொண்டு வெளியேறிய தோட்டக்காரனுடன் அவன் விவாதம் செய்ய இயலவில்லை.

தொடர்ந்து தோட்டப் பராமரிப்பை ஒரேயடியாகக் கைவிட்டு விட்டான்.

அன்று காலை திடீர் காப்பியைத் தானே கலந்து குடித்துவிட்டுத்தான் அலுவலகத்துக்குக் கிளம்பி யிருந்தான். தேநீர் வேளையின்போது அருகிலிருக்கும் ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது சாப்பிடா விட்டால் வேலை ஓடாது போன்றதொரு பசியில் அவன் எரிச்சலோடு ஃபைல்களைப் புரட்டிக்கொண்டிருந்தான்.



வெள்ளிக்காசு!

எனக்கு எட்டு வயது நடக்கும்போது புதுக்கோட்டைக்கு ஜகத்குரு விஜயம் செய்திருந்தார். என் ஆசிரியை ஒரு கோடி ஸ்ரீராமஜெயம் எழுதி மடத்திலிருந்து தங்கக் காசு பெற்றிருந்தார். நாமும் ஸ்ரீராமஜெயம் எழுதி ஒரு வெள்ளிக் காசாவது பெற்றுப் பூஜையில் வைக்க வேண்டும் என்ற அவா எனக்கு ஏற்பட்டிருந்தது. ஒரு சிறிய நோட்டில் நம்பர் வரிசையாகப் போட்டு லட்சம் ஸ்ரீராமஜெயம் எழுதி வைத்திருந்தேன். இந்த நோட்டை எடுத்துக் கொண்டு சென்றேன். என்னுேடு வந்தவர்களெல்லாம் பெரிய நோட்டுக்களில் கொட்டை எழுத்துக்களில் எழுதிக் கொண்டு வந்தார்கள். அங்கு இருந்த மானேஜர் எல்லார் நோட்டையும் வாங்கிக்கொண்டு வெள்ளிக் காசைக் கொடுத்து அனுப்பி விட்டார். என் நோட்டு மிகவும் சிறியதாக இருந்ததால் ''நீ லட்சம் எழுதியிருக்க மாட்டாய். உனக்கு வெள்ளிக் காசு இல்லை'' என்று கூறிவிட்டார். சிறியவளான எனக்கு மறுத்துப் பேசத் தெரியவில்லை. பெரியவர்கள் யாரும் உடன் வரவில்லை. மனம் வேதனையுறக் கண்ணீர் ததும்ப, 'காசுதான் கிடைக்கவில்லை, தீர்த்தமாவது பெற்றுச் செல்வோம்' என்று அந்த வரிசையில் போய் நின்றேன். என் முறை வந்ததும், ஸ்வாமிகள் கனிவுடன் ''உன் பெயர் என்னம்மா? ஏன் அழுகிருய்?'' என்று கேட்டார். உடனே எனக்கு இன்னும் பெரிதாக அழுகை வந்தது. விசும்பலினூடே என்பெயரையும் நடந்ததையும் கூறி, ஸ்வாமிகளிடம் நோட்டைக் காண்பித்தேன். உடனே ஸ்வாமிகள் மானேஜரைக் கூப்பிட்டு, 'சிறு பெண் பக்தியோடும் சிரத்தையோடும் எழுதிக் கொண்டு வந்திருக்கிருள். நாம் வெள்ளிக் காசு கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்' என்ருர். பிறகு தம் திருக்கரத்தாலேயே காசையும் அம்பாள் பிரசாதத்தையும் எனக்குத் தந்து ஆசீர்வதித்தார். 'தினமும் ஸ்ரீராமஜெயம் எழுதுவதை நிறுத்தாதே' என்று உபதேசித்தார். அந்த மானேஜரை நான் வாழ்த்தாத நாளே கிடையாது. எல்லோரும் மானேஜரிடம் காசு வாங்கிச் சென்றபோது எனக்கு மட்டும் ஸ்வாமிகள் கரத்தாலேயே காசு பெறும் பாக்கியம் கிடைத்தது அவரால்தானே!

— என். லக்ஷ்மி

அலுவலகப் பையன், கொண்டு வந்த ஒரு சீட்டை மேஜைமேல் வைத்துவிட்டு, ''உங்களைப் பார்க்க ஒரு ஐயா வெகு நேரமாகக் காத்திட்டு இருக்கார்'' என்ருன்.

''ரமேஷ்—நீலகண்டன்''-யார்இவன் என்று எண்ணியபடி சீட்டைப் பார்த்து முகத்தைச் சுளித்து விட்டு 'வரச் சொல்' என்று உறுமினன்.

கண்ணுடிக் கதவைத் தள்ளிக் கொண்டு ஏ. சி. அறைக்குள் புகுந்த அந்த வாலிபனை ஏற இறங்கப் பார்த்தான்.

எங்கேயோ பார்த்த நினைவு — திடீரென்று நெஞ்சில் நெருப்பாகக் கனன்றது.

அவன் மணக்கவிருந்த ஜயந்தியை அழைத்துக் கொண்டு கல்யாணத்துக்கு முதல் நாள் திருத்தணியிலிருந்து மறைந்து போன திருடன்.... இல்லை இல்லை. தயானந்தின் மதிப்புக்குரிய மருமகன்.

''உங்களுக்கு என்னை யார்னு....'' ரமேஷ் ஆரம்பிக்கு முன் எரிச்சலோடு கையை அமர்த்தினன். ''தெரியும். உட்காருங்கள். வந்த விஷயம்?'' என்று அழுத்தலாகக் கேட்டான்.

''என் தந்தையின் அறுபதாவது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறேம். வீடு சிறியதாக இருப்பதால் விழாவை எங்கள் வீட்டருகிலுள்ள கல்யாண மண்டபத்திலே வச்சிருக்கோம். நீங்க கட்டாயம் வந்திருந்து எங்களைக் கௌரவிக்கவேணும்னு நேரிடையாக அழைக்கத்தான் வந்தேன். — பத்திரிகையை அலுவலகத்திலே கொண்டு வந்து கொடுக்கிறதைப் பத்தி மன்னிக்கணும். நான் ஒவர் [illegible] செய்வதால் [illegible] வீட்டுக்கு வந்து அம்மாவிடமோ தங்களிடமோ நேரில் தர இயலவில்லை.'' சொல்லிக் கொண்டே கையோடு கொண்டு வந்திருந்த தோல் பையைத் திறந்து அழைப்பிதழ் ஒன்றை எடுத்தான்.

''அம்மாவுக்கும் உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் சேர்த்து ஒரே பத்திரிகையைக் கொடுப்பது பற்றி உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே...'' என்று கேட்டுக்கொண்டு பேனவைக் கையில் எடுத்தான் ரமேஷ் நீலகண்டன்.

'மனைவி' என்று அவன் குறிப்பிட்டவளை எண்ணியபோது சாட்டையால் அடித்தது போன்ற வேதனையில் முகத்தைச் சுளித்துக் கொண்டான் ஹர்ஷன்.

மாதங்கி இப்போது அவர்கள் வீட்டில் இல்லை என்ற சங்கதி தயானந்த் குடும்பத்தாருக்குத் தெரியாது போலல்லவா இந்த ரமேஷ் பேசுகிறன்? வம்பு எங்கே என்று அலையும் குடும்பமாச்சே அவனது மாமனு வீடு. மனத்துக்குள்ளேயே வெகுண்டபடி மௌனமாகத் தலையை அசைத்தான்.

திரு ஹர்ஷன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் என்று எழுதி முகவரியைக் குறித்துப் பத்திரிகையை அவனிடம் நீட்டினன் ரமேஷ்.

பெற்றுக் கொண்ட ஹர்ஷன் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனன்.

அந்தக் கையெழுத்து... மிகவும் பழக்கமானது போல் அடி மனத்தை உறுத்துவதை உணர்ந்தான்.

காப்பி வரவழைத்து வந்தவனை உபசரித்து அனுப்பிய பின்னும் பலமுறை அழைப்பிதழ் உறையின்மீதிருந்த கையெழுத்தை ஊன்றிப் பார்த்து மண்டையைக் குழப்பிக் கொண்டான்.

அன்று மாலை அவன் வீடு திரும்பியபோது கஸ்தூரி வீட்டில் இருக்கவில்லை. மாதர் சங்கக் கூட்டத்தில் பேசப் போயிருந்தாள். பிரிஜ்ஜிலிருந்த தோசை மாவை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான் ஹர்ஷன். தோசைக் கல் சூடானதும் மாவை வார்த்து எண்ணெயை ஓரத்திலே ஊற்றிக் கொண்டிருந்தபோது திடீரென்று அவன் நினைவில் பொறி தட்டியது.

அப்படியே மாடிக்கு ஓடி அலமாரியில் புத்தகங்களின் இடுக்கிலே ஒரு பக்கமாகப் பத்திரமாக வைத்திருந்த அந்த மொட்டைக் கடிதத்தை உறையோடு எடுத்துக்கொண்டு கீழே ஓடி வந்தான்.

விளக்கு வெளிச்சத்தில் அழைப்பிதழ் முகவரியில் காணப்பட்ட கையெழுத்தையும் அந்த மொட்டைக் கடிதத்தின் உறை மீது காணப்பட்ட கையெழுத்தையும் ஊன்றிக் கவனித்தான்.

மார்பு படபடவென்று துடிக்கக் கோபத்தில் மனம் நெருப்பாகக் காய்ந்தது. அடுப்பிலேஅதே சமயம் கல் மீது அவன் வார்த்த தோசையின் தீய்ந்த மணம் வீடு முழுவதும் பரவியது.

(தொடரும்)


''பிள்ளையிடம் போ!''

தாத்தா லக்ஷ்மிகாந்த சர்மா உபந்நியாசம் செய்து கொண்டிருந்தவர். இறப்பதற்கு இரண்டு மாதம் முன் ஆச்சார்யாளிடம் சந்நியாசம் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். அதற்குப் பெரியவர் ''இப்பொழுது சந்நியாசம் தேவையில்லை. எங்கும் சுற்ருமல் உன் பிள்ளையிடம் போ'' என்று சொன்னர். அதன்படி என்னுடைய தாத்தா பெண்கள் இருக்குமிடமான சென்னையிலோ திருச்சியிலோ தங்காமல், தம் பிள்ளையிடம் பொள்ளாச்சிக்குப் போய்ச் சேர்ந்தார். போய்ப் பத்தே நாட்களில் இறைவனடி சேர்ந்தார். இறக்கும் காலத்தை முன்பே அறிந்து பிள்ளையிடம் சேர்ப்பித்த பெரியவாளின் அருளை என்னென்பது!

[illegible]



குமரி அனந்தனின் குமுறல்



குமரி அனந்தனின் தலைமையில் இயங்கும் காந்தி — காமராஜ் தேசிய காங்கிரஸ்(1) கள்ளுக் கடை வேண்டாம் (2) விலைவாசியை இறக்க வேண்டும் (3) உள்ளாட்சித் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் (4) மணியாச்சி ரயில் நிலையத்துக்கு 'வாஞ்சி மணியாச்சி' எனப் பெயர் மாற்ற வேண்டும் (5) காசோலைகளைத் தமிழில் அச்சடிக்க வேண்டும் என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டத்தில் இறங்குகிறது. இது பற்றிக் குமரி அனந்தனைப் பேட்டி கண்டபோது —

● இந்தக் கோரிக்கைகளுக்காக இப்போது போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

இவை எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகள். கள்ளுக் கடையைத் திறக்கக் கூடாது என்ற எங்கள் கோரிக்கைக்கு நிச்சயம் காந்தீய வாதிகளின் ஆதரவும் தாய்மார்களின் ஆதரவும் கிடைக்கும். விலைவாசி குறைய வேண்டும் என்பது நாம் எல்லோரும் விரும்பும் ஒன்று. வெறும் கோரிக்கையாக மட்டும் இதை வைக்காமல் இதற்கான வழிகளையும் அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளோம். பெட்ரோல் டீசல் மீதுள்ள எக்ஸைஸ் வரியைக் குறைத்தாலே விலைவாசிகள் குறைந்துவிடும் என்பது எங்கள் கருத்து. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படாமல் கிராமங்களில் அரசு இயந்திரம் ஸ்தம்பித்து நிற்கிறது. மணியாச்சி ரயில் நிலையத்துக்கு வீரன் வாஞ்சிநாதனின் பெயர் வைக்க வேண்டும் என்ற எங்கள் வேண்டுகோளுக்குத் தேசப் பற்றுள்ள அனைவரும் ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறேன். எங்களது ஐந்தாவது கோரிக்கையான வங்கி காசோலைகளை (செக்) தமிழில் அச்சிட வேண்டும் என்பது, கிராமங்களில் வங்கிகள் அதிகமாகி விட்டதன் காரணமாக அவசியமாகச் செய்ய வேண்டிய ஒன்று.

● மேற்கண்ட கோரிக்கைகளைக் கட்சி அளவிலேயே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கலாமே; அல்லது சட்ட மன்றத்தில் உங்கள் உறுப்பினர்கள் உள்ளதால் அங்கே தீர்மானங்கள் கொண்டு வரலாமே?

எங்கள் மாவட்ட மாநாடுகளிலும், செயற்குழு, பொதுக் குழுவிலும் தீர்மானங்கள் போட்டு அனுப்பியுள்ளோம். மணியாச்சி ரயில் நிலையத்தின் பெயரை வாஞ்சி மணியாச்சி ரயில் நிலையம் என்று பெயர் மாற்ற வேண்டும் என்று மாநில அரசு 1978லேயே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. மீண்டும் 1979ல் கடிதம் எழுதியது. மத்திய அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.


● தற்போது தமிழ் நாட்டில் பல பகுதிகளில் வறட்சி நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் உங்கள் கட்சி போராட்டம் நடத்துவது நியாயம்தானா?


வறட்சி நிலவுகிறது என்பதற்காகக் கள்ளுக் கடையைத் திறக்காமல் இருந்துவிடப் போகிறார்களா? எங்களைப் பொறுத்தவரை ஆறு சட்ட சபை உறுப்பினர்கள் இருக்கிறோம். ஐந்து பேர்தான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறோம். போராட்டத்துக்குத் தடை விதித்து நாங்கள் சிறைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டால்வெளியில் இருக்கும் ஒரு சட்ட சபை உறுப்பினர், வறட்சிப் பணிகளில் குறைபாடுகள் இருந்தால் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வார். இரண்டரை லட்சம் உறுப்பினர்கள் உள்ள எங்கள் கட்சியில் 2622 பேர் தான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார்கள். இரண்டாவது அணித் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கட்சி விவகாரங்களையும் மக்களின் குறைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் பணியையும் மேற்கொள்வர்.

● ஒரு மலிவான விளம்பரத்தைத் தேடிக் கொள்ளத்தான் நீங்கள் தார் சட்டி ஏந்தி இந்தப் போராட்டத்தில் இறங்குகிறீர்கள் என்கிறேன்!

இதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். சில சில்லறைப் பிரச்னைகளுக்காகப் போராடுபவன்தான் மலிவான அரசியல்வாதி. எங்களது கோரிக்கைகள் அனைத்தும் நியாயமானவை. செய்ய வேண்டியவை. இவ்வளவு நாள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டுத்தான் இதில் ஈடுபட்டிருக்கிறோம். இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பு போராட்டம் நடக்கும் ஊர்களில் உள்ள முக்கியமான தெருக்களை எங்கள் கட்சித் தொண்டர்கள் சுத்தம் செய்வார்கள். இது ஒரு சமுதாயப் பணி இல்லையா? தீபத்தை உயரப் பிடித்து நிறுத்தும்போது, அதன் ஒளிவிடும் சுடரையும், அதனால் கிடைக்கும் வெளிச்சத்தையும்தான் பார்க்க வேண்டுமே தவிர திரியைத் தாங்கி நிற்கும் கம்பைப் பார்க்கக் கூடாது. மணியாச்சி ரயில் நிலையத்தில் தார் சட்டி ஏந்தி வாஞ்சி மணியாச்சி என்று பெயர்ப் பலகையில் எழுதுவதைத் தேசத் தியாகிகளுக்குச் செய்யும் மரியாதையாக நினைக்கிறேன். மலிவான விளம்பரத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் நானும் என் கட்சியும் இல்லை.

பேட்டி: ப்ரியன்





பல் துலக்கி விட்டு முகத்தைக் கழுவிக் கொண்டு கலைந்துவிட்ட முடியைச் சீப்பால் அழுத்தி வாரியபடி தன் முகத்தை வாஷ் பேசினுக்கு மேல் தெரிந்த கண்ணாடியில் கவனித்தான் ஹர்ஷன்.

தலை பாரமாகக் கனத்தது. இரவு முழுவதும் சரியான தூக்கமின்றிப் படுக்கை மீது பற்பல சிந்தித்தபடி புரண்டதன் விளைவு... முகம் உப்பி, கண்கள் சிவந்து,... ஒரே இரவில் சில ஆண்டுகளைத் தாண்டிவிட்ட முதிர்ச்சி தெரிந்தது.

கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டு தன் உருவத்தையே கோபத்துடன் வெறித்தான்.

திடீரென்று அவன் மூளையில் மறுபடியும் ஒரு நினைவு மின்னல் அடித்தது.


அவனது திருமணம்தான் வேடிக்கையாகி விட்டதே ஒழிய, அதற்கென வந்து குவிந்த பரிசுகள், வாழ்த்துக் கடிதங்கள் ஒன்றும் குறைச்சலாக இருக்கவில்லை.

அம்மாவுக்காகவும், அவனுக்காகவும் இரு பக்கங்களிலிருந்தும் குவிந்தன வாழ்த்துக்கள். பரிசுகள் — ஏராளமாகத் தானிருந்தன.

மண நாள் அன்றே கோபத்தில் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டிருந்தான். திரும்பி வந்தவன் பார்வைக்காக அம்மா அவைகளை அவனது அறையில் ஒரு மேஜை மீது வைத்திருந்தாள்.

''பார்! உனக்கு எத்தனை பரிசுகளும், பாராட்டுக்களும்'' அம்மா அவைகளைக் காட்டித் தான் கல்யாணப் பெண்ணை மாற்றிய தவறை நியாயப்படுத்த முயல்கிறார்களா என்று அப்போது அவனுக்கு எரிச்சல் வந்தது உண்மை.

இரவு உறக்கம் வராதபோது ஒரு நாள் அந்த வாழ்த்துக் கடிதக் கட்டை அவிழ்த்து இந்த அழகான கல்யாணத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த பிரகஸ்பதிகளின் பெயரைத் தெரிந்து கொள்ள விழைத்தான் ஹர்ஷன்.



மாலை... மயக்கம்...

அவர்களில் அசலாம்பிகை கல்லூரித்தலைவி ராதிகாவின் வாழ்த்துச் செய்தியைப் படித்த நினைப்புத்தான் இப்போது சட்டென உதய மாகியது. உடனே சங்கிலித் தொடராக நினைவுகள் கோவையாக மனத்தில் மாலை யிட்டன.

ஜயந்தியைப் பெண் பார்க்கப் போன போது தயானந்த், தன் மகள், அசலாம் பிகை கல்லூரியில் படித்தவள் என்று பெருமையடித்துக் கொண்டது.

தாய் தந்தையில்லாது அநாதையாகிவிட்ட தம்பி மகளைத் தாமே வளர்த்து, அவளையும் அதே கல்லூரியில் படிப்புக் கொடுத்த தமது தாராளப் போக்கைத் தம்பட்டம் அடித்தது.

எல்லாமே நினைவில் சுழன்றது. அத்துடன் கூடவே ஒரு யோசனை உதயமாகியது. பர பரப்புடன் அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமானுன்.

தயக்கமாகத்தான் இருந்தது. எப்படிக் கேட்பது? அதுவும் இதுபோல...? ஆனுல் ஆவல் அவனது வெட்கத்தை மீறியது.

அலுவலகத்திலிருந்து தொலைபேசி எண் களைச் சுழற்றினுன்.

''ஆமாம்! அசலாம்பிகை கல்லூரித் தலைவி ராதிகாதான் பேசறேன்... நீங்க...?'' மறு முனையிலிருந்து ஒலித்த குரல் கண்டிப்புடன் பேசியதும் ஒரு கணம் அசந்துவிட்டான்.

''உங்க சிநேகிதி கஸ்தூரி அம்மாவின் மகன் ஹர்ஷன்... உங்ககிட்டப் பேசணும்.'' தடுமாறினுன்.

''ஹர்ஷன்! உன் மனைவி மாதங்கிக்குக் கல் லூரியில் இடம் கேட்கவா? இனிமே அடுத்த வருஷம்தானே முடியும்?''

''இல்லே மேடம்! மாதங்கியைப் பத்திப் பேசணும்... வந்து...'' அவன் முடிக்கு முன் ராதிகா குறுக்கிட்டாள்.

''எங்க வீடு தெரியுமில்லையா? சாயங் காலமா வீட்டுப் பக்கமா வா... நிதானமா பேசலாம்...'' போனை வைத்துவிட்டாள்.

அன்று மாலை ஆபீசிலிருந்து வீடு திரும்பு முன் முதல் வேலையாக, ராதிகாவின் வீட்டை அலைந்து கண்டு பிடித்தான்,



தெரு ஓரத்திலேயே காரை நிறுத்திப் பூட்டி விட்டுக் கம்பிக் கதவின் மேல் பொருத்தியிருந்த அழைப்பு மணியை அழுத்தினான். அச்சத்தில் அவன் மனம் படபடத்தது.

ராதிகாவே வந்து கதவைத் திறந்தாள். ''வா! வா! இது தெரு வீடு. கம்பித் தடுப்புக்குள்ளே பாதுகாப்பாக இப்படி ஒரு சிறை!'' வேடிக்கையாகக் கூறியபடி அவனை வரவேற்றாள்.

''நீ சின்னவனா இருந்தப்ப பார்த்த நினைப்பு. அடையாளமே தெரியாம வளர்ந்திட்டே. கல்யாணத்தையும் திருத்தணியிலே வச்சுக்கொண்டே. போகட்டும். உன் மூக்குத்தான் கஸ்தூரி பிள்ளைன்னு சொல்லுதே!'' கம்பிக் கதவைத் தாளிட்டபடி அவனைப் பின்தொடர்ந்தாள்.

வெகு காலம் அடைத்து வைக்கப்பட்டது போன்ற மக்கல் வாசனையும், வெளிச்சக் குறைவுமான முன்னறை. தாத்தா காலத்து உயரமானதொரு நாற்காலி. அதில் அவனை அமரச் சொல்லி உபசரித்தாள். விளக்கைப் போட்டுவிட்டுத் தானும் எதிரே அமர்ந்தாள்.


''அம்மா! காப்பி டிபன் தயாரா?'' உட்கார்ந்தபடியே உரக்கக் கேட்டாள்.

ஒருசில விநாடிகளில் தட்டுக்களில் பக்கவடாவும், டம்ளரிலே காப்பியும் சுமந்தபடி சமையற்கார அம்மாள் தோன்றினாள். அவற்றை வைத்துவிட்டு அரை நொடியில் மாயமானாள்.

''இப்பச் சொல்லு ஹர்ஷன்! மாதங்கி பத்தி என்னவோ பேசணும்னியே...''பக்கடாவைக் கொரித்தபடி உற்சாகமாக ஆரம்பித்தாள் ராதிகா.

ஹர்ஷன் வார்த்தைகளை பக்கவடாவோடு மென்று தின்றான். தேர்வு அதிகாரி முன் உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு பயத்திலே சரிவரப் பேசக்கூட வரவில்லை.

கல்யாணத்திலே பெண்ணை மாத்தியதால் கோபமடைந்தது முதல், மாதங்கியை அவன் ஒதுக்கியது — ஒரே வீட்டில் விரோதிகள் போல் வாழ்ந்தது, அம்மாவுக்கும் அவனுக்கும் அதனால் ஏற்பட்ட மனஸ்தாபம் வரை கூறி முடித்தவன், ''எனக்கே மனம் மாறும் போலக் கொஞ்சம் இடம் கொடுத்த சமயம் இந்தக் கடிதமும் வந்தது'' என்றான்.



பையில் தயாராக வைத்திருந்த மொட்டைக் கடிதத்தையும் எடுத்து அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கி வேகமாகப் படித்து முடித்த ராதிகா வெறுப்புடன் அதை அருகிலிருந்த மேஜை மீது விசிறிப் போட்டாள்.

''ஹர்ஷன்! நீ ரொம்பப் படித்தவன். ஒரு பெரியநிறுவனத்தில் பொறுப்பான பதவியில் உயர் அதிகாரியாக இருப்பவன். உன் கீழ் இருக்கிற அத்தனை பேரையும் கட்டிச் சமாளிக்கத் தெரிந்த புத்திசாலி. அப்படியெல்லாம் இருந்தும், இன்னும் விவேகமும், உலக அனுபவமும் ஏற்படாததுதான் ஆச்சரியமாக இருக்கு. கேவலம் ஒரு மொட்டைக் கடிதத்தை நம்பி....''

ஹர்ஷன் முகத்தில் அசடு தட்டியது.

''விஷயம் உண்மையாக இருந்தால் அந்த நண்பன் உனக்கு நேரிலேயே சொல்லி இருக்கலாமே. எதற்காகத் தன் பெயரை மறைச்சிட்டு மொட்டைக் கடிதமாக எழுதவேணும்? உண்மையானதன்பெயரைச் சொல்லப் பயம், தயக்கம்,கோழைத்தனம்.அதனால் கையெழுத்துப் போடவில்லை. அப்படி யிருக்க, கடிதத்தில் கண்ட விஷயம் மட்டும் உண்மைன்னு எப்படி நம்ப முடியும்? சிந்தித்துப் பார்! உன் நிர்வாகத்திலே, உன் கீழ் வேலை செய்யும் ஒருவர் மேல் இப்படி ஒரு அபத்தமான கடிதம் வந்தால் நீ என்ன நடவடிக்கை எடுப்பாய்?''

ஹர்ஷன் மௌனம் சாதித்தான்.

''அவனை வேலையிலிருந்துநீக்கிவிடுவாயா?''

அவன் முகம் சிவந்து போனான்.

''போகட்டும். மாதங்கி இப்போ எப்படி இருக்கா?''என்று படபடவென்று கேட்டாள்.

''அவள் இப்ப எங்க கூட இல்லே.''

''என்னது?''

''ஆமாம்! இருக்கக் கூடாதுன்னு நான் கண்டிப்பா சொன்னதால அம்மா மனம் கசந்து போய் அவளை எங்கேயோ அனுப்பிட்டாங்க. அவ பெரியப்பா வீட்டிலேயும் இல்லைன்னு தெரியும்... எங்கேன்னு அம்மா கிட்ட நான் கேட்கலை.''

ராதிகாவின் முகம் கோபத்தால் பளபளத்தது. ''ஹர்ஷன்! உங்கம்மா ஸ்தானத்தில் நான் சொல்றேன். நீ ஒரு படித்த முட்டாள்! உனக்கு வாழ்க்கை கொடுத்த அதிசயமான சந்தர்ப்பத்தைச் சட்டென்று பிடித்துக் கொண்டு வாழத் தெரியாத மடையன் நீ. மாதங்கியை எனக்கு நன்றாகவே தெரியும். அவளைப் போல அடக்கமான், குணவதியான, புத்திசாலிப் பெண்ணை என் கல்லூரி வாழ்க்கையிலேயே நான் அதிகம் சந்தித்ததில்லை.

''எங்கள் கல்லூரிவிழாவிலே அவள் பிரார்த்தனை கீதம் பாடினால் அப்படியே மெய்மறந்து போவோம். அப்படி ஒரு குரல். அவள் வளர்ந்த வீட்டில் அன்போ, ஆதரவோ கிடையாதுன்னு எனக்கு ஓரளவு தெரியும். முறையான சங்கீதப் பயிற்சிக்கு வகையில்லை. ஆனால் கிடைத்த ஒரு துளி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதில் அமைதியாக வாழத் தெரிந்தவள் என்பதை அவளது சங்கீதப் பயிற்சி மூலம் தெரிந்து கொண்டேன். பொய் பேசத் தெரியாத, கபடற்ற பெண். பொறுப்புணர்ச்சி அதிகம் உள்ளவள். உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன்.

''ஒருமுறை கல்லூரி ஆண்டு விழா நடந்த மயம். பாத்திரங்களைக் கணக்கெடுத்து ஒப் படைக்கும் பொறுப்பு மாதங்கியுடையது.

''ஒரு கண்ணாடி டம்ளர் கணக்கில் குறைந் தது. நான் கேட்பதற்கு முன்பே சொன்னாள்: 'மேடம்! கை தவறி உடைச்சிட்டேன். விலையைக் கட்டிடறேன். மன்னிச்சிடுங்க!'

''எனக்கு ஒரே வியப்பு! வேண்டுமானால், பழியை யார்மீதோ சுமத்தி யிருக்கலாமே. நானும் நம்பி யிருப்பேன். அவள் உண் மையை ஒப்புக்கொண்ட அந்த வெளிப் படை யான பேச்சு என்னைக் கவர்ந்து விட்டது. அப்படிப்பட்ட பெண்ணை கஸ்தூரி மரு மகளாக்கிக் கொண்டதில் என் தோழி ரொம் பக் கொடுத்து வைத்தவள் என்று நினைத் தேன். ஆனால் நீயோ.... அந்தக் குழந்தைக்கு எப்படிப்பட்ட கொடுமையை இழைச் சிருக்கே! நினைக்கவே என் நெஞ்சு கொதிக் கிறது.'' உக்கிரமாக அவனைப் பார்த்தாள் ராதிகா.

ஹர்ஷன் தலையைக் குனிந்தபடி, ''எனக்கு மாதங்கியைப் பற்றிய விவரம் தெரியாத தால், முதலிலேயே யாரிடமும் கேட்காத தனால்....'' என்று தடுமாறினான்.

''எனக்கு எரிச்சலை ஊட்டாதே ஹர்ஷன்! நீ என்ன செய்திருக்கணும்னு கேட்டா உண் மையை மாதங்கியிடமே கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அதை விட்டு, மூன்றாவது மனிதர் சொன்னதைக் கேட்ட நீ ஒரு முட்டாள்! மாதங்கியின் தோழிகளைக் கேட்டால், அவளைப் பற்றி ஆகா, ஓகோ என்று புகழ்வார்கள். அவளைப் பிடிக்காதவர் களைக் கேட்டால், ''அவளா...? அவள் ஒரு'' அப்பட்டமாகப் புனைந்து கூறுவார்கள். உண்மையை நீயே உணர முன்வந்திருக்க வேண்டும். மத்தவர்கள் சொல்லித் தெரிஞ்சு கொள்ள வேண்டிய விஷயம் இல்லே இது!'' சாட்டையடியாகஅவன்மனத்தைச் சாடினாள்.

''மன்னிச்சுக்கோங்க, மேடம் நான் செய்த தவறுகளை எப்படித் திருத்திக் கொள்றதுன்னு முயல்கிறேன்.'' காப்பி, டிபனை முடித்து விட்டுத் தட்டுத்தடுமாறியபடி அந்தக் கடிதத்தைக் கவனமாகப் பையில் போட்டபடி வெளியேறினான்.

இரண்டு நாட்கள் சென்றும் அவன் மனம் சீராக இல்லாமல் கொதித்துக் கொண்டே இருந்தது. ராதிகா அவனை வார்த்தைகளால் சுட்டது முதல் முள் மேல் இருப்பவன் போல் தவிக்க ஆரம்பித்தான். இந்த மொட்டைக் கடிதத்துக்கு ஒரு தீர்வு காண வேண்டும்.

அன்று மாலை உட்லண்ட்ஸ் டிரைவ் இன் னில் ரமேஷை முன்கூட்டியே அழைத்திருந் தான். பையில் மொட்டைக் கடிதம் உறுத்த, மனத்தில் அதைவிடப் பெரும் உறுத்தலோடு அலுவலகத்திலிருந்து புறப்பட்டான்.

உட்லண்ட்ஸ் வாசலிலேயே ரமேஷ் அவ னைச் சந்தித்துப் புன்னகைத்தான். தொங்கு மீசையும், ஒல்லியான உருவமுமாக அவனைப் பார்த்த ஹர்ஷனுக்கு உள்ளூற ஆத்திரம். ''இவனா இப்படி ஒரு வேலை செய்தான்?''

டிபன் காப்பி முடிந்ததும் 'பில்' என்று ஹர்ஷன் உத்தரவிட்டான். பிறகு ரமேஷ் பக்கம் திரும்பி, ''மிஸ்டர் ரமேஷ்! இந்தக் கடிதம் நீங்க எழுதினதுதானே?'' என்றான் சட்டைப் பையிலிருந்து உருவிய கடிதத்தைப் பிரித்தபடி.

ரமேஷின் முகம் இருண்டது. ஏதோ பேச முயன்றான். ''பொய் சொல்ல வேணாம். அன்னிக்கு அழைப்பிதழில் நீங்க எழுதினீங்களே அதே எழுத்துத்தான் இதி லேயும் இருக்கு. எனக்கு உண்மை தெரிய ணும். இல்லே, இதைக் கையெழுத்து நிபுணர் வரை கொண்டு போய், போலீஸ் கேஸாக்கிற சாமர்த்தியம் எனக்குண்டு.''— மிரட்டினான்.

''தயவு செஞ்சு மிஸ்டர் ஹர்ஷன், என்னை....என்னை மன்னிச்சுடுங்க.''

''உம், சொல்லுங்க!''

''இது என் மாமியார் சொல்லிக் கொடுத்து என் மனைவி மூலமா என்னை எழுத வச்சது. அவங்களுக்கு மாதங்கி மேலே பொறாமை. ஒரு முறை மாதங்கியிடமே உங்களுக்கு ஒரு விபத்தில நடந்த கோளாறுல, தாம்பத்ய வாழ்க்கைக்குத் தகுதியில்லாம ஆக்கிட்டதா சொன்னாங்களாம். ஆனா அவள் அதை அசட்டை செய்திட்டா. அதனால...''

''இப்படி ஒரு குழப்பம் செய்யப் பார்த் தீங்க. இல்லையா மிஸ்டர் ரமேஷ்? அவங்க தான் சொன்னா, உங்க புத்தி எங்கே போச்சு? இதனால - எத்தனை விபரீதம் ஏற்படும்னு யோசிச்சுப் பார்த்தீங்களா? நீங்கல்லாம்...'' உறுமியபடி ரமேஷின் சட்டையைப் பிடிக்கப் போனான் ஹர்ஷன். ''ஸார், பில்!'' குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பியவன் உறுமிய படியே முகத்தருகே பையன் பில்லை நீட்டவே அதன் மீது சட்டென்று பணத்தை எடுத்து வைத்தான். பையன் அப்பால் நகர்ந்ததும் ரமேஷை மீண்டும் உறுத்துப் பார்த்தான்.

''பிழைச்சுப் போ... இனி இப்படி ஏதாச் சும் உங்க மனுஷா செஞ்சா அத்தனை பேரும் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பீங்க. ஜாக் கிரதை!'' அடிக் குரலில் அதட்டிவிட்டுச் சில்லறைக்குக் காத்திராது சட்டென்று எழுந்து காரைக் கிளப்பிக் கொண்டு கன வேகமாகப் புறப்பட்டான். (தொடரும்)



''நான் காப்பி, டிபன், டீ எதுவும் சாப்பிடக் கூடாதாம்!''
''ஐயய்யோ! என்ன உடம்புன்னு டாக்டர் சொன்னாரா?''
''இல்லே... ஓட்டல் முதலாளிதான் சொன்னார்! என் கணக்கில் ஏகப்பட்ட பாக்கி இருக்காம்!''
—எஸ்.பாலு





மாருதி: மறுமலர்ச்சியா? மறுபடி பழங்கதையா?

சஞ்சய் காநதி மறைவின் முதல் ஆண்டு நினைவு வரும் சமயத்தில் அவரது பெரும் கனவான மாருதி தொழிற்சாலை நனவாவ தற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பொருள் நஷ்டத்தில் சிக்கி, கோர்ட்டு வியாஜ்ஜியங்களில் அகப்பட்டு, செயலிழந்து 'லிக்விடேட்' ஆகிக் கலைந்துவிட்ட கம்பெனியை மத்திய அரசு நஷ்ட ஈடு கொடுத்து வாங்கி, ''மாருதி உத்யோக் லிமிடெட்'' என்ற பெயரில் இயக்கும் முயற்சி மும்முரமாக இருக்கிறது.

டெல்கோ கம்பெனி சேர்மன் எஸ். முல்காவ்கர் இந்தப் புதிய நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். துணைத் தலைவராகவும் மானேஜிங் டைரக்டராகவும் பதவி ஏற்றிருப்பவர் திரு வி. கிருஷ்ணமூர்த்தி. கனரகத் தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளராகவும், அதற்கு முன் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் மானேஜிங் டைரக்டராகவும் இருந்தவர். அமைச்சகத்தின் செயலாளராக இருந்த போது பாரதத்தின் பெரிய பெரிய பொதுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் நிர்வாகத்தைக் கண்காணித்து வந்தவர். தொழில் நுட்பத்தில் வல்லவராகவும் நிர்வாக நிபுணராகவும் இருப்பவர்கள் மிகச் சிலரே. அத்தகைய 'டெக்னேகிராட்' ஆன வி.கே. இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் புரிந்துள்ள நலன்களைக் கருதி அவருக்கு 'பிஸினஸ் லீடர்ஷிப்' என்னும் விருதை வழங்கியிருக்கிறார்கள். (இத்தகைய விருது வாங்கிய பிறர் ஜே. ஆர். டி. டாடா, பரத்ராம், அரவிந்த் மபட்லால், கிர்லோஸ்கர் என்றால் போதும், இதன் பெருமையைப் புரிந்து கொள்ள.)

பார்லிமெண்டின் நிரந்தரக் கேள்விச் சுரங்கமாகி விட்ட மாருதி விவகாரச் செய்திகளின் நினைவு தயக்கமளிக்க, திரு கிருஷ்ணமூர்த்தி போன்றோரின் சாதனை அனுபவம் மிக்க தலைமை ஊக்கமளிக்க, என்ன நடக்கப் போகிறது? விசாரிக்கலாம்.


எந்தச் சங்கடமான கேள்விக்கும் ஏதாவது சமாதானமான பதில் வைத்திருக்கிறார் திரு வி. கே.

''கோர்ட்டிலே ஒப்படைக்கப்பட்ட, மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையை அரசாங்கம் வாங்கியது மக்களுக்கு நஷ்டமல்லவா?''

''இல்லை. பொதுப் பணம் மிச்சமாகியிருக்கிறது. இப்போது அரசாங்கம் நாலரைக் கோடி—ரூபாய்தான் நஷ்ட ஈடாகக் கொடுத்திருக்கிறது. 15 கோடி மதிப்புள்ள இடம், சாதனம் எல்லாம் உள்ளன. இதற்கு ஒன்பது கோடிவரை தந்து, தாமே ஏற்று நடத்துவதற்காகத் தனி நபர்கள் முன்வந்தார்கள். வெற்றிகரமாக நடத்த முடியாதென்றால் வருவார்களா? சஞ்சய் காந்தியைப் பிடிக்காதவர்கள் இருக்கலாம். ஆனால் அவர் லட்சியம் சாதிக்கக் கூடிய ஒன்றுதான். சிலர் எப்போதும் எதற்கும் குறை கூறுவார்கள். உதாரணமாக இடம் பற்றி. இவ்வளவு பெரிய இடம் கிடைக்காவிடில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா? டில்லிக்கு அருகே கிடைக்காமல், வேறு எங்கே கிடைத்திருந்தாலும் இந்த அளவு நிலப் பரப்பு தேவைதானே?''

''இத்தனை நாளிலே சாதிக்காததை இனி எப்படிச் சாதிக்க முடியும்?''

''இதுவரை சுயமாக வகுத்துக் கொண்ட பல நிர்ப்பந்தங்களால்தான் முன்னேற்றம் காண முடியவில்லை என்று சொல்லலாம். அன்னிய நாட்டுப் பொருள், கருவிகள் உதவி எதுவும் கூடவே கூடாது என்று பிடிவாதமாக இருந்தது பெரிய குறைபாடாகி விட்டது. அதோடு பெரிய அளவில் முதலீடு போட்டு மிகப் பெரிய அளவில் தயாரிப்பைத் தொடங்க வேண்டிய தொழில்




வி. கிருஷ்ணமூர்த்தி

மதம் மாற்றுவது

திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரத்தில் ஏராளமான ஹரிஜன் இந்துக்கள் ஒரே சமயத்தில் முஸ்லிம்களாக மதம் மாறினார்கள். (கல்கி, 29-3-81). "இந்த மத மாற்றத்துக்கு அடிப்படை அயல் நாட்டுப் பணமும் அளவு மீறிய வற்புறுத்தலும்" என்று மேற்படி கிராமத்துக்கு விஜயம் செய்த ஆர்ய சமாஜ ஆய்வுக் கமிட்டி கூறுகிறது. (ஹிந்து மே 19, 1981)

இது தொடர்பாக சட்டம் என்ன கூறுகிறது என வழக்கறிஞர் ஸ்ரீரங்கம் எஸ். நரசிம்மனைக் கேட்டபோது:



ஒரு மனிதன் தான் பிறந்த மதத்திலிருந்து வேறு மதத்துக்கு மாறினால் அந்தத் தனிமனிதன் சுதந்திரத்தில் சமுதாயமும் சரி, சட்டமும் சரி குறுக்கிட முடியாது. ஆனால் ஒரு மனிதன் வேறொரு மதத்துக்கு மாற்றப்பட்டால் சட்டம் குறுக்கிடுகிறது. ஆனால் தேவையான அளவில் அல்ல. மனிதனின் மத உணர்வுகளைப் புண்படுத்துவது மட்டும்தான் குற்றம் என்ற அளவுக்கே சட்டங்கள் இருக்கின்றன. ஒரு மதத்தில் உள்ளவனை வேறு ஒரு மதத்துக்கு மாற்றும்பொழுது அதைக் குற்றமாக ஆக்கக் கூடிய அளவுக்கு நமது சட்டங்கள் போதுமானதாக இல்லை.

இதனால் இந்து சமுதாயத்துக்கு அல்லது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பேரிழப்பு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம்ஆகியவை மதப் பிரசாரம் அல்லது மத மாற்றத்தை உயர்வான குறிக்கோளாகக் கொண்டே செயல்படுகின்றன. மதத்துக்கு ஆற்றும் தொண்டாகவே கருதுகின்றன. ஆனால் இந்து மதத்தில் இம்மாதிரி மத மாற்றும் வழக்கங்கள் அதிகம் இல்லை. அண்மையில் சில மடாதிபதிகள் இதை அனுஷ்டிக்கத் தொடங்கியும் இது பிரபலமடையவில்லை.

மதம் மாற்றுவதை ஒரு குற்றமாக ஆக்கி இந்து மதத்தைப் பாதுகாக்கும் அளவுக்கு சட்டங்கள் இல்லை. அப்படியே இருக்கும் சட்டங்களும் போதுமானதாக இல்லை. இது மற்ற மதத்தினருக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது.

இப்படி நடக்காமலிருக்க வழி என்ன என்றால் சட்டத்தில் முக்கியமாகச் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும். அல்லது புதுச் சட்டங்களை இயற்ற வேண்டும். ஒரு மதத்தை விட்டுமற்றொரு மதத்துக்கு ஒருவர் மாற வேண்டும் என்று விரும்பினால் ஒரு மாஜிஸ்டிரேட் முன்பாகவோ அல்லது இதற்கென்றே பிரத்தியேகமான ஒரு நீதித் துறை அமைப்பை உருவாக்கி, அதற்கு முன்பாகவோ தானே வலியச் சென்று "இம்மதத்தை விட்டு அம்மதத்திற்குச் செல்கிறேன்" என மதம் மாறுபவர் சொல்ல வேண்டும். பிறகு அவர் மதம் மாறியதாக மாஜிஸ்திரேட் அறிவிக்க வேண்டும். இப்படி சட்டம் உருவாக்கினால்தான் பெருவாரியான மக்களை ஒரே சமயத்தில் ஆசை காட்டி மதம் மாற்றும் பழக்கம் நிற்கும். இல்லை என்றால் பணத்தாசையாலோ பதவி கண்டு அச்சத்தாலோ மக்கள் மதம் மாறிக் கொண்டேதான் வருவார்கள். மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்ற வசனத்துக்கு ஏற்ப முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியிலும் ஆங்கிலேயர் ஆட்சியிலும் பெருவாரியாக மதம் மாறியவர்கள்தான் நம் மக்கள்.

மீனாட்சிபுரம் சம்பவத்தை எடுத்துக் கொண்டால் மதம் மாறியவர்கள் "நாங்களாகவே மாறவில்லை; மாற்றப்பட்டோம்" என்று தாங்களாகவே பயமின்றிக் கூற முன்வரவேண்டும். இப்படிச் சொன்னால் ஒழிய அவர்கள் மதம் மாறியவர்களாகவே கருதப்படுவர். நன்றி உணர்வில் கட்டுப்பட்டவர்கள் தாங்களாகவே முன்வந்து இப்படிச் சொல்வார்களா என்பது சந்தேகம்தான்.

இப்பொழுது இருக்கும் குற்ற இயல் சட்டத்தை ஆராய்ந்து பார்ப்போமானால் இப்படி மதம் மாற்றுவோருக்கு எந்த விதமான தண்டனையும் கொடுக்க முடியாது. வேறு மதஉணர்வுகளைப்புண்படுத்தினால்தான் சட்டப்படி தண்டனை கொடுக்க முடியும். மத உணர்ச்சிகளைப் புண்படுத்தியதாகக் குற்றம் சாட்டி, அது நிரூபணமானால் அதற்குத் தண்டனை அதிகபட்சம் மூன்று வருடம் சிறை அல்லது அபராதம்.

பேட்டி : அசோக்குமார்

குற்றமாகுமா ?



அன்று மாலை வேலையினின்று திரும்பிய கஸ்தூரி மிகவும் களைப்புடன் இருந்தாள். அவளது அலுவலகத்திலே அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தலைமைப் பதவி—அவளது பகுதியின் தலைவி என்ற அந்தஸ்து — சம்பள உயர்வு — சலுகை எல்லாமே, அவளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் கிட்டியிருந்தது.

வேலையினின்றும் ஓய்வு பெற்றுக் கொள்ளு முன் அந்தப் பகுதியின் தலைவியாக... அலுவலகத்தில் அந்த ஏ.சி. அறை சுழல் நாற்காலிமீது அமர்ந்தபடி, அதிகாரம் செய்ய வேண்டும் என்றதோர் ஆசை அவளுக்கு இருக்கத்தான் செய்தது.

ஹர்ஷனின் திருமணத்துக்கு முன்னர்தான் அந்தப் பதவிக்காக அவளது மனம் பறந்தது. முடிவில் அந்த ஆசையும் பூர்த்தியாகிவிட்டது.

வேலையினின்றும் ஓய்வடையும் முன்பே, அந்தப் பகுதி ஊழியர்கள் அனைவரும் 'மேடம்' என்று அவளுக்குச் சலாம் போட்டபடி ஓடிவர... வெகு மிடுக்காக நடந்து, மெத்தென்று நாற்காலியில் உட்காரும் அந்தஸ்து கிட்டியிருக்கிறது.

ஆனால் அதை எதிர்பார்த்த ஆனந்தம்... இப்போது துளியளவு கூட ஏன் அவளிடம் இல்லை? மனத்தில் எந்தவித சலனமும் இல்லையே? மாறாக, அதே பதவி இப்போது பெரும் சுமையாகத்தான் தோன்றியது.

முன்னை விட. எக்கச்சக்கமான பொறுப்பு. கண நேரத்தில் பல லட்ச ரூபாய்கள் பற்றிய கணக்கு வழக்குகளுக்கு முடிவு எடுக்க வேண்டிய சிக்கலானதொரு நிலைமை.

வீட்டுக்குச் சாமான்கள் வாங்கவே, இரண்டு மூன்று நாட்கள் சிந்தித்துச் செயல்பட்டுப் பழகியவள் ஆயிற்றே அவள்! இப்பொழுது விநாடியில் முடிவு செய்ய வேண்டும் என்ற நிலை. பொறுப்புக்களால்



நாள் முழுவதும் கடுமையாக உழைத்து விட்டுக் களைத்துச் சோர்ந்து வருகிறவள் முன் வீட்டின் நிர்வாகம் பூதமாக நின்று பயமுறுத்தவே. அவள் ஒரேயடியாக மனம் நொறுங்கிப் போய்விட்டிருந்தாள்.

குடும்பத் தலைவி என்னும் பதவியிலும் ஏகப்பட்ட பொறுப்புக்கள் இருப்பதால்தான் விஷயம் தெரிந்தவர்கள் அதையும் ஓர் உத்தியோகம் என்கிறார்கள்.

வெளியிலும் வேலை செய்து விட்டு, வீட்டிலும் வேலை செய்ய நேர்ந்தால், எந்தப் பெண்ணால்தான் திறமையாக நிர்வாகம் செய்ய முடியும்?

பால் குக்கரில் வேலைக்காரி காய்ச்சி வைத்துவிட்டுப் போன பால் சூடாகவே இருந்தது.

அவள் தள்ளாடியபடி சமையல் அறைக்குள் புகுந்து பாலை ஒரு டம்ளரில் சரித்துக் கொண்டாள். திடீர்க் காப்பித் தூளையும், சிறிது சர்க்கரையையும் போட்டுக் கலக்கி எடுத்துக் கொண்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தாள். மாதங்கியின் நினைப்பும், அவளது பரிவான உபசரணையும் அவள் மனத்தில் நிழலாடின. அப்போதுதான் கறந்த பாலின் காய்ச்சிய மணத்துடன், சுடச் சுட இறக்கிய டிகாக்ஷனைக் கலந்து, அளவோடு சர்க்கரையிட்டு நுரை பொங்க ஆற்றிப் பதமாக அவள் அன்போடு தம்ளரில் எடுத்து வருவாளே, அப்போது வீசும் காப்பியின் ரம்யமான நெடி, வீடு முழுவதும் சூழ்ந்து கொள்ளும். சிரித்த வண்ணம் அன்புடன் மாதங்கி தன் கையால்,கொடுத்த நாட்களைக் கூர்ந்தபடி, கையிலிருந்த காப்பியை விஷம் போலக் குடித்து முடித்தாள் அவள்.

மனத்தில் துயரம் சுமையாக அழுத்தியது.

மாதங்கி அவர்களுடன் வீட்டிலிருந்தால் தன் மாமியாருக்குப் பதவி உயர்ந்து விட்ட சங்கதியைக் கேட்டதும் எப்படி மகிழ்ந்து போயிருப்பாள்?

''அத்தை! பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்யக் குடுக்கணும். இன்னைக்கி, உங்களுக்கும் உங்க மகனுக்கும் பிடிச்ச சாப்பாடு பாயசம் வடையோட ஜமாய்க்கணும்...''

ஆர்ப்பரித்திருப்பாள். மாமியாரைக் கொண்டாடி ஆனந்த வெள்ளத்தில் முழுக்காட்டியிருப்பாள்.

'சூடு ஒரு ருசி' என்றவன் வாயில் சர்க்கரையைத்தான் போட வேண்டும்.

இந்தப் பதவி அவளிருக்கும்போது வந்திருக்க வேண்டியது. ஆறிப்போன காப்பி போல... இப்போது பொறுப்பு வேண்டாம் என்று உதறித் தள்ளும் சமயம், அவளாகவே நகர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், பளுவான பாறுங்கல் போல், தலை மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

மகனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டதால் அவனிடமும் தெரிவிக்க முடிய

• அவளைக் கட்டுப்படுத்தக் கூடிய கடிதங்களில் விரைவாக நாள் முழுவதும் கையெழுத்திட்டுக் கழுகு போல் கூர்மையான பார்வையில் கணக்குகளை அலசி, முடிவெடுத்து, அப்பப்பா... யாருக்கு வேணும் இந்தத் தலைமைப் பதவி? அவள் மனத்துள் 'ஹோ' என்ற அலறல்!

வில்லை. மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதில் மனச் சுமையைத் தரும் இந்தப் பதவி அவளுக்குத் தேவைதானா?

டம்ளரை மேஜை மேல் வைக்க எழுந்த போதுதான் வேலைக்காரி அன்று தபாலில் வந்த ஒரு கடிதத்தை வைத்திருப்பதைக் கவனித்தாள். பூச்சாடி அருகே அவளது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உறை மீது குண்டு குண்டான கையெழுத்து... நெஞ்சு படபடத்தது. மாதங்கி எழுதியிருக்கிறாள்.

அவளது மகளைப் போன்றவள், அவளது கடிதத்துக்குப் பதில் எழுதியிருக்கிறாள். பரபரப்புடன் உறையைக் கிழித்துக் கடிதத்தை உருவிப் படித்தாள்.

அன்புள்ள அத்தை அவர்களுக்கு,

வணக்கம் பல. உங்களுடைய கடிதத்தைக் கண்டதும் எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. அயரா உழைப்புக்கு முடிவில் பலன் கிடைத்து விட்டிருக்கிறது. அலுவலகத்தில் அந்தப் பகுதிக்கே நீங்கள் தலைவராகச் செயல்படத் தொடங்கி விட்டீர்கள் என்பதை அறிந்து நான் பெருமையில் பூரித்துப் போனேன். எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

உங்களுக்கும் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். நான் எடுத்துக்கொண்ட 'டிப்ளமா கோர்ஸ்'ஸில் பாஸ் செய்து விட்டேன். மிக அதிக மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறேன். அப்படி முதலாவதாகத் தேறிய முதல் பத்து மாணவிகளை இந்தப் பயிற்சிக் கல்லூரியே நல்ல கம்பெனிகளுக்கு, வேலைகளுக்குச் சிபாரிசு செய்து ஏற்பாடு செய்கின்றது.

அதனால், இரண்டு மூன்று கம்பெனிகளில் அதிவிரைவிலேயே எனக்கு நல்லதொரு வேலையும் கிடைத்துவிடும், அவற்றில், நல்ல சம்பளம் வரும் உயர்தரக் கம்பெனியைத் தேர்ந்தெடுக்கலாம் என்றிருக்கிறேன். நர்மதா அம்மாவும் அதையேதான் சொல்கிறார்கள்.

அதுவரை நர்மதா அம்மாவின் 'பொட்டிக்'கைக் கவனித்து அவர்களுக்கு உதவுவது என்ற தீர்மானத்தில் இருக்கிறேன். ஹாஸ்டலில் சென்று தனியே வசிப்பது கூடாது என்று இவர்கள் வற்புறுத்துவதால், இங்கேயே தங்கி, இவர்களுக்குக் கூடமாட வீட்டு வேலைகளில் கொஞ்சம் உதவி செய்யலாம் என்று எண்ணுகிறேன். ஒழிந்த வேளைகளில் அவருக்குக் கார் ஓட்டவும் செய்வேன். இதனால் இனாமாக உணவும், தங்க இடமும் நர்மதா அம்மாவிடம் கிடைக்கும்.

நீங்கள் இனிமேல் என் சாப்பாட்டுக்காக மாதா மாதம் அனுப்பும் தொகை தேவையிராது.

அத்தை! என்னையே நான் காத்துக்கொள்வதற்கு இப்படி ஒரு தொழிற் கல்வியைப் பயில எனக்கு நல்லதொரு வாய்ப்பை நீங்கள் அளித்து உதவினீர்கள். அதை நான் மறக்கவே மாட்டேன்.

கொஞ்ச நாட்களாகவே நான் தீவிரமாக யோசிக்கிறேன். இப்போது என் விருப்பத்தினால் எழுந்த ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.

அத்தை! இது சமயம் உங்களிடம் ஓர் உண்மையை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஜயந்தியைப் பெண் பார்க்க வந்தபோது, எனக்கு உங்கள் மகனை மிகவும் பிடித்து விட்டிருந்தது. ஜயந்தி அக்காவின் இடத்தில் நான் இருக்கக் கூடாதா என்று அதுசமயம் நான் ஏங்கிப் போனேன். இது ஒருதலைக் காதல்தான்! உங்கள் மகனுக்கு ஜயந்தி கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் அதனால் ஏற்பட்ட ஆத்திரம்தான்—என்மீது வெறுப்பாக மாறியது.

இப்போது, தொலைவில் இருந்தபடி சிந்தித்துப் பார்த்தால், தெளிவாகத் தெரிகிறது. உங்கள் மகனது உணர்ச்சி நியாயமானதே.


ஆண் பெண் யாராயிருந்தால் என்ன? திருமணம் என்பதில் மனப் பூர்வமான ஈடுபாடு இல்லாது வற்புறுத்தப்படுவது தவறுதான். என் விஷயத்தில் நான் புரிந்துகொண்ட உண்மை இதுதான். இதற்காக நான் தங்களையோ அல்லது என் கணவரையோ குற்றம் கூறவில்லை. பெரியப்பா தம் மகளுக்குப் பதிலாக மணையில் உட்காரும்படி என்னைக் கேட்டுக் கொண்டபோது நானே மறுத்திருக்கலாமே? அவரது மகளைப் போலவே தாலி கட்டும் முன்பு, மாயமாக மறைந்திருக்கலாமே... ஹர்ஷனை எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் அவருக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

பவித்ராவுக்குப் பிடித்தவை

கான்வெண்ட் பள்ளியில் படிப்பை முடித்த பவித்ராவுக்குச் சைக்கிள் ஓட்டுவது, ஓவியம் வரைவது ஆகியவற்றில் அளவு கடந்த ஆசை. விடுமுறை நாட்களில் வெளியிலே சென்றால் வீடு திரும்பியதும் தாம் கண்ட காட்சிகளில் ஒன்றை நிச்சயமாக ஓவியமாக்கி விடுவார்.

ஒதுங்கிப் போகிறவர்தான் என்றாலும், ஓவியத்தைப் பற்றியும் அழகுக் குறிப்புகள் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டால் போச்சு, நாட்கணக்கில் பேசுவார். கேட்பதற்கு நமக்குத்தான் பொறுமை வேண்டும்! பரத நாட்டியம் கற்று வரும் இவருக்கு அதில் மட்டுமின்றி நடிப்புக் கலையிலும் ஈடுபாடு உண்டு.

மேலட்டை வண்ணப் படம்,
பேட்டி: **ஹரீஷ்**





அருள்வாக்கு

உள்ளும் புறமும்

"எல்லோரும் அவரவருக்குரிய கர்மானுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். ஆசாரங்களை அனுசரிக்க வேண்டும்; விபூதி, திருமண், ருத்திராட்சம் போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்" என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். "நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனசைப் பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம்தானே?" என்று எண்ணுகிறார்கள்.

மிலிட்டிரிக்காரன் யூனிஃபாரம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிட்டரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கு என்று யூனிஃபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவனவே ஆகும். வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம்செய்து கொள்வதற்காக இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன், சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்து செய்தால் சத்தியமாகவே அது உள்ளே புகுந்து சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கும் உதவுகிறது.

நான் சம்ஸ்காரங்களை முக்கியமாகச் சொல்வதோ, ஆசாரங்களை விடாமலிருக்கப் பிரயத்தனம் செய்வதோ விபூதி, ருத்திராட்சம் முதலிய சின்னங்களைத் தரிப்பதோ பெரிதில்லை. நான் மடாதிபதி ஆதலால் இதெல்லாம் என்னிடம் இருந்தால்தான் என்னிடம் வருவீர்கள்; என் மடம் நடக்கப் பணம் கொடுப்பீர்கள். எனவே இவையெல்லாம் எனக்குக் காரியார்த்தமாக வேண்டியிருக்கின்றன. ஆனால் உங்கள் விஷயம் அப்படி இல்லை. உங்களுக்கு ஜீவனோபாயம் வேறு விதத்தில் கிடைத்து விடுகிறது. ஆதலால் என்னை விட சிரேஷ்டமாக முழுக்க முழுக்க ஆத்மார்த்தமாகவே நீங்கள் சமஸ்காரங்களைச் செய்து, சின்னங்களைத் தரித்துக் கொண்டு பரிசுத்தம் பெற முடியும்; பெற வேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

உங்கள் அன்பும் ஆதரவும் என்னைப் பொறுமையுடன் இருக்கச் செய்தது. எப்படியும் நிலைமை மாறிவிடும் என்றுதான் இதுநாள்வரை இருந்தேன். ஆனால், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதனால் இந்தத் துயர அனுபவத்தை நான் மேலும் நீடித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை.

கணவனும், மனைவியும் ஒரு குறித்த கால வரம்பு வரை பிரிந்திருந்து — பின்னர் இருவரும் ஒப்புக் கொண்டால் எளிதில் விவாகரத்துப் பெற்று விடலாம் என்கிறார்கள். — இதைப் பற்றித் தாங்கள் ஒரு வக்கீலைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்தால் நல்லது. ஹர்ஷனுக்கும்இந்த விருப்பமில்லாத விவாக பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கும். நான் அவருக்கு விடுதலை அளிக்கப் பூரண சம்மதம் தெரிவித்து விட்டதாக அவரிடம் சொல்லவும்.

இனி, இப்படி ஒரு தீர்மானம் மேற்கொண்டு விட்டதால், என் பெயருக்குத் தாங்கள் எழுதி வைத்துள்ள சொத்து விவரம் அடங்கிய உயிலையும், வங்கிப் பாதுகாப்பு பெட்டகத்துச் சாவியையும் தபால் மூலமாகவோ அல்லது நர்மதா அம்மாள் சென்னைக்கு வரும்போதோ அனுப்பிவிட உத்தேசித்திருக்கிறேன். அது மட்டுமல்ல; நான் அணிந்திருக்கும் நகைகள், சேலைகள் எல்லாமே தங்களுடையது. அவற்றைத் திருப்பி அனுப்பிவிட எண்ணுகிறேன்.

எனது வருங்காலத்துக்கு வழி காட்டினீர்கள். அதற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் மிகுந்த தாராள மனத்துடன், நகை, ஆஸ்தி யாவும் கொடுத்தீர்கள். ஆனால், மருமகள் என்ற ஸ்தானம் எனக்கில்லாதபோது அவைகளைப் பெற்றுக் கொண்டு வாழ்வது மிகவும் தவறு. அவற்றைத் திரும்ப உங்களிடமே ஒப்படைப்பதுதான் முறை என்று தோன்றியதால், திருப்பத் துணிந்து விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்.

தங்கள் மகனிடம் கலந்து ஆலோசியுங்கள். ஆவன செய்வீர்கள் என எண்ணும்,

என்றும் தங்கள் மாதங்கி

அந்த நீண்ட கடிதத்தை முதலில் படித்த கஸ்தூரி நிலைகலங்கிப் போனாள். மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து அதைப் படித்தாள். படித்து முடிப்பதற்குள் நெஞ்சைத் துயரம் இறுக்கியது. கண்களில் நீர் புரள, விம்மலாகத் துயரம் சிதற, கடிதத்தையே வெறித்தாள் அவள். மூளைக்குள், வண்டு குடைவது போல் துன்பம் ரீங்காரம் செய்தது.

"ஆ!... இதென்ன வீடே சுழல்வது போல...." கஸ்தூரி மயக்கமாகத் 'தடால்' என முன்னறைக் கம்பளத்தின் மீது நிலை விழந்து விழுந்து விட்டாள். (தொடரும்)

மூன்று இவருடைய அதிர்ஷ்ட எண்!



இன்னும் ஏழு வருடங்களுக்கு பிரெஞ்சு குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஃப்ரான்கோஸ் மாரீஸ்-மேரி மிட்டராண்ட் அரசியலில் நுழைந்ததே ஒரு கொடூர சம்பவத்தின் பின்னணியில்தான். அவர் வீட்டுப் பணிப்பெண் இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜெர்மன் ரகசியப் படையினரால் படுகொலை செய்யப்பட்டார். இதன் விளைவு மிட்டராண்ட் ஜெர்மானியர்களை எதிர்க்க இடதுசாரி அரசியல் இயக்கத்தை உருவாக்கினார்.

ஜெர்மானியரால் போரில் சிறைபிடிக்கப்பட்டு கான்சன்ட்ரேஷன் காம்ப்பில்(Concentration Camp) வைக்கப்பட்டார். இங்கிருந்து தப்பித்து நானூறு மைல்களைக் காலால் நடந்து கடந்து ஸ்விஸ் நாட்டு எல்லையை அடையும்போது, ஜெர்மன் கிராம மக்களால் மீண்டும் சிறைப்பிடிக்கப்பட்டார். இவருடைய இரண்டாவது முயற்சியும் தோல்வியே கண்டது. ஆனால் மூன்று இவருடைய அதிருஷ்ட எண். மூன்றும் முறை தப்பித்து விட்டார்.

போருக்குப் பிறகு தமது முப்பதாவது வயதில் நாடாளு மன்றத்தில் பிரஞ்சுஅரசியல் சரித்திரத்திலேயே மிக இள வயதில் நுழைந்தவர் என்ற பெருமையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுத் துணைத் தலைவராகவும் பத... ஏற்றார்.

1916ல் எளிய கிராமத்தின் ஸ்டேஷ... மாஸ்டரின் மகனாகப் பிறந்த மிட்டராண்ட... பாரீஸில் சட்டப் படிப்புப் படித்தவர். அ... சியலில் நுழைந்த நாள் முதற்கொண்டே... ஜெனரல் சார்லஸ் டிகாலின் பரம வைரியாக... விளங்கினார். டிகாலும் இவரை வெறுத்தார்...

1965ல் இடதுசாரிக் கட்சிகளின் பிரதி... நிதியாக ஜெனரல் டிகாலுக்கு எதிராக... குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்... டார். தோல்விக்குப் பிறகு சோஷலிஸ்ட்... கட்சியில் சேர்ந்து நான்காம் நாளே தலைவர்... பதவிக்கு உயர்ந்தார். மீண்டும் 1974ல்... வாலரி கிஸ்கார்டுக்கு எதிராகப் போட்டி... யிட்டார். மிகக் குறைந்த வோட்டுகள் வித்தி... யாசத்தில் தோற்றார். அதிருஷ்டமில்லை... என்றன பத்திரிகைகள். ஆனால் மூன்று... தானே அவர் அதிர்ஷ்ட எண்? மூன்றும்... தடவையாக இம்முறை வென்றால் அரசிய... லில் நீடித்திருப்பது இல்லை யென்றால் அரசியலுக்கு முழுக்கு என்ற உறுதியுடன் கட்சித் தலைவர் பதவியையும் துறந்து தேர்தலுக்கு நின்றார். இஸ்கார்டின் ஆட்சியின் பொருளாதாரச் சீர்கேடுகள், வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைச் சுட்டிக் காட்டிப் பிரசாரம் செய்தார். வென்றார்.

மிட்டராண்ட் காதல் மணம் புரிந்தவர். மனைவி நர்ஸாகப் பணி புரிகிறார். இலக்கியம் தான் தம்மை மிகவும் ஈர்த்த துறை என்று கூறும் இவர், பல நாட்டு எழுத்தாளர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளார். சரித்திர ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பத்திரிகை ஒன்றையும் வெளியிடுகிறார்.

இவருடைய கெட்ட பழக்கம் கட்சிக் கூட்டங்களுக்கும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கும் தாமதமாகச் செல்வது. கைக்கடிகாரம் அணிவதே கிடையாது.

ஓய்வு நேரங்களை போர்டோவில் இருக்கும் தமது இல்லத்தில் கழிப்பார். அங்கு தேனீக்களையும், இரண்டு கழுதைகளையும் ஒரு நாயையும் வளர்க்கிறார்.

ஆட்சிக்கு வந்துள்ள மிட்டராண்ட் 15 தனியார் வங்கிகளைத் தேசிய மயமாக்கிவிடுவார் என்று கணிக்கப்படுகிறது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவியுடன் நிறுவப் பட்டிருக்கும் தொழிற்சாலைகளும் பாதிக்கப்படலாம்.

—தி. இரவிசங்கர்

"என்னுடைய ஆடு உங்க வீட்டுத் தோட்டத்தில் மேய்ந்து விட்டது என்கிற அற்ப காரணத்திற்காக நீங்கள் அந்த ஆட்டையே மேய்ந்து விட்டீர்களே! இது தர்மமா?"




ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்
போர்ன்விடா பருகுங்கள். உங்கள் வாழ்வில் ஆரோக்கியமும் ஆனந்தமும் மலரச்செய்யுங்கள். அன்றுடம் உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள் காட்பரி தயாரித்து அளிப்பது.
காட்பரிஸ்
போர்ன்விடா
அளிப்பது அத்தனையும் நலம்
இப்போது! பெரும் சேமிப்பு
ஒரு முழு ரூபாய்
ரீ:பில் பேக்குடன்
OBM 6450 TM

காரேஜில் அம்மாவின் கார் நிற்பதை ஹர்ஷன் கவனித்தான். தனது காரையும் உள்ளே நிறுத்திக் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு, வீட்டை நோக்கி நடந்தவனுக்கு ஒரே வியப்பு.

இருட்டத் துவங்கி விட்டது. ஆனால் வராந்தாவில் கூட விளக்கு இருக்கவில்லை. அவசரமாகத் தன் சாவியைக் கொண்டு கதவைத் திறந்தபோதுதான் கவனித்தான்.

...லக்ஷ்மி... 20

ரோவர் கதவருகே 'னொய் னொய்' என்று புலம்பியபடி படுத்துக் கிடந்தது. வழக்கம் போல்உற்சாகத்துடன்அவனைக் கண்டு குதித்தோடிவரவில்லை. நடை விளக்கைப் போட்டுவிட்டுச் சுற்று முற்றும் பார்வையிட்டான்.

வீட்டில் நிலவிநின்ற இறுக்கமான அமைதி அவனைக் கலவரத்தில் ஆழ்த்தியது. என்ன ஆயிற்று? இந்த அம்மா எங்கே?

முன்னறையிலிருந்துலேசான முனகலைக் கேட்டுத் திகைத்துப் போனான். அதற்குள் அவனையும் தள்ளிக் கொண்டு ரோவர் ஒரே பாய்ச்சலில் அந்த அறைக்குள் ஓடியது.

வாயிற் கதவை மூடிவிட்டு வேகமாக வந்து முன்னறை விளக்கைப் போட்டவன் ''அம்மா!'' என்று அலறிவிட்டான்.

நாற்காலி ஒன்றின் கையைப் பிடித்து எழ முயன்ற கஸ்தூரியின் முன் நெற்றியில் பட்டிருந்த சிறு காயத்திலிருந்து ரத்தம் கோடாக வழிந்து தாடை மீது ஓடி, அவளது முன்னங்கை மீது சொட்டியிருந்தது.


இத்தனை நாளாகக் கடைப்பிடித்து வந்த விரோதமெல்லாம் காற்றில் பஞ்சாய்ப் பறந்து போயிற்று அவனுக்கு. அவனது அருமை அம்மாவின் நிலையைக் கண்டு மெய் பதற அருகே ஓடி வந்தான். எஜமானியின் கன்னத்தின் மீது மூக்கை வைத்துக்கொண்ட ரோவரைத் தள்ளிவிட்டு, தாயாரை அப்படியே தூக்கினான் மிகுந்த வாஞ்சையுடன்:

''அம்மா! என்னம்மா ஆச்சு!'' என்று பதறினான்.

அம்மாவும் மனத்தாங்கலை மறந்து போனாள். அவளது செல்வ மகன் அன்பும், பரிவும் நிறைந்த குரலில் மனம் கரைந்து போனாள். ''மயக்கமா வந்துது... அவ்வளவுதான் தெரியும். சுரீர்னு ஒரு வலி. கீழே விழுந்திருக்கிறேன் போல இருக்குது. காப்பி மேஜை முனை நெத்தியிலே குத்தி இருக்கணும். வலியில சட்டுனு முழிப்பு வந்தது. நெத்தியைத் தொட்டுப் பார்த்தப்போ... பிசுபிசுன்னு கையில பட்டுச்சு... விளக்கைப் போடணும்னு நினைச்சேன்... முடியல்லே... தலையைச் சுத்திக்கிட்டு மறுபடியும்...மயக்கமா வந்திச்சு...'' அம்மா அழுகையில் திணறினாள்.

''பயப்படாதீங்கம்மா. நான்தான் வந்திட்டேனே. ஒரு சின்னக் காயம். அவ்வளவுதான். இருங்க. எல்லாம் சரியாயிடும்'' —சமாதானமாகச் சொல்லியபடி, தன் கைக்குட்டையைஉருவிக் காயத்தின் மீது வைத்து அழுத்தினான்.

ஆட்டுக் குட்டியைத் தூக்குவது போல் அப்படியே தாயாரைத்தூக்கிக் கொண்டு அருகில் இருந்த படுக்கையின் மீது கிடத்திவிட்டு, ஜன்னல் கதவைத் திறந்து விட்டான். மின் விசிறியைச் சுழலவிட்டான்.



டாக்டர் சிகாமணியை அவசர மாகத் தொலை பேசியில் அழைத்துவிட்டு, ரோவரைப் பிடித்துக் குளியலறைக்குள் தள்ளி மூடினான். அம்மாவின் அருகில் வந்து ஆதரவாக உட்கார்ந்தவன் மனத்தில் வேதனை சுமையாகக் கனத்தது.

கஸ்தூரி தொடர்ந்து முனகிக் கொண்டிருந்தாள். ''தலையை வலிக்குதே!'' இடையே அரற்றினாள். குடும்ப வைத்தியர் வருவதற்குள் யுகமே முடிந்து விடும்போல அவனுக்கு மலைப்புத் தட்டியது.

முடிவில் வைத்தியர் வந்தார். நெற்றிக் காயத்தை முதலில் கவனித்து விட்டுப் பின்னர் பரிசோதனை செய்தார். அவரையே கவலையுடன் பார்த்தான் ஹர்ஷன். ஜாடை செய்து அவனை வெளியே அழைத்தார் வைத்தியர்.

ஏதேனும் விபரீதமாகச் சொல்லிவிடப் போகிறார் என்ற பயத்தில் ஹர்ஷனுக்கு மார்பு படபடத்தது. மூச்சு முட்டியது. திகிலுடன் அவரையே பார்த்தான்.

''அம்மாவுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகவே இருக்கு. அதனால உடனடியா ஆஸ்பத்திரியில் அனுமதிச்சு ஒரு வாரம் வைத்தியப் பாதுகாப்பிலே வைக்கலாம்னு நினைக்கிறேன்.''

''ரொம்ப ஆபத்தா இருக்குன்னு சொல்றீங்களா டாக்டர்?'' — 'ஓ'வென்று அழ வேண்டும் போன்ற துயரம் நெஞ்சைக் கவ்வியது. ஆண் பிள்ளையாயிற்றே! வெட்கத்துடன் உதட்டை அழுத்திக் கடித்தவாறு துயரை விழுங்கிக் கொண்டான்.

''இரண்டு நாளைக்கு முன் அம்மா தொலைபேசியில எங்கிட்டப் பேசினாங்க.... அலுவலகத்திலே ரொம்ப வேலை. பல கவலைகள். அதனாலே அவங்களுக்கு இரவிலே தூக்கமே இல்லை... அடிக்கடி தலை நோவு வந்துடறதுன்னாங்க. நீங்க கிளினிக்குக்கு வந்து இரத்த அழுத்தத்தைப் பரிசோதிச்சுக்கறது நல்லதுன்னேன். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு... அவங்க மேலே குத்தம் சொல்லலை. இப்போ அவங்க அலுவலகத்திலே அவங்க வேலை பார்க்கற பகுதிக்குத் தலைவியாக உயர்த்தப்பட்டிருக்காங்க இல்லையா? அதனால அதிகப்படி வேலை வேறே...'' அவர் பேசிக் கொண்டே போனார்.

தூக்கி வாரிப் போட்டது ஹர்ஷனுக்கு. அவருக்குத் தெரிந்திருந்த விஷயம் அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லையே? அவமானமாகவும் இருந்தது.

''அத்தோட வீட்டு விவகாரமும்....'' சொல்லிவிட்டுக் குடும்ப வைத்தியர் அலங்கோலமாகக் கிடந்த அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்டார்.

''முன்போலிருந்தால் அம்மாவை வீட்டிலேயே வைச்சுக் கவனிச்சுக்கலாம். பொறுப்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு ரூ. 1000
இரண்டாம் பரிசு ரூ. 500
மூன்றும் பரிசு ரூ. 500
(இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032

பாப் பார்த்துக் கொள்ள இப்ப வீட்டிலே யாரும் இல்லாததனாலே.... உடனடியா ஆஸ்பத்திரியில அனுமதிக்கிறது நல்லதுன்னு சொன்னேன்'' —அழுத்தமாகக் கூறினார் அவர்.

ஹர்ஷன் முகம் சிவந்தது. உடல் அனலாக எரிந்தது. மெல்ல அவரைத் தலை நிமிர்ந்து பார்த்தான் கூச்சத்துடன்.

மாதங்கி அங்கே இல்லாதது கூட அவருக்குத் தெரிந்திருக்கிறது! அவருக்கு மட்டுமென்ன... இத்தனை நாளில் ஊருக்கே தெரிந்திருக்கும்..

''எங்க வீட்டிலே ஏற்பட்ட குழப்பத்தினாலே அம்மாவுக்கு உடம்புக்கு இப்படியாயிட்டதாச் சொல்றீங்களா'' — தடுமாறினான் ஹர்ஷன். குற்ற உணர்வு மனத்தில் முள்ளாக நெருடியது.

''உங்க பாட்டன் காலத்திலிருந்து உங்க குடும்பத்தை எனக்குத் தெரியும். வெறும் கடும் உழைப்பால் உங்கம்மா உடம்பு கெட்டுப்போகலை. இன்னிக்கு அவங்க மனத்துக்கு பெருத்த அதிர்ச்சி தரக் கூடிய சங்கதி ஏதோ நடந்திருக்கு. கடும் உழைப்பும், மன அதிர்ச்சியும் சேர்ந்துக்கவே, ரத்த அழுத்தம் 'ஓஹோ'ன்னு போயிட்டுது. நல்ல வேளை மயக்கமா விழுந்ததிலே கையைக் காலை உடைச்சிக்கலை. சரி! 'அபர்ணா நர்ஸிங் ஹோமுக்கு அம்மாவைக் காரில படுக்க வச்சு அழைச்சுக்கிட்டு வா. நான் முதல்லே போய் ஒரு ஏ.ஸி. ரூம் ஒண்ணு ஏற்பாடு செய்யறேன்'' — விடை பெற்றுக் கொண்டார் அவர்.

அம்மாவை நர்ஸிங் ஹோமில் தனியாக விட்டு விட்டு வீடு திரும்ப ஹர்ஷனுக்கு மனமே வரவில்லை.

''இரவில் மறுபடியும் மயக்கம் வந்துவிபரீதம் ஏதாவது நேர்ந்துவிட்டால்..? உயிருக்கு ஆபத்தாகி விட்டால்....'' உள்ளூற நடுங்கினான். அதே சமயம், அவன் மனத்திற்குள்ளே ஓர் அதிசயம். ''அம்மா மீது இத்தனை பிரியமா அவனுக்கு! இதை ஏன் அவன் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை?

காரை காரஜில் நிறுத்திவிட்டு...மறுபடியும் வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் மனத்தில் வீட்டின் 'ஆ'வென்ற தனிமை, அவனையும் அறியாது கண்ணீரை வரவழைத்தது. இதுவரை ஆண்பிள்ளை என்ற வீம்புக்காக அடக்கிக்கொண்டிருந்த அழுகை விம்மலாக அவனது உடலைக் குலுக்கியது.

தனிமையின் கொடுமையைத் தவிர்க்க ரோவர் காலடியில் துணையாகச் சுருண்டு கிடக்க, முன்னறையில் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

அம்மாவின் ரத்த அழுத்தம் அதிகமாகி ஒருவேளை உயிருக்கே உலை வைத்துவிட்டால்! நெருங்கிய அந்த ஓர் உறவும் அற்றுப் போன பின்னர்... அந்த இழப்பின் துயரை அவன் எப்படித் தாங்கிக் கொள்வான்?

பத்து வயதுச் சிறுவனாக இருக்கையில் மாரடைப்பால் மறைந்து போன அப்பாவின் பேரிழப்பு தந்த அதிர்ச்சியை அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுது... அவ

னுடன் துயரைப் பகிர்ந்து கொண்டு...தாங்கிக்கொண்டான்.

அப்பா வைத்துவிட்டுப் போனது அந்த வீடும் கொஞ்சம் பணமும்தான். அதை மட்டுமே நம்பி வாழத் தொடங்கியிருந்தால் இப்போது நிலைமை வேருகிப் போயிருக்கும். அப்பாவின் மறைவுக்குப் பின்னர் அம்மா வேலைக்குப் போக ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் கார் போன்ற வசதிகள் கிடைப்பாது. அலுவலகத்திற்கு பஸ்ஸில்தான் போய் வந்தாள். வீட்டு வேலைகள் அனைத்தும் அவளே செய்து வந்தாள். பரீட்சை நாட்களில் அவன் கூடவே கண் விழித்துக் கொண்டு காப்பியும் டீயும் போட்டுக் கொடுத்து உற்சாகப்படுத்தினாள். ஏன்? அந்தக் கார் விபத்தின்போது, அம்மா ஆஸ்பத்திரிக்கு நடந்த நடை... அவள் பட்ட வேதனை? எத்தனை இரவுகள் கண் அயராது அவன் அருகே அமர்ந்தபடி... அப்பப்பா... அவள் செய்த பணிவிடைகள்!

இவ்வளவையும் மறந்து போனானே அவன். நன்றியற்ற ஒரு மிருகம் போல் நடந்து கொண்டானே? இத்தனை நாளாக, அவளது மனம் நொந்துபோகும்படி அல்லவா நடந்து வந்திருக்கிறான்!

சுயநலக்காரி ஊர்மிளா அவனை உதறி விட்டு வேறு ஒருத்தனை மணந்த பின்னரும் அவனை வீழ்த்த எப்படியெல்லாம் ஒரு வலை விரித்தாள்?

அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அடங்கி, அவள் பின்னால் நாய்க் குட்டிபோல ஓடிக்கொண்டிருந்தவன்... பெருத்த தவறு செய்ய இருந்தவனை... நல்ல வேளை! குடும்ப நண்பர் நாராயணசாமியின் சாட்டையடி அவனை மீட்டு விட்டது!

சிந்தனை செய்தபடியே கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தவன் வயிற்றைப் பசி சுருட்டி எடுத்தது. எழுந்து சென்று பிரிட்ஜைத் திறந்து குளிர் நீர் பாட்டிலைத் திறந்து மடமடவென்று நீரைப் பருகினான்.


அவனாகச் செய்து கொண்ட அவலம் இது. கை நிறையச் சம்பாதித்தும், வயிறு நிறையச் சாப்பிட முடியாத திண்டாட்டம். மாதங்கியின் நினைப்பு திடீரென்று நெஞ்சைக் கவ்வியது. தான் செய்த தவறை எண்ணி மருகினபடியே மீண்டும் முன்னறைப் பக்கம் வந்தான்.

வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு, சோபாவின் மீது அமர்ந்தவனுக்கு மீண்டும் மாதங்கியைச் சுற்றியே எண்ணம் வட்டமிட்டது.

மனைவி என்று அவள் வீட்டுக்குள் வந்த பின்னரும் தான் ஆண்பிள்ளை என்ற ஆணவத்தினால்தானே வீட்டினுள் நுழைந்த ஊர்மிளாவை அவள் கண் எதிரிலேயே கொண்டாடினான்!

ஆனால் எவனோ ஒரு பொறாமைக்காரன் எழுதிப் போட்ட மொட்டைக் கடிதத்தைப் படித்துவிட்டு எப்படிக் கொதித்துப்போனான். உடனடியாக அவளை வீட்டை விட்டே துரத்த ஏற்பாடு செய்தான்? இது என்ன நியாயம்? எத்தனை பெரிய தவறு? அதிர்ஷ்டம் மாதங்கி வடிவில், மனைவி என்ற உரிமையில் அவனை வலுவிலே தேடிக்கொண்டு வந்தது.

சினிமா, சினிமா!



''தம்பி! ரத்னா தியேட்டரில் என்ன படம் நடக்கிறது?''

''விடியும்வரை காத்திரு.''

''ஏன்? விடிஞ்ச பின்னாடிதான் சொல்லுவியா?''

-வதிலை, ஜெய்குமார்

ஒருத்தி: ''ஏண்டி! திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதாமே?''

தோழி: ''எனக்கென்னவோ என் திருமணம் வயிற்றில் ''சுமை'' வந்ததால்தான் நிச்சயமாச்சு!''

-களந்தை நடேஷ்கண்ணா



ஒருவர்: எங்கே சுண்ணாம்பு டப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டீர்கள்?

மற்றவர்: 'பாக்கு வெத்திலை' படம் பார்க்க.

-மோ, சு. இரத்தினசாமி



மனைவி: என்னங்க நீங்க! இரவுக் காட்சி சினிமாவுக்குப் போறதாசொல்லிட்டு விடிந்த பிறகு வர்றீங்க?...

கணவன்: என்ன செய்ய, விடியும்வரை காத்திரு சினிமாவுக்கல்லே போயிருந்தேன்!

-தி. கருப்பசாமி

முட்டாள்! அதை எப்படி உதைத்துவிட்டு... தனக்கே அழிவைத் தேடிக் கொண்டுவிட்டானே!

மனைவியில்லாத தனிக் கட்டை என்பதை உணர்ந்து கொண்டு விட்டதால் தானே, ரிஸப்ஷன் சரோஜா அவனைப் பார்த்த போதெல்லாம் கண்களால் சிரித்துக் காதல் வலை வீசுகிறாள்? ஸ்டெனோ தங்கம், அனுவசியமாக மிக அருகில் வந்து இடிக்காத குறையாக நின்று தொலைக்கிறாள்?

எல்லோரும் தூண்டில் போடும் அளவுக்கு அவன் ஒரு காட்சிப் பொருளாகி விட்டானே, கர்மம்!

மாதங்கியிடம் அவன் கண்ட குறை என்ன? வீண் மனப் பிரமையால், அவளது அடக்கத்தையும், பண்பையும் சந்தேகித்தான். எரிச்சல்பட்டான். வாழ்க்கை தந்த நல்ல வாய்ப்பை நழுவ விட்டான்.

அவள்மட்டும் இப்போது கூட இருந்திருந்தால் வீடு இப்படியா அலங்கோலமாக இருக்கும்? அவர்களது வாழ்வுதான் இவ்வாறு சீர்குலைந்திருக்குமா?

'அட முட்டாள் ஹர்ஷா! ஒரு நல்ல பெண்ணை, சொல்லாலும், செயலாலும் அடித்து விரட்டி விட்டாயே! சே! நீயும் ஒரு ஆண்பிள்ளைதானா?' தன்னைத் தானே கடிந்து கொண்டு துயரத்திலே துவண்டவனாகக் கண்களை மூடிக் கொண்டிருந்தவன் உறங்கிப் போனான்.

புடவை சரசரக்க, மாடிப் படிகள் மெல்ல ஏறி வந்து மாதங்கி கதவை லேசாகத் தட்டும் ஒலி... தொடர்ந்து கம்மென்ற பன்னீர்ப் பூவின் மணம்.

திடுக்கிட்டு விழித்தான் ஹர்ஷன். ஜன்னல் ஓரத்தில் வளர்ந்து நின்ற பன்னீர் மரத்திலிருந்து காற்று வாக்கில் பூவின் வாசனை அறைக்குள்ளே வீசிக் கொண்டிருந்தது. வேலைக்காரி முனியம்மா கதவைத் தட்டினாள்—நன்றாக விடிந்து விட்டிருந்தது.

உள்ளே வந்தவள் சங்கதியைக் கேட்டதும் முகவாயில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நின்று விட்டாள்.

''அம்மாவுக்குப் பெரிய வேலை கிடைச்சதுன்னுட்டு ஆபீஸிலே கண்ணுப் போட்டுட்டாங்க..,அதாலதான் பாவம் உடம்புக்கு முடியாம வந்திருச்சு. அப்பவே நான் சுத்திப் போடணும்னு நினைச்சேன்.''

''ஆபீஸில் உள்ளவர்கள் போட்ட கண் இல்லை. அம்மாவுக்கு நான் கொடுத்த மனப் புண்!'' சொல்ல முடியாது தவித்தான் ஹர்ஷன். சோம்பல் முறித்தபடி எழுந்து திரும்பியவனின் கண்களில் தரை மீது கிடந்த அந்தக் கடிதம்.... பட்டது.

''என்னவாக இருக்கும்?'' வியப்புடன் எடுத்துப் பிரித்துப் படித்தவன் அதிர்ந்தே போனான்.

அம்மாவுக்கு ஏற்பட்ட துயரத்தின் உச்ச நிலையை இப்போது அவனால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. (தொடரும்)


அந்தி
நேரத்து
உதயங்கள்
வாஸந்தி எழுதும்
புதிய தொடர்கதை
விரைவில் ஆரம்பம்.

சில தினங்களில் கஸ்தூரி குணமடைந்து விட்டிருந்தாள். படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்து கொண்டு வந்தவர்களைப் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசக்கூடிய அளவுக்கு உடலில் தெம்பு கூடியிருந்தது.

ஆனால் அவளைத் தனியே கவனித்துக் கொள்ளத் தனிப்பட அமர்த்தப்பட்டிருந்த நர்ஸ், யாரையும் அதிக நேரம் அங்கே நிற்கக் கூட அனுமதிக்கவில்லை.

காலை, பகல், மாலை என்று மூன்று வேளைகளும் அம்மாவைப் பார்க்க ஹர்ஷன் அலுவலகத்துக்கும், மருத்துவ மனைக்கும் இடையே அலைந்ததுதான் மிச்சம். காலை வேளையில் டாக்டர்கள் வரும் நேரமாகையால் அம்மாவைப் பார்த்துவிட்டுச் சட்டென்று அறையின் வெளியே வந்து நிற்க வேண்டியிருந்தது.

பகல் உணவு நேரத்தின்போது அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். பார்வையாளர் நேரத்தின்போது அவள் வேலை செய்த அலுவலகத்து ஆபீஸ் பையன் முதல் மேலதிகாரி வரை, ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அம்மாவிடம் மனம் விட்டு ஒரு வார்த்தை கூட அவனுக்குப் பேசுவதற்கு அவகாசமே கிடைக்கவில்லை.



பார்வையாளர் நேரம் கழிந்த பிறகு அறைக்குள்ளே தயக்கமாக நிற்பவனை இரவு வேளை நர்ஸ் வந்து பள்ளிச் சிறுவனை அதட்டுவது போல் அதட்டுவாள். ''உஸ்! பேசாதீங்க. அவங்க இத்தனை நேரம் ரொம்ப பேசி அலண்டு போயிருக்காங்க. அவங்களுக்கு ஓய்வு தேவை'' – அவனைப் பயமுறுத்தி விரட்டிவிடுவாள்.

அந்தச் சில நாட்களில் அவன் பட்ட மன வேதனை கொஞ்ச நஞ்சமல்ல.

மருத்துவ மனையிலிருந்து திரும்பு முன் வழியில் ஏதாவது ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பியவன், படுக்கையில் போய் விழுந்தால், உறக்கமேயின்றித் தவித்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சில நாட்களில் அவன் மாதங்கியின் அந்தக் கடிதத்தைப் பலமுறை படித்து விட்டான்.

வீட்டின் மருமகளாக வந்த அன்றே, ''இவள் வேண்டாம்'' என்று ஒதுக்க அவன் மனத்தில் துணிவிருந்தது. ஆனால் இப்போது?

அவளே வேண்டாம் என்று ஒதுங்கிவிடத் தீர்மானித்திருக்கிறாள் என்பதை ஏற்று ஜீரணிக்க முடியாதவனாக, மனம் அவமானத்தில் தவிக்கத் துடித்துப் போனான்.

மாதங்கிக்கு விவாகரத்து வேண்டுமாமே? அவனை விட்டுப் பிரிந்த பின் அவள் என்ன செய்யப் போகிறாள்?


ஒருவேளை வேறு ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டுவிடுவாளோ? முடியாது... முடியாது... அந்த அவமானத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது....

மனத்தினுள் பலபல எண்ணித் தவித்தான் ஹர்ஷன். உணர்வுகள் குழம்பின நிலையில், உணவு பிடிக்கவில்லை. உறக்கம் வர மறுத்தது. ஒரே தத்தளிப்பு.

அன்று மருத்துவ மனைக்கு எதிரே இருந்த ஹோட்டலில் சாப்பாட்டை வேண்டா வெறுப்பாக முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

மாடிக்குச் சென்று விளக்கைப் போட்டு உடை மாற்றிக் கொண்டு படுக்கை மீது சாய்ந்து கொண்ட பொழுதுதான் அந்த யோசனை தோன்றியது.

சட்டென்று எழுந்தான். மாதங்கியின் கடிதத்தை மேஜை இழுப்பறையிலிருந்து தன் டைரிக்குள்ளிருந்த எடுத்துப் பிரித்தான். மிகக் கவனமாக அந்தக் கடிதத்தில் முகவரியுடன் கொடுக்கப்பட்டிருந்த நர்மதா அம்மாளின் டெலிபோன் எண்ணை ஒரு துண்டுக்காகிதத்தில் குறித்துக் கொண்டான்.



இரவின் அந்த வேளையில் நர்மதா அம்மாள் நிச்சயம் தூங்கப் போயிருப்பாள். நேரிடைத் தொடர்பு கொண்டு தொலைபேசியில் மாதங்கியிடமே பேசிவிட்டால்....?

'ரத்த அழுத்தம் அதிகமாகி — மயக்கம் போட்டு விழுந்து காயத்துடன் அம்மா மருத்துவ மனையில் இருக்கிறார்கள்' என்று ஆரம்பித்துப் பேசிவிட்டால் என்ன?

'அம்மா உன்னைப் பார்க்க மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். உடனே புறப்பட்டு வா' என்று பேசினால் தவறா?

தனக்குத் தானே பலவாறாக ஆட்சேப சமாதானங்கள் கூறிக் கொண்ட பிறகு பரபரப்புடன் தொலை பேசியை இழுத்துத் தலைமாட்டு மேஜையருகில் வைத்துக்கொண்டான்.

துண்டுக் காகிதத்தில் குறித்துக்கொண்ட எண்ணை மடமடவென்று வேகமாகச் சுழற்றினான்.

''ஹலோ!'' — மறு பக்கத்திலிருந்து ஒலித்த குரலைக் கேட்டதும், அவனையறியாமல் திடீரென ஒரு சிலிர்ப்பு. கரம் லேசாக நடுங்கியது. மாதங்கியின் குரலேதான்!

''இத்தனை மாதங்களுக்குப் பிறகு கேட்ட அவள் குரல் இத்தனை புதுமையாக... மிக இனிமையாக.... அவன் மார்பு படபடத்தது.

''யார் பேசறது?''

''திருமதி நர்மதா அம்மா வீடுதானே?'' சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள மெல்லக் கேட்டவனுக்கு மூச்சு அடைத்துக் கொண்டது.

''ஆமாம்! நீங்க யார்?''

காது மடல்கள் சூடாகி, நெஞ்சுத் துடிப்பும் வேகமாகி,,, ஒரு கணம் அவமானத்தில் நொறுங்கிப் போனான் அவன்.

மனைவியின் குரல் அவனுக்குத் தெரிந்த அளவுக்கு அவளுக்கு அவனது குரல் விளங்காதது யார் குற்றம்? ''நீங்கள் யார்?'' என்று அவள் கேட்கும் அளவுக்கு எவ்வளவு தூரம் விலகிப் போய்விட்டிருக்கிறான்!

தைரியத்தை வரவழைத்துக் கொண்டவனாய், ''சென்னையிலிருந்து நான்தான் ஹர்ஷன் பேசறேன். — கஸ்தூரி அம்மாளின் மகன்'' என்றான் உரக்க.

மறு முனையிலிருந்து அழுத்தமாக மூச்சு விடுவது கேட்டது. தொடர்ந்து ஒரு மௌனம். அவன் மேலே பேசு முன் தொலை பேசி படக் கென்று துண்டிக்கப்பட்டுவிட்டது.

அவன் முகத்தில் யாரோ ஓங்கி அறைந்து விட்டது போன்ற வேதனையும், வெட்கமுமாக ரிசீவரை வைத்தான்.

மாதங்கி அவனிடம் பேச விரும்பவில்லை. அவனைத் தெரிந்து கொள்ளவோ உறவைப் புதுப்பித்துக் கொள்ளவோ சிரத்தை காட்டவில்லை. அவனிடமிருந்து கடிதத்தில் கண்டபடி விவாகரத்து வாங்கிக் கொண்டு விலகிச் செல்லவே திட்டமிட்டிருக்கிறாள்!

''ஐயய்யோ! அவன் வாழ்க்கையில் ஒன்றன் பின் ஒன்றாக எப்படிப்பட்ட தலை குனிவுகள்?''

ஊர்மிளா அவனை உதறிவிட்டுப்போன விஷயம் ஊரே தெரிந்தது... அந்த அதிர்ச்சியிலிருந்து நிமிர்வதற்குள்... ஜயந்தி கல்யாணத்துக்கு முதல் நாள் மண்டபத்திலிருந்து மாயமான கிசுகிசுப்பு... அது அலுவலகம் முழுவதும்பரவி அவன் காதுகளிலும் லேசாக எட்டியபோது அனலை வாரித் தலை மீது கொட்டிய அவமானத்தில் பொசுங்கிப் போனான்.

இப்போது மாதங்கி....! ஐயோ! இந்த அவமானத்தை அவன் எப்படித் தாங்குவான்? ஹர்ஷன் படுக்கையில் வீழ்ந்தான். மாதங்கியை இந்த அளவுக்குக் கொண்டு வந்தது யார் காரணம்? ஆரம்பத்தில் அந்த வீட்டில் வாயில்லாத வேலைக்காரியாக அவளை



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு ரூ. 1000
இரண்டாம் பரிசு ரூ. 500
மூன்றும் பரிசு ரூ. 500
(இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032

அவன் எப்படிக் கேவலப்படுத்தி யிருக்கிறான்? எத்தனை சிறுமைகளை அவளுக்கு இழைத்திருக்கிறான்? இப்போது மட்டும் மாதங்கி விவாகரத்து வாங்கிக் கொண்டு போய்விடுவாளே என்று ஏன் பயந்து சாகிறான்? மாதங்கியைப் பிடிக்காமல் அவளை மீண்டும் வீட்டில் கொண்டு வந்து வதைப்பதில் என்ன பலனைக் காணப் போகிறான்?

''இல்லை...இல்லை.... அவன் இப்போது மாதங்கியை இழக்க விரும்பவில்லை! அது தான் உண்மை. அவளை மனைவியாக ஏற்று வாழ விரும்புகிறான். உண்மை விவரம் தெரிந்த பிறகு தன் செய்கைக்கு வருந்தி அவன் பச்சாதாபத்தில் பரிதவிப்பதை அவளிடம் யார் எடுத்துச் சொல்லப் போகிறார்கள்?''

தொலை பேசியை, வேண்டுமென்றே மாதங்கி துண்டித்து விடக் கூடிய பெண்ணா?

பலவாறு எண்ணி, நெஞ்சமெல்லாம் புண்ணாகிப் போனான் ஹர்ஷன். துயரத்தின் சுமையினால் கண்கள் உறங்க மறுத்தன.

மறுநாட் காலை அலுவலகம் போகு முன் தாயாரைப் பார்த்துவிட்டு வர, சற்று முன்னதாகவே புறப்பட்டுப் போனான்.

கஸ்தூரியின் உடல்நிலை முற்றிலும் குணம் அடைந்து விட்டது என்றாலும், மருத்துவப் பாதுகாப்பில் இன்னும் சில நாட்கள் இருந்தாக வேண்டி யிருந்தது.

கதவை மெல்லத் தட்டிவிட்டுத் திறந்து கொண்டு உள்ளே சென்ற ஹர்ஷன், அம்மா படுக்கை மீது அமர்ந்தபடி பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

''அப்பாடா! நல்ல வேளை, அறைக்குள் நர்ஸ், வேறு பணியாள் யாரும் இல்லை.'' சுற்று முற்றும் நோட்டம் விட்டுத் திருப்தியடைந்தவனாய், அம்மாவின் கட்டில் அருகில் கிடந்த நாற்காலி மீது உட்கார்ந்தான்.

''உங்க உடம்புஇப்ப எப்படிம்மாஇருக்கு'' —அன்புடன் கேட்டபடி அவளைப் பார்த்தான்.

''தேவலை'' என்றபடி பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு, மகனை உற்றுப் பார்த்தாள் கஸ்தூரி.

இந்தச் சில தினங்களில் ஏற்பட்ட அலைச்சலில் அவனும் மிகச் சோர்ந்து காணப்பட்டான்.

''ரோவர் கூட ரொம்ப இளைத்துப்போய் விட்டது. நீங்களும் வீட்டில் இல்லையா? சாப்பிடாம அது ரொம்பப் பிடிவாதம் பிடிக்குதும்மா.''

கஸ்தூரிக்கு மகன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்து விட்டது!

''எனக்குக்கூடச் சாப்பாடே பிடிக்க மாட்டேங்குது. காலையில வெறும் வாட்டின ரொட்டியும் டீயும் குடுத்தாங்க.... வீட்டுக்கு வந்ததும் மெத்துன்னு தோசையும், தொட்டுக்கக் காரக் குழம்பும் செஞ்சு.... யாராச்சும்....''முடிக்காமல் பெருமூச்சு விட்டாள்.

''நீங்க இங்க வந்த பிறகு...'' மென்று விழுங்கியபடி ஆரம்பித்த மகன் ''முன்னறை தரையில ஒரு கடுதாசி கிடந்ததை எதேச்



ஸையா எடுத்துப் பிரிச்சேன். அது... அது... மாதங்கியோட கடிதம்...'' தடுமாற்றத்துடன் முடித்தான்.

''நீயே விவரம் தெரிஞ்சுண்டது நல்லதாப் போச்சு. உன் கிட்ட எப்படிச் சொல்றதுன்னு ரெண்டு நாளா என் மனசில ஒரே குழப்பம்....''

''குழப்பம், கவலை இதெல்லாம் உங்க உடம்புக்கு ஆகாது... அதை யெல்லாம் தீர்க்க நான் ஒன்று செய்யப் போகிறேன்.''

கஸ்தூரி வியப்புடன் மகனைப் பார்த்தாள்.

''நானே பெங்களூருக்குப் போய் மாதங்கியைக் கண்டு பேசி, அவளை அழைச்சிக்கிட்டு வரப்போறேன்.''

''என்னைக் கவனிக்க ஒரு வேலைக்காரியா அவளை அழைச்சுக்கிட்டு வரப்போறியா? இங்க வந்து அப்படி அவதிப்பட அவளுக்குத் தலைவிதியா என்ன?''

''இல்லேம்மா! என் மனைவியா என்னோட வாழ வீட்டுக்கே திரும்பி வரும்படி கெஞ்சிக் கேட்கப் போறேன். நான் செஞ்ச தப்புக்கெல்லாம் பிராயச்சித்தமா அவளை அன்போட கவனிச்சுக்கொள்றேன்னு உறுதி சொல்லப் போறேன்.''

''காலம் கடந்த பிறகா?'' கஸ்தூரி அலுப்புடன் கேட்டாள்.

''அவ ஒரு நல்ல பெண். எனக்கு மனைவியாக் கிடைச்சது என் அதிருஷ்டம்னு இப்பத் தானம்மா புரிஞ்சு கொண்டேம்மா. அவளை நான் ரொம்பக் கஷ்டப்படுத்தினதுக்கு வருந்தப்படறேனம்மா!''

''பரிதாபப்பட்டா மட்டும் போதாது ஹர்ஷா!''

''இல்லேம்மா. உண்மையிலேயே எனக்கு அவ மேலே விருப்பம் இருக்கு... காதல், கல்யாணத்துக்கு முந்தியும் வரலாம் பிந்தியும் வரலாம் இல்லியா?''

கஸ்தூரி மகனை நிதானமாகப் பார்த்தாள்.

''பெங்களூருக்குப் போய்ப் பார். பத்தாம் பசலியா நம்ம வீட்டுப் படியை மிதிச்ச மாதங்கி இல்லை அவள். வேலை செய்து தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திறமை கொண்ட ஒரு சுதந்திரமான பெண்... ஒரு சமயம் அவள் மனசில வேற யாரா....''

''அம்மா!'' ஹர்ஷன் தன்னை மறந்து உரத்த குரலில் கத்தினான். கண்ணும், மூக்கும் சிவந்து போயின.

அவனது உரிமை மனைவி மாதங்கி! அதை வேறு யாருக்கும் அவன் லேசில் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.... உரிமை உணர்வும், ஆத்திரமும் பொங்கும் குரலில்,

''நாளைக்குக் காலை பெங்களூர் புறப்படுகிறேன். எல்லாம் நல்லபடியாகட்டும்னு ஆசீர்வதியுங்க அம்மா!'' ஹர்ஷன் முதன் முதலாக, தாயாரின் முன் துயரமும் வெட்கமுமாகத் தலை குனிந்தான்! (தொடரும்)


சேலத்தில் சட்டசபைத் தலைவர் ராசாராம் வீட்டு வாசலில் 'நாய் ஜாக்கிரதை' என்று ஒரு அறிவிப்பு இருக்கிறது. வெளிக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றால் உட்கார்ந்த நிலையில் ஒரு நாய் நம்மை முறைக்கிறது. முதலில் பயந்த பிறகு சற்று உற்று நோக்கினால் பெருமூச்சு வருகிறது- அது பொம்மை.

பொம்மைதானே என்று அலட்சியமாக உள்ளே போய்விட முடியாது. வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கும் நிஜமான நாயின் குரைப்பு குடலைச் சிலிர்க்க வைக்கும்!

-பிரபுசங்கர்

'நாய் ஜாக்கிரதை'





மாபெரும் லாரிகளை ஓட்டிச் செல்லும் சர்தார்ஜிக்குக் கொழுத்த பாலும் அபரிமிதமான தேயிலையும் கால்கிலோ சீனியும் சேர்த்த ''சார் கண்டே சல்னேவாலா சாய்'' (நாலு மணி நேரம் தாங்கக் கூடிய தேனீர்) மிகமிக விருப்பமான பானமாகும். அதில் அரை 'கப்' நம்மால் சாப்பிட முடியாது! -பி. ஹரிணி

வட்டமேஜை

எரிக்கும் வெய்யிலில் வியர்வை வழிந்தோடக் கடைக்காரரிடம் கல்கிக்குக் காசை நீட்டினேன். அப்பாடா...அட்டையில் குளிர்ச்சியான அயிட்டங்களைக் கண்டதும் என் உடலும் உள்ளமும் ஒருங்கே குளிர்ந்துவிட்டன.
கண்ணம்பாளையம் ஷீபா

வெய்யில் காலத்தில் இளநீர், நுங்கு, கரும்புச் சாறு, கிர்ணி, முலாம்பழம், தர்பூசணி ஆகியவைகளை உபயோகப்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கியதுபோல் ஐஸ் வகைகளை அதிகமாக உபயோகப்படுத்துவதால் ஏற்படும் தீங்கைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமே?
விருத்தாசலம் எஸ். இம்மி

எழுத்தாளர் ஏகாம்பரம் தயாரித்துள்ள 'நேர்முகப் பேட்டித் துணைவன்' புத்தகம் இங்குள்ள புத்தகக் கடைகளில் கிடைப்பது இல்லை. ஏகாம்பரத்திடம் இதுவிஷயம் உடனே தெரிவித்து அனைத்துப் புத்தகக் கடைகளிலும் 'துணைவன்' கிடைக்க வழி செய்யவும்.
கோவை துரை பால்ராஜ்

அரசியல்வாதிகள் என்ற போர்வையில் பலர் நடத்தும் செப்படி வித்தைகளைக் கண்டு எங்கள் வயிறு ஏற்கனவே பற்றிக்கொண்டு எரிகிறது. இதில் நீர் வேறு சவான் நடத்தும் நாடகத்துக்கு ஓசி பாஸ் கொண்டு வந்து கொடுக்கிறீராக்கும்!
தூத்துக்குடி எஸ். தேவ்தாஸ்

ஒரு கட்சியின் கொள்கைகள், அதை நடைமுறைப்படுத்தும் விதங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு வெளியேறினால் நிச்சயமாக அதில் தவறில்லை. ஆனால் தானே ஒரு கட்சியை உருவாக்கி, கொள்கைகள், கோட்பாடுகளையும் வகுத்துவிட்டு வெளியேறுவது பச்சைத் துரோகமாகும்.
மேட்டுப்பாளையம் எம்.பி. ரத்தினகுமார்

இந்த வார சிறுகதைகளில் ''எங்கோ ஒரு எதிரி'' '''பாதி' காப்பு'', ''ஆற்று வெள்ளங்கள்'' மூன்றும் மும்மணிகளாகத் திகழ்ந்தன. அதிலும் 'பாதி'காப்பு – நம் நெஞ்சைப் 'பாதி'த்தே விட்டது!
வீரபாண்டி வதிலை அன்புச்செல்வன்

டாக்டர் என்பவர், அது அவருக்கு முதலிரவாக இருந்தாலும் கூட மனைவியைப் பொருட்படுத்தாமல் உயிருக்கு மன்றாடும் நோயாளிகளையே முதலில் கவனிக்க வேண்டும் என்ற சிறந்த கருத்தை மிக அழகாக, 'ஆற்று வெள்ளங்கள்' என்ற தம் சிறுகதையில் கூறியுள்ளார் ஜே. எஸ். ராகவன்.
சென்னை-5 எஸ். வி. ராஜசேகர்

தலைப்பை இறுதியில்தான் தந்திருக்கிறார் இளந்தேவன். ஆனால் மனத் தவிப்பைக் கண்ணீர் காவியம் முழுவதுமே காட்டுகிறார்.
சென்னை-44 பத்மா சேஷாத்ரி

பெண்ணின் வாழ்க்கை, பாக்கு வெத்திலை, கன்னித் தீவு போன்ற படங்களை விமர்சனம் செய்தவர்களுக்கு இரக்க குணம் அதிகம்



கருத்தும் படமும்: ஆ. கிருஷ்ணஸ்வாமி (திரு. உமாபதி மன்னிப்பாராக)

என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் அவற்றைப் படங்களாக மதித்து விமர்சனம் செய்திருப்பார்களா?
கிண்டி நா. ரஜினி ராமச்சந்தர்

எல்லாத் திரைப்பட விமர்சனங்களையும் ஒரே இதழில் வெளியிட்டு எங்களைக் காப்பதில் உங்களின் 'நல்லெண்ணம்' நன்றாகவே புரிகிறது.
சென்னை-4 மயிலை கோபி

பெண்ணின் வாழ்க்கை திரைப்பட விமரிசனத்தில் மொத்தம் மூன்று பெண்களின் வாழ்க்கை கதையில் அடிபடுகிறது என்று நளினி சாஸ்திரி கூறியுள்ளார். விமர்சனத்தில் ரத்தி, அருணா ஆகியோரின் நடிப்பை விமர்சனம் செய்துவிட்டு சுமதியின் நடிப்பை விமர்சனம் செய்யாதது வேதனைக்குரியது.
சிவகாசி கே. ராகவன்

படம் ஆடி ஓடிப் பெட்டிக்குள் அடங்கிவிட்ட இந்த நேரத்தில் (கன்னித் தீவு) விமர்சனம் செய்திருப்பதைநினைக்கும்போது உங்க சுறுசுறுப்பைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
நத்தமேடு என். ஜி. சிவப்பிரகாசம்

எம். ஜி. ஆர். ஆட்சியைத் திறனாய்வு செய்து அவரவர் பாணியில் வரைந்திருக்கும் கார்டூன்களும், அவைகளுக்கு விளக்கமும் பாராட்டும்படி அமைந்திருந்தன. கார்டூனிஸ்டுகள் ஆறு பேர்களின் புகைப்படங்களையும் வெளியிட்டிருந்தால் என்ன குறைந்தா போய் விடுவீர்கள்?
ஈரோடு-10 மேஜர் தாசன்

''ஐயா! அசல் கருணாநிதி மாதிரியே ஆகிட்டேனே!'' என்று எம். ஜி. ஆர். கூறுவதாகக் கார்ட்டூன். ''நேற்று ஒரு கொள்கை, இன்று ஒரு திட்டம், நாளை ஒரு செயல்'' என்று நிலையற்றவரைப் போய், அரசியல் சாணக்கியர், அஞ்சா நெஞ்சரான கலைஞருக்கு இணை சொல்லியுள்ளீர்களே!
திண்டுக்கல் எம். பொரோஸ்கான் நூன்

திரு ரா.கியின் கார்ட்டூனில் குறிப்பிட்டிருந்த ஊழல் என்ற துண்டை அணிந்து கொள்ள வேண்டிய அவசியம் தமிழக முதல்வருக்கு என்றுமே இருந்ததில்லை.
போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

கிழக்கில் விழுந்த மாலை•••

ஹரிஷன் படித்தவன் — அலுவலகத்தில் பெரிய பதவி வகிப்பவன். ஆனாலும், வீட்டு நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் பொறுப் பில்லாத பிள்ளையாகவே இருந்து வந்திருக் கிறான்.

வீடு என்பது ஒரு தங்குமிடம் போலவும், அம்மா அதைக் கட்டிக் காக்கக் கடமைப் பட்டவள் என வும், சமீப காலமாக உறவு என்ற உரிமையில் வீட்டினுள் புகுந்துவிட்ட மாதங்கி ஒரு உயர்மட்டத்து வேலைக் காரி என்றும் நினைத்து அசட்டை யாக இருந்து விட்டவன்.

வாழ்வில் தனக்கு ஏற்பட்ட தோல்விகளையே சதா எண்ணி, தன் சொந்தத் துயரத்திலேயே கரைந்து கொண்டு, சுயநலம் பாராட்டி, ஒரு வட்டத்தினுள்ளேயே வாழ்ந்து பழகிவிட்டவன்.

இப்போது, எங்கிருந்தோ, திடீ ரென ஒரு புத்துணர்ச்சி, பொறுப்பு உணர்வு விழித்துக் கொண்டு விட் டது அவனிடம்.

இனி காலத்தை ஒரு கணமும் விரயம் செய்யக் கூடாது என அவன் உள் மனம் உந்தியது. பரபரப்புடன் பொழுது புலரு முன்பே, தன் காரி லேயே பெங்களூருக்குப் புறப்பட்டு விட்டான்.

பெங்களூருக்கு வரும்போதெல் லாம் ஹோட்டல் ஹம்ஸாவில்தான் அவன் தங்குவது வழக்கம். அங்கேயே தங்குவதற்கு முன்ஏற்பாடு செய்து விட்டேபுறப்பட்டிருந்தானகையால், நேரே ஹோட்டலை அடைந்தான்.

பயணக் களைப்புத் தீரக் குளித்து வேறு உடுத்திக் கொண்டு மாடியி லிருந்த தனது அறையினின்றும் கீழே இறங்கி வந்தான். அதற்குள் காலை மணி பதினொன்று ஆகி விட்டிருந்தது.

அவசரக் காரியமாக வெளியூருக்கு இரண்டு நாள் போக வேண்டியிருப் பதால் அம்மாவை அவன் வரும் வரை கவனமாகப் பார்த்துக்கொள் ளும்படி மருத்துவமனை மேட்ரனிடம் ப முறைகள் கிளிப் பிள்ளையைப் போலச் சொ லிவிட்டுத்தான் கிளம்பி இருந்தான். டா டர் சிகாமணியிடமும் கூறிவிட்டே புற பட்டான். இருந்தாலும் அவனைப் பலவி மான கவலைகள் அச்சுறுத்தின.

அம்மா உடம்பு நன்றாகத் தேறி வந் கொண்டிருக்கிறது. திடீரென ஏதாவ கோளாறு நேர்ந்து விட்டால்....?

வீட்டை வேலைக்காரி வசம் ஒப்படைத் விட்டு வந்திருக்கிறோமே? அவள் சரிவர கவனிக்காவிட்டால்?...

அவனும் வீட்டில் இல்லாதபோ ரோவர் சாப்பிட மறுத்துப் பட்டினி கிட தால்....?

சங்கிலித் தொடராக ஆயிரம் கவலைகள் அவன் மனத்தைக் குடைந்தன.


பகல் உணவு நேரம் நெருங்கி வரு சமயம். நர்மதா அம்மாவின் வீட்டுக்குட் போய் வேண்டாத விருந்தாளியாக அவ களுடன் சாப்பாட்டில் கலந்து கொள் அவன் விரும்பவில்லை.

நேரத்தை வீணாக்காது, உடனடியாக காரில் அல்சூர் சாலையை நோக்கி விரை தான்.

நர்மதா அம்மாளை அவன் சந்தி கொஞ்ச காலம் ஆகியிருந்தது. வீட்டை நெருங்கியதும் ஏனோ அவ னுள் சிறு அச்சம் தலை தூக்கியது.

அவன் அம்மாவுக்கு நர்மதா மிக நெருங் கிய சிநேகிதிதான். ஆனால், பேச்சிலும்,





யலிலும் மிகவும் கண்டிப்புக்காரி. அவள் ாதனையால் மாதங்கியின் மனம் ஒரே யாக மாறி விட்டிருந்தால்?...

அவனுக்கு எத்தகைய வரவேற்பு கிடைக் மோ? காரை நிறுத்திவிட்டு இறங்கிக் கேட் த் திறந்து கொண்டு வண்டியை மெல்ல டைபாதை மீது ஓட்டி, வீட்டுக்கு முன்னால் காண்டு நிறுத்தினான்.

மெல்ல இறங்கி, வராந்தாவைக் கடந்து ழைப்பு மணியை அழுத்துவதற்குள் வனுக்கு நெஞ்சு உலர்ந்து போயிற்று.

நர்மதா அம்மாள்தான் கதவைத் திறந் ாள்.

''ஹர்ஷன்! என்ன ஆச்சரியம்? உன்னைப் ந்தி இப்பத்தான் நினைச்சிட்டு இருந்தேன். யுசு நூறு உனக்கு... வாப்பா வந்து உட் ர்!'' அன்பாக அழைத்தாள்.

முன் அறையில் உட்கார்ந்தவன் அவள் ந்த குளிர் பானத்தைக் குடித்துவிட்டுச் ட்டெனப் பேச முடியாமல் சுற்று முற்றும் ண்களால் துழாவினான்.

''முந்தாநாள் ராத்திரி நீ டெலிபோன் சய்தப்போ நான் தூங்கிவிட்டிருந்தேன். ாதங்கி சொன்னாள்....'' நர்மதா மெல்லச் ரித்தாள். வெட்கத்தில் முகம் சிவக்க நெஞ்சு படபடக்க ஹர்ஷன் உட்கார்ந்திருந் ான்.

''நீ வருவேன்னு எனக்கு அப்பவே தெரியும்!'' கேலியா — குத்தலா இனம் தெரியாத குரலில் அவள் சொன்னதைக் கேட்டுப் பதில் பேசத் தோணாது மௌனமாக விழித்தான்.

''மாதங்கி வேலை விஷயமா ஒரு இண்டர் வியூவுக்குப் போயிருக்கிறாள். காலேல போனவ சாப்பாட்டுக்குக்கூட இங்கே வரமாட்டா'' —ஹர்ஷனை மேலும் கீழுமாகப் பார்த்தாள் நர்மதா. அவள் கண்களில் லேசாகக் கடுமை மின்னுவதை அவன் உணர்ந்தான்.

''நான் நடத்துகிற ரெடிமேட் ஆடைக் கடையில் அவதான் உதவி செய்யறா. அதைக் கவனிக்க அப்படியே நேரே போயிடுவா.''

ஹர்ஷனுக்கு நாவறண்டு பேச முடியாது உணர்வுகள் நெஞ்சை அடைத்துக் கொண் டன. மாதங்கி எப்போ வருவாள்? — கேட் கத் துணிவில்லாது குழம்பினான்.

''அநேகமாக இந்த வேலை மாதங்கிக்குக் கிடைச்சுடும். பிறகு அவ தன்னைத் தானே காப்பாத்திக் கொள்ளக் கூடிய சுதந்திர மான பெண்ணாகி விடுவாள். பிறகு யாரோட தயவும் அவளுக்குத் தேவை இருக்காது.'' நர்மதாவின் வார்த்தைகளின் கூர்மை அவ னைத் தாக்கியது.


தவறு செய்துவிட்டு ஆசிரியர் முன் குண் டனை பெறக் கைகட்டி வாய் புதைத்து



அச்சத்தில் நிற்கும் பள்ளிச் சிறுவனைப் போல் உடல் கூசி உட்கார்ந்திருந்தான் ஹர்ஷன்.

"பகல் பன்னிரண்டு மணிக்கு மேலே, கடையில் அதிகமான கூட்டம் இருக்கும். வாடிக்கைக்காரங்களை விட்டுவிட்டு மாதங்கி கடையிலிருந்து வெளியே வர முடியாது. நாலு மணிக்கு நான் கடைக்கு வருவேன். அப்போ அவளுக்கு ஓய்வு கிடைக்கும். உன்னோடே வெளியே வந்து பேச முடியும்... அது வரையில் நீ வேணுமானால் இங்கயே இருந்திட்டு... என்னோடே சாப்பிட்டுட்டு..." அவள் முடிக்கு முன் ஹர்ஷன் வேகமாக விடைபெற்றுக் கொண்டான்.

நர்மதா அம்மாள் மீது எரிச்சல் படுவதால் என்ன லாபம்? அவன் "வேண்டாம்" என்று அடித்து விரட்டியபோது, அடைக்கலம் கொடுத்து ஆதரித்தது அந்தம்மாளல்லவா? அந்த உரிமையில் பேசுகிறாள். இதில் என்ன



ஏ, மழலையே..!

புகைப்படம்: என். பக்கிரிசாமி

அமுதமே!
இரவில் எழுதிய சிறுகதைகளின்
கருவில் உருவான தொடர்கதையே!
பொன்மணியே!
பூச்சரமே!
நடைபயிலும் பொன் ரதமே!
பல்லில்லா உன் இதழசையும்
சொல் கேட்டால்
மலைகளும் மழலைகளாய் மாறும்...
சீறும் கடலலையும் சிரிக்கும்.
உச்சி மோந்து
உன்னை அள்ளி அணைக்கையில்
ரோஜா இதழில்
பனிமுத்து பதிக்கின்ற ஸ்பரிசம்.
மழலை மரிக்கொழுந்தே!
கொஞ்சிக் குலாவையில்
நெஞ்சில் நீ
உதைப்பது இதமாக இருக்கிறது.
என்னை உதைப்பதைப் போல
எல்லோரையும் உதைக்காதே!
உன் கால் முறிந்துவிடும்.
என்ன வியக்கிறாய்?
பலருக்கு அங்கே
இதயத்துக்குப் பதிலாக
இரும்பல்லவோ இருக்கிறது?

— இளையபாரதி

தவறு? தும்பை விட்டு வாலைப் பிடிக்க நினை தால்.... இப்படித்தான் அவமானமு சங்கடமும் ஏற்படும்....தன்னையே நொ படி புறப்பட்டான்.

"நர்மதா பொட்டீக்" கடை வாயி எதிர்ப்புறம் கொஞ்ச தூரத்திலேயே கா நிறுத்திவிட்டுக் கண்களை உள்ளே ஓட்டிய உட்கார்ந்திருந்தான்.

பகல் வேளை... "பொட்டீக்"கில் இ களின் கூட்டம் நிறையவே இருந்த காரில் இருந்தபடியே கடை முகப் பெரிய கண்ணாடிக் கதவு வழியே ஊடுருவ படி மாதங்கியைத் தேடினான்.

ஒரு இளம் பெண்ணுக்கு அலமாரி இருந்த 'மாக்ஸி'களை எடுத்துக் காட்டிய விற்பனை மும்முரத்தில் இருந்தாள் அவ அந்த இளம் பெண் அருகே அவளையொத் ஒரு இளைஞன் துணையாக நின்றவன் மாதங் யிடம் விழுந்தடித்துக் கொண்டு பேச மு பட்டுக் கொண்டிருந்தான்.

என்ன சொன்னாளோ அவள்... கடை அதிரும்போல அந்த இளைஞன் சிரித்தா

மாதங்கி மேலே இடித்துக் கொண்டுவிடு நெருக்கத்தில் என்னவோ கேட்டுக் கொ டிருந்தான். ஹர்ஷனுக்கு எரிச்சலாக வந்தது அழகான பெண் ஒருத்தியைக் கண்டா போதும். என்னமாய்ப் பல்லை இளி கிறான்கள்... தானும் இப்படி இருந்தவ தான் என்பதும், ஒரு காலத்தில் கண்ணுக்கு கவர்ச்சியான பெண்களின் பின்னால் ஓடி வன் என்பதும் அவனுக்கு மறந்தே போ விட்டிருந்தது.

மாதங்கியும் புன்னகை மாறாத முக துடன் பதில் அளித்தபடி இருந்தது வே அவனுக்குள் புகைச்சலைக் கிளப்பி விட்டது சதா மிரட்சியுடன் காணப்படும் அவள்கூட வல்லவா, இப்பொழுது தைரியமாகப் பு முறுவலுடன் தலையை ஆட்டி ஏதோ பே கிறாள்! அவளும் மாறிப் போயிருக்கலாம்

இத்தனை நாட்களின் இடைவெளியி அவன்மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டிருக் லாமே? அவளை வீட்டை விட்டு வெளியே துரத்த அவனுக்கு நெஞ்சுரம் இருந்ததுபோ அவளுக்கும் அவனை நிராகரிக்க இப்போது உறுதியும் துணிவும் ஏற்பட்டிருக்கலாமே?

மாதங்கி இப்போது வெளி உலகில் பழ விட்ட பெண். நர்மதா அம்மா சொன்னது போல் தன் சுய முயற்சியாலேயே தனித்து வாழும் தகுதி பெற்று விட்டவள். இன அவனது தயவுக்காகவோ, அன்புக்காகவோ ஏங்கி, அடிமை வாழ்வு வாழத் தேவையில்லை அவளுக்கு.

பெண் உரிமை, சுதந்திரம் என்று பேசி வரும் அவனது அம்மாவும், மாதங்கியின் மனப்போக்குப்படிதான் பேசுவாள். எனவே, மாதங்கி அவனை உதாசீனம் செய்தாலும், வெறுத்துப் பேசினாலும் அவனுக்காகப் பரிந்து பேச யாருமே முன்வர மாட்டார்கள்.

ஹர்ஷன் மீண்டும் கண்ணாடிக் கதவின் வழியே ஊடுருவிப் பார்த்தான். மாதங்கி, அந்த வாலிபனிடம் சிரித்துப் பேசியது, அடக்க மாட்டாத ஆத்திரத்தைத் தூண்டி யது. பற்களைக் கடித்துக்கொண்டு, பொறுமை யுடன் காத்திருந்தான்.

அவளுக்குச் செய்த கோணலை அவன்தானே சீர் செய்தாக வேண்டும். பொறுமை! பொறுமை! மனம் எச்சரித்தது.

சிறிது பொழுதில் நர்மதா அம்மாவின் காரைக் கண்டதும் இலேசாக மூச்சு வந்தது அவனுக்கு.

காரை நிதானமாக ஒரு புறம் நிறுத்தியவள், அவனிடம் வந்து, ''நான்போய் மாதங்கியை அனுப்புகிறேன். எங்கேயாவது ஒரு தனி இடத்தில் உட்கார்ந்து கொண்டு நீ பேசிக் கொள்'' என்றாள் கண்டிப்புத் தொனிக்கும் குரலில்.

'கடை வாயிலில் ஏதேனும் ரசாபாசமாகப் பேசிவிடாதே' என்ற பொருள் தொனித்தது அவள் குரலில்.

ஹர்ஷன் கோபத்தைச் சிரமத்துடன் அடக்கியபடி தலையை ஆட்டி வைத்தான்.

''நீ பேசறதைப் பேசிக்கொள். பிறகு அவள் இஷ்டம்''. நறுக்கெனக் கூறிவிட்டு, கடைக்குள் சென்றுவிட்டாள்.

ஒரு விநாடியே ஒரு யுகமாகக் கனத்தது. நெஞ்சு படபடக்க ஆவலுடன் கடையையே வெறித்தபடி இருந்தான்.

மாதங்கி, 'போனே'த் துண்டித்தது போல் அவனைப் பார்க்க மறுத்துவிடுவாளோ?— அவன் நேரே ஊரிலிருந்து வரக் கூடும் என்று எதிர்பார்த்து, இண்டர்வியூவைச் சாக்காக வைத்து வீட்டிலிருந்து வெளியேறி விட்டாளோ?

மாதங்கி கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள். எதிர்ப்புறமாக நிறுத்தப்பட்டிருந்த அவனது காரைக் கண்டதும் தயக்கத்துடன் அப்படியே நின்று விட்டாள்.

''மாதங்கி!'' — உரக்கக் கூவி அழைக்க வேண்டும்போல் அவனுக்குள்ளே ஆவேசம் அலையாகப் பொங்கியது. அதே சமயம், ஒருவிதமான வெட்கமும், அவமானமும் அவனை அடக்கின. கையை மட்டும் உயரத் தூக்கி, தான் நிற்கும் இடத்தைக் காட்டுவது போல் அசைத்தான்.

மாதங்கி அதைப் பார்த்தது தெரிந்தது. ஆனால் நின்று கொண்டே இருந்தாள். அதற்கு மேல் ஹர்ஷனால் பொறுக்க முடியவில்லை.

சட்டெனக் காரை விட்டு இறங்கினான். ஒரே தாவலில் எதிர்ப் பக்கம் நின்ற அவளருகில் ஓடி மூச்சிரைக்க நின்றான்.

''மாதங்கி! உன்கிட்ட நேராகப் பேச வேண்டும் என்று ஓடோடி வந்திருக்கேன்.''

மாதங்கி மெல்ல அவனைப் பார்த்தாள். முன்போல் அவனைக் கண்டதும் அவளது கண்களில் காணப்படும் மிரட்சி அவளிடம் இல்லை.

''அம்மாவுக்கு ரொம்பவும் உடம்புக்கு முடியலே. நர்ஸிங் ஹோமில சேர்த்திருக்கு... அதனாலே காரை எடுத்துக்கிட்டே சென்னையிலிருந்து ஓடோடி வந்தேன்.'' அவசரமாக முடித்தான்.

''தெரியும். நர்மதா அம்மா சொன்னாங்க'' அவளது குரலில் எந்தவிதமான சலனமும் இல்லை. இதுநாள் காணாத கணவனைக் கண்ட மகிழ்ச்சி, பரபரப்பு ஊஹூம்! எதுவுமே இல்லாத விருப்பு வெறுப்பற்ற குரல்!



கணக்கில் நிபுணனான கல்லூரி மாணவன் ஒருவன் கவியரசர் தாகூரைப் பார்க்க வந்திருந்தான்.

''தம்பி! உன்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. நாம் இருவரும் பரிமாறிக் கொண்டால் இருவரிடமும் அதே தொகைதானே இருக்கும்?'' என்று கேட்டார் தாகூர்.

''ஆமாம்'' என்றான் மாணவன்.

''உன் மனத்தில் ஓர் எண்ணம் இருக்கிறது. என் மனத்திலும் ஓர் எண்ணம் இருக்கிறது. நாம் இருவரும் ஒருவருக்கொருவர் எண்ணங்களைப் பரிமாற்றிக் கொண்டால், நம் இருவர் மனத்தில் இரண்டு எண்ணங்கள் இருக்கும்; இல்லையா?'' என்றார், தாகூர்.

கணித நிபுணன் அசந்து போய்விட்டான்! 'கல்கத்தா மிக்கி'

ஆதாரம்: மகாகவிகள்

ஹர்ஷனின் முகம் அவமானத்தால் சிவந்தது. இத்தனைக்கும் அவன்தானே காரணம்? தன்னையே சாடியபடி, ''என்னோட கொஞ்சம் வெளியே வரமுடியுமா மாதங்கி?'' என்றான் தடுமாற்றத்துடன்.

''எங்கிட்டப் பேசப் போறீங்களா?''

''மாதங்கி! ப்ளீஸ்!'' ஹர்ஷன் கெஞ்சினான்.

''ஒண்ணு செய்யலாமே. நாம ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயம். அதைப்பத்திப் பேசணும்னா நர்மதா அம்மா வீட்டுத் தோட்டத்திலேயே அமர்ந்து பேசுவோமே'' என்றாள் தீர்மானத்துடன்.

''அப்ப புறப்படலாமா?''

''இல்லே. நீங்க புறப்பட்டுப் போங்க. நான் நர்மதா அம்மாவிடம் சொல்லிட்டு அங்கேயே வந்து சேருகிறேன்.'' — கடை உள்ளே மறைந்துவிட்டாள் மாதங்கி.

ஹர்ஷனின் முகம் ஏமாற்றத்தால் தொங்கிப் போயிற்று. காரில் ஏறி அமர்ந்தவனுக்கு நெடு நேரம் தெருவே சூன்யமாகக் காட்சி அளித்தது. அவனது மனக் கோட்டை நொறுங்குவது போன்ற பிரமிப்பில் அயர்ந்து போனான். (தொடரும்)



இன்று தமிழ்நாட்டில் கடித இலக்கியம் ஒரு புதிய கலையாகப் பரவத் தொடங்கியிருக்கிறது. மேனுடுகளில் கடிதங்களைத் தொகுத்து இலக்கியமாகவே வெளியிடுகிற மரபு வளமாக இருந்து வருகிறது. இப்போது தமிழ் நாட்டிலும் இது தொடங்கியிருப்பது ஒரு நல்ல அறிகுறியாகும்.

கடித இலக்கியத்தில் தமிழ் மொழியில் நல்ல ஒரு முன்னேடியாக விளங்குவது டி.கே. சி. கடிதங்களின் தொகுப்பாகும்.

அண்மையில் நண்பர் நீதிபதி மகராஜன் அவர்கள், தமக்கும் தமது தமக்கையாருக்கும் டி.கே.சி. எழுதிய கடிதங்களில் பலவற்றைத் தொகுத்து ஓர் அழகிய நூலாக வெளியிட்டிருக்கிறுர். இது போலவே என் நண்பர் காலஞ்சென்ற தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், ஐ.ஏ.எஸ். அவர்களும் ஒரு தொகுப்பு வெளியிட்டிருக்கிறுர்—'ரசிகமணி டி.கே.சி.யின் கடிதங்கள்' என்ற தலைப்பிலே! இந்த நூல் 1961ல் வெளியாயிற்று.

இந்த இரண்டு தொகுப்புக்களையும் படித்துப் பார்த்தால் இலக்கிய நூல்களைப் படிப்பது போலவே இருக்கும். ஒவ்வொரு கடிதமும் ஒரு அழகான கட்டுரை! உல்லாசம்,, களிப்பு, கெண்டை, இலக்கிய உண்மைகள் சில நுட்பங்கள் எல்லாம் ஒவ்வொரு கடிதத்திலும் துலாம்பரமாகப் பேசும்!

கடிதத்தின் பொருள் பலப் பலவாக இருக்கும். சாதாரணச் செய்தி என்று தோன்றுகிற ஒன்றுமே டி.கே.சி.யின் தமிழில் தங்க மூலாம் பெற்று நிற்கும்!

பம்பாயிலிருந்து ஏ.கே. கோபால பிள்ளை (கேரள நண்பர்) என்ற நெல்லை வழக்கறிஞருக்கு எழுதியுள்ளார் டி. கே. சி. சாதாரணச் செய்திகளும் ரசிகமணியின் கையிலே எப்படிப் பேசுகின்றன பாருங்கள்!

''பம்பாயில் நான் இருப்பது அதிசயமாய் இருக்கலாம் தங்களுக்கு. உண்மையில் அதிசயந்தான். நாளுக இங்கு வரவில்லை!

ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி திருச்சியில் 20–10–46 அன்று நடந்தது. அதற்காக என்னை அழைத்தார்கள். நானும் போனேன். கச்சேரி முடிந்ததும் என்னை ரயிலில் தூக்கிப் போட்டார்கள் எம்.எஸ். ஸும் சதாசிவமும்! மறுநாள் காலை ஏழு மணிக்குச் சென்னை சென்றேம். அப்படியே பத்து மணிக்கு ஆகாய விமானத்தில் தூக்கிப் போட்டார்கள். சாயங்காலம் நாலு மணிக்குப் பம்பாயில் இறக்கினுர்கள். இது தான் பம்பாய்க்கு வந்த கதை!


பம்பாய் நகரம் பார்க்க வேண்டிய நகரம் தான். சென்னைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. மேல் நாட்டு நகரங்களைப் போல் வகுத்திருக்கிறது. பெருந் தொகையான ஜனங்களை எவ்வளவு சௌகரியப்படுத்தக் கூடுமோ, அவ்வளவு செய்திருக்கிறது! மனுஷன் கெட்டிக்காரப் பயல்தான் என்று சொல்லும்படியாக இருக்கிறது. மூன்று மாடி வீடுகளும் ஐந்து மாடி வீடுகளுமாகத்தான் இருக்கின்றன. ஒரு மாடியிலேயே மூன்று குடித்தனங்கள் இருக்கின்றன. நாங்கள் இருக்கிற மாடியின் பகுதி சிறிய பகுதிதான். ஆனுலும் பதினுறு நபர்கள் சௌகரியமாகப்

சினிமா சினிமா சினிமா சினிமா



திருடன்: ரயில் பயணங்களில், சங்கிலியைப் பிடித்து இழுத்தால் 500 ரூபாய் அபராதம். தெரியுமா?
மகன்: தங்கச் சங்கிலியா, கோல்டு கவரிங் சங்கிலியா?

—உ. சுயம்புலிங்கம்



''என்னங்க இது இத்தனை நாளாகியுமா யாரும் கண்டுக்கலே?'' —புலியூர் பிரபா



● எம். ஜி. ஆர்., அ.இ. அ.தி.மு.க.வின் எதுவாகத் திகழ்கிறார்?
''ஆணிவேர்.!''

● மந்திரி பதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ப. உ. சண்முகத்துக்கு என்ன சமாதானம் சொல்லலாம்?
''விடியும்வரை காத்திரு.''

● இன்றைய அரசியலில் மிகவும் அதிகமாகக் காணப்படுவது?
''தில்லு முல்லு''

● ராஜ்நாராயணன் எந்தக் கட்சிக்குப் போனாலும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவரை எதுவாக நினைப்பார்கள்?
''சுமை''



● மொரார்ஜி தேசாய் பாரத தேச மக்களை எப்படி அழைக்கிறார்?
''வெளிச்சத்துக்கு வாங்க.''




● சுப்புடுவின் விமர்சனத்தைப் பார்த்து விட்டு விமர்சனத்துக்கு உள்ளாகிறவருக்கு சுப்புடுவை எதை வைத்துத், தாக்க வேண்டும் போலிருக்கும்?
''கல் தூண்.''

விஜயா கண்ணன்



ஒருவன்: பாலைவனச் சோலையில கதாநாயகன் ஏண்டா தாடியோடவே இருக்கான்?
மற்றவன்: பாலைவனத்தில ஒரு சோலை இருந்தா எப்படி இருக்கும் கிறதைக் காட்டத்தான்.

ஆர். கார்த்திகேயன்



அவன்: நீ கமல் ரசிகையா இருக்கலாம். அதுக்காக நானே போய்க் 'கடல் மீன்' பிடிச்சிட்டு வந்தால்தான் கறி வைப்பேன்னு சொல்றது நியாயமா?

—நயினாரகரம் குலஸ்

●

அவன்: 'இரயில் பயணங்களில்' எடுத்த நம்ம டி. வி. இராஜேந்தர் ஒரு தப்புப் பண்ணிட்டார்டா!
நண்பன்: என்னதுடா அது?
அவன்: அவரே சொந்தத் தியேட்டர் கட்டி அதிலேயே ரிலீஸ் பண்ணியிருக்கலாம்!

—வி. மனோகர்

சினிமா சினிமா சினிமா சினிமா

செண்பக மரத்தடியில் போடப்பட்டிருந்த சிமெண்ட் ஆசனத்தில் இருவரும் அமர்ந்து கொண்டனர். சொன்னபடியே மாதங்கி, நர்மதா அம்மா வீட்டுத் தோட்டத்தில் அவனைத் தேடி வந்து விட்டது ஒரு சிறு ஆறுதலை அளித்தது.

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? தொண்டையைச் செருமிக் கொண்டான். ஓரக் கண்ணால் அவளைக் காலோடு தலை வரை ஆராய்ந்தான்.

நீலவண்ண வாயில் சேலை இடையில், காதுகளில் முத்துத் தோடு, கழுத்தில் தாலிச் சரடு... அப்பாடா! அதைத் தூக்கி எறியவில்லை.! கைகளில் பிளாஸ்டிக் வளையல்... மிக எளிமையான கோலத்தில், அதிக அழகுடன் அவள் காணப்பட்டாள். இத்தனை நாளும் இந்த அபூர்வ அழகை ரசிக்கத் தெரியாத மடையனாக இருந்து விட்டோமே! உள்ளம் வருந்தியது.

''என்னவோ பேசணும்னு சொன்னீங்க'' மாதங்கி அவனை நிமிர்ந்து பார்த்தபடி கேட்டாள்.

''இந்த நீல நிறச் சேலை உனக்கு ரொம்ப அழகா பொருத்தமா இருக்கு...'' மென்று விழுங்கியபடி முடிப்பதற்குள், அவள் 'களுக்' கென்று சிரித்தாள்.

கழுத்தில் விழுந்த மாலை 23

லக்ஷ்மி

''இதைச் சொல்லவா சென்னையிலிருந்து இவ்வளவு தூரம் புறப்பட்டு வந்தீங்க?'' வேடிக்கையாக அவள் கேட்டதும், திடுக்கிட்டுப் போனான் அவன்.

மாதங்கி மாறித்தான் போயிருக்கிறாள். முன்னைவிடப் பளிச்சென்று காணப்படுவது போலவே பளீரென்று மிகத் துணிச்சலாகப் பேசவும் தெரிந்து வைத்திருக்கிறாளே?

''சுத்தி வளைக்காமச் சொல்லிடறேன் மாதங்கி! அம்மாவுக்கு உடம்புக்கு முடியாம நர்ஸிங் ஹோமிலே சேர்த்திருக்கு.''

''சொன்னீங்களே.''

''நீ இல்லாம வீடு வீடாவே இல்லே. அதனாலே... உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு வந்தேன்.''

''எதுக்கு? வீட்டைப் பார்த்துக் கொள்ளவா?''

''மாதங்கி! என்னை மன்னிச்சுடு, எனக்கு எப்படி, எங்கே ஆரம்பிச்சுப் பேசறதுன்னே விளங்கலே.'' பரிதாபமாகக் கூறினான் அவன்.

மாதங்கி மெதுவாகப் புன்னகைத்தாள்.

''உன்கிட்ட முதல்ல, நான் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உன்னை என் மனைவியா வாழும்படி வேண்டிக் கொள்ளத்தான் வந்தேன், மாதங்கி! சத்தியமா என்னை நம்பு....''

''கட்டாயக் கல்யாணத்திலே உங்களுக்கு ரொம்ப வெறுப்பு ஏற்பட்டிருந்திச்சே!''

''ஆரம்பத்திலே வெறுப்பு இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், நாளடைவில் உன் மேலே கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு உண்மையான அன்பு ஏற்பட ஆரம்பித்திருந்ததை நானே உணரத் துவங்கின சமயம்தான் அந்த மொட்டைக் கடிதம் வந்து மனசைக் குழப்பிட்டது.''

''இப்பத் தெளிஞ்சுட்டதாக்கும்!'' குறும்பாகக் கேட்டாள் அவள்.

''ஆமாம். அந்த மொட்டைக் கடிதம் உங்க பெரியம்மாவோட சூழ்ச்சின்னு தெரிந்துவிட்டது. நான் பிற்பாடு எத்தனை வேதனைப் பட்டேன் தெரியுமா? ஆனால், அதே சமயம் உன்மேலே ஏற்பட்ட பிரியத்தால தான், எனக்கு அப்படி ஒரு கோபம் வந்ததுன்னு புரிஞ்சுகொண்டேன்.'' பெருமூச்சு விட்டான்.

மாதங்கி பதில் பேசவில்லை.

''அதுமட்டுமா?உன்கிட்ட வேறே, என்னைப்பத்தி உங்க பெரியம்மா கதை கட்டிவிட்டாங்களாமே?''

''ஆமா, சொன்னாங்க... ஏதோ கார் விபத்துல...''

''அது பெரும் பொய்!'' என்று கூவினான் ஹர்ஷன்.

''இப்ப என்ன அதுக்கு? நான் தான் அதை நம்பலியே? பயமுறுத்தினாங்க. வெளியே சொல்லவில்லை.''

''மாதங்கி! நீ ரொம்ப உயர்ந்த மனசுடைய பொண்ணு. என்னைப் போல ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு முடிவெடுக்கலே.''

''நடந்ததைப் பத்தி இப்ப என்னங்க.''

''இல்லே மாதங்கி! உங்க பெரியம்மா சொன்னது பொய்யின்னு நாம வாழ்ந்து காட்டணும். தயவு செஞ்சு எனக்கு ஒரே ஒரு முறை சந்தர்ப்பம் கொடு. நல்ல கணவனா நான் வாழ்ந்து காட்டுகிறேன்.'' கெஞ்சினான்.

மாதங்கியின் கண்கள் கலங்கின.

''எங்கம்மாவைச் சரிவரப் புரிஞ்சுகொள்ளாம, அவளையும் அவளோட நல்ல மனசை



யும் நான் நோக அடிச்சேன். அதனுலே, என் அம்மாவுக்கும் நல்ல பிள்ளையா வாழ்ந்து, அவங்க மனசையும் குளிரச் செய்ய முயல ணும்னு ஆசைப்படறேன், மாதங்கி! என்னை நம்பு. உறுதியாச் சொல்றேன். என்னை இனி யாவது மன்னிப்பாயா?'' என்று உணர்ச்சி வசத்தால் தடுமாறினுன் ஹர்ஷன்.

''கொஞ்சம் நிதானமாகப் பேசுங்க'' என் ருள் மாதங்கி கனிவாக.

''உன் கடிதத்தைப் படிச்சேன். விவாக ரத்து தேவைன்னு நீ மிக அவசரமான முடிவை எடுத்திட்டேன்னு எனக்குத் தோணிட்டது. அதப் பத்தி சரியா எடுத்துச் சொல்லி, நேராகவே பேசித் தீர்த்துப் பிடலாம்னுதான் உன்னை டெலிபோனில் கூப்பிட்டுப் பார்த்தேன். ஆனு, நீ போனை பட்டுன்னு வச்சிட்டயே....' குழந்தை போல அரற்றினுன் அவன்.

''கடிதாசியைப் படிச்ச கோவத்திலே, என்னைத் தாறு மாருத் திட்டத்தான் 'போன் பண்றீங்கன்னு' நினைச்சேன். அந்தப் பயத் துல 'டக்'குனு போனை வச்சிட்டேன்'' முறு வலித்தாள் மாதங்கி.

''என்னைப் பத்தின தப்பான எண்ணம் தானே உன் மனசிலே உருவாகியிருக்கு... இல்லையா?''

''உருவாக்கினது.... நீங்கதானே....''

''மாதங்கி! நான் பழைய ஹர்ஷன் இல்லே!''

''சந்தோஷம்!''

''நீ இன்னிக்கு 'இண்டர்வியூவுக்குப்போய் வந்திருக்கே. வேலை கிடைச்சிடும்னு நர்மதா அம்மா சொன்னுங்க.''

''ஆமாம்.''

''மாதங்கி! உனக்கு வேலை பார்க்க ஆசை யாக இருக்கலாம் இல்லியா?'' என்று குழை வுடன் கேட்டான் ஹர்ஷன்.

''ஆமாம். எனக்கு வேலை பார்க்க எப் போதுமே ஆசைதான்.'' கூறியபடி எழுந் தாள் மாதங்கி.

ஹர்ஷன் முகம் சுருங்கியது. ''அப்படி யானுல்....''

''நர்மதா அம்மா வரட்டுமே. அவங்க எனக்குக் கை கொடுத்து ஆதரிச்சதாலே, தாய் போல... அவங்களும் வந்த பிறகு முடிவு செய்தா நல்லது....''

சட்டென மாதங்கியின் கரங்களை ஒரே தாவலில் எட்டிப் பற்றிக் கொண்டான் ஹர்ஷன்.

''ப்ளீஸ்! மாதங்கி! என்னை ஏமாற்றி விடாதே. நான் ஒரு நல்ல முடிவு காண வேணும்னுதான் இத்தனை தூரம் ஓடோடி வந்திருக்கேன். தவறு செய்தவன் திருந்து வதற்கு ஒரே ஒரு வாய்ப்புத்தான் நான் கேட்கிறேன்.''

“காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு.”



“பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு”



“சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு”



“நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு”

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.



“அசதியினுல்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு”

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்ருடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்பொ-ஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்-பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

லின்டாஸ்-GLC. 10-2015 TM

மாதங்கியின் கண்களில் நீர் பளிச்சிட்டது. ''கையைவிடுங்க...நர்மதாஅம்மா வராங்க.'' மெல்லத் தன் கரங்களை விடுவித்துக் கொண்டாள்.

காரை நிறுத்திவிட்டு இறங்கிய நர்மதா இருவரையும் ஒரே கணத்தில் பார்வையால் அளந்தாள்.

''மாதங்கி! பேசி முடிச்சிட்டியாம்மா?''

மாதங்கி மகிழ்ச்சி பொங்கச் சிரித்தாள்.

ஹர்ஷன் வியப்புடன் நின்றான். 'மனம் விட்டு இன்னும் மாதங்கி எந்த முடிவும் சொல்லவில்லையே? இதென்ன கேள்வி?'

நர்மதா உரக்கச் சிரித்துவிட்டு ஹர்ஷன் பக்கம் திரும்பினாள்.

''உள்ளே போ ஹர்ஷன்! வீடு தேடி வந்த மருமகப்பிள்ளைக்கு காப்பிடிபன்கூடக்கொடுக்காம வாசலிலேயே நிறுத்தி வச்சுப் பேசிக்கிட்டிருக்காளே இந்தப் பொண்ணு!'' என்றாள் உற்சாகமான குரலில்.

மாதங்கி ஹர்ஷனை மென்மையாகப் பார்த்து முறுவலித்துவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஹர்ஷன் உள்ளத்திலே நம்பிக்கை உதயமாகியது. புதுத் தெம்புடன் அவன் நர்மதாவைப் பின்பற்றி உள்ளே ஆவலுடன் சென்றான்.

''இன்னிக்கு ராத்திரி உங்க ரெண்டு பேருக்கும் நம்பவீட்டிலே விருந்து. இன்னிக்கு என்னோட ரெண்டு பேரும் தங்கியிருந்து, நாளைக் காலைல புறப்பட்டுப் போனால் போதும். என்ன நான் சொல்றது கேட்கிறதா?'' அதட்டலாக உரிமையுடன் உத்தரவு போட்டாள் நர்மதா.

முட்டுக்கட்டையாக நர்மதா இருப்பாள் என்று அஞ்சிக் கொண்டு வந்தவனுக்கு ஆனந்தம் கட்டுக் கொள்ளவில்லை.

கண்டிப்புக்காரி என்றாலும் கடமை உணர்ச்சி உடையவளாக இருக்கிறாள். நல்லவேளை... எல்லாம் எளிதிலே கைகூடிவிட்டது. தன்னுள் எண்ணி மகிழ்ந்தான்.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு கழுவிக் கொண்ட கையைத்துடைக்கத் துவாலையுடன் வந்த மாதங்கியை ஆசையுடன் பார்த்தான் ஹர்ஷன்.

''பெரிய ஆள் மாதங்கி நீ! என்னை எப்படிக் கலங்க அடிச்சிட்டே தெரியுமா? எங்கே நீ என் முகத்தில் அடிச்சாப்பலே வர மறுத்துவிடுவாயோன்னு என் மனசு பட்ட பாடு.. அப்பப்பா...'' சொல்லியபடியே துவாலையுடன் அவளது கரங்களைச் சேர்த்துப் பிடித்தான். உரிமையோடு அவளை அருகே இழுத்துக் கொண்டான்.

''ஸ்... நர்மதா அம்மா வராங்க... இதையெல்லாப் நம்ம வீட்டிலே வச்சுக்கலாம்.. இருபத்து நாலு மணி நேரம் பொறுக்கக் கூடாதா?'' கேலியாக மாதங்கி சிரித்தாள்.

மறுநாள் நர்மதாவிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டு... கணவனுடன் மாதங்கி சென்னைக்குப் புறப்பட்டாள்.

காரைத் தங்கள் வீட்டுத் தோட்டத்துக்குள் செலுத்திய ஹர்ஷன் திகைத்தே போனான்.

செம்மண் கரை கட்டிய மாக்கோலம் வராந்தாவைப் பளிச்சென அலங்கரித்தது.

ஆரத்தித் தட்டுடன் விழி மேல் வழி வைத்தபடி வேலைக்காரம்மா நெற்றி நிறையக் குங்குமமும், வாய் நிறைய வெற்றிலைக் காவியுமாக நின்று கொண்டு சிரித்தாள்.

வாயிற் பக்கத்துக் கதவின் மீது மாவிலைத் தோரணம் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தது. உள் பக்கமிருந்து ஊதுபத்தியின் மணம் கம்மென்று முகத்தில் வந்து மோதியது.

''அம்மா! அவங்க வந்தாச்சு... வேலைக்காரம்மா பரபரப்பாக உரக்கக் குரல்கொடுக்கக் கஸ்தூரி ஆவலாக வெளியே வந்தாள்.

திடுக்கிட்டுப் போனான் ஹர்ஷன். ''அம்மா நீங்க இங்கே எப்படி?.. '' வியப்புடன் கேட்டபடி காரிலிருந்து இறங்கினான்.

''நேத்தே நர்ஸிங் ஹோமிலிருந்து என்னை டாக்டர் வீட்டுக்கு அனுப்பிட்டார். நர்மதா எனக்கு விவரமாப் போன் செய்திருந்தா'' என்ற கஸ்தூரி உரிமையுடன் முன்னே வந்து ''ம்...! ரெண்டு பேரும் அப்படியே ஒரு நிமிஷம் நில்லுங்க....'' என்று உத்தரவிட்டாள்.

வேலைக்காரம்மா ஆரத்தி சுற்றிக் கொட்டின பிறகு உள்ளே வந்த மாதங்கி!... ''அத்தே!'' என்று ஆசையுடன் ஓடிவந்து மாமியாரை அணைத்துக்கொண்டாள்.

மருமகளை ஆதரவோடு மார்பில் அணைத்துக்கொண்ட கஸ்தூரியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்துக்கள் பெருகின. மாதங்கியின் தலை மீது ஆசித் துளிகளாகச் சிதறின.

''எப்படி இருக்கீங்க அத்தே! நான் இல்லாம ரொம்பக் கஷ்டப்பட்டீங்களாமே?...!'' அன்புடன் வினவினாள் மாதங்கி.

''எனக்கு இனி ஒரு வியாதியும் இல்லே. எந்தக் கஷ்டமும் ஏற்படாது. நீ வந்துட்டேங்கற மகிழ்ச்சியிலே நான் நிறைவோட ஆரோக்கியமா ரொம்ப நாள் வாழப்போகிறேன். ஏன் தெரியுமா?....'' என்று கேட்டபடி இருவரையும் இரு பக்கமும் அணைத்தபடி உள் பக்கம் சென்றாள் கஸ்தூரி.

''சொல்லுங்கம்மா...'' என்றான் ஹர்ஷன் அருமையுடன்.

''என் பேரப் பிள்ளைகளை மடியிலே வச்சுக்கொண்டு அவங்களுக்குக் கதைசொல்ல வேணுமா? அதுக்காகத்தான்...'' உரக்க மகிழ்ச்சியுடன் சிரித்தாள் கஸ்தூரி.

எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விட்டது போல் அவர்களுக்கு முன்னால் ரோவர் உற்சாகமாகக் குரைத்தபடி குதித்தோடி வந்து கொண்டிருந்தது.

முற்றும்

''அவரே வேண்டாம்னு வந்ததுக்கப்புறம் அவர் பேரை நம்ம கடைக்கு வைக்கணுமா... எனக்குப் பிடிக்கலேன்னா...''

—'' 'சாமண்ணா காப்பி கிளப்'னா ஹிஸ்டரி புக்ஸ் படிக்கிறாப்பல இருக்குப்பா. மாடர்னா பேர் வெச்சாத்தான் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ் கோஷ்டி சேர்த்துண்டு வருவா.''

'' 'குருவே தெய்வம்னு' கொண்டாடுங்கோ மாப்பிள்ளே! குழந்தைக்கு அவன் பேரை வைச்சேள். புதுப் பங்களாவுக்கு அவன் பேரை வைச்சேள். புதுசா ஆரம்பிக்கப்போற ஹோட்டலுக்கும் அவன் பேரையே வைக்கணும்னா — இதுக்குப் பதிலா நீங்க அவன் கடையிலேயே காப்பி ஆத்திண்டிருக்கலாம்....''

''ஜாதக ரீதியா ஒங்க ஸ்டாருக்கு 'ரூபி'ன்னு பேர் வர்றா மாதிரி ராசி பார்த்து வச்சாத்தான் தனியா வந்து தொழில் தொடங்கறதுக்கு அர்த்தம். இல்லேன்னா எல்லாம் வியர்த்தம்.''

ஆளுக்கு ஆள் பேசிக்கொண்டிருக்கிறார்கள், மனைவி, மகள், மாமனார், ஜோசியர் மற்றும் நண்பர்கள் எல்லாருமே 'சாமண்ணா காப்பி கிளப்' என்ற கர்நாடகப் பெயரை எதிர்க்கும் போது நடராஜன் மட்டும் அந்தப் பெயரில் ரொம்பவும் பிடிவாதமாக இருக்கிறார். திருவல்லிக்கேணி பாரதியார் சாலையில் நெரிசல் மிகுந்த மையப் பகுதியில் 'சாமண்ணா காப்பி கிளப்' வர்ண போர்டை நான்கு ஆட்களை வைத்து உயர்த்தி வெகு ஜாக்கிரதையாக நிறுத்தி ஆணியடித்துக் கொண்டிருக்கிறார் — மானசீகமாக...

தாம்பரம்.

'சாமண்ணா காப்பி கிளப் (ஒரிஜினல்) வெறிச்சோடிக் கிடக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கிய கூட்டம் இப்போதெல்லாம் ஒரேயடியாக நின்று போகிற நிலைமை. காப்பி செக்ஷன் நடராஜன் கைக்கு என்று காப்பி அப்படி மணக்கும்... அப்படி ருசிக்கும். தஞ்சாவூர் பாணியிலேயே 'டிகிரி காப்பி' என்று போர்டும் போட்டுக் காசை வாரி நிறைத்துக் கொண்டிருந்த சாமண்ணா — கடை முதலாளியும் சரக்கு மாஸ்டரும் அவரே — ஒரு சின்ன மனத்தாங்கலுக்குப் பிறகு நடராஜன் சென்னையில் தனியாகக்கடை போடப் போகிறான் என்று காற்று வாக்கில் கேள்விப் பட்டபோது நம்பவில்லை. ரொம்பவும் விசுவாசமானவன் நமக்குத் துரோகம் செய்ய மாட்டான் என்று அடித்துப் பேசியவர், ஹோட்டல் திறப்பு விழாப்பத்திரிகையை—தபாலில் வந்தது—பார்த்ததும் ஆடிப் போனார். 'தஞ்சாவூர் டிகிரி காப்பி' என்ற போர்டை முறித்துப் பரணில் போட்டு விட்டார். இந்தப் பயலின் கை மணத்தை நம்பித் தனியே காப்பி செக்ஷன் ஆரம்பிக்க இருந்த திட்டத்தைக் கைகழுவினார். ஐயாயிரம் ரூபாய் முதலீட்டில் வாங்கிய எவர்சில்வர் டபரா தம்ளர் செட்டுகள் அத்தனையிலும் சாமண்ணா காப்பி கிளப் பெயர் பொறிக்க அதிகப்படியான செலவு — புதுக் கருக்கு விழியாமல் அலமாரியில் கொலு ஏறின. அலமாரிக்கும் அந்த அறைக்குமாகத் திண்டுக்கல் பூட்டுகளைப் போட்டுவிட்டு மன்னார்குடிக்குக் கிளம்பிப் போய்விட்டார். அண்ணாவை நேரில் போய் அழைக்க வேண்டும் என்று வந்த நடராஜனுக்கு ஏமாற்றம். சாமண்ணாவுக்கோ 'சாமண்ணா காப்பி கிளப்' என்று தாம்பரத்தில் கடை தொடங்கிய போது ஏற்பட்ட நம்பிக்கை தகர்ந்து போன அதிர்ச்சிக்கு மத்தியில் 'நம்ம பயல் விசுவாசமாகப் புதிய கடைக்கு இதே பெயரைச் சூட்டியிருக்கிறானே' என்ற மகிழ்ச்சி கொஞ்சம் தூக்கலாகவே இருந்தது.

திருவல்லிக்கேணி—

'சாமண்ணா காப்பி கிளப்' திறப்பு விழா தினம். 'ஜே ஜே' என்று கூட்டம். காப்பி ருசிக்கென்று காலையும் மாலையும் மக்கள் வெள்ளம். கல்லா நிரம்பி வழிகிறது.

மாமனாருக்கு ஒரே மகிழ்ச்சி.

''முதல் நாளே வருமானம் ரெண்டாயிரத்து அறுநூத்தி அறுபது ரூபா மாப்பிள்ளே...'' என்று பூரிக்கிறார்.

''ஐயாயிரத்து நூற்றி இருபத்தைந்தையும் லாபத்தில் கூட்டிக் கொள்ளுங்கள்'' என்கிறார் நடராஜன்.

மகனுக்கு வியப்பு; மாமனாருக்குத் திகைப்பு; மசாலாப் பாலை ருசித்துக் குடித்துக்கொண்டிருக்கும் நடராஜனின் கைகள் மட்டும் டபரா டம்ளரில் பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தை வருடிக் கொண்டிருக்கின்றன.



எம்.எஸ்.பெருமாள்

'இந்த டபரா சாமண்ணா காப்பி கிளப்பில் திருடப்பட்டது'

—'இந்த டம்ளர் சாமண்ணா காப்பி கிளப்பில் திருடப்பட்டது'

—'இந்தத் தட்டு சாமண்ணா காப்பி கிளப்பில் திருடப்பட்டது.'

மன்னார்குடிக்குப் போயிருக்கும் சாமண்ணாவுக்குத் தாம்பரம் 'சாமண்ணா காப்பி கிளப்' பின் டபரா தம்ளர் தட்டு ஆகிய எவர்சில்வர் சாமான்கள் சூறையாடப்பட்ட விவரம் தெரிய நியாயமில்லை. சிஷ்யன் தம் மேல் வைத்திருக்கிற அபிமானத்தையும் மரியாதையையும் — சென்னையில் புதிய கடைக்கு 'சாமண்ணா காப்பி கிளப்' என்று கர்நாடகமாகப் பெயர் வைத்திருக்கிற விசுவாசத்தையும் மன்னார்குடியில் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி ஆற்றிக் கொண்டிருக்கிறார்!

பெண்ணின் வாழ்க்கை

ஒரு ஊரில் ஒரு பிராஸ்தார் .... என்று ஆரம்பித்தால் இப்படத்தின் கதையைச் சொல்ல ஒரு முழு கல்கி தேவைப்படும். ஏகப்பட்ட பேர் ஒருவருக்குள் ஒருவராக முடிச்சுப் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள்.

மொத்தம் 3 பெண்களின் வாழ்க்கை கதையில் அடிபடுகிறது. கதையின் முக்கிய பாகமான அந்தப் பெண்ணின் (அருணா) வாழ்க்கைக்கு அவ்வளவு முக்கியத்துவம் தராமல் விட்டிருக்கிறார்கள். அருணா (கல்லுக்குள் ஈரம்) பாவமான கேரக்டர். நவீன பெண்களுக்குப் பாடம் கற்பிக்கும் கேரக்டர். அருணாவை நடிக்க வைக்க மீண்டும் பாரதிராஜா வேண்டும். ரதி நடிப்பது போல் பாவலா பண்ணி விடுகிறார். காணாமல் போயிருந்த சுதாகர் எட்டிப் பார்க்கிறார். திரும்பவும் காணாமல் போக முயல்கிறார்.

என்ன மனஸ்தாபமோ ஒலிப்பதிவாளர் நிறைய இடங்களில் பழி வாங்கியிருக்கிறார். தேங்காய் பேசுவதற்கும் வரும் சப்தங்களுக்கும் தொடர்பேயில்லை. தாங்கள் எடுப்பது கலர்ப்படம் என்ற பிரக்ஞையின்றி ரத்தம் கொட்டும் காட்சியில் ரோஸ் கலர் திரவத்தை உபயோகிக்கிறார்கள்.

நிற்கும் காரில் ஸ்டியரிங்கை மட்டும் ஆட்டி, பின்னால் ஒரு படத்தை ஓடவிட்டு இன்டோரிலேயே கார் ஓடும் அந்தக் கால யுக்தி இன்னும் தொடர்கிறது. ஆமாம் ரத்தி— ஸ்டியரிங்கை இந்த ஆட்டா ஆட்டுவது. தன் பிரின்ஸிபாலிடம் ''நான் கார் வரைக்கும் வரேன்'' என்று சுதாகர் (கார் பக்கத்திலேயே நிற்கிறது) கூறுவது போன்ற தேவையற்ற வசனங்கள்.

படம் ஹெவியாக இருந்தால் பாடல்கள் வந்து கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணும். இங்கு பாடல்கள் ஏன் வருகின்றன என்ற அலுப்பு மேலிடுகிறது. படத்தில் ஆறுதலான சமாச்சாரம் நிலக்கடலை — கரும்புச் சாறு சைட் பிஸினஸ் பண்ணும் சுருளி.

டைரக்டரின் பெயரைத் தெரிந்து ஒன்றும் ஆகப்போவதில்லை. படத்தைப் பார்த்தும் கூடத்தான்.

— நளினி சாஸ்திரி



"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு"



"சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.



"அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு"

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்பொஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

லின்டாஸ்-GLC. 10-2015 TM

எங்கோ ஒரு எதிரி இருக்கிறான்!

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

"அரவிந்தா!"

"ம்...."

"தூக்கம் வரலியா? புரண்டு புரண்டு படுக்கறியே!"

"நீங்களும் தூங்கலியா?"

"நீ தூங்காம ஏதோ வேதனைப்படும்போது எனக்கு மட்டும் தூக்கம் வருமா?"

"வேதனை ஒண்ணுமில்லே.... ஆனா தூக்கம் வரல்லே..."

"கொஞ்ச நாளாவே நீ சரியாத் தூங்கறதில்லேன்னு நினைக்கிறேன்.... மனசுலே ஏதாவது கவலையா?"

"எனக்கென்ன கவலே?"


"சரி தூங்கு... நாளைக்கு டாக்டரைப் போய்ப் பார்ப்போம்..."

"இதுக்கெல்லாம் டாக்டரைப் பார்க்கணுமா?" என்ற அரவிந்தாவின் வார்த்தைகள் ரகுவின் காதுகளில் நுழையவில்லை; தூக்கம் அவன் விழிகளில் நுழைந்துவிட்டது. சில நிமிஷங்களுக்கெல்லாம் அவன் தூக்கம் மெல்ல ஒலிக்கவும் தொடங்கியது!

அரவிந்தா பக்கத்தில் படுத்திருந்த கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அழகும் அன்பும் நிறைந்த மனைவி பக்கத்தில் படுத்திருக்கிறாள் என்ற பெருமிதத்தில் மெய் மறந்து உறங்கிக் கொண்டிருந்தான் ரகு.

அவள் மனம் வேதனைப்பட்டது. வேதனையா அல்லது பயமா?...

அவர்களுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகின்றன. ரகு அவளிடம் உயிரையே வைத்திருந்தான். அரவிந்தாவும் தன்னுடைய பாக்கிய வசத்தால் இப்ப



ஓர் அன்பான கணவன் வாய்த்ததாக எண்ணிப் பழைய விஷயங்களையெல்லாம் மறந்து சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். ஆனால், திடீரென்று இரண்டு மாத காலமாக அவள் நெஞ்சில் ஒரு பயம் உருவாகி அவள் நிம்மதியைக் குலைத்தது.

'பழைய விஷயங்கள் அவருக்குத் தெரிந்து விட்டால்? நம்மைப் பற்றி எவ்வளவு உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கிறார்! நம்மிடம் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறார்! எல்லாமே போய் விடுமோ?....'

திருமணமாகும்போதோ திருமணமாகி, இரண்டரை ஆண்டு வரையிலோ இல்லாத பயம், இப்பொழுது அவளை வாட்டி வதைத்தது.

நாளைக்கு டாக்டரிடம் போகலாமென்கிறார். தன்னுடைய திகிலை டாக்டரால் தீர்க்க முடியுமா?

மறுநாள் அரவிந்தாவை டாக்டரிடம் அழைத்துச் சென்றான் ரகு.

டாக்டர் ஒரு தூக்க மாத்திரையை எழுதிக் கொடுத்துவிட்டு, "இதைப் பழக்கமாக வைத்துக் கொள்ளக் கூடாது. அப்புறம் மாத்திரை இல்லாமல் தூக்கம் வராது. இயற்கையாகத் தூங்க முயற்சி செய்யணும்... ரொம்பவும் முடியாத நேரத்தில் ஒரு மாத்திரையைச் சாப்பிடவும்..." என்று உபதேசம் செய்தார்.

தினம் ஒரு மாத்திரையாக மூன்று நான்கு நாட்கள் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினாள் அரவிந்தா. ரகு ஆபீஸ் வேலையாகத் திருச்சி போக நேர்ந்தது. இரண்டு தினங்களில் திரும்பி வருவதாகவும் தைரியமாக இருக்கும்படியும் கூறிவிட்டுச் சென்றான்.

ரகு திருச்சி போகிறான் என்றதுமே, அரவிந்தாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது! திருச்சியில் ரகுவைப் பார்த்து யாராவது பழைய விஷயங்களை யெல்லாம் சொல்லி விடுவார்களோ? மறு நாள் காலை

முதல் அரவிந்தா அனுபவித்த வேதனையைச் சொல்லி முடியாது. இனம் புரியாத ஒரு பீதி அவள் உள்ளத்தையும் உடலையும் நடு நடுங்க வைத்தது.

இன்றைய மனநிலையில் இரண்டு மாத்திரைகள் போதாதென்று தோன்றவே மூன்று மாத்திரைகள் எடுத்துக் கொண்டாள். இரண்டு மணி நேரம் மாத்திரைகள் வேலை செய்யத் தொடங்கவில்லை. இன்னொரு மாத்திரையையும் விழுங்கி விடுவோமா என்று எண்ணியவாறு படுத்திருந்தாள். கண்களில் ஒரு பாரம் அழுத்தியது. அவள் சிந்தனை மழுங்கியது. 'எங்கோ மிதப்பதைப் போல ஓர் உணர்வு. அப்புறம் ஒன்றுமே புரியவில்லை!

மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் அரவிந்தா எழுந்தாள். அவள் விழிகள் திறந்தனவே தவிர, உணர்வுகள் விழிப்படைய வெகு நேரம் ஆயிற்று. இரவெல்லாம் நன்றாகத் தூங்கியதற்கான புத்துணர்ச்சியுடன் எழுந்திருக்காமல் ஒருவித சோர்வுடனேயே எழுந்து உட்கார்ந்தாள். அன்று முழுவதுமே ஓர் இயந்திரம் போல நடமாடிக் கொண்டிருந்தாளே தவிர, தூக்கக் கலக்கம் இன்னும் தெளியவில்லை. ஏதோ சமைத்தாள், சாப்பிட்டாள். அன்று இரவு மாத்திரை ஏதும் சாப்பிடாமலே படுத்தாள். மெய் மறந்து தூங்கியும் விட்டாள்.

அடுத்த நாள் காலை ரகு திருச்சியிலிருந்து திரும்பி விட்டான். நல்ல வேளையாக யாரும் அவனைச் சந்தித்து அரவிந்தாவின் பழைய கதைகளைச் சொல்லவில்லை போலும். அவன் சகஜமாகவே காணப் பட்டான்.



பத்து மணிக்கு வேலைக்கும் போய் விட்டான், 'அப்பாடா!' என்ற ஒரு நிம்மதிப் பெரு மூச்சு விட்டாள் அரவிந்தா.

பதினேரு மணிக்குத் தபால் வந்தது!

கடிதத்தை வாங்கியதுமே அரவிந்தா புரிந்து கொண்டாள், இது ஏதோ வேண்டாத தபால் என்று! அது ஒரு உள் நாட்டுக் கடிதம். கோணக் கோண விலாசம் எழுதப் பட்டிருந்தது. உள்ளே சென்று கடிதத்தைப் பிரித்தாள்.

''அரவிந்தா! ரகுவை மணப்பதற்கு முன் நீ யாரைக் காதலித்தாய், அவனுடன் எங்கெல்லாம் சுற்றினுய் என்பதை யெல்லாம் உன் புருஷனிடம் சொன்னுயா?... சொல்லியிருக்க மாட்டாய்! தேவநாதன் இறந்து விட்டதால் இனி உன் வாழ்க்கையில் யாரும் குறுக்கிட மாட்டார்கள் என்ற தைரியமா? உன் காதலன் இறந்து விட்டானே தவிர, நீயும் அவனும் உறவாடினதை யெல்லாம் பார்த்தவன் உயிரோடு இருக்கிறேன். கல்லணையில் அடித்த கூத்தெல்லாம் தெரியும்!''

கையெழுத்திடப்படாத ஒரு மொட்டைக் கடிதம். ஆனுல், அதில் கண்டிருந்த விஷயங்கள் உண்மை. தேவநாதனைக் காதலித்தது உண்மை. அவனுடன் கல்லணைக்குச் சென்றதும், விருந்தினர் விடுதியில் தங்கியதும் உண்மை. ஆனுல் அங்கு தவருக எதுவும் நடக்கவில்லை. இதைச் சொன்னுல் யாராவது நம்புவார்களா?

அரவிந்தாவின் கைகள் நடுங்கிற்று; உடல் நடுங்கிற்று; உள்ளம் நடுங்கிற்று.

'இந்த மொட்டைக் கடிதத்தை யார் எழுதியிருப்பார்கள்! இவ்வளவு நாள் அவன் என்ன செய்துகொண்டிருந்தான்?'

அன்று முதல் அரவிந்தா ஒரு நடைப் பிணமாகி விட்டாள். அவளுடைய இந்தத் திடீர் சோர்வுக்கும் உற்சாகமற்ற போக்கிற்கும் அவள் ஆரோக்கியத்தில்தான் ஏதோ கோளாறு என்று எண்ணினுன் ரகு.

அவன் எவ்வளவு சொல்லியும் டாக்டர் வீட்டுக்குப் போக மறுத்து விட்டாள் அரவிந்தா. ஒரு போலியான புன்னகையையும் உற்சாகத்தையும் வரவழைத்துக் கொண்டு ''எனக்கு ஒண்ணுமில்லே... ஆரோக்கியமாத்தான் இருக்கேன்... டாக்டர், மருந்து எல்லாம் எதுக்கு?'' என்று கூறிவிட்டாள்.

ஒரு நாள் ரகு வேலையிலிருந்து திரும்பியதும், ''அரவிந்தா! எங்கள் ஆபீஸில் வேலை செய்பவர் ஒருவர் இறந்து விட்டார். உடல் இன்னும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறதாம். அவர் வீட்டில் உதவிக்கு மனிதர்கள் கிடையாதாம். நானும் இரண்டொரு நண்பர்களும் போய்த்தான் எல்லாவற்றையும் கவனிக்கணும். அநேகமாக ராத்திரி வீடு திரும்ப மாட்டேன். ஜாக்கிரதையாயிரு'' என்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

அன்று மாலை தபாலில் இரண்டாவது கடிதம் வந்தது. இதுவும் உள்நாட்டுக் கவர் தான். அதே கோணக் கோணக் கையெழுத்து! பிரித்துப் பார்த்தாள்.

'அரவிந்தா! கூடிய சீக்கிரம் நான் கேட்பதைக் கொடுக்கத் தயாராக இரு!' — அவ்வளவுதான். கையெழுத்தில்லை.

'நாசமாப் போறவன்.. விட மாட்டான் போலிருக்கே!... என்ன கேட்டுத் தொலைக்கப் போறுன்?....'

இரண்டாவது கடிதம் வந்த பத்தாவது நாள், மாலைத் தபாலில் மூன்ருவது கடிதம் வந்தது. அன்று ரகு வேலைக்குப் போகவில்லை. அவனே தபாலை வாங்கினுன். பக்கத்தில் நின்று கொண்டிருந்த அரவிந்தா, தவித்தாள். இம்முறை வெறும் தபால் கார்டுதான்.

''அரவிந்தா!...நான் கேட்கப் போவதைக் கொடுக்காவிட்டால்... கொடுப்பாயில்லையா?''

கலங்கிப் போயிருந்த அரவிந்தாவைப் பார்த்தான் ரகு. அவள் கண்கள் மடமடவென்று நீரைக் கொட்டின. தபால் கார்டைக் காட்டி ''இது என்ன அரவிந்தா?'' என்றுன். அரவிந்தா பதில் சொல்லாமல் உள்ளே சென்று எங்கோ செருகி வைத்திருந்த மற்ற இரண்டு கடிதங்களையும் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் படித்து முடித்ததும், ''தேவநாதனுடன் நான் பழகியதென்னவோ உண்மைதான். ஆனு, வெறும் பேச்சு வார்த்தையோடு சரி. சத்தியமா நான் கெட்டுப்போகல்லே...'' என்ருள். மேற்கொண்டு பேச முடியாமல் துக்கம் பீறிட்டு வந்தது. தேம்பித் தேம்பி அழுதாள்.

''இப்ப எதுக்கு அழறே?... உன்னை எனக்குத் தெரியாதா?... நீ பரிசுத்தமானவள்னு எனக்குத் தெரியும். நீ தேவனுதனேடு பழகியதும் எனக்குத் தெரியும்....'' என்ருன் ரகு.

''எப்படி?''


''ஒரு பெண்ணுக்குக் கல்யாணம்ஞ அவள் நடத்தையைப் பற்றி மொட்டைக் கடிதங்கள் எழுதறதுக்குன்னே சில புண்ணியாத்மாக்கள் இந்த உலகத்திலே இருக்கு. அது மாதிரி ஒரு புண்ணியாத்மா நம்ம கல்யாணம் நிச்சயமானதுமே, எனக்கு ஒரு

''அஞ்சு பார் சோப்பு வாங்கின ஒரு பை இலவசம். அஞ்சு பை வாங்கினுல் ஒரு டூத் பிரஷ் இலவசம். அஞ்சு டூத் பிரஷ் வாங்கினுல் ஒரு பாக்கெட் பேஸ்ட் இலவசம். அஞ்சு பாக்கெட் பேஸ்ட் வாங்கினுல் ஒரு பார் சோப்பு இலவசம் சார்!''

''தலையைச் சுத்துதுப்பா!''

''அஞ்சு பாக்கெட் பிளேடு வாங்கினுல் ஒரு பாக்கெட் 'தலை சுத்தல்' மருந்து இலவசம் சார்!''

— அ. இராமதாஸ்





''கடைக்காரர்களிடம் நம்மைப் போன்றவர்கள் விலை கேட்பதற்கும் அழகான பெண்கள் விலை கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது!''

''....எப்படி?''

''அவர்கள் கேட்கும் போது 'கண்களை மூடிக் கொண்டு' விலை சொல்ல மாட்டான்!''

எஸ். பானு

எச்சரிக்கை விட்டது. தெரிந்தவர்கள் மூலம் விசாரிச்சதிலே நீ தேவநாதனோடு பழகினது உண்மை என்றாலும் தப்பு வழிக்குப் போகாதவள், நல்ல பெண் என்றெல்லாம் தெரிந்தது. அதுக்கப்புறம் கல்யாண மானதும், நீ எவ்வளவு புனிதமானவள் என்பதை நானே புரிந்து கொண்டேன். இதுக்காகவா இவ்வளவு நாளும் பயந்தே? இனிமே தூக்க மாத்திரைகளைச்சாப்பிடாதே. இனிமே இது மாதிரிக் கடிதமும் வராது!'' என்றான் ரகு. வியப்புடன் அவனைப் பார்த்தாள் அரவிந்தா. அவள் பார்வையில் ஒரு சந்தேகம் மறைந்திருந்தது.

''அப்போ இந்தக் கடிதங்களை... நீங்க தான் எழுதினீங்களா?'' என்றாள். ரகு மெல்லச் சிரித்தபடி ''இல்லே... இந்தக் கடிதங்களை எழுதினது நீயேதான்!'' என்றான்.

''என்னது? எனக்கு நானே மொட்டைக் கடிதங்கள் எழுதினேனா?... என்னைப் பைத்தியமாக்கறீங்களா?....''

''நிஜம்தான் அரவிந்தா. நேற்று ராத்திரி ஒரு மணி இருக்கும். நீ படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாய். எனக்குத் தூக்கம் கலைந்து விட்டது. 'ஏன் எழுந்துட்டே? தூக்கம் வரலியா?'ன்னு கேக்க நினைச்சேன். அதே சமயம் நீ எழுந்து கனவில் நடப்பதைப் போல நடந்து மேஜையின் முன்பு நாற்காலியில் போய் உட்கார்ந்தாய். சில நிமிஷங்கள் என்ன செய்கிறாய் என்று படுத்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். என் டயரியைப் பிரித்தாய். அதிலிருந்து ஒரு தபால் கார்டை எடுத்து மேஜை மீதிருந்த என் பேனாவால் ஏதோ எழுதவாரம்பித்தாய். இந்த வேளையில் யாருக்குக் கடிதம் எழுதுகிறாய் என்று தோன்றிற்று. அதை விட ஆச்சர்யம், நீ கார்டில் இடது கையால் எழுதிக் கொண்டிருந்தாய். சந்தடி செய்யாமல் மெள்ளப் பின்னால் வந்து பார்த்தேன். அப்பொழுது நீ விலாசம் எழுதிக்கொண்டிருந்தாய். — உன் விலாஸம்! எழுதி முடித்ததும் பேனாவை மூடி வைத்து விட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனாய். நீ நடந்த தோரணையிலிருந்தே சுய நினைவுடன் நடக்கவில்லை என்று தெரிந்தது. வாசற்படி இறங்கியதும் வலதுபக்கம் திரும்பி நடந்தாய். அவசரம் அவசரமாகக் கதவைப் பூட்டிக் கொண்டு உன் பின்னாலேயே நானும் வந்தேன். தெருக் கோடியில் உள்ள தபால் பெட்டியில் கார்டைப் போட்டுவிட்டுத் திரும்பினாய். நீ பார்க்காத வண்ணம் தெருவோரமாக வந்து வீட்டைத் திறந்து உள்ளே வந்து படுத்துக் கொண்டேன். நீ உள்ளே வந்ததும் கதவைத் தாளிட்டு விட்டுக் கட்டிலில் வந்து படுத்தாய்!...'' என்று சொல்லி முடித்தான். சில நிமிஷங்கள் ஒன்றும் தோன்றாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு ''அப்போ எனக்குத் தூக்கத்திலே நடக்கிற வியாதியா?'' என்றாள்.


''நான் அப்படி நினைக்கல்லே... உன்னையறியாமலேயே உன் உள்ளத்தில் ஒரு பயம், குற்ற உணர்வு அழுந்திக் கிடந்திருக்கிறது. உனக்கு எதிரிகள் இருப்பது போலவும், அவர்கள் உன்னைப் பழிவாங்கக் காத்திருப்பது போலவும் நீயே கற்பனை செய்து கொண்டிருக்கிறாய். சாதாரணமாகப் பெண்களிடம் பிளாக் மெயில் செய்பவர்கள் பணம் கேட்பதும், தனக்கு இணங்குமாறு பயமுறுத்துவதும் எவ்வளவோ கதைகளிலும் சினிமாக்களிலும் பார்த்த விஷயம். உன் எதிரி என்ன செய்வான் என்று உனக்குத் தெரியாது. எப்போ, எந்த ரூபத்தில் உனக்குக் கஷ்டம் வருமோ என்ற பயத்தில் பல நாட்களாக உன்னுடைய உள்ளுணர்வு தூங்காமலே இருந்திருக்கிறது. தூக்க மாத்திரைகளை அதிகமாக எடுத்துக் கொண்டதும் உன் நினைவு மழுங்கியதே தவிர, தூங்கவில்லை. மயங்கிய நிலையில் தூங்குவது போல் கிடந்திருக்கிறாய். அப்பவும் உன் கற்பனைகள் ஓயவில்லை. எங்கோ இருப்பதாக நீ நினைத்த எதிரி, என்ன செய்வான் என்பதை உன் மயக்கத்தில் நீயே செய்து கொண்டிருக்கிறாய்! அவன் என்ன கேட்பான் என்று உனக்குத் தெரியாது. அதனால் கடிததில் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை.... நேற்று சாயங்காலம் மாத்திரைப் பாட்டில்களில் ஆறு மாத்திரைகள் இருந்தன. காலையில் பார்க்கிறேன் இரண்டுதான் இருந்தன... ஆக நாலு எடுத்துக் கொண்டிருக்கிறாய்'' என்றான்.

''தூக்க மாத்திரை சாப்பிட்டால் இப்படியெல்லாம் நடக்குமா? நான் கேள்விப் பட்டதே இல்லையே!'' என்றாள் அரவிந்தா.

''உயிரைக் காக்கக் கூடிய சில மாத்திரைகள் சிலரைக் கொன்றே விடுகிறது. சில மருந்துகள் சிலருக்கு அலர்ஜி! சில மருந்துகள் சாப்பிட்டால் புதுசா சில கோளாறுகள் ஏற்படுகிறது. எல்லோருடைய உடம்பும் ஒரே மாதிரி இல்லையே! உன்னைப் பொறுத்த வரை தூக்க மாத்திரைகள் தூக்கத்தைக் கொடுக்கவில்லை. மூளையைப் பாதித்திருக்கிறது. அதனால்இனிமே எந்தப்பயமும் இல்லாமல் மாத்திரை எதுவும் சாப்பிடாம நிம்மதியாத் தூங்கு... உனக்கு யாரும் எந்தக் கெடுதலும் செய்ய முடியாது. உன்னிடம் எனக்குள்ள அன்பை எந்த சக்தியாலும் குறைக்க முடியாது!'' என்று கூறியவாறு அன்புடன் அவளை அணைத்துக் கொண்டான். அந்தக் கணமே அரவிந்தாவின் பயம், கிலி எல்லாம் எங்கோ பறந்து விட்டன!

சென்ற ஆண்டு இந்த ஜூன் மாத தொடக்கத்தில் தான் தமிழகத்தில் தேர்தல் முடிந்து திரு எம். ஜி. ஆர் மீண்டும் பத விக்கு வந்தார். அவர் ஆட்சிக் காலத்தின்







'பாதீ' காப்பு!



ஜி.வேதா

விஸ்வேஸ்வரிக்கு 'ஜில்'லென்று முகம் கழுவிக் கொண்டது சுகமாகத்தான் இருந்தது. கண்ணின் மூலையில் கரிப்பாய்த் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த சோப் நுரையைத் தண்ணீரால் அடித்து விரட்டினாள்.

சே! வழக்கம்போல் இன்றும் டவல் எடுத்து வர மறந்தாயிற்று. இடது கை ஆள்காட்டி விரலைக் கன்னம் வழியே முகவாய்—கழுத்து என்று இறக்கி நீரைத் தற்காலிகமாய்க் குறைத்தவாறு ஹாலுக்கு வந்தாள் விஸ்வேஸ்வரி. ஊஞ்சலாடிக் கொண்டிருந்த பச்சைத் தேங்காய்ப்பூ டவலை உருவி—

டிங்....டாங்...

காலிங் பெல். யாராய் இருக்கும்? இரண்டுங்கெட்டான் நேரம். பிரவீணகூட ஐந்தரைக்குத்தானே வருவாள்? இன்றைக்குத் திங்கட் கிழமை கேம்ஸ் உண்டே!

டவலால் முகத்துக்கு ஒத்தடம் கொடுத்தவாறு கதவை நோக்கி விரைந்தாள். திறந்தவுடன் திகைப்போ திகைப்பு. இவனு! இந்த நேரத்தில் அவள் எதிர்பார்த்திருக்கக் கூடிய கடைசி மனிதன் இவனுய்த்தான் இருக்கும்! கண்ணிமைகள் கூட விஸ்வேஸ்வரியுடன் ஒத்துழைக்க மறுத்தன.

''வா....வாங்க கண்ணன்...சௌக்கியமா உள்ளே வாங்க...'' திகைப்பையும் மகிழ்ச்சியையும் சமவிகிதத்தில் கலந்து தெளித்த மாதிரி முகத்தில் ஒரு பாவம்.

''ஹலோ விசு! எப்படி இருக்கே?'' — உரிமையுடன் விசாரித்தவாறு ஷூவின் லேஸ்களைக் கழற்றினன்.

''சந்தோஷமாய் இருக்கியா விஸ்வேஸ்வரி?''

அவனுக்குப் பதில் சொல்வதற்குள் அவளுக்கு அடுத்த அறையில் ஒரு சின்ன வேலை பாக்கி யிருந்தது. அவசரம் அவசரமாய்ப் போய்ச் செய்துவிட்டு விரைந்து வந்தாள். இந்தக் கேள்வி அவனிடமிருந்து வருகிற தென்றல் அதன் அர்த்தம்....? திணறினள்.

ஷூவிற்கு விடுதலை. வாசற் படியில் குனிந்து உள்ளே வந்தான். ஆறடிக்கும் மேலே உயரம். அழகு என்று சொல்ல முடியாது. ஆனல் கன கம்பீரம். ராணுவக்காரர்களுக்கே உரிய நடை. கூலிங் கிளாசைச் சுழற்றியவாறு நடந்தான்.

''சௌக்கியம்தான் கண்ணன். நீங்க?'' எச்சிலை விழுங்கியவாறு விசாரித்தாள்.

வழக்கம்போல் அட்டகாசமான சிரிப்பு. ''ஓ எஸ். எனக்கு என்ன குறைச்சல்? ஐஆம் வெரி ஃபைன். குடும்பம் குழந்தை குட்

டின்னு எந்த நச்சரிப்பும் கிடை
யாது. நிம்மதியாய்ச் சம்
திச்ச பணத்தையெல்லாம் எ
ஒருத்தனுக்கே அபிஷேக
பண்ணிக்கறேன். வட இந்தி
வின் கபடமற்ற ஜனங்க
மத்தியிலே மனசு சந்தோஷ
ரெண்டு பங்காறது!''
மகிழ்ச்சியாய்ச் சொல்வ
போல் சொன்னலும் பின்னல
யில் ஏக்கம் டிசைன் போ
டிருந்தது. எனக்கு யாருமே கிடையா
என்று புலம்புவது போல் ஒரு டிப்ரஷன்
கல்யாணம் பண்ணிக்கொள்ளவே மாட்டே
என்று வீருப்பாக வல்லவா இருக்கிறன்!

அவன் ஒண்டிக் கட்டை. அதற்கு ஒ
காரணம் அவள்! அவளேதான் — விஸ்வே
வரி! மாமா பெண் விஸ்வேஸ்வரியைக் க
யாணம் செய்து கொள்ள வேண்டும் என்
அவன் எத்தனை ராத்திரிகள் கனவு கண்
டிருப்பான். பகல் கனவுகளாகி விட்டனவே
அவள் இன்றைக்கு யாருக்கோ சொந்
மாகி.... ஹூம்!

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்
சலவைக் கல் மேடையைக் கழுவி
துடைத்து விட்ட மாதிரி இருந்தது முகம்
டிரஸ்ஸிங் டேபிள் முன்னல் உட்கார்ந்தாள்
லேசாய்ப் பவுடரை எடுத்து முகத்துடன்
உறவு செய்தாள். இழுத்துப் போர்த்தின
தலைப்பு கொஞ்சமும் நகராமல்....!

''நீங்க எப்பக் கண்ணன் மெட்ராஸ்
வந்தீங்க? எத்தனை நாள் ட்ரிப்?''

''சொன்னல் நீ நம்பக்கூட மாட்டே விசு!
முந்தாநாள்தான் வந்தேன். நாளைக்கு
ஃப்ளைட்டில் போகிறேன். டெல்லி போய்
அங்கிருந்து நேப்பாளம் போறதா உத்
தேசம்.... இன்ஃபாக்ட்... ஆறு வருஷம்
கழிச்சு மெட்ராஸ் வர்றவனுக்கு உரிய உற்
சாகம் எனக்கு இல்லை விசு! எந்தச் சொந்தக்
காரங்களையும் பார்க்கலே. உன்னை...உன்னை
மட்டும் பார்க்காமல் போக மனசு வரலை!
நீ கல்யாணம் ஆகி இந்த வீட்டுக்கு வந்
தப்போ ஒரு தடவை வந்தேன் இங்கே!
இந்த ஞாபகத்துலே இப்போ வழி லேசாய்த்
தெரிஞ்சு வந்திருக்கேன். உனக்கு இஷ்யூஸ்
ஏதும் உண்டா? உன் புருஷன் எப்போ வரு
வார்? ஆபீஸ்லேருந்து வர நாழியாகுமா?''

எதிரில் அவள் எப்போதோ கொண்டு
வைத்திருந்த ஐஸ் வாட்டரை எடுத்து மட
மடவென்று குடித்தான். கடமை தீர்ந்து
விட்ட மாதிரி!

டிரஸ்ஸிங் டேபிளின் இழுப்பறைகளில்
தேடினாள். குங்குமத்தைக் காணவில்லை. பிர
வீண படுக்கை நிலையில் கிடத்தி வைத்
திருந்த விரல் நீள சிங்கார் சாந்து பாட்டில்

கிடைத்தது. அதிலிருந்து அபாய நிறத் திரவத்தைப் பொட்டாக எடுத்து நெற்றிக்குச் சாத்தினாள். சதுரம் — முக்கோணம் என்று என்னென்னவோ வந்ததே தவிர வட்டம் டபாய்த்தது. நடுக்கம்! அப்படி இப்படி வளர்த்தித் தேவைக்கும் கொஞ்சம் பெரிய சைஸிலேயே பொட்டு அமைந்தது. இனி மேல் பேசலாம்! அசைந்தால் பாதகமில்லே!

''எனக்கு ஒரே ஒரு பொண்ணு மட்டும் தான். அவர்..... அவர்... பிஸினஸ் டூர் போயிருக்கார். நாளன்னிக்குத்தான் வருவார்.''

''பெண்! என்ன பேர்?''

''பிரவீணு! இன்னிக்கு இருந்து சாப்பிட்டுப் போகலாமே கண்ணன்'' — ஏதோ ஒரு அசட்டுத் தைரியம். கேள்வியை ஈன்றது. கொஞ்ச நேரம் முன்னால் பூக்காரியிடம் வாங்கிய ஜாதிப்பூ தலையில் இடம் பிடித்தது.

''ஓ நோ! நான் இங்கே சில பழைய சர்ட்டிபிகேட்ஸ் வாங்க மெட்ராஸ் வந்திருக்கேன். இன்னும் கொஞ்சம் வேலைகள் சொச்சம் இருக்கு. இனி மேல் எப்ப வருவேனோ, எனக்கே தெரியாது. எந்தச் சொந்தக்காரங்க கூடவும் கரெஸ்பாண்டன்ஸ் கூடக் கிடை யாது! அப்படி ஒரு நாடோடிப் பிழைப்பு நம்ப ராணுவத்திலே! எங்கே... உன் பொண் போட்டோ எதுவும் இருந்தால் காட்டு, பார்ப்போம்!''

ஆல்பம் விரிந்தது. பிரவீணு விஸ்வேஸ்வரியின் கார்பன் காப்பியாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''இவதான் பிரவீணு!''

''மை குட்னஸ்! நீயேதான். உன் பெண்ணு உரிச்சு வைச்சிருக்கே!''

—'டிங் டாங்'

''மம்மீ....''

விஸ்வேஸ்வரியின் முகத்தில் கலவரம். இந்தப் பெண் எப்படி இன்னைறக்கு இத்தனை சீக்கிரம்... கடவுளே! கடவுளே!

''மம்மி இன்னிக்கு அந்த அல்ட்டி உஷா என்ன தெரியு—'' அம்மாவை நிமிர்ந்து பார்த்தவள் கண்களை விரித்தாள். ''அய்! நீ இன்னிக்கு ரொம்ப ஸ்வீட்டா இருக்கேம்மா! எத்தனை அழகாய் இருக்கே!''

''சரிசரி... போய் டிரஸ் சேஞ்ச் பண்ணு.''

இத்தனை அழகாய் இருந்தும் ஏன் இத்தனை கடுகடுப்பு அவள் முகத்தில்?

''இங்கே வா பிரவீணு... இந்த அங்கிள் உனக்குப் பிடிச்சிருக்கா?'' நட்பு விளையாடிய குரலில் அழைத்தான் கண்ணன்.

''நீங்க அழகாய் இருக்கீங்க அங்கிள். ஆனால் உங்க மீசைதான் எனக்குப் பிடிக்கல்லே.''

கிட்டத்தட்ட அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுக் கிளம்பினான். இனி மேல் எத்தனை வருடங்கள் கழித்து வருவானோ! குழந்தை அவனிடம் நன்றாய் ஒட்டிக் கொண்டு விட்டது. வந்தவுடன் டோஸ்



வாங்கியதாலோ என்னவோ அம்மாவிடம் அதிகம் பேசிக் கொள்ளவில்லை, பிரவீணு.

''ஸீயூ விசு. பைபை மை டியர் பிரவீணு! அங்கிளுக்கு கிஸ் குடு.;'' — வாங்கிக்கொண்டு வாசல் தாண்டி இறங்கினன்.

விஸ்வேஸ்வரி ஹாலைத் தாண்டி வராந்தாவுக்குக் கூட வரவில்லை. அங்கிருந்தே விடை கொடுத்தாள்.

அவன் தெருக் கோடி தாண்டியிருக்க மாட்டான். கதவைச் சாத்தினுள். பூஜை அறையை நோக்கி ஓடினுள். அவசரமாய்த் தலையில் இருந்த பூவை அவிழ்த்து வைத்தாள். நெற்றியை அழித்தாள். கொஞ்ச நேரம் முன் கண்ணனுக்குத் தெரியாமல் கழற்றி வைத்த மாலையை மறுபடியும் கணவன் படத்துக்குச் சாத்தினுள்.

''என்னை மன்னிச்சுடுங்க... கண்ணனுக்கு என் நிலைமை தெரிஞ்சு அந்த நல்ல மனத்தில் எந்தத் தப்பான எண்ணமும் ஏற்பட எனக்கு ஆபத்தில் கொண்டு விட்டுடக் கூட தேன்னுதான் நீங்க இறந்ததை அவ கிட்டே சொல்லலே.... எனக்கு வேறே எந்த பாதுகாப்பு வழியும் தெரியலே...'' தலையி அடித்துக் கொண்டு அழுதாள் விஸ்வேஸ்வரி போர்த்திய தலைப்பு நழுவி வெறும் கழு துக்கு வெளிச்சம் போட்டது.

அம்மா கொஞ்ச நேரம் முன்னுல் அழகாய் இருந்தாளே. இப்போது மீண்டும் ஏன் பழைய படி ஆகிவிட்டாள் என்று புரியாமல் திகைத்துக்கொண்டிருந்தது அந்தப் பிஞ்சு வாரிசு.

அப்போது....

'டிங் டாங்' — காலிங் பெல்.

மறந்து வைத்துப்போன தன் கூலிங் கிளாஸை எடுத்துப் போவதற்காகத் திரும்பி வந்த கண்ணன் கதவுக்கு வெளியே காத்திருந்தான்!

பாக்கு வெத்தலை

முன்னேறி வருகிறது தமிழ் சினிமா என்று டீற்றுபவர்களுக்குச் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிருர் புதிய இயக்குனர் வைரவன்.

ஏராளமான + தாராளமான செக்ஸ், அள்ளித் தெளித்த இரட்டை அர்த்தமுள்ள ஆபாசமான வசனங்கள், கொஞ்சம் கதை, பேயாட்டம் ஆடும் ரிப்ளக்டர்களுடன் கலர் காமிரா எல்லாம் சேர்ந்த மட்டமான (சராசரி என்று சொல்லுதல் மாபாவம்) படம். தான் செய்த காரியத்தை சிம்பாலிக்காகக் கயிறு திரிக்கும் காட்சியின் மூலம் அடிக்கடி சொல்கிருர் டைரக்டர்.

எப்படியெல்லாம் எடுக்கக் கூடாது என்பதற்கு, இன்ஸ்டிட்யூட் மாணவர்களுக்கு இந்தப் படம் நிச்சயம் உதவும். அந்த வகையில் இது ஒரு கலைக் களஞ்சியம்.

—''சிந்து ஜீவா''



கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்

கல்கி

கிண்டி, சென்னை - 600032

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 60	ரூ. 30
இலங்கை	ரூ. 70	ரூ. 35
இதர வெளிநாடுகள்	ரூ. 110	ரூ. 55

ஆற்று வெள்ளங்கள்

ஜே.எஸ்.ராகவன்

[முதல் இரவு அறை. கதவைத் தாளிட்டுவிட்டுக் கட்டில் மேல் உட்காரு கிறான் ராமன். வெளியே இருந்து நடுங் கும் குரலில் ஒரு வயதான மாது பாடும் சிருங்காரப் பாடலின் சில அடிகள் காதில் விழுகின்றன. மல்லிகைப் பூ ஒன்றைக் கையில் எடுத்து முகர்ந்து பார்க்கிறான். கொள்ளை வாசனை. புது மனைவி வித்யா நாசுக்காகச் சாயம் பூசிய நகங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள்.] .

ராமன் (திடீரென்று): யாரு பாட்டுப் பாடறது?

வித்யா (களுக்கென்று சிரித்து): என் சித்தி.

ரா: இந்த மாதிரிப் பழைய பாட்டெல்லாம் தலைகீழா மனப்பாடம் பண்ணியிருக்கா போலிருக்கே?

வி: சித்திக்கு எல்லாப் பாட்டும் தெரியும். நலங்கு, லாலி, பஜனை இந்த மாதிரி!... ஆனா சித்திக்கு ஆஸ்த்மா..குரல் நடுங்கும், அப்பப்ப மூச்சு வாங்கும்.

ரா: அதைச் சரி பண்ணிடலாம். நான் தான் உங்க குடும்பத்துக்கு ஒரு டாக் டர் வந்துட்டேனே!

வி: ஆமாம்! நீங்க டாக்டர் இல்லே! மறந்தே போயிட்டேன். குட்ஈவினிங் டாக்டர்!

ரா:(கேலிக் குரலுடன்): எஸ்! இப்படி வந்து உட்காருங்கம்மா! உடம்பை என்ன செய்யறது? 'குப்'புனு வியர்க் கிறதா? கை, காலெல்லாம் நடுங்கு கிறதா? இமைகள் துடிக்கிறதா? ப 'படபட'ன்னு அடிச்சுக்கிறதா? ஹ எங்கே, நாக்கை நீட்டுங்க!

வி. (சிரித்து): பொல்லாதவர்! ஆமா உங்களைக் கேக்கணும்னு நினைச்சேன். ச திரிகள் கையைப் பிடிச்சுக்கோ'ன்ன 'ரிஸ்ட்டைப்' பிடிச்சுண்டேளே, பழ தோஷமா?

ரா: இதைவிட உனக்கு என்ன ப்ரூ வேணும? எந்த ஒரு பெண்ணையும் நா 'ரிஸ்டைப் பிடிச்சுப் பார்த்துப் பழக்க தவிர, கையைப் பிடித்துப் பார்த்த இல்லை!

வி.(பெருமையுடன்): நான் கொடுத்து வை தவள். (கோணல் பார்வையுடன்) நா சரியாகத்தானே இருந்தது?

ரா: நாடியும், நம் ஜோடியும் சரியாகத்தா இருக்கு. கிட்டே வாயேன்.

வி: கொஞ்சம் எழுந்து நில்லுங்கோ நம காரம் பண்றேன்.

ரா: சித்தி 'கோச்சிங்கா

[வித்யா வெட்கத்துடன் காஞ்சிபுரம் சரசர



நமஸ்காரம் செய்ய, மென்மையாக, ஒரு பூமாலையைத் தூக்குவது போல், செழுமையான அவள் கைகளைப் பற்றித் தூக்கி, அருகில் உட்கார வைக்கிறான்.]

ரா: சரி! மற்ற கோச்சிங்கெல்லாம்? ஃபிரெண்ட்ஸா?

வி: மௌனம்.

ரா: மாரேஜ் மானுவல், ஹாவ்லாக், — எல்லிஸ் எல்லாம் படிச்சிருக்கியா?

வி: (மௌனம்.)

ரா: இதோ பார், டாக்டரிடம் எதையும் மறைக்கக் கூடாது தெரியுமா? எதைய்யும்!

வி: ச்சீ... பேச்சைப் பாரு... கவனிச்சேளா? அதோ டேபிள்ளே எல்லாப் பழமும் இருக்கு. ஆனால் ஆப்பிள்மாத்திரம் இல்லை.

ரா: உங்களுக்குப் பயம் இல்லையா? ''தினம் தினம் ஒவ்வொரு ஆப்பிள் சாப்பிடச் சாப்பிட, டாக்டர் மாப்பிள்ளை தள்ளித் தள்ளிப் போய்டுவார்னு''?

வி: 'பழ' மொழியிலும் எக்ஸ்பர்ட் போலிருக்கு!



ரா: ஆமாம். கேள்விப்பட்டேன். உன்னை ஆயில் மில் ஓனர் ஒருத்தர் தன் பையனுக்காகக் கேட்டாராம். ஆனால் உங்க அப்பா பிடிவாதமாக எனக்குத்தான் கொடுப்பேன்னு சொல்லிட்டாராம். நல்ல வேளை உங்க அப்பாவுக்கு ஒரு பழமொழி தெரியாது போலிருக்கு.

வி: எது?

ரா: 'வைத்தியனுக்குக் கொடுப்பதை விட, வாணியனுக்குக் கொடு' (இருவரும் சிரிக்கிறார்கள்.)

ரா. (மேஜையையும், வித்யாவையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு): பட்சணம் ஏகப்பட்டது இருக்கு இல்லையா?

வி: ஆமாம்! அவசரமில்லை... மெல்லச் சாப்பிடலாம்.

ரா: எப்படி? தினம் மூணு வேளையாகவா? கார்த்தாலே... மத்யானம்... ராத்திரி.

வி. (நாணத்துடன்): பொல்லாத டாக்டர் நீங்க.

ரா: அதெல்லாம் இருக்கட்டும். உங்கிட்டே சீரியஸா சில விஷயங்கள் பேசணும்.

வி: எஸ். டாக்டர்.

ரா: இன்னிக்கு நீ எனக்குப் போட்ட மாலை என் முதல் மாலை இல்லை. இரண்டாவது மாலைதான் — தெரியுமா உனக்கு?

வி. (பதற்றத்துடன்): என்ன சொல்றேள் நீங்க?

ரா: பதறாதே, வித்யா. ஆனா கவனமாகக் கேள். என் கழுத்தில் ஏற்கனவே ஒரு மாலை விழுந்திருக்கு.

வி. (கண்ணீருடன்): திடீர்னு சினிமா பாணியிலே என்னமோ சொல்றேளே? புரியல்லையே?

ரா: நான் சொல்றது 'ஸ்டெத்தெஸ்கோப்' மாலையை.

வி. (பெருமூச்சு விட்டு): அப்பா, ஒரு நிமிஷத்திலே பயந்தே போய்விட்டேன்.

ரா: என்னை நீ சரியாப் புரிஞ்சுக்கணும். என் தொழில் மருத்துவம். தொழில்னு சொல்றது கூடத் தப்பு. அதை ஒரு புனித காரியமாக நினைக்கிறவன். 'ஹிப்போகிரேடிக்' சத்தியப் பிரமாணம் என்றால் உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதை ஒழுங்காக மதித்துச் செயல்படணும்கிறதுதான் என் லட்சியம். நடு ராத்திரியில் கூட என்னை யாராவது கூப்பிட்டால் உடனே நான் கிளம்பிவிடுவேன். அதனாலே எனக்கு இந்த ஊர்லே நல்ல பெயர்.

வி. உங்களுக்கு நான் மனைவிங்கிறதிலே எனக்கு ரொம்பப்பெருமையா இருக்கு.

ரா: அவசரப்படாதே. நாமரெண்டு பேரும் சேர்ந்து இருக்கும் சில இரவுகளில்... அல்லது சேர்ந்து இருக்கவேண்டும் என்று விரும்புகிற சில இரவுகளில்... எதிர்பாராமல் சில 'கால்கள்' வந்தால் நான் என் 'ஸ்டெத்' மாலைக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன், இன்னிக்குப் போட்டுக் கொண்ட மாலைக்கு அடுத்த இடம் தான். உனக்கு அதில் ஆட்சேபம் உண்டா?

வி. (உணர்ச்சியுடன்): என்ன அப்படிக் கேட்டு விட்டேள்? போகப் போக

பாருங்கோ.... உங்களுடைய லட்சிய மனைவியாக இருக்கிறேனு இல்லையான்னு... ஒரு பழமொழி சொல்லட்டுமா?

ரா: வெய்ட்! என்ன சொல்லப் போறேன்னு தெரியும். 'கிணற்று நீரை ஆற்று வெள்ளமா கொண்டு போகப் போகிறது' தானே?

வி: கரெக்ட். என் மனசைச் சரியாப் புரிஞ்சிண்டு இருக்கேள்.

ரா: சீரியஸ் பேச்செல்லாம் போறும் இப்போ ஆற்று வெள்ளம் ஒண்ணும் வராது. முக்கிய விஷயத்துக்கு வருவோம்.... பாரேன். இந்த ரூம்லே லைட் ஸ்விட்ச்சை எங்கேயோ மறைச்சு வைச்சிருக்கான்... மாபாவி!... ஆ...ஆ... அதோ!...

[படுக்கையி லிருந்து விருட்டென்று இறங்கி லைட்டை அணைக்கப் போகும் போது பட்பட்டென்று கதவு மெள்ளத் தட்டப்படும் ஓசை கேட்கிறது. ராமனும் வித்யாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர். ராமன் கதவைத் திறக்கிறான். வெளியே அவன் அக்கா நிற்கிறாள்.]

அக்கா: சாரிடா... ராமா... இப்படி எக்கச்சக்கமா உன்னை டிஸ்டர்ப் பண்ணும்படியா ஆச்சு.

ரா: ஏன்? என்ன விஷயம்?

அ: பெரியம்மாவுக்குத் திடீர்னு பேச்சே வரலேடா. உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டறது. மாரெல்லாம் வலி, நெஞ்சை அடைக்கிறதுங்கறா... வலதுகை காலை அசைக்க முடியலேன்னு சைகை காட்டறா...பத்து நிமிஷமா துடிக்கிறா... இந்த அர்த்த ராத்திரியிலே வேறெந்த டாக்டரைக் கூப்பிடறது? (தயங்கி) வந்து பார்க்கறயா?

ரா: இதோ! நல்ல வேளை. மருந்துப்பையைச் சத்திரத்துக்குக் கொண்டு வந்திருக்கேன். நானு கிட்டேயிருந்து வாங்கிண்டு வா. (வெளியே வருகிறான்)

அ. (குரலைத் தாழ்த்தி): டேய்! 'அவ' கிட்டே சொல்லிட்டு வாடா. பாவம். எனக்கு என்னவோ போல இருக்கு. இப்படி உங்களை 'டிஸ்டர்ப்' செய்யறது ரொம்பப் பாவம்டா.

ரா: அதனுலென்ன? நீ போ. நான் உடனே வரேன். (உள்ளே நுழைந்து) வித்யா, அக்கா சொல்றதைப் பார்த்தா பெரியம்மாவுக்கு 'ஸ்ட்ரோக்'னு நினைக்கிறேன். உடனே ஆஸ்பத்திரிக்கு அழைச்சுண்டு போய் ட்ரீட் பண்ணணும்.... பார்த்தியா... பயமுறுத்தினேனே... ஆற்று வெள்ளம். முதல் ராத்திரியிலேயே வந்துடுத்து. இதோ போயிட்டு வந்துடறேன். என்ன? நான் சொன்னது, நீ சொன்னது எல்லாம் ஞாபகம் இருக்கா? ''லட்சியமனைவி....பெருமைப்படுகிறேன், எக்ஸெட்ரா.''

[வித்யா தலையை ஆட்ட முயற்சி செய்கிறாள். முடியவில்லை. திடீரென்று அவள் கண்களிலிருந்து 'திபுதிபு' என்று கண்ணீர் சுரக்கிறது.இரண்டுகைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு மிஸஸ் ராமனுகத் தன் முதல் அழுகையை ஆரம்பிக்கிறாள்!)

அருள்வாக்கு

ஈசுவர நிவேதனம்

நைவேத்தியம் செய்தால் ஸ்வாமி எங்கே சாப்பிடுகிறார் என்று சிலர் கேலியாகக் கேட்கிறார்கள். நிவேதனம் என்றால் ஸ்வாமியைச் சாப்பிடச் செய்வது என்று அர்த்தமே இல்லை. அவருக்குச் சாப்பிட்டு ஒன்றும் ஆக வேண்டாம். நம் நினைவைச் சுத்தமாக்கிக்கொள்ளத்தான் பூஜை முழுவதுமே தவிர அவருக்கு இதனல் ஆவது ஏதுமில்லை. 'நிவேதயாமி' என்றால் 'அறிவிக்கிறேன்' என்றுதான் அர்த்தமே தவிர 'உண்பிக்கிறேன்' என்று அர்த்தமல்ல. 'அப்பனே! இந்த வேளைக்கு உன் கருணையில் நீ இந்த அன்னத்தைக் கொடுத்திருக்கிறாய்.' என்று அவனுக்குத் தெரிவித்துவிட்டு அவனுடைய நினைவோடு உண்ண வேண்டும். அவன் அருள் இல்லாவிட்டால் இந்த அரிசி எப்படி விளையும்? ஸயன்ஸ் நிபுணர் அரிசி வகைகளை ஆராய்ந்து பெரிய பெரிய புத்தகங்கள் எழுதலாம். ஆனல் அவரால் ஒரு மணி அரிசியைச் செய்ய முடியுமா? செயற்கை அரிசி (Synthetic Rice) என்று ஒன்றைச் செய்ய முடிந்தால் கூட இதற்கு மூலமான கெமிகல் ஏற்கனவே பகவத் சிருஷ்டியில் இருந்துதானே ஆக வேண்டும்? எனவே மனிதன் செய்ததாகத் தோன்றும் எல்லாமும் கூட முடிவிலே ஈசுவரன் சிருஷ்டித்ததுதான். பரமேசுவரனல் கொடுக்கப்பட்டதை அவனுக்குக் காட்டாமலே நாம் அனுபவித்தால் திருடர்களாவோம்.




எங்கும் இருக்கும் அவன், நாம் இருக்கச் சொல்லும் இடத்தில் நாம் கிரகிக்கும்படி வந்து நிற்பான். கல், மண், செம்பு முதலிய எந்தப் பிம்பத்தில் வைத்துக் கூப்பிட்டாலும் வருவான். அப்படிப்பட்ட யோக்கியதையும் கருணையும் அவனுக்கு நிச்சயமாக இருக்கிறது. இல்லை யென்றால் அப்படிப்பட்ட ஸ்வாமி நமக்கு வேண்டவே வேண்டாம்.

அவனைப் பூஜை என்று வைத்து ஒவ்வொரு குடும்பத்திலும் கூப்பிட்டு, அவனல் கொடுக்கப்பட்டதை உபயோகிக்கிறோம் என்று அன்றாடம் அறிவிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் ஈசுவரனுக்கு நிவேதனமாக அர்ப்பிக்கத் தக்கதைத் தவிர வேறெதையும் நாம் உபயோகிக்கக் கூடாது என்ற பக்குவம் நாளடைவில் உண்டாகும். நல்லவர்களாவோம்!

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

சினிமா சிரிமா!



"சார்! "ஒரு வினாடி சுகம்"ன்னு என்னு சார்?"

"இந்தா! உன்னோட அழகான பிராகரஸ் ரிபோர்ட்டை உங்க அப்பாகிட்ட காமிச்சுக் கேளு!" — ஆர். பார்த்தசாரதி



ஒருவன் : "உனக்குப் படு சுட்டியா இரட்டை குழந்தைங்க பிறந்திருக்காமே.. என்ன பேர் வைக்கப் போறீங்க."

மற்றவன் : "தில்லு — முல்லு" — எஸ். ராஜன்

"ராமு, சமீபத்திலே என்ன சினிமா பார்த்தே?"

"ஒருத்தி மட்டும் கரையினிலே பார்த்தேன்"

"படம் எப்படி?"

"ரொம்பப் பயமா இருந்தது"

"ஏன் மர்மப் படமா?"


"அதெல்லாமில்லே. நான் ஒருத்தன் மட்டும்தான் தியேட்டரினிலே" — வி. ந. ஸ்ரீதரன்



பாலைவனச்சோலை :

அரிசி 'க்யூ'
சர்க்கரை 'க்யூ'
மண்ணெண்ணெய் 'க்யூ'
என நின்று சோர்ந்த பின்னே
அக்கறையாய் நின்றேன் சினிமா க்யூவில்

— எல். ஜி. சங்கர்



பாக்கியராஜின் புதிய படங்கள் இரண்டுமே ரேஷன் க்யூவில் நிற்பவர்களுக்கு ஆறுதல் கூறுவது போல் இருக்கிறது.

இன்று போய் நாளை வா,
விடியும்வரை காத்திரு — எல். ஜி. சங்கர்



"இரயில் பயணங்களில்" படத்துக்கு எப்படிடா போனே?"

"டிக்கெட் வாங்காமத்தான்!" — மு. பஹீருதீன்

நண்பன் : "ராஜ பார்வையை டைரக்டர் சசி டைரக்ட் பண்ணியிருந்தா என்ன ஆயிருக்கும் தெரியுமா?"

ரசிகன் : "என்ன ஆயிருக்கும்! வசூல்ல ரிக்கார்டு ஏற்பட்டிருக்குமா?"

நண்பன் : ஊஹீம்! மாதவி குளிக்கிறதை நல்லா பார்த்திருக்கலாம்!" — ந. திருவாழி



குளத்தில் விழுந்த கல்

சுபா

தொண்டை கமறிற்று. துக்கத்தில் குடமாய்க் கொப்பளிக்கிற கண்ணீரை அடக்கிப் பார்த்ததில், மூச்சுக் குழாயே அடைபட்டுப் போன மாதிரி மார்பு முட்டிற்று. வெயிலில் வாட்டிய மாதிரி நா உலர்ந்து போயிற்று. துணியைப் புதைத்து மூடின வாயில் கேவல்கள் செத்துப் பிறந்து செத்தன. வாய் விட்டு அழ முடியாது. அழக்கூடாது. உடனே ஏராளமாய்த் தலைகள் வட்டமிட்டு என்ன என்ன என்று துளைத்து விடும்.

படபடவென்று கதவு தட்டப்பட்டது.

''என்னடி பண்ணறே சீக்கிரம் வா... அவங்கள்லாம் வர நேரமாயிடிச்சி...''

அருணாவுக்கு உதடுகள் துடித்தன. வந்து விடுவார்கள். வந்து விடுவார்கள்... இதே பேச்சு... வரட்டுமே... யார் வேண்டாம் என்றார்கள்? அவர்கள் வருகிறதனால் இயல்பை எல்லாம் மாற்றிக் கொண்டு அழகாக அலங்கரித்துக் கொண்டு, இல்லாத பணிவைத் தேடிக்கொண்டு, பொங்காத நாணத்தைப் போர்த்திக் கொண்டு போய் நிற்க வேண்டுமோ?

மாட்டேன் என்றால் யார் விடுகிறார்கள்? இது நாலாவது தடவை. இந்தத் தண்டனை எனக்கு ஏன்? எந்தப் பாவத்துக்காக ஏற்படுத்தப் பட்ட தண்டனை இது? விலங்கிட்டுக் கழுத்தில் கை



வைத்து நீதிபதியின் முன் தள்ளிச் சென்று நிறுத்துகிற இந்த அவஸ்தை எனக்கு எதற்கு? பிடிக்கவில்லை என்றால் விட்டுவிட வேண்டியது தானே?

''அழுதுட்டா வர்றே?''

—அத்தையின்குரல் அதிர்ந்து போய் வந்தது.

அருணா பதில் சொல்லாமல் நகர்ந்தாள். சட்டென அவள் தோளைப் பிடித்து நிறுத்தினாள் கோமதி.

''என்ன ஆச்சு அருணா?... ஏன் இப்படி அலங்கோலமா இருக்கே? அவங்கள்லாம் இப்ப வந்துடுவாங்க. போய் மடமடன்னு நீட்டா டிரஸ் பண்ணிக்கோ...''

''வேண்டாங்க்கா...என்னைவிட்டுடேன்!''

''ஏன்?... என்னன்னு சொல்லு... ஒவ்வொரு தடவையும் வர்றவனெல்லாம் புடிக்கல புடிக்கலன்னு அழுவுறியாமே... ஏன்? பொண்ணு பார்க்க யாராவது வர்றாங்கன்னாலே கலாட்டா பண்றியாமே... என்ன விஷயம்?''

''கல்யாணமே பிடிக்கலே...''

''அட!'' — கோமதி வியந்தாள். ''கல்யாணமே பிடிக்கலையா? ஏன் நாங்கள்லாம் கல்யாணம் பண்ணிக்கிட்டு இப்ப வாழலே? என்ன கெட்டுப் போயிட்டோம்...''

''எனக்குப் பிடிக்கலே...''

''அதான் ஏன்னு கேக்கறேன். வயசுப் பொண்ணு கல்யாணம் பிடிக்கலேன்னு சொன்னா காரணம் இல்லாம இருக்காதே... நீ யாரையாவது மனசுல நெனைச்சுக்கிட்டிருக்கியா?''

அருணா சட்டென நிமிர்ந்து முறைத்தாள்.

''உன்னை இன்னொருத்தன் கையில பிடிச்சுக் குடுத்தாத்தான் அப்பா இங்கே நிம்மதியாத் தூங்க முடியும்.''

''அதுக்காக....? அப்பாவுக்காக நான் பலியாகணுமா? நான் பாரமா இருக்கிறதா அவர் நெனைச்சா நான் வேறு தனியாப் போயிடறேன்...''

''போவே, போவே... நீ பொம்பளை... தனியா ரோட்ல போனா நாலு கண்ணு உரிச்சுப் பார்க்கும்.... தனியாப் போயிடுவாளாம், தனியா... சம்பாதிக்கிறோம்ங்கிற திமிருதானே உன்னை இப்படியெல்லாம் பேசச் சொல்லுது....''

''ச்சே... என்னக்கா நீகூட இந்த மாதிரியெல்லாம் பேசிக்கிட்டு... என்னை ஓரளவு புரிஞ்சுக்கிட்டவ நீ ஒருத்திதான்னு நான் நெனைச்சுக்கிட்டு இருந்தேன்....''

''சரி. உன் இஷ்டப்படியே இனிமே நடந்துக்கோ... நானும் அப்பா கிட்டச் சொல்லிட்டுப் போறேன். உன்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம்னுட்டு. ஆனா இன்னைக்கு ஏற்கனவே ஒத்துக்கிட்டாச்சு. அவங்களை வரச்சொல்லியாச்சு... மூஞ்சில அடிச்ச மாதிரி திருப்பி அனுப்ப முடியாது. வரட்டும். வந்து பார்த்துட்டுப் போகட்டும்... அப்பாவுக்காக இந்த ஒரு தடவை மட்டும் நீ ஒத்துக்கிட்டு ஆவணும்... ப்ளீஸ்....''

இதற்கு மேல் என்ன பேச முடியும்?

''சரி... ஆனா ஒரு கண்டிஷன்'' என்றாள் அருணா.


''என்ன?''

''ஹாலுக்குள்ள நுழையறச்சே தலையைக் குனிஞ்சுக்கிட்டு நுழைய மாட்டேன். கை காட்டறவங்க கால்லல்லாம் விழ மாட்டேன். தரைல உட்கார மாட்டேன். எனக்குப் புடிச்ச எடத்துல, சோபாவிலேதான் உக்காருவேன்..., சாதாரணமாகத்தான் டிரஸ் பண்ணிப்பேன்!''

கோமதிக்குத் திடீரென்று கோபம் வந்தது.

''எக்கேடாவது கெட்டுத் தொலை...''

சரேலெனக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அ நறு அயராமல்,



கதவைத் தாள் போட்டுக் கொண்டு, கண் ணாடிக்கு முன் போய் நின்றாள்.

அவர்கள் நாலு பேர். அவன் சாதாரண மாய் உடுத்தியிருந்தான். சந்தனக் கலர் பாண்ட். சிகப்பு சட்டை. செருப்புகள்.

முகத்தைப் பார்த்தாள்.

கொஞ்சம் கன்னங்கள் உப்பிய முகம். தடிமனைப் புருவங்கள். சாந்தமான கண்கள். தாமதித்து வலப்புறம் திரும்பிய நாசி. உதடுகள் ஓரங்களில் மேல் புறமாய், நிரந்தர புன்னகையாய் வளைந்திருந்தன. திடமான உடம்பு. 'ஆள் பரவாயில்லை...' அருணா மனத்தில் சொல்லிக் கொண்டாள்.

பேச்சு மெல்ல ஆரம்பித்தது. அரசியல், விலைவாசி, டாக்ஸிக்காரனின் அடாவடித் தனம், என்று பாதை மாறி மாறி ஓடிற்று.

அருணா ஒரு நாகரிகம் கருதி அவளைக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னாள்.

திடீரென்று அவனும் உரையாடலில் கலந் தான். ''உங்களுக்கு ம்யூஸிக் பிடிக்குமா?''

''பிடிக்கும்.''

''கர்னாடிக்கா... லைட்டா?''

''ரெண்டும்.

''எனக்கு லைட் ம்யூஸிக்ல தனி அட் ராக்ஷன் உண்டு.''

யார் கேட்டார்கள்?

''பாட்டெல்லாம் கத்துக்கிட்டு இருக் கீங்களா''

''ம்....''

''ஒரு பாட்டு எனக்காகப் பாடிக் காட்ட றீங்களா?''

''ஐ'ம் ஸாரி...'' என்றாள் அருணா. அவனுக்கு முகம் சுருங்கிற்று.

''அருணா...''

''ஸாரி.... ''ஐ டோண்ட்லைக் இட்.''

''கோவிச்சுக்கக் கூடாது... சின்னப் பொண்ணு...'' என்று அப்பா அவர்களிடம் குழைந்தார்.

''பரவாயில்லை...'' என்றான் அவன். ''அப்ப நாங்க புறப்படறோம்.''

சட்டென்று பெரிய திரை இறக்கின மாதிரி முகங்கள் சோர்ந்து இறுகின.

கோமதிக்கு ஆத்திரம் பொங்கிற்று. அத் தைக்கு எரிச்சல் வந்தது. அப்பாவுக்கு அவ மானமாக இருந்தது.

பெண்மணி: ''செக்கச் செவேல்''ன்னு சிவப்பு கலர்லே ''ஐடெக்ஸ்'' கிடைக்குமா...?
கடைக்காரர்: எதுக்கும்மா...?
பெண்மணி: எனக்கு ''மெட்ராஸ் ஐ.'' அதுக்கு மேட்சா போட்டுக்கத்தான்! - வனமணி



''அருணா... உன்னைத் தேடி யாரோ ரிஸப்ஷன்லே காத்துக்கிட்டு இருக்காங்க.''

பார்த்துக் கொண்டிருந்த பத்திரங்களைக் கவனமாய்ப் பிடித்துக்கொண்டு அருணா நிமிர்ந்தாள். ராஜேஸ்வரி நின்று கொண் டிருந்தாள்.

''சரி வரேன். நீ போ.''

மாடிப் படிகளில் மெல்ல இறங்கும்போதே அவன் தெரிந்தான். ''என்ன?'' என்றாள் அவனை நெருங்கியதும்.

''எனக்காக ஒரு பத்து நிமிஷம் ஒதுக்க முடியுமா?''

''சரி...காண்டீனுக்குப் போகலாம்'' என் றாள்.

''மிஸ் அருணா... நான் இங்கே வரு வேன்னு நீங்க எதிர்பார்க்கலே இல்லே?''

''ஆமா.''

''எனக்கு நேத்து ராத்திரி தூக்கமே வரலே. கண்ணை மூடினா உங்க முகம்தான் வந்து நின்னது. சரி.... ப்ளெய்னா பதில் சொல்லுங்க... நேத்து நிகழ்ச்சி பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?''

''பிடிக்கலே.''

''ஏன்?''

''எனக்கு ஆம்பிளைங்க பேர்ல நம்பிக்கை கெடையாது.... சந்தர்ப்பவாதிங்க...''

''எதை வைச்சுச் சொல்றீங்க?''

''ஆயிரம் காரணம் சொல்லலாம்.''

''நீங்க ஏமாந்திருக்கீங்களா?''

''இல்லே. எவனையும் நம்பி நான் இன் வால்வ் பண்ணிக்கிட்டதில்ல. எவனாயிருந் தாலும் ஒரு ஸேஃப் டிஸ்டன்ஸ் குடுத்துத் தான் பழகுவேன்.''

''பின்ன எதை வச்சு ஆம்பிளைங்க மட் டம்னு முடிவு செஞ்சீங்க?''

''எங்க செக்ஷன் சித்ராவை வச்சே சொல் லலாம். அவ புருஷன் என்ன பாடு படுத்த றாராம் தெரியுமா? , ரெவின்யூ ஸ்டாம்புக்கு இருவது பைசா போக மிச்ச சம்பளம் அப்படியே அங்க போய்ச் சேரணுமாம்... ஒரு ஹேர் பின் வாங்கணும்னா கூட அவன் கிட்டத் தொங்கிக்கிட்டிருக்கணுமாம். அவ என்ன கலர்ப் புடவை கட்டணும், எந்த பஸ்ல வரணும் எல்லாம் அவர்தான் டிஸைட் பண்ணுவார்....''

''அவர் ஒருத்தர்தான் உங்களுக்குத் தெரிஞ்ச ஆம்பிளையா?''

''சினிமாவிலேயும் சரி... டிராமாவிலேயும் சரி, எவ்வளவு ரேப்... கைவிடற கேஸு, எல்லாம் ஆம்பிளைங்கதான்....''

''கதை நெறையப் படிப்பீங்களா...?''

''நெறைய.''

''ஜெனரலா ஆம்பிளைங்க மேலே இருக் கிற எரிச்சலாலே கோபத்தாலேதான் கல் யாணம் வேண்டாம்னீங்களா?''

''ஆமா... எனக்கு வரப்போறவனும் ஆம்பிளைதானே? அன்னைக்கு ராத்திரி அவன் இழுப்புக்கு மசிஞ்சு குடுக்கணும்.''

''உங்க நெனைப்பு ரொம்ப சின்ன சர்க் கிளுக்குள்ளேயே இருக்கு... உங்க அப்பா வைப் பத்தி என்ன அபிப்பிராயம்?''

''அவரும் ஆம்பிளைதானேன்னு கேட்டு மடக்கலாம்னா? அவர் அந்தக் காலத்து

மனுஷன். எனக்கு இன்னித் தேதிலதான் ஆம்பிளேங்க பேர்ல நம்பிக்கை விட்டுப் போச்சு.''

''என்னேப் பத்தி என்ன நெனேக்கிறீங்க?''

''ஒண்ணும் நெனேக்கலே... உண்மையைச் சொல்லணும்னு உங்க பேர்கூட சரியாத் தெரியாது. சூர்ய நாராயணனே என்னவோ..?''

''சூர்யகுமார்.'' என்முன் அவன். ''நான் இன்னிக்கு உங்களேப் பார்க்க வந்த காரண மென்ன தெரியுமா? எனக்கு உங்களே ரொம்ப பிடிச்சுப் போச்சு... உங்களுக்கு என்பேர்ல தனிப்பட்ட வெறுப்பு இல்லேன்னும் தோணிச்சு.''

''ஏன்?''

''ஏன்னு, நான் வரதுக்கு முன்னடி நீங்க சந்தோஷமா இருந்த மாதிரியோ, என்னேப் பார்த்த உடனே சுரத்தில்லாம போன மாதிரியோ தோணலே... கண்ணெல்லாம் செவந்து போய் இருந்தது. அழுதீங்களோன்னு நெனேச்சேன்.... அதனுல உங்க கோபம் என் மேலே இல்ல... வேற யார் மேலேயோன்னு! இது கட்டாயக் கல்யாணமா?''

''கல்யாணமே கட்டாயம்தான்.''

''வேற யாரையாவது லவ் பண்றீங்களா?''

''எவ்வளவு இடியாடிக்கா பேசறீங்க... ஐ ஹேட் மென்.''

''அப்ப நான் தைரியமா எடுத்துச் சொல்லலாம்.''

''என்ன சொல்லணும்?''

''ஆம்பிளேங்களேப் பத்தி...''

''சொல்லுங்க... டயமாயிடிச்சி.''

''நீங்க நெறையப் புஸ்தகம் படிக்கறீங்க....''

''அதனுல....''

''பொம்பளே ரைட்டர்ஸ் ஆம்பிளேங்கள சரியாத் தெரிஞ்சுக்காம எழுதறதைப் படிச்சிட்டு நீங்க உங்க கற்பனேல ஒரு ஆம்பிளே இப்படித்தான் இருப்பான்னு ஒரு ஃபார்முலா தயார் பண்ணி வச்சிருக்கீங்க...''

''சித்ரா புருஷன் கூட அப்படிப்பட்ட கற்பனேயில சேர்த்தியா?''

''ஆயிரத்தில அங்கொண்ணு இங்கொண்ணு தப்பாப் போகலாம்... உங்க அக்காவுக்குக் கல்யாணம் ஆச்சே... ஏதாவது ப்ராப்ளம் வந்ததா? பொம்பளேங்கள்ல தப்பு பண்றவங்களே கெடையாதா?''

''நீங்க என்ன சொல்ல வரீங்க?''

''நெதானமா யோசிச்சுப் பாருங்கன்னு சொல்ல வர்றேன்... லேஃபே ஒரு சாலன்ஜ் மாதிரிதான். பஸ்ல போறேம்., வரோம். என்னிக்கு அடிபட்டுச் சாகப் போறேம்னு தெரியாது. அதுக்காக பஸ்ல போகாமயா இருக்கோம்...''

''அழகாச் சொல்றீங்க.''

''தாங்க்ஸ்.. இத்தனே நேரம் பேசினதில இப்பத்தான் உங்க முகத்தில சிரிப்பையே பாக்க முடியுது... நல்லா நீஞ்சத் தெரிஞ்சவன் தண்ணிலே சாகலாம். நீச்சலே தெரியாதவன் பொழச்சு வந்திடலாம்... எது எப்படின்னு யாருக்குத் தெரியும்?''

சூர்யகுமார் நிறுத்திவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான். சர்வர் கொண்டுவந்த காப்பியில் ஈ மொய்த்துக் கொண்டிருந்தது.



அவன்: ''ஜோக்கான கனவு ஒண்ணு கண்டேன் நேற்று!''

இவன்: ''யாருடா வந்தது கனவில் ... ஸ்ரீதேவியா, ஸ்ரீப்ரியாவா?''

அவன்:''ரெண்டுபேருமில்லே... வெ. சீதாராமனும், பெ. கலாசாமியும்!'' உ. ராஜாஜி

''நீங்க என்னேயே பார்த்துக்கிட்டு இருந்ததில உங்க காஃபியை மறந்திட்டீங்க... வேற காப்பி சொல்லிடவா?''

''வேண்டாம்... நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க.''

''நான் என்ன சொல்றேன்னு, முன்னயாவது கல்யாணமாயிட்டா சாகறவரைக்கும் புருஷன்தான் தெய்வம்... இப்ப அப்படியில்லே. பிடிக்கலேன்னு வேலேயை ரிஸைன் பண்ற மாதிரி டைவர்ஸ் பண்ணிட்டு வந்துடலாம். யோசிச்சுப் பாருங்க. கோழைத்தனமா குறுகிய மனப்பான்மையோட நடந்துக்காதீங்க. என்னேத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு அப்ளிகேஷன் போடலே. என்னே பர்ஸனலா வெறுத்து ஒதுக்கலேங்கற தைரியத்திலேதான் இத்தனேயும் பேசறேன்.''

அருணு அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இத்தனே நாள் கல்லாய் இறுகின மனசின் ஒரு விளிம்பில் ஏறி அவன் நின்றுகொண்டு அதைப் பெயர்த்து விட்டது போல் தோன்றிற்று.

''நான் யோசிக்கணும் மிஸ்டர் சூர்யகுமார்...''

''செய்ங்க. நான் காத்திருக்கப் போறேன். கொறைஞ்சது இன்னும் ஒரு மாசமாவது காத்திருப்பேன் உங்க பதிலுக்காக. வரட்டுமா?''

பத்து நிமிஷம் என்பது அரை மணி ஆகியிருந்தது. அவனுடன் ஆஃபீஸ் வாசல் வரை நடந்து வந்தாள். ஒன்றும் பேசவில்லே.

''பை தென்...'' அவன் விலகி நடந்தான்.

அவன் கேட்டை அடைகிற வரை பார்த்துக்கொண்டு நின்முள். மனசுக்குள் நிறைய குலுக்கல்கள். திடீரென்று ஏதோ நினேத்துக்கொண்ட மாதிரி ஓடிப்போய் அவனேப் பிடித்தாள் அருணு.

''ஒன் மினிட் சூர்யகுமார்... கொஞ்சம் வெயிட் பண்றீங்களா? நான் அரை நாள் லீவு எழுதிக் குடுத்துட்டு வரேன்... உங்க கூட இதைப் பத்தி நிறையப் பேசணும்.''

குளத்தில் விழுந்த கல் சலனத்தை ஏற்படுத்திற்று போலும்!

க்ஷ்மிகரமாய்த் திகழ...




க்ஷ்மி
00% பாலியெஸ்டர்
டவைகள்
க்ஷ்மி மில்ஸ்,
ாயம்புத்தூர்

பூமியை நனைக்காத மழை


பிரதீபா ராஜகோபாலன்

ராஜ வீதியும் ஒப்பண்ணக்கார வீதியும் சந்திக்கும் இடத்தில் பஸ்ஸுக்குக் காத்திருந்த வெங்கிடு சார், பக்கத்தில் இருந்த பூக்காரியிடம் பூ வாங்கிக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும் இதயத்தில் ரத்த ஓட்டம் அதிகரிக்க ''மாணிக்கம்'' என்று அழுத்தமான குரலில் கூப்பிட்டார்.

பூ வாங்கிக் கொண்டிருந்த அந்தப் பெண் மின்னலடித்தாற்போல் நிமிர்ந்து பார்த்து விட்டு முகத்தில் நிறைய மாறுதல்களுடன் சட்டென்று அங்கிருந்து விலகி, மேற்கே ராஜ வீதியில் அவசரமான முற்பகல் கூட்டத்தில் கலந்து விட்டாள்.

வெங்கிடு சார், ''மாணிக்கம், மாணிக்கம்'' என்று உரத்த குரலில் கூப்பிட்டுக்கொண்டு நாலு எட்டு வைத்தார். ஆனால், தன் பெண் தன்னைக் கவனித்து விட்டுத்தான் விலகிப் போகிறாள் என்று உணர்ந்ததும் அவமானம் பொங்கி அப்படியே நின்று விட்டார்.

ஒரு விநாடியில் இந்த விஷயம் நடந்து விட்டதாக உணர்ந்தார் அவர். ''ஆருங்க அந்தப் பொண்ணு?'' என்று பூக்காரி கேட்டாள், குரலில் நேசமான தன்மையுடன்.



''என் பொண்ணும்மா. சொந்தப் பொண்ணு. பார்த்து ஏழு வருஷமாச்சு. நான் கூப்பிடறேன்னு தெரிஞ்சதும் மூஞ்சிலே அடிச்சாப்பல போறதப்பாத்தியாம்மா?'' என்று வெங்கிடு சார் குரல் உடைந்து ரத்த ஓட்டமே தடுமாறிப் போனவராய்க் கேட்டார்.

''உங்க பொண்ணுன்னுப் பேசாமப் போகுமுங்கள்ா? பாக்காமக் கூப்பிட்டீங்களோ என்னவோ?''

''ஏம்மா, நான் இருபத்தி ஏழு வருஷமா பெத்து வளர்த்தவன்... எனக்குத் தெரி



யாதா? அவ கால் சுண்டு வெரல வெச்சே அடையாளம் சொல்லிருவேன்...'' என்று உணர்ச்சி வசப்பட்டார்.

''பின்னென்ன, அந்தப் பொண்ணு ஓட்டமா ஓடுது?..., உங்களுக்குள்ள மனஸ் தாபமா?''

''மனஸ்தாபம்னு நெனச்சா மனஸ்தாபம் தான்....ம்....'' என்றவர் தம் மேல் துண்டால் முகத்தையும் பின் கழுத்தையும் துடைத்துக் கொண்டார்.

''எந்த ஊருங்க நீங்க...'' என்று பூக்காரி கேட்கக் கேட்க அவர் போக வேண்டிய பஸ் வந்து விட்டது. முட்டி மோதிய கூட்டத்தில் முயற்சி செய்து ஏறிக்கொண்டார்.

''நம்ம மாணிக்கத்தைப் பார்த்தேன்னு சொல்றீங்க?'' என்று வெங்குடுசாரின் மனைவி ரெண்டு மூன்று தரம் கேட்டதும் அவருக்குக் கோபம் அரும்ப ஆரம்பித்து விட்டது.

''நான் என்ன இந்த வேகற வெயில்ல வந்ததும் உடனே உன்கிட்டப் பொய் சொல்லணும்கிறதா ஆசை?... நான் மாணிக்கம்னு சத்தமாக் கூப்பிட்டதும், பூ வாங்கிட்டு இருந்தவ, நொடியில என்னைப் பார்த்துட்டு, ஏதோ ஆகாதவனைப் பார்த்த மாதிரி, என்னமா காலை எட்டி வச்சு, அந்தக் கூட்டத்தில மறஞ்சுட்டா... நான் என்னடி அவ்வளவு வேண்டாதவனாப் போய்ட்டேனா?''

''அவ கல்யாணத்த ஏத்துக்கலை... அந்த ரத்தினபுரிக்காரனைப் பண்ணிட்டியனு, இந்த ஊட்டுக்குள்ள காலையே வெக்கக் கூடாது, எம் மூஞ்சிலேயும் முளிக்கக் கூடாதுன்னு சொன்னீங்கல்ல?''

''அதுக்கோசரம்?''

''அதுக்கோசரந்தான் அவ உங்க கிட்டப் பேசப் புடிக்காம வெலகிப் போய்ட்டா!''

''நான்தான், அய்யோ நம்ம புள்ளைய இப்பவாவது பாக்கறமேன்னு, பழசெல்லாம் மனசிலிருந்து தூக்கி எறிய உட்டுட்டு என்னோட இருதயமே அவகிட்ட பாஞ்சு ஓடி இறுக்கிப் புடிக்கிருப்ல மாணிக்கம்னு கத்தறேன். பெத்து வளர்த்தின அப்பன்னு கொஞ்சமாவது பாசமும் மரியாதையும் இருந்தா என்னப்பான்னு என்னைப் பாத்து

வந்திருப்பால்ல... எல்லா ஜடங்கடி, களி மண்ணுக. உங்களுக்கெல்லாம் உழைச்சு ரிடையராகிப் பென்ஷன் வாங்கி அதும் பத்தாம ராப் பகல்னு பாக்காம பசங்கள வெச்சு மாரடிச்சு நாலு காசு சம்பாதிச்சு வயிறு காயாமச் சோறு போடறேன் பாரு, அதுக்கு என்னே ஜோட்டால அடிக்கணும்.'' என்றவர், சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டுப் பின் பக்கமாகப் போனார்.

உடம்பைத் துடைத்துக் கொண்டு உள்ளே போய், வேட்டி மாற்றிக் கொண்டிருக்கையில், ''என்னங்க வண்டி வந்திருக்கு?'' என்று குரல் கொடுத்தாள் மனைவி.

''ம். நீ சோத்தைப் போடு. சின்னவன் எங்க போனான்?''

''ஆரோ சிநேகிதனும். கூடக் காலேஜ்ல படிச்சவனும். ரெண்டு பேரும் மாரியப்பன் மகன் கல்யாணகுமாரு வீட்டுக்குப் போனாங்க...''

''ம்... அவன் வந்தா, இன்னைக்கு இண்டு பேப்பர்ல ஸ்டேட்பாங்ல கிளார்க்கு போஸ்ட்டுக்கு விண்ணப்பம் கேட்டு விளம்பரம் வந்திருக்குன்னு சொல்லு. இவனுக்கு ஒரு வேலை கெடச்சுத் தொலைஞ்சா, நம்மளைப் புடிச்ச கெரகம் கொஞ்சம் நீங்கும்.''

''இப்ப டியூசனுக்குப் போறீங்களே அந்தச் செல்வி கிட்டச் சொல்லி ஒரு பத்து ரூபா வாங்கிட்டு வர்றீங்களா?'' என்று மெல்லிய பயந்த குரலில் சொல்லச் சொல்ல வெங்கிடு சார், ''என்னத்துக்கு?'' என்று கண்ணை உருட்டி மனைவியைப் பார்த்தார்.

''வெறகு இல்லே... நேத்தே பொடக்காளில இருந்த காஞ்சுபோன வேப்பங்குச்சிகளையும் தென்னைத்தகளையும் போட்டு எரிச்சேன். காலேல இருந்த ராந்தல் எண்ணெயும் ஊத்தி ஸ்டவ்வை எரிச்சாச்சு.''

மீதிச் சோத்தை விழுங்கிவிட்டு, சட்டையை மாட்டிக் கொண்டு இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டார்.

வெங்கிடு சாருக்கு வயசு அறுபத்து ரெண்டாயிற்று. பார்ப்பதற்கு நாற்பதுக்கு மேல் சொல்ல வராது. சாருக்கு ஒரே பெண். மூன்று பையன்கள். பெண்ணைத் தூசு துரும்பு படாமல் வளர்த்தார். தினமும் பள்ளியிலிருந்து வரும்போது மல்லிகை இரண்டு முழமோ, முறுக்குச் சரமோ, மிக்சர் பொட்டலமோ வாங்கி வராமல் இருக்க மாட்டார். பெண்ணை உறவினர் வீட்டுக்கு ஒரு நாள் கூட அனுப்பி வைக்க மாட்டார். அவள் பத்தாவது படித்து முடித்ததும் டைப்ரைட்டிங் கற்றுக்கொள்ள அனுப்பினார். அங்கே சொல்லித் தரும் இன்ஸ்ட்ரக்டர் அவளுக்குக் காதல் கடிதம் கொடுக்க முயன்றார் என்று தெரிந்து தம் பள்ளிக்கூடப் பையன்களை விட்டு அவரை நாலு சாத்துச் சாத்தச் சொல்லி ஏவிவிட்டார். ஊராரும் வெங்கிட்டு சாருக்கு சப்போர்ட் செய்தார்கள். தம் பெண்ணை அதிலிருந்து வீட்டை விட்டு வெளியே அனுப்பாமல்தான் இருந்தார். ஆறு மாசம் கழித்து அவளுக்கு சர்வீஸ் கமிஷன் மூலம் கலெக்டர் ஆபீஸில் ஜூனியர் அஸிஸ்டெண்ட் வேலை கிடைத்தது. ஊரிலிருந்து தினமும் போய் வந்தாள்.

ஒரு நாள் சாயந்திரம் வெங்கிடு, முத்துசாமி விவசாய மருந்துக் கடையில் பேசிக் கொண்டிருந்தபோது அவன் மெல்லிய குரலில் சொன்னான்:

''வெங்கிடு சார், ஒண்ணு சொல்றேன். கோபிச்சுக்காதீங்க. உங்க பொண்ணும் இங்க இருந்தானே டைப்பு ஸ்கூல்ல ரத்தினபுரிக்காரன் -- அவனும் கடலக்கார சந்துப் பக்கம் மித்ர சமாஜம் இருக்குதே அங்க காப்பி குடிச்சுக்கிட்டு இருந்தாங்க. அவங்க பேசிக்கிட்டிருந்த பேச்சில இருந்து ரெண்டு பேரும் தினமும் சந்திக்கிறாங்க போலிருக்கு.''

''என்ன?'' வெங்கிடு சார் வெகுண்டெழுந்து வீட்டுக்குப் போனார்.

அப்போதுதான் பெண் வீடு திரும்பிப் புடவை மாற்றி சோப்பு பாத்துக்குக் கீழே முகம் கழுவிக் கொண்டிருந்தாள். சோப்பு நுரை முகத்தில் இருக்கவே இரண்டு கைகளாலும் அவள் கன்னத்தில் ஓங்கி ஓங்கி அறைந்தார்.

''வெக்கம் மானம் இல்லாத கழுதே... போயும் போயும் அந்த ரத்தினபுரிக்காரன் தானு கெடச்சான் தினமும் சந்திச்சுக் காப்பி குடிக்கிறதுக்கு?''

மகள் இந்த அதிரடித் தாக்குதலால் சிலிர்த்துக் கொண்டு சீறினாள்.

''நான் அந்த ஆளைத்தானே கல்யாணம் பண்ணிக்கப் போறேன். என் மேலே ஆசைப்பட்டுத்தானே லெட்டர் குடுத்தார். எனக்குப் புடிச்சிருந்தாப் பண்ணிக்க வேண்டியது தானே? சும்மா மெரட்டாதீங்க...'' என்று மகளும் கத்தினாள்.

இதுவரை ஏர் இந்தியா தனது ஜம்போ விமானங்களுக்கு பெயின்ட் அடிக்க அவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டியிருந்தது. தற்பொழுது நம் நாட்டிலேயே விமானங்களுக்கு பெயின்ட் அடிக்கும் ஷெட் ஒன்றை ஏர் இந்தியாவின் இன்ஜினியரிங் டைரக்டரான திரு எம். பி. கார்க்கா என்பவர் உருவாக்கியிருக்கிறார் இதன் மூலம் வருடத்திற்கு 80 லட்சம் ரூபாய்கள் அன்னியச் செலாவணி மிச்சமாகிறது. வெளி நாட்டில் பெயின்டிங் செய்ய ஒரு விமானத்திற்கு இது வரை 12 லட்சம் ரூபாய்கள் செலவாயிற்று. இனி இங்கு ஒரு விமானத்திற்கு 4 லட்சம் ரூபாய்கள் மட்டுமே ஆகும். ஏர் இந்தியாவின் பதிநு ஜம்போ விமானங்களும் இனி இங்குதான் பெயின்டிங் செய்யப்படும்.

தகவல் : சக்தி மனோன்

ஆதாரம் : ''சண்டே''



அன்றைக்கு வெங்கிடு சாருக்குக் காய்ச்சல் என்று வந்து இடதுபுறம் முழுதும் செயல் இழந்து படுத்துவிட்டார். ஆறு மாசம் கோட்டயம் போய் சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்தான் குணமானார். அடுத்த மாசத்தில் ரிடையர்மெண்ட் வாங்கிக்கொண்டார்.

''இனிமே அவ இந்த ஊட்டுக்குள்ளாற நொழையக் கூடாது. என் மூஞ்சியிலயும் முழிக்கக் கூடாது'' என்று தெரிந்தவர் மூலம் சொல்லி விட்டார்.

கல்யாணமாகி ஏழு வருஷமாகிவிட்டது.

இரண்டு பையன்களும் ஒரு பெண்ணும் பிறந்தன என்று சொன்னார்கள். சார், மனசைப் பாறுங்கல்லால் இறுக மூடிக் கொண்டார். ஆனால் இந்த இரண்டு மாசமாய் அவரையும் அறியாமல்பெண்ணின் மீது ஞாபகம் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. அதற்குத்தகுந்தாற்போல் இன்றைக்குப் பெண்ணைப் பார்த்ததும் அவரையும் அறியாமல் 'மாணிக்கம்' என்று கூப்பிட்டு விட்டார்.

அவள் திரும்பிப் பார்த்துப் பேசியிருந்தால் வெங்கிடு சார் பூரிப்பினால் மனசு விரிந்து பூமிக்கும் வானத்துக்குமாக வியாபித்து இருப்பார். மனசுக்குள் கடலடி ஊற்றுக்களாக இருக்கிற பாசமும் ஞாபகச் சுமைகளும் பீறி அடித்துக் கொண்டு வெளியே வந்திருக்கும். ஆனால் அப்படி நேரவில்லை.

செல்வி வீட்டில் டியூஷன் சொல்லிக் கொடுத்துவிட்டு, அவள் அப்பாவிடம் பத்து ரூபாயும் வாங்கிக் கொண்டு வழக்கமாக அவர்கள் வண்டியில் வீட்டுக்குத் திரும்பும் போதுதான் வெங்கிடு சாரின் மனத்தில் அந்தக் கேள்வி எழுந்தது.

மனைவியிடம் பணத்தைக் கொடுத்தவர், ''ஆமா, நான்தான் முன்கோபி. உணர்ச்சி வசப்படறவன். மொரட்டுத்தனக்காரன். அன்பையும் பாசத்தையும் கட்டுப்படுத்தறவன். ஆனா, நீ இதுக்கெல்லாம் நேர் மாறு. ஏழு வருஷம் பாக்காதிருந்த என்னாலேயே புள்ளையைப் பார்த்ததுமே மாணிக்கம்னு கூப்பிட்டு அவபின்னால போகப் பார்த்தேன். உன்னால அவளைப் பத்திப் பேசாம, பாக்காம,பாக்கணும்னு சொல்லாம இருக்க எப்படி முடியுது?'' என்று கேட்டார்.

''நீங்க கேக்கறது சரிதாங்க. அவளைப் பாக்கவோ, அவகூடப் பேசவோ வேண்டாம்னு எனக்கும் பசங்களுக்கும் கண்டிப்பா ஆர்டரு போட்டிருந்தீங்க. நீங்களும் அப்படியே நடந்துட்டு, அவளைப் பத்தி ஒரு வார்த்தை கூடப் பேசாமப் புடிவாதமா இருந்திட்டீங்க. ஆனா, அப்பேர்ப்பட்ட நீங்களே நேருக்கு நேர் புள்ளையப் பாத்ததும் மனசு கலஞ்சு உறுதி கலஞ்சு, கூப்பிட்டீங்க. ஆனா, அதே சமயம் நான் அப்படி நடந்திருந்தா என்ன பண்ணுவீங்க... என்னை ஒரு வழி பண்ணியிருப்பீங்க இல்லையா? இப்ப ஆர்டரு போட்ட நீங்களே அந்தத் தடையை ஒடச்சப்ப இதுவரைக்கும் உங்க தடையை மீறும இருந்தது எங்க பைத்தியக்காரத் தனம்தானே? நீங்களே ஆர்டர் போட்டு நீங்களே மீறிட்டு வந்த விஷயத்துக்கு நாங்க ஏன் அடங்கி இருக்கணும்?''



இரவில் காரில் போய்க்கொண்டிருக்கும் போது திடீரென்று கார் நின்று விடுகிறது. 'பானெட்'டைத் திறந்து பார்க்க விரும்புகிறீர்கள் ஆனால் உங்களிடம் 'டார்ச்' இல்லை. என்ன செய்வது! காரின் முன்புற விளக்குகளைப்போடுங்கள். காரின் உள்ளேயிருக்கும் நியூஸ் பேப்பரை எடுத்து அந்த 'லைட்'டுகளின் முன்பு பிடியுங்கள். இப்போது அந்த பேப்பர்,வெளிச்சத்தை எஞ்சினுக்குள் பிரதிபலிக்கும்!

'டிட்பிட்ஸ்' —அனிதா ராமச்சந்திரன்

வெங்கிடு சார் சிலிர்த்துப் போய்விட்டார். அதிகம் படிக்காத, அதிகம் பேசாத மனைவியின் வார்த்தைகள் அவரைச் சிலுவையில் அடித்தது போலிருந்தது. அவளை நேராகப் பார்க்க முடியாது வேறு பக்கம் பார்த்தார்.

''நீங்க ஆம்பிளை. சம்பாதிச்சுப் போடறேம்கிற சலுகையில என்னை அடக்கலாம். நானும் அடங்கலாம். ஆனா, நான் அவளைப் பத்து மாசம் சொமந்து பெத்தவ. என்னோட ரத்தத்தில ஊறினவ. நான் அப்படி உங்க மாதிரி ஒணர்ச்சியை அடக்கிக்கிட்டுக் கல்லா இருக்க முடியாது. அவளை நான் பெத்த மாதிரி அவளும் கொழந்தை பெத்த போது நான் ஜடமா உட்கார்ந்திருக்க முடியலே. உங்களுக்குத் தெரியாம பல தடவை போய்ப் பார்த்தேன். இப்பவும் மாசத்துக்கு ஒரு மொறை பார்த்துட்டு வர்றேன். என் பெத்த மனசு அடங்கலே. மேகம் ஆகாசத்துல இருக்கிறதனால மழையா பூமியிலேதான் உளுது. ரொம்ப வீம்பா அங்கியா அடக்கி வச்சுக்குது? எப்படியும் பேஞ்சுதானே ஆகோணும்? பூமியை நனைக்காத மழை என்ன மழை?''

வெங்கிடு சார் ரத்தம் வற்றி வெளுத்து விரைத்துப் போன மனிதராய் அப்படியே உக்கார்ந்து விட்டார்.

''நான் புடிவாதம்னு ஒண்ணை முகமூடியாப் போட்டிருந்தேன். என் வார்த்தையை மீறலேங்கிற மாதிரி இன்னொரு முக மூடியை நீ போட்டுட்டு வந்திருக்கிறே... இதுல நான்தான் பைத்தியக்காரன். வெவரம் கெட்டவன்'' என்று வார்த்தையாய்ச் சொன்னவர் ''நாளைக்குப் போய்ப் புள்ளையைப் பார்த்துட்டு வந்துறலாம்'' என்று சொல்லும்போது வெங்கிடு சாரின் முகம் தெளிவாக இருந்தது.



கல்கி
21.6.81
இதழில்
சந்திரநாத்
எழுதும்
நீயா?
மர்மத்
தொடர்கதை
ஆரம்பம்

திங்கள் சந்தையில் ஒரு திருட்டு!

இரணியல் ரவி

சப்-இன்ஸ்பெக்டருக்குத் தலை சுற்றியது.

'மேலே' இருந்து பத்தாவது தடவையா கத் தொலைபேசியில் 'தகவல்' கேட்டுச் செய்தி வந்தாயிற்று.

''என்ன மிஸ்டர்! எப்போ கேட்டாலும் விசாரிக்கிறேன்... விசாரிக்கிறேன்... என்ன தான் விசாரித்துக் கிழிக்கிறீரோ?... பஸ் நிலையத்தில் நகையைப் பறிகொடுத்தவர் 'சிட் டிங்' எம். எல். ஏ. ஒருவரின் நெருங்கிய உறவினர்..... 'அந்த' ஆம்பிளேயோ பொம் பிளேயோதான் நகையைத் திருடியிருப்பாங் கன்னு 'அடிச்சு' சொல்றாரு!.... நீர் என் னடான்னா 'விசாரிக்கிறேன்! விசாரிக்கிறேன்' என்கிறீர்....''

சப்-இன்ஸ்பெக்டர் ஒரு தடவைக்கு இரு தடவையாக, போலீஸ் ஸ்டேஷன் வராந் தாவில் ஒரு ஓரமாக இருந்த அந்தக் 'குடும் ப'த்தைப் பார்த்தார்.

காலை நான்கு மணிக்குத் தகவல் வந்ததும் வராததுமாக ராதாகிருஷ்ணன் கோவிலை யொட்டியிருக்கும் திங்கள் சந்தை பஸ் நிலையத்துக்கு இரண்டு கான்ஸ்டபிள்க ளுடன் விரைந்தார் அவர்.

திருச்செந்தூருக்குப் பஸ் ஏற வந்த ஒரு பெண்ணின் கழுத்துச் செயின் நைந்தோ பிய்ந்தோ அறுபட்டுக் கீழே விழுந்திருக்கிறது. கீழே விழுவதைப் பார்த்த அவள் கணவன் குனிந்து அதை எடுக்கு முன் செயின் மாயமாக மறைந்து போயிற்று.

பக்கத்தில் ஐந்து வயதுப் பையன் ஒருவ னுடன் நின்ற தம்பதிகள் மீது அவர்களுக்குச் சந்தேகம்.

நகையைப் பறிகொடுத்தவர்களும், நகை யைத் திருடியிருக்கக் கூடும் எனச் சந்தேகிக் கப்பட்டவர்களும் பார்க்க 'டீக்'காக இருந் தார்கள்.

பேச்சு முற்றிக் கைகலப்பில் முடியும் போல் இருந்தது.

நிலைமையைச் சமாளிக்க எல்லோரையும் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார் சப் இன்ஸ் பெக்டர்.

பஸ் நிலையத்தில் நடந்த கலாட்டா — போலீஸ்காரர்களின் மிடுக்கு — எல்லாவற் றையும் கண்டு, அந்தச் சிறுவன் 'ஓ'வென்று கத்தினான்.

அவன் தாய் அவனைச் சமாதானப்படுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அவன் அழுகையை நிறுத்துவதாக இல்லை!

கடைசியாகப் பையிலிருந்து ஒரு 'ரொட் டி'யை எடுத்துக் கொடுத்ததும் அதை ஒரு வாய் கடித்துவிட்டு அமைதியானான் அவன்.

பிள்ளையின் கத்தல் ஓய்ந்ததும், கண வனையும் மனைவியையும் சப் இன்ஸ்பெக்டர் எப்படி எப்படி யெல்லாமோ உருட்டி மிரட்டி விசாரித்துப் பார்த்தார்.

ஊஹூம். எந்தப் பயனும் இல்லை.


புகார் கொடுத்த பெரிய மனிதர் எட்டு ஒன்பது மணிவரை பொறுத்துப் பார்த்தார். பிறகு 'மேலே' சொல்லி 'ஆகவேண்டியதைப் பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் புறப் பட்டு விட்டார்.

புகார் கொடுத்தவரோ 'சிட்டிங்' எம். எல். ஏ. ஒருவரின் உறவினர் என்கிறார்! திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட தம்பதி களோ வேறு ஒரு 'சிட்டிங்' எம்.எல்.ஏ.க்குத் தெரிந்தவர்கள் என்கிறார்கள்!

சப் இன்ஸ்பெக்டர் 'திரிசங்கு' சொர்க்கத் தில் தொங்குவது போல் படாத பாடு பட் டார். இந்த லட்சணத்தில் 'மேலே' யிருந்து மணிக்கு ஒரு கேள்வி வேறு! 'என்னாயிற்று? என்னாயிற்று?'

நிலைமை கட்டு மீறிப் போவது போல் தோன்றவே, 'த்ரீ நாட் நைன், டோன்ட் அலவ் தெம் ஈவன் டு டேக் மீல்ஸ்! நான் செஷன்ஸூக்குப் போய்விட்டு வந்து விசா ரிக்கிறேன்' என்று கூறிச் சென்றார்.

பத்மநாதபுரம் சப்-கோர்ட்டில் செஷன் ஸூக்குச் சென்று மாலை நான்கு மணிக்குத்



திரும்பியதும் திரும்பாததுமாக. 'மேலே' இருந்து மீண்டும் தொலை பேசியில் அலறல்! 'என்னையிற்று? என்னையிற்று?'

இதுவரை பத்துப் பதினைந்து தடவைகள் அவர்களை விசாரித்தாயிற்று: 'நாங்கள் நிரபராதிகள்! நிரபராதிகள்!'

சப்-இன்ஸ்பெக்டருக்கே என்னவோபோல் இருந்தது.

அவர்கள் 'நிரபராதிகள்' என்றே அவருக்குத் தோன்றியது.

வருவது வரட்டும்!

'நீங்கள் போகலாம்! இது சம்பந்தமாக எப்போது அழைத்தாலும் ஸ்டேஷனுக்கு வர வேண்டும்!'

சோர்ந்த முகத்துடன் வெளியேறிய அவர்களைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்ட சப்-இன்ஸ்பெக்டர் அந்தச் சிறுவனின் கையில் காலையில் அவன் தாய் கொடுத்த அதே ரொட்டி இருக்கக் கண்டு திடுக்கிட்டார்.

பசியால் – இல்லை பயத்தால் – 'ஓ' என்று அலறிய சிறுவன், காலையில் இருந்து இதுவரை ரொட்டியைக் கையிலேயே வைக்கக் காரணமென்ன?

எங்கோ, எப்போதோ — கேரளாவில் கோட்டயத்திலோ, ஆந்திராவில் செகந்திராபாத்திலோ நடந்ததாக வந்த பத்திரிகைச் செய்தியோ, அகதா கிறிஸ்டியின் துப்பறியு நாவலிலோ வாசித்த நினைவோ?

சப் இன்ஸ்பெக்டர், அவர்களை மீண்டு ஸ்டேஷனுக்கு அழைத்து–

பையன் கையிலிருந்த ரொட்டியை பிளந்ததும்–

நான்கு சவரன் நகை பொத்தென்று தரை யில் விழுந்தது!

'டீக்'காவ புரஸ்ஸுடன், நெரிசல் மிகுந் பகுதிக்குச் செல்வதும், நகைகளைத் திருடு வதும், அகப்பட்டுக் கொண்டால் பசியால் பயத்தால் அலறுவது போல — சிறுவனை அலறப் பழக்கி வைத்திருப்பதும் — திருடு கின்ற பொருட்களை ரொட்டி, பழம்போன்ற வைகளில் கண் இமைக்கும் நேரத்தில் வைத்துப் பிள்ளையிடம் தருவதும்–பாவமோ பழியோ என்று பிள்ளை அதைக் கையிலே வைத்திருப்பதும்.....

இத்யாதி, இத்யாதி....

கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள் சந்தையில் இரணியலில், தக்கலையில், தலக்குளத்தில், மணவையில் நடைபெற்ற திருட்டுக்கள் பலவற்றை இரணியல் சப் இன்ஸ்பெக்டர் துப்பறிந்த பெருமையை மறுநாள் பத்திரிகைகள் பறை சாற்றின.



ஆடிய ஆட்டமென்ன? பாடிய பாட்டென்ன? கூடிய கூட்டமென்ன?
உம் புருஷன் குடிச்சுட்டு ரோட்ல கெடக்குறுன்னு சொல்ல வந்தா... தாமரை... நீயும் குடிச்சுட்டு
தண்ணியிலே தாமரைப்பூ தள்ளாடுதே அலைகளிலே!
ஆடலுடன் பாட்டிலைக் கேட்டு ரசிப்பதிலே தான் சுகம், சுகம், சுகம்! ஸ்..ஸ்.ஸ். ஹாய்! ஹாய்!
என்ன தான் (ே)பாடுவது நான் எப்படித் தான் ஆடுவது?
சினிமா பாட்டில்...
...BOTTLE!

அவள் எப்படி இருப்பாள்?

நினைவைக் கசக்கிப் பார்த்தான் சகாதேவன். ஒன்றும் சரிவரத் தோன்றவில்லை. யார் யாரோ சினிமா நடிகைகளின் முகங்கள் தான். அணிவகுப்பாய் நினைவில் மிதந்தன.

எட்டு வருஷங்களில் அவளுடைய முகம் சுத்தமாய் நினைவிழந்து போய்விட முடியுமா? போய்விட்டது.

மேலேயிருந்து உறுமிக்கொண்டு இறங்கி வந்த லாரி ஒன்றுக்கு வழி விட்டுக் காரை ஓரமாக ஒதுக்கினான். கார் இன்ஜின் முரண்டு பண்ணி நின்று போனது. காலையில் புறப்பட்டதிலிருந்து இதே தொல்லை. இப்போது மலைப் பாதையில் நின்றுதொலைத்து விட்டது.

கதவைத் திறந்து வெளியே வந்தான்.

எதிரே பார்த்தான். அவனுக்கு நன்றாகவே வியர்த்தது, அந்தக் குளிரிலும்.

'மரணப் பள்ளம் — கவனமாக ஓட்டவும்' என்ற சம்பிரதாயமான மிரட்டல் போதாதென்று மண்டை ஓடும் பெருக்கல் எலும்புகளும் என்று படம் வேறு.


அருணா நினைவுக்கு வந்தாள். இன்று காலையில்தான் அவளைப் பற்றிய செய்தி கண்ணில் பட்டது. பாவிப் பெண், அவளுடைய முகம் தான் என்ன முயன்றும் நினைவில் வரவே மாட்டேன் என்று அடம் பண்ணுகிறது.


''...கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவகி அருணா மல்ஹோத்ரா நேற்று இரவு தன் அறையில் பிணமாய்த் தொங்கியது கண்டு பிடிக்கப்பட்டது. மரணத்தின் காரணம் கொலையா தற்கொலையா என்று...''

மறுபடியும் அந்தச் செய்திக் குறிப்பைக் கவனமாய்ப் படித்தான். அது கொலையானால் என்ன? தற்கொலையானால் என்ன? அவளுடைய சாவுக்கு நான்தான் காரணம் என்று வாய் விட்டுக் கதற வேண்டும் போல் இருந்தது.

'பாவி! இப்போது திருப்திதானே... உன்னுடைய கையாலாகாத் தனத்தினால் நான் ஒழிந்து போனேன். நிம்மதியாய் இரு...' என்று அருவமாய் நின்று அவள் வாழ்த்துகிற மாதிரி ஒரு நிழலாட்டம்.

விஸ்வரூபம்





சுப்ர. பாலன்

இன்னும் அரை மணி நேரத்தில், மலைச் சரிவுக் கிராமத்தில் அருணா மல்ஹோத்ரா என்கிற தேவதை பூரணமான இறுதி மரியாதைகளுடன் 'புறப்படத்' தயாராக வைக்கப்பட்டிருப்பாள். அவளுக்காக வாங்கி வைத்திருந்த மல்லிகை மாலையின் மணம் காருக்கு வெளியேயும் கிறங்கப் பண்ணியது.

பத்து நிமிடப் போராட்டத்துக்குப் பிறகு கார் 'புறப்பட்டுத் தொலைக்கிறேன்' என்று உறுமிக் கிளம்பியது.

கார் சென்று கொண்டிருக்கிற போதே அவனுடைய சிந்தனை அருணாவை நினைவுக்குக் கொண்டுவரப் படாத பாடு பட்டது.

குளுகுளுவென்ற மலைப் பிராந்தியம். போஸ்ட் மார்ட்டம் ஆகி உடல் கிடைத்திருந்தால்கூட அவளை அதற்குள் அடக்கம் பண்ணியிருக்க மாட்டார்கள். கடைசி கடைசியாக அவளைப் பார்த்து—

''இனிமேல் என்னை வந்து பார்த்து மாலை போட்டு என்ன செய்யப் போகிறாய் தேவன்?''

தன்னிச்சையாய்க் கார் விலக்குப் பாதையில் திரும்பி நிற்கிறது. வெள்ளை வெள்ளையாய்க் கட்டடங்கள். மலை நிலத்தின் அழகு தேவதைகளான மரங்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு வெறும் கட்டடங்களையே நட்டு வைத்திருந்தார்கள். இன்னும் மூன்றே நிமிடத்தில் அந்த வீட்டை அடைந்துவிடலாம்.

அதற்குள் ஒரு முறையேனும் அவளை நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்து விட வேண்டும். காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். பள்ளத்தில் ஒரு வீட்டின் முன்னால் ஊரே திரண்டிருந்தது.

'வாருங்கள்... வந்து என்னை உங்களுடையவளாக உரிமைப்படுத்திக் கொள்ளுங்கள்...

'என்னை யாரோ கொன்றுவிடப் போகிறார்கள்... எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது. கனவோ பிரமையோ இல்லை...நிச்சயம் நான் சாகத்தான் போகிறேன்.அதற்குள்...'

அந்தக் கடிதத்தை ஒரு முறை நினைவுக்குக் கொண்டு வர முயல்கிறான். அருணா—அவளுடைய முகம் மட்டும்....?

வானத்தில் மேகக் குழப்பங்கள். அதுவே ஒரு விந்தையாய், சுழன்று ஆர்ப்பரிக்கும் மேகங்களிடையே ஒரு முகம்... தெளிவில்லாத முகமில்லாத முகம், தலைவிரி கோலமாய் ஒரு முகம்...

'ஓ....அருணா....'

விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விசுவரூபமெடுத்து அவள் நிற்கிறாளா? பாதி மேகம்... பாதிப் பசுமை... இது என்ன ஒரு வித்தியாசமான மெர்மெய்ட் மாதிரி....

மல்லிகை மாலையைக் கையில் எடுத்துக் கொண்டு படிகளில் இறங்கினான் சகாதேவன்.

வீட்டை நெருங்க நெருங்க அவனுடைய கால்கள் துவண்டன.

மௌன அஞ்சலியாய்க் கண்ணீர் மலர்களைச் சொரிந்து கொண்டு அருணா மல்ஹோத்ராவின் அருகே அந்தக் குழந்தைகள் நின்றிருந்தன.

அவளுடைய தோற்றப் பொலிவு மரணத்தில் இன்னும் கூடுதலான சோபையுடன்

திகழ்ந்தது. மாலையை மெல்ல அவள் காலடியில் வைக்கப் போனபோது யாரோ அவனைத் தடுத்தார்கள்.

மாலையை அவள் மார்பில் புரளுகிற மாதிரி போட்டுவிட்டு அவன் வெடித்தான்.

''நீங்கள்....?''

''சகாதேவன். கோயம்புத்தூரிலிருந்து வருகிறேன்.''

''மிஸ்டர் சகாதேவன்! நீங்கள் எங்களோடு வரவேண்டும். அருணா மல்ஹோத்ரா கொலை செய்யப்பட்டாள். தெரிந்துதான் வருகிறீர்களா?''

அவன் அவ்வளவு அதிர்ச்சி யடையவில்லை. ''ஓரளவு ஊகித்தேன். ஆனால் நான் வந்தது செய்திப் பத்திரிகைக் குறிப்பைப் பார்த்து விட்டுத்தான்.'' என்று சொல்லிக்கொண்டே அந்த ஆங்கிலச் செய்தி ஏட்டை அவரிடம் கொடுத்தபோது அவர் அதை, ஏன் அவனைக் கூட லட்சியம் பண்ணவில்லை.

நடந்தான். சற்றே திரும்பி அவளுடைய முகத்தைப் பார்த்தான். எட்டு வருஷத்தில் ரொம்பவும் மாறிப்போன மாதிரி தோற்றம்.

'அன்றைக்கே என் விருப்பப்படி நாம் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் இன்றைக்கு இப்படிச் செத்துக் கிடக்க மாட்டேனே....'

காவல் நிலையத்தில் அவனை உட்காரச் சொன்னார்கள். என்னென்னவோ கேட்டனர். குறித்துக் கொண்டார்கள்.

''மிஸ்டர் தேவன், நீங்கள் இங்கே வராமலிருந்தாலும் நாங்களே உங்களைத் தேடி வந்திருப்போம். உங்களைப் பற்றிய சகல விவரங்களும் மிஸ் அருணா மல்ஹோத்ராவின் குறிப்பேட்டில் இருக்கின்றன. தன்னை யாரோ கொன்றுவிடப் போவதாகவும் எழுதிவைத்திருக்கிறாள். உங்களுக்கு ஏதேனும் தகவல் உண்டா... இது 'ஸ்டிராங்குலேஷன்' கேஸ். மெல்லிய கயிற்றை இறுக்கிக் கழுத்து நெறிபட்டு மரணம். அப்புறம் தொங்க விட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.''

''இன்ஸ்பெக்டர்! நான் அருணாவைப் பார்த்தே எட்டு வருஷங்களாகி விட்டன. போன மாசம்தான் நான் கோயம்புத்தூர் வந்தேன். போன வாரம்கூட அவளிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தது. அதி[ல்]தான் எனக்கும் எழுதியிருந்தாள், தன்னை யாரோ கொன்றுவிடப் போகிறார்கள் என்று. நான் வெறும் பிரமையாய் இருக்கும் என்று நினைத்தேன். நிஜமாகவே...'' அவனால் மேலே முடிக்க இயலவில்லை.

''இன்ஸ்பெக்டர்! இது வெறும் கொலைதானா இல்லே வேறே ஏதாவது?''

''மிஸ்டர் தேவன்! உங்கள் கேள்விக்கு விடை இருக்கிறது. ரேப் அண்ட் மர்டர்தான்.''

அவன் குமுறினான். இது இரண்டாவது முறையா... 'கடவுளே' என்று கதறினான்.

என்ன என்கிற மாதிரி இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார். ''இது உங்களுக்கு உதவலாம் இன்ஸ்பெக்டர். மிஸ் அருணா ஏற்கனவே ஒரு முறை இப்படி....''

''யெஸ்... புரொஸீட்...'' என்று இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து உட்கார்ந்து குறித்துக் கொள்ளத் தயாரானார்.

சொன்னான். அந்த மழை இருட்டில் அவனும் அவளும் கல்வெட்டு ஆராய்ச்சிக்காகப் போன இடத்தில் எட்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்ததைச் சொன்னான்.

''அவன் எங்கள் நண்பன்தான்... அப்போது போலீஸுக்குப் புகார் தரவில்லை. அருணாதான் வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்துத் தடுத்தாள். அவன் அப்போது ஊரை விட்டு ஓடிப் போய்விட்டான்.''

''பெயர்... விவரம்?''

''கிருஷ்ணகாந்த் சர்மா என்று பெயர். அவனும் இப்பொழுது எங்கேயோ லாயராகத்தான் இருக்கிறான். அவன்தான் இப்பவும் என்று எப்படி இன்ஸ்பெக்டர் சொல்ல முடியும்? அதுவும் எட்டு வருஷமாகிவிட்டது''

''மிஸ்டர் தேவன்... அது உங்கள் கவலை இல்லை. மிஸ் அருணா அன்றைக்கு அப்படி ஆனதுதான் நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கக் காரணம் இல்லையா?''

''ஓரளவு உண்மை இன்ஸ்பெக்டர்... ஆனால் மனசு கொஞ்சம் சமாதானமானதும் —ரெண்டு பேருக்குமேதான் — கல்யாணம் பண்ணிக்கலாம் என்று காத்திருந்தோம். நடுவிலே நான் ஜெர்மனி போய்விட்டேன்.''

இன்ஸ்பெக்டர் சிரித்தார். '' எதற்கும் இருக்கட்டும். ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்து விடுங்கள். உங்கள் சாட்சியமும் தேவைப்படலாம்'' என்றார்.

அவசரம் அவசரமாய் அவன் எழுதிக் கொடுத்தான். ''நான் கோயம்பத்தூரில் தான் இருப்பேன்... இன்னும் பதினைந்து நாள்... அப்புறம்...''

''அவ்வளவு தேவையில்லைமிஸ்டர் தேவன்! இன்னும் மூன்று நாட்கள். ஆள் எங்கள் கையில் சிக்குகிறான் பாருங்கள்.''


சகாதேவன் சிலிர்த்துக் கொண்டான்.

சவ அடக்கம் முடிகிறவரை ரொம்பவும் பொறுமையாய் இருந்தான். அவனுக்கே ரொம்ப வியப்பாக இருந்தது. எப்படித் தன்னால் அவளைப் பார்த்துக் கொண்டு அவ்வளவு நேரம் நிற்க முடிந்தது?

சாயங்காலம் நாலரை மணி. பள்ளங்களில் இருள் நிரம்பி மூடு பனி கும்பல் கும்ப

அவர்: உங்க நாட்டியப் பள்ளி நன்றாக நடக்குதா?

இவர்: நடக்கிறதாவது! மாணவிகள் குறைந்து போய் நாட்டியப் பள்ளி ஆடவே செய்கிறது! — கல்கத்தா 'மிக்கி'



லாய் மிதக்கத் தொடங்கி விட்டது. காரைக் கிளப்பினன்.

அவனுடைய மனம் இப்போது லேசாய் இருந்தது. வரும் வழியெல்லாம் நினைவுக்கு வராத அருணா மல்ஹோத்ராவின் முகம் நிரந்தரமாய் நெஞ்சில் தேங்கியது. அது நிம்மதியா சங்கடமா?

''பாவி! உன் கவலை தீர்ந்தது. போ, நிம்மதியாய் எங்காவது ஒழி...''

திரும்பிப் பார்த்தான். பின் ஸீட்டின் வெறுமை அவனை மிரட்டியது. ஒரு குலுக்க லில் சரியவிருந்த காரைச் சரிப்படுத்திப் பாதையைக் காட்டினன்.

பதினைந்து நிமிடங்களில் அதே இடம்... 'மரணப் பள்ளம்... கவனமாக ஓட்டவும்...' மண்டை ஓடும், பெருக்கல் எலும்புகளும்...

இன்னும் ஒரு ஹேர் பின் வளைவில் கீழே இறங்கிவிட்டால் — அப்புறம் பாதுகாப்பான நெடுஞ்சாலைப் பயணம்தான்.

பாதுகாப்பு — எல்லாவற்றிலும்தான்... சனியன் பிடித்த கார்.. அந்த மண்டை யோட்டுப் பெருக்கலின் கம்பத்தில் மோதி நின்றது.

''கீழே பார்த்தாயா... தூள் தூளாய் உன்னையும் வாரிப் போட்டுவிடுவேன்'' — என்று மிரட்டியது.

மாலை வெய்யில் பனிப் படலத்தை விரட்டிச் சிரித்தது. மறுபடியும் மேகங்கள் சுழன்று சுழன்று அந்த மலைப் பகுதியை ஆக்கிரமித்தன.

சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தான். மறுபடி புகை வளையங்கள்... விண்ணுக்கும் மண்ணுக்குமாய் அவளுடைய தோற்றம்... மறுபடி விசுவரூபம்... மேகங்களே முகமாய் கூந்தலாய் உடம்பாய்....

''என்ன மிரட்டுகிறாயா?''

பாதை ஓரத்தில் காரை விட்டு இறங்கிக் கீழே பார்த்தான். அப்படிப் பார்த்திருக்கக் கூடாது சகாதேவன். அப்படியே தலை சுற்றிச் சரிந்து... கீழே கீழே.. பள்ளத்தில் மோதிச் சிதறினன்.

அருணா உயிருடன் உள்ளவரை தனக்கு நிம்மதி இல்லை என்று முடிவு செய்து விசு வாசமான ஆட்களை ஏவி அவளை முடித்த பிறகும் அவனல் தப்ப முடியாமல் போனது.

சட்டம் விழிப்புற்று அவன் அகப்படும் வரை அருணாவால் காத்திருக்க முடியவில்லை. அவளுடைய விசுவரூபம் கதையை முடித்து விட்டது.

அங்கே—

இன்ஸ்பெக்டரின் முன்னல் டீக்கடை நாயர் ஒரு சின்னக் காகிதத்தைக் கொடுத்து என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான்.

''எசமான்! ரண்டு ஆளுக முந்தா நாளு காலேலே சமூக சேவகி அம்மா வீடு எங் கேன்னு கேட்டாங்க.. அவுங்க கொண்டு வந்த கடிதாசுங்க இது...''

அந்த முகவரிக் கையெழுத்தை வைத்து இன்ஸ்பெக்டர் மேலே புருவத்தை உயர்த்திய போது—

அங்கே சகாதேவனின் ரத்தத் துளிகள் திட்டுத் திட்டாய் மலைப் பாறைகளில் உறையத் தொடங்கி யிருந்தன!



அருள்வாக்கு

அழிவில்லாத அன்பு

மனிதனுயிருந்தாலும் மிருகமாயிருந் தாலும் பறவையாக இருந்தாலும் உயி ரினங்கள் யாவற்றின் மீதும் மனிதன் அன்பு செலுத்தப் பழக வேண்டும். அன் பில்லாத வாழ்க்கை வீண் வியர்த்தமே. எல்லோரிடத்தும் அன்பு செலுத்தும் தன்மை நம்மிடம் நிறைந்திருந்தால் துக்கத்துக்கே இடமில்லை. குழந்தைகளைப் பாருங்கள். அவர்களிடம் அன்பு பொங்கி வழிகிறது. ஆனல் வயது ஆக ஆக அவர் களுடைய அன்பு குறைய ஆரம்பிக் கிறது. அன்பு என்பது என்ன? ஒரு தாய் தன்னுடைய குழந்தையிடம் காட்டும் அன்பை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பெற்றோரிடம் பற்றில் லாத பிள்ளைகளை உலகத்தில் பார்க்க முடியும். ஆனல் தன் குழந்தையிடம் பாசமில்லாத தாயைப் பார்க்கவே முடியாது. தாய் தன் குழந்தையிடம் காட்டும் அன்பைப் போலவே நம் முடைய சுகத்தைவிட மற்றவர்களு டைய சுகம்தான் அதிக முக்கியமானது என்று நினைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இந்த அன்பில் வேதனையும் இல்லா மலில்லை. ஏனெனில் ஆரம்பம் என்றிருந் தால் அதற்கு முடிவும் இருக்க வேண்டு மென்பது பொது விதி. நாம் மிகுந்த அன்பு வைத்துள்ள ஒருவர் மரண மடைந்து விட்டால் ரொம்ப மன வேதனை அடைகிறோம். இதற்காக நாம் அன்பை வளர்க்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? ஆனல் அழிவில்லாத அன்பு என்றிருக்கிறது. அதைப் பழகிக் கொண்டால் வேதனைக்கே இடமில்லை. அதுதான் கடவுளிடம் அன்பு செலுத்து. வது. அழிவில்லாத கடவுளிடம் செலுத் தும் அன்புக்கு அழிவேது?

—காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



ஸ்ரீவேணுகோபாலனுக்கும் புஷ்பா தங்கதுரைக்கும் என்ன வித்தியாசம்?





⌘ புலவர் தொல்காப்பியன், தஞ்சாவூர்

கே. கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் கவிதை எழுதினால் தப்பொன்றுமில்லை என்கிறீர்களே. வரம்பிற்குள் நின்று எழுதி விட்டால் உயர்ந்ததாகி விடாது எனில் வரம்பு மீறி எழுதுவதிலேயே அது புது கவிதையாகி விடுமா? உயர்ந்ததாகி விடுமா?

ப: உங்கள் முழுக் கேள்வியில் கோபம்தான் தலைதூக்கி நிற்கிறது. விதிகளை மீறிய ஒரே காரணத்தால் புதுக் கவிதைகளைக் குப்பைத் தொட்டியில் போடக் கூடாது; அதே மாதிரி இலக்கண ரீதியாக எழுதப் பட்ட ஒரே காரணத்துக்காக மரபுக் கவி தைகளைக் கோபுரத்தில் வைக்க முடியாது. இதுதான் என் கட்சி. மரபுக் கவிதை களிலும் சரி புதுக் கவிதைகளிலும் சரி, நிறைய பதர்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

⌘ க. ந. சுப்ரமணியன், நாகர்கோவில்


கே. பாலியெஸ்டர் வேஷ்டி, முழுக்கை சட்டை தரையில் உரசும் துண்டு இவைகளுடன் தரையில் கால் பாவாமல் ஐந்து வருடங்கள் நடக்க ஆசை யுண்டா?

ப: கிடையாது. கிடையவே கிடையாது. இந்த உடையுடன் காரிலும் விமானத்தி லும் போகத்தான் ஆசை உண்டு!

⌘ இரணியல்கலை, தூத்துக்குடி

கே. தில்லு முல்லு என்ற பெயர் எப்படி வந்தது? முழு அர்த்தம் என்ன?

ப: ஏடாகூடம், அசட்டுப் பிசட்டு, உப்பு சப்பு, கன்னு பின்னு, கெக்கேபிக்கே, லொட்டுலொசுக்கு மாதிரிவந்த வார்த்தை இது. இதன் முழு அர்த்தம் தெரியவேண்டு மானல் ரஜனிகாந்தை அணுகவும்.



⌘ த. ரவிக்குமார், கூவத்தூர்பேட்டை

கே. ஓசிப்புத்தகம் படிப்பதற்கும் சொந்தப் புத்தகம் படிப்பதற்கும் வேறுபாடு என்ன?

ப: என்னைக் கேட்டால் ஓசிப் புத்தகங்கள் தான் முழுமையாகப் படிக்கப் படுகின் றன. சொந்தமாகப் புத்தகம் வாங்கி விட்டால், 'நம் புத்தகம்தானே, எங்கே போகிறது' என்று படிப்பதைத் தள்ளிப் போடத் தோன்றுகிறது. ஓசிப் புத்தகம் விஷயம் அப்படி அல்ல. ஆகவே புத்தகங் களை ஓசியில் வாங்குவது சாலச்சிறந்தது.



⌘ நிலா. ஹாலித் நசீர், கோவை-23

கே. ஸ்ரீ வேணுகோபாலன், புஷ்பா தங்கதுரை ஒப் பிடுக?

ப: முன்னவர் கனராகம், பின்னவர் பாப் மியூஸிக். முன்னவர் ரவிவர்மா ஓவியம்; பின்னவர் சினிமா போஸ்டர். கதை, நடை, நெஞ்சில் நெகிழ்ச்சி ஏற்படும் சம்பவங் களை முன்னவர் தருவார், பின்னவரோ கிளுகிளுப்பு ஊட்டும் சம்பவங்களை சிறிய கதையுடன் கொஞ்சம் ''கதை''யையும் சேர்த்துக் கொடுப்பார். ஆனல் வார்த் தைகள் அற்புதமாகப் பல இடங்களில் விழும். இரண்டுபேரும் நம்மைக் கவர் கிறார்கள்.

⌘ எஸ். எஸ். டி. ராஜன், சிறுதையூர்

கே. குடும்பப் பெண்களை ஏன் 'குத்துவிளக்கு என் கிறார்கள்?

ப: நெல் குத்துவதாலும் வீட்டை விளக்கி வைப்பதாலும் சில சமயம் கணவன் மீது 'எரி'ந்து விழுவதாலும், மாமியாரைப் பற்றித் 'திரி'த்துக் கூறுவதாலும், எள் என்னுமுன் எண்ணெயாக இருப்பதாலும் இருக்கக் கூடும்!

பரிசு பெறுவர்:

இரணியல் கலை
டைப் III 9/6 தெர்மல் நகர்,
தூத்துக்குடி—6

கடுகு பதில்கள்!



பரிசு

மன்னார்குடி விசுவநாதன்

சுந்தரம் குமுறினான்.

மேசை மேல் வைத்த காப்பி ஆறிக் கிடந்ததையும், சுவரில் தொங்கிக்கொண்டிருந்த பெல்ஜியம் கண்ணாடியையே வெறித்தவாறு தன் கணவன் பிரமை பிடித்த நிலையில் உட்கார்ந்திருந்ததையும் கவனித்த ஜானகிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படிக் குத்துக் கல்லாட்டம் உட்கார்ந்திருக்கிங்க?''

''ம்... என்ன ஜானகி... ஏன் சத்தம் போடுறே?'' என்று கேட்டுவிட்டுத் திருதிருவென விழித்தான்.

''ம்... இந்நேரம் சத்திய சோதனை படிச்சுக்கிட்டு இருப்பீங்களே... இன்னைக்கு என்ன ஆச்சு? இப்படி இடிச்ச புளியாட்டம் உட்கார்ந்திருக்கீங்க... காப்பி வச்சு அரை மணி நேரம் ஆச்சு... பார்க்கிறது பியூன் உத்தியோகம்... ஆனா பெரிய அரிச்சந்திரனா நடக்கனும்னு பார்க்கறீங்க. இதிலே ரெண்டு பொண்ணுங்க வேறே. ரெண்டும் வயசுக்கு வந்துட்டுதுங்க. கொஞ்சமாவது குடும்பத்தைப் பத்தி நினைச்சுப் பார்க்கப் போறீங்களா இல்லையா?''

ஜானகி அழ ஆரம்பித்துவிட்டாள்.

''ஜானகி... வீணா என் மனசைப் புண்படுத்தாதே. மனசாட்சிக்கு விரோதமா என்னாலெ எதுவுமே செய்ய முடியாது.''

''சரி... மனச்சாட்சிப்படி நடந்தீங்களே, உங்களுக்கு மெடல் கிடைச்சுதா?''

''ஜானகி....''

''ஆமாம்... ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி உங்க பாங்குக்கு வந்த யாரோ ஒருத்தர் மூணு பவுன் சங்கிலியைப் போட்டுட்டுப் போயிட்டாங்க. அது உங்க கண்ணிலே பட்டது. உடனே மனச்சாட்சிக்கு விரோதமில்லாமே அந்தச் சங்கிலியைக் கொண்டு போயி பாங்க் ஏஜண்டு கிட்டே கொடுத்திட்டீங்க...ரொம்பச் சரி. இப்ப உங்க பாங்க் நிர்வாகிகள், கூட்டம் நடந்துச்சே... அதிலே உங்களை மாதிரி நேர்மையாக நடந்த ஊழியர்களுக்கெல்லாம் மெடலும் சர்ட்டிபிகேட்டும் கொடுத்தாங்க. உங்களுக்கு ஏன் ஒன்றும் கொடுக்கவில்லை?''

''ஜானகி அதை நினைச்சுத்தான் நான் இப்படி இடிஞ்சு போயி உட்கார்ந்திருக்கேன். பாங்க் பெரிய அதிகாரி கிட்டே போய் விவரத்தைச் சொன்னேன். அந்த மாதிரி பவுன் சங்கிலி எதையும் உங்க பாங்க் ஏஜெண்ட் தலைமை ஆபீசிலே கொடுக்கலியேப்பான்னு சொல்லிட்டாரு...''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன... நான் எங்க பாங்க் ஏஜெண்டு கிட்டப் போயி கேட்டேன். அதுக்கு அவரு என்ன பதில் சொன்னாரு தெரியுமா? விஷயத்தை யார் கிட்டேயும் சொல்லாதே.... உனக்கு ஆயிரம் ரூபாய் தர்றேன்னு சொல்றாரு....''

ஜானகி மௌனமாகி நின்றாள்.

''ம்... நீங்க என்ன பண்ணப் போறதா உத்தேசம்?''

''நான் என்ன ஜானகி செய்ய முடியும்? எனக்குத் தெரிஞ்சவழிநேர்மைஒண்ணுதான். தலைமை பாங்க் அதிகாரிக்கு நடந்தது முழுவதையும் விவரமா எழுதிட்டேன்.''

''ஹூம்... சரியாப் போச்சு. அதை வச்சு உங்க பாங்க் ஏஜண்டை அவங்கதான் என்ன பண்ண முடியும்னு நினைக்கிறீங்க? நீங்க நகையை அவர் கிட்டக் கொடுத்ததுக்கு என்ன ஆதாரம்? ஏதாச்சும் ரசீது... இல்லே... கடிதாசி ஏதாச்சும் எழுதி வாங்கி வச்சிருக்கீங்களா?''

''இல்லியே... ஜானகி... அப்புறம் என்ன செய்யலாம்னு சொல்றே?'' – பரிதாபமாகக் கேட்டான் சுந்தரம்.

''இந்த பாருங்க. நம்ம மூத்த பொண்ணு மாலாவுக்கு எப்படியாவது இந்தத் தையிலே கல்யாணத்தை முடிச்சுடணும். நம்ம பொன்னுச்சாமி நல்ல வரன் இருக்குன்னு வந்து சொல்றாரு. ஏழைக்கேற்ற இடம். பையனுக்கு வாத்தியார் வேலையாம். மூணு பவுன் சங்கிலி போட்டுக் கல்யாணச் செலவுக்காகக் கையிலே ஆயிரம் ரூபாய் கொடுத்தாப் போதுமாம். இந்த மாதிரி சுளுவான இடம் நமக்குக் கிடைக்கவே கிடைக்காது. பேசாம அந்த ஆயிரம் ரூபாயைப் போய் வாங்கிட்டு வந்துடுங்க.''

ஜானகியை ஒரு மாதிரியாகப் பார்த்தான் சுந்தரம்.

''சும்மா பார்க்காதீங்க. ஒழுங்கா பிழைக்கிற வழியைப் பாருங்க.. எல்லாத்துக்கும் மனச் சாட்சி மனச் சாட்சின்னு சொல்லிக்கிட்டே இருந்தீங்கன்னு மடிஞ்சு போறதைத் தவிர வேறே வழியே இல்லே...ஆமாம்.''

ஜானகி போய்விட்டாள்.

ஏஜெண்ட் வீட்டினுள் நுழைந்த சுந்தரத்துக்கு உள்ளே நடந்த உரையாடலில் பவுன் சங்கிலி என்ற வார்த்தைப் பிரயோகப் படுத்தப்பட்டது அதிர்ச்சியைத் தரவே கதவருகில் நின்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

சோபாவில் ஆத்திரம் கொப்பளிக்க உட்கார்ந்திருந்தார் ஏஜெண்ட்.

எதிரில் பட்டுப் புடவை பளபளக்க நின்று கொண்டிருந்தாள் அவர் மனைவி.

அவளுக்குப் பக்கத்தில் தாய்க் கோழியின் சிறகில் பதுங்கிக் கிடக்கும் குஞ்சைப் போல் நின்று கொண்டிருந்தாள் அவர்களின் ஒரே மகள். வயது பத்து இருக்கும்.

''அப்பவே சொன்னேன். கோவிலுக்குப் போறப்பபவுன் சங்கிலியைப்போட்டுக்கிட்டுப் போக வேண்டாம்னு. கேட்டால்தானே... இப்ப மூணு பவுன் சங்கிலியைத் தொலைச்சுட்டு வந்து நிக்கறீங்களே... ஹூம்... அந்தச் சங்கிலி யாருடையதோ.. பாவம், பியூன் சுந்தரம் கண்டெடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். நான் அவனை ஏமாற்றி





ரெண்டு வருஷமா என் பெட்டியிலே வச்சிருந்தேன். இன்னைக்கு அதை எடுத்து உன் அருமைப் பொண்ணோட கழுத்திலே போட்டுக் கோவிலுக்கு அழைச்சுக்கிட்டுப் போனே. சரி, போனியே... ஒழுங்கா சாமியைக் கும்பிட்டுட்டுத் திரும்பி வர வேண்டியது தானே? அசதியா இருந்துச்சு கோவில் பிராகாரத்துக் கூடத்திலே படுத்துக்கிடந்தேன்னு சொல்றே!

எவன் கழட்டிக்கிட்டுப் போனுனே... இல்லே கழண்டு கீழே விழுந்து யார் கையிலாவது அகப்பட்டதோ... நான் என்னத்தைக் கண்டேன். போச்சு... கிட்டத்தட்ட நாலாயிரம் ரூபாய்...''

ஒரு வகையில் சுந்தரத்தின் நெஞ்சில் நிம்மதி பிறந்தது.

ஓசைப்படாமல் வந்த வழியே திரும்பினுன்.

அன்று இரவு நிம்மதியாய்த் தூங்கினுன்.

காலையில் மாலாவின் திருமணம் சம்பந்தமாகப் பேசப் பொன்னுசாமி வந்திருந்தார்.

''யப்பா சுந்தரம்... உன்னுேட நேர்மை உன்னுேடயே இருக்கட்டும். நான் சொல்றதைக் கேளு. உன் பொண்ணு மூக்கும் முழியுமா பார்க்க லட்சணமா இருக்கிறதினுலேதான் அந்த வாத்தியார் வீட்டிலே உன்கிட்டச் சம்பந்தம் பண்ணிக்க ஆசைப் படருங்க. மொதல்ல ஆயிரம் ரூபாய் பணம் இருந்தாக்கொடுப்பா. நான் அதைக்கொண்டு போய்க் கொடுத்துட்டுக் கல்யாணத்துக்குத் தேதி குறிச்சுட்டு வந்துடறேன். அப்புறம் எப்படியாவது கல்யாணத்துக்குள்ள மூணு பவுன் சங்கிலி செஞ்சு போட்டுடலாம்... சொல்றதைக் கேளுப்பா...''

''பொன்னுசாமி அண்ணே... ஒரு ந இடத்திலே ஆயிரம் ரூபாய் கடன் ே டிருக்கேன். அநேகமாப் பணம் கெை சுடும். இன்னைக்கே வேணும்னுலும் வ கிட்டு வந்து கொடுத்திடறேன். ஆனு கிலிக்கு நான் எங்கே போவேன்?'' என் சொல்லிவிட்டுக் கைகளைப் பிசைந்தான் தரம்.

''இதோ பாருங்க பொன்னுசா அண்ணே... என் தலையை அடகு வச்சாவ கல்யாணத்துக்கு முந்தி அந்த மூணு பவு சங்கிலியை நான் கொண்டு வந்து என் மக கழுத்திலே போட்டுடறேன்... நீங்க தய செய்து இந்தக் கல்யாணத்தைப் பே முடிச்சுடுங்க'' என்று துடித்தாள் ஜானகி.


கல்யாண நாள். புரோகிதர் திருமந்திர ஓதிக் கொண்டிருந்தார்.

ஓமகுண்டத்தில் புகை கிளம்பி மாப்பி ளையின் கண்களில் கண்ணீரைவரவழைத்தது

மாப்பிள்ளையின் அப்பா சங்கரலிங்க ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தார்

ஜானகி தூண் மறைவில் நின்று நெ சைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

சுந்தரம் ஒரு மூலையில் உட்கார்ந்து ஏ தான் பெண்ணைப் பெற்றுேமோ என்பதை நினைத்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தான்



● வாழ்க்கைத் தொகுதியில்
நடக்கும்
வாக்குப் பதிவில்
வாய்மையே ஜாமீன் இழக்கிறது
ஒன்றைப் பத்தாக்கும்
உற்பத்தித் திறன்
சத்தியத்திடம்
சத்தியமாய் இல்லை.

● வாழ்க்கைக் கிரிக்கெட்டில்
பொய்மை குவிக்கும்
ஓட்டங்களைக்
கணக்கிட்டால்
கவாஸ்கரைப் பற்றிய — நமது
கர்வம்
கரைந்து போய்விடும்.
ஒவ்வொரு முறையும்
ரணம்பட்ட உடம்போடு
வாய்மையே
'ரன்அவுட்' ஆகிறது.

● சமத்துவம்
சுதந்திரம்
சகோதரத்துவம் — என்று
மூன்று கோல்களை
ஊன்றிச்
சத்திய மட்டையைக்
கரத்தில் தூக்குவோம்
இனி
ஆட்டம் இழப்பது
பொய்ம்மையே ஆகட்டும்.

● வாய்மை,
மனிதனின்
இறுதிநாள் மரியாதைக்கு
ஆள் திரட்டினுல்
போதாது!
வாழும்போது
உலையில் அரிசிபோட — அது
உத்தரவாதம்
தரவேண்டும்.

● உண்மைக்காக நாம்
உயிர்விட வேண்டாம்...
வாழ்வில்
உபயோகப்படுத்துவோம்.
ஏனெனில்
உண்மைக்காக உயிர்விட்டவர்
கதைகளைச்
சொல்லிச் சொல்லி....
பலர்
உயிர்வாழ்வதற்காகப்
பொய்யின் பின்னுல்
ஓடிப்போனுர்கள்.
இதுவரை
பொய்யின் பிரசுரங்களாக
இருந்துவிட்டோம்....
இனி,
சத்தியம் நம்மை
அச்சுக் கோக்கட்டும்.

-தமிழன்பன்



திரு சி. ஆர். எம். சுவாமி, (Media Director, Contour Advertising Private Limited, Bombay) அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி **மைதிலிக்கும்**, திரு டி. எஸ். ஸ்ரீனிவாசன் (Air India, Bombay) அவர்களின் குமாரன் சிரஞ்சீவி **ரவிசங்கருக்கும்** பம்பாயில் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்.



மஹாகவி சுப்ரமண்ய பாரதியார் கொள்ளுப் பேரனும், திருமதி லலிதாபாரதி — வெங்கடசுப்ரமண்யத்தின் புதல்வனுமாகிய சிரஞ்சீவி **V. அர்ஜுன்** M.Sc.,**க்கும்**, Shining Stars Society திரு நாராயண அய்யரின் பேத்தியும், திருமதி ஸரஸ்வதி — சக்கரவர்த்தியின் புதல்வியுமாகிய சௌபாக்கியவதி **விலாசினி** B.A.,க்கும் சென்னை தி. நகரிலுள்ள பாலாஜீ கல்யாண மண்டபத்தில் திருமணம் கடந்த மே மாதம் 15-ந் தேதி விமரிசையாய் நடைபெற்றது.



கத்தி, துப்பாக்கி, அறுவாள் போன்ற கருவிகளைக் கொண்டு பயமுறுத்துவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் லக்னோவில், உத்திரப் பிரதேச போக்குவரத்தில் பணிபுரியும் தேசிராம் என்ற டிரைவர் ஒருவர் கட்டுவிரியன் பாம்பைத் தம் சட்டைக்குள் எப்போதும் வைத்துக்கொண்டு பயமுறுத்துவாராம். பலமுறை ஜெயிலுக்குப் போய் வந்த இவரை அரசாங்கம் வேலையிலிருந்து நீக்கம் செய்து விட்டது. எப்படியோ அங்குள்ள கோயில் ஒன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டார். இதைக் கண்ட தலைமை அதிகாரி ஒருவர் அவருடன் சண்டை போட்டு வெளியேறும்படி கூறினர். வந்ததே கோபம் தேசிராமிற்கு. சட்டைக்குள் வைத்திருந்த 5 அடி கட்டு விரியனை எடுத்து விட்டார். பலன் அதிகாரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தேசிராம் மறுபடியும் ஜெயிலுக்குப் போனர்!

இந்தியா டுடே

— கலாமூர்த்தி

சுந்தரத்தின் தோள்களில் கை வைத்து அழுத்தினர் பெரியவர் ஒருவர்.

''வணக்கமுங்க...''

''எனக்கு வணக்கம் சொல்றது இருக்கட்டும். கல்யாணத்திலே என்ன குழப்பம்?'' என்று கேட்டார் அவர்.

அவர் பெயர் நல்லசிவம்.

கொஞ்சம் வசதியானவர். நல்ல குணம் படைத்தவர். வியாபாரம் செய்கிருர். அவரிடம்தான் சுந்தரம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தான்.

இதற்குள் பொன்னுசாமி ஓடிவந்து விவரம் முழுவதையும் நல்லசிவத்திடம் சொல்லி முடித்தார்.

ஜானகியும் ஓடிவந்தாள்.

''காலமெல்லாம் நேர்மை நேர்மைன்னு பினைத்தறீங்களே... அன்னைக்கே நான் சொன்னேன். யாரோ பாங்கிலே தொலைச்சுட்டுப் போன மூணு பவுன் சங்கியை எடுத்து நல்ல பேரு கெடைக்கும்னு பாங்க் ஏஜண்டுக்கிட்டே கொண்டு போய்க் கொடுத்தீங்க. அதை அவர் அபேஸ் பண்ணிட்டாரு...''

சுந்தரம் இடைமறித்தான். ''ஜானகி! அவசரப்படாதே... அந்தச் சங்கிலியை அவரும் அனுபவிக்கவில்லை. அவர் மகள் கழுத்திலே போட்டுக்கிட்டுப் போன வாரம் வெள்ளிக் கிழமை கோயிலுக்குப் போயிருக்கா... அதை எவனே அபேஸ் பண்ணிக்கிட்டுப் போயிட்டான்...''

''எந்தக் கோயில்லே?'' என்று இடைமறித்துக் கேட்டார் நல்லசிவம்.

''அங்காள பரமேஸ்வரி கோயில்லதான்... நம்ம கிழத் தெருவிலே இருக்குல்ல...''

''ஓ...'' என்ற நல்லசிவம், தமது மகளின் கழுத்தில் கிடந்த சங்கிலியை எடுத்துக் காட்டி, ''இதுதானு பாருங்க'' என்ருர்.

''ஆமாம்...இதே சங்கிலிதான்... இந்தச் சங்கிலி உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?'' என்று குழப்பத்துடன் கேட்டான் சுந்தரம்.

''அதே கோயிலுக்கு என் மனைவியும் மகளும் போயிருந்தாங்க. பிராகாரக் கூடத்திலே கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கியிருக்காங்க. எழுந்து பார்த்தா இந்தச் சங்கிலி கீழே கிடந்திருக்கு....''

''அப்படியா?''

''அதுமட்டுமில்லே சுந்தரம்...தெய்வத்தின் செயலை என்னன்னுதான் சொல்றது? ரெண்டு வருஷத்துக்கு முன்னடி வியாபாரத்திலே ஏற்பட்ட ஒரு நெருக்கடிக்காகக் கொஞ்சம் நகைகளை நீ வேலை பார்க்கிற பாங்கிலே அடமானம் வைக்கறதுக்காக எடுத்து வந்தேன். எப்படித்தான் தவறிப் போச்சோ தெரியலே...இந்த மூணுபவுன் சங்கிலி தவறிட்டுது. அது பாங்க் கட்டிடத்துக்குள்ளேதான் விழுந்திருச்சுன்னு எனக்கு இப்பத்தான் தெரியுது. தேடிப் பார்த்துட்டுப் பேசாம இருந்துட்டேன். இப்ப அது தானுகவே கெடைச்சுடுத்து. அதிலே என் மகள் பேரு கூட இருக்கே பாரு... மாலான்னு இருக்கும்.''

அப்பொழுதுதான் சுந்தரம் அதைக் கவனித்தான். ஆங்கிலத்தில் மாலா என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்தது.

''சரி. என் பொண்ணுக்கு வேறே சங்கிலி இருக்கு. உன் பொண்ணோட பேரும் மாலா தானே... சரி மிஸ்டர் பொன்னுசாமி... கல்யாணம் நடக்கட்டும்'' என்றவாறே அந்த மூணு பவுன் சங்கிலியைப் பொன்னுசாமியின் கையில் கொடுத்தார் நல்லசிவம்.

''வேணுமுங்க... அது முறையில்லீங்க...'' என்று சொன்னன் சுந்தரம்.

''சுந்தரம்...மாலா உன் பொண்ணு மட்டுமில்லே... என் பொண்ணும் கூட! மேலும் திருமணப் பரிசாக நான் கொடுக்கிறதை மறுக்க உனக்கு உரிமை கிடையாது'' என்று கண்டிப்புடன் சொன்னர் நல்லசிவம்.

கெட்டி மேளம் முழங்கியது.

சுந்தரத்தின் மகள் மாலாவின் கழுத்தில் மாப்பிள்ளை தாலியைக் கட்டினன்.

சுந்தரம் மானசீகமாக அங்காள பரமேஸ்வரிக்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தான்!

அன்றைக்கு வெளியே இருந்த சிமெண்ட் ...டில் உட்கார்ந்து, சிகரெட் புகைத்தபடி ...ட்டின் வாயில் விழ ஆரம்பித்துவிட்ட ...நச் சோலையூர் கிராமத்தை வேடிக்கை ...த்துக் கொண்டிருந்தேன்.

...ராமத்து ஜனங்கள் இரவு நேர உணவை ...த்துக்கொண்டு சாரி சாரியாகக் கிழக்குப் ...மாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள்.

...ான் அந்தக் கிராமத்து பஞ்சாயத்து ...யன் ஆரம்பப் பள்ளியில் ஓர் ஆசிரியராகப் ...ியேற்று இன்றைக்குச் சரியாய்ப் பத்து ...தான் ஆகியிருந்தது. எங்கே போகி...கள் இவர்கள்?

...ண்டாசைக் கட்டிக் கொண்டு கெச்ச...ப் போய்க் கொண்டிருந்த ஒருத்தனை ...த்தினேன். ''என்ன விஷயம்? எல்லா ... எங்கே போறீங்க?''

''அதுங்களா...? பண்ணையார் வூட்ல ...து நாளைக்கு முன்னடி ஏழு பவுனு நெக் ...சு திருட்டுப் போயிடுச்சாம். அத எடுத்த ... யார்னு கண்டு பிடிக்கிறதுக்கோசரம் ...சாயத்துக்கூட்டியிருக்காங்க... அங்கதான் ...ரோம்...''

அவன் பாமரத்தனமாய்ச் சொல்லிக் ...ாண்டே நடந்தான்.

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

நகை காணமல் போனல் பொலீசுக்கல் ...ா போக வேண்டும்? பஞ்சாயத்தைக் ...ட்டிப் பேசினல் நகை கிடைத்து விடுமா?

அரச மரத்தடியில் இருந்த மேடையின் ...ன்பு அந்தக் கிராமமே உட்கார்ந்திருந்தது.

நான் கூட்டத்தை விட்டுச் சற்று ஒதுங்கி ஓர் ஓரமாய் நின்று கொண்டேன்.

கனத்த மௌனம் எங்கும் பரவிக் கிடக்க மேடையின் மீது நடு நாயகமாய் உட்கார்ந்திருந்த ஊர்ப் பெரியவர் தீர்த்தகிரி கவுண்டர் தம் நரையோடிய புஸ்தி மீசையை இடது கை விரல்களால் ஒதுக்கிக்கொண்டே வெண்கலக் குரலில் பேச ஆரம்பித்தார்.

''பண்ணையார் வூட்டு நகை காணமப் போயி இன்னியோட நாள் பத்தாவுது... முந்தாநாளு கூட்டம் போட்டுப் பேசினப்ப 'எடுத்தவங்க யாரா யிருந்தாலும் ஊர்க் கோடியில் இருக்கிற பிடாரி அம்மன் கோயில் உண்டியல்ல நகையைப் போட்டுடுங்க... இல்லேன்னு 'மௌளகாய்ச் சாத்து' சாத்த வேண்டியிருக்கும்னு சொன்னேன். — அப்படி நான் சொன்னபின்னுடியும் உண்டியல்ல இந்த நிமிஷம் வரைக்கும் நகை விழல்ல... அதனல 'மௌளகாய்ச் சாத்து' நடத்தறதைத் தவிர வேற வழியில்லே...!''

கூட்டத்தில் கசமுசவென்று ஒழுங்கற்ற சத்தம் ஆரம்பித்தது.

'அதென்ன மௌளகாச் சாத்து?'

புரியாமல் குழம்பிப் போய் அருகில் நின்றிருந்த ஒரு பெரியவரிடம் கேட்டேன்.

அவர் சிரித்தார் மெல்ல. ''வாத்தியார் தம்பி கிராமத்துக்குப் புதுசு. அதனலத் தான் மௌளகாய்ச் சாத்துன்ன என்னன்னு தெரியலே. சொல்றேன் கேட்டுக்க தம்பி! மௌளகாய்ச் சாத்துன்ன ரெண்டு படி பச்சை மௌளகாயை விழுதாட்டம் அரைச்சு அதை ஊர்க் கோடியில இருக்கிற பிடாரி அம்மனுக்குச்சொதசொதன்னு பூசிட்டு வந்துடுவாங்க. பூசிட்டு வந்த பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ளாற நகையைத் திருடினவனுக்கு உடம்பெல்லாம் தீ வைச்ச மாதிரி 'திகு திகு'ன்னு எரியும். கீழே விளுந்து புரளுவான். அப்ப நகையை எடுத்தவன் அவன் தான்னு ஊர்ஜிதமாயிடும்...''

அந்தப் பெரியவர் சொல்லச் சொல்ல 'இப்படியும் நடக்குமா?' என்கிற ஆச்சரியம் என்னுள் பெருகியது.

மௌளகாய்ச் சாத்து

ராஜேஷ் குமார்



மறுநாள் காலை ஏழு மணி.

தெருவில் உடுக்கை அடிக்கப்படும் சத்தம் கேட்டு வெளியே வந்தேன்.

பச்சைப்பசேல் என்ற மிளகாயை முறத்தில் நிரப்பிக் கொண்டு பண்ணையார் வீட்டு ஆள் ஒருவன் தலையின் மேல் வைத்துக் கொண்டு நடக்க — பின்னே பண்ணையாரும் ஊர்ப் பெரியவரும் உதிரியாகச் சில ஜனங்களும் நடந்தார்கள்.

நானும் பின்தொடர்ந்தேன்.

அரை மணி நேரத்துக்குப் பிறகு—

வேலிக்காத்தான் முட்செடிகள் சுற்றிலும் பரவி நிற்க — அந்தப் பிடாரியம்மன் கோயிலுக்கு முன்பாக எல்லோரும் குழுமினர்கள்.

''உம்... சாத்தை ஆரம்பியுங்க!'' — பண்ணையார் சொல்ல

கோயிலின் முன்புறமாய் இருந்த நான்கடி சதுர அம்மிக் கல்லில் முறத்திலிருந்த மிளகாய் பூராவும் கொட்டப்பட்டது. நான்கு பண்ணைப் பெண்கள் அம்மிக் கல்லில் குழவியைப் பக்கத்துக்கு இருவராய்ப் பிடித்துக்கொண்டு தண்ணீர் ஊற்றி அரைக்க ஆரம்பித்தனர்.

இருபதே நிமிடம்!

மிளகாய் வெண்ணெய்ப் பதத்துக்கு மாறியது. மிளகாயின் காரமான நெடி காற்றில் பரவி அங்கிருந்தோரின் மூக்கில் சுறுசுறு வென்று புகுந்தது.

''உம்... சாத்துங்க அம்மனுக்கு!'' என்று ஊர்ப் பெரியவர் கட்டளையிட்டார்.

பிடாரி அம்மனின் சிலைமேல் இருந்த அந்தத் துணியை அகற்றிவிட்டு மிளகாய் விழுதைக் கை நிறைய எடுத்துச்சாத்த ஆரம்பித்தனர். சில நிமிஷங்களில் அம்மனின் கரிய சிலை பச்சை நிறத்துக்கு மாறியது.

பூசாரி விபூதித் தட்டில் கற்பூரக் கட்டியை ஏற்றி ஆராதித்தார்.

திருடன் நெ. 1: நேற்று நாம ரெண்டு லட்ச ரூபாயில்ல கொள்ளை யடிச்சுக்கிட்டு வந்தோம். பேப்பர்லே ஒரு லட்சந்தானே திருட்டு போச்சுன்னு போட்டிருக்காங்க?

திருடன் நெ. 2: மிச்சமெல்லாம் கறுப்புப்பண மாயிருந்திருக்கும்!

– கல்கத்தா 'மிக்கி'



''அம்மா! தாயே... உனக்குச் சாத்... யிருக்கிற இந்த மொளகாயோட கா... நெருப்பு நகையை எடுத்தவனைச் சுடட்டும். பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ளார அவ... அடையாளம் காட்டிக் குடும்மா...!''

பார்த்துக் கொண்டிருந்த எனக்குச் சிரிப்... பொங்கியது.

கிளம்பினேன்.

கையில் உள்ள கடிகாரத்தைப் பார்... தேன்.

'மொளகாய்ச் சாத்து' முடிந்து இந்... நிமிஷத்தோடு பன்னிரண்டு மணி நேர... தாண்டி விட்டது. கிராமத்தில் யாருக்கு... உடம்பு எரிச்சல் எடுக்கவில்லை.

கிராமத்தின் புராதன கடைத் தெரு... தேரடி மைதானம், சந்து பொந்துகளி... ஜனங்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிரு... தார்கள்.

''இத்தினி வருஷமா தவறாமே அடை... யாளம் காட்டி அற்புதம் செஞ்ச அந்த... பிடாரி அம்மன் இன்னிக்கு ஊமையாயி... டாளே!''

சிகரெட்டைப் புகைத்தபடி தள்ளி நின்... றிருந்த நான் மனசுக்குள் சிரித்துக்கொண்... டேன். 'நகையை எடுத்தவன் இந்நேர... அதை வித்து வாய்க்குப் பிடிச்சதைச் சா... பிட்டு ஏதாச்சும் ஒரு தியேட்டர்ல அதுவு... ஏ. ஸி. தியேட்டர்ல உட்கார்ந்துட்டுப் பட... பார்த்துட்டு இருப்பான். இந்த முட்டா... ஜனங்க போலீசுக்குப் போய்த் தகவல் சொ... லாம....'

நான் இப்படி யோசித்துக் கொண்டிருந்... அதே நேரம்...

பண்ணையாரின் வில் வண்டி வேகமா... வந்து அரச மரத்தடியில் நின்றது.

பண்ணையார் முகமெல்லாம் பொங்கி... சிரிப்போடும், உடம்பெல்லாம் அப்பி... கொண்ட , ஆர்வத்தோடும் ஊர்ப் பெரி... வரை அணுகினர்.

''கவுண்டரே! நகை கிடைச்சுட்டது!''

தீர்த்தகிரிக் கவுண்டர் விசுக்கென்று த... உயர்த்தினர்.

''கிடைச்சுட்டதா? யார் எடுத்திரு... தாங்க?''

பண்ணையார் சட்டென்று தலையை... குனிந்து கொண்டார்.

''யாரும் எடுக்கல்ல கவுண்டரே! நகை... யைக் கழற்றி பீரோவோட முதல் தட்டி... வைக்கறதுக்குப் பதிலா ரெண்டாவது தட்... டில இருந்த வெள்ளிச் சொம்பிலே போட்... டுட்டா எம் மக. நகையைத் தேடினவங்... யாருமே சொம்புக்குள்ளார பாக்கலே. வீ... ஊர் பூரா அமளி ஆயிடுச்சு...''

கூடியிருந்த கூட்டம் நிம்மதிப் பெருமூச்... விட்டபடியே கலைய ஆரம்பிக்க—


தீர்த்தகிரி கவுண்டர் தம் முகத்தில் பெரு... மிதம் மின்னச் சொல்லிக் கொண்டிருந்தார்...

''அதானே பார்த்தேன்... ஊர்ல யாருமே... திருடாதபோது எவனுக்கு உடம்பு எரியும்... அம்மன் ஊமையாய் இருந்ததுக்குக் காரண... இப்பல்ல புரியுது...''

நான் திகைத்துப் போய் நின்றிருந்தேன்...

பழக்கம்

ஜ. வேதா



இது என்ன வினோதப் பழக்கமோ? அவளுக்கே புரியவில்லை. அதென்னமோ தெரியவில்லை. அவளும் கூடாது கூடாது என்றுதான் பார்க்கிறாள். நிறுத்த முடியும் என்று தோன்றவில்லை. வீக்னஸ் என்றுகூடச் சொல்லலாம்.

''ஏம்மா... இப்போ அரிசியும் உளுந்தும் கொண்டு வந்தால் அரைச்சுத் தருவீங்களா?''

கவனத்தைத் திருப்பியது அந்த இளம் குரல்.

''கொண்டு வாங்களேன். அரைச்சுத் தரேன்'' இயந்திரத்தனமாக வந்தது பதில். ''ஒரு கிலோவுக்குத் தொண்ணூறு பைசா. ஒரு படிக்கு ஒண்ணு முப்பது. இட்லிக்கா தோசைக்கான்னு சொல்லிட்டீங்கன்னா அதுக்குத் தகுந்த மாதிரி அரைச்சுத் தருவேன்.''

அமிர்தம் போர்டு போடாமல் பிஸினஸ் செய்து கொழிப்பவள். வீட்டு ஹாலிலேயே வெட் கிரைண்டர் போட்டு அக்கம் பக்கம் தெரிந்தவர் தெரியாதவர்க்கெல்லாம் அரைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் வியாபாரம் சூடு பிடித்தது.

வருகிறவர்களிடம் சிரித்த முகத்துடன் பழகி, அவர்களைப் பர்மனென்ட் கஸ்டமர் ஆக்கிக் கொண்டு விடுவாள்.

எல்லாம் சரிதான். ஆனால் அந்த ஒரு வீக்னஸ் மட்டும்தான் அவளுக்கே புரியாமல் அவளுக்குள் புகுந்து கொண்டு விட்டது. சுருங்கச் சொன்னால் அதீதக் கற்பனை.

மாவரைக்க வரும் பெண்களிடம் கலகலப்பாகப் பேச வேண்டியதுதான். அதற்காக? திடீரென்று தன் கதையைச் சொல்வதாக ஆரம்பிப்பாள். சும்மா இஷ்டத்துக்கு வாய்க்கு வந்த கற்பனையெல்லாம் சரளமாய்ப் புகுந்து விளையாடும். வருகிறவர்களுக்குத் தன் மேல் முழுப் பரிதாபம் ஏற்பட்டுவிட வேண்டும். அத்தனை உருக்கமாய்ச் சரடு விடுவாள். அரை சதவீதம் கூட உண்மையைத் தப்பித் தவறியும் கலந்து விட மாட்டாள்!

கொஞ்ச நேரம் முன்னால் விசாரித்துக் கொண்டு போன பெண் பெரிய பாத்திரங்களில் ஊறவைத்த சமாசாரங்களைக் கஷ்டப் பட்டுச் சுமந்து வந்தாள்.

''இருந்து அரைச்சு வாங்கிட்டுப் போறீங்களா?... வெச்சுட்டுப் போய் அப்புறம் வந்து எடுத்துக்கிறீங்களா?''

''இருந்தே வாங்கிப் போறேன்... அவசரம் இல்லை...'' நீளமாய் அரக்கு பார்டர் சேலை அணிந்து கொண்டிருந்த அந்தப் பெண் பெஞ்சின் மேல் உட்கார்ந்தாள்.

உளுந்தை நிதானமாய் எடுத்துக் கிரைண்டரில் போட்டவாறு அந்தப் பெண்ணைப் பார்த்தாள் அமிர்தம். சிறு வயசுதான். இருபதைத் தாண்டியிருக்க மாட்டாள்.



எழுதுவது யார்?
பரிசு ரூ 500/-

கல்கி ஆகஸ்டு 2 ஆண்டுமலர், அதிக பக்கங்களுடன், தமிழ், பேசும்படத்தின் பொன்விழா ஆண்டினையொட்டி சினிமா சிறப்பிதழ் என மலர்கிறது.

இந்த மலருக்கென திரை உலக பிரபலஸ்தர் ஒருவர் முழுநீள நாவல் எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் யார்? கீழே உள்ள கட்டத்தில் எழுதி இந்தப் பக்கத்தை உறையிலிட்டுத் தபாலில் அனுப்பவும்.

கல்கி சினிமா சிறப்பிதழுக்கு முழுநீள நாவல் எழுதிக் கொண்டிருப்பவர் :

என் பெயர், விலாசம் : ____________________

____


____

____

____

கையெழுத்து ____________________

சரியாக ஊகிப்பவருக்கு ரூ 500/- பரிசு. ஒருவருக்குமேல் சரியாக ஊகித்தால் பரிசுத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும். உறையின் மேல் "எழுதுவது யார்?" என்று குறிப்பிடவும். கடிதப் போக்குவரத்து கிடையாது. முடிவு தேதி ஜூலை 8.



கொள்ளை அழகு. கழுத்தில் அதிநாகரிகமாக மெல்ல்...ல்...ல்...லிய சங்கிலி தொங்கியது. பத்துப் பிடி!

"நீங்க எங்கே இருக்கீங்க?" சாதாரணமாய்ப் பேச்சை ஆரம்பித்தாள்.

"போன வாரம்தான் – பக்கத்துத் தெருவில் குடிவந்தோம்." – சிக்கனப் பதில்.

"உன் பேர் என்னம்மா?"

"வனிதா."

"படிக்கிறியா?"

"பி.ஏ. முடிச்சுட்டேன்."

உளுந்து பாதியாகி – காலாகி – அரைக்காலாகிப் பொடிந்து மசிய ஆரம்பித்தது. கிரைண்டரின் சீரான சப்தத்தில் ஒரு ரிதம் இருந்த மாதிரிப் பட்டது.

"இது முன்னாடி எங்கே இருந்தீங்க?"

"திருச்சியில. சில துக்கங்கள் நடந்துடுத்து. அப்பா காலமாயிட்டார். அதற்கப்புறம் அங்கே இருக்கப் பிடிக்காமல் நாங்க இங்கே அண்ணா கூட வந்துட்டோம்." – இப்போதுதான் கொஞ்சம் அதிகம் பேசுகிறாள்.

"ஹூம். நான்கூடத் திருச்சியிலதான் இருந்தேன். உனக்காவது அப்பா இறந்தார்! எனக்குப் புருஷனே போயிட்டார். அப்புறம் பிழைக்க வழியில்லாமல் ரொம்பத் திண்டாடினேன். எத்தனை நாள் நகைகளை வித்துச் சாப்பிட முடியும்? அப்போ ஒரு மகானுபாவர் ரொம்ப உதவி பண்ணினார். கைக் காசைப் போட்டுக் கிரைண்டர் வாங்கிக் குடுத்தார். இத்தனைக்கும் என்கிட்ட எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்கலே!"

"அப்படியா? ரொம்ப உபகாரமாய் இருந்திருக்கும்" – ஏதோ பதில் சொல்ல வேண்டுமே என்று சொல்லி வைத்தாள் வனிதா. அமிர்தத்துக்குத் தாங்க முடியாத திருப்தி. இவளை ஒரு கற்பனைக் கதையில் மடக்கிப் போட்டாகி விட்டது. இனிமேல் இவளுக்குத் தன்மேல் ஒரு நிரந்தரப் பரிதாபம் ஏற்பட்டுவிடும்.

திரும்பிப் பார்த்தாள். செய்தித் தாள் படபடத்தது. நினைவாஞ்சலிப் பகுதியில் ஒரு கண்ணியமான மனிதரின் படம். கீழே அவரின் பெயரும் ஊரும்!

தன் கதைக்கு முத்தாய்ப்பு வைக்கக் கிடைத்தது ஒரு அருமையான பெயர்.

"இப்போதும் கூட திருச்சி மகாலிங்கம் ஐயர்னு யாராவது சொன்னால் போதும். அவர்கள் காலிலேயே விழுந்து வணங்கிடுவேன்" – திருச்சி ஸ்டேஷன் கூட எப்படி இருக்கும் என்று அவளுக்குத் தெரியாது!

சட்டென்று அந்தப் பெண் எழுந்தாள். தன் அப்பா யாரோ ஒரு பெண்மணிக்காகப் பணத்தைச் செலவழிக்கிறார் என்று அம்மா நம்பிக்கொண்டு அவர் இறந்த பிறகும்கூட அவர்மேல் அந்த ஆத்திரத்தை வைத்துக் கொண்டு.... ஓ! உடனே ஓடிப்போய் அம்மாவிடம் இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அப்பா பணம் செலவழிந்தது இத்தனை நல்ல காரணத்துக்காகவா?

மாவை மறந்து மடமடவென்று வாசலில் இறங்கி நடந்தாள் வனிதா. விழித்தாள் அமிர்தம்!


ஆறு ரூபா!
'வாழைப்பழம் வேண்டாம்னு சொல்ற குரங்கு உண்டா'ன்னு சொல்லுவாங்க...
பழக்கடைக்கு வந்தா போதும் 'பழ'மொழி உதிர்க்க ஆரம்பிச்சுடுவீங்களே!
ஃப்ரூட் மார்க்கெட்
CORPORATION FRUIT MARKET
அது பேருக்குத்தான்! பழ வியாபாரமெல்லாம் பக்கத்து சந்திலேதான்!
ஃப்ரூட் மார்க்கெட்டிலே பழக்கடையைத் தவிர பாக்கி எல்லா கடையும் இருக்கு!

பசுபதி கொஞ்சம் ஆயாசப்பட்டுக் கொண்டார்.

அரை மணி நேரம் முந்திக் கொண்டிருந்தால் தரிசனம் கிடைத்திருக்கும். வந்த வேலை முடிந்தது என்ற மலர்ச்சியில் இந்நேரம் அவர் மனம் பஞ்சு போல் லேசாகி மிதந்து கொண்டிருக்கும்.

''என்ன யோசிக்கிறீங்க? காலையிலே தரிசனத்தை முடிச்சுக்கிட்டுப் புறப்பட்டாப் போச்சு. எல்லாத்தையும் நான் கவனிச்சுக்க மாட்டேனா!'' என்றார் பூபாலன்.

அர்த்தச் செறிவுடன் சிரித்துக் கொண்டார் அவர். ரொம்ப ஆழமான ஆசாமி. இந்தப் பிராந்தியத்தில்பசுபதிக்கு ஆகவேண்டிய காரியங்களைமுடித்துக்கொடுப்பவர்பூபாலன்தான்.

பசுபதிக்குத் தனி ராசி. எந்தப் பக்கம் போனாலும் வி.ஐ.பி. மரியாதையுடன் வரவேற்கவும் உபசரிக்கவும் உல்லாசத்தில் மிதக்க விடவும் பிராந்தியப் பிரதிநிதிகள்... கொடுத்து வைத்தவர்!

''பூபால்... கொட்டு கொட்டுன்னு ஒரு ராத்திரியை எப்படிக் கழிக்கிறது இங்கே?''

பசுபதி கேட்டபோது பூபாலன் சிரித்துக்கொண்டார்.

ஜே.எம்.சாலி

''ஒரு ராத்திரி! இதுவா கஷ்டம்... நான் இல்லே?''

விரலை நொடித்தார், கவலையை விடுங்கள் என்கிற மாதிரி.

வருஷத்துக்கு இரண்டு தடவையாவது பசுபதி இங்கே வருவார். பெரும்பாலும் குடும்பத்துடன். அல்லது சகாக்களுடன். சில மணி நேரம் தங்கிவிட்டுக் காரிலேயே திரும்பிவிடுவார். அநேகமாகப் பகற்பொழுதில்... சித்ரான்னங்களுடன். கார் டிக்கியில் நிறைத்துக்கொண்டு. அம்மன் தரிசனத்துக்காக!

இன்றைக்கு எல்லாம் தலைகீழ்! வேறு வேலையாகப் பக்கத்து நகருக்கு வந்தவர், திரும்பும் வழியில் தரிசனத்துக்காக இங்கே வருவதில் தாமதம் ஏற்பட்டு விட்டது.

இந்த ஊர் அம்பாள் பசுபதியின் குடும்பத்துக்கு இஷ்ட தெய்வம். குடும்பத்தில் எது நடந்தாலும் இங்கே வந்து போவார்கள். வெகு காலமாக அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுதுகூட பசுபதி மனசில் ஒன்றை நினைத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார். குடும்பத்தில் நிகழவேண்டிய ஒரு மங்கல காரியம். பூபாலனிடம் சொல்லவில்லை இன்னும்.

''ஒண்ணும் யோசிக்காதீங்க... இது நல்ல ஓட்டல். பிடிக்கலேன்னா சொல்லுங்க. வேறே இடம் போட்டுடலாம்!'' என்றார் பூபாலன்.

''இதுவே நல்லாத்தான் இருக்கு பூபால். ஏ.ஸி. ரூம் போட்டிருக்கீங்க...நீங்க சொல்ற மாதிரி இந்த ஒரு ராத்திரிதானே... போதும் நீங்க அலட்டிக்காம இருந்தாச் சரிதான்.''

''ஆமாங்க. ரொம்ப சௌகரியமான இடம்... எல்லாத்துக்குமே!''

இப்பொழுது ஆரவாரம், சந்தடி, சல சலப்பு இல்லாமல் ஓர் இரவுப் பொழுது கிடைத்திருக்கிறது. ஒரு புத்தம் புதிய புஷ்பம் குழந்தையின் கையில் கிடைத்த மாதிரி. என்ன செய்யலாம்? எப்படி அனுபவிக்கலாம்?

இரவு ஒன்பது மணி.

சாப்பாடு கொண்டு வருவதாகச் சொன்னார் பூபாலன்.


எட்டு மணிக்கு ஒரு சின்ன தர்க்கம்.

இந்த ஓட்டலிலேயே சாப்பாடு எடுத்துக் கொள்ளலாம் என்றார் பசுபதி. பூபாலன் ஒத்துக்கொள்ளவில்லை.

''உங்களுக்குப் பிடிச்ச மாதிரி சமையல் செய்யச் சொல்லிவிட்டேன். ரெடியாகி யிருக்கும்...''

பசுபதியின் ரசனை அவருக்குத் தெரியும். வீட்டில் கிடைக்காதவற்றை வெளியிடங்களில் சாப்பிட்டுக் கொள்வார்.

பூபாலன் இத்தனை சீக்கிரம் ஏற்பாடு செய்திருப்பது பசுபதிக்கு வியப்பைத் தர



வில்லே. இவருடைய பிரதிநிதிகள் எல்லோருமே என் என்ருல் எண்ணெயுடன் நிற்பவர்கள்! அதிர்ஷ்டசாலி!

பூபாலன் புறப்பட்டுப் போவதற்கு முன் கடை பரப்பிவிட்டுப் போனுர். கண்ணுடி தம்ளர்... ஐஸ் கட்டிகள்...அரை பாட்டில்...

அந்தக் கட்டிகள் கரையக் கரையப் பசுபதி பருகப் பருக களைப்பு, அலுப்பு, சலிப்பு எல்லாமே விலகிப் போன மாதிரி உணர்ந்தார். பூபாலனைத் தட்டிக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது. இத்தனை இங்கிதமாக, நாகரிகமாக ஒரு விருந்தாளியை உபசரிக்கத் தெரிந்திருப்பதே ஒரு கலைதான். பூபாலனுக்கு அது கைவந்திருக்கிறது.

சாப்பாட்டு அடுக்கைத் திறந்தபோது அந்தப் பெருமையும் பூரிப்பும் இரட்டிப்பாகியது பசுபதிக்கு. குறைந்த இடைவெளியில் என்னவெல்லாம் செய்யச் சொல்லியிருக்கிருர், இந்தப் பூபாலன்!

பலத்த சாப்பாடு. அளவாகவே சாப்பிட்டார், ருசித்து... அனுபவித்து. வீட்டில் கிடைக்காதவை. மனைவியோ மற்றவர்களோ தீண்டாத ஐட்டங்கள்...

பத்து மணி.

பசுபதி சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டார்.

பூபாலன் இனி காலையில்தான் வரப் போகிருர். தரிசனம் முடிந்து ஊருக்குப் புறப்படு முன் அவரைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

இரவின் இனிய அமைதியில் இதயம் சிறகு விரித்துக் கொள்கிறது. மெது மெதுவாக உயர உயரப் பறப்பது போல் பசுபதிக்கு ஒரு சுகானுபவம்.

உறங்கிவிடலாமா? இல்லை. உறக்கம் வராது போல் இருக்கிறது. அதற்கும் ஒரு மருந்து உண்டு. மருந்தா, விருந்தா?

மனம் சிலிர்த்து எழுகிறது. என்ன தேவை இப்பொழுது?

கதவு சன்னமாகத் தட்டப்பட்டது.

''யார்...?'' என்ற கேள்வியுடன் கதவுப் பக்கம் குத்திட்டுப் பார்த்தார்.

பூவை ஒற்றி எடுக்கும் லாகவத்துடன் ஒரு கை கதவைத் தொட்டு விலக்குகிறது.

முதலில் கை... பிறகு முகம்! அழகிய முகம்....

''யாரு?''

தரிசனம்



புன்னகையுடன் எட்டிப் பார்த்தாள் கதவைத் தள்ளிய பெண்.

''யெஸ்... கம் இன்!''

உள்ளே வரச் சொன்னதும் வெகு நளினமாக அவள் வந்தாள்.

''நீ....!'' என்று நீட்டினுர்.

மறுபடியும் அவளிடம் புன்னகை. 'புரியவில்லையா?' என்று வினவுகிற மாதிரி.

புரிந்தது. பூபாலனின் வேலையா? சூசகமாக அவர் உணர்த்திவிட்டுத்தான் போயிருக்க வேண்டும். பசுபதி கவனிக்கவில்லைபோலிருக்கிறது.

இளம் பெண். அழகாக இருந்தாள். பறித்து முகரச் சொல்லும் ஒரு வண்ணப் பூவைப் போல.

''பூபாலன்...?'' — முணு முணுப்பாக அவளைக் கேட்டார். அவர்தான அனுப்பி வைத்தது என்ற அர்த்தத்தில்...

பதில், புன்முறுவல்.

அவளைப் போகச் சொல்வதா, இருக்கச் சொல்வதா?

ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார். சலனப்பட்டுப் போயிற்று மனம்.

இருபது இருக்குமா? மிஞ்சிப் போனுல் இருபத்திரண்டு அல்லது அதற்கு மேல் ஒன்று....

உட்காரச் சொல்லிவிட்டார்.

சமமாக, சரிக்குச் சரி, அவருக்குப் பக்கத்தில் அவள்....

''என்ன பேரு?''

''ராஜி....!''

''அதுதான மொத்தப் பேரும்?''

''இல்லே... ராஜேஸ்வரி. சுருக்கமா ராஜி!''

பார்த்தார் பொருத்தமான பெயர்.

''பாப்பு!''

தலையை அசைத்தாள், புன்சிரிப்புடன். படித்திருக்கிறாளாம்.

இதுமாதிரி சந்தர்ப்பங்களில் என்னென்ன கேட்கலாம், எவ்வளவு பேசலாம் என்பதெல்லாம் பசுபதிக்கு அத்துபடி. எதை விரும்புவார்கள், எதற்கு முகம் சுளிப்பார்கள் என்பது தெரியும்.

''சாப்பிடுறியா?''

வேண்டாம் என்றாள்.

''என். வி. சாப்பிடுவியா?''

பதில், நெகடிவ்.

''அப்போ லிக்கர்?''

அதே பதில்,

இதுவும் கிடையாதா? கேட்டால் ஊற்றித் தரவாவது தெரியுமா?

''ராஜி, அந்தக் கிளாஸில் கொஞ்சம்...''

அவள் புரிந்து கொண்டாள்.

''உனக்குஇஷ்டமில்லேன்னு வேண்டாம்.''

ராஜி பிகு பண்ணிக்கொள்ளவில்லை. ஊற்றியபடி, ''நீங்க இந்த ஊருக்குப்...''

''புதுசான்னு கேக்கறியா? அப்பப்ப வருவேன்.''

''பிசினஸ் டூர்... இல்லே?''


''இல்லே... தரிசனத்துக்காக!''

ராஜி வியப்போடு பார்த்தாள்.

''ஏன்? தரிசனத்துக்காக எவ்ளோ பேர் வரலியா இங்கே? அம்பாளைச் சேவிக்கிறதுக்காக அப்பப்போ வருவேனே!''

''இப்பவுமா?''

அவர் தலையாட்டினார். ராஜி புன்னகை செய்தாள். அது அவருக்குப் பிடித்தது. என்ன அழகான, இயல்பான புன்னகை!



ஒருத்தி மட்டும் கரையினிலே

சரிதாவை மட்டும் நம்பி எடுக்கப்பட்ட படம். அவரையும் சரியாக உபயோகிக்காமல் விட்டது டைரக்டரின் குற்றம் (1). படம் பூரா குழப்பத்துடன் கொண்டுபோய் என்ன செய்வது என்று தலையைப் பிய்த்துக் கொண்டு (நாமும்) கடைசியில் அபத்தமாக முடித்து வைத்தது குற்றம் (2).

ராஜேஷ் கரக்டரைச் சரியாக விவரிக்காமல் விட்டதும் கதையின் தடுமாட்டத்திற்குக் காரணம். அவ்வளவு பழகிய சுதாகருக்கு முகம் விகாரமான பின்னரும் ஒருவர்கூட ஆஸ்பத்திரி போய்ப் பார்க்காத மனிதாபிமானம் அற்ற மக்கள் தற்காலத்தில் சாத்திய மல்ல. திறமையைக் காட்டி நல்ல பெயர் வாங்க நல்ல சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. அதையும் கோட்டைவிடும் சாமர்த்தியம் சுதாகருக்குத்தான் வரும். என்றாலும் ஊரார் ஏசும்போது கொஞ்சம் பாவமாய்த்தான் உள்ளது. என்ன செய்ய; மனதில் பூகம்பம் வெடிப்பதை முகத்தில்சிறு பாவமாய்க் காட்டாமல் எரிமலை வெடிப்பதைக் காட்டும்போது சிரிக்குமளவுக்கு ரசிகர்களின் ரசனை வளர்ந்துள்ளதே. போதாக்குறைக்கு இடைவேளை வரை காதலனும் காதலியும் கண்ணாமூச்சி ஆடுவதில் செலவிட்ட பிறகு தான் கதை சூடுபிடிக்கிறது. அதற்குள் நமக்குச் சோர்ந்து விடுகிறது. சும்மா சொல்லக் கூடாது. ''பாரிஸ் கார்னருக்கு 9, 10, 11, 11-எ ஆகிய பஸ்ஸில் போகலாம். நான் என்னவோ 11 Aல போகத்தான் விரும்பறேன்.'' இது போல கைதட்டல் வாங்கும் பொருத்தமான வசனமும் உண்டு. அதே சமயம் கேலிக்கூத்தான வசனமும் உண்டு. கதை-வசனம் ... சக்கரவர்த்தி (வண்டிச் சக்கரம்)யின் நடிப்பு நிறைந்துள்ளது.

சரிதா நடிப்புக்கு	ரூ. 0–50
கங்கை அமரனுக்கு	ரூ. 0–40
ஆக மொத்தம்	0–90
கொடுக்கது	ரூ. 2–90
கிடைத்தது	ரூ. 0–90
தண்டம்	ரூ. 2–00

—நளினி சாஸ்திரி

''ராஜி, ஏன் சிரிக்கிறே?''

''சிரிக்கணும் போல இருந்தது... உங்க மலே பிரியம் வந்தாச்சு!''

''ஏன் அப்படி? என்ன விசேஷம்?''

பசுபதி நெருங்கி வந்தார்.

''அம்பாள் பக்தர்னு சொன்னீங்களே!''

''நீயும் அம்மன் பக்தையா?''

சிரித்தாள்.

''ராஜி, நீ ரொம்ப அழகா சிரிக்கிறே... அழகா.....''

பசுபதியின் மனத்தில் மகிழ்ச்சி முட்டுகிறது. ராஜேஸ்வரி அழகாக இருக்கிறாள். சாதுரியமாகப் பேசுகிறாள். ரசனைகளின் களஞ்சியமாக இருக்கிறாள்.... சராசரிப் பெண்ணாக இருக்க மாட்டாளோ!

இப்படி ஒருத்தியைப் பூபாலன் துணையாக அனுப்பியிருக்கிறாரே....

மானசீகமாகப் பூபாலனைத் தட்டிக் கொடுத்தார்.

''ராஜி....!'' – குரலில் மையல்.

''ராஜேஸ்வரின்னு....!''

''ஓ! அப்படிக் கூப்பிடச் சொல்றியா... சரி.... ராஜேஸ்வரி...!''

''இன்னொரு தரம்!''

''ராஜேஸ்வரி...ராஜேஸ்வரி!போதுமா?''

''நான் ஒண்ணு கேட்கட்டுமா?''

''கேளு ராஜேஸ்வரி!''

''அம்பாளைத் தரிசிக்க வந்திருக்கீங்க இல்லையா?''

''ஆமா ராஜேஸ்வரி!''

''மனசிலே ஒரு காரியத்தை நினைச்சுக்கிட்டுத்தானே?''

''ஆமா ராஜேஸ்வரி!''

''அதை நான் கேக்கப்படாது இல்லையா?''

''கேக்கலாம் ராஜேஸ்வரி... தெரிஞ்சுக்கலாம் ராஜேஸ்வரி!''

''அப்ப... சொல்லுங்க!''

''ராஜேஸ்வரி! என் பொண்ணுக்குக் கல்யாண ஏற்பாடு. அது நல்லபடியா நடக்க இந்த அம்பாளுடைய அநுக்கிரகம் வேணும் அதுக்காக....!''

''ரொம்ப சந்தோஷமா இருக்குங்க... உங்க பொண்ணுக்கு என் வயசு இருக்குமா?'' –அவள் கேட்டாள்.

ராஜேஸ்வரியை நடுக்கத்துடன்பார்த்தார்.

''ராஜேஸ்வரி, நீ.... நீ....''

''நான் தப்பாக் கேட்டுட்டேனா?''

அவர் பதிலைத் தேடிக் கொண்டிருந்தார்.

''கேக்கணும் போல் தோணிச்சு... கேட்டுட்டேன்.''

''நான்தானே கேக்கச் சொன்னேன்..'' என்று ஒப்புக்காக ஏதோ பேசினார்.

ஆனால் உள்ளுக்குள் முள்ளை உருட்டின மாதிரி இருந்தது.

''உங்க பொண்ணுக்கு வயசு என்னமோ, ஆனா உங்க வயசுலே எனக்கு ஒரு அப்பா இருந்தார்... இல்லே, இருக்கார்... எங்கேயோ... எப்படியோ...''

''ராஜேஸ்வரி!'' என்றார் நெஞ்சைப் பிழிந்து கொட்டுகிற மாதிரி. மேற்கொண்டு பேச வேண்டாம் என்று கையமர்த்தினார்.

ராஜேஸ்வரி....ராஜேஸ்வரி....

உள்ளம் முழுதும் உச்சாடனம்.



எனக்கு மூத்தவன் மகன். அடுத்த இருவரும் பெண்கள். கடைசிப் பெண் மிகவும் பயத்தோடும், துக்கத்தோடும் ஒரு நாள் தயங்கித் தயங்கி என்னிடம் வந்தாள். அவளுக்கு அப்போது வயது ஏழு.

''அப்பா! என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்னம்மா, என்ன சொல்றே?''

''ரேடியோலே, தினமும் 'இரண்டுக்கு மேல் வேண்டவேவேண்டாம்' என்று சொல்றுங்களே. நான் மூணுவது குழந்தையில்லையா? அதான் கேக்கறேன். என்னை எங்கேயாவது கொண்டு போய் விட்டுடப் போறேளா?''

அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டேன் குழந்தையை.

உண்மையிலேயே மருண்டு போய்விட்டிருந்த பிஞ்சு நெஞ்சத்தைத் தேற்றும்போதே எனக்குக் கண்கள் குளமாகிவிட்டன! -கைலாஸ்

பயபக்தி நிறைந்த பார்வையுடன் பசுபதி நிமிர்ந்தார். 'போய்வா ராஜேஸ்வரி!' என்று பார்வையால் விடை கொடுத்து வழியனுப்பினார்.

கடைசியாக ஒரு முறை ராஜேஸ்வரியின் முகத்தை அவர் பார்த்துக் கொண்டார். மறக்க முடியுமா?

காலை ஆறு மணி.

கதவு தட்டப்பட்டது.

பசுபதி எழுந்து போய்த் திறந்தார்.

புன்னகைச் சிதறலுடன் பூபாலன் நின்றிருந்தார்.

''ஸ்நான பானமெல்லாம் ஆச்சா?''

பசுபதி தலையசைத்தார்.

''அப்ப தரிசனத்துக்குக் கௌம்பலாமா?''

''அது ஆயிட்டது.''

''என்ன சொல்றீங்க?''


பசுபதி ஒன்றும் சொல்லவில்லை.

புரியாமல் விழித்த பூபாலனைப் பார்த்துப் பசுபதி, ''ஓட்டல் பில்லை செட்டில் பண்ணிடுங்க.... நான் நேரே ஊருக்குக் கௌம்பணும்'' என்றார் பணத்தை நீட்டியபடி.

யார் அந்த ராஜேஸ்வரி என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. கேட்பதற்கு என்ன இருக்கிறது? 'ப்ரெயின் வாஷ்' பண்ணின மாதிரி இருக்கிறது. இல்லை... அப்படிச் சொல்லக் கூடாது. தரிசனம் ஆன மாதிரிதான் இருக்கிறது. அதுதான் சரி!

பசுபதி மௌனமாகப் புறப்பட்டார்.

Kalki Shopping Page



குமரி அனந்தனிடம் மிளிரும் பண்பு...

கடுகு பதில்கள்

✖ எஸ். கணேசன், திருநெல்வேலி

கே. எந்த புத்தகத்தையாவது படித்துவிட்டு இம்மாதிரி நம்மால் எழுத முடியவில்லையே என்று வருத்தப்பட்டு இருக்கிறீர்களா?

ப: நிறைய. 'என்ன எழுதிவிட்டான்' என்ற அடிப்படையில் படிக்காமல் 'என்னமாய் எழுதியிருக்கிறான்' என்ற நோக்குடன்படிக்கும்போது பல புத்தகங்களில் பல இடங்களில் பல அழகுகளைக் காண முடிகிறது. கருத்தும் சொல்லும் அபாரமாக விழுவதைப் பார்க்கையில் மனத்தில் ஏக்கம் ஏற்படாவிடில் யாரும் எழுத்தாளனாக வர முடியாது. புத்தகங்கள் என்ன, சில சமயம் 'ஆசிரியர் கடித'ங்களிலும் உள்ள சுவையை ரசித்து ஆதங்கப்பட்டு இருக்கிறேன்.

✖ அசோக் ஜகன்னாதன், செங்கல்பட்டு

கே. ராஜராஜசோழன், அருள்மொழி வர்மன் ஆகிய நேயர்களின் பெயர்கள் உண்மைப் பெயர்கள் என்ற விவரம் கிடைத்ததா?

ப: இதுவரை இல்லை. இதற்கிடையில் ஒரு புதிய நேயர், தன்னுடைய உண்மையான பெயர் ந. அருள்மொழி ராஜராஜ சோழன் என்று எழுதியிருக்கிறார். ஆவடியில் காமராஜநகர், 9வது தெரு 51ம் நம்பரில் வசிப்பவராம் இவர்.

✖ என். வாசு, திருக்குறுங்குடி

கே. ஏழையையும் பணக்காரனையும் பிரித்து வைப்பது மனமா, குணமா, இனமா?

ப: எதுவும் இல்லை. பணம்தான்.

✖ க. குமரேசன், திருவாரூர்

கே. குமரிஅனந்தனிடம் மிளிரும் பண்பு நலன்கள் யாவை?

ப: என்றும் தொண்டனாக இருக்கும் தலைவர் அவர்.

✖ இரா. நல்லகண்ணு, களக்காடு

கே. நடனத்தின் ஓவியத்தாலா, 'கடு'வின் பதிலாலா இப்பகுதி சுவை பெறுகிறது?

ப: பாலினாலா, டிகாக்ஷனாலா எதனால் காப்பி சுவை பெறுகிறது?

✖ சிவ. பாரதி, சிதம்பரம்

கே. சில வாரப் பத்திரிகைகள் ஏகப்பட்ட இரைச்சல் போடுகின்றனவே?

ப: அவை வாரப் பத்திரிகைகள் அல்ல: ஆர் வாரப் பத்திரிகைகள். விரைவில் அவை வரா பத்திரிகைகள். ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

✖ எச். ஆர். சுப்பிரமணியன், திருநெல்வேலி

கே. சமீபத்தில் சிரித்து ரசித்த தமிழ்ப் படம் எது?

ப: தில்லு முல்லு. ரஜனி தவிர வேறு யார் நடித்திருந்தாலும் படத்தை ரசித்திருக்க முடியாது. இதுவே படத்தின் பலம்; படக் கதையின் பலவீனம்.

✖ வி. மாலதி, உத்திரமேரூர்

கே. ஜனநாயகம் - சரியான விளக்கம் தருக.

ப: இந்த வார்த்தைக்குப் பல பேர் நிறைய பாஷ்யம் செய்திருக்கிறார்கள். இவைகளில் எனக்குப் பிடித்தது ஆபிரகாம் லிங்கனின் விளக்கம். அதைத் தருகிறேன். ''அடிமையாக இருக்க எனக்குப் பிடிக்காது. ஆகவே நான் எஜமானனாகவும் இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயகத்தைப் பற்றி என் கருத்து.''

✖ மேஜர் தாசன், ஈரோடு-10

கே. மோட்சம் என்னும் மரத்திற்கு விதை எது?

ப நற்காரியங்கள் என்ற பல்லாயிரக் கணக்கான விதைகளைத் தொடர்ந்து விதைத்துக்கொண்டே இருக்க வேண்டும். வாழ்நாள் பூராவும் விதைத்து வளர்க்க வேண்டிய மரம் இது. ஒரே ஒரு விதை போட்டுவிட்டு ஹாய்யாக இருக்கலாம் என்று நினைத்துவிடாதீர்கள்.

✖ ஆர். சிவராஜ், லால்குடி

கே. பதவிக்காக எதையும் செய்யலாமா?

ப: உங்களுக்கு ஏதாவது பதவி வரும்போது இம்மாதிரி கேள்வியே மனத்தில் தோன்றாது. உங்களுக்கு என்பது எல்லாரையும் குறிப்பிடும்.


✖ ஆர். ஞானகிராமன், திருவாரூர்


கே. உங்களுக்கு யாரைக் கண்டால் பிடிக்காது?

ப: என் எழுத்துக்களைப் பாராட்டாதவர்களைக் கண்டால்!

பரிசு பெறுபவர்

எஸ். கணேசன் 51-ஏ, வடக்குத்தெரு, மீனாட்சிபுரம், திருநெல்வேலி-627 001







7—4—81

அன்பரே!

நான் உங்களை இப்படி அழைப்பது சரியா? இல்லே, அமெச்சூர்த்தனமாக இருக்கிறதா? நான் உங்களை எதையாவது சொல்லி அழைக்க வேண்டும். டார்லிங்? ஊஹூம். சினிமாத் தனமாகப் படுகிறது. டியர்? இதில் நாடகத்தனம். பின் எப்படி உங்களை நான் கூப்பிடட்டும்? எதையாவதுசொல்லி உங்களை நான் வியங்கோள் வினைமுற்றில் அழைக்க வேண்டும். ஏனென்ருல், நீங்கள் என் நானூற்று முப்பத்து மூன்ரும் நாள் கணவர். என் உடலின் மீது சகல பாத்தியமும் கொண்ட மனித ஜீவி. என்னை அதட்ட, சந்தோஷிக்க, அழச் செய்ய....

நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து சென்ற நான்காவது தடவையின் முதல் நாள் இது. மனத்தில் திக்கென்று ஒரு பயம் விரவி, உச்சந்தலையிலிருந்து ஆரம்பித்து, கீழ் நோக்கிப் போகிறது. தனிமை! சுற்றிலும் மனிதர்கள் இருக்கிருர்கள். இருந்தாலும் நீங்கள் அருகில் இல்லாததால், இந்தக் கறுப்பு ராத்திரி வித்தியாசமாக வாட்டுகிறது. இப்படி என்னுள் எழும் தாபத்தை இந்த டைரியில் எழுதுவதால், 'அதற்காக அலேகிறவள்' என்று த. செய்து எண்ணிவிட வேண்டாம். திருமணமான இந்த ஓராண்டு சில்லறை நாட்களில் நீங்கள்என்னை ஸன்ன இருட்டில் தொட்டதை விரல் விட்டு எண்ணிவிடலாம். கம்பெனி வேலையாக டூரில் உள்ள உங்களுக்காகக் காத்திருக்கிறேன். என்னை நெகடிவ்வாகவாவது நினைத்துக் கொண்டு இருக்கிறீர்களா?

• • •

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. திறந்தேன். ராபர்ட்!

''ப்பூ! நீதாஞ மடையா? ஏதாவது விசேஷமா?'' என்று கேட்டேன்.

''ஆமாம் திலீப். ஒரு முக்கியமான விஷயம். உன்னுடை உதவி ஒரு பெரிய மனுஷனுக்குத் தேவைப்படுது.''

''பெரிய மனுஷஞ?'' நான் சிரித்தேன்.

''என்ன பிரதர் சிரிக்கிறே?''

''பின்னே, என் சகவாசத்தைத் தேடறவன் எப்படிப் பெரிய மனுஷஞ இருக்க முடியும்? சரி, விஷயத்தை உடை!''

அவன் உடைத்தான்.

8—4—81

நான் வெறுக்கும் இரண்டாவது ராத்திரி. ராத்திரியைத்தான் நான் வெறுக்கிறேன். உங்களை அல்ல. ஆஞல் நீங்கள் எத்தனை நாள் அன்பாக நடந்து கொண்டிருக்கிறீர்கள்? உங்களிடம் கான்கிரீட்டாகப் பதிந்து போன முரட்டுத்தனமே என்னை விலகி நிற்கச் செய்கிறது. நான் உங்கள் மனைவி. அந்தரங்கச் சொத்து. ஏன் நீங்கள் இப்படி நடந்துகொள்கிறீர்கள்? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என் செல்லுலாய்ட் உடலின் மீது உங்களுக்கு ஆசை இல்லையா?

இன்று தேதி எட்டு. இன்ஷூரன்ஸ் பிரீமியம் கட்ட வேண்டும். காரை எடுத்துக் கொண்டு பாங்கிற்குப் போகிறேன். தனியொரு பெண்ணுக க்யூவில் நிற்கிறேன்.



முன்னால் நீண்ட கோடாக ஆண்கள். அவர்களெல்லாம் தங்கள் மனைவிக்காக இன்ஷூரன்ஸ் கட்ட வந்தவர்களோ என்று நினைத்து அவர்களின் மனைவிகளை எண்ணிப் பொறுமைப்படுகிறேன். நான் ஒரு சாதாரணப் பெண். எனக்கும் சில எதிர்பார்ப்புகள் இருக்கத்தானே செய்யும்?

அம்மா கடிதம் எழுதியிருந்தாள். என், உங்கள் சௌக்கியத்தைக் கேட்டிருந்தாள். பொய்யாகச் சௌக்கியமென்று பதில் எழுதும்போது என்னுள் வறட்டுச் சிரிப்பு.

• • •

மவுண்ட் ரோடு. பச்சைச் செடிகள் விரிந்த ஓட்டல் மாடி. சுறுசுறுப்பான நாட்டியத்துடன் பேரர்கள் குறுக்கும் நெடுக்கும் தூதுவர்களாய்ப் போய் வர, கைபிடித்து இழுக்காத குறையாக வலது பக்க டேபிளுக்கு என்னை ராபர்ட் தள்ளிக்கொண்டு போனான். என்னிடம் சில நூறு ஆச்சரியக்குறிகள்.

''டேய், யாரையோ பார்க்கப் போறோம் என்று சொன்னியே?''

''ஆமாம். பார்க்கத்தான் இங்கே உட்கார்ந்துகிட்டு இருக்கோம்.''

''இங்கேயா?''

''ஆமாம். இங்கேதான். தனியா நின்னுக்கிட்டு யோசித்தால் நம்ம தேசத்து ஜனங்களுக்குச் சந்தேகம் வரும். கூட்டத்திலே கொலையே செய்தாலும் கண்டுக்க மாட்டாங்க.''

நகரத்துமக்களை அவன் துல்லியமாகப்படித்து வைத்திருந்தான். பேரரிடம் ஆர்டர் செய்தான். ''திலீப் டைம் எத்தனை?''

குழப்பம்

வினுதா

சொன்னேன். ''எங்கேடா அந்த ஆள்?''

''இன்னும் பத்து நிமிஷத்திலே வந்திடுவார்'' என்றான். பத்து நிமிடம் போனது. வந்தார்.

9—4—81

உங்களுக்காகவே வாசலில் வெகு நேரம் காத்திருந்தேன். நீங்கள் வரவில்லை. ஆபீஸ் வேலையாக மெட்ராஸ் போனது இன்னும் முடியவில்லை போலிருக்கிறது. என்ன ஆபீஸோ இழவோ? சற்றுச் சலிப்பாகக் கூட இருந்தது.

இன்று மதியம் வீட்டுக் கேட்டருகே ஒரு பிச்சைக்காரி கைக்குழந்தையுடன் நின்று கொண்டிருந்தாள். அவள் குழந்தை, அள்ளிக்கொள்கிற மாதிரி அப்படியொரு அழகு! உங்களுக்குச் செய்து வைத்திருந்த பாஸந்தி, கட்லெட், வி. பிரியாணி அத்தனையும் அள்ளி அவளுக்குப் போட்டேன். அவள் போன பிறகும் குழந்தை ஞாபகமாகவே எனக்கு இருந்தது.

'ஸ்வப்னு, அதுக்குள்ளாற குழந்தைக்கு என்ன அவசரம்?'

அந்தப் பிச்சைக்காரி மீது எனக்குப் பொறாமையாகக் கூட இருந்தது. ஒருவேளை, அகாலமாக இறந்துபோன உங்கள் முதல் மனைவியையே மனத்துக்குள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்களா?

எதிரே உதித்த இளைஞனுக்கு இருபத்தெட்டிலிருந்து இருபத்தொன்பதுக்குள் இருக்கலாம். அம்மா தந்த பிச்சை

சிவப்பு. சின்னக் கண்கள், ஒற்றை நாடி, மெல்லிய அழுத்தமான உதடுகள். மேலே நேர் கோடாக மீசை. ஏதோ தீர்க்கமான முடிவுக்கு வந்தவன்போல் தென்பட்டான்.

ராபர்ட், ''சார்! நான் சொல்லலை, அது இவர்தான் சார். திலீப்புன்னு பேரு. சார், உங்க பிஸினஸை நேரடியாக நீங்களே திலீப்கிட்டே பேசிக்குங்க. நான் தேவையில்லைன்னு நினைக்கிறேன். ஒரே ஒரு வார்த்தை! திலீப் ஒரு ஜீனியஸ். நீங்க எதுக்கும் அவனை நம்பலாம்.'' ராபர்ட் எங்களை வெட்டி விட்டுப் புறப்பட்டான்.

அவன் என்னைச் சில கணங்கள் உற்றுப் பார்த்தான். சீக்கனமாக ஒரு சிரிப்பை உதறி விட்டு, ''மிஸ்டர் திலீப் விஷயத்தைச் சொல்கிறேன். முடியுமான்னு பாருங்க'' என்றான்.

''ஓ.கே. நான் உங்களுக்கு என்ன செய்யணும்?''

''ஒரு கொலை செய்யணும்!''

''கொலை?''

''ஏன் பயமா இருக்கா?''

''பயமா? எனக்கா?'' எனக்குச் சிரிப்பு வந்தது. ''நோ. என் மனைவி வத்சலாவை என்னிக்கு நான் கொலை செய்தேனோ அன்னிக்கே என் பயம் போயிடிச்சி மிஸ்டர்!''

''மனைவியைக் கொலை பண்ணீங்களா? ஏன்?''

ஜே. கே. திலீப், மானேஜர் — ஜோஷி அண்டு கோ. என்று அறிவித்த கதவை மெல்லத் திறந்தேன். உள்ளே இரண்டு பேர் சிரிக்கும் சப்தம் கேட்டது. வத்சலா கூடச் சிரிப்பது யார்? ஆண் சிரிப்பாகத் தெரிந்தது. பூனையாகக் கால்களைப் பதித்து அந்தக் கத விடுக்கில் பார்வையை ஓட்ட... எதிரே மாடி வீட்டு இளைஞன் என் மனைவியின் உடைகளைச் சட்டென்று உதறிவிட்டுத் தோள்களைப் பற்றிப் படுக்கையில் சரிக்க அவளும் சம்மதித்தவளாகத் தயாரானாள்.

''ஒரு மோசமான காரணத்துக்காக அவளைக் கொலை செய்தேன்.''

''அப்புறம்?''

''ஜெயில், ஏழு வருஷம்.''

அவன் எனக்காக வேதனைப்பட்டதாகத் தெரியவில்லை. சட்டென்று விலகிச் சொந்த ஸாம்ராஜ்ய விஷயத்தில் மூழ்கி, திரும்பி வந்தான்.

''ஆமாம், நீங்க யாரைக் கொலை செய்யணும்னு சொல்லலையே?''

''என் மனைவி ஸ்வப்னாவை!''

10–4–81

என்னை வாட்டும் நான்காம் நாள். தேதியைப் பார்த்தேன். பத்து. எதிர்பார்த்தபடி என்னை உறுத்தும் அந்தக் கடிதம் வந்தது. என் திருமணத்துக்குப் பிறகு மாதந்தோறும் தவறாமல் வரும் கடிதம். டைப்ரைட்டர் எழுத்துக் கடிதம். என்னை முத்தமிட, என்னைத் தழுவ, என்னைப் படுக்கையில் சரிக்கத் துடிக்கும் எழுத்துக்கள்.

அந்தக் கடிதத்தை வழக்கம்போல் படிக்காமல் லம்பர் அறையில் வீசினேன். சட்டென்று எனக்கொரு சந்தேகம். முந்தைய இம்மாதிரியான கடிதங்களை அவர் படித்திருப்பாரோ?

• • •

நான் அவனைச் சில கிலோ ஆச்சரியத்துடன் பார்த்தேன். மனைவியைத் தீர்த்துக் கட்டச் சொல்கிறானே? ஏன்? அவள்மீதிருக்கும் நகை, பணம் இதற்காகக் கொலை பண்ணச் சொல்கிறானோ? இல்லை, அவன் மனைவியும் வத்சலா மாதிரியா?

''ஏன் உங்க மனைவியைக் கொலை பண்ணச் சொல்றீங்க?''

''திலீப், என் மனைவி ஸ்வப்னா சமீப காலமாக இன்னொருத்தனுக்கும் மனைவியா நடந்துக்கறா!''

''இதைப் பற்றி உங்க மனைவி கிட்டே ஏதாவது கேட்டீங்களா?''

''இதென்ன, பேரம் பேசக் கூடிய விஷயமா?''

''அப்போ, உங்களுக்கு நீங்களே நீதிபதியா மாறிட்டீங்க.''

''ஷட் அப். இது என் சொந்த விஷயம்.''

''மிஸ்டர் அருண், கோபப்பட வேண்டாம். இதே காரணத்துக்காக என் மனைவியைக் கொலை செய்தவன் நான். ஆனால் உங்களைப் போல மூன்றாந்தர யூகத்திலே நான் அந்த முடிவுக்கு வரலை. கண்ணாலே பார்த்தேன். அப்புறம் அவளைத் தீர்த்தேன்.''


அவன் கோபமாக என்மீது சீறினான். ''உன் அட்வைஸ் எனக்குத் தேவையில்லை. இந்த விஷயத்திலே நீ ஒரு அம்பு. நான் வீசப்

மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு போட்டியின்போது நான் தங்கியிருந்த அறையின் வாடகை நாள் ஒன்றுக்கு ரூ 600. ஆனால் அதே அறை ரஷ்யருக்குத் தரப்பட்டால் வாடகை ரூ 60 தான்.

— இந்திய சுற்றுலா வளர்ச்சி வாரியத் தலைவர் எஸ். கே. மிஸ்ரா

ஆதாரம்: புரோப்

தலைவர்: கோ. க.




உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்கும்
புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்கும்
இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும்
மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு
மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்கும்.
கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில்
வரும் குங்கும் அது ஒன்றே. ஆகவே அது உங்கள்
கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ
வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப்
பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான
ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ்
பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.
DELUXE
SUM
KESAVA
சுமங்கலி
SUMANGALI
KUMKUM
டீலக்ஸ் குங்கும்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு
OBM 4952/TM



நண்பர்: ஏங்க, ஹோட்டலில் இருக்கிற மாவு அரைக்கிற கிரைண்டரை வித்துடப் போறிங்களாமே, ஏன்?

ஹோட்டல் முதலாளி: பின்னே என்னங்க? காசில்லாம சாப்பிட்டுவிட்டு மாவு அரைக்கட்டான்னு அவனவன் சந்தோஷமா கேட்கிறானுங்களே!

ஏ. கே. சங்கர்

போறவன். இந்த விஷயத்தை நீ முடிச்சுக் கொடுத்தா ஐயாயிரம் தர்றேன். இந்தா அட்ரஸ்!''

11-4-81

நேற்றைய நினைவு இன்று வலுப்பெற்று விசுவரூபமெடுத்து மனத்தை வியாபிக்கிறது. அந்த அனுமதேயக் கடிதங்களைப் பற்றி இதுவரை அவரிடம் சொல்லாதது தவறோ என்று நினைக்கிறேன். சொல்லியிருந்தால் பாசிட்டிவ்வாக எடுத்துக்கொண்டிருப்பாரே? எனக்குச் சற்றுக் குழப்பமாக இருக்கிறது. குழப்பம் மேலும் எழுதுவதை நிறுத்துகிறது.

● ● ●

பெங்களூர்; ஜெயநகர்.

அருண் கொடுத்த அட்ரஸில் ஒரு குட்டி பங்களா சுத்தமாக நின்று கொண்டிருந்தது.

நான் திரும்பவும் அந்தப் பங்களாவின் மீது படையெடுக்கும்போது மணி பதினொன்று.

பக்கவாட்டு ஜன்னல் கம்பிகளை அன்பாகத் துண்டித்து உள்ளே நுழைந்தேன். கறுப்பு இருட்டு. தட்டுத் தடவி ஸ்விட்சைப் போட்டேன். அறை பிரகாசமானது.

ஒவ்வொரு அறையாக நுழைந்து வெளியே வந்தேன். பணவோட்டம் தாராளமாகவே இருந்தது. திரும்பி வந்து பீரோக்களை நெருங்கினேன். அவை முரண்டு பண்ணாமல் திறந்து கொண்டன.

தலையை உயர்த்தியபோது புடவைக்குள் லேசாக மறைந்தபடி அந்தக் கருநீல வண்ண டைரி எட்டிப் பார்த்தது. எடுத்தேன். ஸ்வப்னாவோட டைரி! பிரித்தேன். கடைசி சில தினங்களின் வரிகளை அளைந்தேன். *7-4-81.* அன்பரே! நான் உங்களை இப்படி அழைப்பது சரியா?... என் கணிப்பு சரியாக இருந்தது. ஒரு தமிழ்ப் பெண்ணைப் போல், அவள் தன் கணவனுக்காகக் காத்திருந்தாள். இவளையா ராஸ்கல் கொல்லச்சொல்லி என்னை ஏவி இருக்கிறான்? எனக்கு என் செயல் சரியெனப் படவில்லை. மெல்ல பின்வாங்கினேன். அருண் கேட்டால் அட்வான்ஸை அவன் முகத்தில் வீசிவிட்டு, அவன் மனைவியை ஜாக்கிரதையாக உசுப்பி, ''உன் கணவனின் சுயரூபத்தைப் பார்!'' என்று காட்டிவிட வேண்டியதுதான். பலன்? மனத் திருப்தி.

புறப்படத் திரும்பினேன். பரந்த கட்டிலின் மீது மடிந்து கிடந்த என்னவோ நிற ஜீன்ஸ் பேண்ட் என்னை அடித்து நிறுத்தியது. யாருடையது இது? வாட்ட சாட்டமான ஒரு இருபத்தாறு வயது வாலிபனுடையதுபோலப் பட்டது. அருணுடையதா? எடுத்துப் பார்த்தேன். சற்றுப் பெரியதாக இருந்தது. நிச்சயமாக இது ஒற்றைநாடி அருணுடையதல்ல. பின்?

எங்கோ நான் தவறு செய்து விட்டது போலப் பட்டது. அருண் கூறுவதுதான் சரியோ? அந்த டைரி! ஒரு சமயம் பொய்யான வாசகங்களை அது கூறுகிறதோ? பொதுவாகக் குற்றம் செய்பவர்களுக்கு மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும் என்பார்கள். அதுபோல் கணவனை ஏமாற்ற இப்படி ஒரு டைரி நாடகம் ஆடுகிறாளோ ஸ்வப்னா? என் யூகம் தவறென்றால், கணவன் இல்லாத நேரத்தில், இந்தப் பன்னிரண்டு மணியில் எங்கே அவள்? அப்புறம் அந்த பேண்ட் யாருடையது?

நான் சற்று யோசித்தேன். சிகரெட் பற்ற வைத்தேன். காத்திருந்தேன்.

ரொம்ப நேரம் கழித்து கார் சப்தம் கேட்டது. நான் சுறுசுறுப்பானேன். கேட்டைத் திறப்பது யார்? ஸ்வப்னா? அவளாகத்தான் இருக்கவேண்டும். ஸ்டீயரிங்கைப் பிடித்தபடி டிரைவர் ஸ்தானத்தில் ஒரு சின்ன இளைஞன். எனக்குப் புரிந்தது. ஓஹோ... கணவன் இல்லாத ராத்திரியில் இவனுடன்தான் கைகோத்துக் கொண்டு கொட்டமடிக்கிறாளா? இவன்தான் அந்தக் கடிதக் கதாநாயகனா? துரோகம் செய்யத் தூண்டும் இவனை முதலில் ஒழித்துக் கட்டினால் என்ன? அப்புறம் ஸ்வப்னா! என் கோபம் அவன் மீது திரும்பியது.

''ஸ்வப்னா, நான் காரை ஷெட்டில் தள்ளி விட்டு வருகிறேன். நீ வீட்டைத் திற'' என்றான் இளைஞன்.

ஸ்வப்னா வீட்டை நோக்கி நடக்க, நான் கார் ஷெட்டின்வலப்பக்கத்திலிருந்து வெளிப்பட்டு, இன்னும் சில விநாடிகளில் உயிரிழக்கப் போகும் அந்த முகம் தெரியாத இளைஞனுக்காகக் காத்திருந்தேன். அவன் காரை விட்டு விட்டு வெளியே வந்தான். நடந்தான். நான் பின்னால் சென்று, தயாராக இருந்த நைலான் கயிறை அவன் கழுத்தில் இட்டு, ஒரு இறுக்க்.

''ஸ்ஸொ....ப்....ன்னா....!'' அவனுடைய கடைசி சப்தம். சப்தத்தைக் கேட்டு ஓடி வந்த ஸ்வப்னா, கீழே சரிந்து கிடந்த உடலைப் பார்த்தாள். என்னைப் பார்த்தாள்.

அடுத்த கணம் வீறிட்டாள்: ''அண்ணா!''

'அண்ணனா?' நான் ஆச்சரியமாகி நின்றேன்.



ஆஷா
காஸ்மெடிக்ஸ்
ஆஷா பவுடர்: பழுதற்ற அழகு கொஞ்சும் மேனி
ஆஷா காஜல்: கருமையான ஒளிவிடும் கண்கள்
ஆஷா குங்குமம்: உங்கள் முக எழிலின் ஏற்றத்திற்கு இறுதியான ஒப்பனை
Asha
ஐடியல் இன்ஸ்டிட்யூட் பிரை. லிட்., காஸ்மெடிக் டிவிஷன் பம்பாய்-400 083 தொலைபேசி நம். 584585
Deep Design/ww
மேற்கண்ட தயாரிப்புகளுக்கு உள்ளூர் ஏஜண்ட்கள் தேவை



விரும்பிச் சுவைக்கும் ஊறுகாய்
மம்மி ஊறுகாய்
MAMMI
FPO 3510
Mammi
எலுமிச்சை, வெங்காயம், மாங்காய், ஆவக்காய், இஞ்சி, தக்காளி, வெள்ளைப்பூண்டு, மிக்சட் வெஜிடபிள், ஊறுகாய் வகைகள்.
தயாரிப்பாளர்கள்
மம்மி ஈஸ்ட் புட்ஸ்
திண்டுக்கல் 624 001. தமிழ்நாடு
art ads



சித்தி

கீதா பென்னட்

"போயிட்டு வரேன், சித்தி" — குரு சொல்லி விட்டு ஒரே நிமிடத்தில் மறைந்து விட்டான். எட்டே வயது இருக்கும். அவனுக்கு அவளிடத்தில் எப்போது ஒட்டுதல் உண்டாகும்? பெரியவன் ரமேஷ் ஒரு 'ரிஸர்வ்ட்' டைப். "நான் ரொம்பப் புத்திசாலி" என்று அவன் கண்களே காட்டிக் கொடுக்கும். அதே போல் அவன் ரொம்பப் புத்திசாலிதான். வகுப்பில் எல்லாவற்றிலும் முதல் —ஒரு புத்தகப் புழு— கிரிக்கெட் வீரன்.

இது என்ன "பெர்ஸனலிடி அனலிஸிஸ்?" வாணிக்குத் தனக்குள்ளாகவே சிரிப்பு வந்தது.

"இவர்கள் எனக்குப் பிள்ளைகள் — என் கணவரின் குழந்தைகள்" அந்த நினைப்பே அவளுக்கு இதமாய் இருந்தாலும் உள் மனத்தில் சிறிது ஏமாற்றம் ஏற்படாமல் இருக்கவில்லை. "அம்மா" என்று கூப்பிட அவளுக்கென்று ஒன்று?

அவள் கணவர் ரங்கனும் வேலைக்குப் போயாயிற்று. வீடே வெறிச்சென்று இருந்தது.

சமையலறை வேலைகளை முடித்துவிட்டு 'நிட்டிங்' செய்யத் தேவையான உபகரணங்களைக் கையில் வைத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தாள். கைகளும் மனமும் வேகமாய் இயங்கின.

அவள் வசதியான குடும்பத்தில் பிறந்தவள்தான். குடும்பம் பல தலைமுறைகளாக வசதியாய் வாழ்ந்தது. அதற்காக மிலியனேர் இல்லை. சாப்பாடு, துணி என்று அடிப்படைத் தேவைகளுக்கு மன்றாடத் தேவையிருந்ததில்லை. அதெல்லாம் அவளுடைய பதினாறு வயது வரைதான். சட்டென்று மாரடைப்பில் அவள் அப்பா அவர்களை அநாதரவாய் விட்டபோது, அவர் நினைவாய், பல பெரிய கடன்கள் இருப்பது தெரிந்தது.

எல்லாம் போக மிஞ்சியது அவளும், அவள் அம்மாவும், மிகச் சொற்பமாய்ப் பணமும்தான்.

அந்த நிலையில் அவள் படிக்க ஆரம்பித்த கல்லூரியை நிறுத்திவிட்டு, தட்டெழுத்துக் கற்க ஆரம்பித்தாள்.

அப்பா இருந்து பணமும் இருந்திருந்தால் அவள் வாழ்க்கை வேறு விதமாய் அமைந்திருக்குமோ என்னவோ? பத்தொன்பது வயதிலேயே இரண்டாவது மனைவியாய் ரங்கனை மணந்தபோது அவர்கள் வயது வித்தியாசமோ அவருக்கு இரண்டு குழந்தைகள் என்பதோ பெரிதாய்ப் படவில்லை.

நல்ல மனிதர்கள் — எல்லாவற்றுக்கும் மேலாய்ப் பெண் கஷ்டப்பட மாட்டாள் என்ற எண்ணமே வாணியின் அம்மாவை இந்த இடத்துக்குச் சம்மதிக்க வைத்தது.

ஆனால் முதல் இரவன்று அவளுக்குக் கிடைத்த ஷாக்! ரங்கன் அவளிடம் எதையும் மறைக்கவில்லை. முதல் மனைவி சுகுணாவிடம் வாழ்ந்த இனிமையான வாழ்க்கை — அதன் பலனாய் இரண்டு பையன்கள் — அதற்கு மேல் வேண்டாம் என்று அவர்கள் தீர்மானித்து விட்டது வாணியின் தலையில் இடியாய் விழுந்தது.

குழந்தைகள் வேண்டும் என்று ஆசைப்படாத பெண் யார்? 'அம்மா' என்று வாய் நிறைய அழைக்க வேண்டும் என்று இருந்தவளுக்கு 'சித்தி' என்று அழைக்க மட்டுமே இரண்டு குழந்தைகள் கிடைத்தது ஏன்?

அதிலும் ரமேஷ் சட்டென்று எதையாவது சொல்லிவிடுவான். "எங்கம்மா இருந்தா அப்படிச் செய்ய மாட்டா" என்று நிறைய தடவை சொல்லி யிருக்கிறான். அவர் கூட தப்பித் தவறி, "சுகுணா அப்படி நடந்து கொள்வாள், இதைச் செய்வாள், சொல்வாள்" என்று சொல்லி விடுவார். இந்தக் குடும்பத்தையும் இனியதாக்கவேண்டும் என்ற எண்ணமும், அதற்கு மேல் 'தான் அதில் ஒரு நபராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்' என்ற ஆவேசமும் அவளுக்கு நிறைய இருந்தது.

அவள் மதியம் ஒரு மணி சுமாருக்குத் தட்டும் வேலையை வைத்துவிட்டு, மத்தியானம் டிபனுக்குச் சமையலறையை நோக்கி நடக்க ஆரம்பித்தபோது, கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

"யாராயிருக்கும்?" — சமீபத்தில் படித்த பட்டப் பகல் கொலைகள் பற்றிய நினைவு ஒரு நிமிடம் அவளுக்குத் திகில் ஊட்டியது.

குரு உள்ளே நுழைந்தான்.

நேராக மாடிக்குப் போய்விட்டான்.

ஒரு நிமிடம் வாணிக்குச் சுருக்கென்றது.

அப்படிச் சட்டென்று தூக்கி எறியும் குணம் இல்லை அவனுக்கு. அதுவும் பள்ளி நேரத்தில் திடீரென்று இப்படி வீட்டுக்கு வருவானேன்? ஒருவேளை உடல்நிலை சரியில்லையோ?

அவள் மெதுவாய் மாடிப் படி ஏறினாள்.

குரு கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான்.

''உடம்பு சரியாயில்லையா? இரண்டு ஆஸ்பிரின் தரவா?''

அவன் 'வேண்டாம்' என்று தலையாட்டினான்.

அவனாகப் பேசட்டும் என்று அவள் வாளாவிருந்தாள்.

''என் கிளாஸ் வாத்தியார் இன்னிக்கு ரொம்பத் திட்டினார். கணக்கு மாதாந்திர டெஸ்டிலே இருபது மார்க் வாங்கியிருக்கேன். உங்கண்ணு ரமேஷ் எவ்வளவு புத்திசாலி? எல்லாத்திலேயும் முதல். விளையாட்டிலே புலி. நீ இப்படி இருக்கிறுயே என்ருர்'' —அவன் ஒரு நிமிடம் நிறுத்தினன். வாணிக்குப் பாவமாக இருந்தது.

''எல்லோரும் என்னை ரமேஷோட 'கம்பேர்' பண்ருங்க. நான் கணக்கிலே மட்டும்தானே வீக். நான் பண்ற மத்ததெல்லாம் ஒருத்தர் கண்ணிலேயும் படறதில்லை. எல்லோரும் ரமேஷ் மாதிரி நானும் இருக்கணும்னுதான் சொல்ரு'' — அவன் குரலில் ரமேஷிடம் பொருமை இல்லை. ஆனல் தன்னை ஒருவரும் மதிக்கவில்லையே என்ற ஏக்கம் மட்டும் இருந்தது.

அந்த எட்டு வயதுச் சிறுவனைப் பார்க்கும் போது அவளுக்குப் பாவமாயிருந்தது.

அதே சமயத்தில் ஏதோ ஒன்று மனத்தில் உறைக்க அவனை நேருக்கு நேர் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

''குரு! கம்பேர் பண்றது மனித இயல்புதான். உன்னை ரமேஷோடு கம்பேர் பண்ணுகிருர்கள். என்னை.... உன் அம்மாவோட! ஏன் தெரியுமா? ஒருத்தரைப் பழகினதுக்கப்புறம் அவாளை மாதிரியே அந்த இடத்தை நிரப்ப வரவாளும் இருக்கணும்னு நினைக்கறது மனித இயல்பு. நான் நல்லவளா இருக்கலாம். உங்கம்மாவைவிட உன்னிடத்திலே, உன் அப்பாவிடத்திலே அன்பா இருக்கலாம். ஆனு நான் வேறுபட்டவள். உங்கம்மா இல்லை. அதனுலேதான் உங்கப்பா அடிக்கடி 'சுகுணு இப்படிச் செய்வா'ன்னும் ரமேஷ், 'எங்கம்மா இருந்தா இப்படிச் சொல்லுவா'ன்னும் சொல்ல முடிகிறது. அதே காரணத்துக்காகத்தான் நீ என்னை



'சித்தி'ன்னு கூப்படறே. அம்மான்னு கூப்பிட்டா உங்கம்மா மாதிரி நானும் ஆனதை ஒப்புத்துக்கற மாதிரி ஆயிடும்'' — அவள் மூச்சு விடாமல் பேசினாள். குரு அவனையே வைத்த கண் வாங்காமல் நோக்கினான். அவனுக்கு ஏதோ புரிந்தது.

அவள் சட்டென்று கேட்டாள்.

''உனக்குப் பிடிச்ச டிபன் பூரி, உருளைக் கிழங்கு சப்ஜி பண்ணணட்டுமா?''

அவன் எதுவும் சொல்வதற்கு முன் அவள் எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

''நீங்க போங்க சித்தி! நான் கொஞ்ச நாழியிலே கீழே வரேன்.''

அவள் சமையலறைக்குச் சென்று பூரிக்கு மாவு பிசைய ஆரம்பித்தாள்.

அவனிடம் அதிகமாகப் பேசிவிட்டோமோ மனத்தில் இருந்ததைச் சட்டென்று கொட்டிவிட்டோமோ என்று ஒரு கணம் தயக்கமாய் இருந்தது.

சப்ஜிக்குக் கிழங்குகளை வெட்டி அடுப்பில் ஏற்றும்போது சமையல் அறை வாசலில் நிழலாடியது.

''அம்மா... நான் பூஸ்ட் கலந்துக்கவா?''

அவளால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

குருவைத் திரும்பிப் பார்த்தபோது, அவன் முகத்தில் வெட்கமும் சந்தோஷமும் ததும்பியிருந்தன.

அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

''இனி உங்களை அம்மான்னு கூப்பிடறதிலே ஆட்சேபணை இல்லையே! சொல்லப் போனா நீங்க என் அம்மாவை விட இன்னும் நல்லாக் கவனிச்சுக்கிறீங்க.''

அவள் அவனது தோள்களை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள். அவள் உள்ளம் பெருமிதத்தில் விம்மியது.

''நான் ஸ்கூல்லே படிக்கும்போது கணக்கு நல்லாப் போடுவேன். இனிமே சாயந்திரம் ஒரு மணி நேரம் உனக்குக் கணக்கு டியூஷன். அடுத்த டெஸ்டிலே நூற்றுக்கு நூறு வாங்கணும்.''

''சரி, மம்மி'' என்று அவன் வேண்டுமென்றே மிக அடக்கமாக 'மம்மி'யை அழுத்தி — குறுநகையோடு சொன்னபோது இருவரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

விடியும் வரை



காத்திரு

● காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! — சரியாய் இதை ஞாபகம் வைத்திருக்கும் பாக்யராஜ் இந்த முறை த்ரில்லருடன் வந்திருக்கிறார்.

பாட்டும் பரதமும் போட்டியிட பரதம் தோற்கிறது. நாட்டியக்காரி அக்கா தற்கொலை. தங்கை அதனால் பைத்தியம். ஏராளமான சொத்து. என்ன செய்வது என்று முழிக்கும் தந்தை. அத்தனையும் தன் வசமாக்கப்பெரிய வலை விரிப்புடன் நுழையும் ராஜா. நற்சேவகனாய், நண்பனாய் என்று உருமாறிக் கணவனாகிறான், கடைசியில். தீர்த்துவிட்டோம் என்றிருக்கையில் திரும்பும் மனைவி — திகில்! அடுத்தடுத்து முயற்சி. அத்தனையும் அம்பேல். துரத்தும் போலீஸ். வசமாய்ப் பிடிபட, அறியாமல் சுடப்பட்டு மனைவி சாக. தானும் சரண்.

இளையராஜாவின் இசை. தரத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது தெரியாமற் போகும் அளவுக்குக் கதைத் திருப்பங்கள். கதைதான் படத்தின் ஜீவநாடி. த்ரில்லர் படத்திற்குத் தேவையான புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் ஏ.வி. ராமகிருஷ்ணனின் ஒளிப்பதிவில் அநியாயமாய் இல்லை.

பாட்டும் — பரதமும் காட்சியில் ஒளிப்பதிவு, இசை, எடிட்டிங் மூன்றும் ஒன்றோடொன்று மோத ஜொலிக்கிறது.

கொலைகாரனுக்குத் தேவையான பாவமும் பார்வையும் இல்லாமல் திணறும் பாக்யராஜ் ராஜா கேரக்டருக்குப் பொருத்தமே இல்லை. கராத்தே புலி ஆர்விடி மணி இதில் எலி.

கதையில் இல்லாத லாஜிக், வசனங்களில் இருக்கிறது. இழுக்கும் முன் பகுதிக்கு ஈடாய்ப் பின் பகுதி வெகு வேகம்.

ஓடிக் கொண்டிருக்கும் பாக்யராஜின் இரண்டு படங்களின் சூட்டில் இதுவும் கதகதப்புப் பெறும். — ''சிந்து–ஜீவா''

"வெறகு அடுப்பெல்லாம் யூஸ் ண்ணக் கூடாது. ஸ்டவ்தான் வச்சிக்க ணும்."

"கரி அடுப்பு யூஸ் பண்ணலாங்களா?"

"புகைவந்தா அடுத்த நிமிஷமே வீட்டைக் ாலி பண்ண வேண்டி யிருக்கும்."

"ஊதுவத்தி?" – எரிச்சலை அடக்கிக் காண்டு கேட்டுவிட்டு அப்புறம் அதிகப் ிரசங்கித்தனமாகப் பேசி விட்டோமோ ன்று பயந்து செமித்தனமாகச் சிரித்தான் லா.

அவர் எதையும் சட்டை செய்யாமல், 'ஒண்ணு ரெண்டு பத்தவச்சாத் தப்பில்லே" ன்றார்.

பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்-கொண்டு உட்கார்ந்திருந்தான் லீலா. இனி த்தனை மணிக்குத் தூங்க வேண்டும், த்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும், லெட்ரின், பாத்ரூம் நேரங்களை யெல்லாம் றித்துத் தருவாரோ என்று காத்திருந்தவ னப் பெருந்தன்மையாக "நாளைக்கு அட் ான்ஸ் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் ாவியை வாங்கிக்குங்க" என்றார்.

கட்டிலில் படுத்துக் கொண்டு புது ீட்டை ஒரு நோட்டம் விட்டான் லீலா. ீல வானம் போல் பளிச்சென்றிருந்தன ுவர்கள். ஆணி அடிக்கக் கூட மனசு ராதுதான். அதற்காகக் குடியிருக்கும் ீட்டில் புகையேவரக் கூடாது என்றால் ப்படி? என்று நினைத்துக்கொண்டான். இப் ோது தனிக் கட்டை. எப்படியோ சமா ரித்துக் கொள்ளலாம். கல்யாணத்துக்குப் ிறகு? 'மண் எண்ணெய் என்றால் என்ன ண்ணே?' என்று ரேஷன் கடைக்காரனே கேலி பேசும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கும்போது ஸ்டௌதான் யூஸ்

...னிஜ் ஐ லவ் யூ...

ஜீரு



பண்ணணும் என்று கண்டிஷன் போடு வது அநியாயம் இல்லையா... அக் கிரமம் இல்...

'சுருக்'.

'டபக்' கென்று கட்டிலின் மீது எழுந்து உட்கார்ந் தான். விரிப்பு மடிப் பின் இருட்டை நோக்கிப் போட்டி போட்டு ஓடிக் கொண் டிருந்தன இரண்டு மூட்டைப் பூச்சிகள்.

விரிப்பு மடிப்பை நேராக்கியபோது ஏழெட்டு மூட்டைகள் ரேஸ் குதிரைகளாகப் பாய்ந்து திசைக்கொன்றாக ஓட எதைப் பிடிப்பது என்று புரியாமல் விழித்தான் லீலா. சுவரின் மேல் மளமளவென்று ஏறிக்கொண் டிருந்த ஒரு மூட்டைப் பூச்சியை அப்படியே நசுக்க விரலைக் கொண்டு சென்றபோது வீட்டுக்காரர் அதன் முதுகில் நின்றுகொண்டு 'சுவரில் கறை விழுந்தால், முதுகில் அறை விழும்' என்று மிரட்டினார்.

'என்னடா இது ரோதனையாப் போச்சு' என்று சலித்துக் கொண்டான் லீலா.

படுக்கையை ஒரு தடவை நன்றாக உதறி விட்டுப் படுத்தான். கொஞ்ச நேரத்தில் கழுத்தோரத்தில் லேசாக நெருடல்—காதோரத்தில் 'உய்ய்ய்ங்' என்ற ரைமிங். தாங்க முடியாமல் எழுந்து சப்பணங்கால் போட்டு உட்கார்ந்து விட்டான்.

'ஏர் அட்டாக் வேறயா' என்று எரிச்ச லுடன் கொசுக்களைப் 'பட்பட்' டென்று அடித்து – தான் அடி வாங்கி ஓய்ந்து போனான் லீலா.

• • •

"என்ன ராத்திரி பூராவும் ஒரே கைதட் டல் மாடியிலே. என்னால் தூங்கவே முடி யலே" என்று வீட்டுக்காரர் கேட்டதும், இவ்வளவு அவ்வளவு என்று கூற முடியாத கோபம் வந்தது லீலாவுக்கு. 'ஆமாய்யா, ராத்திரி பூராவும் உன் வீட்டு மூட்டைப் பூச்சிகளோடும், கொசுக்களோடும் கும்மி அடிச்சு விளையாடிட்டிருந்தேன்' என்று தனக்குள்ளேயே பொரிந்து கொண் டான்.

"ஏன் ஸார்... வீட்ல மூட்டைப்பூச்சி

சலனம்



பெண்ணிடம் மயங்கிப் பெற்றது என்ன?
பெருமூச்சு விடைகள் பேச்சின்றிப் பிறக்கும்.
தத்துவச் சுழிப்பில் தடுமாறும் உள்ளம்.
புயலாகும் மனது ஒரு பொழுதுக்கு ஓயும்.
ஆனால்
மஞ்சளை, சிவப்பை —
மணம் பரப்பும்
மல்லிகை, கதம்பத்தை
கண்டுவிட்ட உடனே
கண்போகும் பின்னே.
நிமிஷப் பொழுதில் நிறம்மாறும் ஒந்தி
நிலையில்லா மனமே உனக்கெப்போது சாந்தி?

— அசல்யா

இருக்கும்போலிருக்கு. நான்வேணும்னா மூட்டைப் பூச்சி மருந்தைக் கொண்டாந்து அடிச்சிடட்டுமா?''

ஒரு நிமிடம் யோசித்து விட்டு, ''செய்யுங்க. ஆனா ஒரு கண்டிஷன்'' என்றார்.

வாசம் எதுவும் வரக் கூடாது என்று சொல்லப் போகிறாரோ என்று பயந்தான் லீலா.

''மருந்தை இப்ப இருக்கிற டிஸ்டெம்பரோட கலரிலேயே அடிக்கணும். சுவரில் வித்தியாசம் எதுவும் தெரிய கூடாது.'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் அவர்.

லீலாவும் ஏதோ ஐடியா செய்து அதே கலரில் ஒரு பொடியை வாங்கி மருந்தில் கலந்து அடிக்க — அந்தப் பொடியின் கைங்கரியமோ என்னவோ ஏழெட்டு தடவைகள் 'பம்பிங்' செய்வதற்குள் 'பம்ப்பா, புல் வொர்க்கரா' என்று மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டான். அப்புறம் அதுவும் முடியாமல் போய் 'வருவேனா வெளியே' என்று சொல்லிவிட்டது மருந்தும்.

வம்பை விலைக்கு வாங்கியதைப் போல பம்ப்பைப் பார்த்துக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் லீலா. மூட்டைப் பூச்சிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து அவனைச் சுற்றி 'மூட்டை கட்டு' என்று கும்மாளம் அடிப்பதைப் போல இருந்தது.

திடீரென மாடிப் போர்ஷனில் 'அய்யய்யோ... அய்யய்யோ' என்று வீட்டுக்காரரின் மனைவி சப்தம் போடுவதைக் கேட்டதும் விருட்டென்று எழுந்து வெளியே ஓடிவந்தான்.

வீட்டுக்காரரும், அவருடைய மனைவியும் டவலால் தங்களுடைய முதுகையும், தலையையும் அடித்துக் கொண்டே வெளியே ஓடிவந்து மூச்சிறைக்க நின்றார்கள்.

''என்ன சார்? என்ன ஆச்சு?'' என்றான் லீலா.

தன் உடம்பையும், தலையையும் டவலால் நன்றாகத் தட்டிவிட்டு; ''தேனீ'' என்றார் மூச்சு வாங்க. ''எங்கிருந்து வந்துச்சோ அவ்வளவும்.''

மெதுவாக உள்ளே சென்று எட்டிப் பார்[த்]
தான் லீலா. ஆகா... அறைக்கு நாறுவ[...]
தேறும். சுவரெல்லாம் டிசைன் போட்[...]
உட்கார்ந்திருந்தன தேனீக்கள்.

வெளியே வந்து, ''யாராவது கூட்டை[...]
கலைச்சு விட்டிருப்பாங்க சார்!'' என்றான்.

''தெரியுதய்யா பின்னே அதெல்லா[...]
என்னோட பேரம் பேத்திகளா என்னைத் தே[...]
வரத்துக்கு? இந்தத் தெருவிலே எத்தனை
வீடுக இருக்கு, என்னோட வீடுதானா கெட[...]
சுது!'' என்றார் எரிச்சலுடன்.

லீலாவுக்குத் திருப்தியாக இருந்தது.

''என்ன பராக்குப் பார்த்துட்டு. இப்ப[...]
அதையெல்லாம் வீட்டை விட்டு[...]
துரத்தணும்'' என்றார் வீட்டுக்காரர்.

''ஜீ.....பூ....ம்...பா...'' என்று அட்[...]
காசமாக ஒரு ஐடியா உதித்தது லீலாவுக்[கு]

''ஒரே வழிதான் இருக்கு சார்'' என்றான்[...]

''என்ன?''

''தீப்பந்தத்தாலே அடிச்சாத்தான் அ[...]
களைத் துரத்த முடியும்!''

''அய்யய்யோ, சுவரெல்லாம் நாசமா[...]
போயிடுமே!'' என்றார்.

''இப்ப மாத்திரம் அங்கென்ன சுவ[...]
சார் இருக்கு? தேனீக்களுக்கு மத்தியி[...]
அங்க கொஞ்சம் இங்க கொஞ்சம் தெ[...]
யுது!''

கொஞ்ச நேரம் குழம்பிவிட்டு ''ஏத[...]
சும் செஞ்சு அதுகளைத் துரத்தியடிங்க[...]
என்று வீட்டுக்காரர் சொல்லி முடிக்கு[ம்]
போது, ஒரு பழைய வேட்டியை 'டர்[...]
ரென்று கிழித்து ஒரு குச்சியில் சு[...]
ஸ்டௌவைத் திறந்து அதற்குள் [...]
வைத்துவிட்டான் லீலா. பழைய பா[...]
பைகளைக் கைளிலும் தலையிலும் நு[...]
துக்கொண்டவன், வீட்டுக்காரரிடமே [...]
பெட்டி வாங்கி ஊறிய பந்தத்தைப் ப[...]
வைத்தான்.

எரியும் பந்தத்தை ஒரு விநாடி வெ[...]
வீரனைப் போலப் பார்த்து விட்டு, இல[...]
புரிக்குள் பாய்ந்த அனுமனைப் போல் ஆ[...]
ஆவேசத்துடன் வீட்டுக்காரரின் போர்[ஷ]
னுக்குள் பாய்ந்தான்.

உள்ளே நுழைந்ததும் தேனீக்கள் பரவியிருந்த சுவர்ப் பக்கத்தில் செல்லாமல் இளநீல நிறத்தில் சுத்தமோ சுத்தமாகப் பளிச்சென்றிருந்த சுவர் அருகே வந்து நின்று அதைப் பார்த்துக் கிறுக்குத்தனமாக ஒரு புன்னகை பூத்தான். மறு கணமே வெறியோடு பந்தத்தை ஓங்கி மத்தி சுவரில் 'தப்' பென்று தப்பினான்.

அட்டைக் கரியில் விழுந்த அலங்கோல டிசைனைப் பார்த்து விட்டு அட்டகாசமாகச் சிரித்தான்.

அப்புறம் அறை எங்கும் ஆசை தீரத் தீப்பந்தத்தைச் சிலம்பம் ஆட ஆரம்பித்து விட்டான்.

பத்தே நிமிடங்களில் வசந்த மாளிகையாய் இருந்த வீட்டை விட்டலாச்சாரியா குகையாக மாற்றி யமைத்து விட்டு வெற்றிப் புன்னகை தவழ வெளியே வந்தான் லீலா.

''என்ன தம்பி! எல்லாம் போயிடுச்சா?'' என்றாள் வீட்டுக்காரரின் மனைவி ஆவலோடு.

''போச்சே, எல்லாம் போச்சே'' என்று உள்ளே போன வீட்டுக்காரர் அலறுவது தேனாக வந்து பாய்ந்தது லீலாவின் செவிகளில்.

• • •

அடுத்த நாள்:

''சார்!'' என்று தயங்கியபடி நுழைந்தான் லீலா.

வீட்டுக்குள் புகுந்துவிட்ட ஆமையைப் பார்ப்பது போல் பார்த்தார் வீட்டுக்காரர்.

''கடையிலே கெரசினே கெடைக்க மாட்டேங்குது...'' — இழுத்தான் லீலா.

''வீட்டுக்குள்ளாரத் தோண்டிப் பார்த்துட்டா என்னங்கிறீங்களா?''

நேற்றைய சம்பவத்தின் எரிச்சல் அவருடைய பேச்சில் தெரிந்தது.

''கொஞ்சம் வெறகு வாங்கி யூஸ் பண்ணலாமான்னு...''

வார்த்தைகளை முடிக்கு முன் அவனை முறைத்துப் பார்த்தார் வீட்டுக்காரர், அப்படியே அவருடைய பார்வை சுவர்ப் பக்கமாகச் சென்றபோது, அவருடைய கண்களில் 'தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன, முழம் என்ன' என்று யாரோ பாடினார்கள்.

''போங்க வாங்கி யூஸ் பண்ணுங்க'' என்று தளர்ந்த குரலில் சொன்னவர், ''ஆனா ஒரு கண்டிஷன்!'' என்றார்.

என்ன கண்டிஷனோ என்று பயந்தான் லீலா.

''என் மச்சினன் விறகுக் கடை வெச்சிருக்கான். விறகை அங்கேதான் வாங்கணும்'' என்றார்.

''நிச்சயமாக!'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்ததும், காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு 'ஹனி பீ ஐ லவ் யூ' என்று பாட ஆரம்பித்து விட்டான் லீலா உற்சாகத்துடன், படு உற்சாகத்துடன்.



சுமை

அமர்க்களமாய் ஆரம்பிக்கிறது படம். பொறுப்பற்ற அப்பன். பொறுமை பூஷணமான அம்மா. விதத்துக்கொரு ஜாடையில் பத்தே குழந்தைகள். பாரம் முழுவதும் மூத்தவன் சத்யன் (சந்திரசேகர்) தலையில். விதவைத் தங்கை பக்கத்து வீட்டு வாலிபனால் கர்ப்பமுற்றுப் பின் மனைவியாகிறாள். பசி, பசி என்று படம் முழுவதும் துடிக்கும் குழந்தைகள். இறுதியில் எல்லோரையும் ஒன்று சேர்த்து ரத்தம் கக்கிச் சாகிறான் சத்யன். அவனைக் காப்பாற்ற அனாவசியமாகச் சோரம் போகும் இளம் பெண்ணும் (காதலி அல்ல!) சங்கராபரணம் ஸ்டைலில் உயிர் விடுகிறாள்.

பிரமாதமாகச் செய்திருப்பவர்கள்—சந்திரசேகர், சாமிக்கண்ணு, உஷா. எஸ். வி. சேகரும், காயத்ரியும் 'ஏ' சர்ட்டிபிகேட்டுக்கு உதவுகிறார்கள். கல்லாப் பெட்டி சிங்காரத்தின் க(ாம)டி போக நாம் சிரித்து மகிழ சீரியஸான காட்சிகள் பல உண்டு. உதாரணமாய் அனுமந்து அழுதுகொண்டே வீணை வாசிப்பது, சங்கிலி முருகனின் நடுத்தெரு போர், நாடி பார்த்துக் கர்ப்பம் அறிவது இத்யாதி, இத்யாதி. சினிமாச் சிறுவர்கள் எப்பவும் அதி அற்புத அறிவு ஜீவிகள். இதிலும் ஜட்டி கூடப் போட மனமில்லாத கடைக்குட்டி சுவரில் மணிவாசகங்கள் எழுதித் தள்ளுகிறான்.

நிறைய டைரக்டர்களின் பாதிப்பு இந்தப் பட டைரக்டரிடம் தெரிகிறது. இரண்டே பாடல்கள் — அபத்த நடனங்களுடன். கங்கை அமரன் கஷ்டப்படுத்துகிறார். லோகேஷின் காமரா மீது பாவப்படலாம். ஹூம்... பொட்டில் அடித்துத் தெறிக்கும் வசனங்கள் படத்தின் தனிச் சிறப்பு. நல்ல கதை. அருமையான நடிகர்கள். சொல்ல வந்ததை நேராகச் சொல்லி யிருந்தால், இராம. நாராயணன் நமக்கு இன்னொரு 'பசி'யைத் தந்திருப்பார்.

''சிந்து-ஜீவா''

ரிலையன்ஸ்

கடந்த காலம் முழுவதும் 2 லட்சத்திற்கும் அதிகமான
பங்குதாரர்கள் மற்றும் டிபஞ்சர்—வைத்திருப்பவர்களுக்கு மிகவு
நன்மைகள் நிறைந்த காலம்

டிபஞ்சர்
வரிசை I
1979 அக்டோபரில்
ஒவ்வொன்றும்
ரூ. 5.00க்கு
வெளியிடப்பட்டன.
19 மாதங்களில்
அவை ரூ. 487
(97%) ஆதாயம்
தந்து விட்டன.

டிபஞ்சர்
வரிசை II
நவம்பரில் 1980
ஒவ்வொன்றும்
ரூ. 125க்கு
வெளியிடப்பட்டன.
இந்த உரிமை
டிபஞ்சர்கள்
முன்னமேயே
ரூ. 160க்கு மதிப்
பேற்றம் பெற்றுவிட்டன.

எதிர்காலம் இன்னும் ஒளிமயமாக இருக்கும்.

இப்போது ரிலையன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் அறிவிக்கும் 13.5% மாற்றக்கூடிய முழுவதும் பாதுகாப்புள்ள டிபஞ்சர்க

டுபான்ட், அமெரிக்காவின் தொழில் நுட்ப கூட்டுறவு [illegible] ஆண்டுக்கு 10,000 டன் உற்பத்தி செய்யும் [illegible] ஒழைத திட்டத்துக்கு பகுதியாக 79.50 கோடி ரூபாய் நிதி உதவி ஏற்படுத்[illegible]
ரிலையன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் விரைவிலேயே பொது மக்களுக்கு
ஒவ்வொரு டிபஞ்சரும் ரூ. 125-, மொத்தம் ரூ. 24 கோடி. மதிப்புள்ள மாற்றக் கூடிய முழுவதும் பாதுகாப்புள்ள டிபஞ்சர்களை வழங்கப் போகின்றனர்.

விடுமுறைக்குப் பெங்களூர் போகப் போகிறோம் என்று குட்டி என்கிற மாலுவுக்கு ஒரே குஷியாக இருந்தது. பட்டு மாமாவை வம்புக்கிழுக்கலாம்!

ஏதோ, இந்தத் தடவையாவது அப்பாவுக்கு மனம் வந்தது, அவர்களைப் பெங்களூர் கூட்டிப் போவதற்கு. சாதாரணமாய் அவர்களுடைய வருடாந்தரப் பயணம் திருநெல்வேலியருகே இருந்த அவருடைய சொந்த ஊருக்குத்தான். அங்கேதான் பெரியப்பா—அப்பாவின் அண்ணா — இருந்தார், அங்கே போகத்தான் அப்பாவுடைய ஆபீசில் பயணச் செலவு தருவார்கள். ரயில் அங்கே நெருங்க நெருங்கச் சுற்றிலும் தென்படும் பனங்காடுகள், மாந்தோப்புகள், வாழைக் கொல்லைகள் இவற்றின் பசுமையை எடுத்துக்காட்டும் மண்ணின் செம்பட்டை நிறம், எல்லாவற்றையும் பார்த்து முதலில் அவளுக்கு ஒரே உற்சாகமாகத்தான் இருந்தது. ஆனால் கிராமத்தில் ஒரு வாரம் இருந்தபோது எப்போதடா டில்லிக்குத் திரும்புவோமென்று ஆகிவிடும். பெரியப்பா தனக்குத் தெரிந்த சுமார் ஒரு டஜன் நெல்லை பிராண்ட் கதைகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லி 'போர்' அடிப்பார். பெரியம்மா காலை முதல் இரவு வரையில் வீட்டுக் காரியங்களிலேயே பிஸியாக இருப்பாள். பெரியப்பாவின் ஒரே பிள்ளையான தண்டுவுக்கோ, அவளைப் பார்த்து ஒரே 'இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்'.

சீண்டி மகிழ்வதற்கேற்ற ஒரு அசடு, தண்டு. ஆனால் அவளுக்கு வேண்டியிருந்தது தான் கேலி செய்யக் கூடிய ஒருவனில்லை. தன்னைக் கேலி செய்யக் கூடிய, அதை நளினமாகச் செய்யத் தெரிந்த ஒருவன். இந்தத் தேவையை அழகாகப் பூர்த்தி செய்தவன் பட்டு மாமாதான். தண்டபாணி மருவி 'தண்டு' ஆனதைப் போல, பட்டாபி 'பட்டு' ஆகியிருந்தது. அவளை வீட்டில் கூப்பிடும் பெயரான 'குட்டி' கூட அவன் சூட்டினதுதானும், அவள் சின்னவளாயிருந்த போது — வீட்டிலிருப்பவர்கள் கூறும் வரலாறு!

நாலு வருடங்களுக்கு முன்பு வரையிலும் பட்டு மாமாவுக்கு டில்லியிலேதான் வேலை. அவர்கள் வீட்டிலேதான் வாசம். அதாவது அவளுக்கு ஒன்பது வயதாகும் வரையில். இங்கு அவன் இருந்த நாட்களிலெல்லாம் அவனுடைய ஓய்வு நேரப் பொழுதுபோக்கு அவளைச் சீண்டியவாறிருப்பதுதான்! அப்போதுதான் அரும்பத் தொடங்கி யிருந்த அவளுடைய சந்தேகம் நிறைந்த தனித்துவத்தை, முழு நிச்சயமற்ற தோரணைகளை, தன் கிண்டல்களால் இடறி, விழச் செய்தவாறிருப்பதில் அவனுக்கொரு உற்சாகம். அவளுடைய நடை, பேச்சு, சிரிப்பு, அழுகை, வெட்கம், கோபம் — எதுவும் அவனுடைய கிண்டலுக்குத் தப்பாது. ''பாரும்மா இந்த மாமாவை!'' என்ற அவளுடைய புகார்க் குரல் சதா வீட்டில் ஒலித்த வண்ணம் இருக்கும். உண்மையில் அது புகாரே அல்ல. ஒரு செல்லமான சிணுங்கல், அவனுடைய சீண்டலின் திருப்தியான அங்கீகாரம். இருவரும் காரம்ஸ், ஸ்கிராபிள், ரம்மி, டேபிள் டென்னிஸ் என்று வீட்டுக்குள் விளையாடும் விளையாட்டுகள் அனைத்தும் விளையாடுவார்கள். எது விளையாடினாலும் தான் அவளைவிடத் திறமைசாலி, புத்திசாலி என ஒவ்வொரு கட்டத்திலும் பட்டு மாமா நிலைநாட்டியபடி இருப்பான். தன் வெற்றி எக்காளங்களால் அவளை அழ வைப்பான். அந்த அழுகைதான் அவளுக்கு வேண்டி யிருந்தது போலும், இல்லாவிட்டால் ஏன் மீண்டும் மீண்டும் அவனுடன் விளையாடச் சென்றாள்?

அவளுடைய பெற்றோர், குழந்தை என்று காட்டுகிற பரிவும் சலுகைகளும் அவர்கள் மேல் வெறுப்பாகவும் ஆத்திரமாகவும் வெடிக்க, பட்டு மாமாவின் பாராட்டுத்

ட்டு மாமாவும்
ட்டி' மாலுவும்

ஆதவன்



தனமான உதாசீனம்தான் அவளுக்கு உவப்பாக இருந்தது. சரி; அப்பாவும் அம்மாவும் தனக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் தன் கருத்துக்களுடன் மாறுபட்டால் உடனே அவர்கள் மீது ஆசை தோன்றிற்று என்றால் அதுவுமில்லை. அவளுடைய விருப்பு வெறுப்பு வேண்டும் வேண்டாம்களை விமரிசித்து, அவர்கள் ஒரு வார்த்தை சொன்னாலும், 'முணுக்'கென்று கோபம் வந்துவிடும். கமல ஹாஸனின் நடிப்புத் திறனையோ, லதாவின் குரலினிமையையோ அப்பா கிண்டல் செய்து ஒதுக்கினால் இத்தகைய ரசனையற்ற வர்களுடன் ஒரே கூரையின் கீழ் வாழ வேண்டி வந்து விட்ட தன் மட்டமான தலைவிதியை நினைத்துத் துக்கம் நெஞ்சை அடைக்கும்.

ஆனால் அதே கமலஹாஸனையோ லதா வையோ பட்டு மாமா விமரிசித்தானானால் அவளுக்கு ஏற்படுவது வேதனை இல்லை ஒருவகைச் சிலிர்ப்புத்தான். அவனுடைய இகழ்ச்சி உறுத்தவும் செய்யும், அதே சம யத்தில் அது ஒரு மென்மையான கிச்சு கிச்சு மூட்டலாகவும் தோன்றி ஓர் இன்பப் புல் லரிப்பை ஏற்படுத்தும்....

ஏன் என்று புரியாவிட்டாலும், இந்த இன்பம் தனக்கு வேண்டித்தான் இருந்தது என்பது நிச்சயம் புரிந்தது.

பட்டு மாமாவைப் பார்க்கப் போவதில் அவள் உற்சாகமாக இருந்த இன்னொரு கார ணம்இப்போது அவர் தனியாக இல்லை,ஜோடி சேர்த்துக் கொண்டிருக்கிறார் என்பது.ஆமாம் ஆறு மாதங்களுக்கு முன்புதான் மாமாவுக்குக் கல்யாணமாயிற்று. அப்பாவுக்கு அப்போது உடம்பு சரியில்லாததால் அவர்கள் யாரும் கல்யாணத்துக்குப் போக முடியாமலாயிற்று. அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் (உடம் புக்கு வந்தது அவருடைய தவறில்லையென்ற போதிலும்) அப்பா இப்போது எல்லாரையும் பெங்களூர் கூட்டிப் போகிறார்...

ரயிலில் போகும்போதே அவள் மனத் தில் ஏதேதோ கற்பனைகள்; மாமாவைத் தன் சேட்டைகள், குறும்புகளால் படாத பாடு படுத்தப் போகும் கற்பனைகள். கல் யாணமாகிவிட்ட மாமாவைக் கேலி செய்ய நிச்சயம் தனக்கு நிறையப் பாய்ண்டுகள் கிடைக்கப் போகின்றன, இந்தத் தடவை வெற்றி தனக்குத்தான். மாமியை மெல்லத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு விட வேண்டும். பிறகு இருவருமாகச் சேர்ந்து மாமாவை நன்றாக அழ வைக்கலாம். மாமிக்கு இதற்குள்ளாக மாமாவின் பல வீனமான அம்சங்கள் தெரிந்து போயிருக் கும். அவளுடைய அறிவுடன் தன் அறிவும் கைகோத்துக்கொள்ளும்போது மாமா திண றப்போவது நிச்சயம்! மேலும் மாமி மாமாவை விட ஒன்பது வயது இளையவ ளாமே... எனவே அவரை விட அவள் என் டீன் ஏஜ் குரூப்புக்கு நெருங்கினவளா யிருப்பாள். இருவருமாக மாமாவின்ரசனை, பழக்க வழக்கங்கள், தோரணைகள் எல்லா வற்றின் மீதும் இளமை என்னும் வலுவான பீரங்கி மூலம் குண்டு மாரி பொழிந்து மாமாவுக்குத் தாத்தா பட்டம் கட்டி மூலையில் உட்கார வைத்துவிடலாம். ஓ, ஓ, தாத்தா மாமா!

இல்லையில்லை. மாமாத் தாத்தா!

• • •

பெங்களூர் ஸ்டேஷனுக்குள் ரயில் நுழை யும்போதே அவள் கண்கள் ஜன்னல் வழியே பிளாட்பாரத்தைத் துழாவின, மாமாவுக் காக.....

அதோ, அங்கே நிற்கிறானே! பக்கத்தில் நிற்பதுதான் மாமியா? ஜோராயிருக்கிறாளே!

அவனும் அவளைக் கவனித்து விட்டான். கையை உயர்த்தி ஆட்டியவாறு ரயிலுடனே ஓடிவந்தான். அட, மாமாவா இத்தனை இங்கிதமாகவும், பண்பாகவும் நடந்து கொள்வது, என்று அவளுக்கு ஒரே ஆச்சரிய மாக இருந்தது. மாமி நன்றாக டிரெயின் செய்திருக்கிறாள் போலும்....

பெட்டியின் வாயிலருகே போய் நின்று கொண்டு ரயில் நின்றதும் மாலுதான் முத லாவதாக பிளாட்பாரத்தில் குதித்தாள். எதிரே வந்த மாமாவை முகம் மலரப் பார்க்க, அவன் அடையாளம் புரியாதவன் போலக் கண்களைச் சுருக்கிக் கொண்டு அவளை மேலும் கீழுமாகப் பார்த்தவாறு, ''யாரு மாலுவா? மிக்கி மௌஸ் மேடமா இவ்வளவு ஸ்மார்ட்டாக ஆகியிருக்கிறது? நம்பவே முடியல்லியே!'' என்றான். அவள் உடனே முகத்தை வலித்து அவனுக்கு அழகு காட்ட, ''ஆங்! இப்போதுதான் அடையாளம் தெரிந்தது'' என்று அவன் குறும்பாய்ச் சிரிக்க அவள் பொய்க் கோபத்துடன் அவனை அடிப்பதற்குக் கையை ஓங்க—

சட்டென்று மாமி அவர்களருகே நெருங்கி விட்டதை அவள் கவனித்தாள். அடிக்க ஓங்கிய கை அவசரமாகப் பின் வாங்கியது. பட்டு மாமா இருவரையும் அறிமுகம் செய்து வைத்தான். இல்லையில்லை வைத்தார். மனமே, இனிமேல் மாமாவை அவன் இவன் என்று சொல்லாதே.

''பயணமெல்லாம் சுகமாக இருந்ததா?'' என்று மாமி விசாரிக்க, வெய்யில் தாளவில்லை என்று அவள் பெருமூச்சு விட, இந்தப் பெரு மூச்சில், ஒருவர் பின் ஒருவராக அவளுடைய அப்பாவும், அம்மாவும் பிறகு தம்பி ராஜு வும் கூட, வந்து கலந்து கொண்டார்கள். (அவனுக்கு இப்பொழுதே தான் ரொம்பப் பெரிய மனுஷனென்று எண்ணம், பெரிய வர்களுடைய சம்பாஷணைகளிலெல்லாம் அவ னுக்கும் மூக்கை நுழைத்தாக வேண்டும்...)

''என்னய்யா அறுவை ஜோக் அடிக்கிறே. யாராவது கேட்டால் சிரிக்கப்போறாங்க!'' -சர்மா



மாமா வியப்பும் பெருமிதமும் முகத்தில் கூத்தாட, அப்பாவுடனும், அம்மாவுடனும் பேசிக் கொண்டிருந்த மாமியையே கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றார். மாமியின் ஒவ்வொரு அசைவையும், பாவனையையும் அவருடைய கண்கள் குடித்துச் சாப்பிட்டுவிடப்போவதுபோலக் குதறிய விதம் ஓ காட்! இந்த மாமாவுடைய அல்டாப்பெல்லாம் இவ்வளவுதானா கடைசியில்?

திடீரென்று மாமி ஏதோ 'ஜோக்' அடிக்க மாமா அதற்கென்றே காத்திருந்தவர் போல் 'ஹோ ஹோ.... ஹஹா' என்று உடலெல்லாம் குலுங்கச் சிரிக்க...

சீ! அசிங்கம்! அவளுடைய ஆட்சேபணை அந்தச் சிரிப்பைப் பற்றினது கூட அல்ல (அதுவும் ஸில்லியாகத்தான் இருந்தது என்பது வேறு விஷயம்) அத்தனை ஒரு மட்டமான ஜோக்குக்கு மாமா சிரித்தாரே என்பதுதான். ஓ மாமா! உன் கூரிய ரசனையெல்லாம் என்ன ஆயிற்று?

ஹூம்! இந்த உலகத்தில் நீதி இல்லை, இல்லவே இல்லை. ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் பிரவேசிக்கும் முன்பே அவளுக்குப் பெங்களூர் கசக்கத் தொடங்கி விட்டது... டாக்ஸியில் முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''என்ன ஆச்சுடி? ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?'' என்று அம்மா விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லே; தலை வலி.''

''பசிதான்'' என்றாள் அம்மா. ''மத்தியானம்கூடச் சரியாகவே சாப்பிடலேயே!''

மாமி உடனே அவளை ஆதரவுடன் பார்த்துச் சிரித்தாள். ஒரு குழந்தையைப் பார்த்துச் சிரிப்பது போல.... அவளுக்கு எரிச்சலா யிருந்தது. யாரிடமிருந்து அவள் அனுதாபத்தை எதிர்பார்த்தாளோ அவர்— மாமா — இதெல்லாம் காதில் விழாதவராக முன் ஸீட்டில் ராஜூவுடன் ஏதோ சளசளத்துக் கொண்டிருந்தார். 'ஆமாம்!' என்று அவள் எரிச்சலுடன் நினைத்துக்கொண்டாள். 'அவன்தானே குழந்தை? அவனைத்தானே இனி வேஷங்களால் ஏமாற்றமுடியும்?'

''வீட்டுக்குப் போன உடனேயேசாப்பிட்டுடலாம்...'' என்றாள் மாமி, மறுபடியும் மாலுவைப் பார்த்து. ''பீன்ஸ் கறியும் வெள்ளரிக்காய் பச்சடியும் வெச்சிருக்கேன்..இரண்டும் உனக்குப் பிடிக்குமாமே!''

ஓஹோ! எனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்றெல்லாம் வேறு இவளிடம் சொல்லியாச்சாக்கும்... மாலுவுக்குள் ஆத்திரம் குமுறியது. ஆமாம்; அவளை ஒரு குழந்தையாக, உப்புக்குச் சப்பாணியாக மாற்றியாகிறது. அப்போது மாமா அவளைப் பற்றி எவ்விதத் தப்பபிப்பிராயமும் உருவாகாமல் யாரிடம் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பேசலாம். என்ன சௌகரியம்!

'கயவா! மோசக்காரா!' என்று சினிமா பாணியில் கூறியவாறு மாமாவின் தலையில் இங்கிருந்தபடியே ஓங்கி ஒரு தட்டுத் தட்டினால் என்ன?

அவள் வீணை வாசிப்பது பற்றி, ஓவியம் வரைவது பற்றி... எல்லாவற்றையும் பற்றி



''மாப்பிள்ளை ஏன் எப்போதும் ஒரு கையை உயர்த்திய படியே இருக்கார்?''

'''மோதிரம் கொஞ்சம் லூசா இருக்கு ஜாக்கிரதை'ன்னு தெரியாத்தனமா சொல்லித் தொலைச்சிட்டேன்!''

அ. இராமதாஸ்

வீடு போய்ச் சேருவதற்குள்கேட்டுவிட்டாள். ஆமாம்; அவள் பெரியவள் இல்லை, பொறுமைப்பட லாயக்கானவள் இல்லை. அவளுடைய திறமைகளை மாமா மாமியிடம் சகஜமாய்ச் சொல்லுவார், மாமி நிதானமாக ஏற்றுக் கொள்வாள். இருவரும் கை கோத்துக் கொண்டு அவளுக்கு சபாஷும் ஆசியும் வழங்குவார்கள்.

குழந்தைக்கு பெப்பர்மிண்ட் வழங்குவது போல.

வீட்டில் போய் இறங்கும்போது அவளுடைய ஆத்திரம் கொதி நிலையை எட்டி விட்டிருந்தது. அம்மா சாப்பிடக் கூப்பிட்ட போது பட்டென்று வெடித்தது.

''நான் சாப்பிடப் போறதில்லை'' என்றாள் வெறுப்புடன். இந்த இவள் பண்ணின பீன்ஸ் கறியும், வெள்ளரிப் பச்சடியும் எனக்கு வேண்டியதில்லை.

''சாப்பிடாம?'' என்றாள் அம்மா.

''எனக்கு இப்ப வேண்டியிருக்கலே. தூங்கினாப் போதும் எனக்கு.''

''வெறும் வயித்திலேயா? கொஞ்சமாச் சாப்பிடேன்.''

''வேண்டாம், வேண்டாம்,வேண்டாம்!''

''என்ன ஆச்சு உனக்கு?''


''ஒண்ணும் ஆகலே.''

''மோருஞ் சாதமாவது சாப்பிடேண்டி!''

''ஐயோ! என்னைச் சும்மா விடேன்!'' என்ற கூச்சல் அப்பாவை அங்கே ஈர்த்தது. ''அவளுக்கு வேண்டாம்னா விடேன்'' என்று அவர் தர்க்கத்துக்கு முற்றுப்புள்ளியிட்டார்.

அவளுக்கு அப்பாவை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது! இனி விடுமுறையின் இறுதிவரை தன் தோழர் அப்பாதான் என அவள் முடிவு செய்தாள். இதற்கு இவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டாம்தான். ஆனால்—

என்ன செய்வது; இங்கே வந்துதானே தெரிந்தது, அவள் இப்போது மாமாவின் குட்டி அல்ல, அப்பாவின் குட்டிதான் என்று!



உங்களைப்
CHARMINAR

அவனுக்கு நண்பர்கள்என்று யாருமில்லை. ஆனால் தினமும் வீட்டை விட்டுக் கிளம்பினால் திரும்பி வர நேரமாகும்.

மேட்டுத் தெருவில் நடந்து, ஆற்றுப்பாலம் ஏறி, இறங்கி... ஊருக்கு ரொம்பத் தள்ளி வந்து அந்தச்சாலையோரப் புளிய மரத்தடியில் அமர்வான்.

வயல்களின் பச்சையை ரசிப்பான்.

மணலில் முக்கோணம் போடுவான்.

மரத்தின் குருவிகள் என்ன பேசிக்கொள்ளும் என்று யோசிப்பான்.

மாலை வானம் ஏன் வெட்கப்பட்டுச் சிவக்கிறது என்று சிந்திப்பான்.

மழை வந்தால், மக்கள் ஏன் கதவுகளை, ஜன்னல்களைச் சாத்துகிறார்கள் என்று கோபிப்பான். மழை பெய்யும்போது வீட்டை விட்டு வெளியே வந்து கைகளை மடக்கிக் கட்டிக் கொண்டு மழையில் சிலிர்க்க நனைவான்.

அவன் கவிதை எழுதுவான்.

நன்றாகவே எழுதுவான்.

—'கவிதை எழுத
காகிதம் எடுத்தேன்
கடைக்குட்டி
கப்பல் கேட்டான்
கவிதை கப்பலானது
கப்பல் மூழ்கிப் போனது'—

அவன் கவிதைகள் நீங்கள் அதிகம் கேள்விப் பட்டிருக்காத இலக்கியப் பத்திரிகைகளில் வரும். நிறையவே வரும்.

ஊரெல்லாம் அவனைப் பாராட்டும்.

வீட்டுக்குள்ளே வெடிப்பாள் தாய்,

''உருப்பட மாட்டேடா நீ! பத்தும், பதினைஞ்சும் வருது. இதை வச்சு பங்களா கட்டு. பெருசா எழுதறானாம் கவிதை! சினிமாவுக்குப் போஸ்டர் ஒட்டறவன் உனக்கு அதிகமாச் சம்பாதிக்கிறான்.''

''லாப, நஷ்டக் கணக்குப் பார்த்து நான் எழுதலைம்மா. என் எண்ணங்களை எழுத்திலே வெடிக்கிறேன். வடிக்கிறேன். இந்தத் தொகை கூட வரலைன்னாலும் நான் எழுதுவேன்ம்மா'' என்று சொல்ல நினைப்பான். சொல்ல மாட்டான்.

பொதுவாக அவன் பேசுவது குறைவு.

அமைதியாய் ரசத்தில் காரமில்லாவிட்டாலும், மோருக்கு உப்புப் பத்தாவிட்டாலும் விக்கினால், தண்ணீர் கேட்காமலும் சாப்பிட்டுவிட்டு எழுந்து விடுவான்.

பக்கத்து வீட்டுக்காரர் இவனிடம் எப்போதாவது, ''பல்பொடி தீந்துடிச்சி. கொஞ்சம் தாங்க. நாளைக்குத் தர்றேன்'' என்பான்.

''என் கவிதைகள் படிச்சிருக்கீங்களா?'' என்பான் கொடுத்துக் கொண்டு.

''அட! போங்க தம்பி. உருப்படியா ஏதாச்சும் செய்யுங்க.''

அதன் பிறகு இவன் பற்பொடி தருவதில்லை.

இளங்கோ அவன் பெயர். பி.ஏ. லிட்ரட்சர் முடித்து வழக்கமான இளைஞர்கள் போல் பயோ-டேட்டா எழுதி, போஸ்டல் ஆர்டர் இணைத்து, ஸ்டாம்ப் ஒட்டி...

ஒரு ரசிகனின் ரசிகை!

பட்டுக்கோட்டை பிரபாகர்



அக்னாலெட்ஜ்மெண்ட் கார்ட் கூட வருவதில்லை.

எந்தப் பரீட்சையில் என்ன கேட்பார்கள் எந்த இண்டர்வ்யூவ்லே என்ன கேட்பார்கள் என்பது துல்லியமாக அவனுக்குத் தெரியும்.

அவனுக்கு விடை தெரியாத ஒரே கேள்வி..

'எப்போ வேலை வரும்?'

இளங்கோவுக்கு எல்லோர்மீதும் வெறுப்பு. யாருமே அவனைப் புரிந்து கொள்ள இயலாதவர்களாக இருப்பதில் கோபம். அவன் உணர்ச்சிகளை மதிக்கத் தவறுவதற்காக வேகம்.

அவனை ஓரளவு புரிந்துகொள்ள முயன்றவன் ராகவன்.

''இளங்கோ, நீ மற்றவங்க கிட்டேர்ந்து நிறைய மாறுபடறே. ஐ லைக் இட். இயற்கையை ரசிக்கிறே. எல்லாராலேயும் ரசிக்க முடியாது. வித்தியாசமாக நினைச்சுப் பார்க்க முடியாது. நினைச்சுப் பார்க்கிறதை வெளிப்படுத்த முடியாது. உன் கவிதைகள் சிம்ப்லி சுபர்ப்.''

''தாங்க்யூ ராகவன். என்னை என்க்ரேஜ் பண்ணிப் பேசிய ஒரே ஜீவன் நீதான்.''

அதன் பின் அவர்கள் இருவரும் தினம் காலை விடியல்பொழுதில் பேசிக்கொண்டே நடப்பார்கள். ரசிப்பார்கள்.

மகிழ்ச்சியோ, துக்கமோ அதிக நாட்கள் நிலைத்தால் ஆண்டவனுக்குப் பிடிப்பதில்லை.

அன்று ராகவன் சைக்கிளில் பக்கத்தூர் சென்று, திரும்பி வரும்போது விசிலடித்துக் கொண்டே ஓட்டி எதிரே வந்த லாரியில் மோதி....

இளங்கோ சத்தமாய் அழுதான்.

'இனி யாரிடம் நான் பேசுவேன் ராகவ்? என் ரசனைகளைப் பகிர்ந்து கொள்வேன்? யாரால் புரிந்து கொள்ள முடியும்? உன் ஒருவனால்தானே வழியும் முன் கண்களைத் துடைக்க இயலும்?'

மறுபடி தன் பழைய தனிமை உலகத்துக்குச் சென்றுவிட்டான் இளங்கோ.

அந்த நாள் அவனுக்கு நல்ல செய்தி கொண்டு வந்தது.

உடைத்துப் பிரித்த கடிதத்தில், உருப்படாதவன் என்ற பட்டத்தைத் துடைக்கும் உத்தியோகம் வந்திருந்தது.

பெங்களூர், தனியார்நிறுவனம். கிளார்க். 550 ரூபாய் சம்பளம். இரண்டு தினங்களில் சேர வேண்டும்.

இளங்கோ முதன் முறையாகச் சந்தோஷப்பட்டான்.

அப்பாடா. இனி பணக் கவலை கிடையாது. ஊருக்கு அனுப்பியது போகக் கொஞ்சம் புத்தகம் வாங்கலாம். நிறையப் படிக்கலாம். பெரிய ஊர். நிறைய மனிதர்கள். நிறையப் பேசலாம், பழகலாம்.

புறப்பட்டான்.

சேஷாத்ரி ரோட்டில் ரேஸ் கோர்ஸுக்குப் பக்கமாய் இருந்தது ஆஃபீஸ். ஹோட்டலில் குளித்து, கும்பிட்டு, ஷூ வாங்கி அணிந்து கொண்டு சென்றான்.

ஹலோ...ஹலோ...ஹலோ...

வரிசையாய் ஏழு நாற்காலிகள். ஐந்தாவது அவனுடையது. தலைக்கு மேல் ஒரு பழைய ஃபேன். நான் ஓடுவேன். ஆனால் காற்றுத் தரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்க... மேஜை மேல் உலகத்து அத்தனை நிற இங்க்களும் சொட்டி மாடர்ன் ஆர்ட். ஒரு அழுக்கு அலுவலகம். ஆனாலும் புத்துணர்ச்சியாய் இருந்தான்.

லஞ்ச் இண்டர்வெல்.

''மிஸ்டர் சங்கரன், காண்டீன் இருக்கா?''

''அத்தனை பெரிய ஆஃபீஸ் இல்லை இது. பக்கத்திலே ஹோட்டல் இருக்கு. நான் அங்கேதான் போறேன். வாங்க.''

''சங்கரன் உங்களுக்குத் திருமணம்...?''

''ரெண்டு தடவை. மொத மனைவி செத்துட்டா. மூணு வருஷம் கழிச்சு ரெண்டாவது கல்யாணம்.''

''ஸாரி.''

''எதுக்கு ஸாரி. வேகமாக வாங்க. மழை வருது.''

''எனக்கு மழைன்னா ரொம்பப்பிடிக்கும்!''

சங்கரன் திரும்பி ஒரு மாதிரியாகப் பார்த்தான். ஹோட்டல் வர... உள்ளே சென்று அமர்ந்து ஆர்டர் செய்து, காத்திருந்து...

''நேத்து இரவு பெங்களூர் வந்து இறங்கினவுடனே ப்ளாஷ் ஆச்சு சார் இந்தக் கவிதை. நைட்டே உட்கார்ந்து எழுதினேன். சொல்லட்டுமா?''

''ஒன் மினிட். சைக்கிள் நனையுது. தூக்கி ஓரமா வச்சிட்டு வர்றேன்.''

இளங்கோ எரிச்சல்பட்டான்.

சங்கரன் திரும்பி வந்தான்.

''சொல்லுங்க.''

''கவிஞர் தந்தை
காலை வானத்தை
நீல நெடுந்துணி

''திருப்பதி ஒண்ணும் இல்லப்பா! என் மனைவி வைத்திருந்த ஹெயர் ரிமூவர் ஆயிலை ஹெயர் ஆயில் என்று நினைத்துத்தேய்த்து விட்டேன்!''



என்று வியக்க....
குழந்தை பாவம்
உடனே நம்பி....''
''உங்ககிட்ட மேட்ச் பாக்ஸ் இருக்கா?''
''இல்லே. இன்னும் கவிதை முடியலே சார். அப்புறம்....''
''மழை நின்னுடுச்சி. மிச்சத்தை அப்புறம் சொல்லுங்களேன்.''
சங்கரன் சைக்கிளில் செல்ல...
இளங்கோ எச்சில் விழுங்கினான்.

அலுவலகத்தில் அத்தனை பேர்களும் டேஸ்டில் சங்கரனின் கார்பன் காப்பிகளாக இருந்தார்கள். இளங்கோவுக்கு எல்லோர் மீதும் வெறுப்பு வந்தது.

என்னைப் புரிந்து கொள்ள அல்லது நான் புரிந்துகொள்ளும்படி சொல்ல... நான் சொல்வதை ரசிக்க அல்லது நான் ரசிக்கும் அளவுக்குச் சொல்ல யாருமே இல்லையா?

வெளிவந்த கவிதை இதழ்களைக் கையில் வைத்துக் கொண்டு, சொல்லிச் சந்தோஷப் பட ஆளில்லாமல் தவித்தான். எங்கே இருக்கிறான் என் இனிய நண்பன்? என் லைக் மைண்டட்? என் பிரதிபலிப்பு?

அவன் தங்கியிருந்த அறைக்குப் பக்கத் தறைக்காரன் அன்று, ''சார், டைம் என்ன?'' என்றான்.

''ஏழு. நீங்க காலேஜா?''

''காலேஜ் ஸ்டுடன்ட் இல்லே; நான் கமர்ஷியல் ஆர்ட்டிஸ்ட்.''

''வெரி குட். எதையெல்லாம் வரைவீங்க? சூரிய உதயம், தாய்மை, மனப் பிளவு, உடைந்த இதயம், ஒற்றைப் பனை மரம்... இதெல்லாம் வரைஞ்சிருக்கீங்களா?''

''ஓ, வரையலாமே! ஸ்கொயர் ஃபீட்டுக்குப் பத்து ரூபா ஆகும். நீங்க எதாச்சும் டிசைன் வச்சிருக்கீங்களா? நானே போடட்டுமா? ஃப்ரேம் போட்டுத் தர்றதுன்னா தனி சார்ஜ்.''

''ஐய்யய்யோ... நான் எனக்குக் கேட்கலே. நீங்க பர்சனலா உங்க ஆத்ம திருப்திக்காகப் படம் போடறதில்லையா?''

''என்ன ஸார் உளர்றிங்க? கான்வாஸ், கலர் எல்லாம் என்ன விலே? காசு எவன் தருவான்? ஆத்ம திருப்தியாவது, ஒண்ணாவது? ஆர்டர் கொடுத்தால் வரைவேன். விடுங்க சார்.''

இளங்கோ தீவிரமாகக் கவலைப்பட்டான். எப்படி இந்தக் கலைஞன் இயந்திரமானான்?

என்னைப் போல் நினைப்பவன், செயல்படுபவன் எவனுமே இல்லையா?

இருந்தாள். ஆம். பெண்தான்.

பஸ் ஸ்டாப்பில், பார்க்கில் சந்திக்கவில்லை. ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் இவன் ஒரு பக்கெட் வாங்கியபோது, அவள் பார்க்கர் பேனா பார்த்துக் கொண்டிருந்தாள். அருகே ஒரு தோழி.

''நைஸா எழுதுமா?'' என்றாள்.

''கவிதை எழுதுமா?'' என்றாள் தோழி.

''சும்மா இருடி'' என்றாள்.

இளங்கோ திரும்பிப் பார்த்தான். அவள் கையில் ஒரு கவிதைப் புத்தகம். இளங்கோ மிக விரும்பும் ரஞ்சனியின் கவிதைத்



தொகுப்பு. அவன் விழிகள் விரிந்தன. இவளும் ரஞ்சனியை ரசிப்பவளா?

''லேட்டஸ்டா எதுவும் எழுதுனியா?'' என்றாள் தோழி.

''போன மாசம் வந்ததுதான். ஆனா லேட்டஸ்டா ஒண்ணு ரசிச்சேன்.''

''என்ன?''

''இளங்கோன்னு ஒருத்தரோட கவிதை. ''கவிஞர் தந்தை... காலை வானத்தை...நீல நெடுந்துணி.... என்று வியந்தார். குழந்தை பாவம்... உடனே நம்பி... ஓ, வானமே...நீ நீலத் துணியாமே... ஒரு துண்டைக் கிழித்துப் போடேன்... யூனிஃபார்ம் தைக்கணும். நாலு நாளாய் ஸ்கூலுக்குப் போகலே..... ஃபண்டாஸ்டிக் இல்லே?''

இளங்கோ சிலிர்த்தான்.

அவர்களை நெருங்கினான்.

''எக்ஸ்க்யூஸ் மி, இப்ப நீங்க சொன்ன கவிதையை யார் எழுதினது?''

''இளங்கோன்னு ஒருத்தர்.''

''அவரைச் சந்திச்சிருக்கீங்களா?''

''இல்லே. சந்திக்க விரும்பினதுண்டு.''

''இப்போ சந்திக்கிறீங்களா?''

''எங்கே இருக்கார்?''

''நான்தான்.''

''ஓ! ஓ! ரியலி?''

அவள் கண்கள் தட்டுத் தடுமாறி வெளியே விழுந்து விடும்போல விரிந்தது.

அப்புறம்..இரண்டு நாட்கள் கழித்து அந்த ஹோட்டலில்...

''நானும் கொஞ்சம் கவிதை எழுதுவேன்'' என்றாள் ஹேமா.

''வெரி குட். ஒண்ணு சொல்லுங்களேன்'' என்றான் இளங்கோ.

''மரங்கள்—
பூமி மனிதனின்
உடல் ரோமங்கள்.
உலகப் பின்குஷனில்
குத்தப்பட்ட குண்டூசிகள்....''

''நல்லா இருக்கு மிஸ் ஹேமா. நிறைய எழுதுங்கள்.''

''நீங்க என்ன செய்யறீங்க?''

''ஒரு வெண்டைக்காயைத் தூக்கி இந்தப் பக்கத்திலேர்ந்து அந்தப் பக்கம் வைக்கிறதுக்கு யானை தேவையா?''

''தேவையில்லே.''

''நான் யானை. என் வேலை வெண்டைக்காய். என் படிப்புக்கும் வேலைக்கும் பொருத்தமே இல்லாத கூட்டல், கழித்தல் வேலை. கவிதைன்னு உயிர். பேசிக்கிட்டே இருப்பேன். கேட்கத்தான் ஆளில்லே.''

''ஏன் இல்லே? நான் இருக்கேன். என் கிட்டே பேசுங்க.''

இளங்கோவுக்குச் சந்தோஷமாகஇருந்தது.

''உங்க அப்பா என்ன பண்றார்?''

''அவரோட காருக்கு ஒரு மாசத்துக்கு ஒரு கலர் மாத்தறார். ப்ளடி பணம் நிறைய இருக்கு. ஒரு நாளைக்கு வீட்டுக்கு வரணும் நீங்க.''

''கண்டிப்பா வரேன்.''

சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது, சாலையோரம் சென்ற ஒரு நாய்க்குட்டியைப் பார்த்து,

''முயலாட்டம் இருக்கு''

''முயலாட்டம் இருக்கு.''

—இருவரும் ஒரே நேரத்தில் சொல்ல...

''டெலிபதி!'' என்றான் இளங்கோ.

அப்புறம் ஹேமாவைத் தினம் பார்த்தான்.

இயற்கையை ரசிப்பாள் அவள். அதைக் கவிதையாய் வடிப்பான் இவன். இவன் கவிதையை ரசிப்பாள் அவள். விமரிசிப்பாள்.

இவனுக்குச் சட்டை அவள் செலக்ட் செய்தாள். அவளுக்குச் சாந்து இவன் செலக்ட் செய்தான்.

''இப்படி ஒரு நட்புக்காக ஏங்கினேன்'' என்பான் இளங்கோ.

அன்று அவள் வந்தாள். சாக்லேட் தந்தாள்.

''எனக்குக் கல்யாணம் ஃபிக்ஸ் ஆகிருக்கு. மாப்பிள்ளை இதே ஊர். இண்டஸ்ட்ரியலிஸ்ட் மாதவன் புதல்வர் ப்ரேம்குமார். அடுத்த மாசம் ஏழாம் தேதி கல்யாணம்'' என்றாள்.

உருவான பானை உருக்குலைந்தது போல... பறந்த பட்டம் நூல் அறுந்தது போல... மனசில் என்னவோ விட்டுப் போனதாய் உணர்ந்தான்.

''வாழ்....த்துக்கள்.''

''கல்யாணம் ஆனவுடனே ஜெர்மனி போறோம். அங்கேயே செட்டில் ஆகிறோம்.''

''அப்போ...அப்போ... என்னைப் பிரிஞ்சு போறீங்களா ஹேமா?''

''என்னைக்காச்சும் ஒரு நாள் கல்யாணம் நான் பண்ணிக்கிட்டுத்தானே ஆகணும்!''

''ஏன் ஹேமா, நம்ம நட்பு அவ்வளவுதானா?''

''கடிதங்களில் தொடரலாமே — அவர் சம்மதிச்சா.''

''உங்களால் என் நட்பை மறந்துற முடியுமா?''

''அதெப்படி முடியும்? என்ன இருந்தாலும் எப்பவும் நான் உங்க ரசிகைதான்.''

''இன்னொரு தடவை சொல்லுங்க.''

''எப்பவும் நான் உங்க ரசிகைதான்.''

ரசிகை! வெறும் ரசிகை! அவ்வளவுதானா நமக்குள் இருந்தது நட்பில்லையா? வெறும் ரசிப்புத்தானா?

ஹேமா, உனக்கு ஆயிரம் நண்பர்கள் கிடைப்பார்கள்.

ஆனால்... எனக்கு நீ ஒருத்திதான் நண்பி.

இளங்கோ அமைதியாய் நடந்தான்.

மறுபடியும் இளங்கோ ஒரு நண்பனைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

ஒரு வேண்டுகோள்!

உங்களில் யாராவது இளங்கோவின் ரசனைகள், கருத்துக்கள் கொண்ட யாரையாவது சந்தித்தால்... அவரை,மன நோய் மருத்துவமனையில் சுவரெல்லாம்'என் நண்பா, நீ எங்கே இருக்கிறாய்?' என்று எழுதிக் கொண்டிருக்கும் அவனிடம் அழைத்துச் செல்லுங்கள்.

ஒரு வேளை, குணாசலாம்.

ஒருவர்: நேற்று பஸ்ஸிலே ஒரு 'பிக்' பாக்கெட்டைப் பார்த்து,விட்டேன் பார் ஒரு குத்து!

மற்றவர்: அட, அப்புறம்?

ஒருவர்: டாக்டரிடம்போய்க் கையில் கட்டு போட்டுக் கொண்டேன்!





● கல்கி விடுமுறை மலர் கண்டேன். சுஜாதா, கஸ்தூரிரங்கன் ஆகியோரின் டெல்லி—சென்னை விஜயம் தமாஷாக இருந்தது. கோவி மணிசேகரனின் 'கூடுதுறை' சிறுகதைக்குப் பாராட்டுக்கள். மற்ற கதை, கவிதைகள், துணுக்குகள், புகைப்படங்கள் எல்லாமே அருமை. எதைப் பாராட்டுவது, எதை விடுவது?
கோபி இளஞ்சேரன்

● நஸியா ஹஸன் தேன் குரலைப் போன்றே அட்டைப் படமும் அருமை. குர்பானி பாடகி என்பதைத் தவிர வேறெதுவும் அறியாத என்போன்றோர்க்கு ''சிக்கி''யின் கட்டுரை முழு விளக்கம் அளிப்பதாக விளங்கியது.
திருநெல்வேலி-1 கி. சதாசிவம்

''உதவாக்கரைக் கார்ப்பரேஷன்!'' தலையங்கம் படித்ததும், நாடாளு மன்றத்தில் உறுப்பினர் ஒருவர் 'Food Corporation of India அல்ல, Food Corruption of India' என்றது நினைவுக்கு வந்தது.
மேட்டுப்பாளையம் எம்.பி. ரத்னகுமார்

● ம. பொ. சி. அவர்களின் எழுத்தில் பாரதியை நேருக்கு நேர் தரிசிக்க முடிகிறது. பாரதியின் பாடல்களைக் குறிப்பிட்டு அவர் தரும் விளக்கங்களில் மனமுருகி, நெகிழ்ந்து போகிறோம். சிலிர்க்க வைக்கும் பகுதி.
ஸ்ரீரங்கம் ஆர். ஸ்ரீனிவாசன்

● ம. பொ. சி.யின் ''மனச்சாட்சி எழுப்பிய வினா'' படித்தேன். கி. பி. 1000ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே அந்நியர் இந்தியாவில் படையெடுப்பின் மூலம் (கஜினி முகமது) புகத் தொடங்கி விட்டனர். அந்நியர் ஆட்சி தொடங்கப்பட்டது பாபர் காலத்தில் அல்ல. பாபர் 10ஆம் நூற்றாண்டில் வந்தார் என்று வேறு தவறாகக் கூறுகிறார். பாபர் இந்தியாவுக்கு முதலில் வந்தது கி. பி. 1526ல். பாரதியார் சரியாகத்தான்பாடியிருக்கிறார், அவர் காலத்தில் அந்நியர் ஆட்சி இந்தியாவில் தொடங்கி 921 ஆண்டுகள் ஆகி விட்டன. ஓசை அழகுக்காகத் தம் பாட்டில் ''ஓராயிரம் வருடம்'' எனப் பாடினார்.
பாபநாசம் சிவ. பார்த்திபன்

● ரசித்துப் பார்த்துப் படத்தை விமரிசனம் செய்யத் தெரியாத குட்டி கிருஷ்ணன் ''கல் தூண்'' படத்தைப் பற்றிச் சற்று அதிகமாகவே குறைகளை எழுதியிருக்கிறார், மேஜர் டைரக்ஷனில் மட்டுமல்ல எல்லா விஷயங்களிலும் மேஜர்தான்!
ஈரோடு-10 மேஜர் தாசன்

● ''கல் தூண்'' பட விமர்சனம் மற்ற பத்திரிகைகளிலிருந்து மாறுபட்டு நடுநிலையுடன் அமைந்திருந்தது. இப்படத்தின் மூலமாக டைரக்டராக மாறியிருக்கும் மேஜர் சுந்தரராஜன் மேலும் ஆர்வத்துடன், அக்கறையுடன் செயல்பட உங்களது விமர்சனம் உதவும்.
போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

● ஏப்ரல் மாத இறுதிவரை உள்ள எல்லாப் பத்திரிகைகளையும் புத்தகக் கடையில் போட்ட பிறகு ''பழைய புத்தகங்களைத் தேடி ஆசிரியர் பெயரைக் கண்டு பிடியுங்கள்'' என்ற போட்டியை அறிவித்து ஒரு குண்டைத் தலையில் போட்டீர்களே இது நியாயமா?
சென்னை பத்மா மணி


● 'ஸயன்ஸ் ஃபிக்ஷன்' என்பது விஞ்ஞான வளர்ச்சியைச் சித்திரித்துக் காட்டுவதாய் எதிர்காலத்தில் அறிவியல் முன்னேற்ற நிலையைத் தொலை நோக்குடன் எடுத்துரைப்பதாய் இருக்க வேண்டும். ஏதோ கிஜாட், பூச்சி ராக்கெட் என்ற பெயர்களை உபயோகித்துக் கேலிக்கூத்துச் செய்வதல்ல.
கோலார் ஸ்ரீராமன்

வட்டமேஜை

● ''இரண்டு கிஜாட்டர்கள்'' நல்ல நகைச் சுவைச் சிறுகதை. என்னைச் சிரிப்பில் ஆழ்த்தியது. செல்லத்தின் ஓவியமோ உம்மணா மூஞ்சியைக் கூடச் சிரிக்க வைத்து விடும்!
லால்குடி ஆர். சிவராஜ்

● இந்த வாரம் 'நொறுக்குத் தீனி' ரொம்பப் பிரமாதம் போங்கள். 'இந்த வார டீ.வி. சினிமா' என்ற பகுதியை வாரந் தோறும் தவறாமல் வெளியிடுங்கள்.
எஸ். ஆர். பேட்டை அ. ராஜா

● விக்கிரமாதித்தன் விமரிசனத்தைப் படித்ததும் எனக்குத் தோன்றியது: இந்த 81ல் மட்டுமல்ல 62லும் எம். ஜி. ஆர். எவ்வளவு எதிர்ப்புக்களைச் சந்தித்து முன்னேறி இருக்கிறார்!
திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி



சிவப்பு விளக்கு

ஜெயவண்ணன்

காலை மணி எட்டு இருக்கும்.

வெளியே டாக்ஸியின் உறுமல் கேட்டது. ரவி அறையை விட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தான்.

இரண்டு பேர் டாக்ஸியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்த ரவியின் மனம் மகிழ்வால் மலரத் தொடங்கியது.

''வாடா அருண்... வாம்மா...'' என்ற அந்த இருவரையும் வரவேற்ற ரவி, நித்யாவைப் பார்த்தான். பின், ''நித்யா, இவன் தான் — நான் அடிக்கடி சொல்வேனே, அந்த 'கமர்கட்டு' அருண். கல்லூரியில் படிக்கும் போதும் இவன் கமர்கட்டை விடுவதில்லை. எனக்கு இருக்கும் ஒரே உயிர் நண்பன். இவங்க மிஸஸ் ரேவதி அருண்...'' என்று அவர்களைத் தன் மனைவி நித்யாவுக்கு அறிமுகப்படுத்தினன்.

''பின்,ஒரு கடிதம் எழுதிவிட்டு வந்திருக்கக் கூடாதா? நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே...'' என்றான் அருணைப் பார்த்து.

''திடீரென்று உன்னைப் பார்க்கணும்போல் இருந்தது. புறப்பட்டு வந்துட்டோம்.''என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னான் அருண்.

அருண் நித்யாவைப் பார்த்தான். அவள் பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

''போன வருடம் நடந்த இவன் திருமணத்துக்கு நான் போக முடியலே. அது திடீரென்று நடந்த திருமணம். அதன் பின் தம்பதிகளாய் இப்போதுதான் பார்க்கிறேன்'' என்ற ரவி, ''நித்யா, உன் திறமையை எல்லாம் காட்டி 'ஏ-ஒன்'ஞகச் சமைத்து இவனைத் திணறவை பார்க்கலாம்'' என்றான் சிரித்தபடி.

நித்யா உண்மையிலேயே அருணைப் பார்த்தது முதல் திணறிக் கொண்டிருந்தது அவனுக்கு எங்கே தெரியப் போகிறது?

காலை டிபன் முடிந்தது.

''அருண். ஸோ ஸாரிடா...'' என்று மெல்லத் தயங்கிக் கொண்டே பேச்சைத் தொடங்கினன் ரவி.

''என்னடா?'' என்று அவனைப் பார்த்தான் அருண்.

''ம்... ஒண்ணுமில்லே. நாளைக்கு எல்.ஏ.ஓ. ஆடிட். ஆபீசிலே கொஞ்சம் வேலை, நீயும் உன் மனைவியும் வந்திருக்கும்போது ஆபீ போக விருப்பமில்லைதான். ஆனல், தவிர்க் முடியலே. போயிட்டு மதியம் லீவு போ டுட்டு வந்துடறேன்...''

''இதுக்கு ஏண்டா தயங்கறே? போடா. போயிட்டு வாடா...'' என்றான் அருண் சிரித்துக் கொண்டே.

ரவி புறப்பட்டுப் போய்விட்டான்.

காலை மணி பதினென்று இருக்கும்.

நித்யா சமையலில் மூழ்கியிருந்தாள் அருணின் மனைவி ரேவதி அவளுக்கு உத செய்து கொண்டிருந்தாள்.

''ரேவதி, நீ போய்க் குளிச்சிட்டு வ துடேன்.'' என்று நித்யா சொல்ல, ''சரி'' என்று புறப்பட்ட ரேவதி, துணிகளை எடுத்து கொண்டு கிணற்றங்கரையை நோக்கி நடந்தாள்.

அவள் சென்ற சற்று நேரத்துக் கெல்லாம், ''ரேவதி'' என்று குரல் கேட்கவே, நித்யா திரும்பினாள்.

கதவருகே அருண்.

''ரேவதி குளிக்கப் போயிருக்கா'' என்ற நித்யா, அவனது கண்களைச் சந்திப்பதைத் தவிர்க்க முயன்றாள்.


''நித்யா, என்மேல் உனக்குள்ள கோபம் இன்னும் தீரலே போலிருக்கு.''

''கோபமா? எனக்கா?'' என்று கேட்ட நித்யா, குரலில் விரக்தி இழையோடச் சிரித்தாள்.

''நடந்து முடிந்த அந்தச் சம்பவங்களை நீ கேட்டால் என்மேல் நீ கொண்டிருக்கும் இந்தக் கோபம் ஓரளவாவது நிச்சயம் குறையும். ப்ளீஸ், பேச எனக்குக் கொஞ்சம் சந்தர்ப்பம் கொடு...''

''.....''

அவளது மௌனத்தை அவன் சம்மதமாக்கிக் கொண்டான், பின் தொடர்ந்தான்.



''அண்ணுவுக்குத் திருமணம்னு உன்
ட்டே சொல்லிட்டு ஊருக்குப் போனேன்.
வன் திருமணம் முடிஞ்சதும், அம்மா
லம் அப்பா கிட்டே உன்னைப் பற்றிக் கூறிச்
மதம் வாங்கிக்கலாம்னு நம்பியிருந்தேன்.
க்கியமான நண்பர்களை நேரில் அழைக்கத்
ருமணத்துக்கு முதல் நாள் மாலை பத்திரிகை
பாடு அண்ணன் வெளியே போனுன். விடி
ற்காலை நாலு மணிக்கு `முகூர்த்தம்.
வளியே போன அண்ணன் திரும்பி வரலே.
கூர்த்த நேரம் கடந்து கொண்டிருந்தது.
ல்லோரும் அண்ணனைக் காணுமல்
வியாய்த் தவித்துக் கொண்டிருந்
தாம்.

'இந்தத் திருமணம் தடைபட்
டால் என் பெண்ணுடை வாழ்க்கையே
பாழாயிடும். உங்க இரண்டாவது மகனை
விட்டு என் மக கழுத்திலே தாலி கட்டச்
சொல்லுங்க'ன்னு பொண்ணுடை அப்பா
எங்க அப்பா அம்மா காலில் விழாத குறை
யாகக் கெஞ்சினுர். எங்க உறவுக்காரப்
பெரியவர்கள் பலரும்
அதுவே சரியென்று
ஆமோதித்து, பல
முன் உதாரணங்களை
எடுத்துச்சொன்னுங்க.
கொஞ்ச நேரம் தடு



மாறிய என் அப்பா, அம்மா என்னை இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கச் சொன்னாங்க. நான் மறுத்தேன். அம்மா என்னைத் தனியே அழைச்சுக்கிட்டுப் போய், 'ஒரு பொண்ணோட மனசு இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும். இந்தக் கல்யாணம் நின்னுட்டா, கல்யாணப் பொண்ணு தற்கொலையைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் வரமாட்டா. உன் அண்ணனாலே நம்ப குடும்பத்துக்கு ஏற்பட இருக்கிற பழியை நீதாண்ட துடைக்கணும்'னு கெஞ்சினாங்க. அம்மாவோட அந்தக் கட்டளையை என்னால் மீற முடியலே. ரேவதியோட கழுத்திலே தாலியைக் கட்டி மனைவியாக்கிக்கிட்டேன்....''

அவன் சொன்னதைக் கேட்ட நித்யா, ஒரு கணம் நிதானித்தாள். பின், ''உங்க அண்ணன்?'' என்று கேட்டாள்.

''நண்பர்களைப் பார்க்கச் சென்றவருக்கு அவரது அருமை நண்பர்கள் குடிப்பதற்குக் கொஞ்சம் 'தண்ணீர்' கொடுத்திருக்கிறார்கள். மணமகனாகப்போகிறவர் அல்லவா? மகிழ்வை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். கொஞ்சம் 'ஓவர் டோஸ்'.' மயங்கி விழுந்த வரை காலை பத்து மணிக்கு அந்த அருமை நண்பர்களே வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்....''

''அப்படியா?'' என்று வியந்து நித்யா, ''உண்மை இப்போதுதான் எனக்குப் புரியுது'' என்றாள்.

''போகட்டும். நீ எப்படி இருக்கே?''

''சந்தோஷமாக இருக்கேன். என் கணவர் எனக்கு எந்தக் குறையையும் வைக்கவில்லை....''

''எப்படியோ, நடந்து போனதை மறந்து நீ சந்தோஷமா இருந்தா அதுவே போதும்.''

''மறந்துட்டுத்தான் இருக்கேன்.'' என்ற நித்யா, ''ரேவதி....''' என்று இழுத்தாள்.

''நல்ல பெண். தட்ஸ் ஆல்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் அருண்.

மறுநாள் மாலை.

அருணையும் ரேவதியையும் ரயிலேற்[றி] அனுப்பிவிட்டு வீடு திரும்பினான் ரவி.

நித்யா காப்பியுடன் எதிரே வந்[து] நின்றாள்.

காப்பியை ஆற்றிக் கொண்டே, ''யாரை நாம் எந்தச் சந்தர்ப்பத்தில் சந்திப்போம்[னு] யாராலும் சொல்ல முடியாது'' என்றா[ன்] ரவி.

''என்ன சொல்றீங்க?''

''ரெண்டு பேர். அவுங்க ரெண்டு பேரு[ம்] ஒருத்தரை ஒருத்தர் விரும்பினாங்க. கல்யா[ண]ணம் செய்துக்கலாம்னு முடிவு செய்திரு[ந்]தாங்க....''

அவன் சொல்லச் சொல்ல நித்யாவி[ன்] மனத்தில் மெல்ல மெல்லப் பயம் சூழ[த்] தொடங்கியது.

விஷயம் தெரிந்துதான் இவர் கேட்கிறாரா? அருண் உண்மையை இவரிடம் கூ[றி] விட்டாரா?

நினைக்கும்போதே நித்யாவின் உடம்[பு] மெல்ல நடுங்கி ஓய்ந்தது.

'நானும் அருணும் மனத்தளவில்தா[ன்] விரும்பினோம்'னு சத்தியம் செய்தாலும் ஆண் மனம் சந்தேகப்படுவது இயல்புதானே?'

நிம்மதியற்ற கடல் அலையாய் நித்யாவின் மனம் தடுமாறத் தொடங்கியது.

ரவி தொடர்ந்தான்: ''நானும் ரேவதியு[ம்] மனசார விரும்பினோம். எனக்கு நிரந்தரமான வேலை இல்லை என்று காரணம் காட்டி ரேவதி[]யின் அப்பா சம்மதம் தர மறுத்தார். அவளை என் நண்பனின் மனைவியாக இப்போ சந்திப்[]பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே.''


நித்யா திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள்.

''ஆமாம், நித்யா. நான் இந்த உண்மையை உன்கிட்டே முன்பே சொல்லலே. இப்போ சொல்லாமலும் இருக்க முடியலே. எப்படியோ ரேவதியும் அருணும் சந்தோஷமா இருக்காங்க. அதுவே போதும்.''

அவன் பேச்சைக் கேட்ட நித்யா அப்படியே அதிர்ந்து போய் நின்றுவிட்டாள்.

புகழ் பெற்ற நீக்ரோ அறிஞரான புக்கர் வாஷிங்டன் ஒரு முறை அவசரமாக ரயிலைப் பிடிக்க வேண்டியிருந்தது! ஒரு குதிரை வண்டிக்காரனை அணுகினார். ஆனால் வண்டிக்காரனோ "நான் கறுப்பர்களுக்கு வண்டி ஓட்டுவதில்லை!" என்று மறுத்து விட்டான். புக்கர் அவனைக் கெஞ்சி, தாமே வண்டி ஓட்டுவதாகவும், அவனை உட்கார்ந்து வரும்படியும் கேட்டுக் கொண்டார். வண்டிக்காரன் "சரி" என, வண்டியைத் தாமே ஓட்டிக் கொண்டு போய் ரயிலைப் பிடித்தார்.

- எல். ரவிசங்கர்



வருவார். நாடகநண்பர்கள் எல்லோரும் ஒன்று கூடி விவாதிப்போம். இரவு மணி ஒன்பதானல் எல்லோரும் வீட்டுக்குத் திரும்புவோம்.

''ஒரு நாள் 'மேஜர் சந்திரகாந்த்' நாடகத்தில் நடித்து விட்டு எப்பொழுதும் போல் திருவல்லிக்கேணி சென்றேம். அங்கு தொலைபேசி என்னை அழைத்தது. வீட்டிலிருந்து பேசினர்கள். அவர்கள் அளித்த செய்தி என் மாமியார் காலமாகி விட்டார் என்பது தான். அவர் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். உடனே வீட்டுக்கு விரைந்தேன்.

''என் முதல் பெண்ணுக்கு அவ்வப்பொழுது ஃபிட்ஸ் வரும். நான் வீட்டுக்கு வரவும் என் மகள் என் மனைவியின் மடியிலேயே மடிந்து கிடக்கவும் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

''ஒரு புறத்தில் மாமியார், மற்றொரு புறத்தில் மகள். என்னைவிட என் மனைவியை நினைத்தால்தான் இன்றுகூட எனக்குச் கண்ணில் ஜலம் வந்துவிடும். தன்னைப் பெற்ற தாயையும், தான் பெற்ற மகளையும் ஒரே நாளில் அடுத்தடுத்து, ஒரு மணி நேரத்துக்குக் குறைவான அவகாசத்தில் இழந்தாள் அவள். யாரை யார் தேற்றுவது என்றே புரியவில்லை. ஒருசிலர், 'நீங்கள் இருப்பது ராசியில்லாத வீடு. அதனல் வீட்டைக் காலி செய்யுங்கள்' என்றார்கள்.

'நான் வந்து இரண்டு வருஷங்களுக்குப்பிறகுதான் இது நடந்திருக்கிறது. 'வீட்டைக் குற்றம் சொல்லி என்ன பயன்? ஏன் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார்கள்?' என்று எண்ணினேன்.

''நான் இப்போது வந்திருக்கும் புதிய வீட்டைப் பற்றியும்தான் இதே போல் குற்றம் சாட்டுகிறார்கள். 'அங்கு போன பிறகு தான் உங்களுக்கு மார்க்கெட் சரியாக இல்லை' என்கிறார்கள். ஆனல் புதிய வீட்டில்தான் சிறந்த நடிகருக்கான தமிழக அரசின் பரிசு எனக்குக் கிடைத்தது. அதனல் வீட்டில் ஏதும் இல்லை. எல்லாமே மனம் என்ற வீட்டில்தான் இருக்கிறது.

''நான் முன்பு வசித்த 'இதே வீட்டில் என் நெருங்கிய நண்பரும், என் நடிப்பில் மிகவும் அக்கறை உள்ள வருமான இயக்குனர் பாலசந்தரும் வசித்திருக்கிறார். நான் வாழ்ந்த அதே போர்ஷனில்தான் அவரும் வாழ்ந்தார். இந்த ஒரு காரணத்துக்காகவே நான் இந்த வீட்டை மிகவும் நேசிக்கிறேன், மனத் திருப்தியோடு வாழ்கிறேன்'' என்றார் ஸ்ரீகாந்த்.

பேட்டி: சலன்
புகைப்படம்: ஏ.வி. பாஸ்கர்

■ ''இந்த நாலு சுவர்களுக்கிடையில் நான் ராஜா! படிப்பது பிடித்தமான பொழுதுபோக்கு.''



■ ''மனைவிக்கு உதவுகிறேன் என்ற பெயரில் அதிக கஷ்டங்களை நான் அவளுக்கு அளித்தது இந்தச் சமையலறையில்தான்!''

நடந்து வந்த பாதை





ஒரு வீடு பூட்டிக்கிடக்கிறது

ராஜேஷ்குமார்

ஹவுஸிங் யூனிட்டுகளைப் பிரசவித்துக் கொண்டிருந்த கோவை நகரின் வால் பகுதிக்கு ரத்தினம் வந்தபோது இரவு மணிபத்து.

அமாவாசை கழிந்த ஐந்தாவது நாள் அது. கீரணிப் படிக் கீற்ருய்– பிறைச் சந்திரன் மேற்குத் திசையில் சிறிது நேரம் சோம்பலாய்ப் பிரகாசித்து விட்டு எப்போதோ அடங்கி விட்டிருந்தான். கரி மூட்டைகளை அடுக்கின மாதிரி அந்தப் பிராந்தியம் முழுவதும் இருட்டு உட்கார்ந்திருந்தது.

ரத்தினம் திடுக்கிட்டுப் பழக்கப்பட்ட தன் கண்களை நாலா பக்கமும் சுழற்றினுன். சுழற்றியபடியே நடந்தான்.

எந்த வீட்டைச் சொன்னுன் ஜோஸ்?

தன் சட்டைப் பைக்குள் கையை விட்டான் ரத்தினம். ஜோஸ் எழுதிக் கொடுத்த காகிதத் துண்டை எடுத்தான். பாண்ட் பாக்கெட்டில் இருந்த பேனு டார்ச்சை எடுத்து அதனை உயிர்ப்பித்துக் காகிதத் துண்டின் மேல் வெளிச்சத்தைக் கக்கச் செய்தான்.

25-ஏ, நேதாஜி ரோடு.

முன்னுல் கொய்யா மரம் இருக்கும்.

பச்சைப் பெயிண்ட் அடிச்ச காம்பவுண்ட் கேட்.

நாய் இல்லை.

ஜோஸ் என்னவோ விவரமாகத்தான் எழுதிக் கொடுத்திருந்தான். ஆனுலும் இந்த அட்டைக் கரி இருட்டில் திசைக்கொன்ருய் நிற்கும் ஒரே மாதிரியான் வீடுகளில் அந்தக் குறிப்பிட்ட வீட்டைக் கண்டு பிடிக்க ரத்தினம் திணறினுன், 'நேதாஜி ரோடு எது?' என்று யாரையாவது கேட்கலாமென்ருல் வீதியில் ஒரு மனித ஜீவனைக்கூடக் காணேம்...

நேரமாக ஆக ரத்தினத்துக்குக் கோபமாய் வந்தது.

சரியாய் இரண்டு மணி நேரத்துக்கு முன்பு....

கலக்கல் கந்தப்பனின் சாராயக் கடையில் ஒருகையில்பன்னீராய்த் ததும்பி வழியும் சாராய டம்ளரோடும் மறு கையில் காரமான கருவாட்டுத் துண்டோடும் சொர்க்கத்தில் மிதக்கத் தயாராகிக் கொண்டிருந்த ரத்தினத்தை ஜோஸ் வந்து அழைத்தான்.

''ரத்தினம் கொஞ்சம் வெளியே வா... உன்கிட்ட ஒரு முக்கிய மானவிஷயம் சொல்லணும்....''

''என்ன ஜோஸு....? என்ன விஷயம்?''

ஜோஸ் கேட்டான்: ''சாயி பாபா காலனி கவுண்டம்பாளையம் பக்கம் நீ என்னிக்காவது போயி உன்னுடை தொழிலைக் காட்டியிருக்கியா ரத்தினம்?''

''இல்லை...'' — தலையை ஆட்டினுன் ரத்தினம்.

''ரத்தினம்... ஒரு வீடு.... இன்னிக்குக் காத்தாலே பத்து மணியிலிருந்து பூட்டிக்கிடக்குது. நாளைக் காலை வரைக்கும் பூட்டிக் கிடக்கும். இன்னிக்கு ராத்திரி நீ அந்த வீட்டுக்குள்ளாறப் பூந்தா பெரிய தேட்டையே போடலாம்!''

மோவாயைத் தேய்த்தான் ரத்தினம். ''அது யாரோட வீடு?''

''ஒரு ஜின்னிங் பேக்டரி முதலாளியோட வீடு. பேரு ஜோதி தயாள்.''

ரத்தினம் கேட்டான்: ''நாளைக் காலை வரைக்கும் வீடு பூட்டியிருக்கும்னு என்ன நிச்சயம்? திடீர்னு பாதி ராத்திரியில வந்துட்டாங்கன்னு?''

''நிச்சயமா அவர் வரமாட்டார். இவ்ளவு உறுதியா நா சொல்றதுக்குக் காரணம் இருக்கு. அந்த ஜோதி தயாள் இன்னிக்குக் காலேல கார்ல மெட்ராஸ் புறப்பட்டுப் போனப்ப நான் பக்கத்திலிருந்த பெட்டிக் கடைல பீடி வாங்கிட்டிருந்தேன். அப்பத்தான் அவர் கார்ல புறப்பட்டுட்டிருந்தார். எதிர்ல வந்த அவரோட நண்பர் ஒருத்தர் ''எங்க போறீங்க ஜோதி தயாள்''ன்னு கேட்டார். உடனே அவர் மெட்ராஸுக்கு ஒரு அவசர விஷயமாப் போறதாகவும் நாளைக்குக் காலேலதான் திரும்பி வர முடியுமுன்னு சொல்லிட்டிருந்தார்....''

''அவுங்க வீட்ல வேற யாரும் இல்லையா?''

''இல்லையாம்! நான் அந்தப் பெட்டிக் கடைக்காரனை அரசல் புரசலா விசாரிச்சேன். இருந்த பொண்டாட்டி மூணு மாசத்துக்கு முன்னாடிதான் மண்டையைப் போட்டாளாம்...''

''வேலைக்காரங்க?'' — ரத்தினம் இழுத்தான்.

''இல்லையாம். ஒரு நாய்க்குட்டி கூடக் கிடையாதாம்!''

வீடு பூட்டித்தான் இருக்கிறது என்ற தைரியத்தில் பூட்டை உடைத்துக்கொண்டு சென்ற வருஷம் சரவணப்பட்டி காலனியில் அந்த வீட்டுக்குள் நுழைந்தபோது பின் கட்டில் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்த வேலைக்காரச் சிறுமி ரத்தினத்தின் கண்களில் பட — அவள் வாயைத் திறந்து கத்தும் முன்பே கழுகாய் அவள் மீது பாய்ந்து வாயைப் பொத்திக் கழுத்தை இறுக்கிப் பிடிக்க அந்த மொட்டு சட்டென்று மூச்சுத் திணறித் தலையைத் தொங்கப்போட்டது. ரத்தினத்தின் நினைவைத் தாக்கியது. நல்லவேளை போலீஸ் அந்த வேலைக்காரச் சிறுமி கொலை வழக்கில்



பிள்ளையின் தாயார்: பெண்ணுக்கு ஏன் குமிட்டி அடுப்பு வாங்கித் தர்றீங்க, ஸ்டவில் சமைச்சுப் பழக்கமில்லையா?

பெண்ணின் தாயார்: வரதட்சணைப் பாக்கியைக் கொடுத்திட்டுப் பிறகு ஸ்டவ் வாங்கித் தர்றோம். இல்லையானுல் சனியன் பிடிச்ச ஸ்டவ் வெடிச்சுத் தொலைக்கும்! - கே. ஆர். எம்.

துப்புத் துலக்க முயன்று முடியாமல் திணறிக் கையை விரித்து விட்டது....

''என்ன ரத்தினம்? உன்னால முடியலேன்னு சொல்லிடு... நான் நம்ம தோஸ்து பங்காரு திட்டப் போறேன்...''

''இரு ஜோஸ்... நான் போறேன். ஆனா நீ விஷயத்தை யார் கிட்டேயும் சொல்லிடாதே. விஷயம் வெளியே பரவினா ஆபத்து. எனக்கு முன்னாடி எவனாவது உள்ளார உட்கார்ந்திட்டிருப்பான்.''

''நீ போறதா இருந்தா நா எதுக்கோசரம் மத்தவங்க கிட்டச் சொல்றேன்?''

''அடையாள மெல்லாம் க்ரெக்டாச் சொல்லு'' — ரத்தினம் பரபரத்தான்.

ரத்தினத்தின் மனத்தில் நீரூற்றுப் போல் தைரியம் ஊறியது.

வீட்டைப் பற்றின அடையாளங்களை ஜோஸ் ஒரு காகிதத் துண்டில் எழுதிக் கொடுக்க அதை வாங்கிச் சட்டைப் பையில் செருகிக் கொண்ட ரத்தினம் கவுண்டம் பாளையம் போகும் 4-ஏ பஸ்ஸைப் பிடித்தான்.

இந்த வீடுதான்!

ரத்தினத்தின் கையிலிருந்த காகிதத் துண்டு சத்தியம் செய்தது.

வீட்டின் முன்புறம் கொய்யா மரம் தெரிந்தது.

பச்சைப் பெயிண்ட் அடித்த காம்பௌண்ட் கேட் தெரிந்தது.

காம்பவுண்ட் சுவரில் பதிக்கப்பட்ட ஒரு அடி நீள 2 அங்குல அகலச் செவ்வகச் சலவைக் கல் துண்டில் அழகான எழுத்துக்களில் ஜோதி தயாள் தெரிந்தார். வீட்டுக் கதவில் பெரிதாய்ப் பூட்டுத் தொங்கியது.

ரத்தினம் சுற்று முற்றும் பார்த்தான்.

தெருவில் யாரும் இல்லை.

குபீரென்று காம்பௌண்ட் சுவர் மேல் தாவி ஏறி வீட்டின் உள் பக்கமாய் ஒரு பூனையின் லாகவத்தோடு குதித்தான். காய்ந்து போன கொய்யா மர இலைகள் அவன் காலடி பட்டு ரகசியம் பேசின. நடந்தான் ரத்தினம்.

நிதானித்து நடந்தான்.

பூட்டுத் தொங்கிய கதவருகே வந்து மண்டியிட்டு அமர்ந்தான்.

சாவிக் கொத்தில் இருந்த ஒரு சாவியை உருவிப் பூட்டின் வாய்க்குள் திணித்து நெம்ப அது 'க்ளிக்'கென்று சப்தித்துக் கொண்டே கற்பிழந்தது. பூட்டைக் கதவிலேயே விட்டு விட்டு மெதுவாய் எழுந்து கதவைத் தள்ளினான்.

அது திறந்து கொண்டது.

பேனா டார்ச்சைத் தட்டினான் ரத்தினம்.

ரப்பர் பந்தை வீசினாற்போல் வெளிச்ச வட்டம் சுவரில் விழுந்தது. ஒவ்வொரு அறையாய்ப் புகுந்து புறப்பட்டான். மூன்றாவதாய் இருந்த அந்தச் சிறிய அறைக்கு வந்தபோது—

ஜோதி தயாள் 'வணக்கம்' சொல்லி வர வேற்றார் — போட்டோவில். பக்கத்திலேயே காலமான அவருடைய மனைவி போட்டோ. ஜிகினா மாலை அஞ்சலி செலுத்துவதற்கு அறிகுறியாய் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதற்குக் கீழே....

ஆளுயர காட்ரெஜ் பீரோ 'நான் இங்கே தான் இருக்கிறேன்' என்றது.

ஆவலாய் அதை நெருங்கினான் ரத்தினம்.

இரண்டே நிமிடங்களில் பீரோ தன்னைத் திறந்து காட்டியது.

'சே! வெறும் பீரோ!' ரத்தினம் முனகிக் கொண்டான். 'எல்லாம் பாங்க் லாக்கரிலா? இதே அறையில் வேற ஏதாச்சும் பீரோ இருக்குமோ?' — மனத்தில் அந்தச் சந்தேகம் உருவாக ரத்தினம் டார்ச் ஒளியைப் பரபரப்பாய் விரட்டினான். அது ஓடியது.

வெளிச்சப் பந்து எம்பி எம்பி அறையை அலம்ப ஆரம்பித்தது.

ஆரம்பித்து — முடிவில் — அறையைப் பிரித்த— அந்த ஜன்னல் கம்பிகளின் மேல் பட்டபோது —

ரத்தினம் அதிர்ந்தான். மயிர்க் கால்கள் ஜிவ்வென்று நிமிர்ந்தன.

ஜன்னல் கம்பிகளுக்கு அந்தப் பக்கத்தில் நின்றுகொண்டு — ரத்தினத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் முகம் தெரிந்தது. அழகான பெண்ணின் முகம். தலைமயிர் கலைந்திருக்க— முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் நின்றிருந்தாள். கையை அசைத்து ரத்தினத்தைக் கூப்பிட்டாள். குரல் என்னமோ போல் கரகரத்தது.

ரத்தினத்தின் தொண்டையும் நாக்கும் உப்புக் காகிதமாய் வறண்டது.

மெல்ல அவளை நோக்கி நகர்ந்தான், எட்டத்தில் நின்று கொண்டான்.

''நீ யாரு?'' — அவள் கேட்டாள்.

ரத்தினம் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

''எனக்குத் தெரியும்... நீ யார்னு?''— பற்கள் பளிச்சென்று தெரிய அவள் சிரித்தாள். கூடவே இரும்புச் சங்கிலிகள் ஒன்றோடு ஒன்று உராயும் ஓசை.

ரத்தினம் பேசாமல் நின்றான்.

''நீ யார்னு நான் சொல்லட்டா? நீ ஒரு ஆம்பிளே! எப்படிக் கண்டு பிடிச்சேன் தெரியுமா? உனக்குத்தான் மீசை இருக்கே!''

ரத்தினம் சட்டென்று நிலைமையைப் புரிந்து கொண்டான்.

'இவள்.... இவள் ... ஒரு பைத்தியம்! பைத்தியமான இந்தப் பெண்ணைச் சங்கிலியால் கட்டிப் போட்டுவிட்டு அந்த ஜோதி தயாள் மெட்ராஸ் போயிருக்கார்...'

ரத்தினத்துக்குத் துணிவு வந்தது.

''உம் பேரென்ன?''

''எங்கம்மாவைத்தான் கேக்கணும்...''

அவன்: 'நம்ம மானேஜர் ஆபீஸுக்கு வராத நாட்களில் நான் ஆபீஸில் தூங்கறதேயில்லே!''

இவன்: ''ஏண்டா?''

அவன்: ''அவர் இருக்கும் போதே தூங்கறதில்தான் த்ரில் இருக்கு!''

-உ. ராஜாஜி



''உங்கப்பா எங்கே?''

''அப்பா காரை எடுத்துக்கிட்டு 'புர்'ன்னு ஓட்டிக்கிட்டுப் போயிட்டார்... போறப்ப எனக்கு ஆப்பிள், பிஸ்கெட், கேக், ரொட்டி குடுத்துட்டுப் போயிருக்கார்..... பூராத்தையும் தின்னுட்டேன்...'' சொல்லிவிட்டு ஈறுகள் தெரியச் சிரித்தாள்.

ரத்தினம் அவளை அளந்தான்.

அவள் கழுத்தில் தொங்கிய அந்தக் கனமான தங்கச் சங்கிலி அவன் உள்ளங் கையை அரிக்க வைத்தது. குறைந்தது பத்துப் பவுனாவது தேறும். கையிலிருந்த வளையல்கள் பத்துப் பவுன் தேறும். இது போதும் இன்றைக்கு...! —அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

''கழுத்தில போட்டிருக்கியே அந்தச் சங்கிலி உன்னோடதா?''

''ஊஹூம்... எங்க அம்மாவோடது!''

''எனக்குத் தர்றியா?''

''அய்யே... ஆசை... ஆசை! தோசை... தோசை!'' — அவள் குதித்து ஓடக் காலில் கட்டப்பட்டிருந்த சங்கிலிகள் பயங்கரமாய் அதிர்ந்தன.

''சரி, சங்கிலி வேண்டாம். வளையலாச்சும் தர்றியா?'' —

அவள் யோசிப்பது போல் நின்றாள். பிறகு சிரித்தாள்.

''சரி... தர்றேன்! நீயே எடுத்துக்கோ...''

அவள் தன் இரண்டு கைகளையும் ஜன்னல் கம்பிகளுக்கிடையில் வேகமாய் நீட்டினாள்.

கைகளைப் பார்த்தான் ரத்தினம்.—நீண்டு வளைந்த நகங்களோடு கூடிய கைகள்.

கைகளில் வளையல்கள் சரிந்தன.

ரத்தினம் ஜன்னலை நெருங்கினான். அவள் கைகளை நீட்டிக் கொண்டு அப்படியே நின்றாள். முகத்தில் சிரிப்புமறைந்துவிட்டிருந்தது.

ரத்தினம் கைகளை நெருங்கினான்.

இன்னமும் நெருங்கி அவைகளைப் பற்ற முயன்ற அதே விநாடி...

குபீரென்று அவளுடைய கரங்கள் சீறி—

ரத்தினத்தின் முகத்தில் அசுரத்தனமாய்ப் பதிந்தது.

'ஹாக்...!' — ரத்தினம் திமிறினன். முடியவில்லை.

பெண்ணின் கரங்களுக்கு இத்தனைவலிவா?

அவளுடைய கை நகங்கள் ரத்தினத்தின் கழுத்துப் பரப்பில் ரத்தக் குழிகளைத் தோண்ட — வலது கரம் தொண்டைப் பகுதியைக் குதற—

ரத்தினம் அவள் இரும்புப் பிடியினின்றும் மீள முயன்று—

முடியாமல் பருந்தின் வாயில் அகப்பட்ட கோழிக் குஞ்சாய்—

கொஞ்சம் கொஞ்சமாய் உயிரை விட்டுக் கொண்டிருந்தான்.

அதே நேரம்—

சென்னையில் ஜோதி தயாள், மனநோய் நல நிபுணர் டாக்டர் ராகவேந்தரிடம் கதறிக் கொண்டிருந்தார்.

''காமினிக்கு ரொம்பவும் அதிகமாயிடுச்சு டாக்டர்! திடீர்னு அவ அம்மா இறந்த அதிர்ச்சி அவளுடைய மூளையைத் தாக்கியிருக்கு. நாளாவட்டத்தில் சரியாய்ப் போயிடும் என்று சொன்னீங்க டாக்டர்! ஆனு இப்ப அதிகமாயிடுச்சு டாக்டர்.. பக்கத்தில் போன கழுத்தையே நெரிக்க வர்ரு... ஆம்பளைகளை யெல்லாம் கொல்லப் போறேன்னு கத்தரு! காலைலருந்து உங்க கூடப் பேசறதுக்காக போன்ல டிரை பண்ணினேன். ஆனு லைன் க்ளீயரா இல்லேன்னு சொல்லிட்டாங்க. மெட்ராஸ் வர பிளேன்லே டிக்கெட்டுக்கு முயற்சி செஞ்சேன். கிடைக்கல்ல. வேற வழியில்லாமக் கார்லேயே புறப்பட்டு வந்துட்டேன். காமினியை வீட்டில வச்சுப் பூட்டிட்டு வந்திருக்கேன் டாக்டர்... ப்ளீஸ் டாக்டர் புறப்படுங்க... விடியறதுக்குள்ளாற ஊர் போய்ச் சேரணும்!....''

நடிப்பிலே ஊனமில்லை — விடை

1. மேஜர் சந்திரகாந்த்

மேஜர் சுந்தரராஜன் 'மேஜரான' படம். கண் பார்வை இல்லாதவராக மேஜர் இதில் நடிக்கவில்லை. வாழ்ந்து காட்டிவிட்டார். தன் வீட்டிலேயே தன் மகனைக் கொன்ற கொலைகாரனிடம், அவன் செய்கைகளைச் சொல்வது சிலிர்க்க வைக்கும்.

2. காக்கும் கரங்கள்

கால் ஊனமுள்ள ராதா என்ற பாத்திரத்தில் நடிக்கிருர் ரேவதி. பிரபல டாக்டரின் (எஸ். எஸ். ராஜேந்திரன்) தங்கை. டாக்டருக்கு மனைவியை விட தங்கை மேல் பாசம் அதிகம். இந்தப் பாசப் போராட்டம் படத்தின் வெற்றிக்குக் கைகொடுத்தது.

3. ராமு

ராமுவாக நடிப்பது மாஸ்டர் ராஜ்குமார். தனது அன்னையின் மரணத்தைப் பார்த்த தாக்கில் பேசும் சக்தியை இழக்கிருன் ராமு. டாக்டர்களின் முயற்சி தோல்வி அடைகிறது. தனது சின்னம்மா (தந்தையின் இரண்டாவது மனைவி) தீயில் கருகி இறப்பதைப் பார்த்து 'அம்மா' என்று அலறுகிருன். அந்த அதிர்ச்சி அவனைப் பேச வைக்கிறது.

4. பூஜா கே பூல் (இந்தி)

ராஜ் (தர்மேந்திரா) பெரிய பணக்காரரின் ஒரே மகளைக் காதலிக்கிருன். திடீரென்று அண்ணன் (அசோக்குமார்) இறக்க, அவரது மகளின் திருமணப் பிரச்னை இவன் தலையில் வீழ்கிறது. இந்த நிலையில் கௌரி என்ற பார்வையில்லாத பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிருன்... பார்வை இழந்தவளாக நிம்மி ரொம்ப உருக்கமாக நடித்திருக்கிருர்.

5. களத்தூர் கண்ணம்மா

ஒரு கால் ஊனமுற்ற தன் நண்பனைக் கீழே தள்ளிய குற்றத்துக்காக முரட்டுப் பையனைக் கமல் அடிக்கிருன். முதல் படத்திலே ஊனமுற்ற நண்பனுக்கு வாதாடி, நூருவது படத்தில் தானே பார்வையில்லா தவராக நடிக்கிருர் கமல்.

6. பராசக்தி

நடிகர் திலகத்தின் முதல் படத்தில், அவரது தம்பியாக கால் ஊனமுற்றவளுக நடிக்கிருர் எஸ். எஸ். ராஜேந்திரன்.

7. அன்னையும் பிதாவும்


லட்சுமியின் நடிப்பு எந்தப் படத்தில்தான் சோபிக்கவில்லை? இதில் ஊனமுற்ற சகோதரி பாத்திரம். உணர்ச்சியைக் கொட்டி நடிக்கிருர். ஏவி. எம். ராஜன் சகோதரன்.

8. அன்னை

பானுமதி, சௌகார் ஜானகி, எஸ்.வி. ரங்கா ராவ், டி. எஸ். முத்தையா, சச்சு முதலியோர் நடித்தது. டி. எஸ். முத்தையா படத்தில் கால்களை இழந்தவராக நடிக்கிருர். நடிப்பில் ஊனமில்லை.

9. பட்டர்ஃப்ளைஸ் ஆர் ஃப்ரீ (ஆங்கிலம்)

தன் சொந்தக்காலிலே நிற்க வேண்டும், தனியாகச் செயல்பட வேண்டும் என்று நினைக்கும் டான் பேகர் என்ற பார்வையற்ற இளைஞன் நியூயார்க்கை விட்டு கிரீன்விச் கிராமத்துக்குச் செல்கிருன். அங்கு விவாகரத்து செய்யப்பட்ட ஜில் என்பவளைச் சந்திக்கிருன். காதல் வந்திருச்சி. குடும்பம் நடத்தும் இவர்கள், சந்திக்கும் பிரச்னைகளைக் கொண்டதுதான் கதை. தொகுப்பு: ''சிக்கி''



பூக்காத செடிகளும் காய்க்காத பூக்களும்

கருணையானந்தன்

அலுவலகப் பணி காரணமாக மதுரைப் பயணம் உறுதியானதும் 'நிர்மலாவை மீண்டும் அங்கே சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்குமா?' என்ற தாபம் ஏன் எதற்கு என்ற காரண காரியமில்லாமல் கணேசனின் நெஞ்சில் புகுந்து கொண்டு விட்டது.

தமிழ் நாட்டை விட்டு அவன் விலகிநின்ற இந்தப் பன்னிரண்டு ஆண்டு இடைவெளியில் அங்கே என்னென்ன மாறுதல்களோ...!

நிர்மலா இன்னமும் மதுரைக் கிளையிலேயே பணி புரிந்து கொண்டிருக்கிறாளா அல்லது வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு வேலையை ராஜிநாமாச் செய்து விட்டுப் போய்விட்டாளா — அவனுக்குத் தெரியாது!

தாதர் எக்ஸ்பிரஸ் சென்னையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

நினைவில்தங்கிவிட்ட நிர்மலாவின் மோகன உருவம் கணேசனின் மனத் திரையில் நிழலாடியது.

சங்கிலித் தொடராக... அவளது சிவந்த அதரங்களும், அவற்றின் சுழிப்பில் மின்னலடிக்கும் புன்னகையும் அவனுடைய நினைவுக்கு வந்தன. ''மண்டியிடு... மண்டியிடு'' என்று ஆக்ஞாபிக்கும் அந்தக் கரிய பெரிய விழிகளை மறக்கத்தான் முடியுமா?

நிர்மலாவுக்குத் தான் பேரழகியாக இருக்கிறோம் என்ற பிரக்ஞை நிறைய இருந்தது. அவளுடைய ஒவ்வொரு பேச்சிலும் செயலிலும் ஓர் அழகிக்குரிய நியாயமான கர்வம் கலந்திருக்கும்.

நிர்மலா அழகியாக இல்லாமல் சராசரிப் பெண்ணாக இருந்திருந்தால் ஒருவேளை என் அன்பைப் புரிந்து ஏற்றுக் கொண்டிருப்பாளோ? — கணேசனிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

மதுரைக் கிளையில் அவன் பணியாற்றிய அந்தக் கடைசி நாளில் நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தது அவன் மனம்.

அன்று—

உடனடியாகச் செய்து முடிக்க வேண்டிய சில அவசர வேலைகளின் நிமித்தம் அலுவலக நேரத்துக்குப் பின்னும் ஓரிருவர் பின் தங்க நேரிட்டபோது அவன் பிரிவில் அவனும் நிர்மலாவும் மட்டும்தான் இருந்தனர்.

அவளிடம் தனிமையில் பேச ஒரு சந்தர்ப் [illegible] காத்திருந்த கணேசன் பர [illegible]

அவன் அவளெதிரே போய் நின்றபோது, மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த நிர்மலா குனிந்த தலை நிமிராமலேயே ''ஸ்டேட்மெண்ட் முடிந்த மாதிரிதான் ஸார்....'' என்றாள். — அதை விசாரிக்கத்தான் அவன் வந்திருப்பான் என்ற அநுமானத்தில்.

அவளுடைய வெண் சங்குக் கழுத்தின் அடிவாரத்தில் பொடிந்திருந்த வியர்வை முத்துக்களைப் பெருமூச்சோடு பார்த்துக் கொண்டு நின்றான் கணேசன்.

சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் ஒரு திணறல்...

பதில் ஏதும் வராமற் போகவே தலை நிமிர்ந்த நிர்மலா அவனிடம் தென்பட்ட வித்தியாசத்தால் உந்தப்பட்டு எழுதுவதை நிறுத்திவிட்டுச் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''என்ன ஸார்?''

''ஐ லவ் யூ வெரி டீப்லி... ஐ வாண்ட் டு மேரீ யூ... நிர்மலா!'' என்று அவன் சொல்லி முடித்தான்...

அந்த இரண்டு நிமிடமும் எவ்வித ரியாக்ஷனும் இல்லாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நிர்மலா மேலும் சில விநாடிகளை மௌனத்தின் பிடியில் நழுவ விட்டபோது அந்த அசாதாரண சூழல் அவனுள் உறுத்தத் தொடங்கியது.

அவள் சினந்து சீறியிருந்தால் கூடப் பாந்தமாக இருக்கும் என்று பட்டது.

தவறு செய்து விட்டு வந்து கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் குழந்தையை மன்னிக்கும் பெருந்தன்மை மிளிரும் பார்வையில் அவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

அந்த வினாடியில்—

அவளுடைய மேலதிகாரி என்ற கௌரவம் இழந்து அவளுக்கு முன் பரிதாபமாகக் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரனாக...

—சே...

அவன் தனக்குள் நொறுங்கிப் போனான். நிர்மலா நிதானமாகப் பேசலானாள்:

''ஸார்... நான் தேனிலவில் கணவனோடு கைகோத்துக் கொண்டு ஊட்டி கொடைக்கானலில் ஆடிப் பாடி மகிழ்வதாகக் கற்பனை செய்ததில்லை. ஆனால் ரோஜா மொக்குப் போல் அழகான என் குழந்தையை மானசீகமாக மடியில் போட்டுத் தாலாட்டியிருக்கிறேன் பல முறை... அழகான குழந்தைகள் என்றால் அத்தனை ஆசை எனக்கு..

நான் உங்களை மணந்து கொண்டால் என் கனவுகள் சிதைந்து போகும்.''


அழகான குழந்தைக்கு அவன் எப்படி உத்தரவாதம் தர முடியும்?

கணேசன் தன்னம்பிக்கையும் துடிப்பும் மிக்க இளைஞன்தான். ஆனால் பர்சனலிட்டி விஷயத்தில் பரம ஏழை. அந்தப் பலவீனத்தைத்தான் அவள் சுட்டிக் காட்டிப்பேசினாள்.

'தங்க மெடல் வாங்கிய என் கல்வியறிவு—வேலையில் சேர்ந்த மூன்றே ஆண்டுகளில் பதவி உயர்வை ஈட்டித் தந்த என் செயல் திறன் இவற்றை யெல்லாம் மறந்துவிட்டு இவளை நான் எத்தனை ஆழமாக நேசிக்கிறேன் என்பதையும் நினைத்துப் பாராமல் இப்படி அழகுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறாளே' என்ற ஆற்றாமையில் துவண்டு போனான் கணேசன்.

''கன்னங் கரேலென்று... கை கால்கள் சதைப் பற்றின்றிக் குச்சி குச்சியாக... கன்னத்து எலும்புகள் துருத்திக் கொண்டு... கனமான சோடா புட்டிக் கண்ணாடியுடன் உங்களைப் போல ஒரு 'மினியேச்சரை' என் மடியில் கற்பனை செய்து பாருங்கள்—வேடிக்கையாயில்லை....'' என்று கேட்டு இகழ்ச்சியாக நகைத்த நிர்மலா அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் பீறிட, முகம் சிவக்கக் கேட்டாள்: ''என்ன ஸார்... முகத்தைச் சுளிக்கிறீர்கள்... உள்ளதைத் தானே சொன்னேன் — தலைவாரிக் கொள்ளும் போது கண்ணாடியில் பார்ப்பீர்களல்லவா?''

'சுளீர்.... சுளீர்' என்று சாட்டையடியாக வந்து விழுந்த வார்த்தைகளின் தகிப்பைத் தாங்க மாட்டாதவனாகச் சரேலென அலுவலகத்தை விட்டே வெளியேறினான் கணேசன்.



அதன் பின் மீண்டும் அந்த அலுவலகத்தினுள் நுழையவேயில்லை அவன். வடக்கே வெகு தொலைவிலிருந்த ஒரு கிளைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அன்று போனவன் இன்றுதான் மறுபடியும் தமிழ் நாட்டுக்கு வருகிறான்.

பம்பாய் தலைமையகத்திலிருந்து வந்திருக்கும் இன்ஸ்பெக்ஷன் அதிகாரி என்ற முறையில் தடபுடலான வரவேற்போடு மதுரை அலுவலகத்தினுள் நுழைந்தான்.

கண்ணில் பட்டவர்களெல்லாம் புதியவர்களாக இருந்தார்கள். அங்கங்கே ஓரிரு பழைய முகங்கள். நிர்மலாவைக் காணோம். மனத்தில் நிராசை கவ்வத் தொடங்கியது.

இன்ஸ்பெக்ஷன் சம்பந்தப்பட்ட வேலையைத் தொடங்கிவிட்ட பின் வேலை மும்முரத்தில் நிர்மலாவை மறந்து போனான்.


பிற்பகலில் ஒரு ஃபைலில் சில விளக்கங்கள் கோரி அவன் குறிப்பு அனுப்பியபோது, அந்த ஃபைலை எடுத்துக் கொண்டு அவன் இருந்த அறையினுள் வந்தாள் நிர்மலா


அந்த எதிர்பாராத சந்திப்பில் கணேசனின் இதயம் ஒரு கணம் நின்று பின்னர் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

நிர்மலா ரொம்பவும்மாறிவிட்டிருந்தாள்.

அந்தக் கம்பீரத்தைக் காணோம். சித்திரை மாதத்து உச்சி நிலவாகப் பொலிவுடன் விளங்கிய அவளுடைய வதனம் மலைவாயிலில் விழுந்து கொண்டிருக்கும் மங்கிய நிலவாகச் சோபை இழந்து கிடந்தது.

மதுரையில் அவளை மீண்டும் சந்திக்க நேர்ந்ததால் பழைய சம்பவங்களின் தொடர்பில்லாமல், முன் பின் அறிமுகமில்லாத அந்நிய நபராக நடந்து கொள்ள வேண்டும் என்று பம்பாயை விட்டுப் புறப்படும்போதே தீர்மானித்து வைத்திருந்தான். அது சாத்தியமாஎன்ற கேள்வி வழியெல்லாம் அவனைச் சஞ்சலப்படுத்திக் கொண்டே இருந்தது. ஆனால் இப்பொழுது அது ஒரு பிரச்னையே அல்ல என்று பட்டது. தன் நினைவில் நிற்கும் 'ராணி' நிர்மலாவும் இதோ எதிரே நிற்கும் 'சாதாரண' நிர்மலாவும் இரு வேறு பெண்களாகவே தோன்றினர் அவனுக்கு.





''நீங்கள் கேட்ட விளக்கங்களைக் குறித்திருக்கிறேன் ஸார்'' — அவள் நீட்டிய ஃபைலை வாங்கிப் படித்தான் கணேசன். பின்னர் தனக்குத் தேவையான சில மேல் விளக்கங்களையும் அவளிடம் கேட்டுத்தெரிந்து கொண்டான்.

''தாங்க்யூ... நீங்க போகலாம்'' —அவன் நீட்டிய ஃபைலை வாங்கிக் கொண்டு நகர முற்பட்டாள் நிர்மலா.

அப்போது—

அதுவரை அடக்கிவைத்திருந்த உணர்ச்சிப் பிரவாகம் சட்டென்று கரையை உடைத்துக் கொண்டு விடவே, நிலைகுலைந்து போன நிர்மலா விம்மி விம்மி அழலானாள்.

எண்ணிய நான் எண்ணியவாறு...

வத்தலகுண்டில் ஒரு திருமணம். பெரியவர் மதுரையை அடுத்த திரு நாராயணபுரத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். உடனே என் மனைவியையும் பையனையும் (எட்டு வயது) அழைத்துக் கொண்டு மதுரைக்குப் புறப்பட்டேன்.

பெரியவர் என் பக்கத்தில் இருந்த என் பையனைப் பார்த்து ''என்ன பேர்?'' என்றார்.

என்னை அறியாமல் நானே பேசினேன். ''நீங்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன் லால்குடி வந்திருந்தேளே. அபிஷேகத்திற்கு டாக்டர் காரில் திருச்சியிலிருந்து பாலைக் கொண்டு வருவேனே. நீங்கள் அந்தப் பசு மாட்டுக்கொட்டகையில்படுத்திருப்பேளே என்றேன். உங்கள் ஞாபகமாய்த்தான் இவனுக்கு சந்திரசேகரன் என்று பெயர் வச்சிருக்கேன்'' என்றேன். ''இவனை ஆசீர்வதியுங்கள்'' என்று அழுதேன்.

பெரியவர் என் பையன் மேல் இரு கரங்களையும் உயர்த்தி ''நாராயணா, நாராயணா'' என்றார். சிறிது நேரத்தில் காவி உடையைப் போர்த்தி ஒரு பக்கமாய்த் திரும்பிக் கண்களை மூடிப் படுத்து விட்டார்.

சந்திரசேகரன் படிப்பில் முதல் நிலையில் வர ஆரம்பித்தான். ஏராளமான ஸ்காலர்ஷிப் பெற்றான். இன்சினீயரிங்கில் முதலில் பாஸ் செய்தான். டெல்லியில் விருது பெற்றான். பாம்பே டாடா இன்ஸ்டிடியூட்டில் ஆபீசர் ஆனான். ஆறு மாதத்திற்கு முன் அமெரிக்காவிலிருந்து ஃபெலோஷிப் கிடைத்தது. வெளிநாடு போகுமுன் நண்பர் இராமச்சந்திர அய்யர் சந்திரசேகரனை காரில் சத்தாரா அழைத்துச் சென்று அவர் ஆசியை மறுபடி வாங்கிக் கொடுத்தார்.

எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கு அருளும் தெய்வம், காஞ்சிப் பெரியவாள். குரு சாக்ஷாத் பரமேஸ்வர ஸ்வரூபம்.

-எல். ஏ. வி. ராமன்



கணேசன் இதைக் கொஞ்சமும் எதி
பார்க்கவில்லை.

''அன்றைக்குக் கடுமையான வார்த்தை
களைப் பேசி உங்கள் மனத்தைப் புண்
படுத்தி விட்டேன் ஸார்....''

''எப்போதோ நடந்து முடிந்துபோன
சம்பவம்... அதை இப்போது மனத்தி
வைத்துக் கொண்டு....''

''சம்பவம் பழசுதான் ஸார்... ஆனா
முடிந்துபோன விஷயமில்லை அது... அ
சம்பவத்தின் விளைவுகள் இன்னும் பி
தொடர்ச்சியாகத் தொடர்ந்து கொண்
டிருக்கின்றன!'' என்றாள் நிர்மலா.

நிர்மலா எதைக் குறிப்பிடுகிறாள் என்று
புரியாமல் அவளை ஏறிட்டுப் பார்த்தான்
கணேசன்.

''நான் எதையுமே மனத்தில் வைத்து
கொள்ளவில்லை....'' என்றான் பொதுவாக

நிர்மலா விடவில்லை.

''என்னுடைய ஆறுதலுக்காக அப்படிச்
சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியுமே
ஸார்....! நிஜத்தைச் சொல்லுங்கள்— அந்த
சம்பவம் உங்களைப் பாதிக்கவே யில்லையா?''

கணேசன் திணறினான்.

அன்று—

அக்னித் துண்டங்களாக வந்து விழுந்த
நிர்மலாவின் வார்த்தைகளைத் தாங்க மாட்
டாமல் கனத்த உள்ளத்துடன் வீடு போய்ச்
சேர்ந்தவன் நேரே கண்ணாடியின் முன்
போய் நின்றான்.

எதிரில் தெரிந்த பிம்பம் மிக மிக அந்நிய
மாகத் தோன்றியது அவனுக்கு.

ஒரு பெண் விமரிசித்த கோணத்தில் தன்
'அழகை' ஆராய்ந்தபோது தன் மீதே
ஒரு வெறுப்பு தனக்குள் மண்டுவதை
உணர்ந்தான். அதன் பிறகு—

மறுபடியும் ஒரு மனச் சரிவுக்கு ஆளாகி
விடக் கூடாது என்று உறுதி பூண்ட அவன்
தன்னுடைய பர்சனலிட்டியை ஒரு பெண்
ணின் விமர்சனத்துக்கு உட்படுத்த விரும்ப
வில்லை.

விளைவு— இன்றைக்கும் அவன் ஒரு பிரம்
மச்சாரி.

மௌனமாக இருந்தான்.

''நீங்க ஏன் ஸார் இன்னமும் திருமணம்
செய்து கொள்ளவில்லை?'' — நேரடியாகவே
கேட்டு விட்டாள் நிர்மலா.

அவள் ஏற்கனவே எதற்காகவோ நொந்து
போயிருக்கிறாள். உண்மையைச் சொல்லி
அவள் மனத்தை மேலும் நோகடிக்க அவ
னுக்கு இஷ்டமில்லை. தொடர்ந்து மௌனம்
சாதித்தான்.

''நீங்க பதில் சொல்ல மாட்டீங்க ஸார்...
'நீதான் காரணம்'னு முகத்தில் அடித்தாற்
போல் நிஜத்தைச் சொல்ல உங்கள் பெருந்
தன்மை இடம் கொடுக்காது. ஆனால் நான்?
அன்று கௌரவமான முறையில் நீங்கள்
என்னிடம் உங்கள் விருப்பத்தை வெளி
யிட்டபோது 'எனக்கு இஷ்டமில்லை' என்று
சாந்தமாகவே சொல்லி யிருக்கலாம்.
....அழகாக இருக்கிறோம் என்ற அகந்தை...
எத்தனை பேராசை இவருக்கு என்ற ஆத்
திரம்... ஒரு நல்ல இதயத்தைக் கீறி
ரணமாக்குகிறோமே என்ற பிரக்ஞை இல்

மல் கண் மூடித்தனமாக வார்த்தைகளை ளி வீசிவிட்டேன். அந்தப் பாவம்தான் ர் இன்றைக்கும் என்னைச் சுட்டெரித்துக் ாண்டிருக்கிறது.''

நிர்மலாவின் வார்த்தைகளைக் கேட்ட ணசனுக்கு ஏதோ அசம்பாவிதம் ழ்ந்து விட்டிருக்கிறது என்று புரிந்ததே றி அது என்ன என்று விளங்கவில்லை. அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

கழுத்தில் கிடந்த மங்கல நாணும், பளிச் ன்று நெற்றியில் துலங்கிய குங்குமமும் ரீதமாக எதுவும் நடந்துவிடவில்லை என்று றைசாற்றின. பின்னே — அவளுக்கு ாய்த்த கணவன் சரியில்லையோ... ஒரு வளை என்னைப் போல் அவனும் அழ ற்றவனோ? ஆமாம்... அப்படித்தானிருக்க வண்டும்! ஆனால் அதற்காக ஒரு பெண் ப்படி காய்ந்து போவாளா... என்ன?— ப்படியாகக் கணேசனின் எண்ண ஓட்டம் தாடர்ந்தபோது நிர்மலா மேலே பேச ானாள்:

''எனக்கு ரோஜா மொக்குப் போல அழ ான குழந்தை பிறக்கணும்... அதை ஆசை ர மடியில் போட்டுத் தாலாட்டணும்னு னவு கண்டேன்.... அந்தக் கனவு — இன் றைக்கும் கனவாகவேநிலைச்சுப்போச்சுஸார்''

கணேசனுக்குப் பொறி தட்டினாற்போல் இருந்தது. திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''அழகான குழந்தைக்கு உத்தரவாதம் தர முடியுமான்னு உங்களிடம் அகங்காரமா கக் கேட்டேனில்லையா அன்றைக்கு... அதற் குத் தண்டனைதான் இது— அழகில்லா விட் டாலும் பரவாயில்லை... எனக்குன்னு ஒரு குழந்தை பிறக்காதான்னு நாளெல்லாம் ஏங்கி ஏங்கி வெந்து கொண்டிருக்கிறேன் இன்றைக்கு...''

—முகத்தை மூடிக் கொண்டு விசிக்க லானாள் நிர்மலா.

அன்றைக்கு அவளுக்கு ஏற்பட்டகோபமும் ஆத்திரமும் — நியாயமானதுதான் என்று பாதிக்கப்பட்ட அவனே ஏற்றுக்கொண்டு விட்ட பிறகு அது எப்படி தண்டனைக்குரிய குற்றமாக இருக்க முடியும்?

'பின்னே..இவளுக்கு ஏன்குழந்தைஇல்லை?'


இந்தக் கேள்விக்கு ஒரு பதில் கிடைக் காமல் அவன் திணறிக் கொண்டிருந்த போது, அன்றொரு நாள் பம்பாயில் தன் வீட்டுத் தோட்டத்தில் பூப்பறிக்க வந்த பக்கத்து வீட்டுச் சிறுமி கேட்டது சட்டென்று அவனுடைய நினைவுக்கு வந்தது:

'அங்கிள்... இந்த ரோஜா இத்தனை அழகா.... மணமா இருக்கே, ஏன் காய்க்க மாட்டேங்குது?'

தன் வாழ்வில் தொடர்ந்து கொண்டிருக் கும் வெறுமைக்கும் நிர்மலாவின் வாழ்வில் நேர்ந்திருக்கும் அவலத்துக்கும் அந்தச் சிறுமியின் கேள்வியில் பதில் இருப்பதாக நினைத்தான் கணேசன்.

'ஆமாம்—
செடிகள் எல்லாமே பூப்பதுமில்லை....
பூக்கள் எல்லாமே காய்ப்பதுமில்லை....'

வேதனையோடு பெரு மூச்செறிந்தான்



இந்த வார டீ. வி. சினிமா

வண்டிச் சக்கரம்

விவேகானந்தா பிக்சர்ஸ் அளிக்கும் 'வண்டிச்சக்கரம்' இந்த ஞாயிற்றுக்கிழமை (17 — 5 — 81) சென்னை டீ. வி. யில் திரையிடப்படுகிறது. பத்திரிகை விமர் சனங்களிலிருந்து சில துளிகள் :

குங்குமம்

கையை மடித்து விட்ட மல் ஜிப்பா, தொரட்டிமீசை, முரட்டு முடி, பீடி அல்லது சிகரெட் புகையும் வாய், மைனர் செயின் சகிதமாக கைலியை மடித்துக் கையில் பிடித் துக்கொண்டு ராஜா மாதிரி சாராயக் கடைக்குள் நுழைந்து ஸ்பெஷல் சரக்கைப் போட்டுக் கொண்டதும் படு அலட்சியமாகப் பார்க்கும் ''தண்டல் நாயகர்'' கஜாவாக சிவகுமார் — வித்தியாசமான குமார்தான்.

தினத்தந்தி


கதை வசனம் எழுதிய வினு சக்கரவர்த்தி சிவகுமாரின் நண்பனாகவும் நடித்திருக்கிறார். குடிசைவாசிகளின் பாஷையைத் தப்பாது பேசுகிறார்.

டைரக்டர் கே. விஜயன், பக்கா ரௌடி கூட மனைவியின் அன்புக்குக் கட்டுப்படு வான் என்பதைக் காட்டும்போது, தன் மனைவிமேல் களங்கம் சுமத்தியவன் மீது கதாநாயகன் பாயும்போதும், உருமும் புலி யைக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கவை.

குமுதம்

ரப்பர் தலையணையைப் பிய்த்துப் பிய்த்துத் தண்ணீரில் தோய்த்துத் தின்று முடிக்கிறார் சுருளிராஜன். அடுத்துச் சில 'டை'களையும் காலி செய்கிறார். அவர் பசி அவருக்குத் தெரியும். திருடப் போன இடத்தில் மறியல் ஏற்பட்டுக் கடையை மூடிவிடுகிறார்கள் என்று அவர் கண்டாரா என்ன?

தொகுப்பு: சிக்கி



கண்கண்ட தெய்வம்

இராணுவத் துறையில் சிவில் அதிகாரியாகப் பணி செய்து வந்த எனக்குத் திடீரென்று ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. என்னுடைய கண்களின் பார்வை துரிதமாகச் சீரழிந்து அடியோடு பார்வை போய்விட்டது. சென்னையில் உள்ள பெரிய கண் சிகிச்சை நிபுணர்கள் கைவிரித்து விட்டார்கள். ஏழு வருடங்கள் ஓடின. இரு கண்களும் இல்லாத குருடனாய், பெரிய குடும்ப பாரத்துடன் தத்தளித்துக் கொண்டிருந்தேன். கையிலிருந்த பணமும் நகை நட்டுக்களும் கரைந்தன. வேலையும் போய்விட்டது. சொல்லொணாத் துயர்களை அனுபவித்துக்கொண்டு பெரியவாளையே தியானம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் ஹைதராபாத்திலிருந்து நண்பர் டி. வி. கே. மூர்த்தி திடீரென்று வந்து மறுநாள் காஞ்சீபுரத்துக்கு அழைத்துச் சென்றார். பெரியவர் அவரது கனவில் என்னை உடனே காஞ்சீபுரத்திற்கு அழைத்து வரும்படி ஆக்ஞாபித்ததைத் தெரிவித்தார். மறுநாள் காஞ்சீபுரத்துக்குச் சென்றோம்.

ஸ்ரீ பெரியவா ஸர்வ தீர்த்தத்துக்கு அருகில் பர்ணசாலை அமைத்து, அதில் அமர்ந்திருந்தார். சமிக்ஞை மூலம் அருகில் வரும்படி உத்தரவிட, மூர்த்தி என்னைக் கைப் பிடித்துக் கொண்டே பெரியவாளின் திவ்விய சமூகத்துக்கு அழைத்துச் சென்றார்.

என் மனைவியிடம் 'நீங்கள் யாவரும் சென்னைக்குத் திரும்புங்கள். ஸ்ரீனிவாசன் இரண்டு கண்களும் ஆபரேஷன் ஆகி நேராய்க் கண் தெரிந்தவுடன் வருவான்' என்று அனுக்கிரகித்து நண்பர் மூர்த்தியை உடனே ஹைதராபாத்துக்குத் திரும்பும்படி அனுக்ரஹப் பிரகாசத்துடன் உத்தரவிட்டார்.

காஞ்சீபுரத்திலேயே தொழில் நடத்தும் டாக்டர் வெங்குடி பாலசுப்பிரமண்யத்திடம் அன்றே அழைத்துச் செல்லப்பட்டேன். அவர் பெரியவாளிடத்தில் தாம் கொண்ட பக்தியின் பலத்தால் சென்னையில் பிரபல நிபுணர்களால் கைவிடப்பட்ட எனக்குக் கண் ஆபரேஷன் செய்ய ஆயத்தங்களைச் செய்து விட்டார். முதலில் வலக் கண்ணைத் தைரியமாக ஆபரேஷன் செய்தார். கிட்டத்தட்ட மூன்று மணி நேரம். மூன்றும் நாள் கட்டை அவிழ்த்து, 'பட்டை' போட்டிருக்கும்போது நர்ஸிங் ஹோம் வாசலில் பெரியவா வந்து நின்றுகொண்டு விசாரிக்க, ஆச்சர்யம் அடைந்த டாக்டர்மெதுவாகக் கைப்பிடித்து பெரியவாளின் அருகில் அழைத்துச் சென்று பட்டையை' விலக்கிப் பார்க்கச் சொல்ல, ஏழு வருஷங்களுக்குப் பின் முதன் முதலாக நான் கண்ட காட்சி பெரியவாளின் திருவுருதான்! என் மகிழ்ச்சியை எப்படி விவரிப்பேன்!

அடுத்த 15 நாட்களில் மறு கண்ணையும் ஆபரேஷன் செய்ய அங்கேயே டாக்டருக்கு உத்தரவு பிறப்பித்து விட்டார் பெரியவாள்.

டாக்டர் அவ்வாறே செய்ய என்ன ஆச்சரியம்! இரு கண்களிலும் பூர்ண பிரகாசம் ஏற்பட்டு, இழந்த பார்வைகளை மீண்டும் பெற்றேன்! மேஜர் ஆபரேஷனாய் இருந்தும் ரணம் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள்ளேயே சொஸ்தமாகி விட்டது! பெரியவாளின் கருணையே கருணை!

—என். ஸ்ரீனிவாசன்



மாங்கல்யப் பிச்சை

நன்றாக இருந்த என் கணவருக்கு ஒருநாள் திடீரென்று உடம்பு ஊதிவிட்டது. டாக்டரிடம் காண்பித்ததில் உப்பு கூட என்று வைத்தியம் செய்தார். மந்திரிப்பவர் ஊது காமாலை என்று மந்திரித்தார். ஆனால் என்ன செய்தும் உடம்பு பருமன் குறையவில்லை. ஒன்றும் தோன்றாமல் பெரியவாளிடம் என் மைத்துனரை அனுப்பினோம். பெரியவாளுக்கு அன்று கண் ஆபரேஷன். ஆயினும் என்ன? கருணையோடு அவர் இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டு என் மைத்துனரை இருக்கும்படி சொன்னார். அவரும் ஆபரேஷனுக்கு மறுநாள் விபூதி, குங்குமம், திராட்சை கற்கண்டு பிரசாதம் பெற்றுத் திரும்பினார். பிரசாதத்தை என் கணவர் சாப்பிட்டதும் மறுநாள் காலையிலிருந்து படிப்படியாக உடல் பருமன் குறைந்து இன்று நன்றாக இருக்கிறார். எல்லோரும் கைவிட்ட கேஸ். யாரும் என் கணவர் பிழைப்பார் என்றே நம்பவில்லை. எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்த நடமாடும் தெய்வத்தை சதா நினைத்துக் கொண்டேயிருக்கிறேன். -வி. மீனாக்ஷி














விசாரணை செய்யாத தீர்ப்புகள்

விஜயாலயன்

வெகுவான அலங்காரத்துடன்...

அழகுத் தேவதையாக மாடியிலிருந்து இறங்கி வந்தாள் டாக்டர் சிநேகா.

மகளை நிமிர்ந்து பார்த்த சிவசங்கரன் மணிக்கட்டைத் திரும்பிப் பார்த்தார்.

''ஏம்மா.... சிநேகா! இப்பவே ரொம்ப நேரமாயிடுத்தே. டிஸ்பென்ஸரிக்கு இன்னுமா போகலே?''



''இன்னைக்குப் போகலேப்பா!''

''ஏம்மா?''

''ஐய்யோ.... அப்பா!'' என்று தன் அப்பாவைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள் சிநேகா.

''இன்னைக்கு என்ன தேதிப்பா?''

''மே 27... அடடே! இன்னிக்கு அமெரிக்காவிலேருந்து பிரபு வர்றுன் இல்லே? ஐயாம் ஸோ ஸாரி மை சைல்ட்...பிஸினஸ் அது இதுன்னு ஏகப்பட்ட பிரச்னைகள். அதனல்தான் ஞாபகமில்லே. அதுதான் இன்னைக்கு ஏகப்பட்ட வகையான மீல்ஸ்... பலகாரங்கள் எல்லாம் தடபுடலா இருக்கா? நீதான் எப்பவும் அவன் ஞாபகமாவே இருக்கியே... அவன் வரட்டும். முதல்லே அவனைப் பிடிச்சு உன் தலையிலே கட்டிட்டுத்தான் மறு வேலே....''

''போங்க டாடி....''

''ஸாரி மை சைல்ட். இன்னைக்குக் கம்பெனி விஷயமா கான்ஃபரன்ஸ் இருக்கு. நான் கட்டாயம் அதுல கலந்துக்கணும். நீ முன்னலை போ. நான் அதுல கலந்துகிட்டு ஒரு மணி நேரத்திலே ஏர்போர்ட்டுக்கு வந்தர்றேன். நான் வர லேட்டாயிடுச்சுன்னு நீயே பிரபுவை ரிசீவ் பண்ணிக் கூட்டிக்கிட்டு வந்துடு. ரெண்டு வருஷத்துக்குப் பின்னடி சந்திக்கிறீங்க. பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கும். குறுக்கே நான் எதற்கு?''

சிவசங்கரன் அர்த்தத்தோடு மகளைப் பார்த்துச் சிரித்தார்.

''போங்கடாடி! நீங்க ரொம்பக் குறும்பு!''

சிநேகாவின் வெண்மையான மென்மை விரல்கள் ஸ்டீயரிங்கைச் செல்லமாகத் தடவ....

கார் வெகு சந்தோஷத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.

பிரபு, சிவசங்கரனின் தங்கை வத்சலாவின் ஒரே மகன்.

வத்சலாவும் அவளது கணவர் சந்திரசேகரும் ஒரு கல்யாணத்துக்கு வெளியூர் சென்றுவிட்டுக் காரில் திரும்பிக் கொண்

டிருந்தபோது எதிர்பாராத விபத்தினுல் இறந்து போனுர்கள்.

அதன் பிறகு சிவசங்கரன்தான் பிரபுவை வளர்த்தார்.

பிரபுவின் அதி புத்திசாலித்தனம், திறமை எதையும் எளிதில் செய்து முடிக்கும் துடி துடிப்பு இவையெல்லாம் சிவசங்கரனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

தம் ஒரே மகள் சிநேகாவை அவனுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தார்.

பிரபுவும் சிநேகாவை விரும்பினுன்.

சிநேகா பிரபுவின் மேல் உயிரையே வைத் திருந்தாள்.

பிரபு தொழில் துறை சம்பந்தப்பட்ட மேல் படிப்புக்காக அமெரிக்கா செல்ல வேண்டி இருந்தது. அவன் அமெரிக்கா புறப்படுவதற்கு முதல் நாள் சிவசங்கரன் பிரபுவுக்காக எல்லோருக்கும் விருந்து கொடுத்தார். விருந்து முடிந்ததும் சிவ சங்கரனின் நண்பர் பாரதி தேவராஜன் அவரைத் தனியே அழைத்தார். கூடவே சிநேகாவும் இருந்தாள். சொன்னுர்.

''மிஸ்டர் சிவசங்கரன்... இந்தக் காலத்து இளைஞர்களின் மனசை நாம் சரியாக எடை போட முடியாது. நீங்க பிரபுவை உங்க பெண் சிநேகாவுக்குத் திருமணம் பண்ணி அப்புறம் அவரை அமெரிக்காவுக்கு அனுப் பறதுதான் நல்லது. ஏன்னு சிநேகா பிரபுவின் மேல் உயிரையே வெச்சிருக்கா. அப்புறம் அவளால் எதையும் தாங்கிக் கொள்ள முடி யாது....''

''வாட் நான்ஸென்ஸ்... மத்த வங்க போலல்ல என் மருமகன் பிரபு. ஹி இஸ் எ ஜெண்டில்மேன்... சிநேகாவை அவன் ஒரு நிமிஷம் பார்க்காட்டா துடி துடிச்சுப் போவான். பிரபு மேல் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கு.''

அப்பா சொன்ன வார்த்தை சிநேகாவுக் குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

அடுத்த நாள் விமான நிலையத்தில் பிர புவை வழியனுப்ப எல்லோரும் காத்திருந் தார்கள். விமானம் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.



''சுநோ...! நான் வரட்டுமா?'' பிரபு காதருகே கிசுகிசுத்தான்.

சிநேகா விசுக்கென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். நீர் அவள் விழிகளில் தொத்தி நின்றது.

''ஏய்... சுநோ! என்ன இது? இருபத்திரண்டு வயசுப் பெண்... அதுவும் ஒரு டாக்டர்.... இப்படியா சின்னக் குழந்தை மாதிரி அழறது? நான் எங்கே போறேன் அமெரிக்கா தானே? ரெண்டு வருஷங்கறது ரெண்டு நாள் மாதிரி பறந்து போயிடும்... டோன்ட் பி ஸில்லி... கண்ணைத் துடைச்சுக்க... யாராவது பார்க்கப் போறாங்க.''

கர்ச்சீப்பை எடுத்து சிநேகாவின் கண்களைத் துடைத்தான் பிரபு.

அவள் சட்டென்று அவன் கையைப்பற்றிப் புறங்கையில் தன் சிவந்த இதழ்களைப் பூப் போலப் பதித்தாள்.

விமானத்தின் உடலுக்குள் நுழையும்வரை கையை ஆட்டிக் கொண்டு... கண்ணீரை உதிர்த்துக் கொண்டே இருந்தாள் சிநேகா.

ஒரு நாள் சிநேகாவின் தோழி ரேணுகா டிஸ்பென்சரிக்கு வந்திருந்தாள்.

''என்ன ரேணு? உடம்புக்கு ஏதாவது?''

''அதுக்கென்ன நல்லாத்தான் இருக்கு. சும்மா உன்னைப் பார்க்கலாம்னு வந்தேன். உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?''

''என்ன விஷயம் ரேணு?''

''எங்க வீட்டுக்கு எதிர் வீட்டிலே அமிதாப்பச்சன் உயரத்திலே ஒருத்தன்... அதான் சேகர்ன்னு ஒருத்தன் இருப்பானே? அவன் டாக்டர் படிப்புக்கு வெளி நாடு போனவன் வர்றப்போ ஒரு வெள்ளைக்காரக் குட்டியை இழுத்துக்கிட்டு வந்துட்டான்...''

''ஐயைய்யோ....!''

''ஏண்டி இப்பக் கத்தறே? தாலி கட்டித்தான் கூட்டிக்கிட்டு வந்தான்....''

சிநேகாவின் நெஞ்சுக்குள் இடித்தது.

''ஏண்டி சிநேகா ஒரு மாதிரி ஆயிட்டே?''

''ஒண்ணுமில்லே ரேணு.... லேசாத் தலைவலி... கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கிட்டாச் சரியாப் போயிடும்....''

''அப்ப நான் வரட்டுமா சிநேகா?''

''ஓ.கே.''

சிநேகா மேஜையின் மேல் கவிழ்ந்து படுத்துக் கொண்டாள். சேகர் மாதிரி அத்தான் பிரபுவும் ஏதாவது....?

சீச்சி... என்ன அசட்டுக் கற்பனை....!

சட்டென்று ஸ்டியரிங்கை ஒடித்துக் குறுக்குப் பாதையில் காரை ஓட்டினாள் சிநேகா.

அத்தானை ரெண்டு வருஷத்துக்கு முன்னால் பார்த்தது. அத்தான் அமெரிக்காவிலிருந்து எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வருவார்?

அழகான அமெரிக்கன் ஜார்ஜெட் புடவை, இல்லை, விலையுயர்ந்த லேடிஸ் வாட்ச்... புது மாதிரியான டேப் ரிக்கார்டர்....

சேகர் செய்து கொண்டதைப் போல்... அத்தான் வேறு ஒரு பெண்ணை....?

சிநேகாவுக்கு மிகவும் பயமாக இருந்தது.

விரல்கள் ஸ்டியரியங்கின் மேல் லேசாக நடுங்கியது.

சட்டென்று பிரேக்கை மிதித்தாள் சிநேகா. கார் விமான நிலையத்தின் முன்னால் குலுங்கி நின்றது.

தாழ்வாகப் பறந்த விமானம் தரையில் இறங்கி.... சிறிது தூரம் ஓடி.... நின்றது.

பயணிகள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். சிநேகா கண்களில் மகிழ்ச்சி பறக்கப் பிரபுவைத் தேடினாள்.

பிரபு சிரித்தவாறே இறங்கினான்.

அவன் கூடவே வெள்ளை வெளேர் என்ற நிறத்தில்....

வெள்ளை முடி காற்றில் அலைய ஒரு இளம் பெண் சிரித்தவாறே ஓட்டி வந்தாள்.

பிரபு அவளுடன் சிரித்துப் பேசியவாறே இறங்கிக் கொண்டிருந்தான்.

சிநேகா பொடிப் பொடியாகச் சிதறிப் போனாள். அழுகை நெஞ்சுக்குள் கொதித்தது.

நீர் தேங்கிய விழிகளுடன் விமான நிலையத்துக்கு வெளியே ஓடி.... காரை ஒரு வெறியோடு ஓட்டினாள்.

பிரபு விமான நிலையத்தின் வெளியேயும் உள்ளேயும் சிநேகாவைத் தேடினான்.

மாமாவைத் தேடினான். கடைசியாக டிரைவரைத் தேடினான். உதட்டைப் பிதுக்கினான். சூட்கேஸைக் கீழே வைத்து விட்டுக் கையைத் தட்டினான். ''டாக்ஸீ...!''

டாக்ஸி அவன் அருகில் வந்து நின்றது.

டாக்ஸி டிரைவர் பின் கதவைத் திறந்து விட்டான்.

''கமான் ரோஸலின்.... கெட் இன்....''

ரோஸலின் என்ற அந்த அமெரிக்க இளம் பெண் டாக்ஸியில் ஏறி அமர்ந்தாள்.

பிரபு சூட் கேஸுடன் அவள் அருகே அமர்ந்து கதவை இழுத்து அடித்துவிட்டுச் சொன்னான்.

''விவேகானந்தர் ரோடு....''

டாக்ஸி விரைந்தது.

சிநேகா நர்ஸிங் ஹோமின் முன்னால் கார் நின்றது. சிநேகா எதையும் லட்சியம் செய்யாமல் நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்து தன் பெர்சனல் ரூமுக்குள் சென்றாள்.

கதவைச் சாத்தினாள்.

நாற்காலியில் அமர்ந்து மேஜை மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு சிறிது நேரம் குலுங்கிக் குலுங்கி அழுதாள். பிறகு வரிசையாக இருந்த மருந்துப் பாட்டில்களில் ''ஸ்லீப்பிங் பில்ஸ்'' என்ற பாட்டிலை எடுத்தாள். கண்ணாடிக் கூஜாவிலிருந்து தண்ணீரை டம்ளரில் நிறைத்தாள்.

மாத்திரை கையில் நிறைந்திருந்தது.

''அத்தான்! என்னை மறந்துட்டு நீங்க சந்தோஷமா வாழலாம். ஆனா உங்களை இழந்துட்டு ஒரு நிமிஷம் கூட என்னால் உயிரோடு இருக்க முடியாது. என்னால் இதைத் தாங்கிக்க முடியலை அத்தான்.... என்னை மன்னிச்சிருங்க.

''நீங்க சந்தோஷமா இருக்கணும்.''

அதுதான் என் ஆசை....''

பட்டென்று தூக்க மாத்திரைகளை வாயில் கொட்டி,

தண்ணீரை ஊற்றினாள்.

தண்ணீரில் தூக்க மாத்திரை கரைய ஆரம் பித்தது.

டாக்ஸி நின்றது.

டாக்ஸியிலிருந்து இறங்கி டிரைவருக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பங்களாவி னுள் நுழைந்தான் பிரபு.

வேலைக்காரன் ஓடிவந்து சூட்கேஸை வாங் கிக்கொண்டான்.

''என்ன பிரபு நீ மட்டும் தனியா வர்றே? சிநேகா எங்கே!'' என்றார் சிவசங்கரன்.

''என்ன மாமா சொல்றீங்க?''

''உன்னை ரிசீவ் பண்றதுக்கு பிளேட் வர்றதுக்கு ஒரு மணி நேரத்துக்கு முன் னாடியே சிநேகா ஏர்போர்ட்டுக்கு வந் தாளே?''

''யாரும் வரலையே மாமா!''

''ஒருவேளை ஏதாவது அவசரக்கேஸுன்னு டிஸ்பென்சரிக்குப் போயிட்டாளோ என் னவோ? நீ ஏன் இவ்வளவு லேட்டு?''

''அமெரிக்காவிலே எனக்கு ஒருத்தர் பிரண்ட் ஆனார். அவரோட தங்கை ஒரு எழுத்தாளர். பெயர் ரோஸலின். அவர் ஒரு ஆறு மாதம் இந்தியாவில் தங்கி இந்தியர் களின் பழக்க வழக்கங்கள், சம்பிரதா யங்கள், இன்னும் சில ஆதாரங்களைச் சேக ரிச்சு இந்தியக் கலாசாரத்தைப் பத்தி ஒரு புத்தகம் எழுதப் போறாங்களாம். விவே கானந்தர் ரோட்டில இருக்கிற அவங்க சொந்தக் காரங்க வீட்டிலே டிராப் பண் ணிட்டு இப்படியே வரேன்.''

''சரி.... களைப்பா இருப்பே... முதல்லே போய்க் குளி.''

''இல்லே மாமா நான் டிஸ்பென்சரிக்குப் போயிட்டு வர்றேன்....''

சிவசங்கரன் லேசாகச் சிரித்தார்.

''பிரபு... சிநேகாவைப் பார்க்கணும்னு உனக்கு எவ்வளவு ஆசையும் ஆர்வமும் இருக்கோ அதே போல அவளும் உன்னைப் பார்க்கத் துடிச்சுக்கிட்டு இருப்பா. முதலில் நீ போய்க் குளி. சிநேகா சீக்கிரம் வந் துடுவா....''

பிரபு மாடி ஏறினான்.

சிநேகா இந்நேரம் டிஸ்பென்ஸரியி- லிருந்து புறப்பட்டிருப்பாளோ?

இந்திய மண்ணில் காலடி எடுத்து வைக் கும்போது முதன் முதலில் சிநேகாவின் முகத்தைப் பார்க்க எவ்வளவு ஆசை!

'சிநேகா அமெரிக்காவிலிருந்து உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா?' என்று கேட்க வேண்டும்.

'என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கி றீர்கள்?' என்று சிநேகா கேட்பாள்.

'நீயே சொல்லு பார்க்கலாம்?' என்று கூற வேண்டும்.

சிநேகா ஒவ்வொன்றாகச் சொல்லுவாள். எல்லாவற்றையும் மறுக்க வேண்டும்.


''நீங்களே சொல்லுங்கள்'' என்று சிநேகா சிணுங்கிக் கொஞ்சுவாள்.

''நேரில் வா... சொல்கிறேன்'' என்று சொல்ல வேண்டும்.

பிரபு டெலிபோனை நெருங்கினான். ரிஸீவரைக் காதில் வைத்து வெகு சந் தோஷத்துடன் எண்களைச் சுழற்றினான்.!

மாசி பங்குனி நோன்பு

அதிகாலை எழுந்து ஸ்நானம் செய்து விட்டு, நான், என் கணவர், என் நாத்தனார் என் குழந்தைகளுடன் ஸ்வாமிகளைத் தரி சிக்கத் தாம்பரத்திலிருந்து கலவை சென் றோம். நாங்கள் எடுத்துச் சென்ற பழங்கள், புஷ்பங்கள் இவற்றைத் தட்டுடன் அளித்து ஆசீர்வாதத்துக்காக நமஸ்கரித்தோம். உடனே அவர் அந்தத் தட்டில் எதையோ தேடினார். 'என்ன குற்றம் செய்து விட் டோம்' என்று நாங்கள் பயந்து நடுங்கி



னோம். அப்போது பெரியவாளின் உதவி யாளர் ''என்னம்மா இன்று இரவு மாசி-பங்குனி நோன்பாயிற்றே. சரடுகளைக் கொண்டு வரவில்லையா? பெரியவாள் ஆசீர் வாதம் பண்ணுவதற்காக அதைத் தட்டில் தேடுகிறார்'' என்று கூறினார். உடனே அதிர்ச்சியாகி விட்டது. இவ்வளவு பெரிய விஷயத்தை நாம் மறந்து விட்டோமே, பெரியவர் எவ்வளவு ஞாபகமாக அதை ஆசீர்வதிப்பதற்காகத் தேடினார் என்றும் நினைக்கையில் எங்களுக்கு மிகவும் வெட்க மாகப் போய்விட்டது. அங்குள்ள மடத் தில் சரடுகள் கொடுக்கிறார்கள் என்று அறிந்து வாங்கி வந்து அவரிடமே ஆசீர் வாதம் பெற்றுக் கொண்டு மிகவும் சந் தோஷமாகவும் நிறைந்த மனத்துடனும் வீட்டுக்கு வந்து அன்று முதன் முதலாக நோன்பு செய்தோம். அப்போதிருந்து எனக்கு எதுவும் நன்மையாகவே நடக்கிறது.

இன்னும் எவ்வளவோ நோன்பு செய்யப் போகிறோம். இருந்தாலும் பெரியவாளின் ஆசியுடன் ஆரம்பமான அந்த முதல் நோன்பை மறக்க முடியுமா?

—எல். சுதா

ஒரு தாயின் குழந்தைகளாக..

அருள்வாக்கு

லோகத்தில் உள்ள அத்தனை பேருக்கும் தாயாராக இருக்கிறவள் அம்பாள். நமக்கு, நம் குழந்தைகளுக்கு, நம் மாதா பிதாக்களுக்கு, அவர்களுக்கு முன்னே வாழ்ந்தவர்களுக்கு, நம் குழந்தைகளுக்குப் பின்னேயும் வரப்போகிறவர்களுக்கு — எல்லாருக்கும் எக்காலத்துக்கும் மாதா அவள் ஒருத்திதான். நமக்கு மட்டுமில்லை; பசு, பக்ஷிகள், புழு பூச்சிகள், விருக்ஷங்கள், புல் பூண்டு எல்லாவற்றுக்கும் அவளே அம்மா. ஒரு வீட்டில் ஒரு தாயாருக்குக் குழந்தைகளாகப் பிறந்தவர்கள் ஒட்டிக் கொண்டு வாழ்கிறது போல, அந்த ஒரு அம்மாவுக்குக் குழந்தைகளான நாம் இத்தனை பேரும் அன்பிலே ஒட்டிக் கொண்டு ஒன்றுபட்டு வாழ வேண்டும். அந்த அன்புதான் அவள் ஸ்வரூபம்.

இந்த லோகத்தில் ஜட வஸ்துக்கள், உயிருள்ள பலவித ஜீவராசிகள் எல்லாம் தெரிந்தும் தெரியாமலும் பரஸ்பர ஸஹாயம் செய்து கொள்வதால்தான் நாம் உயிர் வாழ முடிகிறது. இந்தப் பழத்தை நாம் சாப்பிடுகிறோம் என்றால் அதை எங்கேயோ இருந்த ஒரு மரம் நமக்குக் கொடுத்திருக்கிறது. அதன் கொட்டையை எங்கேயோ இருந்த ஒரு காக்காய் கொண்டு வந்து போட்டிருக்கிறது. எவனோ ஒரு தோட்டக்காரன் அதற்கு ஜலம் விட்டிருக்கிறான். அப்புறம் யாரோ ஒரு கடைக்காரனிடமிருந்து அதை வாங்கியிருக்கிறோம். வாங்குவதற்குச் சம்பளம் எவனோ ஒருத்தன் கொடுத்ததால்தான் வாங்க முடிந்தது. இப்படி ஸூர்ய சந்திர நக்ஷத்திராதிகளிலிருந்து ஆரம்பித்துப் புழு பூச்சி வரை எல்லாம் பரஸ்பர ஸஹாயம் பண்ணிக்கொண்டே — தன் குழந்தைகள் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொண்டே ப்ரபஞ்ச வாழ்வு நடக்கும்படியாக அம்பாள் ஏற்பாடு பண்ணியிருக்கிறாள். இந்தப் புஷ்பத்தை நாம் பகவானுக்குச் சாத்துகிறோம் என்றால் எங்கேயோ ஒரு வண்ணாத்திப் பூச்சி மகரந்தப் பரிவர்த்தனை பண்ணித்தான் அந்தப் பூச்செடி உண்டாகியிருக்கிறது. அந்தச் சின்னப் பூச்சியின் ஸஹாயத்தால்தான் இன்று ஸாக்ஷாத் அம்பாளுக்கே அர்ச்சனை பண்ண இந்தப் புஷ்பம் கிடைத்திருக்கிறது. அவளுக்குத் தேனபிஷேகம் பண்ணுகிறோமென்றால், இந்த மஹா புண்யம் நமக்குக் கிடைப்பதற்காக எங்கேயோ ஆயிரம் தேனீக்கள் எத்தனையோ நாள் அரும் பாடுபட்டுத் தேன் சேர்த்ததால் தான் முடிகிறது.

இப்படி லோகம் முழுவதிடமிருந்தும் நாம் பெறுகிற ப்ரயோஜனங்களுக்குப் பிரதியாக உலகத்தில் உள்ள ஸகல உயிரினங்களுக்கு நம்மாலான உபகாரத்தைச் செய்ய வேண்டியது நம் கடமை. அம்பாள், ப்ரீதிக்காக நாம் பண்ண வேண்டிய கடமை. 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்றபடி பரோபகாரம் எதுவும் செய்யாத நாளெல்லாம் நாம் இருந்தும் செத்த நாளே என்றுநினைக்கவேண்டும். மனோ-வாக்-காயம்-திரவியம் இவற்றில் எவையெவற்றால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குப் பொதுத் தொண்டு செய்தேதீர்வது என்று தீர்மானிக்க வேண்டும். புது வருஷப் பிரதிக்ஞை, பிறந்த நாள் உறுதி என்றெல்லாம் சொல்வது போல் எந்த நாளுக்குமான சபதமாக உலகப் பணியை மேற்கொண்டு அம்பாளின் பூர்ண கடாக்ஷத்தைப் பெற வேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



திருப்பத்தூர் பஸ் ஸ்டாண்ட் ஓட்டல். முறுகலான மசால் தோசையின் முது கைக் கிழங்குடன் கிள்ளி ஆசையாய் என் வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தேன்.

''வாங்க மாப்பிளே!'' என்ற குரல் கேட்டது. திரும்பினல் என் மாமனர்!

''வழ்ழேன்... உழ்ழாழுங்க...!'' மசால் தோசையை விழுங்கிக் கொஞ்சம் தண்ணீரையும் குடித்தேன். மாமனர் எனக்கு எதிரே உட்கார்ந்தார்.'

என்னை நோக்கி மாமனரும் மாமனரை நோக்கி நானும் பாசத்துடன் தலையை நீட்டியபோது, குறுக்கே சர்வரின் புரட்டைத் தலை நீண்டு வந்தது.

''ஒரு காப்பி,.. ஜீனி கொஞ்சம் சேர்த்துப் போடு!'' என்று என் மாமனர் சர்வரை விரட்டிவிட்டு, ''எங்கே இந்தப் பக்கம்?'' என்று என்னை வரவேற்ருர்,

''குருவிக்கொண்டான்பட்டியில் ஒரு பட்டி மன்றம்... வரதட்சிணை வாங்குவது நியாயமா, அநியாயமாங்கிற தலைப்பில்...''

மாமனர் சோகமாய்ச் சிரிப்பது போல் தெரிந்தது.


''நீங்க எங்கே திருப்பத்தூருக்கு?'' விசாரித்தேன்.

''இங்கே என் சிநேகிதர் ஒருத்தர். தேனப்பன் செட்டியார்னு பேரு.... கமிஷன் மண்டி வைச்சிருக்கார். நம்ம தோப்புப்பட்டி வயலை அவருக்கு வித்துடலாம்னு அவரைக் கேட்டுட்டுப் போக வந்தேன்.''

நான் மௌனமானேன். என் மாமனர் கொஞ்சம் ஒரு மாதிரி. பொடி போட மாட்டார். வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட் என்று எந்தச் சில்லறைப் பழக்கமும் கிடையாது. மற்றபடி குடி, குதிரை, சீட்டாட்டம் இந்த மாதிரிப் பெரிய பழக்கங்கள்தான்!

''பொடிநாயக்கனூர்ல அத்தை நல்லா இருக்காங்களா?'' என்று கேட்டேன். ''ம்ம். இருக்கா... நீங்கதான் ரெண்டு வருஷமா அந்தப் பக்கம் வர்றதே இல்லையே?'' என்று மெதுவான குரலில் கூறினர்,

முத்து.தங்க. ஐயப்பன்



உண்மைதான். இரண்டு வருடங்களுக்கு முன் குதிரைப் பந்தயத்தில் தோற்றுப் போய் ஏலத் தோட்டத்தை ஈன விலைக்கு விற்றுவிட்டுக் குடி வெறியில் அத்தையை அவர் அடித்துக் கொண்டிருந்தபோது, என் மனைவியும், அவர் மகளுமான ஸ்ரீதேவியுடன் அங்கே தீபாவளிக்குப் போன நான் என் தலையில் அடித்துக் கொண்டே ஒரு சபதமும் செய்து விட்டேன்.

''மாமா!.... என்னைக்கு நீங்க இந்தக் குடி, சூதாட்டமெல்லாம் விட்டுட்டு நல்ல

மயங்குகிறார் ஒரு மாப்பிள்ளை!



படியா இருக்கீங்களோ, அன்னைக்குத்தான் நான் உங்க வீட்டுக்கு வருவேன்'' என்று கூறிவிட்டு ஊர் திரும்பி விட்டேன். அன்று அங்கே போனவன்தான். அதன் பின் இன்றுதான் மாமனாரைப் பார்க்கிறேன்.

''நான் உங்க வீட்டுக்கு வரக் கூடாதுன்னு இல்லை மாமா... நீங்க நல்லபடியா மாறணும்னுதான் அப்படிச் சொன்னேன்.''

''நான் மாறுறது இருக்கட்டும் மாப்பிளே... நீங்க இப்படி மாறுவீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே! நீங்க கூட வயசு வித்தியாசம் பாக்காமே அன்னைக்கு எல்லார் மத்தியிலும் எனக்கு உபதேசம் பண்ணுனீங்க.... அதிலே எனக்கு வருத்தமில்லே ....சந்தோஷம்தான்....ஆனா நீங்களே இப்பக் குடிக்க ஆரம்பிச்சுட்டீங்களேன்னு நினைச்சாத்தான் எனக்கு வருத்தமா இருக்கு....''

''என்ன மாமா..... நானாவது குடிக்கறதாவது?''

''ஹூம்! நான் சொல்லறதுக்கு என்ன மாப்பிளே இருக்குது. நீங்க படிச்சவங்க... காலேஜ்ல லெக்சரரா இருக்கீங்க. பத்திரிகையில கதை யெல்லாம் எழுதறீங்க... போறுததற்கு ஊர் ஊராப் பட்டி மன்றம் வேறே போடறீங்க...அதுஎன்ன சொன்னீங்க வரதட்சிணை நியாயமா, அநியாயமான்னு? நீங்க எந்தக் கட்சியிலே பேசறீங்க?''

''வரதட்சிணை வாங்கறது அநியாயம்கற கட்சியிலே.''

''நல்லாருக்கு! ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை என் மக ஸ்ரீதேவியை நீங்க குடிச்சுட்டு அடிச்சு, உதைச்சு, 'போயி உங்கப்பன் கிட்டே ரெண்டாயிரம் வாங்கிட்டு வா... மூணாயிரம் வாங்கிட்டு வான்னு அனுப்பறது... மேடையிலே வரதட்சணை வாங்கறது அநியாயம்னு சத்தம் போட்டுப் பேசறது... நல்லாருக்கு மாப்பிளே! கல்யாண சமயத்திலே வரதட்சிணை வாங்க மாட்டேன்னு பிடிவாதமாச் சொன்ன ஆளுதான் நீங்க. அதை நான் ரொம்பப் பேர்கிட்டச் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டிருந்தேன். ஆனா இப்ப ஒரு வருஷமா உங்களுக்கும் குடி, சூது எல்லாம் பழக்கமானதும் மாமனார் வீட்டைச் சுரண்ட ஆரம்பிச்சுட்டீங்கல்லே. மதுரையிலே உங்களுக்கு ஏதோ ஒரு தொடுப்பு இருக்குன்னு கூட ஸ்ரீதேவி சொன்னா... என்னவோ மாப்பிளே...அப்பப்ப பணம் குடுக்கிறதைப் பத்திக்கூட எனக்கு வருத்தம் இல்லே, ஆனா ரொம்பவும் குணசாலியா இருந்த நீங்க இப்படி ஆயிட்டீங் களேன்னு நினைச்சுத்தான் கவலைப்படறேன். தற்செயலா உங்களை இந்த ஓட்டல்லே சந்திச்சுக்கிட்டதுனால மனசு தாங்காம சொல்றேன். வேணும் மாப்பிளே? கெட்ட பழக்கமெல்லாம் தாங்கற உடம்பு உங்க உடம்பு இல்லே நான் வர்றேன். பில்லைக் குடுங்க!''

மாமனார் போய்விட்டார். நான் அப்படியே திகைத்து உட்கார்ந்து விட்டேன்.

பட்டி மன்றத்தில் பேசிவிட்டுக் கொட்டக் கொட்ட விழித்திருந்து முதல் பஸ்ஸைப் பிடித்து ஊருக்கு வந்தேன். வீட்டுக்குள்ளே நுழைந்ததும், நுழையாதுமாக, ''ஸ்ரீதேவி!'' என்று கத்தினேன்.

படுக்கை அறையிலிருந்து நரைத்த தலையுடன் ஓர் உருவம் வந்தது. அதிர்ச்சியுடன் கண்ணைக் கசக்கிவிட்டுப் பார்த்தேன். வியந்தேன்! ''அத்தை!'' என்றேன்.

அத்தை அவசரம் அவசரமாய்ச் சேலையைச்சரிசெய்து கொண்டு உள்ளே போனார்.

சற்று நேரத்தில் கருகருவென்று நெளி நெளி முடியுடன் ஸ்ரீதேவி வந்தாள்.

''ஏ....ஸ்ரீதேவி! நான் என்ன குடிகாரனா?'' என்று ஆரம்பித்தேன்.

''ஐயையோ.... பட்டி மன்றம் போய் இந்தப் பழக்கம் ஆரம்பமாகி விட்டதா?'' என்றாள் அவள்.

''ராத்திரி யெல்லாம் உங்களுக்குத் தூக்கமில்லையா அத்தான்?'' என்று பரிவோடு விசாரித்தாள்.

''ஆமாம்.... மதுரையிலே என் ஆசை நாயகி வீட்டிலே தங்கியிருந்தேன். தூக்கம் எப்படி வரும்?'' என்று சீறினேன் நான்.

அந்தக் கட்டத்தில் அத்தை மெதுவாய் அசைந்து வந்து அவளிடம், ''அவருக்குத் தக்காளி குருமா ஊத்துடி!'' என்றார்.

நான் எச்சரிக்கையடைந்து ''எனக்குத் தக்காளியும் வேண்டாம் முக்காலியும் வேண்டாம்'' என்று எழுந்தேன். ''ஏய் ஸ்ரீதேவி! என்னை என்னன்னு நினைச்சுக்கிட்டே? நான் குடிகாரனா? சீட்டாடறேனா? கெட்ட சகவாசம் வச்சிருக்கேனா? உன்னை ... உதைச்சு உங்க வீட்டுக்கு அனுப்பறே...''

''யாரு சொன்னது அப்படி?''

''உங்க அப்பாதான் சொன்னார்.''

''அவரை எங்கே பார்த்தீங்க?''

''திருப்பத்தூர் பஸ் ஸ்டாண்ட் ஓட்ட... மசால் தோசை சாப்பிடறபோது ... தேன்.''

ஸ்ரீதேவியும், என் மாமியாரும் ... பார்வை பார்த்துக் கொண்டார்கள். ஸ்ரீ... கண்களை அழகாக உருட்டி, என்னைப் பார... விட்டுத் தலையைக் கீழே போட்டுக் கொ... டாள்.

நான் சமாளித்தபடி, ''என்ன வே... போடறே? நீயாத்தானே அடிக்கடி ... மாவைப் பார்க்கணும், தங்கச்சியைப் ப... கணும்னு உங்க ஊருக்கு ஓடுறே? ... ஏதோ கொடுமை செஞ்சு உன்னை அடி... துரத்தறதா உங்க அப்பா கிட்டே சொ... அப்பப்ப பணம் வாங்கறியாமே?... ... னங்க அத்தை! மாமா சொன்னதெல்... உண்மைதானா?'' என்றேன்.

அத்தை கொஞ்ச நேரம் அமைதி... இருந்துவிட்டுச் சொன்னார்.

''கோபப்படாதீங்க... உங்க மாம... குணம்தான் உங்களுக்குத் தெரியுமே. கெ... பழக்கங்களாலே எல்லாச் சொத்தை... அழிச்சிட்டார். மிஞ்சி இருக்கிறது ... வீடும் வயலும்தான். அதுவும் இன்... எத்தனை நாளைக்கோ? இந்த லட்சணத்தி... ஸ்ரீதேவியோட தங்கச்சி ஸ்ரீப்ரியா வே... வயசுக்கு வந்துட்டா! அவ கல்யாணத்... மனசிலே வைச்சுக்கிட்டு அவருக்குத் ெ... யாம நான் சேர்த்து வைச்சா அதை... கண்டு பிடிச்சுக் குடியிலும் கூத்தியி... தொலைச்சுடறார்; நீங்க நல்லவரு... தட்சிணை வேணும்னு சொல்லிட்டீங்க. அடுத்து வர்ற மாப்பிள்ளை எப்படி இ... பார்னு சொல்ல முடியுமா?''

''அதுக்காக?''

''அதுக்காக நான்தான் ஸ்ரீதேவிகிட்... சொல்லி அப்பப்பநீங்க கொடுமை பண்ற... எங்க வீட்ல வந்து அழுது ரெண்டாயிர... மூணாயிரம்னு வாங்கிட்டுப் போன்... யோசனை சொல்லிக் கொடுத்தேன். ... வரைக்கும் பதினைஞ்சாயிரம் ரூபாய் ... படிச் சேர்ந்திருக்கு! நீங்க தப்பா நடக்கற... ஸ்ரீதேவி சொல்லி அழறதனாலே அவருக்கு... கவலை வந்து பழைய கெட்ட பழக்கமெ... லாம் கொஞ்சம் கொஞ்சமா குறை... ஆரம்பிச்சிருக்கு. வீட்டுக்காரர் சரியில்லா... போது, வீட்டிலே வயசுப் பொண்ணை... வைச்சுக்கிட்டு நான் என்ன செய்ய முடியு... ஏதோ எனக்குத் தெரிஞ்ச யோசனை இ... தான்.... அதுனாலே....''

''அதுனாலே?''


''இன்னும் பத்தாயிரம் ரூபாய் சேர... வரைக்கும் ஸ்ரீப்ரியா கல்யாணத்துக்கா... நீங்க இதைக் கண்டும் காணாதது மாதி... இருக்கணும்.... அதுவரைக்கும் நீங்க எங்... வீட்டுக்கு வராம இருந்தாக்கூட நல்ல... தான்!''

''சரி சரி, அந்தத் தக்காளி குருமாவை... கொண்டாங்க!'' என்று அதட்டினேன்.

கருணைக்கடல்

எனது தகப்பனார் ஸ்ரீராமாச்சாரியாரும், பெரியவாளும் திண்டிவனத்தில் பள்ளித் தோழர்கள். 1938ம் ஆண்டு என் தந்தையார் நெல்லிக்குப்பத்தில் பாரி கம்பெனியில் பணியாற்றிய சமயம் ஸ்ரீசங்கராச்சாரியார் அண்மையிலுள்ள பூலோகநாதர் கோவிலில் முகாமிட வந்தார். இரண்டு கட்டு விடான எங்கள் வீட்டின் முன்புறம் ரெட்டியார் தெரு. பின்புறம் சுவாமிகள் செல்லும் மார்க்கமான மெயின் ரோடு. நாங்கள் வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு பின்புறக்கதவை திறந்து வைத்துக்கொண்டு பெரியவாள் பல்லக்கை எதிர் நோக்கியிருந்தோம். மதியம் சுமார் இரண்டு மணியளவில் மெயின் ரோடு வழியாக பரிவாரங்கள் வந்தன. முக்கால்வாசி பரிவாரங்கள் சென்றபின் ஒரு பரபரப்பு. "சங்கராச்சாரியார் ரெட்டியார் தெருவில் நுழைந்து விட்டார்'' எனக் கூறினார்கள். நாங்கள் அவசர அவசரமாக வாயிற்புறம் நோக்கி ஓடினோம். வாயிற் கதவைத் திறப்பதற்கும், பெரியவாளின் பல்லக்கு எங்கள் வீட்டின் முன் நிற்பதற்கும் சரியாக இருந்தது. கருணைக்கடல் பல்லக்கிலிருந்த படியே என் தந்தையை அழைத்து "ஸ்ரீராமா! உன்னை பார்க்கத்தான் வந்தேன். பூலோநாதர் கோவிலில் நாளை அஷ்டலிங்க பூஜை நடக்கிறது, நீ வைஷ்ணவனாயிற்றே! வருவாயா?'' என உரிமையோடு வினவினார். என் தகப்பனாரும் தண்டனிட்டு வருவதாகக் கூறினார்.

விடுதேடி வந்து தம் பால்ய நண்பனின் குடும்பத்துக்கு தரிசனம் தந்த அந்த நடமாடும் தெய்வத்தின் அன்பை, இப்போது நினைத்தாலும் என் மெய் சிலிர்க்கிறது. -எல். ராகவாச்சாரி






ஒரே கோட்டில் வரையப்பட்ட படம். இது எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்று கண்டுபிடியுங்கள்!

நீங்கள் சாமர்த்தியசாலியா?

ஒரு கண்ணாடியின் முன் இந்தப் பக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பென்சிலால் அம்பு முனையில் இருந்து தொடங்கி, பாதை வழியே ஒரு கோடு இழுத்துக் கொண்டு வர வேண்டும். இரண்டு நிபந்தனைகள்: கண்ணாடியைப் பார்த்தபடியேதான் வரைய வேண்டும். பாதையின் பக்கங்களில் பென்சில் தொடக்கூடாது.

மூன்றாவது முயற்சியிலாவது வெற்றி பெற்று விட்டால் நீங்கள் சாமர்த்திய சாலி தான்!




எத்தனை F கள்?

கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை இயல்பான வேகத்தில் படிக்கும்போதே அதில் எத்தனை F கள் இருக்கின்றன என்று எண்ணுங்கள். ஒரே ஒரு தடவை தான் படிக்கலாம் :

Finished files are the result of years of scientific study combined with the experience of years.

சராசரி வாசகர் எவரும் சுலபமாக மூன்று F
களைக்கண்டு கொள்வார்கள். நான்கு F களைக் கண்டு
பிடித்தால் நீங்கள் சற்று முன் ஜாக்கிரதை உள்ளவர்
என்று அர்த்தம். ஆழ்ந்து கவனமாகப் படிப்பவர்
ஐந்து F களை கண்டு கொள்ளலாம். இதிலுள்ள ஆறு
F களையும் முதல் தடவையிலேயே கண்டு பிடித்து
விட்டால் நிச்சயமாக நீங்கள் ஒரு ஜீனியஸ்தான்.

- எம். சிவசுப்ரமணியன்



ருக்குவின் கல்யாணம் குறையின்றி நடக்கும்

12.4.81

'இந்தக் குடும்பத்துக்கு நான் கொஞ்சமும் பிரயோஜனமில்லாமல் இருக்கிறேனே...'

பொழுது விடியும்போதே மனத்துக்குள் புலம்பிக் கொண்டு எழுந்திருந்தார் சர்மா.

பாயைச் சுருட்டி, ரேழி மூலையில் வைத்து விட்டுத் தாழ்வாரத்தைத் தாண்டித் தோட்டத்துக்குப் போகும்போது அவர் காதுபட மருமகள் மங்களம் கத்த ஆரம்பித்தாள்.

''வயசான காலத்தில் எல்லாருமா வீட்டோடு உட்கார்ந்திருக்கா? எத்தனை பேர் தர்ப்பக் கட்டை எடுத்துண்டு மந்திரம் சொல்லி நாலு காசு சம்பாதிக்கிறதில்லே?''

சர்மாவுக்கு அப்போதுதான் தான் முழுச் செவிடாகிப் போயிருக்கக் கூடாதா என்ற வருத்தம் பொங்கியது.

பாழாய்ப் போகிற பாரிச வாயு வந்து உடம்பின் வலப்புறம் முழுவதும் இழுத்துக் கொண்டு பிறகு தெய்வாதீனமாய் ஓரளவு சரியாகி விட்டாலும், வாய் குழறல் மட்டும் நிற்காது போய்விட்ட நிலையில் அவர் சொல்லும் மந்திரங்கள் செல்லுபடியாகுமா?

திரும்பவும் அவர் ரேழி மூலையில் உட்கார்ந்தபோது கிரிக்கெட் மட்டையுடன் வாசலிலிருந்து உள்ளே வந்தான் பேரன் நந்து.

''தாத்தா! நான் இன்னிக்கு நாற்பத்தி ஒன்பது ரன் எடுத்தேன்!''

சர்மா அவனைப் பெருமை பொங்கப் பார்த்தார். அப்போது நந்துவும்தன் தாத்தா மார்கழிக் குளிரில் உடம்பில் சட்டை கூட இல்லாமல் மூச்சு விட அவஸ்தைப் படுவதைப் பார்த்தான். எழுந்து சென்று பாய்க்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த போர்வையை எடுத்து அவர் முதுகைச் சுற்றிப் போர்த்தி விட்டான்.

''பாவம் தாத்தா! எத்தனை நாளாய் உங்களுக்கு இதே கிழிசல் போர்வை?'' என்று உண்மையாய் வருந்தினான்.

சர்மா மெலிதாகச் சிரித்து விட்டுப் பேரனின் தலையை வருடினார். சிலுப்பிக் கொண்டு சின்னதாய்ச் சீற ஆரம்பித்தான் நந்து.

''ஆனாலும் இந்த ருக்கு அக்கா ரொம்ப மோசம். அவ மட்டும் நூறு ரூபாய்க்குப் பளபளான்னு புடவை வாங்கிக்கறா... உங்களுக்கு ஒரு போர்வை வாங்கப்படாதா?''

தன்பேரில் நந்துவுக்கு இருக்கும் அன்பின் வெறியில் மற்றவர்களின் சாதாரணங்கள் கூட நந்துவுக்கு சகஜமாகப் படுவதில்லை என்பது புரிந்தது.

''இந்தாங்கோ கஞ்சி!''

'ணங்' என்று கஞ்சி லோட்டாவைச் சர்மாவின் அருகில் வைத்துவிட்டுத் தாவணியைப் பறக்க விட்டபடி நெஞ்சை நிமிர்த்திய

வண்ணம் வாசலுக்கு வி
நிர்மலா.

''ஏய் நிம்மி! வாடி இ
ஏண்டி இப்படி லொட்டுனு
டாவை வைக்கிறே? இவர் ந
தாடீ... ஞாபகம் வச்சுக்கோ

''ஆமாம்.... போடா....
பரிஞ்சிண்டு வந்துட்டான்.
மரியாதையா சிசுருஷை செய்
குச் சொத்து, சுகம் சேர்த்து வ
காராக்கும்? பைசாகாசுக்கு வக்கில்

அவ்வளவுதான். நந்து பக்கத்
சிலேட்டை நிர்மலாவின் தலையை நே
எறிய, அவள் நெற்றியில் ரத்தம்
ரகளை ஆரம்பித்து விட்டது

மாட்டுப் பெண்ணும் பேத்திகளும
சேர்ந்து சர்மாவைத் திட்டித் தீர்த்

அக்ரஹாரக் கோடியில் ஏதோ
கோஷ்டி பாடிக்கொண்டு வந்து
டிருப்பது தெரிந்ததும் அதை ஆ
கவனிக்க ஆரம்பித்தார் சர்மா.

திருப்பதி போகிற கோஷ்டி என்ற
சர்மாவுக்கு உடம்பு புல்லரித்தது.
ருடைய நீண்ட நாள் ஆசை ஒரே ஒரு
யாவது திருப்பதி ஆண்டவனைத்
மகிழ்வது.

'ம்... நமக்கு அந்தக் கொடுப்பினை

''தாத்தா! நாளைக்கு நம்ம ஊர்
பிரட்டியிலிருந்து இருபது பேர் ஒ
திருப்பதி போய் வரப் போறோம்.
கூட வாங்கியாச்சு...'' என்று சர்
அருகில் வந்து அக்கறையாய்ச்
விட்டுப் போனார், ரங்காச்சாரி.

ஆசீர்வாதம் செய்கிற பாவனைய
தூக்கி மெல்லப் புன்னகைத்தார்
ஏனோ அவரையும் அறியாமல் க
ஜலம் சேர்ந்து விட்டது. அதை ரங்க
கவனித்து விட்டுத்தான் போனார்.

பெருமூச்சுடன் அவர் திரும்பவும்
ரேழியில் உட்கார்ந்தபோது, அதற்
காத்திருந்த மாதிரி ருக்கு அவர் அருகில்
உட்கார்ந்தாள்.

சர்மாவுக்கு வியப்பாகி விட்டது.

''தாத்தா....'' ருக்கு நிதானமா
பாய்க் கூப்பிட்டாள்.

''ம்?'' என்றார் சர்மா தயங்கிய

''வந்து...வந்து... என்னை இரண்டு
பெண் பார்க்க வரப் போறா...''

''அட! அட! சொல்றப்பவே உன்
சிவக்கிறதே, ருக்கு! பையன் யாரு

''ரயில்வே கிளார்க். சுமார் ச
கையில் இரண்டாயிரமும், அஞ்சு பவு
யும் போடணுமாம்! இரண்டாயிரம்
கடனுக்கு ஆஃபீஸில் நான் ஏ
பண்ணிடறேன். ஆனா அஞ்சு பவுன்?''

'தெய்வமே! ருக்கு கல்யாணம் ஒரு
வும் இல்லாம நடக்கணும்!' — அ
மானசீகமாக வேண்டிக் கொள்ள
முடிந்தது.

''தாத்தா... ஒண்ணும் யோசனை
டாம். பாட்டி செத்துப் போறதுக்கு
னாடி உங்க கிட்டத்தானே தன் அஞ்சு

டை வடம் சங்கிலியைக் கொடுத்தாளாம்.
ந்த அஞ்சு பவுனை எங்கே வச்சிருக்கேள்?''
மா அதிர்ந்து போனார்!
''ருக்கு! பத்து வருஷம் முன்னாடி திடீர்னு
நஞ்சு வலின்னு சொல்லி ஆபீஸ் விட்டு
ந்த உங்கப்பா ஒரு மாதம் ஆஸ்பத்திரியில்
ந்தபோது நேர்ந்த செலவுக்கும், பிறகு
வன் போய்ச் சேர்ந்த 'காரியங்களுக்கும்
ந்த நகையை விற்ற பணத்தில்தானேம்மா
மாளித்தேன்? அப்போ நம்ம யார் கையி
ம் பணமும் இல்லாத நிலைமையில் அவ
ரத்துக்கு உதவாமல் எதற்கு என்று நான்
த்துட்டேன், ருக்கு!''
'விருட்'டென்று எழுந்து நின்றாள் ருக்கு.
''அதெப்படி நீங்க என் அம்மாவுக்குச்
சர வேண்டிய நகையை அவளிடம் கூட
ரு வார்த்தை கேட்காமல் விற்கலாம்? இது
ன்ன நியாயம்?''

மறுநாள்காலை ரேழிக்குக் கஞ்சிலோட்டா
ணி பத்தாகியும் வந்து சேராதபோது
மா புரிந்து கொண்டார். அதுவரை அவ
க்கு இரண்டு வேளை அரிசிக் கஞ்சி கிடைத்து
ந்ததும்கூட அவரிடம் அஞ்சு பவுன் நகை
ருப்பதாய் நினைத்த மதிப்பில்தானா?
நந்து வந்து விசாரித்தான்.
''தாத்தா..... இன்னிக்கு நான் ஒரு ரன்
எடுக்கலை. ஆமாம், கஞ்சி சாப்பிட்
ளா?''
பலமாகத் தலை ஆட்டினார், சர்மா. அந்தப்
து வயதுப் பாலகனிடம் உண்மையைச்
ால்லவும் அஞ்சினார். விஷயம் தெரிந்தால்
து புயலாய்ப் பாய்ந்து விடுவான்.
''நந்து.... நீ ஸ்கூல் போப்பா... நேர
யிடும்....''

வாசல் திண்ணைக்கு வந்து உட்கார்ந்த போதுகூட அவருக்குத் தம் இயலாமையில் தான் வெறுப்பு மேலிட்டது.
''தாத்தா...''
ரங்காச்சாரி மூச்சிரைக்க ஓடிவந்தார்.
''என்ன ரங்கா? ஏன் இந்தப் பரபரப்பு?''
''தாத்தா... கடைசிச் சமயத்திலே ராமையர் காலை வாரி விட்டுட்டார். அவர் மச்சினிக்குப் பெங்களூரில் சீரியஸாம். தந்தி வந்ததும் மனுஷன் புறப்பட்டுப் போயிட்டார். இனிமேல் அவர் டிக்கட்டை கேன்சல் பண்ணவும் நேரமில்லை. நீங்க வரேளா திருப்பதிக்கு?''
சர்மாவுக்கு உடனே முகம் பூரித்துப் போனது. ஆனால் டிக்கட் காசு?
''தயங்காதீங்கோ... நீங்க என் தகப்பனார் மாதிரி. உங்களை நான் அழைச்சிண்டு போறேன். செலவு என்னோடது. நீங்க இன்னும் அரை மணியில் தயாராயிடுங்கோ. கரூர் போய் அங்கிருந்து கிளம்பணும்... சீக்கிரம்.....''
சர்மா குதூகலமாய் ரேழிக்கு நடந்து வந்தவர் தம் கிழிசல் வேஷ்டியை அவசர அவசரமாய்த் தைக்க ஆரம்பித்தார்.
மங்களம் கிண்டலாய்ச் சீண்டினாள்.
''ஓசிப் பயணம்! ம்...இதுக்கும் கொடுத்து வைச்சிருக்கணும்! குடும்பத்துக்கு அஞ்சு



பவுன் சமயத்துக்குக் கொடுக்க வகை [illegible] ஊர் சுற்றவும் சில ருக்கு அதிர்ஷ்டம் வாய்க்கிறதுடியம்மா!''

சர்மா வேதனையுடன் தம் சிறு மூட்டையை எடுத்துக் கொண்டு எழுந்திருந்தார்.

''வரேன், மங்களம்... நிர்மலா... போய் வரேம்மா....''

ஒருவரும் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் முகத்தைச் சுழித்துக் கொண்டு உள்ளே போய்விடவும், சர்மாவுக்குச் சங்கடமாய் இருந்தது.

''நந்து....'' என்று கூப்பிட்டார்.

''அவன் பள்ளிக்கூடம் போயிருக்கிறன். மகா சக்கரவர்த்தியை வழியனுப்ப வர மாட்டான்....''

மங்களம் சமையல்கட்டு அதிர வெடித்தாள்.

சர்மா கண்ணைத் துடைத்துக் கொண்டு சாலைக்கு வந்தார்.

• • •

திருப்பதியில் தெய்வ சந்நிதானத்தில்கூட சர்மா, ருக்குவின் கல்யாணம் குறைவின்றி நடைபெறப் பிரார்த்தித்துக் கொண்டார்.

''... அந்த அந்த ஏதாவது வழி பண்ணு.''

கீழத் திருப்பதி செல்லும் ... லோருடனும் சர்மாவும் ஏறிக் ...

இறங்கும் பாதையில் பஸ்டி... வேகம் எடுத்திருக்கக் கூடாது... பிடிக்க முடியாமல் நிலைமை ... போது பஸ் அந்த மலைப் பாதை... குட்டிக்கரணம் போட்டது.

• •

''சாமிநாத சர்மா எ... தானே இது? அவர் உயிருக்... ஆந்திரா கவர்ன்மெண்டும், அ... துறை பஸ் நிறுவனமும் சே... துள்ள ஆறாயிரம் ரூபாய் ... றுக்கொள்ளுங்கள்....''

மங்களம் கையெழுத்... கொண்டாள்.

''அஞ்சு பவுன்,..அஞ்சு பவுன்... குத்திக் காண்பிச்சே சாகடிச்சங்... களா.... தாத்தா சாகறச்சே ... பண்ணிட்டுத்தான் போயிட்டா... மேலாவது திருப்தியா இருங்கோ...

நந்து மனம் வெதும்பிக் ... புரண்டு அழ ஆரம்பித்து விட்ட...